
திருச்சிற்றம்பலம்

திருஞானசம்பந்தர் ஆய்வு மாலை

2

திருவளர்திரு கயிலைமாமுனிவர் காசிவாசி
முத்துக்குமாரசாமித் தம்பிரான்சுவாமிகள் அவர்கள்
அருளாணையின்வண்ணம் வெளியிடப்பெற்றது



பதிப்பாசிரியர்

த.கோ. பரமசிவம்
ந. முருகேசன்
கோ.ப. நல்லசிவம்

திருஞானசம்பந்தர் இலக்கிய ஆய்வு மாநாடு
வாரணாசி - 2002

திருச்சிற்றம்பலம்

திருஞானசம்பந்தர் ஆய்வு மாலை

தொகுதி இரண்டு

திருவளர்திரு கயிலைமாமுனிவர் காசிவாசி
முத்துக்குமாரசாமித் தம்பிரான் சுவாமிகள் அவர்களின்
அருளாணையின் வண்ணம் வெளியிடப் பெற்றது.

பதிப்பாசிரியர்

த.கோ. பரமசிவம்

ந. முருகேசன்

கோ.ப. நல்லசிவம்

திருஞானசம்பந்தர் இலக்கிய ஆய்வு மாநாடு

குமாரசாமித் திருமடம் - வாரணாசி

2002

- திருஞானசம்பந்தர் ஆய்வுமாலை
  தொகுதி இரண்டு

- திருப்பனந்தாள் காசித்திருமடமும்
  களம்பூர் கோவிந்தசாமி அடிகளார் அறக்கட்டளையும் இணைந்து நடத்திய திருஞானசம்பந்தர் ஆய்வுமாநாட்டின் வெளியீடு

- திருவள்ளுவராண்டு 2033, புரட்டாசி 14, 15, 16
  (30-9, 1, 2-10-2002)

- முதற்பதிப்பு : 2002 செப்டம்பர்

- பதிப்பாசிரியர்

  முனைவர் த.கோ. பரமசிவம்
  தலைவர், ஓலைச் சுவடித்துறை,
  தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

  முனைவர் ந. முருகேசன்
  இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை
  ஸ்ரீ கா.சு.சு. கலைக் கல்லூரி, திருப்பனந்தாள்.

  தேவார இசைமணி **திரு கோ.ப. நல்லசிவம்**
  விரிவுரையாளர், தமிழ்த்துறை
  ஸ்ரீ கா.சு.சு. கலைக் கல்லூரி, திருப்பனந்தாள்.

- விலை : உரூபாய் 250/-

- நூல் கிடைக்குமிடம் : மேலாளர் அவர்கள்
  காசித்திருமடம்
  திருப்பனந்தாள் - 612 504

- கணினி அச்சு : சபாநாயகம் பிரிண்டர்ஸ்
  176, கீழரத வீதி, சிதம்பரம் - 608 001.
  ✆ : 223040, 223020

- அச்சாக்கம் : யுனைடெட் பைண்ட் கிராபிக்ஸ்
  101-D, ராயப்பேட்டை நெடுஞ்சாலை
  லஸ், மயிலாப்பூர் - 600 004.
  ✆ : 4984693, 4661807

ஆய்வு மலர்கள்

(தொகுதி இரண்டு)

1. சம்பந்தர் தேவாரத்தில் அகக் கருத்துகள்
ந. அங்கயற்கண்ணி, சென்னை 1

2. சூழலும் பாடலும்
சா. அபிராமி, புதுவை 9

3. சம்பந்தர் தேவாரத்தில் வாழ்வியல்
அமுத இளவழகன், காஞ்சிபுரம் 18

4. சம்பந்தர் பதிகங்களில் அகச் சான்றுகள்
சி. அயோத்தி, உடுமலைப்பேட்டை 26

5. சம்பந்தர் வரலாறு
வி. அருண்குமார், கோவை 33

6. சம்பந்தரின் பக்திநெறி
குப. அழகம்மை, குமாரப்பாளையம் 39

7. சம்பந்தர் தேவாரத்தில் இயற்கை
பு. அறிவுடைநம்பி, நயம்பாடி 52

8. சம்பந்தரின் அற்புதத் திருப்பதிகங்கள்
அனுராதா ஸ்ரீநிவாசன், சென்னை 62

9. ஞானக் கடல்
க. இந்திராணி, கோவை 69

10. ஆளுடைப்பிள்ளையும் அரசும்
வெ. இராசேசுவரி, கோவை 73

11. சமய சமூகப் பண்பாட்டுப் புரட்சியாளர்
இளங்கண்ணன், உடுமலை 80

12. சம்பந்தர் பாடிப் பரவிய திருத்தலங்கள்
பி. உமா , மீஞ்சூர் 89

13. சம்பந்தரின் வினை தீர்க்கும் பதிகம்
உமா அறிவழகன், சென்னை 97

14. சம்பந்தர் பாடல்களில் நெஞ்சோடு கிளத்தல்
ர. உமாதேவி, கோவை 106

15. சம்பந்தர் தேவாரத்தில் பிற உயிரினங்கள்
எழிலரசி பாலசுப்பிரமணியன், சென்னை 111

16. சம்பந்தரும் சித்திரக் கவிகளும்
இரா. கண்ணன், சென்னை 123

17. சம்பந்தரின் பக்திநெறிச் சிந்தனைகள்
கே. கண்ணாத்தாள், காரைக்குடி 131

18. அற்புதத் திருப்பதிகங்கள்
கலையரசி நடராசன், சென்னை 137

19. சேக்கிழார் பாடிய பிள்ளை
கஸ்தூரி தயாநிதி, சிவகாசி 143

20. திருக்கோயில் வழிபாடும் சம்பந்தரும்
வி. கிருஷ்ணமூர்த்தி குருக்கள், புதுக்கோட்டை 151

21. சம்பந்தர் ஊட்டும் நம்பிக்கை
எ. கொண்டல் ராஜ், மதுரை 158

22. சம்பந்தரும் - திருநாவுக்கரசரும்
கொளஞ்சி, அண்ணாமலைநகர் 167

23. பாண்டி நாட்டில் சம்பந்தர் புரட்சி
மு. கோமதி, சென்னை 171

24. சம்பந்தரின் பக்தி நெறி
சோ. குருலட்சுமி, தூத்துக்குடி 177

25. சம்பந்தர் தேவாரத்தில் நெய்தல்நிலக் காட்சிகள்
கா. சத்தியபாமா, தஞ்சாவூர் 180

26. சம்பந்தர் தேவாரத்தில் பண்கள்
சிவ. சத்தியவதி, தஞ்சாவூர் 188

27. சம்பந்தர் வளர்த்த சைவம்
கா. சந்திரசேகரன், நாமக்கல் 196

28. தமிழகத்தில் சைவமும் மதுரையில் சம்பந்தரும்
ச. சந்திரசேகரன், மதுரை 203

29. சம்பந்தரின் சொல்லாக்க உத்திகள்
கு. ர. சரளா, தஞ்சாவூர் 209

30. நமச்சிவாய மந்திரச் சிறப்பு
சாந்தி விஸ்வநாதன், கோவை 217

31. சம்பந்தரும் சாத்திரங்களும்
சு. சாவித்திரி, புதுவை 222

32. சமுதாய உறவும் சமய உறவும்
பீ. சாவித்திரி, திருச்சி 229

33. நால்வர் நான்மணிமாலையில் சம்பந்தர்
கி. சிவகுமார், விருத்தாசலம் 235

34. சம்பந்தர் வளர்த்த தமிழும் சைவமும்
அரங்க. சிவப்பிரகாசம், திருப்பனந்தாள் 242

35. சம்பந்தரும் சாதிய எதிர்ப்பும்
ஜெ. சியாமளா, புதுவை 248

36. உமைபங்கனில் உமை வருணனை
வே . சீதாலட்சுமி, சென்னை 251

37. திருவைந்தெழுத்தின் சிறப்பு
வே. சீதாலட்சுமி பாஞ்சாலன், சென்னை 259

38. சம்பந்தரின் சமயப் பணியும் தமிழ்ப் பணியும்
இரா. சுசீலா, கோவை 266

39. சம்பந்தர் திருமுறை உரைத்திறன்
பா. சுந்தர், திருச்சி 275

40. திருவையாற்றுப் பதிகத்தில் இயற்கை
செ. சுமதி, கோவை 281

41. சம்பந்தர் தேவாரத்தில் இயற்கை
வ. சுமதி, மதுரை 287

42. சம்பந்தரும் சைவ சித்தாந்தமும்
ம. செந்தில்குமார், மதுரை 295

43. சித்தாந்த நெறியில் சம்பந்தர்
த. செல்லம்மாள், தஞ்சாவூர் 303

44. சம்பந்தர் தேவாரத்தில் பிற உயிரினங்கள்
வே. செல்லாத்தாள், கோவை 308

45. திருவீழிமிழலையில் அற்புதம்
வெ. செல்வசுப்பிரமணியன், கோவை 316

46. திருவெழுகூற்றிருக்கை - பொருள் புலப்பாடு
ஐ. செல்வராஜ், கோவை 322

47. மதுரையம்பதியில் மாபெரும் புரட்சி
ஞா. ஞானசிங்காரம், கோவை 332

48. திருமருகலில் சம்பந்தர்
ப. ஞானம் கணபதி, அண்ணாமலைநகர் 338

49. சம்பந்தரும் திருமுதுகுன்றமும்
சு. தங்கத்துரை, விருத்தாசலம் 345

50. சம்பந்தரின் பக்தி நெறி
இல. தங்கராஜ், நாமக்கல் 352

51. சம்பந்தர் வளர்த்த சைவம்
அ. தமிழ்ச்செல்வி, பொன்னமராவதி 357

52. சம்பந்தர் பாடிய வீரட்ட தலங்கள்
க. தர்மபுத்திரன், கோவை 365

53. சம்பந்தர் தேவாரத்தில் இயற்கை
சி. தியாகராஜன், நாமக்கல் 372

54. சம்பந்தர் தேவாரத்தில் இயற்கை
கா. திருநாவுக்கரசு, பேரூர் 378

55. புண்ணிய முதலும் பொங்கொளி மணியும்
திலகவதி சண்முகசுந்தரம், கோவை 385

56. சம்பந்தரும், திருக்கோயில் வழிபாடும்
பு. இரா. திலகவதி, கடலூர் 394

57. சம்பந்தரின் கடவுட் கோட்பாடு
பொன். திலகவதி, புதுவை 399

58. சம்பந்தர் தேவாரத்தில் இயற்கை
த. தெய்வீகன், தஞ்சாவூர் 404

59. சம்பந்தரும் சாத்திரங்களும்
எம். தேவகி, மதுரை 410

60. சம்பந்தரின் தமிழ் – தமிழர் இன உணர்வு
செ. தேவராஜு, கோபி 416

61. சம்பந்தரும் புராணச் செய்திகளும்
ரெ.தேவி, தஞ்சாவூர் 422

62. அற்புதத் திருப்பதிகங்கள்
பே. நடராசன், திருநெல்வேலி 431

63. தல யாத்திரையில் திருச்செங்கோடு
வெ. அ. நாகரத்தினம், காங்கேயம் 436

64. சம்பந்தர் தேவாரத்தில் மூர்த்தி தலம் தீர்த்தம்
கா. நாகராசு, கோவை 443

65. ஞானசம்பந்த வள்ளலார்
சு. பழநிச்சாமி, புதுவை 452

66. சம்பந்தரும் திருக்கோவில் வழிபாடும்
பி. பார்வதி, குற்றாலம் 458

67. பாண்டி நாட்டில் சம்பந்தர் புரட்சி
சு. பாலுசாமி, நாமக்கல் 464

68. சம்பந்தரின் செழுந்தமிழ்ப் பாடற் பயன்
பிரபாகரன், மீஞ்சூர் 469

69. திருக்கோயில் வழிபாடும் சம்பந்தரும்
இரா. பிரேமா, சென்னை 476

70. சம்பந்தரும் இயற்கையும்
சு. புவனேசுவரி, சென்னை 482

71. திருவெண்ணீற்றின் பெருமைகள்
இரா. பூங்கோதை, தஞ்சாவூர் 492

72. ஆடல் மகளிரும், ஆடற்கலைக் குறிப்புகளும்
சே. போஸ், ஸ்ரீவைகுண்டம் 496

73. பாண்டி நாட்டில் சம்பந்தர் புரட்சி
கு. மங்கையர்க்கரசி, சென்னை 502

74. நமசிவாய மந்திரத்தின் சிறப்பு
ஆ. மரகதம், கோவை 507

75. திருநீற்றின் சிறப்பு
வீ. மலர்விழி, தஞ்சாவூர் 515

76. சம்பந்தரின் சைவ சமயப் புரட்சி
த. மலைமதி, விழுப்புரம் 522

77. சம்பந்தரின் வீரட்டத்தலப் பதிகங்கள்
சிவ. மாதவன், புதுவை 528

78. தில்லையும் சம்பந்தரும்
பா. மாலினி, அண்ணாமலைநகர் 535

79. நமச்சிவாய மந்திரச் சிறப்பு
இரா. முத்துக்குமரன், சென்னை 542

80. சம்பந்தர் அவதாரமா?
பெ. முத்துராஜ், மதுரை 550

81. பாண்டிய நாட்டில் சம்பந்தர் புரட்சி
தெ. மேகநாதன், அண்ணாமலைநகர் 555

82. சம்பந்தரும், திருநாவுக்கரசரும்
கு. மோகனசுந்தர், சின்னசேலம் 561

83. எப்பொருளும் ஆக்குவான் ஈசனே
கே. ஏ. ராஜீ, சென்னை 571

84. சம்பந்தர் தேவாரத்தில் இயற்கை
ந. லட்சுமி, புதுவை 579

85. சம்பந்தர் தேவாரத்தில் - யாப்பியல்
நா. லோகநாதன், புதுவை 584

86. ஞானசம்பந்தர் பார்வையில் மகளிர்
எம். லோகநாயகி, சென்னை 592

87. சம்பந்தரும் திருக்கோலக்காவும்
வி. வசுமதி, உடுமலை 595

88. சம்பந்தரின் தெரிவிப்பியல் கொள்கைகள்
மு. வள்ளியம்மை, அண்ணாமலைநகர் 599

89. சம்பந்தர் காட்டும் பக்தி நெறி
சு. வஜ்ரவேலு, சென்னை 606

90. சம்பந்தரின் அற்புதத் திருப்பதிகங்கள்
சி. வாசுகி, பழனி 615

91. தமிழ் எனும் சொல்லின் ஆட்சி
ச. விசயலட்சுமி, தஞ்சாவூர் 622

92. சம்பந்தரும் அரசியலும்
ஹரி. விஜயலட்சுமி, உடுமலை 632

93. சம்பந்தரின் சீர்திருத்தங்கள்
ச. வீரபாண்டியன், அண்ணாமலைநகர் 638

94. சம்பந்தர் தேவாரத்தில் இயற்கை
அ. ஜம்புலிங்கம், அண்ணாமலைநகர் 643

95. சம்பந்தரும் பௌத்தமும்
பா. ஜம்புலிங்கம், தஞ்சாவூர் 654

96. சம்பந்தர் பார்வையில் சாதியும், வழக்கங்களும்
லூ. ஜார்ஜ் திமாஷ், புதுவை 663

97. சம்பந்தரின் தமிழ்ப் பற்று
அர. ஜோதிமணி, திருப்பூர் 668

98. தமிழின அடையாளங்கள் - சைவ மதக் குறியீடுகள்
கே. ஏ. ஜோதிராணி, சென்னை 672

99. சம்பந்தர் பாடல்களில் பதிகப் பயன்பாடு
ம. ஷீலா ஸ்ரீநிவாசன், வில்லுக்குறி 678

100. சம்பந்தர் காட்டும் சித்தாந்த நெறிகள்
மா. ஸ்ரீநிவாசராவ், மதுரை 684

1. சம்பந்தர் தேவாரத்தில் அகக் கருத்துகள்

ந. அங்கயற்கண்ணி, சென்னை.

இறைவனிடம் உண்மையான அன்புடைய அடியவர்கள் தம் அன்பைக் காதல் உணர்வாகவே காண்கின்றார்கள். தம்முடைய ஆன்மாவிற்கு நாயகனாகவும் உயிருக்குத் துணைவனாகவும் இருக்கக் கூடியவன் இறைவன் ஒருவனே என்பதை உணர்ந்த அவர்கள் உள்ளுணர்வு, அக்காதல் இன்பத்தையே எடுத்துப் பேசுகின்றது. காதல் உணர்வினால் வெளிப்படும் ஏக்கம் அவர்தம் பாடல்களின்வழி வெளிப் படுகிறது. இவ்வாறு ஒவ்வொரு சமயத்திலும் இத்தகு வெளிப்பாடு வெளிப்படுகிறது.

சமயங்கள் காட்டும் அகப்பொருள்

கிறித்தவ அருளாளர் பெர்னார்டு, 'உயிர்த் தலைவியின் உண்மைத் தலைவன் கிறித்து நாதனே' என்கிறார். அருட்சான்றோராகிய சான் (St. John) என்பவர் கூறும்போது 'உயிர் இறைவனைக் கூடி இன்புறும்' என்று கூறுகின்றார். இந்நிலையினை 'ஆன்மக் காதல்' என்று கூறுவர்.

ஆன்மீக உறவினை 'விஷய காமம்' என்றும் 'பகவத் காமம்' என்றும் இருபிரிவாகப் பிரித்துப் 'பகவத் காமமே' தெய்வீக நிலையை உணர்த்தும் 'காதல் உணர்வு' என்று தெளிவுப்படுத்துகின்றனர் வைணவ உரையாசிரியர்கள்.

சைவர்கள் 'சிவன்'பால் கொண்ட காதல் உணர்வினைச் 'சிவகாமம்' என்று அழைக்கின்றனர். இவ்வகையில் திருஞானசம்பந்தர் பாடிய அகப்பாடல்கள் அனைத்துமே 'சிவகாம' அடிப்படையில் அமைந்தவை என்பதை நாம் உணரலாம்.

தமிழில் அகப்பாகுபாடு

'அகம்' என்னும் சொல்லுக்கு 'உள்ளம்' என்பது பொருள். ஒத்த அன்புடைய தலைவன் தலைவி ஆகிய இருவர் உள்ளத்தே நிகழும் இன்ப நிகழ்ச்சியை உணர்த்தல் 'அகப்பொருள்' என்பர். இதனை உணர முடியுமேயன்றி இப்படிப்பட்டதுதான் என்று புறத்துச் சொல்ல முடியாத தன்மை வாய்ந்தது.

தொல்காப்பியர் தமது தொல்காப்பியப் பொருளதிகாரத்தில் அகத்திணையியல், களவியல், கற்பியல், பொருளியல் என்ற நான்கு இயல்களை அகத்திற்காக வகுத்திருக்கிறார். இதோடு மட்டுமல்லாது, மெய்ப்பாட்டியல், உவமயியல், செய்யுளியல் முதலிய இயல்களிலும் அகம் பற்றிய செய்திகள் சிலவற்றைக் கூறியுள்ளார்.

அகம் பற்றிச் சான்றோர்களின் கருத்து

''சங்க காலப் பாடல்களில் புறப்பாடல்களை விட அகப்பாடல்களே அதிகம் உள்ளன. சங்க இலக்கியம் 1862 அகப்பாடல்கள் உடைய காதல் இலக்கியம். ஒவ்வொரு பாடலிலும் ஆண்-பெண் உள்ளங்கள் உள்ளன. இப்பாடல்களைக் கற்பவர் 3724 காதல் உள்ளங்களைப் பற்றிய அறிவு பெறுவர்'' என்பார் வ.சுப. மாணிக்கனார்.

மேலும் இவர் கூறும்போது ''தெய்வப் புலவர்களுக்கு அகத்திணைப் புலமை இல்லாதிருக்குமேல் இப்பாசுரங்களின் இலக்கியத் தரம் மிகக் குறைவுபடும் இலக்கியமோ என்ற ஐயத்திற்கும் உரியதாய்விடும்'' என்று கூறுவது நினைவுக் கூரத்தக்கது.

காதற்பாட்டுக்களால் தமிழ் இலக்கியம் எய்திய மாட்சியினை, 'கடவுட் காதலைப் பாடியருளிய ஆழ்வார்கள் மக்கட்காதலுக்கென வகுத்த அகத்திணையுலகச் சுவடுகளைப் பின்பற்றியதாலன்றோ தெய்வ அன்பு அக இலக்கியத்திடத்துப் பாய்ந்ததாலன்றோ, தமிழகத்தின் இறைப் பாசுரங்கள் புதுமையும் தனிமையும் பெற்ற ஓர் இலக்கியவுலகமாக விளங்குகின்றன'' என்று ரா.பி. சேதுப்பிள்ளை போற்றுகின்றார்.

பக்திப் பாடல்களில் அகப்பொருள்

சங்க காலச் சான்றோர்களின் அகப்பாடல்களில் சிறப்பித்துச் சொல்லப்பட்ட மானிடக் காதல், பக்திப் பாடல்களில் மானிடர் இறைவனைக் காதலிக்கும் காதலாக வளர்ந்தது. ஆடவர்-பெண்டிர் (தலைவன்-தலைவி) என்ற நிலை மாறி இறைவன் ஒருவனே தலைவன், அவனைப் பாடும் அடியார்கள் அஃதாவது பால் வேறுபாடு கருதாது அனைவரும் தலைவியராக மாறும் நிலையினைப் பக்திப் பாடல்களில் காணமுடிகிறது. இதனையே நாயக-நாயகி பாவம் என்பர். இப்பாவத்தினால் இறைவனை வழிபடும் முறை அடியார்களால் என்றும் போற்றப்பட்டு வருகின்றது.

திருஞானசம்பந்தர் பாடல்களில் இடம்பெறும் அகப்பாடல்கள்

சம்பந்தரின் தேவாரப் பதிகங்களில் 1, 56, 60, 63, 73, 76, 159, 256, 303, 321, 358, 359, 362, 374 ஆகிய பதினான்கு பதிகங்கள் அகப்பொருள் அடிப்படையில் அமைந்துள்ளன. இவற்றில் தலைவி

கூற்றாகப் பல பதிகங்கள் வந்தாலும் தோழி கூற்றாகச் சில பதிகங்கள் இடம் பெறுகின்றன.

தேவாரத்தில் அகத்திணை

திருமுறைகளில் இடம்பெற்ற அகத்துறைப் பாடல்கள் அகத்திணைப் பாடல்களே ஆகும். அகத்திணை இலக்கியத்திற்குத் தொல்காப்பியர் குறிப்பிடும் இலக்கணக் கோட்பாடுகளும் அவ்வகத் துறைப்பாடல்களில் நன்கு அமைந்துள்ளன.

மக்கள் நுதலிய அகன்ஐந் திணையுஞ்
சுட்டி ஒருவர் பெயர்கொளப் பெறாஅர் (அக.சூ. 54)

என்பது தொல்காப்பியர் காட்டும் அக இலக்கியக் கொள்கையாகும். இக்கொள்கையினைச் சம்பந்தர் தம் அகப்பாடல்களில் கையாண்டுள்ளார்.

திருமுறைகளில் காணப்படும் தலைவனாம் இறைவனைக் குறிப்பிடும்போது திருத்தலத்தின் பெயராலேயே இறைவன் குறிக்கப் பெறுகிறான். அவ்வத்திருத்தலத்தில் எழுந்தருளியிருக்கும் இறைவனின் மூர்த்தத்திற்குரிய பெயர் ஒன்றிருந்தும் அதனால் குறிப்பிடாது தலப் பெயரின் அடிப்படையில் இறைவன் குறிக்கப் பெறுதலை அறியலாம்.

பீடுடைய பிரமாபுர மேவிய பெம்மான் இவனன்றே

எனச் சம்பந்தர் இயற்பெயரை விடுத்து, தலப் பெயரால் இறைவனைக் குறிப்பிடுவதைக் காணலாம்.

தொல்காப்பியர் தம் நூலில்,

கைக்கிளை முதலாப் பெருந்திணை இறுவாய்
முற்படக் கிளந்த எழுதிணை என்ப

எனக் குறிப்பிடுவார். இவர் கூற்றுப்படி, தமிழ் நூல்கள் அகப்பொருளை ஏழுவகையாகப் பிரித்து இன்பம் காண்கின்றன. அவை குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை, கைக்கிளை, பெருந்திணை என்பன வாகும். திருஞானசம்பந்தரது தேவாரப் பதிகங்களிலும் இந்த எழுதிணைப் பகுப்பினைக் காணலாம்.

சம்பந்தர் பாடல்களில் எழுதிணைப் பகுப்பு

கைக்கிளை

இவரது தொடக்கப் பதிகமே கைக்கிளையில் அமையப் பெற்றதாகும். மூன்று வயது குழந்தையாகிய ஞானசம்பந்தர் சிவபெருமான் மீது அன்புகொண்டு, சன்மார்க்க நெறியில் நாயக, நாயகி பாவத்தில் முதற்பாடலைப் பாடுகிறார்.

தோடுடைய செவியன் விடையேறியோர் தூவெண் மதிசூடிக்
காடுடைய சுடலைப்பொடி பூசியென் உள்ளங்கவர் கள்வன்
ஏடுடைய மலரான் முனைநாள் பணிந்துஏத்த அருள்செய்த
பீடுடைய பிரமாபுர மேவிய பெம்மான் இவன்அன்றே.

இப்பாடலில் தம் உள்ளம் கவர் கள்வன் யார் என்பதைச் சொல்லுவதாக அமைந்துள்ளது. எதிர்பால் இன்றி தமக்குத் தாமே கூறிக்கொள்ளும் நிலைமை உடையதாக இருக்கிறது. எனவே கைக்கிளை சிறப்படையதாக அமைகிறது.

தொல்காப்பியர் தம் இலக்கண நூலில்

ஏமஞ்சாலா இடும்பை எய்தி நன்மையும்
தீமையும் என்றிரு திறத்தால்
தன்னொடும் அவளொடும் தருக்கிப் புணர்ந்துச்
சொல்லெதிர் பெறாஅன் சொல்லி இன்புறல் (53)

எனக் குறிப்பிடுவார். இவர் பாடலுக்கு ஏற்பச் சம்பந்தரின் முதற் பதிகத்தில் தலைவியானவள் தனக்குத் தானே சொல்லி இன்புறும் வகையில் அமைவதால் கைக்கிளை ஆயிற்று.

ஐந்திணை

ஐந்திணைக் காதலானது அறநலம் சார்ந்தது. ஐந்திணைக்குச் சிறப்பு சேர்ப்பது முப்பொருள் நிலையாகும். அவையாவன முதல், கரு, உரி என்பன. திருஞானசம்பந்தர் பாடல்களிலும் ஐந்திணைப் பொருளானது அமைந்துள்ளது.

முதற்பொருள்

நிலம், பொழுது ஆகிய இரு பகுதிகளைக் கொண்டதாக வரும், சம்பந்தர் பாடல்களில் முதற் பொருளானது தலந்தோறும் பாடப்பெறும் பதிகங்களில் அமைந்துள்ளது. திணைக்கு ஏற்றவண்ணமாக இதில் முதற் பொருள் அமையவில்லை. தலத்தின் இயற்கை-வருணனை அமைந்துள்ளதே தவிர திணைக்குரிய இடமும் காலமும் அமையவில்லை.

கடன் முயங்குகழி சூழ்குளிர் கானலம் பொன்னஞ் சிறகன்னம்
பெடை முயங்குபிர மாபுரம் (பா. 7)

என்ற வருணனை இடம் பெறுகிறது. இதில் புணர்ச்சியும் - புணர்ச்சி நிமித்தமுமாகிய குறிஞ்சித்திணை உரிப்பொருள் நிலையில் அமைந்து இருக்க, அதற்குரிய முதற்பொருள் மலையும் மலை சார்ந்த இடமும் அமையவில்லை. மாறாகச் சோலையும் - கானலும் அமைந்திருக்கின்றன. இவ்வாறு வரும் முப்பொருள் மயக்கத்தினைத் தொல்காப்பியம் திணை மயக்கம் என்று குறிப்பிடுகிறது.

திணை மயக்குறுதலும் கடிநிலை இலவே
நிலனொருங்கு மயங்குதல் இல்லென மொழிப
(தொல். அக. 14)

எனும் நூற்பாவிற்கேற்பச் சம்பந்தரின் பதிகத்தில் குன்றுபேச வேண்டிய இடத்தில் சோலை பேசப்பெறுவது அமைவுடையதாகும்.

கருப்பொருள்

கருப்பொருள் என்று சொல்லப்படுவது பொருட்சுவையை மேம்படுத்தப் பயன்படும் சிறப்புப் பொருளாகும். அகப்பொருள் சுவையை உள்ளுறையாகக் கூறுவதற்கு இடம் வகுப்பதே கருப்பொருள்தான். சம்பந்தர் தம் பாடலில்,

வாடல் வெண்டலை சூடினார் மால்விடை
கோடல் செய்த குறிப்பினார் (1:56-7)

எனும் பகுதி ஊர்தியாகிய விடையைப் பெற்றுத் தலைவன் பிரியக் கருதினன் எனும் குறிப்பைத் தருகிறது.

கானமான் வெருவுறக் கருவிரலூகங்
கடுவனோ டுகளுமூர் கற்கடுஞ்சாரல் (1:76-5)

எனும் பகுதியில் காட்டுமான் அஞ்சக் குரங்குகள் மாறுபடும் தன்மையைக் குறிப்பதால் இப்பதிகம் இரங்கல் உரிப்பொருள் பதிகமாகும்; உள்ளுறையாக இக்காட்சி அமைகிறது. தலைவி அஞ்சும்படியாகத் தலைவனும், தலைவி நிலை கண்டு வருந்திய சுற்றமும் மாறுபட்டு விளங்கியதை உள்ளுறையாக இந்நிகழ்ச்சி குறிப்பிடுகிறது எனலாம்.

குறிஞ்சிக்குரிய உரிப்பொருள் - தோழிக்குத் தலைவி கூறுவது

'தோடுடைய செவியன்' எனத் தொடங்கும் பாடலில் இறைவனைத் தலைவனாகவும் தம்மைத் தலைவியாகவும் பாவித்துப் பாடப்படுகிறது. எதிர்வரும் புணர்ச்சிக்குத் திருவருள் கலப்புக்கு - நிமித்தமாக அப்பதிகத்தின் பாடல்கள் விளங்குவதால் இதனைக் குறிஞ்சித் திணைக்குரிய உரிப்பொருள் பாடலாகக் கருதலாம்.

முல்லைத்திணை : அறத்தொடு நிற்றல்

திருப்பாற்றுறைத் திருப்பதிகம் (1-56), திருப்பிரமபுரத் திருப்பதிகம் (3-100), திருப்பரிதிநியமத் திருப்பதிகம் (3-104), திருவீழிமிழலைத் திருப்பதிகம் (3-116) போன்ற திருப்பதிகங்கள் தலைவனின் பெருமை கூறி அறத்தொடு நிற்றல் கருத்தைப் பெற வைப்பதால் முல்லைத்திணைப் பாடல்களாக அமைகின்றன.

சாரார் கொன்றை கலந்த முடியினர்
சீரார் சிந்தை செலச் செய்தார்

பாரார் நாளும் பரவிய பாற்றுறை
யாரார் ஆதி முதல்வரே. (திருப்பாற்றுறைத் திருப்பதிகம்)

மருதத்திணை : ஊடல் நிமித்தம் -
திருப்பாச்சிலாச்சிராமத்துத் திருப்பதிகம்

நீறு மெய்பூசி நிறை சடைதாழ நெற்றிக்கண் ணால் உற்றுநோக்கி
ஆறது சூடி ஆடரவு ஆட்டி ஐவிரல் கோவண ஆடை
பால்தரு மேனியர் பூதத்தர் பாச்சில் ஆச்சிரா மத்துஉறை கின்ற
ஏறாது ஏறியர் ஏழையை வாட இடர் செய்வதோ இவர் ஈடே.

இது செவிலி கூற்றாக வருகின்றது; தலைவி நிலை கண்டு வருந்திக் கூறும் கூற்றுக்களைத் தன்னகத்துக் கொண்டு ஊடல் நிமித்தத்தை வெளிப்படுத்தி மருதத் திணையாக விளங்குகிறது.

நெய்தல் திணை - தலைவி இரங்கிக் கூறுதல் -
திருவிலம்பையங் கோட்டூர்த் திருப்பதிகம்

"என் எழில் நலங்கொள்வது இயல்போ"

என்ற ஈற்றடியை இப்பதிகத்தின் பாடல்கள் பெற்று விளங்குகின்றன. தம் நெஞ்சை நோக்கிக் கூறும் இப்பாடல்கள் நெய்தல் திணைக்குரிய பாடல்களாக அமைந்துள்ளன.

பாலைத்திணை - தலைவி கூற்று - பிரிவு - தூது விடுதல்

பிரிந்து சென்ற தலைவன்பால் எகினம் முதலிய பொருள்களைத் தூது விடுத்திடும் மரபு அகப்பொருள் மரபு. இத்தகைய தூதுவிடும் பாங்கு தேவார அகப்பொருள் பதிகங்களில் - இரு பதிகங்களில் அமைந்துள்ளது. இவ்விரு பதிகங்களும் பாலைத்திணைப் பாங்கைப் பெற்றவையாகும்.

இவ்வாறு ஐந்திணை ஒழுக்கங்களைப் பெற்ற பாடல்கள் தேவார அகத்துறைப் பதிகங்களில் அமைந்துள்ளன.

பெருந்திணை

சம்பந்தரின் மூன்று திருமுறைகளில் காணப்பெறுகின்ற அகத்துறைப் பாடல்களைக் கொண்டு இரு கூறுகளாகப் பிரிக்கலாம். முதல் கூறில் தலைவி தலைவனின் கூட்டத்தைப் புலப்படுத்தித் தன் நலன் அழிந்தமையைக் கூறுகின்றனள். அக்கூற்றுக்கள் தோழியை, நெஞ்சினை, தூது செல்லும் பொருள்களை நோக்கிக் கூறுவனவாக அமைந்துள்ளன. அவற்றின் மூலம் தலைவனின் தன்னேரில்லாத திறமும், அருள் திறமும் வெளிப்படுகின்றன. மேலும் தலைவியின் தன்னிலை இழிபும், தலைவனின் உயர்வும் வெளிப்படுகின்றன. இத்தகைய கூற்றுக்களால் தேவாரத் தலைவியின் சிறப்புகளும் பெறப்படுகின்றன.

தன்னுறு வேட்கை கிழவன்முன் கிளத்தல்
எண்ணுங் காலை, கிழத்திக் கில்லை...

என்று தலைவியின் கூற்றுக்களாகத் தொல்காப்பியர் குறிப்பிடுவார். இதன்படி தலைவி தன் வேட்கையைத் தலைவன் முன்னர் நிகழ்த்துதல் இல்லை என்பது பெறப்படுகிறது. ஆயின் திருஞானசம்பந்தரின் பாடல்களில் தலைவனை விளித்து, தலைவி தன் வேட்கையைப் புலப்படுத்தும் கோட்பாட்டினைக் காண முடிகிறது.

திருவீழிமிழலைத் திருப்பதிகத்தில் அமைந்த பாடல்கள் தலைவி தன் வேட்கையைத் தலைவனிடம் கூறும் பாடல்களாக அமைந்துள்ளன.

காய்ந்து வீழ்ந்தவன் காலனே கடுநடஞ் செயும் காலனே!
போந்த தெம்மிடை யிரவிலே உம்மிடைக் கள்வம் இரவிலே!
(பா. 6)

என்ற இப்பகுதியில் தலைவி தலைவனை நோக்கி, ''எங்கள் வீட்டிற்கு வந்து பிச்சையேற்றலை முன்னிட்டு - உம்மொடு களவொழுக்கத்தால் இரவில் புணர்வோம்'' என்று குறிப்பிடுகின்றாள்.

தூய மெய்த்தேவர கண்டனே தோன்றி நின்ற மணிகண்டனே!
மேய இத்துயில் விலக்கணா மிழலை மேவிய விலக்கணா!
(பா. 9)

என்ற இப்பகுதியில் தலைவி தலைவனை நோக்கி ''நான் இப்போதுற்ற பொய்த் தூக்கத்தை விலக்குவீராக!'' என்று குறிப்பிடுகிறாள். இப்பதிகத்தின் பாடல்களுள் பிற்பகுதி வெளிப்படையாகவும் - குறிப்பாகவும் தலைவி தன் வேட்கையைப் புலப்படுத்துவதாக அமைந்துள்ளது. இத்தகைய நிலையைத் தொல்காப்பியம் பெருந்திணையில் அடக்கும்.

ஏறிய மடல் திறம் - இளமை தீர்திறம்
தேறுதல் ஒழிந்த காமத்து மிகுதிறம்
மிக்க காமத்து மிடலொடு தொகைஇச்
செப்பிய நான்கும் பெருந்திணைக் குறிப்பே (தொல். பொருள்)

இத்தகைய பெருந்திணை நான்கில் இப்பகுதி மிக்க காமத்து மிடலாகும். எவ்வாறு எனில்,

தன்னை யறியாது சென்றேன் மற்றென்னை
வளைமுன்கை பற்றி நலியத் தெருமந்திட்டு (கலி. 51)

என்ற கலித்தொகைப் பகுதி - பெருந்திணைப் பகுதி என நச்சர் குறிப்பிட்டுள்ளார். இங்குத் தலைவி தம் புணர்ச்சியைக் குறிப்பிடுவது போல - மேற்குறிப்பிட்ட தேவாரப் பகுதிகள் அமைந்திருப்பதால் பெருந்திணை எனலாம்.

அக இலக்கிய அமைப்புகளான உலா, தூது, கோவை போன்ற இலக்கிய வடிவுகளும் சம்பந்தரின் திருமுறைப் பதிகங்களில் காணக் கிடக்கின்றன.

சம்பந்தரின் பாடல்களில், இறைவனாய தலைவனிடத்தில் காதல் கொண்ட தலைவி கிளியைத் தூதனுப்பும் அகத்துறைப் பகுதியையும் காணலாம்.

சிறையாரும் மடக்கிளியே இங்கேவா தேனொடுபால்
முறையாலே உணத்தருவன் மொய்பவளத் தொடுதரளம்
துறையாரும் கடற்றோணி புரத்தீசன் துளங்குமிளம்
பிறையாளன் திருநாமம் எனக்கொருகால் பேசாயே!

'சுட்டி ஒருவர் பெயர் கொளப் பெறாஅர்' என்ற அக இலக்கியக் கோட்பாடும் எழுதிணைப் பகுப்பும் தூது இலக்கிய மரபும் சம்பந்தரின் அகப்பாடல்களில் இடம் பெற்றுள்ளன. சம்பந்தரின் திருமுறைகளில் காணப்பெறும் ''கடவுள்மாட்டு மானிடப் பெண்டிர் நயந்த பக்க'' இலக்கியப் பகுதிகள் - எல்லாம்வல்ல இறைவனைத் தலைவனாகவும், அவனது திருவடியைத் தலைப்பட்டுப் பிரிவற நின்று இன்பம் துய்ப்பதற்குரிய உயிர்களாகிய இறையடியார்கள் தம்மை அவனருள் வேட்ட தலைவியாகவும் கொண்டு உளமுருகிப் பாடிய அரும் பாடல்களைக் கொண்டே விளங்குகின்றன என்பதும், அப்பகுதிகள் இன்பமும், பொருளும், அறமும் என்றாங்கு அன்பொடு புணர்ந்த அகத்திணைக் காமமாக அகத்துறை பாடல்களைக் கொண்டே விளங்கு கின்றன என்பது தெளிவாகும்.

2. சூழலும் பாடலும்

சா. அபிராமி, புதுவை.

சோழ நாட்டிலே, சீகாழியிலே, தவம் பெருக்கும் கவுணிய குலத்தில், சிவதீட்சை பெற்ற வேதியர் குலத்திலகராகிய சிவபாத இருதயருக்கும் பகவதியம்மையாருக்கும் 'வேதநெறி தழைத்தோங்க, மிகு சைவத்துறை விளங்க' சித்திரை மாதத்துத் திருவாதிரை நாளிலே திருமகனார் ஒருவர் தோன்றினார். திருமகனாருக்கு மூன்றாம் ஆண்டு நடக்கும்போது, ஒருநாள் சிவபாத இருதயர் சீகாழிக் கோயிலினுள் இருக்கும் பிரம்ம தீர்த்தத்தில் நீராடச் செல்லும்போது திருமகனாரைக் குளக்கரையில் உட்கார வைத்து, நீருள் மூழ்கி, ''அகமர்ஷணம்'' எனும் மந்திரத்தைச் செபித்துக் கொண்டிருந்தார்.

தந்தையாரைக் காணாத பிள்ளையார் பண்டைய உணர்வு மூண்டெழத் திருத்தோணிச் சிகரம் பார்த்து, ''அம்மே, அப்பா'' என அழுதார். இவ்வொலி அம்மையார் திருச்செவியிலே சென்று சேர்ந்தது. எம்பெருமான் விடைமேல் எழுந்தருளி, ''பாலடிசில் பொன்வள்ளத்து ஊட்டுக'' என, அம்மையாரும் எண்ணரிய சிவஞானத் தின்னமுதம் குழைத்து ''உண் அடிசில்'', என, ஊட்டிக் கண்ணீரைத் துடைத்து அழுகையை மாற்றினார். அந்நிலையில் 'உவமையிலாக் கலைஞானம் உணர்வரிய மெய்ஞ்ஞானம் தவ முதல்வர் சம்பந்தர் தாம் உணர்ந்தார்.

நீராடி முடித்துக் கரையேறிய சிவபாத இருதயர், பேருணர்விற் பொலிகின்ற பிள்ளையாரை நோக்கி, ''எச்சில் மயங்கிட உனக்கு இது இட்டாரைக் காட்டு'' எனச் சிறுகோல் கொண்டு ஓச்ச, சிறிய பெருந் தகையார், ஆனந்தக் கண்ணீருடன் பாவையுடன் விடைமேலிருந்தாரைச் சுட்டினார்.

எல்லையிலா மறைமுதன்மெய் யுடனெடுத்த வெழுது மறை
மல்லனெடுந் தமிழாலிம் மாநிலத்தோர்க் குரைசிறப்பப்
பல்லுயிருங் களிகூரத் தம்பாடல் பரமர்பாற்
செல்லுமுறை பெறுவதற்குத் திருச்செவியைச் சிறப்பித்துத்

''தோடுடைய செவியன்'' எனத் தொடங்கி முதல் அற்புதத் திருப்பதிகத்தைப் பாடுகின்றார் ஞானசம்பந்தப் பெருமான்.

முதற் பதிகத்தின் முதற் பாடலிலேயே எண்ணரிய அரும்பொருள் களைக் காண்பர் ஆன்றோர் பெருமக்கள். அவ்வரும் பொருட்களைச் சிந்திப்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

சிவபெருமானுடைய திருக்கோலமும், அவனுடைய கருணையும் பெருமானை வழிபடுபவர்களுக்கு அருள்புரியும் பண்பும் இப்பாடலில் சிறப்பிக்கப் படுகின்றது.

தோடுடைய செவியன் விடையேறியோர் தூவெண் மதிசூடிக்
காடுடைய சுடலைப்பொடி பூசியென் னுள்ளங்கவர் கள்வன்
ஏடுடைய மலரான் முனைநாட் பணிந்தேத்த வருள்செய்த
பீடுடைய பிரமாபுர மேவிய பெம்மானி வனன்றே.

பிள்ளையாருடைய அழுகைக் குரல் சென்று பரந்து திருமுலைப்பால் அருளச் செய்தது திருச்செவியாதலின் சம்பந்தர் பெருமான் செவியை முதற்கண் தெரிவிக்கின்றார். உலகுயிர்கள் துன்பம் நீங்கி இன்பம் அடைதலே பொருளாக, பாடல் பரமனார் திருச்செவியில் சென்று சேர திருச்செவியை முதற்கண் சிறப்பித்தார், என்பது ''பல்லுயிரும் களிகூரத் தம்பாடல் பரமர்பால் செல்லுமுறை பெறுவதற்குத் திருச்செவியைச் சிறப்பித்து'' என்ற சேக்கிழார் வாக்கால் அறியலாகும்.

தோடுடைய செவி என்றதால் இடப்பாகத்துச் செவி என்பது அறியப்படும். கருணைக்கேற்றது தாய்தழீஇய இடப்பக்கமாதலின் அதனை முதற்கூறினார். சேக்கிழார் சுவாமிகள், ''மறை முதல் மெய்யுடன் எடுத்த எழுதுமறை'' என்பதால் பிரணவத்தின் முதலாகிய ஓங்காரத்தைச் சிவசத்தியின் உண்மைச் சொரூபமாகிய தகரவித்தையின் அடையாளமாகிய ''த'' என்பதோடு சேர்த்து ''தோ'' என்று தொடங்கியதாகக் கூறுவார்கள்.

தகர வித்தையாவது சிவசத்தியின் உண்மை நிலை, பிரணவநாதம் பூதாகாயத் தினன்றிச் சிதாகாயமாகிய தகரா காயத்திற்றோன்றும் சுத்தநாதமாதல் குறிக்கத் 'தகர' மெய்யுடன் கூட்டி உரைத்தருளினார்.

இவ்வாறு முதற்றிருமுறை - முதற்பதிகம் - முதலடி - முதன்மொழி - முதலெழுத்தாகிய இவ்வோகாரம், பன்னிரண்டாம் திருமுறையின் ஈற்றுச் சருக்கம் - ஈற்றுச்செய்யுள் - ஈற்றடி - ஈற்றுச்சொல் - ஈற்றெழுத்தாகிய மகரத்தோடு புணர்ந்து - ''உலகெலாம்'' என்று முடிந்து, தமிழ் வேதத் திருமுறைகள் யாவும் பிரணவத்தில் தோன்றி, அடங்கி நிற்கும் தன்மை நினைந்து இன்புறத்தக்கது - (சிவக்கவிமணி உரை).

தேவாரத்திற்கும் வேதத்திற்கும் உள்ள ஒற்றுமையை உணர்த்த வேதம் பயின்ற மரபில் வந்து தமிழ்வேதம் தந்த பிள்ளையவர்கள்,

"தத் ஸவிதுர் வரேண்யம் பர்கோ தேவஸ்ய தீமஹி
தியோ யோ ந: ப்ரசோ தயாத்" (காயத்ரி மந்திரம்)

என்ற காயத்ரி மந்திரத்தின் முதலெழுத்தாகிய தகரத்தின் மீது பிரணவத்தின் முதலெழுத்தாகிய ஓங்காரத்தைச் சேர்த்துத் தொடங்கியிருப்பது அறிந்து இன்புறற்குரியது.

"தோடுடைய செவியன்" என்றமையால், அம்மையப்பரே உலகுக்கு அம்மையப்பர் என்பதை முதலில் உணர்த்தி, அதனால் ஒரு தெய்வ வழிபாட்டை நிலைநிறுத்துகிறார் ஞானசம்பந்தர். தோடுடைய செவியே "ஓம்" என்ற பிரணவ சொரூபமாய் உள்ளதையும் காட்டி அருளுகின்றார்.

தோடு - பெண்கள் காதணி; செவியன் - அன் - ஆண்பால் விகுதி. பெண்ணும் ஆணுமாகக் கூடி வந்து அருளி நிற்கும் "இவன்" என்பதாம்.

குழந்தைகள் முதலில் அன்னையை உணரும். பின்னரே அத்தன் தன்னை அறியும். இங்குப் பிள்ளையார் முதலில் கண்டு, பால் ஊட்ட உண்டு, அழுகை தீர்க்கப் பெற்றதற்குப் பொருளாவர் உமையம்மையார். இருள் போக்குதலில் ஞாயிற்றின் கதிர் முன்னர்வர, அதன் பின்னரே ஞாயிறு வருதல் போல அம்மையின் அருள் முன் வைக்கப்பட்டது.

"தோடையா னொருகாதிற் றூயகுழை தாழ" (தேவா)

"ஒருபாற்றோடு மொருபாற் குழையும், இருபாற் பட்டமேனி யெந்தை" (தேவா)

என்றபடி இறைவன் பெண்ணாணாய பேரருளாளன்.

அசுவதரன், கம்பளன் என்ற இரண்டு கந்தருவர்கள் சிவனைப் பாட, வரம் பெற்றுக் காதிலே தோடும் குழையுமாகிய உருவுடன் இருக்கப் பெற்றனர். அதுபோலவே தமது பாடலும் இறைவர் திருச்செவியிலேற்று அருள்புரிய செவியை முற்கூறினார் பிள்ளையார்.

ஸ்ரீமத் செப்பறைச் சுவாமிகளின் உரையால் நாமறியும் சிறப்புக்களாவன

செவி : அருள் நோக்கம் பெறுபவன் கண் வளத்தினையும், கொடை பெறுபவன் கை வளத்தினையும் சிறப்பித்துக் கூறுதல் போல, ஈண்டுச் செவியால் நன்மை பெறக் கருதிச் செவியைச் சிறப்பித்தார்.

ஏறி, சூடி, பூசி - முதலான எச்சங்கள், ஏறியும் சூடியும் பூசியும் கவர்ந்தார் என்பதாகும்.

தூ - தூய்மை - அகத்தும்; வெண்மை - புறத்தும் சிறப்புடையன. தூவெண்மதி - தூய்மையான வெண்ணிறம் பொருந்திய மதி. மதிக்குத்

தூய்மை களங்கமின்மை. இருள் ஒளியைச் சாராதவாறு போலக் களங்கம் இறைவனையும் அவனருள் பெற்றாரையும் சாராது. தூய்மை மனத்திலும் வெண்மை புறத்திலும் நிகழ்வது ஆதலின் இங்கே குறிப்பிடும் மதி நாம் காணும் சந்திரன் போன்றதல்லன் என்பது தெளியத்தக்கது. அன்றியும் ஒருகலைப் பிறையாதலின் களங்கத்திற்கு இடமில்லை என்பதுமாம்.

காடு உடைய சுடலை - உலகம் சங்கரிக்கப்பட்ட நிலை. இறைவன், சுடலைப் பொடி பூசுதல் - சர்வ சங்கார காலத்து எல்லாவுலகமும் தத்தங்காரணத்துள் முறையே ஒடுங்கப் பெறும்போது நிகழ்வது. அதாவது, நிலம், நீரில் ஒடுங்கும்; நீர், தீயில் ஒடுங்கும்; தீ காற்றில் ஒடுங்கும்; காற்று ஆகாயத்தில் ஒடுங்கும். மீண்டும் உற்பத்திக் காலத்தில் இவை ஆகாயத்தில் தொடங்கி, முறையே ஒன்றிலிருந்து ஒன்று வெளிப்பட்டு, நிலம் வரை பஞ்ச பூதங்களாகப் பரிணமிக்கின்றன - (திருவாசகம் - சில சிந்தனைகள் - அ.ச. ஞானசம்பந்தன்).

மகா சங்காரமாவது, பஞ்ச கலைகளிலும் அடங்கிய எல்லாப் புவனங்களையும் சங்கரிக்கின்ற நிலை. அப்போதுதான் எல்லாம் சுடலைக் காடாகும்.

மலரான் - பிரமன்; மலர் - தாமரை; பிரமன் பூசித்த காரணத்தால் இறைவர்க்கு பிரமபுரீசுவரர் என்றும் தலத்திற்குப் பிரமபுரம் என்றும் பெயர்க் காரணத்தைக் குறிக்கின்றார்.

மலரான் - ஆன் - கருவிப்பொருளில் வந்த மூன்றனுருபு எனக் கொண்டு காயத்தாலும், பணிந்து - என்றதனால் மனத்தாலும், ஏத்த என்றதனால் வாக்காலும் செய்த வழிபாடுகளைக் குறிப்பதாகும்.

“சிறந்த வன்பால் நாவியலு மங்கையொடு நான்முகன்றான்
வழிபட்ட” (தேவா)

“விடையேறி” - என்பது இறைவனது உருவம்.

பொடிபூசி - என்பது இறைவனது அருவுருவம்.

உள்ளங்கவர் கள்வன் - என்பது இறைவனது அருவம்

ஆகிய மூவகைத் திருமேனிகளையும் குறிக்கும்.

தசாங்கம் என்பது அரசர்க்குரிய பத்து உறுப்புக்கள். அந்தப் பத்து உறுப்புக்களும் இரண்டிரண்டாகக் குறிப்பால் உணர்த்துவதை ஸ்ரீமத் செப்பறை சிதம்பர சுவாமிகளின் உரையில் காணலாம்.

பிரமபுரம்	- **நாடும் ஊரும்**
விடையேறி	- **கொடியும் ஊர்தியும்**

பொடி பூசி - முரசும் படையும்

மதிசூடி - மலையும் ஆறும்

தோட்டுச்செவி - தாரும் பெயரும்

திருவாசகத்தில் திருத்தசாங்கம் என்ற தலைப்பிலமைந்த பதிகம் இறைவனது பத்து உறுப்புக்களையும் கூறுகின்றது. மேலும் கீர்த்தித் திருஅகவலில்,

அந்தமில் பெருமை அருளுடை அண்ணல் (101)
எந்தமை ஆண்ட பரிசது பகரின்
........எனத்தொடங்கி
அருளிய பெருமை அருண்மலை யாகவும் (124)

என முடியும் வரிகளில் இறைவனது பத்து உறுப்புக்களையும் நமக்குக் காட்டிப் பேருவகை அடைகின்றார் மணிவாசகப் பெருமான்.

மேற்கண்டவாறே இறைவனின் எண்குணங்களையும் குறிப்பால் காட்டுகின்றார் சுவாமிகள்.

தோடுடைய செவி - பேரருளுடைமை
விடையேறி - தன்வயத்தனாதல்
மதிசூடி - வரம்பிலின்பமுடைமை; தூய உடம்பினனாதல்
உள்ளங்கவர்கள்வன் - பாசங்களினீங்குதல்; இயற்கை உணர்வினனாதல்
பிரமபுரம் - அளவிலாற்றலுடைமை
பொடிபூசி - நோய் தீர்க்கும் மருந்தினைக் குழந்தைகளின் பொருட்டுத் தாய் உண்பது போலத் தாம் திருநீறு அணிவர்.

'அவன்' என்று மறைகள் முறையிட்டு ஓதியதனை, ''இவன்'' என்று சுட்டியருளுகின்றமையால், தம்மைப்போல அதனைக் காணாத தந்தையாருக்கும் அவர் மூலம் உலகுக்கும் அங்கங்களை அடையாளங் களுடன் சாற்றி அருளினார் பிள்ளையவர்கள்.

'பிரமபுரமேவிய' என்றது சதாசிவ தத்துவமாகிய தமது உயர் நிலையினின்றும் இறங்கி உயிர்கள் எளிதில் வழிபட வந்த நிலையின் அருட் பெருக்கின் குறிப்பாகும்.

தோடு, விடை - அஃறிணை

செவியன் - உயர்திணை

அஃறிணையும் உயர்திணையும் ஆகிய இரண்டுமாய் நிற்பவன் இறைவன்.

'இவன்' என்று சுட்டிக்காட்டித் தொடங்கிய முதற்றிருமுறை, முதற்பாடலின்படி இவனதியல்பே திருமுறைகள் முழுதுமாம் என்பன ஸ்ரீமத் செப்பறை சிதம்பர சுவாமிகளின் உரைத்திறனாகும்.

இனி, திரு. கயப்பாக்கம் சதாசிவ செட்டியார் அவர்களின் உரைவளத்தினைக் காண்போம்.

இத்திருப்பாட்டினைப் பிள்ளையார்,

1. தம்மை, ''உனக்கீதிட்டாரைக் காட்டு'' என்று வினவிய தந்தையார்க்கு விடை கூறு முகத்தானும்.
2. தாம் பெற்ற அருள்ஞானத்தின் பொருட்டு இறைவரைத் தாம் ஏத்தும் துதிமுகத்தானும்.
3. உலகுயிர்களுக்கு மெய்ஞ்ஞான நூல் துணிபினை உபதேசிக்கும் முகத்தானும்.

என இம்மூன்று பொருளும் கொண்டருளியுள்ளார்.

மறையானது சுரலட்சணங்கள் பொருந்த இசைக்கப்படுவது. சுரங்கள் ஓதுதலிற் பிழைபட்ட வழிப் பயன் தராததுமன்றி, அநர்த்தமாகித் தீமையும் பயக்கும் என்பர். சுரவியல்பான அம்மறை எழுத முடியாதது. ஆதலின் அவ்வாறன்றி இஃது எழுதும் மறையாகி அப்பயன்தரத் தமிழில் இசைக்கப்பட்டது. இது பற்றியே தந்தையார் கேட்ட கேள்விக்கு மறைச்சிறுவர் மறையினால் விடை கூறாது தமிழினாற் கூறினார்.

தோடு - பெண் பாகமும், செவியன் - ஆண் பாகமும் குறித்து நின்று ''தோலும் துகிலும்'' என்ற திருவாசகத்திற் கண்டபடி இறைவரது இரு கூறாகி இயைந்த தொன்மைக் கோலத்தைக் குறித்தது.

1. 'விடையேறு' என்பது நித்யத் தன்மையை வேண்டிய அறக் கடவுளை வெள்விடையாகப் படைத்து ஊர்தியாகக் கொண்டதால் படைத்தலும்
2. ''மதிசூடி'' என்பது சந்திரனுக்கு அபயம் தந்து திருமுடியில் ஏற்றிக் காத்ததால் காத்தலும்
3. ''பொடிபூசி'' என்பது சர்வ சங்காரகாலத்து நிகழ்ச்சியை அறிவித்தலால் அழித்தலும்
4. ''கள்வன்'' என்பது இறைவன் எல்லா உயிர்களிடத்தும் நீக்கமற நிறைந்திருந்தும் அவைகள் வினைப்போகங்களை நுகர ஒளித்து நிற்பதால் மறைத்தலும்

5. ''அருள் செய்த'' என்பது அனைவருக்கும் அருள் செய்யும் அருளலும் ஆகிய ஐந்தொழில்களையும் விளக்கும் குறிப்பு என்பர்.

இவ்வாறு இம்முதற்பாடலுக்கு அரும்பெரும் விளக்கங்களைக் காண்பர் ஆன்றோர் பெருமக்கள்.

அடுத்து வரும் பாடல்களிலும் முதலிரு அடிகளில் அணிகளைக் கொண்டு இறைவனது அடையாளங்கள் அறிவிக்கப்படுகின்றன.

"நீர் பரந்த நிமிர் புன்சடை மேலோர் நிலாவெண் மதிசூடி"

"ஒருமை பெண்மையுடை யன்சடையன் விடை யூருமிவன்"

"சடைமுயங்கு புனலன் அனலன் எரிவீசிச் சதிர்வெய்த"

என்றவாறு அகத்துறைப் பொருள் பொதிந்து, தலைவனையே நினைந்து உருகும் தலைவியின் இயல்புகளையும் இத்திருப்பதிகத்தில் காணலாகும்.

அவனது அழகைத் தோழியர் கூற அவ்வுரைப்படியே, வந்து எனது உள்ளத்தைக் கவர்ந்த கள்வன் எனும் பொருளில்,

"அருமையாகவுரை செய்யவமர்ந்தென துள்ளங்கவர் கள்வன்"

எனும் வரியும் முன்கையில் செறிந்து கலந்திருந்த சங்க வளையல்கள் சோர்ந்தன எனும் பொருளில்,

"இறைகலந்தவின வெள்வளை சோரவென் னுள்ளங்கவர் கள்வன்"

எனும் பாடல் வரியும், அகத்துறைப் பொருளாம்.

"வளை சோர" என்றது ஆன்மாக்களை நாயகிகளாக வைத்தோதும் அகத்துறை பற்றிக் கூறியது "உடம்பு நனி சுருங்கல்" என்னும் மெய்ப்பாடு உணர்த்தியவாறாகும்.

எம்பெருமானின் இயல்புகளைப் பாடும்போது,

"கற்றல் கேட்டலுடை யார்பெரியார்கழல் கையால் தொழுதேத்தப்
பெற்ற மூர்ந்தபிர மாபுரமேவிய பெம்மானி வனன்றே"

என்று பாடுகின்றார் பிள்ளையார்.

கற்றல் - இறைவன் புகழையே கற்று அடங்கல்.

கேட்டல் - இறைவன் புகழ் ஒன்றையே கேட்டல்.

"கல்லார் நெஞ்சில் நில்லான் ஈசன்"

"கற்றவர் விழுங்குங் கற்பகக் கனியை"

''கற்றல் கேட்டலுடையார் பெரியார்'' என்பன ஒப்புநோக்கற்குரியன. கேட்டலுடன் சிந்தித்தல் தெளிதல் நிட்டை கிளத்தல் என ஈரிரண்டாம் கிளக்கின் ஞானம் என்பது சிவஞான சித்தியார்.

மகாப்பிரளய காலத்தில் உலகமே அழிக்கப்பட்டபோது சீகாழித் தலம் மட்டும் அழியாது இருத்தலின் உலகிற்கு ஒரு வித்தாக இருக்கின்றது.

"ஊர்பரந்தவுல கின்முதலாகிய வோரூரிது வென்னப்
பேர்பரந்த பிரமாபுரமேவிய பெம்மானி வனன்றே" (3)

சர்வ சங்கார காலத்தில் கரிய கடல் பொங்கிவந்து உலகைக் கொண்டபோது தோணிபுரமாய் மிதந்த பெருமை பெற்றது பிரமாபுரம்.

"கருமை பெற்றகடல் கொள்ள மிதந்ததொர் காலம் மிதுவென்னப்
பெருமை பெற்றபிர மாபுரமேவிய பெம்மானி வனன்றே" (5)

என்ற வரிகளால் நமக்கு ஓர் வரலாற்றுச் செய்தி கிடைக்கின்றது.

இத்திருப்பதிகத்தின் இறுதிப் பாடலாவது.

"அருநெ றியமறை வல்ல முனியகன் பொய்கை யலர்மேய
பெருநெ றியபிர மாபுர மேவிய பெம்மா னிவன் றன்னை
ஒருநெ றியமனம் வைத்துணர் ஞானசம் பந்த னுரைசெய்த
திருநெ றியதமிழ் வல்லவர் தொல்வினை தீர்த லெளிதாமே".

அருமையான நெறிகளை உலகிற்கு வழங்கும் வேதங்களில் வல்ல பிரமனால் வணங்கப்பட்டதும், தாமரை மலர்களையுடையதும் ஆகிய பிரமபுரத்துள் மேவிய முத்திநெறி சேர்க்கும் முதல்வனை, ஒருமைப்பாடுடைய மனத்தைப் பிரியாதே பதித்து உணரும் ஞானசம்பந்தன் போற்றி உரைத்தருளிய திருநெறியாகிய அருநெறியை யுடைய தமிழாம் இத்திருப்பதிகத்தை ஓத வல்லவர்களின் பழவினைகள் தீர்தல் எளிதாகும்.

ஒருநெறிய மனம் - ஒன்றுபட்ட மனம், மனம் ஐம்புலன்கள் வழியாகவும் அறிந்தவற்றை வழியடைத்த காலத்தும் சென்று பற்றித் தன்மயமாய் இருப்பதாகலின், அவ்வாறு செல்லாது ஒருங்கிய மனத்தை இங்குக் குறித்தார்கள்.

திருநெறிய தமிழ் - சிவநெறி காட்டும் தமிழ்

தொல்வினை தீர்தல்-இனி அனுபவித்துக் கழிக்கும்படி எஞ்சி நிற்கும் பழவினை. இது தீர்ந்தால் பிறவிக்கு வித்தாகிய வினையில்லாமை யினால் பிறவியில்லை என்றும், முத்தி கிட்டும் என்றும் பதிகப் பயன் கூறியவாறு. தருமை ஆதீன வெளியீட்டில் இப்பாடலுக்கான உரை சிந்தித்து மகிழற்குரியது.

''வேதம் உலகினருக்கு வேண்டிய பொது அறங்கள் பலவற்றைச் சொல்வது ஆதலின் அதை அங்கு அருநெறிய மறை'' என்றும் ஆகமம் சத்திநிபாதர்க்குரிய சைவ நுட்பங்களைச் சொல்வது ஆதலின், அதனை

இங்கு அவற்றின் மேம்பட்டது எனும் பொருளில் 'பெருநெறி' என்றும் கூறினார். ஒரு நெறி அல்லது ஒரு சமயம் என்றால் அது உலகினர் அனைவருக்கும் பயன்தரத் தக்கதாய் இருத்தல் வேண்டும். அதுபற்றியே ஞானசம்பந்தர் உலகினருக்கு அருநெறிப் பயனும், சத்திநிபாதர்க்குப் பெருநெறிப் பயனும் உணர்த்தினார். ஆயினும் அருநெறியும் பெருநெறியும் ஒரு நெறியே என்பதையும் அதுவே திருநெறி என்பதையும் உணர்த்தி யருளினார். இக்கருத்தைத் திருமந்திரமும்,

''திருநெறி யாவது சித்தசித் தன்றிப்
பெருநெறி யாய பிரானை நினைந்து
குருநெறி யாம்சிவ மாநெறி கூடும்
ஒருநெறி ஒன்றாக வேதாந்தம் ஓதுமே''

(திருமந்திரம்-வேதச் சிறப்பு)

என உணர்த்துவதைக் காணலாம்.

இவ்வாறு எண்ணரிய அரும்பொருட்களைத் தன்னுள் அடக்கி யுள்ள இத்திருப்பதிகத்தைப் பாடிப் பரவி, தொல்வினை தீர்ந்து முத்தி அடைவோமாக.

3. சம்பந்தர் தேவாரத்தில் வாழ்வியல்

அமுத இளவழகன், காஞ்சிபுரம்.

இனிமைத் தமிழ்

இனிமை (தமிழ்) என்பதனையே தனக்குப் பெயராகக் கொண்டது தமிழ். இயல்பாகவே இனிமை பொருந்திய தமிழுக்கு மேலும் இனிமை சேர்த்தவர்கள் பலர். அவர்களுள் திருஞானசம்பந்தர் இசையாலும் இசைக்கும் பொருளாலும் தமிழுக்கு இனிமை சேர்த்தவர்.

ஞானசம்பந்தரின் ஞானத்தமிழ் இறைவன் புகழ் பாடுவதற் கென்றே எழுந்தது. இயற்கைப் புனைவால் சங்க இலக்கியத்தின் மறுபதிப்பாய்த் திகழ்வது. சங்க இலக்கியம் மக்கள் வாழ்வினையே பாடுபொருளாகக் கொண்டது. சமய இலக்கியங்களுள் ஒன்றாகிய ஞானசம்பந்தரின் தமிழோ இறைவனையே உரிப்பொருளாகக் கொண்டது.

சங்க இலக்கியம் கருப்பொருளில் ஒன்றாகக் கொண்ட கடவுள், சமய இலக்கியங்களில் உரிப்பொருளாக உயர்ந்து விடுகிறது. அவ்வாறெனில் சங்க இலக்கியங்களில் முதன்மை பெற்றிருந்த வாழ்க்கையைச் சைவ சமய இலக்கியங்கள் புறக்கணிக்கின்றனவா? இல்லை. மக்களின் வாழ்க்கை கருப்பொருளில் கலந்து விடுகிறது.

வாழ்வியலே வாயில்

சைவம், உயிர்கள் இறைவனைச் சென்றடைய வேண்டும் என்று கூறுகின்றது. ஆனால் அதற்காக உலக வாழ்க்கையைத் துறக்கவேண்டும் என்று கூறவில்லை. இறைவனைச் சென்றடைய உலக வாழ்க்கையே வாயிலாக அமையும் என்றே கூறுகின்றது.

இறைவன் போகியாய் இருந்து உயிர்க்குப் போகத்தை அளிப்பான் என்றும், யோகியாய் இருந்து யோகமுத்தி உதவுவான் என்றும் சிவஞான சித்தியார் கூறுகின்றது. ஞானசம்பந்தரும் **'நல்லூர்ப் பெருமணத்தான் நல்ல போகத்தன் யோகத்தையே புரிந்தானே'** என்று கூறியுள்ளார்.

முதுகுன்றத்து இறைவன் அந்தணாளர்க்கு **அறம் பொருள் இன்பம் வீடு** மொழிந்த வாயான் என்று ஞானசம்பந்தர் கூறியிருப்பதும், அங்ஙனம் இறைவன் அறம் முதல் நான்கு அருளிச் செய்திலனேல் அவருக்கு உலக இயற்கை தெரியாது என்று மாணிக்கவாசகர் திருச்சாழலில் கூறியிருப்பதும் வாழ்வியலின் சிறப்பினைப் போற்றுவனவே.

உலக முதல்வன்

திருவள்ளுவர் கடவுளை உலக முதல்வன் என்று உலகத்தை முன் வைத்தே அறிமுகப்படுத்தினார். மெய்ப்பொருள் இயலார் உலகத்தை முப்பத்தாறு தத்துவங்களாகப் பிரித்தனர். **முப்பதும் ஆறும் படிமுத்தி ஏணி** என்றார் திருமூலர். அந்த முத்திப் படிகளில் உலகமே அடங்கிவிடு கின்றதே. உலகத்தை இறைவனின் உடம்பு என்றே தத்துவ நூல்கள் கூறும்.

''ஈறாய் முதல்ஒன்றாய் இருபெண்ஆண் குணம்மூன்றாய்
மாறா மறைநான்காய் வருபூதம் அவைஐந்தாய்
ஆறார்சுவை ஏழுஓசையோடு எட்டுத்திசை தானாய்
வேறாய் உடனானான் இடம்வீழிம் மிழலையே''

என்ற திருஞானசம்பந்தர் பாடல் சித்தாந்த வித்தாக விளங்குவது. ஆயினும் இதனுள் உலகமும் உயிர்களும் நுகர்பொருள்களும் அடங்கி விடுகின்றன.

நல்ல வண்ணம் வாழலாம்

வீடுபேற்றுக்காக உலக வாழ்வினைத் துறக்கவேண்டும் என்று சிலர் கருதினர். ஆனால் ஞானசம்பந்தர் அதனை ஏற்கவில்லை. வீடும் ஞானமும் வேண்டுதிரேல் விரதங்களால் வாடி ஞானம் என்னாவது என்று வினவுகின்றார். **மண்ணில் நல்லவண்ணம் வாழலாம்** என்று உறுதி கூறுகின்றார். ஆனால் ஒன்று மட்டும் இன்றியமையாதது; இறைவனை மறத்தல் ஆகாது; இறைவனைப் போற்றவேண்டும் என்று கூறுகின்றார்.

''மண்ணில் நல்லவண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணின் நல்லகதிக்கு யாதும்ஓர் குறைவிலை
கண்ணின் நல்லஃதுறும் கழுமல வளநகர்ப்
பெண்ணின் நல்லாளொடும் பெருந்தகை இருந்ததே''

என்பது பலரும் அறிந்த ஞானத்தமிழ்.

''பிறவியால் வருவன கேடுள ஆதலான் பெரியஇன்பத்
துறவியார்க்கு அல்லது துன்பம் நீங்காதுஎனத் தூங்கினாயே
மறவல்நீ மார்க்கமே நண்ணினாய் தீர்த்தம்நீர் மல்குசென்னி
அறவன்ஆரூர் தொழுதுஉய்யலாம் மையல்கொண்டு
அஞ்சல்நெஞ்சே''

என்பதும் அவர் பாடல். இது, துறவாதே கட்டறுத்தல் கூடும் என்பதை உணர்த்துகிறது.

வாழ்வியல் பின்புலம்

இறைவனை வழிபடுவதற்குரிய வழிபாட்டு நெறிகள் சமய நூல் களில் சிறப்பு ஒழுக்கம் என்று கூறப்படும். சிறப்பு ஒழுக்கத்துக்கு அடித்தளம் பொது ஒழுக்கமாகிய உலகியல். அது ஞானசம்பந்தர்

வாக்கில் எங்ஙனம் விரவி நிற்கின்றது என்பதற்குச் சில சான்றுகளைக் காணலாம்.

"ஒல்லையாறி உள்ளம்ஒன்றிக் கள்ளம் ஒழிந்து வெய்ய
சொல்லை ஆறித் தூய்மை செய்து காமவினை அகற்றி"

பின்னரே இறைவன் பெயரைச் சொல்லவேண்டும் என்கிறார். இதுபோல் ஒழுக்க நெறிகளைச் சுட்டிக்காட்டும் இடங்கள் மிகச் சிலவே. பிற இடங் களில் பெரும்பாலும் வாழ்வியல் கூறுகள் பின்புலமாகவே பேசப்படுகின்றன.

ஞானசம்பந்தர் இறைவன் புகழையே பாடுகின்றார். எனினும் அப்படிப் பாடும்போது இறைவன் எழுந்தருளியிருக்கும் தலங்களைப் பாடுகிறார். அந்தத் தலங்களின் இயற்கை அழகினைப் பாடுகின்றார். வயல் வளங்களைக் கூறுகின்றார். மாட மாளிகைகளைக் குறிப்பிடு கின்றார். அங்கு வாழும் மக்களைப் பற்றியும் பேசுகின்றார். இவையாவும் வாழ்வியலின் கூறுகளாய் வழங்கத்தக்கன.

சோலை வளம்

ஊர்களைச் சூழ்ந்திருப்பன சோலைகள். அவை ஊருக்கு எழிலும் நலனும் தருவன; மக்களின் வாழ்விற்கும் துணை செய்வன; அந்தச் சோலைகளின் சிறப்பினைச் சம்பந்தர் பாடும்பொழுது சோலைகளின் அழகு மேலும் மிளிர்ந்து சிறக்கின்றது.

'வேழக்கைபோல், வாழை காய்குலை ஈனும் கலிக்காழி'

'தெங்கின் ஊடுபோகி வாழைக் கொத்திறுத்து மாவின்மேல்
அங்கண்மந்தி முந்தி ஏறும் ஆரூர்'

'தேர்ந்தெழு கதலிக்கனி உண்பான் திகழ்மந்தி
மேல்நோக்கி நின்றிரங்கும் வேணுபுரம்'

"கோங்கமே குரவமே கொழுமலர்ப் புன்னையே கொகுடி முல்லை
வேங்கையே ஞாழலே விம்முபாதிரிகளே எங்கும்
ஓங்குமா காவிரி வடகரை அடை குரங்காடுதுறை"

"தாழை இளநீர் முதியகாய் கமுகின் வீழ நிரை தாறு சிதறி
வாழைஉதிர் வீழ்கனிகள் ஊறிவயல் சேறுசெய்யும் வைகா"

என்றெல்லாம் சோலைகளின் அழகினைப் பாடும்போது மந்திகள் மரங் களில் இருந்து மேல்நோக்கிய வண்ணம் கீழே இறங்கும் காட்சியையும் விட்டுவிடாமல் உற்றுநோக்கிச் சொல்லோவியம் ஆக்கியுள்ளார்.

வயல் வளம்

சோலைகளின் அருகிலேயே வயல்களும் உள்ளன. வையத்துள் வாழ்வார்க்கு உணவைத் தருவன வயல்களே.

"போகம் தருசீர் வயல்சூழ் பொழில்கள்
மேகம் தவழும் வேணுபுரம் அதுவே"

என்ற தொடரில் வயல்களைப் போகம் தரும் சீர்வயல் என்று குறிப்பிட்டுள்ளார்.

பொதுவாக வயல்களில் நீர்தான் நிறைந்திருக்கும். ஞானசம்பந்தரின் உவமைஇலாக் கவித்திறத்தால் அவர் காட்டும் வயல்களில் தேனும் கனிச்சாறும் ஆறாகப் பாய்கின்றது.

"அரிந்தவயல் அரவிந்தம் மதுஉகுப்ப
அதுகுடித்துக் களித்து வாளை
கருஞ்சகடம் இளகவளர் கரும்பிரிய
அகம்பாயும் கழுமலம்"

"கொக்கினிய கொழும்வருக்கை கதலி கமுகு
உயர்தெங்கின் குலைகொள் சோலை
முக்கனியின் சாறுஒழுகிச் சேறுஉலரா
நீள்வயல்சூழ் முதுகுன்றம்"

"நடவந்த உழவர்இது நடஒணா
வகை பரலாய்த்து என்று துன்று
கடல்வந்த சங்குஈன்ற முத்துவயல்
கரைகுவிக்கும் முதுகுன்றம்"

என்றெல்லாம் வயல் வளத்தைப் பாடுகின்றார். சோற்றால் மடை அடைக்கும் சோணாடு என்பது வழக்கு.

"முடிகையில் நாற்றொடு மோட்டுழவர்
முன்கைத் தருக்கைக் கரும்பின் கட்டிக்
கடிகையினால் எறி காட்டுப்பள்ளி"

என்று குறிப்பிடும் ஞானசம்பந்தர் கரும்பின் கட்டியால் (வெல்லம்) மடை அடைக்கும் காட்சியைக் காட்டுகின்றார்.

மாட மாளிகைகள்

"செல்வ நெடுமாடம் சென்று சேண்ஓங்கி
செல்வ மதிதோயச் செல்வம் உயர்கின்ற
செல்வர் வாழ்தில்லைச் சிற்றம் பலம்மேய
செல்வன் கழல்ஏத்தும் செல்வம் செல்வமே"

என்ற சொற்செல்வமும் பொருட் செல்வமும் கொழிக்கும் பாட்டில் தில்லையில் வாழும் மக்கள் 'செல்வன் கழல் ஏத்தும் செல்வத்தால்' பெற்ற வாழ்க்கைச் சிறப்பு தெரிகிறது.

''தண்தாமரை மலராள்உறை தவளந்நெடு மாடம்
விண்தாங்குவ போலும்மிகு வேணுபுரமே''

என்ற வரிகளில் விண்தொட உயர்ந்த வேணுபுரத்து (சீகாழி) மாளிகை களில் அகனமர்ந்து செய்யாள் உறைகின்ற சிறப்பு வெளிப்படுகின்றது.

இப்படி எத்தனையோ காட்சிகள்: பளிக்கு மாளிகை நிலவொளியில் குளிக்கும்; மாளிகை மேலிருக்கும் கொடிகள் அருக்கன் மண்டலத்து அணவும். இங்ஙனம் வான்தொட உயர்ந்த மாட மாளிகைகள் இறைவன் எழுந்தருளியிருக்கும் திருத்தலங்களில் வாழ்ந்த மக்களின் வளமார்ந்த வாழ்வினைக் காட்டுகின்றன.

கலை நலம்

காழி மாநகரில் உரையார் கலையின் கவிதைப் புலவோர் இருந்தனர்; நான்மறையோடு ஆறங்கம் வளர்கலைகள் பயின்றவர்கள் இருந்தனர்; அங்கிருந்த கிளிகளும் சொற்பயிலும்; அதுமட்டுமா கிளைஞர் ஓதப்பிழை கேட்டுக் கிள்ளைகள் திருத்தும்; சட்ட கலை எட்டு மருவு எட்டும் (8 x 8) வளர் தத்தை பயிலும் என்றெல்லாம் கூறியுள்ளார்.

மடவார், மாளிகையின் சூளிகைமேல் மகப் பாராட்டக் காரிசையும் விசும்பியங்கும் கணம் கேட்டு மகிழ்வெய்தும்; ஆரூரில் கெண்டை கொண்டு அலர்ந்த கண்ணினார்களின் கீத ஓசைபோய் அண்டர் அண்டம் ஊடு அறுக்கும் என்பார்.

மற்றும் கத்திரிகை, துத்திரி, துடி (உடுக்கை), தக்கை (பம்பை), இடக்கை, படவம், தண்ணுமை, தகுணிச்சம், மோந்தை (மொந்தை) குடமுழா, கொக்கரை (சங்கு), தாளம், வீணை போன்ற இசைக் கருவிகளும் குறிப்பிடப் படுகின்றன.

மகளிர் விளையாட்டு

பிள்ளைகளின் விளையாட்டிலும் இறைவன் புகழ் பாடி ஆடுகின்ற மரபினைத் தோற்றுவித்தவர் மாணிக்கவாசகர். அவர் இறைவன் புகழ் பாடும் பாடல்களாகப் பொன்னூசல், அம்மானை முதலிய மகளிர் விளையாட்டுப் பாடல்களைப் பாடியுள்ளார். காழி நகரத்துப் பெண்கள் **முதல்வனது தன்மை பாடிக் கழல், பந்து அம்மானைப் பாட்டு அயர்ந்தனர்** என்று திருஞானசம்பந்தர் கூறுகின்றார்.

''திறங்கொள் மணித்தரளங்கள் வரத்திரண்டுஅங்கு
எழிற்குறவர் சிறுமி மார்கள்
முறங்களினால் கொழித்துமணி செலவிலக்கி
முத்துஉலைப் பெய் முதுகுன்றமே''

என்ற பாடற்பகுதியில் சிறுமியரின் சிற்றில் விளையாட்டுச் சிறப்பு தெரிகிறது.

வாழ்க்கைத் திறம்

"மடையில் வாளை பாய மாதரார் குடையும் பொய்கை கோலக்கா
மடந்தையர் குடைந்தபுனல் வாசம்மிக நாறும் மயிலாடுதுறை"

என்ற வரிகளில் மகளிர் நீராடி மகிழ்வது தெரிகிறது.

"கருகுகுழல் மடவார் கடிகுறிஞ்சி யதுபாடி
முருகன்னது பெருகை பகர் முதுகுன்று"

என்ற பகுதியில் குறிஞ்சி நில மக்களின் வாழ்க்கை தெரிகிறது.

'கைம்மக வேந்திக் கடுவனொடு ஊடிக் கழைபாய்வான்
செம்முக மந்தி கருவரை ஏறும் சிராப்பள்ளி'யில்

குரங்குகளின் இல்வாழ்க்கையில் குறுக்கிடும் ஊடல் குறிப்பிடப் படுகின்றது.

"துள்ளி வாளை பாய்வயல் சுரும்பு உலாவும் நெய்தல்வாய்
அள்ளல் நாரை ஆரல் வாரும் அந்தண் ஆரூரில்"

வாளையும், நாரையும், வண்டுகளும் மகிழ்ந்து வாழ்கின்றனவே. சிற்றுயிர்களிடம் தெரிகின்ற வாழ்க்கைச் சிறப்பே இது என்றால், மாந்தரின் வாழ்வியல் மாண்பைக் கூறவும் வேண்டுமோ? ஆறாத பேரன்பைப் புலப்படுத்தும் அகப்பொருட் சுவைபடப் பாடியிருக்கும் பாங்கும் வாழ்வியல் சிறப்பினை வழிமொழிவதுதானே.

ஈகைத் திறம்

"வேளாளர் என்பவர்கள் வள்ளன்மையான்
மிக்கிருக்கும் தாளாளர் ஆக்கூர்"

"இன்மையால் இரந்து சென்றார்க்கு இல்லை
என்னாது ஈத்துவக்கும் தன்மையார் ஆக்கூர்"

"உரவார் கலையின் கவிதைப் புலவோர்க்கு ஒருநாளும்
கரவா வண்கைக் கற்றவர் சேரும் கலிக்காழி"

என்ற தொடர்களில் அந்நாளில் வாழ்ந்த மக்களின் ஈகைத் திறத்தை வாழ்வியல் பெருமறையாகிய திருக்குறளோடிணைத்துச் சுட்டிக் காட்டுகிறார்.

இரந்தோர்க்கு எந்நாளும் காலம் பகராதார் காழிந் நகர் என்பதனால் 'இன்று, நாளை' என்று சொல்லாத ஈகையின் சிறப்பையும் உணர்த்துகிறார். திருமுல்லைவாயிலில் பாடும்போது உற்ற காலத்தில் உதவி செய்யும் பண்பினைப் **'பருவத்தில் வந்து பயனுற்ற பண்பன்'** என்று கடவுட் பண்பாக வைத்துக் காட்டிய ஏற்றம் எண்ணத்தக்கது.

இடனில் பருவத்தும் ஈகை

பொதுவாக, செல்வம் இருக்கும்பொழுது எல்லாரும் கொடுக்கலாம். அப்போதும் கொடுக்காதவர் உண்டு, **'ஈவோர் அரிய இவ்வுலகம்'** என்பது புறநானூறு. ஆனால் இடனில் பருவத்தும் ஒப்புரவுக்குப் பின் வாங்காதவர்கள் உண்டு. அவர்களை

'இடனில் பருவத்தும் ஒப்புரவிற்கு ஒல்கார்
கடனறி காட்சி யவர்'

என்று போற்றுவார் திருவள்ளுவர். அத்தகைய பண்பு மாறாத ஈகை யாளர்களும் இருந்தனர் என்பதையும் ஞானசம்பந்தர் கூறுகின்றார்.

விண்பொய்த்தாலும் காழிமாநகரின் வளம் மிகுந்த மண்ணே விளைவு தரும். அந்த மண்ணும் தன் வளத்தை இழந்தாலும் அந்த மண்ணின் மைந்தர்கள் கொடுக்க மறுக்க மாட்டார்கள் என்பதனை,

"விண்பொய் அதனால் மழைவிழாது
ஒழியினும் விளைவுதான் மிகஉடை
மண்பொய் அதனால் வளமிலாது ஒழியினும்
தமது வண்மை வழுவார்"

என்று கூறுகின்றார். மேலும்,

புயல் மறந்து மீன் சனிப்புகு ஊன்சலிக்கும் காலந்தானும் கலங்கல் இலாமனப் பெருவண்கை உடைய மெய்யர் வாழ்கழுமலம் என்னுமிடத்தில் வானியல் குறிப்பினையும் சேர்த்துக் கூறியுள்ளார்.

நலவியல் குறிப்பு

இறைவனை வழிபட்டால் நல்லவண்ணம் வாழலாம் என்றவர் இறைவனை வழிபடாதவர் எந்நிலை அடைவார்கள் என்பதனையும் கூறுகின்றார். சிவன்தாள் சிந்தியாதவர்கள் முதுமையில் மூச்சோட்டம் தடைப்படுமாறு கோழையால் மிடறு அடைப்புண்டு மற்றவர்கள் பாலினைப் பஞ்சிலே தோய்த்துப் பிழிய அதனை உண்டு வருந்தும் அவல வாழ்க்கை உடையவர் என்று கூறுகின்றார். அவ்வாறு மூச்சு ஓட்டம் தடைப்படும் இறுதி நேரத்தில் பாலைத் துணியிலே நனைத்துப் பிழிவது வழக்கம். **'பாலும் கசக்கவில்லை துணியும் கசக்கவில்லை'** என்று கடிகைமுத்துப் புலவர் கூறியதுபோல், அந்தத் துணி அழுக்குத் துணியாகவும் இருக்கலாம். ஆனால் ஞானசம்பந்தர் பஞ்சினால் நனைத்துப் பிழிய வேண்டும் என்ற குறிப்பினைக் கூறியிருப்பது இன்றைய உலகம் விதந்து கூறும் நலவியல் (Hygenic) குறிப்பாகக் கருதத்தக்கது.

இம்மையும் மறுமையும்

இறைவன் அடியார் இம்மை நலங்களையும் பெறுவர்; மறுமை நலங்களையும் பெறுவர் என்பதனை,

"தண்பொழில்சூழ் சண்பையர்கோன் தமிழ்ஞான சம்பந்தன்
விண்பொலிவெண் பிறைச்சென்னி விகிர்தன்உறை
வெண்காட்டைப்
பண்பொலிசெந் தமிழ்மாலை பாடியபத் திவைவல்லார்
மண்பொலிய வாழ்ந்தவர்போய் வான்பொலியப் புகுவாரே"

என்று கூறினார்.

"இம்மை வானவர் செல்வம் விளைத்திடும்
அம்மை யேல்பிற வித்துயர் நீத்திடும்
எம்மை யாளும் இடைமரு தன்கழல்"

என்று திருநாவுக்கரசரும்

".......எந்தை புகலூர் பாடுமின் புலவீர்காள்!
இம்மையே தரும் சோறும் கூறையும்
ஏத்தலாம் இடர் கெடலுமாம்
அம்மையேல் சிவலோகம் ஆள்வதற்கு
யாதும் ஐயுற வில்லையே"

என்று நம்பியாரூரரும் கூறியிருப்பதும் இணைத்து நினைக்கத்தக்கன. ஆதலின் இறைவனை வழிபடுவோர் இம்மை நலங்களுக்கும் உரியவர்களே. இம்மையின் பயன்தானே மறுமை.

"அச்சம் இலர் பாவம் இலர் கேடும் இலர் அடியார்
நிச்சம் உறு நோயும் இலர்"

என்பதும் மறுமைக்கு அடிகோலும் இம்மைக்குரிய நலங்கள் தாமே. **சிவபுரம் நினைபவர், செயமகள் தலைவர், கலைமகள்தர நிகழ்பவர்** என்றெல்லாம் கூறுவதனால் அடியவர்கள் இம்மைக்குரியதாய் மறுமைக்கு வழிகாட்டும் செல்வ நலமும் கல்வி நலமும் பெறுவார்கள் என்று கூறினார்.

திருஞானசம்பந்தர் பாடல்களின் உரிப்பொருள் - இலக்கு - ஆரா இயற்கை அவா நீத்த பேரா இயற்கை பெறுதலே என்றாலும் அதற்கு வாயிலாக அமைந்திருக்கும் வையக வாழ்வின் இயல்புகளும் கருப்பொருளாகக் கலந்திருப்பதனைக் காண்கின்றோம்.

"தன்னடைந் தார்க்கு இன்பங்கள் தருவானைத் தத்துவனைக்
கன்னடைந்த மதிற்பிரம புரத்துறையும் காவலனை
முன்னடைந்தான் சம்பந்தன் மொழிபத்தும் இவை வல்லார்
பொன்னடைந்தார் போகங்கள் பலஅடைந்தார் புண்ணியரே"

என்னும் திருவாக்கும் இறைவன் உயிர்களுக்குப் பொன்னும் மெய்பொருளும் போகமும் தருவதனை உணர்த்தும் திறம் எண்ணி இன்புறத்தக்கது.

4. சம்பந்தர் பதிகங்களில் அகச் சான்றுகள்

சி. அயோத்தி, உடுமலைப்பேட்டை.

திருஞானசம்பந்தர் 'நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பிய' சிறிய பெருந்தகை ஆவார். மண்ணுலகில் சைவநெறி தழைக்க இறைவனால் தோற்றுவிக்கப் பட்டவர். 'பிள்ளை பாதி - புராணம் பாதி' என்றழைக்கப் படும் பெரியபுராணம்வழி சம்பந்தரது வாழ்க்கை வரலாற்றை அறிய முடிகின்றது. சம்பந்தர் போன்ற அருளாசிரியர்களின் வாழ்க்கை அனுபவத்தை அறிவதற்கு அவர்களியற்றியுள்ள பாடல்களுள் முழுமையான குறிப்புகள் கிடைக்கவில்லை. சில நிகழ்ச்சிகளை மட்டும் குறிப்பாகவும் வெளிப் படையாகவும் அறிய முடிகின்றதேயொழிய அனைத்து நிகழ்ச்சிகளையும் ஆசிரியரின் வாய்மொழி வாயிலாக அறிய முடியவில்லை.

அகச் சான்றுகள்வழி ஆராய்தல்

திருஞானசம்பந்தரின் தேவாரப் பாடற் குறிப்புகளையே இங்கு அகச்சான்றுகள் என்கின்றோம். இவ்அகச் சான்றுகள் உண்மையை உணர்த்தும் தன்மையுடையன. இளவயதிலேயே இறை ஞானத்தோடு தொடர்பு கொண்டு சிவசிந்தனையோடு இருந்த சம்பந்தர், இறையருளைப் போற்றும் பாங்கில் தம்மையும் அறியாமல் வாழ்க்கைக் குறிப்புகள் சிலவற்றை மட்டுமே தம் பாடல்வழிப் புலப்படுத்தியுள்ளார்.

தேவாரத்துள் காணலாகும் சம்பந்தர் வரலாற்றுச் சான்றுகள்

முதல் மூன்று திருமுறைகளாகத் தொகுக்கப்பட்டுள்ள 'சம்பந்தர் தேவாரம்' என்று அழைக்கப்படும் தேவாரத்துள் வாய்மொழிக் குறிப்புகளாக ஆங்காங்கே பளிச்சென்று ஒளிவிடும் சிற்சில ஒளிக்கீற்றுகளை மட்டும் அடிப்படை ஆதாரமாகக் கொண்டு இக்கட்டுரை எழுதப்பட்டுள்ளது.

ஞானப்பாலுண்ட வரலாறு

ஞானசம்பந்தரின் வரலாறு ஞானப்பால் புகட்டிய நிகழ்விலிருந்து தான் தொடங்குகின்றது. அறியாப் பருவத்தில் வந்து அமுதூட்டிய செய்தி திருப்பிரமபுரப் பதிகத்தில் எடுத்தியம்பப் படாமல் திருக்கழுமலப் பதிகத்தின் இரண்டாம் பாடலில்,

> ''போதையார் பொற்கிண்ணத்து அடிசில் பொல்லாதெனத்
> தாதையார் முனிவுறத் தானெனை யாண்டவன்'' (3:282:2)

என்று மிகத் தெளிவாகச் சம்பந்தர் வாக்காலேயே வெளிப்படையாகச் சொல்லப்பட்டுள்ளது. உள்ளங்கவர் கள்வனால் ஆட்கொள்ளப்பட்ட திறத்தை; தொடக்க அனுபவத்தை இப்பாடலால் தெளிவாக அறிந்து கொள்ள முடிகின்றது. தேவியின் திருமுலைப்பால் உண்ட நிகழ்வும் (3:345:11) பெருமான் ஆட்கொண்ட காலத்து விண்ணவரும் மன்னவரும் வியந்து நின்ற நிகழ்வும் (1:75:9), பண்டும் இன்றும் தொண்டு செய்து வாழவே பாலனாய்த் தோன்றிய நிகழ்வும் (3:310:5) சம்பந்தர் மொழியால் ஆங்காங்கே குறிப்பாக எடுத்தாளப் பட்டுள்ளமையும் இங்கு உளங்கொள்ளத் தக்கதாகும்.

சைவத்தை நிலைநாட்டப் பிறந்தவர்

புறச்சமய அஞ்ஞான இருளகற்றிச் சைவ மெய்ஞ்ஞான நெறியினை நிலவுலகில் நிறுவுவதற்கென்றே அவதாரமெடுத்தவர். பருவத்தில் வந்து இம்மண்ணின்மேல் பிறக்குமாறு அருளினாய் என்பது ஆளுடைய பிள்ளையாரின் வாய்மொழிச் சான்று (2:234:5).

"அலையாரும் புனல்துறந்த அமணர் குண்டர் சாக்கியர்
தொலையாதங் கலர்தூற்றத் தோற்றம் காட்டி ஆட்கொண்டீர்"
(2:191:10)

என்று திருத்தலைச்சங்காடு பதிகவழி இவ்வுண்மையை மேலும் நிறுவுகின்றார். சான்றுக்கு ஒரு குறிப்பு மட்டுமே இங்கே சுட்டப் பட்டுள்ளது. ஒவ்வொரு பதிகத்தின் பத்தாவது பாடலிலும் புறச்சமயத் தார்களை எள்ளி நகையாடுவதில் சம்பந்தர் மிகவும் கைதேர்ந்தவர்.

தில்லைவாழ் அந்தணர்களைச் சிவகணங்களாகக் காணுதல்

தில்லைவாழ் அந்தணர்கள் மூவாயிரவரும் இறைவன் திருவருளால் ஞானசம்பந்தரின் கண்ணெதிரே சிவ கணங்களாய்த் தோற்றமளித்தனர் என்பது வரலாற்று நிகழ்ச்சியாகும். இக்காட்சியினைச் சம்பந்தர் தாம் பாடிய கோயில் திருப்பதிகத்தில் மிக அழுத்தமாகக் குறிப்பிட்டுள்ளார். 'ஆடினாய் நறுநெய்' என்று தொடங்கும் இப்பதிக மூன்றாம் பாடலில், நீலத்தார், கரியமிடற்றார், நல்ல நெற்றி மேலுற்ற கண்ணினார், பற்று சூலத்தார், சுடலைப்பொடி, நீறணி, வார்சடையார் (3:259:3) என்று சொல்லப்பட்டுள்ள குறிப்புக்கள் இக்காட்சிக்குரிய பொருத்தமான அகச் சான்றுகளாகும். சிவகணங்களாகக் கண்ட அக்காட்சியினைத் தம்முடன் வந்த திருப்பெரும்பாணருக்கும் காட்டியருளியுள்ளார்.

முயலகன் நோய் தீர்த்தல்

மழநாட்டு மன்னன் கொல்லிமழவனின் மகளை, 'முயலகன்' என்னும் நோய் பீடித்திருந்தது. அந்நோயைப் போக்குவதற்காகப்

'பிணி தீர்க்கும் பெரும் பதிகமாகிய' 'துணிவளர் திங்கள்' எனத் தொடங்கும் பதிகத்தைச் சம்பந்தர் பாடினார் என்பது வரலாற்று நிகழ் வாகும். இந்நிகழ்வினை,

"அணிவளர்கோல மெலாஞ்செய்து பாச்சி
லாச்சிரா மத்துறைகின்ற
மணிவளர் கண்டரோ மங்கையை வாட
மயல் செய்வதோ இவர்மாண்பே" (1:44:1)

என்று முதற்பாடலிலேயே தெளிவாக உரைக்கின்றார். இப்பதிகத்தின் ஒவ்வொரு பாடலிலும் 'பைந்தொடி வாட', 'தையலை வாட', 'தாழ்குழல் வாட', 'சேயிழை வாட', 'பூங்கொடி வாட' செய்தல் முறையோ என்று வினவும் பாடற்குறிப்புகள் இந்நிகழ்வின் அகச்சான்றுக்கு அரண் செய்கின்றன.

உலவாக்கிழி பெறுதல்

ஞானசம்பந்தரின் தந்தையார் வேள்வி செய்வதற்காகப் பொருள் வேண்டிப் பாடியது 'இடரினும் தளரினும்' என்னும் திருவாவடுதுறைப் பதிகமாகும். இப்பதிகத்தின் ஒவ்வொரு பாடலின் இறுதியிலும் நாலடி மேல்வைப்பாக,

"இதுவோஎமை ஆளுமாறு ஈவதொன்றெமக் கில்லையேல்
அதுவோவுனதின் னருள் ஆவடுதுறை அரனே" (3:262:1)

எனக் குறிப்பிட்டுப் பாடுவதால் 'பொருள் (உலவாக்கிழி) வேண்டிப் பாடிய பதிகம் இது என்பது தெளிவாகத் தெரிகிறது. இப்பதிகத் திருக்கடைக்காப்புப் பாடலில் 'ஞானசம்பந்தன் சொன்ன விலையுடை அருந்தமிழ்' என்று குறிப்பிட்டுச் சம்பந்தரே பாடுவதாலும் இந்நிகழ்வுக் குரிய அகச்சான்று இப்பதிகத்திலேயே பொதிந்துள்ளதை உணர முடிகின்றது.

விடம் தீர்த்தல்

ஞானசம்பந்தர் திருமருகல் எனும் திருத்தலத்தில் அரவு தீண்டி இறந்த வணிகனை உயிர் பெற்று எழச் செய்ததோடு மட்டுமல்லாமல் அவனுடன் வந்த பெண்ணுக்குத் திருமணமும் செய்து வைத்தார் என்பது வாழ்வியல் நிகழ்ச்சியாகும். அப்பொழுது அவர் பாடிய "சடையா யெனுமால்" (2:154) எனும் பதிகத்தின் ஒவ்வொரு பாடலின் இறுதி யடியிலும் 'உடையாய் தகுமோ இவளுள் மெலிவே', 'எந்தாய் தகுமோ இவள் ஏசறவே', 'இறையார் வளை கொண்டெழில் வவ்வினையே', 'தொழுவாள் இவளைத் துயராக் கினையே', 'நெறியார் குழலி நிறை நீக்கினையே' (2:154:1, 2, 3, 7, 10) என வரும் பாடற்குறிப்புகள்

துயர் கொண்ட அப்பெண்ணின் நிலைமையினை இறைவனிடம் விளக்கும் அகச் சான்றுகளாக அமைந்துள்ளன.

வாசி தீரவே காசு பெறுதல்

திருவீழிமிழலையில் ஏற்பட்ட பஞ்சத்தைப் போக்கும்பொருட்டு ஞானசம்பந்தருக்கும் நாவுக்கரசருக்கும் இறைவன் பொற்காசு அளித்து உதவினான். ஆனால் நாவுக்கரசருக்கு அளித்த காசு வாசியற்றதாகவும், ஞானசம்பந்தருக்கு அளித்த காசு வாசியுள்ளதாகவும் அமைந்துள்ளதால் அதனை நீக்கும் பொருட்டு இறைவனிடம் முறையிட்டு வாசியில்லாக் காசு பெற்றார் என்பது வரலாறாகும். இந்நிகழ்வு,

“வாசி தீரவே காசு நல்குவீர்
மாசின் மிழலையீர் ஏச லில்லையே” (1:92:1)

என்று தொடங்கும் திருவீழிமிழலைப் பதிக முதல் பாடலிலேயே தெரிவிக்கப்பட்டுள்ளது. வாசியற்ற காசு பெற்ற நாவுக்கரசரும் தம் வாக்கால், “பாடிப் பெற்ற பரிசில் பழங்காசு வாடி வாட்டம் தவிர்ப்பார்” (4:50:7) என்று திருவாய்மூர்ப் பதிகத்தில் குறிப்பிட்டு ஞானசம்பந்தரின் வரலாற்றாய்வுக்கு துணை நிற்கின்றார்.

மறைக்கதவு அடைக்கப் பாடுதல்

வேதங்களால் அடைக்கப்பட்டிருந்த திருமறைக்காட்டுக் கோயில் கதவுகளை நாவுக்கரசரும் சம்பந்தரும் முறையே திறக்கவும் அடைக்கவும் செய்து வழிபட்டனர் என்பது தேவாரச் செய்தியாகும். இதனை மெய்ப்பிக்கும் விதமாக,

“சதுரம் மறைதான் துதிசெய்து வணங்கும்
மதுரம் பொழில் சூழ்மறைக்காட் டுறைமைந்தா
இதுநன்கிறை வைத்தருள் செய்க எனக்குன்
கதவம்திருக் காப்புக் கொள்ளுங் கருத்தாலே” (2:173:1)

என்று ஞானசம்பந்தர் பாடியுள்ள திருமறைக்காட்டுப் பதிக முதல் பாடல் அமைந்துள்ளது.

“திறக்கப் பாடிய என்னினுஞ் செந்தமிழ்
உறைப்புப் பாடி அடைப்பித்தார் உள்நின்றார்
மறைக்க வல்லரோ தம்மைத்..........” (4:50:8)

என்று பாடியுள்ள நாவுக்கரசர் பாட்டு இவ்அகச்சான்றுக்கு மேலும் வலுச்சேர்க்கிறது.

திருஆலவாய் நிகழ்ச்சிகள் - சம்பந்தர் மடத்திற்குச் சமணர்கள் தீயிடல்

சம்பந்தர் தங்கியிருந்த மடத்திற்குத் தீயிட்டவர்கள் சமணர்களே என்பதற்கு ஆதாரமாக ஞானசம்பந்தரின் ‘செய்யனே திரு ஆலவாய்’

(3:309:1) எனத் தொடங்கும் திருஆலவாய்ப் பதிகத்தின் ஒவ்வொரு பாடலிலும் சான்றுள்ளது. 'பொய்யராம் அமணர் கொளுவுஞ் சுடர், 'எத்தராம் அமணர் கொளுவுஞ் சுடர்' என்றமையும் இப்பதிகப் பாடலடிகள் இதனை உறுதிப் படுத்துகின்றன.

பாண்டியனுக்கு வெப்பு நோய் உண்டாக்குதல்

சமணர்கள் தீயிட்ட செயலுக்குக் காரணமாக அமைந்தவன் அரசன் என்பதால் அரச குற்றத்தை உணர்த்தும் பாங்கில் பதிகம் பாடி ஒவ்வொரு பாட்டிலும் ''அமணர் கொளுவுஞ் சுடர் பாண்டியற்காகவே'' (3:309:1) என்று பணித்தருளினார். எனினும் அவர் அத்தீயினைப் பையவே சென்று பற்றுமாறு ஏவினமையால் சுரநோயாக (வெப்பு) மாறிப் பாண்டியனைச் சென்றடைந்தது.

> **''அப்பன் ஆலவாய் ஆதி அருளினால்**
> **வெப்பம் தென்னவன் மேலுற மேதினிக்கு**
> **ஒப்ப ஞானசம்பந்தன் உரைபத்தும்''** (3:309:11)

என்ற திருக்கடைக்காப்புச் செய்யுள் இவ்அகச்சான்றினை தெளிவுறுத்தும் நோக்கில் அமைக்கப்பட்டு உள்ளது.

சமணர்களோடு வாது செய்யத் திருவுள்ளக் குறிப்புக் கேட்டல்

மங்கையர்க்கரசியாரும் குலச்சிறையாரும் சென்று அழைத்ததற் கிணங்க, பாண்டியனுக்கு உற்ற வெப்பு நோயைத் தீர்ப்பதற்குப் புறப்பட்ட சம்பந்தர் ஆலவாய் அண்ணலின் திருவுள்ளக் குறிப்பினை அறிதற் பொருட்டு ஆலயத்திற்குச் சென்று இறைவனைப் பரவினார். இதற்கு அவர் பாடிய 'காட்டுமாவதுரித்து' என்னும் திருஆலவாய்ப் பதிகப் பாட்டு முழுவதும் சான்றுகளாய் அமைகின்றன. ''அமண்கையரை ஒட்டி வாது செயத் திருஉள்ளமே'' (3:305:1) ''அமண் ஆதரை வாதில் வென்றழிக்கத் திருஉள்ளமே'' (3:305:4) என்ற இப்பாடல் அடிகள் அக்குறிப்புக்களை எளிதில் உணர்த்துகின்றன. அத்துடன் 'அமணொடு தேரரை வாதில் வென்றழிக்கத் திருவுள்ளமே' (3:366:1) என்ற நாலடி மேல் வைப்புப் பாடற்குறிப்பு 'வெற்றி கிட்டவேண்டும்' என்றே வேண்டுகின்றது.

மங்கையர்க்கரசியாரின் அச்சத்தைப் போக்குதல்

பாண்டியனுக்கு உதவ வந்துள்ள சம்பந்தருக்குச் சமணர்களால் ஏதும் தொல்லை நேரக் கூடாது என்று மங்கையர்க்கரசியார் அஞ்சு கின்றார். மங்கையர்க்கரசியாரின் மனநடுக்கத்தைப் போக்குவதற்காகச் சம்பந்தர் அவரை நோக்கி

> **''மானினேர்விழி மாதராய் வழுதிக்கு மாபெருந் தேவிகேள்**
> **பானல் வாயொரு பாலன் ஈங்கிவன் என்றுநீ பரிவெய்திடேல்''**
> (3:291:1)

என்றுரைத்து அரசியாரைத் தேற்றுகின்றார். இப்பாடலில் அமைந்த ''நீ பரிவெய்திடேல்'' என்ற தொடர் அகச்சான்றாக மிளிர்கின்றது.

பாண்டியனின் வெப்பு நோயைத் தணிவித்தல்

பாண்டியன் வெப்பு நோயைத் தீர்ப்பதற்கு முடிவு செய்த சமணர்கள் மந்திரம் ஓதி மயில் பீலியினால் தடவினர். அதனால் மன்னனுக்கு நோய் தீவிரமடைந்ததே தவிரத் தணியவில்லை. பொறுக்கமாட்டாத மன்னன் சம்பந்தரை வணங்கி வேண்ட, அவர் ஆலவாய் அண்ணலைத் தியானித்து, 'மந்திரமாவது நீறு' (2:202:1) என்ற திருநீற்றுப் பதிகத்தை ஓதிப் பாண்டியனின் உடலில் திருநீறு பூசினார். அதனால் வெப்பு நோய் தீவிரம் குறைந்து முற்றிலும் ஒழிந்தது. இந்நிகழ்வுக்குரிய அகச்சான்று இப்பதிகத் திருக்கடைக்காப்பில்,

> **''ஆற்றல் அடல்விடை ஏறும் ஆலவாயன்திரு நீற்றைப்**
> **போற்றிப் புகலிநிலாவும் பூசுரன் ஞானசம் பந்தன்**
> **தேற்றித் தென்னன் உடல்உற்ற தீப்பிணி ஆயினதீரச்**
> **சாற்றிய பாடல்கள் பத்தும்........''** (2:202:11)

என்றவாறு விளக்கமாக அமைந்துள்ளதைக் காண்கின்றோம்.

பிற அகச்சான்றுகள்

சமணர்களோடு நிகழ்த்திய அனல்-புனல் வாதம், முள்ளியாற்றில் வெள்ளம் வர இறைவன் திருவருள் உதவியால் ஓடத்தைச் செலுத்திக் கொள்ளம்பூதூர் இறைவனை வழிபட்டது, எலும்பு பெண்ணுருவாக்கியது, ஆண்பனை பெண்பனையாக்கியது, புத்த நந்தி தலை வெடித்துச் சிதறியது, கோளறு பதிகம் பாடி நாவுக்கரசர் அனுமதி பெற்றது, நளிர்சுரம் போக்கியது, முத்துப் பந்தர் பெற்றது, திருமண நாளன்று வந்திருந்தோர் அனைவரும் சேர்ந்து சோதியில் கலந்து முக்தி பெற்றது ஆகிய பதிக அகச்சான்றுகள் மனதினுள் மீள நினைத்து மகிழ்வதற்கு உரியதாகும்.

முடிபுகள்

1. மறைமொழி காட்டும் நிறைமொழி மாந்தராகிய தேவார முதலிகள் அருளிச் செய்துள்ள பாசுரங்கள் அனைத்தும் மந்திரங்களாகக் கருதப்படுகின்றன.
2. ஞானசம்பந்தர், நாவுக்கரசர் ஆகிய இருவரும் தொடர்புடைய வரலாற்று நிகழ்வுகளுக்கு இருவருடைய பாடல்களிலும் அகச் சான்றுகள் கிடைக்கப் பெறுகின்றன. அக்குறிப்புகள் அவரவர் வாழ்வியல் நிகழ்வுண்மைக்கு கட்டியங் கூறுவதாக அமைகின்றன.

3. ஆலவாயில் நிகழ்ந்துள்ள சம்பந்தரது அருள் விளையாடல்கள் அனைத்திற்கும் அவரது பதிகப் பாடல்களிலேயே அகச்சான்று அமைந்துள்ள பாங்கு நினைந்து நினைந்து இன்புறத் தக்கதாகும். அவ்வத்தலப் பதிகங்களில் குறிப்புகள் கிடைப்பது அதனினும் சிறந்ததாக உள்ளது.

4. ஞானசம்பந்தரது வாழ்வியல் வரலாறுகள் அனைத்தும் பெரிய புராணத்தின் வாயிலாகவே முழுமையாக அறிய முடிகின்றது. ஆகவே பெரியபுராணக் கதை வழியாகவே அகச்சான்றுகளுக் குரிய தேடல்கள் அமைந்துள்ளன. ஒரோவழி நம்பியாண்டார் நம்பியின் கருத்துக்களும் மனதுள் கொள்ளப்பட்டுள்ளன. ஆனால் அகச் சான்றுகளுக்கு உரிய பாடற் குறிப்புகள் முதல் மூன்று திருமுறைகளில் மட்டுமே எடுத்தாளப் பட்டுள்ளன.

5. சம்பந்தர் வரலாறு

வி. அருண்குமார், கோவை.

"வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத்
துறைவிளங்கப் பூதபரம்பரை பொலிய"

அவதாரம் செய்தவர் திருஞானசம்பந்தர் ஆவார்.

சோழமண்டலம் சிறப்புமிக்க சிவப்பதிகளைத் தன்னகத்தே கொண்டது. வேதம் வகுத்த வழிமுறைகள் தழைத்து வளரவும், பெருமைமிக்க சைவத்துறை சிறந்து விளங்கவும், ஐம்பெரும் பூதங்களினின்றும் தோன்றிய உயிரினங்களின் பரம்பரை பொலிவு பெறவும் தனது புனித வாய் மலர்ந்து அமுத நீர் வளம்மிக்க வயல்கள் சூழ்ந்த சீர்காழித் திருத்தலத்தில் சிவபெருமானது அருளால் அவதரித்த ஆளுடைப் பிள்ளை என்னும் செல்லப்பெயர் கொண்டழைக்கும் திருஞானசம்பந்தர் வரலாறு பற்றிக் கூற விழைகிறேன்.

பிறப்பு

சிவத்தலங்கள் நிறைந்த தென்னகத்தில் சைவ சமயமும், காவிரி வளமும், அந்தணர்களின் வேதம் ஓதும் ஒலி வானளாவ உயர்ந்தோங்கி ஆர்ப்பரிக்கும் கடல் முழக்கத்தை நினைக்கத் தூண்டும். வளம்மிக்க மருத நிலத்தில் மணம்கமழ் மலர்கள் சூழ்ந்த சோலையும், மணவளமும், செல்வச் சிறப்பும் மிக்க எழில்மிகு சீர்காழியில் வேதம் ஓதும் அந்தணர் குடியில் பிறந்த சிவபாதவிருதயர் எனும் அந்தணருக்கும், அவர்தம் மனைவி பகவதியார் என்பவருக்கும், ஈசன் அருளால் கோடிசூரியப் பிரகாசம் போல் ஓர் ஆண் மகவு பிறந்தது. அக்குழந்தையைப் 'பிள்ளையார்' என்னும் செல்லப் பெயரிட்டு அழைத்தனர்.

இயல் இசை எனும் பொருளின் திறம் அறிதல்

சிவபாதவிருதயர் காலை நியமங்களை முடிக்க நீராடச் சென்ற பொழுது பிள்ளையாரும் சென்றார். அவர் பின்னே சென்றவர் தந்தையைக் காணாது கோயிலின் திருத்தோணிச் சிகரத்தைப் பார்த்து அழுதார். குழந்தை அழுகுரலைக் கேட்ட தோணியப்பர், பார்வதியோடு காளை மீதமர்ந்தவராய்ப் பிள்ளையார் முன் எழுந்தருளி "உமையவளே! உனது முலைப்பாலை இவனுக்கு ஊட்டு" என்றார். உலக மாதாவும் குழந்தையை எடுத்து உச்சி முகர்ந்து தன் முலைப்பாலைப் பொற்

கிண்ணத்தில் ஏந்தி சிவ அறிவையும், தமிழையும் குழைத்துப் பிள்ளையாரின் கண்களைத் தம் திருக்கரத்தால் துடைத்துவிட்டுப் பாலை ஊட்டினார்.

தம் மூன்று வயதிலேயே சிவமும், சக்தியும் ஆட்கொண்டருளி யமையால் ''ஆளுடைய பிள்ளையார்'' எனவும், முனிவர்களுக்கும் எட்டாத சிவ அறிவு கொண்டமையால், ''திருஞானசம்பந்தர்'' என்ற சிறப்புப் பெயரும் பெற்றார் அவர். தந்தை தம் பிள்ளையைப் பார்த்த பொழுது வாயில் பால் வழிந்து கிடந்தது; உனக்கு யார் பால் கொடுத்தது என்று அடித்தார். பிள்ளையாரும் வானில் சிவபார்வதி சமேதராய் காளை வாகனத்தில் காட்சியளிப்பதைச் சுட்டிக்காட்டி உள்ளத்துள் சிவ அறிவு மேலோங்கத் தோடுடைய செவியன் எனப் பாடத் தொடங்கினார்.

சிறப்பு

சிவ அறிவு பெற்ற பெருமையைக் கேள்வியுற்ற அந்தணர்களும், திருத்தொண்டர்களும், மற்றவர்களும் திரண்டு வந்து வாயார வாழ்த்தி வணங்கினார். சிவனடியார்கள் வேண்டுகோளுக்கிணங்கத் தந்தையின் தோளில் அமர்ந்து திருநனிபள்ளி, திருபாம்புரம், திருமுல்லைவாயில், குருகாவூர் போன்ற சிவத்தலங்களைத் தரிசித்துப் பதிகங்கள் பாடி வருகையில், பெரும்பாணர், தம் விறலியோடு, பிள்ளையாரைத் தரிசித்து அவர் பாடிய பதிகங்களைத் தம் யாழில் இசையமைத்து இறைவனைப் பரவினார். அவர் பாடும் பதிகங்களை யாழில் இசையமைப்பதைப் பெரும்பேறாகக் கருதினார். பெரும்பாணரோடு சிதம்பரம் எல்லை கடந்து சபாநாயகரைத் தரிசித்துக் ''கற்றாங் கெரியோம்பி'' எனும் திருப்பதிகம் பாடினார்.

முத்துச் சிவிகை பெறல்

தந்தையின் தோளில் அமர்ந்து செல்ல மனமில்லாமல் அந்தணர்கள் புடைசூழ ஐந்தெழுத்து மந்திரத்தைச் சொல்லிக் கொண்டே நடந்து சிவத்தலங்களுக்குச் சென்று பதிகம் பாடினார். சம்பந்தர் நடந்து செல்வதைக் கண்ட சிவபெருமான், அந்தணர்கள் கனவில் தோன்றி ''என் மகன்'' என்னை நாடி நடந்து வருகிறான். அவனுக்கு முத்துச் சிவிகையும், குடையும், முத்துச் சின்னங்களும் கொண்டு கொடுங்கள் என்று திருவாய் மலர்ந்தருளினார். அவர்களும் கொண்டு சென்றனர். சம்பந்தர் கனவிலும் தோன்றி இதுபற்றிச் சொல்லி அதைப் பெற்றுக் கொள் என்றார். அந்தணர்கள் திருவரத் துறை ஈசன் தந்த பொருட்களைப் பெற்று அவற்றில் அமர்ந்து ஈசன் கருணையை எண்ணித் திருப்பதிகம் பாடினார்.

ஒருசமயம் திருநாவுக்கரசர் திருஞானசம்பந்தரைத் தரிசிக்க வந்தார். சில நாட்கள் சென்றபின், நாவுக்கரசர் சென்றபின், தந்தை,

சிவனடியார், பெரும்பாணர், விறலியோடும் தமிழ்நாட்டிலுள்ள சிவத்தலங்களைத் தரிசிக்கப் புறப்பட்டார். பின்பு மழவநாட்டில் பாச்சிலாசிராமத்துக்கு அருகில் கொல்லி மழவன் மகள் முயலகன் நோயினால் வருந்தினாள். அங்கு வந்த சம்பந்தர், அந்தச் சேதி கேட்டு அந்நோயை நீக்கும் பொருட்டு ஒரு பதிகம் பாடினார், பின்னர் நோய் நீங்கி, தந்தையும், மகளும் பிள்ளையாரை வணங்கினர்.

பின் பட்டீசுரம் செல்லும் வழியில் கதிரவன் தன் வெப்பத்தைக் கக்கினான், அதனைத் தணிக்கும் பொருட்டு ஈசன் முத்துப் பந்தரைத் தந்தருளினார். அவர் தந்தை யாகம் செய்ய வேண்டியப் பொருள் வேண்டுமென்றார். சம்பந்தர் இறைவனை வேண்டிப் பதிகம் பாடினார். அச்சமயம் சிவகணம் ஒன்று ஆயிரம் பொன் அடங்கிய பரமசிவன் தந்தருளிய பொன்னுலவாக்கிழி ஒன்றைக் கொடுத்துச் சென்றது.

மறைக்கதவம் திறத்தல்

சிவப்பதிகள் தோறும் சென்று திருப்பதிகம் பாடும்பொழுது அப்பர் சுவாமி முருக நாயனாரையும் சந்தித்தார். ஞானசம்பந்தரும், நாவுக்கரசரும் சிவத்தொண்டாற்றித் திருப்பதிகம் பாடினார்கள். ஒருசமயம் திருமறைக் காட்டில் கோயில் திருக்கதவு பல நாட்களாகச் சாத்தியிருந்தது. அதை இருவரும் சேர்ந்து பதிகங்கள் பாடித் திருக்கதவைத் திறக்க வைத்து இறைவனைத் தரிசித்தனர்.

ஆருகம், பௌத்தம் போன்ற பிற சமயங்களை ஒழிக்கப் பாடுபட்டார். பிள்ளையார் மதுரை நகரில் தங்கியிருந்தார். அங்குப் பாண்டியன் சபையில் சமணர்களை வாதிலே வென்றார். சைவமும், சமணமும் சேராதிருந்த காலம். சம்பந்தர் சமணர்களை வென்றதால் மன்னன் சைவ சமயத்தைத் தழுவினான்.

சம்பந்தரும் சமணமும்

சமணர்கள் சிவனடியார்களுக்குப் பல தீங்குகளைச் செய்தனர். அதன் பலன் அரசனுக்கு வெப்பு நோயாக மாறியது. அதை நீக்குமாறு சம்பந்தரை வேண்டினர். இரு பக்கமும் உள்ள வெப்புநோயை இரு சமயத்தவரும் போக்க எண்ணினர். பிள்ளையார் மந்திரமாவது நீறு என்று பதிகம் பாடி வலப்பக்கத்தைத் திருநீறுபூசி தடவினார். வெப்புநோய் நீங்கியது. இடப்பக்க நோய் நீங்கவில்லை. பிள்ளையாரை வெல்ல முடியாத சமணர்கள் தீயினால் வெல்ல எண்ணி அவரவர் சமயக் கருத்தை ஏட்டிலே எழுதி தீயின் மீது வைப்போம். எவர் சுவடி எரியாமல் இருக்கிறதோ அவரே வென்றவர் என்றனர். பிள்ளையார் ''போகமார்த்த பூண்முலையாள்'' என்ற பதிகம் எழுதித் தீயிலிட்டார். சமணர்கள் தங்கள் கருத்தை எழுதித் தீயிலிட்டனர். ஆளுடையபிள்ளை குறித்த நேரத்தில் ஏட்டை எடுத்து அரசனிடம் கொடுத்தார். சமணர்கள் ஏடு

தீயில் கருகிவிட்டது. இம்முறை சமணர் தோற்றனர் பின் நீரில் விட சம்மதித்தனர். இதில் தோற்றால் நாங்கள் சாம்பலைப் பூசிக்கொள்ள மாட்டோம். கழுமரத்தில் ஏறிக் கொள்வோம் என்றனர். அமைச்சர், சரி! வைகையாற்றுக்குப் புறப்படுங்கள் என்றார், முன்னர் அரசன் அவரவர் ஏட்டை ஆற்றில் விடுங்கள் என்றார். சமணர்கள் ''அத்தி நாத்தி'' என்று எழுதப்பட்ட ஏட்டை ஆற்றில் விட்டனர். அது வேகமாக ஓடிக் கடலில் சேர்ந்தது. சமணர்கள் ஏட்டைத் தேடி கிடைக்காமல் தோற்று அரசனிடம் வந்தனர். பின் அரசன் பிள்ளையாரை நோக்க அவரும் ''வாழ்க அந்தணர்'' என்று எழுதி வைகையில் விட்டார். ஓடம் நீரில் மெல்ல அடித்து சென்றது. அரசன் கூனும் நிமிர்ந்தது. பின் சமணர்களைக் கழுவிலேற்றினர். பின் நாட்டு மக்கள் அனைவரும் சைவ சமயத்தைத் தழுவினர். இப்படி பல நாடுகளிலும் வாதிட்டு வென்ற பிள்ளையார் திருநாவுக்கரசரைச் சந்தித்தனர். இருவரும் சேர்ந்து பல சிவப்பதிகளுக்குச் சென்றபின், இருவரும் தத்தம் வழியே சென்று வழிபட்டனர்.

ஆண்பனை பெண்பனையானது

ஒருசமயம் திருவோத்தூரில் வாழும் சிவனடியார் ஒருவர் தாம் வைத்து வளர்க்கும் பனை மரங்கள் எல்லாம் வளர்ந்து ஆண்பனை களாக விடுகின்றன. அதுகண்டு சமணர்கள் கேலி செய்கின்றனர் என்றார். பிள்ளையார் அது கேட்டு விரைந்து சென்று பதிகம் பாடினார். அதனால் ஆண்பனையெலாம் குரும்பைக் குலைகள் தொங்கப் பெண் பனைகளாயின இதுகண்டு சிலர் ஓடிவிட்டனர். பின் பிள்ளையார் காரைக்கால் அம்மையார் வாழ்ந்த திருத்தலத்தை வணங்கி, பின் திருக்கண்ணப்ப நாயனாருடைய திருகாளத்தி மலைக்குச் சென்று வணங்கி, பின் திருவொற்றியூருக்கு வந்தார்.

பூம்பாவை

அங்கு இருக்கையில் திருமயிலாப்பூரில் சிவநேசர் எனும் பெருஞ் செல்வந்தர் இருந்தார். அவருக்கு நீண்ட காலம் பிள்ளைப்பேறு இல்லை. அவர் பிள்ளையாரைப் போற்றிப் பிறந்த பெண் மகவைப் பூம்பாவை எனப் பெயரிட்டு வளர்த்து வந்தார். அப்பெண்ணைத் திருஞான சம்பந்தர்க்கே மணம் பேச நினைத்து வளர்த்தார். ஒரு நாள் பூம்பாவை மலர்கொய்து கொண்டிருக்கையில் அரவம் தீண்டிவிட்டது. பலவிதமான மருந்து கொடுத்தும் விடம் இறங்கவில்லை. எந்த வைத்தியம் செய்தும் பாம்பின் விடம் நீங்காததால் பூம்பாவை இறந்தாள். சிவநேசர் இவள் பிள்ளையார்க்கே உரியவள் என்று கூறி அவள் உடலைத் தீயிட்டு, அந்தச் சாம்பலைப் பத்திரமாக வைத்திருந்தார். அதற்குத் தினமும் மாலை சாத்தி வந்தார்.

ஒருநாளில் பிள்ளையார் திருவொற்றியூர் எழுந்தருளியிருப்பதைக் கேள்விப்பட்டுச் சிவநேசர் அவரை அழைத்துவரப் புறப்பட்டார். பிள்ளையாரும் மயிலைக் கபாலிசுவரரைத் தரிசிக்கும் நோக்குடன் மயிலை நோக்கி வந்தார். இருவரும் ஊர் எல்லையில் சந்தித்தனர். சிவநேசர் பிள்ளையாரைத் தலைகுனிந்து வணங்கினார். சிவநேசரின் செயல்களைக் கேள்வியுற்ற பிள்ளையார் மயிலைக்கு எழுந்தருளி, ஈசனை வணங்கிப் பின் வெளியே வந்து சிவநேசரை நோக்கி ''சிவநேசரே! உமது மகளின் சாம்பலும் எலும்புமுள்ள பாத்திரத்தைக் கோயிற் புறத்திருவாயிலிலே கொணர்ந்து வையும்'' என்றார். சிவநேசரும் களிப்பெய்தி பாத்திரத்தைக் கொண்டு வந்து வைத்தார். அப்பொழுது சமண, பௌத்தம் முதலான புறச் சமயத்தவரும் என்ன நடக்கப் போகிறதோ! என்று வியந்து கூடினர். வானில் தேவர்கள் வந்து சூழ்ந்து நோக்கினர். பிள்ளையார் சாம்பல் இருக்கும் மட்குடத்தைக் கண்டு, ஈசன் திருவருளை நினைத்துப் பூம்பாவையை நோக்கி, மண்ணில் மானிடப் பிறப்பு எடுத்தவர்கள் சைவாகமவிதிப்படி செய்யப்படும் அவரது திருவிழாக்களை மகிழ்வுடன் கொண்டாடி இன்பமடைதலுமே என்பது உண்மையாயின் நீ எழுந்து வருவாய் என்று கூறி ''மட்டிட்ட புன்னையங்கானன் மடமயிலை'' எனும் திருப்பதிகம் பாடினார்.

பிள்ளையார் பத்தாம் பாடலைப் பாடியபொழுது தன் கை வெளியே தோன்றக் குடத்தை உடைத்துக் கொண்டு பூம்பாவை எழுந்தாள். பார்த்தவர்கள் எல்லோரும், சிவநேசர், பூம்பாவை அனைவரும் பிள்ளையாரை வணங்கினர். சிவநேசர் தம் மகளைப் பிள்ளையார் மணந்து கொள்ள வேண்டினர். அவர், உன் மகள் சிவனருளால் மறுபிறவி எடுத்துள்ளாள். சிவனருளால் உயிர் பெற்றதால் நான் மணம் செய்ய இயலாது என்று கூறினார். என் மகளை வீட்டிற்கு அழைத்துச் செல் என்று கூறிக் கோயிலினுள் ஈசனைத் தரிசிக்கச் சென்றுவிட்டார். பின் மயிலை நீங்கிப் பல சிவத்தலங்களில் வழி பட்டுத் திருப்பதிகம் பாடிப் பின் தந்தை சிவபாதவிருதயர் அழைப்பை ஏற்றுச் சீர்மிகு சீர்காழி வந்தடைந்தார்.

மணமும், முக்தியும்

பிள்ளையாருக்குத் திருமண வயது நெருங்கியவுடன் சிவபாதவிருதயர் பிள்ளையாரை நோக்கி ''சுவாமி! தேவரீர் வேத முறைப்படி திருமணம் செய்தருள வேண்டும்'' என்றார். ஞானசம்பந்தரும் அதற்கு இசைவு கொடுக்கத் தந்தையும், மற்றோரும் திருநல்லூரில் வாழும் நம்பி யாண்டார் நம்பியின் இல்லம் சென்று அவர் மகளைப் பெண் கேட்டனர். அதுகேட்டு நம்பியும், உலக மாதாவின் முலைப்பாலுண்ட திருஞானசம்பந்தருக்கு என் குலக்கொழுந்தைத் திருமணம் செய்து கொடுக்க என்ன தவம் செய்தோமோ என்று கூறி மகிழ்ச்சியுடன் திருமண ஏற்பாடு செய்தார்.

பிள்ளையாரும் திருத்தோணியப்பரை வணங்கி மணக்கோலத்துடன் திருநல்லூர் சென்று அங்குள்ள திருநல்லூர்ப் பெருமணம் எனும் ஆலயத்தினுள் சென்று சுவாமியை வணங்கிப் பதிகம் பாடினார். பின் கோயிலின் பக்கமுள்ள மாடத்தில் புகுந்தார். பிராமணர்கள், பிள்ளையாரைப் பத்துத்துவரையும், ஓமாலிகை முப்பத்திரண்டும், விரை ஐந்தும் ஆகிய இருவகை வாசனைப் பொருட்கள் பூசி, ஆடை அணிகலன்கள் பூட்டினர், அவர் தாமே திருநீறு அணிந்து, வேதமும், வாத்தியங்களும் முழங்க மண மண்டபத்தினுள் சென்றார். நம்பியும் தம் மனைவியுடன் பசும்பாலும் சுத்த நீரும் அவர் திருக்கைகளில் வார்த்துத் தம் கோத்திரத்தைச் சொல்லி எனது மகளைச் சம்பந்தமூர்த்தி சுவாமி களுக்குக் கொடுத்தேன் என்றார். வேதங்கள் முழங்கத் திருஞான சம்பந்தர் மங்கல நாண் கழுத்திலிட்டார். தீயை வலம்வந்து ''நான் அவருடன் பரமசிவம் திருவடியை அடையவே இந்த இல்லறம் எனக்கு நேர்ந்தது'' என மனதில் கொண்டு யாவரும் காண ஆலயத்தினுள் சென்று ''திருநல்லூர்ப் பெருமணத்தில் வீற்றிருக்கும் இறைவனே தேவரீருடைய திருவடியை அடையும் பதம் இது'' என்று கல்லூர்ப் பெருமணம் எனும் திருப்பதிகம் பாடினார். அப்பொழுது சோதியும் அதில் வாசலும் தோன்றியது.

அப்பொழுது ஈசன் சம்பந்தரை நோக்கி, ''நீயும் உமது மனைவியும், திருமணத்தைக் காண வந்தவர்களும் இந்தச் சோதியினுள் வந்து நம்மை அடையுங்கள்'' என்றருளினார். அப்பொழுது சம்பந்தரும், யாவரும் கேட்கும்படி, நமச்சிவாயத் திருப்பதிகத்தைப் பாடினார். பின் தம் மணங்காண வந்தவர்களை நோக்கி ''நீங்கள் யாவரும் உங்கள் பிறப்பு எனும் பெருநோய் நீங்கும் பொருட்டு இச்சோதியினுள் புகுங்கள்'' என்றார். அச்சோதியினுள் சிவபாதவிருதயர் முருக நாயனார், திருநீலநக்க நாயனார், நம்பியாண்டார் நம்பி, திருநீலகண்டப் பெரும்பாணர் போன்ற திருத்தொண்டர்கள், தத்தம் மனைவியரோடும், சுற்றத்தாரோடும், முத்துச் சிவிகை சுமந்தவர்கள், சைவ பாசுபதர், மகாவிரதர், காபாலிகர், வாமர், பைரவர் என்றும் அறுவகை உட்சமயங்களும், வைதீக சைவர்களும், சைவ சித்தாந்தர்களும் சோதியினுள் புகுந்தபின் பிள்ளையார் தம் மனைவியைக் கைப்பற்றிக் கொண்டு அச்சோதியை வலம்வந்து அதனுள் புகுந்து இவ்வுலகின் பற்றறுத்து முக்தியடைய ஈசன் திருப்பாதம் சென்றடைந்தார்.

திருஞானசம்பந்தரும் அவர்தம் வழி வந்தோரும் அரும்பாடுபட்டு வளர்த்த சிவத்தொண்டினை நாமும் பின்பற்றுவோம். அவர்தம் பக்தி நெறியும், முக்தி நெறியும் மனதில் கொண்டு வாழ்வோமாக. 'வாழ்க' சிவத்தொண்டு வளர்க அவர்தம் அறநெறி.

6. சம்பந்தரின் பக்திநெறி

குப. அழகம்மை, குமாரப்பாளையம்.

இன்று மனிதன் நுகர்வுக் கலாச்சாரத்தில் தன்னைப் புதைத்துக் கொண்டு வெளியே வர இயலாது திணறிக் கொண்டிருக்கிறான். வாழ்வின் தேவைகளுக்காகப் பொருட்கள் என்ற நிலையினின்றும் பெயர்ந்து, பொருட்களுக்காக வாழ்கை என்று, தன்னை இரண்டாகப் படுத்தி இயங்கி வருகின்றான். விளைவு வீடெங்கிலும் உள்ள பொருட் களுடன் தானும் ஒருபொருளாக மனிதம் மறந்த நிலையில் இணைந் திருக்கும் தோற்றமே இன்றைய சமுதாயத்தின் நடைமுறையாகக் காணப் படுகிறது. இதனால் மனித நடவடிக்கைகள், ஏன் இயற்கையின் நிகழ்வு களும் கூட அவ்வவற்றிற்குரிய அறத்தினின்றும் பிறழ்ந்து செயலுறுகின்றன. பவித்திரம் என்று போற்றப்படும் தவநிலைகூட இன்று பயங்கர வாதத்தின் அரங்கேற்றுக் களமாகத் தேர்வு செய்யப்பட்டு வருகிறது. இப்படிப்பட்ட இன்றைய சூழலில் அடியார்களைப் பற்றிய ஆய்வு நடத்துவதும் அதற்கான சிந்தனைக்களத்தை உருவாக்கிக் கொடுப்பதும் அவசியத் தேவையாகும். தேவையின் ஆர்வத்தில் இன்றைய சூழல் கருதி ஞானசம்பந்தரின் பக்தி நெறி ஆய்விற்குரிய களமாகிறது.

புராணங்கள் கூறும் பக்திநெறி

1. எல்லோரிடமும் இனிமையாக நடப்பது
2. இந்திரியங்களை வென்று இயங்குவது
3. மனம் கருணையினால் உருகி ஓடுவது
4. திருட்டு, வன்முறைச் செயல்களினின்றும் விலகியிருப்பது
5. நற்குணங்களை விரும்புதலுடன் பிறர் நன்மைக்கு உதவும் செயல் களில் ஈடுபடுதல்
6. நல்ல காரியங்கள் செய்வதனால் வாழ்க்கையைத் தூய்மைப்படுத்திக் கொள்ளுதல்.
7. பிறர் மகிழ்வில் தான் மகிழ்ந்திருத்தல்
8. அனைத்துயிரிடத்தும் கடவுள் வீற்றிருப்பதை உணருதல் அதனால் எவரிடத்தும் பொறாமையோ, பகைமையோ கொள்ளாதிருத்தல்

9. ஏழை எளியோருக்கு இரங்குதலை இயல்பாக்கிக் கொள்ளுதலுடன் பிறருக்கு உதவுவதில் கருத்தாயிருத்தல்
10. பிறர் குணம் கண்டு மகிழ்ந்து பிறர் குறைகாணினும் மூடி மறைத்தல்
11. எப்போதும் கடவுளிடத்தே தன் உள்ளத்தை செலுத்தி இனிய மொழி பேசுதல் ஆகிய பக்திக்கான படிநிலைகளாக உணர்த்தப் படுகின்றன.

பாகவதம் கூறும் பக்திநெறி

பணம், பொருள், உடல் முதலியவற்றால் தன்னுடையது பிறருடையது என்று வேற்றுமை பாராட்டாமல் அனைத்திலும் கடவுள் உள்பொருளாய் இருப்பதை உணர்ந்து அனைத்தையும் சமமாய்க் கருதுவதும், எந்த நிகழ்ச்சியிலும் சாந்தமாய் இருப்பதும் பக்தியாகும்.

நாரத சூத்திரம் சாண்டில்ய சூத்திரம் கூறும் பக்திநெறி

அ.ச. ஞானசம்பந்தன் தனது பெரியபுராண ஆய்வில் பக்திக்குப் பல அரிய விளக்கங்களை மேல் நூல்களிலிருந்து எடுத்துரைக்கின்றார்.

1. தூய அன்புடன் பகவானைச் சரணடைவது பக்தி.
2. இறைவனைச் சிக்கெனப் பிடிக்க அவனுள் இரண்டறக் கலக்க மனித மனம் செய்யும் முயற்சி.
3. கடவுள் தன்னுள் உறைந்திருப்பவர் என்று எண்ணுவது பக்தி.
4. தன் செயல் அத்தனையும் இறைவன் செயலாக எண்ணுவது பக்தி.
5. உலக மாயையினின்றும் விடுபடச் செய்வது பக்தி.
6. அன்புடன் கூடிய தொண்டு பக்தி.
7. இன்ப துன்பத்திற்கு அப்பாற்பட்டது பக்தி.
8. தன்னையே இறைவனுக்கு அர்ப்பணிப்பது பக்தி.
9. தன்னை மட்டும் அல்ல நாட்டையே தூய்மைப்படுத்தக் கூடியது பக்தி.
10. தன் இயக்கமே இறைவனுக்கு என எண்ணச் செய்வதும் அவன் மேல் அன்பைப் பெருக்கிக்கொண்டு போவதும் பக்தியாகும்.

பகவத் கீதை உணர்த்தும் பக்திநெறி

பகவத் கீதையின் பக்தியோகம் எனும் பகுதி பக்தி, பக்தன் பற்றிய கருத்துக்களைக் கூறுகிறது (ஸ்லோ. 3=19)

> ''யார் எங்குச் சமநிலையுடையவர்களாக ஐம்
> புலன்களையும் அடக்கி, சொல்லுக்கடங்காதும்,
> கட்புலனாகாததும், மனதுக்கெட்டாததும், எங்கும்

நிறைந்ததும், மாறாததும், நகராததும், நிலைத்ததும்
அழியாததுமாகிய பிரம்மத்தை நன்கு உபாசிக்கி
றார்மளோ, எல்லா உயிர்களின் நன்மையில்
ஈடுபட்டுள்ள அவர்கள் என்னை வந்தடைகிறார்கள்''

யார் தன் செயலத் தனையையும் எனக்கு
அர்ப்பணம் செய்து ஒருமனதாக என்னையே
எண்ணும் யோகம் பெற்று என்னைத் தியானித்து
வணங்குகிறார்களோ...சித்தத்தை என்பால்
வைத்த அவர்களை...நான் கரையேற்றுகிறேன்

உலகத் துயிர்களிடத்து நட்புடன் பழகு, ஆணவத்தை
நீக்கி சம நிலையடை. பொறுமை, சந்தோஷம்
அடக்கம், திட நிச்சயம், மன ஒருமைப்பாடு
இவை அனைத்தையும் கொண்ட யோகியாய்த்
திகழும் பக்தன் எனக்குப் பிரியமானவன்
என்றெல்லாம் பக்தி பற்றி விரிவாக விளக்குகிறது.

பக்திக்கான கூறுகள்

ஆன்மீகச் சிந்தனையாளர்கள், கீதைக் கருத்துக்கள் ஆகிய வற்றினின்றும் பக்திக்கான கூறுகள் கண்டறியப்படுகின்றன.

1. தூய அன்புடன் பகவானைச் சரணடைதல் பக்தி.
2. கடவுள் தன்னுடன் உணர்ந்திருப்பவர் என்று எண்ணுவது பக்தி.
3. இந்திரியங்களை வென்று இயங்குவது பக்தி.
4. பொறுமை, அடக்கம், மன ஒருமைப்பாடு ஆகியன கொண்டு சமநிலையில் இருப்பது பக்தி.
5. பிறர் நன்மைக்கு உதவும் செயல்களில் ஈடுபடுதல் பக்தி.
6. உலக மாயையினின்றும் விடுபடச் செய்வது பக்தி.
7. தன் இயக்கமே இறைவனுக்கு என எண்ணி அதனால் தன்னை மட்டுமன்று நாட்டையே தூய்மைப்படுத்துவது பக்தி.

திருஞானசம்பந்தரின் பக்தி

இறைவனிடம் ஆரா அன்பு பூண்ட அடியவர்களுக்கான இலக்கணம், பிற உலகமாந்தரின்றும் வேறுபட்டுக் காணப்படுகிறது. அடியார்களில் ஒருவரான திருஞானசம்பந்தரின் பக்தி பற்றி அறியும் முன்பாக, பொதுவாக அடியார்கள் பற்றிக் கூறும் கருத்துக்களை இங்கு எடுத்துரைப்பது சம்பந்தரின் பக்தி பற்றிய ஆய்வுக்குப் பயனுறுவதாக அமையும்.

- அடியாரிலக்கணம்
  - I பொது இலக்கணம்
  - II சிறப்பிலக்கணம்
    - அகத்திலக்கணம்
    - புறத்திலக்கணம்

பொது இலக்கணம்

கொல்லாமை, புலாலுண்ணாமை, கள்ளாமை, கள்ளுண்ணாமை, பிறர் மனை நயவாமை, இரக்கம், வாய்மை, பொறை, அடக்கம், கொடை, தாய்தந்தை முதலிய பெரியோரை வழிபடுதல் முதலியனவாம்.

அ. சிறப்பிலக்கணம்

I. **அகத்திலக்கணம் :** இது மூன்று வகைப்படும்.

1. பஞ்சாக்கரத்தை மானதமாகச் செபித்தல்
2. மானத பூசை
3. சிவப்பொருளைத் தன்னோடு பிரிவறக் காண்டல் என்பவைகளாம்.

II. **புறத்திலக்கணம்**

1. விபூதி உருத்திராக்கம் என்னும் சிவசின்னங்களைத் தரித்தல்
2. குருவை வழிபடல்
3. சிவபெருமானைத் தோத்திரஞ் செய்தல்
4. சிவநாமங்களை உச்சரித்தல்
5. சிவபெருமானைப் பூசை செய்தல்
6. சிவதருமங்களைச் செய்தல்
7. சிவபுராணங்களைக் கேட்டல்
8. சிவாலய தரிசனஞ் செய்தல்
9. சிவனடியாரிடத்தன்றிப் பிறரிடத்துப் போசனம் பண்ணாமை.
10. சிவனடியார்களுக்குக் கொடுத்தல்

ஆ. **உடலிலக்கணம் பத்து :** சிவபெருமானுடைய பெருமையைச் சிந்திக்குந்தோறும் பேசுந்தோறும்.

1. கண்டம் விம்முதல்
2. நாக்குத் துடித்தல்
3. உதடு துடித்தல்
4. சரீரத் துடித்தல்
5. உரோமஞ் சிலிர்த்தல்
6. குறுவேர்வை கொள்ளல்

7. நாத்தழுதழுத்தல்
8. ஆனந்தக்கண்ணீர் சொரிதல்
9. வாய்விட்டழுதல்
10. பரவசமாய்த் தன்னையயர்தல்

திருஞானசம்பந்தரில் பக்தனுக்குரிய பொது இலக்கணம்

திருஞானசம்பந்தர் அந்தணர் குலத்தில் அவதரித்தார் என்பதை அவரது தந்தையை அறிமுகப்படுத்தும்போது

அப்பதியில் அந்தணர் தம் குடிமுதல்வர் ஆசுஇல்மறை
கைப்படுத்த சீலத்துக் கவுணியர் கோத்திரம் விளங்கச்
செப்புநெறி வழிவந்தார் சிவபாத இருதயர்............

என்பார். சம்பந்தரும் சைவநெறி தழைத்தோங்கப் புரட்சி செய்தவர். எனவே பிறப்பிலும், செயலாலும் வன்முறைக்குப் பழக்கப்பட்டவரல்லர் என்பதால் கொல்லாமை, புலாலுண்ணாமை, கள்ளாமை, கள்ளுண்ணாமை, பிறர்மனை நயவாமை போன்ற அல்லவையெல்லாம் இவரிடத்துக் காணப்பெறவில்லை.

இரக்கம் : முயலகன் எனும் வெந்நோய் பிடித்த பெண்ணை அப்பிணி யினின்றும் காக்க

1. **துணிவளர்திங்கள் என்றெடுத்து மணிவளர் கண்டரோ**
   மங்கையைவாட மயில்செய்வதோ இவர்மாண்பே
   என்ற பாடலைப் பாடி அருளினார்.
2. பாம்பின் வாய்ப்பட்டு மாண்டவனை மீட்க
   'சடையாய் எனுமால் சரணீயெனுமால்
   ... ...
   உடையாய் தகுமோ இவளுண் மெலிவே
   என்று பாடிக் காத்தார்
3. பூம்பாவையை உயிர்ப்பிக்க
   "கருஞ்சோலை சூழ்ந்த கபாலிச்சரம மர்ந்தான்
   பெருஞ்சாந்தி காணாதே போதியோ பூம்பாவாய்"
   என்று பாடி எழுப்பினார்.

இவை ஞானசம்பந்தரின் பண்பைத் தெற்றெனப் புலப்படுத்துகின்றன. இறைவன் அருளால் இவ்வுலகு வந்தவர் ஞானப்பாலுண்டவர் சைவம் தழைக்கச் செய்தவர், நாதன் நாமம் நமச்சிவாயத்தைப் பாடுவதும் பாடவைப்பதும் உயர்குறிக்கோளாய்க் கொண்டவர் என்பதால் இவர் பெண்கள் பற்றிய சிந்தையற்றவராய்த் திகழ்ந்தார். பூம்பாவையை ஏற்கவில்லை. தாய் தந்தையரின் தூண்டுதலால் மணவினைக்கு

உட்படுத்தப்பட்டாலும் மணவினை நிகழ்ந்ததும் இல்லற இன்பத்தில் திளைக்கவில்லை. இவ்வில்லொழுக்கம் வந்து சேர்ந்ததே, இவளோடு நான் இறைவனடி சேரவேண்டும் என உறுதி கொண்டார். திருக்கோவிலுக்குச் சென்று நல்லூர்ப்பெருமணம் எனும் பதிகம்பாடி ''உன்திருவடி நிழல் அடையும் சமயம் இதுவே'' என்று வேண்டினார். இறைவனும், நீயும், உன் மனைவியும் திருமணம் காணவந்தவரும் இச்சோதியினுள் வந்து சேருங்கள் என்று கோவிலைச் சோதிமயமாக்கித் திருவாயிலையும் காட்ட இவர் ''காதலாகிக் கசிந்து என்று பாடிச் சோதியுள் புகுந்தார். இறைப்பேரருளில் இரண்டறக் கலந்தார். தாய்தந்தை விருப்பிற்கு மணவினை மேற்கொண்ட செயல் தாய்தந்தையரைப் பெரியோரை மதிக்கும் பண்பைப் புலப்படுத்துகிறது. எனவே அடியார்க்குரிய பொது இலக்கணம் அனைத்தும் பெற்ற பண்பாளராக ஞானசம்பந்தர் தோற்றம் பெறுகிறார்.

சிறப்பிலக்கணம்

I. அகத்திலக்கணம்

1. **பஞ்சாக்கரத்தை மானதமாகச் செபித்தல்** : ஐந்தெழுத்து, வேதம் நான்கினும் மெய்ப்பொருளாவது என்றுரைத்தவர் அதன் இன்பத்தை மனதால் அனுபவித்தால் அதனால் உறும் பயன்களை

''கொல்வாரேனும் குணம் பலநன்மைகள்
இல்லாரேனும் இயம்பு வராயிடின்
எல்லாத் தீங்கையும் நீக்குவர் அன்பரால்
நல்லார் நாமம் நமச்சிவாயவே''

என்றும்

''மந்தரம் அன பாவங்கள் மேவிய
பந்தனையவர் தாமும் பகர்வரேல்
சிந்தும் வல்வினை; செல்வமும் மல்குமால்
நந்தி நாம நமச்சி வாயவே''

என்றும் புலப்படுத்துகிறார்.

2. **மானத பூசை** : இறைவனைத் தியானித்து அவனை உள்ளமெனும் கோவிலில் ஏற்றிவைக்க வேண்டுமாம். இந்நிலையில் இறைவனைப் பற்றிய பூசை காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கும் அளவிற்கு மனதால் உணரப்பட்டது என்பதை

''உம் அன்பினோடு எம்அன்பு ஈசன் உறைகோயில்''

''அகனமர்ந்து அன்பினராய் அனுபகை செற்றுஐம்
புலனும் அடக்கி...''

"கையால் தொழுது தலைசாய்த்து உள்ளம் கசிவார்கள்
மெய்யார் குறையும் துயரும் தீர்க்கும் விமலனார்"

என்பன போன்ற அடிகளால் புலப்படுத்துகிறார். இப்படிப்பட்ட மானத பூசையில் மானதமாகப் பஞ்சாக்கரத்தைச் செபிப்பதால் தீயவை ஒழியும் என்பதையும் புலப்படுத்துகின்றார்.

3. **சிவப்பொருளைத் தன்னோடு பிரிவறக் காண்டல்** : வாழ்விலும், சாவிலும், நனவிலும், நனவற்ற கனவு நிலையிலும் இறைவனின் திருவடியை என்றென்றும் காண்பவர். இதனை

"வாழினுஞ் சாவினும் வருந்தினும் போய்
வீழினுமுன கழல் விடு வேனல்லேன்"
நனவினுங் கனவினும் நம்பா உன்னை
மனவினும் வழிபடன் மறவே னம்மான்"

என்ற பாடல்கள் நிறுவுகின்றன.

II. **புறத்திலக்கணம் : 1. சிவசின்னங்களைத் தரித்தல்**

சிவனை வழிபடுதலுடன், உலகோரையும் அவ்வழிக்கு ஆற்றுப் படுத்தலை உயர் குறிக்கோளாய்க் கொண்டவர் சம்பந்தப் பெருமானார். இறைவனோடு தொடர்புடைய இவரால் உருத்திராக்கம் இறைநிலையில் வைத்து எண்ணப்பெற்றது. அதனால் தான் மணவினையின்போது உருத்திராக்க மாலையை மட்டும் பிள்ளையார் தாமே எடுத்து அணிந்து கொண்டார் என்பதனை

"திருஅடையாள மாலை எவ்வுலகோரும் எத்தத்
தொழுது தாம் எடுத்துப் பூண்டார்"

என்றுரைக்கிறார் சேக்கிழார்.

2. **குருவை வழிபடல்** : சம்பந்தப் பெருமானுக்கு இறைவனே நல் ஆசிரியராகத் திகழ்கிறார். பிறப்பே அவரால் உற்றது. உலகின் மும்மலங்களை அழிக்க எடுக்கப்பட்டது. அதனால் இறைவன் எண்ணப்படி செயல்படுகிறார். பிற எண்ணங்கள் இவரிடம் வந்து இயைபுறவில்லை. இந்நிலையில் சிவனே குருவாகிச் சிந்தையைத் தம்வயப்படுத்திய பாங்கு புலப்படுகிறது. இக்கருத்து

"துறக்குமா சொல்லப்படாய் துரத்தியாய் திருந்தடி
மறக்குமா றிலாதவென்னை மையல்செய்திம் மண்ணின்மேல்
பிறக்குமாறு காட்டினாய் பிணிப்படு முடம்புவிட்
டிறக்குமாறு காட்டினாய்க் கிழுக்குகின்ற தென்னையே"

என்ற பாடல் தோற்றம் பெறுகிறது. தன்னுடைய பிறவியே சிவ வழிபாட்டை உலகு அறிய வேண்டும், பயனுறவேண்டும், அல்லவை அழிய வேண்டும் என்பதை உணர்ந்தவர். அதனை சிவன் மேலுற்ற

காதலை சொல்லால், செயலால், பணியால் வழிபாட்டிலன் கூறுகளால் உலகறியச் செய்தவர் சம்பந்தர்.

சிவபெருமானைத் தோத்திரஞ் செய்தல்
சிவநாமங்களை உச்சரித்தல்

நாவினுக்கு அருங்கலமாகிய நமச்சிவாயத்தின் அரும்பெரும் உண்மைகளைத் தெளிவுபடுத்தும் இடங்கள் பல உள்ளன. அவற்றுள் இருபதிகங்கள் திருவைந்தெழுத்தின் சிறப்பை உணர்த்துவதற்காகவே அமைக்கப்பட்டுள்ளதுபோல் காணப்பெறுகின்றது. அவை 'பஞ்சாக்கரத் திருப்பதிகம்', 'நமச்சிவாயத் திருப்பதிகம்' என்பன.

பஞ்சாக்கரத் திருப்பதிகம்

''துஞ்சலும் துஞ்சலிலாத போழ்தினும்
நெஞ்சகம் நைந்து நினைமின் நாள்தொறும்''

என்ற அடிகள் நாளும் அவனை நினைக்க வேண்டுகிறது.

நமச்சிவாயத் திருப்பதிகம் : இதில் அஞ்செழுத்து என்றில்லாது நமச்சிவாயத்தை வெளிப்படையாகவே கூறுகிறது.

''நக்கர் தம்நாமம் நமச்சிவாய வென்பார் நல்லரே''

''நண்பார் சிவாய எனாநாலூர் மயானத்தை
இன்பா யிருந்தானை ஏத்துவார்க்கு இன்பமே''

என்ற பாடல்களிலும் தொடரும் பாடல்களிலும் கூறுகிறார்.

ஓதுவதன் பயன்

தூங்கும்போதும், விழித்திருக்கும்போதும் உள்ளம் உருகி நாள்தோறும் சிவபிரானை எண்ணி வாழ்த்த, கூற்றுவனும் அஞ்சுவானாம் நெருங்கு தற்கு, எமதூதர் கொல்ல வேண்டிக்கொண்டு போகும் இடத்திலும் உற்ற துணையாய் வந்து அல்லல் அகற்றுமாம் நமச்சிவாய நாமம். அடர்களைக் கெடுக்கும், துயர் கெடுக்கும், பிறவியாம் பெரும் பணி அறுக்கும் என்றெல்லாம் கூறுகிறார்.

''கொல்வா ரேனும் குணம்பல நன்மைகள்
இல்லா ரேனும் இயம்புவ ராயிடின்
எல்லாத் தீங்கையும் நீங்குவர் என்பதால்
நல்லார் நாமம் நமச்சிவாயவே''

என்ற இப்பாடலில், தான் உணர்ந்ததை உலகத்தவரும் உணரவேண்டும் என்ற சிந்தையில் அமைந்துள்ளது. கொல்வாரேனும், குணம் பல இல்லாரேனும் என்று 'உம்' கொடுத்துக் கூறுவது சிவன் பேரருள் மிக்கவன், இன்னார் இனியர் என்ற பேதமற்று அருள்புரிபவன் என்பதை மக்களிடை அழுந்தப் பதியவைக்கும் முயற்சியாகக் காணப்படுகிறது.

சிவபெருமானைப் பூசை செய்தல்

சம்பந்தப் பெருமான் உலகியல் அறிந்தவர். உளவியல் உணர்ந்தவர். எனவே தம்கொள்கையை எதேச்சதிகார முறையில் கூறாது, மற்றார் வழி சென்று, அவ்வழியிலேயே பரப்புகிறார். இவரது கொள்கைப் பரப்பால் உளவியல் சார்ந்ததாக அமைகிறது. இறைவனை வணங்குதல் என்பது மனம் ஒன்றித்ததாக, அன்பின் வழியதாக இருக்கவேண்டும் என்பது இவர் கொள்கை. வேதத்தில், வேள்வி, இவற்றில் பற்றுதல் இல்லை. வேதத்தில் கூறப்படும் மந்திரங்களை அப்படியே ஒப்பிப்பதால் பயனில்லை என்றதன் உணர்வை 49-வது பதிகத்தில் குறிப்பிடுகிறார். அவர்கள் கூறாத விக்கிரக வழிபாடு, அபிடேகம், அர்ச்சனை என அத்தனையையும் வகைப்படுத்தி,

> **"செந்தமிழர் தெய்வமறை நாவர்,**
> **செழுநற்கலை தெரிந்த அவரோடு**
> **அந்தமில் அர்ச்சனைகள் செய்ய அமர்கின்ற அரனூர்"**
>
> **"பாலினால் பால் நெய்யால் பழத்தினால் பயின்றாட்டி"**
>
> **"தேன் நெய் பால் தயிர் தெங்கிளநீர் கரும்பின்தெளி**
> **ஆன் அஞ்சொடும் முடியான்**

என்ற அடிகளில் பதிவாக்குகின்றார்.

சிவாலய தரிசனஞ் செய்தல்

திருஞானசம்பந்தர் பிறவியும், பெரும் பிணியினின்றும் தாம் மட்டும் உய்வு பெற வேண்டும் என்று எண்ணவில்லை. அதற்கான வழியை உலகோரும் உணர்ந்து செயல்பட வேண்டும், சிவன் பேரருள் பேரளவில் புலப்படவேண்டும் என ஆவலுறுகிறார். இதனால் இவரது சிவத்தொண்டு தான் பிறந்த பகுதியில் மட்டுமல்லாது ஏறத்தாழ 220 தலங்களில் நிகழ்கிறது. அகத்தியன்பள்ளி முதல் வைகாவூர் வரை செல்லுமிடமெல்லாம் இறைவன் பெருமை பரப்புகிறார், தொண்டு செய்கிறார். அங்கெல்லாம் சிவபூஜை செய்கிறார். செய்ய வேண்டும் என்பதையும், பயன் கூறுதல் வழி உருவாக்குகிறார்.

சிவதருமங்களைச் செய்தல், சிவனடியார்களுக்குக் கொடுத்தல்

வான்பொய்க்கக் காவிரியில் வளம் குறைந்தது. எங்கும் பஞ்சம் நிலவிற்று. மக்கள் அல்லலுற்றனர். பிள்ளையாரும் அப்பரும் அடியார்க்குக் கவலை நேருமோ என்று கருதி இறைவனை நினைந்து கொண்டே துயின்றனர். இறைவனும் கனவில் தோன்றி அடியவர்கட்கு இதனால் மனவாட்டம் உண்டாகும். அதை ஒழிக்க ஆலயத்தின் கீழ்ப்பீடத்திலும் மேல்பீடத்திலும் ஒவ்வொரு பொற்காசு வழங்குவோம் என்று திருவாய் மலர்ந்தருளினார். காசு பெற்று இருவரும் அமுது வழங்கி வந்தனர்.

ஆயினும் அப்பரது மடத்தில் விரைவாக அமுது படைக்க இங்கு அமுது படைக்க நேரமாயிற்று காரணம் விலை வட்டங்கேட்பது பலப் பட்டது. ''வாசிதீரவே காசுநல்குவீர்'' என்ற திருப்பதிகம் பாடி நல்லகாசு பெற்று அதனால் காலத்திலேயே அமுது வழங்கப்பட்டது.

சிவனடியாரிடத்துப் போசனம் பண்ணுதல்

அடியார் பசித்திருத்தல் ஆகாது. ஞானசம்பந்தர் காலத்தில் அடியாருக்கு அன்னம் அளித்தல் ஒரு விழாப்போன்ற உயர் தருமமாகக் கருதப்பட்டது. சிவபூஜை மேற்கொள்ளும் அடியார்களுக்குரிய பொருள்கள் யாவும் இயல்பாகவே கைகூடும். மழையின்றி வளம் குன்றினும் அவர்கள் இரப்போர்க்கு இல்லை என்னாது முடிந்ததை வழங்குவர்.

1. ஞானசம்பந்தர் அப்பரைத் தமது இல்லத்திற்கு அழைத்துச் சென்று அவருக்கு விருந்து செய்தார்.
2. திருநீலக்கண்ட நாயனார் சம்பந்தரைத் தம் இல்லத்திற்கு அழைத்துச் சென்று அமுது வழங்கினார்.
3. முருக நாயனார் திருப்புகலூர்த் திருமடத்தில் விருந்தினராய் அமர்ந்திருந்தார் என்பது போன்ற செய்திகள் திருஞானசம்பந்தர் சிவனடியாரிடத்துப் போசனம் பண்ணியமைக்குச் சான்றாகின்றன.

உடலிலக்கணம் பத்து

இறைவன் ஊனாகி, உயிராகி, அன்னையுமாய், எங்கும் நிறைந்த பெரும்பேறுடையவன். அப்படிப்பட்ட பெரும் பொருளிடத்ததுக் காதல் கொண்டு, உளம் கசிந்து, இறைவனை நினைந்து நினைந்து உருகு வதால் மேனியே புளகாங்கிதம் அடைகிறதாம். அதனால் உரோமஞ் சிலிர்த்தல், வேர்வை கொள்ளல், நாத்தழுதழுத்தல், பரவசமாதல் போன்றன நிகழ்வதை

> "திருமேனியெல்லாம் முகிழ்தெழுந்த மயிர்ப்புரைம் வளர்க்கு நீராய்
> அருவிசொரிந்து திருநயனத்து ஆனந்த வெள்ளம் இழிந்த''

வழிபாட்டில் கண்ணீர்

பக்தி வெள்ளத்தில் ஆழ்ந்தபோது அன்பின் மேலீட்டில் கண்ணில் நீர் வெள்ளமாய் வருகின்றதாம். இதனைப்

> ''புணரும் இன்னிசை பாடினர், ஆடினர்
> பொழிந்தனர் விழி மாறி''

> நெடிது பணிந்து எழுந்து அன்பு
> நிறைகண்ணீர் நிறைந்து விழியே

என்ற வரிகளிலும் இன்னும் இருபது இடங்களிலும் சேக்கிழார் உணர்த்துகிறார்.

விவாதம்

இங்குப் பக்திநெறியின் கூறுகள் திருஞானசம்பந்தரின் பக்திப் புலப்பாடுகள்வழி ஒப்பிட்டு விவாதிக்கப்படுகிறது.

தூய அன்புடன் பகவானைச் சரணடைதல் என்பது காதலாகிக் கசிந்து கண்ணீர்மல்கி நின்ற தோற்றத்தில் புலப்படுகிறது. இவர் வேதம் ஓதும் மறையவரின் வழித்தோன்றல் எனினும் அவர்கள் வழிபற்றிப் பொருளுணரா வழிபாட்டில் மனம் இயையாது அதன் பொருளைத் தான் உணர்ந்ததோடு

''சிந்தை மயக்குறும் ஐயம் தெளிய எல்லாம்
செழுமறை யோர்க்கு அருளீ அவர்தெருளும் ஆற்றான்
முந்தை முதன் மந்திரங்கள் எல்லாம் தோன்றும்
முதலாகும் முதலனார் எழுத்து அஞ்சு என்பார்''

இது சம்பந்தர் இறைவனிடம் கொண்ட அன்பின் வெளிப்பாடாகும். அன்பின் முதிர்வும், தம்மைப்போன்று இறைவனைப் பிறரும் உணர வேண்டும் என்ற உந்துதலை உருவாக்கி, முயற்சிக்கான களத்தையும் கண்டு உணர்வித்தது.

இறைவனைச் சிக்கெனப் பிடித்தலும், இரண்டறக் கலக்க விழையும் நிலையும் சம்பந்தருக்கு உருவாகவில்லை இறைவனைப் பற்றிய சிந்தையை மறந்தாலன்றோ நினைக்கவேண்டும், சிக்கெனப் பிடிக்க வேண்டும் என்ற எண்ணம் உருவாகும் சம்மந்தர்,

''நாவினும் கனவினும் நம்பா உன்னை
மனவினும் வழிபடல் மறவேனம்மான்'' என்று கூறுகிறார்.

இதனால் எப்பொழுதும் எந்த நிலையிலும் தன்னுள் உறைந்தே இருப்பரைச் சிக்கெனப் பிடித்தல் வேண்டும் என்ற அவசியம் ஏற்படாது என்பது உறுதியாகிறது.

கடவுள் தம்முள் உரைந்திருப்பவர் என்பதில் தீர்க்கமான முடிவுடையவர் சம்பந்தர். அதனால்தான்,

''வாழினுஞ் சாவினும் வருந்தினும்போய்
வீழினு முனகழல் விடுவேனலவேன்''

என்று பாடுகிறார்.

சாவில்கூட விடமாட்டேன் என்றுரைப்பதில் இறையோடு இரண்டறக் கலந்து வாழும் இவரது மனஉணர்வு புலப்படுகிறது.

தம் செயல் அத்தனையும் இறைவன் செயலாக எண்ணுவது பக்தி என்ற கூற்று சம்பந்தரது பாடல்களில் முற்றவும் பதிவாகியுள்ளது.

கடவுளோடு ஒட்டி உறவாடி, விடாது பிடித்துக் கொண்டிருப்பவரிடம் தனிப்பட்ட மனதையோ, செயல்பாடுகளையோ காண இயலாது. இந்திரியங் களை வெல்வது, உலக மாயையினின்றும் விடுபடச் செய்வது பக்தி என்ற கூறுபாடு சம்பந்தரின் செயல்பாடுகளில் நன்கு புலப்படுகிறது. இறைத்தொண்டர்களுக்குத் 'தான்' என்ற சிந்தை அற்றுப்போய்விடும். தொண்டர்களுக்குத் 'தான்' உணர்வோ அதனாலுருவாகும் மும்மதங் கட்கு அடிமையாகும் நிலையோ உருவாகாது. உருவானால்தான் மாயவலை இவர்களை சிக்கவைக்கும், இந்திரியங்களை ஆட்டுவிக்கும். அரந்தை பண்புடைய ஞானசம்பந்தர் மாயைக்கு ஆட்படுத்தும் மண வினையில் சிக்காது திடீரென முடிவெடுத்த அளவில், சோதியில் கலத்தல் நிகழ்கிறது. இங்கு உலக மாயை விடுபடுகிறது.

பிறர் நன்மைக்கு உதவும் செயல்களில் ஈடுபடுவது பக்தி என்பதும் சம்பந்தரின் செயல்களில் முற்றும் பொருந்தி நிற்கிறது. தொண்டு செய்வதைக் குறிக்கோளாகக் கொண்டவர் சம்பந்தர். விடம் தீர்த்தது, வீழிமிழலையில் இறைவனிடம் வேண்டிக் காசுபெற்றது, பஞ்சம் தீரும் வரை உணவளித்தது, பூம்பாவையை உயிர்ப்பித்தது போன்றனவெல்லாம் அன்பின் வழிப்பட்ட தொண்டாகும். சமுதாயத்தில் மக்களும் உற்ற துன்பத்தைப் போக்குவதுடன், நல்வாழ்வு மேற்கொள்வதற்கான இறைச் சிந்தை பற்றிய வழிமுறைகளையும் போதிக்கிறார். இதனால் இவரது அன்பும் தொண்டுள்ளமும் இவரது பக்திநெறியை உயர்வுபடுத்துவதாகக் காணப்படுகிறது.

நாட்டையே தூய்மைப்படுத்துவது பக்தி என்பது சம்பந்தரின் ஆளுமைப் பண்பால் தெளிவுறகிறது. தன்னையே இறைவனுக்கு அர்ப்பணிப்பதுடன் இறைவனின் அருள் உணர்ந்து ஆத்மார்த்தமாக வணங்கவேண்டும் என்றுரைப்பதில் நாட்டின் மொத்த இதயங் களையும் தூய்மைப்படுத்த விழையும் உணர்வு புலப்படுகிறது. இறைவன்மேல் அன்பைப் பெருக்கிக்கொண்டே போய் முடிவில் சோதியில் கலக்கிறார். இதில் தன் இயக்கமே இறைவனுக்கு என்ற கூற்று உறுதிப்படுகிறது.

பொறுமை, அடக்கம், மன ஒருமைப்பாடு கொண்ட சமநிலையில் இருப்பது பக்தி என்ற கூற்று ஞானசம்பந்தத்தில் விவேகத்துடன் கூடிய நிலையில் பொறுத்தமுறுகிறது. 'மெய்ப்பொருள் நமச்சிவாயமே' என்பதில் ஒருமைப்பாடுடைய இவர் தம் கருத்தை, மாற்றுக்கருத்துடையாருடன், எதிர்முகமாகக் கூறாது பொறுமையாக, அடக்கமாக அவர் வழியிலேயே சென்று புலப்படுத்துகிறார். காரணம் வேதத்தை ஏற்றுக் கொள்ளாத வரைப் பௌத்தர் என்று ஒதுக்கிவிடுவாரே என்ற ஆதங்கம் தான் என்றுரைப்பார் அ.ச.ஞா.ப. 147.

இப்படிப் பக்திநெறிக்கான கூறுபாடுகளில் முற்றத்திளைத்தவராகத் தோற்றம் தரும் ஞானசம்பந்தர் அதற்கும் அப்பாற்பட்டுப் புரட்சி யாளராகவும் செயல்படுகிறார். இறைவன் மேலுற்ற ஆராக்காதலால் அவர் சிறப்பைப் பாடிப்பாடி இரண்டறக் கலந்த நிலையில் சாதி வேறுபாடோ, இனவேறுபாடோ அவர்கள் முன் நிற்கவில்லை. விளைவு திருநீலகண்ட யாழ்ப்பாணரை உடன் வைத்துக்கொள்கிறார். இதில் சமுதாய புரட்சி தோற்றம் பெறுகிறது. பக்தி பரவசத்தில் தான் உற்றதை மற்றோரும் உறும் வகை காணத் துடிக்கிறார். இதனால் வேள்வி செய்தலைவிட, வேதம் ஓதுதலைவிடச் சிறந்தது ஐந்தெழுத்து மந்திரம் என்கின்றார். வேதம் நான்கினும் மெய்ப்பொருளாவது நாதன் நாமம் நமச்சிவாயவே என்றுரைப்பதில் சமயப் புரட்சி தோற்றம் பெறுகிறது. மனம் ஒன்றிய வழிபாட்டை இவரால் உலகு உணர்ந்தது.

7. சம்பந்தர் தேவாரத்தில் இயற்கை

பு. அறிவுடைநம்பி, நயம்பாடி.

உலகில் உள்ளவற்றை இயற்கையென்றும் செயற்கையென்றும் இருவகைப்படுத்தலாம். மனிதனால் உண்டாக்கப்பட்டவை செயற்கையாகும், மனிதனால் தோற்றுவிக்கப்படாதது இயற்கையாகும். கைபுனைந்து இயற்றா வனப்பே இயற்கையாகும். இயற்கை இயல்பானது. அழகாய் இருப்பது. நெஞ்சை அள்ளும் தகையது. ஐம்புலன்களுக்கும் விருந்தாய் அமைவது. நீலநிற வானமும், வானுயர்ந்த மலையும், கவின்நிறைந்த காடும், பரந்துவிரிந்த அலைகடலும், செஞ்ஞாயிறும், வெண்ணிலவும், ஒளிரும் விண்மீன்களும், அருவியும் ஆறும் இயற்கையே ஆகும். மரஞ்செடி கொடிகளும், ஊர்வனவும், பறப்பனவும் மற்றும் விலங்குகளும் இயற்கையின் படைப்பே. இயற்கையில் உள்ளம் தோயாதார் எவருமிலர். இயற்கையில் எல்லாமே அழகுதான். எனவேதான் பாரதிதாசன் இயற்கைப் படைப்புக்களில் அழகின் சிரிப்பைக் கண்டார். இயற்கை யழகில் இறைவனையும் காணலாம். ''காக்கைச் சிறகினிலே நந்தலாலா உன்தன் கரியநிறம் தோன்றுதடா நந்தலாலா'' என்று பாடினார் பாரதியார்.

பண்டைத் தமிழர்கள் இயற்கையோடு இயைந்து வாழ்ந்தவர்கள். மலையும் மலையைச் சார்ந்த இடத்தைக் குறிஞ்சியென்றும், காடும் காட்டைச் சார்ந்த இடத்தை முல்லையென்றும், வயலும் வயலைச் சார்ந்த இடத்தை மருதம் என்றும், கடலும் கடலைச் சார்ந்த இடத்தை நெய்தலென்றும் பெயரிட்டழைத்தனர். குறிஞ்சி, முல்லை, நெய்தல் என்ற பூக்கள் பெயராலும் மருதம் என்ற மரத்தின் பெயராலும் நிலங் களுக்குப் பெயரிட்டனர். மன்னர் பெயரோ மக்கள் பெயரோ இட்டால் மன்பதையில் பூசலும் போரும் நிகழுமென்றெண்ணி இயற்கை பெயரிட்டழைத்தனர். சங்ககாலப் புலவர்கள் இயற்கை அழகில் மனதைப் பறிகொடுத்தனர். தாங்கள் உணர்ந்து மகிழ்ந்ததை, உள்ளது உள்ளவாறு படிப்போர்க்கும் கவிதை வாயிலாக உணர்த்தினார்கள். குறிஞ்சிக் கபிலன், பாலை பாடிய பெருங்கடுங்கோ, மருதன் இளநாகனார் என்போரும் மற்றும் புலவர் பலரும் இயற்கைத் திணை களைப்பாடி அத்திணைகளாலே ஏற்றம் பெற்றனர். சங்க நூல்களிலும், காப்பியங்களிலும் இயற்கைக் காட்சிகள் களிநடனம் புரிவதைக் கற்று இன்புறலாம். மேனாட்டுப் பாவலர்களாகிய வேர்ட்சு ஒர்த்து, டென்னிசன்

போன்றோர் இயற்கையின் வனப்பைப் பாடிய சான்றோர்கள் ஆவர். சுருங்கக் கூறின் உலகில் இயற்கையைப் பாடாத புலவர் ஒருவரு மில்லை எனலாம்.

திருஞானசம்பந்தரும் இயற்கையும்

பக்திநெறி பரப்பிய நாயன்மார்களும், ஆழ்வார்களும் இயற்கை வனப்பிலும் வளத்திலும் ஆழங்கால் பட்டவர்கள். அவர்தம் பாடல் களைக் காதலாகிக் கசிந்து, கண்ணீர்மல்கிக் கற்றால் அவ்வியற்கை அழகில் இறைவனைக் காணலாம். ஞானத்திருவுருவான திருஞான சம்பந்தர் சோழநாடு, பாண்டியநாடு சேரநாடு, கொங்குநாடு, நடுநாடு, தொண்டைநாடு மற்றும் வடநாட்டுத் திருத்தலங்களுக்குக் கால்நடை யாகச் சென்றார். சென்றவிடமெல்லாம் இயற்கை வளங்களைக் கண்டு களித்தார். அங்குறையும் சிவபெருமானை நெஞ்சுருகப் பாடினார். இயற்கையோடு இறைவனை இணைத்துத் தேவாரத் திருமுறைகளில் செவிநுகர் கனிகளாகப் படைத்துள்ளார். திருஞானசம்பந்தர் ஞானக்குழவி. நாளும் இன்னிசையால் நற்றமிழைப் பரப்பினார். பக்திநெறியைப் பாரெல்லாம் பரப்பினார். சமயக்குரவர் நால்வரில் சம்பந்தரின் பாடல் களில்தான் இயற்கை எழிலும் வருணனையும் ஏராளம் ஏராளம். மூத்தோரைவிட, குழந்தைகளே இயற்கை எழிலை நனிவிரும்பி மகிழ்வர் என்பது உண்மை. மேனாட்டார் இயற்கையில் இயற்கை இன்பத்தை மட்டுமே கண்டனர். நம் ஞானப்பிள்ளையார் இயற்கையில் இறைநெறியைக் கண்டார். இயற்கை உடலாகும். இயற்கையின் உயிர் இறைவனாகும். இறைவனின் இயக்கமே இயற்கையின் இயக்கம் என்பதை உணர்த்தியவர்.

திருஞானசம்பந்தர் பாடல்களில் இடம்பெற்றவை

இவரின் திருமுறைகளில் கற்பகம், கழுநீர், காந்தள், குமுதம், குவளை, தாமரை, நெய்தல், மல்லிகை, முல்லை போன்ற மணம் பரப்பும் பாடல்கள் ஏராளம். அகில், வன்னி, வேங்கை, கோங்கு, சந்தனம், தென்னை, பலா, பனை, மருதம், வன்னி, வேங்கை மரங்களைக் காணலாம். கமுகஞ்சோலை, சாலிமலிசோலை, பூஞ்சோலை, பொழிற்சோலை, மலர்சோலை ஆகியவற்றைக் கண்டு மகிழலாம். மா, பலா, வாழை போன்ற பழம்பெற்ற பாடல்களை உண்ணலாம். நண்டு, மீன் போன்ற நீர்வாழ்வனவற்றையும் அன்றில், அன்னம், ஆந்தை, கபோதகம், கருடன், கழுகு, காகம், கிளி, குயில், கூகை, கொக்கு, சாதகம், சேவல், தாரா, நாரை, பகன்றில், பருந்து, பூவை, மயில், வண்டு ஆகிய பறவை களையும், அரிமா, ஆடு, ஆளி, எருது, எருமை, கரடி, கன்று, குதிரை, குரங்கு, நரி, நாய், நாவி, பசு, பன்றி, புலி, மான், முயல், யானை போன்ற விலங்குகளையும் கண்டு மகிழலாம், இமயமலை, மந்திர

மலை, மேருமலை, ஆனைமலை, அண்ணாமலை, காளத்திமலை, குற்றால மலை, சிராப்பள்ளிமலை ஆகிய மலைகளில் ஏறி விளையாடலாம். ஆறு, கடல், அருவிகளில் குளித்து மகிழலாம். முத்து, பொன், மணி, பவள மாலைகளைச் சூடி மகிழலாம். குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் போன்ற நானில வளங்களைக் காணலாம். இவரது பாடல்கள் பெரும் பாலும் முன்னிரண்டடிகள் இயற்கை அழகையும் பின்னிரண்டடிகள் இறைவன் பெருமையையும் பாடுவதாக அமையும். திருஞானசம்பந்தர் இயற்கை வழியே இறைவனைக் காண்பது நம்மனோரின் கடமையாகும்.

மலைப்பதிக் காட்சிகள்

திருக்கயிலாயம் எங்கும் பனிப்படர்ந்த உயர்ந்த மலைகள். விண்ணைத் தொடும் சிகரங்கள். கயிலை மலையில் இடி இடிக்கிறது. அதுகேட்டு அரிமா அஞ்சி ஓடுகிறது. மலைப்பாம்புகள் நெளிகின்றன. புலிகள் அங்கும் இங்கும் அலைகின்றன. பிடியும் அதன் கன்றும் உடன் வந்த களிற்றைக் காணாமல் திகைக்கின்றன. துணையில்லாமல் அவை இரண்டும் தஞ்சம் வேண்டி கயிலைநாதன் அடிவாரம் நோக்கி ஓடுகின்றன. விலங்குகளே விமலனைத்தேடி ஓடும்போது மனித இனம் இன்னும் இறைவனைத் தேடாமல் தயங்குவதேன் என்று கேட்கத் தோன்றும் பாடல்.

''தென்றி இருளில் திகைத்தகரி தண்சாரல் நெறியோடிக்
கன்றும் பிடியும் அடிவாரம்சேர் கயிலை மலையாரே'' (68-5)

திருக்காளத்தி மலையில் இறைவனைக் கண்ட மகிழ்ச்சியில் மந்திகள் கற்கள் அதிருமாறு ஓடியாடி விளையாடுகின்றன. பிடியும் கன்றும் சேர்ந்து விளையாடி மகிழ்வதைக் கண்ட திருஞானசம்பந்தர்,

''கல்லதிர நின்று கருமந்தி விளையாடும் காளத்தி மலையே (68-5)

என்றும்

கன்றினோ சென்றுபிடி நின்று விளையாடும் காளத்தி மலையே''
(327-10)

என்றும் பாடுகிறார்.

மாலும் அயனும் காணாத அண்ணாமலையைக் காண சம்பந்தர் வருகிறார். அம்மலையில் கடுவன் மாங்கனியை வேகமாகப் பறிக்கிறது. கனி பறித்துவிட்ட மாங்கொம்பு சூல்கொண்ட முகிலை அசைக்கிறது. அதனால் மலையெங்கும் மழை பொழிகிறது. மழைச்சாரலில் இரண்டு பிணைமான்கள் அங்குமிங்கும் மகிழ்ச்சியில் ஓடித் திரிகின்றன. மலையும், சாரலும், மந்திகளும், மாமரங்களும், மான்களும், மழையும் நம்முன்னே தோன்றும் காட்சிகள் இதோ.

**"தேமாங்கனி கடுவன்கொள விடுகொம்பொடுத் தீண்டித்
தூமாமழை துறுகல் மிசை சிறுநுண் துளிசிதறி
ஆமாம்பிணை அணையும்பொழில் அண்ணாமலை அண்ணல்".**
(10-2)

சிராப்பள்ளி சென்ற நம்பிள்ளையார் அம்மலைச்சிகரம் கண்டு மனம் லயிக்கிறார். அம்மலையிலுள்ள மந்தியின் செயல் அவருக்குக் கவலை அளிக்கிறது. மனித நேயம் கொண்ட குழவி, பிறரின் துன்பம் கண்டு வருந்துகிறது. வாழ்க்கையில் ஏமாற்றம் அடைந்தோர் உயிர்துறக்க மலையுச்சிக்கு விரைந்து செல்வர். அதுபோல கடுவனுடன் ஊடல் கொண்ட மந்தி தன் குட்டியுடன் சிராப்பள்ளி மலையுச்சிக்குச் செல்வதாகப் பாடுகிறார்.

**"கைம்மக வேந்திக் கடுவதனாடும் ஊடிக் கழைபாய்வான்
செம்முக மந்தி கருவரை ஏறும் சிராப்பள்ளி"** (98-2)

திருவண்ணாமலையில் ஒரு களிறும், ஒரு பிடியும் அன்பாய் இணைந்து இரைதேடுகின்றன. அதுசமயம் பிடி வழிதவறிக் காணாமல் போய்விடுகிறது. பிடியைப் பிரிந்து களிறு கவலையால் குரலெடுத்துப் பிளிற்றுகிறது. தேடித்தேடி, அலைந்தலைந்து ஓரிடத்தே நிற்கிறது. கவலைக் களைப்பால் படுத்துறங்குகிறது. அன்புப் பிணைப்பையும், பிரிவால் ஏற்படும் சோர்வையும் சம்பந்தர் பாடலென்னும் படக்கருவியால் படம் பிடித்துக் காட்டுகிறார்.

**"பிழைத்த பிடியைக் காணாதோடிப் பெருங்கைமர வேழம்
அழைத்துத் திரிந்தங் குறங்கும் சாரல் அண்ணாமலை யாரே"**
(69-4)

ஞானப்பிள்ளையார் குறும்பலா ஈசரைக் கண்டு வழிபடத் திருக்குற்றாலம் வருகிறார். உயர்ந்தோங்கிய மலை, எங்கும் பசுமை, மலை நடுவே வெள்ளருவி, மணியும், வயிரமும் அடித்து வருகிறது. அம்மலையிலிருந்து களிறும், பிடியும் ஈசனைக் காண இறங்கி வருகின்றன. வரும் வழியில் வேங்கைமரத்துப் பூங்கொத்துக்களைப் பறித்து மத்தகத்தே வைத்து வருகின்றன. ஏ! மனிதர்களே! குறும்பலா ஈசர் அடிபணிய வரும் விலங்குகளைப் பார்த்தாவது மனம் மாறுங்கள் என்கிறது இப்பாட்டு.

**"பூந்தண் நறுவேங்கைக் கொத்திறுத்து மத்தகத்திற் பொலிய வேந்திக்
கூந்தற் பிடியும் களிறும் உடன்வணங்கும் குறும்பலாவே"**
(207-8).

கற்குடிமலையென்னும் உய்யக்கொண்டானுக்குச் சம்பந்தர் வருகிறார். அம்மலையிலுள்ள பெண்யானைக்கோ நல்ல பசி. அதன் துணையாகிய

களிறு தன் துதிக்கையால் மூங்கில் முளைகளை முறித்துப் பிடிக்கு ஊட்டுகிறது. அன்பின் வழியது இல்லறம் என்ற வள்ளுவர் வாக்கையும், பிடியூட்டிப் பின்னுண்ணும் களிறு என்ற அகப்பாடலையும் நம்கண் முன்னே நிறுத்துகிறது சம்பந்தரின் அன்புப்பாட்டு.

''மருங்களியார் பிடிவாயில் வாழ்வெதிர் இளமுளை வாரிக்
கருங்களி யானை கொடுக்கும் கற்குடி மாமலை யாரே'' (43-4)

திருஞானசம்பந்தர் இன்னும் பல மலைநாட்டுத் தலங்களையும், மலைகளையும், இயற்கை நிகழ்வுகளையும் பலப்பட வருணித்துப் பாடியுள்ளார். இவர்தம் குறிஞ்சிநில பாட்டுகள் மலைவளத்தையும் இயற்கை எழிலையும் உயிரினங்களின் அன்பு வாழ்க்கையையும் அவற்றினூடே பக்திப் பரவசத்தையும் நமக்கு விளக்குகின்றன.

முல்லைப்பதிக் காட்சிகள்

குறிஞ்சி நிலத்தையடுத்தது முல்லைநிலமாகும். அண்ணாமலையைச் சுற்றிக் காடுகளும், கவின்மிகு சோலைகளும் சூழ்ந்துள்ளன. அங்குள்ள காட்டில் ஆடுமாடுகள் மேய்கின்றன. மாலைப்பொழுதில் மாடுகள் ஊர்திரும்ப வேண்டும். அப்போது ஓர் எருமைமாடு காணவில்லை இடையன் வேய்ங்குழலெடுத்து ஊத, இசைவெள்ளம் கானகமெல்லாம் தேனாய்ப் பரவுகிறது. இசைகேட்டு மாடு திரும்பி வருகிறது. மாட்டுக் கூட்டத்தோடு ஆயன் மகிழ்வுடன் வீடு செல்கிறான். முல்லை மாலையில் நம்மை மயங்க வைக்கும் வருணனை இதோ.

''கனைத்த மேதி காணாத ஆயன் கைம்மேற் குழலூத
அனைத்தும் சென்று திரளும் சாரல்'' (69-6)

இலம்பையங் கோட்டூர் காட்டில் ஓர் இனிய காட்சி. ஆண்மான் களும், பெண்மான்களும் துணையோடு கலந்து மகிழ்கின்றன. மயில்கள் பெடையோடு கூடி ஆடிக்களிக்கின்றன. இங்ஙனம் ஆணும் பெண்ணும் இணைந்து வாழ்தலே நல்லறம் என்பதைக்

''கலையினார் மடப்பிணை துணையொடும் துயிலக்
கானலம் பெடைபுல்கிக் கணமயி லாலும்
இலையினார் பைம்பொழில் இலம்பையங் கோட்டூர்'' (76-1)

என்ற பாடலால் அறிந்தின்புறலாம்.

புறவம் என்றால் காடாகும். அக்காட்டிலே மாதவியென்னும் குருக்கத்திக் கொடிகளில் உள்ள வண்டுகள் இசை பாடுகின்றன. அவ்விசைகேட்டு மயில்கள் நடனமாடுகின்றன. அந்நடனம் கண்டுகளித்த புன்னைமரம் தன்பொன்னிற மலர்களைச் சிந்திப் பரிசளிக்கின்றன. இவ்வரண்மனை நடன அரங்கை

''மாதவி மேய வண்டிசைபாட மயிலாட
போதலர் செம்பொன் புன்னை கொடுக்கும் பறவம்மே'' (97-2)

என்பதால் அறியலாம்.

திருக்கானப்பேர் என்பது தற்போது காளையார் கோயிலைக் குறிக்கும். அவ்வூருக்குச் செல்கிறார் ஞானப்பிள்ளை. அடர்ந்த காடுகளை உடையது அவ்வூர். அக்காடுகளில் வாழும் யானைகள் விடியலில் எழுந்து பொய்கையில் மூழ்கி காட்டுப் பூக்களைத் துதிக்கையால் ஏந்தி இறைவனை வழிப்படச் செல்கின்றன. ஐயறிவு படைத்த விலங்குகளின் பக்தியைக் கண்ணுற்ற தமிழ்க்குழவி

''பிடியெலாம் பின்செலப் பெருங்கை மாமலர் தழீஇ
விடியலே தடம் மூழ்கி விதியினால் வழிபடும்
கடியுலாம் பைம்பொழில் கானப்பேர் அண்ணலே'' (284)

என்று பைந்தமிழில் பாடுகிறார்.

மருதம்பதிக் காட்சிகள்

திருஞானசம்பந்தர் பிறந்தது மருதவளம் நிறைந்த சோழவள நாடாகும். அவரது வாழ்க்கையில் பெரும்பகுதி பின்னிப் பிணைந்த நாடாகும். வான்பொய்ப்பினும் தான்வளங்குன்றா பொன்னிவளநாடு. சோழநாடு வயலும், சோலையும், பொழிலும், ஆறும் சூழ்ந்த இயற்கை வளங்கொழிக்கும் இன்பத் திருநாடாகும்.

நிலவளமும், நீர்வளமும், மிகுந்து பசுமை வயல்கள் சூழ்ந்தது திருவீழிமிழலை என்னும் திருத்தலம். அத்தலத்தில் எங்கும் சிவந்த தாமரைகள் பூத்துக் குலுங்குகின்றன. அவற்றினருகே நிற்கும் புங்க மரங்கள் வெண்ணிற மலர்களைச் சொரிகின்றன. சங்குகள் எங்கும் நிறைந்துள்ளன.

இதைக்கண்டு வியந்த சம்பந்தர் பெருமான் வயலில் திருமணம் நடப்பதாகப் பாடுகிறார். தாமரையாகிய அக்னியில், புங்க மலர்களாகிய பொரி சொறிய, சங்குக் கூட்டத்தார் சூழ மண நிகழ்ச்சி நடக்கிறதாம். மணவணி காட்டும் இயற்கைக் காட்சி இதோ

"தகவுடைநீர் மணித்தலத்துச் சங்குள வர்க்கம் திகழச் சலத்தீயில்
மிகவுடைய புன்குமலர்ப் பொரியிட்ட மணம்செய்யும்
மிழலையாமே'' (132-6)

மிழலையில் எங்கும் நெடிதுயர்ந்த சோலைகள் உள்ளன. கார்கால மேகங்களின் இடியொலி முழவாகும். மயில்கள் நடனமாதர். வண்டுகள் பாடகர்கள். ஆடலும் பாடலும் நடக்கிறது. காந்தள்மலர் கையேந்த கொன்றைமரம் மலர்கள் ஆகிய பொன்னைப் பரிசாகச் சொரிகின்றன.

"வரைசேரும் முகில்முழவ மயில்கள்பல நடமாட வண்டுபாட
வரைசேர் பொன்னிதழிதர மென்காந்தள் கையேற்கும்
மிழலையாமே" (134-4)

என்ற பாடல் நடனக் காட்சியில் நம்மை மதிமயங்க வைக்கிறது.

திருவையாற்றுக் கோயிலில் முழவுஅதிர, மடவார் நடனம் ஆடுகிறார்கள். முழவு ஒலிகேட்ட மந்திகள் இடியொலியென மயங்கி அருகிருந்த மரத்திலேறி மழை வருகிறதா என்று பார்க்கின்றனவாம்.

"சிலமந்தி அலமந்து மரமேறி முகில் பார்க்கும் திருவையாறே"
(130-1)

என்ற பாடலில் மந்திகளின் மதிமயக்க இயற்கைக் காட்சி நம்மைக் குலுங்கச் சிரிக்க வைக்கிறது.

பல்வேறு திருத்தலங்களில் சோலைகள் சூழ்ந்துள்ளன. அவற்றில் வண்டுகள் இன்னிசைக்கின்றன. குயில்கள் கூவுகின்றன. தாம் கண்ட சோலைக்காட்சிகளில் மெய்மறந்த ஞானப்பிள்ளையின் பாடல்கள் பல உள்ளன. கவின்மிக்க சோலைக் காட்சிகளைக் காண்போமா.

"குழலின்னிசை வண்டின்னிசை கண்டு குயில்கூவும்
நிழலின் எழில்தாழ்ந்த பொழில் சூழ்ந்த நின்றியூரே" (18-5)

"நிழலார் சோலை நீல வண்டினம்
குழலார் பண்செய் கோலக்கா உளான்" (23-7)

"கண்ணின்றெழு சோலையில் வண்டு
பண்ணின்றொலி செய்பனை யூரே" (37-2)

"மண்ணார் சோலைக் கோலவண்டு வைகலும் தேனுருந்திப்
பண்ணார் செய்யும் பட்டினத்துப் பல்லவ னீச்சரமே" (65-2)

"வண்டெலாம் நசையால் இசைபாடும் வலஞ்சுழி" (138-2)

தண்பொருநை ஆறுபாயும் திருநெல்வேலி வயல்களும் சோலைகளும் சூழ்ந்த தலமாகும். நெல்லையப்பர் காந்திமதி அம்மையுடன் அருள்பாலிக்கும் திருத்தலம். அத்திருத்தலத்தைச் சூழ்ந்த சோலை வளத்தைக் கண்டு களித்த சம்பந்தர்

"வண்டுபண் முரலும் சோலை
திக்கெலாம் புகழுறும் திருநெல்வேலி" (350-7) என்றும்

"கந்தமார் தருபொழில் மந்திகள் பாய்தர மதுத்திவலை
சிந்துபூந் துறைகமிழ் திருநெல்வேலி" (350-8)

என்றும் பாடுகிறார்.

திருநெல்வேலி சோலைகளில் பல்வகை மலர்கள் பூத்துக் குலுங்குவதையும் தென்றல் வீசுவதையும் அனுபவித்து ஆனந்தமடைந்தார். தாம் துய்த்த இன்பத்தை வையகத்தார் துய்க்கப் பாடிய பாடல்கள் இவை.

"துன்றுதண் பொழில் நுழைந்து எழுவிய கேதகைப் போதளைந்து
தென்றல் வந்துலவிய திருநெல்வேலி"

"பொருந்துதண் புறவினிற் கொன்றையம்பொன் சொரிதரத்
துன்றுபைம்பூம்
செருந்திசெம் பொன்மலர் திருநெல்வேலி உறை செல்வர் தாமே"

நெய்தல்பதிக் காட்சிகள்

தமிழகத்தில் நீண்ட நெடிய கடற்கரையும் அதன் கரையில் அமைந்த நகரங்களும் பலவாகும். கடல் வாழ்க்கைத் தமிழரின் தொல்வாழ்க்கையாகும். கடல் வாணிபமும், கடல் கடந்து பெற்ற வெற்றியும் தமிழரின் பெருமையை உணர்த்தும். சம்பந்தரின் திருமுறைகளில் திருமறைக்காடு, திருவெண்காடு, திருமுல்லைவாயில், பூம்புகார், சண்பைநகர் போன்ற கடற்கரை ஊர்களும் கடலும், கானலும் சிறப்பித்துப் பாடப்பட்டுள்ளன. மலையழகும், காட்டழகும், வயலழகும், கண்டுகளித்த நாம் அலை தவழும் நீலக்கடல் அழகையும், கானலழகையும் காண்போம்.

திருஞானசம்பந்தர் திருமறைக்காட்டிற்குச் செல்கிறார். நெய்தல்நிலக் காட்சியைக் கண்டு மகிழ்ந்து அங்குறையும் சிவனையும் போற்றுகிறார். பரந்து விரிந்த நீலக்கடலும் பல்வேறு மரங்களடர்ந்த கானற்சோலையும் நம்பெருமானை மகிழச் செய்கிறது. குரா, குருக்கத்தி, புன்னை, ஞாழல் போன்ற மரங்கள் நெருங்கி அடர்ந்து நிற்கும் கானலஞ் சோலையின் கவினழகைக் கண்டு பாடுகிறார்.

"குரவம் குருகத்திகள் புன்னைகள் ஞாழல்
மருவும் பொழில்சூழ் மறைக்காட்டுறை மைந்தா" (173-3)

அத்திருமறைகாட்டுக் கானலில் மேலும் ஒருகாட்சி கானலில் தாழைகள் தழைத்து உயர்ந்து நிற்கின்றன. தாழைகள் வெண்ணிறமானவை. ஆண்நாரை, தன்பேடையைக் காணாமல் தேடி அலைகிறது. சிற்றின்ப மயக்கத்தில் தாழையின் வெள்ளிய மடல்களை, தன்பேடையென எண்ணி அணைத்து மகிழ்கிறதாம்.

"ஏழைவெண் குருகயலே இளம்பெடை தனதெனக் கருதித்
தாழை வெண்மடல் புல்கும் தாள்மறைக் காடமர்ந் தார்தாம்"
(227)

கடற்கரை ஓரத்தில் வளரும் சாய் என்பது ஒருவகைக் கோரை ஆகும். இக்கோரைக் காடாக மண்டிக்கிடக்குமிடம் சாயாவனம் எனப்படும்.

இதனைத் திருசாய்க்காடு என்றும் அழைப்பர். அவ்நெய்தல் திருத்தலத்தில் புன்க மரங்கள் ஏராளம். அம்மரங்களில் பூக்கள் பூத்துக் குலுங்கு கின்றன. கருவண்டுகள் அம்மலர்களின் மகரந்தங்களில் வாய் வைத்து உறிஞ்ச, அவை செந்நிறமாக மாறுகின்றன. ஆண் வண்டின் நிற மாற்றம் கண்டு, பெண்வண்டு, ஊடல் கொண்டு கோரைக்குள் ஓடி ஒளியும் இனிய காட்சியை,

"மாதர் வண்டுதன் காதல் வண்டாடிய புன்னைத்
தாதுகண்டு பொழில்மறைந் தூடுசாய்க் காடே!" (174-7)

எனப் பாடுகிறார்.

பூம்புகாரை அடுத்துள்ள நெய்தலூர் திருவெண்காடாகும். அவ்வூர் கடற்கரையில் கருமையான பனைமரங்கள் ஏராளம். அவற்றில் பசும் இளங்கிளிகள் வீற்றிருந்து இறைவன் நாமம் ஓதுகின்றனவாம். கிளிகளே இறைவன் புகழ்பாடும்போது நாம் அவன் பேரைச்சொல்லி பாட வேண்டாமா என்று கேட்பது போலுள்ளது இப்பாட்டு.

"பண்மொழியால் அவன்நாமம் பலவோதப் பைங்கிள்ளை
பெண்முகில் சேர் கரும்பெண்ணை மேல்வீற்றிருக்கும்
வெண்காடே" (184-6)

எல்லையின்றி முல்லைக்கொடிகள் நிறைந்திருக்கும் ஊர் முல்லை வாயிலாகும். அவ்வூரின் தெருக்கள் கிழக்கு மேற்காக அமைந்துள்ளன. கடலலைகள் தம் அலைக்கரங்களால் செழுமையான முத்துக்களை அதன் தெருக்களில் கொட்டிச் செல்கின்றன. முத்தான பாடலைக் கேட்டு மகிழுங்கள்.

"தெருவத்தில் வந்துசெழு முத்தலைக்கொள்
திருமுல்லை வாயில் இதுவே" (224-1)

மேலும் திருமுல்லைவாயில் கடற்கரையில் பல்வேறு மரங்கள் அடர்ந்த சோலைகள் உள்ளன. அச்சோலையில் மாமரங்கள் மிகுதியாக உள்ளன. அங்கு மான்கள் ஓடியாடித் திரிகின்றன. குயில்கள் கூவுகின்றன. தேன்சிந்தும் கனிகளையுடைய மாமரத்திலேறி மயில்கள் ஆடுகின்றன. அம்மயிலாட்டம் காண திருமுல்லைவாயில் வாரீர்.

"மானேறு கொல்லை மயிலேறிவந்து குயிலேறு சோலை மருவித்
தேனூறு மாவின் வளமேறி யாடு திருமுல்லை வாயில் இதுவே"
(224-6)

காசி, இராமேச்சுவரம் என்பன இந்தியத் திருநாட்டுப் புண்ணியத் தலங்களாகும். அந்த இராமேச்சுவரத்தில் அங்குமிங்கும் தென்னைகள் வளர்ந்து வளம்தந்து நிற்பதை,

"இலைவளர் தாழைகள் விம்முகானல் இராமேச்சுவரம" (268)

என்கிறார்.

வங்கக் கடலோரம் தங்கத் திருநகரம் சண்பை நகரமாகும். கடற் சங்குகள் முத்துக்களைப் பரதர் கேட்காமலேயே அவர் வீட்டு முற்றங் களில் ஈனுகின்றனவாம். நீர்வளமும், கொடைவளமும் கொண்ட இயற்கை வளத்தைக் கண்டு ஞானப்பிள்ளை இன்புற்றுப் பாடிய பாட்டிதுவாகும்.

"வங்கமேவு கடல்வாழ் பரதர் மனைக்கே நுழைமுக்கின்
சங்கம் ஏறிமுத்தம் ஈனும் சண்பை நகராரே" (66-1)

திருஞானசம்பந்தரின் திருமுறைகளில் பெரும்பான்மையான பாடல்களில் இயற்கை வருணனைக் காட்சிகள் பார்க்கலாம். மலை, அருவி, ஆறு, சோலை, பொழில், வயல், தென்றல் திங்கள், கடற்கரைக் கானல் ஆகிய காட்சிகள் ஏராளம். விலங்குகளில் குரங்குகளின் விளையாட்டுகளும், செயல்களும் விரிவாகப் பாடப்பட்டுள்ளன. களிறு, பிடி மற்றும் ஆண்மான், பெண்மான் இவைகளின் அன்புப் பிணைப்பும், பாசமும் நம்மை மெய்சிலிர்க்க வைக்கின்றன. குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் நிலப்பகுதிகளில் அமைந்த தலங்களின் இயற்கை வருணனை பற்றிச் சம்பந்தரைப் போல வேறு எவரும் இவ்வளவு விரிவாகப் பொருத்தமாக அழகாகப் பாடியதில்லை என்று அறுதியிட்டுக் கூறலாம். உயிர்கள் இன்பம் பெற விரும்புவது இயல்பு. கண்டு, கேட்டு, உண்டு, உயிர்த்து, உற்றறியும் ஐம்புலன்களுக்கும் இவரின் பாடல்கள் விருந்தாகவும், இன்பம் பயப்பனவாகவும் அமைந்துள்ளன. பிரஞ்சுப் புரட்சியாளர், "ரூசோ" இயற்கையை நோக்கித் திரும்புவதே இறுதியான நல்லின்பமாகும்" என்றார். இயற்கையை அனுபவிக்க இயலாதோர் இதயமே இல்லாத கல்நெஞ்சராவார். அக்கல்லார் நெஞ்சில் நில்லான் ஈசன் என்பது அவர் வாக்கு. இயற்கையோடு இயைந்து வாழ வேண்டும். எங்கும் நீக்கமற நிறைந்துள்ள இறைவனை எப்பொருளிலும் கண்டு மகிழுங்கள். ஞானக்குழவியான திருஞானசம்பந்தரின் திருமுறை களை ஓதி, உணர்ந்து இயற்கையால் இறைவனையும், இறைவனிடத்தே இயற்கையையும் காண வாருங்கள்!.

இயற்கையைக் காண்மின்! கண்டு அறியுமின்! அறிந்து இன்புறுமின்!

8. சம்பந்தரின் அற்புதத் திருப்பதிகங்கள்

அனுராதா ஸ்ரீநிவாசன், சென்னை.

திருமுருகன் கார்த்திகை மாதர் திருமுலைப்பால் உண்டு வளர்ந்தவன். திருஞானசம்பந்தப் பெருமான் உமையம்மை தந்த பொற்கிண்ணத்துப் பால் குடித்து வளர்ந்தவர். முருகன் உண்டது சரவணப் பொய்கை யிலே; சம்பந்தர் அருந்தியது பிரம தீர்த்தக் கரையிலே. குன்றுதோறாடும் குமரன் தமிழ்க் கடவுள். அவரது அவதாரமெனக் கருதப்படும் ஆளுடைய பிள்ளையார் சிவஞானம் மிக்கு, அச்சிவ ஞானத்தை அருந்தமிழ்ப் பாக்களில் வடித்துத் தந்தவர். அரக்கரை அழிக்க அவதரித்தவன் முருகன்; பரசமயம் புக்கு, நிலை தடுமாறும் மக்களைக் காக்கவும் நன்னெறியாம் சைவநெறி தழைக்கவும், வேத நெறி விளங்கவும், செந்தமிழ் தழைக்கவும் அவதரித்தவர் சம்பந்தர். ஆசுகவி, மதுரகவி, சித்திரகவி, வித்தாரகவி யெனும் நால்வகைக் கவிகளும் கருவிலே பெற்ற பிள்ளையார் மூன்றாம் ஆண்டு தொடங்கி, பதினாறாம் அகவை வரை வாரி வழங்கிய பதிகங்கள் பதினாறாயிரம் என்பர். தற்போது கிடைத்திருப்பதோ 384 பதிகங்களே. எக்கோணத்தில் யார் யார் நோக்கினும், அக்கோணத்தில் அவரவர்க்கு அப்பகுதி தெவிட்டாது தித்திக்கும் என்பதிலோர் ஐயமில்லை.

பால் ஒழுகும் வதனத்தில் அப்பச்சிளங் குழந்தை பரமனைப் பாடிப் பரவிய முதற்பாசுரம் பற்றி வியப்பதா? தன் மணம் காண வந்த அனைவருடன் ஜோதியில் கலந்தபோது பாடிய பதிகம் பற்றி வியப்பதா? எலும்பையே பெண்ணுருவாக்கி, பூம்பாவையை உயிர்ப்பித்த பாசுர மகிமை பேசுவதா? அனல் வாதம், புனல் வாதத்தில் வெற்றி கொள்ளப் பாடிய பாசுரங்களை நினைப்பதா? திருநாவுக்கரசருடன் திருவீழிமிழலையில், திருமறைக்காட்டில் நிகழ்த்திய அற்புதச் செயல் களைப் பகர்வதா? திருத்தருமபுரத்தில் 'யாழ்முறிப் படலம்' பாடித் திருநீலகண்ட யாழ்ப்பாணரைத் திகைக்கச் செய்தாரே! அதனைப் பேசுவதா? திருமருகல் திருத்தலத்தில் வணிகப்பெண் வேதனையைப் போக்கிட, பண்ணிசைத்துக் காதலனை உயிர்ப்பித்தாரே அச்செயலை எண்ணுவதா? சிந்தனையில் மூழ்கினேன். கருத்தில் உதித்த அவர் பாடிய ஐந்து அற்புதத் திருப்பதிகங்களை ஆராய முற்படுகிறேன்.

1. ஞானக் குழந்தையின் முதற்பதிகம்

சமண, பௌத்த சமயங்களால் தாக்குற்று, நிலை தடுமாறி நிற்கும் சனாதன சமயத்தை உயிர்ப்பிக்க, சிவஞான இருதயர், பகவதி

தம்பதிகள் செய்த அருந்தவப் பயனாய்ப் பன்னிரு திருப்பெயர்களை உடைய சீர்காழி என்னும் திருத்தலத்தில் திரு அவதாரம் செய்தார் திருஞானசம்பந்தர். பிள்ளையாரின் மூன்றாம் அகவையில் ஒருநாள் தந்தையார் சிவஞான இருதயர் திருக்கோயில் சென்றார்; பின் தொடர்ந்த குழந்தையை உடன் அழைத்துச் சென்று, பிரம தீர்த்தக் கரையிலே குழந்தையை இருத்தி, 'அகமர்ஷண சூக்தத்துடன்' பொய்கையில் நீராடினார்.

நீரில் மூழ்கிய தந்தையைக் காணாத அற்புதக் குழந்தை 'அம்மே! அப்பா!' என்று அழத் தொடங்க, அம்மையப்பராய்த் தோணி புரத்து இறைவன் அவருக்குக் காட்சி தந்தான். உமாதேவியார் தம்முடைய திருமுலைப்பாலை பொன் வள்ளத்திலே கறந்து சிவஞானத்தைக் குழைத்து, குழந்தையின் கண்ணீரைத் துடைத்து, அதன் கையிலே கொடுத்து ஊட்டித் திருவருள் சுரந்தார்.

சிவன், சக்தி இருவரால் ஆளப்பட்டமையால் அக்குழந்தை 'ஆளுடைய பிள்ளையார்' என்றும், சிவஞானத்தோடு சம்பந்தம் பெற்றதனால் 'திருஞானசம்பந்தர்' என்றும் திருப்பெயர் பெற்றது.

தந்தையார் நீராடி, பாலொழுக நிற்கும் பால் மணம் மாறாக் குழந்தையைப் பார்த்து, 'நீ யார் தந்த பாலை உண்டாய்?' என்று சொல்லிக் கையில் சிறிய ஒரு மாறு கொண்டோச்சப் பிள்ளையார் ஆனந்த பாஷ்பம் பொழிய, வானில் காட்சி தரும் இறைவனைப் பிஞ்சு விரலால் சுட்டிக் காட்டிப் பாடிய அற்புதப் பதிகமே முதற்பதிகம். 'தோடுடைய செவியன்' என அப்பதிகம் தொடங்குகிறது.

தம்முடைய பாடல் அம்மையப்பர் திருச்செவியில் ஏறும் பொருட்டு, முன்னர் அத்திருச்செவியையே சிறப்பித்து, வேதத்திற்கு ஆதி அக்ஷரத்தை தகரமெய்யொடு புணர்த்தித் 'தோடுடைய செவியன்' எனப் பாடிய பாங்கு, நம்மை மெய் சிலிர்க்க வைக்கிறது. மேலும் பதிகத்தின் பாடல் தோறும் 'என் உள்ளம் கவர் கள்வன்' என்று கூறித் தன்னைத் தான் இழந்தமையைச் சுட்டுகிற பாங்கும் வியக்க வைக்கிறது. உலகிற்கெல்லாம் முதற்பதி என்னும் கருத்தில், 'ஊர் பரந்த உலகின் முதலாகிய ஓர் ஊர் இது' எனப் பாடுவதோடு, ஊழிக்காலத்தும் அழியாது ஒளிரும் தன்மையைச் சுட்ட,'உலகில் பல ஊழிகள் தோன்றும் பொழுதெல்லாம் பெயர் இலங்கு பிரமாபுரம்' என அப்பதியின் தெய்வத்தன்மையைப் பாடுகிறார். 'கடல் கொள்ள மிதந்ததோர் காலம் இதுவென்னப் பெருமை பெற்ற பிரமாபுரம்' என்பதும் அவர் வாக்கு.

'கடல் முயங்குகழி சூழ்குளிர் கானலம்' என்ற தொடரால் கடற்கழிப் பகுதியாய் அவர் காலத்து அப்பகுதி விளங்கி இருக்கக்

கூடும் என்ற வரலாற்றுண்மையை அறிய முடிகிறது. 'கல்வி கேள்வி யுடைப் பெரியோர்கள் நாளும் போற்றும் திருத்தலம்' எனவும் அவ்வூர்க்குப் பெருமை சேர்க்கிறார். கடைக்காப்புச் செய்யுளால் வேதமுதல்வன் நான்முகன் பெயரால் அமைந்தது அத்திருத்தலம் என உய்த்துணரலாம்.

2. பஞ்சாக்கரப் பதிகம்

சீர்காழியில் ஞானக் குழந்தைக்கு முந்நூல் அணிவிழா நிறை வுற்றது. அருமறைவல்ல அந்தணர்கள், 'உமக்கு நான்கு வேதத்திற்கும் அதிகாரம் தந்தோம்' என்றனர். உபநயனத்திற்கு முன் வேதங்களைப் பயிலுதல் ஆகாது என்பது பொது விதி. பிள்ளையார் அந்த அந்தணர் களுக்குப் பதில் இறுக்கும் முகமாகப் பாடிய பதிகம் இது.

வேதங்களுக்கும், அனைத்துக் கலைகளுக்கும், சகல மந்தரங்களுக்கும் வித்தாக இருப்பது ஸ்ரீ பஞ்சாட்சரமே என்றார். அனைவரும் மகிழ்ந்தனர்.

'கூற்றுதைத்த ஐந்தெழுத்தை எப்பொழுதும் அகம் நெகிழ்ந்து நினையுங்கள்; செந்தழல் ஓம்பிய அந்தணர்க்கு அந்தியுடள் மந்திரம் ஐந்தெழுத்தே; புலன்களை ஒடுக்கி, ஞான விளக்கேற்றும் தன்மையர்தம் துன்பம் துடைப்பன; முக்தி தருவன; எமன் தமர் பற்றிச் செல்லுங்கால் துன்பம் துடைப்பன; மன்மதன் விடுக்கும் காமக்கணையினின்று காப்பன; தும்மல், இருமல் பற்றிய போதினும், கொடுநரகம் கிட்டிய போதினும் துணையாவன; இப்பிறவியிற் செய்த வினைகளால் அல்லலுறுங் காலத்து மட்டுமன்றி மறுமைக்கும் துணையாவன; பிறப்பை அறுத்திடும் ஆற்றல் மிக்கன; நாளும் செல்வம் தருவன; துதித்திடும் அன்பர்க்கு அண்டம் அளிப்பன; நாரணன், நான்முகன் காணாச் சேவடித் திறம், நாடாதவர்க்கு மறைந்தே ஒளிர்வன; பொய்யறியா மெய்த்தவத்தோர் தெளிந்து அறிவன; நீறணிவார் வினைகளை மாய்த்திடும் அத்திரம் ஆவன' என்றெல்லாம் பஞ்சாக்கர மகிமை பாடித் துதித்துள்ளார் ஞானச் செல்வர்.

3. நமச்சிவாயத் திருப்பதிகம்

திருஞானசம்பந்தர்க்கு அகவை பதினாறு; அவதார நோக்கம் முடிந்தது; சைவமும் தமிழும் தழைத்தது; வேத நெறி புத்துயிர் பெற்றது; இந்நிலையில் பெற்றவரும் மற்றவரும் அவரை இல்வாழ்க்கையில் ஈடுபடுத்த விழைகின்றனர். முதலில் மறுத்த பிள்ளையார் தெய்வத்தின் திருவருள் சிந்தித்துத் திருமணத்திற்கு இசைந்தார். திருமணம் இனிதே நிறைவுற, பிள்ளையாரும், கரம்பிடித்த மங்கை நல்லாளும் பின் செல்ல, மணம் காண வந்த அனைவருடனும் திருநல்லூர்ப் பெருமணம் என்னும் சிவாலயம் செல்கிறார். இது இன்று ஆச்சாள்புரம் என்று அழைக்கப் படுகிறது. திருஞானசம்பந்தர் திருமணம் நடைபெற்றபோது அம்பிகை

இங்கே உள்ள ஸ்ரீ பஞ்சாக்கர தீர்த்தக் கரையில் நின்று, அடியார்களுக்கு வெண்ணீறளித்து அருளினமையின் 'திருவெண்ணீற்றுமை' என்னும் திருப்பெயர் பெற்றார். ஆச்சாள் (அம்பிகை) திருமணத்திற்கு வந்த அனைவருக்கும் வெண்ணீறளித்துச் சிவச்சோதியுள் கலக்கச் செய்ததால் 'ஆச்சாள்புரம்' என்று அவ்வூர் வழங்கலாயிற்று. இறைவன் திருநாமம் சிவலோகத் தியாகர்.

திருநீலநக்கர், திருநீலகண்ட பெரும்பாணர், முருக நாயனார், சிவபாத இருதயர், நம்பாண்டார் நம்பி மற்றும் திருத்தொண்டர்களும், அறுவகைச் சமயத்தோடும், பல்பணியில் ஈடுபட்டு உழைத்த உத்தமர் களும், நல்வினைப் பயனாய் மணங்காண வந்த அனைவருமே ஆலயம் செல்ல, அருட்பெருஞ்ஜோதி ஒன்று அவர்கள் அனைவரையும் தன்னுள் விழுங்கி சிவசாயுஜ்யம் தந்தது. திருஞானசம்பந்தர் அவதார நோக்கம் பூர்த்தி செய்து அனைவருடனும் இரண்டறக் கலக்குங்கால் பாடிய அவரது இறுதிப் பதிகம் இது.

"காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி
ஓதுவார் தமை நன்னெறிக்(கு) உய்ப்பது
வேதம் நான்கினும் மெய்ப்பொருள் ஆவது
நாதன் நாமம் நமச்சி வாயவே".

'நமச்சிவாய' எனும் ஐந்தெழுத்து நம்பியவர்க்குத் தித்திக்கும் தேன்போன்றது; உலகம் முழுவதற்கும் செம்பொனார் திலக மொத்தது; ஆர்வம் பொங்க, நினைந்து நினைந்து, அக்க மாலை கொண்டு எண்ணுவார் தமை வானவராய் ஒளிர்விப்பது; கால தூதர்க்கும் அச்சம் விளைப்பது; கொலை புரிபவரேயாயினும், குணங்கெட்டவரேயாயினும் உளந்திரும்பிப் பகர்வார் எனின் பாவம் அறுப்பது; தீவினை களைவது; செல்வம் அளிப்பது; நரகமே விளைக்கும் பாவமே புரிந்தவராயினும் நம்பிக்கை யோடு ஐந்தெழுத்தை ஓதிட அச்சங்களைவது; பரசமயத்தார் அரிய ஒண்ணா ஆற்றல் கொண்டது; கைலையை அசைத்த இராவணர்க்கு திருவருள் புரிந்தது. ஐந்தெழுத்தின் சிறப்பினை உரைத்துக் கடைக்காப்புச் செய்யுளில் ஞானசம்பந்தர் கூறுகிறார். இத்தகு சிறப்புடைய திருப்பதிகத்தை நாளும் பகர்வார் பந்தபாசம் அறுத்து சிவசாயுஜ்யம் பெறுவர்.

4. திருநீற்றுப் பதிகம்

பாண்டிமாதேவி மங்கையர்க்கரசியார், அமைச்சர் குலச்சிறையார் இருவரது அழைப்பின் பேரில் மதுரை வந்தடைந்தார் திருஞான சம்பந்தர். அவர் தங்கி இருந்த மடத்திற்குச் சமணர் தீ வைக்க, 'பையவே சென்று பாண்டியற்காகவே' என்று அதனைத் திசைமாற்றுகிறார்.

மக்கள் செய்த பாவம் மன்னவனைச் சேரும் என்பது நியதி. வெப்பு நோயால் தவிக்கிறான் பாண்டியன் நெடுமாறன். சமணர் விளைத்த தீ பாண்டியன் உடலிற் பரவியது. அமைச்சர் குலச்சிறையாரும், பாண்டிமா தேவியும் திருஞானசம்பந்தர் வந்தாலல்லது இந்நோய் தீராது என்றனர். அவர் வரின் வெப்பு நோயும் தீரும்; பவப் பிணியும் மாயும் என்றனர். சம்பந்தர் ஆலவாய்ச் சொக்கன் ஆலயம் சென்று இறைவன் திருஉளக் குறிப்பறிந்து பாண்டியன் அரண்மனை வருகிறார்.

அவர் வரவு கேட்டபோதே பாண்டியன் சோர்வு பறக்கிறது; தெம்பு பிறக்கிறது. சமணர்களும், ஆளுடைய பிள்ளையாரும் மன்னவன் நோய் தீர்க்க முற்பட்டனர். வலப்பக்கம் பிள்ளையாரும், இடப்பக்கம் சமணர் களும் வெப்பகற்ற முடிவாயிற்று. முதலில் சமணர்கள் மயிற்பீலி கொண்டு அருக நாமத்தை உச்சரித்தபடி இடப்பக்கம் தடவ, வெப்பு நோய் முன்னினும் அதிகமாகக் கொதித்தெழுந்தது. ஞானக் குழந்தையை வேதனை தாளாமல் வேந்தன் நோக்குகிறான். ஆலவாய்ச் சொக்கன் திருவருள் நினைத்து, 'மந்திரமாவது நீறு' எனத் தொடங்கும் திருநீற்றுப் பதிகம் பாடியபடி நீறுகொண்டு திருக்கரத்தால் நீவி விட வலப்பக்கம் முற்றும் குளிர்ந்தது. இடப்பக்கமோ மேலும் வெப்பு அதிகரித்தது. மயிற்பீலிகளும் எரிந்து கருகின. வெப்பம் தாளாது சமணர்களும் ஒதுங்கினர்; சமணர் தோற்றனர். சம்பந்தரே இடப்பக்க நோயையும் போக்கியருள வேண்டும் என்று வேண்டினான் மன்னன். திருநீற்றால் அதுவும் குளிர்ந்தது. அமைச்சர் குலச்சிறையாரும், அரசி மங்கையர்க்கரசியும் மனம் மகிழ்ந்தனர். மன்னனும் மனம் மாறினான். கூன்பாண்டியன் நின்றசீர் நெடுமாறன் ஆயினன்.

இவ்வாறு மன்னவனை ஆட்கொண்டு பாண்டி நாட்டிற்கு வாழ்வு தந்த திருநீற்றின் மகிமையைப் பேசுகிறது திருநீற்றுப் பதிகம்.

'மந்திர மாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தர மாவது நீறு துதிக்கப் படுவது நீறு
தந்திர மாவது நீறு சமயத்தில் உள்ளது நீறு
செந்துவர் வாயுமை பங்கன் திருஆல வாயான் திருநீறே!'

எனத் தொடங்கி திருநீற்றின் பெருமைகளைப் பதிகம் முழுவதும் அழகுற வடிக்கிறார்.

வேதத்தில் உள்ளது; ஓதத் தகுவது; துயரம் தவிர்ப்பது; அறிவை அளிப்பது; புன்மை களைவது; உண்மையில் உள்ளது; முக்தி தருவது; முனிவர் அணிவது; சத்தியமாவது தக்கோர் புகழ்வது; புத்தி தருவது; பரவ இனியது; காண இனியது; கவினைத் தருவது; பெருமை சேர்ப்பது; மாணம் தகைவது; மதியைத் தருவது.

பூச இனியது; புண்ணியம் தருவது; பேச இனியது; ஆசை கெடுப்பது; அந்தமதாவது; நாடு புகழ்வது; செல்வமாவது; அவலம் அறுப்பது; வருத்தம் தணிப்பது; வானம் அளிப்பது; புண்ணியர் அணிவது; பொருத்தமதாவது; முப்புரம் எரித்தது; இருமைக்கும் உள்ளது; பயிலப் படுவது; பாக்கியமாவது; துயிலைத் தடுப்பது; தூய்மை தருவது; இராவணன் மேலது; எண்ணத் தகுவது; பாவம் அறுப்பது; தத்துவம் ஆவது; மாலொடு அயன் அறியா வண்ணமுடையது; விண்ணவர் திருமேனிக்கு நல்வொளி தருவது; உடம்பு இடர் தீர்ப்பது; இன்பம் அளிப்பது; நினைக்க இனியது; ஆற்றல் மிக்கது; எட்டுத் திசையும் ஏத்தும் குணத்தது, உலகவர் பணிந்து போற்றும் பாங்கது.

பாண்டியன் தீப்பிணி தீர ஞானக்குழந்தை சாற்றிய பாடல்களின் கருத்திது. திருநீற்றுச் சிறப்பினை புராணங்களிலும், உபநிஷதங்களிலும் பரக்கக் காணலாம். திருநீற்றின் சிறப்பினை உணர்ந்து, திருநீறணிவோர் சிவனேயாவார். திருஞானசம்பந்தர் திருவாய் மலர்ந்த திருநீற்றுப் பதிகம் ஓர் அற்புதப் பதிகம்.

5. கோளறு பதிகம்

ஞானக் குழந்தையும், திருநாவுக்கரசரும் திருமறைக்காட்டில் இருக்கும் நேரம். பாண்டியன் நெடுமாறன் சமணர் வலையில் வீழ்ந்து, நிலை தடுமாறிய நிலையில் அவனைத் திருத்தவும், சைவ சமயத்திற்குப் புத்துயிர் ஊட்டவும் பாண்டிமாதேவி மங்கையர்க்கரசியும், அமைச்சர் குலச்சிறையாரும் திருவாலவாய் திருநகருக்கு வருகை தர ஞான சம்பந்தருக்கு அழைப்பு விடுத்தனர்; திருஞானசம்பந்தர் அவர்களுடைய அழைப்பினை ஏற்றுப் பாண்டி நன்னாடு செல்ல ஆயத்தமானார். அருகிருந்த அப்பரடிகள் சமணர்களின் வஞ்சனைகளை எடுத்துக் கூறி, கோள் நிலை சரியில்லை, தாங்கள் செல்ல உடன்படுவது சரியன்று என்றுரைத்தார். திருநாவுக்கரசருக்கு பதில் அளிக்கும் வகையில் ஞானக் குழந்தை பாடிப் பரவிய பதிகம் இது.

இப்பதிகத்தை நாள்தோறும் ஒவ்வொருவரும் பாராயணம் செய்து வருவாரேல் ஒன்பான் கோள்களும் தீமைதர இயலாது; ஆண்டு முழுதும் நன்றாகும்; திருமகள், கலைமகள், நிலமகள் திருவருள் கிட்டும்; யம வாதனை, கொடு நோய்கள் நெருங்க வொண்ணாது; அரக்கரால், பூதங்களால், இடியால், இயற்கையால் இன்னல் உறாது; விலங்குகளால், பாம்புகளால் தொல்லை வராது; வாத, பித்த, கப நோய்கள் நலியாது; எத்தகு துன்பமும் அவரை அடையாது; நான்முகன், திருமால் முதலான தேவர்களின் திருவருள் சுரக்கும்; திருநீற்று மகிமையால் வேண்டாதாரை அழித்திடும் ஆற்றல் கிட்டும்.

இவ்வாறு அடியார் பெறும் நலன்களை ஆணையிட்டுக் கூறுகிறார் ஆளுடைய பிள்ளையார்.

"வேயுறு தோளி பங்கன் விடமுண்ட கண்டன்
மிக நல்ல வீணை தடவி
மாசறு திங்கள் கங்கை முடிமேல் அணிந்து என்
உளமே புகுந்த அதனால்
ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன் வெள்ளி
சனி பாம்பிரண்டு முடனே
ஆசறு நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே".

பால்மணம் மாறாப் பச்சிளங்குழந்தை தெய்வத்தால் ஆட்கொள்ளப் பட்டுப் பாடிய முதற்பதிகம் தெய்வீக மணம் கமழ்வது. பஞ்சாக்கரப் பதிகமும், நமச்சிவாயத் திருப்பதிகமும் அழியாத வீட்டின்பத்தை யாவரும் எளிதில் பெற வழி வகுப்பன. திருநீற்றுப் பதிகம் இம்மை, மறுமைப் பயன்களை வாரி வழங்குவது. கோளறு பதிகம் பெரும்பாலும் இம்மைப் பயன்களை வெகு எளிதில் பெற்றிட வழி காட்டும் திருப்பதிகம் என்று கூறி நிறைவு செய்கிறேன்.

9. ஞானக் கடல்

க. இந்திராணி, கோவை.

இயற்கை நலம் மனித உள்ளத்தை ஈர்க்கும் தன்மை உடையது. அற்புதமான இயற்கைக் காட்சிகள் நம் கவலைகளை மறக்கச் செய்து உள்ளத்தைத் தம் வயமாக்கி உலகையே மறக்கச் செய்யும் மட்டில்லா ஆற்றல் படைத்தது. ஆகவே இயற்கையின் இயக்கமே இறைவனின் இயக்கம் எனக் கூறுவோரும் உண்டு. இயற்கையில் இறையொளியையே கண்டு வழிபடுவது தொன்றுதொட்டு வரும் ஒரு மரபாகும். எனவே, இயற்கை நலன்களை சங்க காலம் தொட்டு நம் புலவர்கள் அவர் களுடைய பாடல்களில் புகுத்திப் பாடுகின்றனர். நம் தண்டமிழ் நாட்டின் வளத்தையும், வனப்பையும் நாம் அறிந்து கொள்ள உதவுவது நம் சங்க இலக்கியங்களேயாகும். ஆனால் களப்பிரர் காலம் தொட்டு நம் தமிழகத்தில் இயற்கை வருணனை சிறிது சிறிதாக அருகிவிட்டது. இந்நிலையில் ஞானச்சிறு குழவியான சம்பந்தர் பெருமான் இலக்கிய உலகில் மறுமலர்ச்சியாக இயற்கை வருணனையைப் புகுத்துகிறார்.

இயற்கைக் காட்சிகளை வருணனை செய்வதில் இப்பெருந்தகையார் முதன்மையானவர் என்பது நாம் அனைவரும் அறிந்த ஒன்று. வாழிடங் களாகிய குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் ஆகிய நானிலங்களின் ஒழுகலாற்றையும், திணைச் சிறப்பையும் பாடுவதில் சம்பந்தர் வல்லவராகத் திகழ்கிறார். ஒவ்வொரு திணையில் அமைந்த பாடல்களையும் பாடுங்கால் அவ்வத்திணை மரபின் உச்சிக்கே சென்று விடுகிறார். இவர் தம் வருணனைப் பகுதியில் நெய்தல் நில வருணனையின் வனப்பை மட்டும் காண்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

நெய்தல் நிலம் கடலும் கடல் சார்ந்த பகுதியாகும். இந்நெய்தல் நிலத்தை ஞானசம்பந்தர் பெருமான் நவிலும் தோறும் கடல் காற்று நம் மேனியைத் தொட்டலைக்கும். அலை முழக்கம் நம் செவிகளில் அலை மோதும். நீலக்கடலின் கோலத்திரைகள் நம் நெஞ்சைக் கொள்ளை கொள்ளும். பரந்து விரிந்த பனிக்கடலின் கரையில் பரமன் பதிகொண்ட திருத்தலங்கள் பல உள்ளன. இக்கடற்கரைத் தலங்களில் பாடல்கள் புனையும்போது கடலின் இயற்கையையும் அழகாகப் பாடுகிறார்.

நிலம்

சீகாழிப் பதிகத்தில் சீகாழியை ஆரவாரம் மிகுந்த அலைகளையுடைய கடலில் செல்லும் மரக்கலங்களையும், தாழை மரங்கள் நிறைந்த வயல்கள் சூழ்ந்த ஊராகச் சீகாழியைக் காட்டுகிறார்.

மொண்ட லம்பிய வார்தி ரைக்கடன் மோதி மீதெறிசங்க வங்கமுங்
கண்டலம் புடைசூழ் வயல்சேர் கலிக்காழி
வண்டலம்பிய கொன்றை யானடி வாழ்த்தி யேத்திய மாந்தர்தம் வினை
விண்ட லங்கெளிதா மது நல் விதியாமே. (2-49-2)

உயிரினங்கள்

இறைவனின் படைப்பில் மிகவும் விந்தையானது கடல். கடல்வாழ் உயிரினங்களும் ஏனைய உயிரினங்களை விடச் சற்று வித்தியாசமானவை, விநோதமானவையும் கூட. எண்ணிலடங்காத விந்தைகளைத் தன்னகத்தே கொண்ட கடலைப் பற்றிய ஆராய்ச்சியைப் பன்னெடுங்காலமாக மனிதன் மேற்கொண்டுள்ளான். Marine Science, Fishery Science, Aqua-culture போன்ற பலப்பல பெயர்களில் ஆராய்ச்சிகளை நடத்துகிறான். ஆனாலும் கடல் ஓர் தனி உலகம். விந்தையான விநோதமான உலகம். திருஞானசம்பந்தர் ஆழ்கடலில் விளையும் முத்துகள், மணிகள், துள்ளி ஓடும் மீன்கள் போன்ற பலவற்றைச் சீகாழி பதிகத்தில் பல பாடல்களில் குறிப்பிடுகிறார்.

மலிகடுந்திரை மேனி மிர்ந்தெதிர் வந்து வந்தொளிர் நித்திலம்விழக்
கலிக டிந்தகையார் மருவுங் கலிக்காழி
வலிய காலனை வீட்டி மாணித னின்னு யிரளித் தானை வாழ்ந்திட
மெலியுந் தீவினைநோ யவைமேவுவார் வீடே. (2-49-5)

இப்பாடலில் மிக வேகமாக வீசும் கடலின் அலைகளின் மேல் வெண் முத்துக்கள், எதிர் வந்து ஒளிரும் எனக் குறிப்பிடுகிறார். ஆழ்கடல் முத்துக்களை அள்ளிவரும் அளவிற்கு அலைகள் அளவில் பெரியவை என்பதை உணர்த்தவே மலிகடுந்திரை எனக் குறிப்பிடுகிறார்.

நலங்கொண் முத்து மணியு மணியுந் திரளோதக்
கலங்க டன்னிற் கொண்டு கரைசேர் கலிக்காழி
வலங்கொண் மழுவொன் றுடையாய் விடையா யெனவேத்தி
அலங்கல் சூட்ட வல்லார்க் கடையா வருநோயே (2-59-1)

இவ்வரிகளில் மிக்க அழகுடைய முத்துக்களையும், மணிகளையும், அலைகளை உடைய கடல் சீகாழிப் பதியில் கொண்டு சேர்க்கின்றன. மரக்கலங்கள் இடையறாது உலவும் ஓசையை உடைய கடல் என அக்காலத்தைய கடலின் வளமையைக் குறிப்பிடுகிறார்.

ஊரா ருவரிச் சங்கம் வங்கங் கொடுவந்து
காரா ரோதங் கரைமே லுயர்த்துங் கலிக்காழி
நீரார் சடையாய் நெற்றிக் கண்ணா வென்றென்று
பேரா யிரமும் பிதற்றத் தீரும் பிணிதானே. (2-59-2)

மனைக்கே யேற வளஞ்செய் பவளம் வளர்முத்தங்
கனைக்குங் கடலு ளோத மேறுங் கலிக்காழிப்
பனைக்கைப் பகட்டீ ருரியாய் பெரியா யெனப் பேணி
நினைக்க வல்ல வடியார் நெஞ்சி னல்லாரே. (2-59-4)

என்ற பாடல்களில் மேகம் உண்ணும் கடல் அலைகள் சங்குகளைக் கரைகளில் சேர்ப்பிப்பதால் கடல்கரையே உயரமாகக் காட்சியளிக்கிறது என்பதையும், பரதவர் வீடுகளில் பவளங்களையும் முத்துக்களையும் அள்ளிவரும் அலைகளின் ஓசையை உடைய கடல் என்பதைச் சித்தரிக்கிறார்.

மலையிலங்குஞ் சிலையாக வேகம்மதின் மூன்றெரித்
தலையிலங்கும் புனற்கங்கை வைத்தவடி கட்கிடம்
இலையிலங்கும் மலர்க்கைதை கண்டல்வெறி விரவலாற்
கலையிலங்குங் கணத்தினம் பொலியுங்கடற் காழியே.
(2-113-7)

என்னும் பாடல் வாயிலாக நீர்த் தாவரங்களான தாழை, நீர்முள்ளி ஆகியவற்றைக் குறிப்பிடுகிறார்.

மாலு மாமலரானு மருவிநின் நிகலிய மனத்தாற்
பாலுங் காண்பரி தாய பரஞ்சுடர் தன்பதி யாகுஞ்
சேலும் வாளையுங் கயலுஞ் செறிந்து தன் கிளையோடு மேய
ஆலுஞ் சாலிநற் கதிர்க ளணிவயற் காழிநன் னகரே. (2-96-9)

இப்பாடலில் சேல், வாளை, கயல் போன்ற பல்வேறு வகை மீன்கள் தன் கிளைகளுடன் துள்ளி விளையாடுவதில் உள்ள அழகை வருணிக்கிறார்.

பொடியிடிலங்குந் திருமேனி யாளர் புலியதளினர்
அடியிலங்குங் கழலார்க்க வாடும் மடிகள்ளிடம்
இடியிலங்குங் குரலோத மல்கவ் வெறிவார்திரைக்
கடியிலங்கும் புனன்முத தலைக்குங்கடற் காழியே (2-113-2)

இப்பாடலில் திருநீறு அணிந்த எம்பெருமானைச் சம்பந்தர் சீகாழிப் பதியில் வணங்கும் பொழுது கடல் அலைஒலி இடியொலியைப்போல் கேட்பதாகக் கூறுகிறார். பேரலைகளின் பேரொலியை இடி ஓசையுடன் ஒப்பிடுகிறார். இவ்வொப்புமை ஊழிக் காலத்தே ஏற்படும் கடற்கோள் களை நமக்கு நினைவூட்டுகிறது.

நெய்தல் நிலமாகிய கடல் நில வருணனைகளைச் சீகாழிப் பதிகங்களில் உள்ள பாடல்களில் திருஞானசம்பந்தர் அமைத்துள்ளதை

நாம் கண்டோம். இறைப்பாடல்களில் காணப்படும் இயற்கை வருணனைகள் நம் சிந்தனையைப் பலவகைளில் தூண்டுகின்றன.

1. திருத்தலங்களின் இயற்கை அழகை வருணிப்பது தலச்சிறப்பை உணர்த்துவதோடு ஞானசம்பந்தர் உலகப் பற்றுக்களில் மூழ்கிக் கிடக்கும் நம்மை அழும் குழந்தையை அன்புடன் அழைக்கும் தாயைப் போல் பக்தி உலகிற்குப் பரிவுடன் அழைத்துச் செல்லும் உத்தியைக் காணலாம்.

2. இயற்கை எழில் சூழ்ந்த இடத்தில் தான் இறைவன் உறையும் திருக்கோயில்கள் உள்ளதைக் கண்கூடாகக் காணலாம். இயற்கையின் அழகில் இறைவன் இருக்கிறான் என்ற உண்மையைப் புலப் படுத்தவே இந்த வருணனை எனலாம். இயற்கையில் இறைவனை மனிதன் உணர்வானாயின் இயற்கைக்கு அரணாக அவன் நிற்பானே ஒழிய இயற்கையை அழிக்கும் இழிவான செயலில் அவன் மனம் ஒரு போதும் ஈடுபடாது என்பதை உணர்த்தவும் இயற்கை வருணனை அமைகிறது எனலாம்.

3. அனைத்திற்கும் மேலாக இயற்கை அழகைக் கண்டு மகிழ்தல்போல இறை அழகு மகிழ்தற்குரியது என்பதையும் இயற்கை ஆற்றல் போற்றப்படுதலுக்கு உரியது போன்று இறை ஆற்றலும் போற்று தலுக்குரியது என்பதையும் இயற்கை சில சமயங்களில் நம்மை மகிழ வைத்தும், சிரிக்க வைத்தும் தன் அழகைக் காட்டுவதோடு சில சமயம் அச்சுறுத்தியும், சீற்றம் கொண்டும் தன் ஆற்றலையும், அழகையும் காட்டுவதுபோல இறைவன் நல்லோரை மகிழ்வோடு காக்கவும் தீயோரைக் கோரரூப வடிவெடுத்து அழிக்கவும் செய்வான் என்பதை உணர்த்தும் பொருட்டே திருஞானசம்பந்தர் தம்முடைய பாடல்களில் முதலிரண்டு வரிகளை இயற்கைக்கு அர்ப்பணித்துள்ளார்.

4. இயற்கையின் பேராற்றல் முற்றும் உணர முடியாததைப் போன்று இறைவனின் பேராற்றலும் முற்றும் உணர முடியாதது என்பதையும் இயற்கை ஆற்றல் மனித ஆற்றலைவிட விஞ்சி நிற்பதைப் போல் இறை ஆற்றல் மனித ஆற்றலை விஞ்சியதே என உணர்த்தவும் திருஞானசம்பந்தர் இயற்கைக்கு முக்கியத்துவம் அளிக்கிறார் எனலாம்.

5. இறைவனின் எண்குணங்களில் முடிவில்லாத பேரழகு, முடிவில்லாத பேராற்றல், முடிவில்லாத பேரின்பம், முடிவில்லாத பேரறிவு ஆகிய நான்கு குணங்களும் இயற்கையிடம் பொருந்தி நிற்பதால் இயற்கையும் இறைவனும் ஒன்றே என்பதை இவ்வருணனைகளின் மூலம் நிறுவலாம்.

இயற்கையின் எழிலில் இறைவனையே காட்டும் திருஞானசம்பந்தர் ஓர் ஞானக்கடல். ஆம் ஞானக் கடலே!

10. ஆளுடைப்பிள்ளையும் அரசும்

வெ. இராசேசுவரி, கோவை.

அருளனுபவம் பெற்ற அருளாளர்கள் எல்லாச் சமயங்களிலும் அவ்வக்காலங்களில் வாழ்ந்து பல அருளற்புத நிகழ்ச்சிகளை நிகழ்த்தி யுள்ளனர். அவர்கள் திருவருளின் பெருமையை விளக்கியும், திருவருள் பற்றிய வரலாற்றை உருவாக்கியும் உள்ளனர். அத்தகைய நிலையில் சைவ சமயத்தின் சிறப்பினை வளர்த்துக் காத்த பெருமை திருஞான சம்பந்தருக்கும், திருநாவுக்கரசருக்கும் உரியது. சமகாலத்தில் வாழ்ந்து அருட்பணியாற்றியவர்கள் சிவஞானக்கன்றும் தாண்டக வேந்தரும் ஆவர். சைவ நன்னெறியை மறுமலர்ச்சி இயக்கமாக மாற்றி அதற்கு இயக்கவடிவம் கொடுத்தும், செயல்படுத்திக் காட்டியும் தொண்டாற்றிய பெருந்தொண்டர் திருஞானசம்பந்தர் ஆவார். அந்நெறியிலே நின்ற பெருமை திருநாவுக்கரசருக்கு உண்டு. இவ்விருவரையும் இணைத்துப் பார்க்கும் நோக்கில் கட்டுரை அமைகிறது.

இருவரும் வாழ்ந்த கால ஒற்றுமை

சைவ சமயக்குரவர்கள் நால்வருள் திருஞானசம்பந்தரும், திருநாவுக்கரசரும் ஒரே கால எல்லையில் வாழ்ந்த வரலாற்றுப் பின்னணியை உள்ளிட்ட அருட்குரவராவர். வேதநெறி தழைத்தோங்கவும், மிகு சைவத் துறை விளங்கவும், பூத பரம்பரை பொலியவும், புனிதவாய் மலர்ந்து அழுத சீதவளவயற் புகலித் திருஞானசம்பந்தர் வரலாற்றைத் தெய்வச் சேக்கிழார் தாம் பாடிய திருத்தொண்டர் புராணத்துள் விரிவாக விளக்கி அருளுகின்றார். திருத்தொண்டின் நெறிவாழ வரும் ஞானத்தவ முனிவர் வாகீசராகிய திருநாவுக்கரசரின் தொண்டு நெறியினையும், வழிபாட்டு நெறியினையும் மிகத் தெளிவாக விளக்கியுள்ளார் சேக்கிழார். திருநாவுக்கரசர் புராணத்தில் திருஞானசம்பந்தரோடு இணைந்து ஆற்றிய தொண்டு சேக்கிழாரால் விளக்கப்பட்டுள்ளமை மூலம் கால ஒற்றுமை நன்கு விளங்குகிறது. நாவரசரின் சரித நிகழ்ச்சிகள் பிள்ளையார் சரித நிகழ்ச்சியோடு பன்முறையும் ஆங்காங்கு இயைந்து வருவன. இருவரும் தமிழகத்தில் தோன்றி தமிழகம் முழுவதும் சென்று மக்கள் மனதில் தெய்வக் கொள்கையை நிலைநாட்டினர்.

ஞானக்கன்றும் அரசும் சந்திப்பு

திருஞானசம்பந்தர் காழிப் பெருமான் திருவருள் பெற்ற செய்தியினை தில்லைத்தல வழிபாட்டுக்கு வந்த திருநாவுக்கரசர் கேள்விப்படுகிறார். ஆளுடையப்பிள்ளையாரைக் காணவேண்டும் என்ற ஆர்வத்தால் சீர்காழியை நோக்கிச் செல்லுகிறார். சைவத்திலிருந்து சமணசமயஞ் சார்ந்து பின்னர் திருவருளினால் சைவம் சார்ந்து சமணர்கள் இழைத்த கொடுமைகளையெல்லாம் நல்லநாமம் நவிற்றுதல் என்ற ஒன்றினாலேயே வென்று முன்னேறிய திருநாவுக்கரசர் தம்மைக் காணுவதற்காக வந்து கொண்டிருக்கிறார் என்ற செய்தியை ஞானசம்பந்தர் அறிகிறார். திருத்தொண்டர் எவ்வாறு இருப்பார் என்று எண்ணிய நிலையில் ஞானசம்பந்தருக்கு அகத்தோற்றம் உருக்கொண்டு அது அனுபவப் பொருளாக அமைந்து உடம்பின் புறஎல்லை வரையில் வந்து நின்று அது இன்ப அனுபவத்தை விளைத்துக் கொண்டிருக்கிறது. அவர்தம் உள்ளத்துத்தோன்றி நின்ற வடிவம் திருத்தொண்டர் திருவடிவம்.

''தொழுதணைவுற் றுண்ட வரன்புருகத் தொண்டர்குழாத்
திடையே சென்று
பழுதில் பெருங்காதலுட ணடிபணியப் பணிந்தவர்தங் கரங்கள் பற்றி
எழுதரிய மலர்க்கையா லெடுத்திறைஞ்சி விடையின்மேல்
வருவார்தம்மை
யழுதழைத்துக் கொண்டர் தாமப்பரேயெனவரு மடியே னென்றார்''

என்று பாடியுள்ளார். இருவரும் சந்தித்த திறத்தை அடியார்க்கும் அடியேன் என்கின்ற நிலை புலப்படும் தன்மையில் விளக்கியுள்ளார். மேலும்,

''அருட்பெருகு தனிக்கடலும் உலகெல்லா
மன்புசெறி கடலுமாமெனவு மோங்கும்
பொருட்சமய முதற்சைவ நெறிதான் பெற்ற
புண்ணியக் கண்ணிரண் டெனவும்''

எனவரும் பாடலில் அருட்கடல், அன்புக்கடல், புண்ணியக் கண்ணிரண்டு என இருவரின் சந்திப்பின் திறத்தை உவமித்துப் பாடுகிறார். இத்தகைய சந்திப்புகள் மூன்று முறை நிகழ்கின்றன. அவை தில்லை, திருவீழிமிழலை, திருமறைக்காடு என முறையே தலவழிபாட்டு நெறியில் அமைகின்றன.

திருநாவுக்கரசரின் சந்திப்பில்
திருஞானசம்பந்தரின் புதிய அனுபவம்

திருஞானசம்பந்தரின் அகத்தே அமைந்த தோற்றம் திருத்தொண்டர் தோற்றம். அதே தோற்றத்தின் புறத்தோற்றமே நாவுக்கரசர். சேக்கிழார் அகத்தோற்றமாக அமைந்த திருத்தொண்டர் திருவுரு எவ்வாறு இருக்கும் என்பதை,

"சிந்தை யிடைஅறா அன்பும் திருமேனி தன்னில் அசைவும்
கந்தை மிகையாம் கருத்தும் கைஉழவாரப் படையும்
வந்திழி கண்ணீர் மழையும் வடிவிற்பொலி திருநீறும்
அந்தமிலாத் திருவேடத்து அரசும் எதிர்வந்தனைய"

என்ற பாடலில் விளக்குகிறார். இதுவே திருத்தொண்டர் திருவுருவ வரைபடமாகும்.

ஞானசம்பந்தர் திருத்தொண்டரின் தோற்றம் இது என்று அமைத்து வந்த அவ்வளவிலேயும் அதற்மேலும் திருநாவுக்கரசர் இருந்தார், திருஞானசம்பந்தரின் அகத்தே தோன்றிய வடிவம் சிவனாகவே இருந்தது. திருநாவுக்கரசரை அங்குக் காணவில்லை. அகத்தே தோன்றிய திருத்தொண்டர் வடிவம் புறத்தே தோன்றுவதோடு அது புறத்தே சிவன் எனவும் தோன்றியது. அதாவது திருத்தொண்டரும் சிவனும் ஒன்று என்ற இணைப்பையே விளக்கும் நிலையில் திருநாவுக்கரசரின் தோற்றம் அமைந்தது.

"மாலற நேயமும் மலிந்தவர் வேடமும்
ஆலயந் தானும் அரனெனத் தொழுமே"

என்று சிவஞானபோதத்தில் கூறப்படும் அடியாரிலக்கணத்திற்கு ஏற்ப அமைந்த திறம் காணமுடிகிறது. திருஞானசம்பந்தர் காணும் உருவம் திருத்தொண்டர் உருவம். அவ்வுருவம் வெளிப்படுத்தும் கருத்து சிவன் என்பதாகும். இந்நிலையில் ஒரு புதிய காட்சி அனுபவம் பெறுகிறார் ஞானசம்பந்தர்.

இருவரின் குறிக்கோள்

சமயத் தொண்டாற்றும் நெறியில் இருவரின் குறிக்கோளும் ஒன்றாகவே இருந்தது. திருஞானசம்பந்தர் எல்லாப் பொருள்களிலும் சிவம் பெருகவும், அருளியல் அனுபவம் மலரவும் திட்டமிட்டுத் திருத்தொண்டு நெறியை வளர்க்கும் பணியை மேற்கொண்டு இயங்கியும், இயக்கியும் வாழ்ந்த பெருந்தகையாவார். தம் காலத்திற்குப் பிறகும் உலகில் வாழும் மரபினருக்கு அருளியல் அனுபவம் விளைவிப்பதற் குரிய வழிமுறைகளை ஆய்ந்து செயற்படுத்திச் சென்றவர். எந்தவொரு செயலையும் குறிக்கோளுடன் அமைத்துச் செய்தவர். ஞானசம்பந்தரும், நாவுக்கரசரும் இணைந்து நின்று ஆற்றிய திருவீழிமிழலைச் செயல், திருமறைக்காட்டுச் செயல் முதலானவை ஒரே குறிக்கோளை அடிப்படையாகக் கொண்டவையாகும். பிற சமயத்துறை கடிதல் என்ற நிலையிலும் இருவரின் அடிப்படைக் கருத்துக்களும் ஒத்தனவாக, குறிக்கோள்களோடு செய்யப்பட்டவைகள் ஆகும். இந்நிலையில் சைவ சமயம் தலைத்தோங்க வேண்டும் என்பதில் இருவரும் ஒத்த கருத்துடையவர்களே ஆவர்.

சமுதாயத் தொண்டு

இருவருடைய வரலாற்றிலுமே பல சமுதாயத் தொண்டுகளைக் குறிப்பிடலாம். அதிலும் உலக உயிர்கள் அனைத்தும் சிவபரம் பொருளைக் கண்டு வழிபடும் பேறு பெறவேண்டும் என்ற நிலையில் செய்த செயல்கள் இருவரிடமும் காணமுடிகின்றது. சராசரங்களில் எல்லாம் முன்னமே சென்று கலந்திருக்கும் சிவபரம்பொருளை வளர வைத்து வெளிப்பட்டுப் பெருகி விளங்குமாறு செய்வது ஞானசம்பந்தர் தொண்டு. உயிர்ப்பொருள், உயிரல் பொருள் ஆகிய எல்லாவற்றிலும் சிவம் பெருகி நிற்கவும் அவைகள் பெருகிநிற்கும் சிவபரம்பொருளை அணைந்து துயக்க இயலாதவைகளாக இருந்தன. அவைகள் தம்மிடம் பெருகி விளங்கி நிற்கும் சிவபரம் பொருளைத் துய்க்க இயலாதவாறு அங்கே அமைந்துள்ள தடைகளை அகற்றுவது திருநாவுக்கரசரின் பணியாகும். அது திருமறைக்காட்டில் நடைபெறுகிறது. இதனைக் கற்பனைக் களஞ்சியம் சிவப்பிரகாச அடிகள் தம் நால்வர் நான்மணி மாலையில்,

''தாயிலியாகும் சிவபெருமான் தனைத்தான் எனும்ஓர்
கோயிலின்ஆர் அறிவாகிய நாமம்முன் கொண்டிருந்த
வாயிலின் ஆணவமாகும் கபடாமும் மன்திறந்து
நோயிலியாகிய சொல்லிறை காட்டுவன் நோக்குதற்கே''

என்று விளக்கிக் காட்டியுள்ளார்.

ஞானசம்பந்தரும், அப்பரடிகளும் இணைய நின்று அவர்கள் காலத்தில் வாழ்ந்த சராசரங்கள் எல்லாவற்றிற்கும் பின்வரும் உயிர்களுக்கும் நேர்நின்று துய்க்கும் ஆசறு முத்தி, திரிமலமும் அகல உயிர் அருள்சேர் முத்தி, திகழும் இன்ப அறிவு நேர்நின்ற நன்முத்தி ஆகியவற்றை அருளுகின்றார்கள். ஞானசம்பந்தரும், நாவுக்கரசரும் சைவ சமயத்தின் மறுமலர்ச்சி இயக்கமாகவே நின்றார்கள். இருவருமே முக்கால அமைப்பில் நின்ற எல்லா உயிர்களுக்கும் முழுமையான திருவருள் நலமுறு திருப்பதிகப்பணி, திருநெறியத் தமிழ்ப்பணி ஆகியவற்றைச் செய்தருளினார்கள்.

கருத்து ஒருமித்தல்

எந்த ஒரு செயல் செய்யும்போதும் கருத்தொருமித்தல் என்பது இன்றியமையாத ஒன்றாகும். நன்னெறியில் சிவப்பிரகாசர் இல்வாழ்க்கை நெறி பற்றிக் கூறும்போது, ''காதலர் இருவர் கருத்தொருமித்து ஆதரவு பட்டதே இன்பம்'' என்று காட்டுகிறார். ஒரு செயல் சிக்கலின்றிச் செம்மையாக நிறைவேறக் கருத்தொருமித்த ஆதரவு தேவை. அதனை ஞானசம்பந்தர், நாவுக்கரசர் வரலாற்றில் பல இடங்களில் காணலாம். இருவரும் திருமறைக்காட்டில் எழுந்தருளியுள்ள திருமறைக்காடனைக்

கண்டு வழிபடச் செல்கின்றனர். அப்பொழுது திருக்கோயில் திருக்கதவம் திருக்காப்பிடப் பட்டிருந்தது. அதன் காரணத்தை அங்குள்ளோரிடம் கேட்டறிகிறார் ஞானசம்பந்தர். உடனே திருநாவுக்கரசரைப் பார்த்து 'அப்பரே' வேத வனத்து ஐயர்தமை நேர்முகத்தில் உள்ள வாயிற்கதவைத் திறந்து அதன்வழியே சென்று எப்படியேனும் வழிபட வேண்டும் தாங்களே இவ்வாயில் திருக்காப்பு நீங்குமாறு மெய்ப்பொருள் வளர்தமிழ் பாடி அருள்க என்று கூறினார். அப்பரடிகளும் என்னை இவ்வாறு செய்க என நீர் அருளிச் செய்தீராகில் இது செய்வேன் என்று பதிகம் பாடிப் பதினோராம் பாடலில் திருக்கதவம் திறக்கப்பெற்றது. இவ்வாறு பல நிலைகளிலும் இருவரும் கருத்தொருமித்தவர்களாகவே விளங்குகின்றனர்.

தலவழிபாடும் அற்புதங்களும்

ஞானசம்பந்தரும், நாவுக்கரசரும் தமிழகத்தில் தோன்றி அந்நாட்டுத் தலங்கள் பலவற்றையும் பாடிப் பரவி வழிபட்ட பெருமைக்குரியவர்கள். அவர்கள் தலவழிபாட்டில் பல அற்புதச் செயல்களைத் தவ அருளால் செய்துள்ளனர். அவற்றில் இருவரும் சேர்ந்து சென்று செய்த செயல்களும் உண்டு. தனியே சென்று செய்த அற்புதங்களும் பல உண்டு. அவர்களுடைய முதல் சந்திப்பு காழிப்பதியில் நிகழ்கிறது. காழிப்பதிப் புண்ணியனைக் கண்டவாறே அவனைப் பிற பதிகளிலும் கண்டு வணங்க வேண்டும் என்ற குறிக்கோளுடன் திருக்கோயில் வழிபாட்டுச் செலவை மேற்கொண்டு திருஞானசம்பந்தர் திருவீழிமிழலையிலேயே திருநாவுக் கரசருடன் பன்னாட்கள் தங்கியிருக்கின்றார். சைவ சித்தாந்தச் சாத்திர நுட்பங்கள் ததும்பி நிற்கும் பதிகங்கள் பலவற்றை திருவீழிமிழலையில் தான் அருளிச் செய்துள்ளார்கள். அவர்கள் அங்குத் தங்கியிருந்த காலத்துக் காலவேறுபாட்டால் மழையின்மையால் உணவின்மை என்னும் பஞ்சம் வந்தது. அது மெல்ல மெல்ல அனைவரையும் வாட்டத் தொடங்கிய போது இறைவன் அவர்தம் கனவில் தோன்றி பஞ்சத்தால் வரும் துன்பம் உம்மைத் தாக்காது. உம்மோடு சிவநெறி சார்ந்தவர்கள் வாடுவார்கள். எனவே வாட்டம் நீங்கப் படிக்காசு தருவதாகக் கூறினார். அந்நிலையில் இருவரும் காசுபெற்று உணவமைத்து அடியவர் களின் பசி தீர்த்து அற்புதம் செய்தார்கள்.

திருஞானசம்பந்தரும் திருநாவுக்கரசரும் மிழலை இறைவன் பால் விடைபெற்றுப் பல பதிகளை வணங்கினர். அத்தலங்களில் திருப்பதிகங்களைப் பாடிப் பரவி திருமறைக்காட்டிற்குச் சென்றருளினர். இருவருக்கும் திருமறைக்காட்டு அடியார்கள் மிகச் சிறந்த வரவேற்பினை மகிழ்வொடு செய்தனர். திருமறைக்காட்டில் நீண்ட நாட்களுக்கு முன் வேதங்கள் திருக்காப்புச் செய்த கதவத்தினைத் திறக்க திருநாவுக்கரசர் பதிகம் பாடினார். திருக்காப்பிடுதற்கு திருஞானசம்பந்தர் பதிகம் பாடினார்.

இத்தகைய நிலையில் இருவரும் சேர்ந்தே அற்புத நிகழ்வினைச் செய்தனர்.

அரசின் குருவென நின்ற ஞானம்

திருநாவுக்கரசருக்கு குருவென நின்று இறைவன் காட்சியைக் காணுமாறு காட்டியவர் ஞானசம்பந்தர். திருநாவுக்கரசரை திருவாய்மூர் வருகவென இறைவன் கூற வாய்மூர் செல்கிறார். அங்கு இறைவன் திருக்கோயிலில் மறைந்தருளுகின்றார். இந்நிலையில் நாவரசர் மனக் கலக்கம் உறுகின்றார். ஆளுடைய பிள்ளை அடியார் மூலம் நாவரசர் திருவாய்மூருக்குச் செல்வதை அறிந்து அங்கு வருகிறார். இந்நிலையில் திருநாவுக்கரசர் திருக்குறிப்பு அறியாது திருக்கதவம் திறக்கப் பாடிய என்னைக் காட்டிலும் செந்தமிழ்ப் பதிகத்தால் அடைப்பித்த ஞானசம்பந்தப் பிள்ளை வருவதை எண்ணி மகிழ்கிறார். இந்நிலையில் நாவரசர் ஞானப்பிள்ளையிடம் கொண்ட மதிப்பு புலனாகிறது. அப்பொழுது வாய்மூர் இறைவன் பிள்ளையார் காண நேரே தோன்றி ஆடல்காட்டி அருள் புரிகிறார். தாம் கண்ட தெய்வக்காட்சியனைத்தும் கெழுதகை நண்பர் ஆளுடைய அடிகட்கும் காட்டி மகிழ்கிறார். இதனை,

"ஆடல் கண்டு பணிந்தேத்தி
அரசுங் காணக் காட்டுதலும்"

என்று பெரியபுராணத்தில் சேக்கிழார் பெருமான் பாடியுள்ளார். இதன் மூலம் தொண்டு நெறியில் முதிர்ந்து திருத்தொண்டு நெறியில் வெற்றி பெற்று நின்ற காலத்திலும் நேர்நின்று வெளிப்படக் கண்டு காட்சிப்படும் பரம்பொருள் அனுபவத் துய்ப்பினை பெறுதற்கு உயிர்கள் முயலும்போது ஆணவம் சிறிதே மறைக்கும். அருள்நெறியின் முதற்குருவாக நின்ற ஞானசம்பந்தர் அவ்வாணவத் தடையை முற்றாக நீக்கி அப்பரம்பொருளைத் திருநாவுக்கரசருக்கு நேர்நிறுத்திக் காட்டியும், காணுமாறும் செய்கிறார்.

நாவுக்கரசரின் அன்பு வெளிப்பாடு

நாவுக்கரசரும் ஞானசம்பந்தரும் திருமறைக்காட்டில் தங்கியிருந்தபோது பாண்டிய மாதேவி சிவநெறியைப் பரப்பப் பாண்டிய நாட்டுக்கு எழுந்தருள வேண்டும் என்று திருஞானசம்பந்தரை வேண்டிக் கொள்கிறார். இச்செய்தியை ஞானசம்பந்தர் நாவுக்கரசரிடம் கூறுகிறார். அந்நிலையில் ஆளுடைய அரசு பிள்ளையாரை நோக்கி அங்குச் சமணர்கள் செய்யும் வஞ்சனைச் செயல்களுக்கு அளவில்லை. இப்பொழுது கோள்களும் தீமை பயப்பனவாய் உள்ளன என்று கூறி அங்கு எழுந்தருளுவதற்கு உடன்படாது மறுக்கிறார். இந்நிலையில் நாவுக்கரசர் சமணர்களால் பட்ட துன்பத்தை ஞானசம்பந்தர் பெறக்கூடாது என்று உள்ளன்போடு நினைக்கிறார். இந்நிலையில் ஞானசம்பந்தர் நாவுக்கரசருக்கு நாள்கோள்கள்

நமக்குத் தீங்கினைச் செய்யாது என்பதைப் பக்குவமாக எடுத்துக் கூறுகிறார். அப்பொழுது சிவபெருமான் திருவடிகளை நினைந்து ஞானசம்பந்தர் ''வேயுறு தோளிபங்கன்'' எனத் தொடங்கும் பதிகத்தைப் பாடி அருளிச்செய்தார். இங்கு திருநாவுக்கரசரின் அன்பு நிலையும் ஞானசம்பந்தரின் அருட்திறமும் விளங்குகிறது.

இருவரின் சிறப்பினை இறைவனே கூறல்

ஞானசம்பந்தரும் நாவுக்கரசரும் சமநிலையில் மாறாத்தன்மையினர் என்பதைத் திருவீழிமிழலைப் பெருமான் இருவரிடமும் கனவில் வந்து கூறியுள்ளார். நீங்கள் காலவேறுபாட்டால் வருத்தமடைய மாட்டீர்கள் எனினும் உங்களைச் சார்ந்து வழிபடும் இயல்புடைய தொண்டர்களுக்கு உணவளிக்கப் படிக்காசு தருகின்றோம் என்று கூறுகிறார். இதன் மூலம் இருவரும் உயர்ஞானம் பெற்று நிலைமாறாத் தன்மையுடன் விளங்கியமை நன்கு புலனாகிறது.

சேக்கிழார் இருவர் பெருமை கூறல்

சேக்கிழார் இருபெரும் அடியார்களையும் ஒப்பக்காட்டிச் சிறப்பிக்கும் பாங்கு பெரியபுராணத்தில் காணமுடிகிறது. 'தென்புகலிக் கோவுமரசும்' என இருபெருமக்களையும் அரசு என ஒப்பக்காட்டி நயம் சிறப்புடைத்து. ''எல்லையில்லாப் பெரும்புகழார்'' என நாயன்மார்களிருவரின் புகழ் எல்லையில்லாதன என்கிறார். மறைகள் ஓதவல்ல புகழும், இறைவன் திருவாக்கினையே தமது திருவாக்காகக் கொண்டு செயல் பட்ட புகழும் சிறப்பிக்கப்பட்டது. ''ஆண்ட அரசுஞ் சிவக்கன்றும் இன்ப வெள்ளத்திடை மூழ்கினர்'' என்கிறார். ''மெய்ம்மை அருந்தவர்கள்'' என்று இருவரையும் பாராட்டும்போது அருந்தவத்தவர்களாதலின் அவர்களது திருவாக்கும் மெய்த்திருவாக்குக்களாகி, இறைவரது திருவாக்கேயாகிச் செயல் செய்தமை புலனாகிறது. இவ்வாறு நாவுக்கரசர் புராணத்திலும் ஞானசம்பந்தர் புராணத்திலும் இருவரையும் ஒப்பக் காட்டிச் சிறப்பித்துள்ளார் சேக்கிழார்.

திருத்தாண்டக வேந்தரும் பைந்தமிழ் அரசும் குறிக்கோள் ஒன்றெனக் கொண்டவர்கள். இருவரும் கருத்தொன்றிச் செயல்பட்டவர்கள். பல தலவழிபாடுகள் செய்து சமுதாயத்திற்குச் செந்நெறியாம் சைவ நெறியை விளக்கிக் காட்டுவதில் வல்லண்மை புண்டவர்களாக விளங்கினர். இறையருளை மெய்மையாகக் கொண்டமையால் பல அற்புதச் செயல்களைச் செய்து பெருமை பெற்றவர்கள். சமகாலத்தில் வாழ்ந்து பிற சமயத்துறை கடிந்து இறையருளால் பேரின்ப வாழ்வுபெற்று விளங்கினார்கள். இவர்கள் பெருமை என்றும் மக்கள் நினைவு கூர்ந்து சிறப்பிப்பதற்குரியதாகும். வாழ்க அவர்கள் திருத்தொண்டு நெறி.

11. சமய சமூகப் பண்பாட்டுப் புரட்சியாளர்

இளங்கண்ணன், உடுமலை.

காலமும் சூழலும்

திருஞானசம்பந்தர் அவதரித்த நூற்றாண்டு கி.பி. 7-ஆம் நூற்றாண்டாகும். அப்பொழுது தொண்டை மண்டலத்தில் பல்லவர் ஆட்சி மகேந்திரவர்மன் அரசன் நாடு முழுவதும் சமண சமயம் ஆதிக்கம் செலுத்தியது. இந்நிலை மாற்றத் திருநாவுக்கரசர் தோன்றினார். பாண்டிய நாட்டில் கூன் பாண்டியனின் ஆட்சி, அங்கும் சமண சமயம் ஆதிக்கம் செலுத்தியது. சோழ நாட்டில் சைவம் இருந்தது. அதுவும் பலியிட்டு வழிபடும் பிரிவுகள் உடையதாக இருந்தது. அது காபாலிகம் எனப்பட்டது. வடநாட்டுப் பாணியில் வைதீக வேள்விகள் பின்பற்றுதலும் நடந்தன.

ஆக, வடநாட்டுப் பண்பாட்டில் வளர்ந்த சமணமும், காபாலிகமும், பௌத்தமும், வைதீக வேள்விகளும் தென்னாடெங்கும் பரவின. வழிபாட்டில் வடமொழி ஆதிக்கம் மிகுந்தது. மகேந்திர வர்மன் வடக்கே இருந்து கோயில் வழிபாட்டை நடத்த வேதியர்களை வரவழைத்தான்.

இத்தகைய சூழலில் நம் சைவ சமயப் பண்பாடும் தமிழ் மொழியும் நலிவுற்று மறைந்து விட்டது என்று குறிப்பிடும் அளவிற்குச் சமூகம் அமைந்திருந்தது.

சமூகத்தின் ஒரு கூறு சமயம், ஒரு கூறு மொழி, ஒரு கூறு பண்பாடு, இவற்றைப் புரட்சிக்கரமாக மாற்றி, நிலை நிறுத்தி, மனித நேயத்துடன் தனியாரின் துயரையும் சமூகத்தின் துயரையும் நீக்கிய பெருமான் திருஞானசம்பந்தர், எனவே இவர் சமய, சமூக, பண்பாட்டுப் புரட்சியாளர் எனலாம்.

வழிபாட்டு புரட்சி

திருஞானசம்பந்தர் மரபால் ரிக்வேதி. ஆனால் அவர் தமிழ் மொழிக்கும் தமிழ் பண்பாட்டிற்கும் முக்கியத்துவம் கொடுத்து வேள்வி களைச் சிவனுக்குச் சிறப்பு கொடுத்து உயிர்பலி கொடுத்தல் தவிர்த்துச் செய்வித்தார். மலரிட்டு அர்ச்சித்துத் தமிழில் துதிப் பாடல்களைப் பாடியும் வைதீக வேள்விகள் இனிது சைவத்திற்கு ஏற்றபடி மாற்றி இணைத்துக்

கோவில்களில் இறைவழிபாட்டு முறையை மாற்றி அமைத்தார். கோவிலில் தமிழ்வழி வழிபாடு ஆற்றிய பெருமை சம்பந்தரைச் சாரும். இவரைப் பின்பற்றிய நாயன்மார் அனைவரும் அவர்வழி தமிழும் சைவமும் வளர்த்தனர்.

இறையருள்

சிவபாதஇருதயர் குளக்கரைக்குக் குளித்துவிட்டு ருத்ர ஜபம் செய்யச் சென்றார். அவர் முழுக்க முழுக்க ரிக்வேதப் பண்பு படியே வாழ்ந்து வந்தார். அக்குளக்கரைக்கு ஞானசம்பந்தர் பெருமானை அழைத்துச் சென்றார். குழந்தைக்குப் பசி, தந்தையைத் தேடினார் அவர் நீரில் மூழ்கி ஜபம் செய்து கொண்டிருந்தார். குழந்தை அழுதது. இறையருளால் உமையம்மை பொற்கிண்ணத்தில் பாலூட்டினார். பால் படிந்த வாயைக் கண்டு யார் கொடுத்த பாலை உண்டாய்'' என்று சிவபாதர் மிரட்டினார். ஞானசம்பந்தர் வானை நோக்கித் தம் முதல் தேவாரப் பதிகத்தைச் சீர்காழியில் பாடினார்.

தோடுடைய செவியன் விடையேறியோர் தூவெண் மதிசூடிக்
காடுடைய சுடலைப்பொடி பூசியென் உள்ளங்கவர் கள்வன்
ஏடுடைய மலரான் முனை நாட் பணிந்தேத்த வருள்செய்த
பீடுடைய பிரமாபுர மேவிய பெம்மானி வனன்றே.

இவர் இவ்வாறு பாடத் தொடங்கிய தேவாரம் வீடுபேறு பெறும் வரை தொடர்ந்தது.

முதற்தொண்டு

தனியாரின் துயர் தீர்ப்பதும் ஒரு சமூகத் தொண்டேயாகும். மன்னனின் தனிப்பட்ட துயரமாயினும் அது தீர்க்கப்பட வேண்டிய ஒன்று ஆகும். அவனது தனிப்பட்ட துயரம் அவன் செய்யும் நல்லாட்சியையும் பாதிக்கும் வாய்ப்புண்டு. ஆதலால் அவனது தனித் துயரம் தீர்க்கப்பட வேண்டிய ஒன்றாக அருளாளர் திருஞானசம்பந்தர் கருதினார்.

ஆச்சிராமம் என்ற ஊருக்குச் சம்பந்தர் சென்றார். அவ்வூர் தலைவன் கொல்லி மழவன். அவனது மகள் பிணியுற்றாள். பிணி தீராமையால் அவ்வூர் கோயிலின் முன் படுக்க வைத்தான். திருஞான சம்பந்தர் இறைவன் மீது பதிகம் பாடி அப்பெண்ணின் நோய் நீக்கினார்.

ஆந்தைவிழிச் சிறு பூதத்தர் பாச்சி லாச்சிராமத் துறைகின்ற
சாந்தமணி மார்ப்ரோ தையலை வாடச்சதுர் செய்வதோ விவர்சார்வே
நீறுமெய்பூசி நிறைசடை தாழ்நெற்றிக் கண்ணாலுற்று நோக்கி
ஆறதுசூடி யாடர வாட்டி யைவிரற் கோவண வாடை

பாறரு மேனியர் பூதத்தர் பாச்சி லாச்சிரா மத்துறைகின்ற
ஏறதுவேறிய ரேழையைவாட இடர் செய்வதோ விவரீடே. (11)

நஞ்சு நீக்கியது

திருமருகல் என்ற ஊருக்குத் திருஞானசம்பந்தர் சென்றார். அவர் தங்கியிருந்த இடத்திற்கெதிரில் வணிகனும் அவனை மணக்க இருந்த முறைப்பெண்ணும் தங்கியிருந்தனர். அவர்கள் உடன்போக்கு புரிந்து இரவு தங்க வந்தவர்கள். விடிந்ததும் மணம் முடிக்க எண்ணி யிருந்தனர். அவ்வணிகனை அரவம் தீண்டியதால் இறந்தான். அவள் அந்த அரவம் செய்த பாக்கியம் கூட எனக்கில்லையே என்று அழுதாள். அவன் உடன் வந்தும் கற்பு காத்தாள். அழுகைக் குரல் கேட்டு மனமிரங்கி இறைவனிடம் முறையிட்டுப் பாடி நஞ்சு நீக்கி அவனை உயிர்ப்பித்து அவர்களுக்கு மணம் முடித்து வைத்தார்.

"சடையா யெனுமால் சரணீ யெனுமால்
விடையா யெனுமால் வெருவா விழுமால்
மடையார் குவளை மலரும் மருகல்
உடையாய்த் தகுமோ லிவளுண் மெலிவே"

என்று பதிகம் பாடி உயிர்ப்பித்தார்.

பஞ்சம் தீர்த்தல்

திருவீழிமிழலைக்குத் திருநாவுக்கரசரும் திருஞானசம்பந்தரும் சென்றனர். அப்பொழுது வான் பொய்த்ததால் அங்குப் பஞ்சம் நிலவியது. ஆகவே அடியாரும் பசியால் வருந்தினர். பிறகு இக்கொடுமை நீக்க வேண்டி இறைவனைப் பாடினார். ஒவ்வொருவருக்கும் இறைவன் கோயிற் படியில் பொற்காசு வைத்தான். அதனைப் பெற்று இருவரும் பசியாற்றினார்கள்.

திருநாவுக்கரசர் மடத்தில் விரைவாக விருந்தோம்பல் நடைபெறும். திருஞானசம்பந்தர் மடத்தில் சற்றுத் தாமதம் ஆகும். காரணம் கண்டறிந்தனர். சற்று மாற்றுக் குறைவான காசு ஞானசம்பந்தர் மடத்தில் விருந்தோம்பலுக்குப் பெற்றதால் கால தாமதம் ஆயிற்று. உடனே ஞானசம்பந்தர் இறைவனிடம் வேண்டி நற்காசு பெற்று இக்குறையை நிவர்த்தித்தார்.

"வாசி தீரவே காசு நல்குவீர்
மாசின் மிழிலையீர் ஏச லில்லையே"

என்று பதிகம் பாடினார்.

திருமறைக்காட்டிற்கு நாவுக்கரசரும் சம்பந்தரும் சென்றனர். திருக்கோயிலின் கோபுர வாசற் கதவு, திறந்து மூட இயலாதவாறு

அடைக்கப்பட்டிருந்தது. மக்களுக்கு அது ஒரு குறையாய் இருந்தது. அப்பர் கதவு திறக்கும்படிப் பாடினார். பிறகு சம்பந்தர் கதவு மூடித் திறக்கும் நிலை எய்தச் செய்தார்.

பாண்டிய நாட்டில் சமய புரட்சி

கூன் பாண்டியன் மனைவி மங்கையர்க்கரசியார் தம் அமைச்சர் குலச்சிறையார்வழிப் பாண்டி நாட்டில் சைவம் தழைக்கச் செய்யத் திருஞானசம்பந்தரைப் பாண்டி நாட்டிற்கு அழைத்தார். அதன்பின் மதுரைக்குச் செல்லப் பிள்ளையார் எத்தனித்தார். நாளும் கோளும் நல்லனவாக இல்லை என்று திருநாவுக்கரசர் அஞ்சினார். அதற்கு விடையாக கோளறு பதிகத்தைப் பிள்ளையார் பாடினார்.

"வேயுறு தோளிபங்கன் விடமுண்ட கண்டன்மிக நல்லவீணை தடவி
மாசறு திங்கள் கங்கை முடிமேலணிந்தென் உளமே புகுந்த அதனால்
ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன் வெள்ளி சனிபாம்பி ரண்டுமுடனே
ஆசறு நல்லநல்ல அவை நல்லநல்ல அடியாரவர்க்கு மிகவே".

என்று பாடினார்.

பிறகு புறப்பட்டுத் திருஞானசம்பந்தர் மதுரையை அடைந்தார். அவர் வருகையைக் கேட்ட மாத்திரத்தில் பிள்ளையை தன் குழந்தையாகப் பாவித்த மங்கையர்க்கரசியாருக்கு தன் நகில்கள் சுரந்தன. மங்கையர்க் கரசியார் தாய்மை உணர்வாய்ப் பிள்ளையாரின் உரு கண்டு அஞ்சினார். அதற்கு ஞானசம்பந்தர் தேற்றினார்.

மடத்திற்குத் தீயிட்டனர்

திருஞானசம்பந்தர் தங்கிய மடத்திற்குச் சமணர்கள் தீ வைத்தனர். பின் ஞானசம்பந்தர் பதிகம் பாடிக் கூன் பாண்டியனுக்கு வெப்பு நோய் ஏற்படுமாறு செய்தார்.

"செய்யனே திருவால வாய் மேவிய
ஐயனே யஞ்ச னென்றருள் செய்யெனைப்
பொய்ய ராமமணர் கொளு யுஞ்சுடர்
பையவே சென்று பாண்டியற் காகவே"

என்றார்.

மங்கையர்க்கரசியாரின் மாங்கலியத்திற்கு ஊறு வாராவண்ணம் மறக்கருணை புரியவே பையவே சென்று பாண்டியர்க்காகவே என்று பிள்ளையார் பாடினார்.

வெப்பு நோய்

பாண்டியனுக்கு வெப்பு நோய் பற்றியது. சமணர்களால் அதை நீக்க முடியவில்லை. பிறகு திருஞானசம்பந்தர் ''மந்திரமாவது தீது'' என்று பதிகம் பாடி நோயினை நீக்கினார்.

''மந்திர மாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தர மாவது நீறு துதிக்கப் படுவது நீறு
தந்திர மாவது நீறுசமயத் திலுள்ளது நீறு
செந்துவர் வாயுமை பங்கன் திருவால வாயான் திருநீறே''.

தீயில் ஏடுயிடல்

மந்திரம் எழுதிச் சமணரும் சம்பந்தரும் ஏட்டைத் தீயில் இட்டனர். சம்பந்தர் இட்ட ஏடு கருகாமல் இருந்தது. இதனைப் போற்றிப் பதிகம் பாடினார்.

''பாடக மெல்லடிப் பாவையோடும் படுபிணக் காடிடம் பற்றிநின்று
நாடகமாடு நன்னானுடைய நம்பெருமானது வென்சொல் சொல்வாய்
சூடக முன்னக மடந்தை மார்கன் துணைவரொடுந் தொழுதேத்தி வாழ்ந்த
ஆடகமாட நெருங்கு கூடல் ஆலவாயின் கணமர்ந்த வாறே''

தீயிலிட்ட ஏடு இன்ன காரணத்தினால் பச்சையாக இருக்கும் என்று ஒரு பதிகம் பாடினார்.

''தளிரிள வளரொளிதன தெழிறருதிகழ் மலைமகள்
குளிரளி வளரொளி வனமுலை யிணையவை குலவலின்
நளிரிள வளரொளி மருவு நன்னார்ந்தந் நாமமே
மிளிரிள வளரொளி யிடிலிவை பழுதில் செய்யமையே''

புனலில் ஏடுயிடல்

திருஞானசம்பந்தர், பாண்டியன் அவன் தேவிமார் குலச்சிறையார், சமணர்கள் வையை ஆற்றிற்கு வந்தனர். ''வாழ்க அந்தணர்'' என்ற பாடல் எழுதி ஆற்றில் இட்டனர், சமணர்களும் தாம் எழுதிய ஏட்டை ஆற்றில் இட்டனர். அது ஆற்றோடு போயிற்று. ஆற்றை எதிர்த்துச் சென்ற சம்பந்தர் ஏடு ஏடகத்தில் குலச்சிறையாரால் எடுக்கப் பெற்றது.

''வாழ்க வந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே''

என்பது பாடல்.

தோற்ற சமணர் தம் சபதபடி தாமாகவே கழுவேறினர். கூன் பாண்டியன் நின்றசீர் நெடுமாறன் ஆனார்.

நாவுக்கரசர் சந்திப்பு

மீண்டும் தலயாத்திரை தொடர்கிறார் சம்பந்தர். அப்பர் அங்கு வந்துள்ளது அறிந்து ''அப்பர் எங்கே'' என வினவுகிறார். பல்லக்கில் திருப்பூந்துருத்தி என்ற இடத்திற்கு வந்த சம்பந்தர் அறியாமல் அவர் மீதுள்ள பக்தியினால் பாசத்தால் அவர் பல்லக்கை உடன் சுமந்து வந்தார் திருநாவுக்கரசர். சம்பந்தர் ''அப்பர் எங்குற்றார் என்ற உடன், பல்லக்கினின்று விடுபட்டு ஆளுடை அரசர் ''இங்குற்றேன்'' என்று மொழிந்தார். ஒருவருக்கொருவர் மிகவும் மனம் நெகிழ்ந்து யார் முதலில் தொழுதனர் என அறிய மாட்டாது ஒருவரை மற்றொருவர் தொழுதார்கள்.

ஆண்பனை பெண்பனையாதல்

பின்னர் திருவோத்தூர் சென்றார் திருஞானசம்பந்தர் அங்கு ஒரு தொண்டர் வைத்த பனையெல்லாம் ஆண்பனையாக இருந்தன. அது கண்டு சமணர் நகைத்தனர். இதுபற்றி அவர் சம்பந்தரிடம் முறையிட்டார். உடனே அவர் இறைவன் மீது பதிகம் பாடிப் பெண்பனையாக்கினார்.

"பூந்தேர்ந் தாயன கொண்டுநின் பொன்னடி
ஏத்த தாரில்லை யெண்ணுங்கால்
ஒத்தூர் மேயவொளி மழு வாளங்கைக்
கூத்தீரும்ம குணங்களே"

என்று பாடினார்.

என்பு பெண்ணானது

சிவநேச செட்டியார் என்பவர் மயிலையில் வாழ்ந்து வந்தார். அவருக்குப் பூம்பாவை என்ற மகள் பிறந்தாள். திருஞானசம்பந்தர் மீது இருந்த பக்தியின் காரணத்தினால் அவருக்குத் தம் மகளை மணம் முடித்துக் கொடுப்பது என்று உறுதி கொண்டார். ஆனால் போகூழ் காரணமாக அரவம் தீண்டி அவள் இறந்தாள். அவளது சாம்பலும் எலும்பும் ஒரு பானையில் பத்திரப்படுத்தி செட்டியார் வைத்திருந்தார். சம்பந்தர் மயிலை வந்தார். செட்டியார், அவரிடம் அந்த என்புடை பானையை ஒப்படைத்தார். அவர் மயிலை இறைவன் மீது பதிகம் பாடி அவளை மணப் பருவப் பெண்ணாக உயிருடன் மீட்டுக் கொடுத்தார். செட்டியார் அவளை மணம் முடித்துக் கொள்ளும்படி சம்பந்தரிடம் வேண்டினார். அதற்கு அவர் உங்கள் மகள் இறந்து விட்டாள். இவள் நான் உயிர்ப்பித்தவள், ஆதலால் இவள் எனக்கு மகளாவாள் என்றார்.

''மட்டிட்ட புன்னையங் கானல் மடமயிலை
கட்டிட்டங் கொண்டான் கபாலிச் சரமமர்ந்தான்
ஒட்டிட்ட பண்பின் உருத்திர பல்கணத்தார்க்கு
அட்டிட்டல் காணாதே போதியோ பூம்பாவாய்''

என்பது பாடல்.

சாதி வேறுபாடு வெறுத்தவர்

கவுண்டினிய கோத்திரத்து உதித்த இருக்கு வேதியரான திருஞானசம்பந்தர் சைவமும் தமிழும் தழைக்கவும் ஆதி சைவரும் வைதிகர்களும் மௌனமாக நடத்தி வந்த பணிப்போர் ஒழித்துச் சாதி வேறுபாட்டைப் புறக்கணித்துப் புரட்சி செய்தார்.

திருஞானசம்பந்தர்பால் ஈர்க்க பெற்ற திருநீலகண்ட யாழ்ப்பாணர் மனைவியுடன் அவரைக் காண வந்த பொழுது சீர்காழி பிள்ளையார் அவரை ''ஐயரே'' என்று அழைத்தார்.

''ஐயரே'' என்ற சொல் அந்தணர்களையே குறிக்கும் சொல்லாக நடைமுறையில் மாறிவிட்டது. தொல்காப்பிய பொருள் அமைதிப்படி ''ஐ'' என்ற எழுத்து வியப்புணர்வுச் சொல் மதித்துப் போற்றும் பெரியவர் களை ''ஐயா'' என்று அழைப்பர். எனவே இப்பொருள் பற்றிப் பாணரை பிள்ளை ஐயரே என அழைத்தார்.

இறையருள் பெற்ற பிள்ளை பாணர் பெருமை அறிந்தவர். சாதிப் பாகுபாட்டுணர்வு மிகுந்த வேதியர்கள் அவரை அரிசனர் என்று எண்ணி யுள்ளனர். இந்நிலை பின்னர் வேறு சிந்தனையை உருவாக்கும் என்பதை தவிர்க்கப் பிள்ளை அவரை ''ஐயரே'' என்றழைத்தார்.

பிள்ளையின் ஆற்றலை உணர்ந்த வேதியர் அவருக்குக் கட்டுப்பட்டு நடக்கக் கூடியவர்களாய் ஆக்குவதை உணர்ந்தனர். வேதியர் இறுதி வரை தம்முடன் அவர் இருக்க வேண்டும் என்ற எண்ணமுடைய பிள்ளை, அவர் எவ்வாறு நடத்தப்பட வேண்டும் என்றும் குறிப்புக் காட்ட அவரை அவ்வாறு அழைத்தார். கோவிலுக்குள் அழைத்துச் சென்றார். யாழ் வாசிக்கச் செய்தார். யாவும் சீர்காழியில் நடந்தவை. தம் சொல்லால் செயலால் வேதியர்கள் எதிர்ப்பு ஏதும் எழாவண்ணம் செய்துவிட்டார்.

எருகத்தம் புலியூர், பாணர் பிறந்த ஊர். பிள்ளை இதைக் கேட்டு ''ஐயரே'' இந்தப் பதி மாதவம் செய்து உள்ளது என்றார். அவர் பிறந்த ஊரில் அவர் மதித்துப் போற்றப்பட வேண்டும் என்ற கருத்தில் மீண்டும் ''ஐயரே'' என்று அவரை அழைத்தார்.

காந்தியார் தீண்டாமை ஒழிப்பு செய்வதற்குமுன் அரிசனர் என்று அழைப்பதற்கு முன், ஆலய நுழைவு செய்வதற்கு முன், திருஞான சம்பந்தர் பிரச்சாரம் இன்றி செய்து காட்டினார். இறுதி வரை திருநீலகண்ட யாழ்ப்பாணரை உடன் வைத்திருந்தார்.

தருமபுரம் பாணரின் தாயார் ஊர். அவர்கள் அவ்வூரைச் சேர்ந்த பெண்ணின் தவப் புதல்வர், பிள்ளையாருக்கு யாழ் வாசிக்கிறார் என்று பெருமிதத்துடன் கூறியது பிள்ளையாரின் பாட்டைக் குறைவாக மதிப்பிட்டு விட்டார்கள் போலும் எனக் கருதி பாணர் யாழுக்கு அடங்காத பாடலைப் பாடச் சொன்னார். மாதர் மடப்பிடியும் என்ற பாடல் யாழில் அடங்காமை அறிந்து தம் திறன் குறைவே எனக் கருதி பாணர் அந்த யாழை முறிக்க முற்பட்டார். யாழில் ஏற்க முடியாததை ஏற்கச் செய்வேன் என்று கூறி இயலாமையால் வருந்தி முறிக்கத் துணிந்தார்.

இரு முறை ''ஐயரே'' என விளித்தார். யாழை வாங்கிக் கொண்டு இறைவன் புகழ் விரிக்கும் இசைக் கருவியில் அடங்கும் என எதிர்பார்க்க வேண்டாம் என்றார். முன்போல் யாழ் வாசித்து அருளும் என்றார்.

அங்குள்ள மக்கள் எதிர்பார்த்தபடி அமையாதபொழுது பாணரைக் குறைவாக மதிப்பிடக் கூடாது எனக் கருதி ''ஐயரே'' என விளித்து யாழுக்கு அடங்காமைக்குக் காரணம் கூறி முன்போல் வாசிக்கப் பணிந்தார்.

''மாதர் மடப்பிடியும் மடவன்னமு மன்னதொர்
நடையுடைம் மலை மகடுனையென மகிழ்வர்
பூதவினப் படை நின்றிசை பாடவு மாடுவர்
அவர் படர்சடை நெடுமுடியாதொர் புனலர்
வேதமோடே ழிசை பாடுவராழ்கடல் வெண்டிரை
இரைநுரை கரையொரு துவிம்மி நிறையலே
தாதவிழ் புன்னை தயங்கு மலர்ச்சிறை வண்டறை
யெழில் பொழில் குயில் பயில் தருமபுரம் பதியே''

என்பது பதிகம்.

மேலும் சம்பந்தர் திருநீல நக்கர் வீட்டில் பூசையறையை யாழ்ப்பாணர் மனைவியுடன் தங்குவதற்கு இடமாக்கினார். அந்தணரான திருநீலநக்கர் யாகங்கள் செய்தாலும் ஆகம வழிப்படியும் பூசனை செய்தார். ஆத்ம வழிக்கு முரணுமாக மனைவியை கருவறையில் பூசனைக்கு உதவியாளராக ஏற்றார்.

பெண்களுக்குச் சிறப்பு செய்தார்

திருநீலகண்ட யாழ்ப்பாணரைத் தம் மனைவியுடன் அவர் தம்முடன் இறுதி வரை இருக்க செய்தார். இரவு தங்குவதற்குத் திருநீலநக்கரின்

பூசை அறையிலேயே ஏற்பாடு செய்தார்! வணிகனை அவன் காதலியுடன் மணம் முடித்து வைத்தார். யாரையும் தனித்துப் பாடிச் சிறப்பிக்காதவர் மங்கையர்க்கரசியாரை சிறப்பித்துப் பாடினார்.

"மங்கையர்க்கரசி வளவர்கோன் பாவை வரிவளைக் கைம்மட மானி
பங்கயச் செல்வி பாண்டிமாதேவி பணிசெய்து நாடொறும் பரவப்
பொங்கழ லுருவன் பூதநாயகனால் வேதமும் பொருள்களு மருளி
அங்கயற் கண்ணி தன்னொடும் அமர்ந்த வாலவா யாவது மிதுவே".

என மங்கையர்க்கரசியைத் தனிப்பட சிறப்பித்துப் பாடினார்.

திருநல்லூரில் திருமணம்

வயது பதினாறு அடைந்தார் சம்பந்தர். பெற்றோர் அவருக்கு மணம் முடிக்க எண்ணினார். நம்பியாண்டார் நம்பியின் பெண்ணை மணம் முடிக்க எண்ணினார். ஆச்சாள்புரத்தில் திருமணம் நடந்தது. அங்குத் தோன்றிய சோதியுள் அனைவரையும் புகச் சொல்லி விட்டு அவர் இறுதியாக மணப் பெண்ணுடன் சோதியுட் புகுந்தார்.

அவருக்கு வீடுபேறு வாய்ப்பு வந்தபொழுது எவ்வித வேற்றுமையும் பாராமல் தகுதிகளையும் எண்ணாது திருமணத்திற்கு வந்த அனைவரையும் அச்சோதியில் புக வைத்து பின்னர் இறுதியாகத் தாம் தம் மனைவியுடன் உட்புகுந்தார். இப்பெருங்கருணை அவருக்கே உரியதாகிறது.

ஏழாம் நூற்றாண்டில் அவதரித்துத் தமிழையும் தமிழ்ப் பண்பாட்டையும் சைவத்தையும் நிலைநாட்டிப் பல சமூகத் தொண்டையும் புரிந்து புரட்சி செய்த புரட்சியாளர். வீடுபேறு பெறுவதிலும் யாவரையும் வீடுபேறு பெற வைத்துப் புரட்சி செய்த புரட்சியாளர் திருஞானசம்பந்தர். கூட்டாகச் சோதியில் கலந்து பெரும் புரட்சி செய்தவர் இவர் ஒருவரே எனலாம்.

12. சம்பந்தர் பாடிப் பரவிய திருத்தலங்கள்

பி. உமா, மீஞ்சூர்.

நமது பாரத புண்ணியத் திருநாட்டில் இமயம் முதல் குமரி வரை தெய்வீக மணம் வீசுகிறது. தேவர்களும் மா முனிவர்களும் பூஜித்துப் பேறு பெற்றுள்ளனர். மா மனிதர்களும், விலங்குகளும், ஓரறி உயிர்களுங்கூட, தெய்வத்தின் திருவருளுக்கு இலக்காகி, தம் பெயர் தாம் நிறுவிப் புகழுடல் பெற்றுள்ளனர். அமரரும் முக்தி பெற மண்ணுலகில் பிறந்தேயாக வேண்டியுள்ளது என்றால் இக்கரும பூமியின் சிறப்பிற்கு ஓர் எல்லை ஏது? திருஞானசம்பந்தர் போன்ற அவதார புருஷர்கள் ஓரிடத்தில் இராமல், கால் நிலம் தோய நடந்து சென்று இம்மண்ணிற்கு மகிமை ஊட்டி உள்ளனர். அதனால்தான் அத்தலங் களைக் காண்பதும், மூர்த்திகளைத் தரிசிப்பதும், தீர்த்தங்களில் புனித நீராடுவதும் ஆன்ம அழுக்கை அகற்றும் என்று நம்முன்னோர் கூறி யுள்ளனர். இக்கட்டுரையில் திருஞானசம்பந்தர் பாடிப் பரவிய திருத்தலங்கள் நான்கைக் காணலாம்.

1. சீர்காழி

ஞானச் செல்வர் அவதரித்த அற்புதத் திருத்தலம்: காவிரிக் கரையின் வடபால் அமைந்த சோழநாட்டுத் திருத்தலம். இன்று நாகை மாவட்டத்தில் உள்ளது. ஞானசம்பந்தப் பெருமான் பாடிய பதிகங்கள் 16000 என்பர். கிடைத்துள்ள பதிகங்களோ 384 மட்டுமே. அதிலே 71 பதிகங்கள் இத்தலத்தைப் பற்றியவை என்றால் தோணிபுரத்தோன்றல் இப்பதியிடத்துக் கொண்ட உள்ளன்பிற்கு ஈடேது? கச்சித் திருநகர்போல் இப்பதியும் பன்னிரு திருப்பெயர்களை உடையது.

1. பிரமபுரம்	2. வேணுபுரம்	3. தோணிபுரம்
4. சிரபுரம்	5. புகலி	6. வெங்குரு
7. பூந்தராய்	8. புறவம்	9. சண்பைநகர்
10. கொச்சைவயம்	11. கழுமலம்	12. சீகாழி

இப்பன்னிரு நாமத் திருப்பதியின் ஒவ்வொரு பெயரிலும் ஞானக் குழந்தை பதிகம் பாடிக் களிக்கிறது. சொல்லணி, பொருளணி கொண்ட இப்பதிகங்கள் எத்தனை, எத்தனை வகைப் பண்களுடன் இசைக்கப் பட்டுள்ளன. 71 பதிகங்களில் இரண்டு ஆலவாயிலும் ஒன்று திருவீழி மிழலையிலும் இருந்தபடி பாடப்பட்டவை என்பதும் நம் சிந்தனைக்கு

உரியது. மூவரும் பாடிய திருத்தலம் சீர்காழி. குரு, இலிங்க, சங்கம திருப்பதி என்றும் இதனைப் புகழ்வர்.

ஞானக் குழந்தையைப் பிரமபுர தீர்த்தக் கரையில் மூன்றாம் அகவையில் இறைவன் அம்மையப்பராய் வந்து ஆட்கொண்ட திருப்பதியல்லவா இது? பாலொழுக நிற்கும் அன்புக் குழந்தையைப் பெற்ற தந்தை, 'யார் தந்த பாலைக் குடித்தாய்?' என்று அதட்டிக் கேட்க, பாலறாவாயர் பதிகம் பாடத் தொடங்கினார்.

''தோடுடைய செவியன் விடையேறிஓர் தூவெண் மதிசூடிக்
காடுடைய சுடலைப் பொடிபூசி என்உள்ளங்கவர் கள்வன்''

தந்தைக்குப் பதில் அளிக்கும் வகையில் ஞானக் குழந்தை பாடிய முதற்பதிகத்தில் முதல் இருவரிகள் இவை. குழந்தை அம்மையப்பராய் இறைவனைப் பார்த்ததல்லவா? அதனால் பாலளித்த அன்னைக்குரிய செவி அவர் கண்முன் காட்சி தருகிறது. 'தோடுடைய செவியன்' என அடையாளம் காட்டுகிறது. அம்மையப்பர் விடைமேல் இருப்பதை நினைவு கூர்ந்து, 'விடையேறி' என அறிமுகம் செய்கின்றது. மீண்டும் முகத்தைப் பார்க்க மூன்றாம் பிறை கண்ணிற்குப் புலப்பட, 'தூவெண்மதிசூடி' என்ற குறிப்பையும் உணர்த்துகிறது. உடல் முழுதும் சுடுகாட்டுச் சாம்பல் பூசிய தோற்றமல்லவா? 'காடுடைய சுடலைப் பொடி பூசி' என்ற பிறகு தன்னைத் தான் இழந்த நிலையையும் சுட்டுகிறது அக்குழந்தை. 'என் உள்ளங் கவர் கள்வன்'. அவரது நெஞ்சம் இறைவனால் பறிக்கப்பட்டு விட்டது என்பதற்கு இத்தொடரே சான்று. அதுமுதல் அவர் பாடிய பதிகங்கள் அனைத்தும் யார் பாடியது என்ற ஐயத்திற்கே இடமில்லை. அக்குழந்தையின் நெஞ்சில் இறைவனே குடிகொண்டு விட்டான். அதனால்தான் அற்புதச் செயல் புரிந்தது அக்குழந்தை. ஆசுகவி, மதுரகவி, சித்திரகவி, வித்தார கவி எனும் நாற்கவியும் குழந்தையின் நாவில் நர்த்தனம் புரிந்தன.

பன்னிரு திருப்பெயர்களில் சேராத ஒரு பெயரும் இத்தலத்திற்கு உண்டு. 'மாமகளூர்' (திருமகள் குடிகொண்ட ஊர்) ஞானசம்பந்தர் தேவாரம் தான் இதனையும் உணர்த்துகிறது. பிரமன் பூசித்த தலம் ஆதலின் பிரமபுரம்; ஸ்தல விருக்ஷம் மூங்கில் ஆதலின் வேணுபுரம்; ஊழிக் காலத்தில் சிவபெருமான் பெரிய நாயகியாரோடு திருத்தோணிமேல் எழுந்தருளி இருந்தமையின் தோணிபுரம்; ஆணவ அழுக்கை அடியோடு அகற்றும் தன்மையால் கழுமலம்: தலங்களிலே தலையாயது ஆதலின் சிரபுரம்; பற்றித் தொடரும் மூவகை வாதைகளால் அல்லல் உறுபவர்க்குப் புகலிடம் தருதலின் புகலி.

பிரம தீர்த்தம், காளி தீர்த்தம், கழுமலநதி, விநாயக நதி, புறவநதி போன்று 22 புனித தீர்த்தங்களைக் கொண்டது. இறைவன்: பிரம புரீசர்:

அம்பிகை திருநிலை நாயகி; மான், மழு இன்றி ஒளிரும் சட்டநாதப் பெருமான் அருட்சக்தி நிறைந்தவர்: சீகாழிக்கோவை, சீகாழிக் கலம்பகம், சீகாழித் தல புராணங்களால் இத்திருத்தல மகிமையை விரிவாக உணரலாம்.

கடைஊழிக் காலத்தில் இறைவன் 64 கலைகளையும் ஆடையாகக் கொண்டு, பிரணவத் தோணியில் தேவியுடன் வந்து என்றுமே அழியாத இத்தலத்தில் தங்கினார் என்பதே இத்தலத்தின் உயர்விற்கு ஓர் எடுத்துக்காட்டு.

'ஊர் பரந்த உலகின் முதலாகிய ஓர் ஊர் இது'

என்ற தொடரே சிரபுரம் என்று அழைக்கப்படும் காரணத்தை உணர்த்தப் போதுமானது.

'உலகில் பலஊழிகள் தோன்றும் பொழுதெல்லாம்
பெயர் இலங்கு பிரமாபுரம்'

'கடல் கொள்ள மிதந்ததோர் காலம் இதுவென்னப்
பெருமை பெற்ற பிரமாபுரம்'

என்ற தொடர்களால் தோணிபுரம் பெயர்க்காரணம் இனிதே விளங்கும்.

கடைக்காப்புச் செய்யுளால் நான்முகன் பெயரால் அமைந்தது பிரமபுரம் என்று தெளிவாக உணர முடிகிறது.

இறுதியாக ஆலவாய் நகரில் இருந்தபோது, அங்கு வருகை தந்த தந்தையைக் கண்டதும் இத்திருத்தலத்தின் நினைவால் உந்தப் பாட்டுப் பாடிய பதிகத்தின் பாடலோடு இப்பதியை நிறைவு செய்கிறேன்.

"மண்ணில் நல்லவண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணின் நல்லகதிக்கு யாதுமோர் குறைவிலைக்
கண்ணின் நல்லஃதுறும் கழுமல வளநகர்ப்
பெண்ணின் நல்லாளொடும் பெருந்தகை இருந்ததே".

2. புள்ளிருக்கு வேளூர்

சீர்காழியை அடுத்துள்ள சோழநாட்டுத் திருத்தலம். 'வைதீஸ்வரன் கோயில்' என்ற பெயரால் இன்று வழங்கப்படுகிறது. சடாயு, சம்பாதி என்னும் பறவைகளும், வேதங்களும், கந்தவேளும், பூஜித்த தலமாதலின் 'புள்ளிருக்கு வேளூர்' என்ற பெயர் பெற்றது. இராமன், இலக்குவன், சப்த ரிஷிகள் பூஜித்த தலம். திருஞானசம்பந்தரும், திருநாவுக்கரசரும் பாடிப் பரவிய தலம்.

இறைவன் : வைத்தியநாதர் (தீராநோய் தீர்த்தருள வல்லான்)
அம்பிகை : பாலாம்பிகை (தையல்நாயகி)
தலவிருக்ஷம் : வேப்பமரம்
தீர்த்தம் : சித்தாமிர்த தீர்த்தம், அங்கசந்தான தீர்த்தம்.

குமரகுருபரர் பிள்ளைத்தமிழ் கொண்ட முத்துக்குமாரசுவாமி கோயில் கொண்டிருப்பதும் இத்தலமேயாகும்.

இத்தலத்து இறைவனையும், இறைவியையும் முப்போதும் சிந்திப்போர் பவப்பிணியாம் பிறவிப் பிணி நீங்கப் பெறுவர் என்றால் உடல், உளப் பிணிகள் தீர்வதற்குக் கேட்பானேன்? வடமொழியில் ஓர் அருமந்திரம் இத்தலத்து இறைவனின் திருவருட் செயலை நினைவிற் கொணர்கிறது.

''பாலாம்பிகேச வைத்யேச பவரோக ஹரேதிச
ஜபேந் நாமச் த்ரயம் நித்யம் மஹாரோக நிவாரணம்''

பாலாம்பிகை துணைவன் வைத்தியநாதன் பிறவிப் பிணியை அறவே களைவான். அவன் பெயரை நாளும் மும்முறை நினைக்க எத்தகைய கொடிய பிணிகளும் தீரும் என்பதே இதன் பொருள்.

சடாயுபுரி, சம்பாதிபுரம், குருகூர், கந்தபுரி, வேளூர் தினகரபுரி, பரிதிபுரி, வேதபுரி, புள்ளூர், ஆதிவைத்தியநாதபுரி எனப் பல பெயர்கள் கொண்டது. புள்ளிருக்கு வேளூர், சடாயு, சம்பாதி எனும் பறவைகள் வழிபட்டதால் சடாயுபுரி, சம்பாதி புரம், புள்ளூர், குருகூர்; கந்தன் வழிபட்டதால் கந்தபுரி, வேளூர்; கதிரவன் வழிபட்டதால் தினகரபுரி, பரிதிபுரி; வேதங்கள் வழிபட்டதால் வேதபுரி; வைத்தியநாதன் குடி கொண்ட தலமாதலின் ஆதிவைத்ய நாதபுரி.

சிவனுக்கு உரிய திருத்தலங்களில் சிறப்புடையது ஐந்து என்பர். மதுரை, கேதாரம், திருவானைக்கா, ஸ்ரீவாஞ்சியம், புள்ளிருக்குவேளூர் என்பன அவை.

அங்காரகனுக்கு உரிய திருத்தலம் இது. செவ்வாய் தோஷம் உடையவர்கள் இத்தலத்தை நாட அங்காரகன் அருள் புரிவான்.

''மந்திரமும் தந்திரமும் மருந்துமாகித்
தீராநோய் தீர்த்தருள வல்லான்''

என்று திருநாவுக்கரசர் திருக்கோயிலில் குடிகொண்ட வைத்தியநாதரைப் பாடிப் பரவுகிறார். சடாயு, சம்பாதி என்றும் பறவைகள் வழிபட்ட செய்தியையும் திருக்குறுந்தொகையில் அவர் குறிப்பிடுகிறார்.

''புள்ளினார் பணிபுள் ளிருக்கு வேளூர்
வள்ளல் பாதம் வணங்கித் தொழுமினே''.

திருஞானசம்பந்தர் தாம் பாடிய இவ்வூர்த் திருப்பதிகத்தில் ஒவ்வொரு பாடலிலும் பறவைகள் வழிபட்டதை விரிவாகவே பேசுகிறார்.

1. **'சம்பாதி சடாயு என்பார் தாமிருவர்**
   புள்ளானார்க்கு அரையனிடம்'
2. **'இராவணனை மேலோடிப் பீடழித்துப்**
   பொய்சொல்லாது உயிர் போனான்'

3. யோசனை போய்ப் பூக்கொணர்ந்து
அங்கு ஒருநாளும் ஒழியாமே
பூசனை செய்து இனிதிருந்தான்'.

4. 'ஆகாயத் தேரோடும் இராவணனை அமரிண்கண்
போகாமே பொருதழித்தான்'.

5. 'வேதத்தின் மந்திரத்தால் வெண்மணலே சிவமாகப்
போதத்தால் வழிபட்டான்'

6. 'இராவணன் தண்வலி கருதி வந்தானைப்
புறங்கண்ட சடாயு என்பான்'

7. 'பத்தியினால் வழிபட்டுப் பலகாலம் தவம்செய்து
புத்தியொன்று வைத்துகந்தான்'

8. 'எண்ணின்றி முக்கோடி வாணாள துடையானைப்
புண்ணொன்றப் பொருதழித்தான்'

9. 'ஆதித்தன் மகன்என்ன அகல்ஞாலத் தவரோடும்
போதித்த சடாயு என்பான்'

10. 'இலங்கைக்கோன் மலங்கச் சென்று இராமர்க்காய்ப்
புடைத்(து) அவனைப் பொருதழித்தான்'

பத்துப் பாடல்களில் பல பாடல்களில் சீதையை இராவணன் எடுத்துச் சென்றபோது சடாயு நிகழ்த்திய அரும்போர் நிகழ்வுகளைச் சித்தரிக்கிறார் ஞானசம்பந்தர். சடாயு, சம்பாதி இருவரது சிவபக்தியைச் சிறப்பித்துப் பேசுகிறார். நாள்தோறும் யோசனை தூரம் சென்று பூக்கொணர்ந்து சிவனை அருச்சித்த வரலாறு அறியமுடிகிறது. சம்பாதி சடாயுவின் தமயன் என்பதும், தசரதன் நண்பன் என்பதும் நாமறிந்த செய்திகளே.

புள்ளிருக்குவேளூர் இறைவன் தீரா நோய் தீர்க்கும் தண்மையன் என்பதைப் பதிகத்தின் இறுதிப் பாடலால் உய்த்துணர முடிகிறது.

"செடியாய உடல் தீர்ப்பான் தீவினைக்கோர் மருந்தானான்"

என்ற தொடரால் பிறவிப் பிணி தீர்க்கும் பெம்மான் புள்ளிருக்கு வேளூரான் எனத் தெரிய வைக்கிறார்.

3. திருக்கருப்பறியலூர்

குழந்தைத் தவம் வேண்டி திருக்கருகாவூர் செல்வதேபோல், திருமணத்தடை நீங்க வேண்டி திருமணஞ்சேரி செல்வதே போல், கிரக தோஷ நிவர்த்தி வேண்டி திருநள்ளாறு, ஆலங்குடி, காளத்தி போன்ற நவக்கிரகத் தலங்களை நாடுவதே போல் பிறவிப் பிணியை எளிதில் போக்கச் செல்ல வேண்டிய திருத்தலம் திருக்கருப்பறியலூர்.

மேலைக் காழி என்றும், தலைஞாயிறு என்றும் வழங்கப் பெறும் இத்தலமும் புள்ளிருக்கு வேளூர் அருகில் உள்ள திருத்தலமேயாகும்.

இறைவன் : குற்றம் பொறுத்த நாதர்
இறைவி : கோல்வளை நாயகி
தீர்த்தம் : இந்திர தீர்த்தம், சூரிய தீர்த்தம்
தலவிருக்ஷம் : கொகுடி முல்லை

இத்தலம் மீண்டும் பிறவி வராமல் பிறவி வேர் அறுக்கும் தன்மையால் கருப்பறியலூர் என்றும் பெயர் பெற்றது. காழிக்கு மேல்பால் உள்ளதால் மேலைக்காழி; வினைப்பயனை முற்றும் ஒழித்தலின் கன்ம நாசபுரம்; கதிரவன் பூஜித்த காரணத்தால் ஆதித்தபுரம்; பூதிகா வனம் என்ற திருப்பெயரும் இத்தலத்திற்குண்டு.

ஆளுடைய பிள்ளையார் பாடிய ஒரு பதிகமும், ஆளுடை நம்பி பாடிய இரு பதிகங்களும் உடையது இத்தலம். இந்திரன் புரிந்த குற்றத்தைப் பொறுத்துத் திருவருள் புரிந்தமையால் இறைவன் குற்றம் பொறுத்த நாதர் என்று அழைக்கப் படுகிறார். ஆளுடைய அரசின் திருப்பதிகத்தில் வைப்புத் தலமாக இத்தலம் இடம் பெற்றுள்ளது.

பிறவி எப்பொழுதும் மாயும்? நல்வினை செய்வதால் மாயுமா? மாயாது. தீவினை, நல்வினை இழுவினையும் ஓய்ந்தால்தான் பிறவியற முடியும். புண்ணியம் செய்தோர் நல்லுலகு எய்தலும், தீவினை புரிந்தோர்; அருநரகு எய்தலும் இயற்கை. இரு வினைகளுக்கு ஏற்ப ஒவ்வொரு உயிரும் புல்லாகிப் பூடாய், புழுவாய், மரமாகி........ பிறந்து இறந்து மீண்டும் பிறந்து தொடர்ந்து வினைப்பயனை நுகர்ந்துதான் தீர வேண்டும். ஆகவே தான் பரந்தாமன் கண்ணன் கீதையிலே வினைப்பயன் கருதாப் பணிசெய்ய, பயன் கருதாப் பக்தி செய்யப் பணிக்கிறான். அத்தகு நிலையில்தான் ஞானம் உதித்து தன்னில் பிற உயிரையும், பிற உயிர்களில் தன்மையுங் கண்டு மெய்ப்பொருள் உணர்வு பெற்று இறைவனோடு இரண்டறக் கலக்க முடியும்.

திருஞானசம்பந்தர் இதனைக் கருப்பறியலூர்த் திருப்பதிகத்தில் கோடி காட்டுகிறார்.

''சுற்றமொடு பற்றவை துயக்கற அறுத்து
குற்றமில் குணங்களொடு கூடும் அடியார்கள்
மற்றவரை வானவர்தம் வானுலக மேற்றக்
கற்றவன் இருப்பது கருப்பறி யலூரே.

வேதியர்கள் வேள்வி செயும் திருத்தலம்; காலனைக் காலால் உதைத்த பெம்மான் குடிகொண்ட திருத்தலம்; காமன் உடல் காய்ந்த

தேவன் குடிகொண்ட திருப்பதி என்றெலாம் இறைவன் புகழ் பாடும் திருஞானசம்பந்தர், 'கொகுடிக்கோயிலில் கொலுவிருக்கும் இறைவன் குற்றம் அறியாத பெருமான்' என்றும் பாடுகிறார். பிறவிப் பிணி தவிர்க்க விரும்புவோர் அதற்கிசைந்த குணம் பொருந்தி, ஒருமுறை கருப்பறியலூர் சென்று வழிபட்டால் குற்றம் பொறுத்த நாதர் பிறவாப் பெருநிலை நல்குவார் என்பதில் சிறிதும் ஐயமில்லை. நம்பி ஆரூரரும், பறையாத வல்வினைகள் பறைந்தொழிய கொகுடிக் கோயில் சென்று வழிபடப் பணிக்கிறார்.

4. திருப்பனந்தாள்

இறைவன் : செஞ்சடையப்பன் (அருண ஜடேசன்)

இறைவி : பெரியநாயகி (பிரஹந்நாயகி)

தலவிருக்ஷம் : பனை (இது ஆதியில் ஐந்து கிளையை உடையதாக இருந்தது என்பர்)

திரு.உ.வே. சாமிநாதய்யர் அவர்கள் இத்தலத்தை 'ஷண்மங்கல க்ஷேத்திரம்' என்று குறிப்பிடுகிறார் அவையாவன:

1. க்ஷேத்திரம் 2. நதி (மண்ணியாறு) 3. வனம் (பனங்காடு)
4. புரம் (பிரமபுரம்) 5. விமானம் 6. சைலம் (ஊருடையப்பர் கோயில்)

மேற்கு நோக்கிய சந்நிதி; புனித தீர்த்தங்கள் பத்து; சீர்காழி புள்ளிருக்குவேளூர், திருப்பனந்தாள் முத்தலங்களும் திருக்கைலாய பரம்பரை, தருமையாதீனத்திற்கு உட்பட்டன. சைவமும், தமிழும் இனிதே வளர்க்கும் குமரகுருபரர் வழிவந்த சைவத் திருமடம் ஒன்று இவ்வூர்க்கு அணிசெய்கிறது.

தாடகை, சூரியன், நாக கன்னிகை, யக்ஞ குப்தன், தருமசேனன் ஆகியோர் பூஜித்துப் பேறுபெற்ற திருத்தலம்.

சிவனடிக்கு அன்பு பூண்ட நெஞ்சமுடைய தாடகை என்னும் மங்கை நல்லாள் ஒருத்தி நாளும் இத்தலத்து இறைவனைப் பூஜித்து வருகையில், ஒருநாள் மலர்மாலை அணிவிக்க இருகரங்களை எடுத்த பொழுது ஆடை நழுவ, முழங்கையால் ஆடையை இருக்கிக் கொண்டு தவித்தனள். அவள் உள்ளத்து வேதனையை உணர்ந்த இறைவன் தமது திருமுடியை வளைத்து, அம்மாலையை ஏற்றுக் கொண்டார் என்றால் அவரது எளிமைக்கும், அவளது அன்பிற்கும் எல்லை ஏது? அருகில் 'சுப்பிரமணிய நதி' என்னும் பெயருடைய மண்ணியாறு ஊருக்கு அழகு சேர்க்கிறது. மூர்த்தி, தலம், தீர்த்தம் மூன்றாலும் பெருமை கொண்ட திருத்தலம் திருப்பனந்தாள்.

"கண்பொலி நெற்றியினான் திகழ்கையிலோர் வெண்மழுவான்
பெண்புணர் கூறுடையான் மிகுபீடுடை மால்விடையான்

விண்பொலி மாமதி சேர்தரு செஞ்சடை வேதியன்ஊர்
தண்பொழில் சூழ்பனந்தாள் திருத்தாடகை ஈச்சரமே''.

செஞ்சடையப்பனாம் அருணஜடேசன் திருக்கோயில் கொண்டு திருவருள்பாலிக்கும் ஆலயத்திற்குத் 'தாடகை ஈச்சரம்' என்ற பெயரையே திருஞானசம்பந்தர் சூட்டி மகிழ்கிறார் என்றால் தாடகையின் அன்புள்ளத்தை முற்றும் உணர்வார் யாரே! பொதுவாகத் தன் அகக் கண்ணால் கண்டு இறைவனைப் பாடி வரும் பிள்ளையார் திருக்கண் களுக்கு முதல் பாடலிலேயே 'செஞ்சடை' தோற்றம் பெற்றது வியப்பிற் குரியதே. பற்றித் தொடரும் இருவினையும் உடல் தோன்றிய பல்மணியும் பாழாக தாடகை ஈச்சரத்து இறைவனைப் பணிமின்கள் என்கிறார். பத்துப் பாடல்களில் நான்கு பாடல்களில் 'செஞ்சடை' என்ற சொல்லை எடுத்தாள்வதும் செஞ்சடையப்பன் என்றும் பெயரை நம் கண்முன் நிறுத்திடும். மேலும் சிவபெருமான் திருத்தோற்றத்தைப் பலப்பல பாடல் களில் நம் கண்முன் நிறுத்தும் ஞானக்குழந்தை மண்ணியாற்றையும் மணக்கச் செய்கிறார்.

''படம்புரி நாகமொடு திரைபன் மணியும் கொணரும்
தடம்புனல் சூழ்பனந் தாள்''

மற்றொரு பாட்டில் பொய்கை வளம் பாடுகிறார்.

''போதவிழ் பொய்கை தன்னுள் திகழ்புள் ளிரியப்
பொழில் வாய்த் தாதவிழும் பனந்தாள்''.

திருஞானசம்பந்தர் தம் சமகாலத்து வாழ்ந்தவரும், திருக்கடவூர் திருப்பதியில் குங்கிலியத் திருப்பணி புரிந்து இறைவனால் ஆட் கொள்ளப் பட்டவருமாகிய குங்கிலியக் கலய நாயனார் தாடகை என்னும் மாதரசியின் பக்தி வலைக்குட்பட்டுத் தலை தாழ்த்தி அவள் ஈந்த மாலையை ஏற்ற நிலையில் சோழநாட்டு மாமன்னனும், பிறரும் இறைவனை நிமிரச் செய்யச் செய்த முயற்சிகள் வீணாயினதைக் கேள்வியுற்று, திருப்பனந்தாள் சென்று, கயிற்றைத் தம் கழுத்திற் பூட்டி இழுத்திட பனசைப் பதிவாழ் செஞ்சடையப்பன் தலை நிமிர்ந்த வரலாறு நெஞ்சை நெகிழச் செய்கிறது.

''மூர்த்தி தலம் தீர்த்தம் முறையாய்த் தொடங்கி னோர்க்கோர்
வார்த்தை சொல சற்குருவும் வாய்க்கும் காண் பராபரமே''.

(தாயுமானவர்)

பிறவிக் கடலிலிருந்து கரையேறி முக்தியெனும் பேரானந்தப் பெருநிறைவு எய்த மூர்த்தி, தலம், தீர்த்தம் தொழுது வழிபடுவது நம் இந்து சமய நெறியாகும். அந்நெறியில் ஆளுடைய பிள்ளையாரின் பாடல் பெற்ற ஒப்பற்ற நான்கு திருத்தல மகிமைகளை ஆராதித்து அமைவோமாக.

13. சம்பந்தரின் வினை தீர்க்கும் பதிகம்

உமா அறிவழகன், சென்னை.

பதிக வரலாறு

''மாதவஞ் செய்த தென் திசை''யில் - தமிழகத்தில் - தொண்டை நாடு தனித்த சிறப்புடையது. மலைநாடான கேரளம், யானைகளை மிகுதியாக உடையது. சோழ வளநாடு காவிரியின் வளத்தால் செழிப் புற்றுத் தமிழ்நாட்டின் நெற்களஞ்சியமாகத் திகழ்வது. ஆழ்கடல் பகுதியையுடைய பாண்டிய நாடு, விலையுயர்ந்த முத்துக்களுக்கு இருப்பிடமாக உள்ளது. தொண்டை நாடு, அறிவிற் சிறந்த ஆன்றோர் களையும், சான்றோர்களையும் மிகுதியாகப் பெற்று திகழும் மேன்மை யுடையது. இதனாலேயே ''தொண்டை நன்னாடு'' என்று சிறப்பிக்கப் படுகின்றது.

தமிழ் மண்ணில் எல்லாவிடங்களிலும் சான்றோர்கள் வாழ்ந்திருந் தாலும் தொண்டை நன்னாடே அதற்குச் சிறப்பு நிலைகளனாகக் கருதப் பட்டது. இத்தொண்டை நாட்டின் பெருமையை, இதன்கண் வாழ்ந்த அறிஞர்களின் மேன்மையைத் ''தொண்டை மண்டல சதகம்'' என்ற நூலில் பலவாறு புகழ்ந்து கூறப்பட்டுள்ளது.

தொண்டை நாட்டு மக்கள் - சான்றோர்கள் என்றும் நெறி தவறாதவர்கள், நடுநிலை மாறாதவர்கள். மறந்தும் கூட தீயவற்றை நினையாத தூய நெஞ்சத்தினர் என்பது இந்நாட்டிற்கேயுரிய தனிச் சிறப்பாகும். இதனை, தொண்டை நன்னாட்டுச் சான்றோராகிய சேக்கிழார் பெருமான்,

''தீய என்பன கனவிலும் நினைவிலாச் சிந்தைத்
தூய மாந்தர்வாழ் தொண்டைநாடு''

என்று புகழ்ந்து பாடியுள்ளார்.

மூவர் பெருமக்களால் புகழ்ந்து பாடப்பெற்றுள்ள திருமுறைத் தலங்களுள் 32 தலங்கள் இந்நாட்டிலுள்ளன. இத்தொண்டை நாட்டின் இரு கண்களாகச் சொல்லப்படுவன காஞ்சிபுரமும், திருத்தணிகையும் ஆகும்.

முருகப்பெருமான் கோபம் தணிந்து, வள்ளியோடு வந்து விருப்புடன் தங்கியது தணிகை மலை. இதனாலேயே இதற்குத் திருத்தணி (கோபம்

தணிந்த இடம்) என்ற பெயருண்டு..மற்றதாகிய காஞ்சிபுரம் கோயில் களின் நகரமாகத் திகழ்வது. முத்தித் தலங்களில் ஒன்று சைவம், வைணவம், ஜைனம், பௌத்தம் ஆகிய எல்லாச் சமயங்களுக்கும் பொதுவிடமாகத் திகழ்ந்த பெருமையுடையது. இத்தகைய சீர்மிகு பெருமைகளை உடைய காஞ்சிபுரத்திற்கு அண்மையில் உள்ள பாடல் பெற்ற தலங்களுள் ஒன்று சேயாற்றின் கரையில் உள்ள திருமாகறல் தலம் ஆகும். இஃது பாடல் பெற்ற தொண்டை நாட்டுத் தலங்களுள் 7-ஆவதாகப் போற்றப்படுவது. இது ஞானசம்பந்தரால் போற்றிப் பாடப்பட்ட தலம் ஆகும். இத்தலம் வினையை போக்கும் பெருமை வாய்ந்தது. திருஞானசம்பந்தர் இத்தலத்திற்கு வந்து இறைவனைத் தொழுது பாடியுள்ள பதிகம். ''வினை நீங்கும் பதிகம்'' என்றே போற்றப் படுகின்றது. அப்பதிகத்தின் ஒவ்வொரு பாடலின் முடிவிலும் ''வினை நீங்கும்'' என்ற கருத்தமைந்த தொடரை வைத்துப் பாடியுள்ளார். இப்பாடல்கள் ஒவ்வொன்றிலும் திருமாகறலின் சிறப்பையும், வளத்தையும், அங்கு எழுந்தருளியுள்ள இறைவனின் சிறப்பையும், பெருமைகளையும் கூறிச் செல்கின்றார்.

விங்குவிளை கழனிமிகு கடைசியர்கள்
பாடல்விளை யாடல் அரவம்
மங்குலொடு நீள்கொடிகள் மாடமலி
நீடுபொழில் மாகறலுளான்
கொங்குவிரி கொன்றையொடு கங்கைவளர்
திங்களணி செஞ்சடையினான்
செங்கண்விடை யண்ணல்அடி சேர்பவர்கள்
தீவினைகள் தீரும் உடனே.

நன்றாக விளையும் கழனியில் பணி செய்யும் பெண்கள், பாடலும் ஆடலும் கொண்டு ஓசை எழுப்பி விளங்க, மேகத்தைத் தொடுகின்ற நீண்ட கொடிகள் உயர்ந்த மாடமாளிகைகளும் அடர்ந்த பொழில் களும் கொண்டு மாகறல் என்னும் பதி விளங்குகின்றது. அங்கு வீற்றிருக்கும் சிவபெருமான் தேன்துளிர்க்கும் கொன்றை மலரும், கங்கையும் சந்திரனும் திகழும் சடையுடன் சிவந்த கண்களையுடைய மால்விடை கொண்டு விளங்குபவர். அப்பெருமாள் திருவடியை நெஞ்சில் பதித்து ஏத்துவர்களுடைய தீவினைகள் யாவும் உடனே தீரும் என்கின்றார்.

கலையின்ஒலி மங்கையர்கள் பாடல்ஒலி
ஆடல்கவின் எய்தியழகார்
மலையின்நிகர் மாடம்உயர் நீள்கொடிகள்
வீசுமலி மாகறலுளான்

இலையின்மலி வேல்நுனைய சூலம்வலன்
ஏந்தியெரி புன்சடையினுள்
அலைகொள்புனல் ஏந்துபெரு மானடியை
யேத்தவினை யகலு மிகவே.

வேதங்களைப் பயிலும் ஒலியும் மங்கையர்களின் பாடல் ஆடல் ஒலிகளும் சேர்ந்து இனிமை தர மலையைப் போன்று உயர்ந்த அழகிய மாடங்களில் பெரிய கொடிகள் வீசுகின்ற செல்வ வளமிக்க திருமாகறலில் கூர்மையான சூலப்படை ஏந்தி நெருப்பையொத்த சிவந்த சடையில் கங்கையைத் தாங்கியுள்ள அப்பெருமானின் இனிய திருவடியை ஏத்தி வழிபட, வினை யாவும் நீங்கும்.

காலையொடு துந்துபிகள் சங்குகுழல்
யாழ்முடிவு காமருவுசீர்
மாலைவழி பாடுசெய்து மாதவர்கள்
ஏத்திமகிழ் மாகறலுளான்
தோலையுடை பேணியதன் மேலொர்சுடர்
நாகமசை யாவழகிதாப்
பாலையான நீறுபுனை வான்அடியை
யேத்தவினை பறையும் உடனே.

துந்துபிகள், சங்கு, குழல், யாழ் முதலிய இசைக் கருவிகள் முழங்க காலை மாலை ஆகிய இரு பொழுதிலும் மிக்க சிறப்புடன் வழிபாடு செய்து மகிழ்கின்ற மாதவர்கள் போற்றித் தொழும் திருமாகறல் தலத்தில் இருப்பவராகிய ஈசன் புலித்தோலை உடுத்தி, அதன்மேல் பாம்பினைக் கட்டி, பால் போன்ற வெண்மையான திருநீற்றை உடம்பில் பூசி காட்சி தரும் அவர் திருவடிகளைத் துதிக்க வினைகள் உடனே விலகிச் செல்லும்.

இங்குகதிர் முத்தினொடு பொன்மணிகள்
உந்திஎழில் மெய்யுளுடனே
மங்கையரும் மைந்தர்களும் மன்னுபுனல்
ஆடிமகிழ் மாகறலுளான்
கொங்குவளர் கொன்றைகுளிர் திங்களணி
செஞ்சடையி னான் அடியையே
நுங்கள்வினை தீரமிக ஏத்திவழி
பாடுநுகரா எழுமினே.

ஒளி உமிழும் முத்து பொன் மணிகள் இவற்றையும் அடித்துக் கொண்டு வரும் பெருக்கினையுடைய சேயாற்றில், மங்கையரும், ஆடவரும் நீராடி மகிழும் தலத்தில் உள்ளவராகிய இறைவனை அடியவர்

களாகிய நீங்கள் உங்கள் வினையெல்லாம் தீருமாறு வழிபாடு செய்து துதியுங்கள்.

துஞ்சுநறு நீலமிருள் நீங்கவொளி
தோன்றுமது வாழ்கழினிவாய்
மஞ்சமலி பூம்பொழிலின் மயில்கள்நடம்
ஆடல்மலி மாகறலுளான்
வஞ்சமத யானையுரி போர்த்துமகிழ்
வானொர் மழுவாளன் வளரும்
நஞ்சம்இருள் கண்டம் உடை நாதனடி
யாரைநலி யாவினைகளே.

வயல்களில் இருட்காலத்துத் தோன்றிய நீலோற்பல மலர்கள் இருள் அகன்று பொழுது விடிந்ததும் தன் நிறம் விளங்குமாறு தோன்ற, பலவகை பூக்கள் மலர்ந்து விளங்க, மேகங்கள் படிகின்ற உயர்ந்த மலர்ச் சோலைகளில் மயில்கள் நடனமாடுகின்ற தலத்தில் எழுந்தருளி யிருப்பவராகிய இறைவன் யானையின் தோலைப் போர்த்தி மகிழ்ந்து மழுவேந்தி, விஷம் உண்டு நீலகண்டராக விளங்குகின்ற திருமாகறலீஸ்வரரின் அடியவர்களை வினைகள் ஒருபோதும் துன்புறுத்த மாட்டா.

மன்னுமறை யோர்களோடு பல்படிம
மாதவர்கள் கூடியுடனாய்
இன்னவகை யால்இனிது இறைஞ்சிஇமை
யோரில்எழு மாகறல் உளான்
மின்னைவிரி புன்சடையின் மேன்மலர்கள்
கங்கையொடு திங்கள் எனவே
உன்னுமவர் தொல்வினைகள் ஒல்கஉயர்
வானுலகம் ஏறல் எளிதே.

மறையவர்களும், பலப்பல வேடங்களையுடைய மாதவர்களும் ஒன்று சேர்ந்து, பஞ்சாட்சர ஜபம் சொல்லிச் சொருபத் தியானம் முதலிய வற்றால் பெருமானைப் போற்றி, நரை, திரை, மூப்பு, சாக்காடு இன்றித் தேவர்களைப் போன்று விளங்குகின்ற சிறப்பினையுடைய இத்தலத்தில் இருக்கும் பெருமானின் ஒளிமிக்க சடையில் உள்ள மலர்களையும், கங்கையையும் பிறைச் சந்திரனையும் தம் மனதில் தியானித்து வழி படுபவர்கள் பண்டைய வினைகள் நீங்க, வானுலகப் பேற்றை எளிதில் அடைவர்.

வெய்யவினை நெறிகள்செல வந்தணையு
மேல்வினைகள் வீட்டலுறுவீர்

மைகொள்விரி கானன்மது வார்கழனி
மாகறலு ளான்எழிலதார்
கையகரிகால் வரையின் மேலதுரி
தோலுடைய மேனியழகார்
ஐயனடி சேர்பவரை யஞ்சியடை
யாவினைகள் அகலு மிகவே.

கொடிய வினைகள் வந்த வழியே திரும்பிச் செல்ல மேல்வரும் வினைகளை நீக்க முயல்கின்ற அடியவர்களே மேகங்கள் சூழ்ந்த ஆற்றங்கரைச் சோலைகளும் வயல்களும் மிகுந்த அழகிய திருமாகறல் தலத்தில் இருப்பவராகிய சிவபெருமான், கரிய யானையின் தோலைப் போர்த்திய மேனியராகிய இறைவனின் திருவடிகளை இடைவிடாது துதிப்பவரை வினைகள் வந்தடைவதற்கு அஞ்சி அகன்றோடும்.

தூசுதுகில் நீள்கொடிகள் மேகமொடு
தோய்வனபொன் மாடமிசையே
மாசுபடு செய்கைமிக மாதவர்கள்
ஓதிமலி மாகறலுளான்
பாசுபத விச்சைவரி நச்சரவு
கச்சையுடை பேணியழகார்
பூசுபொடி ஈசன்என ஏத்தவினை
நிற்றல்இல போகும் உடனே.

அழகிய மாடங்களின் மேலே கட்டப்பட்டுள்ள துணியாலான கொடிகள் மேகத்தோடு படியவும், குற்றமற்ற மாதவர்கள் நாடொறும் வேதங்களை ஓதியும் வழிபடுகின்ற பெருமையுடைய திருமாகறல் தலத்தில் இருப்பவராகியவரும், பாசுபத வேடத்தில் விருப்பமுடைய வராகி பாம்பை அரையில் அணிந்து அழகிய மேனியில் வெண்ணீறு பூசி விளங்குகின்ற இறைவனை வழிபட வினைகள் நில்லாமல் ஓடிப்போகும்.

தூயவிரி தாமரைகள் நெய்தல்கழு
நீர்குவளை தோன்றமது கண்
பாயவரி வண்டுபல பண்முரலும்
ஓசைபயில் மாகறல் உளான்
சாயவிரல் ஊன்றியஇ ராவணன்
தன்மைகெட நின்றபெரு மான்
ஆயபுகழ் ஏத்தும்அடி யார்கள்வினை
யாயினவும் அகல்வது எளிதே.

தாமரைகள், குவளை முதலிய நீர்ப்பூக்களில் உள்ள தேனைப் பருகுகின்ற வண்டுகள் எழுப்பும் பலவகை இசைகளும் மிகுந்து விளங்கு கின்ற திருமாகறல் தலத்தில் இருப்பவராகிய ஈசன் தன் விரலை ஊன்றி இராவணனின் வலிமை கெடுமாறு செய்த திருமாகறலீஸ்வரரின் அருட்புகழை நாளும் ஏத்தி வழிபடுகின்ற அடியவர்களின் வினைகள் அனைத்தும் எளிதில் நீங்கும்.

காலின்நல பைங்கழல்கள் நீள்முடியின்
மேலுணர்வு காமுறவி னார்
மாலும்மல ரானும்அறி யாமைஎரி
யாகிஉயர் மாகறல் உளான்
நாலும்எரி தோலும்உரி மாமணிய
நாகமொடு கூடியுடனாய்
ஆலும்விடை யூர்தியுடை அடிகள்அடி
யாரைஅடையா வினைகளே.

அழகிய கழல்களை அணிந்த திருப்பாதத்தையும் நீண்ட திருச்சடை யுடைய திருமுடியினையும் காணவேண்டும் என்ற வேட்கை கொண்ட திருமாலும் பிரமனும் அறிய முடியாதவராய் உயர்ந்தவர் திருமாகறலீசர். சிரிப்பு, நெற்றிக்கண், கரம், திருமேனி ஆகிய நான்கிலும் நெருப்பை யுடையவரும், தோலாடையும் நாகமும் அணிந்து விடையேறி வருபவருமாகிய திருமாகறலீஸ்வரப் பெருமானின் அடியவர்களை வினைகள் வந்து சேரமாட்டா என்கிறார்.

(இறைவன் சிரிப்பினால் திரிபுரத்தையும், நெற்றிக் கண்ணால் மன்மதனையும் எரித்ததையும், ஒரு கையில் நெருப்பு ஏந்தியிருப்பதையும், நெருப்பினைப் போன்று சிவந்த பவளமேனியனாக விளங்குவதையும் கருத்தில் கொள்க).

கடைகொள் நெடு மாடமிக வோங்குகமழ்
வீதிமலி காழியவர்கோன்
அடையும் வகை யால்பரவி அரனைஅடி
கூடுசம் பந்தன் உரையால்
மடைகொள்புன லோடுவயல் கூடுபொழில்
மாகறலுளான் அடியையே
உடையதமிழ் பத்தும்உணர் வார்அவர்கள்
தொல்வினைகள் ஒல்கும் உடனே.

வாயில்களையுடைய மாடங்கள் ஓங்கி விளங்குகின்ற வீதிகளை யுடைய சீகாழியின் தலைவனான ஞானசம்பந்தன் சிவபெருமானின் திருவடிகளைச் சேர்வதற்குரிய வழியாகத் துதித்துப் பாடியுள்ள பத்துப்

பாடல்களால் நீர்வளமிக்க வயல்களும் சோலைகளும் நிறைந்த திருமாகறல் தலத்தில் வீற்றிருந்தருளும் திருமாகறலீஸ்வரரின் திருவடிகளைப் போற்றிப் பரவுவோரின் பழமையான வினைகள் வலிகுறைந்து, நீங்கி இல்லாமல் போகும்.

கோயில் வரலாறு

இராசேந்திர சோழனுக்கு இறைவன் பொன் உடும்பாகத் தோன்றிப் புற்றில் காட்சி தந்த பதி ஆகும்.

இறைவன் பெயர்

உடும்பீசர் (மாகறம் - உடும்பு) மக்கள் வழக்கில் மாகறலீஸ்வரர் என்று வழங்கப்படுகின்றது.

இறைவன் பிற பெயர்கள்

பாரத்தழும்பர், புற்றிடங் கொண்டார், நிலையிட்ட நாதர், மங்கலங்காத்தவர், பரிந்து காத்த நாதர், மகம் வாழ்வித்தவர், அகத்தீஸ்வரர், அடைக்கலங் காத்த நாதர், வேள்வி காத்த நாதர்.

இறைவியின் பெயர் : திரிபுவன நாயகி

தல விநாயகர் : பொய்யா விநாயகர்

இவர் சேயாற்றின் கரையில் உள்ள மண்டபத்தில் இருக்கின்றார். இவர் மீது பாடப்பட்டுள்ள பழம் பாடல்

"வெய்யாக் கதிரவன்முன் இருள்போல வினையகற்றும்
கையானே யான்தொழ முன்நின்று காத்தருள் கற்பகமே
செய்யாற்றின் வடபால் இருக்கின்ற செங்கண்மால் மருகா
பொய்யா விநாயகனே திருமாகறல் புண்ணியனே".

தல மரம் : எலுமிச்சை

தல தீர்த்தம் : அக்னி தீர்த்தம்

தலச் சிறப்புகள்

இத்தலம் இந்திரன் வழிபட்ட சிறப்புடையது. கஜபிரஷ்ட விமான அமைப்புடையது. மாகறன், மலையன் என்னும் இரு அசுரர்கள் வழிபட்டத் தலம். இக்கோயிலில் சோமாவார தரிசனம் விசேஷமாகச் சொல்லப்படுகின்றது. மக்கட்பேறு வேண்டுவோர் அங்கப்பிரதட்சணம் செய்யும் வழக்கம் பண்டை நாளில் இருந்ததாகச் சொல்லப்படுகின்றது.

வரலாற்றுச் செய்திகள்

தற்பொழுது கோயில் அமைந்துள்ள இடத்தில் பலா மரங்கள் இருந்தன. இராசேந்திரசோழ மன்னனுக்கு இங்கிருந்து, பலாப்பழம்

ஒன்று தினமும் அனுப்பப்பட்டது. அது வழியில் தில்லைப் பெருமானுக்கு நிவேதிக்கப்பட்டு, மன்னனுக்குப் பிரசாதமாக அனுப்பப்பட்டு வந்தது. காலப் போக்கில் இக்கோயிலில் பணி செய்தோர் இம்மரத்தைத் தீயிட்டு அழித்தனர்.

பலாப்பழம் வராதது அறிந்த மன்னன் விவரத்தினை அறிய ஆட்களை அனுப்பிச் செய்தி அறிந்தான். விவரம் அறிந்து அவர்களைத் தண்டிக்க எண்ணினார். கடமை மறந்த பணியாளர்களை இரவோடு இரவாக ஊரை விட்டு அழைத்துச் சென்று மறுநாள் பொழுது விடியும் இடத்தில் விட்டுவிடுமாறு உத்தரவிட்டான். அவ்வாறே அவர்கள் அழைத்துச் செல்லப்பட்டு, விடப்பட்ட ஊர் "விடிமாகறல்" என்று இன்றும் வழங்கப்படுகின்றது. (இவ்வூர் திருத்தணிக்கும் திருவள்ளூருக்கும் இடையில் உள்ளது.

பணியாளர்களுக்குத் தண்டனை வழங்கிவிட்டு மன்னன் திரும்புகையில் பொன்நிறத்தில் ஏதோ ஒன்று மன்னன் முன்பு சென்றது. அது என்ன என்பதை அறிய வீரர்கள் அதைப் பிடிக்க முயல தலைப்பகுதி புற்றிற்குள் சென்று வால்பகுதி மட்டுமே மேலே இருந்தது. உடும்பு என்பதை அறிந்த அந்நேரத்தில் அசரீரியாகக் குரல் ஒலித்து, சோழனை கோயில் கட்டும்படி பணித்ததாகக் கூறப்படுகின்றது. அதன் பின்னர் சோழன் இக்கோயிலைக் கட்டினான் என்றும் கூறுவர். இதனை அக்கோயில் கல்வெட்டு.

"சயங்கொண்ட சோழ வளநாட்டு
பொற்கோட்டத்து மாகறல் நாட்டு மாகறல்"

என்று குறிக்கப்பட்டுள்ளது. இங்குள்ள சிவலிங்க மூர்த்தம் சுயம்பு - உடும்பு வடிவில் சிறுத்து காணப்படும்.

கோயில் அமைப்பு

கோயிலுக்குச் செல்லும் நம்மை 5 நிலைகள் கொண்ட கிழக்கு நோக்கிய ராஜ கோபுரம் வரவேற்கிறது. உட்சென்றால் கொடிமரம் - பலிபீடம், கொடிமரத்து விநாயகர் தரிசனம், இடப்பக்கம் அக்கினி தீர்த்தக் குளம் உள்ளது. விசாலமான வெளிப்பிரகாரத்தை வலம் வந்து, படிகளையேறித் துவார விநாயகரையும் சுப்பிரமணியரையும் துவார பாலகர்களையும் வணங்கி உள்ளே வாயிலைக் கடந்தால் நேரே மூலவர் தரிசனம் கிடைக்கிறது. உட்பிரகாரத்தில் ஆறுமுகர் உள்ளார். அடுத்துள்ளது, நால்வர் தரிசனம். அவர்களை தொழுது, திரும்பினால் நவக்கிரக சந்நிதி, யானைமீது அமர்ந்து முருகன் தோற்றம் நெஞ்சத்தைக் கவர்கின்றது. பைரவரைத் தொழுது, அம்பாளைக் கும்பிட்டு, படியேறி உடும்பீசரைத் தரிசிக்கிறோம். மூலவர்- உடும்பு வால் போன்று சிறுத்த சிவலிங்கம், அற்புதமான அமைப்புடைய மூர்த்தியாகும்.

இத்தலத்தில் அண்மையில் நடைபெற்ற அற்புதம்

சேலத்தில் வாழ்ந்திருந்த சுப்பராயப் பிள்ளை என்பவருக்கு, உடலில் இடுப்பின் கீழ்ப்பகுதி முற்றிலும் செயலற்றுப் போனது. எல்லாவித மருத்துவமும் பார்த்தும் பயனில்லை. பின்பு திருமுறையில் கயிறு சார்த்திப் பார்த்தார். திருமாகறல் பதிகம் வந்தது. எனவே அவர் குடும்பத்தினருடன் திருமாகறல் தலத்துக்கு வந்து தங்கினார். நாடொறும் நீராடி இத்திருக்கோயிலில் தலப் பதிகத்தைப் பாராயணம் செய்த வாறே (சக்கர நாற்காலியில் அமர்ந்து) காலையிலும் மாலையிலும் வலம் வந்து பெருமானை மனமொன்றிப் பிரார்த்தித்தார். சிலகாலம் இடைவிடாது வலம் வந்து பிரார்த்தித்த இவருடைய வழிபாடு பயன் தந்தது. திருமாகறலீசுவரப் பெருமான் திருவருளால் உடம்பு பூரண குணமடைந்தது. சக்கர நாற்காலியின் துணையின்றி நடந்து ஊர் திரும்பினார். இந்நிகழ்ச்சி இவ்வூர் மக்கள் அனைவரும் அறிந்ததே.

ஆதலின் வழிபட்டோர் வினையை நீக்குகின்ற பெருமான் இத்தலத்து இறைவர் மனமுருகி ஓதுவோர் எண்ணிய எண்ணியாங்கு எய்துவர் என்பது கண்கூடான உண்மை. திருவருட்பிரகாச வள்ளலார் - இராமலிங்க சுவாமிகள் இப்பெருமானைத் தம் அருட்பாவில் ''யோகு அறவிலாத் தவத்தோர் உன்ன விளங்கு திருமாகறலில் அன்பர் அபிமானமே'' என்று புகழ்ந்து பாடியுள்ளார்.

திருஞானசம்பந்தர் தம் திருப்பதிகங்கள் யாவும் இறைவனுடைய திருவடியையே ஒத்து விளங்கும் சிறப்புடையது. இதனைத் திருஞான சம்பந்தர் வாக்கின்வழி நின்று கூற வேண்டுமாயின் இப்பதிகத்தில் ''காழியவர் கோன் அடையும் வகையால் பரவி அரனை அடிகூடும் சம்பந்தன் உரையில் மடைகொள் புனலோடு வயல் கூடு பொழில் மாகறலுளான் அடியையே உடைய தமிழ் பத்தும்'' என்கிறார். ஈசன் மலரடியும் திருஞானசம்பந்தரின் திருப்பதிகமும் ஒன்றாதலைக் காட்டும் பாங்கு அறியப்படுகின்றது.

இவ்வழி நின்று இத்திருப்பதிகத்தினை நன்கு பயின்று வினைகள் நீங்கி வாழ்வோமாக.

14. சம்பந்தர் பாடல்களில் நெஞ்சோடு கிளத்தல்

ர. உமாதேவி, கோவை.

இயந்திர கதியில் இயங்கிக் கொண்டிருக்கும் இன்றைய உலகில் மனிதனின் உணர்வுகள் புறந்தள்ளப்படுகின்றன. அதனால் இன்பமும், அமைதியும் இல்லாமல் போய் விட்டது. அறிவியலின் சாதனைகள் மனிதனைத் தன் கட்டுப்பாட்டுக்குள் சிக்க வைத்துள்ளன. இதிலிருந்து விடுபட வேண்டுமாயின் அவன் மனதை வெல்லவேண்டும். அவனிடத்திலே உள்ள குறைகளைத் தகர்த்து நிறைகாணும் முயற்சியில் அவன் இறங்க வேண்டும். அதற்கு அடிப்படை அகத்தாய்வுப் பயிற்சியே யாகும். இப்பயிற்சி பெற்றோர் எண்ணங்களைச் சீரமைத்து, தான் உயர்வதோடு சமுதாயத்தையும் உயர்த்துவர். ஞானசம்பந்தர் நெஞ்சை விளித்துக் கூறிய கருத்துக்கள் அகத்தாய்வுப் பயிற்சிக்கு வித்திடுவதாக அமைகின்றன.

நெஞ்சம் - விளக்கம்

மனம், அகம், உள்ளம், நெஞ்சம் போன்றவை ஒரு பொருளைக் குறிக்கும் பல சொற்கள். பிற உயிர்களில் இருந்து மனிதனை வேறு படுத்திக் காட்டுவது மனமே ஆகும். மனிதன் சிந்திக்கத் தொடங்கிய நாளிலிருந்தே மனம் பற்றிய ஆய்வுகளும், கருத்துக்களும் தொடங்கி விட்டன. தொல்காப்பியர் உயிர்களின் அறிவு நிலை பற்றிக் கூறும்போது,

"ஒன்றறி வதுவே உற்றறி வதுவே

....

ஆறறிவதுவே அவற்றோடு மனனே" (தொல் : மரபு : 27)

என்றும்

"மக்கள் தாமே ஆறறி வுயிரே" (தொல் : மரபு : 33)

என்றும் குறிப்பிடுகிறார்.

வளர்ந்து வரும் விஞ்ஞான உலகில் மனம் பற்றிய ஆய்வுகள் வளர்ச்சி பெற்றிருந்தாலும் கூட முழுமையாக மனம் பற்றி உணர அவை துணை நிற்பதில்லை. ஆனால், நமது ஆன்மீகவாதிகள் நெடுங்காலம் முன்பே இதைப் பற்றி ஆய்ந்து, நெறிப்படுத்தி வாழ வழிவகைகளைக் கூறிச் சென்றுள்ளனர். அவற்றைப் பின்பற்றினால் நாமும் நலம் பெற்று, நாட்டிற்கும் வளம் சேர்க்க இயலும்.

புற உலகிலிருந்து கருவிகளின் மூலம் பெறப்படும் அனுபவங்களை உள்வாங்கி, அவற்றிற்குச் செயல் வடிவம் கொடுப்பது மனமே ஆகும். எனவே, அனைத்திற்கும் அடிப்படையாய் அமையும் மனதை வளப் படுத்தினால்தான் அதிலிருந்து வெளிப்படும் எண்ணம், சொல், செயல் ஆகியவை அனைவருக்கும் பயனுடையதாய், இன்பம் தருவதாய் அமையும்.

இலக்கியங்களில் நெஞ்சம்

பழந்தமிழ் இலக்கண, இலக்கிய நூல்கள் அகம், புறம் பற்றி விரிவாகப் பேசுகின்றன. புறம் சிறக்க அகமே அடிப்படை. வள்ளுவரும்,

"அறத்திற்கே அன்புசார் பென்ப அறியார்
மறத்திற்கும் அஃதே துணை" (குறள் - 76)

என்கிறார். ஒருவன் ஒருத்தி இணைந்து வாழ்வதே அகம். இதைப் பற்றி நம்பியகப் பொருளில் மிக விரிவாக எடுத்துரைக்கப்படுகிறது. இதில், நெஞ்சோடு கிளத்தல், நெஞ்சோடு புலத்தல் போன்ற துறைகள் சுட்டப்படுகின்றன. தன் அகத்தே தோன்றும் இன்ப துன்ப உணர்வு களை எல்லோரிடத்தும் வெளிப்படுத்த இயலாதபோது தன் நெஞ்சோடு கூறுதலை ஒரு மரபாகக் கொண்டுள்ளனர். நாற்கவிராச நம்பி கூற்று நிகழ்த்துபவர்களைப் பற்றிக் கூறும்போது,

"இறையோன் முதலோர் யாரொடு மின்றித்
தம்மோடு தாமே சாற்றியும் அமைப"
(நம்பியகப்பொருள்: ஒழியு : 15)

என்கிறார். அதாவது தலைவன் தலைவியிடத்துக் கூற்று நிகழ்த்துபவர் களைக் கூறி, அவர்கள் தம்மோடு தாம் கூறுதலும் உண்டு என்று குறிப்பிடுகிறார். பட்டினப்பாலை போன்ற அக இலக்கியங்களில் தலைவன் தலைவியைப் பிரிய நேரும்போது, தம் நெஞ்சோடு கூறிச் செல்வழுங்கு தலைக் காண முடிகிறது.

சிற்றிலக்கியங்களில் ஒன்றான தூது இலக்கியத்தில் நெஞ்சையே தூதாக அனுப்பும் நெஞ்சுவிடு தூது நூல்கள் பல உள்ளன. சைவ சித்தாந்தச் சாத்திரங்களுள் ஒன்றான நெஞ்சுவிடு தூதில் உமாபதி சிவாச்சாரியார் தமது ஆசிரியர் மறைஞான சம்பந்தருக்கு நெஞ்சையே தூதாக விடுகிறார்.

பக்தி இலக்கியங்களிலும் இறைவனை அடையத் தம் நெஞ்சை ஆற்றுப்படுத்தும் முறைகள் கையாளப்பட்டுள்ளன.

ஞானசம்பந்தர் தேவாரத்தில் நெஞ்சோடு கிளத்தல்

ஞானசம்பந்தர் தேவாரத்தில் ஒவ்வொரு பதிகத்திலும் பதினொரு பாடல்கள் இடம் பெறுகின்றன. இவற்றுள் எட்டாவது பாடலில்

இராவணனின் பிழையைப் பொறுத்தருளிய திறனும், ஒன்பதாவது பாடலில் அயன்மால் அறியாதபடி பேரொளிப் பிழம்பாய் நின்ற திறனும், பத்தாவது பாடலில் சமண, பௌத்த சமயத்தோரைச் சாடியும், பதினொராவது பாடலில் பதிகத்தைப் பாடியவர் பெயரும், பதிகத்தைப் பாடுவதால் பெறும் பயனும் சொல்லப்படுகின்றன. இவற்றுள் சில பதிகங்களை ஞானசம்பந்தர் தம் நெஞ்சிற்கு உரைப்பவைகளாக அமைத்துள்ளார். இப்பாடல்களில் பொய்ப் பொருளைத் தேடிப் போகும் நெஞ்சைக் கண்டித்து, மெய்ப்பொருளான இறைவனைச் சென்று சேர ஆற்றுப்படுத்துகிறார்.

உயிர்களை இறைவனோடு சேரவிடாமல் அதன் அறிவை மறைப்பது பாசம் அல்லது மலம் ஆகும். இதிலிருந்து விடுபட நல்வினை களைச் செய்தல் வேண்டும். உயிர்களுக்கு வினை செய்வதற்கு வாயில் களாக இருப்பவை மனம், வாக்கு, காயம் ஆகிய மூன்றும் ஆகும். இவற்றுள் பின்னவை இரண்டும் செயல்பட மனமே அடிப்படை. எனவே, இந்த இப்பிறவியிலேயே மனதைச் செம்மைப்படுத்தி இறைவனை அடைதல் வேண்டும். அதற்கும் இறையருள் வேண்டும். மாணிக்கவாசகரும் ''அவனருளாலே அவன் தாள் வணங்கி'' என்கிறார். அருள்பெற்ற உள்ளமும் நிலையாய் ஒன்றைப் பற்றி நிற்பது இல்லை. இந்நிலையை மாற்ற நெஞ்சை ஆற்றுப்படுத்துதல் அவசியமாகிறது.

1. நிலையாமை

இறைவன் அறிவே வடிவான, என்றும் அழியாப் பேரின்பப் பொருளானவன். உயிர்கள் மீது நீங்காத கருணையுடையவன். உலகங் களைக் கடந்தும், உள்ளங்களுக்கு உள்ளும் இருக்கும் ஆற்றலுடையவன். இதனை அறியாது உயிர்கள் நிலையற்ற உலகை தனது என்றும், அழிந் தொழியும் உடலையே தான் என்றும் ஆசை கொண்டு நிற்கின்றன. இத்தகைய நெஞ்சை சம்பந்தர்,

"நோய்புக்கு தோல்திரைய நரைவரு நுகருடம்பில்
நீபுல்கு தோற்றமெல்லா நினையுளகு மடநெஞ்சே"

(ஞா. தே:1:118:2)

என்று சாடுகிறார். நிலையற்ற உடலின் நரை, திரை, மூப்பினை அறிந்து கொள்வதில்லை. அவை பிறரைத் தாக்குவதைக் கண்கூடாகக் கண்டும் அவற்றிலேயே பற்றுக்கொண்டு நிற்கிறது. இதை விட்டு விலக இறைவன் மீது அன்பு செலுத்துதல் வேண்டும். திருவள்ளுவரும்,

"பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றை
பற்றுக பற்று விடற்கு" (குறள் - 350)

என்கிறார். இறைவனைப் பற்றுகின்ற அன்பே இறவா இன்ப அன்பு ஆகுமென்று நெஞ்சிற்கு நிலையாமையை எடுத்துரைத்து சம்பந்தர் நெறிப்படுத்துகிறார்.

2. அறியாமை

உள்ளத்தை எவ்வளவு தூய்மையாக வைத்திருந்தாலும், அதில் மீண்டும் அழுக்கேறி விடுவதுண்டு. உற்றார் உறவினர்களையெல்லாம் இழந்தாலும், கூற்றுவன் ஒருநாள் நம்மையும் அழைப்பான் என்ற எண்ணமின்றி, தன் வாழ்வு நிலையானது என்று எண்ணி விடுகிறது. வாழும் வரை பிறரையும் தன் உயிர்போல் காப்பதை விடுத்து கொலை, களவு போன்ற தீய செயல்களையே செய்ய விழையும் நெஞ்சே நீ அச்சப்படாதே. நீ ஒருமுறை மனமொன்றி இறைவனை நினைத்தா யானால், அவன் தாய்போல் வந்து உன்னைக் காத்து, உன்னை ஈடேற்றுவான். இதனை,

> **''தந்தையார் போயினார் தாயாரும் போயினார் தாமும் போவார்**
> **கொந்தவேல் கொண்டொரு கூற்றத்தார் பார்க்கின்றார் கொண்டுபோவார்**
> **எந்தநாள் வாழ்வதற் கேமனம் வைத்தியா லேழை நெஞ்சே**
> **அந்தணா ரூர்தொழு துய்யலா மையல்கொண் டஞ்சல் நெஞ்சே''**
>
> (ஞா. தே : 2:79::2)

என்கிறார்.

3. உய்யும் வழி

பிறவிப் பிணியிலிருந்து விடுபட வழி இறைவனை மறவாது இருத்தலே ஆகும். 'அரிது, அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது' என்பர். அத்தகைய மானிடப் பிறவியிலும் இறைவனை எண்ணும் நெஞ்சோடு பிறத்தல் அரிது. அது முற்பிறப்பில் செய்த நல்வினைப் பயனால் விளைந்ததே ஆகும். அதனால்தான் தன் நெஞ்சைப் பார்த்துப் பெருமையாக சம்பந்தர்,

> **''என்ன புண்ணியஞ் செய்தனை நெஞ்சமே யிருங்கடல் வையத்து**
> **முன்ன நீபுரி நல்வினைப் பயினிடை முழுமனிதத் தரளங்கள்**
> **மன்னு காவிரி சூழ்திரு வலஞ்சுழி வாணனை வாயாரப்**
> **பன்னி யாதரித் தேத்தியும் பாடியும் வழிபடு மதனாலே''**
>
> (ஞா : 2:106:1)

என்று வியந்து கூறுகிறார். இவ்வாறு கிடைத்த வாய்ப்பை விட்டு விடுதல் முறையல்ல. எனவே, இந்நிலையிலும் இறைவனை மறவாது இருத்தல் வேண்டும். அதனால்தானோ காரைக்கால் அம்மையாரும் இறைவனிடம் வேண்டும்போது, ''பிறவாமை வேண்டும், மீண்டும்

பிறப்புண்டேல் உனை என்றும் மறவாமை வேண்டும்'' என்று வேண்டுகிறார். எனவே, ஞானசம்பந்தரும் தம் நெஞ்சிற்கு,

''நறவ மார்பொழிற், புறவ நற்பதி
இறைவன் நாமமே, மறவல் நெஞ்சமே'' (ஞா : 1: 90:8)

என்று கூறி, அதுவே இறைவனைச் சென்றடைதற்குரிய வழியாகும் என்றுரைக்கிறார்.

4. நம்பிக்கையூட்டுதல்

ஞானசம்பந்தர் தம் நெஞ்சின் குறைகளையெல்லாம் கூறி, நெறிப் படுத்தி இறைவனை அடையும் நம்பிக்கையூட்டும் வகையில் சில பாடல்களை அமைத்துள்ளார். மனம் சார்ந்ததன் வண்ணமாய் நிற்பது, இறைவனோடு சேரும்போது அறிவுடையதாயும், உலகப் பொருட்களோடு சேரும்போது அறிவுநிலை தடுமாறியும் நிற்பதுண்டு. இவ்வாறு, இரண்டு நிலையில் நிற்கும் மனதால் இறைவனை அடைய இயலாது. அதனால் அயர்ந்து குறையோடு இருக்கும் நெஞ்சிற்கு ஆறுதல் கூறி நம்பிக்கை யூட்டுகிறார். இறைவனை நினைத்தால் படிப்படியாய் உயர்வு அடையலாம். மற்றப் பொருட்களின் மீது வைக்கும் பற்று இம்மைக்கும் மறுமைக்கும் கேடாய் விளையும். அதை விடுத்து இப்பொழுதே இறைவனை நினைத்தால் இம்மை, மறுமை இரண்டிலும் மேன்மையடையலாம்.

''மண்ணில் நல்லவண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணில் நல்லகதிக்கு யாதுமோர் குறைவில்லை''(3:24:1)

என்று கூறி உயர்ந்த பொருளான இறைவனை எண்ணி உயர்வடைய வழி காட்டுகிறார்.

தமிழ் மறை என்று போற்றப்படும் தேவாரத்தில் இறைவனை உயிர்கள் வழிபட்டு உய்யும் வழிகளைக் கூறி, இறைவனின் அருட் செயல்களை விளக்க முயன்ற ஞானசம்பந்தர் நெஞ்சை ஆற்றுப்படுத்தும் விதமாகச் சில பதிகங்களை அமைத்துள்ளார். இவற்றின் வழி உயிர்களின் அறியாமையும், உலகப் பொருள்களின் நிலையின்மையும் அறிய முடிகிறது. மேலும், தடுமாறுகின்ற நெஞ்சுக்கு நம்பிக்கையூட்டி உயிர்கள் உயர்வனவதற்கான வழிவகைகளையும் எடுத்துரைப்பதை அறிய முடிகிறது.

15. சம்பந்தர் தேவாரத்தில் பிற உயிரினங்கள்

எழிலரசி பாலசுப்பிரமணியன், சென்னை.

திருஞான சம்பந்தரின் பாடல்கள் முதல் திருமுறையில் 136 பதிகங்களில் 1469 பாடல்களாகவும், இரண்டாம் திருமுறையில் 122 பதிகங்களில் 1331 பாடல்களாகவும், மூன்றாம் திருமுறையில் 126 பதிகங்களில் 1358 பாடல்களாகவும் காணப்படுகின்றன. இவை 384 பதிகங்களில் 4158 பாடல்கள் என்னும் இறுதிக் கணக்கைத் தருகின்றன.

திருநாவுக்கரசர் 312 பதிகங்களில் 3066 பாடல்களையும்; சுந்தரமூர்த்தி சுவாமிகள் 100 பதிகங்களில் 1026 பாடல்களையும் தேவாரத்திற்கு அளித்துள்ளனர். 8250 தேவாரப் பாடல்களில் பாதிக்கும் மேற்பட்டவை திருஞானசம்பந்தரால் அருளப்பட்டவைகளாகும்.

திருஞானசம்பந்தர் அளித்த 4158 பாடல்களில் உயிரினங் களைப் பற்றிய குறிப்பு பல்வேறு இடங்களில் காணப்படுகின்றன. இந்தக் குறிப்புகளைக் கொண்டு சம்பந்தர் உயிரினங்கள் பற்றிய குறிப்பை எதற்காக, எவ்வாறு பயன்படுத்துகின்றார் என வகைப்படுத்த இயலும்.

பொருள், காலம், பக்க எல்லைகளைக் கருத்தில் கொண்டு தேவாரத்தில் வரும் பிற உயிரினங்களில், விலங்கினங்கள் மட்டுமே கட்டுரையின் கருவாக எடுக்கப்பட்டுள்ளது.

திருஞானசம்பந்தரின் திருப்பாடல்களில் வரும் விலங்கினங்கள் கீழ்க்கண்ட தலைப்புகளில் வகைப்படுத்தப் பட்டுள்ளன.

1. வழக்கிலுள்ள பெயர்களால் குறிக்கப்படும் விலங்கினங்கள்.
2. வழக்கில்லா பெயர்களால் குறிக்கப்படும் விலங்கினங்கள்.
3. சிவனின் ஆபரணமாய், வாகனமாய்க் குறிக்கப்படும் விலங்கினங்கள்
4. உமையின் ஆபரணமாய்க் குறிக்கப்படும் விலங்கினங்கள்.
5. உமையின் வடிவழகைக் குறிக்க உவமைப்படுத்தப்படும் விலங்கினங்கள்.
6. சிவனின் வடிவழகைக் குறிக்க உவமைப் படுத்தப்படும் விலங்கினங்கள்.
7. இயற்கையின் செழிப்பை விளக்கப் பயன்படும் விலங்கினங்கள்.
8. விலங்கினங்களுக்குக் கொடுக்கப்பட்ட அடைமொழிகள்.
9. இறைவனை வணங்கிய விலங்கினங்கள்.

1. வழக்கிலுள்ள பெயரால் குறிக்கப்படும் விலங்கினங்கள்

தேவாரப் பாடல்களில் காணப்படும் விலங்கினங்கள் எம்பெருமான் மற்றும் உமையின் ஆபரணங்களைக் குறிக்கவும், வடிவழகை உரைக்கவும்; சிவபிரானின் வாகனங்களைக் குறிக்கவும், இயற்கையின் செழிப்பை விளக்கவும் பயன்படுகின்றன. இந்த விலங்கினங்கள் படிப்போராலும், கேட்போராலும் உணர்ந்து கொள்ளக் கூடிய வழக்கிலுள்ள பெயர் களாலும், வழக்கிலில்லாப் பெயர்களாலும் குறிக்கப்படுகின்றன.

வழக்கிலுள்ள பெயர்களால் குறிக்கப்படும் விலங்கினங்கள், அன்னம் (2063); ஆடு (2555); ஆந்தை (7732); ஆமை (1917); எருது (2034); கயல் (2207); கருடன் (3970); கழுகு (108); கிளி (2125); குதிரை (2706); குயில் (2159); குரங்கு (2863); கொக்கு (2796); சேவல் (3542); தாரா (3478); தும்பி (2249); தேரை (2329); தேள் (3595); நண்டு (2374); நரி (3879); நாய் (818); நாரை (2374); பசு (2868); பவளம் (2105); பன்றி (2173); பாம்பு (2329); புழு (528); புறா (3521); மந்தி (3214); மயில் (2703); மான் (2250); மீன் (2087); முத்து (1472); யானை (2330); வண்டு (2050); வாளை (2358); வேங்கை (2201); வேழம் (2711) போன்ற பிற ஆகும்.

வழக்கிலுள்ள பெயர்கள் தற்போதும் அகராதியின் துணை யின்றி விலங்கினங்களை உணர்ந்து கொள்ள உதவுகின்றன. வழக்கி லில்லாப் பெயர்களைக் காணும்போது அவை கவிநயம் கருதிப் பாடல் களின் சந்தங்களுக்கேற்பப் பயன்படுத்தப் பட்டனவா அல்லது இந்தப் பெயர்கள் திருஞானசம்பந்தர் காலத்தில் வழக்கிலிருந்து தற்போது அருமையாகி விட்டனவா என்பது ஆய்விற்குரியது.

''என்னை தன்னாக்கி என்னால் தன்னை
இன்தமிழ் பாடிய ஈசனை'' என்றும்

''என் நெஞ்சத்து உள்ளிருந்து
இலகு இருந்தமிழ் நூல் இவை மொழிந்து''

என்றும் உள்ள கூற்றுகளுக்கேற்ப இவை வேத முதல்வனாகிய ஈசன் வாக்கு என்றால், அவனறியாதது, ஏதும் இல்லை. முதல் திருமறையின் முதல் பத்து பாடல்களில் விடை, அரவம் என்ற இரு பெயர்கள் குறிக்கப் படுகின்றன. ரிஷபம், பாம்பு ஆகிய இவ்விரு விலங்குகளுக்கு அப்போது விடை, அரவம் என்ற பெயர்கள் வழக்கில் இருந்தனவா அல்லது மூன்று வயது மழலையான சம்பந்தர், இந்தப் பெயர்களை அறிந்திருந்தாரா அல்லது ஞானசம்பந்தரை தெய்வக் குழந்தையாக்கிய-தமிழ்க் குழந்தையாக மாற்றிய திருப்பிரம்மபுரம் என்னும் சீர்காழிவாழ், பெரியநாயகி உடனுறை பிரம்மபுரீஸ்வரர் பேரருளா இது என்பது வியப்பிற்குரியது.

2. வழக்கிலில்லாப் பெயர்களால் குறிக்கப்படும் உயிரினங்கள்

அயமுகம் (3776); அரவம் (3408); ஆளி (3526); ஆன் (3067); உழுமை (3544); ஊகம் (1064, 2382); எண்கு (756); ஏழை (2678); கபோதகம் (649); குஞ்சாரம் (2945); கூளி (4097); கேழல் (3611); சீயம் (2252); சூகரம் (717); தரளம் (3334); பெற்றம் (2538); போதகம் (2852); வெருகு (2446) என்னும் பெயர்கள் முறையே யானை, பாம்பு, சிங்கம், எருது, பன்றி, குரங்கு, கரடி, பன்றி, புறா, குரங்கு, கழுகு, யானை, குரங்கு, யானை, முத்து, கால்நடை, யானைக் கன்று, மரநாய் ஆகிய விலங்குகளைக் குறிக்கின்றன.

3. சிவனின் ஆபரணமாகும் விலங்குகள்

சிகையலங்கார விலங்குகள்

சிவனின் ஆபரணங்கள் என்று வகைப்படுத்தும்போது நிரந்தரமாகச் சிவனின் சிகையலங்காரத்தில் பங்கெடுப்பவை ஓடும் நதியும், மதியோடு உரகமும் ஆகும் (1700); சிவன்செஞ்சடைப் பாம்பு (1470); சடையானைச், சந்திரனோடு செங்கண் அரா உடையானை (1612); செஞ்சடை யாடரவு (1628); அரவு நீள்சடை (2028); அரவச் சடை (1841) என்னும் குறிப்புகள் சிவனின் சடை அலங்காரத்தில் பாம்பின் பங்கைப் பகர்கின்றன. வண்டுகள் நசை உண்டு, இசைபாடும் கொன்றை மலர்மாலை சிவனின் செஞ்சடையையும், திருத்தோளையும் அணி செய்கின்றன. வண்டணை செய் கொன்றையது வார்சடை (1798) என்னும் தேவார வரிகள் சிவனின் சடையில் வண்டுகளும் இடம் பெற்றதைக் குறிக்கின்றன.

சடையலங்கார விலங்குகள் : பாம்பு, வண்டு.

தோள் மற்றும் மார்பலங்கார விலங்குகள்

சிவபிரானின் திருத்தோளில் என்போடு, அரவம், ஏனத்துக் கொம்பு, எழில் ஆமை (2150) ஆகியவை ஆரமாகின்றன. ஆரம் பாம்பது அணிவான் (1520); புற்றாடரவோ டென்பு பூடை (1857) போன்ற குறிப்புகள் சிவனின் கழுத்திலும் திருத்தோளிலும் ஆபரணமாகும் விலங்குகளைச் சுட்டுகின்றன.

திருத்தோள் அலங்கார விலங்குகள்; மனித எலும்பு, அரவம், ஏனத்துக் கொம்பு, எழில் ஆமை.

மலை மகளை அணைத்துள்ள மார்பில் (6459) கேழல் வெண் கொம்பு, செத்தவர் தம் எலும்பு, அரவம், ஏனத்து எயிறு, எழில் ஆமை போன்ற இவைகளே அணி செய்கின்றன.

அரை அலங்கார விலங்குகள்

பொன்னார் மேனியனாகிய சிவபெருமான், அரையாடையாக விரும்பி ஏற்றது கொச்சை புலால் நாறும் (1941); கருங்கரியின் தோலும்

(1940, 1956, 1504, 1712, 2052); மானுரி தோலும் (1931); கொல் புலித்தோலும் (1963, 1571, 2142, 1716), சிங்கத்தின் தோலும் ஆகும். **அரை ஆடையாக உதவிய விலங்குகள் :** யானை, மான், புலி.

கையில் காணப்படும் விலங்குகள்

முன் வினை அறுத்துத் திருவடி சேர்க்கும் கரங்களில் ''செத்தவர் தம் தலைமாலை'' ஏனத்தின் கொம்பு, கரிய பாம்பு, மான் ஆகியவை காணப்படுகின்றது. மான்மறியீர் (1483, 1485); கையிலங்கு மறியேந்துவர் (1540); மரி ஏந்திய (1602); மறியாகும் கையுடை யானை (1638); தாவும் மறி மானொடு (1651); மறி ஏந்துகையாய் (1664); கலையன் (1702); உழையார் கரவா (1710) போன்ற தொடர்கள் சிவனின் கரத்தில் துள்ளும் மானைக் குறிக்கின்றன.

கச்சையாகிய விலங்கு

அரை ஆடையை உடலுடன் இருத்தும் கச்சையாக அரவமே விளங்குகிறது. இது கச்சையாவதோர் பாம்பு (1744); வரியரவே நாணாக (1956); படமல்கு பாம்பரையான் (1951); ஆடல்புரியும் ஐவாய் அரவொன்று அரை சாத்தும் (2117); நாகம் அரைமேல் அசைந்து (4256) என்னும் குறிப்புகளால் விளக்கப்படுகிறது.

சிவனின் செஞ்சடையில் சீறும் பாம்பு, கழுத்தில் ஆரமாய் நெளிகிறது, மார்பில் நாணாகக் கிடக்கிறது (1956) அரையில் நாணாகவும், கச்சை யாகவும் பயன்படுகிறது. பாம்பின் நஞ்சு, நஞ்சுண்ட நீலகண்டனின் கண்ட வண்ணத்திற்குக் காரணமாகின்றது. திருத்தலங்களில் புற்றாய் உடல்கொண்ட சிவனில் திருமேனி, முழுவதும் அரவார்ந்த திருமேனி யாகக் காணப்படுவதால் (2092) சிவனிடம் அரவத்திற்குள்ள உரிமை வேறெந்த விலங்குகளுக்கும் இல்லை.

உடலைப் பிரிந்தே மானுடம் இறையடி சேரும் நிலையில் உடலுடன் திருமேனி தீண்டி அணையும் பேறு அரவத்திற்கு மட்டுமே கிடைத்த பெரும் பேறாகும்.

சடை	தோள் / மார்பு	கை	அரை ஆடை	கச்சு	கொடி	ஊர்தி
பாம்பு	பாம்பு	மான்	யானை	பாம்பு	பாம்பு	விடை
வண்டு	ஆமை ஓடு		புலி		மீன்	
	பன்றிக்கொம்பு		மான்		விடை	
	மண்டை ஓடு		சிங்கம்			
	மானிட எலும்பு					

சிவனின் வாகனமாகும் விலங்குகள்

விடைமேல் வருவோன் (1476); விடையேறி (1899); விடையூர்தியான் (1591); எருதேறி (1900); விடையான் (1912); ஏறு ஊர்தியான் (1528) என்னும் சிவநாமங்கள் சிவனின் ஊர்தியாக இடபம் என்னும் எருது பெற்ற பெரும்பேற்றைக் குறிக்கும்.

சிவனின் கொடியில் காணப்படும் விலங்குகள்

வாகனமாய் அமைந்த இடபம் சிவனின் கொடியாகவும் பறக்கிறது. இடபக் கொடியாண் (128); செங்கண் அடல் வெள்ளை ஏறார் கொடி (759); விடைதரு கொடியும் வைத்தார் என்னும் குறிப்புகள் கொடியில் இடபம் இடம் பெற்றுள்ளதைக் குறிக்கிறது. இடபம் மட்டுமின்றி அரவக் கொடியும் மீன் கொடியும் சிவனின் திருக்கரத்தில் பறக்கின்றன (1713).

சிவனின் கொடியில் காணப்படும் விலங்குகள் : இடபம், அரவு, மீன்.

4. உமையின் ஆபரணமாய்க் குறிக்கப்படும் விலங்கினங்கள்

ஆபரணங்கள் பெண்களின் தனிப்பெரும் ஆவல். அணிகலன் விரும்பாத மகளிர் அரிது என்றபோதிலும் அழகின் சிகரமாய் விளங்கும் **உமைக்கெனத் தனி ஆபரணங்கள் ஏதும் குறிக்கப்படவில்லை.** உமையின் குழலில் சூடப்பட்ட மலராலோ அல்லது சர்ச்சையைத் தூண்டிய நறுமணத்தாலோ, உமையின் குழல் எந்நேரமும் வண்டார்க்கும் சோலையாய்த் திகழ்கிறது. வண்டார் குழலி, வண்டாடு குழல், வண்டமருங்குழல் என்னும் திருநாமங்கள் இதற்குச் சான்றாகும்.

சிவனின் திருமேனியில் காணப்படும் உயிருள்ள அரவமும், உயிரற்ற மானுட, விலங்குகளின் எலும்புகளும் சிவனின் சீற்றத்தையும் வலிமையையும் விளக்கும் அதே நேரம், உமையைச் சார்ந்திருக்கும் வண்டுகள் அவளின் மென்மையையும், பெண்மையையும் நவில்கின்றன.

5. உமையின் வடிவழகைக் குறிக்க உவமைப் படுத்தப்படும் விலங்கினங்கள்

மயிலும் (1165, 1308, 2007); மடமானும் உமையின் சாயலைக் கூற, நடைக்கு அன்னம் (553) உவமையாக்கப்படுகிறது. உலக நாயகியின் திருவாய் பவளத் துவர்வாய் - பவளம் போல் சிவந்த வாய் (1919) எனக் குறிக்கப்படுகிறது. இந்தப் பவளத் துவர் வாயிலிருந்து வரும் மொழிகள் கிளிசேர் மொழியாகவும் (734) குயிலாருமென் மொழியாகவும் (754) காட்டப்படுகிறது. உமையின் முறுவல் முத்தன்ன வெண் முறுவலாகிறது (424, 1523). திருப்பிரம்மபுர பெரியநாயகியின் கருணைக் கண்கள் திருஞானசம்பந்தரின் ஆழ்மனதில் பதிந்திருக்க வேண்டும். இந்தக் கருணைக் கண்களைக் கொண்டே பல இடங்களில்

ஞானசம்பந்தரால் உமை குறிப்பிடப் படுகின்றாள். கயல்விழி (1859); சேல்கண்ணி (2007); கயலார் கருங்கண்ணி (1858) என்னும் குறிப்புகள் இறைவியின் மீனொத்த திருவிழிகளைக் குறிக்கின்றன.

உமைக்கு உவமையான விலங்கினங்கள் : மயில், மான், அன்னம், பவளம், முத்து, கிளி, குயில், மீன் வகைகள்.

6. சிவனின் வடிவழகைக் குறிக்க உவமையாகும் உயிரினங்கள்

தான் தோன்றியான சிவபெருமான் (917); பிறப்பில்லாதவன் (3355); மூப்பில்லாதவன் (77) இறப்பில்லாதவன் (6876); பிறப்பிலி, மூப்பிலி, இறப்பிலி; உருவில்லாதவன் (2944); புற்றான்; உறவில்லாதவன் - உறவிலி (8210). இத்தகைய பண்புகளைப் பெருமைகளாகக் கொண்ட சிவபெருமான் உவமையும் இல்லாதவனாகவே காணப்படுகின்றான். எண்ணில்லா விலங்குகளைத் தமது திருப்பாடல்களில் கையாளும் திருஞானசம்பந்தர் **இறைவனுக்கு உவமையாக எந்த விலங்கையும் காட்டவில்லை.** தமக்குத் தாமே, நிகராக, உவமையில்லாதவனாகவே சிவபெருமான் காட்சியளிக்கிறார். தனக்குவமை இல்லாதவன் எனத் திருவள்ளுவரும் இதையே சுட்டுவது இங்கு ஒப்பு நோக்குதற்குரியது.

இருந்தபோதிலும் ஈசனின் இணை அடிகள் பலவாறாகப் போற்றப் படுகின்றன. எதனுடனும் பொருந்தாத இணையற்ற பேரின்பம் தரும் திருவடிகள் சிவபெருமானின் திருவடிகள். மாசில் வீணையும், மாலை மதியமும், வீசு தென்றலும், வீங்கிளவேனிலும், மூசுவண்டறை பொய்கையும் தர இயலாத இன்பத்தை, சுகத்தை, பாதுகாப்பை, ஈசனின் இணை அடிகள் தரவல்லது. பவள வண்ணமும் (287) சங்கொளி வண்ணமும் (476) கொண்ட ஈசனின் திருமேனி உவமை அற்று உலகாளுகின்றது.

7. இயற்கையை விளக்கப் பயன்படும் விலங்கினங்கள்

திருஞானசம்பந்தரால் பாடப்பட்ட தேவாரத் திருத்தலங்களைப் பார்க்கும்போது, மிகச் சில தவிர மற்றவை அனைத்தும் காவிரியின் வடகரைத் தலங்களாகவும் தென்கரைத் தலங்களாகவும் காணப்படுகின்றன. நான்கில் மூன்று பங்கு தலங்கள் காவிரிக்கரைத் தலங்களாக அமைந்து விட மற்றதில் சில வங்கக் கடற்கரைத் தலங்களாகின்றன (மயிலாப்பூர்). எனவே, பெரும்பாலான விலங்கினங்கள் காவிரியின் சிறப்பையும், வங்கக் கடலின் செழிப்பையும் சுட்டுவதற்காகவே கையாளப்படுகின்றன. மலை நாட்டின் செழிப்பும் சில தலங்களில் விலங்கினங்களால் உணர்த்தப்படுகிறது.

காவிரியின் வளம்

மலையிடைப் பிறந்து சோழன் மனையில் தவழ்ந்த காவிரி திருஞானசம்பந்தரால், வரிகொள் செங்கயல் பாய்புனல் (1477);

மடை வாளைகள் பாய்புனல் (1478); அன்னம் ஆளும் துறை (1525); மடங்கொள் வாளை குதிகொள்ளு மணமலர்ப் பொய்கை (1549); அருஞ்சுனை நீடிய சேலு மாலுங் கழனி (1549); செங்கயல் கண்மிளிரும் வயல் (1650); சேலார் திருமாமறைக்காடு (1868); நீருளார் கயல் வாவி (2019); வாளையும் கயிறும் மிளிர் பொய்கை (2039); செங்கயலொடு சேல்செருச் செய்யும் (2041); பகுவாய் நாரை ஆரல் வாடும் பாசூர் (2121) எனப் போற்றப்படுகிறது. காவிரி பாயும் இத்திருத்தலங்களெல்லாம் நிறை வளம் பெற்று சிறந்திருந்தது கண்முன் விரிகிறது. காவிரி மட்டுமின்றி காவிரி நீர் பாய்ந்து நிரப்பும் துறைகளும், பொய்கைகளும், கழனிகளும், காடுகளும், வாவிகளும் கூட வற்றா நீர் வளம் பெற்று உயிரினங்களைச் செழிக்கச் செய்தன. நீரில்லாக் காவிரியில் வாளையும், கயலும், சேலும், அன்னமும், நாரையும், வாழ்வதேது?

இதுமட்டுமன்றிக் காவிரியின் அலைகள் மத்த யானையின் கோடுடன் வண்பீலியையும் வாரி வந்து தருவதாகச் சொல்லப்படு கின்றது (1873). மலைவாழ் யானையின் தந்தமும், வண்ண மயில் தோகையும், மலையில் தோன்றும் காவிரியால் அங்கிருந்தே கொண்டு வரப்படுகின்றன.

வங்கக் கடலின் வளம்

ஆறுகள் நன்னீரையும், கடல்கள் உப்பு நீரையும் கொண்டு காணப்படுதல் இயல்பு. இந்த இரு நீர்நிலைகளிலேயும் வாழும் உயிரினங்கள் வெவ்வேறு வகைப்படும். நன்னீரில் வாழ்பவை கடல் நீரிலும், கடல் நீரில் வாழ்பவை நன்னீரிலும் வாழ இயலாது. திருஞான சம்பந்தர் காவிரிநீர் வளம் சொல்லும்போது நன்னீர் விலங்கினங்களை மட்டுமே பயன்படுத்துகின்றார். அதே போல் வங்கக் கடல் வளம் சொல்லும்போது கடல்நீர் விலங்கினங்களை மட்டுமே சொல்லுகின்றார். திருஞானசம்பந்தரின் தேன் தமிழே வியப்பிற்குரியது என்றால் அவரின் வயதை நோக்கும்போது அவரின் விலங்கியல் அறிவு அதைக் காட்டிலும் விந்தையானது.

வங்கக் கடல்வளம் சொல்ல வந்த சம்பந்தர், மகர வார் கடல் சுறாமீன் (1479); கடல் இப்பி கண் முத்தம் தரைபெயும் (1494); சங்கம் வெள்ளி சிப்பி வன் திரையு லாங்கழி....திருவான்மியூர் (1502) சங்கம் தரளம் அவைதான் கரைக்கு ஏற்றும் வங்கக்கடல்; ஊர்திரை வேலை உலாவும் உயர் மயிலை, கூர்தருவேல் வல்லார் கொற்றங்கோள் சேரி தனில் (1974) தென்கடல் ஒண்சங்கம் திளைக்கும் (2048) ஊரார் உவரிச் சங்கம் வங்கம் கொடு வந்து (2104) மனைக்கே ஏறவளம்

செய்பவளம் வளர்முத்தம் (2105) வெள்ளைச் சுரிசங்கு உலவித் திரியும் வெண்காடு (2128) எனக் கூறும் தொடர்கள், சுறா, முத்து தரும் சிப்பி, மீன்கள், சங்கு, பவளம் போன்றவை கரை ஏறி கரை ஓரச் சேரிகளின் மனைக்கே வருதலைக் குறிக்கின்றன. இவையாவும் கடல்வாழ் விலங்கினங்கள் என்றபோதும் முத்து தரும் சிப்பியும், பவளமும் ஆழ்கடல் உயிரினங்களாகும். இவை கரை ஒதுங்குதல் என்பது மிகவும் அரிதானது. மனைக்கே ஏறவளம் செய்பவளம் வளர்முத்தம் என்னும் மிகைப்படுத்தல் வங்கக் கடலின் அதீத வளம் குறிக்கவே என்றும் கொள்ளலாம்.

கடல்வாழ் உயிரினங்கள் உலவித் திரிந்த வங்கக் கரையில் கழிவு களும், நச்சுகளும் (Pollutants) ஒதுங்குவது சூழ்நிலை மாசுபடுதலில் உச்சமாகும்.

மலையில் தோன்றி மண்ணில் பாயும் ஆறுகள் அனைத்தும் கடலில் சங்கமிக்கின்றன. ஆறுகள் கடலில் கலக்கும் இடம் முகத்துவாரம் எனப்படுகின்றது. இந்த இடத்தில் காணப்படும் நீர் நன்னீரும், உப்பு நீரும் கலந்த தன்மையுடையதாய் இருக்கும். ஆறுகளில் நீர் வற்றும் காலத்தில் ஆற்றுநீர் கடலில் சேரும் வேகம் குறையும்போது, கடல்நீர் இந்த முகத்துவாரங்கள் வழியாக ஆறுகளில் ஏறும். இவ்வாறு ஆறு ஏறும் கடல்நீர் கடல்வாழ் உயிரினங்களையும் அள்ளிச்சென்று கழனி களில் சேர்ப்பதாக ஞானசம்பந்தர் காட்டுகிறார். இத்தகைய சங்கமப் பகுதிகளில் உள்ள திருத்தல வர்ணனைகள் அனைத்திலும் இவ்வழகு விரிகின்றது. (பூம்புகார், மயிலை).

கரையேறிய சங்கினொடு சிப்பிகள் (1471); சங்கு செம்பவளத் திரள் முத்து தாங்கிவரும் அலை (1472); நெருக்குறு கடல் திரைகள் முத்த மணி சிந்தச் செருக்கு பொழிற் (1782 - திருப்புகலி); கருங்குழி பெருந்திரை கரைக்குலவு முத்தம் தருங்கடி மலத் திறை தமிழ்க்கிழமை ஞானன் (1796 - திருப்புறம் பயம்); வங்கம் அங்கு ஒளிர் இப்பியு முத்து மணியும் சங்கும் வாரித் தடங்கடல் வந்து சாய்க் காடே (1878 - திருச்சாய்க்காடு), வெண் முத்து அரும்பிப் புனல்வந்து அலைக்கும் வெண்காடு (2127 - திருவெண்காடு) என்னும் வர்ணனைகள் முத்தையும் பவளத்தையும் வாரி வீசும் வங்கக் கடலலைகளைக் கண்முன் நிறுத்தும் தன்மையன.

இவ்வாறு காவிரியின் வளமும் வங்கக் கடல் வளமும் கொண்ட தேவாரத் திருத்தலங்கள் வயல் வளமும் நிறைந்தவையாகும். நீர்வளம் நெல் வளத்தையும் உயர்த்தும் தன்மையதே. இத்தகைய வயலும், சோலையும், காடும் நிறைந்த திருத்தலங்களில் காணப்படும்

விலங்கினங்கள் இன்னும் பலவாகும். வயல்களும் சோலைகளும் மலரால் நிறைந்திருக்க வண்டுகளுக்குக் குறைவில்லை. வண்டெலாம் நசையால் இசைபாடும் (1480); தென்ன என்று வரிவண்டு இசை செய்திரு வாஞ்சியம் (1536); வண்டு மருவும் பொழில் (1545); வண்டிரைத்த மது விம்மிய (1552); வண்டிசை பாடும் மணஞ்சேரி (1641); கருவண்டு யாழ்செய் திருவெண்காடு (2124); கோதி வரிவண்டறையும் பொய்கைப் புனல் மூழ்கி எருமை மேதிபடியும் வயல்சூழ் மீயச் சூராரே, மொய்ம்பார் சோலை வண்டு பாடும் (2162); மூசி வண்டு பாடும் சோலை (2163); மதுத் தும்பி வண்டு (1559) என்பன போன்ற தொடர்கள், வண்டுகள் இத்திருத் தலங்களில் நிறைந்திருந்த தன்மையைக் காட்டுகின்றன.

வண்டுகள் மட்டுமன்றி இந்த வயல்களில் பறவைகளும் நிறைந் திருந்தன. பரல்வெண் குருகும் பகுவாயன நாரையும் (1481); இசைக் குயில் கூவிடும் (1497); குயில் கோலஞ்சேர் (2997); தண்டலைத் தட மாமயிலாடு சாய்க்காடே (1874); கூரரால் வாய்நிறையக் கொண்டயலே கோட்டத்தில் தாரா மல்கு (1919); கரு மஞ்ஞை நடமாட (1989) பாடல் குயில்கள் பயில் பூஞ்சோலைப் பாசூரே (2118) என்னும் திருஞானசம்பந்தர் தேவார வரிகள் சோலைகளில் வண்டுகள் மட்டு மன்றி, குருகு, நாரை, குயில், மயில், தாரா போன்ற பல்வேறு பறவைகள் நிறைந்து வாழ்ந்ததைக் குறிக்கின்றன.

'அரியேர் கழனிப் பழமை' என்று தவளைகள் நிறைந்த வயலும் ஞானசம்பந்தரால் காட்டப்படுகின்றது (2149). வருக்கமார் தருவான் கடுவன்னாடு மந்திகள் (1474); சிறுமந்தி முருகின் பனை மேல் இருந்து நடம்செய் முதுகுன்றே (2165) என்னும் வரிகள் திருமுதுகுன்றம் போன்ற மலைநாடுகளின் வளம் சொல்கின்றன. சோலை வளமும் காடு வளமும் நிறைந்திருந்தால்தான் காடுவாழ் விலங்கினமும் சிறந்திருக்கும்.

திருத்தலங்களை வர்ணிக்கும்போது இயற்கையில் நிகழ்வதாகச் சொல்லப்படும் சில நிகழ்வுகள் சுவை மிகுந்தன. வண்டுகள் தாம் உண்ட நசையில் மயங்கி இசைபாடும் (1480) தன்மை உடையன. இவ்வாறு நசையுண்ட பெண் வண்டுகள் தங்கள் துணையுடன் ஆடிக் களித்து ஊடல் செய்யும் திருத்தலம் திருச்சாய்க்காடு. வரிவண்டின் இசைக்குக் கருமஞ்ஞை ஆடும் நடனம் (1989) காவிரிக் கரையோரத் திருத்தலங்களில் மிகச் சாதரணமான காட்சியாகும்.

கூர்வாயைக் கொண்ட ஆரல் மீன்களை வாய் நிறைய அள்ளிய நீர்ப்பறவைகள் அவற்றை அப்படியே விழுங்க இயலாமல் கொண்டு வந்து கரையில் கொட்டி பின்னர் உண்ணும் வளம் நிறைந்தது காவிரியின் தென்கரைத் திருத்தலமான திருஆக்கூர்.

தொண்டை நாடான மயிலாப்பூரில் கடலலைகள் நெய்தல் நிலச் சேரியினுள் வந்து செல்லும் இயல்புடையன. அவ்வாறு வரும் அலைகள் கொண்டுவரும் பெரும் மீன்களைக் கூரிய வேல் கொண்டு குத்திப் பிடிக்கும் மக்கள் நிறைந்திருக்கும் சேரி மயிலை எனக் (1974) குறிக்கப் படுகின்றது.

திருவெண்காட்டு நீர்நிலைகளில், மடல் அவிழ்ந்த தாழையின் கூர் முனையின் நிழல் கண்ட கெண்டை மீன்கள், அதைத் தன்னைப் பிடிக்க வந்த குருகென்று எண்ணி அஞ்சி தாமரைப் பூவின் இடைசென்று ஒளிந்து கொள்ளும். இதைக் கண்ட கடல் முத்துக்கள் நகை கொள்ளும் (1985).

''தடமண்டு துறைக் கொண்ட தாமரையின் பூமறையக்
கடல் ஈண்ட முதிர் முத்த நகைகாட்டும் காட்சியதே''(1985)

ஆழ்கடல் முத்துக்களை அலை அள்ளி வீச அவை முகத்துவராம் வழி நன்னீரை வந்தடைந்த நிலையையும் இப்பாடல் சுட்டுகிறது.

செங்கயல் மீனொடு சேல் கெண்டை செருச்செய்ய, அதுகண்ட யாழ்போல் இசைக்கும் வண்டு அஞ்சி அலைபாயும் வளம் கொண்டது பனங்காட்டூர் (2041).

திருமுதுகுன்றக் குட்டிக் குரங்குகள் மூங்கில் குச்சியின் உச்சி யிலிருந்து புரியும் நடனம் கருத்தை விட்டு அகலாத் தன்மையது.

இவ்வாறு கூறப்படும் இயற்கையின் பல்வேறு நிகழ்வுகள் திருஞானசம்பந்தரின் இயற்கை ரசனையைச் சுட்டிக் காட்டும்.

8. விலங்கினங்களுக்குக் கொடுக்கப்பட்ட அடைமொழிகள்

பவளம் பெரும்பாலும் அதன் வண்ணம் கொண்டு செய்பவளம் என்றே அழைக்கப்படுகிறது. முத்து திரள் முத்து (1472) கதிர்முத்து, வெண்முத்து என்று பலவாறாக அதன் வெண்மை நிறம் கருதி கூறப் படுகிறது. வண்டுகள், வரிவண்டு, மைத்த வண்டு, கருவண்டு, சோலை வண்டு, மூசி வண்டு, தும்பி வண்டு என்று குறிக்கப்படுகின்றன. மீன்கள் பள்ள மீன், வரிகொள் கூர்ஆரல், செங்கயல், மடைவாளை, மடங் கொள்வாளை, சுனை நீராடிய சேல், செங்கயல், நீருளார்கயல் என்று அவை வாழும் இடம், உடல் அமைப்பு, உடல் வண்ணம் போன்ற வற்றை அடைமொழியாகக் கொண்டு காணப்படுகின்றன.

பறவைகள், வெண்குருகு, பகுவாய் நாரை, இசைக்குயில், மனங்கொள் மாமயில், பாடல் குயில் என அவற்றின் தன்மைக்கேற்ப அழைக்கப்படு கின்றன. சிவனின் உடலில் உலவும் பெரும்பேறு பெற்ற அரவம், வரி

அரவு, ஆடரவம், படஅரவம், ஐவாய் அரவு, கனல்வாய் நாகம் என்று அதன் குணநலன்களை வெளிப்படுத்துகிறது. சிவ வாகனமான இடபம், வெள்ளி மலைபோல் விடையொன்று, வெங்கண் வெள்ளேறு, செங்கண் வெள்ஏறு, கொல் ஏறு என்று குறிக்கப்படுகின்றது. சிவனின் அரைக்குத் தோலளித்த யானை கருங்கை யானை, கொல் யானை, கொலையார் கரி, மத யானை என்று போறறப்படுகின்றது. சிவனின் கரத்திலுள்ள மான், தாவும் மான், மருவு மான், இலகு மான், கலைமான் என்ற பெயர்கள் பெறுகின்றன. வரி ஆமை, கொலையார் கரி போன்ற தொடர்களும் அந்தந்த விலங்குகளின் தன்மை உரைப்பனவாகவே காணப்படுகின்றன.

திருஞானசம்பந்தர் தனது பாடல்களில் உபயோகித்துள்ள அடைமொழியினைக் காணும்போது, அவர் இயற்கையை, உயிரினங்களை எத்துணை அளவு ஊன்றி நோக்கிக் கருத்தில் இருத்தியுள்ளார் என்பது விளங்கும். எந்த ஒரு விலங்கிற்கும் அதன் அடைச்சொல் கவிநயத்திற்காகக் கொடுக்கப்பட்டது அல்ல. அதன் வாழ்க்கை முறை, குணம், வடிவம் கொண்டே அடைச்சொற்கள் அமைந்துள்ளன.

9. சிவனை வணங்கிய விலங்குகள்

புல் முதலான எல்லாப் பிறவிகளும் எடுத்துழன்று மானிடப் பிறப்பெடுக்கும் நோக்கமே இறைவனை வணங்கி அவன் இணையடி சேர்வதற்காக மட்டுமே. மானிடமே இதை மறந்திருக்க விலங்குகள் இறைவனை வணங்கிய விந்தையைப் பல புராணங்களிலும், பாடல் களிலும் காணலாம். திருஞானசம்பந்தரும் இவ்வாறு விலங்குகள் வணங்கிய திருத்தலங்களைப் பாடும்போது இதைக் குறிப்பிடுகின்றார்.

திருவானைக் காவலின் அகிலாண்டேஸ்வரனை வணங்கிய சிலந்தியும், பின்பிறப்பில் கோச்செங்கட் சோழனான யானையும், இந்த வகையில் பேறு பெற்றவை. திருப்புள்ளிருக்கு வேளூர், பறவைப் பிறவிகளான சம்பாதியும், சடாயுவும் சிவனை வழிபட்ட தலமாகும். திருப்புள்ளிருக்கு வேளூர் உரை ஈசனைப் போற்றிய பத்து பாடல்களிலும் சம்பாதியும், சடாயுவும் இடம் பெறுகின்றனர். மந்திகளின் சிவ வணக்கமும் திருஞானசம்பந்தர்வழி தெரிய வருகின்றது (2158).

- பரமசிவன் கழுத்தில் இருந்ததால் பாம்பு கொண்டதாகக் கூறப்படும் செருக்கு மிக இயல்பானதேயாகும். உயிர் நீத்து, உடலை சிவனின் அலங்காரப் பொருள்களாக்கிய யானை, சிங்கம், மான், புலி, ஆமை, பன்றி, மனிதன் போன்றவர்களைக் காட்டிலும் உடலுடன் சிவமேனி தழுவும் பேறு பெற்ற அரவம் பெருமை உடையதே ஆகும்.

- தனக்குவமை இல்லாதான் என வள்ளுவர் குறிக்கும் இறைவனின் தன்மை திருஞானசம்பந்தராலும் சுட்டப்படுகிறது. சிவனுக்கு இணையாக, உவமையாக எந்த விலங்கும் சுட்டப்படாதது ஒப்பு நோக்குதற்குரியது.
- உலக நாயகியான உமைக்கு எந்த ஆபரணமும் சொல்லப் படாதது மற்றுமொரு விந்தையாகும்.
- திருஞானசம்பந்தர்வழி உணரும் இயற்கை, அறிவியல் வகைப் பாடுகளின்படி, காணப்படும் நிலத்தன்மைகளிலிருந்து சிறிதும் மாறுபட்டதில்லை.
- விலங்கினங்களின் விளக்கமும் கவிநயத்திற்காக அன்றி விலங்கு களின் உருவ அமைப்பு, குணநலன்களின் அடிப்படையிலேயே அமைந்துள்ளன.
- திருஞானசம்பந்தர் காட்டும் இயற்கை நிகழ்வுகள் அவர் கவித்திறத்தால் மனதில் நீங்கா இடம்பெறும்.

16. சம்பந்தரும் சித்திரக் கவிகளும்

இரா. கண்ணன், சென்னை.

அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய இந்நான்கு பாடுபொருள்களால் விளையும் இலக்கியங்கள் பற்பல வகைகளாகத் தோற்றமளிக்கின்றன. படைப்பாளியின் உணர்த்தும் திறனும் கையாளும் உத்தியுமாகிய இவ்விரண்டே இலக்கிய வகைகள் பற்பலவாகத் தோன்ற அடித்தளங்களாக அமைகின்றன எனலாம். யாப்பு, பாடுபொருள், எழுந்த காலம், பாடல் எண்ணிக்கை, சொல் அமைப்பு முதலான கூறுகளை அடிப்படையாகக் கொண்டே தமிழ் இலக்கிய வகைமைக் கோட்பாடு உருவாகி வளர்ந்து வருகிறது. மேலை நாடுகளில் இலக்கிய வகைமைக் கோட்பாடு மூன்று நான்கு நூற்றாண்டுகளுக்கு முன்னரே தோன்றி வளர்ந்து வருகிறது. ஆனால் தமிழ் மொழியில் இலக்கிய வகைமைக் கோட்பாடு உருவாக்க முயற்சி பல்லாயிரமாண்டுகளுக்கு முன்னரே தொடங்கிவிட்டது. தொல்காப்பியர் காலத்தில் பாடுபொருளைக் கருவியாகக் கொண்டு வகைமைப்படுத்தும் வழக்காறு வளம் பெற்றிருந்ததை அவர் நூல்வழி நன்குணர முடிகிறது என்றாலும், பாடுபொருளைக் கருவியாகக் கொண்டு இலக்கியங்களை வகைமைப்படுத்தும் போக்கு மட்டுமே அவர் காலத்தில் இருந்தது எனத் துணிந்திட இயலாது. ஏனெனின், தற்காலத்தவர் வகைமைக் கோட்பாட்டிற்கு உரிய கருவிகளாகக் கைக்கொள்ளும் யாப்பு, அணி முதலான செய்யுள் உறுப்புகளையும் அவர் விளக்கி உள்ளார். எனவே பற்பல செய்யுள் வகைகளும் ஒரு சில அணிகளும் தொல்காப்பியர் காலத்திலேயே தோன்றி விட்டமையை உணர முடிகிறது. இலக்கிய வகைமைக் கோட்பாடு பற்றிய தொல்காப்பியர் நோக்குப் பொருளடிப்படையில் மட்டுமே அமைந்திருந்தமையால் அவர் யாப்பு மற்றும் அணி ஆகியவற்றால் ஆன இலக்கிய வகைகளைச் சுட்டவில்லை என்றே எண்ண வேண்டியதாக உள்ளது. எவ்வாறாயினும் இலக்கிய வகைமைக் கோட்பாடென்பது பண்டு தொட்டே தமிழில் தோன்றி வளர்ந்து வந்துள்ளது என்பதை மறுப்பதற்கில்லை. தொல்காப்பியருக்கும் பின்னால் யாப்பும் அணியும் பல்வேறாகக் கிளைத்தன. எனவே இவற்றினடிப்படையில் அமைந்த இலக்கிய வகைகள் பற்பலவாகத் தோன்றலாயின. அணி இலக்கணம் சொல்லணி, பொருளணி என இருபெரும் பிரிவுகளாகத் தோன்றி வளர்ந்தது. சொல்லணியின் வளர்ச்சியால் மட்டுமே பற்பல புதிய

இலக்கிய வகைகள் உருவாகின. இன்று சித்திரக் கவிகள் என வழங்கப் பெறுபவன யாவையும் சொல்லணிகளே.

ஒன்பதாம் நூற்றாண்டளவில் எழுந்த திவாகர நிகண்டு,

''மாலை மாற்றே சக்கரம் சுழிகுளம்
ஏகபாதம் எழுகூற்றிருக்கை
காதை கரப்பே கரந்துறை பாட்டே
பாத மயக்கே பாவின் புணர்ப்பே
கூட சதுக்கம் கோமூத் திரியே
ஓரினத்து எழுத்தால் உயர்ந்த பாட்டே
ஒற்றுப் பெயர்த்தல், ஒரு பொருட் பாட்டே
சித்திரப் பாவே விசித்திரப் பாவே
விகற்ப நடையே வினாவுத் தரமே
சருப்பதோ பத்திரம் சார்ந்த எழுத்தே
வருக்கமும் மற்றும் வடநூல் கடலுள்
ஒருக்குடன் வைத்த உதாரணம் நோக்கி
விரித்து மறைத்து மிறைக்கவிப் பாட்டுத்
தெரித்துப் பாடுவது சித்திரக் கவியே'' (திவாகரம் - 2336)

என நூற்பாவமைத்து மொத்தம் இருபது வகையான சித்திரக்கவிகளை விளக்குகிறது. இந்நிகண்டு நூலுக்குப் பின் பத்தாம் நூற்றாண்டில் எழுந்த யாப்பருங்கலம் எனும் யாப்பிலக்கண நூல் மேற்சுட்டிய சித்திரக் கவிகளோடு தூசங்கொளல், வாவனாற்றி எனும் இவ்விரண்டையும் கூட்டி மொத்தம் 22 வகைகளாகச் சித்திரக்கவிகளைச் சுட்டுகிறது. மிக அதிக எண்ணிக்கையைச் சுட்டும் நூல் மாறனலங்காரமாகும். இந்நூல் 26 சித்திரக்கவிகளைக் கூறுகிறது. இவற்றையெல்லாம் நோக்கும்போது சித்திரக் கவிகள் காலந்தோறும் வளர்ந்து வந்துள்ளமை புலனாகிறது.

ஞானசம்பந்தர்

திருஞானசம்பந்தர் பல சித்திரக்கவிகளைப் பாடியுள்ளார். இன்று கிடைத்திருக்கும் அவர்தம் பாடல்களில் 1. மாலை மாற்று, 2. மொழி மாற்று, 3. மடக்கு, 4. ஏகபாதம், 5. திருவெழுகூற்றிருக்கை, 6. சக்கர மாற்று, 7. கோமூத்திரி, 8. சதுக்கம் எனும் எட்டுச் சித்திரக்கவிகள் காணப் படுகின்றன. இவற்றுள் மாலைமாற்று, ஏகபாதம் ஆகிய இவ்விரண்டு வகைகளும் திருஞானசம்பந்தர் தோற்றுவித்த சித்திரக்கவிகள் என்பது இங்கு எண்ண வேண்டுவதாம். மரபாகப் பாடப்பெற்று வந்த இலக்கிய வகைகளைப் பாடியதோடு தாமே புதிய இலக்கிய வகைகள் பலவற்றை உருவாக்கிய பெருஞ்சிறப்பு நாயன்மார்களுக்கு உண்டு. இன்னும் மிகச் சரியாகச் சொல்வதென்றால் புத்தம் புதிய இலக்கிய வகைகளை மிகப் பலவாக உருவாக்கிய பெருமை சைவ சமயத்திற்கே உண்டு

எனலாம். தமிழொடு இசைப்பாட்டு மறந்தறியாத அவ்வருளாளர்கள் ஆக்கித் தந்த இலக்கிய வகைகள் எண்ணிறந்தன. ஈங்குத் திருஞான சம்பந்தர் பாடியருளிய சித்திரக் கவிகளுள் ஓரிரண்டை இனிக் காண்போம்.


மாலைமாற்று

"ஒருசெயுள் முதல்ஈறு உரைக்கினும் அஃதாய்
வருவதை மாலை மாற்று எனமொழிப".

என்பது மாறன் அலங்காரம் கூறும் இலக்கண விதி ஆகும். அஃதாவது, ஒரு செய்யுள் முதலில் இருந்து தொடங்கிப் படித்தால் வரும் பொருளே அச்செய்யுளை ஈற்றிலிருந்து படித்தாலும் அதே சொற்களும் பொருளும் வருமாறு பாடுவது மாலை மாற்று என்பதாம். இச்சித்திரக்கவியை முதன் முதல் பாடிய புலவராகத் திருஞானசம்பந்தர் திகழ்கிறார்.

மூன்றாம் திருமுறையில் நூற்றுப்பதினேழாவது பதிகம் திருமாலை மாற்றுப் பதிகமாகும். இப்பதிகத்தில் அமைந்துள்ள பதினொரு பாடல் களும் மாலைமாற்றுப் பாடல்களாக அமைந்து சிறக்கின்றன. அப்பாடல் களில் ஒன்றை இனிக் காண்போம்.

"யாமாமாநீ யாமாமா யாழீகாமா காணாகா
காணாகாமா காழீயா மாமாயாநீ மாமாயா"



பாடற்பொருள்

யாம் - உயிர்களாகிய நாங்கள் கடவுள் என்றால், ஆமா - அது பொருந்துமோ? நீ - நீயே இறைவன் என்பதை, ஆம் ஆம் - மிகவும்

பொருந்தும். மாயாழீ - பேரியாழ் மீட்டும் இறைவனே, காமா - யாவரும் விருப்பம் கொள்ளுமாறு அழகுடைய கட்டழகனே, காண் - யாவரும் காணுமாறு, நாகா - பாம்புகளை அணியாகப் பூண்டவனே, காழீயா - சீகாழியம்பதியை உடையோனே, மாமாயா - இலக்குமிக்குக் கணவனான திருமாலாகவும் வருபவனே, மாயா - மாயை முதலிய மலங்களில் இருந்து, நீ - இறைவனாகிய நீ எம்மை விடுவிப்பாயாக.

திருஞானசம்பந்தர் பாடியருளிய திருமாலைமாற்று எனும் இத்திருப்பதிகமே மாலைமாற்று எனும் சித்திரக்கவியின் முதல் இலக்கிய மாகத் திகழ்கிறது.

ஏகபாதம்

ஏகம் - ஒன்று, பாதம் - அடி, ஏகபாதம் - ஓர் அடி என்பதாம். அஃதாவது ஒரு செய்யுளின் முதலடியே அச்செய்யுளின் பிற அடி களாகவும் அமைவது ஏகபாதம் எனப்படும். மாலைமாற்று போன்று ஏகபாதமும் திருஞானசம்பந்தராலேயே முதன் முதலில் பாடப்பெற்றது. எனவே இவ்விலக்கிய வகையின் கர்த்தாவும் ஞானசம்பந்தரே என்பது இங்குக் குறிப்பிட வேண்டுவதாம். இவர் பாடியதும் முதல் திருமுறையில் நூற்று இருப்பத்தேழாவது பதிகமாக அமைந்துள்ளதுமான திருப்பிரமபுரப் பதிகம் ஏகபாதமாகப் பாடப்பட்டுள்ளது. சான்றிற்காக அப்பதிகத்தி லிருந்து ஒரு பாடலை நோக்குவோம்.

பொன்னடி மாதர் சேர்புற வத்தவன்
பொன்னடி மாதர் சேர்புற வத்தவன்
பொன்னடி மாதர் சேர்புற வத்தவன்
பொன்னடி மாதர் சேர்புற வத்தவன்

இப்பாடலின் நான்கடிகளும் ஒரு விதமாய் நின்றமையால் இது ஏகபாதமாயிற்று. இனி இப்பாடல் உணர்த்தும் பொருளை விளக்குவோம்.

பொன்அடி மாதர் சேர்பு உறவத்தவன் - அழகிய திருவடிகளை உடைய சக்தியும் பூதங்களும் உடைய மயானத்தைக் கோயிலாகக் கொண்டவன்.

பொன்அடி மாதர் சேர் புற தவத்தவன் - நல்ல வழிகளை உடைய பெரிய கட்டிடத்துத் தனித்துத் தவம் புரிபவன்.

பொன்னடி மாதர் சேர் புறவு அத்தவன் - பொன்னாபரணங் களால் அலங்கரிக்கப்பட்ட இருடி பத்தினிகள் பிச்சைஇட அணைந்த போது காட்டிடை உறைவோர் கொள்ளும் நிர்வாணத்தை அவர்களுக்கும் அளித்தவன்.

பொன்னடி மாதர் சேர் புறவத்தான் - பொன்னால் செய்யப்பெற்ற பாடக நூபுராதிகளைப் பாதங்களில் அணிந்துள்ள பெண்டிற் திரண்டு விளையாடும் புறவம் எனப்படும் சீகாழியம்பதிக்கு உரியவன்.

இவ்வாறு பாடலடிகள் அனைத்தும் ஒரே விதமான சொல்லடி களால் அமைந்து பலவிதமான பொருள்களைத் தருவது ஏகபாதம் ஆகும்.

எழுகூற்றிருக்கை

ஏழு கூறுகளால் ஆவது எழுகூற்றிருக்கை எனப்படும். இச்சித்திரக் கவிக்கு உரிய இலக்கணத்தை,

''ஒன்று முதலா ஓர்ஏழ் ஈறாச்
சென்ற எண்ஈர்ஏழ் நிலந்தொறும் திரிதர
எண்ணுவது ஒன்றாம் எழுகூற் றிருக்கை''

''அவைதாம்
இரத பெந்தத்தினில் இடை அறை இரண்டாய்ச்
சரத மதுற நடைசார் தருபான்மையின்
ஒன்று பன்னாள் காய்ஒரு பன்னிரண்டாய்
நின்றய லேனவு நிலந்தொறு முபயங்
குன்றுவ தாய்த் தொகை கூடி ஒன்றில் இறும்''

(மாறன் அலங்காரம் - 297, 298)

என மாறனலங்காரம் உணர்த்தும். செய்யுளில் ஒன்று எனும் எண் வரிசை அமையுமாறு எண்ணைக் கூட்டியும் குறைத்தும் பாடுவது எழுகூற்றிருக்கை எனப்படும். இது இரத பந்தத்தில் பாடுவது மரபு. ஒன்றிலிருந்து ஏழு வகையிலான எண்கள் மிக்கும் குறைந்தும் வருமாறு இந்தப் பந்தத்தில் பாடப்பெறும் இவ்விலக்கிய வகையில் எண் அமைக்கும் முறையில் வேறுபடும் இலக்கியங்களும் உண்டு. என்றாலும் இரதபந்தம், 1-7 வரையிலான எண்கள் அமைப்பது ஆகிய அடிப்படை மரபுகளில் மாற்றம் நிகழவில்லை. திருஞானசம்பந்தர் பாடிய திருவெழுகூற்றிருக்கை முதல் திருமுறையில் நூற்று இருபத்தெட்டாவது பதிகமாக இடம் பெற்றுள்ளது. அப்பதிகமும் அதில் குறிக்கப்படும் எண்களும், அவ்வெண் இரத பந்தத்தில் அமையும் முறையும் இனிக் காட்டுவோம்.

3

பாணி மூவுலகும் புதையமேல் மிதந்த

2

தோணிபுரத்து உறைந்தனை தொலையா இருநிதி
வாய்ந்த பூந்தராய் ஏய்ந்தனை

1
வரபுரம் ஒன்று உணர் சிரபுரத்து உறைந்தனை
1 2
ஒருமலை எடுத்த இருதிறல் அரக்கன்
விறல் கெடுத்து அருளினை புறவம் புரிந்தனை
3 4
முந்நீர்த் துயின்றோன் நான்முகன் அறியாப்
பண்பொடு நின்றனை சண்பை அமர்ந்தனை
5 6
ஐயுறும் அமணரும் அறுவகை தேரரும்
ஊழியும் உணராக் காழி அமர்ந்தனை
7
எச்சன் ஏழிசையோன் கொச்சையை மெச்சினை
6 5
ஆறுபதமும் ஐந்தமர் கல்வியும்
4
மறை முதல் நான்கும்
3
மூன்று காலமும் தோன்ற நின்றனை
2 1
இருமையின் ஒருமையும் ஒருமையின் பெருமையும்
மறுவிலா மறையோர்
கழுமல முதுபதிக் கவுணியன் கட்டுரை
கழுமல முதுபதிக் கவுணியன் அறிவும்
அனைய தன்மையை ஆதலின் நின்னை
நினைய வல்லவர் இல்லை நீள் நிலத்தே.

இனி இப்பாடலில் அமைந்துள்ள ஒன்று முதல் ஏழு வரையிலான எண்கள் கூட்டியும் குறைந்தும் வந்து இரத பந்தத்தில் அமையும் முறை யினைக் கீழ்வரும் எண் அமைப்பு உணர்த்தும்.

1
ஓர் உருவாயினை மானாங் காரத்து
2 1
ஈர் இயல்பாய் ஒருவிண் முதல் பூதலம்
1 2
ஒன்றிய இருசுடர் உம்பர்கள் பிறவும்
3
படைத்தளித்து அழிப்ப மும்மூர்த்திகள் ஆயினை

2 1
இருவரோடு ஒருவனாகி நின்றனை
1 2
ஓர் ஆல் நிழல் ஒண்கழல் இரண்டும்
3 4
முப்பொழுது ஏத்திய நால்வர்க்கு ஒளிநெறி
3
காட்டினை நாட்டம் மூன்றாகக் கோட்டினை
2 1
இருநதி அரவமோடு ஒருமதி சூடினை
1 2 3
ஒருதாள் ஈர் அயில் மூவிலைச் சூலம்
4 5
நாற்கால் மான்மறி ஐந்தலை அரவம்
4 3
ஏந்தினை காய்ந்த நால்வாய் மும்மதத்து
2 1
இருகோட்டு ஒருகரி ஈடழித்து உரித்தனை
1 2
ஒரு தனு இருகால் வளைய வாங்கி
3 4
முப்புரத்தோடு நானிலம் அஞ்சக்
கொன்று தலத்துற அவுணரை அறுத்தனை
5
ஐம்புலனால் அந்தக் கரணம்
3 2 1
முக்குணம் இருவளி ஒருங்கிய வானோர்
ஏத்த நின்றனை ஒருங்கிய மனத்தோடு
2 3
இருபிறப்பு ஓர்ந்து முப்பொழுது குறை முடித்து
4 5
நான்மறை ஓதி ஐவகை வேள்வி
6
அமைத்து ஆறங்கம் முதல் எழுத்தோதி
7
வரன்முறை பயின்று எழு வான்றனை வளர்க்கும்
பிரமபுரம் பேணினை

6

அறுபத முரலும் வேணுபுரம் விரும்பினை

5

இகலிய ஐந்துணர் புகலி அமர்ந்தனை

4

பொங்குநால் கடல்சூழ் வெங்குரு விளங்கினை

					1	2	1					
				1	2	3	2	1				
			1	2	3	4	3	2	1			
		1	2	3	4	5	4	3	2	1		
	1	2	3	4	5	6	5	4	3	2	1	
1	2	3	4	5	6	7	6	5	4	3	2	1
1	2	3	4	5	6	7	6	5	4	3	2	1

(இரதத்தில் கீழ்ப்பாகம் அமையுமாறு மேற்காட்டிய எண் அமைப்பு முறையையே கீழேயும் அமைத்துக் கொள்ள முழு தேர் உருவம் கிட்டும் என்க).

மேற்சுட்டிய சித்திரக் கவிகளே அன்றி கோமூத்திரி, சக்கரமாற்று, சதுக்கம் ஆகிய சித்திரக் கவிகளையும் திருஞானசம்பந்தர் பாடி அருளி யுள்ளார். அவற்றுள் சக்கரமாற்று எனும் கவியே பிற்காலத்தில் நான்காரைச் சக்கரபந்தம், ஆறு ஆரைச் சக்கரபந்தம், எட்டாரைச் சக்கரபந்தம் ஆகிய பல புதிய வகைகள் எழ அடித்தளமாகியது. அவ்வாறே ஞானசம்பந்தர் பாடியருளிய சதுக்கம் எனும் சித்திரக் கவியே பின்பு கூட சதுர்த்தம் எனும் இலக்கிய வகை எழ மூலமாகத் திகழ்ந்தது. இவ்வாறு, நாளும் இன்னிசையால் தமிழ் வளர்த்த திருஞானசம்பந்தர் தமிழ் இலக்கிய வகைகளையும் வளர்த்துள்ளார் என்பது நாம் ஈங்கு அறிய வேண்டுவதாம். காழிச் செல்வனாம் திருஞானசம்பந்தன் ஆக்கி அருளிய மேற்சுட்டிய சித்திரக் கவிகள் பிற்காலத்தவர் மேலும் பல சித்திரக் கவிகளை ஆக்கத் தூண்டின என்பதும் வரலாறு காட்டும் உண்மையாம்.

17. சம்பந்தரின் பக்திநெறிச் சிந்தனைகள்

கே. கண்ணாத்தாள், காரைக்குடி.

பக்தி இலக்கியங்களில் இடம் வகிக்கும் சைவ இலக்கியங்கள் பன்னிரு திருமுறைகளாகத் தொகுக்கப் பெற்றுள்ளன. எண்ணத்திலும் செயலிலும் இறையே கலந்திருந்த சைவ அடியார்களின் வாழ்க்கை பக்திக்கு வித்திட்டது. நோக்குமிடமெல்லாம் நீக்கமற நிறைந்திருக்கும் இறையனுபவத்தை அவர்தம் வாழ்வில் கண்டனர். பசுவின் பாலில் கடைந்தெடுத்த சுவையான நெய்யினைப்போல அவர் தாம் படைத்த இலக்கியங்கள் திகழ்கின்றன. சைவ அடியார்கள் நாயன்மார்கள் என்றழைக்கப் பெற்றனர். அவர்கள் ஆளுடைய பிள்ளையராகிய திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் அவர்களுக்குச் சிறப்பான இடமுண்டு. அவர் அருளிச்செய்த தேவாரத் திருப்பதிகங்கள் ஒன்று, இரண்டு, மூன்று திருமுறைகளாகும்.

திருஞானசம்பந்தர் அருளிச்செய்த முதல் மூன்று திருமுறை களில் 2-ஆம் திருமுறையில் வெளிப்படும் பக்திநெறியினை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும். இரண்டாம் திருமுறையில் நூற்றி இருபத்தொரு தலங்களைப் பற்றி பாடப்பெற்றுள்ளன.

மெய்யன்பே பக்தி

"ஆண்டவனைக் குறித்து அடியார் மேற்கொள்ளும்
மெய்யன்பே பக்தி"

என்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். இறைப்பற்று என்பதே இறை உணர்வுதான். காதலாகிக் கசிந்து, உள்ளுக்குள் இரங்கி, கண்ணீர் மல்குவதே மெய்யான பக்தி என்பதை உணரலாம். மனிதனிடமோ, பிற உயிர்களிடமோ, இறைவனிடமோ அன்பு மிகுகின்றபோது அது கண்ணீரை வரவழைக்கிறது. அந்த உணர்வு அன்புணர்வு. அதை, அந்த அன்புணர்வை இறைமீது கொண்ட அடியார்கள் இலக்கியங்களில் பதிவு செய்துள்ளனர்.

"மந்திரமாவது நீறு
சுந்தரமாவது நீறு
தந்திரமாவது நீறு"

என்று உலகுக்கோதியவர் உமையம்மையிடம் ஞானப்பாலுண்ட திருஞானசம்பந்தர் ஆவார். அவர் ''மெய்யுணர்வின் திருவுருவம், தமிழ் நான்மறையின் சிறந்த துணை. மண்ணில் வளர்கின்ற சிவத்திங்கட் கொழுந்து, கொன்றைச் சடையான் சீர்பாடும் ஏழிசைக் குன்று'' என்று போற்றப் பெற்றவர். அவரது பக்திநெறி குறித்த சிந்தனை களை விரிவாகக் காண்போம்.

சத்புத்திர மார்க்கம்

இறைவனைத் தோழனாக, நண்பனாகக் கண்டவர்கள் நம் அடியார்கள். திருஞானசம்பந்தர் இறைவன்மீது பற்றுக் கொண்டதால் இறைவி, ஞானசம்பந்தரைத் தன் புதல்வனாய்ப் பாவித்து அழும் குழந்தையின் அல்லல் நீக்கும் தாயாகப் பொற்கிண்ணத்தில் பால் கொடுத்தார். தந்தையோடு குளத்துக்குச் சென்ற ஞானசம்பந்தக் குழந்தை, ''அம்மா, அப்பா'' என்று கோபுரத்தைப் பார்த்து அழ, புத்திரன் துயர்கேட்ட பெற்றோராகச் சிவனும் பார்வதியும் வானில் எழுந்தருளினர் எனத் திருஞானசம்பந்தரின் பக்திநெறி 'சத்புத்திர மார்க்கமாக' அமைந் துள்ளது. இறைவன், இறைவி இருவராலும் ஆட்கொள்ளப் பெற்றமையால், 'ஆளுடையப் பிள்ளை' எனவும், ஞானம் பெற்றமையால் திருஞான சம்பந்தம்' எனவும் திருப்பெயர் பெற்றார். பாலருந்திய குழந்தையைப் பார்த்து அவரது தந்தை, ஏது பால் என வினவியபோது ஆகாயத்தைக் காட்டித் தனக்குக் காட்சி கொடுத்த அம்மையப்பரைக் காட்டி ''தோடுடைய செவியன் விடையேறி'' என்ற மெய்ம்மொழித் திருப்பதிகத்தைப் பாடியருளினார்.

பதிகமும் பக்திநெறியும்

பக்தியின் தோற்றம் தென்னகமே என்று கூறுவதற்கேற்பத் தென்னகத்தில் கோவில்கள் அதிகமுண்டு. அக்கோவில்கள் இறையுணர்வு மிக்க அடியார்களால் பாடப்பெறும் சிறப்பைப் பெற்றுள்ளன. ''பக்தி என்பது இறைவன்மீது அடியவர்கள் கொள்ளும் ஆழமான அன்பை அடித்தளமாகக் கொண்டு நிகழ்தலால் அதைக் கட்டுப்பாட்டிற்குள் வைக்காவிடில் தடம்புரண்டு போய்விடும் என்பதனை நன்குணர்ந்த நாயன்மார்கள் கோயில் வழிபாட்டுடன் இணைத்தே தமிழகத்தில் பக்திப் பயிரினை வளர்த்து வந்தனர். இக்கருத்திற்கிணங்கச் சிவனடியார்கள் அருளிய பன்னிரு திருமுறைகள் தலவரலாற்றோடு பக்திநெறியை உணர்த்தி நிற்கின்றன.

இறைவன்மீது கொண்ட பக்தியைப் பல நிலைகளில் வெளியிட் டுள்ளனர். பக்தி என்பது ஒரு உணர்வு - அனுபவம் என்றெல்லாம் ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். அந்த இறை அனுபவம் பல

நிலைகளில் பக்தி இலக்கியங்களில் பேசப்பட்டுள்ளன. ''இறைவனை அனுபவிக்கும் நிலைகள் பல. அவனுடைய திருநாமங்களைச் சொல்லி அனுபவித்தல், திருக்கல்யாண குணங்களைச் சொல்லி அனுபவித்தல், வடிவழகைச் சொல்லி அனுபவித்தல் என்றிப்படிப் பலவகைப்பட்டிருக்கும் இயற்கையோடு இயைந்த வாழ்க்கை நடத்துதல் மிகச்சிறந்த இறைநெறி. திருஞானசம்பந்தர் இயற்கை அழகு கொஞ்சும் பதிகளில் வாழ்ந்து, அங்குள்ள இறைவனைப் பரவி வாழ்ந்துள்ளார் என்பதைப் பன்னிரு திருமுறைப் பதிகச் செய்திகளினால் அறிந்துகொள்ள முடிகிறது.

இறைவனின் தோற்றப் பொலிவு

திருஞானசம்பந்தரின் மனம் ஆதியும் அந்தமுமில்லா அருட்பெருஞ் சோதியாகிய இறைவனின் தோற்றப் பொலிவில் மயங்குகிறது. இறைவன் தோற்றத்தை மனதில் நிறுத்தல் பக்தி. இறைப்பற்றின் வெளிப்பாடு. மனதில் நிலைநிறுத்தும் எந்தப் பொருளும் உருவமாய் இருத்தலே சிறப்பு. இதை அடியொற்றித்தான் உருவ வழிபாடு தோன்றியிருக்க இயலும்.

''பின்னு செஞ்சடையிற் பிறை பாம்புடன் வைத்தே''

''மால்களிற் றின்னுரி போர்த்துகந்தீர் சொலீர்
மங்கை பங்கமும் அங்கத் தோடொன்றிய''

''கோமனும் அரவுந்த தொடர் செஞ்சடையீர்''

''துள்ளுமான்பறி யேந்திய செங்கையினீர்''

''சோதியஞ்சுடர் மேனி வெண்ணீரணி வீர்சொலிர்
காதிலங் குழை சங்க வெண் டோடுடன்''

மேற்கண்ட திருஞானசம்பந்தரின் பாடலடிகள் மங்கை பாகனாய், கழுத்திலே அரவினைச் சூடியவனாய், பிறையினைச் சடையிலே அணிந்த வனாய், வெண்ணீறணிந்தவனாய், மான்மறி யேந்திய கையினனாய்த் திகழும் சிவனின் தோற்றப் பொலிவை நினைந்து உருகிப்பாடி இறையை உணரும் தன்மையை விளக்குகின்றன. 'மைகொள்கண்டன்', 'முக்கணான்' என்று ஓதியறியாது திகழ்வானை, சோதியிற் சோதியினை புகழ்ந்து நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பும் ஞானசம்பந்தரின் பாடல்கள் வழி அறிய முடிகிறது.

பக்தியும் பயனும்

தானத்தாலும், தவத்தாலும், இறைப்பற்றாலும், நற்குணங்களாலும், விரதங்களாலும் சிறந்து நிற்கின்ற ஒருவனையே பக்தியுடையோன் 'பக்தன்' என்கிறோம். மேலும் இப்பிறவித் துன்பமுடையதாக இருந்தாலும் இறைவன்மீது கொண்டுள்ள பக்தியால் வீடுபேறு என்ற இன்னலற்ற உலகை அடையமுடியும் என்றே சாத்திரங்கள் சாற்றுகின்றன.

''தண்ணலார் தம்மடி போற்ற வல்லார்க்கில்லை அல்லலே''

''வேட வேடர் திருவாஞ்சிய மேவிய வேந்தரைப்
பாட நீடுமனத்தார் வினை பற்றறுப்பார்களே''

என்று சம்பந்தர் சுவாமிகள் கூறியிருப்பது, பக்தி மேலிடுவோர், இறைச்சிந்தனை மிக்கோர் உலகப்பற்று நீங்கி வீட்டுலகம் அடைவர் என்பதேயாகும்.

''பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றை
பற்றுக பற்று விடற்கு''

என்ற பொய்யாமொழியாரின் கருத்தே சம்பந்தரின் பாடல்களில் தொனிப்பதைக் காணலாம். இறையறிவு இல்லாமல் விரதங்கள் மட்டும் வீடுபேறளிக்காது. திருஞானசம்பந்தர் போன்றோரின் பாடலும், இசையும் அனைத்து இன்பமும் அளிக்கும் என்பதைப் பின்வரும் பாடல் உணர்த்தும்.

''வீடு ஞானமும் வேண்டுதிரேல் விரதங்களால்
வாடி ஞானமென்னாவது மெந்தை வலஞ்சுழி
நாடி ஞானசம்பந்தன் செந்தமிழ் கொண்டிசை
பாடு ஞானம் வல்லாரடி சேர்வது ஞானமே''

பக்தியால் பாவம் அறுமே

சிவனடியார்கள் இறைவன்மேல் பற்றுக் கொண்டது பொன்னும் பொருளும் வேண்டியோ, அல்லது போக வாழ்வு விரும்பியோ அல்ல. வறுமையாயினும் இறைவனைக் காணும் இன்பம் கிடைக்குமேல் துன்பம் பெரிதில்லை என்று நினைத்தார்கள். 'நமசிவாய' என்னும் நாமம் பிறவித்துன்பம் நீக்கும். இடர் நீக்கும், அல்லல் அழியும், ஆன்மா இன்புறும், பாவம் தொலையும் என்று மட்டுமே நினைத்தார்கள்.

''மயிலாரு மல்கிய சோலை மணஞ்சேரிப்
பயில்வானைப் பற்றி நின்றார்க்கில்லை பாவமே''

(திருமணஞ்சேரி பாடல் - 2)

என்றும்,

''வைப்பான மாடங்கள் சூழ்ந்த மணஞ்சேரி
மெய்ப்பானை மேவிநின்றார் வினைவிடுமே''

(திருமணஞ்சேரி பாடல் - 3)

''படையானை பண்ணிசை பாரு மணஞ்சேரி
அடைவானை அடையவல்லார்க் கில்லை அல்லலே''

(திருமணஞ்சேரி பாடல் - 4)

என்றும் பாடி இறைவனை எண்ணுங்கால் பாவமும், வினையும், அல்லலும் நீங்கும் என்று கூறிப் பக்தியில் திளைக்கின்றார் சம்பந்தப் பெருமான்.

பக்தித் திளைப்பும் திகைக்கும் வனப்பும்

திருஞானசம்பந்தர் பக்தியில் தளைத்திருந்ததால் பல திகைக்க வைக்கும் செயல்களைப் புரிகிறார். ஆண்டவனும் அவருக்கு அற்புதங்கள் செய்கிறார். மனிதனால் நம்ப இயலாத செயல்களை மந்திரம் என்றும், தந்திரம் என்றும் மனித மனம் நினைக்கின்றது. ஒன்று கூடும் சூரிய ஒளி ஒரு காகிதத்தை எரிக்கும் சக்தியைப் பெறுகின்றது. அதுபோல ஒன்றிய மன உணர்வுகள் பெரும்பெரும் சாதனைகளைச் செய்து முடிக்கும். அதனால்தான் வள்ளுவர் எண்ணியர், திண்ணியர் எண்ணியாங்கு எய்துவர் என்றார். வள்ளுவர் கூறியதுபோல ஓயாது ஒளியாது கொண்ட இறைப்பற்றால் அடியார்கள் அற்புதங்கள் பலவற்றை நடத்தியிருக் கிறார்கள். சான்றாக ஒன்று, திருமயிலாப்பூரிலே சிவநேசர் என்பவர் தம் மகள் பூம்பாவையை ஞானசம்பந்தருக்கென்றே வளர்த்து வந்தாள். அப்பெண் பாம்பு கடித்து இறந்துபட அவளது சாம்பலைக் குடத்தி லிட்டு கன்னி மாடத்தில் வைத்து மலர்தூபம் இட்டுப் பாதுகாத்து வந்தார். ஞானசம்பந்தர் எழுந்தருளும்போது அதை அறிகிறார். உடனே 'பூம்பாவாய்' என விளித்து 'மட்டிட்ட புன்னை' (திருமயிலாப்பூர் பதிகம்) என்ற பதிகத்தைப் பாடினார். பெண் உயிர் பெற்று வந்தாள். தான் அப்பெண்ணுக்கு உயிர் கொடுத்ததால் பிதாவினைப் போன்றவன் எனக் கூறி அவளை மணம் செய்ய மறுத்து விடுகிறார். கடைசிவரை அப்பெண் சம்பந்தர் திருவடியை நினைத்துச் சிவத்தை அடைந்தார் எனத் திருமயிலாப்பூர் பதிகம் கூறுகிறது. இறந்த வணிகனை உயிர்பெறச் செய்தல் போன்ற பல அதிசயச் செயல்களை நடத்து கின்றது நம் ஞானசம்பந்தக் குழந்தை. குழந்தை வெயிலில் அலைகிறதே என்று இறைவன் முத்துப்பந்தல் அமைக்கிறார். அவரது வருகையை இறைவன் ஊரிலுள்ளோர் கனவில் சென்று கூறுகிறார். சம்பந்தர் கூன்பாண்டியனின் துயர் தீர்த்து சமணர்களை வென்றார். அப்பரும் சம்பந்தரும் சேர்ந்துபாடி திருமறைக்காட்டுக் கோவில் தேவைத் திறப்பச் செய்தனர். (திருமறைக்காட்டுப் பதிகம்) இப்படிப் பதிகந்தோறும் அதிசயம் நடத்திய அவரது பக்தி நெறிச்சிந்தனை நம் பக்தியை வளர்க்கவல்லது.

நாளும் கோளும் நல்ல நல்ல

எல்லாம் இறைவன் செயல் என்று சரணாகதி அடையும் சரணாகதி தத்துவத்தை ஞானசம்பந்தர் பாடல்கள் உணர்த்துகின்றன. நல்ல நாள், தீயநாள், நட்சத்திர பலன், ராசிபலன் இவையெல்லாம் நாளும் மக்களை அச்சத்திற்குள்ளாக்குகின்றன. ஆண்டவனின் பாதங்களைப் பற்றியோர்க்கு எல்லாம் நன்மையாய் அமையும் என்கிறார். அப்பர், கூன்பாண்டியன்

குறைநீக்க, சமணர்களோடு வாதிட்டு வெல்லச் செல்லும் சம்பந்தரைத் தடுக்கிறார். தற்போது நாளும் கோளும் நன்றாயில்லை என்கிறார். அப்போது 'கோளறு' பதிகம் பாடி பக்தியின் - பக்திநெறிச் சிந்தனையின் உண்மையை உணர்த்துகிறார்.

"வேயுறுதோளி பங்கன் விடமுண்ட கண்டன்
மிகநல்ல வீணை தடவி
மாசறு திங்கள் கங்கை முடிமேலணிந்தென்
உளமே புகுந்தவதனால்
ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன் வெள்ளி
சனி பாம்பிரண்டு முடனே
ஆசறுநல்ல நல்ல அவை நல்லநல்ல
அடியா ரவர்க்குமிகவே"

என்ற பாடலின்வழி ஒன்பது கோள்களையும் சுட்டி, கங்கை நதி சூடிய சிவன் தனதுள்ளத்திருப்பதெல்லாம் எல்லாம் நன்மையைச் செய்யும் என்று இயம்புகிறார். கோளறு பதிகத்தின் பத்துப்பாடல்களும், இறைவனின் பெருமையை உணர்த்துகின்றன.

இரண்டாம் திருமுறையில் திருத்தலங்களின் இயற்கைவளம் கூறப் பெற்றுள்ளது. இறைவன் எழுந்தருளியுள்ள தலம் புகழுதல் ஒரு பக்திநெறிச் சிந்தனையாகிறது. ஒவ்வொரு பதிகத்திலும் இறைவனின் தோற்றப்பொலிவு புகழப் பெறுகிறது. சிவனின் பெருமைகளான காமனுக்கு உயிர் கொடுத்தது, அரக்கர்களின் முடிநெறித்தது. தேவர் களைக் காத்தது முதலிய வீரச்செயல்கள் சொல்லப் பெறுகின்றன. ஞானசம்பந்தர் சைவ அடியாராகத் திகழ்ந்தபோதும், ராமருக்குதவிய, சடாயு, சம்பாதி என்ற புள்வேந்தர்களை பூசித்த தன்மை தெரிகிறது. பக்தியின் பயனாகிய பாவம் நீக்கம் பெறுதலை எவ்விடத்தும் கூறி யுள்ளார். எங்கும், எதிலும் இறைச்சிந்தனை பெற்றோர் மண்ணில் நல்லவண்ணம் வாழுதல் உறுதி என்பதே திருஞானசம்பந்தரின் பக்திநெறிச் சிந்தனையாய் மலர்ந்துள்ளது.

18. அற்புதத் திருப்பதிகங்கள்

கலையரசி நடராாசன், சென்னை.

திருஞானசம்பந்தப் பெருமானின் அற்புதப் பதிகங்களைப் பற்றி நாம் சிந்திக்கத் தொடங்குமுன், நம் இறைவன் சிவபெருமானின் அற்புத திருச்செயல்களும் நம் சிந்தையை வருடுகின்றன. அதிலும் தலையாய அற்புதத் திருச்செயல், மனிதனின் உடலும் அதில் உள்ளடங்கிய உயிரும் ஆகும். அதாவது ஒன்பது ஓட்டைகளை உடைய இந்த உடலில் தங்கிய உயிர் தான் வகுத்த காலக்கணக்கை அல்லாது எந்த நாளிலும் எந்த வழியிலும் வெளியேறி விடாமல் பிணைத்துள்ள அற்புதத்தை நோக்குங்கால் அவர்தம் பிள்ளையாரான (சேக்கிழார் பெருமானும் அருணகிரிநாதரும் இவ்வாறே செப்புகின்றனர்) திருஞானசம்பந்தப் பெருமானின் பதிகங்கள் விளைவித்த அற்புதங்கள் எல்லாம் பரம்பரை விளையாட்டே என்றே எண்ணத் தோன்றுகின்றது. அப்பனின் திருவருளே அம்மையின் எழில் வடிவம் அந்த எழில் வடிவில் ஊறிய அமுதமே அன்னை ஊட்டிய ஞானப்பால் அமுதமாய் ஊறி ஞானமாய் உட்சென்ற அந்தப்பால் தமிழ்ப்பால்.

அதை அருந்திய காரணத்தால் தான் தேவாரம் முழுமையும் தமிழ்த்தேன் பிலிற்றுகின்றது. தமிழ் மணம் கமழ்கின்றது. ஏறத்தாழ 222 இடங்களில் தமிழ் என்ற சொல்லை பெருமான் பயன்படுத்தி யுள்ளார். அதாவது இறைவனுக்கு அலங்காரம் செய்யும்போது எங்கெங்கு தங்கமலர்களை சூட்டினால் ஜொலிக்குமோ அதுபோல் அங்கங்குத் தமிழ் என்ற தங்கச் சொல்லை இட்டுள்ளார். தன்னையும் பல இடங் களில் தமிழ் ஞானசம்பந்தன் என்றே குறிப்பிடுகின்றார். தமிழ் என்ற சொல்லைத் திரும்பத் திரும்பச் சிலமுறை உச்சரிக்கும்போது அமிழ் தென்றே வெளிப்படும் அந்த அமுததாரை எதன் மீது படுகின்றதோ அது அழியா நிலைபெறும் அமிழ்து என்பது மந்திரப்பொருள். தமிழ் என்பது மந்திரச்சொல் அந்தச் சொல்லால் கட்டிய சுந்தர மாலைகளே ஆளுடைப் பிள்ளையாரின் அற்புதப் பதிகங்கள்.

இடறினும் தளரினும் என்று பாடிப் பொன்பெற்றது. ''துணிவளர் திங்கள், எனப் பாடி முயலகனை நீக்கியது. சடையாய் எனுமால் எனப் போற்றி இறந்த வணிகனை உயிர்ப்பித்தது. ''கொட்டமே கமழும் கொள்ளம் பூதூர்'' எனும் பதிகத்தை எடுத்தோதி, முள்ளியாற்றில்

பொங்கிப் பெருகிய வெள்ளத்தில் அடியார் பெருமக்களுடன் மறுகரை சேர்ந்தது. ''வாசி தீரவே காசு நல்குவீர்'' எனக் கேட்டு நற்காசு பொற்காசு பெற்றது. ''காரைகள் கூகை முல்லை கள வாகையீகை எனப் பாடி பாலையை நெய்தலாக்கியது, ''சதுரம்மறை தான்'' எனப் போற்றி திருக்கதவம் காப்புக் கொள்ளச் செய்தது.''பூத்தேர்ந்து ஆயன'' என்று ''பூத்தேர்ந்து ஆயன'' என்று திருவோத்தூரிலே ஓதி, ஆண்பனையை பெண்பனையாய் மாற்றியது. ''அவ்வினைக்கு இவ்வினையாம் என்று சொல்லி மலைச்சுரம் நீக்கி அருளியது ''மந்திரமாவது நீறு'' என்று ஓதி மன்னனின் வெப்பு நோய் தீர்த்தது. ''போகமார்த்த பூண் முலையாளொடும்'' எனப் பாடி வீணரை வாதில் வென்றது, புனல்வாதில் எதிர்வர வெள்ளத்தில் ஏடு இட்டபோது எதிர்த்த நிலையிலும் நீரின் இழு விசையால் சென்ற ஏட்டை நிறுத்த, வன்னியும் மத்தமும் மதிபொதி சடையினன், என்ற பதிகத்தை ஓதி ஏட்டை நிறுத்தியது.

''வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்''

எனப் பாடி கூன்பாண்டியனை நின்றசீர் நெடுமாறன் ஆக்கியது. ''மட்டிட்ட புன்னை அம்கானல்'' எனப் பாடி எரிந்து சாம்பலாகிப் போன பூம்பாவையின் எலும்பை பெண்ணாக்கியது. ''காதலாகி கசிந்து கண்ணீர் மல்கி என்று பாடி மணக்கோலம் கண்ட அடியார் திரு கூட்டத்தைச் சோதியில் சேர்த்தது என்று எத்துணை எத்துணை அற்புதங்கள் இன்னும் எத்துணை பதிகங்கள் என்னென்ன அற்புதங்கள் விளைவித்தனவோ யாரறிவார்.

மேலே குறிப்பிட்ட பதிகங்கள் யாவும் பெருமான் நேரடியாய் நின்று அற்புதம் விளைத்தது. ஆனால் சம்பந்தப் பெருமானின் தேவாரம் முழுமையும் அதிஅற்புத பதிகங்கள் பரக்கக் காண்கின்றோம். உரைப் புடன் ஓதினால் பலனை நிச்சயம் பெறலாம். உதாரணத்திற்கு சில பதிகங்களை இங்கே குறிப்பிட விரும்புகின்றோம்.

முதலாம் திருமுறையில் முதலாம் திருப்பதிகம் ''தோடுடைய செவியன்'' இப்பதிகத்தை நாளும் காலையில் ஓத உள்ளத்தில் அமைதி ஆனந்தம் உயிர்க்குப் பேரின்பம் பெருகும். தலம் திருவலிதாயம் பதிகம் வ.எண்.3. ''பத்தோரோடு பலரும் பொலியம் மலர்'' பலன் - பழவினை நோய் இடர்யாவையும் அறுக்கும் பதிகம். கீழைத் திருக்காட்டுப்பள்ளி- ''செய்யருகே புனல்பாய ஓங்கிச்'' பலன் துன்பம் துயரம் தீர்த்து திருவருள் சேர்க்கும் வ.எ.10. திருவண்ணாமலை ''உண்ணாமுலை உமையாளொடும்'' பலன் பழவினை அறுத்து அடியார் திருக்கூட்டத்தில் சேர்க்கும் சங்கமம் வழிபாட்டின் பெரும்பயன் கிட்டும். வ.எ.11 திருவீழிமிழலை ''சடையார் புனல் உடையான்'' சிவனின் அடையாளங்களை அறிந்துணர்ந்து இன்புறத்தக்கது வ.எ.12. திருமுதுகுன்றம் ''மத்தாவரை நிறுவிக்கடல்''

இந்தப் பதிகம் ஓதினால் இறைவன் ஆன்மாக்களை இளைப்பாற்றுவான் - வ.எ.14 திருகொடுங்குன்றம், ''வானில் பொலிவெய்தும் மழை'' பலன் துன்பம் துயரம் மறைந்து உடல் உள்ளம் எங்கனும் ஊனமின்றி வாழ ஓதவும் வ.எ.21 திருச்சிவப்புரம் - புவம்வளிகனல் புனல் இந்தப் பதியை நினைத்து இந்தப் பதிகத்தை ஓத இம்மைக்கும் மறுமைக்கும் எல்லா நலன்களும் 16 பேறுகளும் கிட்டும் வ.எ.30 திருப்புகலி- ''விதியாய் விளைவாய் விளைவின் பயனாய்'' நாம் நல்லவர்களாய் வாழ விரும்பி ஓத வேண்டிய பதிகம் வ.எ.40 திருவாழ்கொளிபுத்தூர் ''பொடியுடைமார்பினர்'' உறைப்புடன் ஓத எளிதில் துயர்தீர்ந்து திருவருள் பெற்று திருவடி சேரலாம். வ.எ.41 திருப்பாம்புரம் ''சீரணிதிகழ் தருமார்பில்'' இந்தப் பதிகத்தை ஓதினால் சீர் சிறப்பு செல்வம் சிவன் திருவடியாவும் பெறலாம். வ.எ.56 திருப்பாற்றுத்துறை ''காரார் கொன்றை கலந்த முடியினர்'' - இறைவன் நினைவு எப்போதும் நீங்காமல் நிற்க ஓததக்க பதிகம். வ.எ.57. திருவேற்காடு ஒள்ளிது உள்ளக்கதிக்காம் ''வாழ்வின் அனைத்து மேன்மைகளும் பெறப் பழி பாவம் நீங்க ஓதவேண்டிய பதிகம் வ.எ.58. திருக்கரவீரம், ''அரியுநம் வினையுள்ளன ஆசற. இதுவரை வந்த பாவம் தீரவும் இனிப்பாவம் வராமல் நிற்கவும் ஓதுதற்கு உரிய பதிகம் வ.எ.60. திருத்தோணிபுரம் ''வண்தரங்க புனற்கமல'' இப்பதிகம் முக்தி நிச்சயம் வ.எ. திருக்கோளிலி'' நாளும் கோளும் நம்மை அணுகாது காக்கும் கவசப் பதிகமிது வ.எ. 73 திருக்கானூர் ''வானார்சோதி மன்னுசென்னி'' தொழுது போற்றித் தோத்திரம் சொல்லி இறைவனை துதிப்பதோடு அழுதுதொழும் அன்புக்கு அதிக ஆற்றல் என்பதை காட்டும் பதிகம். வ.எ.74 திருப்புறவம் ''நறவ நிறை வண்டு'' அம்மையைப் பிரியாத அப்பன் நம்மையும் பிரியமாட்டான் என்னும் உறுதியை உள்ளத்திற்கு தரும் பதிக வ.எ.75. திருவெங்குரு ''காலை நன் மாமலர் கொண்டு'' இந்தப் பதிகத்தை ஓதித் தொழுவார்க்கு வானுலகிலிருந்து விமானம் வந்து கொண்டு போகவும் அந்த உலகை ஆளவும் கூடும்.வ.எ.76 திருஇலம்பைங்கோட்டூர் ''மலையினார் பருப்பதம் துருத்தி மாற்பேறு'' சம்பந்தபெருமான் தனது உரையைச் சிவபெருமான் உரை என உறுதிபடக் கூறுவதால் பதிகத்தின் திருக்கடைகாப்பு பாடல் கூறும் பயன் நிச்சயம் கிட்டும் வ.எ.77. திருஅச்சிறுபாக்கம் ''பொன்திரண்டன்ன புரிசடைபுரள'' இப்பதிகத்தில் உள்ள இறைவனின் மகேஸ்வர வடிவத்தின் அடையாளச் சொற்கள் கற்க கற்க இன்பம் விளைவிப்பவை. பல புகழ் அல்லது பழியிலர் எனவும், என்பதுவும் தமிழ்ச் சொலும் வடசொலும் தாழ்நிழற்சேர என்பதுவும் எண்ணி இன்புறத்தக்கது. வ.எ.79. திருக்கமலம் ''அயில் உறுப்படையினர் விடையினர் முடிமேல்'' இத்தலத்தை நினைத்து இப்பதிகத்தை ஓதுவோர் வினை தீர்ந்து வினையின் தீமை தீர்ந்து விண்ணவர்களைக் காட்டிலும் ஆற்றல் பெறுவர் என்கின்றார்.

திருஞானசம்பந்தப் பெருமான் வ.எ.80 கோயில், ''கற்றாங்கு எரியோம் கெலியை வாராமே'' உத்தமர்களாய் திகழ இறைவன் திருவடி எனும் பெரும் செல்வத்தை அடைய ஓததக்க பதிகம் வ.எ.83. திரு அம்பர் மாகாளம் வினை அல்லல் ஊனம் இடர் பாவம் குற்றம் வந்து சேராமலும் தவம் இன்பம் வானுலகம் ஆகிய பெரும்பேறுகள் வந்தடையும் வ.எ.86. திருநல்லூர் ''கொட்டும்பறை சீரால்'' இப்பதிகம் பழிபாவம் தீர்க்கும் புகழ் சேர்க்கும் வைகலே துயில் நீங்கி இறைவனை ஏத்தும் மாண்பு உரைக்கப்பட்டது. வ.எ.திரு ஆரூர் ''சித்தம் தெளிவீர்காள்'' துறவு நிலை வேண்டுவோர் இப்பதிகத்தை ஓத பேரின்பம் கிட்டும். வ.எ.94 திரு ஆலவாய் ''நீலமா மிடற்று ஆலவாயினான்'' இப்பதிகம் ஓதபதவி மற்றும் நற்பேறுகள் வந்தடையும். வ.எ.95. திருவிடைமருதூர் ''தோடொருகாதினன் பாடுமனயினன்'' இப்பதிகத்தை நாள்தோறும் ஓதிவர ஓதுபவர் நல்லவராயும் பெருமை உடையவராகவும் உயர்ந்து வாழ்வர். தோடு என்னும் தொடக்கம் கொண்ட பதிகங்கள் 6 இப்பதிகங் களை ஓதினால் நாம் செய்த பாவங்கள் ஒழிந்து புண்ணியங்கள் சேரும். 105 திருவாரூர் ''பாடலனான் மறையான் படிபட்ட'' இறைவன் சிவபெருமான் புண்ணியன் அவனை தொழுவாரும் புண்ணியரே என்பதோடல்லாமல் இந்தப் பதிகத்தைப் பாடுவோரும் பாடுவதைக் கேட்போரும் துன்பத்தை துடைப்போரே என்று ஞானசம்பந்தப் பெருமான் உறுதிபட கூறுகிறார். வ.எ.107, கொடிமாடச் செங்குன்றூர். ''வெந்தவெண்ணீறணிந்து விரிநூல்'' இப்பதிகம் ஓத பழவினைகள் முற்றிலும் தீரும். வ.எ.124 திருவீழிமிழலை ''அலர்மகள் மலிதர அவனியில்'' இப்பதிகம் ஓத 16 பேறுகளும் பெறலாம் என்பதோடு பெருமை மிக்க அடியாராய் திகழ்ந்து சொல்லற்கரிய சிவப்பேற்றினையும் அடையலாம். வ.எ.131 திருமுதுகுன்றம் ''மெய்தாறு சுவையும் ஏழிசையும். ''தன் ஆட்சியை இழக்க விரும்பாதவர்கள் நாளும் இப்பதிகத்தை ஓத அவர்கள் ஆட்சியே நீடிக்கும். வ.எ.133 திருக்கச்சி ஏகம்பம் ''வெந்த வெண்பொடி பூசுமார்பின் விரி எடுக்கும் செயல் எல்லாம் இடரின்றி ஈடேறும். வ.எ.135 திருப்பராய்துறை. ''நீறுசேர்வதொர் மேனியர் நேரிழை. நாளும் இப்பதிகம் ஓத செல்வம் செழித்தோங்கும் வ.எ.136. தருமபுரம் ''மாதர் மடப்பிடியும் மட அன்னமும் அன்னதோர்'' கவிதை நலம் மேலோங்க ஓதவேண்டிய பதிகம். வ.எ.138 ''விண்டெலாமலர் அவ்விரை முத்திப்பேணும் அதனை அடைவதற்குரிய ஞானமும் நல்கும் பதிகம்-விரதமென்று உடல் வாடுவதால் யாதொரு பலனுமில்லை. சிவபெருமானை எப்போதும் நினைப்பதுவும் ஞானசம்பந்தப்பெருமானின் திருமுறைகளை ஓதுவதுமே முத்தியைத் தரும் என்பது கருத்து. வ.எ.143 திருவாஞ்சியம் ''வன்னிகொன்றை மதமத்தம்'' பாவம் நீக்கி பழவினை போக்கும் பதிகம். பதியை நினைந்து பதிகத்தை ஓதவேண்டும். வ.எ.146

திருமங்கலக்குடி. ''சீரினார் மணியும் அகில்'' குற்றம் நீக்கி குண நலன் பெற்று அழகுபொலிய ஓததக்கப் பதிகம் வ.எ.147. சீகாழி - ''நல்லானை நான்மறை யோடியல் ஆறங்கம்'' இப்பதிகத்தை நாளும் ஓத இன்பமே எந்நாளும் துன்பமில்லை. வ.எ.151 திருக்காறாயில் ''நீரானே நீள் சடைமேலொர் நிரைகொன்றை. இந்தப் பதிகம் விதியை மாற்றும் நற்பலன் சேர்க்கும் ஊனத்தை நீக்கும். ஊரானே என்பவர் ஊனமிலாதாரே என்பது உறுதி. வ.எ.175 சேத்திரக்கோவை. ''ஆரூர்தில்லை வல்லம் நல்லம்'' இந்தப் பதிகத்தை இடைவிடாமல் 90 நாட்கள் பொய் விடுத்துத் தன்னினைவு அற்று புலால் விடுத்து உள்ளம் உடல் தூய்மை யுடன் ஓதிவர. ஒவ்வொரு நாளும் 122 சிவஸ்தலங்களை தரிசித்த புண்ணியம் கிட்டும். திருவடியை பிரியாத பெரும்பேறும் சேரும். வ.எ.176 திருபிரமபுரம் ''எம்பிரான் எனக்கமுதம்'' இந்தப் பதிகத்தின் அற்புதம் பற்றி இங்கு விரித்துரைக்க இடம் போதாது என்பதால் சுருங்கச் சொல்கிறோம். நாட்டுப்புறங்களில் ஒரு சொற்றொடர் உண்டு. கடவுளை நம்பினார் கைவிடப்படார் என்பதே அந்தப் பழமொழி. அந்தப் பழமொழிக்குச் சிறப்புரையாக அமைந்ததே இந்தப் பதிகத்தின் 6-வது பாடல். அதாவது ''எங்கேனும் யாதாகிப் பிறந்திடினும் தன்னடியார்க்கு இங்கே என்று அருள்புரியும் எம்பெருமான், இந்த வைரவரிகளிலே உறைப்புக்கொண்டு ஓத பொன்னடைந்து போகங்கள் பல அடைந்து புண்ணியராய் வாழ்வது திண்ணம். வரிசை எண்.187. திருகளர்- ''நீருளார் கயல்வாவி சூழ்பொழில் ஞானசம்பந்தப் பெருமான் அடியார்க்காக இறைஞ்சிப் பாடியது. இப்பதிகத்தை ஓத ஒரு மாதவப் பயனும் சிவஞானமும் ஒருங்கே சேரும். வ.எ.188. திருக்கோட்டாறு ''கருந்தடங்கண்ணி, இறைவன்பால் உள்ள நம்பிக்கை மேன்மேலும் பெருக பாராயணம் பண்ண வேண்டிய பதிகம். வ.எ.189. புறவார் பனங்காட்டூர் ''விண்ணமர்ந்தனமும் மதில்களை, சிவனார் திருவருளை வேண்டவும், தவமாம் பெறும்பேறு எய்தவும் சிவலோகம் சேரவும் ஆற்றலை அளிக்கும் அரும்பதிகம். வ.எ.215. திரு ஆரூர் ''பவனமாய சோடையாய நாவெழாம்'' இப்பதிகம். நினைந்து நினைந்து உருகி உருகி ஓதுதற்கு உரியது. படிக்கப் படிக்கத் திகட்டாதது. யாக்கை மட்டுமல்ல வாழ்க்கையும் நிலையானதல்ல என்பதை உணர்த்தும் பதிகம் இந்த உடலின் தன்மை என்ன என்பதை உணர உதவும் இதனை ஓத உலகப்பற்று அறும் வ.எ.216. திருக்கடஓர்மயானம். ''வரியமறையார் பிறையார் மலையோர் சிலையா வணங்கி'' இறைவன் சிவபெருமான் அடியார்தம் இல்லங்கள் தோறும் செல்வம் செய்ய வருவார். அதனால் வறுமை நீங்கும் எனவே நம்பிக்கை வைத்து நாளும் ஓதவும். வ.எ.222. திருநாரையூர். ''உரையினில் வந்த பாவம் உணர்நோய்களும்'' இந்தப் பதிகத்தை இறைவனை எண்ணி ஓதியிருக்க அறியாமல் செய்த பாவம்

அத்துணையும் அழிந்துபோகும் உள்ளம் செம்மைபெறும். வ.எ.226 நெல்வாயில் அரத்துறை ''எந்தை ஈசன் எம்பெருமான்'' இப்பதிகம் ஈசன் திருவருளன்றி எதுவும் நடவாது என்பதைத் ''திட்டவட்டமாய் அறிவுறுத்துவது'' 241 கீழ்வேளூர் ''மின்னுலாவிய சடையினர் விடையினர்'' உறுதியுடன் ஓத முத்திநிச்சயம். வ.எ.242. திருவலஞ்சுழி ''என்ன புண்ணியம் செய்தனை நெஞ்சமே'' எத்துணையோ பிறவிகளில் நாம் செய்த நல்வினைப் பயன் என்று எண்ணி எண்ணி மகிழ்ந்து ஓத வேண்டிய பதிகம். வ.எ.279 திருக்கருக்குடி. ''நினைவிலும் கனவிலும் நாளும் தன்னொளி'' இத்தலத்தை ''நினைந்து இப்பதிகத்தை ஓத எல்லா நன்மைகளும் சேரும். சாயுச்சியமும் கிட்டும். வ.எ. 290 திருஏடகம். வன்னியும் மத்தமும் மதிபொதி சடையினன்'' ஏடகப்பதிகத்தை இறைவன் சிவபெருமானையும் குருஞான சம்பந்த பெருமானையும் நினைந்து ஓதிவர எதுவும் நம் ஆணைக்குக் கட்டுப்பட்டு நடக்கும். வ.எ.331. திருப்பட்டீஸ்வரம் ''பாடல் மறை சூடல் மதிபல் வளையொர்'' இப்பதிகம் ஓதுவோர்க்குக் கடல் போல் செல்வம் பெருகும். சொர்க்க வாழ்வும் பின் திருவடிப்பேறும் கிட்டும். வ.எ.350 திருநெல்வேலி. ''மருந்திவை மந்திர மறுமை நன்ப'' நோய்தீர அச்சம் தொலைய தனதான்யம் செழிக்க கொடிய பாவம் தீர ஓதவேண்டிய பதிகம்:

திருஞான சம்பந்தப் பெருமான் யாத்த திருமுறையில் இன்னும் நூற்றுக்கணக்கான பதிகங்கள் பலன் தரும் பதிகங்கள் என்று கண்டறியப் பட்டுள்ளன. எனினும் பெருமானின் அனைத்துச் சொற்களுமே பலன் தருபவைதான், என்றாலும் இம்மைப்பலன்களைத்தான் இன்று உலக உயிர்கள் நாடுகின்றன என்பதால்தான் தேவாரக் கடலுக்குள் தேடித் தேடி எடுத்த முத்துக்களை மேலே குறிப்பிட்டோம். ஆயினும் திருஞான சம்பந்தப் பெருமானின் பதிகங்களை இறைவன் சிவபெருமானையும் நினைந்து ஓத வேண்டும். நாளும் ஓதிக்கொண்டே இருக்க வேண்டும். அது எல்லா நலன்களையும் தரும். திருமுறையில் பயனில்லாதது என்று எந்த பதிகமும் கிடையாது. ஆனால் உடலை இயக்கும் உயிர் உடலின் ஓரிரு பாகங்களில் மையம் கொண்டிருப்பது போல் இறைவன் எங்கும் நிறைந்திருப்பினும் குறிப்பிட்ட சில பல தலங்களில் இறைவனின் தெய்வீகப் பேராற்றல் ஓங்கி ஒளிர்வது போல்-தேவாரப் பதிகங்களில் பல நூற்றுக்கணக்கான பதிகங்கள் அற்புதப் பதிகங்களாய் திகழ்கின்றன. எனினும் அனைத்தும் தெய்வீகப் பதிகங்களே. பெருமான் வாழ்ந்த ஈரெட்டு ஆண்டுகளில் அவர் இயற்றி அருளிய பதிகங்களும் புரிந்த அருளிச் செயல்களும் நினைக்கும்தோறும் மெய்சிலிர்க்க வைக்கின்றன. நமது இக பர வாழ்வு உய்தி பெற இறைவன் சிவனை நினைந்து குருவை ஞானசம்பந்தப் பெருமானை வணங்கித் தினமும் திருமுறைகளை ஓதுவோம் திருவருள் பெறுவோம்.

19. சேக்கிழார் பாடிய பிள்ளை

கஸ்தூரி தயாநிதி, சிவகாசி.

சிவன் திருநாமத்தையே ஓதி அவன் திருவடிகளையே வணங்கித் தொண்டாற்றிச் சிவபதம் எய்திய சிவத்தொண்டர் பெருமை பரவும் நூல் திருத்தொண்டர் புராணம் என்னும் பெரியபுராணமாகும். சேக்கிழார் அருளிய இந்நூல் நாலாயிரத்து இருநூற்று எண்பத்தாறு பாடல்கள் கொண்டதாகும். ''பிள்ளை பாதி பெரியோர் பாதி'' என்னும் பழமொழி தோன்றக் காரணமாயிருந்த ஞானப்பிள்ளையின் புராணம் பெரிய புராணத்துள் ஆயிரத்து இருநூற்று ஐம்பத்தாறு பாடல்கள் கொண்டு பிற நாயன்மார்கள் புராணங்களைக் காட்டிலும் பெரியபுராணமாய்த் திகழ்கிறது. ஞானசம்பந்தர், தாம் வாழ்ந்த பதினாறு ஆண்டுகளில் பல அற்புதங்களை நிகழ்த்தித் தன் 'தெய்வத் தன்மையை வெளிப்படுத்திய தோடு பல ஆயிரக்கணக்கான தீஞ்சுவை தேவாரப் பதிகங்களைப் பாடிய தாகவும் அறிகிறோம். அவர் பாடிய பாடல்கள் முழுமையும் கிடைக்கப் பெறவில்லை. இன்று நமக்குக் கிடைத்தவை முந்நூற்று எண்பத்தைந்து தேவாரப் பதிகங்களே ஆகும். அவை முதல் மூன்று திருமுறைகளாகப் பன்னிரு திருமுறையில் இடம்பெற்றுள்ளன. அப்பர், சுந்தரர் பாடிய தேவாரப் பதிகங்களைக் காட்டிலும் ஞானசம்பந்தரின் பதிகங்களே மிகுதியானவை. எனவே சேக்கிழார் மிகக் குறுகிய காலம் வாழ்ந்து சைவ சமயத்தை மறுமலர்ச்சி பெறச் செய்த ஞானப்பிள்ளையின் ஞான வரலாற்றை மிக விரிவாகப் பாடி முழுமை பெறச் செய்துள்ளார். சேக்கிழார் சம்பந்தரைத் தன் குழந்தையாக எண்ணித் தாயாக, தந்தையாக நின்று பிள்ளையின் பிள்ளைமைப் பருவ நலங்களைப் பிள்ளைத்தமிழ் இலக்கியத்திற்கு அடிகோலும் வண்ணம் பாடிய பாடல்களின் திறன் காண்பது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

தொண்ணூற்றாறு சிற்றிலக்கிய வகைகளுள் ஒன்று பிள்ளைத் தமிழ் இலக்கியமாகும். ''குழவி மருங்கினும் கிளவதாகும்'' என்று தொல்காப்பியரால் வித்திடப் பெற்ற இவ்விலக்கியம் பெரியாழ்வார், சேக்கிழார் இவர்களால் முளைவிட்டு வளரத் தொடங்குகிறது. சேக்கிழார் நாயன்மார் வரலாறு பாடும்பொழுது ஆண் பிள்ளை, பெண் பிள்ளைக்குரிய சில பிள்ளைப் பருவ நிகழ்ச்சிகளை எடுத்துரைக்கின்றார். இறைவனையோ, அரசரையோ, பெரியோரையோ, வள்ளல்களையோ குழந்தையாகக்

கருதிப் பத்துப் பருவங்களாகப் பருவம் ஒன்றிற்குப் பத்துச் செய்யுள் களாக நூறு செய்யுள்களில் பாடப்படுவது பிள்ளைத்தமிழ் இலக்கியம் என்று பிற்காலப் பாட்டியல் நூல்கள் இலக்கணம் கூறுகின்றன.

பெரியபுராணத்தில் பாட்டுடைத் தலைவர் சுந்தரர். இவரது பிள்ளைப் பருவத்தைப் பாடப் புகுந்த சேக்கிழார்,

> **"தம்பிரான் அருளினாலே தவத்தின் மிக்கோர் போற்றும்**
> **நம்பியா ரூரர்என்றே நாமமும் சாற்றி மிக்க**
> **ஐம்படை சதங்கை சாத்தி அணிமணிச் சுட்டிசாத்திச்**
> **செம்பொன் நாண்அரையில் மின்னத் தெருவில்தேர்**
> **உருட்டும்தாளில்"** (150)

என்று ஒரு பாடலில் சிறுதேர் உருட்டும் பிள்ளைப் பருவ நிகழ்ச்சி ஒன்றை மட்டும் பாடியுள்ளார்.

திருநாவுக்கரசர் பிள்ளைப் பருவத்தை,

> **"ஏதமில்பல் கிளைபோற்ற இளங்குழவுப் பதம்கடந்தார்"**
> (1289)

என்று ஒரே வரியில் சுட்டியுள்ளார்.

கண்ணப்ப நாயனாரின் பிறப்பையும் வளர்ப்பையும் மிக விரிவாகப் பல பாடல்களில் பாடியவர் பிள்ளைத்தமிழ்ப் பருவங்களான காப்பு, முத்தம், சிறுதேர் உருட்டல், சிற்றில் சிதைத்தல் ஆகிய நான்கினை மட்டும் குறிப்பிட்டுள்ளார்.

> **"வரையுறை கடவுள் காப்பு மறக்குடி மரபில் தங்கள்**
> **புரையில்தொல் முறைமைக்கு ஏற்பப் பொருந்துவ போற்றிச்செய்து"**
> (672)

என்றும்

> **"இருசுடர்க் குறுகண் தீர்க்கும் எழில்வளர் கண்நீர் மல்கி**
> **வருதுளி முத்தம் அத்தாய் வாய்முத்தம் கொள்ள மாற்றி"**
> (672)

என்றும்

> **"துடிக்குறடு உருட்டி ஓடித் தொடக்குநாய்ப் பாசம் சுற்றிப்**
> **பிடித்தறுத்து எயினப் பிள்ளைப் பேதையர் இழைத்த வண்டல்**
> **அடிச்சிறு தளிரால் சிந்தி அருகுறு சிறுவ ரோடும்**
> **குடிச்செறி குரம்பை எங்கும் குறுநடைக் குறும்பு செய்து"**
> (673)

என்றும் கண்ணப்பரின் பிள்ளைப் பருவ நிகழ்ச்சிகளை மனங்கவரும் வண்ணம் வர்ணித்துள்ளார் சேக்கிழார் பெருமான்.

காரைக்காலம்மையார் வரலாற்றில் அவர்தம் பிள்ளைப் பருவச் செயல்களை விவரிக்க முனைந்த சேக்கிழார், அம்மையாரின் தளர்நடை அழகையும், மழலை மொழி மாண்பையும், வண்டல் பயில் வனப்பையும்

"அணிகிளர்மெல் அடிதளர்வுற்று அசையும் நடைப்பருவத்தே" (1724)

என்றும்

"தணிவில்பெரு மனக்காதல் ததும்பவரும் மொழி பயின்றார்" (1724)

என்றும்

"வண்டல்பயில் வனவெல்லாம் வளர்மதியம் புனைந்தசடை
அண்டர்பிரான் திருவார்த்தை அணையவரு வனபயின்று" (1726)

என்றும் மூன்று பாடல்களில் போற்றிச் சிறப்பித்துள்ளார்.

தடுத்தாட்கொண்ட புராணத்தில் பரவையாரின் பிள்ளைமைப் பருவச் செயல்களான காப்பு, தளர்நடை, கழங்கு, பந்து, அம்மானை, ஊசல் ஆகிய விளையாட்டுக்கள் பற்றி மூன்று பாடல்களில் அழகுறப் பாடி அகம் மகிழ்ந்துள்ளார். பூம்பாவையின் குழவிப் பருவம் திருஞானசம்பந்தர் புராணத்திலேயே புகழ்ந்து போற்றப்படுகிறது.

"தங்கு பேரொளிச் சீறடி தளிர்நடை பயில" (2948) என்றும்

"விழவு கொண்டெழும் பேதையருடன் விளையாட்டில்
கழலொடு அம்மானை கந்துகமென் றுமற்றினைய
மழலைமென் கிளிக்குலமென மனையிடை ஆடி" (2950)

என்றும்

"பொற்றொடிச் சிறுமக ளிர்ஆ யத்தொடும் புணர்ந்து
சிற்றில் முற்றவும் இழைத்துடன் அடுதொழில் சிறுசோறு
உற்றஉண்டி கள்பயின்று ஒளிமணி ஊசல் ஆடி
மற்றும் இன்புறு வண்டலாட்டு அயர்வுடன் வளர" (2951)

என்றும் பூம்பாவையின் தளர்நடைப் பருவத்தையும், கழல் அம்மானை கந்துகம், சிற்றில் இழைத்தல், சிறுசோறாக்கல் ஆகிய சிறு பருவ விளையாட்டுக்களை விளையாடிய திறம் பற்றியும் மூன்று பாடல் களில் புனைந்துரைத்துப் புகழ்ந்துள்ளார் சேக்கிழார்.

திருஞானசம்பந்தர் வரலாறு பாடத் தொடங்கிய சேக்கிழார் அவரது பிறப்பு முதல் சோதியுள் மூழ்குதல் வரை அனைத்து நிகழ்ச்சி களுக்கும் சிறப்பிடம் தந்து அழகுறப் பாடியுள்ளார். பிற நாயன்மார்

புராணங்களைப் பாடியது போலவே நாட்டுச் சிறப்பு, ஊர்ச் சிறப்பு, குடிச்சிறப்பு பாடிய பின் பாலறாவாயர் திருஞானசம்பந்தரின் பிறப்புச் சிறப்புடன் பிள்ளைப் பருவக் காட்சிகளைப் பேரின்பம் பயக்க விரிவாக விவரித்துள்ளார். பிறவி நீத்துப் பிறவா யாக்கைப் பெரியோனின் தாள் சேர்ந்த பிள்ளைக்கு மணிமுடியாய்ப் பிள்ளைத்தமிழ் பாடிய பெருமை சேக்கிழாருக்கே உரியதாகும்.

ஆளுடைய பிள்ளையார் தோன்றிய காலம், புறச் சமயங்களாகிய சமணமும் பௌத்தமும் தழைத்தோங்க, சைவம் நலங் குன்றி நிலை தாழ்ந்த காலமாகும். சைவம் மறுமலர்ச்சி பெற அவதரித்தவர் திருஞான சம்பந்தர். இதனைச் சேக்கிழார் இவர் வரலாற்றைப் பாடத் தொடங்கும் பொழுது முதற் பாடலிலேயே,

"வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத் துறைவிளங்கப்
பூதபரம் பரைபொலியப் புனிதவாய் மலர்ந்தழுத" (1904)

என்று அவரது அவதார நோக்கத்தைத் தெளிவாக்கியுள்ளார். இத்தகைய சிறப்புடைய, மூன்றாம் வயதிலே ஞானப்பால் உண்டு தெய்வத் தன்மையோடு பேரறிவு பெற்ற ஞானக் கொழுந்தின் பிறப்பை, பிள்ளைமைச் செயல்களைச் சேக்கிழார் விதந்தோதப் புகுந்தது மிகப் பொருத்தமான ஒன்றே.

திருஞானசம்பந்தப் பிள்ளையாரின் வாழ்நாள் மிகக் குறுகிய காலமாக அமைந்துவிட்டதால் அவரது இளம்பருவச் செயல்களை மிக ஈடுபாட்டுடன் அவர் அவதரித்த காரணத்தை எங்கும் நினைவுறுத்திப் பக்தி சுவை நனி சொட்டச் சொட்டப் பாடிச் செல்கிறார் சேக்கிழார். இறைவனையோ, அரசனையோ, பெரியோரையோ குழந்தையாகப் பாடுவதன்றிக் குழந்தையையே, தெய்வத்தன்மை பொருந்திய மானிடக் குழந்தையையே பாடும் சிறப்பு சேக்கிழாருக்குக் கிடைத்தது மிகப் பெரிய பேறாகும். இவ்வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு மிக அழகாக, அருமையாக, ஆழ்ந்த சிந்தனையுடன் நாம் நேரில் காணும் குழந்தைப் பருவங்களில் தோணிபுரக் குழந்தையைப் பாடி நம் கண்முன் காணும் குழந்தையாக ஆடிப் பாடி மகிழச் செய்கிறார்.

காப்பு, தாலாட்டு, செங்கீரை, சப்பாணி, தவழ்தல், வருகை, தளர்நடை, சிறுதேர் உருட்டல், சிற்றில் சிதைத்தல் என்னும் பருவங் களில் சம்பந்தரைப் பாராட்டிப் பாடியுள்ளார் அருண்மொழித் தேவர். பெயரிடுதல், தொட்டிலிடுதல் முதலான பிள்ளைச் சடங்குகள் உரிய நாட்களில் நடைபெற்றதை உரைத்தபின் முதற் பருவமாம் காப்புப் பருவம் பாட முற்படுகிறார். குழந்தையைக் காக்கும் கடவுள் திருமால் முதலாகப் பல தெய்வங்களை வாழ்த்திக் காக்கும்படி வேண்டுவது

காப்புப் பருவ மரபாகும். சேக்கிழார், சீகாழிப் பிள்ளை தெய்வீகக் குழந்தையாகத் தோன்றிய சிறப்புணர்ந்து அவரைக் காக்கப் பல தெய்வங்களை வேண்டவில்லை. "இங்ஙனம் திருஞானசம்பந்தப் பிள்ளையார் முன்னைப் பிறப்பிலேயே பாச நீக்கம் பெற்றவராயினும் தவவேதியராகிய சிவபாதவிருதயரும் அவர் மனைவியார் பகவதியாரும் ஆற்றிய சிவ வழிபாட்டின் காரணமாகவும் இந்நிலவுலகத்தில் இறைவனுக்கு இடையறாது தொண்டு புரிய வேண்டுமெனப் பிள்ளையார் முன்னைப் பிறவியிற் கொண்டிருந்த பெரு விருப்பங் காரணமாகவும் சிவபெருமான் ஆளுடைய பிள்ளையாராகிய அவரை இவ்வுலகிற் பிறப்பித்தருளினன்" என்று திரு. க. வெள்ளைவாரணன் தமது பன்னிரு திருமுறை வரலாறு (ப.60) என்னும் நூலில் குறித்திருப்பது கொண்டும்,

"பாசம் மற்றில ராயினும் பார்மிசை
ஆசை சங்கரற் காயின தன்மையால்
தேசு மிக்க திருவுரு வானவர்
ஈசனைத் தொழுதே தொழு தேகினார்" (2092)

என்ற சேக்கிழார் கூற்றுக்கொண்டும் தெய்வப் பிறவியாம் திருஞான சம்பந்தருக்கும் காப்பு வேண்டியதில்லை என்பதைத் தெளிவாக உணரலாம். எனினும், சைவ சமயத்தின் மறுமலர்ச்சிக்குப் பாடுபடப் போகும் குழந்தைக்கு,

"மந்திர மாவது நீறு வானவர் மேலது நீறு"

என்று திருநீற்றுப் பெருமையைப் பதிகம் பாடி மக்கட்கு உணர்த்தியதை நினைவு கூர்ந்து சைவ சமயச் சின்னமாம் திருநீற்றையே காப்பாக மிளிரச் செய்துள்ளார். பிரமாபுர பெம்மானின் திருவருட் குழந்தைக்குக் காப்பு பாடுவது மிகை என்றவர் திருநெற்றியில் நீறு நிறுத்திக் குழந்தையின் மாண்பையும் திருநீற்றின் மாண்பையும்,

"ஆறுலவு செய்யசடை ஐயரரு ளாலே
பேறுல கினுக்கென வரும்பெரி யவர்க்கு
வேறுபல காப்புமிகை என்றவை விரும்பார்
நீறுதிரு நெற்றியில் நிறுத்திநிறை வித்தார்" (1946)

என்று ஒருசேர நினைக்க வைக்கிறார் சேக்கிழார் பெருமான்.

சீர்காழிச் செல்வனைத் தொட்டிலிட்டுத் தாலாட்டிய சிறப்பை, தாயர் திருமடித்தலத்தும், தயங்குமணித் தவசினிலும் தூய சுடர்த் தொட்டிலினும் இட்டுக் குழந்தையை, திருமறையும் தீந்தமிழும் சிறக்க வரும் நாயகனின் நலங்களையெல்லாம் எடுத்துரைத்துப் பாராட்டித் தாலாட்டினர் என்று தாலாட்டியுள்ளார் சேக்கிழார்.

இரு கைகளும் முழந்தாள்களும் ஊன்றத் தலைநிமிர்ந்தாடும் செங்கீரைப் பருவத்தில்,

"அருமறைகள் தலையெடுப்ப ஆண்டதிரு முடியெடுத்துப்
பெருமழவர் தொண்டல்லால் பிறிதிசையோம் என்பார்போல்
திருமுகமண் டலமசைய....." (1948)

ஞானச் செல்வன் மழலை பேசி செங்கீரை ஆடியதாகச் சேக்கிழார் பாட்டிசைத்துள்ளார். குழந்தை தானாகத் தலையை நிமிர்த்தி அசைத்து ஆடும் அழகை வருணிக்கப் புகுந்த சேக்கிழார், சிவன் சிந்தையன்றி வேறு சிந்தனை அற்றவராகத் தற்குறிப்பேற்ற அணி அமைய சிவன் திருத்தொண்டன்றி வேறொன்றையும் பேசமாட்டோம் என்று கூறுவது போல் தோன்றியது என்கிறார்.

அடுத்து, இயல்பாக சம்பந்தப் பிள்ளையார் தாமரைச் செங்கைகளால் சப்பாணி கொட்டுதல், "உலகீர்! பிற சமயங்களை நாம் அறியோம்; பிற சமய நெறிகளை மதிக்கமாட்டோம்; புறச் சமயங்களில் புகுந்து உழலாது அகன்று உய்வீர்களாக!" என்று மக்கட்கு உண்மை நெறி காட்டுவது போன்று இருந்தது என்கிறார். மேலும், "காமருதாளம் பெறுவதற்கு ஒத்துவதும் காட்டுவது போல" சப்பாணி கொட்டினார் என்று இசைத்திருப்பது ஆளுடைய பிள்ளையின் இச்செயல் பின்னர் திருக்கோலக்காவில் சிவனிடம் பெறவிருக்கும் பொற்றாளத்தினை ஒத்து இசை பாடுவது இவ்வாறு என்று இசைத்துக் காட்டுவது போல் இருந்தது என்று உணர வைக்கிறது.

ஞானசம்பந்தரின் அவதாரச் சிறப்பை மறவாமல், முறையற்ற கொள்கை கொண்ட புறச் சமயங்கள் தடைப்பட்டு இயக்கமின்றிக் குலையும்படி, பிள்ளையார் மதிதவழ் மாளிகை முன்றிலின் மருங்கில் தவழ்ந்து விளையாடினார் என்று அவர் தவழ்ந்த தன்மையைத் தெரிவிக்கிறார்.

"விதிதவறு படும்வேற்றுச் சமயங்கள் இடைவிழுந்து
கதிதவழ இருவிசும்பு நிறைந்தகடி வார்கங்கை
நதிதவழும் சடைமுடியார் ஞானம்அளித் திடஉரியார்
மதிதவழுமா ளிகைமுன்றில் மருங்குதவழ்ந் தருளினார்"
(1950)

என்று கங்கைச் சடைமுடியார் தந்த ஞானத்தால் காழிப்பிள்ளையார் தவழ்ந்த பாங்கை நிறைந்த மனத்துடன் நினைந்து நினைந்து ஆனந்தக் களிப்புடன் பாடியருளியுள்ளார் சேக்கிழார்.

வருகைப் பருவம் பாடும்பொழுது சம்பந்தரைப் பெண்மணி களும் தாதியரும் சிறப்பித்து வருக! வருக! என்று அழைத்ததையும்

அதைப் புரிந்து கொண்டு அவர்களருகில் வந்து அவர்களை இன்புறுத்திய திறத்தினையும் சேக்கிழார் இரு பாடல்களில் சித்தரித்துள்ளார். உறவுப் பெண்மணிகளும் தாதியரும், ''ஏழிசையும் பல கலையும் எவ்வுலகும் தனித்தனியே வாழ'' வைக்கத் தோன்றிய ஞானசம்பந்தரை, ''காழியர் தம் சீராட்டே! கவுணியர் கற்பகமே! வருக! வருக!'' என்று அன்பொழுக அழைத்தனர். இப்படி அழைத்தவர் அகங்குளிர, முகம் மலர அருகிற் சென்று அவர்களைத் தழுவி பெருமகிழ்ச்சி ஊட்டிய திறத்தை,

"திருநகையால் அழைத்தவர்தம் செழுமுகங்கள் மலர்வித்தும்
வருமகிழ்வு தலைசிறப்ப மற்றவர்மேல் செலவுகைத்தும்
உருகிமனம் கரைந்தலைய உடனணைந்து தழுவியும்முன்
பெருகியஇன் புறவளித்தார் பெரும்புகலிப் பிள்ளையார்"
(1952)

என்று விரிவாக விரித்துரைத்துள்ளார். குழந்தையின் செயல்கள் ஒவ்வொன்றிலும் மனத்தைப் பறிகொடுத்து மகிழும் இயற்கையை இயல்பாக வருணித்திருக்கும் இக்காட்சி பிள்ளையார் நம்முடன் விளையாடும் உணர்வை ஏற்படுத்துவது ஒருதலை.

ஞானக் குழந்தையின் செயல்கள் ஒவ்வொன்றிலும் பிற குழந்தை களினின்று வேறுபடும் தன்மையையும் காட்டுகின்றார். குழந்தைகள் இயல்பாக ஓராண்டில் நடை பயிலத் தொடங்கும். ஆனால் பெரும்புகலிப் பிள்ளையார் ஓராண்டு நிறைவடைவதற்குள் நடை பயிலத் தொடங்கு கிறார். குழந்தை எழுந்து நின்று நடக்கும் இனிய தோற்றத்தை இன்தமிழால் இசைக்கத் தொடங்கிய சேக்கிழார் குழந்தையின் கரிய மென்மையான சுருண்ட தலைமுடி அசைய, காலிலுள்ள சதங்கை ஒலிக்க நடைபயின்றது என்கிறார். அவ்வாறு வேயுறு தோளி பங்கனின் அருட் செல்வன் தளர் நடையிட்டருளும் காட்சியை,

"... .... கீழ்மைநெறிச் சமயங்கள்
தளர்நடையிட் டறத்தாமும் தளர்நடையிட் டருளினார்"
(1953)

என்றுரைத்திருப்பது சம்பந்தரால் சைவம் உய்வது உறுதி என்பதை வலியுறுத்துவதாக அமைகிறது.

பிள்ளையின் பாதமலர் நிலம்பொருந்த தத்தித்தத்தி நடந்தருளி விளையாடத் தொடங்கிய நிகழ்ச்சியை,

"தாதியர்தம் கைப்பற்றித் தளர்நடையின் அசைவொழிந்து
சோதியணி மணிச்சதங்கை தொடுத்தவடம் புடைசூழ்ந்த
பாதமலர் நிலம்பொருந்தப் பருவமுறை ஆண்டொன்றின்
மீதணைய நடந்தருளி விளையாடத் தொடங்கினார்" (1954)

என்று மிகச் சிறப்பாகப் பாடியுள்ளார்.

முத்துப் பந்தர் பெற்ற மழலை சிறுதேர் உருட்டியும் தெருவில் சிறுமியர் கூடிச் செய்த மணற்சிறு வீடுகளைத் தம் பொற் பாதங்களால் அழித்தும் விளையாடி மகிழ்வித்தார். இந்நிகழ்ச்சிகளைச் சேக்கிழார்,

"சிறுமணித்தேர் தொடர்ந் துருட்டிச் சிற்றில்கள்இழை
நறுநுதல்பே தையர்மருங்கு நடந்தோடி அடர்ந்தழித்தும்
குறுவியர்ப்புத் துளியரும்பக் கொழும்பொடியா டியகோல
மறுகிடைப் பேரொளி பரப்பவந்து வளர்ந்தருளினார்" (1955)

என்று பாடிய திறமுணர்ந்து மகிழலாம். சிறிய மணிகளால் அழகாகக் கட்டப்பட்ட சிறுதேரினை உருட்டி விளையாடும் பொழுது சிறுமியர் மகிழ்ச்சியோடு கட்டிய மணற்சிறு வீடுகளை அருகிற்சென்று அழித்து விளையாடிய பொழுது, பிள்ளையின் நெற்றியில் வியர்வை அரும்பியது என்றும் முகத்தில் புழுதி படிய ஆடிய போதும் அழகு மிகுதியாக வெளிப்பட்டது என்றும் எடுத்தியம்பியதோடு தெருவே புதுப் பொலிவுடன் திகழ அருள்பாலித்தார் என்றும் பாடித் திளைத்துள்ளார்.

சிவநெறிச் செம்மல் சேக்கிழாருக்குப் பிள்ளைத்தமிழ் பாடப் பாடு பொருளாய் சிவஞானச் செல்வர் திருஞானசம்பந்தர் விளங்கியதையும், பிள்ளைத்தமிழ் வளர்ச்சிக்கு அப்பாடல்கள் உறுதுணையாய் அமைவதையும் காணமுடிகின்றது. பருவத்திற்கு ஒரு பாடல் பாடியிருந்தாலும் சொற்செறிவும் பொருட் செறிவும் ஒருங்கே மிளிர்வது கண்டின்புறத் தக்கதாகும். சைவம் தழைக்கப் பிறப்பெடுத்த காரணத்தை ஒரு சிறிதும் மறவாது சிவசிந்தனை நாரால் பிள்ளைத்தமிழ் மாலை தொடுத்த சேக்கிழாரின் தெய்வத் தமிழ் மணத்தை நுகர முடிகிறது. பிள்ளைத் தமிழால் பிள்ளையைப் பாடிய தெய்வத் தமிழ்ப் புலவர் சேக்கிழாரும் ஞானத் தமிழ் புரிந்த திருஞானசம்பந்தரும் தமிழையும், சமயத்தையும் வளர்த்த திறம் நன்கு வெளிப்படுகிறது.

20. திருக்கோயில் வழிபாடும் சம்பந்தரும்

வி. கிருஷ்ணமூர்த்தி குருக்கள், புதுக்கோட்டை.

சோழநாட்டுச் சீர்காழியில் சிவபாத இருதயர் என்ற வேதியருக்கும் பகவதி என்னும் அம்மையாருக்கும் மகனாகப் பிறந்தவர் திருஞான சம்பந்தர். இவருக்கு மூன்று வயது நடக்கும்போது சிவபாத இருதயர் நீராடச் சென்றார். மீண்டும் கரைக்கு வந்து பார்க்கும்போது குழந்தையின் வாயில் பால் வழிவதைக் கண்டு எவர் தந்தார் என வினவினார். அப்போது குழந்தையாக இருந்த சம்பந்தர் இறையருளால் தோடுடைய செவியன் என்று பதிகம் பாடத் தொடங்கினார். சிவன் கோயில்கள் பலவற்றிற்குச் சென்று ஆயிரக்கணக்கான பதிகங்கள் பாடினார். அவற்றில் 384 பதிகங்களே இன்று கிடைத்துள்ளன.

சிவபெருமானுடைய சிறப்புகளையும் அருட்செயல்களையும் இசையோடு முதன் முதலாகப் பாடிய பெருமை சம்பந்தரையே சாரும். சைவ சமயத்தை அழிவிலிருந்து காப்பாற்றியவர். சம்பந்தர் பாடிய முதல் மூன்று திருமுறைப்பாடல்கள் திருக்கடைக்காப்பு எனப்பட்டன. சம்பந்தர் பாடிய பதிகங்களில் ஓர் ஒழுங்கான அமைப்பு முறையினைக் காண்கிறோம். ஒவ்வொரு பாடல் பின்பும் வருணனை, இறைவன் சிறப்பு விளக்கப்படுகின்றன. சம்பந்தர் திருநெறிவாயில் அறத்துறை என்னும் இடத்தில் இறைவனைப்பாடி முத்துப்பல்லக்கும், முத்துக்களுடையும், முத்து சின்னங்களும் பெற்றார். பூணூல் அணிவிக்கும் உபநயன விழாவின்போது 'ஐந்தெழுத்து பெருமை'களை எடுத்துரைத்தார். திருப்புகலூர் சென்று மடத்தில் தங்கியிருந்து முருகநாயனார் நாவுக்கரசர் பரஞ்சோதியார் முதலிய பெரியோர்களுடன் தொடர்பு கொண்டிருந்தார். திருக்கொடிமாடச் செங்குன்னூரில் சிவனடியார்கள் நச்சுக் காய்ச்சலால் அவதிப்பட்டுக் கொண்டிருந்தபோது சம்பந்தர் இறைவனை நோக்கிப் பதிகம் பாடி அடியார்களைக் காத்தார். திருவீழிமிழலையில் இறைவனை பணிந்து பாடிப் படிக்காசு பெற்று மக்களிடையே இருந்த பஞ்சத்தினைப் போக்கியருளினார். திருமருகலில் பாம்பு கடித்த வணிகனை உயிர் பெறச் செய்தார். மதுரை அரசனின் வெப்புநோய் நீங்குமாறு திருநீற்றுப் பதிகம் பாடினார். தமிழகத்தில் சமணம் மறைவதற்கு இவர் மூலக் கருவியாக விளங்கினார். சிறு பருவத்திலேயே ஞானம் தோன்றியதால் 'ஆறுடைய பிள்ளை' என்று ஞானசம்பந்தரை அழைக்கின்றோம்.

செந்தமிழகத்தில் சைவ சமய குரவர்களாய் விளங்கிய நால்வருள் திருஞானசம்பந்தர் ஒருவராவர். அவரது காலம் ஏழாவது நூற்றாண்டின் முற்பகுதியாகும். நாடு செழிக்க, நாட்டவர்கள் நலங்கள் பெருக, தருமம் தழைக்க பாவந்தேய, அன்புமிக இறைவன் திருவருளால் குரவர்கள் தோன்றி அருள் விளக்கங்களைக் காட்டிச் செம்மைப்படுத்துவர். சிவஞான சம்பந்தர் திருவவதாரஞ் செய்வதற்கு முன் தமிழ்நாட்டில் சைவ சமய உலகில் இருள் சூழ்ந்திருந்தது. அவ்விருளைப் போக்கிச் சிவம்பெருக்கிய பணியே சிவஞானசம்பந்தரது அரும்பெரும் பணியாகும்.

ஏழாவது நூற்றாண்டின் தமிழகம் தொண்டை நாடு, நடுநாடு, சோழநாடு, பாண்டிநாடு, மலைநாடு, ஈழநாடு எனும் பிரிவுகளைக் கொண்டு விளங்கியது. இப்பகுதிகளுள் சோழ நாட்டில் மேகங்கள் தவழும்படி உயர்ந்த கன்னியெனும் மதிலால் சூழ்ந்து விளங்கியது திருக்கழுமலம் என்னும் பழைய பதி. அப்பதி, பிரமபுரம், வேணுபுரம், புகலி, வெங்குரு, தோணிபுரம், பூந்தராய், சிரபுரம், புறவம், சண்பை, சீர்காழி, கொச்சைவயம், கழுமலம் என்னும் பன்னிரு பெயர்களையுடையது.

அவ்வூரில் அந்தணர்கள் நாளும் அருமறைகள் ஓதும் ஒலி இடைவிடாது கேட்கப் பெறும். இவ்வொலி காரணமாக பிரளய காலத் தன்றி எந்நாளும் கடல்மீது இப்பழம்பதி விளங்குவதுபோல் காணப்பெறும். அந்தணர்கள் வேத வேள்வியை வழாது செய்து இறைவனை ஏத்துவர், அந்தணர் மாத்திரம் அங்கு செந்தீ வளர்ப்பதில்லை. அறிவில்லா வயல் களிலும் அக்காட்சி காணப்படும். இந்த அழகைச் சேக்கிழார் சொல்கிறார்.

பரந்து அகன்ற வயல்கள், வளங்குன்றாத நாடு ஆதலால் வயல் களில் நீர்வளத்திற்குக் குறைவில்லை. நெல் விளையும் வயல்களிலே தாமரைகள் - செக்கச் சிவந்த செந்தாமரைகள் - இளங்காற்றிலே தலையசைக்கின்றன. இவையே யாகத்தீயின் செந்நாக்குகள்.

அந்தணர்கள் செந்தீ வளர்க்க நெய் சொரிகிறார்கள். இவ்வயல் களிலும் அக்காட்சியைக் காணலாம். நிலங்களின் வரப்பிலே நெடிது ஓங்கி நிற்கின்றன. மாமரங்கள், அவைகளிலே நன்கு, முற்றிக் கனிந்து தொங்கும் கனிகளுக்குப் பஞ்சம் இல்லை. அப்பழங்களின் நறுஞ்சாறு மாவிலைகளின் வழியாக வயல்களிலே ஒழுகுகிறது.

எனவே திருக்கழுமலத்திலே மாமரங்களும், தீங்கனிச் சாற்றை மாவிலைகளின் வழியாகச் சொரிந்து வேள்வித்தீ வளர்க்கின்றன. வயல் களிலே பூத்துக் குலுங்கும் செந்தாமரைகளே ஓமத்தீ! நல்ல காட்சி! காலையிலே தோன்றும் வெண்மதி, அந்திமாலையில் தோன்றும் சிவந்த சந்திரனாகத் தோன்றும். எப்படி நிகழ்ந்தது இந்த மாறுதல்? அவ்வூரிலே உள்ள சோலைகளின் வழியே நிலா செல்வதால், இந்த

மாறுதல் விளைந்தது. சோலையிலே மதுவில் தோய்ந்து, மகரந்தங் களைப் பூசிக்கொண்டு வெண்மதி செக்கர் மதியாகக் காட்சி அளிக்கிறது. தாமரைகளில் வசிக்கும் வண்டுகள் இதழ்களில் விளங்கும் நூல் தரித்தும், மதுவில் தோய்ந்தும், மகரந்தங்களைப் பூசியும் அவ்வூர் வேதியர்போல் சாமவேதம் பாடுவன. வளம் பொலிந்த மாடங்கள் கற்பிற் சிறந்த மங்கையரைக் கொண்டு விளங்குவன. வேதியச் சிறுவர் வீதிதோறும் விளையாடுமிடங்களிலெல்லாம் வேள்வியாடலை விழைவுடன் புரிவர்.

மடைகளிலெல்லாம் மணிக்குவியல்கள்; வயல்களெல்லாம் கயற் கூட்டங்கள்; பக்கமெல்லாம் மலர் மாலைகள்; பள்ளிகளெல்லாம் நூலாராய்ச்சி; எங்கும் வண்டுகள் இசை முழக்கம்; பொதுவிடங்களெல்லாம் முனிவர் கூட்டம்; மதிற்புறங்களெல்லாம் மேகக் கூட்டம். இத்துணை இயற்கை நலங்களைப் பெற்றுச் சிறப்புற நின்றது கழுமலமெனும் இத்திருப்பதி.

சிவபாதவிருதயர், திருக்கழுமலத்திலே சிறந்த வாழ்வு நடத்தும் அந்தணம்; வேத ஒழுக்கம் குன்றாதவர்; அந்தணருள் சிறந்தவர்; கவுணிய கோத்திரத்தைச் சார்ந்தவர். சிவபாதவிருதயர் இவ்வுலகம் வாழவேண்டித் தாம் தவம் செய்யும் இயல்பினர். அவருக்குரிய துணைவியார் பகவதி என்னும் திருப்பெயருடையார். இவ்விருவருஞ் சைவ நெறிவழி வந்த பெருமையினர். சிவபெருமான் திருவடிகள் அன்றிப் பிறிதொன்று போற்றாதார். திருவெண்ணீறு போற்றும் வேட்கையராய் மனை வாழ்க்கையைச் செம்மையுற நடத்தி வந்தனர். இவருள் சிவபாத விருதயர் தமிழ்நாட்டில் சமண புத்த சமயங்கள் பெருகுவன கண்டு மனந்தளர்ந்தார். இச்சமயங்கள் கடவுளுண்மையை மறுத்தன. இவை களை நிராகரித்து நீறாக்க ஓர் மகனைப் பெறத் தவம் புரிந்தார்.

இறைவனும் அருள் பாலித்தார். பகவதியார் கருப்பமுற்றனர். வேதமுறைப்படி பத்துத் திங்களினும் சிறந்த சடங்குகள் சுற்றத்தாருடன் செய்து இன்புற்றனர். சூரியன் முதலிய கிரகங்கள் உச்ச நிலையில் நிற்க சித்திரைத் திங்களில் திருவாதிரை கூடிய நாளில் சராசரங் களெல்லாம் சிவம் பெருக்கும் பிள்ளையார் திருவவதாரஞ் செய்தார். திருக்கழுமலத்தோர் யாவர்க்கும் அதிசயக் குறிகள் விளங்கின. அவர்கள் யாவரும் மயிர்ப்புளகமுற்று இன்புற்றனர்; தென்றல் வீசியது; தேவர்களும் மண்ணினிழிந்து ஓமவினை செய்தார்; எங்கும் வேதவொலி பெருகுகிறது; பறவைகள் எங்கும் ஒலித்தன; எங்கும் மங்கலவொலிகள் இயற்று பவரின்றி எழுந்தன; குதூகலம் எங்கும் பரவியது. நாட்டவரும் மகளிரும் பிறரும் தங்கள் தங்கள் உறைவிடங்களை அணி செய்தனர்; தெய்வ மணம் எங்கும் கமழ்ந்தது.

இங்ஙனமாகச் சிவபாதவிருதயர் சிவபெருமான் அருளினாலே ஆண்மகவு பிறந்தமைக்கு மகிழ்ச்சியடைந்தார். தம் இல்லத்தைச் சிறக்க

அணிசெய்து விழா நடத்தினார். தானம் கொடுத்தார். நம்பனடியவர்க்கு அமுது செய்ய நலங்கள் அமைத்தனர்; மாமறை விதிப்படிச் சடங்குகள் பத்துத் தினங்களிலும் செய்தார். நன்னாளில் நாமகரணஞ்செய்து குழந்தையைத் தொட்டிலில் அமர்வித்தார்; பாலூட்டினார்; நீறணிந்து காப்பு செய்தனர்; தாயார் திருமடித்தலத்தினும் சிறந்த ஆசனத்தமர்த்தியும், தொட்டிலிலு மிட்டும் உறங்குகின்ற காலத்தும் தாலாட்டு நலம் பாராட்டினர்.

இவ்வாறு ஞானக்குழவி வளர்வதாயிற்று. செங்கீரை ஆடியது, சப்பாணி கொட்டியது, மாளிகை முன்றலில் தவிழ்ந்தது. தாதியரும் தையலாரும், 'வருக! வருக!' என்றழைக்கக் களிகூர ஆடியது. தளர்நடை யிட்டு நடந்தது. ஆண்டொன்று கடந்தது. சிறுதேர் உருட்டியது; சிறுமியர் வண்டலாடல்களைக் காலால் சிதைத்தாடியது. இரண்டாண்டுகள் முடிந்து மூன்றாவது ஆண்டு தொடங்கியது.

இம்மூவாண்டின் தொடக்கம் அப்பிள்ளையாருக்கு மொழி நிரம்பாத காலம். குழந்தையாயிருப்பினும் முன்னைப் பிறப்பின் உணர்ச்சி அவருக்கு அடிக்கடி மூளும். பரமர் தாள் பிரிந்து வந்த நினைவு எழும். அப்பொழுது குழந்தை ஒரு நிலையிற் நிற்காது ஞானக்குழந்தை, வீரிட்டழும், அந்த அழுகை யாவருக்கும் தாயாக நிற்கும் சிவத்தை நினைந்து அழும் அழுகைதானோ?

இவ்வாறு நிகழ்ந்து வருங்காலத்து ஒரு நாள் தந்தை சிவபாதவிருதயர் வேள்விச் சடங்கு முடிப்பதற்கு நீராடப் புறப்பட்டார். பிள்ளையார் அவர் பின் சென்று தொடர்ந்தார். தாதையார் அவரைப் பன்முறை விலக்கியும் தன் கிண்கிணியணிந்த கால்களையும் கொட்டி யழுது மீளாமையால் அவரை அழைத்துச் சென்றார். திருத்தோணிபுரம் என்னும் திருக்கோயிலை அடைந்தார். அதிலே பிரம தீர்த்தம் என்னும் திருக்குளத்தை தந்தையும் மகனும் அடைந்தனர். ஆங்குப் பிள்ளையாரைக் கரையிலிருத்தி அவரை விட்டுப் பிரியவும் அஞ்சினார். தந்தை திருத்தோணிப்புரத்தில் உள்ள பெருமானை மனத்தில் நினைத்து நீருக்குட் புகுந்தார். நீராடினார், தருப்பணம் முதலிய நியமங்கள் முடித்தார். அகமருட ஜபம் செய்வதற்கு நீருக்குள் மறைந்து செய்யலுற்றார்.

கரையில் இருந்த பிள்ளை தந்தையைத் தேடியது. கண்ணுக்குப் புலப்பட்டால் தானே? அத்துடன் ஞானக்குழந்தைக்கு முன்பிறவியிலே ஈசனைப் பூசித்த நினைவும் எழுந்தது. பிள்ளையார் அழுதார். அழுத காட்சியோ அனைத்துயிரையும் கொள்ளை கொள்ளும் அழகோவியமாக அமைந்து நின்றது. சேக்கிழார் கூறுகிறார். அக்குழந்தை அழுகின்ற காட்சியை

''கண்மலர்கள் நீர்ததும்பக் கைம்மலர்களாற் பிசைந்து
வண்ணமலர்ச் செங்கனிவாய் மணிஅதரம் புடைதுடிப்ப

எண்ணில் மறை ஒலிபெருக எவ்வுயிருங்குது கலிப்பப்
புண்ணியக் கன்றனை யவர்தாம் பொருமி அழு தருளினார்''

(அதரம்-உதடு, புடை-பக்கம்-பொருமி விம்மி)

இவ்வாறு அழுதபோது உடம்பெங்கும் கண்ணீர்த் துளிகள் விழுந் திருந்தன. அங்குமிங்கும் கண்ணீர்த் துளிகள் சுழன்ற கண்கள் பண்டைய உணர்ச்சி காரணமாக திருத்தோணிபுரக் கோயிலின் சிகரத்தை நோக்கின் திருவாய் ''அம்மா! அப்பா!'' என அழைத்த வண்ணமாக அழுதனர்.

அப்பொழுது நிகழ்ந்தது ஒரு அற்புதச் செயல், சிவனும், பார்வதியும் அங்குத் தோன்றி நின்றனர். அழுங்குழந்தையின் கவனத்தைக் கவரும் கண்கொள்ளாக் காட்சியாக விளங்கியது. இறைவனும், இமய வல்லியும் விடையின் மேல் தோன்றி தரிசனம் தந்த காட்சி. இறைவன் அருள் கிடைத்தால் அதற்கு எல்லை ஏது? சிவபெருமான், சிவபாத விருதயரின் பிள்ளைக்குச் சிவஞானம் ஊட்ட அருள் கூர்ந்தார். உடனிருந்த உமாதேவியாரைப் பிள்ளையார், ''எனக்கு உமது இரு மூலைகளினின்றும் பொழிகின்ற பாலடிசில் பொன்வள்ளத்து ஊட்டு'' என்றார். அம்மையாரும் அவரருளியவாறே பொன் வள்ளத்தில் பாலைச் சுரந்தருளி எண்ணரிய சிவஞானத்தின் அமுதங்குழைத்துப் பிள்ளையாரை நெருங்கிக் கையிற் பொற்கிண்ணத்தைத் தந்து, கண்களில் நீரைத் துடைத்து, ''இவ்வடிசிலை உண்'' என ஊட்டினார். பிள்ளையாருக்கு அழுகை தீர்ந்தது. அத்தோடு பெரிய தொடர்பு ஒன்று ஏற்பட்டது. யாவருக்கும் கிடைத்தற்கு அரிய தொடர்பு அது! அதுதான் 'சிவஞானத் தொடர்பு! அன்றில் இருந்து 'சிவஞானசம்பந்தர் ஆனார். நாம் அன்பாகப் போற்றும் திருஞானசம்பந்தர்! இவருக்குச் சிவனடியே சிந்திக்கும் சிவஞானமும் அன்றிப் பிறப்பினை யொழிக்கவல்ல உரிமை ஞானமும், உவமையிலாக் கலைஞானமும், உணர்வரிய மெய்ஞானமும் உண்டாயின.

இங்ஙனம் பேருணர்வு பெற்றுப் பொலிவடைந்து நிற்கின்றபோது ஜபம் முடித்துச் சிவபாதவிருதயர் நீரை விட்டுக் கரையின் மீதேறினார். பிள்ளையாரை நோக்கிப் பால் வடிந்திருந்த கோலத்தைக் கண்டார். ''யாரளித்த பாலடிசில் உண்டது நீ என வெகுண்டார். 'எச்சில் மயங்கிட இது கொடுத்தாரைக் காட்டு'' என்ற வகையில் ஒரு சிறுகோல் கொண்டோச்சினர். அதுபோழ்து பிள்ளையார் ஆனந்தக் கண்ணீர் பெருக்கி ஒரு காலைச் சிறிது தூக்கி தமது சிறிய கையினைத் தலைக்கு மேலாகச் சுட்டு விரலால் வானத்திடை விடையின்மேல் உமாதேவியோடு விளங்கிய பெருமானைச் சுட்டிக் காட்டினார். சுட்டிக்காட்டி விடையும் கூறினார்.

''தோடு அணிந்த செவியன், விடை ஏறி வந்திருந்தான். தலை யிலே தூய வெண்மதி! அதை ஆபரணமாக முடியிலே சூடி இருக்கிறான்.

உடலெல்லாம் திருநீறு பூசி இருக்கின்றான். இப்படியாக என் உள்ளம் கவர்ந்த கள்வனே இங்கு மேவியவன்!''

வெண்தோடும், வெண்ணிற விடையும் வெண்மதியும், பவளம் போல் மேனியிலே விளங்கிய பால் வெண்ணீறும் சிறு குழந்தையின் மனத்தைக் கவர்ந்ததில் என்ன வியப்பு! நிச்சயமாக அங்குத் தோன்றிய இறைவன் ''உள்ளங்கவர் கள்வனே'' இவ்விடை நம் உள்ளம் கவர் பாடலாகப் பிறக்கிறது. இதோ அப்பாடல்,

'தோடுடைய செவியன்; விடையேறியோர் தூவெண் மதிசூடிக்
காடுடைய சுடலைப்பொடி பூசிஎன் உள்ளங்கவர் கள்வன்
ஏடுடைய மலரான் முனைநான் பணிந்தேத்த அருள்செய்த
பீடுடைய பிரமா புரமேவிய எம்மான் இவன் அன்றே!

இப்படியாகப் பல பாடல்கள் பாடினார். தந்தைக்குப் பெரும் வியப்பு! பேச அறியாத பிள்ளை விடைபேசியது இல்லை. தித்திக்கும் தீஞ்சுவைப் பாடல் பாடியது. அப்பாடலிலே இறைவனின் அடையாளங்களைச் சுட்டிக்காட்டியது. ஆங்குடன் கூடிய அன்பர்கள் மகிழ்ச்சி அடைந்தாராய் வேத முதலிய மங்களவொலி முழக்கினர். சிவஞான சம்பந்தரும் கண்ணுற்ற பெருமானை வணங்கிக் கொண்டே திருக்கோயிலுக்குட் புகுந்தனர். சிவபாதவிருதயரும் இறைவனைத் தான் காணும் பேரின்மை யராயினும் தம் மகனார் பின்னே தொடர்ந்து சென்றனர். அவ்வரிய நிகழ்ச்சி அவ்வூரில் பரவியது. தொண்டர்கள் யாவரும் திருக்கோயிலினுட் புகுந்து சிவஞானசம்பந்தரைச் சூழ்ந்து போற்றி வணங்கி,

''காழியர் தவமே! கவுணியர் தனமே கலைஞானத்
தாழிய கடலே! அதனிடை அமுதே! அடியார்முன்
வாழிய! வந்திம் மண்மிசை வானோர் தனிநாதன்
ஏழிசை மொழியாள் தன்திருவருள் பெற்றனை! என்பார்''

(ஏழிசை மொழியாள்-உமாதேவியார்)

இவ்வாறு கூடிய அந்தணரும், ஏனையோரும் கூறிப்போற்றவும் அப்பெருங்கூட்டத்தில் சிவபாதவிருதயர் சிவஞானசம்பந்தரை முன் சென்று தூக்கித் தன் தோளிடை அமர்த்திக் கொண்டு திருக்கோயிலுக்கு வெளியே வந்தவர். அறையோர் கூட்டமும், தொண்டர் கூட்டமும், தத்தம் மேலாடைகளை மேல் வீசிக் களித்தனர். அக்காட்சி சிவனாந்தப் பெருக்காறு போலதுபோல் விளங்கியது. மங்கையர்கள் மங்கள மொழிகளால் வாழ்த்தெடுத்தார்கள். எங்குங்குள் சிறக்க சிவபாதவிருதயர் சிவஞான சம்பந்தருடன் தமது திருமாளிகைக்குத் திரும்பினார். அன்று முழுதும் சிவஞானசம்பந்தர் தமக்கு அருளிய திருத்தோணியப்பரைத் தம் மனத்திடை நிறுவிச் சிந்தனையிலாழ்ந்திருந்தார்.

உள்ளத்தைக் கோயிலாகக் கொள்வது இறைவன் அருட்செயலாகும். அங்ஙனம் உள்ளத்தை அமைத்தற்குச் சாதனமாவது சிவத்தல யாத்திரையாம்.

''நாடும் நகரமும் நற்றிருக் கோயிலும்
தேடித் திரிந்து சிவபெரு மானென்று
பாடுமின் பாடிப் பணிமின் பணிந்தபின்
கூடிய நெஞ்சத்துக் கோயிலாக் கொள்வனே''

என்பது திருமூலர் ஆணையாகும். இதனையே மேற்கொண்டு முறையாக, சிவஞானசம்பந்தர் மறுநாட் காலையில் தோணிபுரங் கோயிலுக்குட் சென்று தந்தையாரோடு காதலுடன் கழுமலத்து வீற்றிருந்த பெருமானையும், தாங்கரிய மெய்ஞ்ஞானந்தம் பால் வந்து முலை சுரந்தளித்த புண்ணியத் தாயாரையும் வணங்கி வெளியே போந்து திருக்கோலக்கா சென்றனர். ஆங்குத் திருக்கோயில் வலஞ்செய்து சிவபெருமானைப் புகழ்ந்து பாட 'மடையில் வாளைகள் பாய்' என்று திருப்பதிகம் தொடங்கித் தம் சிறு கைகளால் தாளமிட்டார். இறைவனது திருவருளால் திருவைந்தெழுந்து பொறித்த பொற்றாளங்கள் அவர் கைகளில் சேர்ந்தன. இதனைக் கண்ணுற்ற யாவரும் வியப்படைந்து போற்றினர். பின்னர்த் தம் தாதையார் தோண்மேலேறித் திருத்தோணிபுரம் மீண்டுஞ் சேர்ந்து தோணியப்பர் முன் 'பூவார்கொன்றை' என்ற முதலையுடைய திருப்பதிகம் பாடித் திருமாளிகைக்குத் திரும்பினார்.

சிவஞானசம்பந்தரின் புகழும் திருவருள் பெற்ற செய்தியும் செந்தமிழகம் முழுதும் பரவின. அவரது தாயாரின் தாயார் ஊர் நனிபள்ளியாரும். அங்கிருந்து அந்தணர்கள் சிவஞானசம்பந்தரைத் தங்கள் பதிக்கு அழைத்துச் செல்ல ஈண்டினர். அவர்கட்கு இசைவு தந்து புறப்பட்டு நனிபள்ளியடைந்தார். ஆங்கும் திருக்கோயிலுக்குச் சென்று சிவபெருமானைத் தொழுது 'கொடியுடை' என்ற திருப்பதிகம் பாடிப் போந்து திருச்சாய்க்காடு தொழ நினைத்தார். தொண்டர்கள் பலரும் சூழத் திருச்சாய்க்காடு, பல்லவனீச்சரம் வணங்கித் திருவெண்காடடைந்தார். திருத்தொண்டர்கள் தம்மை எதிர்கொண்டு செல்ல அவர்களோடு அளவளாவி இறைவனது புகழ்களை ஏத்து மகிழ்ச்சியோடு திருக்கோயிலை வணங்கி உள்புகுந்து 'கண்காட்டு நுதலானும்' என்னும் திருப்பதிகம் பாடி அங்குள்ள முக்குளங்களைச் சிறப்பித்தனர்.

அங்கிருந்தும் நீங்கித் தென்றிருமுல்லை வாயில் வணங்கிக் கொண்டு காழியையடைந்தனர். மீண்டும் தல யாத்திரை அவாவுடையவராய்ப் புறப்பட்டு மயேந்திரப்பள்ளி, குருகாவூர், தென்றிருமுல்லை வாயில் முதலிய பதிகள் இன்புற அறைஞ்சியேத்தினார்.

21. சம்பந்தர் ஊட்டும் நம்பிக்கை

எ. கொண்டல் ராஜ், மதுரை.

நினைக்க முக்தியளிக்கும் திருத்தலம் திருவண்ணாமலை ஆகும். இதன் பெருமையினைக் காலந்தோறும் அருளாளர்கள் வியந்து பாடி மகிழ்கின்றனர். பகவான் ஸ்ரீ ரமணமகரிஷி

''கருணார் ணவமாய்க் கருதக் கதி நல்கும்
அருணா சலசிவ மீதாம்'' (அருணாசல ஸ்துதி பஞ்சகம்)

என்கின்றார். அருளாளர் குருநமச்சிவாயர்

''ஞானத் தபோதனரை வாஎன்று
அழைக்குமலை அண்ணாமலை''
(அண்ணாமலை வெண்பா -1)

எனச் சிறப்பிக்கின்றார். இத்தகைய அருணகிரிப் பெருமானைத் திருஞானசம்பந்தர் வியந்து தண்டமிழால் பாடிப் பரவியுள்ளார். அருணையம்பதி ஈசனின் அருள்நிலை எண்ணி இவ்வுலகோர் உய்யும் பொருட்டு நம்பிக்கை பல ஊட்டுகின்றார் ஞானசம்பந்தர். திருவண்ணா மலை இறைவனைப் போற்றிப் பாடிய இரு பதிகங்கள் முதல் திருமுறையில் அமைந்துள்ளன. இவை தவிரத் தம் ஒவ்வொரு பதிகத்திலும் ஒன்பதாம் பாடலில் திருமாலும், பிரமனும் அடிமுடி தேடியும் காணவொண்ணாதபடி இறைவன் சோதிப் பிழம்பாய் நின்ற அற்புத அண்ணாமலையின் பெருமையைச் சுட்டுகின்றார். வேறெந்தத் தலத்திற்கும் இத்தகைய பெருமையினை அவர் தந்தாரில்லை. இதிலிருந்தே ஞானசம்பந்தர் திருவருணையின் மீது கொண்ட அளவற்ற பக்தியும், நம்பிக்கையும் புலனாகிறது. ஞானசம்பந்தர் அருளிய திருவண்ணாமலைப் பதிகங்கள் இரண்டையும் ஆய்விற்கு எடுத்துக் கொண்டு அவற்றின் கருத்துக்கள் பகுக்கப்பட்டு, விளக்கப்பட்டு, அவை ஊட்டும் நம்பிக்கைகள் இக்கட்டுரையில் ஆராய்ந்து எடுத்துரைக்கப்படுகின்றன.

மும்மலங்களை நீக்கி அருளல்

சிறந்து விளங்கும் சின்மய அண்ணாமலையாரின் சீர்மையைச் சம்பந்தப் பெருமான்,

''அம்பந் தீ மூ எயில் எய்தவன்'' (1:10:11)

''மூவார் புரங்கள் எரித்த அன்று மூவர்க்கு அருள் செய்தார்''
(1:69:1)

''தழைத்த சடையார் விடைஒன்று ஏறித் திரியார் புரம் எய்தார்''
(1:69:4)

''செருவில் ஒருகால் வளைய ஊன்றிச் செந்தீ எழுவித்தார்''
(1:69:5)

என முப்புரங்களையும் எரித்த இறைவனின் வல்லமையைக் காட்டுகின்றார்.

''முப்புரமாவது மும்மல காரியம்'' (திருமந்திரம் - 343)

என்கின்றார் திருமூலர். இதனால் உயிர்களின் ஆணவம், கன்மம், மாயை என்னும் மும்மலங்களும் இறைவனால் நீக்கப்படும் என்ற நம்பிக்கையைப் புலப்படுத்துகின்றார் எனலாம்.

தவற்றுக்கு வருந்தி உள்ளம் உருகினால் அருளல்

செருக்குற்ற இராவணனை இறைவன் தன் வல்லமையினால் ஒடுக்கின பாங்கினை,

''வெளிறுபட விளையாடிய விகிர்தன் இராவணனை
அளறுபட அடர்த்தான் இடம் அண்ணாமலை அதுவே''
(1:10:8)

''மறந் தான் கருதி வலியை நினைந்து மாறாய் எடுத்தான் தோள்
நிறந் தான் முரிய நெரிய ஊன்றி நிறைய அருள் செய்தார்
திறந் தான் காட்டி அருளாய் என்று தேவர் அவர் வேண்ட
அறந் தான் காட்டி அருளிச் செய்தார் அண்ணாமலையாரே''
(1:69:8)

எனப் போற்றுகின்றார் ஞானசம்பந்தர்.

தன் வீரத்தைக் கருதி முறைக்கு மாறாகக் கயிலை மலையைப் பெயர்த்து எடுத்தவனுடைய தோளும், மார்பும் முரியும்படிக் கால்விரலால் மலையை ஊன்றிப் பிறகு, அவன் வேண்ட கருணையினால் பெரிதும் அருள் புரிந்தார் என்பதை உணர்த்துகின்றார். இதனால் **உயிர்கள் அறியாமையினால் எத்தகைய பிழை செய்யினும் வருந்தி உள்ளம் உருகி உத்தமன் திருவடி நாடி நின்றால் உயர்கதி அடையும் பேறு பெறுவர் என்ற நம்பிக்கையை ஞானசம்பந்தர் ஊட்டுகின்றார்.**

அடியேன் வைதாலும், வாழ்த்தினாலும் என் குற்றத்தை எண்ணி மனம் குழைவேன் ஆதலால், என்னைப் புறக்கணிக்காதே என்று மாணிக்கவாசகர் இறைவனை வேண்டுவதும் (நீத்தல் விண்ணப்பம் - 50)

"மண்ணுலகில் வாழ்வார்கள் பிழைத்தாலும் வந்தடையின்
கண்ணுதலான் பெருங்கருணை கைக்கொள்ளும்"
(ஞானசம்பந்தர் புராணம் - 77)

என்று சேக்கிழார் கூறுவதும் இங்கு நினைவு கூரத்தக்கன.

தொழுவார் துயர் நீக்கிக் காத்தல்

ஒரு காலத்தில் தேவர்களும், அசுரர்களும் மேருமலையை மத்தாகவும், வாசுகி என்னும் பாம்பைக் கயிறாகவும் கொண்டு திருப்பாற்கடலைக் கடைந்தனர். அப்பொழுது உலகிலுள்ள உயிர்களெல்லாம் பயப்படும்படி விஷம் எழுந்தது. அது மண்ணும், விண்ணும் பரந்தது. எனவே வானவரும், தானவரும் கலங்கி அஞ்சி, அரனைச் சரணடைந்து காத்தருள வேண்டும் என வேண்டினர். அவர்களைக் காப்பாற்ற இறைவன் நஞ்சுண்டான். இதனைத் திருவண்ணாமலைப் பதிகத்தில்,

"மஞ்சைப் போழ்ந்த மதியம் சூடும் வானோர் பெருமானார்
நஞ்சைக் கண்டத்து அடக்கும் அதுவும் நன்மைப் பொருள்போலும்"
(1:69:2)

என்று மேகத்தைப் பிளந்து கொண்டு செல்லும் மதியைச் சூடும் பெருமான்; தேவர்களுக்குத் தலைமையாய் இருக்கும் பெருமான்; நஞ்சைக் கண்டத்தில் அடக்கியதும், உயிர்களுக்கு நன்மை செய்யும் பொருட்டே போலும் என ஞானசம்பந்தர் வியக்கிறார்.

உயிர்களுக்கு ஏதேனும் துன்பம் நேருங்கால் இறைவனைச் சரணடைந்தால் அவன் உடனே வந்து துயர் துடைப்பான் என்ற நம்பிக்கையினை ஞானசம்பந்தர் இப்புராண நிகழ்வினைச் சுட்டி உணர்த்துகின்றார்.

"தொழுவார் அவர்துயர் ஆயின தீர்த்தல் உன் தொழிலே"
(7:1:9)

என்று சுந்தரர் கூறுவதும்,

"தொழுதகை துன்பம் துடைப்பாய் போற்றி"
(போற்றித்திருஅகவல், வரி - 131)

"இடரைக் களையும் எந்தாய் போற்றி" (மேலது, வரி - 101)

என்று மாணிக்கவாசகர் போற்றுவதும் இங்கு நினைவுகூரத்தக்கன.

ஆணவ மலநீக்கம்

"ஞானத்திரளாய் நின்ற பெருமான் நல்ல அடியார்மேல்
ஊனத்திரளை நீக்கும் அதுவும் உண்மைப் பொருள் போலும்"
(1:69:3)

என்று ஞானசம்பந்தர் இறைவனைப் போற்றுகின்றார். இதில் **"ஊனத்திரள்"** என்றது ஆணவத்தைக் குறிக்கும். ஆணவம் உயிர்களை அநாதியே செம்பிற் களிம்புபோல், நெல்லில் உமிபோல் பிணித்துள்ளது. எனவே அஃது உயிர்களின் குற்றமாகக் கருதப்படும். எனவே சம்பந்தர் அதனை **"ஊனத்திரள்"** என்கின்றார். ஆணவத்தின் இயல்பு அறியாமையை உண்டு பண்ணுவது. **"அறியாமை ஆணவம்"** என்கின்றார் திருவதிகை மனவாசகம் கடந்தார் (உண்மை விளக்கம் - 22). **"அஞ்ஞானம் காட்டும் ஆணவம்"** என்கின்றார் மெய்கண்டதேவர் (சிவஞானபோத உதாரண வெண்பா - 74). இறைவன் ஞானத்திரளாய் விளங்குபவன். அஞ்ஞானம் ஞானத்தால் (இறைவனால்) நீக்கப்படும்.

"மெய்ஞ்ஞானமாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே"

"அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே"

(சிவபுராணம், வரி - 38, 40)

என்று மாணிக்கவாசகர் இறைவனைப் போற்றுவது இங்கு நினைவு கூரத்தக்கது. ஞானவடிவினனான இறைவனை வழிபட்டால் உயிர்களிடத்திலுள்ள அஞ்ஞானம் நீங்கும் என்ற நம்பிக்கையை ஞானசம்பந்தர் ஊட்டுகின்றார்.

வினை நீக்கம்

ஆணவமலச் சேர்க்கையால் உயிர்களின் செய்யும் செயல்களே கன்மம் எனப்படும் (மறைமலை அடிகள், சிவஞானபோத ஆராய்ச்சி, ப. 30). கன்ம பலன்களை உயிர்களுக்குக் கூட்டுவிப்பவன் இறைவன் என்பதை,

"யோனிக்கெல்லாம் இறைவன் ஆணையினால்
இன்ப துன்பங்கள் இயைவதாகும்"

என்று அருணந்தி சிவாசாரியார் கூறுகின்றார் (சிவஞானசித்தியார் சுபக்கம் - 120). நீக்குதற்கரிய வினைகள் விரைவில் நீங்குதற்கு எளிய வழியினை ஏற்றமுடன் மொழிகின்றார் ஞானசம்பந்தர். அவ்வழிகள் யாவை?

"அண்ணாமலை தொழுவார் வினை வழுவா வண்ணம் அறுமே" (1:10:1)

"அண்ணாமலை அண்ணல்
பூமாங்கழல் புனை சேவடி நினைவார் வினைஇலரே" (1:10:2)

"அண்ணாமலை அண்ணல் ....தலைவனடி சரணே" (1:10:9)

என்கின்றார் ஞானசம்பந்தர். இதனால் **அண்ணாமலையானைச் சென்று தொழுதும், இருந்த இடத்திலிருந்து அவனை நினைத்தும், அவனடியைச்**

சரணடைந்தும் நிற்போர் கொடிய வினைத்தளையினின்றும் விடுபடும் பேற்றினைப் பெறுவர் என்று நம்பிக்கை அளிக்கின்றார் ஞானசம்பந்தர்.

''வந்தித்திருக்கும் அடியார் தங்கள் வரும் மேல்வினையோடு
பந்தித்திருக்கும் பாவம் தீர்க்கும் பரமன் உறைகோயில்''
(1:69:7)

என்று ஞானசம்பந்தர் அண்ணாமலையானைப் போற்றுவதில் **"மேல்வினை"** என்றது உயிர்கள் இப்பிறவியில் புதிதாகச் செய்யும் நல்வினை, தீவினைகளைக் குறிக்கும். அஃது ஆகாமிய வினை எனப்படும். **''பந்தித்திருக்கும் பாவம்''** என்றது உயிர்கள் பல பிறவிகளில் செய்த வினைகளின் தொகுதியான சஞ்சிதத்தைக் குறிக்கும், **''மேல்வினையோடு, பந்தித்திருக்கும் பாவம் தீர்க்கும்''** என்பதால் உயிர்களின் ஆகாமிய வினைகளோடு, சஞ்சித வினைகளையும் அண்ணாமலையார் நீக்கு கின்றார் என ஞானசம்பந்தர் உணர்த்துகின்றார். உயிர்கள் செய்த மொத்த பாவங்களையும் இறைவன் தீர்த்தருளுவதை,

"நினைத்துத் தொழுவார் பாவந்தீர்க்கும் நிமலர் உறை கோயில்"
(1:69:6)

என மற்றொரு பாடலிலும் ஞானசம்பந்தர் குறிப்பிடுகின்றார்.

ஞானசம்பந்தர் கருத்துக்கு அணி சேர்ப்பது போல் குருநமச்சிவாயர்,

''பொல்லா வினை அறுக்கப் போந்தமலை''
(அண்ணாமலை வெண்பா - 94)

என்றும், திருநாவுக்கரசர்,

''அண்ணாமலை கை தொழக்
கெட்டுப்போம் வினை; கேடு இல்லை; காண்மினே'' (5:5:1)

என்றும் கூறுகின்றனர்.

புகழ் பெறுவர்

அண்ணாமலையண்ணலை அன்போடும், உறுதியோடும், வழிபடும் அன்பர்கட்கு அவன் இன்னருள் செய்து புகழ் தரும் திறம் ஞானசம்பந்தரால் நவிலப்படுகிறது.

''ஆலிம் மழை தவழும் பொழில் அண்ணாமலை அண்ணல்
காலன் வலி தொலை சேவடி தொழுவாரன புகழே'' (1:10:3)

என அண்ணாமலை அண்ணலார்தம், காலன் வலிமையைப் போக்கும் சேவடிகளைத் தொழுவோர்க்கு எல்லாப் புகழும் உரியனவாகும் என்று ஞானசம்பந்தர் உரைக்கின்றார். அண்ணாமலையாரைத் தரிசிக்காத, பாடாத சிவஞானிகளே இல்லை எனலாம். திருவாசகத்தில்

திருவெம்பாவையும், திரு அம்மானையும் அண்ணாமலையில் அருளிச் செய்யப்பட்டவை. மேலும் அண்ணாமலையிலேயே தங்கி அண்ணா மலையாரை வழிபட்டும், அவரைப் போற்றிப் பாடியும் புகழ்பெற்ற ஞானிகளான தெய்வ சிகாமணி தேசிக பரமாச்சாரிய சுவாமிகள், பாணிபத்திர சுவாமிகள், தட்சணாமூர்த்தி சுவாமிகள், அம்மணி அம்மையார், அண்ணாமலை சுவாமிகள், அழகானந்த அடிகள், வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள், அருணகிரியார், குகை நமச்சிவாயர், குரு நமச்சிவாயர், ரமணர், முருகனார் இவர்கள் இங்கு நினைவுகூரத் தக்கவர்கள்.

எம பயம் இல்லை

அண்ணாமலை அண்ணலின் திருவடிகளை, **"காலன் வலி தொலை சேவடி"** (1:10:3) என ஞானசம்பந்தர் சிறப்பிக்கின்றார். மார்க்கண்டேயனின் உயிரைக் கவரவந்த காலனை **"என் அடியான் உயிரை வவ்வேல்"** என்று காலால் உதைத்தன அத்திருவடிகள். **அச்சேவடிகளை வணங்கு வோர் எமனைக் கண்டு அஞ்ச வேண்டியதில்லை என்ற நம்பிக்கையை ஊட்டுகின்றார் ஞானசம்பந்தர்.** எமன்தான் சிவனடியார்களைக் கண்டு அஞ்சுவான்.

"இயமன் தூதரும் அஞ்சுவர் இன்சொலால்
நயம் வந்து ஓதவல்லார் தமை நண்ணினால்" (3:307:4)

என்று ஞானசம்பந்தர் கூறுவது இங்கு நினைவுகூரத்தக்கது.

சிவமாந்தன்மை பெறுவர்

"அண்ணாமலை அண்ணல்
கூர்வெண் மழுப்படையான் நல்ல கழல் சேர்வது குணமே"
(1:10:11)

எனப் போற்றுகின்றார் ஞானசம்பந்தர். திருக்குறளில் கடவுள் வாழ்த்தில் வரும் **"சேர்தல்"** என்ற சொல்லுக்கு இடையறாது தியானித்தல் எனப் பொருள் கூறுவார் பரிமேலழகர். அண்ணாமலை அண்ணலின் மழுப்படை குற்றம் செய்தாரை ஒறுத்து, அவர்களின் குற்றத்தைத் தீர்த்து தூய்மை யடையச் செய்யும். அதுபோல அப்பெருமான் தன்னை வழிபடும் அன்பர்களின் மனமாசுகளைப் போக்கித் தூய்மை அடையச் செய்வான். குணம் என்ற சொல் பண்பு என்ற பொருள் தரும். அண்ணாமலையாரின் நல்ல திருவடிகளை நாளும் தவறாது தியானிப்பவர்கள் நல்ல பண்பு களைப் பெறுவர். குணம் என்ற சொல் நலம் என்ற பொருளையும் தரும். உணவு உடலுக்கு நலம் தருவது போல, அண்ணாமலையாரை வழிபடுவது உயிருக்கு நலம் தரும். தண்ணீர் நமது தாகத்தைத் தணித்து உடலுக்கு நன்மைகள் புரிவது போல, அண்ணாமலையாரை இடையறாது

தியானிப்பது நமது ஆத்ம தாகத்தைத் தணித்து, நமது உயிர்க்கு நன்மைகள் பல செய்யும், திருநாவுக்கரசர்,

"அண்ணாமலை கை தொழ
நல்ல ஆயின நம்மை அடையுமே" (5:5:3)

என்று கூறுவது இங்கு நினைவுகூரத்தக்கது. குணம் என்ற சொல்லுக்குத் தன்மை என்ற பொருளும் உண்டு. மேருமலையை அடைந்த கரிய காகமும் பொன்னிறத்தைப் பெறுவதுபோல, **சிவசொரூபியான அண்ணாமலை அண்ணலைச் சார்ந்து அவரது திருவடிகளைத் தியானிப்பவர்கள் சிவமாந்தன்மை பெறுவர் என்று நம்பிக்கை ஊட்டுகின்றார் ஞானசம்பந்தர்.**

"............மெய்ப்பரம்பொருள்
சேர்வார் தாமே தானாகச் செய்யுமவன்" (5:126:7)

என்று ஞானசம்பந்தர் பரம்பொருளாகிய இறைவன் தன்னைச் சாரும் சிவஞானிகளைச் சிவமாகச் செய்வன் என்று கூறுவது இங்கு நினைவுகூரத்தக்கது. மாணிக்கவாசகரும்,

"சித்த மலம் அறுவித்துச் சிவமாக்கி எனை ஆண்ட"
(அச்சோப்பதிகம் - 1)

என்று கூறுவதும் இங்கு நினைவுகூரத்தக்கது. ஆகவேதான் திருநாவுக்கரசர்,

"தேடிச் சென்று திருந்தடி ஏத்துமின்
நாடி வந்து அவர் நம்மையும் ஆட்கொள்வார்" (5:5:5)

என்று பாடுகின்றார்.

நோய் அடையா

ஞானசம்பந்தர்,

"கருகும் மிடறு உடையார் கமழ் சடையார் கழல்பரவி
உருகும் மனம் உடையார் தமக்கு உறுநோய் அடையாவே"
(1:10:6)

என்கின்றார். நஞ்சுண்டதால் கருத்த கண்டமும், மணம் கமழும் சடையும் உடைய அண்ணாமலை அண்ணலின் திருவடிகளை உள்ளம் உருக வழிபடுபவர்களைத் துன்பம் தரும் நோய் அணுகா என்கின்றார். உயிர்கள் அனுபவிக்க இருக்கும் கன்மத்தின் பலன்களான **பேறு, இழவு, இன்பம், பிணி, மூப்பு, சாக்காடு** இவற்றை அவை கருவிலிருக்கும்போதே இறைவன் விதித்திருப்பான் என்று அருணந்திசிவாச்சாரியார் கூறுகின்றார் (சிவஞானசித்தியார் சுபக்கம் - 99) நோய் என்பது வினைப்பவன். இறைவனே உயிர்கட்கு வினைப் பலன்களைச் சேர்ப்பிப்பவன். இறை வழிபாடு செய்து அருள்வழி நிற்பவர்கட்கு வினை இல்லையாதலால் வினைப் பலனான நோயும் அவர்களைச் சேராது எனலாம். மேலும்

ஆணவமலத்தை நோயாகக் குறிப்பிடுவது உண்டு. குமரகுருபரர் அதனைக் கண்ணில் படரும் படலம் (Cataract) என்னும் நோயாக உருவகித்து **"ஆணவமான படலம்"** (கந்தர் கலிவெண்பா, கண்ணி, 26) என்கின்றார். ஆணவமலச் சேர்க்கையால் உயிர்கள் செய்யும் வினையின் காரணமாகப் பிறப்பு உண்டாகுமாதலால் பிறவியையும் நோயாகக் குறிப்பிடுவர். முற்கூறிய பாடலடிகளால் **ஞானசம்பந்தர் அண்ணா மலையாரை மனம் உருகி வழிபடும் அடியார்கள் கொடிய பிறவி நோயை அடையார் என்று நம்பிக்கை ஊட்டுகின்றார்.**

"அன்பர் பிறப்பை அகற்று மலை" (அண்ணாமலை வெண்பா - 2)

"சரண கமலம் தனைப் புகழும் தொண்டர்
மரண பவத் துயரம் மாறக் - கருணை பொழியு மலை"
(மேலது - 12)

என குருநமச்சிவாயர் போற்றுவதும் இங்கு ஒப்பு நோக்கத்தக்கன. (பவம் என்றால் பிறப்பு)

நினைக்க முக்தி

"நினைத்துத் தொழுவார் பாவம் தீர்க்கும்
நிமலர் உறை கோயில்" (1:69:6)

என்று ஞானசம்பந்தர் திருவண்ணாமலையைப் போற்றுவது **"நினைக்க முக்தி தரும் தலம் அண்ணாமலை"** என்ற நம்பிக்கையை உறுதிப் படுத்தும். குருநமச்சிவாயர்,

"அழியா முக்தி அளிக்கும் மலை"
(அண்ணாமலை வெண்பா - 99)

என்று திருவண்ணாமலையைப் போற்றுகின்றார்.

அடிபேணுதல் தவமே

சம்பந்தர் காலத்தில் வாழ்ந்த சமணர்கள் முக்தி பெற இல்லறத்தைத் துறந்து, துறவு மேற்கொண்டு, காட்டிற்குச் சென்று தங்களை வருத்திக் கடுந்தவம் மேற்கொண்டனர். ஞானசம்பந்தர் உயிர்கள் இத்தகைய உக்கிரமான தவமேதும் மேற்கொள்ள வேண்டியதில்லை. தாம் தமிழில் அருளிய அண்ணாமலைப் பதிகத்தை அன்புடன் ஓதுபவர்கள் அடியார்கள் ஆவர், அவர்களின் அடிபணிந்து வழிபடுதலே தவம் என்பதை,

"குளிர் காழியுண் ஞான சம்பந்தன் தமிழ் வல்லவர்
அடிபேணுதல் தவமே" (1:10:11)

என்கின்றார்.

"சிவத்தைப் பேணின் தவத்திற்கு அழகு" (கொன்றைவேந்தன்)

என்று சிவவழிபாட்டில் நிற்றலே தவம் என்பார் ஔவையார். இங்கு ஞானசம்பந்தர் (சிவசொருபத்தை நினைவூட்டும்) அடியார் வழிபாடு செய்தல் தவம் என்கின்றார். குரு, லிங்க, சங்கம, (அடியார்) வழி பாட்டினை முக்திக்குரிய வாயிலாக உண்மை விளக்கம் (செ.51) கூறுவது இங்கு நினைவுகூரத்தக்கது.

வானோர் வணங்க வாழ்தல்

''ஞானசம்பந்தன்
சொல்லால் மலிந்த பாடலான பத்தும் இவைகற்று
வல்லார் எல்லாம் வானோர் வணங்கி மன்னி வாழ்வாரே''
(1:69:11)

என்று ஞானசம்பந்தர் அருளிய இப்பதிகப் பாடல்களைப் பொருளுணர்ந்து கற்று ஓத வல்லார்கள் வானவர்களால் வணங்கப்படும் சிறப்புடன் வாழ்வார்கள் என்று நம்பிக்கையுடன் அவர் கூறுகின்றார். இவ்வாறு சம்பந்தர் கூறுவதன் நுட்பம் சிந்திக்கத்தக்கது. அவர் தம் வாக்கை இறைவனுடைய வாக்காகக் கருதியதால் (1:76:1-10) இறைவாக்கிற்கு அத்தகைய வலிமை உண்டு என உணர்ந்து மக்களுக்கு அத்தகைய நம்பிக்கையை ஊட்டுகின்றார்.

நற்றமிழ் வல்ல ஞானசம்பந்தர் நாளும் நைந்து உருகும் உயிர் களுக்கு ஊட்டும் நம்பிக்கைகள் சில திருவண்ணாமலை பதிகப் பாடல்களின் துணைகொண்டு இக்கட்டுரையில் எடுத்துக்காட்டப்பட்டன. நாமும் நம்பிக்கையுடன் அவருடைய பாடல்களை ஓதி அண்ணா மலையாரின் அருளைப் பெற்று உய்வோமாக.

22. சம்பந்தரும் - திருநாவுக்கரசரும்

கொளஞ்சி, அண்ணாமலைநகர்.

தமிழகம் இரண்டு மாபெரும் கதிர் ஒளிகளால் சிறப்புப் பெற்று வந்துள்ளது.

தங்கத் தமிழைச் சங்கத் தொட்டிலில் வைத்துத் தாலாட்டி வளர்த்த தமிழ்ப் புலவர்கள் ஓர்புறம்; வாழ்க்கை நெறியை ஒழுக்க நெறியாக வகுத்துக் காட்டி, தெய்வ உணர்ச்சியை ஊட்டி, சமய நெறியைப் பரப்பிய சான்றோர்கள் மறுபுறம். இவ்விருவகை அறிஞர்களின் தொண்டினால் தமிழகம் உலகம் போற்றும் பெருமை பெற்று வளர்ந்தது.

தமிழும் சைவமும்

தமிழ்நாட்டில் பல சமயங்கள் தோன்றி மக்களால் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன என்றாலும் அவற்றுள் குறிப்பிடத்தக்க பெருமையும் தனிச்சிறப்பும் பெற்றது சைவம்.

சைவ சித்தாந்தக் கொள்கையைச் 'சித்தாந்த சைவம்' எனப் பெரியோர் வழங்குவர்.

''இது நம் தமிழகத்துக்கும், தமிழ்மொழிக்கும், தமிழ் மக்களுக்குமே உரிய பழமையும் பெருமையும் மிக்க சிறப்பு நெறியாகும்'' என அறிஞர் போற்றுவர்.

சைவ சமய குரவர்

தமிழும் சைவமும் நெருங்கிய தொடர்புடையவை. திருவள்ளுவர் இயற்றிய திருக்குறள் என்னும் தமிழ் வேதமே பசுவாகவும், திருமூலர் இயற்றிய திருமந்திரம் என்னும் தமிழ் ஆகமமே அப்பசுவின் பாலாகவும், அப்பர், சம்பந்தர், சுந்தரர், மாணிக்கவாசகர் என்னும் நால்வர் பாடிய திருமுறைகளே அப்பாலின் நெய்யாகவும், மெய்கண்டார் முதலிய அருளாளர்கள் பாடிய நூல்களே அந்நெய்யின் சுவையாகவும் விளங்குவது சைவ சித்தாந்தம் என்பர்.

சைவ சமயத்தைத் தமிழ்ப்பால் ஊற்றி வளர்த்த சான்றோர்களில் அப்பர், சம்பந்தர், சுந்தரர், மணிவாசகர் என்னும் நால்வரும் சைவ சமய குரவர்கள் எனப் போற்றப்படுகின்றனர். இந்நால்வருள் திருநாவுக்கரசரும் திருஞானசம்பந்தரும் சமகாலத்தில் வாழ்ந்தவர்கள். தேவாரம் பாடிய

மூவரில் முதற்கண் வைத்து எண்ணப்படுவர்கள். இவர்கள் வாழ்ந்த காலம் கி. பி. 7-ஆம் நூற்றாண்டு.

திருநாவுக்கரசர்

அப்பர் என்று அன்போடு அழைக்கப்படும் திருநாவுக்கரசர் திருமுனைப்பாடி நாட்டில் தெய்வநெறி பெருக்கும் திருவாமூரில் புகழனார் - மாதினியார் என்னும் தம்பதியர்க்கு மகவாகப் பிறந்தார். இடைக்காலத்தில் சமண நெறியில் சிக்கித் தடுமாறி இறைவனால் சூலை நோய் தந்து தடுத்தாளப் பெற்று சைவ சமயப் பணிபுரிந்தார். இவர் பாடியுள்ள தேவாரப் பாசுரங்கள் நான்கு முதல் ஆறு திருமுறை களாக வகுக்கப் பெற்றுள்ளன.

திருஞானசம்பந்தர்

திருஞானசம்பந்தர் சோழவள நாட்டில் சீகாழிப்பதியில் சிவபாத இருதயர் திருமகனாகப் பிறந்தவர். மூன்று வயதிலேயே இறைவியின் அருளைப் பெற்று அவரால் அளிக்கப்பெற்ற ஞானப்பாலை உண்டு சிவஞானம் கைவரப் பெற்றவர். பாண்டிய நாட்டை மூடியிருந்த சமணக் காரிருளை அகற்றிச் சைவத்தை வளரச் செய்த பெருமைக் குரியவர். இவரது தேவாரப் பாடல்கள் சைவத் திருமுறைகளில் முதல் மூன்று திருமுறைகளாக இடம் பெற்றுள்ளன.

இன்னிசையோடு பாடி இறைவனை வழிபடுவதில் இவர் வல்லவர்.

''நாளும் இன்னிசையால் தமிழ்
பரப்பும் ஞானசம்பந்தன்''

என இவரைப் போற்றுவர் நம்பியாரூரர்.

சந்திப்பு

முத்து ஆழ்கடலில் பிறக்கிறது. ஒளிவீசும் மணிகள் எங்கோ மலையில் பிறக்கின்றன. ஆயினும் கைவினை வல்ல பொற்கொல்லன் அணிகலன் செய்யுங்காலத்து அவை ஒன்றுகூடிக் கண்ணுக்கு அழகைத் தருகின்றன. அதுபோலச் சான்றோர்கள் எங்கே பிறந்தாலும் சான்றோர் களையே நாடிச் சென்றடைவர் என்று ஒரு புறப்பாடல் கூறுகிறது.

''பொன்னும் துகிரும் முத்தும் மன்னிய
மாமலை பயந்த காமரு மணியும்
இடைபடச் சேயவாயினும் தொடை புணர்ந்து
அருவிலை நன்கலம் அமைக்குங் காலை
ஒருவழித் தோன்றி யாங்கு என்றும் சான்றோர்
சான்றோர் பால ராப
சாலார் சாலார் பாலரா குபவே''

என்பது அப்பாடல்.

அப்பரடிகள் சைவத் திருத்தொண்டுகளையும், சமணர்களால் பாதிக்கப்பட்டுக் கருங்கடலில் கல்லையே தெப்பமாகக் கொண்டு நீந்தி அவர் கரையேறிய அருள் திறத்தையும் கேள்வியுற்ற சம்பந்தர் அவரைக் காண வேண்டும் என்ற பேரவாக் கொண்டிருந்தார். இறைவியால் ஊட்டப் பட்ட ஞானப்பாலை உண்டு தேவாரப் பதிகங்களை இன்னிசையோடு பாடி இறைவன் புகழைப் பரப்பி வரும் திருஞானசம்பந்தரைக் காண அப்பரும் விரும்பினார்; அதன் காரணமாகச் சீகாழிப்பதிக்கு எழுந்தருளினார்.

சம்பந்தர் அடியார் குழாத்தோடும் சென்று நாவரசரை எதிர் கொண்டழைத்தார். உள்ளத்தில் இறைவன்பால் பொங்கி எழும் இடையறாப் பேரன்பும், உடுத்த கந்தையும் மிகை எனக் கருதும் துறவுள்ளமும், உழைப்பே பெரிதெனக் கொண்ட உழவாரப்படையும், பொன்மேனியில் பூசப் பெற்ற வெண்ணீறும் உடையவராய் வந்து தோன்றிய திருநாவுக்கரசரை வணங்கி வரவேற்றார். நாவரசரும் அவரை வணங்கினார். வணங்கிய நாவரசரை அப்பரே! என அன்புடன் அழைத்தார் சம்பந்தர்.

இருவரும் அன்போடு அங்கு சில நாட்கள் தங்கிப் பல தலங்களுக்கும் சென்று சிவபரம்பொருளை வழிபட்டுப் பதிகங்கள் பல பாடி மகிழ்ந்தனர். அவ்விருவரும் கூடி மகிழ்ந்ததன் விளைவாகப் பல அரிய நிகழ்ச்சிகள் நடைபெற்றன. தமிழையும் சைவத்தையும் இருகண்களாகக் கொண்ட அவ்விருவரும் புரிந்த சாதனைகளைப் பெரியபுராணம் தெளிவாகக் கூறுகின்றது.

திருநாவுக்கரசர் நிகழ்த்திய சாதனைகள்

இறைவன் திருவருளாலும் தமது அன்பின் முதிர்ச்சியாலும் பின்வரும் சாதனைகளைத் திருநாவுக்கரசர் புரிந்துள்ளார்.

1. சமணர்களை எதிர்த்து நின்று சைவ சமயத்தைப் பரப்பியது. சமணனான பல்லவனை மாற்றிச் சைவனாக்கியது.
2. நாடாளும் மன்னனையே துச்சமாக மதித்து ''நாமார்க்கும் குடியல்லோம்'' என்று அஞ்சாமல் எதிர்மொழி கூறியது.
3. நீற்றறை குளிர்வித்தது.
4. இறைவனருளால் நஞ்சுண்டும் உயிர் பிழைத்தது.
5. கருங்கல்லைத் தெப்பமாகக் கொண்டு கடலை நீந்திக் கரையேறியது.
6. மூத்த திருநாவுக்கரசின் விடத்தைத் தீர்த்தது.
7. திருமறைக்காட்டில் கதவம் திறக்கப் பாடியது.

8. பழையாறையில் சமணர்களால் மறைக்கப்பட்ட சிவலிங்கத்தை வெளிப்படுத்தியது.
9. திருக்கயிலாய யாத்திரை நிகழ்த்தியது.

திருஞானசம்பந்தர் நிகழ்த்திய சாதனைகள்

இறைவனை மகன்மை மார்க்கத்தால் வழிபட்டுப் பேறு பெற்றவர் திருஞானசம்பந்தர். அதன் விளைவாக மற்ற அடியவர்க்கு இல்லாத முத்துச்சிவிகை, பொற்றாளம், உலவாக்கிழி போன்ற பரிசுகளை இறைவன்பால் பெற்றவர். இவர் நிகழ்த்திய சாதனைகள் பல. அவை சைவ சமய வளர்ச்சிக்குப் பெரிதும் உதவின.

''தாம் பாடிய நாலாயிரம் பாடல்களில ஐந்நூறுக்கும் மேற்பட்ட இடங்களில் தமிழின் பெருமை பேசியும், தமிழ் மொழியால் பாடி இறைவனை அடைய முடியும் என்று அறுதியிட்டுக் கூறியும், ஆணை வைத்துப் பேசியும் செல்பவர் திருஞானசம்பந்தப் பிள்ளையார்'' என இவரது பெருமையைப் போற்றுகிறார் பேராசிரியர் அ.ச. ஞானசம்பந்தன். இப்பெருமைக்கு ஏற்றவாறு பின்வரும் இவரது சாதனைப் பட்டியல் அமைகிறது.

1. உமையம்மை பால் ஞானப்பால் உண்டது.
2. தாழ்குலத்தில் பிறந்த திருநீலகண்ட யாழ்ப்பாணரைத் தம் துணைவராகத் தழுவி, சமுதாயச் சீர்திருத்தத்தை விளைவித்தது.
3. கொல்லிமழவன் மகளைப் பற்றி வருத்திய முயலகன் நோயைத் தீர்த்தது.
4. திருமருகலில் வணிகனுக்கு விடம் தீர்த்தது.
5. திருமறைக்காட்டில் மறைக்கதவம் அடைத்தது.
6. மதுரையில் சமணர்களை வாதத்தில் வென்று சைவத்தை நிலை நாட்டியது.
7. திருவோத்தூரில் ஆண் பனைகளைப் பெண் பனைகளாக மாற்றியது.
8. மயிலாப்பூரில் பூம்பாவை எலும்பைப் பெண்ணாக்கியது.

என்பன குறிப்பிடத்தக்கவை. எல்லாவற்றிற்கும் மேலாக இறைவனை இவர் இசைவடிவாகப் பரவிப் போற்றியமையாகும். ''நாள் வழிபாட்டில் இறைவனது பொருள் சேர்புகழை நினைந்து நெஞ்சம் நெக்குருகி இசைத்தமிழ்ப் பாடல்களால் பரவிப் போற்றும் நல்லியல்பினர். இன்னிசை பாடும் அன்பரை முழுமுதற் கடவுளாகிய சிவபெருமான் இயலிசைத் தமிழ்த் தொண்டில் மேலும் ஈடுபடுத்தித் தன் அருளியலை அறிவுறுத்தி நன்னெறிப் படுத்தியருளினான்'' என்பார் கூற்று இதனைத் தெளிவுபடுத்தும்.

23. பாண்டி நாட்டில் சம்பந்தர் புரட்சி

மு.கோமதி, சென்னை.

கி.பி. ஏழாம் நூற்றாண்டில் (கி.பி. 600-700) தமிழகத்தில் பாண்டி நாட்டின் நிலை என்ன? திருஞானசம்பந்தர் பாண்டி நாட்டிற்கு ஏன் வந்தார்? அவரை அழைத்தது யார்? பாண்டி நாட்டில் அவர் செய்த புரட்சி என்ன? அப்புரட்சியின் விளைவு யாது? என்பன பற்றிக் காண்போம்.

காலச் சூழ்நிலை

சங்க காலத்திற்குப் பிறகு உள்ள காலகட்டம் மிகவும் தொய்வு நிலையில் காணப்பட்டது. கி.பி. 6-ம் நூற்றாண்டு முதல் 9-ம் நூற்றாண்டு வரை தமிழ்நாட்டில் களப்பிரர் கை ஓங்கியிருந்த காலம். அதனை ''இருண்ட காலம்'' என்பர் வரலாற்றாசிரியர். சைவ சமயம் தாழ்ந்து சமண சமயமும் பௌத்த சமயமும் வலுப்பெற்றிருந்த காலம். தமிழும் சைவமும் தாழ்வுற்றிருந்த காலம்.

சிலப்பதிகாரமும், மணிமேகலையும் தமிழகத்தில் பல்வேறு சமயங்கள் நிலவியிருந்தமையைக் காட்டுகின்றன. வடக்கிலிருந்து தமிழகத்தில் புகுந்த களப்பிரர்கள் பாண்டிய மன்னர்களை வெற்றி கொண்டு பாண்டி நாட்டிற்குரியவற்றையெல்லாம் அழித்துத் தம்முடைய சமயத்தையும் பண்பாட்டையும் புகுத்தினர். அவர்களுடைய அரசாங்கச் சமயமாகிய சமணம் தமிழகத்தில் நன்கு வேரூன்றியது. ஏறக்குறைய மூன்று நூற்றாண்டுகள் வரை நீடித்த அவர்களுடைய ஆட்சி நாட்டில் முன்னமே பரவியிருந்த வைதீக நெறிகளையும் நம்பிக்கைகளையும் அறவே அழித்துவிட்டது. காதல் வாழ்க்கை என்றிருந்த மக்களுக்குச் சமண பௌத்தக் கோட்பாடுகள் முதலில் வரவேற்கத் தக்கனவாயிருந்தன. புதுமையால் கவரப்பட்ட சாதாரண மனிதனுக்குப் பௌத்த சமண சமயத்தில் துறவும், வற்புறுத்தலும், சுதந்திரமற்ற வழிபாடும் கட்டாயத் திணிப்பும் வெறுப்பை ஊட்டின. எனவேதான் அக்காலத்தே தோன்றிய சைவ சமயக் குரவர்கட்கு வரவேற்பு இருந்தது. (சைவ சமயத் தோற்றமும் வளர்ச்சியும் ப.ஷி - டி.பி. சித்தலிங்கம்)

சமகாலத்தவர்

சேக்கிழார் பெருமானது பெரியபுராணத்திலிருந்து திருஞானசம்பந்தர் திருநாவுக்கரசர் சிறுத்தொண்டர் ஆகிய நாயன்மார்கள் சமகாலத்தவர்கள்

என்பதை அறியலாம் (சி.தொ.பு பா. - 6) மேலும் காஞ்சியைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி புரிந்த பல்லவப் பேரரசன் மகேந்திர வர்மனும் (கி.பி. 600-630) மதுரையைத் தலைநகராகக் கொண்டு பாண்டி நாட்டை ஆட்சி புரிந்த பாண்டிய மன்னன் நின்றசீர் நெடுமாறனும் (கி.பி. 640-670) அவனுடைய ஆருயிர் மனைவி மங்கையர்க்கரசியும், அறிவுடைய அமைச்சர் குலச்சிறையாரும் இக்காலத்தே வாழ்ந்தவர்கள். திருநாவுக்கரசரால் மகேந்திரவர்மனும், திருஞானசம்பந்தரால் நின்றசீர் நெடுமாறனும் சமண சமயத்திலிருந்து விடுபட்டுச் சைவ சமயத்திற்கு மாறிச் சிவத்தொண்டு புரிந்தனர்.

திருஞானசம்பந்தர்

அகில உலக அன்னையிடம் ஞானப்பால் குடித்த ஞானக்குழந்தை, ஆளுடைப் பிள்ளை இமைப்பொழுதும் நம் நெஞ்சில் நீங்காமல் உறையும் சிவபெருமானிடம் பொற்றாளம் பெற்றவர், தன் தந்தை சிவபாத இருதயருக்கு ''பொற்கிழி'' பெற்றுத் தந்தவர். இறைவனால் அளிக்கப்பெற்ற ''பொற்சிவிகையில்'' பவனிவந்து முத்து முத்தான 4158 தேவாரப் பாடல்களை இயற்றி (பன்னிரு திருமுறைகளில் முதல் மூன்று திருமுறைகள்) 23 பண்களில் 27 தலங்களில் இன்னிசையுடன் பாடி, பல அற்புதங்கள் புரிந்து சைவம் தழைக்கச் செய்தவர். ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்த அற்புதச் சிவத்தொண்டர். சைவம் தாழ்ந்த அக்காலத்திலேயே திருஞானசம்பந்தரும் நாவுக்கரசரும் புரட்சி செய்து தமிழையும் தமிழ் இசையையும், சைவ சமயத்தையும் காப்பாற்றினார்கள் என்பது வரலாறு. ''கொஞ்சும் தமிழ்'' ஞானசம்பந்தர் வருகையில்லை என்றால் தமிழகத்தில் சைவம் வளர்ந்திருக்காது. அழிந்திருக்கும். ஞானசம்பந்தர் நாளும் இன்னிசையால் தமிழைப் பரப்பித் தொன்மைச் சமயமாம் சைவ சமயத்தை நிலை நிறுத்தினார். இதனையே சேக்கிழார் பெரியபுராணத்தில் வம்பறா வரிவண்டுச் சருக்கத்தில் திருஞானசம்பந்தர் ''வேத நெறி தழைக்கவும் மிகுசைவ நெறி ஓங்கவும்'' தோன்றிய தாகக் கூறுகிறார். அது எவ்வளவு உண்மை!

ஞானசம்பந்தருக்கு அழைப்பு

சமணக் குழியில் வீழ்ந்துவிட்ட பாண்டிய மன்னன் நெடுமாறனையும் மக்களையும் மீட்டுச் சைவ சமயத்திற்கு மாற்றும் பொருட்டுப் பாண்டிமாதேவி மங்கையர்க்கரசியார் தமது அமைச்சர் குலச்சிறையார் மூலம் திருமறைக்காட்டிலிருந்த திருஞானசம்பந்தருக்கு அழைப்பு விடுத்தார். சம்பந்தருடனிருந்த நாவரசர் சமணரால் தீங்கு ஏற்படும் எனவே அங்குச் செல்ல வேண்டாம் என்றார். ஆனால் ஞானசம்பந்தரோ ''நாளும் கோளும் நலிந்தோர்க்கில்லை'' ''சிவபெருமான் அருளால் தீங்கு நேராது'' எனக் கூறி ''வேயுறு தோளி பங்கன்'' என்ற பதிகத்தைப்

பாடிவிட்டுப் பாண்டிநாடு சென்று பின்வரும் பண்பாட்டுப் புரட்சிகளைச் செய்யத் தொடங்கினார்.

பெண்மைப் புரட்சி

ஞானசம்பந்தர் மதுரைக்குப் புறப்பட்டபோது மங்கல வாத்தியங்கள் முழங்கின. மதுரையில் மங்கையர்க்கரசியார்க்கும், குலச்சிறையார்க்கும் நன்னிமித்தங்கள் தோன்றின. அதே சமயத்தில் சமணர்களுக்குத் தீய நிமித்தங்கள் தோன்றின. பாண்டி நாட்டிற்கு வந்த ஞானசம்பந்தரைக் குலச்சிறையார் வரவேற்றார். ஆலவாய்க்குள் நுழைந்த ஆளுடையப்பிள்ளை ''மங்கையர்க்கரசி வளவர்கோன் பாவை'' எனத் தொடங்கும் பதிகம் பாடி இறைவனை வழிபட்டார். சம்பந்தர் கற்பிற் சிறந்த நங்கை; மங்கையர்க்கரசியாரைப் பாடிப் பெண்மைக்குச் சிறப்புச் செய்து புரட்சி செய்தார். பின்னர் அமைச்சர் ஏற்பாட்டின்படி ''ஞானதேசிகர் மடத்தில்'' தங்கினார்.

சமயப் பொறைப் புரட்சி

சம்பந்தர் வருகை சமணர்க்குக் கலக்கத்தை உண்டு பண்ணியது. அவர்கள் மன்னன் அனுமதியோடு சம்பந்தரை மதுரை மாநகரை விட்டுத் துரத்தும் பொருட்டு அவர் தங்கியிருந்த மடத்திற்குத் தீயிட்டனர். அடியார்கள் தீயை அணைத்தனர். செய்தியறிந்த சம்பந்தர் ''செய்யனே'' எனத் தொடங்கும் பதிகத்தில் இத்தீ மெல்லச் சென்று பாண்டியர்க்கு ஆகுக'' எனும் பொருள்படப் பாடினார். இதனைச் சேக்கிழார் பெருமான் வெய்ய தீங்கு இது...பையவே சென்று பாண்டியர்க்கு ஆக எனப் பணித்தார். (பெ.பு. 2607) எனக் குறிப்பிடுகிறார். செய்தார்க்குச் செய்த வினைப் பயன் சேரும்படிச் செய்தார்.

தாம் தங்கியிருந்த திருமடத்திற்குத் தீயார் தீயிட்டபோது ''கண்ணுக்குக் கண் பல்லுக்குப் பல்'' என்ற பழிக்குப் பழி நோக்கின்றி வெஞ்சொல் கூறாமல் ''பகைவர்க்கு அருள் செய்யும் நன்நெஞ்சம் படைத்த ஞானசம்பந்தர் சமணரிட்ட தீயின் தழல் சமணருக்கு மட்டுமின்றித் தீயிட அனுமதியளித்த பாண்டிய மன்னர்க்கும் தீங்கு பயவாது ஆக என்று தான் கூறினார். ''ஆக'' எனும் நற்சொல் கூறிச் சமயப் பொறையுடன் பாண்டி நாட்டில் சமுதாயப் புரட்சி செய்தார். தீமை செய்வது போல நன்மை செய்யும் புரட்சியைச் செய்தார்.

வெப்புநோய் நீக்கும் மருத்துவப் புரட்சி

சம்பந்தர் ''பையவே சென்று பாண்டியர்க்கு ஆக?'' எனப் பணித்தவுடன் பாண்டிய மன்னனை வெப்புநோய் தாக்கியது. அந்நோயை நீக்க இயலவில்லை. அரசியும் அமைச்சரும் ஞானசம்பந்தரை அழைத்தனர்.

''வேத வேள்வியை'' என்ற பதிகத்தைப் பாடி இறைவனை வணங்கிப் புறப்பட்ட சம்பந்தர் ''மந்திரமாவது நீறு'' எனும் திருநீற்றுப் பதிகம் பாடித் திருநீறு பூசி அரசனது வெப்பு நோயை நீக்கியருளி'' மருத்துவம் நீக்கா மனித்த நோயைத் திருநீறு கொண்டு நீக்கி மருத்துவப் புரட்சி செய்தார். திருநீறு தடவி நோய் நீக்கிய இப்புரட்சி தற்கால ''ரெய்கி'' மருத்துவ முறையோடு ஒப்புநோக்கற்பாலது.

அனல் வாதப் புரட்சி

சமணர் சம்பந்தரை வாதுக்கு அழைத்தனர். அவரவர் தம் சமய உண்மையை எழுதித் தீயில் இட்டால் எரியாமல் இருப்பதும், நீரில் இட்டால் எதிர்த்துச் செல்வதும் எதுவோ அதுவே உண்மைச் சமயம் என முடிவு செய்தனர். ''வாதத்தில் தோற்றால் மன்னனே எங்களைக் கழுவில் ஏற்றட்டும்'' என்றனர் சமணர்.

அனல் வாதம்

சம்பந்தர் ''போகமார்ந்த..'' எனத் தொடங்கும் திருநள்ளாற்றுப் பதிகத்தையுடைய ஏட்டைத் தீயிலிட்டார். அது எரியாமல் பச்சையாக இருந்தது. சமணர் வடமொழியில எழுதித் தீயில் இட்ட ஓலை பஞ்சைப் போல எரிந்தது. தாமிட்ட தமிழ் ஏட்டைத் தீயிலிருந்து எடுத்தார் சம்பந்தர். தாம் இட்ட ஏட்டை எடுக்க இயலாது வருந்தினர் சமணர்.

புனல் வாதமும் புரட்சியும் கூன் நிமிர்த்த புரட்சியும்

அடுத்து யாவரும் வைகையாற்றுக்குச் சென்றனர். மாநகர மக்களும் கூடினர். சமணர் அத்திநாத்தி (கடவுள் உண்டு இல்லை) என்று வடமொழியில் எழுதிய ஏட்டை ஆற்றில் இட்டனர். அவ்வேடு விரைந்து கடலை நோக்கி ஓடிற்று. ஆற்றின் போக்கில் ஓடியும் சமணர்களால் அதனை எடுக்க இயலவில்லை. சம்பந்தர் ''வாழ்க அந்தணர்'' என்ற பதிகம் பாடி தமிழில் எழுதப்பட்ட ஏட்டை ஆற்றிலிட்டார். அந்த ஏடு நீரை எதிர்த்துச் சென்றது. அதில் ''வேந்தனும் ஓங்குக'' என எழுதப்பட்டிருந்ததாலும் பாண்டியனுடைய கூனும் நிமிர்ந்தது. ஒரே கல்லில் இரண்டு மாங்காய் போன்று இவ்விரு புரட்சியும் அமைந்தன. இவ்விரண்டும் உமையொரு பாகன், சம்பந்தர் மூலம் செய்த அற்புதப் புரட்சிகளாம் கூன்பாண்டியன் ''நின்றசீர் நெடுமாறன்'' ஆனான். நீரை எதிர்த்துச் சென்று ஏடு நீரில் நிற்க வேண்டி ''வன்னியும்'' எனத் தொடங்கும் பதிகம் பாடினார். சிவாலயத்திற்கு அருகில் ஏடு நீர் நடுவில் நின்றது. குலச்சிறையார் அதனை எடுத்து வந்து சம்பந்தரை வணங்கினார். அனைவரும் வியந்தனர். வாதத்தில் தோற்ற சமணரை மன்னன் கழுவேற்றினான். சம்பந்தர் அளித்த திருநீற்றைப் பூசி சைவனாக மாறினான். இவ்வாறு சம்பந்தர் பாண்டி நாட்டில் அறு மீன்கள் போன்ற ஆறு சைவ சமயப் புரட்சிகளைச் செய்தார்.

தேவாரப்பாடல் பண் புரட்சி

சம்பந்தர் நிகழ்த்திய இவ்வுற்புதச் சமயப் புரட்சியைச் செவியுற்ற சிவபாத இருதயர் மதுரை வந்து ஞானசம்பந்தரை வணங்கினார். சம்பந்தரும் தந்தையை வணங்கிச் சீர்காழித் ''தோணியப்பரை'' நினைத்து ''மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம் வைகலும்'' என்ற பதிகத்தைப் பாடினார். பின் திருப்பரங்குன்றம் இராமேஸ்வரம் முதலிய தலங்களுக்குச் சென்று பதிகம் பாடிப் பின் சோழ நாடு சென்றார். இது பதிகத்தைப் பண்ணுடன் பாடும் புரட்சியாகும்.

பண்பாட்டுப் புரட்சி

ஏழாம் நூற்றாண்டில் சைவம் வலுக்குன்றி, சமணம் பௌத்தம் வலுப்பெற்றிருந்த காலை அன்பு நெறி ஏற்ற ஆதி சைவர்களிடையே பனிப்போர் நடைபெற்றது. அவ்வமயம் வருகை தந்த திருஞானசம்பந்தர் அன்பு நெறி, தொண்டு நெறியான சிவநெறிக்குச் சிறப்பும் முதன்மையும் கொடுத்து **"நமசிவாய"** எனும் ஐந்தெழுத்தோதி திருமஞ்சனம் செய்தல், மலர் வழிபாடு செய்தல், தமிழில் வழிபாடு செய்தல், திருநீற்றுச் சிறப்புச் செய்தல், சிவவேள்வி செய்தல் முதலியவற்றைப் பின்பற்றித் தமிழ் மண்ணில் தமிழ்ச் சைவப் பண்பாட்டைக் காத்ததுடன் பரசமயமான சமண பௌத்தரையும் வாதங்களில் வென்று ''பண்பாட்டுப் புரட்சி'' செய்தார். ''ஒன்றே குலம் ஒருவனே தேவன்'' எனும் திருமூலர் கருத்திற் கிணங்க ''இறைவன் முன் அனைவரும் சமம்'' எனக் கருதிச் சாதி வேறுபாடின்றி வாழ்ந்து காட்டினார் சம்பந்தர் பெருமான். அந்தணரைத் தம் கட்டுப்பாட்டிற்குள் வைத்தார் என்பதைச் சேக்கிழார் மொழிவதுடன் 1, 2, 3-ம் திருமுறைகளும் பகர்கின்றன. பறைச் சாற்றுகின்றன.

"பண்பெனப் படுவது பாடறிந்து ஒழுகல்" (நெய்தற்கலி - 16-7)

கலித்தொகைக் கூற்றுக் கேற்பவும், ''சமயத்தினின்று தோன்றிய பொருளே பண்பாடு பண்பாட்டினின்று தோன்றிய பொருளே சமயம், சமயத்தின் அமைப்பே, பண்பாட்டின் அமைப்பு'' என்ற எலியட்கூற்றிற் கிணங்கவும் எழுவகைப் புரட்சிகளைச் சம்பந்தர் பாண்டி நாட்டில் செய்தருளினார். ஆதவனின் ஏழு கதிர்களை ஒத்த புரட்சிகளைச் செய்தார். எழுகதிர் வெங்கதிர்ப் புரட்சியையும் தண் கதிர்த்த தமிழ்ப் புரட்சியையும் ஒருங்கே செய்தார்.

பண்புள்ள நல்லியல் ஞானசம்பந்தர் மனதில் நல்ல இனிய பாடல்கள் பிறக்கப் பதிகங்கள் பாடித் தமிழை வளர்த்துச் சைவம் தழைத்தோங்கச் செய்ததே திருஞானசம்பந்தர் பாண்டி நாட்டில் செய்த சமூக சமயப் பண்பாட்டுப் புரட்சி ஆகும்.

இவ்வாய்வுக் கட்டுரை திருஞானசம்பந்தர் செய்தருளிய பாரதப் பண்பாட்டின் ஒரு கூறான சமயப் பண்பாட்டையும், தமிழ்மொழியை வளப்படுத்திய பண்பாட்டையும் செவ்வினிது விளக்குகிறது. வணக்கம் தென்னாடு உடைய சிவனே போற்றி.

மறுபடியும் திருஞானசம்பந்தர் பிறந்து அற்புதச் செயல்களைச் செய்து சைவ சமயப் புரட்சியைச் செய்து உலகச் சமயப் புதுமை பொதுமை கண்டு மீண்டும் தமிழ் மொழியை வளப்படுத்திட எந்நாட்ட வருக்கும் இறைவனும், தென்னாடு உடைய சிவனும் இனிதே அருள் புரிவானாகுக. அதற்கு அவ்விறைவனை இறைஞ்சி இவ்வாய்வுக் கட்டுரையை முடிக்கிறேன்.

24. சம்பந்தரின் பக்தி நெறி

சோ. குருலட்சுமி, தூத்துக்குடி.

உயிர் இறைவனை அடைதற்குரிய நெறி பக்திநெறி. இப்பக்தியினை உலக மக்கள் பல்வேறு முறைகளில் பின்பற்றுகின்றனர். அடியார்கள் காட்டிச் சென்ற நெறியே செந்நெறியாகும். உயிர் தானாக அறியாது; அறிவித்தால் அறியும் இயல்புடையது. உயிர்தான் எதைச் சார்ந்ததோ, அதன் தன்மையாய் அமையும். உலகியலைச் சார்ந்துழி உலகியல் தன்மையையும், அருளியலைச் சார்ந்துழி அருளியல் தன்மையும் பெறுகின்றது. எனவேதான் மனித இனம் அருளாளர்களையும், அரனையும் சார்ந்தும் வழிபட்டும் வரவேண்டும் என அருளாளர்கள் அருளினர். ஞானசம்பந்தப் பெருமான் பரமனுக்கே முழுவதுமாய் ஆட்படும் பக்திநெறியைப் பாடினார்.

''சிவனடியே சிந்திக்கும் திருபெருகு சிவஞானம்
பவமதனை அறமாற்றும் பாங்கினில் ஓங்கிய ஞானம்
உவமையிலாக் கலைஞானம் உணர்வரிய மெய்ஞானம்
தவமுதல்வர் சம்பந்தர் தாம்உணர்ந்தார் அந்நிலையில்''

என்று சேக்கிழார் பெருமானால் போற்றப்படும், ஞானசம்பந்தர் பிறப்பிறப்பற்ற செம்பொருள் 'சிவபெருமான் ஒருவனே' என்பதை உணர்த்துகின்றார்.

துன்பம் வருகின்றபோது பக்தி செலுத்துவது மனித இயல்பு. பிறவிதான் பெருந்துன்பம் என்பதை உயிர்கள் உணர்வது இல்லை. எனவேதான், 'நீ நாளும் நன்னெஞ்சே நினைகண்டாய்' என்றார். இறைவன் புகழ் நாமத்தை இந்த செவி கேட்கவேண்டும். இந்த 'நா' அவனுடைய பெயரை நவின்றேத்த வேண்டும். ஒவ்வொரு நாளும் பக்தி செலுத்தினால் நல்வினை அடையாளம் என்பதைத் தெளிவுபடுத்தினார்.

ஞானசம்பந்தப் பெருமானின் பக்திநெறி மிகத் தெளிவான நெறியாகும். பரமனிடம் பக்தி கொண்டவர்க்கு நாளைப் பற்றியும், கோளைப் பற்றியும் கவலைப்படத் தேவையில்லை என உணர்த்தினார்.

''ஆனசொல் மாலை ஓதும் அடியார்கள் வானில்
அரசாள்வர் ஆனை நமதே''

என ஐயமின்றி உறுதிப்படுத்துகிறார். வீடுபேறும் அதற்கு ஏதுவாகிய ஞானமும் பெற விரும்புவோர், உடலைவாட்டிக் கடுமையான விரதங் களை மேற்கொள்ளத் தேவையில்லை அடியார்களை வணங்குதலும், பிறர் மீது அன்பு செலுத்தலுமே உண்மையான பக்தி என்று தெளிவு படுத்துகிறார்.

சைவ சித்தாந்தச் செந்நெறியில் ஒப்புயர்வற்ற மந்திரமாகக் கருதப் பெறுவது 'திருவைந்தெழுத்தே' ஆகும். இதுவே ஆதி மந்திரம் ஆகும். அரிய தமிழ் மந்திரமும் ஆகும்.

''ஆதி மந்திரம் அஞ்செழுத்து ஓதுவார் நோக்கும்
மாதிரத்தினும் மற்றை மந்திர விதி வருமே''

என்று சேக்கிழார் வாக்கால் இவ்வுண்மை உரைப் பெறும் திருத்தொண்டர் வரலாற்றில் காணும் அடியார் பெருமக்கள் பலரும் ஓதி உயர்ந்தது இவ்வரிய திருமந்திரமேயாம். இம்மந்திரம் இம்மைக்கும் மறுமைக்கும் ஒருங்கு துணையிடும் ''ஓதிய எழுத்தாம் அஞ்சும் உறுபிணி வரத்தாம் அஞ்சும்'' என்று பெரியபுராணம் குறிப்பிடுகின்றது. திருத்தொண்டின் உறைப்பாவே வென்றவர்கள் உரைத்த தாமம் நமசிவாய நாமம் தான்.

ஞானசம்பந்தர் அஞ்செழுத்தின் பெருமையை உணர்த்த 'துஞ்சலும் துஞ்சல்' என்ற பதிகம் அருளியுள்ளார். முதலில் ஓதிய இத்திருப்பதிகத்திலும் இறுதியில் ''ஓதிய காதலாகி என்னும் பதிகத்திலும் முதல் பாடல்களில் ஓதும் முறையை அறிவித்துள்ளார். 'நெஞ்சகம் நைந்து நினைமின்' நினைத்தால் வாழ்வில் வரும் கூற்றம் முதலிய இடர்களை அகற்றலாம் என்கிறது முதல் பதிகம். அதையே காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி ஓதுவார் தமை நன்னெறிக்கு உய்ப்பது'' என்கிறது நிறைவுப் பதிகம். தூல, சூக்குமப் பஞ்சாக்கரத்தை அவரவர் தகுதிக்கேற்ப எல்லோரும் ஓதி உய்யலாம் என்கிறது இவ்விரண்டு பதிகங்களும். 'இடரினும் தளரினும் எனதுறுநோய் தொடரிலும் உளகழல் தொழுவேன்' என்ற உறுதியான அழுத்தமான பக்திநெறியை உணர்த்துகிறார். தலைவரும் சிவபெருமான்தான் சேர்ந்தார் மண்புகார், வான்புகுவர் மனமிளையார், பசியறியார், பிணியறியார் என்கின்றார். இறைவனை நினைக்க வல்லோர் கட்கில்லை நமன்பால் நடலையே என்று ஆழ்ந்த அன்பு இறைவன்பால் கொண்டோர்க்கு எமபயம் இல்லை எனத் தெளிவுபடுத்துகிறார்.

அல்லல் தீர்ப்பவன் அவன் ஒருவனே அவன்தான் சிவபெருமான் என்பதை 'பண்ணிசை பாடும் மணஞ்சேரி அடைவானை அடையவல்லார்க் கில்லை அல்லலே' என அறிவுறுத்துகிறார்.

மக்கள் மகிழ்ச்சியாக இருக்க வேண்டுமானால், அவர்கள் வினை நீங்க வேண்டும் வினையை நீக்க வல்லவன் இறைவன் தான் என்பதை 'அண்ணலடி சேர்பவர்கள் தீவினைகள் தீரும் உடனே' என்று வலியுறுத்துகிறார். கிடைத்தற்கரிய இம்மானுடப் பிறவியை இறைவன் பால் அன்பு செலுத்துவதற்கே பயன்படுத்த வேண்டும். வெந்துயர் தோன்றியோர் வெறுவுறிலும் எந்தாயுள் அடியிலால் ஏத்தாதென்றா என்று இவ்வுயிர்கள் இறைவனிடம் நம்பிக்கை கொள்ள வேண்டிய உயர் நெறியை விளக்குகிறார். மிகு சைவ நெறி தழைத்தோங்கப் புனிதவாய் மலர்ந்தழுத ஞானசம்பந்தரின் பக்திநெறி உலகிலுள்ளோர் உய்யும் உயர் தனிச் செந்நெறி ஆகும்.

25. சம்பந்தர் தேவாரத்தில் நெய்தல்நிலக் காட்சிகள்

கா. சத்தியபாமா, தஞ்சாவூர்.

பக்திப் பனுவல்களாக விளங்கும் பன்னிரு திருமுறைகளில் முதல் மூன்று திருமுறைகளாக அமைந்து முதன்மை பெறுவன திருஞானசம்பந்தரின் தேவாரப் பாடல்கள். பல்வேறு தலங்களில் எழுந்தருளியுள்ள இறைவனை வணங்கி, மனம் நெகிழ்ந்து பாடி, பக்திநெறியைப் பரப்பிய அப்பெருமானின் பாடல்கள், இறைவனின் எழிற்கோலத்தைப் படிப்போரின் கண்முன்னே தோற்றுவன; இறைவனின் தோற்றமேயன்றி அத்தலங்களின் கவினுறு இயற்கையழகையும் படிப்போரின் முன்னே கொணர்ந்து இன்பம் துய்க்கச் செய்வன. அவர் தம் படைப்புகளில் நெய்தல்நிலக் காட்சிகள் எங்ஙனம் அமைந்துள்ளன என்பதைக் காணுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

இலக்கியமும், இயற்கையும்

இலக்கியங்களில் இயற்கைக் காட்சி அமைந்திருத்தல் இயல்பானது. சங்க இலக்கியங்களில், இயற்கைக் காட்சிகள் புலவர்களால் உள்ளது உள்ளவாறு படைக்கப்பட்டன. இடைக்காலத்தில் பக்தி இலக்கியங்களில் சமயப் பெரியார் இறைக் காட்சிகளோடு, தாங்கள் கண்ட தலங்களின் இயற்கை வளங்களையும் இணைத்துப் பாடல்களுக்கு மெருகேற்றினர்.

திருஞானசம்பந்தர், இருநூற்று இருபத்தாறு தலங்களுக்குச் சென்று இறைவனை வழிபட்டவராதலின், தான் கண்ட தலங்களின் இயற்கை எழிலைச் சிறப்புற அமைத்துள்ளார். அவர் இயற்றிய தேவாரப் பாடல் களில் தற்பொழுது கிடைத்துள்ள 4147 பாடல்களில் 700-க்கும் மேற்பட்ட பாடல்களில் இயற்கைக் காட்சிகளை அமைத்துப் பாடியுள்ளார். அத்தகைய இயற்கைக் காட்சிகளில், நெய்தல்நிலக் காட்சிகள் எழிலுற விளங்குவனவற்றுள் குறிப்பிடத்தக்க ஊர்கள், சீர்காழி, திருவெண்காடு, திருமறைக்காடு, திருமயேந்திரபள்ளி, கலிக்காமூர், காவிரிபூம்பட்டினம், திருவான்மியூர், திருக்கழிப்பாலை, மயிலை, திருப்பாதிரிப்புலியூர், திருஇராமேச்சுரம், திருநாகைக்காரோணம், திருக்கோணமலை முதலானவை.

சீர்காழி

காவிரியின் வடகரைத் தலமான இவ்வூரின் ஒரு புறத்தில் கடல் அமைந்துள்ளதால் கடல் வளம் உடையதாகவும் மற்றொரு புறத்தில் மருதநில வளம் உடையதாகவும் விளங்குகின்றது. திருஞானசம்பந்தர்

அறுபத்து ஆறு பதிகங்களில் இத்தலத்தைக் குறித்துப் பாடியுள்ளார். அப்பாடல்களில் பல கடல் காட்சிகளையும் வயல் காட்சிகளையும் அழகுறக் காட்டுவனவாகும்.

சீர்காழி, கிளைகள் நிறைந்த பொழில்கள் ஒரு பக்கம்; அடர்ந்து நெருங்கிய செந்நெல் கதிர்கள் விளைந்து நிற்கும் வயல்கள் ஒரு பக்கம்: அழகிய குளிர்ச்சி மிகுந்த கடல் ஒரு பக்கம் உடையதாக விளங்குவது.

"கோடு இலங்கும் பெரும்பொழில்கள் மல்கப்பெருகும் செந்நெலின்
காடு இலங்கும் வயல்பயிலும் அந்தண் கடற்காழியே"
(2:1228)

என்ற பாடலால் இந்நில அமைவினைக் காட்டுகின்றார் ஞானசம்பந்தர்.

ஊருக்குப் புறத்தே கடற்கரையில் வண்டல் மண்ணும் தோணியும், சங்குகளும், சுறாமீன்களும் அலைகளின் வழியாகக் கரையில் சேர்க்கும் கடற்கரையில் நீர்முள்ளியும் தாழையும் நெய்தல் பூக்களும் விளங்குகின்றன.

"........................... பதியதன் அயலே
வண்டலும் வங்கமும் சங்கமும் சுறவு
மறிகடல் திரைகொணர்ந்து ஏற்றிய கரைமேல்
கண்டலும் கைதையு நெய்தலும் குலவும்" (1:854)

எனக் கடற்கரையின் வளத்தைக் கூறும் ஆளுடைய பிள்ளையார், முத்துக்களும் சங்குகளும் அலைகளின் வாயிலாக வந்து சேரும் கடற்கரை (1-857) என்கிறார். அலைகளின் வாயிலாகச் சங்கும் முத்தும் விரவப்பெற்று வயலில் வந்து ஒளிரும் தன்மையை,

"சாதிமணி தெண்டிரை கொணர்ந்துவயல்
புகஏறிக்கொள் சண்பை நகரே" (3:812)

எனப் பாடி உயர்ந்த மணிகளை கொணர்ந்து வயல்களில் சேர்ப்பிக்கின்ற அலைகளை உடைய கடற்கரையைக் காட்டுகின்றார். அதைப்போன்று கடல்களின் ஆழத்தில் உள்ள சங்குகள் நெல்வயலுக்குச் சென்று தங்கும் தன்மையை, "கய மேவிய சங்கம்தரு கழிவிட்டுயர் செந்நெல் வியன்மேவி வந்துஉறங்கும் (1-94) எனப் பாங்குற அமைத்துள்ளார்.

கடற்கரையில் சோலைகள் நிறைந்துள்ளன. அச்சோலைகளில் நறுமணம் கமழும் மலர்கள் பெருகிக் காட்சி தருகின்றன. இதனைக் "கானலில் விரைமலர் விம்மு காழி" (3-230) என்று குறிப்பிடும் ஞானசம்பந்தப் பெருமான், சீர்காழி கடற்கரை வளம் மிக்கதாதலால் உப்பங்கழிகள் பொருந்திய சோலைகளையும் அவற்றில் அன்னப் பறவைகள் தன் பேடையுடன் கூடி மகிழும் காட்சியையும் (1-7) காட்டுகின்றார். தாழை மற்றும் நறுமணம் கமழும் மலர்கள் விளங்க,

மான் இனங்கள் பொலியும் சோலைகள் விளங்குகின்றன (2-1229) சோலைகளில் ஒரு பக்கம் மயில்கள் தோகை விரித்தாடுகின்றன; மேகங்கள் முழவொலி போன்று அதிர்கின்றன; தேனை அருந்திய வண்டுகள் சோலைகளில் பொருந்தி இருக்கின்றன.

இதனைப்,

பக்கம்பல மயில் ஆடிட மேகமுழவு அதிர
மிக்கம்மது வண்டார்பொழில் வேணுபுரம் அதுவே'' (1:90)

என்று மேகங்கள் முழவு போன்று அதிர்தல், மயில்களின் ஆட்டத் திற்குப் பக்க இசையாக விளங்குகின்றது எனத் தன் கற்பனையை ஏற்றிப் படைத்திருக்கும் பாங்கு இங்கு எண்ணத்தக்கது.

புன்னை மலர்கள் முத்துக்கள் போன்று அரும்பி நிற்கின்றன. அக்கடற்கரைச் சோலையில் கலைமான்கள் நிழலில் வரிந்துள்ளன. (1:859) இக்காட்சியிலும் புன்னை மலர்கள் முத்துக்கள் போன்று அரும்பியுள்ளன என உவமையோடு விளக்கி இருப்பது அழகிற்கு அழகு சேர்க்கிறது.

இறைவன் இசையின்மீது பெருவிருப்பம் கொண்டவன் என்பதால், பண்ணுடைய பாடல்களை விரும்புவான் என்பதை உணர்ந்து பண்ணொடு கூடிய இசைப்பாடல்களைப் பாடியவர்கள் சைவக்குரவர் திருஞானசம்பந்தர் இசைப்பாடல்களைப் பாடியதோடு, இயற்கையிலும் அவ்வின்பத்தைக் கண்டவர். வண்டுகளின் ரீங்காரத்திலும் கிளியின் பேச்சிலும் இறையோடு தொடர்புடையவற்றை எண்ணிக் கண்டார். ஆதலின் மதுவுண்டு வண்டு இசைபாடுவதாகவும், நாகணவாய்ப் பறவை நன்றாக வேதம் ஓதுவதாகவும் தம் கருத்தைக் கற்பனையோடு இயையக் கூறியுள்ளார்.

குளிர்ந்த சோலையில் மயில்கள் நடனம் ஆட, வண்டுகள் தேனை உண்டு இசைப்பாடி நிற்க, நாகணவாய்ப் பறவை சிறப்புற வேதங்களை ஓதும் தன்மை உடையது என்பதை,

''நடமிட மஞ்சைவண்டு மதுவுண்டு பாடு
தளிர்சோலை கோலுகனகக்
குடமிடு கூடமேறி வளர்பூவை நல்ல
மறையோது கொச்சை வயமே'' (2:900)

என்று எடுத்தோதுகிறார். ஒரு பாடலில், வண்டுகள் ரீங்காரம் செய்கின்றன. பூக்களில் இருந்து மகரந்தங்கள் உதிர்கின்றன. இக்காட்சியை,

''நேரிசை யாக அறுபத முரண்று
நிரைமலர்த் தாதுகண் மூரவிண் டுதிர்ந்து'' (1:811)

என வண்டு நேரிசை எண்ணும் பண்ணிசையை எழுப்புகின்றது. பூக்களில் உள்ள மகரந்தங்கள் உதிர்ந்து அதன் கண்களை மறைக்கின்றது என

இயற்கை நிகழ்ச்சிக்கு மேலும் மெருகூட்டுகிறார். மேலும் இயற்கையாக நிகழ்கின்ற நிகழ்வோடு தன் கற்பனையைச் சேர்த்துக் கூறுகின்ற செய்தி யொன்று நயத்துடன் அமைந்துள்ளது. மிகப் பெரிய பொருளாகிய வேதங்களை வித்தகர்கள் ஓதுகையில் கேட்டுப் பயின்ற கிள்ளைகள், அவற்றைப் பயிலும் இளைஞர்கள் கூறும் பொழுது நேரும் பிழை களைத் திருத்திப் பயிற்றுவிக்கின்றன என்பதைப்,

பெரிதுஇலங்கும் மறைகிளைஞர் ஓதபிழைக் கேட்டலாற்
கருதுகிள்ளைக் குலந்தெரிந்து தீர்க்கும் கடற்காழியே (2:1227)

எனப் பாங்குடன் எடுத்துரைக்கின்றார். கிளிகள், நாகணவாய்ப் பறவை போன்றவை கூறியதைக் கூறும் திறம் கொண்டவை. அவை வேதங்களை நன்குணர்ந்தவையாக பிழைகளைத் திருத்துவனவாக உள்ளன என்பது மக்களுக்கு அறிவுறுத்தும் பொருட்டுக் கூறியுள்ளார் எனலாம்.

சீகாழியான திருத்தோணிபுரத்தில் உள்ள இறைவனிடத்தில் தன் துன்ப நிலையை உணர்த்தி, அவனிடத்துத் தன் நினைவைத் தோற்றுவிக்க விரும்பும் நாயகி பாவத்தில் அமைந்த பாடலில்

"எறிசுறவம் கழிக்கானல் இளங்குருகே" (1:646)

எனத் துள்ளும் சுறாமீன்கள் விளங்கும் உப்பங்கழியின் கானலில் நிலவும் இளங்குருகை அழைக்கிறார். மற்றொரு பாடலில்,

"காண்தகைய செங்கால்ஒண் கழிநாராய்" (1:648)

என ஒப்பற்ற உப்பங்கழியில் காண்பதற்கு அழகிய செங்கால்களை உடைய நாராய் என்று அழைக்கின்றார். இப்பாடல்களில் பறவைகளைத் தூதாக அனுப்புவதான புது உத்தியைக் கையாளுமிடத்தில் கடற்கரைச் சோலையைக் குறித்த செய்திகள் அமைந்துள்ளன. இறையருள் காட்சியையும் இயற்கைக் காட்சியையும் இணைத்துக் கண்ட அப் பெரியாரின் பாடல்கள் இலக்கிய இன்பம் ஊட்டுவனவாக அமைந்துள்ளன.

திருவெண்காடு

காவிரி வடகரையில் அமைந்துள்ள பதினோராவது திருத்தலம் திருவெண்காடு. இத்தலத்தில் நீலமயில்கள் ஒரு பக்கம் நடனமாட, கடல் முழங்கி பக்கவாத்தியம் போன்று இசைக்க, பொழிலில் உள்ள வண்டுகள் இசைபாடுவதாக இயற்கைக் காட்சியுடன் தம் கற்பனையும் இணைத்துக்,

"கண்மொய்த்த கருமஞ்ஞை நடமாடக் கடல் முழங்க
விண்மொய்த்த பொழில்வரிவண் டிசைமுரலும் வெண்காடே"
(2:520)

எனப் பாடியுள்ளார். "கடற்கரைச் சோலை சூழ்ந்த வெண்காட்டை,

"வேலைமலி தண்கானல் வெண்காட்டான்" (2:517)

எனக் காட்டுகிறார்.

வெள்ளிய மலர்கள் பூத்துக் குலுங்கும் மடல் அவிழ்ந்த தாழையின் நிழலை, நீர்நிலையில் உள்ள கெண்டைமீன்கள், தம்மைப் பிடிக்க வந்த நாரைகள் என்று பிறழ உணர்ந்து அஞ்சி, தாமரைப் பூவின் இடை சென்று ஒளிந்து கொள்கின்றன. அதனைக் காணும், கடலில் இருந்து வெளிவந்த முத்துகள் நகைப்பது போன்ற காட்சியை உடையதாகத் திருவெண்காடு விளங்குகின்றது என்பதை,

"விடமுண்ட மிடற்றண்ணல் வெண்காட்டின் தன்புறவின்
மடல்விண்ட முடத்தாழை மலர்நிழலைக் குருகென்று
தடமண்டு துறைக்கெண்டை தாமரையின் பூமறையக்
கடல்விண்ட கதிர்முத்த நகைக்காட்டும் காட்சியதே" (2:516)

என மீன்களின் வீணான அச்சத்தைக் கண்டு முத்துக்கள் நகைப்பதாகப் படைத்துக் காட்டுகின்றார். இப்பாடலில், "விடமுண்ட மிடற்றண்ணல்" என்பதையன்றி பாடல் முழுமையிலும் இயற்கைப் புனைவு அமைந்துள்ளது. இத்தகைய இயற்கைப் புனைவுகள், திருநாவுக்கரசர், சுந்தரர் ஆகியோர் தம் இயற்கைப் புனைவுகளைக் காட்டிலும் மிகுதி என்பர் அறிஞர் பெருமக்கள்.

"வெள்ளைச் சுரிசங்கு உலவித் திரியும் வெண்காடே" (2:659)

என்றும் கடலில் இருந்து அலைகளின் வாயிலாக முத்துக்களும் சங்குகளும் கரையில் திகழும் தன்மையுள்ளது என்று காட்டுவர் காழிப் பெருமான். திருவெண்காட்டின் கடற்கரைச் சோலையில் புலிநகக் கொன்றை, செருத்தி, புன்னை, தாழை முதலான மரங்கள் உள்ளன. அவற்றுடன் வெண்குருகும் விளங்குகிறது (3:157).

திருவெண்காட்டில் உள்ள கிளிகள் வேதவொலிகளைக் கேட்டுப் பழகியவை. எனவே மரத்தின் மீது இருந்து கிளிகள் வேதவொலியை ஓதுகின்றன என்று பாடுகிறார். இதனைப்

"பண்மொழியால் அவனாமம் பலஓதப் பசுங்கிள்ளை
வெண்முகில்சேர் கரும்பெணைமேல் வீற்றிருக்கும்....." (2:518)

என்றும்,

வேதத் தொலியால் கிளிசொல் பயிலும்... (2:656)

என்றும் குறிப்பிடுகின்றார். தாம் படைக்கும் இலக்கியத்தின் தனித்தன்மையை மறவாமல் பாடுவது கவிஞர்களின் தனிச்சிறப்பாகும். பக்திநெறியைப் பரப்பும் திருஞானசம்பந்தர், கிளிகள் வேதங்களை ஓதக் கேட்டு ஓதுகின்றன. மனிதர்கள் இதனை உணர்ந்து, சிவபெருமானின்

நாமத்தையும் வேதங்களையும் ஓதவேண்டும் என்ற தம் கருத்தினைக் கிளிகளின் வாயிலாக வெளிப்படுத்தியுள்ளார் எனலாம்.

இயற்கையில் இனிமையில் மூழ்கித் திளைத்த திருஞானசம்பந்தருக்கு கேட்கும் ஒலிகள் அனைத்தும் இன்பத்தைத் தருகின்றன. வண்டுகள் தாமரை மலரில் தேன் அருந்தி ரீங்காரம் செய்கின்றன. அந்த ஒலி அவருக்கு யாழில் இருந்து வரும் இசை போன்று இருக்கிறது. ''வெண்டா மரைமேல் கருவண்டு யாழ்செய் வெண்காடே'' (2:655) என்று குறிப்பிடும் ஞானசம்பந்தப் பெருமானுக்கு அவ்வொலி பாட்டொலியாகத் தெரிகிறது. ''விரியார் பொழிலின் வண்டு பாடும் வெண்காடே'' (2:663) என்று பாடுகிறார். இறைவனை இசையாகக் கண்டு, இசையால் பரவி, இயற்கையாக எழும் ஒலிகளிலும் இசையினைக் கண்டுள்ளார் ஞானசம்பந்தர் என்பது இதனால் புலனாகும்.

திருமறைக்காடு

காவிரியின் தென்கரைத் தலமாக விளங்கும் இத்தலம் வேதாரண்யம் என வழங்கப்படுகிறது. இத்திருத்தலம் குறித்து நான்கு பதிகங்களைத் திருஞானசம்பந்தர் இயற்றியுள்ளார். அவற்றின் வழி, திருமறைக் காட்டின் இயற்கை எழில் விளக்கமுறுகின்றது.

''வெண்மணலும் கடற்கரைச் சோலைகளும் பொருகின்ற கடலும் கரையில் அலைகளில் தவழ்ந்து வரும் முத்துக்களும் காட்சியளிக்கின்றன. ''பொங்கு வெண்மணற் கானல் பொருகடல் திரைதவழ் முத்தம்'' (2:984) என்று இதனைப் பாடுவார் திருஞானசம்பந்தர். சங்கு முத்துக்கள் போன்றவை கரையேறும் தன்மையுடையது (2:394) அழகிய வயல் களில் சங்குகளின் முத்துக்களும் பரவியது (1:237) ஒலிதரும் அலை களும் மாணிக்கத்தை ஒத்த ஒளிசேர் வெயிலும் உடையது (1:236) சோலைகளும் உப்பங்கழிகளும் கடல் ஓரத்தில் திகழும் மணிகளும் தேன் மணக்கும் சோலைகளும் உடையது (2:985) குராமரம், குருக்கத்தி, புன்னை, புலிறுகக் கொன்றை முதலியன ஓங்கிய பொழில் சூழ்ந்தது (2:395)

கடற்கரையில் நாரையையும் தாழை மடலையும் காணும் சம்பந்தப் பெருமான் ''ஏழை வெண்குருகு அயலே, இளம்பெடை தனதெனக் கருதி தாழை வெண்மடற்புல்கும் (2:987) என அறிவற்ற வெண்நாரையானது தாழை மடலைத் தன்பெடை எனக் கருதி, நாடுகின்ற தன்மையுடையது திருமறைக்காடு என்கிறார். இயற்கையைத் தம் கற்பனையால் நகைச்சுவைக் காட்சியாகக் கூறும் பாங்கு சுட்டத்தக்கது.

திருமயேந்திரபள்ளி

காவிரியின் வடகரைத் தலங்கள் 63-இல் ஆறாவதாக விளங்கும் மயேந்திரபள்ளியின் இயற்கைக் காட்சி ஞானசம்பந்தரின் பதிகத்தில் இயல்புறக் காட்டப்பட்டுள்ளது.

கடல் அலைகள் பவளங்களைக் கரையில் கொண்டு சேர்க்கின்றன; சிறப்பான அகில் மரங்களும் கனமான சங்குகளும் விளங்குகின்றன (3:329) முத்துக்கள் வகை வகையாய்க் குவிக்கப் பெற்று, மலர் போன்று ஒளிர்ந்து விளங்கி, கடல் அலைகளால் பெருகித் திகழ்கின்றது (3:340) நீர்முள்ளியும் தாழையும் தாமரை மலர் பொலியும் பொய்கையும், வண்டுகள் உலவுகின்ற பொழிலும் அழகுபெற காட்சியளிக்கின்றன (3:330) கோங்கு, வேங்கை, புன்னை, கொன்றை, குரவ மலர்கள் மரங்களில் அரும்பி நிற்கின்றன.

> **"கோங்கிள வேங்கையும் கொழுமலர்ப் புன்னையும்**
> **தாங்குதேன் கொன்றையும் தகுமலர் குரவமும்**
> **ஆங்கரும் புன்வயன் மயேந்திர பள்ளி"** (3:331)

என இக்காட்சியை விளக்குகின்றார் ஞானசம்பந்தர். 'வெண் கடம்பமரங்கள் உள்ள பூம்பொழில் சூழ்ந்துள்ளது (3:336). மேலும் நீர்வளமும் நிலவளமும் கொண்டு விளங்குகின்றது. (3:338) என மயேந்திரபள்ளியின் இயற்கைக் காட்சி படிப்போரின் கண்முன் விரிகின்றது.

கலிக்காமூர்

காவிரி வடகரைத் தலங்களில் எட்டாவது திருத்தலமாக விளங்கும் இன்று அன்னப்பன்பேட்டை என்று அழைக்கப்படும் கடற்கரையில் அமைந்துள்ள ஊரின் இயற்கை எழில் ஒரு பதிகத்தில் விளக்கப்படுகிறது.

கரிய மலை போன்று உயர்ந்து எழும் அலைகளின் வழியாகச் சேரும் சங்குகளின் வளப்பம் உடையது.

> **"மைவரை போல்திரை யோடுகூடிப்**
> **புடையே மலிந்து ஓதம்**
> **கைவரை யால்வளர் சங்கம் எங்கும்**
> **மிகுக்கும் கலிக்காமூர்"** (3:1124)

என்று இதனைப் பாடுகிறார். அகன்ற பூ இதழ்களும், தேன் மணம் கமழும் சோலைகளும் பெருகி, வயல் சூழ்ந்து அழகிய கடலின் ஓதம் கலந்து முத்துக்களைச் சொரியும் வளப்பம் உடையது (3:1123) குன்று களைப் போன்ற உயர்ந்த அலைகளை வீசும் கடலில் இருந்து மணி களைக் கொண்டு சேர்க்கும் வளப்பம் உடையது. (3:1126) கடலின் ஓதம் பெருகும் சோலைகளில் தாழை மணம் சூழ்கிறது (3:1127, 1128) ஒலிக்கும் கடல்சூழ விளங்கும் ஊரான (3:1130) கலிக்காமூர் சம்பந்தர் பாடல்களின் வாயிலாக நம் கண்முன்னே விரிகிறது.

திருக்கோணமலை

ஈழநாட்டுத் திருத்தலங்களுள் தென்கயிலாயம் எனப் பெயர் பெற்றுள்ள திருக்கோணமலை, கடல்சூழ்ந்து விளங்குவது (3:1235,

1330) கடலும் மல்லிகைச் சோலையும் கடற்சோலையும் திகழ்வது (3:1329) மதிப்புமிக்க மணிகள் வரம்பின்றி சிதறிக் கிடக்க, ஒலிக்கின்ற அலைகளின் வழி முத்துக்கள் கொழிக்கும் சந்தனமும், காரகில் பிளவும் கிடக்கும் கடற்கரையை உடையது. இதனைக்,

> "கரைகெழு சந்தும் காரகிற் பிளவும்
> அளப்பரும் கனமணி வரன்றிக்
> குறைகடல் ஓத நித்திலம் கொழிக்கும்" (3:1321)

எனப் பாடுகின்றார் ஆளுடைப் பிள்ளை. மேலும் அக்கடற்கரை அச்சம் தரத்தக்கது. முத்துக்களைச் சுமந்து மக்களுக்கு வழங்கும் கடல் அலைகள் பெருகும் தன்மை கொண்டது (3:1322) மேலும் ஆரவாரம் அலைகளின் வழியாக முத்தும் மணியும் பொன்னும் சிப்பியும் சேர்க்கும் கடற்கரை விளங்குகிறது. கடலும் மலையும் இணைந்த தலமாதலின், கடலின் அருகில் மலை அமைந்துள்ளது. அங்குள்ள பொழில்களில் மல்லிகை, மாதவி, புன்னை, வேங்கை, செண்பகம், முல்லை முதலானவை விளங்குகின்றன (3:1326) என இத்திருத்தலத்தின் இயற்கைக் காட்சியைக் கண்முன்னே கொண்டு நிறுத்துகின்றார் காழிவள்ளல்.

இத்தலங்களேயன்றி காவிரிப்பூம்பட்டினம், திருவான்மியூர், திருக்கழிப்பாலை, மயிலை, திருப்பாதிரிப்புலியூர், திருஇராமேசுவரம், திருநாகைக்காரோணம் முதலான ஊர்களில் நெய்தல்நிலக் காட்சிகள் குறைந்த அளவிலேயே சம்பந்தரால் சுட்டப்பட்டுள்ளன.

இவ்வாறாகத் திருத்தலங்களின் நெய்தல்நிலக் காட்சிகள் சம்பந்தரின் தேவாரப் பாடல்களில் கவினுற அமைக்கப்பட்டுள்ளன. இவற்றில் இயல்பாக அமைந்துள்ள இயற்கைக் காட்சிகளும் தம் கற்பனையை ஏற்றிக் கூறும் இயற்கைக் காட்சிகளும் படிப்போரின் கண்முன்னே காட்சியை நல்கி, உவகையளிப்பன. சம்பந்தர் பெருமான் தம் கருத்தினை ஏற்றிக் கூறும் இயற்கைக் காட்சிகள் படிப்போருக்கு இறைவுணர்வை ஊட்டுவன என்பது உள்ளங்கை நெல்லிக்கனி.

26. சம்பந்தர் தேவாரத்தில் பண்கள்

சிவ. சத்தியவதி, தஞ்சாவூர்.

சைவ சமயக் குரவர் நால்வருள் சிறப்பு மிக்கவர் திருஞானசம்பந்தர். பிள்ளைப் பிராயத்திலேயே இறைவன் திருவருள் பெற்றவர். மெய்ஞ்ஞானமும், கலைஞானமும் நிரம்பித் திகழ்ந்தவர். நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பி, ஞாலம் உய்ய நெறி காட்டியவர்.

காவிரி வளம் கொழிக்கும் சோழநாட்டின் சிறப்புமிக்க தலமான சீர்காழியில், அந்தணர் குலத்தில் கவுணியர் மரபில் சிவபாதவிருதயர் என்னும் சீலமிக்கவருக்கும், நற்குணங்கள் அனைத்தும் ஒருங்கே நிரம்பிய பகவதி அம்மையாருக்கும் திருவாதிரைத் திருநாளில் சிவப்பெருக்கும் பிள்ளையார் திரு அவதாரம் செய்தார்.

செல்வச் செழிப்புடன் வளர்ந்து வந்த பிள்ளையார் பிடிவாத குணம் கொண்டவராக விளங்கினார். ஒரு நாள் தம் தந்தையோடு குளத்திற்குக் குளிக்கச் சென்றார். தந்தை குளித்து முடித்துவிட்டு வரும் வரை குளக்கரையில் நின்றிருந்தார். தந்தை வர நேரமானதால் பிள்ளையார் அழ ஆரம்பித்தார். சம்பந்தர் அழுவதை உணர்ந்த சிவன் தமது அருளால் பார்வதியிடம் சம்பந்தருக்கு ஞானப்பாலைக் கொடுக்கச் செய்கிறார். சிறிது நேரம் கழித்து வந்த சிவபாதவிருதயர் இதனை அறியாமல் யார் தந்த எச்சில் பாலை உண்டாய்? என்று கேட்டு அடிக்கக் கை ஓங்க, சம்பந்தர் சிவன் பார்வதியைக் காட்டுகிறார். சம்பந்தரும் அவர் தந்தையும் சிவன் பார்வதி காட்சியைக் காண்கின்றனர்.

மூன்று வயதான சம்பந்தர் ஞானப்பாலை உண்டவுடன் இயல்பாகவே சிவனைப் பற்றி ''தோடுடைய செவியன்'' என்ற பாடலைப் பாடினார். இதுவே அவர் பாடிய முதல் பாடலாகும்.

இவ்வாறு தமது மூன்று வயதிலேயே பதிகம் பாட ஆரம்பித்த சம்பந்தர் 136 பதிகங்களும் 4158 பாடல்களும் பாடி தேவாரத்திற்கு முன்னோடியாகத் திகழ்கிறார். இத்தேவாரப் பாடல்கள் பண் அமைத்து ஓதுவார் மூர்த்திகளால் பாடப்பட்டு வருகின்றன. அப்பண்களைப் பற்றி இக்கட்டுரை விளக்க உள்ளது.

சம்பந்தர் பாடிய பாமாலைகள்

சீர்காழியில் இருந்தவாறே திருஞானசம்பந்தர் இறைவனைத் தொழுது வழிபட்டு வந்தார். அவரது கனிந்த நெஞ்சம் இறைவனை

நினைந்து உருகியது. நெகிழ்ந்த நெஞ்சத்தில் பல்வேறு வகையான இன்னிசைப் பாடல்கள் சுரப்புக் கொண்டன. சம்பந்தர் சிவன் மீதுள்ள தூய நினைவில் மொழிமாற்று, மாலைமாற்று, மடக்கு, இயமகம், ஏகபாதம், குறள், எழுகூற்றிருக்கை, ஈரடி மேல்வைப்பு, நாலடி மேல் வைப்பு, திருவிராகம், சக்கரமாற்று முதலிய பாமாலைகள் பாடி இறைவனுக்கு அர்ப்பணித்தார். அது மட்டுமின்றி தமிழகத்தில் சிவனார் கோயில் கொண்டுள்ள பிற திருத்தலங்களுக்குச் சென்று பதிகங்களைப் பாடியுள்ளார்.

பண்களும் இராகங்களும்

பழந்தமிழர் பயின்றது நூற்றுமூன்று பண்களாகும். இவற்றில் 23 பண்கள் தேவாரப் பதிகங்களில் அமைகின்றன. அவற்றைப் பகல் பண்கள், இரவுப் பண்கள், பொதுப்பண்கள் என்று பிரிக்கப்படுகின்றது. இவைகள் கால ஓட்டத்தில் பெயர் மாற்றியழைக்கப் பெற்றன. இதனால் தேவாரப் பண்களுக்கு இணையான கருநாடக இராகங்களைக் கொண்டு பாடப் படுகிறது.

சம்பந்தர் பாடிய தேவாரப் பண்ணிசை

இனி சம்பந்தர் பாடிய தேவாரங்களில் பண்ணமைப்பினைப் பற்றிக் காணலாம்.

செவ்வழிப் பண்

மூவர் பாடிய தேவாரங்களில் சம்பந்தர் பாடிய தேவாரங்களில் மட்டும் செவ்வழிப்பண் இடம்பெறுகிறது. இரண்டாம் திருமுறையின் 113 முதல் 122 வரை உள்ள தேவாரப் பதிகங்கள் செவ்வழிப் பண்ணுக்குரியது.

செவ்வழிப் பண்ணுக்குரிய கருநாடக இராகமாக எதுகுலகாம்போதி இராகம் ஓதுவார் மூர்த்திகளால் பாடப்படுகிறது. இது 72 மேளகர்த்தா இராகங்களில் 28-ஆவது மேளமான அரிகாம்போதியில் பிறந்தது. இது ஒரு பாஷாங்க இராகம். இது நுட்ப சுருதிகளைக் கொண்டு கருணாரசம் கூடிய பக்தி உணர்வை வெளிப்படுத்தச் சிறந்த இராகமாக விளங்குகிறது.

ஞானசம்பந்தப் பிள்ளையாரின் "தொண்டரஞ்சு களிறும் அடக்கி" என்ற பாடல் இப்பண் அமைப்பில் பாடப்படுகிறது. இது திருக்கேதாரம் என்ற தலத்தில் பாடப்பட்டது.

தக்கராகப் பண்

சம்பந்தர் பாடிய முதலாம் திருமுறையில் 23 முதல் 46 வரையான பதிகங்கள் இப்பண்ணில் அமைகின்றன.

திருவாவடுதுறை ஆதீன ஏட்டுப்பிரதியில் தக்கராகப் பண்ணுக்கு நேரான இராகம் ''கன்னட காம்போதி'' என்று தரப்பட்டுள்ளது. ஆனால் இந்த இராகம் தற்பொழுது வழக்கில் இல்லாத காரணத்தால் ஓதுவார்கள் இப்பண்ணைக் காம்போதி இராகத்தில் பாடி வருகிறார்கள்.

காம்போதி இராகம் 28-ஆவது மேளகர்த்தாவான அரிகாம்போதியில் பிறந்தது. பக்திச் சுவைக்கு சிறந்த இராகம். மங்களகரமான உணர்வைத் தரவல்லது. கோயில்களில் மட்டுமின்றிப் பொது அரங்குகளிலும் விரும்பிப் பாடப்படுவது தக்கராகப் பண் தேவாரங்கள். தக்கராகப் பண்ணில் அமைந்த ஞானசம்பந்தர் பெருமான் பாடல்கள், ''மடையில் வாளை'', ''துணிவளர் திங்கள்'', ''பூ ஆர் கொன்றை'' போன்றவை. இதில் ''துணிவளர் திங்கள்'' என்ற பாடல் ''திருப்பாச்சிலாச்சிரமம்'' என்ற தலப்பதிகமாகும்.

புறநீர்மைப் பண்

மூன்றாம் திருமுறையில் 118 முதல் 123 வரையான சம்பந்தர் பாடல்கள் இப்பண்ணில் அமைந்தவை. புறநீர்மைப் பண் அதிகாலையில் பாடுவதற்கு ஏற்றது.

இப்பண்ணில் அமைந்த பாடல்கள், ஓதுவார் மூர்த்திகளால் பூபாள ராகத்தில் பாடப்படுகிறது. புறநீர்மைப் ''பண் பௌளி'' இராகத்தின் சாயல் உடைய அந்தர காந்தாரத்துடன் கூடிய ''பூபாளம்'' என்று சென்னைத் தமிழிசைச் சங்கப் பண்ணாராய்ச்சி மாநாட்டில் முடிவு செய்யப்பட்டது.

15-ஆவது மேளமான மாயமாளவ கௌளையில் பிறந்தது. காலையில் பாடுவதற்கு உகந்தது. மங்களகரமான சுவை தரும். இந்துஸ்தானி இசையில் ''பீபாஸ'' என்றழைக்கப்படுகிறது.

சம்பந்தர் பாடிய ''மங்கையர்க்கரசி வளவர்கோன் பாவை'' இப் பண்ணில் அமைந்துள்ளது. இது திரு ஆலவாய் திருப்பதிகப் பாடலாகும்.

பஞ்சமப் பண்

மூன்றாம் திருமுறையில் 56 முதல் 66 வரையான சம்பந்தர் பதிகங்கள் இப்பணிலானவை. இது கருநாடக இசையில் ஆகிரி இராகத்திற்கு இணையாகப் பாடப்படுகிறது. சுரக்கோர்வையில் பல நுட்ப சுருதிகள் தோன்றுவதால் இதன் இராக அமைதியை நன்கு உணர்ந்து பாடவேண்டும் பக்திச்சுவை கொண்டது.

சம்பந்தர் பாடிய ''ஆதியன் ஆதிரையன்'', ''பைங்கோட்டு மலர்ப் புன்னை'' மற்றும் திருவொற்றியூர் திருத்தலத்திற்குரிய ''ஒன்பிறை மல்கு'' என்ற பாடல் இப்பண்ணில் அமைகிறது.

நட்டபாடைப் பண்

சம்பந்தரின் முதல் திருமுறையில் 1 முதல் 22 வரையிலான பதிகங்கள் இப்பண்ணில் அமைந்தவை. 36-ஆவது மேளமான சலநாட்டையில் பிறந்த கம்பீரநாட்டை இப்பண்ணிற்கு இணையான இராகம். வீரச்சுவை உணர்த்த வல்லது.

சம்பந்தப் பெருமான் பாடிய ''தோடுடைய செவியன்'' என்னும் முதல் தேவாரப் பதிகம் நட்டபாடைப் பண்ணில் அமைந்தது. இது திருவீழிமிழலைத் தலப்பதிகப் பாடல். திருமறைக்காடு திருத்தலப் பதிகப் பாடலாகிய ''சிலைதனை நடுவிடை'' இந்த பண்ணில் பாடப்படுகிறது.

அந்தாளிக் குறிஞ்சிப் பண்

நாயன்மார் மூவர் பாடிய தேவாரங்களில் சம்பந்தர் பதிகங்களில் மட்டும் இப்பண் காணப்படுகிறது. மூன்றாம் திருமுறையில் 124, 125 இப்பண்ணிற்குரியது. இரவு நேரத்தில் பாடக்கூடியது.

அந்தாளிக் குறிஞ்சிப் பண்ணை ஓதுவார்கள் ''சாமா'' இராகத்தில் பாடுகின்றார்கள். இது 28-ஆவது மேளமான அரிகாம்போதியில் பிறந்தது. சாந்தரசம் உடையது.

சம்பந்தர் பாடிய ''கல்லூர்ப் பெருமணம்'' இது திருநல்லூர்ப் பெருமணம் தலப் பதிகமாகும். ''சுண்ண வெண்ணீறு'' இதுவும் பண்ணில் பாடப்படுகிறது.

காந்தாரப் பண்

சம்பந்தர் பதிகங்களில் இரண்டாம் திருமுறையில் 54 முதல் 82 வரையான பதிகங்கள் காந்தாரப் பண்ணிலமைந்தது. இப்பண்ணிற்குரிய இராக முறைப் பற்றிப் பல்வேறு கருத்துக்களுள. ஆனால் ஓதுவார் மூர்த்திகள் 'நவரோசு' ராகத்தை இணையாக கொண்டு பாடி வருகின்றனர். இது 29-ஆவது இராகமாகிய தீர சங்கராபரணத்தில் பிறந்த பஞ்சமாந்திய ராகம், எந்த நேரத்திலும் பாடலாம். பக்திச் சுவை கொடுக்கக் கூடியது. சம்பந்தர் பாடிய ''பறையணி வேலாலர் போலும்'' என்ற பதிகம் இப்பண்ணில் பாடப்படுகிறது.

பழம்பஞ்சுரப் பண்

சம்பந்தப் பெருமான் பாடிய மூன்றாம் திருமுறையில் 100 முதல் 116 வரையான பதிகங்கள் இப்பண்ணிற்குரியது.

இதற்கான இராகம் சங்கராபரணம் ஆகும். இது 72 மேள இராகங்களில் 29-வது மேளமான தீரசங்கராபரணமாகும். இந்த இராகத்தில் காதல், கோபம், வீரம், சோகம், அழுகை போன்ற பல

சுவைகளை வெளிப்படுத்தும். இது எல்லா நேரத்திலும் பாடுதற்கு ஏற்றதாயினும் மாலையில் பாடச் சிறந்தது.

சம்பந்தப் பெருமான் அருளிய ''வேத வேள்வியை'' என்ற பாடல் இப்பண்ணிற்குரியதாகும்.

மேகராகக் குறிஞ்சிப் பண்

தேவார மூவரில் சம்பந்தப் பெருமான் ஒருவரே மேகராகக் குறிஞ்சிப் பண்ணில் தேவாரம் பாடியுள்ளார். முதலாம் திருமுறையில் 129 முதல் 135 வரையுள்ள பதிகங்கள் மேகராகக் குறிஞ்சிப் பண்ணில் அமைந்தவை.

மேகராகப் பண் நீலாம்பரி இராகத்தில் பாடப்படுகிறது. இது 29-வது தீரசங்கராபரணத்தில் பிறந்தது. கருணை, பக்தி, அன்பு ஆகிய சுவைகளைத் தரவல்லது. மிக மென்மையான இசையைக் கொண்டு விளங்குவதால் இரவு நேரத்தில் தாழ்ந்த நடையில் இசைப்பது பொருத்தமாகும்.

''புலன் ஐந்தும் பொறிகலங்கி'', ''நீறு சேர்வதோர் மேனியனே'', ''செந்தளிர் மாமலரோனும்'' ஆகிய பாடல்கள் சம்பந்த சுவாமிகள் மேகராகக் குறிஞ்சிப் பண்ணில் பாடிய தேவாரப் பாடல்களாகும். சம்பந்தப் பெருமான் அருளிய திருவீழிமிழலைப் பதிகப் பாடலாகும்.

கொல்லிக் கௌவாணப் பண்

சம்பந்தர் பாடிய மூன்றாம் திருமுறையில் 42-ஆம் பதிகம் இப்பண்ணிற்குரியவை. இதற்குரிய இராகம் ''சிந்து கன்னட'' என திருவாவடுதுறை ஆதீன ஒட்டுப் பிரதி சொல்லப்பட்டாலும் ஓதுவார் மூர்த்திகளால் ''நவரோசு'' இராகத்தில் பாடப்பெறுகின்றன.

பழந்தக்கராகப் பண்

முதலாம் திருமுறையில் 47 முதல் 62 வரையான சம்பந்தர் பதிகங்கள் பழந்தக்கராகப் பண்ணில் அமைந்தவை. இப்பண்ணிற்குரிய இராகங்களாகச் சுத்தசாவேரி, அரபி, தேவகாந்தாரி ஆகிய இராகங் களில் பாடி வருகின்றனர்.

திருவாவடுதுறை ஆதீன ஒட்டுப்பிரதியில் பழந்தக்கராகம் ஓர் இரவுப்பண் என்றும் அதற்குரிய இராகம் சுத்தசாவேரி என்றும் தரப் பட்டிருந்தது. இந்துஸ்தானி இசையில் துர்கா என்று அழைப்பர்.

சம்பந்தரின் ''சிறையாரும் மடக்கிளியே'' என்ற பழந்தக்கராகப் பண்ணில் அமைந்த பதிகமாகும். ''வஞ்ச மனத்து அஞ்சு'' என்ற பதிகம் திருகோளிலி தலத்திற்குரியது.

குறிஞ்சிப் பண்

சம்பந்தப் பெருமானின் முதல் திருமுறையில் 75 முதல் 103 வரையிலான பதிகங்கள் குறிஞ்சிப் பண்ணில் அமைந்தவை. இதற்குப் பல கருத்து வேறுபாடுகள் இருந்தாலும் ஓதுவார் மூர்த்திகள் குறிஞ்சிப் பண் பாடல்களை அரிகாம்போதி இராகத்தில்தான் பாடுகின்றார்கள்.

28-ஆவது மேளராகமாக விளங்குவது அரிகாம்போதி இசை உருப்படிகள் அதிகமாக இந்த இராகத்தில் பாடப்படுகிறது. பக்திச் சுவைக்குகந்த இராகம் இந்துஸ்தானி இசையில் ''கமாஜ்தாட்'' என்று அழைக்கப்படுகிறது.

சம்பந்தப் பெருமான் அருளிய ''வாசிதீரவே'' பிரபலமான குறிஞ்சிப் பண் தேவாரப் பாடலாகும். மற்றொரு பாடலான ''நீறு பூசினீர்'' இது திருவீழிமிழலை பதிகப் பாடலாகும்.

நட்டராகப் பண்

சம்பந்தப் பெருமானின் இரண்டாம் திருமுறையில் 97 முதல் 113 வரையிலான பதிகங்கள் இப்பண்ணில் அமைந்தவை. யாழ் நூலார் இப்பண்ணை இந்தோளத்திற்கு ஒப்பாக கூறியுள்ளார். ஆனால் ஓதுவார் மூர்த்திகள் பந்துவராளி இராகத்தில் பாடி வருகின்றனர்.

72 மேளகர்த்தாக்களில் காமவர்த்தினி எனப் பெயர் பெறும் 51-வது மேளம் பந்துவராளியாகும். இந்துஸ்தானி இசைப்பாடல் ''பூரியதன்னஸ்ரீ'' என்று அழைக்கப்படுகின்றது. நல்ல ரஞ்சனையைக் கொடுக்கக் கூடிய இராகம். சம்பந்தர் அருளிய ''விருது குன்றமாமேரு'', ''பாடல் வீணையர்'', ''படைகொள் கூற்றம்'' போன்ற பதிகங்கள் இப்பண்ணில் அமைந்தது. இதில் ''விடுது குன்ற மாமேரு'' என்பது திருக்கேதீச்சரப் பதிகப் பாடலாகும்.

வியாழக் குறிஞ்சிப் பண்

இப்பண்ணிசையால் சம்பந்தப் பெருமான் பாடிய தேவாரப் பாடல்கள் மட்டுமே உள்ளன. முதலாம் திருமுறையில் 104 முதல் 128 வரையிலான பதிகங்கள் இப்பண்ணில் அமைந்தவை. இப்பண்ணிற்குரிய இராகம் சௌராட்டிரம் ஆகும். 17-ஆவது மேளராகமாகிய சூரிய காந்தத்தில் பிறந்தது வக்ரராகம்.

ஞானசம்பந்தப் பெருமானின் திருக்கழுமலப் பதிகப் பாடல் இப்பண்ணிசையில் அமைந்தவை. ''பந்தத்தால் வந்தெப்பால்'' பிச்சைக்கே இச்சித்து, ''மின் இயல் செஞ்சடை மேல்'', ''அவ்வினைக் கிவ்வினை'', ''பூ இயல் புரிகுழல்'' ஆகியவை பிரபலமான வியாழக் குறிஞ்சிப் பண்

பாடல்களாகும். ''பூ இயல் புரிகுழல்'' இது திருவலிவலம் திருத்தலப் பதிகமாகும்.

தக்கேசிப் பண்

தேவாரத் திருமுறைகளில் சம்பந்தப் பெருமான் பாடிய முதல் திருமுறையில் 63 முதல் 74 வரையிலான பதிகங்கள் இப்பண்ணில் பாடப்படுகிறது. இப்பண் காம்போதி இராகத்திற்கு இணையாகப் பாடப் படுகின்றது. விரிவான ஆலாபனைக்கு இடம் தரக்கூடியது. பக்திச் சுவைக்கு உகந்தது.

கொல்லிப் பண்

சம்பந்தப் பெருமானின் மூன்றாம் திருமுறையில் 24 முதல் 41 வரையிலான பதிகங்கள் கொல்லிப் பண்களில் அமைந்தவை. ஓதுவார் மூர்த்திகளால் இது நவரோசு இராகத்தில் பாடப்படுகிறது.

இந்தளப் பண்

தேவாரத் திருமுறைகளில் சம்பந்தப் பெருமானின் இரண்டாந் திருமுறையில் 1 முதல் 39 வரையிலான பதிகங்கள் இந்தளப் பண்ணிற் குரியவை. இது தற்பொழுது மாயமாளவ கௌள இராகத்தின் சேய் இராகமாகிய லலித பஞ்சமம் என்று கூறப்படுகிறது. இசையமைதியில் மிக நுட்பமான இராகம். இந்துஸ்தானி இசையில் 'பைரவதாட்' என்று பெயர்.

திருப்புகலியூர் தலப்பதிகமான ''மை தவழும் மாமிடறன்'' என்ற பாடல் இப்பண்ணில் பாடப்படுகிறது.

காந்தார பஞ்சமப் பண்

சம்பந்தர் பாடிய மூன்றாம் திருமுறையின் 1 முதல் 23 வரையிலான பதிகங்கள் காந்தாரப் பஞ்சமப் பண்ணில் அமைந்தவை.

தற்காலத்தில் இப்பண் கேதார கௌளை இராகத்தில் பாடப்படு கின்றன. 72 மேளகர்த்தா இராகங்களில் 28-ஆவது மேளம் அரிகாம்போதியில் பிறந்தது. பக்திச்சுவை கொண்டது. சம்பந்தர் ''இடரினும் தளரினும்'' எனத் தொடங்கும் பதிகத்தை உலவாக்கிழி பெற்றபோது பாடினார்.

கௌசிகப் பண்

சம்பந்தப் பெருமான் பாடிய மூன்றாந் திருமுறையில் 43 முதல் 55 வரையிலான பதிகங்கள் இப்பண்ணில் அமைந்தவை. 20-ஆவது மேளமான நடபைரவியில் பிறந்த பைரவி இராகத்தில் தற்பொழுது பாடப்படுகிறது. விரிவான ஆலாபனைக்கு இடம் கொடுக்கும் இராகம்

எல்லா நேரங்களிலும் பாடலாம். பக்திச் சுவைக்குரியது. ஞானசம்பந்தப் பெருமான் அருளிய திருவான்மியூர்ப் பதிகப் பாடலான ''இடி ஏர் ஏறு'' இப்பண்ணிற்குரிய பாடலாகும்.

பியந்தைக் காந்தாரப் பண்

மூவர் பாடிய தேவாரங்களிலும் இப்பண் அமைகிறது. சம்பந்தப் பெருமானின் இரண்டாந் திருமுறையில் 83 முதல் 96 வரையிலான பதிகம் பியந்தைக் காந்தாரப் பண் பாடல்களாகும்.

ஓதுவார் மூர்த்திகளால் இப்பண்ணினாலான தேவாரம் நவரோசு இராகத்தில் பாடப்படுகின்றன.

சீகாமரப் பண்

சம்பந்தப் பெருமான் பாடிய இரண்டாம் திருமுறையில் 40 முதல் 53 வரையான பதிகங்கள் சீகாமரப் பண்ணில் அமைந்தவை.

சீகாமரப் பண்ணாகிய நாத நாமக்கிரியை 15-வது மேளமாகிய மாய மாளவகௌளை இராகத்தில் பிறந்தது. இரவு நேரத்தில் பாடக்கூடியது. பக்திச் சுவைக்குரியது. சம்பந்தப் பெருமானின் ''பண்ணின் நேர்மொழி'' சீகாழிப் பதிகமான ''மையின் ஆர்பொழில்'' இந்தப் பண்ணில் பாடப்படுகிறது.

சாதாரிப் பண்

சம்பந்தப் பெருமானின் மூன்றாம் திருமுறையில் 67 முதல் 117 வரையான பதிகங்கள் இப்பண்ணில் அமைந்தவை. கருநாடக இசை இராகமான பந்துவராளியில் ஓதுவார் மூர்த்திகளால் பாடப்பெற்று வருகின்றன. ''ஓ ஏதம் இலர் அரிய'' என்ற திருமயிலாடுதுறைப் பதிகம் சாதாரிப் பண்ணில் பாடப்பெறும்.

இவ்வாறு ஞானசம்பந்தர் பாடல் மற்றுமின்றி அப்பர், சுந்தரர் பாடல்களும் இசையமைதியுடன் பாடப்படுகிறது. இசை நிகழ்ச்சியில் மட்டுமன்றி நாட்டிய நிகழ்ச்சிகளிலும் அரங்கேற்றப்பட்டு வருகின்றது.

இந்திய இசை வரலாற்றில் இராக தாள அமைப்புடன் கூடிய இசை வடிவங்களில் மிகப் பழமையானதும், ஆதாரமானதும் தேவாரப் பாடல்களாகும். இவற்றில் பண்ணிசைகள் கால ஓட்டத்தில் இராகங் களாகப் பெயர் கொண்டு கருநாடக இசையில் வளமூட்டி வருகின்றன. இத்தகைய சிறப்பு வாய்ந்த தேவாரப் பாடல்களை மரபு வழி மாறாமல் காப்பது நம் கடமையாகும்.

27. சம்பந்தர் வளர்த்த சைவம்

கா. சந்திரசேகரன், நாமக்கல்.

சைவ சித்தாந்தம் தமிழ்நாட்டிற்குரிய சமயம்; திராவிட மக்கள் மிகவும் போற்றுகின்ற சமயம்; பலரால் கடைப்பிடிக்கப்படுகின்ற சமயம் என்று பல அறிஞரால் போற்றப்படும் பெருமைபெற்றது சைவ சமயம். சமணர்களையும் பௌத்தர்களையும் வாதத்தில் வென்று சைவ சமயச்சாரியார்கள் சைவத்தைத் தமிழ்நாட்டில் வளரச் செய்தார்கள். சைவம் கி.பி. ஆறாம் நூற்றாண்டு முதல் தழைத்தோங்கியது. சமயக் குரவர்களாகிய அப்பர், சம்பந்தர், சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகியோர் தேவார, திருவாசகப் பாடல்களால் மக்களைப் பெரிதும் கவர்ந்தனர்.

சைவ சித்தாந்தம் மூன்று பெரிய உண்மைகளை உலகுக்கு எடுத்துக் காட்டியது. அவை பதி, பசு, பாசம் என்பன. பதி என்றால் கடவுள். பசு என்றால் ஆன்மா. பாசம் என்றால் ஆணவம். கன்மம் மாயை என்ற மும்மலங்கள். இம்மலங்கள் ஆன்மாவைச் சுற்றி இருப்பதால் ஆன்மா அறியாமையில் மூழ்கிக் கிடக்கிறது. மும்மலங்கள் நீங்கப் பெற்றவுடன் அறியாமை நீங்கி, இறைவன் திருவடியைச் சேர்கிறது என்று சித்தாந்திகள் கருதுகின்றனர். சைவ சித்தாந்தத் தத்துவங்கள் அடங்கிய பாடல்களைச் சம்பந்தர் தேவாரத்தில் காணக் கிடக்கின்றன.

சிவபெருமானின் எண்வகை குணங்கள்

இறைவனைச் சிவன் என்று சித்தாந்திகள் கூறுகின்றனர். அவன் முழுமுதற் கடவுள். அவனுக்கு நிகர் யாருமில்லை. அவன் குணமற்றவன். சத்துவ இராசத தாமச குணங்களால் பாதிக்கப்படாதவன். அவனுக்கு எட்டுவித குணங்கள் உண்டு என்று சித்தாந்திகள் கூறுகின்றனர். தாமே இயங்குகிறவன், புனிதமானவன், சிறந்த வல்லமையுடையவன், எல்லாம் அறிந்தவன், எங்கும் நிறைந்தவன், எல்லையில்லா அருளுடையவன், எல்லையில்லா இன்பமுடையவன், மறைத்தல் தொழில் என்றெல்லாம் கூறுவர்.

சித்தாந்தப் பொருளின் விளக்கம்

பசு என்றால் ஆன்மா. பசுவின் தன்மை சார்ந்த தன் வண்ணமாதல் என்று சித்தாந்திகள் கூறுகின்றனர். ஆன்மா எந்த உடலைச் சார்ந்திருக்

கிறதோ அதன் தன்மையை அடைகிறது. ஆன்மாக்கள் பல உள்ளன. அவைகளுக்கு ஞானம் இச்சை கிரியை என்று செயல்கள் உண்டு. ஆணவம் கன்மம் மாயை என்ற மலங்களினால் பாதிக்கப்பட்டு அறிவும் பலமும் குன்றிய நிலையில் காணப்படுகின்றன.

ஆண்வம் அழிய அழிய ஆன்மா இறைத்தன்மையடைகிறது. பிறகு இறைவன் அருளினால் முக்தி நிலை அடைகிறது. பாசம் என்பது ஆணவம் கன்மம் மாயை என மூவகைப்படும். ஆணவம் மலம் ஆன்மாவின் இருளுக்குக் காரணமாக அமைகிறது. ஆணவம் ஆன்மாவோட பிறக்கும் பொழுதே அமைந்திருக்கிறது என்று சைவ சித்தாந்திகள் கூறுகின்றனர். கன்மம் ஆன்மாவை உலகத்தோடு பிணைக்கிறது என்றும் அதனை, ஆன்மா அனுபவித்துத்தான் தீர்க்க வேண்டும். மாயையிலிருந்து தான் இறைவன் உலகினைப் படைக்கிறான்.

மாயையின் வகைகளும் விளக்கமும்

மாயையானது சுத்தமாயை அசுத்தமாயை பிரகிருதி மாயை என்று மூன்று வகைப்படும். தொடக்கத்திலுள்ளது சுத்தமாயை எனப்படும். இரண்டாம் மாயை மலத்தோடும் கருமத்தோடும் சேர்ந்து காணப்படும். அது இன்பத்தினையும் துன்பத்தினையும் குறையுடைய அறிவினையும் கொடுக்கும். அதிலிருந்து வருகின்ற உலகம் அசுத்த உலகம் எனப்படும். மூன்றாம் மாயை பிரகிருதி மாயை எனப்படும்.

ஆன்மா முக்தியடைவதற்குரிய சாதனங்கள்

ஆன்மா முக்தியடைவதற்குரிய சாதனங்களாக நால்வகை நெறிகள் கூறப்படுகின்றன. அவையாவன சரியை, கிரியை, யோகம், ஞானம் என்பனவாகும்.

சரியை

அடியாருக்கும் இறைவனுக்கும் தொண்டு செய்து இறைவனை வழிபடுதல் சரியை மார்க்கம் ஆகும். இச்சரியை மார்க்கத்தை அப்பர் மேற்கொண்டு இறைவனுக்குத் தொண்டு புரிந்தார். ''என் கடன் பணி செய்திருத்தலே'' என்பது அப்பர் வாக்கு.

கிரியை

மகன்தந்தைக் காற்றும் உதவி இவன்தந்தை
என்னோற்றான் கொல்லெனுஞ் சொல் (குறள் - 70)

எனும் குறளுக்கு ஏற்ப இறைவனைத் தந்தையாகவும் தன்னை மகனாகவும் கொண்டு இறைவனை நெருக்கத்துடன் வணங்குதல் இம்முறையில் அடங்கும். சம்பந்தர் இறைவனை ''நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பி'' மகன்மை நெறியில் வழிபட்டார்.

யோகம்

இறைவனைத் தோழமை முறையில் வழிபடுதல் யோக மார்க்கத்தின் மூலம் சுந்தரர் இறைவனை வழிபட்டார். சுந்தரர் இறைவனைத் ''தோழமை நெறியில்'' வழிபட்டார்.

ஞானம்

ஆன்மா இறைவனோடு தொடர்பு கொண்டு பூர்ண ஞானம் பெறுதல். இறைவனைத் தலைவனாகவும், ஆன்மாவைத் தலைவியாகவும் கொண்டு இறை வழிபாடு செய்தல். இம்மார்க்கத்தை மாணிக்கவாசகர் மேற்கொண்டார்.

கடவுளின் உருவங்கள்

சரியை என்பது உருவன் அற்றவனாகிய இறைவன் தன்னை உயிர்கள் கண்டு வழிபடுவதற்கு பொருட்டு உருவம், அருவுருவம் அருவம் என்னும் மூவகைத் திருமேனிகளைக் கொள்கிறான். அவற்றுள் 'உருவத் திருமேனி' எனப்படுவன முகம், கை, கால் முதலிய உறுப்புக்கள் யாவும் தோன்ற ஆடை, அணிகள், படைக்கலம் முதலியவற்றோரும் இனிது விளங்கும் திருமேனிகள் அவை. கூத்தபிரான் (நடராசர்), மனைமகப்பிரான் (சோமாஸ்கந்தர்), பிறைசூடும் பிரான் (சந்திரசேகரர்), பிச்சைப்பிரான் (பிட்சாடனர்) முதலிய பெயர்களால் குறிக்கப்படும் திருவுருவங்கள் இன்னும் சில நெறியை அறிவிக்கும் உரிமையுடைய ஆசிரியர்களும் சிவனடியார்களும் சிவபிரானது உருவத் திருமேனிகளே. வாழ்த்துதலும் வணங்குதலும் வேண்டும் பணிகளைச் செய்தலும் ஆகிய புறவழிபாடுகளும் சரியை எனப்படும்.

ஆகவே திருக்கோயிலுக்குச் சென்று திருஅலகிடுதல், திருமெழுக்கிடுதல், திருவிளக்கிடுதல், திருநந்தன வனம் வைத்தல், பூப்பறித்துக் கொடுத்தல், மாலை தொடுத்துக் கொடுத்தல், திருப்பாடல்களைப் பண்ணோடு பாடிப் போற்றுதல், திருமுறைகளை நாள்தோறும் கட்டளையாக ஓதுதல், சிவநெறி ஆசிரியர்களுக்கு வேண்டுவன செய்தல், சிவனடியார்களை அன்போடு வணங்கி உணவு முதலிய அளித்து வழிபடுதல் இவை போல்வன எல்லாம் சரியை என்பதில் அடக்கம்.

திருஞானசம்பந்தர் தம் திருமுறைகளில் சரியை பற்றிக் கூறும் பொருட்டு,

> **''அவ்வினைக் கிவ்வினை யாமென்று சொல்லு மஃதறிவீர்**
> **உய்வினை நாடா திருப்பது முந்தமக் கூநமன்றே**
> **கைவினை செய்தெம் பிரான்கழல் போற்றுதும் நாமடியோம்**
> **செய்வினை வந்தெமைத் தீண்டப் பெறாதிரு நீலகண்டம்''**
>
> (பா.1249)

தம்மை பற்றிய தீயவினைகள் எல்லாம் வந்தவாறே போகும் திருநீலகண்டப் பதிகம் ஓத என்கிறார் சம்பந்தர்.

கிரியை

இறைவன் கொள்ளும் மூவகைத் திருமேனிகளில் இலிங்கத் திருமேனி அருவுருவத் திருமேனியாகும். அது முகம், கை, கால் முதலிய உறுப்புக்கள் இன்மையால் அருவமும் பிழம்பு உண்மையான உருவமும் ஆகிய இருநிலையும் உடையதாய் அருவுருவத் திருமேனி எனப்படு கிறது. இவ்விளங்கத் திருமேனியை சிவநெறி ஆசிரியர்கள் எழுந்தருளி வித்துக் கொடுக்கப் பெற்று அதில் சிவபெருமானை நினைத்து வழிபடும் முறையை அவர்கள்பால் உணர்ந்து வழிபாட்டிற்கு வேண்டிய திருமஞ்சனப் பொருள்கள், பூக்கள், பச்சிலைகள், நறும்புகைப் பொருள்கள், திருவிளக்கு படையல்கள் முதலியவற்றைத் திரட்டிக் கொண்டு நீராடி நாட்கடன் முடித்துத் தக்கதோர் இடத்தில் அமைதியாய் அமர்தல்.

ஐவகைச் சுத்திகள்

பூதசுத்தி, தானசுத்தி, திரவியசுத்தி, மந்திரசுத்தி, இலிங்கசுத்தி என்னும் ஐந்து சுத்திகளைச் செய்து சிவபிரானை அருவுருவத் திருமேனியில் ஆவாகணம் தாபனம் முதலியவற்றால் அகத்திலும் புறத்திலும் வழிபடுதல் கிரியை எனப்படும். அகவழிபாடும் புறவழிபாடும் ஒருங்கு அமைவதும் கிரியை என்பதுள் அடங்கும். வேள்வித்தீயில் இறைவனை வழிபடுவதும் கிரியையே ஆகும். இதனைச் சம்பந்த திரு ஆருர்ப் பதிகத்தில்,

''சித்தந் தெளிவீர்கான் அந்த னாரூரைப்
பித்தி மலர்தூவமுத்தி யாகுமே'' (பா.எ.981)

ஆரூர் அப்பனை சிந்தையில் நினைத்து மலர் தூவி வழிபடின் முக்தி பெறுதல் நிச்சயம் என்கிறார் சம்பந்தர்.

''பிறவி யறுப்பீர்காள் அறவ னாரூரை
மறவா சேத்துமின், துறவி யாகுமே'' (பா.எ.982)

பிறவிப் பெரும் பயனை அடைவதற்கு மறவாது ஆரூர் அண்ணலை வழிபடல் நன்மை தரும் என்கிறார்.

''துன்பந் துடைப்பீர்காள் அன்ப ணியாரூர்
நன்பொன் மலர்தூவ இன்ப மாகுமே'' (பா.எ.983)

பொன் போன்ற நல்ல புதிய மலர்களைத் தூவி அரூர் அண்ணலை வழிபட்டால் துன்பங்கள் அனைத்தும் மறைந்து இன்பம் நல்கும் என்று திருஆரூர்த் திருப்பதிகம் தோறும் கிரியை நெறி வெளிப்படும் வண்ணம் அமைத்துப் பாடியுள்ளார்.

கிரியை மார்க்கம் இறைவனை வணங்குதல் ஆன்மா தன்னை இறைவனின் மகனாகவும், இறைவனைத் தந்தையாகவும் கருதி ஒரு மகன் தந்தைக்கு என்ன காரியங்களெல்லாம் செய்வானோ அவற்றை எல்லாம் இறைவனுக்குச் செய்தல் இந்த மார்க்கத்தில் அடங்கும். ஆன்மா இறைவனை மிகவும் நெருங்குகிறது. இறைவனைப் புகை, மஞ்சனம் முதலியவற்றுடன் அருட்சித்து சோறு படைத்து நாடோறும் வணங்குதல் போன்ற தொண்டுகள் செய்தல். சம்பந்தர் இந்த மார்க்கத்தைக் கடைப் பிடித்தார். ''நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பும் ஞானசம்பந்தன்'' எனும் சிறப்புப் பெற்றவர். இசைபாடி இறைவனைத் தந்தை மகன் நெறியில் வழிபட்டவர்.

யோகம்

யோக மார்க்கம் என்பது சகமார்க்கம் எனப்படும். இறைவனை ஒரு நண்பனாகக் கருதி வழிபடல். மனிதனை உலகப் பொருள் களிலிருந்து விடுவித்தல் இறைவனை எப்பொழுதும் நினைத்துத் தியானம் செய்தல் இந்த மார்க்கத்தினால் இறைவனுடைய குணங்கள் யாவும் ஆன்மாவிற்கமையும் சுந்தரர் இந்த மார்க்கத்தின் இறைவனைத் தோழன்மை முறையில் வழிபட்டார்.

யோகம் என்பதன் விளக்கம்

யோகம் என்னும் சொல்லிற்குப் பொருள் கூடுதல் அல்லது ஒன்றுதல் என்பதாகும். ஆன்மா இறைவனோடு ஒன்றுதல் அறிவால் அல்லது உடலால் அன்று. ஆயினும் மனம் முதலிய அந்தக் கரணங்கள் கண், கை, கால் முதலிய புறக் கரணங்கள் போல ஆன்மாவிற்குப் பெரிதும் விலகிச் செல்லாது அதனோடு ஒன்றித்து நிற்றலின் அவற்றால் இறைவனைக் கூடுதலும் 'யோகம்' என்று உபசரித்துக் கூறப்படும்.

யோகம் பற்றிய எண்வகைப் படிநிலைகள்

1. இயமம் - நற்குணங்கள் அடைதல்
2. நியமம் - நற்செயல்களைச் செய்தல்
3. ஆசனம் - பலவித கலைகள்
4. பிராணாயாமம் - மூச்சை அடக்குதல்
5. பிரத்தியாகாரம் - புலன்களையும் மனத்தினையும் அலையாமல் பாதுகாத்தல்
6. தாரணை - மனத்தை இறைவன்பாற் செலுத்துதல்
7. தியானம் - இறைவனோடு தொடர்பு கொள்ளுதல்
8. சமாதி - இறை அனுபவம் பெறுதல்

முதுகுன்றத்தில் முனிவர்கள் யோக நிலையை அடைவதற்குத் தனித்திருந்து தவம் புரிவதனைச் சம்பந்தர்,

''ஞானிகளா யுள்ளவர்கள் நான்மறையை
முழுதுணர்ந்தைம் புலன்கள் செற்று
மோனிகளாய் முனிச்செல்வர் தனித்திருந்து
தனம்புரியும் முதுகுன்றமே'' (பா.எ.1414)

என்று பாடியுள்ளார். இவ்வாறு புறக்காட்சிக்குப் புலனாகாது அகக் காட்சியில் தோன்றும். ஒளி வடிவமும் இறைவனுக்கு உண்டு. அதுவே அருவத் திருமேனி எனப்படும். அவ்வுருவத் திருமேனியைக் காணும் முறையில் சென்று கண்டு அதில் அழுத்தி ஒன்றுபடுதலே 'யோகம்' ஆகும்.

ஞானம்

சரியை, கிரியை, யோகங்களில் பழகப் பழகப் புறக்காட்சியாகிய உலகப் பயிற்சியில் பற்று நீங்கி அகக் காட்சியாகிய இறைவன் திருமேனி வழிபாட்டில் பற்று வளரும். அது வளர உடம்பையே தான் என மயங்கியிருக்கும் நிலை நீங்கித் தன்னை உடம்பின் வேறாக உணரும் உணர்ச்சியும், தான் உணர்ச்சிக்கு எல்லாம் அடிநிலையாக உயிர்க்கு உயிராய் உள்ள இறைவனது திருவருள் உணர்ச்சியும் வளரும். அது வளர்ந்து நிறையும் பொழுது இறைவன் குருவாய்த் தோன்றி, நீ, ஐம்பொறி முதலிய தத்துவக் கூட்டங்கள் அல்லை. அவற்றின் தன்மை வேறு, உன் தன்மை வேறு என்று உணர்த்தியருளுவான். அவ்வுண்மை யுரையைக் கேட்ட பொழுது அதனை அங்ஙனம் ஐயம் திரிபின்றி உணரும் உணர்வு உண்டாகும். அவ்வாறு உணர்தலே 'ஞானம்' எனப்படும்.

நான்கு வகை ஞானம்

1. கேள்வி ஞானம் - ஆசான் மூர்த்தி அருளிச் செய்வதைக் கேட்டல்
2. சிந்தனை ஞானம் - அதனை நூல்களாலும் பொருந்து மாற்றாலும் ஆராய்ந்து உணர்வது
3. தெளிவு ஞானம் - ஆராய்ந்த பின் அதனைத் தெளிந்து கொள்வது
4. நிட்டை ஞானம் - தெளிந்த பின்னர் ஐம்பொறிகளில் செல்லாது உயிர்க்குயிராகிய இறைவனிடத்திலே அழுந்தி நிற்றல்

உருவம் அருவுருவம் அருவம் என்னும் மூன்றையும் கடந்து அறிவே வடிவாய் விளங்கும் இறைவனை உண்மை இயல்பை அறிந்து அன்பு செய்யும் அறிவு வழிபாடே 'ஞானம்'.

ஞானம் நிலை பற்றிய சம்பந்தர் பாடல்

திருச்சிவபுரம் பதிகத்தில் சம்பந்த ஞானம் பற்றிக் கூறுகையில்,

"சுருதிகள் பலநல முதல்கலை துகளறு வகைபயில் பொடுமிகு
உருவிய லுலகலை புகழ்தர வழியொரு குமெயுறு பொறியொழி
அருதவ முயல்பவர் தனதடி யடைவகை நினையர னுறையபதி
திருவளர் சிவபுர நினைபவர் திகழ்குல னிலனிடை நிகழுமே"
(பா.எ.222)

சிவபுரத்தினை நினைத்து வழிபடுவர்களுக்கு ஞானநிலைக் கிட்டும் என்பதனைக் கூறியுள்ளார்.

திருஞானசம்பந்தரின் தேவாரத் திருப்பாடல்களில், சைவ சித்தாந்தம் குறிப்பிடும் நால்வகை நெறிகளும், பல பாடல்களில் விரிவாக விளக்கப் பெற்றுள்ளன. எளியதும் நேரியதுமான வழிபாட்டு நெறிக்கு ஞானசம்பந்தர் சிறப்பிடம் கொடுத்துள்ளார். புறச்சமயம் மிக்கோங்கித் திகழ்ந்த நாளில் அதன் வலியடக்கி மக்களைச் சிவ வழிபாட்டிற்கு இட்டுச்சென்ற அவரது பதிகப் பாடல்களில் நால்வகை நெறிகளும் விரிவாக வலியுறுத்தப் பெற்றுள்ளன.

28. தமிழகத்தில் சைவமும் மதுரையில் சம்பந்தரும்

ச. சந்திரசேகரன், மதுரை.

ஒரு காலக்கட்டத்தில், தமிழையும் தமிழ்ப் பண்பாட்டையும் வளர்த்தெடுக்கவோ அல்லது தங்களையும் தங்களது சமயம் சார்ந்த கருத்துக்களையும் எடுத்துக்கூறி மக்களிடையே நிலைத்த தன்மையை வளர்ப்பதற்காகவோ சமயங்கள் தங்களுக்குள் போட்டியை உருவாக்கிக் கொண்டமை தமிழுக்கும் தமிழ்ப் பண்பாட்டிற்கும் சமயம் சார்ந்த பெருமைகளை உருவாக்கித் தந்துள்ளன. எப்படிப் பார்த்தாலும் சமயங்களைப் புறம் தள்ளிய வாழ்க்கை எப்படியோ அதே போன்று தான் தமிழ் இலக்கிய உலகிற்குச் சமய இலக்கியங்களைப் புறம் தள்ளினாலும் மனிதன் தன்னுடைய வாழ்க்கையை அமைதியாகவும் அர்த்தமுள்ளதாகவும் ஆக்கிக்கொள்ள வேண்டும். அதற்கான அனைத்து வழிகளையும் எடுத்துச் சொல்லும் விதமாகத்தான் சமயங்கள் தோற்றம் பெறுகின்றன.

''சமயம் என்பது மனிதனுக்கு உள்ளும் புறமுமாக இருந்து அவனை உணர்வால் சிந்தனையால் தூண்டி வளர்த்துப் பக்குவப்படுத்துகின்ற ஓர் அரும்பெரும் சாதனம்'' என்னும் கருத்தை அடிப்படையாகக் கொள்வது சமயத்தைப் பொறுத்தமட்டும் மிகச்சரியாகப் பொருந்துகிறது. மனிதன் குறிப்பிட்டக் காலக்கட்டத்திற்கு மேல் பல்வேறு சூழல்களில் தன் அமைதியை இழக்க நேரிடும்பொழுது சமயங்களின் வழிகாட்டுதல் தேவை என்பதை உணர்கிறான். இந்த உணர்தலின் அடித்தளத்தில்தான் சமயங்களும் அதன் தத்துவக் கருத்துக்களும் உருவாக்கப்படுகின்றன, உருவாக்கப்பட்டுள்ளன.

சைவ சமயம்

சிவபெருமானை முழுமுதற் கடவுளாகக் கொண்ட சமயம் சைவம். இந்த உலகின் அனைத்து செயல்பாடுகளும் சிவனுக்குள் அடக்கம் என்பதே சைவத்தின் மூலத் தத்துவம். சைவம் வேதங்களையும் ஆகமங் களையும் மூலமாகக் கொண்டு ஆரியர்களால் உருவாக்கப்பட்டதாகக் கூறப்படுகின்ற கருத்துக்கள் எல்லாம் தற்பொழுது புறம் தள்ளப்பட்டு விட்டன. ''சைவ சமயம் என்பது இவ்விந்திய நாடு எங்கும் உள்ள தமிழ் நன்மக்களால் எத்தனையோ ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னே

தொட்டுக் கைக்கொள்ளப்பட்ட கடவுட் கொள்கையாகும்''. வேதநெறி வேறு பழந்தமிழ் நெறி வேறு நமக்குத் தொல்காப்பிய காலத்துக்கும் முந்தியச் சிந்துசமவெளி நாகரிகத்தின் சிவன் வணங்குவதற்குரிய கடவுளாக இருந்துள்ளார் என்பதற்குப் புறப்பொருள் சான்றுகள் கண்டறியப் பட்டுள்ளனர். எனவே சைவத்தின் தோற்றம் வளர்ச்சி இவைகளை ஆரிய மதங்களோடும் அக்கடவுகளோடும் ஒப்பிடுதல் கூடாது.

தமிழகத்தில் சைவ சமயம்

சைவ சமயம் தமிழருக்கே தமிழ்நாட்டுக்கே உரிய சமயம் என்பது தற்பொழுது பெரும்பான்மையான ஆய்வாளர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட கருத்து. சைவம் தமிழகத்தில் சித்தாந்த வடிவில் நிலைபெற்ற அளவுக்கு வேறெங்கும் நிலை பெறவில்லை. ''சைவ சித்தாந்தம் பெரும்பாலும் தமிழ் பேசும் மக்களிடை மட்டுமே வழங்கி வந்திருக்கின்றது. காஷ்மீர் சைவம் எனப்படும் சைவ மதம் இந்தியாவின் வடபாகத்திலும் மைசூர்ப் பகுதியில் வீரசைவமும் வழக்கில் இருந்தாலும் அவ்விரண்டு சைவத் திற்கும் தென்கோடியில் வழங்கும் தமிழ் சைவத்திற்கும் அடிப்படை யிலேயே பல வேறுபாடுகள் உள்ளன'' என்னும் கருத்து உற்றுநோக்கத் தக்கது. தமிழின் மூத்த நூலான தொல்காப்பியத்திலேயே சிவவழிபாட்டுக்கான ஆதாரங்கள் கிடைக்கப்பெற அதனைத் தொடர்ந்து சங்க இலக்கியங் களிலும் பல குறிப்புக்கள்.

''கறை மிடற்றண்ணல்	(புறம். 55)
முக்கட்செல்வன்	(புறம். 16) (அகம். 187)
ஆல்அமர்ச் செல்வன்	(கலி. 81)
பிறவா யாக்கைப் பெரியோன்	(சிலம்பு. 5.169)
தென்னீர் கரந்த செஞ்சடைக் கடவுள்''	(சிலம்பு. 20.16)

போன்ற வரிகள் சங்க காலத்திலும் அதற்கு முன்பும் கூடத் தமிழகத்தில் ஆரியர்களின் வருகைக்கு முன்பே சிவபெருமான் கடவுளாக வணங்கப் பட்டுள்ளதை உணர்த்துகின்றன. இருப்பினும் சைவத்திற்கான மூலநூல்கள், ஆகமங்கள், வேதங்கள், உபநிடதங்கள் போன்றவை வடமொழியில் தான் உள்ளன. அவை தமிழில் இல்லை என்பதே சைவம் வடவரால் உருவாக்கப்பட்டதற்கான அடையாளம் என்றும் சிலர் கருத்துரைக் கின்றனர். ஆனால் இக்கருத்து பலராலும் மறுக்கப்படுகிறது. ''ஆதியில் வேதங்களும் ஆகமங்களும் தமிழில்தான் இருந்தன என்றும் தமிழ் பாரதம் முழுக்க இருந்த காலத்தே இவை வடமொழிக்கு மாற்றம் செய்யப்பட்டு தமிழில் அவை அழிந்த சூழலிலும் வடமொழியில் பாதுகாக்கப்பட்டுள்ளன''. சைவம் சித்தாந்தமாகவும் அதனை விளக்கும் பொருட்டு எழுந்த பலநூல்களும் தமிழகத்தில் இருப்பதுபோல் வேறு

எந்த மொழியிலும் இல்லை. எனவேதான் ''சைவ சித்தாந்தம் வேறெங்கும் வழங்காது தமிழ்நாட்டில் மட்டும் மிகுதியும் வழங்குவதால் (தத்துவ ரீதியாகவும்) இதனை ஆதிகாலந்தொட்டுத் தமிழருக்கே உரிய தத்துவம் எனக் கொள்ளலாம்'' என்னும் கருத்தும் நிலவுகிறது. பொதுவாகச் சைவ சமயத்திற்கு வேதங்களும் ஆகமங்களும் மூலநூல்களாக இருக்க, மெய்கண்டதேவர் ஆகமக் கருத்துக்களை அதிகமாகக் கொண்டு ஒழுங்குப்படுத்தித் தற்காலத்திய நிறுவன சமய வடிவத்திற்கு ஏற்ப 12 சூத்திரங்களாக (சிவஞானபோதம்) உருவாக்கியுள்ளார். ஆனால் வடமொழியில் ரௌரவம் என்னும் ஆகமத்தில் மெய்கண்டதேவர் கூறிய கருத்துக்கள் எல்லாம் இருப்பதாகக் கூறப்படுகிறது. ஆயினும் ''மெய்கண்டாரது 12 சூத்திரங்களும் வடமொழிச் சூத்திரங்களின் தமிழாக்கம் அல்ல. இது நேரடியாகத் தமிழ்நாட்டிலேயே முதன் முதலாக ஆக்கப்பட்டவை'' என்று வாதிடுபவர்களும் உண்டு. ''ஆரியருக்கு முன்னரே தமிழர் சிறந்த சிவவழிபாடுடையவராய்த் திகழ்ந்தனர்'' என்பது புதைபொருள் மற்றும் சங்க இலக்கிய ஆராய்ச்சியிலும் நன்கு விளங்குகின்றது'' என்னும் கருத்து மீண்டும் மீண்டும் வற்புறுத்தப் படுகிறது. மெய்கண்டதேவரின் சிவஞான போதத்தைத் தொடர்ந்து சங்கற்ப நிராகரணம் வரையிலான 14 நூல்கள் தமிழில் எழுந்துள்ளன. இது வேறு எங்கும் எந்த மொழியிலும் இல்லாததாகும். சைவக் கருத்துக் களைச் சித்தாந்த வடிவத்தில் செம்மைப்படுத்தி மிகச் சிறப்பாக வளர்த்த பேறு தமிழகத்திற்கு மட்டுமே உண்டு.

மதுரையில் ஞானசம்பந்தர்

சைவத்தில் தக்கரீதியான நிறுவன ரீதியான வளர்ச்சி என்பது கி.பி. 550-ல் காரைக்கால் அம்மையாரின் காலக்கட்டத்தில் தொடங்கி விட்டதாகவே அறிய வருகிறது. அதற்கடுத்துப் பல்லவர்களின் காலத்தில் சைவ சமயத்திற்கு மிக்க எழுச்சியுடையவராக விளங்கியவர் ''திருநாவுக்கரசர் 81 வயது வரை உயிர் வாழ்ந்தார். அவர் தம்முடைய நேரம் முழுவதையும் சிவபெருமானுடைய திருக்கோயில்களுக்குச் சென்று வழிபடுவதிலேயே கழித்தார். அப்போது அவர்தம் காலத்தில் வாழ்ந்த பல நாயன்மார் களைக் கண்டு அளவளாவினார். அவர்களுள் மிகவும் முக்கியமானவர் திருஞானசம்பந்தர் ஆவார். உண்மையில் ஞானசம்பந்தரே தலைசிறந்தவர்'' ''மனிதனின் இந்த ஞான ஒளியை பெறவேண்டுமானால் அவனுக்கு யாரேனும் ஒரு குருவின் அருள்வேண்டும்'' என்னும் கருத்திற்கேற்பச் சைவ சமயத்தில் ஆண்டவனின் அவதாரங்களாக இறைவனின் மாற்றுருவாக மிகுந்த விருப்பதற்குரியவர்களாக அடியவர்கள் உருப் பெருகிறார்கள். ஞானசம்பந்தரின் சிறப்பைப் பற்றிக் கூறும்பொழுது சேக்கிழார்,

"தவம்பெருக்கும் சண்பையிலே
தாவில்சரா சரங்களெலாம்
சிவம்பெருக்கும் பிள்ளையார்
திருவவதாரஞ் செய்தார்"

என்று ஞானசம்பந்தர் சிவன் பெருக்கும் பிள்ளையாக அவதரித்ததாகவே கூறுகிறார். ஞானசம்பந்தருடைய பணி அவதார நோக்கோடு மூன்று வயதிலேயே தொடங்கி விடுகிறது. சோழர்களின் ஆதரவோடு சோழ நாட்டில் சைவ சமயமும் அதன் புகழும் கோயில்கள் எழுச்சியும் வானுயர்கின்றன. சோழர் காலத்தில் சைவம் தூய்மையான உயர்ந்த பக்தியோடும் இனிமையும் உருக்கமும் அருளும் செறிந்ததாக வளர்த் தெடுக்கப்பட்டது என்பர். அதற்கு ஞானசம்பந்தரே முழுமுதற் காரணம்.

பாண்டி நாட்டில் சைவ சமயத்தைப் பரப்புவதற்கு ஒரு பெரிய வாய்ப்பு சைவ சமயத்திற்குப் பெரும் ஆதரவு தந்து போற்றிய சோழ இளவரசி மங்கையர்க்கரசி பாண்டி நாட்டுக்குப் பட்டத்து அரசியானதே.

பாண்டி நாட்டிற்குள் நுழைந்த ஞானசம்பந்தர்,

"வேயுறு தோளி பங்கன் விடமுண்ட கண்டன்
மிகநல்ல வீணை தடவி........." (12)

என்ற பதிகத்தோடு தம் பணியைத் தொடர்ந்தார்.

பாண்டி நாட்டில் சமணத்தை நிலைநாட்டும் பொருட்டுப் பாண்டியனின் ஆதரவை வைத்துக்கொண்டு சமணர்கள் செய்யும் கடுஞ்செயலை முதலில் ஞானசம்பந்தர் நன்கு உணர்ந்தே "அந்தச் சமணர்கள் செய்யும் வஞ்சனைக்கு அளவில்லை என்பதை நான் அனுபவத்தில் கண்டவன். தவிர ஞாயிறு முதலிய கோள்களும் தற்சமயம் நன்னிலையில் இல்லை. ஆகவே இப்பொழுது பாண்டி நாட்டிற்கு எழுந்தருள உடன்படுவது தகாது" என்று திருமறைக்காட்டுத் திருக்கோயிலில் தங்கி பாண்டி நாட்டு சமணர்களின் செயல்களை நன்கு அறிந்த பின்பே மதுரைக்குள் வருகிறார்.

இச்சூழலில் சமணர்கள் ஞானசம்பந்தர் தங்கியிருந்த மடத்திற்குத் தீ மூட்டிவிட அதனை அறிந்த ஞானசம்பந்தர் ஐந்தெழுத்து மந்திரத்தால் அந்நெருப்பை அழிக்கின்றார். பின்பு அந்நெருப்பின் பயனும் உணர்வும் சமணர்களுக்கும் பாண்டியனுக்கும் சென்றிட,

"செய்ய னேதிரு ஆலவாய் மேவிய
ஐயனே அஞ்ச னுன்றருள் செய்யெனப்
பொய்ய ராம்அனை கொளுவுஞ் சுடர்
பையவே சென்று பாண்டியற் காகவே"

என்று கூறி அதனாலான முரண்பாடுகளைத் தீர்க்கிறார். ஆனாலும் சமணர்களின் சதியும் தாக்குதலும் அடங்காது போகவே சமணர்களின்

வற்புறுத்தலுக்கு மறுப்பு கூறமுடியாமல் பாண்டியனின் முன்னாள் அனல்வாத மற்றும் புனல்வாத அற்புதங்கள் ஞானசம்பந்தரால் நிகழ்த்தப் படுகின்றன. சமணர்களின் வாதத்திற்கு ஏற்ப இரு சமயங்களின் பேருண்மை களையும் ஏட்டில் எழுதி நெருப்பிலிட்டுப் பரிசோதனை செய்து கொள்ளச் சம்மதித்தார் பிள்ளையவர்கள். அதன்படி ''என்னை ஆளுடைய இறைவனது திருநாமமே என்றும் நிலைபெற்ற மெய்ப்பொருளாகும் என உலக மாந்தர்க்கு அறிவுறுத்தும் நிலையில் இத்திருப்பதிக ஏடு தீயில் வெந்தறியாது நிலைபெறுக'' என்ற திருப்பதிகத்தைப் பாடி அவ்வேட்டைத் தீயிலிட ஏடு எரியாது பச்சையாய் விளங்குகிறது. ஆனால் சமணர்கள் இட்ட ஏடு பஞ்சு தீயிடப் பட்டதுபோல் எரிந்து சாம்பலாகிறது. ஆனாலும் சமணர்கள் ஏற்காமல் இதே போன்று புனல்வாத நிகழ்வுக்கும் வலிந்து வர ஞானசம்பந்தர் ஏட்டில்,

''வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயது எல்லா அரன்நாமமே
சூழ்க வையக முந்துயர் நீங்கவே''

என்று எழுதி வைகை ஆற்றில் விடப்பட்ட ஓலை ஆற்று நீரினை எதிர்த்து எதிர்ப்பக்கம் செல்ல சமணர்களின் ஏடோ நீரில் அடித்துச் செல்லப் படுகிறது. இவ்வாறான அற்புதங்களைச் செய்து அரசனையும் அவனைச் சார்ந்துள்ள மக்களையும் சம்பந்தர் சைவத்திற்கு மாற்றம் பெறச் செய்தார். இது மதுரை மாநகரில் சம்பந்தர் செய்த சமயம் சார்ந்த அற்புதங்களின் சுருக்கம். அனல் வாதத்திலும் புனல் வாதத்திலும் தோல்வியுற்ற 8000 சமணர்கள் கழுவில் ஏறினர் என்னும் செய்தியும் நமக்குக் கிடைக்கிறது. அனல்வாதம் புனல்வாதம் செய்திகளையும் சமணர்கள் தோற்றுப் புறம் கண்டதையும் அறியலாம். ஆனால் 8000 சமணர்கள் கொல்லப்பட்டனர் என்பதை ஏற்றுக்கொள்ள முடியாது. சம்பந்தரேகூட இக்கொடிய செயலை அனுமதித்திருக்க மாட்டார்.

''இக்கொடுஞ்செயல் ஒரு கட்டுக்கதையாக இருக்குமேயன்றி வரலாற்று நிகழ்ச்சியாக இருக்காது என்று நாம் கருதலாம்''. பதிமூன்றாம் நூற்றாண்டிலேயே இந்தியாவில் 42 மதப்பிரிவுகள் இருந்ததாக ஒரு ஆய்வுக் குறிப்பு கூறுகிறது. இச்சூழலில் எதிர் எதிர்க் கொள்கைகளையும் கோட்பாடுகளையும் வைத்துக்கொண்ட நிலையில் ஒரு சமயத்தை வளர்த்தெடுப்பதும் மக்களின் ஆதரவோடு நிலை நிறுத்துவதும் சாதாரண காரியமல்ல. கடுமையான எதிர்ப்புக்களையும் சோதனைகளையும் இழப்புக்களையும் சந்திக்க வேண்டியிருக்கும். இச்சூழலில்தான் தாம் அடியார்களோடு தங்கியிருந்த மண்டபம் கொளுத்தப்பட்டதற்காக சமணர்களை,

"சடங்கொண்ட சாத்திரத்தார் சாக்கியர் சமணர் குண்டர்
மடங்கொண்ட விரும்பியராய் மயங்கியோர் செய்த தேர்ப்பின்
குடங்கொண்டு நீர்க்குச் செல்வர்"

என்று சாடுகிறார்.

சம்பந்தருக்கு மட்டுமல்ல எல்லாச் சமயத்தாரும் பிற சமயத்தைச் சாடுவதும் பழிப்பதும் கடுமையாகத் தாக்கிக்கொள்வதும் தமிழ்ச் சமய வரலாற்றில் ஒரு தொடர் செய்தியே. "சமயப் பூசலால் ஒரு சமயத்தை அழித்துப் பிறிதொரு சமயம் வளரும்போது தம் சமயத்தைப் பரப்பவும், வளர்க்கவும் நிலை நிறுத்தவும் எனப்படும் முயற்சிகள் பல அவற்றில் ஒன்றாக உயிர்ப்பலியிடலைக் கூறலாம். பெரியபுராணத்தில் கொலையும் தற்கொலையும் இறையன்பிற்பாற்பட்டதாக அற்புத நிகழ்ச்சிகளின் (Super Natural Elements) மூலம் செயல் வடிவம் பெறுகின்றன" என்னும் கருத்தை அடியொற்றி எல்லாச் சமயங்களும் இச்செயல்பாடுகளில் ஈடுபட்டிருந்ததை அறிய முடிகிறது. எண்ணாயிரம் சமணர்களைக் கழுவில் ஏற்றிக் கொண்டமைக்குத் "தேவாரத்தே அகச்சான்றுகள் இல்லை, புறச்சான்றும் இல்லை. நம்பியாண்டார் நம்பி காலத்தில்தான் அக்கதை வழங்கத் தொடங்கியது. தேவார ஆராய்ச்சியில் சிறந்த சேக்கிழாரைப் போன்றோர் அக்கதை தேவாரத்தோடு முரண்படுகின்றமையைக் கண்டு ஐயுற்றார்கள்" என்று மு.வ. அவர்களின் கருத்தும் எண்ணத்தக்கது.

சமயப் போட்டியும் பிணக்கும் மிகக் கடுமையாக இருந்திருந்தாலும் கூட இக்காட்டுமிராண்டிச் செயலைச் செய்ய யாரும் அனுமதிக்க மாட்டார்கள். 8000 சமணர்களும் என்ன தமிழகத்திற்குப் புறத்தே இருந்தா வந்திருக்க முடியும். தமிழர்கள் தாமே சமணர்களாக மாறியிருப்பர் அப்படியிருக்கச் சம்பந்தரால் இக்கொடுஞ்செயலுக்கு எப்படி சம்மதித் திருக்க முடியும் இது கட்டுக்கதையே.

தமிழகத்துச் சைவம் ஆகம விதிகள் மற்றும் தத்துவக் கருத்துக்கள் இவைகளால் வைதீகச் சமயங்களில் இருந்து வேறுபட்டதாவே உணர முடிகிறது.

இதற்குச் சிவஞான போதம் முதற்கொண்டு சங்கற்ப நிராகரணம் வரையிலான 14 நூல்களும் முக்கிய பங்குண்டு.

சைவப் பணியில் அடியவர்களின் போராட்டமும், தீவிர பணிகளும் அவர்களுள் முக்கியமாக ஞானசம்பந்தரின் பங்கு மிக உயர்ந்தது.

சைவம், தமிழ்ச் சமயமாகையால் பிற சமயங்களின் ஆதிக்கத்திலிருந்து மீட்டெடுக்க நடந்த போராட்டத்தை நம்மால் ஏற்காமல் இருக்க முடியாது.

சமயப் போராட்டத்தில் இழப்புக்கள் என்பது இயல்பு. ஆனால் 8000 சமணர்களின் மரணம் என்பது மிதமிஞ்சிய கற்பனையே.

29. சம்பந்தரின் சொல்லாக்க உத்திகள்

கு.ர. சரளா, தஞ்சாவூர்.

சங்க காலத்து இலக்கியங்களில் காணப்பெறும் சொற்பொருள் சிறப்பும் வளர்ச்சியும் பக்தி இலக்கியக் காலத்திலும் (கி.பி.600-900) தொடர்கின்ற நிலையைக் காண இயலும். பக்தி இலக்கியக் காலத்தில் திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் ஆகியோர் முப்பெரும் சைவக் குரவர்களாகத் திகழ்ந்தனர். இவர்களுள் சம்பந்தர் ஞானப்பால் உண்டு மூன்று வயதிலே சைவத்தின்பால் பற்றுக்கொண்டு முதல் மூன்று தேவாரத் திருமுறைகளை அருளிச் செய்தார். தமிழ் மொழியின் மேல் இருந்த ஈடுபாட்டினால் பாடல்களில் தம்மைத் ''தமிழ்ஞான சம்பந்தர்'' என்று அழைத்துக் கொண்டார். சம்பந்தர் திருமுறைப் பாடல்களில் ஒரு பொருளைக் குறிக்கும் பல சொற்கள் பரவலாகக் காணப்படு கின்றன. சிவனைக் குறிக்க ஏறத்தாழ 305 சொற்கள் பயன்படுத்தப் பட்டுள்ளன. இச்சொற்கள் பல்வேறு உத்திகளின் மூலம் ஆக்கப் பெற்றுள்ளன. இவை வடிவம், தொழில், குணம், தன்மை எனும் காரணங்களில் தோற்றம் பெற்றுள்ளன. ஒரு பொருட் பல சொற்கள், திரிபுச்சொற்கள், ஆக்கச்சொற்கள், கூட்டுச்சொற்கள், தனிச்சொல், பிறமொழிச் சொற்கள் எனும் நிலையில் அமைந்துள்ளன. ''சம்பந்தர் பாடல்களில் ஒருபொருட் பல சொற்களும் சொல்லாக்கமும்'' எனும் இக்கட்டுரையில் சிவனைக் குறிக்கும் சொற்கள் சுருக்கமாக விளக்கப் படுகின்றன.

ஒரு பொருட் பன்மொழிகள் வரையறை

இரண்டு அல்லது இரண்டிற்கு மேற்பட்ட சொற்களின் ஒத்த பொருளியல்பே ஒரு பொருட் பன்மொழியாம். குறிப்பிட்ட மொழிச் சூழலில் குறிப்பிட்ட ஒரு சொல் உள்ள இடத்தில் பிறிதொரு சொல்லைப் பதிலீடு செய்யும் பொழுது சொற்கள் / தொடர் உணர்த்தும் பொருளில் எவ்வித மாற்றமும் வேறுபாடும் இல்லையெனில் அச்சொற்கள் ஒரு பொருட் பல சொற்கள் என்று (பெ. மாதையன், அகராதியியல், ப. 215) அழைக்கப்படுகின்றன. பொருள் அடிப்படையில் காணின் பொருளின் ஒத்தத் தன்மையே (Sameness of Meaning) ஒரு பொருட் பலசொல் ஆகும். ஒரு பொருட் பல சொற்கள் ஒத்த பொருட்களையும், வேறுபட்ட வடிவங்களையும் கொண்டன.

மொழிகளில் ஒரு பொருட் பல சொற்கள் தோற்றம் பெறுவதில்லை என்று ஒரு வாதம் உள்ளது எனினும் மொழிகளில் பொருள் உறவுச் சொற்கள் எனும் நிலையில் ஒரு பொருட் பல சொற்கள் பரவலாக ஆய்வுக்கு உட்படுத்தப் பெற்றுள்ளன. இவ்வகைச் சொற்கள் பயன்பாட்டு எல்லையைக் கொண்டன.

ஒரு பொருட் பன்மொழிகளின் வகை

ஒரு பொருட் பல சொற்கள், முழு ஒரு பொருட் பல சொற்கள், பகுதி ஒரு பொருட் பல சொற்கள் என இரு வகைகளில் அமைகின்றன. முழு ஒரு பொருட் பல சொற்கள் என்பது பொருட்களின் ஒத்தநிலை ஆகும். எல்லாவகைப் பொருட் சூழல்களிலும் பயன்பாடுகளிலும் சொற்கள் ஒத்திருத்தல் எனும் நிலையில் முழுஒரு பொருட் பல சொற்கள் தோற்றம் பெறுகின்றன. அடிப்படைப்பொருள், குறிப்புப்பொருள், பயன்பாட்டு எல்லை எனும் மூன்று பொருள் கூறுகளில் ஏதாவது ஒன்றில் பொருள் வேறுபட்டிருந்தால் அவ்வகைச் சொற்கள் பகுதி ஒரு பொருட் பல சொற்கள் ஆகும்.

ஒரு பொருட் பன்மொழிகள் தோன்றக் காரணங்கள்

ஒரு பொருட் பன்மொழிகள் அவற்றின் அமைப்பு அடிப்படையிலும் தோற்ற அடிப்படையிலும் பலவகைகளாகப் பிரிக்கப்படுகின்றன.

பல பொருட் சொற்கள் தோற்றத்திற்குப் பின்வரும் காரணங்கள் அடிப்படையாகவுள்ளன.

1. வடிவம்
2. தொழில்
3. குணம்
4. தன்மை

பல பொருட் சொற்களின் அமைப்பு அடிப்படையில் அவற்றைப் பின்வருமாறு பகுத்துக் காணலாம். அவை,

1. திரிபுகளாகத் தோற்றம் பெற்றவை
2. ஆக்கங்களாகத் தோற்றம் பெற்றவை
3. கூட்டுச் சொற்களாகத் தோற்றம் பெற்றவை
4. தனிச்சொற்களாகத் தோற்றம் பெற்றவை
5. அடைச்சொற்களிலிருந்து தோற்றம் பெற்றவை
6. பிறமொழிச் சொற்களாக இடம் பெற்றவை

மேற்கூறிய பல்வேறு மொழியில் மற்றும் பிற காரணங்களால் சம்பந்தர் பாடல்களில் சிவனைக் குறிக்கும் ஒரு பொருட் பல சொற்கள் பல தோற்றம் பெற்றுள்ளன.

1. வடிவ அடிப்படைப் பெயர்கள்

சிவனின் வடிவத்தை அடிப்படையாக வைத்துப் பல பெயர்கள் உருவாக்கப்பட்டுள்ளன. கங்காநாயகன், கங்காளர், சிலம்பன், சூலபாணி, நீலகண்டன், நீற்றன், பிறைசூடி, பூணநூலர், முக்கணன், சடையன், பசுபதி, உமாபதி என்று பல்வேறு பெயர்கள் இடம்பெற்றுள்ளன. (எ.டு)

''கழகனார் கரியுரித்தாடு கங்காளர் நங்காளியேத்தும்''(3804)

"திருவளரும்பொழிற் புறவஞ்சிலம்பனூர் காழித குசண்பையொன்பா" (2258)

''நீறுபட்ட கோலத்தான் நீலகண்ட னிருவர்க்கும்'' (2558)

''பெண்ணாணலியாகும் பித்தா பிறைசூடி'' (961)

''பூண்டனர் சேரலுமாபதியே புறவயமமர்ந்த வுமாபதியே'' (4019)

மேற்கண்டவை போன்று பல சொற்கள் வடிவ அமைப்பில் சிவனைக் குறித்து அமைந்த சொற்களாக உள்ளன. சிவபெருமான் கங்கையைத் தன் தலையில் வைத்திருந்ததால் ''கங்காளர்'', ''கங்காநாயகன்'' என்ற பெயர்களையும், தலையில் பிறையைச் சூடியிருந்ததால் ''பிறைசூடி'' என்ற பெயரையும், பூணல் அணிந்திருப்பதால் ''பூணநூலர்'' என்றும், மூன்று கண்களைப் பெற்றிருப்பதால் ''முக்கணான்'' என்ற பெயரையும் திருநீற்றைப் பூசியிருப்பதால் ''நீற்றன்'' என்ற பெயரையும் பார்வதியைத் தன் இடபாகத்தில் வைத்திருந்ததால் ''உமாபதி''என்ற பெயரையும் சிலம்பத்தை அணிந்திருந்தால் ''சிலம்பன்'' என்ற பெயரையும் சம்பந்தர் சிவனுக்குச் சூட்டி மகிழ்கின்றார்.

2. திருச்செயல்களினால் பெற்ற பெயர்கள்

சிவபெருமான் ஆடற்கலை அரசனாகவும், அழித்தல் தொழில் செய்பவனாகவும், ஐம்பூதங்களின் தலைவனாகவும் விளங்குவதால் கூத்தன், நாவலன், ஏகநாதர், கறைக்கண்டன், கலையான், காலகாலன், காலபயிரவன், பூதநாதர், பூதபதி போன்ற பெயர்கள் இடம்பெற்றுள்ளன.

''காலன்றனை ஆருயிர் வவ்விய காலன்'' (329)

''கலையானடியேத் தக்கருதா வினைதானே'' (960)

''புண்ணியர் பூதியர் பூதநாதர் புடைபடுவார்'' (76)

''கடையார் பலிகொண்டுழல் காரணனே'' (1725)

இவ்வாறு சிவனின் தொழிலை அடிப்படையாக வைத்துப் பல ஒரு பொருட் பன்மொழிகள் தோற்றம் பெற்றுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

3. பண்பு அடிப்படையிலான பெயர்கள்

சிவனின் குணநலன்களை அடிப்படையாக வைத்துப் பல சொற்கள் உருவாக்கப் பெற்றுள்ளன. அன்பன், அன்புடையான், தீர்த்தன், தூயவன், நிகரில்லார், நற்றவன், நல்லவன், நண்பன், உத்தமன், இணையிலி, இறப்பிலி போன்ற பெயர்கள் பண்பினை வெளிப்படுத்தும் வகையில் அமைந்துள்ளன.

"நீலவடிவர் மிடறு நெடியர் நிகரில்லார்" (2141)
"துன்பந் துடைப்பீர்காள், அன்பனணி யாரூர்" (984)
"இணையிலி யென்றுமிருந்த கோயிலி ராமேச்சுரம்" (2905)
"ஆதிபாதமே, ஓதி யுய்ம்மினே" (971)

சிவன் அடியார்களிடம் அன்பாகவும், அன்புடையனவனாகவும் இருப்பதால் "அன்பன்", "அன்புடையான்" என்ற பெயர்களைச் சம்பந்தர் படைத்திருக்கிறார். சிவனுக்கு இணையாக ஒருவரும் இல்லையென்பதால் "இணையிலி" என்றும் உலகத்தில் முதற்கடவுளாகப் போற்றப்படுவதால் "ஆதி" என்றும் சிவனைக் குறிக்கச் சொற்களைச் சம்பந்தர் பயன் படுத்தியுள்ளார்.

4. தன்மை அடிப்படையிலான பெயர்கள்

சிவன் தானாகத் தோன்றியவன், அட்டயோகங்களைக் கடந்தவன், உருவமில்லாது சோதி வடிவானவன், தத்துவங்களைக் கொண்டு அமைந் தவன் (தத்துவமானவன்) அழகுடையவன் போன்ற பல்வேறு தன்மை களில் சிவனின் பெயர் உருவாக்கம் நடைபெற்றுள்ளது. அட்டமூர்த்தி, தான்தோன்றி, உருவிலான், அனாதி, பரஞ்சோதி, சோதி, பரஞ்சுடர், சுயம்பு, தத்துவன், சுந்தரர் போன்ற பெயர்கள் மேற்கூறியவைக்குச் சான்றாக அமைகின்றன. (எ.டு)

"அட்டமூர்த்தியழல் போலுருவன் னழகாகவே" (2743)
"தத்துவனைத் தொழுவார் தடுமாற் றறுப்பாரே" (1159)
"அன்னியூரமர், மன்னுசோதியே" (1136)
"தக்கிருந்தாராக் கூரில் தான்தோன்றி மடமே" (1917)

மேற்குறிப்பிட்டன போன்று பல பாடல்களில் சிவனைக் குறிக்கும் தன்மைப் பெயர்கள் பலவற்றைச் சம்பந்தர் பயன்படுத்தியுள்ளார்.

1. திரிபுகளாக உள்ள பெயர்கள்

ஒரு வினை அல்லது பெயர் அடியிலிருந்து விகுதி மற்றும் உருபன்களின் இணைப்பால் ஏற்படும் மாற்று வடிவங்கள் திரிபுகள் என்றழைக்கப்படுகின்றன. சம்பந்தர் பாடல்களில் பெரும்பாலும் குறிப்பு வினைமுற்றுக்களாகப் பல பெயர்கள் இடம்பெற்றுள்ளன.

அடிகள், அன்புடையான், அருளாளன், அரியான், அழகன், ஆனாய், இன்பன், உடையான், எந்தை, சித்தர், நந்தியார், பேரருளாளன், வலியன், வித்தகன், விருப்பன் என்று பல சொற்கள் சிவனைக் குறித்து ஒரு பொருட் பல சொற்கள் என்ற தன்மையில் அமைகின்றன.

''ஆனாயுன்னை யல்லாலடை யாதென தாதரவே''
(3390) (ஆனாய்)

''வலியன் மதிசெஞ்சடை வைத்த மணாளன்'' (318) (வலியன்)

''மேயவித்துயில் விலக்கணா மிழலை மேவிய விலக்கணா''
(4054) (விலக்கணன்)

''வித்தகா விரும்பும் மடியாரை (2016) (வித்தகன்)

மேற்கூறிய திரிபுகளுக்கு இப்பாடல்கள் சான்றாக அமைகின்றன.

2. ஆக்கச் சொற்கள்

ஒரு வினைச்சொல் அல்லது பெயர்ச்சொல் விகுதிகளை ஏற்றுப் பொருளிலும், இலக்கண அமைப்பிலும் மாற்றம் பெறுகின்றதை ஆக்கச் சொல் என்று அழைக்கப்படுகின்றது.

தீயாடி, பொடியாடி, இணையிலி, ஊனமிலி, பிறப்பிலி, பிறைசூடி, அப்பனார், சித்தன் போன்ற சொற்கள் சிவனைக் குறிக்கும் பல சொற் களாக ஆக்க வடிவங்களைப் பெற்று அமைகின்றன. இதனைப் பின்வரும் பாடல்களில் காண முடிகின்றது.

''ஆறாத தீயாடி யாமாத் தூரம்மானைக்'' (1945)
(தீஆடு+இ)

''பொடியாடிக் கடிமை செய்த புள்ளிருக்கு வேளூரைக்'' (1938)
(பொடியாடு+இ)

''இணையிலி யென்று மிருந்த கோயிலிராமேச்சுரம்'' (2905)
(இணையில்+இ)

''பெண்ணா ணலியாகும் பித்தா பிறைசூடி'' (961)
(பிறைசூடு+இ)

மேற்சுட்டியவை போன்று சம்பந்தர் ஆக்கச் சொற்களைச் சிறப்பாகக் கையாண்டுள்ளார். இத்தன்மை அவரின் மொழிப்புலமையை வெளிப் படுத்துவனவாக அமைகின்றன.

3. கூட்டுச் சொற்களாக உள்ளவை

ஒரு சொல் வேறொரு சொல்லுடன் இணைந்து நின்று ஒரே சொல்லாய்ச் செயற்பட்டு ஒரு பொருளை உணர்த்துவது கூட்டுச்சொல்லாகும். சம்பந்தர் திருமுறைகளில் சிவனைக் குறிக்க வந்த பெயர்கள் பல கூட்டுச்சொற் களாகக் காணப்படுகின்றன. கூட்டுச்சொற்களின் பயன்பாட்டைப் பின்வரும் பாடலில் காணலாம்.

"புண்ணியர் பூதியர் பூதநாதர் புடைபடுவார் தம்மனத்தார்" (76)
(பூதம்+நாதர்)

"பெண்ணா ணலியாகும் பித்தா பிறைசூடி" (960)
(பிறை+சூடி)

"ஆணிப்பொன் னிணையடி
தொழுமடியவர்க் கருவினை யடையாவே" (2575)
(ஆணி+பொன்)

"நெரித்தருளுஞ் சிவமூர்த்தி நீறணிந்த மேனியினான்" (1902)
(சிவன்+மூர்த்தி)

மேற்கண்டவாறு சிவமூர்த்தி, ஆணிப்பொன், சந்திரசேகரன், பூதநாதர், வேதகீதன், வாமதேவர், விடையூர்தி, வேதமுதல்வன், வேதமுத்து, பரம்பொருள், பாசுபதன், பிறைசூடி, புகழொளி, வேதவேந்தன், சாமவேதர் என்று பல சொற்கள் சிவனைக் குறிக்கும் கூட்டுச்சொற்களாக அமைந்துள்ளன.

4. அடைமொழியால் தோற்றம் பெற்ற பெயர்கள்

ஒரு சொல்லைச் சிறப்பிக்கும் வகையில் அடையுடன் அமையும் சொல்லையும் கூட்டுச்சொல் என்று கூறலாம். அடைமொழியைக் கொண்டு அமையும் கூட்டுச்சொற்கள் சிவனின் சிறப்பினை வெளிப் படுத்தி நிற்கின்றன. (எ.டு).

பெரியவன் பெண்ணினொடா ணுமானான் (1192) (பெரிய)

நல்லானை யேத்து மினும் மிடர் நையவே (1607) (நல்)

செருமால் விடையூருஞ் செம்மான் திசைவில்லா (946) (செம்)

இப்பாடல்களில் பெரிய, நல், செம் என்ற அடைமொழிகளுடன் தோன்றும் சொற்கள் சிவனின் சிறப்பினை வெளிப்படுத்தும் வகையில் கூட்டுச் சொற்கள் போன்று செயல்படுகின்றன.

5. தனிச்சொல்லாக உள்ளவை

அண்ணல், அம்மான், அரன், அணு, அரு, ஏறு, கனி, காளை, கோ, கோன், சோதி, தாணு, திரு, நாதி, சுடர், முனி, நீதி போன்ற தனிச்சொற்கள் முதல் மூன்று திருமுறைகளில் சிவனைக் குறிக்க இடம்பெற்றுள்ளன. திரிபுகள் இன்றி அடிச்சொல்லாக வரும் இப்பெயர்ச் சொற்கள் சிவனைக் குறிக்கும் வகையில் பயன்படுத்தப் பட்டுள்ளன. அவை பின்வருவன;

"கண்ணவனைக் கண்ணார் திகழ்கோயிற் கனி தன்னை" (1096)

"கோவே யெருக்கத்தம்புலியூர் மிகுகோயில்" (965)

"தேசநீர் திருநீர் சிறுமான் மறியீர் சொலீர்" (1485)

"தாணுவேனை யானுடையான் றன்னடியார்க் கன்புடைமை" (675)

பிறமொழிச் சொற்கள்

பக்தி இலக்கியக் காலகட்டத்தில் மணிப்பிரவாள நடையின் தாக்கம் உச்சநிலையில் இருந்த காரணத்தினால் சம்பந்தர் பாடல்களில் சிவனைக் குறிக்கப் பல வடமொழிச் சொற்கள் பயன்பாட்டில் இருந்துள்ளன.

இவை கூட்டுச்சொற்களாகவும் தனிச்சொற்களாகவும் உள்ளன. பின்வருவன இதற்குச் சில சான்றுகளாகும்.

"பற்றியென்றும் மிசைபாடிய மாந்தர் பரமன்னடி சேர்ந்து" (22) (பரமன்)

"கோமக னெழில் பெறுமரிவை கூறரே" (2940) (கோ)

"கதிமலி களிறது பிளிறிட வுரிசெய்த அதிகுண னுயர் பசு" (232) (அதி)

"பொய்கிலங்கு பூணநூலு ருத்திராது ருத்திபுக்" (2530) (உருத்திரன்)

பரமன், கோமகன், அதிகுணன், உருத்திரன் போன்று அட்டமூர்த்தி, அகண்டன், அண்டமூர்த்தி, அனகன், அனாதி, ஆரியன், இந்துசேகரன், ஆண்டான், ஆதிபிரான், கமலபாதன், சாரணன், சதாசிவன், தத்துவன், தேவதேவன் என்று பல பெயர்கள் வடமொழிச் சொற்களாக அமைந்திருக்கின்றன.

சிவனின் வடிவம் பண்பு, செயல், தன்மைகள் என்பனவற்றின் அடிப்படையில் சம்பந்தர் தேவாரத்தில் சொற்றொகுதியை வளப்படுத்தி யுள்ளார்.

மொழி வளர்ச்சிக்குச் சொற்பெருக்கம் என்பது அவசியமான ஒன்றாகும். ஒரு பொருட் பன்மொழி உருவாக, தேவை, சூழல், புலவரின் கற்பனை வளம், தனித்தன்மை, பயன்பாடு போன்றவற்றைக் காரணங்களாகக் கூறலாம். சங்க இலக்கியக் காலத்தைத் தொடர்ந்து பக்தி இலக்கியக் காலம் அமைவதால் சங்க இலக்கியத்தில் பல்கி இருந்த ஒரு பொருட் பன்மொழித் தன்மை பக்தி இலக்கியங்களிலும் காணமுடிகின்றது. குறிப்பாகச் சம்பந்தரின் திருமுறைகளில் இடம் பெற்றிருக்கும் ஒரு பொருட் பன்மொழித் தன்மை அவரின் சொல் வளம், தனித்தன்மை போன்றவற்றை வெளிப்படுத்தும் வகையில் அமைந்துள்ளன. குறிப்பிட்ட ஒரு சொல்லை மீண்டும் மீண்டும் கூறுவது என்றில்லாமல் பொருள் தொடர்புடைய சொற்களைப் பயன் படுத்திக் கருதிய பொருளை வெளிப்படுத்துவது மொழிநடையின் ஒரு கூறாகும். இவ்வகையில் சம்பந்தர் படிப்பவர்க்கு இன்பமும் மகிழ்ச்சியும் தரும் வகையில் சிவனைக் குறிக்கப் பல சொற்களைக் கையாண்டுள்ளார். இதன் மூலம் ''தமிழ்ஞான சம்பந்தன்'' எனும் தொடருக்கு உரிய வலுவேற்றும் வகையில் செயல்பட்டுள்ளார் என்று கூறலாம்.

30. நமச்சிவாய மந்திரச் சிறப்பு

சாந்தி விஸ்வநாதன், கோவை.

"**மந்திரம்**" என்பதற்கு, தன்னை நினைப்பவரை காப்பாற்றுவது என்பது பொருளாகும். இறைவனை அடைவதற்கு இறைவனால் அருளிச் செய்யப்பட்ட சொற்களே மந்திரங்களாகும். மந்திரம் இறைவனுடைய சொரூபமாவதால் அருட்தன்மை பெற்றவையாகத் திகழ்கின்றன.

"**நமச்சிவாய**" என்னும் திருவைந்தெழுத்து மந்திரம் வேதங் களுக்கு இருதயம் போன்றது. ருக், யஜுர், சாம வேதங்களில் நடுவாக நிற்பது யஜுர் வேதமாகும். யஜுர் வேதத்தில் நடுவாக இருப்பது நான்காம் சம்ஹிதையாகும். இதற்கு நடுநாயகமாக நிற்பது ஸ்ரீருத்திரம் ஆகும். இதன் நடுவில் வருவது நமச்சிவாய என்னும் திருவைந் தெழுத்தாகும். திருவைந்தெழுத்தை வேதங்களின் சாரம் என்று பெரியோர்கள் கூறுகின்றனர். திருவைந்தெழுத்தை இடையறாது உச்சரிப்பவர்கள் சிவமாம் தன்மையைப் பெறுகின்றனர் என்று ஸ்ரீருத்திரத்திலிருந்தே உணரலாம். உடலுக்கும், உயிருக்கும் ஆழ்ந்த தூய்மையையும், வற்றாத இன்பத்தையும் இம்மந்திரம் கொடுத்தருளும்.

திருவைந்தெழுத்து ஐந்து வகைப்பட்டது எனப் பெரியோர்கள் வகுத்துள்ளனர். அவை முறையே ஸ்தூல ஐந்தெழுத்து, சூக்கும ஐந்தெழுத்து, காரண ஐந்தெழுத்து, மகாகாரண ஐந்தெழுத்து, மகாமனு ஐந்தெழுத்து எனப்படுவன. "நமச்சிவாய" என்பது தூல ஐந்தெழுத்து. "சிவாய நம" என்பது சூக்கும ஐந்தெழுத்து, "சிவாய சிவ" என்பது காரண ஐந்தெழுத்து, "சிவ" என்பது மகாகாரண ஐந்தெழுத்து, "சி" என்பது மகாமனுவுமாகும்.

பொதுவாக நமசிவாய என்கிற மந்திரத்திற்குச் "சிவனுக்கு நமஸ்காரம்" என்று சொல்லுக்குப் பொருளாக கூறலாம். ஆனால், இம்மந்திரத்தில் பல அரிய பொருள்கள் பொதிந்து கிடக்கின்றன. ஒவ்வொரு எழுத்திற்குள்ளும் ஆழ்ந்த தத்துவங்கள் உண்டு. இவற்றை மிக நுட்பமாக ஆகமங்களும், சித்தாந்தங்களும் எடுத்துக் கூறுகின்றன.

சிவாய நம என்பது சூக்கும ஐந்தெழுத்தாகும். அதில் "**சி**" என்பது **சிவன்**, "**வ**" என்பது **சக்தி**, "**ய**" என்பது **உயிர்**, "**ந**" என்பது **மலம்**, "**ம**" என்பது **மாயை** ஆகும். சூக்குமத் திருவைந்தெழுத்து

இறைவனுடைய அருட் சக்தியாகும் என்பார் திருமூலர். ஐந்தெழுத்தை ஓதுவதால் துன்பத்தைக் கொடுக்கும் ஆணவம், கன்மம், மாயை, மாயேயம், திரோதாயி ஆகிய ஐந்து மலங்களும் நீங்கும். நம்முடைய வினைகள் ஒழியும். நமது இறப்புக்கும், பிறப்புக்கும் காரணமாக இருந்து வரும் பாசம் உயிரைப் பற்றாது, பாசம் நீங்கிய பொழுது உயிரானது சிவத்தின் தன்மையையும் பெறுகின்றது.

தூல ஐந்தெழுத்தை ஓதி ஓதிப் பக்குவம் பெற்றதன் அடிப்படையில் சூக்கும ஐந்தெழுத்தை ஓதும் தகுதியைப் பெறலாம் எனச் சைவ நூல்கள் கூறுகின்றன. நமச்சிவாய என்னும் நாமத்தை நாள்தோறும் எண்ணி எண்ணித் தீக்கை பெறுபவர்கள் அடுத்த கட்டமாகச் சூக்கும ஐந்தெழுத்தை ஓதும் பெருமையைப் பெறுகின்றார்கள் என்னும் சைவ நூல்கள் கூறுகின்றன.

இதையே மாணிக்கவாசகர் பெருமான்,

''நானேயோ தவம் செய்தேன் சிவாயநம எனப் பெற்றேன்
தேனாய் இன்அமுதமாய்த் தித்திக்கும் சிவபெருமான்
தானே வந்து எனதுள்ளம் புகுந்து அடியேற்கு அருள் செய்தான்
ஊனாறும் உயிர் வாழ்க்கை ஒறுத்தன்றே வெறுத்திடவே''

என்று பாடுகிறார்.

ஐந்தெழுத்தின் மகிமை

சிவாய நம என்று சிந்தித்து இருப்போர்க்கு அபாயம் ஓர்நாளும் இல்லை என்பது சான்றோர் வாக்கு. ஓர் முறை ஸ்ரீ ஆதி சங்கர பகவத் பாதர் தமது யோக பலத்தால் திருக்கயிலை சென்று இறைவனை தரிசித்து ஸ்ரீ சிவ பஞ்சாக்ஷர ஸ்தோத்திரத்தைப் பாடி துதித்தார். **''நாகேந்திர''** என்று தொடங்கும் முதல் ஸ்லோகம் பாடி ''யோக லிங்கத்தையும்'', **''மந்தாஹினி''** என தொடங்கும் இரண்டாவது ஸ்லோகத்தை பாடிப் ''போக லிங்கத்தையும்'', **''சிவாய கௌரி''** எனத் தொடங்கும் மூன்றாவது ஸ்லோகத்தைப் பாடி ''வர லிங்கத்தையும்'', **''வஸிஷ்ட''** எனத் தொடங்கும் நான்காவது ஸ்லோகத்தைப் பாடி ''முத்தி லிங்கத்தையும்'', **''யக்ஷ ஸ்வரூபாய''** எனத் தொடங்கும் ஐந்தாவது ஸ்லோகத்தைப் பாடி ''மோக்ஷ லிங்கத்தையும்'' சிவபெருமானிடம் இருந்து பெற்றதாக வரலாறுகள் கூறுகின்றன.

மேலும், 12-ந் திருமுறையில் சேக்கிழார் பெருமான் சோழ நாட்டின் சிறப்பினைக் கூறுகையில் ''ஓதிய எழுத்தாம் அஞ்சும் உறுபிணி வரத்தாம் அஞ்சும்'' என்கின்றார். சோழ நாட்டு மக்கள் மனமுருகிப் பஞ்சாக்ஷரத்தை ஓதுகின்றமையால் நோய்கள் அவர்களிடம் செல்ல அஞ்சுகின்றனவாம்.

''ஆதி மந்திரம் அஞ்செழுத்து................ என்னும் பாடலில் நமச்சிவாய மந்திரமே எல்லா மந்திரங்களுக்கும் ஆதியானது எனவும்

ஐந்தெழுத்தை ஓதுவோர்கள் நோக்கும் திசையில் கூட மற்ற மந்திரங்களின் செயல் சிறிதும் செல்லாது என கூறுகின்றார்.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் சிவபெருமான் தன் திருவருளால் அனுப்பப்பட்ட யானையின் மீது அமர்ந்து திருக்கயிலாயம் சென்றார். இதை அறிந்த சேரமான் பெருமாள் நாயனார் தமது குதிரையின் காதில் திரு ஐந்தெழுத்தை ஓத, அக்குதிரையும் விண்ணிலே பறந்து முதலில் கயிலாயம் சென்று அடைந்தது எனப் பெரியபுராணத்தால் அறிகின்றோம்.

ஆனால் நாயனார், திரு ஐந்தெழுத்தைப் புல்லாங்குழலில் வைத்து ஊதியே, இறை அருளால் மீண்டும் இங்கு வாரா வழி அருளப் பெற்றார்.

திருநாவுக்கரசரின் பெருமையை உணராத பல்லவ மன்னர் அவரைக் கல்லில் கட்டிக் கடலில் பாய்ச்ச ஆணையிட்டான். நாவுக்கரசரும் திருவைந்தெழுத்தை மனதினில் நிறுத்திச் ''சொற்றுணை வேதியன்'' என்னும் பதிகத்தைப் பாடக் கல் கடலில் மிதந்தது. கயிறுகள் அறுபட்டன. கல்லே தெப்பமாயிற்று.

சமணர்கள், அரசனின் உடன்பாட்டுடன், சம்பந்தப் பெருமான் தங்கியிருந்த திருமடத்திற்குத் தீ வைக்க முயன்றனர். திருவைந் தெழுத்தையே எப்பொழுதும் ஓதும் சம்பந்தப் பெருமானிடம் அந்தத் தீ செல்லப் பயந்து தன்னை ஏவியதற்குக் காரணமான பாண்டிய மன்னனையே பற்றிக் கொண்டது.

திருஞானசம்பந்தப் பெருமான் திருமுறைகளில் திருவைந்தெழுத்து

இவ்வாறு மகா மகிமை வாய்ந்ததும், மகா சக்தி வாய்ந்ததும் ஆன திருவைந்தெழுத்தின் சிறப்பினை ஆளுடைய பிள்ளையாராகிய திருஞானசம்பந்த மூர்த்தி நாயனாரின் திருப்பாடல்களிலும் காணலாம்.

''நல்லவர் தீயவர் எனாது நச்சினார்
செல்லல் கெடச் சிவ முத்தி காட்டுவ
கொல்ல நமன் தமர் கொண்டு போமிடத்து
அல்லல் கெடுப்பன அஞ்செழுத்துமே''

இறைவன் முன் அனைவரும் சமம். அதுபோல் நல்லவர் தீயவர் என்று பாகுபாடு இல்லாமல், மனம் விரும்பி உள்ளன்போடு திருவைந்தெழுத்தைச் செபிப்பவர்களானால், அவர்களின் துன்பங்கள் நீங்கி முத்திப் பேற்றினை அடைவார்கள். மேலும் எம தண்டனை இல்லாமல் போகும்.

இமயன் தூதரும் அஞ்சுவர் இன்சொலால்
நயம் வந்து ஓதவல்லார்தமை நண்ணினால்

நியமத்தால் நினைவார்க்கு கினியன் வெற்றி
நயனன் நாமம் நமச்சி வாயவே

தினந்தோறும் நமச்சிவாய மந்திரத்தைச் செபித்துச் சிவபெருமானை வழிபாடு செய்யும் சிவநேய செல்வர்களை மட்டுமின்றி அவர்களைச் சார்ந்த மற்றவர்களையும் யம தூதர்கள் பிடிக்க அஞ்சுவார்கள். திருவைந் தெழுத்தைச் செபிப்பவர்களின் பக்கத்தில் செல்பவரிடமே எமதூதர் செல்லார் எனில், செபிப்பவர்களின் சிறப்பைச் சொல்லவும் வேண்டுமோ.

தும்மல் இருமல் தொடர்ந்த போழ்தினும்
வெம்மை நரகம் விளைந்த போழ்தினும்
இம்மை வினையடர்த் தெய்தும் போழ்தினும்
அம்மையினும் துணை அஞ்செழுத்துமே.

இடரினும், தளரினும், தும்மும் பொழுதும், இருமும் பொழுதும், நரக வேதனை வந்தெய்தும் போதும், முற்பிறப்பில் செய்த வினை இப் பிறவியில் வந்து துன்புறுத்தும் போதும் நாம் மறவாமல் ஓதும் மந்திரம் திருவைந்தெழுத்தே ஆகும். அவ்வாறு செய்கையில் அதுவே நமது மறுபிறப்பிற்கும் துணையாய் வந்து சேரும்.

துஞ்சலும் துஞ்சல் இலாத போழ்தினும்
நெஞ்சகம் நைந்து நினைமின் நாள்தோறும்
வஞ்சக மற்றுஅடி வாழ்த்த வந்தகூற்று
அஞ்ச உதைத்தன அஞ்செழுத்துமே.

இப்பாடலில் நாம் தூங்கும் போதும் கூட திருவைந்தெழுத்தை நினைக்க வேண்டும் என்கிறார் சம்பந்தர். சிவாயநம என்று எப்பொழுதும் எண்ணிக் கொண்டு மனதை ஒருமைப்படுத்த வேண்டும். நம்மை மறந்த நிலையிலும் சிவநாமத்தை மறவாமல் இருத்தல் வேண்டும். மனதில் வஞ்சனை இல்லாமல் செபிக்க வேண்டும். அவ்வாறு செய்யும் அடியார் களிடம் எமன் வந்தால் உதைபட்டுச் செல்வான். சிந்தையிலே இறைவனுடைய நாமமாகிய மந்திரத்தை நிலையாக நிறுத்தி வைக்கப் பழகினோமானால் இறப்பு, பிறப்பு என்னும் நிலைகளிலிருந்து விடுபட்டு, இறைவனடியைப் பெற்று என்றும் மாறாத இன்பத்தில் திளைத்து நிற்கலாம் என்பது அருள் அனுபவமாம்.

மந்திரம் நான்மறையாகி, வானவர்
சிந்தையுள் நின்று அவர்தம்மை ஆள்வன
செந்தெழல் ஓம்பிய செம்மை வேதியர்க்கு
அந்தியுள் மந்திரம் அஞ்செழுத்துமே.

நான்மறைகளின் முடிவான மந்திரமாக நிற்கின்றது திருவைந்தெழுத்து. வானவர்களாகிய தேவர்களுடைய சிந்தையில் நின்று அவர்களை

ஆளுகின்றது. மேலும் தூய்மையான மனம் பொருந்திய அந்தணர்கள் காலை, நண்பகல், மாலை என்று எப்பொழுதும் ஓதுவது ஐந்தெழுத்து மந்திரமே என்றும் திருஞானசம்பந்தப் பெருமான் கூறுகிறார்.

கொல்வா ரேனுங் குணம்பல நன்மைகள்
இல்லா ரேனும் இயம்புவர் ஆயிடின்
எல்லாத் தீங்கையும் நீங்குவர் என்பதால்
நல்லார் நாமம் நமச்சி வாயவே.

கொலைத் தொழிலை செய்பவராயினும், நல்ல குணங்கள் ஏதும் இல்லாதவராயினும், ''ஓம் நமசிவாய'' என்ற மகா மந்திரத்தை இயம்புவாராயின் எல்லா விதமான தீங்குகளில் இருந்தும் விடுபடுவர் என்று சம்பந்தப் பெருமான் கூறுகிறார்.

நரக மேழ்புக நாடின ராயினும்
உரை செய்வாயின ராயின் உருத்திரர்
விரவியே புகுவித்திடும் என்பரால்
வரதன் நாமம் நமச்சி வாயவே.

ஏழு வகை நரகமும் செல்லத் தக்கவர்களானாலும், திருவைந்தெழுத்தை மனம் உருகச் செபிப்பவராயின், நரகம் புகாமல் உருத்திர கணங் களுடன் சேர்ந்து வசிக்கும் பேறு பெறுபவர்கள் ஆவர்.

காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி
ஓதுவார் தமை நன்னெறிக்கு உய்ப்பது
வேதம் நான்கினும் மெய்ப் பொருளாவது
நாதன் நாமம் நமச்சி வாயவே.

நான்கு வேதங்களுக்கும் மெய்பொருளாக விளங்குவது நமச்சிவாய திருமந்திரமாகும். அம்மகா மந்திரத்தை உள்ளன்புடன், மனம் உருகி, கண்ணீர் மல்க ஓதுபவர்கள் இறைவனடி சேர்ந்து உய்வார்கள் என்பதில் ஐயமில்லை என்று ஞானசம்பந்தப் பெருமான் கூறுகிறார்.

அருமையான ஐந்தெழுத்து மந்திரத்தைப் ''பொன்னான மந்திரம்'' என்று திருமூலர் குறிப்பிடுகின்றார். இதனையே மாணிக்கவாசகர் ''நமச்சிவாய வாழ்க'' என்று அருளிச் செய்தார். ''நந்தி நாமம் நமச்சிவாயவே'' என்கிறார் திருஞானசம்பந்தர். ''நற்றுணையாவது நமச்சிவாயவே'' என்கிறார் அப்பர் பெருமான். திருவைந்தெழுத்தாவது உலகிலும், உயிரிலும், உடலிலும் பரவி நிற்கும் உள்ளத்தோடு நிலைத்து நிற்பதும் ஐந்தெழுத்தாகும். திருமூலரும் சிவ சிவ என்கிலர்................ என்ற பாடலில் சிவ சிவ எனச் சொல்வார்கள், தீவினை அழிந்து, ஒளி உடல் பெற்று, சிவமாம் தன்மை பெற்றுச் சிவகதி அடைவர் என்று கூறுகின்றார். எல்லாவற்றையும் அருளவல்லது திருவைந்தெழுத்தாகும்.

31. சம்பந்தரும் சாத்திரங்களும்

சு. சாவித்திரி, புதுவை.

உலகைப் பண்படுத்துவதற்கென்றே திருவருள் வயத்தால் அவதரித்து, ''சிந்தனையை உன்றனக் காக்கி'' என்றது போல் சிந்தையைச் சிவமாக்கித் திருவருளோடு ஒன்றிச் சென்ற இடமெலாம் திருவருளைக் கண்டு அவனருளாலே அவன்தாள் வணங்கி அவனருள் உள்நின்று உணர்த்த உரைக்கப் பெற்ற தோத்திரங்களே பல்லாற்றானும் உயர்ந்தவை. 'எனதுரை தனதுரையாக' வந்த தோத்திரங்களாகிய பன்னிரு திருமுறைகளே உயிர்கட்கு உலகளிக்க (முத்தி) வல்ல உயர்ந்த கருவூலங்கள். அவற்றுள் முதல் ஏழு திருமுறைகள் தேவாரம் என்ற சிறப்புப் பெயருடையன.

அவற்றுள் முதல் மூன்று திருமுறைகள் நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பும் ஞானசம்பந்தன் அருளிச் செய்தவை. சைவநெறி தழைத்தோங்க மிகு சைவத்துறை விளங்கப் பூதபரம்பரை பொலியப் புனிதவாய் மலர்ந்தழுத திருஞானசம்பந்தருக்குக் கருணைத் திருவடிவான அம்மை, சிவபெருமான் அருளுதலும், சென்றணைந்து எண்ணரிய சிவஞானத்தின்னமுதங் குழைத்தருளி 'உண்ணடிசில்' என ஊட்ட உண்ட திருவாயால் மூன்று வயதிலேயே பாலுண்ட வாய் புலர்வதன் முன் 'தோடுடைய செவியன்' எனும் மெய்ம்மை மொழித் திருப்பதிகம் பிரமபுரம் மேவினாரைப் பாடலுற்றார்.

ஓதாதுணர்ந்த முத்தமிழ் விரகர் அருளிய பதிகங்கள் 'திருக்கடைக் காப்பு' என்றும் திருநாவுக்கரசர் பெருமான் அருளியவை 'தேவாரங்கள்' என்றும் சுந்தரர் பெருமான் அருளியவை 'திருப்பாட்டு' என்றும் பழமையில் வழங்கினர் என அறிகின்றோம். மூவர் பாடல்களும் பண் இசைப்பாடல்களே.

தெய்வத் திருமுறைகள் தோன்றிச் சில நூற்றாண்டுகளுக்குப் பின்னரே தமிழ் சாத்திரங்களாகிய சைவ சித்தாந்த சாத்திரங்கள் தோன்றின. காழியர் கோனின் திருவெண்காட்டுப் பதிகம் படித்து முக்குள நீராடி வேண்டிப் பிறந்தவர் சிவஞானபோத ஆசிரியர் மெய்கண்டதேவர் என்பது வரலாறு. இத்தகைய சிறப்புகள் மிக்கவை திருமுறைகள். சைவம் பெருக்க வந்த திருமுறைகள் பன்னிரண்டு. தமிழ்நாட்டில் சிறந்தோங்கியுள்ள சைவ நெறி சித்தாந்தத்தின் மெய்ப் பொருளியல்

கருத்துக்களை வகைப்படுத்திக் கூறும் நூல்கள் மெய்கண்ட நூல்கள். இச்சாத்திர நூல்கள் பதினான்கு என்று பெரியோரால் வரையறை செய்யப்பட்டுள்ளன.

முத்தமிழ் விரகராம் முதல்வர் இசைவளர் ஞானசம்பந்தரின் முதல் மூன்று திருமுறைப் பாடல்கள் அரிய செந்தமிழ்க் கருவூலங்கள். பண் இசைப்பாடல்கள் - இயற்கை வருணனைகள் நிறைந்தவை - சொல்நயம் பொருள் நயம் இலக்கண நயம் உடையவை. பண்டைக் கால விழாக்கள், கோயில்களின் வரலாறுகள், பக்திநெறி, முக்திநெறி போன்றவை பற்றியும் அவர்தம் பாடல்களால் அறியலாம். எண்ணரிய திருநெறிய கருத்துக்கள் உடையன. சைவ சித்தாந்த சாத்திரக் கருத்துக்கள் நிறைந்தவை. சிரபுரத்துப் பிள்ளையாரின் திருமுறைகள் உணர்த்தும் சாத்திரக் கருத்துக்கள் பற்றிய சில ஆய்வுகள்.

இறைவர் திருமைந்தர் தம் ஒவ்வொரு பதிகத்திலும் எட்டாவது பாடல் இராவணன் பற்றியும் (ஆணவம்) ஒன்பதாம் பாடல் மால், அயன் பற்றியும் (கன்மம்) பத்தாம் பாடல் பௌத்தர்-சமணர் பற்றியும் (மாயை) பாடியுள்ளார். அவர்தம் பதிகங்களை ஓதுவார்தம் ஆணவம், கன்மம், மாயை எனும் மும்மலங்களும் நீங்கி இறைவன் திருவடிகளைச் சேர்தற்பொருட்டே அனைத்துப் பதிகங்களும் இம்முறையே பாடப் பட்டுள்ளன. இறுதிப் பாடல் திருக்கடைக் காப்பு எனப்படும்.

பல்லுயிரும் களிகூரத் தம் பாடல் பரமர்பாற் செல்லுமுறை பெறுவதற்குப் பாலறாவாயர் ''தோடுடைய செவியன்'' எனும் மெய்ம்மை மொழித் திருப்பதிகம் இசைத்தார். இறைவன் செவியையே முதற்கண் கூறினார். ''தோடுடைய'' எனக் கூறியதால் இறைவன் அம்மையை இடப்பாகத்தே உடையவன் என்பதைப் புலப்படுத்தினார். ''முதல் உருப்பாதி மாதர் ஆவதும் உணரார்''. (சித்தியார்) என்பது, ''அம்மையப்பரே உலகுக்கு அம்மையப்பர் என்று அறிக, அம்மையப்பர் அப்பரிசே வந்து அளிப்பர்'' (திருக்களிற்றுப்படியார்)

தன் கருணைத் திறத்தினால் உயிர்களுக்கு அருள்பாலிக்கும் பொருட்டு இறைவன் எழுந்தருளுகின்றபோது தன் அருட்சக்தியோடு கூடவே தோற்றம் அளிப்பான் என்பதனைச் சம்பந்தர் பெருமான் அடுத்தும் திருப்புறவம் (1-7) பதிகத்தின் ஒவ்வொரு பாடலின் இறுதியிலும் 'இமையோர் ஏத்த உமையோடு இருந்தானே' எனக் கூறி உள்ளமை உணரற்பாற்று.

''உண்ணாமுலை உமையாளொடும் உடனாகிய ஒருவன்'' என்பதால் அம்மையப்பனின் உடனாய நிலையை உணர்த்தி அர்த்தநாரீசுவர வடிவைப் புலப்படுத்துகின்றார். இதனை இறைவனது சொரூபநிலை

எனக் கூறும் சாத்திரங்கள். சொரூபநிலை என்பது இறைவனது இயற்கை நிலையாம். ''அம்மையோடு அப்பனாகிச் செறிவு ஒழியாது நின்ற சிவனடி சென்னிவைப்பாம்'' அருள்நந்தி சிவனாரின் திருவாக்கும் காண்க.

''தன்நிலைமை மன்னுயிர்கள் சாரத்தரும் சத்தி
பின்னம் இலான் எங்கள் பெருமான்'' (திருவருட்பயன் - 2)

''அருளது சத்தியாகும் அரன்தனக்கு, அருளையின்றித்
தெருள் சிவம் இல்லை அந்தச் சிவமின்றிச் சத்தி இல்லை''
(சித்தியார் - 239).

உயிர்களுக்கு வீட்டின்பம் அளிப்பதாகிய அருள் இறைவனின் சத்தியாகும். பிள்ளைப் பெருமான் கூறிய அர்த்தநாரீசுவர சொரூப நிலை தத்துவத்தையே, அதாவது திருவருளும் (சத்தியும்) இறைவனும் பிரிப்பின்றி உடனாயவை என்பதையே சாத்திரங்களும் உணர்த்துகின்றன.

முதலாம் பதிகத்தின் இரண்டாவது பாடலில் ''கற்றல் கேட்டல் உடையார் பெரியார் கழல் கையால் தொழுதேத்த'' - கற்றல் கேட்டல் - இறைவன் புகழையே அன்றி வேறொன்றையும் கல்லாதும் கேளாதும் இருக்கும் பெரியோர்களாலேயே இறைவன் தொழற்குரியவன். ''கல்லா நெஞ்சில் நில்லானீசன்'' (3-40-3) இறைவனை இடைவிடாது தியானிக்காத உள்ளத்து நில்லான். ''கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியை'' (9-5-2 சேந்தனார்). '' கற்றவர்கள் உண்ணும் கனியே போற்றி'' (6-32-1) என்பன ஒப்பு நோக்கற்குரியன.

''கற்றல் கேட்டல் உடையார் பெரியார்'' எனவே சிந்தித்தல், கேட்டல், தெளிதல், நிட்டை கூடுதல் முதலியனவும் உணர்த்தினார் என்று அறியலாம். இதனையே, ''கேட்டலுடன் சிந்தித்தல் தெளிதல் நிட்டை கிளத்தல் என ஈர் இரண்டாம் கிளக்கின் ஞானம்'' என்று சித்தியார் கூறுகிறது. இறைவன் பற்றி அறிந்து அவனருளையே - திருவடியையே சிந்தித்துத் தெளிந்தால் இறைவன் குருவாக வந்து ஞானம் அருள்வான் என்பது.

ஈறாய் முதல்ஒன்றாய் இருபெண் ஆண்குணம் மூன்றாய்
மாறா மறைநான்காய் வருபூதம் அவைஐந்தாய்
ஆறார் சுவை ஏழோசையோடு எட்டுத்திசை தானாய்
வேறாய் உடன்ஆனான் இடம்வீழிம் மிழலையே. (1-11-2)

ஒன்றாய், வேறாய், உடனாய் நிற்றல் என்னும் மூன்று தன்மையும் ஒருங்கே விளங்க நிற்கும் நிலையே அத்துவிதமாகும். இந்நிலையைச் சாத்திரங்கள் தோன்றுதற்குச் சில நூறு ஆண்டுகளுக்கு முன்னரே நம் தமிழ் ஞானசம்பந்தர் பெருமான் விளக்கமாக உணர்த்தியுள்ளார்கள்.

சிவஞானபோதம் கூறும் ''அவையே தானேயாய்'' என்ற அத்துவித இயல்புக்கும் இப்பாடலே சான்று.

''ஈறாய் முதல் எட்டுத்திசைதானாய்'' என்பது முடிய இறைவன் அவையே தானேயாய் பிரிப்பின்றி நீரும் குளிர்ச்சியும், தீயும் சூடும்போல் சத்தியும் சிவமுமாய்ப் பிரிப்பின்றி **ஒன்றாய்** இருந்து அருள்புரியும் நிலையையும், கண் காண்பதற்கு ஓர் ஒளி வேண்டும். காணும் கண்ணிற்குச் சூரிய ஒளி உதவுவது போல் **வேறாய்** இருந்து அருள்பாலிக்கும் நிலையையும், கண் ஒளி ஒரு பொருளைப் பார்த்தாலும் அக்கண் ஒளியுடன் உயிர் கலந்தாலன்றிக் கண் காணாதவாறு போல இறையருள் உள்நின்று உயிர்களுடன் **உடனாய்** இருந்து அருள் புரியும் நிலையையும் ஆகிய மூவகை நிலைகளை உணர்த்துகின்றார் சம்பந்தர் பெருமான். திருவருளில் அழுந்தி நிற்கும் நிலை அருள்நிலை. திருவருள் வழியாகச் சிவத்தில் அழுந்தி நிற்கும் நிலை ஆனந்த நிலை. கண் சூரியனது ஒளியைப் பொருந்துவது போன்றது அருள்நிலை. அவ்வொளியைப் பொருந்திய கண் அதன் வழியாகச் சூரியனைக் கண்டு அதில் அழுந்துவது போன்றது ஆனந்தநிலை. இதையே காழியர்கோன் வேறாய் உடனாய் ஆனான் என்கிறார். இப்பெறற்கரிய தேவாரப் பாடலின் கருத்துக்களையே ''ஈறாகிஅன்றே முதலொன்றாய் ஈங்கு இரண்டாய்........:வேறாய் உடனாய் இருக்கும் உருவுடமை'' - என்ற திருக்களிற்றுப்படியார் பாடலில் பொதிந்து வைக்கப்பட்டிருக்கின்றது.

திருமுறைகளின் பிழிவே சைவ சித்தாந்தம் என்ற அறிஞர்களின் கூற்றிற்கு எம்பந்த வல்வினை நோய் தீர்த்திட்டு எமையாளும் சம்பந்தப் பெருமான் அருளிய இத்திருப்பாடலே சான்றாகும்.

''அறிநீர்மையில் எய்துமவர்க்கு அறியும் அறிவு அருளி'' (1-17-6) அறிநீர்மையம் எனின் அறிவான், அறியப்படும் பொருள், அறிவு ஆகிய மூன்று தனி நிலையற்று ஒன்றாயிருந்து அறியும் தகைமையுடைய பரம ஞானிகளுக்கே சிவமாகிய தன்னை அறியும் அறிவை இறைவன் அருளுவான். இறைவன் அறிவித்தாலன்றித் தானாக அறியும் அறிவு ஆன்மாக்களுக்கு இல்லை. இறைவன் பேரறிவாளன். உயிர்கள் இறைவன் அறிவிக்க அறியும் இயல்புடையன என்ற சித்தாந்த சாத்திரக் கருத்தை 'அறியும் அறிவு அருளி..........' என்று வேதவாயர் விளம்பியுள்ளார்.

... ...சாய்க்காட்டான் தாள் நிழற்கீழ்
ஓங்கினார் ஓங்கினார் என உரைக்கும் உலகமே (2-41-5)

சைவ மைந்தர் தம் இத்திருப்பாடல் வரிகள் கூறும் சாத்திரக் கருத்துக்கள் இறைவன் திருவடிக்கீழ் ஓங்கினவரே ஓங்கினவர் - மற்று எங்கு

ஓங்கினும் அது ஓங்குதல் ஆகாது. தாழ்தலே ஆகும் என உரைக்கும் உலகு என்று இறைவன்தாள் நிழலையே அடைக்கலமாக அடையக் கூறுகின்றார். காழியர் கோன் கருத்தைக் கொண்ட சாத்திரக் குறள் ஒன்று 'ஓங்கு உணர்வின் உள்அடங்கி உள்ளத்துள் இன்பு ஒடுங்கத் தூங்குவர்' (திருவருட்பயன் - 91), சீவன் முத்தர்கள் நிறைந்த ஞானத் தினுள்ளே அழுந்திக் கிடந்து (திருவடிக்கீழ்) திருவருளில் அடங்கி நிற்கும் நிலையை உணர்த்தினார் ஞானசம்பந்தர்.

ஆட்பாலவர்க்கு அருளும் வண்ணமும் ஆதிமாண்பும்
கேட்பான் புகில், அளவில்லை கிளக்கவேண்டா
கோள்பாலனவும் வினையும் குறுகாமை எந்தை
தாள்பால் வணங்கித் தலைநின்று இவைகேட்கத் தக்கார்.

(3-54-4)

என்பது நான்மறையின் தனித்துணைவர் தம் திருவாக்கு.

இருவினை ஒப்பும் மலபரிபாகமும் வந்தெய்தும் பொழுது, அந்தந்த உயிரின் பக்குவத்திற்கேற்பத் திருவருள் அந்த உயிர்கட்கு அருள் பாலிக்கும். அவ்வருள் பாலிப்பை அப்படியே அனுபவிப்பதன்றி அதனை ஆராய்ச்சி செய்யக் கூடாது என்பதை இப்பாடல் உணர்த்துகின்றது. இக்கருத்தையே ''கண்டபடியே கண்டு காணாமை காணாமற் கொண்ட படியே கொண்டு இரு'' (திருவருட்பயன் - 60) உரைக்கின்றது.

திருமுறைக் கருத்துக்களின் சாரப்பிழிவே சைவ சித்தாந்த சாத்திரங்கள் எனும் அறிஞர்தம் கருத்துப்படியே திருமுறைகளில் ஒன்றி ஓதி உலகெலாம் உணர்ந்து ஓதற்கரியவன் தாள் நிழல் சேர்வோம். ஓதாதுணர்ந்த முத்தமிழ் விரகன் சம்பந்தன் ''திருவாழ் கொளி புத்தூர்'' (1-40) பதிகத்தின் ஒவ்வொரு பாடலின் ஈற்றடியிலும் இறைவன் திருவடியைச் சார்ந்தார்க்குப் பிறவித் துயர் தீர்க்கும் சிறந்த மருந்து ''அரன் கழல் சேர்தலே'' என உணர்த்துகின்றார். இதனை ''அயரா அன்பின் அரன் கழல் செலுமே'' சிவஞானபேதம் (8) உணர்த்துகின்றது. அன்றலர்ந்த பூவின் மதுவினை நிறைய வாரி ஆவலுடன் உண்ட வண்டு அப்பூவிலேயே மயங்கிக் கிடத்தல் போல ஆன்மா சிவனது திருவடி வியாபகத்துள் அடங்கி அழுந்தி நிற்கும் நிலை அது. நிட்டை நிலையிலேயே அரன் கழல் செல்லுதல். இப்பதிகம் முழுவதும் ஈற்றடியில் இதனைக் கூறி இறைவன் திருவடியையே நற்றுணையெனப் பற்றிக் கொள்ள வேண்டுதலை அறிவுறுத்துகின்றார்.

மங்குல்தோய் மணிமாட மதிதவழு நெடுவீதிச்
சங்கெலாங் கரைபொருது திரை புலம்புஞ் சாய்க் காட்டான்
கொங்குலா வரிவண்டின் இசைபாடு மலர்க்கொன்றைத்
தொங்கலா னடியார்க்குச் சுவர்க்கங்கள் பொருளலவே (2-41-7)

சிவபெருமானை அடைந்த அடியவர்களுக்குச் சுவர்க்கங்கள் ஒரு பொருளெனத் தோன்றா. உயிர் பெறத்தக்க மிக உயர்ந்த பேரின்பம் சிவானுபவம் ஒன்றே. அதனைப் பெற்றோர் வேறு எந்தப் பதத்தையும் விரும்பார் என்பதையே உணர்த்துகின்றார். ''உம்பர் பிரான் உற்பத்தி ஆதிகளுக்கு உரியன் உயிர்தானும் சிவானுபவம் ஒன்றினுக்கும் உரித்தே'' என்பது சித்தியார் உணர்த்தும் உண்மை. இதனையே ''ஐந்தொழிலும் காரணர்கள் ஆம் தொழிலும் போகம் நுகர் வெந்தொழிலும் மேவார் மிக'' (திருவருட்பயன் - 92) உணர்த்துகின்றது. உலகெலாம் உய்ய வந்த வளரொளி ஞானம் உண்டார் தம் திருமுறைகளை ஓதிச் சிவானுபவம் பெறுவோம்.

அஞ்செழுத்தின் மெய்யுணர்ந்தவர் அவர்தம் உபநயன காலத்தில் மறை நான்கும் தந்தோம் எனக் கூறிய மறையவர்க்கு, முந்தை முதல் மந்திரங்கள் எல்லாம் தோன்றும் முதலாகும் மூலமந்திரம் திருவைந் தெழுத்துப் பதிகத்தை அருளிச் செய்தார். தீதகற்ற வந்தருளிய திருஞான சம்பந்தர் சோதியில் கலக்கும்போது மாயிரு ஞாலம் உய்யும் வழி யினை அருளிச் செய்வான் வேண்டி, ஞான மெய்ந்நெறிதான் யார்க்கும் நமச்சிவாயச் சொலாம் என்றான சீர் நமச்சிவாயத் திருப்பதிகத்தை அங்கண் வானமும் நிலனும் கேட்க அருள் செய்தார்.

தேவாரம் அருளிய மூவர் முதலிகளுமே தூல பஞ்சாக்கரமாகிய நமச்சிவாயத் திருப்பதிகம் ஒவ்வொன்றருளியுள்ளனர். கற்றவர்கள் தொழுதேத்தும் காழி வேந்தர் தூலசூக்கும, அதிசூக்கும பஞ்சாக்கரங் களை உள்ளடக்கித் தொகுப்பாகப் ''பெற்றம் உயர்ந்தவர் தாள் சென்னிமேற் பேணும் உள்ளத்தொரு நாமத்து'' அஞ்செழுத்தின் பெருமையை உணர்த்து தற்குத் 'துஞ்சலும் துஞ்சல்' என்ற பஞ்சாக்கரத் திருப்பதிகம் ஒன்றும் அருளியுள்ளார். இத்திருவைந்தெழுத்தை உளம் உருகி தியானிக்காதவர் நெஞ்சில் நில்லான் ஈசன் என்கின்றார். ''கல்லா நெஞ்சின், நில்லான் ஈசன் சொல்லாதாரோடல்லோ நாமே'' (3-40-3) அஞ்செழுத்தைச் சொல்லாதாரோடு சேரோம் என்றே சொல்லுகின்றார். ''மந்திர நான் மறையாகி'' என்பதால் திருவைந்தெழுத்தே வேதம் என்றது. 'அஞ்செழுத்தே ஆகமும் அண்ணல் அருமறையும்... ... ... மோனந்தமா முக்தியும்' உண்மை விளக்கம் (44). அஞ்செழுத்தே ஆகமமும் வேதங்களும் ஆகும். பரமுத்தி நிலையை அடைவிப்பதும் திருவைந்தெழுத்தேயாகும் எனக் கூறுவது நோக்கற்குரியது.

''நாதன் நாமம் நமச்சிவாயவே'' இறைவன் ஐந்தெழுத்து வடிவில் நிற்பதால் அவனை ''நமச்சிவாயம்'' எனப் பெயரிட்டுச் சம்பந்தர், அப்பர் போன்ற அருளாளர்கள் அழைக்கின்றார்கள். நமச்சிவாயத் திருப்பதிகத்தின் ஒவ்வொரு பாடல் இறுதியிலும் இதை நிறுவுகின்றார்

காழியர்கோன். "படைக்கலமாக உன் நாமத்து எழுத்து அஞ்சு என் நாவில் கொண்டேன்" (4-81-8) நாவுக்கரசர் பெருமான் அருளியதும் நினைவு கூரத்தக்கது. "வீடு பிறப்பை அறுத்து மெச்சினார்... ... ... மாநடம் ஆடி உகப்பன அஞ்செழுத்துமே" (பஞ்சாக்கரத் திருப்பதிகம் - 7) சிறந்த திரு நடனத்தை ஆடி மகிழ்வனவும் திருவைந்தெழுத்துக்களாம். "சிவாய நம என்னும் திரு எழுத்து அஞ்சாலே அவாயம் அற நின்று ஆடுவான்" என்ற உண்மை விளக்கச் செய்யுட் கருத்தும் இதுவே. கூத்தப்பெருமானின் ஆனந்த நடனமும் திருவைந்தெழுத்தின் உட்பொருளைத் தெரிவிப்பதே. (உண்மை விளக்கம் - 44) "அஞ்செழுத்தே... ... ... ஆனந்த தாண்டவமும் ஆறாறுக்கு அப்பாலாம்" என்று கூறியுள்ளதும் நினைவு கூரத்தக்கது.

வினையிலிருந்து விடுபடுவதற்கு இறைவன் மீது எல்லையற்ற அன்பும், அவன் திருவடிகளை இறுகப் பற்றுதலும் இன்றியமையாதன என்னும் கருத்துக்கள் திருமுறையுள் பல இடங்களில் கூறப்பட்டுள்ளன.

"சூழ்தரு வல்வினையும் உடல் தோன்றிய பல்பிணியும்
பாழ்பட வேண்டுதிரேன் மிக ஏத்துமின்"

என்று புகலிவேந்தர் புகன்றுள்ளார். இக்கருத்தையே "ஏன்றவினை உடலோடு ஏகும் தோன்றில் அருளே சுடும்" என்று திருவருட்பயன் - (98) கூறுகின்றது. நுகர எடுத்துக் கொண்ட வினைகள் உடலோடு நீங்கும். இடையிலே புதிய வினை தோன்றுமாயின் அதனைத் திருவருளே சுட்டழிக்கும். நாதன் தாளினை விடாது பற்றித் தொழுதல் வீடுபேறு எளிதில் கிடைக்கும்.

"நாதனை நல்லூர்ப் பெருமண மேவிய
வேதன தாள்தொழ வீடெளிதாமே" (3-125-10)

வேதங்களின் பொருளான சிவபெருமானின் திருவடிகளை வழி படுவோர்க்கு வீடுபேறு எளிதில் கிட்டும்.

வம்பறா வரிவண்டு மணம் நாற மலரும் மதுமலர் நற்கொன்றையான் அடிஅலால் பேணா எம்பிரான் சம்பந்தர் இறைவன் திருவடியன்றிப் பிறவற்றைக் கருதாத உள்ளக் கருத்தினை உடையவர் என்பதைத் தானே கூறுகின்றார். அதனை அவர் பாடிய "கைச்சிறு மறியவன் கழலலாற் பேணாக் கருத்துடை ஞான சம்பந்தன்" (1-77-11) "கொன்றை சூடி, நின்ற தேவை அன்றி யொன்று, நன்றிலோமே" (3-40-2) என்ற இப்பாடல்களின் வரிகளால் நாம் அறிகின்றோம். நாமும் இறைவன் திருவடியன்றி வேறொன்றையும் எண்ணாது வினைகள் நீங்குவோமாக.

அருந்தமிழாகரர் செழுந்தமிழ்ப் பாக்களில் காணும் சைவ சித்தாந்த சாத்திரக் கருத்துக்களை அடியேனுக்கவர் பதம் தரும் பரிசால் அறிந்தவரை வரைந்துள்ளேன்.

32. சமுதாய உறவும் சமய உறவும்

பீ. சாவித்திரி, திருச்சி.

மண்வளம் பயிர் வளர்ச்சிக்குக் காரணமாவது போல மனவளம் ஆன்மீக வளர்ச்சிக்குக் காரணம் ஆகிறது. தெய்வ பக்தி மனிதனைக் கீழான செயல்களில் இருந்து காக்கிறது. மனபக்குவம் வளர்ந்துள்ளது என்பதைக் காட்டுவது இறை பக்தியே! தெய்வபக்தி இல்லாதவன் இரண்டு கால் மிருகத்திற்குச் சமம் என்பது பிரகலாதன் கூற்று. தெய்வ பக்தியும் ஒழுக்கமும் ஒரு சமூகத்தின் சிறந்த அலங்காரம். வாழ்க்கையே ஒரு ''சமயம்'' என்பார் ஸ்ரீ ராமகிருஷ்ணர். சமயத்தில் சாதனை (பழக்கமாக்குதல்) செய்தால் சமூகத்தில் சாதனை செய்யலாம். சமய உறவு, சமூகத்தின் உறவு நிலையில், திருஞானசம்பந்தர் நோக்கில், வாழ்வில் பிணைந்துள்ள தன்மையை ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கம்.

சமயமும், சமூகமும்

மனிதம் என்பது இலக்கியம். சமூகம் என்பது சமயம். சமூகம் வேறு சமயம் வேறு எனில் கலை வேறு வாழ்க்கை வேறு என்றாகி விடுமல்லவா? கலை கலைக்காக எனில் மரம் மரத்திற்காக பூ பூவிற்காக கனி கனிக்காக என இருத்தல் வேண்டுமன்றோ என்பார், கி.ஆ.பெ. ஆதலால் கலை வாழ்விற்காகவே. அதுபோல்தான் சமயம் சமூகத்திற்காக, சமூகம் சமயத்திற்காக. சமயம் என்பது மனித வாழ்வியல் நெறிகளைச்

சுருங்கச் சொல்வது
சுருக்கெனச் சொல்வது
வலிந்து சொல்வது
வலிமையாய் சொல்வது
தேர்ந்து சொல்வது
தெளிவாய் சொல்வது மட்டுமல்லாது,
செதுக்குவதில் மட்டுமல்ல
ஒதுக்குவதிலும் உள்ளது
உனக்குள் ஒரு சிற்பம்

என்பதை மனிதனுக்கு உணர்த்துவது. அங்ஙனமே சமூகம் என்பது சமய நெறிகளை,

அறிந்து சொல்வது
ஆழமாய் சொல்வது
இயல்பாய் சொல்வது
இயற்கையாய் சொல்வது
உடன்பட்டுச் சொல்வது
உறுதியாய் சொல்வது
நுகர்வு பண்பாட்டை
நுட்பமாய் சொல்வது

என அமைகிறது. அங்ஙனம் நோக்கும்போது சமூகமும் சமயமும் கட்டத்திற்குள் வட்டம் போலும், வட்டத்திற்குள் கட்டம் போலும் அமைந்து மனிதனை மனிதனாக்கும் மகத்துவத்தை செய்வது ஆகும்.

திருஞானசம்பந்தர்

கரையற்ற தெய்வ நலம் ஒன்று மனித குழந்தையாகி தெய்வ அமுதம் உண்டு தெய்வ இலக்கணம் பேசியது. அதுதான் அதாவது அவர்தான் ஞானசம்பந்தர் எனக் குறிப்பிடுவார் க. வெள்ளைவாரணம்.

சமரசப் பாதையை எப்போதும் திறந்தே வைத்திடு. கண்ணீரைக் கடவுளிடம் காட்டு அது விரைவில் காயும். நாம் செய்ய வேண்டியதை நன் முயற்சியோடு உரிய முறையில் செய்தே ஆக வேண்டும். எல்லாம் தெரிந்தவனும் இல்லை. எதுவும் தெரியாதவனும் இல்லை. அறவழியும் அருள்நெறியுமே இவ்வுலக இன்பம். கடும் உழைப்பு, நேர்மை, விடாமுயற்சி, உறுதியான சிந்தனைகள் ஆகியவை வெற்றிக்கு அடிப்படை களாகும் என்பதை மக்களுக்கு உணர்த்திய மாபெரும் மனோதத்துவ நிபுணர் திருஞானசம்பந்தர்.

சமய உறவைச் சமுதாயம் ஆக்கியமை

கி.பி.7-ம் நூற்றாண்டில் வாழ்ந்த திருஞானசம்பந்தர் எந்த எதிர்ப்பு இருந்தபோதிலும் நடக்க வேண்டியது நடந்தே தீரும் என்ற திண்ணிய எண்ணம் கொண்டவர். மிகப் பெரிய பாரத சமுதாயம் வெவ்வேறு தத்துவங்கள் மதங்களின் பிரச்சாரம் காரணமாகச் சிறுச்சிறு குழுக்களாகப் பிரிந்து இருந்தபோதும், வியாசர் வேதத்தைப் பிரித்து மக்கள் மத்தியில் அதை அனுஷ்டானமாக கொண்டு வந்தது போலத் திருஞானசம்பந்தர் மடாலயத்துத் தமிழை, மடாலயத்துச் சமயத்தைப் பக்தி இயக்கத்தை மக்கள் இயக்கமாக மாற்றினார். யாத்திரை மேற் கொள்ளல் பஜனைப் பாடல்கள், நித்திய வழிபாடு மூலம், ''நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பும் ஞானசம்பந்தன்'' எனப் போற்றப்பட்டார்.

இராமானுஜர் மக்களுக்கு முக்தி மந்திரத்தைச் சொல்லி நற்பேறு அடைய வைத்ததைப் போல, திருஞானசம்பந்தர் மூன்று வயதிலேயே

ஞானப்பால் உண்டு பின் வீடுபேற்றை மக்கள் அடைய ''மனித வாழ்வின் உண்மைப் பொருள் தியாகம்'' என்பதை சமயக் கொள்கை மூலம் சமூகக் கொள்கையை உருவாக்கினார்.

சமய உறவும் குடும்பமும்

''தோடுடைய செவியன்'' என்னும் பாடலின் மூலம் தந்தைக்கு சிவானுபவத்தை உணர்த்தியவர். அப்பாடலில் குடும்பமே சமயத்தின் ஆணிவேர் என்னும் தன்மையால் தமிழுக்குரிய இனிய அகப் பொருட்டுரையில் பாடி, ''எம்மையிது செய்தபிரான் இவனன்றே'' என்று நாயக நாயகி பாவத்தை நன்முறையில் வெளிப்படுத்தினார்.

உலகவர் காண தாளம் ஈந்தருளி திருகோலக்கா இறைவன் சம்பந்தரைப் பாடிப் பரவச் செய்து கேட்டார்.

''நாதன் நனிபள்ளி சூழ்நகர் கானக மாக்கியஃதே
போதின் மலி வயலாக்கிய கோன்''

என்ற ஆளுடைப்பிள்ளை திருவந்தாதி பதினேழாம் பாடல் இவர் மருதம் பாடி ''உழவன் சேற்றில் கை வைத்தால்தான் நாம் சோற்றில் கை வைக்க முடியும்'' என்ற கொள்கையை நமக்கு உணர்த்தி உள்ளார்.

மேலும் அடியார்க்காயினும் பொருள் தேவை என்பதைத் தந்தையார் யாகம் செய்ய பொருள் கேட்ட பொழுது,

இடரினும் தளரினும் எனதுறு நோய் தொடரினும் உன்கழல்
தொழுதெழுவேன்
கடல்தனில் அமுதொடு கலந்த நஞ்சை மிடறினில்
அடக்கிய வேதியனே
இதுவோ எமையாளு மாறீவ தொன்றெமக் கிலையேல்
அதுவோ உனதின்னருள் ஆவடு துறையரனே

எனப் பாடி பொருள் பெற்றார்.

அரசன்

''நால்வர் மெச்ச வாழ்; நால்வர் வழியில் செல்'' என்பன சைவ சமய உண்மையை உணர்த்துவன. வல்லவர்களுக்கு ஏற்படும் துன்பங்கள் ஏணிப்படிகள் போன்று அமைந்து முடிவில் அவர்களை உயர்த்துவதாகவே இருக்கும். நிலவு என்றைக்காவது சுட்டிருக்கின்றதா? சூரியன் என்றைக்காவது குளிர்ந்ததுண்டா? அவை தங்கள் இயல்பில் இயற்கையில் மாறாதது போல் நல்லவர்கள் துன்ப காலத்திலும் தங்கள் கடமையில் இருந்து மாறமாட்டார்கள் என்பதை உணர்த்தும் சம்பவம் சமணர்களைச் சம்பந்தர் வாதில் வென்ற திறம். சமயத்தைப் பரப்ப சம்பந்தர் மொழியைக் கருவியாகக் கொண்டார்.

"வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயது எல்லாம் அரன்நாமமே
சூழ்க வையகமும் துயர் தீர்கவே"

எனப் புறச்சமய இருளை நீக்கினார். "மந்திரமாவது நீறு" - திருநீற்று திருப்பதிகம் பாடிப் பாண்டியனை நோய் தீர்த்தார்.

அடியார்க் கூட்டம்

"முழவம் மொந்தை குழல் யாழ்ஒலி
சீராலே பாடல் ஆடல் சிதைவில்லாதோர்
ஏரார் பூங்காஞ்சி"

எனவும்

"தண்டு, உடுக்கை, தாளம், தக்கை சார
நடம் பயில்பவர் உறையும் பதி"

என அடியார்கள் பலர் இறைத் தொண்டு ஆற்றினர் என்று பாடியுள்ளார்.

நம்பியாண்டார் நம்பி தேவாரத்திற்குப் பண்ணிசை எங்களுக்கு உணர்த்த வேண்டுமென இறைவனை வேண்ட, இறைவன் திருநீலகண்டர் மரபில் மதங்கசூளாமணி அம்மையாரைக் கொண்டு பண்ணமைப்பீர் என அருள், அவ்வம்மையாரும் அவ்வாறே செய்தார்.

ஞானநூல் தனை யோதல் ஓதுவித்தல்
நற்பொருளைக் கேட்டறிதல், தான்கேட்டல் ஒன்றா
ஈனமிலா பொருளதனைச் சிந்தித்தல் ஐந்தும்
இறைவனடி அடைவிக்கும் எழில்ஞான பூசை.

என்ற அருணந்தி சிவாச்சாரிய சுவாமிகள் பாடலில் குறிப்பிடும் செயல்களை அடியார் கூட்டத்துடன் யாத்திரை சென்று நெல்லாயிரத்துறை ஈசனிடம் முத்து சிவிகை, குடை, சின்னம் முதலியவற்றைப் பெற்று ஈசன் அருளை மக்களிடத்தில் உணர்த்தினார்.

அதுமட்டுமன்றி நீலநக்கர், சிறுத்தொண்டர், கண்ணப்ப நாயனார் போன்றோரைப் போற்றிப் பாடி அடியார் கூட்டத்துடன் தம்மை இணைத்துக் கொண்டு ஒற்றுமையை நிலைநாட்டியவர்.

ஆண்பனையைப் பெண்பனையாக மாற்றி அடியார்க்கு உதவியவர். திருவீழிமிழலையில் திருநாவுக்கரசுடன் தங்கி இருந்தபோது பஞ்சம் உண்டாயிற்று. வறுமையில் இருப்போரிடம், 'மதக்கருத்தை போதிப்பது மூடத்தனம்' என எண்ணி கண்ணுதலோன் திருநீற்று சார் வினோர்க்கு

கவலை வருமோ? எனப் பாடி படிக்காசுப் பெற்று அடியார்கள் பஞ்சம் தீர்த்தார்.

பொதுமக்களின் துயர் களைதல்

சமயத் தொண்டர் என்போர் சமூகத் தொண்டரே என்பதை மெய்ப்பித்தவர் ஞானசம்பந்தர். எந்த நஷ்டம் வந்தாலும் அது ஏதாவது ஒரு இலாபத்தை சுமந்து கொண்டு வரும் என்பதை உண்மையாக்கியவர். இறைவனை உணர்வதே உயர்நெறி என்பதை திருப்பாலாச்சிராமத்தில் மழவன் மகள் நோய் தீர பதிகம் பாடினாள். திருச்செங்குன்றூரில் பனிநோய் தீர்த்தார். உலக மாந்தர்க்கு உறுதி பொருளை உணர்த்த திருவுளம் கொண்டு பூம்பாவையை உயிர்பெறச் செய்தார்.

தனது உபநயன சடங்கின்போது மந்திரத்திற்கு மூலமந்திரம் ‘துஞ்சலும் துஞ்சலிலாத போதினும்’ என்ற பஞ்சாக்கரப் பதிகம் பாடி இறை உணர்வை மேம்படுத்தியும், திருமணக் கோவிலில் திருமணம் காண வந்தோர் அனைவருக்கும் முக்தி கிடைக்க வழி வகுத்ததும் இவரது வாழ்வு சமூக அமைப்பில் இவர் கொண்ட சமய உறவு வெளிப்படுகிறது.

தேவார முறை வைப்பும், சம்பந்தரின் உள்ளமும்

திருநாவுக்கரசரை ‘அப்பர்’ என்று அழைத்தவர் திருஞானசம்பந்தர் எனில் நாவுக்கரசர் பெரியவர், சம்பந்தர் சிறியவர் இருப்பினும், மூன்று வயதிலேயே ஞானப் பால் கிடைக்கப் பெற்று உமையம்மையால் ஆட்கொள்ளப்பட்டதால் இவர் பாடிய தேவாரம் வைப்பு முறையில் முதலாயிற்று. ‘‘தோடுடைய செவியன்’’ முதல் பதிகமாயும், ‘‘நல்லூர் பெருமணம்’’ இறுதி பதிகமாகவும் அமைகின்றது.

ஞானசம்பந்தர் ஆணையிட்டுக் கூறிய தமிழ் மந்திரங்கள் தெய்வத் திருவருளை மக்களுக்கு உணர்த்துவன.

‘‘காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி
ஓதுவார் தமை நன்னெறிக் குய்ப்பது
வேதம் நான்கினும் மெய்ப் பொருளாவது
நாதன் நாமம் நமச்சி வாயவே’’

என்னும் பாடல் உலகோர் உய்ய வழிகாட்டும் பாடலாகும்.

நம்பிக்கை உறுதியாக இருக்கும்போது பிரார்த்தனை நீண்டதாக இருக்கத் தேவையிருக்காது. மனிதனுக்கு இலட்சியம் இருக்க வேண்டும். இலட்சியமே வாழ்க்கை என்பதைத் தன் பதினாறு வயதுக்குள்ளேயே உலகோர் உணர வகைச் செய்தவர் திருஞானசம்பந்தர்.

நீதியாகிய பல ஆறுகள் வந்து தேங்கிய பெரும் பள்ளம் திருஞானசம்பந்தர். சீரிய எண்ணங்களைச் செயல்படுத்தும்போது அது சிறந்த செயல்களாகின்றன. தான் உலகத்திற்காக வாழ வேண்டும் என்ற நிலை மாறி உலகம் தனக்காக வாழ வேண்டும் என்று செயல்படும் நிலையில் தற்போது காலம் தள்ளப்பட்டுள்ளது. அந்நிலையில்தான் அகப்படவில்லை என்பதை,

உணர்வின் நேர்பெற வரும் சிவபோகத்தை
உருவின் கண் அணையும் ஐம்பொறி
அளவினும் எளிவர அருள் செய்தனை

எனத் தில்லை அம்பலவாணனது திருவருளை வியந்து போற்றினார்.

தற்பொழுது சமயங்களுக்குச் சமக்குறியே கிடையாதா என்ற கேள்வி எழுந்திருக்கிறது. அந்நிலையிலும் திருஞானசம்பந்தர் தேவாரம் தோத்திரமாகவும், சாத்திரமாகவும் வாழ்க்கை நூலாகவும் அமைந்து, சமயம்+சமூகம் = மனித வாழ்க்கை என்ற கருத்தைத் தெளிவுப்படுத்து வதாகவே உள்ளது. இந்தியாவின் முதுகெலும்பு இந்து மதம்தான். அதை வலுப்படுத்தினால் மற்றவை எல்லாம் தாமே நிறைவேறும்.

33. நால்வர் நான்மணிமாலையில் சம்பந்தர்

கி. சிவகுமார், விருத்தாசலம்.

தமிழும், தமிழரும், தமிழ்ப் பண்பாடும் வேற்றவர் வருகையால் வீழ்ச்சியுற்றிருந்த காலத்தில், தெய்வத்தமிழும் சைவச் செந்நெறியும் தழைக்கத் தோன்றியவர்கள் திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்தி நாயனார், மாணிக்கவாசகர் ஆகிய சைவ சமய குரவர்கள் நால்வரும் ஆவர். அந்நால்வர் மீதும் முதன் முதலாக ஒருங்கே ஒரு துதிநூலாக 'நால்வர் நான்மணிமாலை' என்னும் நூலினைப் பாடிப் பரவியவர் மயிலம் பொம்மபுர ஆதீனத்தின் அருட்சீடர் 'கற்பனைக் களஞ்சியம்' ஸ்ரீ சிவப்பிரகாச சுவாமிகள் ஆவர். கி.பி. பதினேழாம் நூற்றாண்டில் வாழ்ந்த வீரசைவப் பெரியாராகிய இவர் வெண்பா, கலித்துறை, விருத்தம், அகவல் என முறையே நால்வர் மீதும் போற்றிப் பாக்களை யாத்துள்ள பாங்கு உள்ளுந்தொறும் உள்ளத்தை உருக்குவதாகும்.

பிற சீரும் தளையும் விரவாத அந்தண யாப்பாகிய வெண்பாவினால், அந்தணச் செல்வராம் ஞானசம்பந்தரை அவர் போற்றியுள்ளமையை ஓராற்றான் ஆயுமுகத்தான் இக்கட்டுரை இயல்கின்றது.

1. சம்பந்தர்-குரு

சீகாழிப் பிரம தீர்த்தக்கரையில் உமையம்மையார், அழுத பிள்ளைக்குப் பால் தந்தார் என்பது பருப்பொருள் நிலை. 'பால்' என்பதற்கு 'ஊழ் வினை' என்னும் பொருள் உண்டு ஆதலின் முன்னைப் பிறவியின் நல்வினைப் பயனாம் பாடும் ஆற்றல்மிக்க ஞானத்தை இப்பிறவியில் இறைவியார் துய்க்குமாறு செய்தார் என்பது நுண்பொருள் நிலை.

ஞானப்பாலை அருந்திய குழந்தை அதனை முழுவதும் தன்வயப் படுத்தி நுகர்ந்து விடாமல், வாயமுதாம் அதனைத் திரட்டித் தொகுத்து, செவியமுதாய் யாவர்க்கும் அளித்து இன்புற்றது. அவர் திருவாக்காம் ஒவ்வொரு சொல்லும் தக்க அறிவும் அனுபவமும் பக்குவமும் வாய்ந் தார்க்குச் சிவ உபதேசமாகும். உபதேசிக்கும் தகுதி குருநாதர்க்கு மட்டுமே உண்டு. இவ்வுண்மை உணர்ந்த பக்குவர் சிவப்பிரகாசர். ஆதலின்,

> **'பூவான் மலிமணிநீர்ப் பொய்கைக் கரையின்இயற்**
> **பாவான் மொழிஞானப் பால்உண்டு - நாவான்**

மறித்துளம் செவிஅமுதாய் வார்த்தபிரான் தண்டை
வெறித்தண் கமல வீடு'

எனப் பாடுவாராயினார். 'குருவே சிவமெனக் கூறினன் நந்தி' (1556) எனத் திருமந்திரம் கூறுமாறு போல, சம்பந்தப் பெருமானின் திருவடித் தாமரையே ஞான மணமும், குளிர்ச்சியும் உடையதாய் அடியவர்தம் பிறவி வெம்மையை நீக்கும் பாங்கினது எனப் பாடலுள் வரையறுத்துணர்த்தினார்.

இக்கருத்தை மேலும் உறுதிப்படுத்துவாராய், இம்மையில் வள்ளன்மையும், கல்வியும், அன்பும் ஆகியன அளிப்பதுடன், விழைவார்க்கு மறுமையின்பமும் தரவல்ல திருஞானசம்பந்தரின் சேவடியை உணர்ந்து தொழுவார், பிறவியை அறுக்கவல்லாராவர் எனவும் இறுதியில் உறுதிபட உரைக்கின்றார்.

'வல்லார் பிறப்புஅறுப்பர் வண்மை நலம்கல்வி
நல்ஆ தரவுஇன்ப ஞானங்கள் - எல்லாம்
திருஞான சம்பந்தன் சேவடியே என்னும்
ஒருஞான சம்பந்தம் கூற்று'

என்பது அப்பாடல்.

இவற்றான், திருஞானசம்பந்தர் 'வீடு அளிக்கும் வித்தகர்' என்னும் கருத்து உறுதியாகின்றது.

2. அன்னையின் மகிழ்ச்சி

'காக்கைக்கும் தன்குஞ்சு பொன்குஞ்சு' என்பது பழமொழி. மதலையர் பேசும் பொருளில் மொழியாம் குதலையந் தீஞ்சொற்கேட்டு உள்ளம் உவத்தல், உலகில் மகளிர்தம் இயல்பு. சமுதாயச் சூழலால் கல்வியறிவு வாய்க்கப்பெறாத தாயர், மைந்தர்தம் அவையகத்து முந்தியிருத்தலும், கல்வி வல்லவராய், மேம்பட்டிருத்தலும் ஆகிய தகைமைகளைத் தாமே உணரும் ஆற்றல் அற்றவராய், பிறர் கூறக்கேட்டு மகிழ்பவராய் வாழ்ந்தனர். இதனை,

'ஈன்ற பொழுதின் பெரிதுஉவக்கும் தன்மகனைச்
சான்றோன் எனக்கேட்ட தாய்' (69)

என்னும் குறட்பாவுக்குத் தம் காலச் சிந்தனையை வெளிப்படுத்தும் முகமாய்ப் பரிமேலழகர் பதிந்து சென்ற கருத்துத் தடங்களால் அறிகின்றோம்.

அன்றைய நிலை எஞ்ஞான்றும் தொடர்தலாகாது என எண்ணிய சிவப்பிரகாசர், பெண்களுக்கும் கல்வியறிவு இன்றியமையாதது; செய்யுள் துய்க்கும் ஆற்றல் அவர்களுக்கும் உண்டு என உணர்த்த விழைந்தனர்.

உலகியல் மகளிர்போல் ஒப்புக்கு மனங்களியாமல், உண்மையில் மனங்களித்தார் - உமையம்மையார், தம்மால் ஞானப்பால் தரப்பெற்றுப் பருகிய ஞானசம்பந்தக் குழந்தை பாடும் திறத்தை உயர்ந்தவராய்! அதுவும் 'தந்தையினும் மகிழ்ச்சி மிக உண்டுபோலும், பால் கொடுத்த தாய்க்கு' (13) எனச் சிவப்பிரகாசர் பாடும் விதம் பெண்கல்வியின் அவசியத்தைப் பெரிதும் வலியுறுத்துகின்றது.

3. உயர்ந்த தாய்

சிவபெருமானினும் உமையம்மை ஞானசம்பந்தர்பால் மிக்க அன்பினர் எனக் கூறிய சிவப்பிரகாசர், அவரினும் மங்கையர்க்கரசியார் பேரன்பினர் என அடுத்துச் சுட்டுகின்றார்.

குழந்தைக்குப் பாலூட்டும் நிலைகொண்டு அன்னையரை மூவகையில் தரம் பிரிக்கலாம். குழந்தை அழுவதற்குமுன் தக்க காலம் அறிந்து 'பால்நினைந்து ஊட்டும்' தாய்,'அழும்பிள்ளைதான் பால்குடிக்கும்' என அழுங்கால் சென்று பாலூட்டும் தாய், அழுதல் கண்டு பிறர் தூண்டச் சென்று பாலூட்டும் தாய் என முறையே அவர்களை உரைப்பர்.

இலைபடர்ந்த பொய்கையின்கண் காழிப்பிள்ளையார் அழுவதைக் கண்டு முலை சுரந்தாள் உமையம்மை. இங்ஙனம் ஒரு நிகழ்ச்சி நேர்ந்தது எனக் கேள்வியுற்ற அளவிலேயே முலைசுரந்தார் பாண்டிய மன்னன் கூன்பாண்டியனின் மனைவி மங்கையர்க்கரசியார். கண்டு சுரந்தவளோ? கேட்டுச் சுரந்தவளோ? யார் உயர்ந்தவர்? (5) என வினவி அம்மூவகைத் தாயரினும், உமையம்மையினும் மங்கையர்க்கரசியாரை உயர்ந்தவராக்கி விடுகிறார் சிவப்பிரகாசர்.

அகிலம் ஈன்ற நாயகி அழுத குழந்தைக்குப் பால் தந்ததில் வியப்பில்லை. தொடர்பே இல்லாத நிலையில் அருளுள்ளம் கொண்டு பாண்டி மாதேவி முலை சுரந்ததே வியப்பு என்னும் பொருளும் இதில் பொதிந்திருக்கின்றது.

தான் ஈன்ற குழந்தைக்குத் தன்பால் சுரக்கும் தாய்ப்பாலை அளித்தால், தன் கருமேனியாகிய திருமேனி எங்கே கட்டுக் குலைந்துவிடுமோ என நாகரிகத்தின்பாலான மோகத்தால் புட்டிப்பால் ஊட்டும் இற்றைக் காலத் தாயர்கள் சற்றே இப்பாடற் கருத்தை எண்ணிப் பார்க்கவேண்டும். 'தாய்ப்பால் வாரம்' எனப் பெயரிட்டு இதனையும் மக்கட்கு எண்ணிப் பார்க்கத் தூண்டும் சமுதாயத்தின் அவல நிலையை என்னென்று உரைப்பது?

4. எலும்பைப் பெண் ஆக்கியமை

மயிலாப்பூரில் வாழ்ந்த சிவநேசச் செட்டியார் சம்பந்தரிடம் பேரன்பு கொண்டு, தம் மகள் பூம்பாவையை அவர்க்கு மணமுடிப்பது

எனக் கருதி வளர்க்க, அவள் தற்செயலாய்ப் பாம்பு தீண்டி இறந்தாளாக, அவள் எலும்பையும் சாம்பலையும் பாதுகாத்து வைத்திருந்து, ஞானசம்பந்தர் ஒருகாலத்து ஆங்குவந்தபோது நிகழ்ந்தன உரைப்ப, ஞானசம்பந்தர், திருப்பதிகம் பாடி அவளை அக்காலத்திற்கு உரிய உருவமும் பருவமும் உடையள் ஆக்கினார். அவளைத் தமக்குத் தர விழைந்த சிவநேசரின் கருத்தினை மறுத்து, தாம் அவள் கொண்ட இவ்வுருவிற்குத் தந்தைபோல்வேம் எனக் கூறியருளினார்.

திருமால், தம் பகைவன் சலந்தராசுரனின் மனைவி பிருந்தைமீது பெரும் மால் கொண்டு, அவன் உருக்கொண்டு அவளை நெருங்க, அவள் உண்மையுணர்ந்து தீப்புக, அவள் எலும்பிலும் சாம்பலிலும் புரண்டு கிடப்பானாயினார்.

இவ்விரு நிகழ்வுகளையும் உளங்கொண்ட சிவப்பிரகாசர், 'சம்பந்தரிடம் தந்து அவ்வெலும்பைப் பிருந்தையாகிய பெண்ணாக்கிக் கொண்டிலனே திருமால்!' (9) எனப் பாடுகின்றார்.

காத்தல் கடவுள் எனும் பதவியினராயும், சிவபெருமானுக்கு அடுத்த நிலையிலும் போற்றப்பெறும் தகுதி கொண்டிருப்பவர் திருமால். அவரே, சிவனடியாரிடம் உதவிகேட்டு வரவேண்டும் என்றால், சிவனடியார் எவ்வளவு உயர்ந்தவராதல் வேண்டும். 'தன்னை மருவினரைத் தானாக்கும் தன்மையன்' எனச் சிவப்பிரகாசர் தம் குருநாதர் சிவஞான பாலய சுவாமிகளைப் போற்றும் தொடர் சிவபெருமானுக்கும் முற்றும் பொருந்துவதேயாம்.

5. தமிழின் சாதனை

திருஞானசம்பந்தர் திருப்பாச்சிலாச்சிராமம் எனும் ஊரில் கொல்லி மழவன் பாவையின் நோயைத் தீர்த்தார். திருமருகல் தலத்தில் வணிக மகனுக்கு நஞ்சு நீக்கி உயிர்ப்பித்தார். திருவோத்தூரில் ஆண்பனையைப் பெண்பனையாக்கினார். முன்சுட்டியவாறு, மயிலாப்பூர் பூம்பாவையின் எலும்பையும் சாம்பலையும் பெண்ணாக்கினார். இன்னபிற அற்புதங்களும் இவர் வாழ்வில் நிகழ்ந்துள்ளன.

இவற்றைச் சாதித்தது ஞானசம்பந்தரா? சிவபெருமானின் திருவருளா? சம்பந்தர் பாடிய செந்தமிழ்ப் பாடல்களா? என்னும் சிந்தனை நம்முள் எழுகின்றது. இவை மூன்றையும் பிரித்துப் பார்த்தல் கூடாது. இம் மூன்றும் உண்மையில் வேறு காண முடியாதனவாகும்.

ஞானசம்பந்தரின் பக்தியுணர்வுக்கு, சிவபெருமான் திருவருளால் தரப்பெற்ற அற்புத ஆற்றல், செந்தமிழ் மொழியின்வழி வெளிப்பட்டது. சம்பந்தன் இயம்பு திருப்பாட்டு (17), மேற்காண் சாதனைகளைப் புரிந்தது என்கிறார் சிவப்பிரகாசர். மொழி, கருத்தை இடம்பெயர்விக்கும்

ஓர் ஊடகம் என்பதே பலரின் கொள்கை. 'நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த மறை மொழிகள் மந்திரங்கள்' எனத் தொல்காப்பியம், திருக்குறள் முதலாய இலக்கண, நீதிநூற் கருத்துகளும் பத்தி இலக்கியத்தின் சாதனைத் தன்மைக்கு அரண்சேர்க்கக் காணலாம். தமிழ் ஆக்கவும், நிலை பெறுத்தவும், அல்லவற்றை அழிக்கவும் வல்லதாய் இறைத்தன்மையுடன் திகழ்வதனை இதனான் உணரலாம்.

6. அனல் வாதமும் புனல் வாதமும்

சமணர்க்கும் திருஞானசம்பந்தர்க்கும் இடையே எழுந்த சமயவாதின் போது சமணர் தீயிலிட்ட 'அத்திநாத்தி' ஏடு எரிந்து சாம்பலானது. 'போகமார்த்த' என்னும் சம்பந்தரின் தேவார ஏடு தீயில் கருகாமல், சைவத்தின் உயர்வுக்குச் சான்று பகர்ந்து நின்றது. அவ்வேடு கரி ஆகாமல், கரி (சான்று) ஆகி நின்றது (25) என நயச்சொல் கொண்டு வியப்போடு உரைக்கின்றார் சிவப்பிரகாசர்.

சமயவாது முற்றுப்பெறாமல், வையையில் தத்தம் ஏட்டினை இட்டபோது சமணர் ஏடு நீரோடு போயிற்று. 'வாழ்க அந்தணர்' என்னும் சம்பந்தரின் பதிக ஏடு எதிர்சென்று மேலேறிற்று. 'ஏடு ஏறினால் பால் குறையும்' என அடுப்பிலிடும் பாலுக்கான சிந்தனையை நகைச் சுவையாகச் சுட்டுவதாக சம்பந்தரின் ஏடு ஏற, சமணர் தமது நல்வினையாகிய பால் குறையலானதே என வருந்தி அழலானார்கள் (21) என்கிறார் சிவப்பிரகாசர்.

மெய்ப்பொருளின் மெய்ப்புகழை ஏந்தியிருந்ததால் ஏடுகள், தீயாலும் நீராலும் உட்கொள்ளப்படாமல் நிலைத்திருந்தன என்னும் இந்நிகழ்வுகள், இறை நினைவு நம் நெஞ்சில் பதியுமானால், உலகியலின் வெவ்விய, நீர்த்த-நோய்களும் கவலைகளும் நம்மை ஏதும் செய்ய மாட்டா என்னும் உண்மைகளை உணர்த்துகின்றன.

7. எருதும் சிவிகையும்

சிவபெருமான் கொன்றைமலர்க் கண்ணியைச் சூடி, பலிப்பாத்திரத்தை ஏந்தி எருதை வாகனமாகக் கொண்டு திரிகின்றான். திருப்பட்டீச்சுரம் செல்லும் ஞானசம்பந்தருக்கு முத்துப்பந்தரையும், திருநெல்வாயில் அரத்துரையில் முத்துச் சிவிகையையும் சிவபெருமான் வழங்கியமையை எண்ணிப் பார்க்கிறார் சிவப்பிரகாசர். எருது ஊரும் சிவனுக்கு, மகனுக்கு முத்துப்பல்லக்கு வழங்கும் திறன் யாங்ஙனம் ஏற்பட்டது? என ஞானசம்பந்தரைப் பார்த்தால் வினவுவேன் (29) என்கிறார் அவர். அறமே வெள்ளெருதாய் ஊழிக்காலத்தில் தான் மட்டும் தனித்திருந்து இறைவனைத் தாங்குகின்றது என்பது புராணம் உணர்த்தும் உருவகச்

சிந்தனை. உலகம் முழுதும் உடைய பெருமான், தன் அன்பன் நடந்து சிற்றடி வருந்தலாகாது என முத்துச்சிவிகைக்கு அருள்பாலிக்கின்றான்.

இந்நிகழ்வு, உணவும் உடையும் முதலாய நிலைகளில் தாங்கள் எளிமையாய் வாழ்ந்து, தம் மக்கள் நல்லன சிறந்தன நுகர்தல் வேண்டும் எனப் பாடுபடும் எண்ணற்ற பெற்றோரின் தியாக உணர்வு கெழுமிய வாழ்வைப் பிரதிபலிக்கக் காண்கிறோம்.

8. சிவிகை சுமந்தமை - சிக்கலும் தீர்வும்

திருக்குறள் அறன்வலியுறுத்தலில் இடம்பெறும் குறட்பா ஒன்று :

'அறத்தாறு இதுஎன வேண்டா சிவிகை
பொறுத்தானோடு ஊர்ந்தான் இடை' (37)

இதற்கு, 'அறம்செய்தார் இன்னாரென்று ஆகம அளவை கொண்டு அறிய வேண்டுவதில்லை. பல்லக்கைச் சுமப்பவன் பாவம் செய்தவன்; பல்லக்கில் இருப்பவன் புண்ணியம் செய்தவன் எனக் காட்சியளவானாயே அறிந்து கொள்ளலாம்' என உரை வரைந்துள்ளார் பரிமேலழகர். இதற்கு இவ்வாறன்றி, காட்சி அளவை கொண்டு கூறல்வேண்டா எனச் சிலர் உரை செய்வர்; அதிகாரப் பொருண்மையை உணராதவராய்ப் பரிமேலழகரை மறுப்பார் அவர்.

சம்பந்தர் சிவிகையை அடியர்பலர் ஏந்திச் சென்றனர் (நாவரசரும் கூடத் திருப்பூந்துருத்தியில் சம்பந்தர் சிவிகையைச் சுமந்துள்ளார்). காட்சியளவான் மதிப்பிடுவதாயின் இவர்கள் பாவம் செய்தவர்களா? இவர்கள் மறுமையில் சிவிகையில் ஊர்ந்து தேவராய்த் திரிகின்றனரே! (33) என வினவுகின்றார் சிவப்பிரகாசர்.

சிவப்பிரகாசர் திருவள்ளுவரை மறுக்கிறாரே, இது முறையாகுமா? என இதுகுறித்துப் பெரும் வினா ஒன்று தமிழ் ஆர்வலர் நெஞ்சில் நெருடி வருவதால் இன்று வரையிலும் இதுகுறித்த ஆய்வுக் கட்டுரைகள் எழுந்தவாறுள்ளன.

1. அறநூல்கள் சமுதாய ஒழுங்கை வலியுறுத்த, நல்வினையாளரும் தீவினையாளரும் முறையே சிவிகையை ஊர்வதும், சுமப்பதும் செய்வர் என்பது இயல்பே. இறைவழிபாடுடையார் 'வையம் (தேர்) துரகம்...' பெறுவர் என்றும், வழிபடாதார் 'பாத்திரம் கொண்டு பலிக்குழலாநிற்பர் பார் எங்குமே' என்றும் அருள்நூல்களும் (அபிராமி அந்தாதி - 52,67) கூறக் காண்கிறோம்.
2. உலகியலில் சிவிகை சுமப்போர் தொழிலுக்குச் சுமக்கின்றனர். அவர்க்குக் குறள்நெறி பொருந்தும். அருளியலில் தொண்டுக்குச்

சுமக்கின்றாராதலின் அந்நெறி பொருந்தாது எனலாம். எனினும் இவர்களும் தொழிலுக்குச் சுமக்கும் நிலையினராயின் அது பொருந்தும் எனலாம்.

3. இப்பிறப்பில் சம்பந்தன் சிவிகை சுமந்தோர், மறுமையில் சிவிகையூர்ந்தனர் என வருதலின், குறளின் ஒரு பாதிக்கருத்து அவர்கள் வாழ்வினும் உண்மையானதை உணர முடிகின்றது.

4. தீர விசாரித்து அறிய வேண்டுமேயன்றிக் காட்சியளவானேயே, அருளியலா உலகியலா என உணராமல் முடிவெடுத்தல் கூடாது என 'காட்சியளவையான்' என்னும் ஒரு பகுதிக் கூற்றை மறுப்பதாகச் சிவப்பிரகாசர் சிந்தனை அமைகிறது எனலாம்.

5. திருவள்ளுவர் மீது மாறாப்பற்றாளர் சிவப்பிரகாசர். 'வள்ளுவப் பிரகாசர்' என்றே போற்றப்பெறும் பேற்றினர். வள்ளுவர் கருத்தை மறுப்பதுஅன்று இவர் நோக்கம். தலைவன் தலைவியருக்கிடையிலான புலவி நுணுக்கம்போல, சற்றே அவர் குறளுக்கு வேறொரு கோணத்தில் பொருந்தாமை காட்ட விழையும் ஆசை பற்றி எழுந்த வேற்றுச் சிந்தனையாகும் இது.

திருஞானசம்பந்தர்-குரு; அவர் பாடல்கள் உபதேச மொழிகள், தமிழ் எதனையும் சாதிக்கவல்லது. திருக்குறளை மறுப்பது சிவப்பிரகாசர் நோக்கமன்று. தம் திருமணத்திற்கு வந்தார் அனைவருக்கும் வீடுதவிய ஞானசம்பந்தப் பெருமானின் தேவாரப் பாடல்கள் நம்மையும் பிறவியினின்றும் உய்வித்து வீடு அளிக்கும் என்பது உறுதி.

34. சம்பந்தர் வளர்த்த தமிழும் சைவமும்

அரங்க. சிவப்பிரகாசம், திருப்பனந்தாள்.

சம்பந்தர் அவதரித்த காலச் சூழல்

தமிழகம் சங்க காலத்தில் பல துறைகளிலும் சிறப்புற்று விளங்கியது. தமிழ் மக்கள் மொழி, மதம், பண்பாடு, நாகரிகம் முதலான எல்லாத் துறைகளிலும் உலக நாடுகள் போற்றும் வகையில் வளர்ந்து சிறப்புற்று விளங்கினர். அவ்வாறு சிறந்து விளங்கிய தமிழகத்தில் இற்றைக்கு ஏறத் தாழ ஆயிரத்து முந்நூறு ஆண்டுகளுக்கு முன் தமிழ்ச் சங்கம் மறைந்து சேர, சோழ, பாண்டிய மன்னர்களின் ஆட்சி குறைந்து, களப்பிரர், பல்லவர் போன்ற அந்நியர்களின் ஆட்சி மேலோங்கி இருந்தது. களப்பிரர் தங்கள் வலிமையால் கி.பி 3-ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் தமிழ் நாட்டைக் கைப்பற்றி, மதுரையிலும் புகுந்து மக்களுடைய செல்வத்தை யெல்லாம் கொள்ளையடித்தனர். அவர்கள் தமிழகத்திற்கு அந்நியர் ஆதலின் அவர்கள் ஆதிக்கம் செலுத்திய சுமார் 300 ஆண்டுக் காலமும் தமிழ்நாட்டையும், மொழியையும், சமயத்தையும் சீரழித்து வந்தனர்.

அரசனும் சமண மதத்தைத் தழுவிச் சமணத் துறவிகளைப் போற்றி வழிபட்டு வந்தான். ''மன்னன் எவ்வழி அவ்வழி குடிகளும்''என்ற பழமொழிக்கு ஏற்பத் தமிழ் மக்களும் சமண மதத்தைத் தழுவித் தமது பண்பாட்டை விட்டு விலகிச் சென்றனர். அந்நியர் ஆட்சியால் சமணர்கள் ஆலவாய்க் கோயில் வழிபாட்டைச் சிதைக்கும் அளவிற்கு மோலோங்கி இருந்தனர். மக்களின் ஒரு கூறாகிய பெண்களைப் பழித்துத் துறவுக்கும், மோட்சத்திற்கும் இடையூறாக இருப்பவர்கள் என வெறுத்து ஒதுக்கி வந்தனர். சங்கத் தமிழ் மக்களால் போற்றி வளர்த்த முத்தமிழில் ஒன்றாகிய இசைத்தமிழையும் வெறுத்தனர். இதனால் பண்டைக் காலந்தொட்டுப் போற்றி வந்த தமிழர் பண்பாடும், நாகரிகமும் சிதைய ஆரம்பித்தன. இக்காலச் சூழ்நிலையில் சீகாழிப் பதியில் கி.பி. 7-ஆம் நூற்றாண்டில் சிவபாத இருதயருக்கும் பகவதியாருக்கும். சிவநெறியும், தமிழ் மொழியும் மேம்படவும், திருவருள் விளக்கம் எங்கும் உண்டாகவும், புறச்சமயங்கள் ஒளிமழுங்கிச் சிதையவும் ஆளுடைய பிள்ளையார் திரு அவதாரம் செய்தருளினார். தந்தையார் திருத்தோணிபுரத்துத் திருக்கோயிலில் உள்ள திருக்குளத்தின் கரையில் அமரச் செய்து நீராடிய காலத்தில் அம்மையப்பரால் ஆட்கொள்ளப்பட்டவர் ஞானசம்பந்தர். மூன்று வயதிலேயே உமையம்மையார் அளித்த ஞானப்பாலடிசில்

உண்டு தேவர்க்கும்,முனிவர்க்கும் கிடைத்தற்கரிய சிவஞானம் பெற்றவர், சீகாழிப் பதியில் தோன்றிய திருஞானசம்பந்தப் பிள்ளையார் தம்முடைய குறுகிய கால வாழ்க்கையில் தமிழ் மக்களின் அவலநிலைகளைக் கண்டு அவைகளைப் போக்கச் செயற்கரும் செயல்கள் பல செய்தருளினார்.

தமிழ்மாட்டுக் கொண்ட காதல்

ஞானசம்பந்தர் இயற்கையாகப் பல பெருமைகளைப் பெற்றவர். அவற்றுள் தமிழ்மாட்டு அவர் கொண்ட காதல் மிகவும் சிறப்பு வாய்ந்தது. ''தமிழ் ஞானசம்பந்தன்'' என்றும், ''நற்றமிழ் வல்ல ஞானசம்பந்தன்'' என்றும் தமது தேவாரங்களில் பல இடங்களில் கூறியிருப்பன குறிப்பிடத் தக்கன. தமது தேவாரப் பதிகங்களில் ஏறத்தாழ நாற்பத்தைந்து இடங்களில் தம்மைத் தமிழோடு இணைத்து வீறு தோன்றவும், மிடுக்குடனும் குறிப்பிட்டுள்ளார். இவருக்கு ஞானசம்பந்தன் என்ற பெயரைவிடத் தமிழ்ஞான சம்பந்தன் என்னும் பெயரே மிகவும் சிறப்புத் தோன்ற அமைந்துள்ளது. சம்பந்தருக்கு முன்னரோ பின்னரோ வேறு எவரும் தமிழுடன் சார்த்தித் தம் பெயரைக் கூறிக் கொண்டதாகத் தெரியவில்லை. முதன் முதலாகச் சம்பந்தர் மட்டுமே தம்மை நற்றமிழ் வல்ல ஞானசம்பந்தன் என வழங்கிக்கொண்டார்.''நற்றமிழ்'' என்னும் சொல்லினுள் மிக நுட்பமான கருத்து அடங்கியுள்ளது ஆராயின் தெரிய வரும். மூவாயிரம் ஆண்டு களுக்கு முன்னரே தமிழ் மொழிக்கு அழியாச் சிறப்பினைத் தரும் இலக்கணத்தை அருளிய தொல்காப்பியரும்; திருக்குறள் என்னும் தெய்வத் தமிழ்மறையை உலகுக்கு அருளிய திருவள்ளுவரும், நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரத்தை இயற்றிய இளங்கோ அடிகளும் தம் பெயருடன் தமிழ் என்ற சொல்லை இணைத்துக் கூறிக் கொள்ளவில்லை. எனவே சம்பந்தர் மட்டும் தம்மைத் தமிழ்ஞான சம்பந்தன் என்று கூறியதின் அருமைப் பாட்டினை ஆராய்ந்து அறிந்து இன்புறற்பாலது. நற்றமிழ் என்று சம்பந்தர் குறிப்பிட்டது சங்கத் தமிழ்மொழியையே எனக் கொள்ளும் வகையில் அமைந்திருக்கிறது. சம்பந்தர் சங்கத் தமிழ் மரபை நன்கு உணர்ந்து பாடுவதில் வல்லவர். சங்கத் தமிழின்பால் சம்பந்தருக்கு எல்லையற்ற ஈடுபாடும், பெருமதிப்பும் இருந்தன என்பதில் ஐயமில்லை. இவர் அவதாரம் செய்த காலத்தில் தமிழ் மக்கள் தமிழ்ப் பற்றும் ஆர்வமும் மிகவும் குறைந்து, பலவகையிலும் நலிந்து சிதைந்து சீரழிந்த நிலையில் இருந்தனர். இந்நிலையில் தமிழ் உணர்வையும் ஆர்வத்தையும் அவர்களிடையே தோற்றுவித்துச் சமுதாயத்தில் ஒரு பெரும் எழுச்சியையும், மறுமலர்ச்சியையும் ஏற்படுத்தி அவர்களைப் பண்டைய நிலைக்கு உயரச் செய்ய வேண்டும் என எண்ணம் கொண்டார். அதன் வாயிலாகச் சமயத்தையும், பக்தியையும் மக்களிடையே வளர்க்கவும் செய்தார். ஊர்கள்தோறும் சென்று ஆங்குக் கோயில்களில் எழுந்தருளி யுள்ள இறைவன் மீது பக்திப்பாடல்களைப் பாடி மக்கள் படும் இன்னல் களையும், அறியாமையையும் போக்கி அவர்கள் சமய உணர்வும்,

தமிழ் உணர்வும் பெற்று விளங்கிடச் செய்தார். தமிழ்த் தொண்டை ஆற்றிய பெருந்தகை ஞானசம்பந்தர் சமுதாயத் தொண்டையும் ஆற்றிச் சிறப்புற்று விளங்கினார்.

தமிழ் இசையைப் போற்றிய சிறப்பு

சமணர்களால் வெறுக்கப்பட்ட முத்தமிழில் ஒன்றாகிய இசைத் தமிழைப் போற்றி வளரச் செய்தார். தமிழ் இசையோடு அவர்களால் இழிவு படுத்தப்பட்ட இல்லற வாழ்வு, அகப்பொருள் ஆகியவற்றையும் ஏற்றம் பெறச் செய்தார். ஊர்தோறும் சென்று ஆங்கு எழுந்தருளியுள்ள இறைவன் மீது பக்திப் பாடல்கள் கொண்ட பதிகங்களை மக்கள் உணர்ந்து மகிழுமாறு பண்ணிசையுடன் பாடிப் பரவினார். அவரோடு யாழில் வல்ல பாணரையும் உடன் அழைத்துச் சென்று இசையை மேலோங்கச் செய்தார். அது அவர் இசைக்குக் கொடுத்த ஏற்றத்தைக் காட்டுகிறது. பிறர் பலரும் இசைப் பாடல்களைப் பாடி இருந்த போதிலும் சம்பந்தர் அளவு இசையை எடுத்து நிறுத்தியவர் எவரும் இல்லை என்றே கூறவேண்டும். எனவேதான் சம்பந்தர் தன்னை ''நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பும் ஞானசம்பந்தன்'' என்று கூறியிருப்பதன் சிறப்புப் புலப்படுகிறது. சங்கத் தமிழ்க் கவிதையைப் பெரிதும் போற்றினாலும் அவற்றின் புதுமை மிக்க கவிதைகளை அருளிச் செய்தார்.

அகப்பொருளின் அருமையைப் புலப்படுத்தல்

தமிழில் தனியொரு பகுதியாய் இருந்த அகப்பொருளை இறைவன் முகமாகத் திருப்பிய பெருமை சம்பந்தர்க்குரியது. சைனர் ஆட்சியில் தொல்காப்பியப் பொருளதிகாரம், அதனுள்ளும் குறிப்பாக அகப்பொருள் சைனரால் ஒதுக்கப்பட்டிருந்தது. இதனால்தான் பொருளதிகாரம் இல்லை யாதலால் யாம் புதிதாக அகப்பொருள் சூத்திரம் செய்து கொடுக்கிறோம் என இறையனார் கூறிக் களவியல் செய்த நிலைமை எழுந்தது. இன்று நமக்குத் தொல்காப்பியம் கிடைத்தும் சைனர் ஆட்சியின் விளைவாகத் தொல்காப்பிய அகப்பொருள் பயிற்சிக்குன்றிப் போய் இருக்கிறது. சம்பந்தர் தம்முடைய அகச்சுவை நிறைந்த அருட்பாடல்களால் அகப்பொருள் என்ற கருத்துக்கே புதிய ஏற்றம் கொடுத்தார். மேலும் புலன்களை அடக்காமல் புலன் அனுபவத்தையே இறை அனுபவத்திற்குப் பயன்பட வேண்டும் என்று அவர் பாடினார். இங்ஙனமாகத் தமிழ் இலக்கிய உலகத்திலும், இசைத்தமிழ் உலகத்திலும் ஒரு பெரும் எழுச்சியைத் தோற்றுவித்தது சம்பந்தருக்கு உரிய சிறப்பாகும்.

பெண்களுக்கு ஏற்றத்தை உண்டாக்கல்

சம்பந்தர் அருளாளர் மட்டுமல்ல; ஒரு சமுதாயச் சீர்திருத்தக்காரரும் ஆவர். தமிழர் சமுதாயத்தில் பண்டைய ஒழுக்கமும் கொள்கையும் மாறுபட்டு நின்ற காலத்தில் ஒழுக்கக் கேடுகளை அஞ்சாது எடுத்துக்

கூறிச் சமுதாயத்தைத் திருத்தியவரும் ஆவர். சான்றாக இவர் காலத்தில் சமணர்களால் இழிவு எனக் கூறி வெறுக்கப்பட்ட பெண் பிறவி ஏற்றம் பெற, மானிடம் பாடாத சம்பந்தர் மங்கையர்க்கரசியாரை

> **''மங்கையர்க்கரசி வளவர்கோன் பாவை வரிவளைக்கைம்**
> **பங்கயச் செல்வி பாண்டி மாதேவி''**

என்று மடமானி ஒரு பதிகத்தின் அரைப்பகுதியும்;

> **''மானின் நேர்விழி மாதராய்''**

எனத் தொடங்கும் மற்றொரு பதிகம் முழுமையுமாகச் சிறப்பித்துக் கூறும் முகத்தான் பெண்மையைப் பாடியுள்ளது புலனாகிறது. துறவு நெறியே மக்களுக்கு உய்தி தரும் எனவும், இவ்வுலக வாழ்வு துன்ப மயமானது வெறுக்கத்தக்கது எனவும் சமணர் பலரும் சொல்லி வந்த பொழுது இறைவனும் உமையுடன் கூடி இல்லற நெறியாளனாய் இருப்பதையும், இவ்வுலகம் இன்ப மயமானது என்பதையும்

> **''மண்ணில் நல்லவண்ணம் வாழலாம் வைகலும்**
> **எண்ணில் நல்லகதிக்கு யாதுமோர் குறைவிலை**
> **கண்ணில் நல்லஃதுறும் கழுமல வளநகர்**
> **பெண்ணில் நல்லாளொடும் பெருந்தகை இருந்ததே''**

என்னும் பாடலால் இறைவனும் உமாதேவியும் ஒன்றியிருந்து மக்களுக்கு அருள்செய்யும் வாயிலாகப் பெண்களுக்குப் பெருமையையும் ஏற்றத்தையும் உண்டாக்கியவர் சம்பந்தர்.

சமுதாயத் தொண்டு பல ஆற்றுதல்

சமுதாய மக்களோடு பழகி வாழ்க்கையில் அவர்களுக்கு உள்ள குறைகளையும், துன்பங்களையும் நீக்கி அவர்களுக்குத் தொண்டு செய்வதன் மூலந்தான் நமது சமயத்தையும் தமிழையும் அவர்களிடையே உள்ளுணர்வோடு வளர்க்கலாம் என்பதையும் கருத்தில் கொண்டு சமுதாயத் தொண்டுகள் பல ஆற்றியவர் பெருந்தகை ஞானசம்பந்தர். இவர்தம் சமுதாயத் தொண்டைப் பல நிலைகளில் இவர் பாடிய திருமுறைகளிலிருந்து காண முடிகிறது. திருவீழிமிழலையில் கடும் பஞ்சம் ஏற்பட்டு மக்கள் மிகவும் துன்புற்றனர். அதனைப் போக்க இவர் இறைவன்பால் சென்று

> **''வாசி தீரவே காசு நல்குவீர்**
> **மாசின் மிழலையீர் ஏசலில்லையே''**

என்று தொடங்கும் பதிகம் பாடி இறையருளால் படிக்காசு பெற்று மக்களை எல்லாம் அழைத்துச் சோறளித்துப் பசிக் கொடுமையினின்றும் காப்பாற்றினார். பின்னர் திருச்செங்கோட்டிற்கு அவர் வரும் பொழுது ஆங்குள்ள மக்கள் கடுங்குளிர் சுரத்தால் நலிந்து மடிகின்ற நிலை கண்டு வருந்தி

"அவ்வினைக் கிவ்வினை யாமென்று சொல்லு மஃதறிவீர்
உய்வினை நாடா திருப்பது முந்தமக் கூனமன்றே
கைவினை செய்தெம்பிரான் கழல்போற்றுது நாமடியோம்
செய்வினை வந்தெமைத் தீண்டப் பெறாதிரு நீலகண்டம்"

என்று தொடங்கும் பதிகம் பாடி நோய் நீக்கினார்; திருப்பாச்சிலாச்சிராமம் என்னும் தலத்தில் கொல்லிமலை அரசன் மகள், முயலகன் என்னும் வலிப்பு நோயால் படும் துன்பத்தினை நீக்கியருளினார்; திருமருகல் தலத்தில் ஒரு பெண்ணின் பொருட்டுப் பாம்பு கடித்து இறந்த அவள் காதலனை எழுப்பித்து இருவருக்கும் மணம் செய்வித்தார்; திருமயிலையில் எலும்பாகிய பூம்பாவையைத் தன் பதிகத்தால் பெண்ணாக்கிய பெருமையைச் செய்தார். இவையாவும் இவர், அன்பும், அருளும் நிறைந்த ஒரு சிறந்த மக்கள் நலத் தொண்டர் என்பதைப் புலப்படுத்தும். இவை யாவற்றிற்கும் மேலாக இக்காலத்தில் பேசப்படும் சமதர்மம் எனும் சமத்துவ நிலையை ஆயிரத்து முந்நூறு ஆண்டுகட்கு முன்பே தம் வாழ்க்கையில் வாழ்ந்து காட்டியவர் சம்பந்தர். தாம் உயரிய வேதியர் குலத்தில் உதித்தவராய் இருந்தும் யாழ்ப்பாணர் என்னும் தாழ்ந்த குலத்தில் தோன்றிய திருநீலகண்டரைத் தம்முடன் எப்போதும் பிரியாது வைத்துக் கொண்டு அவரிடம் அன்பும் நட்பும் பாராட்டி வந்த இவர்தம் பெருமை இக்காலத் தீண்டாமை ஒழிப்பிற்கும் சாதி ஒழிப்பிற்கும் அழியாத முன்னோடியாகும். முதற்கண் மன்னன் திருந்திய வழி மக்களும் திருந்துவர் எனக் கருதி "மந்திரமாவது நீறு வானவர் மேலது நீறு" என்று தொடங்கும் பதிகத்தைப் பாடிப் பாண்டியனது வெப்பு நோயை நீக்கி அவனைச் சைவத்தைத் தழுவுமாறு செய்தார். அதன் வாயிலாக ஆலவாய்ப் பெருமானின் திருநீற்றால் நோய்கள் நீங்கும் என்பதையும் எடுத்துக் காட்டியுள்ளார் சம்பந்தர். எக்காரியத்தையும் தொடங்குமுன் கோளறு பதிகத்தைப் பாடித் தொடங்கினால் நாளும் கோளும் நம்மை அச்சுறுத்தித் துன்பம் செய்யாது என அப்பதிகத்தின் வாயிலாக உணர்த்தியுள்ளார். பகைவர்களாலும் வீணான வழக்குகளாலும் நமக்குத் துன்பங்கள் ஏற்படும் பொழுது அதனைப் போக்குவதற்காக இடர் நீக்கிய பதிகத்தைப் பாடி நன்மை அடையலாம் என்பதை அவர் குறிப்பால் அறிவுறுத்தி யுள்ளார். எனவே அருந்தவ முதல்வராகிய சம்பந்தர் தமிழர்களுக்கு அளப்பரிய தொண்டாற்றித் தமிழையும் சைவத்தையும் வளர்த்த பெருமையை அவர் தம் திருப்பதிகங்களால் நன்கு அறியலாம். அவர் பாடிய பாடல்களை, மக்கள் சமுதாயம் நன்கு ஆராய்ந்து அதன்வழி நின்றால் நலம் பெற முடியும் என்பது திண்ணம்.

திருமுறைகளுக்குத் திருமடங்கள் ஆற்றிய பணிகள்

தமிழகத்தில் உள்ள திருமடங்கள் பலவும் சம்பந்தர் பாடிய திருமுறைகள் முதலாகத் திருமுறைகள் பலவற்றையும் அச்சிட்டுத் தமிழ்

மக்களிடையே பரப்பி வந்தன. அதில் திருப்பனந்தாள் காசித் திருமடத்தின் பணி மிகவும் குறிப்பிடத்தக்கது. திருமடத்தில் இருபதாவது அதிபராக எழுந்தருளியிருந்த ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்களுக்கு மிகவும் விருப்பமானது திருமுறைப் பாராயணம். இது பற்றியே அவர்தம் ஆட்சிக் காலத்தில் பன்னிரு திருமுறைப் பதிப்பு நிதி என்ற நிரந்தர நிதியம் ஒன்றை ஏற்படுத்தி அதன் மூலம் திருமுறை களைப் பதிப்பித்துக் குறைந்த விலையில் தமிழ் மக்களுக்குக் கிடைக்குமாறு செய்து வந்தார்கள். மேலும் அவர்கள் பல ஆலயங்களில் தேவாரப் பதிகங் களைக் கல்லெழுத்தில் பொறித்து வைத்தனர். தேவாரம் பாடுவதற்குப் பல கோயில்களில் ஓதுவார்க்கென்று வைப்புநிதிகளை ஏற்படுத்தினர். அவருடைய கருத்து நாளும் இன்னிசையால் திருமுறைகள் தமிழகம் முழுவதும் பரவ வேண்டும் என்பது அவரை அடுத்துத் தற்பொழுது அதிபராக இருக்கின்ற திருவளர்திரு காசிவாசி முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகளும் அவர் தோற்றுவித்த சீரிய பணியினை மேற்கொண்டு பன்னிரு திருமுறைகளையும் தனது நேரிடைப் பார்வையில் சிறந்த முறையில் பதிப்பித்துத் தமிழக மக்களுக்கு அடக்கவிலையில் வழங்கி வருகின்றனர். காசித் திருமடத்தின், திருமுறைகளைப் பல பதிப்புகளாகப் பதிப்பித்து வழங்கி வரும் பணி மேன்மேலும் வளர்ந்தோங்கும் என்பதில் ஐயமில்லை.

திருமுறைகளின் சிறப்பு

தம்மை அடைந்தவர்களைச் சிவமாக்கும் முறை திருமுறையாம். சைவ சமயத்தின் உயர்நிலையை விளக்கும் தோத்திர நூல்கள் திருமுறைகள். சைவத் திருமுறைகள் பன்னிரண்டு ஆகும். அவைகளில் ஞானசம்பந்தர் அருளிச் செய்தது ஒன்று, இரண்டு, மூன்று திருமுறையாகவும்; திருநாவுக்கரசர் அருளியது நான்கு, ஐந்து, ஆறு திருமுறைகளாகவும்; சுந்தரர் அருளியது ஏழாம் திருமுறையாகவும்; மாணிக்கவாசகர் அருளிய திருவாசகம், திருக்கோவையார் எட்டாம் திருமுறையாகவும் வகுத்துள்ளனர். முதல் ஏழு திருமுறைகளைத் தேவாரம் எனவும் வழங்குவர். திருமுறை நூல்கள் பல்வேறு கலைகளுக்கு நிலைக்களமாகவும் திகழ்வன. திருமுறை களின் வாயிலாகத் தமிழகத்தில் உள்ள நூற்றுக்கணக்கான தலங்களைப் பற்றியும் அத்தலங்களில் காணப்பெறும் பல்வகைச் சிறப்புக்களைப் பற்றியும் நாம் அறிந்து கொள்ள முடிகின்றன. இத்திருமுறைகள், அவற்றைப் பாடி யருளிய அருளாளர்களின் வரலாற்றை உணர்த்தும் அகச்சான்றுகளைத் தம்மகத்தே கொண்டு விளங்குகின்றன. இத்திருமுறைகள், பிறவி என்னும் பெருங்கடலில் சிக்கி வழி தடுமாறி நிற்கும் அன்பர்களுக்கு வழி காட்டியாய் அமைந்துள்ளன. இத்தகைய சிறந்த திருமுறை இலக்கியங் களின் பயனாகவே தமிழ்மொழி உலக இலக்கியங்களில் தனிச்சிறப்பிடம் பெற்று ஒளி வீசுகிறது. அவைகளில் காணும் நால்வரின் சமய நெறியே சைவ சித்தாந்தம் என்னும் தத்துவக் கொள்கை தோன்றுவதற்கு அடிப்படையாக அமைந்தன என்று சொல்வது மிகையாகாது.

35. சம்பந்தரும் சாதிய எதிர்ப்பும்

ஜெ. சியாமளா, புதுவை.

உலகின் எந்த ஒரு சமயமும் வரலாற்றுப் பின்னணியுடன் செறிவான கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டு, காலத்தைக் கடந்து எழுச்சியைப் பெற்று வாழ்ந்து கொண்டிருக்கிறது என்றால், அதற்கு அடித்தளம் அமைத்துக் கொடுத்தவர்கள் அருளாளர்களே புறச் சமயங்களான சமணமும், பௌத்தமும் எழுச்சி பெற்றிருந்த நிலையில் சைவத்தை நிலைநிறுத்தி யதில் பெரும் பங்கு திருஞானசம்பந்தருக்கு உண்டு. மறையவர் குலத்தில் பிறந்த சம்பந்தர் அக்காலத்தில் நிலவிய சாதியச் சூழலைத் தகர்க்கும் முன் முயற்சியில் ஈடுபட்டார். திருநீலகண்ட யாழ்ப்பாணருடன் அவர் பூண்ட தோழமை இதனை நமக்குப் புலப்படுத்தி நிற்கிறது.

சாதியக் கட்டுமானம்

மனித வாழ்க்கை இயங்குவதற்கு அடிப்படை நிறுவனங்களாகச் செயல்படுபவை குடும்பம், கல்வி, மதம், அரசு பொருளாதாரம் ஆகியவை ஆகும். இவ்வரிசையில் சாதி என்பது சுட்டப்படாவிடினும் பிறப்பு முதல் இறப்பு வரை மனித வாழ்வுடன் பின்னிப் பிணைந்ததாகச் சாதி செயல்பட்டு வருகிறது. ஒரு சமுதாயத்தின் ஒருமைப்பாட்டிற்குச் சவாலாகவும் நிலைத்துவிட்டது. சமுதாயம் மேல்சாதி, தாழ்ந்த சாதி என்ற இரு தளங்களில் இயங்கி வருகிறது. ஒவ்வொரு சாதியிலும் சில சட்ட திட்டங்கள் வகுக்கப்பட்டு அவற்றை மீறுதல் கடுங்குற்றமாகவே கருதப் படுகிறது. மேல் நிலையில் உள்ள உயர் சாதியினர் தாழ்ந்த சாதியினரோடு சரிநிகராகக் கருதி எவ்வகையிலும் தொடர்பு கொள்ளுதல் தடை செய்யப்பட்டது. எல்லாச் சாதிகளும் தங்கள் மேலாண்மையைத் தக்க வைத்துக்கொள்ளும் முயற்சிகளில் ஈடுபடுகின்றன. சாதியக் கட்டுமானங் களை மீறுவோர் கடுமையான தண்டனைக்கு உள்ளாவர். இருபத்தியோராம் நூற்றாண்டிலேயே கூட இவை நடைமுறையில் உள்ளன என்றால் இன்றைக்குச் சுமார் 1500 ஆண்டுகளுக்கு முன் எப்படி இருந்திருக்கு மென்பது சிந்தித்தற்குரியது. இந்நிலையில், மறையவர் குலத்துதித்த சம்பந்தப் பெருமான் பாணருடன் பூண்ட தோழமை இங்கு மதிப்பீடு செய்யப்படுகிறது.

சம்பந்தரும் பாணரும்

நடுநாட்டில் திருவெருக்கத்தம் புலியூரில் பாணர் மரபில் பிறந்தவர் திருநீலகண்டர். யாழ் வாசிக்கும் சிறப்பினால் 'யாழ்ப்பாணர்' என்னும்

பெயர் பெற்றவர். இவரது மனைவி 'மதங்க சூளாமணியார்' இவ்விருவரும் ஈசன் இணையடிகளை யாழிசைத்துப் பரபுபவர்கள். சம்பந்தரது பெருமையை அறிந்து அவரைக் காண்பதற்காகச் சீர்காழிக்கு வந்து சேர்ந்தனர்.

மறையவர் குலத்துதித்த சம்பந்தப் பெருமான் சாதி வேற்றுமையை உளத்தெண்ணாது அவ்விருவரையும் ஊரெல்லை' வரை சென்று வணங்கி. ''ஐயர்நீர் உளம்மகிழ இங்கணைந்த உறுதியுடையோம் என்று கூறி வரவேற்கிறார். உடன் நடந்து வருகின்றனர் ஐயர் (சான்றோர்) என்று பிள்ளையாரால் விளிக்கப்பெற்ற காரணத்தால் பெரும்பாணர் என்று அழைக்கப்படும் பேற்றினை திருநீலகண்டர் அடைந்தார். திருநீலகண்டரையும் அவர்தம் மனைவியாரையும் திருக்கோவில் புறமுன்றில் வரை அழைத்துச் சென்று

''ஏயும் இசையாழ் உங்கள் இறைவருக்கு இங்கியற்றும் என்று அருளுகிறார்''

கோயிலும் சாதிய நடைமுறையும்

அக்கால்ச் சமுதாயப் பின்னணியின் அடிப்படையில் பாணரை சம்பந்தர் ஆலயத்துள் புகச் செய்த நிகழ்வை நோக்கினால் இது மாபெரும் புரட்சி என்றே கூறவேண்டும். இந்து சனாதன தருமப்படி பட்டர் எனப்படும் அந்தணர் கோயில் கருவறை வரை போகலாம். இதர அந்தணர்களும், அரச மரபினரும் அர்த்த மண்டபம் வரை செல்லலாம். மகா மண்பத்தின் படிக்கட்டு வரை வணிகர்கள் போகலாம். தீண்டத் தகாதாரோ கோயிலுக்குள் நுழையவே அனுமதியில்லை.

வெளியிலிருந்து கோபுரத்தை மட்டுமே கண்ணால் காணலாம். இந்த நடைமுறை மதமெனும் அமைப்போடு மட்டும் தொடர்புடையதன்று. சமுதாயத்திலிருந்த இறுக்கமான சாதியச் சட்டகமே ஆலயத்துள்ளும் செயல்பட்டது. இந்நடைமுறையை மாற்றுவதென்பது மேல்சாதியினரால் திட்டமிட்டு அமைக்கப்பட்ட சமுதாய விதிகளையே புரட்டிப் போடுவதாகி விடும். எனவே கீழ்சாதியினருக்குக் கோயிலுள் நுழையும் உரிமை காலங்காலமாக மறுக்கப்பட்டே வந்தது.

மேற்சுட்டப்பட்ட சாதிய படிநிலையின் பின்னணியில் நோக்கினால் ''நான்மறையின் காரணமும் மூலப்பொருளும் முழுதுணர்ந்த வேதியராம் திருஞானசம்பந்தர் காழியூர் எல்லை வரை சென்று பாணர் தம்பதியரை வரவேற்றது. ஆலயத்தின் வெளிப்பிரகாரம் வரை அழைத்து வந்தது நிகரற்ற புரட்சியாம். தாம் பதிகம் பாட அதை யாழில் இசைக்கும் தகுதியைச் சம்பந்தர் பாணருக்கு நல்கினார். அதுமட்டுமின்றி யாழ்ப்பாணரும் மதங்க சூளாமணியாரும் தங்குவதற்கென ஒரு தனியில்லம் அமைத்துக் கொடுத்துத் தானும் உடனமர்ந்து உணவு உண்கிறார். இவ்வாறான செயல்கள் மூலம் இதுவரை இருந்த சாதீயச் சட்டகத்தை ஆட்டம் காணச் செய்கிறார்.

கோயிலுட் புகாமை ஏன்?

சம்பந்தப் பெருமான் கோயிலுட் சென்று தம் சிவானுபவத்தைப் பதிகமாக அமைப்பார். பின்னர் அப்பதிகத்தைப் புறத்தே இருக்கும் பாணரிடம் கொடுத்து விடுவார். அதே திருப்பதிகத்தை பாணர் யாழிலிட்டு இசைப்பார். கோயிலின் வெளிச்சுற்று வரை பாணரை அழைத்து வந்தவர் கோயிலுக்குள் அழைத்து வராதது ஏன்? என்ற வினா எழுவது இயற்கையே.

தான் பாட உடன் யாழிசைத்திருந்தால் பக்க இசைக் கலைஞர் என்ற பெயர்தான் பாணருக்குக் கிட்டும் என சம்பந்தர் நினைத்திருக் கலாம். மேலும் சம்பந்தர் திருப்பதிகம் பாடும்போது தனித்துப் பெற்ற சிவானுபவத்தைப் பாணரும் தனித்து யாழிசைக்கும்போது யாழின் நாதத்தைக் காழியூரரும் உடனிருந்து துய்க்கிறார்.

"நாணமுடை வேதியனும் நாரணரும் நண்ணவொணாத
தாணு எனையானுடையான் தன்னடியார்க் கன்புடைமை
பாணன் இசை பத்திமையால் பாடுதலும் பரிந்தளித்தான்
கோணல் இளம்பிறைச் சென்னிக் கோளிலி எம்பெருமானே"

என்று திருக்கோளிலித் திருப்பதிகத்துள் குறிப்பிடுகிறார் சம்பந்தர். சம்பந்தர் செய்தது இறைவேள்வி பாணர் செய்த இசைவேள்வி.

பாணரும் கருவறை வரை சென்று வணங்க வேண்டுமென்ற உளம் உடையவராக இல்லை. தாம் எங்கு யாழிசைக்கிறோமோ அங்கே இறைவன் காட்சி தருவான் என்ற அசைக்கவியலா நம்பிக்கையுடையவராக இருந்தார். சாதிச் சழக்குகளைக் கடந்த நிலையில் தில்லைவாழ் அந்தணர் களைச் சிவகணங்களாகப் பாணருக்கும் காட்டியருளுகிறார். இறுதியில் பெருமணநல்லூரில் தம்மோடு இணைந்து இறைமையோடு இரண்டறக் கலக்கும் பெரும்பேற்றினைப் பாணருக்கு நல்குகிறார்.

குலத்தாலும் செல்வத்தாலும் அமைவதாகக் கருதும் சிறப்புகள் பெருமை தருவதாகா என்று பாணர்பால் நட்புப் பூண்டு நிலை நாட்டினார் சம்பந்தர். தமக்குக் கிட்டிய இறையருளை எளிய குலத்தில் பிறந்த ஒருவருக்கும் கிடைக்கச் செய்வதன் மூலம் இறைவன் அருள் பெறச் சாதி ஒரு தடையல்ல என்று புலப்படுத்தி மக்கள் மனதைச் சைவத்தின் பாற்படுத்த சம்பந்தர் முயன்றிருக்கிறார். இவ்வாறு மக்கள் இயக்கமாகச் சைவத்தை உருப்படுத்திய காரணத்தால்தான் புறச்சமயத்தாரை மதமாற்றம் செய்யும் ஆற்றல் / ஆதரவு இவருக்குக் கிடைத்தது. மன்னர்கள் வருணாசிரம தருமத்தைக் கட்டிக் காத்த காலத்தில் சாதியத் திற்கு எதிரான இத்தகைய குரலைப் பதிவு செய்ததன் வாயிலாக, சம்பந்தர் பக்தி (சைவ) இயக்கத்தை வலுப்படுத்தியதோடு, சமய உலகில் ஒற்றுமையை ஏற்படுத்த முயன்றார் எனலாம்.

36. உமைபங்கனில் உமை வருணனை

வே. சீதாலட்சுமி, சென்னை.

'தோடுடைய செவியன்' என்று முதலாம் திருமுறையின் முதற் பதிகத்திலேயே இறைவன் உமைபங்கனாய் இருக்கின்ற செய்தியைக் கூறுகிறார் சம்பந்தர். காளை வாகனத்தில் அமர்ந்து காட்சி தரும் உமையும், சிவனும் இன்னும் ஒன்றுபட்டு ஓருடலாகவே ஆன தன்மையைத் தம் பாடல்களில் பல இடங்களில் குறிப்பிட்டு, இறைவன் ஆண் பெண்ணாகக் காட்சி அளிக்கும் தன்மையை வருணிக்கிறார். பல அடியவர்கள் இறைவன் உமையொரு பாகனாய்க் காட்சியளிப்பதைப் போற்றிப் பாடியிருக் கின்றனர். ஞானசம்பந்தர் இந்த ஒரு செய்தியைப் பல வகைகளில் - பல சொல்லாட்சிகளில் - இலக்கிய நயம் புலப்படுமாறு அமைத்துச் சொல்கின்றார்.

சில பாடல்களில் ஆணும், பெண்ணும் ஆயினான் என்று பாடு கின்றார் சம்பந்தர்.

ஆணொடு பெண் வடிவு ஆயினர் (பா. 479)

என்று பாச்சிலா ஆசிரமத்தில் உறைகின்ற ஈசன் என்று ஆண் வடிவொடு பெண் வடிவமும் பெற்றான் என்று கூறுகின்றார். உமாதேவியை ஒரு பாகத்தில் கொண்டு அர்த்தநாரியாய் விளங்குபவர் என்பதை,

'ஓர் பாகம்
பெண் ஆண்ஆய வார்சடை அண்ணல்' (454)

என்று பாடுகின்றார்.

'மூவரும்ஆகி இருவரும் ஆகி' (449)

என்ற அடியில் சிவன், சக்தியென்னும் இரண்டாய் விளங்குபவன் என்பதை வெளிப்படுத்துகிறார்.

'ஈறாய் முதலொன்றாய் இரு
பெண் ஆண்......' (109)

என்று வருமிடத்தில் சிவனொருவனே ஆணுருவிலும், பெண் உருவிலும் தோன்றுபவன் என்று குறிக்கின்றார்.

'கூறு கொண்டாய்' (565)

என்றும்,

'ஒருமை பெண்மைஉடை யன்சடையன்' (5)

என்றும் ஒரே வடிவத்தில் பெண்ணுருவும், ஆணுருவும் கொண்டு இரு உருவங்களைக் காட்டுபவனாகவும் வருணிக்கின்றார்.

இதில் ஆணொடு பெண்வடிவம் ஆனார், இருவராகி, பெண்மையாகி, ஆண் பெண்ணாகி என்று பல விதங்களில் பாடுவதைக் காணலாம். பொதுவாக ஆணும் பெண்ணும் ஆயினான் என்று கூறிய சம்பந்தர், அடுத்து மாதோர் பாகம் வைத்தனன் என்ற முறையில் குறிப்பிடு கின்றார். அப்படி, குறிப்பிடும் பொழுது பெண்ணாகிய உமையை பெண், மாதர், மாது, மங்கை, நங்கை, தையல் என்றெல்லாம் அடுக்கிக் கொண்டே சென்று இறுதியில் உமை என்றே பாடுவதைக் காணலாம்.

'பெண்மகிழ்ந்த பிரமாபுர மேவிய பெம்மான்' (4)
'பெண்நிறைந்த ஒருபால் மகிழ்வெய்திய பெம்மான்' (29)
'பெண்தான் பாகமாக பிறைச் சென்னி கொண்டான்' (240)
பெண்ணோர் பாகமுடையார் (30)
பெண்ணுறு மார்பினார் (419)
பெண்ணி னல்லாள் ஒருபாக மமர்ந்து (425)
பெண்ணும் ஒருபால் உடையவன் (527)
'பாகம் பெண்ணும் உடையவர் பாற்றுறை
நாகம் பூண்ட நயவரே' (605)

பெண் என்று கூறுகையில், நிறைந்த, மகிழ்ந்த, பாகமுடைய, அமர்ந்து என்றெல்லாம் உடனுறையும் தன்மையில் சொற்களை வெவ்வேறு வகையில் அமைக்கின்றார்.

பெண் என்று குறிப்பிட்ட தோடமையாமல் மாது என்றும் குறிப்பிடுகின்றார்.

'மாதோர் பாகமாய்ச்
செழுவார் செம்பொன் பள்ளி' (264)
'மருவார்குழலி மாதோர் பாகமாய்த்
திருவார் செம்பொன்பள்ளி' (261)
'மாதினை இடமா வைத்தனம் வள்ளல்' (442)
'காது இலங்கு குழையன்
ஒரு பாகம்
மாது இலங்கு மேனியினான் (13)

மாது என்று கூறி அடுத்து,

'கூறு ஏறிய மடவாள் ஒரு
பாகம்மகிழ் வெய்தி' (180)

'அங்கு இளம்மங்கையோர்
பங்கினர்' (476)

'நலமங்கை பார்த்தவன்' (145)

'மங்கையோர் பங்கர்' (420)

என்றும்

'அணங்கொடு ஒருபாகம் அமர்ந்து
இணங்கி அருள் செய்தவன் ஊராம்' (410)

என்றும்,

'தையலாளொர் பாகம் ஆயஎம்
ஐயர் சோற்றுத் துறை (296)

'தையல் பாக மகிழ்ந்தார்' (278)

என்று தையல் எனக் குறிப்பிட்டும், பாடிய் சம்பந்தர் அதோடமையாமல் தேவி என்று பாடுகின்றார்.

'தேவியோர் கூறினர்' (79)

'பாகமும் தேவியை வைத்துக் கொண்டு' (70)

தேவியை மெல்லியலாள் என்று அடுத்துக் குறிப்பிடுகின்றார்.

'மெல்லியல் வைத்தல் என்னே' (507)

இவ்வாறெல்லாம் பல சொற்களால் பாடிய சம்பந்தர், உமையென்றும் பாடுகின்றார்.

'உண்ணாமுலை உமையாளொடும் உடனாகிய ஒருவன்
பெண்ணாகிய பெருமான்' (97)

'உமை
உடனுறை பதிகடல் ...' (202)

'உமையாள் ஒருபா கமதாச் சமைவார்' (386)

'புணர்முலை மாது உமையாள் முயங்கு மார்பன்' (576)

'ஊறி ஆர்தரு நஞ்சினை உண்டு உமை
நீறு சேர்திரு மேனியர்' (591)

இத்தகைய இறைவியை மலையத்துவசன் மகள் என்று பாடுவதையும் சம்பந்தர் பாடல்களில் காணலாம்.

'மலை ஆர்தரு மடவாள் ஒரு
பாகம் மகிழ்வு எய்தி
நிலை ஆர்தரு நிமலன்' (175)

'வரைகெழு மங்கையது ஆகமொர் பாகம்
ஆயவன்வாழ் கொளிபுத்தூர் (427)

'மலைபுரிந்த மன்னவன்றன்
மகளை ஓர்பால் மகிழ்ந்தாய்' (562)

இனி உமையம்மையின் தோற்றத்தை, குழல், தோள், விழி, இடை, அணி என ஒவ்வொன்றாகப் பாடுவதைக் காணலாம்.

'வண்டார் குழல் அரிவையொடு
பிரியாவகை பாகம்
பெண்டான் மிக ஆனான்' (பா. 87)

இதில் வண்டுகள் பொருந்திச் சுழன்று ரீங்காரம் செய்யும் மணம் மிகுந்த கூந்தலுடைய நங்கையாகிய உமாதேவியை 'எக்காலத்திலும் பிரிதலில்லாதவாறு' தமது இட பாகத்திலும் வரித்து, தானே பெண்ணாகிய வனென்று போற்றுகின்றார். மேலும்

'கொய் பூங்கோதை மாதுமை பாகம்
கூடியோர் பீடுடை வேடர்' (450)

என்றும்

வண்டமர் பூங்குழல் மங்கையொர் பாகம்
ஆயவன் வாழ்கொளி புத்தூர் (435)

என்றும் கூந்தற் சிறப்பினைப் பாடுகிறார்.

அடுத்து, வில்லைப் போன்ற வளைந்த புருவத்தை உடைய பெண்ணின் நல்லாளாகிய உமையைத் திருமேனியில் பாகமாக வைத்திருப்பவன் என்று புருவ அழகைக் குறிக்கின்றார்.

'வில்லடைந்த புருவ நல்லாள்
மேனியில் வைத்தல் என்னே' (504)

''வில்லை வென்ற நுண்புருவ
வேல் நெடுங்கண் ணியொடும்' (551)

உமையின் கருணை விழிகளைப் போற்றிப் பாடுவது சம்பந்தர் பாடல் களில் காணக்கூடிய ஒன்றாகும்.

'மடமான்விழி உமைமாது இடம் உடையான்' (108)

வடிவுடை வாள்நெடும் கண்ணுமை பாகம்
ஆயவன் வாழ்கொளி புத்தூர்' (426)

'வாள்நெடுங் கண்ணுமை மங்கையொர் பாகம் ஆயவன்' (428)

'மடல்நெடு மாமலர்க் கண்ணியோர் பாகம் ஆயவன்' (433)

என்றெல்லாம் விழிகளைப் போற்றுவதைக் காணலாம்.

அடுத்து வருவன தோள்கள். சிவபெருமானின் திண்ணிய தோள் களுக்கு மாறாக மெல்லிய மூங்கில் போன்ற தோள்களையுடைய உமையைப் பாடுகின்றார்.

'வேயாயின தோளிக்கொரு பாகமிக உடையான்' (152)

'பணைத்தோளி பாகம் மெய்யருகே உடையானை' (45)

உமையின் வாயினையிலிருந்து வரும் இனிய மொழிகளையும், பெண்களுக்கே அணிகலனாகப் புன்முறுவலையும் பாடுகின்றார் சம்பந்தர்.

'கொல்லை முல்லை நகையினாள்ஓர்
கூறது அன்றியும்' (505)

'மூரல்முறு வல்நகை
உடையாளொரு பாகம்' (190)

என்று புன்முறுவலையும்,

'தேனை வென்ற மொழியாள்ஒரு பாகம்
கான மான்கைக் கொண்ட காழியார்' (252)

'இன்னிசை யாழ்மொழி யாள்ஓர் பாகத்து
எம் இறையே' (36)

என்று இனிய மொழியினையும் கூறி இறைவியை வணங்குகிறார்.

வளையணிந்த திரட்சியுடைய உமையம்மையின் கைகளும், அவர் பாடல்களில் வருணிக்கப் படுகின்றன.

'அம்கோல் வளையாளையோர் பாகமமர்ந்து' (340)

'இறையார் வளையாளையோர் பாகத்தடக்கி' (331)

'இறைஅணி வளையணி முலையவள் இணைவள்' (195)

'இறை
சேரும் வளை அங்கைப்
பெண்ணிலாவ வுடையான்' (14)

'வளையொலி முன்கை மடந்தையோர் பாகம் ஆயவன்' (431)

'பந்தார் விரலுமை யாளொரு பங்கா' (178)

என்று வளையணிந்த முன்கையைப் பல வகையாகப் பாடியிருக்கின்ற நயத்தைக் காணலாம். இதில் பந்தணையும் விரலி என்பது இறைவிக்கு வழங்கப்படும் பெயராகவும் அமைகின்றது.

இறைவனோடு இணைந்து இருக்கும் இறைவியின் இடையினையும் புகழ்ந்து பாடுகின்றார் சம்பந்தர்.

மேலுடை யானிமை யாதமுக்கண்
மின்னிடை யாளொடும் வேண்டி னானே (47)

'மின்னார் இடையாளொடும் கூடிய வேடம் (317)

'இழையாரிடை மடவாளொடும்'
இனிதாஉறை இடமாம் (120)

உமையம்மையின் கண், கை, வாய், விரலென்றெல்லாம் வருணித்த சம்பந்தர், தமக்குப் பாலூட்டிய மார்பினையும் பக்தியோடு பாடுகிறார்.

'வாரார் கொங்கை மாதோர் பாகமாய்' (262)

'அருப்பின் முலையாள் பங்கத்து ஐயரே' (259)

'வாரொடுங்கும் கொங்கை பங்கா' (544)

இழைவளர் தருமுலை மலைமகள்
இனிது உறை
தருமெழில் உருவினன்' (230)

'வாரிடு மென்முலை மாதொரு பாகம் ஆயவன்' (429)

'சுணங்கும் முகத்தம் முலையாள் ஒருபாகம்
அணங்கும் நிகழ்அன் பில்ஆலந் துறையாரே' (357)

'வனமுலை மாமலை மங்கையொர் பாகம்
ஆயவன் வாழ்கொளி புத்தூர்' (430)

'போகமார்த்த பூண்முலையாள்
தன்னோடும் பொன்னகலம்
பாகம் ஆர்த்த பைங்கணவெள்
ளேற்றண்ணல்' (526)

'வடந்திகழ் மென்முலையாளைப்
பாகம தாக மதித்து' (459)

'வாரணி வனமுலை மங்கையோர் பங்கர்' (437)

ஒவ்வொரு முறையும் ஒவ்வொரு விதமாகச் சொற்களையமைத்துப் பாடுவதை இதில் காணலாம்.

பூங்கொடி போன்றவள் உமைஎன்று,

'புனைகொடி இடைபொருள்தரு படுகளிறினது' (198)

'புகலிந்நிலாவு
பூங்கொடியோடு இருந்தானைப் போற்றிப்
புகலிப் பதியில் நிலவும் புண்ணியன்' (44)

என்றும்

'அன்னம் அன்னமென் நடையாள்
பாகம் அமர்ந்து' (553)

என்றும், மேனியை,

அம்மான் நோக்கிய அந்தளிர் மேனி,
அரிவையோர் பாகம் அமர்ந்த
பெம்மான்' (448)

என்றும்

'மயிலார் சாயல் மாதோர் பாகமா
எயிலார் சாய எரித்த எந்தை' (243)

என்றும், எழில்மிகு தோற்றத்தைப் பாடுகின்றார்.

இலக்கிய மரபுவழிப் பாடுவதையும், சம்பந்தரிடத்தில் காணலாம்.

'வரியர வல்குல் மடந்தையொர் பாகம்,
ஆயவன் வாழ்கொளி புத்தூர்' (434)

'பையார் அரவேர் அல்குலாளொடும்' (267)

என்றும் அமையும் பாடலடிகளை இதற்குச் சான்றுகளாகக் கூறலாம்.

இறுதியாக, அணியிழையாக உமையைக் குறிப்பிடும் பாடலடிகளைக் காணலாம்.

'அணியிழையோர்
பால்முறையால் வைத்த பாதம்' (528)

'நீறடைந்த மேனியின்கண்
நேரிழையாள் ஒருபால்
கூறடைந்த கொள்கையன்றி' (516)

அணிகளைக் கூறிய சம்பந்தர் தோட்டினையும், சிலம்பையும் தனித்துக் கூறிச் சிறப்பிப்பதைக் காணலாம்.

'சடைதனைத் தாழ்தலும் ஏறமுடித்துச்
சங்கவெண் தோடு சரிந்திலங்க' (416)

என்று தோடணிந்த பங்கனையும்,

'செறியார் கழலும் சிலம்பார்க்க
நெறியார் குழலா ளொடுநின்றான்' (337)

'கழலின் ஓசைசிலம் பினொலியோசை
கலிக்கப் பயில் கானில்' (17)

என்று சிலம்பணிந்த பாகனையும் பாடுகிறார். நூற்றுக்கணக்கான தொடர்களை அமைத்து உமைபங்கனாய் சிவன் விளங்குமாற்றைப் பாடியுள்ளார். இவ்வாறு தம் பக்தியை வெளிப்படுத்துகிறார்.

உமையின் தோற்றப் பொலிவை எடுத்துரைக்கும் வண்ணம் இவை அமைந்துள்ளன.

இவை அனைத்திற்கும் முத்தாய்ப்பாகத் 'தோடுடைய செவியன்' என்ற முதலாம் திருமுறையின் முதற்பாடலின் முதல் தொடரைச் சுட்டலாம். இவருடைய 'உமைபங்கனில்' விளங்கும் உமையைப் பாடிய பாடலடிகளனைத்தையும் உள்ளடக்கியனவாய் இச்சொற்றொடர் அமைந்திருப்பதைக் காணலாம். மேலும் உமைபங்கனைப் பாடுமிடத்து, இடமாகக் கொண்ட உமையை முதலில் சுட்டிப் பின்னர் இறைவனைச் சுட்டுவதைக் காணலாம். பெண்ணொரு பாகன், மாதொரு பாகன் என்று சுட்டுகிறாரே அன்றி, சிவன், பார்வதியைப் பாகத்தில் கொண்டவன் என்று முதலில் இறைவனைச் சுட்டவில்லை.

அதில் பெண், மடந்தை, மங்கை, நேரிழை, அரிவை, தையல்தேவி, மாது உமையாள் என்றெல்லாம் பல சொற்களால் பாடிச் செல்வதைக் காணலாம்.

மொத்தத்தில், தனக்குப் பாலூட்டிய அன்னையின் தோற்றத்தை வெவ்வேறு சொற்களை அமைத்து, பலவாறாகப் பாடி, பக்தியைக் காட்டிலும் மிகுதியாக, மேம்பட்ட பாசத்தோடு கூடிய தம் பக்தியை வெளிப்படுத்தியிருக்கிறார் எனில் அது மிகையாகாது.

37. திருவைந்தெழுத்தின் சிறப்பு

வே. சீதாலட்சுமி பாஞ்சாலன், சென்னை.

சைவ சமய நற்பெருங் குரவர்கள் நால்வரில் இப்படியன, இந்நிறத்தன, இவ்வண்ணத்தன என்று எழுதிக் காட்ட முடியாத பரம்பொருளை, 'தோடுடைய செவியன்' என்பது முதலாகக் குறியிட்டுக் காட்டி, பீடுடைய பிரம்மா புரமேவிய பெம்மான் என்று சுட்டிக் காட்டிய நிலையில் குரு என நின்றவர் ஞானசம்பந்தர். திருஞானசம்பந்தர் பாடிய திருப்பாட்டின் திருவைந்தெழுத்தின் சிறப்பினைக் காண்பதே இக்கட்டுரையின் நோக்கம்.

'ஒரு நெறி' எனப் பெறும் சிவநெறியில் முதல் நின்ற நான்மறை நெறிக்குத்தான் துணைவன் என நிற்பதாகவும், பெருமைக்கு உரிய, பெருமை பேசி துய்த்து இன்புறுதலுக்காம் பெரு நெறிக்குப் பெருந்தன்மை பெற, இசை பெய்து உலகினர்க்கு எடுத்துக்காட்டி, அந்நெறியாகவே தாம் நின்ற தன்மையும் இணைத்து,

"நற்றுணையாம் பெருந்தன்மை ஞானசம்பந்தன்"

என்று கூறியருளினார். இக்கருத்தினைச் சேக்கிழாரும், மதுரையம்பதியில் ஞானசம்பந்தரைக் காணும், மங்கையர்க்கரசியார் குலச்சிறையார் ஆகிய இருவரின் காட்சியாக அமைத்துக் காட்டும் வகையில்,

ஞானத்தின் திருவுருவை நான்மறையின் தனித்துணையை
....
தேனக்க மலர்க்கொன்றைச் செஞ்சடையர் சீர்தொடுக்கும்
கானத்தின் எழுபிறப்பைக் கண்களிப்பக் கண்டார்கள்.

(பெரியபுராணம் - 2631)

என்பது திருப்பாட்டு.

அருள் நெறியே திருநெறி தமிழ்நெறி என்றும் பதிகப் பெருவழித் தமிழ் என்று போற்றும் பெரும் நெறி.அந்நெறியின் முதல் குரவர் திருஞானசம்பந்தர். தம் பதிகங்களில் மறைநெறிக்கு ஐந்தும், பெருநெறிக்கு ஐந்தும் எனத் திருப்பாட்டுக்களை ஒப்ப அமைத்து, ஒரு நெறிக்குரிய திருப்பதிகத்தினை அமைத்து விளக்குகிறார்.

திருநாவுக்கரசர் தேவாரத்தில் 5-ஆம் திருமுறையிலுள்ள நூறு பதிகங்களில் 51-வது ஆக அமைந்துள்ள திருப்பாலைத்துறை பதிகத்தில்

11-வது பாடல்களில் நடுவில் உள்ள 6-வது பாடலில் 'சிவாய 'என்ற சிவமந்திரம் அமைந்துள்ளதை,

''விண்ணினார் பணிந்தேத்த வியப்புறும்
மண்ணினார் மறவாது சிவாயவென்
றெண்ணினார்க் கிடமா எழில் வானகம்
பண்ணினாரவர் பாலைத் துறையரே''

காணலாம்.

''அருள் நூலும் ஆரணமும் அல்லாதும் ஐந்தின்
பொருள் நூல் தெரியப் புகின்''

என்று திருவருட்பயனும் இதன் பெருமை கூறும். சைவ சமயத்திற்கே ஒப்பற்ற பெருமை தருவது, இவ்வைந்தெழுத்து மந்திரமேயாகும்.

''அஞ்செழுத்தே ஆகமமும் அண்ணல் அருமறையும்
அஞ்செழுத்தே ஆதிபுராணம் அனைத்தும் அஞ்செழுத்தே
ஆனந்தத் தாண்டவமும் ஆறாறுக் கப்பலாம்
மோனந்த மாமுத்தியும்''

என்று உண்மை விளக்கப் பாடலும் இக்கருத்தைக் கூறுகிறது.

உலகப் பற்றுக்களையறுத்து இறைவன் திருவடிப் பேற்றை விரும்புவோர் மறவாது சொல்லும் நாமம், அரவுதனை அரக்கசைத்த அடிகளின் நாமமாகும் எனக் கூறுவர் சுந்தரர்.

பெரும் பிறவிக்கடலில் வீழ்ந்து அல்லலுறும் உயிர்களைக் கரை சேர்க்கும் புணையாகும் 'ஐந்தெழுத்து' என்பர் மாணிக்கவாசகர்.

திருவைந்தெழுத்தும் ஓங்காரமும்

ஓங்காரமாகிய 'ஓம்' என்னும் பிரணவம் 'அ, உ, ம' என்ற மூன்று எழுத்துக்கள் அடங்கியதாகும். ஓம் என்ற எழுத்துக்களில் 'நாதம், விந்து, அ, உ, ம, இவை அடங்கும். எனவே ஓங்காரத்துள் அடங்கியிருப்பது திருவைந்தெழுத்தே என்பர் அறிஞர்.

''உய்ய என்உள்ளத்துள் ஓங்காரமாய் நின்ற மெய்யா''

என்பது மாணிக்கவாசகர் வாக்கு.

திருவைந்தெழுத்தின் உட்பொருள்

சைவ சித்தாந்தச் சாத்திரங்கள், திருவைந்தெழுத்தின் ஒவ்வொரு எழுத்திற்கும் ஒவ்வொரு பொருள் கூறுகின்றன.

ந- திரோதான சத்தி; ம - ஆணவ மலம்;
சி - சிவன்; வா - அருள்; ய- உயிர்.

"இறை சத்தி பாசம் எழில் மாயை ஆவி
உறநிற்கும் ஓங்காரத்துள்"

என்றும்

"சிவன் அருள் ஆவி திரோத மலம் ஐந்தும்
அவன் எழுத்தின் அஞ்சின் அடைவாம்"

என்றும் சித்தாந்தச் சாத்திரங்கள் ஓதுகின்றன. ஐந்தெழுத்தின் ஒவ்வொரு எழுத்தும் ஒவ்வொரு பொருளைக் குறிப்பதால் அவை 'பதம்' எனப்படும்.

'அந்தியும் நண்பகலும் அஞ்சுபதம் சொல்லி'

என்று சுந்தரர் அருள்கின்றார்.

'நம சிவாய' என்பதிலுள்ள 'ந,ம' என்ற எழுத்துக்கள் மறைப்புச் சக்தியையும், ஆணவ மலத்தையும் குறிப்பதால் உலகப் பயன் வேண்டுவோர் 'ந,ம' வை முன்னிறுத்தி ஓதி வழிபடுவர். 'சி,வ' என்பவை சிவத்தையும் அருளையும் குறிப்பதால் உலகப் பயன் வேண்டாது, வீடுபேறு வேண்டுவோர் 'சிகர வகர'ங்களை முன் வைத்து ஓதி இறைவனை வழிபடுவர்.

"சிவ முதலே ஆமாறு சேருமேல் தீரும்
பவம் இதுநீ ஓதும்படி"

"ந முதலா ஓதில் அருள் நாடாது நாடும்அருள்
சி முதலா ஓதுக நீ சென்று" (உண்மை விளக்கம் - 41)

என்பதால் பிறவிப்பிணி நீங்கச் 'சிகர'த்தை முன்வைத்தே ஓத வேண்டும் என வரையறுத்துக் கூறியது உண்மை விளக்கம்.

எல்லா மந்திரங்களும் தோன்றுவதற்குரிய மூலமாய முதல் மந்திரம் முதல்வனாரின் ஐந்தெழுத்து என்று கூறுவர். திருஞானசம்பந்தர் திருவைந்தெழுத்தைப் பற்றி இரண்டு பதிகங்கள் அருளியுள்ளார்.

துஞ்சலும் என்று தொடங்கும் பதிகமே முதன் முதல் பாடப் பெற்றது. இது தோலோடு நூல் தாங்கிய நிகழ்ச்சியில் கூடியிருந்த நான்மறையாளர்களுக்கு உணர்த்தும் முறையில் அருளப்பெற்றது. 'காதலாகி' என்று தொடங்கும் நமச்சிவாயத் திருப்பதிகம் திருமணத்துக்கு வந்தவர்கள் எல்லாரும் சோதியுட் கலந்து வீட்டின்பம் பெறுவதற்காக அருளப்பெற்றது. 2-வது பாடிய பதிகத்தில் 'நமச்சிவாயம்' என்பது நாதனின் நாமம் என்று விளக்குவதைக் குறிக்கோளாகக் கொண்டது.

நான்மறை வல்லவர்கள் ஞானசம்பந்தப் பெருமானுக்கு, வருதிறத்தின் மறை நான்கும் தந்தோம் என்று கூற, நான்கு கொடுத்த உங்களுக்கு

நான் கொடுப்பது ஐந்து என்று கூறித் திருவைந்தெழுத்தின் பெருமையை அருளினார்.

திருவைந்தெழுத்தினைப் பற்றி இரண்டு பதிகங்களைப் பாடியுள்ளார். இவற்றை உணரும் பதிகம் என்றும், ஓதும் பதிகம் என்றும் அமைத்துக் கூறுவர். உணரும் பதிகம் என்பது திருவைந்தெழுத்தை உணருதல் பற்றிய விளக்கம் தருவதாக அமைந்த பதிகம். உணரும் முறை இரண்டு. கழிய உணரும் முறை; உற்று உணரும் முறை. இவ்விரண்டு முறையையும் கொண்டு விளக்குவது இப்பதிகம்.

காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கித் திருவைந்தெழுத்தை ஓத, நன்னெறியில் செலுத்துவது; நெக்குள் ஆர்வம் மிகப் பெருகி நினைய, தக்க வானவராக்குவது; எல்லாத் தீங்கையும் நீக்குவது; பந்த பாசமறுத்து, உயிரைப் பேரின்பத்துள் திளைக்கச் செய்வது; இம்மையிலும் அம்மை யிலும் நமக்குத் துணையாவது; ஓதிநீறணிய வினைப் பகைக்கு அத்திர மாவது; 'நஞ்சுண்ட கண்டனின் நலங்கொள் நாமம்' என்று திருவைந் தெழுத்தின் சீர்மையை விளக்குவர் திருஞானசம்பந்தர்.

திருக்கூத்து நிலை

ஐந்தெழுத்தால் ஆடும் நடம் இரண்டு வகை. இதனை உணர்த்தும் முறையில் தில்லைக் கூத்தன் வடிவம் நமசிவய. அவன் ஐந்தொழில் இயற்றுவதற்கு உரிய நிலையில் திருவடிகள், திருக்கைகள் முதலியன ஐந்தெழுத்தாய் அமைக்கப் பெறுகின்றன.

ஐந்தொழில் புரியும் இப்பஞ்சாக்கர நடனமே ஊன நடம், ஞான நடம் என இருவகைப்படும்.

மிகு பஞ்சாக்கரத்தால் ஆடும் நடம் ஒன்று உண்டு. அது நாதாந்த நடனம். அங்கே பறையை மன்றமாகக் கொண்டு பார்வதி காண ஆடுவது.

ஆனந்தத் திருக்கூத்துப் பேச்செல்லாம் இறந்த பெருநிலையில் பேசாமை பெற்ற ஞானிகள் (மௌனிகள்); மும்மலத்தை நீக்கியவர்கள். தான் எனத் தகும் தற்போதத்தையும் அந்தம் ஆக்கினார்கள். தான் என்ற தற்போதம் எந்த இடத்தில் முடிந்ததோ அந்த இத்ததுக்குத் 'தான் அந்தம் ஆன இடம்' என்று பெயர். அந்த இடமே அந்தம் என்றும், அந்தி என்றும் சொல்லப்பெறும். இது உயிர் நின்ற நிலையே. தற்போதம் அந்தமான இடத்தில் ஆனந்தம் ஏற்படும். தற்போத அந்தமே ஆனந்த ஆதி எனப்பெறும். தற்போதத்தின் அழிவு,ஆனந்தத் தோற்றம் என இரண்டற்கும் இடையே அருள் மூர்த்தியாக நின்றாடுவான். உயிர்தான் இடம். எங்கே ஆனந்த எழுத்து அஞ்சால் ஆடுவான், உயிர் இன்பம் துய்ப்பதற்காக ஆடுவான். இதுவே இரத்தின சபையில் நின்று ஆடும் நிலை. இரத்தின சபை- உயிரே. இதனையே திருஞானசம்பந்தர்,

"செந்தழல் ஓம்பிய செம்மை வேதியர்க்கு
அந்தியுள் மந்திரம் அஞ்செழுத்துமே"

என்று பஞ்சாக்கரப் பதிக 2-ஆம் பாட்டில் கூறுகிறார்.

திருவைந்தெழுத்துப் பதிகத்தில்,

கொங்கலர் வன்மதன் வாளிஐந்து அகத்து
அங்குள பூதமும் அஞ்சு ஐம்பொழில்
தங்கரவின் படம் அஞ்சு தம்முடை
அங்கையில் ஐவிரல் அஞ்செழுத்துமே.

என்பது திருப்பாட்டு.

திருஞானசம்பந்தர் உள்ளங்கையும் ஐந்து விரல்களையும் இணைத்தே எடுத்துக் கொள்கிறார். அங்கை ஐவிரல் போலவே ஏனை நான்கு செய்திகள் திருஞானசம்பந்தரால் கூறப்பெறுகின்றன.

1. மன்மதனிடம் உள்ள ஐந்து மலரம்புகள் கொண்ட தூணி
2. ஐம்பூதம் (நிலம், நீர், தீ, வளி, வான்)
3. ஐம்பொழில் எனப்பெறும் உலகம்
4. ஐந்து தலைகளையுடைய அரவு
5. ஐந்து விரல்களைக் கொண்ட அங்கை.

மன்மதனின் ஐவகை மலர்கள் எனும் அம்புகள் என நிற்பன உடலின் அமைந்த ஐம்புலன்கள். ஐவகை பூதம் என்பது சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்ற ஐந்து. ஐம்பொழில் என்பது இவ்வுலகம். அதற்கு மேல் அரவின் படம் ஐந்து என்பது ஐந்து பிரிவு பெற நின்று மேலே குறிப்பிட்டவைகளைச் சார்ந்து செயலாற்றும் ஆணவம் என்ற மூல மலத்தைக் குறித்தது.

உயிர் என்ற ஒன்று தனிப்பொருள். உயிர் தனித்து நிற்பது அன்று. பாசத்தோடு சார்ந்து தன்னைப் பாசமாகவே மாற்றிக் கொள்ளும். சிவத்தோடு சார்ந்த காலத்தில் சிவமே என தன்னை மாற்றிக் கொள்ளும். மாயை, ஆணவம் என-இரண்டு, ஐந்து என - நிற்பது பத்து. ய-பத்து என்பதைக் குறிக்கும்.

மெய்யெழுத்து வரிசையில் 'ந' என்பது எட்டாவது; 'ம' என்பது எட்டாவதன் பின் 2-வதாக நின்றது. 'ந,ம' என்பது எட்டாவது மெய், பின்னர் 2-வது மெய் சேர்ந்து எட்டு இரண்டு பத்து. உயிரெழுத்தில் எட்டு என்பது 'அ' வைக் குறிக்கும். இரண்டு என்பது 'உ' - எட்டும் இரண்டும் சேர்ந்த நிலையில் பத்து என நின்ற 'ய' வருகிறது. 'அ' என்பது இறைவனையும், 'உ' என்பது அருளையும் குறிக்கும்.

அகரமாய் நின்ற இறைவன், 'உ' என்ற அருளில் நிற்க, அருள் ஐந்தாகப் பிரிந்து இறைவன் ஐந்தென நின்று ஆடுகின்றான்.

பத்தாவது உயிரெழுத்து 'ஒ' என்பதே. பத்து என்பதை ஐந்தும், ஐந்தும் என்பது முதற் பிரிவுக்கு - உயிர்க்குறிலுக்கு 'ஒ' என்பது ஐந்தாவது எழுத்தாகும். 2-வது பிரிவுக்கு - உயிர்நெடிலுக்கு 'ஓ' என்பது ஐந்தாவது எழுத்து. குற்றம் நீக்கிய நிலைக்கு 'ஒ' என்பதையும் குணம் சேர்த்த நிலைக்கு 'ஓ' என்பதையும் அமைத்தார் என்று கூறுவர்.

துஞ்சலாம் நிலை

சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி, துரியம், துரியாதீதம் என்ற ஐவகை ஒடுங்கிய நிலை. இப்படிச் சென்று ஒடுங்கும் நிலை, மீளவும் வந்து நிற்றல் நிலை எனப் பத்துப்படிகள். ஓர் உயிர் மனித உடம்பில் தூங்கி விழிக்கிறது என்று சொன்னால் ஐந்து படிகள் கீழே இறங்கிச் சென்று, ஐந்து படிகள் மேலே ஏறி வருகிறது. மக்கள் அறிவது, தூங்கும் முன் நின்ற நினைவு நிலையும், தூங்கி விழித்தப் பின் நின்ற நினைவு நிலையும். இந்நிலையில் தூங்குவது போலத் தோற்றங்காட்டி விட்டுத் தூங்காமல் இருப்பதுதான் பயன் பெற்ற நிலை.

துஞ்சலிலாத நிலை

மலநீக்கம் பெற்ற பின் குண ஆக்கம் என்பதைச் சிவப்பேறு எனவும் இன்பப்பேறு எனவும் கூறுவர். இந்நிலையே ஞானப்பேறு. இங்கும் சென்று திரும்புதல் என இரண்டு படிகள் உண்டு என்பர். இதில் கருத்து வேறுபாடு உண்டு. அந்தியில் - அந்தத்தில் - நாதத்தின் அந்தியில் ஆடும் நடனம். இதற்கு உரிய எழுத்துக்கள் சிவயவசி எனப் பெறுமாயினும் 'சிவயநம' என்பதே ஐந்தெழுத்து - பயன் சிவன் பேறு. இதனை நாதாந்த நடம் என்பர். சிவயநம என்ற ஐந்தெழுத்தை மிகு பஞ்சாக்கரம் என்றும் திருவைந்தெழுத்து நடம் என்று கூறுவர். இதனை,

படையிடமா நின்றுமிகு பஞ்சாக் கரத்தால்

....

என்ற உண்மை விளக்கம் (38) பாடல் உணர்த்தும்.

இருவகையான திருக்கூத்துகளை ஞானசம்பந்தப் பெருமான் பஞ்சாக்கரத் திருப்பதிகத்தினுள் முதல் இரண்டு பாட்டுகளில் அமைத்து விளக்கியுள்ளார். நேரும் துன்பம் நீக்குதல் முதல் 5 திருப்பாட்டுகளில் பேசுகிறார். 6-வது பாட்டில் இம்மை, மறுமை ஆகிய இருநிலை களிலும் துணையாக இருப்பது ஐந்தெழுத்து என்று இரண்டையும்

இணைத்துக் கூறுகிறார். 11-வது பாடலில் கற்றுச் சிறப்படைதலும் உற்று நின்று சிறப்படைதல் ஆகிய இரண்டும் இணைந்தபோது அந்நிலையே வல்லராதல் நிலை என்பதை ஞானசம்பந்தர் திருவாக்கினால் அறிய முடிகிறது.

திருவைந்தெழுத்துப் பதிகத்தின் திருக்கடைக்காப்பினால் காட்டப் பெற்ற சில கருத்துக்கள் அடிப்படையாகக் கொண்டு, திருவைந்தெழுத்துப் பதிகத்தின் ஐந்தாம் திருப்பாட்டின் கருத்துக்களைக் கீழ்வருமாறு அமைக்கலாம் என்பர்.

"அஞ்சும் தம்முடை அங்கையினால் ஐவிரல் அஞ்செழுத்துமே"

இவ்வரியினால் முன்சொல்லப்பெறும் நான்கு வகையான ஐந்தையும் தம்முடைய அங்கையும் ஐந்து விரல்களும் என்று கொண்டு, அவ்வாறே நின்றது அஞ்செழுத்து என்று பொருள் கொள்ள வேண்டும்.

'சிவாயநம' என்பதில் நடுவில் நிற்கும் 'ய'கரமாகிய உயிர், பாசக்கட்டிலிருந்து விடுபட்டு இறைவனை அடைய வேண்டுமெனில் திருவைந்தெழுத்தை முறைப்படி ஓதிவர வேண்டும். இதனால் தற்போதம் கெடும்; அம்மையப்பராகிய இறைவன் நமது உயிரோடு கூடவே நின்று, துன்பம் துடைத்து எல்லையில்லாப் பேரின்பத்தை வழங்கி அருள்வான்.

அஞ்செழுத்துமே அம்மையப்பர் தமைக் காட்டுதலால்
அஞ்செழுத்தை ஆறாகப் பெற்றறிந்தே - அஞ்செழுத்தை
ஓதப்புக்கு உள்ள மதியுங்கெடில் உமைகோன்
கேதமற வந்தளிக்கும் கேள். (திருக்களிற்றுப்படியார் - 25)

38. சம்பந்தரின் சமயப் பணியும் தமிழ்ப் பணியும்

இரா. சுசீலா, கோவை.

வேத நெறி தழைத்தோங்கவும், மிகுசைவத்துறை விளங்கவும், வண்தமிழ்செய் தவம் நிரம்பவும், தமிழ் வழக்கே அயல் வழக்கின் துறை வெல்லவும் தோன்றியவர் எனச் சேக்கிழாரால் பாராட்டப்பெறும் பெரும் சிறப்பிற்குரியவர் திருஞானசம்பந்தர். இவர் ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். இவர்தம் பாடல்கள் உலகத்து எல்லாமாய் இருக்கும் இறைவனின் அருட்சிறப்பினை, அடியார்தம் திறங்களை, பக்தி உணர்வினை, வழிபாட்டு முறைமைகளை, இயற்கை நலத்தினை, தமிழ்ப் பண்பாட்டு மரபுகளை, மொழிப்பற்றினை, சமூகச் சிந்தனையை, இசை நலத்தினை வெளிப்படுத்தக் காணலாம். சைவ சமயக் குரவர்கள் எனப் பாராட்டப்பெறும் நால்வருள் ஒருவராய் விளங்கும் இவரின் காலச் சூழல் எத்தகையது; அச்சூழலில் அவர்தம் சமயப் பணியும் தமிழ்ப் பணியும் எத்தகையன; அவர்தம் சமயவுணர்வும் தமிழுணர்வும் எத்தகையதாய் இருந்தன; அவை அவ்வாறு வெளிப்படுத்தப்பெற்றன என்பதைக் காட்டுவதாய் இக்கட்டுரை அமைகிறது.

சம்பந்தர் காலச் சூழல்

சங்க காலந்தொட்டே தமிழ்நாட்டில் சமணமும் பௌத்தமும் இருந்துள்ளன. ஆயின் அச்சமயங்களைச் சார்ந்தவர்கள் தமிழர்கள் அவர்களால் அகச்சமயங்களுக்கோ தமிழர்தம் மொழிக்கோ, பண்பாட்டிற்கோ ஊறு ஏற்படவில்லை. மூன்றாம் நூற்றாண்டில் களப்பிரர்கள் எருமை நாடு என்று சொல்லப்பட்ட மைசூர்ப் பகுதியிலிருந்து தமிழ்நாடு வந்து தமிழ்நாட்டை ஆண்டுள்ளனர். இவர்களுடைய ஆட்சியிலும் பல்லவர்களின் காலத்திலும் சமணம் செல்வாக்குற்றது. சமணம் வளர்த்த களப்பிரர் களாலும், தமிழைப் போற்றாத பல்லவர்களாலும் அகச்சமயங்களும் தமிழும் செல்வாக்கிழந்தன. வந்தேறிகளான சமணர்கள் பல்லவர் ஆட்சியில் மகேந்திர பல்லவனையும் பாண்டிய நாட்டில் கூன்பாண்டியனையும் சமணர்களாக்கி அரசியல் செல்வாக்குப் பெற்ற நிலையில் தமிழ்ச் சமயங்கள், தமிழ், தமிழ்ப் பண்பாட்டு மரபுகள் நிலை குலையும் சூழல் தோன்றியது.

பலியிடும் கொள்கைகளாலும் அன்புநெறிக்கு மாறான வேதவேள்வி களை ஆதரித்த காரணத்தாலும் சைவத்தின் செல்வாக்குக் குன்றத் தொடங்கியதை உணர்ந்த தமிழ்ச் சான்றோர் செல்வாக்கிழந்த சைவ

நெறியை நிலை நிறுத்தவும் அன்புநெறியைப் பரப்பவும் பௌத்த சமயத்தையும், அரசியல் சமயமாய் வளர்ந்து வந்த சமணத்தின் செல்வாக்கினையும் ஒடுக்கவும் பல வகைகளிலும் பாடுபட்டனர். அச்செயல்பாடுகள் பக்தி இயக்கமாய் மலர்ந்தது.

திருஞானசம்பந்தர் காலமாகிய ஏழாம் நூற்றாண்டில் சமணம் செல்வாக்குப் பெற்றிருந்த போதிலும் சைவமும் வேரூன்றி இருந்துள்ளது. சிவனுக்கு மட்டும் இருநூறுக்கும் மேற்பட்ட திருக்கோயில்கள் இருந்துள்ளன. அரசர்களும் செல்வர்களும் தொண்டர்களும் திருப்பணிகள் செய்துள்ளனர். கோயில்களில் நாள்தோறும் பாலும் நெய்யும் தயிரும் நீரும் கொண்டு திருமேனியை நீராட்டலும் பூக்கொண்டு வழிபடுதலும் நிகழ்ந்துள்ளன. திங்கள்தோறும் அடியார்க்கு அட்டிட்டல், ஐப்பசி ஓணவிழா, கார்த்திகை விளக்கீடு, மார்கழித் திருவாதிரை, தைப்பூசம், மாசிக்கடலாட்டு, பங்குனி உத்தரம், அட்டமி விழா முதலான விழாக்கள் நடந்துள்ளன. இவ்விழாக்கள் குறித்தும், வழிபாடு குறித்தும் திருஞானசம்பந்தரே குறித்திருக்கக் காணலாம்.

மறைவழியே நின்று வேள்வி முதலியன செய்து மறையோதி வழிபடும் வைதிக நெறியும், புலன்களையடக்கிக் காமம் முதலிய குற்றங்களைக் கடிந்து யோகக் காட்சியால் வழிபடும் யோகநெறியும், இல்லிருந்து நல்லறம் புரியுமாற்றால் வழிபடும் பக்திநெறியும் ஞானசம்பந்தர் காலத்தில் இருந்துள்ளன. வைதிக நெறியும் யோகநெறியுமல்லாத பக்திநெறி எளிய நெறியாய் எல்லோரும் பின்பற்றக் கூடியதாய் விளங்கியுள்ளது. பக்தி வழிபாட்டுநெறியைக் கற்றுவல்லோரும் பிறரும் போற்றியுள்ளனர். கற்றுவல்லோர் வழிபாட்டை, 'பாமருவும் கலைப்புலவோர் பன்மலர்கள் கொண்டேத்த' என்றும், ஆடவரும் பெண்டிருமாய் வழிபாடு செய்துள்ளமையை,

> **'மாதரொடும் ஆடவர்கள் வந்தடி இறைஞ்சி நிறைமாமலர்கள் தூய்க்**
> **கோதைவரி வண்டிசைகொள் கீதமுரல் கின்றவளர் கோகரணமே'**

என்றும் சம்பந்தரே காட்டியுள்ளார். இந்தப் பக்திநெறியே மக்கள் எல்லோராலும் பின்பற்றக்கூடிய சிறந்த நெறி என்பதால் பக்தி நெறியை வளர்ப்பதுடன் சமண சமயத்தின் அரசியல் செல்வாக்கை அழிப்பதையும் தம் கடமையாகக் கொண்டார் திருஞானசம்பந்தர்.

சைவ சமய வரலாற்றில் ஏழாம் நூற்றாண்டு ஒரு திருப்பு மையமாகும். இக்காலத்தே உயிர்ப் பலியிடும் பூசைமுறைகள், கொலைவேள்விகள் களையப்பெற்றன. இறைவனை வழிபடவும் பக்திப் பயிரை வளர்க்கவும் இசைப் பாடல்கள் தேர்வு செய்யப்பெற்றன. திருஞானசம்பந்தருக்கு இசையால் பக்திப் பயிரை வளர்த்த பெருமையில் பெரும் பங்குண்டு. என்வேதான் 'நாளும் இன்னிசையால் தமிழ் வளர்த்த ஞானசம்பந்தன' எனச் சுந்தரர் போற்றும் பெருமைக்குரியவரானார். தமிழையும் சைவ

சமயத்தையும் தம் இரு கண்களாகப் போற்றித் தமிழ் மொழியையும் தமிழ்க் கலைகளையும் தமிழ்ப் பண்பாட்டு மரபுகளையும் காத்து வளர்த்ததால்தான் சேக்கிழார், தம் பெரியபுராணத்தில் 4200-க்கும் மேற்பட்ட பாடல்களில் திருஞானசம்பந்தருக்கு 1255 பாடல்களை ஒதுக்கிப் 'பிள்ளைபாதி புராணம்பாதி' என்ற வழக்கு தோன்றும்படியான ஒரு பெருமையைச் சம்பந்தருக்குத் தந்துள்ளார்.

சமணக் கொள்கைகளும் எதிர்ப்பும்

'காமஞ்சான்ற கடைக்கோட் காலை' உள்ள துறவையே தொல்காப்பியம் குறிப்பிடுகிறது. சங்க இலக்கியங்களிலும் இளமைத்துறவு வற்புறுத்தப் படவில்லை. பௌத்தமும் சமணமும் இளமைத் துறவை வற்புறுத்தின. வினைக்கோட்பாடு இந்திய சமயங்கள் அனைத்துக்கும் உரியன எனினும், இறைவழிபாடு வினைப்பகையை நீக்காது; வினைகளே தமக்குரிய பயனாகிய இன்ப துன்பங்களை உயிர்க்குக் கொடுத்து நுகர்விக்கும் எனப் புறச் சமயங்கள் கூறும் வினைக்கொள்கை சைவத்தினின்றும் மாறுபட்டது. இவ்வாறான சமண பௌத்த சமயங்கள் காட்டும் இளமைத்துறவு, வாழ்க்கை மறுப்புக் கோட்பாடு, வினை பற்றிய கோட்பாடு, பெண்ணை ஒதுக்கும் கொள்கை, இசை முதலாகிய கலைகளின் மறுப்புக் கோட்பாடு ஆகியவை எல்லாம் சைவ சமயப் பக்தி நெறிக்கு வேறுபட்ட நிலையில் திருஞானசம்பந்தர் தமிழர்தம் வாழ்வியல் கோட்பாடுகளை, சைவ சமயநெறி, பக்திநெறிக் கோட்பாடுகளை வலியுறுத்திப் புறச்சமயங்களைப் புறந்தள்ளப் போர்க்கொடி உயர்த்தினார்.

உணர்தலும் உணர்த்தலும்

மேற்கூறிய சூழலில் வாழ்ந்த திருஞானசம்பந்தர் படைப்பாற்றலும் மிக்கவராய்த் திகழ்ந்ததால் இசைப் பாடல்களின் வழிச் சைவ சமயத் திற்கும் மொழிக்கும் தொண்டாற்ற விழைந்து தாம் உணர்ந்தவற்றைப் பிறருக்கும் மொழிவழி உணர்த்தினார். மொழி கருத்துப் பரிமாற்றக் கருவி மட்டுமல்லாது ஒரு நாட்டின் சமயம், கலை, பண்பாட்டு மரபு களையும் காட்டி நிற்பது. பிறரின் ஆதிக்கத்தால் ஒருமொழி அழிகின்ற பொழுது அவை அழிவதுடன் ஓரினத்தின் அடையாளமே இல்லாது போவதும் உண்டு. இதை நன்றாக உணர்ந்த திருஞானசம்பந்தர் தம் பாடல்களில் செந்தமிழின் சிறப்பினையும் கலந்தே தந்துள்ளார். பிறரின் ஆதிக்கத்தால் நாட்டுணர்வும் இன உணர்வும் மொழியுணர்வும் தழைத் தோங்கும் என்பதற்கு இருபதாம் நூற்றாண்டில் வாழ்ந்த பாரதியாரையும் பாரதிதாசனையும், அவர்தம் படைப்புக்களையும் சான்றுகளாக்க் காட்டலாம்.

ஊர் ஊராகச் சென்று சைவ சமய உணர்வை, மொழியுணர்வை மக்களுக்கு ஊட்டவிழைந்த ஞானசம்பந்தர் பத்துப் பாடல்களாகிய பதிக அமைப்பினைத் தேர்ந்து கொண்டுள்ளார். பாடல்களுக்குரிய பொருளை

வகுத்துக் கொண்டு அவற்றைப் பரப்பும் நிலையில் சில முறைகளை வைத்துக் கொண்டுள்ளார். அவற்றை அவர்தம் பதிகங்களே காட்டக் காணலாம். அவர்தம் பெரும்பாலான பதிகங்கள் பதினொரு பாடல்களைக் கொண்டவை. ஒவ்வொரு பதிகத்திலும் இம்மண்ணை, இதற்குரிய இறையை, அவன் பெருமையை முதல் ஏழு பாடல்களில் காட்டி யுள்ளார். அவனை உணர்ந்து, ஆணவத்தால் மறந்து, பின் இசையால் துதித்து உய்திபெற்ற இராவணனை எட்டாவது பாடலில் காட்டித் தவறு உணர்ந்தவனுக்கு இறைவனின் அருளுண்டு என்பதுடன் இசை இறைவனை அசைவிக்க, மனதை அவனுடன் ஒன்றுவிக்க வல்லது என்பதையும் காட்டியுள்ளார். இசையை மறுக்கும் புறச்சமயத்தார்க்கு இசைப் பெருமையைக் காட்டும் வகையிலும் எட்டாம் பாடலை அவர் அமைத்துக் கொண்டுள்ளார் எனலாம். படைத்தலும் காத்தலுமாகிய தொழில்களைச் செய்யும் திறம் இருப்பினும் இறைவனைச் செருக்கால் அடையமுடியாது; அன்பின் திறத்தாலேயே காணமுடியும் என்பதை நான்முகனும் திருமாலும் இறைவனின் அடிமுடி தேடிய வரலாற்றின் வழிக் காட்டி, அவர்கள் இறைவனை ஐந்தெழுத்தால் பரவி இறையருள் பெற்றமையைக் கூறி ஐந்தெழுத்தின் பெருமையையும் காட்டிச் செல்கிறார். மேலும் சைவத்தின் வேறு சமயமில்லை என வைணவத்தையும் இங்கு சைவத்துள் அடக்கிக் காட்டுகிறார் எனலாம். இவரின் கொள்கைகளுக்கு மாறுபட்ட பௌத்த, சமணர்களை, அவர்தம் கொள்கைகளைப் புறந்தள்ளும் போக்கில் பத்தாவது பாடலை அமைத்துக் கொண்டுள்ளார். தம் பதிகப் பாடல்களை ஓதுவதால் ஏற்படும் பயனை ஒவ்வொரு பதிகத்தின் இறுதிப்பாடலில் கூறியுள்ளார். மக்களிடையே விழிப்புணர்வு ஊட்டிப் பக்தி உணர்வு மீதூரச் செய்வதற்குத் தம் திறனை, தம் மொழியின், தம் பாடல்களின் திறனை வலியுறுத்திச் சொல்ல விரும்புமிவர் தம்மைப் புகழ்கின்ற வகையிலும் பதிக இறுதிப் பாடல்களை அமைத்துள்ளார்.

புலவர்க்குத் தம்மைத்தாமே புகழ்வது தகுதியுடையதன்று எனினும் தம்மைத்தாமே புகழ்கின்ற இடங்களும் உண்டென்பதை நன்னூல்,

'மன்னுடை மன்றத் தோலை தூக்கினும்
தன்னுடை யாற்றல் உணரார் இடையினும்
மன்னிய அவையிடை வெல்லுறு பொழுதினும்
தன்னை மறுதலை பழித்த காலையும்
தன்னைப் புகழ்தலும் தகும்புல வோற்கே'

என்ற நூற்பாவால் விளக்கும். அந்த முறையில் சைவ சமயத்தின் கொள்கை களைப் பழிக்கும் சமணர்க்கு முன்பு தம் ஆற்றலை, தம்மொழியின் ஆற்றலை வெளிப்படுத்தித் தம் வெற்றியை நிலைநாட்டும் வகையில் இறுதிப் பாடல்களைச் சம்பந்தர் பெருமித உணர்வோடு அமைத்துள்ளார் எனில் அது மிகையாகாது.

மேலும் ஒரு நெறியமனம் வைத்துணர் ஞானசம்பந்தன், தமிழ் ஞானசம்பந்தன், தமிழின் விரகன், நான்மறைவல்ல ஞானசம்பந்தன், இசையார் தமிழ்விரகன், நாடுபல நீடுபுகழ் ஞானசம்பந்தன், நல்ல கேள்வித் தமிழ் ஞானசம்பந்தன், சிவஞானசம்பந்தன், தலைமகனாகி நின்ற தமிழ் ஞானசம்பந்தன் எனத் தம் திறம் கூறித் தமிழைத் திருநெறிய தமிழ், சீரின்மலி செந்தமிழ்கள், தண்தமிழ், அருந்தமிழ், ஞானத்தமிழ், நற்றமிழ், இன்தமிழ், ஒண்தமிழ், சங்கம் மலிதமிழ் என்றெல்லாம் சிறப்பிக்கின்றார்.

> ‘நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த
> மறைமொழி தானே மந்திரம் என்ப’

என்று தொல்காப்பியர் குறிப்பிடுவதுபோல இவர் தம்முடைய படைப்புக் களை மந்திரச் சொற்கள் என்பதாகக் கூறி அவற்றை ஓதுவதால் நன்மை வரும்; தீமை நீங்கும். பழி, பாவம் நீங்கி வீடுபேறு கிட்டும். துன்பம் நீங்கிப் பொன்னும் போகங்களும் துய்ப்பர். புகழும் செல்வமும் பெற்று நல்லவராய் வினை நீக்கம் பெறுவர். வஞ்சமிலராய், நெஞ்ச இருள் நீங்கி அருள்பெற்று வாழ்வர். பந்த பாசம் அறுக்க வல்லவராவர் என்றுரைத்து, ‘மற்றிதற்கு ஆணையும் நமதே’ ‘ஆணையே’ என ஆணை யிட்டும் சொல்கிறார். மேலும் ஒரு பதிகம் முழுவதும் ‘எனதுரை தனதுரையாக’ எனத் தாம் கூறுபவை ஈசனே கூறுபவை என்றும் எடுத்துரைக்கக் காணலாம். இவ்வாறு இறைவனை வணங்கி உய்தி பெறும் வழிவகைகளைக் காட்டும் தம் சொற்களைக் கேளாது அயல் நெறிகளில் செல்வோரைப் ‘பேய்த்தேர்ப்பின் குடங்கொண்டு நீர்க்குச் செல்வோர் போதுமின்’ என்றும் குறிக்கிறார்.

இவ்வாறான திருஞானசம்பந்தரின் சமணர்க்கு எதிரான எதிர்ப் புணர்ச்சியில் இறைக்காதலும் கடமையும் கலந்து நிற்பதைக் காணலாம். இந்நிலையில் இவர் பாடல்களில் உருக்கம் நிறைந்த பக்தியுணர்வைவிடப் பெருமிதம் கலந்த பக்தி உணர்வே விஞ்சியிருப்பதையும் காண முடிகின்றது.

திருநீற்றின் பெருமையும் மந்திர வலிமையும்

சமண சமயக் கொள்கைகளும் சமணக் குறியீடுகளும் மலியத் தொடங்கிய நிலையில் சிவசின்னங்களும் சிவமந்திர ஒலியும் எங்கும் நிறைய வேண்டுமென நினைத்துள்ளார் சம்பந்தர். திருநீற்றின் அழகும் மணமும் எங்கும் நிறைய விரும்பிய அவர் திருநீற்றின் பெருமையை, ‘நமசிவாய’ என்னும் மந்திரத்தின் வலிமையைக் காட்ட பல்வேறு வகைகளில் அவற்றின் சிறப்பினைத் தம் பாடல்களில் ஓசை நயம்பட அடுக்கிக் கூறியுள்ளார்.

மந்திரமாவது, வானவர் பூசுவது, அழகியது, துதிக்கப்படுவது, வேதத்தில் உள்ளது, வெந்துயர் தீர்ப்பது, போதம் தருவது, புன்மை

தீர்ப்பது, ஓதத்தகுவது, உண்மையில் உள்ளது, முத்தி தருவது, முனிவர் அணிவது, சத்தியமாவது, தக்கோர் புகழ்வது, பத்தி தருவது, பரவ இனியது, சித்தி தருவது, காண இனியது என இவ்வாறு பத்துப் பாடல்களில் திருநீற்றின் பெருமையைக் காட்டுகிறார்.

'நமசிவாய' எனும் ஐந்தெழுத்து மந்திரத்தைக் காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கப் பாடுபவர்கள்' 'பந்தபாசம் அறுக்க வல்லவர்கள்' எனக் கூறும் இவர் அது இறைவனின் நாமம் என்பதை நாதன் நாமம், நம்பன் நாமம், நக்கன் நாமம், நயனன் நாமம், நல்லார் நாமம், நந்தி நாமம் என்றெல்லாம் எடுத்துரைத்து அதன் சிறப்பினை வெளிப்படுத்தியுள்ளார். மேலும் புறத்தே சிவவேடமும் அகத்தே சிவனடியும் கொண்ட திருத் தொண்டர்களைப் பேணுதல் வேண்டுமென்று கூறுமிவர் 'எம் ஈசர் தொண்டர் தொண்டரைத் தொழுதடி பணியின் தூநெறி எளிது' என்றுரைத்து எங்கும் சிவவேடமும் தொண்டர் சீரும் பரவ வழி செய்துள்ளார்.

தமிழ்ப் பதிகங்களும் அற்புதங்களும்

சிவனின் அருள்பெற்ற திருஞானசம்பந்தர் வாழ்க்கையில் நடந்த அற்புதங்களைப் போலவே அவர் தமிழால் செய்த அற்புதங்களும் பலவாகும். பிரமபுரத்தில் உமையம்மையின் திருமுலைப்பாலை உண்டது, திருக்கோலக்காவில் ஐந்தெழுத்து மந்திரம் எழுதப்பெற்ற செம்பொற்றாளம் பெற்றது, திருநெல்வாயில் அரத்துறையில் இறைவன் தந்த முத்துச்சிவிகை, முத்துக்குடை ஆகியவற்றைப் பெற்றது, திருப்பட்டீச்சரத்தில் வேனில் வெப்பம் தீர இறைவன் முத்துப்பந்தர் அளித்தது முதலியன இவர்தம் வாழ்க்கையில் நடந்த அற்புதங்களாகும். இவர் தம்முடைய பதிகங்களால் திருப்பாச்சிலாச்சிராமத்தில் கொல்லி மழவன் என்னும் மன்னன் மகளின் முயலகன் என்ற நோயைத் தீர்த்தது, கொடிமாடச் செங்குன்றூரில் அடியார்களின் குளிர்சுரம் போக்கியது, திருவாவடுதுறையில் தந்தையாரின் வேள்விக்காகப் பொற்கிழி பெற்றது, திருமருகலில் வணிக மகள் கணவனின் விடம் தீர்த்தது, திருவீழிமிழலையில் பஞ்சம் தோன்றிய பொழுது அது தீர்க்க வாசியில்லாக் காசு பெற்றது, திருமறைக்காட்டில் நாவுக்கரசரால் திறப்பிக்கப்பட்ட திருக்கோயில் திருக்கதவங்களைத் திருக்காப்பிடச் செய்தது, திருவாலவாயிலில் சமணர்கள் ஞானசம்பந்தர் தங்கியிருந்த திருமடத்திற்குத் தீயிட்ட பொழுது அத்தீயைப் பையவே பாண்டியனைப் பற்றுமாறு செய்தது, கூன்பாண்டியனின் வெப்புநோய் தீர்த்தது, சமணர்களை அனல் வாதத்திலும் புனல் வாதத்திலும் வென்றது, திருக்கொள்ளம்பூதூரில் ஆற்று வெள்ளத்தில் அடியார்களை ஓடத்தில் ஏற்றிச் சென்றது, திருவோத்தூரில் ஆண்பனைகளைப் பெண் பனை களாக்கியது, திருமயிலாப்பூரில் என்பாகிய பூம்பாவையை மீண்டும் பெண்ணாக எழுப்பியது ஆகிய இவர் நடத்திய அற்புதங்களும்

இவர்தம் தமிழ்த் திறத்தாலேயே முடிந்தது எனலாம். வாதில் வல்ல சமணர்களை இவர் வாதில் வென்று பாண்டிய நாட்டில் சமணத்தை வீழ்ச்சியடையச் செய்த பெருமையை இவரது ஞானத்தமிழே பெற்றது எனினும் மிகையாகாது.

தமிழ் உணர்வும் தமிழ் மரபு போற்றலும்

திருஞானசம்பந்தரின் தமிழ் உணர்வை,

'உரவார் கலையின் கவிதைப் புலவர்க் கொருநாளும்
கரவா வண்கைக் கற்றவர் சேரும் கலிக்காழி'

என்று தமிழ்ப்புலவர்களும் கற்றவர்களும் நிறைந்ததாய்க் காழிப் பதியைப் புகழ்வதன் வழியும் இறைவன் இறையனார் என்னும் புலவராய்ச் சங்கத்தமிழ் வளர்த்த மதுரையைக் கண்டவுடன் நால்வேதத்தையும் தமிழில் அகப்பொருளையும் புறப்பொருளையும் அருளிய அப்பன் அங்கயற்கண் அம்மையுடன் வீற்றிருக்கும் மதுரை இதுவோ என மகிழ்வதன் வழியும் அறியலாம்.

தமிழ் விரகனாய் விளங்கிய திருஞானசம்பந்தர் பண்டை அகப்பொருள், புறப்பொருள் இலக்கியங்களில் பயிற்சி மிக்கவராய்த் திகழ்ந்துள்ளார். இயற்கையையும் அணிகளையும் கையாளும் திறத்தில் சங்கச்சாயலை இவர்தம் பாடல்களில் காணலாம். தம் தமிழைச் 'சங்கமலி செந்தமிழ்கள்' என்று இவரே குறிப்பிட்டுள்ளார்.

'ஈறாய்முத லொன்றாயிரு பெண்ணாண்குண மூன்றாய்
மாறாமறை நான்காம்வரு பூதம்மவை ஐந்தாய்
ஆறார்சுவை ஏழோசையொ டெட்டுத்திசை தானாய்'

என உலகத்துள்ள எல்லாமாய் இறைவனை அவர் காட்டிடினும் அவர் இறைவனை இருத்திக் காண்பது தமிழ் மண்ணில்தான். இங்குள்ள நானிலங்கள், சிவன், உறைகின்ற ஊர்கள், அவற்றின் இயற்கைச் சூழல், இயற்கையில் அமைந்துள்ள மலை, காடு, ஆறு, அருவி, கடல், வயல், ஊர்வன; பறப்பன, நீந்துவன, விலங்குகள் என அனைத்தையும் உற்றுநோக்கி உள்ளத்தில் காட்சிகளாய்ப் பதியவைத்துத் தம் பதிகங்களில் அவற்றைப் படைத்துக் காட்டியுள்ளார்.

சங்க அகப்பாடல்களில் இயற்கை முதற்பொருளாயும் கருப்பொருள் களாயும் விளங்கி, உரிப்பொருள் விளக்கத்திற்குப் பின்னணியாக அமைந்ததென்றால் சம்பந்தர் பாடல்களில் இயற்கை இறைவனின் பெருமையைச் சொல்வதற்குப் பின்னணியாகப் பயன்பட்டுள்ளது. இறைவனே அவ்வியற்கையாகவும், அவ்வியற்கை வணங்குகின்ற பொருளாகவும் இருப்பதைத் தம் பாடல்களில் காட்டியுள்ளார்.

**'கருங்கட் டாக்கலை பெரும்பிறி துற்றெனக்
கைம்மை யுய்யாக் காமர் மந்தி
கல்லா வன்பறழ் கிளைமுதற் சேர்த்தி
ஓங்குவரை யடுக்கத்துப் பாய்ந்துயிர் செகுக்கும்'**

என்ற குறுந்தொகைப் பாடலில் பெண்குரங்கின் செயல் தலைவியின் மன உணர்வை வெளிப்படுத்தப் பின்னணியாக அமைந்ததெனில் இதே காட்சி சம்பந்தர் பாடலில்,

**'கைம்மக வேந்திக் கடுவனோடுடிக் கழைபாய்வான்
செம்முக மந்தி கருவறை யேறும் சிராப்பள்ளி'**

என இறைவன் தலப்பெருமையைக் கூறுவதற்குப் பின்னணியாக அமைந்துள்ளது

இவ்வாறு சங்க மரபில் காலூன்றிப் புதுமரபு படைத்துள்ளார். அதற்குக் காரணம் அவர்தம் பண்டை இலக்கியப் புலமையும், சமயவுணர்வும் நாட்டுப் பற்றும் தமிழ்ப் பற்றும் எனில் அக்கூற்று மிகையாகாது. மேலும் பண்டை அகத்திணை மரபினைத் தம் பக்திப் பாடல்களிலும் பேணியுள்ளார்.

அகத்திணை மரபு

கடவுளர் மீது அடியார்கள் போற்றிப் பாடும் பாடல்களைப் பாடாண் பாட்டு என உரையாசிரியர்கள் குறிப்பர். இப்பாடல்கள் அகத்துறைப் பாடல்களாகவும் அமைவதுண்டு. அத்தகைய பாடல்களை,

**'காமப் பகுதி கடவுளும் வரையார்
ஏனோர் பாங்கினும் என்மனார் புலவர்'**

என்ற தொல்காப்பிய நூற்பாவில் அடக்குவர். இந்நூற்பாவிற்குப் 'புணர்ச்சி வேட்கை கட்புலனாகிய கடவுளிடத்தும் நீக்கார்; மக்களிடத்தும் நீக்கார்' என்று நச்சினார்க்கினியர் உரை எழுதுவார். இத்தகைய பாடல்கள் 'கடவுள்மாட்டு மானிடப் பெண்டிர் நயந்த பக்கம்' என்றும், பாடாண் கைக்கிளை என்றும் கூறப்படும். இம்மரபினையொட்டி ஞானசம்பந்தர் இறைவனை நாயகனாகவும் இறையையே எல்லாமாய்க் காணும் உயிரை நாயகியாகவும் வைத்துப் பதினைந்து பதிகங்கள் பாடியுள்ளார். தன்னை மறந்து தன் நாமம் கெட்டுக் கொண்டான் கொடுமைகள் பல செய்யினும் அவன் அன்பையே நாடி நிற்கும் கற்புமகளின் ஆட்படும் மரபு, அவள்தன் அன்பின் திறம் போற்றுதற்குரியது என்ற நிலையில் சங்க இலக்கியம் விதந்து கூறிய மானிடக் காதலைக் கடவுளுக்கு ஆட்படும் காதலாக, கடவுட் காதலாக மரபு மாற்றம் செய்து புதிய மரபு படைத் துள்ளார் ஞானசம்பந்தர். துறவே இறைவனை அடைவதற்குரிய வழி என்றில்லாமல் இல்லறநெறியில் நின்று பக்திநெறி போற்றி இவ்வுலக போகங்கள் பொய்; இறையருளே உண்மை என்பதை உணர்ந்து

உய்திபெறுவதையும் சைவம் காட்டுகிறது. எனவே ஒருவகையில் பெண்ணை ஒதுக்கும் சமண, பௌத்த சமயங்களுக்கு எதிராகப் பெண்மையைப் போற்றும் வகையில் இவ்வகத் துறைப் பதிகங்கள் அமைந்துள்ளன எனலாம். இவருடைய முதற்பாடலிலேயே 'தோடுடைய செவியன்' எனப் பெண்ணும் ஆணுமாயுள்ள இறைத்தோற்றத்தையே இவர் விதந்துரைப்பதும் இங்கு குறிக்கத்தக்கது.

தமிழ்க்கொடை

புதிய யாப்பு முறைகளையும் சித்திர கவிகளையும் படைத்தும் தமிழுக்கு வளம் தேடித் தந்துள்ளார் ஞானசம்பந்தர். இணைக்குறள் ஆசிரியப்பா, தரவு கொச்சகக் கலிப்பா முதலான பாவகைகளையும், கலித்துறை, கலிவிருத்தம், வஞ்சித்துறை, வஞ்சி விருத்தம் முதலான பாவினங்களையும் கையாண்டுள்ளதுடன் யாப்பில் நாலடிமேல் வைப்பு, ஈரடிமேல் வைப்பு, திருவிருக்குக்குறள், திருவிராகம், வழிமொழித் திருவிராகம், திருத்தாளச் சந்தி முதலான புதுமைகளைப் படைத்தும் தமிழில் முதலில் இடைமடக்கு, ஏகபாதம், இயமகம், எழுகூற்றிருக்கை, மாலைமாற்று, சக்கரமாற்று, கோமூத்திரி, கூடசதுக்கம் முதலிய சித்திர கவிகளைப் பாடியும் புதிய இலக்கியங்களுக்கு வழிகோலித் தமிழ்த் தொண்டு செய்துள்ளார். இவற்றைச் சேக்கிழார் 'மூல இலக்கியங்கள்' என்று குறிப்பிட்டுள்ளார்.

இசைத்தொண்டு

'இசையார் தமிழ் விரகன்' எனத் தம் தமிழிசைத் திறத்தை வெளிப்படுத்திக் கொள்ளும் ஞானசம்பந்தர் பாடலுக்கு இரங்கும் பண்பாளனாகிய இறைவனை 'எண்ணானவன்', இசையானவன் என்று குறிப்பிட்டு அத்தகைய இறைவனுக்குப் பண்சுமந்த பாடல்களைப் படைத்துத் தமிழிசைத் தொண்டும் புரிந்துள்ளார் 'சாதிவேறுபாடு பாராட்டாது தமிழ் மொழி, தமிழ்ச்சமய உணர்விற்கு முதன்மை தந்து ஏழிசையும் பணி கொண்ட திருநீலகண்ட யாழ்ப்பாணர்க்குச் சம்பந்தர், தம் பாடல்களுக்கு யாழ் வாசிக்கும் உரிமையைத் தந்து தமிழிசையை வளர்த்துள்ளார்.

இவர்தம் இசைத்தொண்டும் சமயத் தொண்டும் இவருடன் இணைந்த அடியார்களின் சமயத் தொண்டும் சோழர் காலத்தே பல கோயில்கள் கட்டப் பெறுவதற்கும் கட்டடம், சிற்பம், ஓவியம் முதலான நுண்கலை களுடன் இசைக்கலையும் நாட்டியக் கலையும் வளர்ச்சியடையவும் துணையாக நின்றுள்ளன எனலாம்.

இவ்வாறு ஞானசம்பந்தர் சைவ சமயத்தையும் தமிழ் மொழியையும் காக்கத் தம் செயல்களாலும் படைப்பாற்றல் திறத்தாலும் பெரும் பணிகளைச் செய்துள்ளார். அவருடைய பணிகளால் சைவ சமயம் தழைத்தோங்கியதுடன் தமிழ் மொழியும் வளர்ந்துள்ளது எனலாம்.

39. சம்பந்தர் திருமுறை உரைத்திறன்

பா. சுந்தர், திருச்சி.

திருஞானசம்பந்தர் அருளிய முதல் திருமுறை திரு.ச. தண்டபாணி தேசிகர் குறிப்புரையுடன் 1953-ஆம் ஆண்டு தருமபுர ஆதீனத்தின் வழி வெளியிடப்பட்டுள்ளது. சிவபெருமான் முப்புரம் எரித்த புராணக் கதை, ஏனைய திருமுறைகளில் இடம் பெற்றுள்ளதைப் போன்று இதன் கண்ணும் இடம்பெற்றுள்ளது. இருதலத்துப் பதிகங்களுள் தலத்துக்கு ஒன்றாக இரு பாடல்களில் இக்கதை பாடப்பட்டுள்ளது. இப்பாடல் களுக்கான குறிப்புரைகளை ஆராய்ந்து, அதன் பின்னணியில் இரு தேவாரப் பாசுரங்களுக்கு உரைத்திறன் காணுதல் இக்கட்டுரையின் நோக்கமாகும்.

திருவீழிமிழலைத் தேவாரம்

**''கரத்தான்மலி சிரத்தான்கரி யுரித்தாயதொர் படத்தான்
புரத்தார்பொடி படத்தன்னடி பணிமூவர்கட் கோவா
வரத்தான்மிக வளித்தான்''**

இது திருவீழிமிழலைத் திருத்தலத்தின்கண் திருஞானசம்பந்தர் அருளிய திருப்பதிகத்துள் காணப்படும் ஒரு பாடலாகும். இதன்கண் சிவபெருமான் முப்புரம் எரித்த புராணக் கதை கூறப்பட்டுள்ளது.

திரு.ச. தண்டபாணி தேசிகரின் குறிப்புரை

இப்பாடலின் பொருள்தொடருக்குச் சிவபெருமான், ''முப்புரங்களின் வரிசை பொடியாக்கிய காலத்து, தம் திருவடி பணிந்த தாரகாட்சன், கமலாட்சன், வித்யுன்மாலி என்ற மூவர்கட்கும் சுதர்மன், சுநீதி, சுபுத்தி எனப் பெயரீந்து வாயிற்காவலராகும் வரத்தால் மிக அருள் செய்தவன்'' என்று திரு. ச. தண்டபாணி தேசிகர் குறிப்புரை வரைந்துள்ளார்.

இக்குறிப்பின்கண் வரம் பெற்ற மூவரும், முப்புராதிகள் மூவரும் வேறல்லர் எனச் சுட்டியுள்ளார்.

மேலும், மேற்குறித்த பாடலுள் பயின்றுள்ள புரத்தார் பொடிபட என்னும் தொடருக்கு, ''முப்புராதிகள் பொடியாயினர் எனப் பொருள் கொள்ளின், 'உய்ந்த மூவரில் இருவர் நின் திருக்கோயில் வாய்தல்

காவலாளர் என்றேவி', என்பதனோடு மாறு கொள்ளும். அன்றியும் அதிகைப் புராண வரலாற்றோடும் முரணும். ஆதலால் புரத்தார் பொடிபட எனப் பிரித்தலே சால்புடைத்து. திரிபுரம் எரிந்த காலத்துக் கமலாட்சன் முதலியோர் அழிந்திலர், புரம் எரித்தபோது இவர்கள் மூவரும் கைலாசத்தில் துவாரபாலகராகும் பதவியைக் கொடுக்க வேண்டும் என வேண்டிக் கொண்டார்கள் என்னும் தர்மசங்கிதை வசனமும் வலியுறுத்தும்'' எனவும் திரு.ச.த. விளக்கம் தந்துள்ளார்.

திரு.ச.த. அவர்கள் புரத்தார் என்னும் சொல், முப்புரத்தின் தலைவர்களாகிய தாரகாட்சன் முதலிய மூவரை சுட்டாமல், மூவரும் சிவன்பால் வரத்தின் வாயிலாகப் பெற்ற முப்புரங்களின் அழிவையே சுட்டுவதாகக் கருதினார். இதன் அடிப்படையில் மேற்படிச் சொல்லைப் பிரித்துக் குறிப்பும் வரைந்துள்ளார்.

திருவண்ணாமலைத் திருப்பாசுரம்

"பூவார் மலர்கொண் டடியார் தொழுவார் புகழ்வார் வானோர்கள்
மூவர்புரங்க ளெரித்த வன்று மூவர்க்கருள் செய்தார்"

என்பது திருவண்ணாமலைத் திருப்பதிகத்து முதற்பாடலின் முன்னிரண்டு அடிகள் ஆகும். திருஞானசம்பந்தர், இப்பாடலின்கண்ணும் முப்புரம் எரிந்த செய்தி, அருள்பெற்ற மூவர் பற்றிய குறிப்புக்களைச் சுட்டியுள்ளார்.

திரு.ச.த. வின் குறிப்பு

இப்பாடலடிகளுக்குத் திரு.ச.த. குறிப்புரை வரைந்துள்ளார். ''மூவார் என்பதற்கு அழியாதவர்கள் என்றும், மூவர் என்னும் சொல்லுக்கு திரிபுராதிகள் என்றும் குறித்துள்ளார்''. இங்கு மூவார் என்பது வினையடிப் பெயராகவும் மூவர் என்பது எண்ணுப் பெயராகவும் கொள்ளப்பட்டுள்ளன.

திருவாசகத்தின்கண் முப்புரம் எரிந்த கதை

மாணிக்கவாசகர்,

''உய்யவல் லாரொரு மூவரைக் காவல்கொண்டு
எய்யவல் லானுக்கே உந்தீபற இளமுலை பங்கனென்று உந்தீபற"

எனத் திருவுந்தியார் பகுதியிலும்,

''எண்ணுடை மூவர் இராக்கதர்கள் எரிபிழைத்துக்
கண்ணுதல் எந்தை கடைத்தலை நின்றதற்பின்''

எனத் திருத்தோணோக்கப் பகுதியிலும் முப்புரம் எரிபட்ட கதை, அருளப்பட்ட மூவர் குறித்துப் பாடியுள்ளார்.

திரு. கா. சுப்பிரமணிய பிள்ளையின் உரை

இப்பாடல்களுக்குத் திரு.கா. சுப்பிரமணிய பிள்ளையின் உரை பின்வருமாறு:

> "திரிபுரத்தசுரர்க்குத் திருமால் நாத்திகம் போதித்த காலை தாரகாட்சன், வித்யுன்மாலி, கமலாட்சன் என்னும் மூவரும் சிவபூசையைக் கைவிடாது நின்று திரிபுரம் எரியுற்ற காலை இறைவன் வாயில் காப்பாளராயினர் என்பது புராணம்"

என்று திரு.கா.சு. வால் திருவுந்தியார் விளக்கப்படுகின்றது.

மேலும்,

> "தாரகாட்சன், வித்யுன்மாலி, கமலாட்சன் என்று மூவரும் சிவபூசனையில் தலைநின்று, பிற அசுரரைப் போல் விண்டு (விஷ்ணு) போதித்த நாத்திகவாதத்தை உடன்படாராயினர். ஆதலால், எரியிற்பிழைத்தனர் மூவருள் இருவர் வாயிற்காவலராயும் ஒருவர் குடமுழாவொலிப்பாராயும் வரம் பெற்றார் எனச் சுந்தரர் தேவாரம் கூறினும், எல்லாரும் இறைவாயிலில் முதற்கண் நின்றவரேயாவார்"

என்று திரு. கா.சு. திருத்தோணோக்கத்திற்கும் குறிப்பு தந்துள்ளார்.

திரு.ச. த.வின் திருவாசக விளக்கம்

திருவுந்தியார், திருத்தோணோக்கம் இவற்றுக்குத் திரு. ச.த.வின் விளக்கங்கள் கீழ் குறிக்கப்பட்டுள்ளன.

> "உய்யவல்லார் - அழிவிலிருந்து உய்ய வல்லவராகிய தாரகாட்சன், கமலாட்சன், வித்யுன்மாலி என மூவரும். இவர்கள் மூவரும் சிவபத்தியும் இடையறாது சிவபூசை செய்யும் சிந்தையும் உடையவர்கள். சிவபெருமானிடமே அழியா வரத்தையும் பறக்கும் கோட்டையையும் பெற்றவர்கள். பேறலரும் திருப்பெற்றபின் சிந்தனை பிறிதாதல் உயிர்கட்கு இயற்கையாதலின் வரம் பெற்றதும், நகரங்கள் பலவற்றை அழித்து வந்தனர். தேவர் களும் முனிவர்களும் இறைவனிடம் முறையிட்டும், அவர்கள் சிவனடியார்களாக விளங்குதலின் எவராலும் அவர்களை அழிக்க முடியவில்லை. அந்நிலையில் திருமால் பத்தாவதாரம் எடுத்து அவர்கள்பால் சென்று அரனடிக்கு அன்பு செய்யும் செயலை மாற்றினர். பின்னர், சிவபெருமான் அவர்களை மட்டும் உய்யக்கொண்டு முப்புரங்களை எரித்தனர்"

என்ற திருவுந்தியர் திரு. ச.த. வால் விளக்கப்படுகின்றது.

எண்ணுடை மூவர் பற்றிய விளக்கம்

> "பெரிய பெருமானுடைய கருணைக்குரிய தாரகன், தாரகாட்சன், வித்யுன்மாலி என்ற இராக்கதர் மூவரும் அழிவிற்குத் தப்பி நெற்றியிற் கண்ணையுடைய எமது தந்தையாகிய சிவபெருமானுடைய முதல் வாயிலிலே காவலராகப் பணியேற்று நின்று"

என உரையும் அதன் விரிவுரையும் தந்துள்ளார். அவ்வுரை பின்வருமாறு

> "திரிபுராரிகள் அரக்கராயினும் சிவபூசை இடையீடின்றிச் செய்பவர்களாதலானும் பௌத்தாவதாரம் எடுத்த திருமால் உபதேசங்களால் மனந்திரிந்தும் சிவத்தியானத்தை விடாதவர் களாதலானும் இங்ஙனம் கூறினார் என வரலாற்றைத் துணைக் கொண்டு கூறியதாம்"

இவ்வாறு திரு.ச.த. திருத்தோணோக்கப் பாடலடிகளை விளக்கியுள்ளார்.

இரு அறிஞர்களின் கருத்துப் பிழிவு

திரு. கா.சு. அவர்கள் குறிப்புரை வழி பெறப்பட்ட செய்திகள் பின்வருமாறு தாரகாட்சன் முதலான மூவர், திருமால் புத்த வடிவம் கொண்டு நாத்திகவாதம் போதித்த காலத்து அதற்கு உடன்படாது தொடர்ந்து சிவனடியார்களாக விளங்கினர். அதன் காரணமாகவே திரிபுரம் எரியூட்டப்பட்ட காலத்துச் சிவபரம்பொருளால் இம்மூவரும் உய்விக்கப்பட்டனர். அதாவது தாரகாட்சன் முதலிய திரிபுராதிகளும், உய்யவல்லார் ஒரு மூவரும் வேறல்லர் என்பது திரு.கா.சு.வின் கருத்து ஆகும்.

திருமால் புத்த அவதாரம் எடுத்து தாரகாட்சன் முதலிய மூவர்பால் சென்று அரனடிக்கு அன்பு செயலை மாற்றினர். பின்னர் சிவபிரான் இம்மூவரை மட்டும் உய்யக் கொண்டு முப்புரங்களை எரித்தார். இவ்வாறு திருமாலால் மனம் திரிக்கப்பட்டும் சிவத்தியானத்தை விடாதவர்கள் தாரகாட்சன் முதலிய மூவர் ஆவார். ஆதலால் இவர்கள் அழலிற்குத் தப்பினர். சிவபெருமானால் கடைத்தலைமுன் நிற்குமாறு அருளப்பட்டனர் என்பது திரு. ச.த.வின் விளக்கம் ஆகும்.

எழும் வினாக்கள்

திரிபுராதிகளாகிய மூவரும் உய்யவல்லாராகிய மூவரும் வேறல்லர் சிவபரம்பொருள் முப்புரங்களை மட்டும் எரியூட்டி இவர்களுக்கு அருள் செய்தார் என்பது மேற்குறிக்கப்பட்ட இரு அறிஞர்களின் கருத்து ஆகும். இக்கருத்தை அப்படியே ஏற்றுக் கொண்டால் பின்வரும் வினாக்கள் எழுகின்றன அவையாவன:

1. திருமாலால் மனம் திரிக்கப்பட்ட பின்னர், இம்மூவரும் எவ்வாறு அரனடிக்கு அன்பு செய்திருக்க இயலும்?

2. பெருமானிடம் அழியா வரத்தையும் பறக்கும் கோட்டையையும் பெற்றுப் பின்னர் சிந்தை திரிந்து நகரங்கள் பலவற்றை அழித்து உயிர்களை நலியச் செய்த இம்மூவரையும் பரம்பொருள் ஒறுக்க வில்லையா?

3. இம்மூவரும் உயிர்களை நலிவுறுத்தற் பொருட்டுப் பயன்படுத்திய முப்புரங்களை மட்டும் எரியூட்டி, அவற்றை இயக்கிய இவர்களை உய்வித்தார் என்பது எய்தவன் இருக்க அம்பை ஒறுத்த செயல் அல்லவா?

திரு. சி. அருணை வடிவேலரின் 'மூவர்' பற்றிய குறிப்பும் விளக்கமும்

மேற்குறித்த வினாக்களை மனத்திற் பதித்து திரு.சி. அருணை வடிவேலரின் திருவாசகக் குறிப்புரையை அணுகலாம். முதற்கண் உய்யவல்லார் எனத் தொடங்கும் திருவுந்தியார் பாடலுக்கான குறிப்புரை பின்வருமாறு :

> **''உய்யவல்லார் - யார் யார் எத்துணை மயக்க உரைகளைக் கூறினும் அவற்றை கேளாது நன்னெறியைக் கடைப்பிடிக்க வல்லவர்: ஒரு மூவராவார் - சுதன்மன். சுசீலன், சுபுத்தி என்னும் பெயருடைய அசுரர். ''இவர்கள் திரிபுரத்தில் வாழ்ந்தவர்கள். திரிபுரத் தலைவர்களாகிய தாரகாக்கன், கமலாக்கன், வித்தியுன்மாலி என்பவர். முதலில் தாங்களும் சிவநெறியில் ஒழுகிப் பிறரையும் ஒழுகச் செய்து, பின்பு திருமால் புத்த வடிவம் கொண்டு நாரத முனிவருடன் சென்று புத்த சமயத்தைப் போதித்த பொழுது பௌத்தர்களாய்ச் சிவநெறியைக் கைவிட ஏனையோரும் அவ்வாறே சிவநெறியைக் கைவிடவும், இம்மூவர் மட்டில் சிவநெறியிலே நின்றமை பற்றி இவரை, ''உய்யவல்லார்'' என்றும், சிவபெருமான் திரிபுரத்தை எரித்த பொழுது இம்மூவரை மட்டில் அழியாதவாறு காத்து ஏனைய பலரையும் அழித்தமை பற்றி, ''ஒரு மூவரைக் காவல் கொண்டு எய்யவல்லான்'' என்றும் அருளிச் செய்தார். ''மூவர் புரங்கள் எரித்த அன்று மூவர்க்கு அருள் செய்தார்'' என இதனைத் திருஞானசம்பந்தரும் எடுத்தருள் செய்தல் காண்க**

என்று குறிப்புரை வாயிலாக விளக்கம் தந்துள்ளார்.

திரு. சி. அருணைவடிவேலர் தமது கருத்திற்கு அரணாக 'முப்புரங் களின் மூவர்...' என்றும் 'சுதன்மன் என்று சுசீலன்' என்றும் தொடங்கும் காஞ்சிபுராணத்தின் இரு செய்யுட்களை மேற்கோள்களாக ஆண்டுள்ளார். மேலும் 'மூவெயில் செற்ற ஞான்று உய்ந்த இருவர்' எனத் தொடங்கும் சுந்தரர் தேவாரப் பாடலையும் பயன்படுத்தியுள்ளார்.

'எண்ணுடை மூவர்' எனத் தொடங்கும் திருத்தோணோக்கப் பாடலிலும் இக்குறிப்புரையை வலியுறுத்தியுள்ளார்.

வினாக்களுக்கான விடைகள்

திரிபுராதிகளாகிய மூவர் வேறு, எரியூட்டப்பட்ட காலத்துப் பிழைத்த மூவர் வேறு என்பது திரு. சி. அருணையாரின் கருத்து. இந்தக் கருத்தை மனத்தில் நிறுத்தி திரு. கா.சு. மற்றும் திரு. ச.த.வின் விளக்கக் குறிப்புரைகளின் அடிப்படையில் எழுந்த வினாக்களுக்கு விடைகள் காணலாம். அவையாவன:

1. திருமாலால் மனம் திரிக்கப்பட்ட திரிபுராதிகள் மூவரினின்று முப்புரம் எரியுண்ட காலத்துப் பிழைத்த மூவர் வேறானவர். அவர்கள் தாரகாட்சன் முதலிய மூவர் இவர்கள் சுதன்மன் முதலிய மூவர். திருமாலால் மனம் திரிக்கப்பட்டுச் சிவத்தியானத்தை கைவிட்ட திரிபுராதிகள் சிவபிரான் முப்புரம் எரித்த காலத்து எரியுண்டனர்.
2. தவத்தின் காரணமாகப் பெருமானிடம் வரங்கள் பலவற்றைப் பெறலாம். அவ்வரங்களை நெறிபிறழ்ந்து பயன்படுத்தினால் வரம் பெற்றவர் யாவரேயாயினும் மறக்கருணையால் ஒறுக்கப்படுவர்.
3. எத்துணை மயக்கம் தோன்றினும் திரியா இயல்பினராகிய தம்மடியார்களை எந்தச் சூழலிலும் சிவம் வரம் நல்கிப் பணி கொள்ளும்.

இவ்வகை உரைவிளக்கப் பின்னணியில் திருஞானசம்பந்தரின் கரத்தான் மலிசிரத்தான் எனத் தொடங்கும் திருவீழிமிழலைத் தேவாரப் பாடலுக்கும் பூவார் மலர்கொண்டு எனத் தொடங்கும் திருவண்ணாமலைப் பாசுரத்திற்கும் உரை காணுவோமானால் திருஞானசம்பந்தரின் திருவுள்ளக் குறிப்புப் புலனாகும்.

40. திருவையாற்றுப் பதிகத்தில் இயற்கை

செ. சுமதி, கோவை.

உலகில் மானிட முயற்சியன்றி இயல்பாகத் தாமே தோன்றி எங்கும் நிறைந்த பயிரினம், உயிர்வகை காற்று, கடல், மலை, வான், கோள்கள் போன்றன இயற்கையாகும். செயல்+கை = செயற்கை ஆனாற் போல் இயல்+ கை = இயற்கையானது.

இயற்கையின் எழிலைக் ''கை புனைந்தியற்றாக் கவின்பெறு வனப்பு'' என்று நக்கீரர் குறிப்பிடுகின்றார். மாந்தர் தம் கைபுனைந்தியற்றாத பாங்கில் அவர்களைச் சுற்றி உலக முழுதும் விளங்கும் பொருள்கள் அனைத்தும் இயற்கையாகும். இயற்கையை இறைவன் உடலாகத் திரு.வி. கலியாணசுந்தரனார் கொள்ளுகின்றார். கட்புலனுக்கு எட்டாத இயல்புடைய இறைவன் யாவருங் காணும் இயற்கையாக வடிவு கொண்டு எளியார்க்கு அருள்புரிவதாக அவர் கருதுகின்றார். இயற்கைப் பொருள்களான மலை, கடல், காடு இவற்றை இறைவன் கோயிலாக அவர் கொள்கின்றார்.

''காடுங் காவுங் கவின்பெறு துருத்தியும்
யாறுங் குளனும் வேறு பல் வைப்பும்''

முருகன் உறையும் இடங்களாக நக்கீரர் குறிப்பிடல் அவர் கருத்துக்கு மூலமாக அமைகின்றது.

பக்தி இலக்கியங்களில் இயற்கை தனித்தன்மை பெற்று விளங்குகிறது. ஆழ்வார்களும் நாயன்மார்களும் தம் பாடல்களில் வெளிப்படுத்தும் பக்தி உணர்விற்கு இயற்கைப் புனைவையும் அரியதொரு கருவியாகக் கொண்டனர். இறைவனது அருளையும் ஆற்றலையும் பாடிப் பரவும் இவ்வருளாளர்கள் இறைவன் இடங் கொண்டு பொலியும் தலங்களையும், தலச் சூழல்களையும் இயற்கை வளமும், நலமும் பொலியப் புனையும் போக்கில் அவற்றை வெளிப்படுத்துவராயினர். பழந்தமிழ்ப் புலவர்கள் ஆற்றுப்படை போன்ற பாடல்களில் மன்னனது நாட்டு வளத்தைப் பாடுங்கால் மனவளத்தையும் பாடுவதனைக் கடமையாகக் கொண்டது போல இறைவனைப் பாட முற்பட்ட அருட்புலவர்கள் அவன் கோயில் கொண்டிலங்கும் தலங்களைச் சிறப்பித்துப் பாடுதலையும், ஆண்டிலங்கும் இயற்கையெழிலைப் பாடுதலையும் கடனாகக் கொண்டமையினை அவர்தம்

பனுவல்களால் அறிய முடிகின்றது. அவ்வாறு இயற்கையைப் புனைந்து பாடும்போது பாடலைப் படிப்போர் பாடல் வழங்கும் இயற்கை யழகில் ஆழ்ந்து இறைவனருளை மறக்கா வண்ணம் இயற்கைவழிச் செயற் பட்டிலங்கும் இறையருளைச் சுட்டிப் புலப்படுத்துவதனைத் தம் குறிக்கோளாகக் கொண்டிருந்தனர். இயற்கையை இறையோடு தொடர்பு படுத்தும் போக்கு மிகுந்த பக்தி இலக்கியக் காலத்தில் இயற்கையை இறைவனின் உறைவிடமாகக் காணவும், காட்டவும் இறையருட் புலவர்கள் முற்பட்டனர். ஐம்பூதமும் கதிர்களுமாகிய இயற்கையாய் இறைவனே விளங்கும் நிலையைத் திருவாய்மொழி குறிப்பிடுகின்றது,

''நீராய் நிலனாய்த் தீயாய்க் காலாய் நெடுவானாய்ச்
சீரார் சுடர்களிரண்டாய்....''

என்பது நம்மாழ்வார் பாடற் பகுதியாகும்.

இயற்கை தரும் இன்பத்தை இறையருள் தரும் இன்பத்திற்கு அப்பரடிகள் உவமையாக்கி உரைக்குந் திறன் நோக்கத்தக்கது. ''இளவேனில் வளமும், மாலை மதியத்தின் கோலச் சிறப்பும், தென்றலின் இன்ப நலமும் வண்டொலிக்கும் மலர் நிறைந்த பொய்கை தரும் வனப்பும், வீணையின் பண்ணோசையினிமையும் ஒருங்கு வழங்கும் இன்பமொத்து ஈசன் இணையடி நீழல் இன்பந்தரும் என்பது'' அவர் கருத்தாகும். பொய்கையொன்றில் செந்தாமரைப் போதும் கருங்குவளை மலரும் நிறைந்து காட்சியளிக்கின்றன. பறவைகள் பல அதில் வாழ்ந்து ஒலி யெழுப்பித் திரிய, மக்கள் பலரும் நீராடி மகிழும் அப்பூம் பொய்கைக்குச் சிவபெருமானும் உமையும் சேர்ந்திருக்கும் கோலக் காட்சியை உவமையாக்கி மணிவாசகர் கூறுகின்றார்.

ஆண்டாள் மேகத்தைப் பார்த்து ''நீ கடலுள் புகுந்து நீரை உண்டு வானேறி, ஊழி முதல்வன் உருவம்போல் உடல் கறுத்து அவனது சக்கரப் படையொளி போல் மின்னி, வலம்புரி சங்கொப்ப அதிர்ந்து, அவனுடைய சாரங்கமாகிய வில்லிலிருந்து வெளிப்படும் கணைகள் போல் மழை பெய்து உவகை வாழ்விப்பாய்'' என்று கூறுகின்றாள்.

இறைவனை இயற்கைப் பொருட்களாக உருவகப்படுத்தும் நிலை யினை இராமலிங்க அடிகளாரின் அருட்பாவில் பல இடங்களிலும் காணலாம். இறைவன் அவருக்குக் கோடையில் நிழல்தரும் குளிர் தருவாயும் அத்தரு கொடுத்த நிழலாகவும், அந்நிழலிற் கனிந்த கனி யாகவும் ஓடையில் ஊறும், தீஞ்சுவைத் தண்ணீராகவும் அந்நீரில் மலர்ந்த மண மலராகவும், மேடையில் வீசும் பூங்காற்றாகவும், அம்மென் காற்றில் விளைந்த நலமாகவும் காட்சியளிக்கின்றான்.

இந்த வரிசையில் இறைவன் தோற்றப் பொலிவினையும் அருட் பெருக்கினையும் பாடிப் பரவும் திருஞானசம்பந்தரும் இறைவன் எழுந்

தருளியிருக்கும் திருத்தலங்களின் இயற்கைக் காட்சிகளை மிக அழகாகப் பாடுகின்றார். கோயில்களின் அமைப்பும் அவற்றின் வரலாறும் இயற்கை வனப்பும் இவர் பாடல்களினின்றும் வெளிப்படுகின்றன. தலந்தோறும் நேரில் சென்று பாடியமையே இதற்குக் காரணமாகும்.

திருஞானசம்பந்தர் சீர்காழிப் பதியில் சிவபாத இருதயருக்கும் பகவதியம்மைக்கும் மகவாய்த் தோன்றி மூன்று வயதிலேயே இறைஞானம் எய்தி ''தோடுடைய செவியன்'' என்ற பாடலைப் பாடினார். மதுரை மாநகர் சென்று அனல், புனல் வாதங்களில் சமணரை வென்று கூன்பாண்டியனைச் சைவனாக்கினார். பதினாறு வயதிலேயே பரகதி எய்தினார். அப்பரும் இவரும் ஒரே காலத்தவர்.

இவர் 384 பதிகங்கள் பாடியுள்ளார். திருச்சிற்றம்பலத்துச் செல்வனின் கழல் ஏத்தும் செல்வமே உண்மைச் செல்வம் என்றும், பக்தி மலர் கொண்டு அத்தன் பதத்தின் தூவினால் முத்தி எளிதாகும் என்றும் அறிவுறுத்து கின்றார். இவர் பாடிய பாக்களில் மட்டும் 23 பண்கள் பயின்று வருவதால் ''நாளும் இன்னிசையாய் தமிழ் பரப்பும் ஞானசம்பந்தன்'' எனச் சுந்தரரால் போற்றப்படுகின்றார். இவர்தம் பக்திப் பாடல்களில் இளமை மெருகையும், இசை இளமையையும் இயற்கை இன்ப எழிலையும் வளமார நுகரலாம். வனப்பு மிகுந்து காணப்படும் திருவையாற்றுப் பகுதி மட்டும் இக்கட்டுரைப் பொருளாக எடுத்துக் கொள்ளப்படுகிறது.

திருஞானசம்பந்தர் இறைவனை இயற்கை வடிவாகக் காண்கின்றார். இயற்கையின் உள்ளே காண்கின்றார். இயற்கையோடு இயைத்துப் பார்க்கின்றார். இயற்கைச் சூழலில், இயற்கை அழகின் நடுவே எல்லாம் வல்ல இறைவனை வீற்றிருக்க வைத்து அவ்வழகினை தம் மனத் திரையில் கொண்டு வந்து பாடி மகிழ்கின்றார்.

திருஞானசம்பந்தர் இயற்கையை இருவிதமாகக் காண்கின்றார். ஒன்று இறைவனின் தோற்றப் பொலிவில் காணும் இயற்கைப் பொலிவு, இன்னொன்று இறைவன் எழுந்தருளியிருக்கும் இடத்தில் காணும் இயற்கைப் பொலிவு இருவித நிலையிலும் அமைந்த இயற்கைப் பொலிவு ஒன்றை விட ஒன்று விஞ்சி நிற்கின்றது.

''கலையார் மதியோ டுரநீரும்
நிலையார் சடையா ரிடமாகும்
மலையா ரமுமாமணி சந்தோ
டலையார் புனல்சேரு மையாறே''

என்ற பாடலடிகளில் இறைவன் நிலையான இயற்கைப் பொருளாகிய சந்திரனைத் தலையில் சூடியிருக்கின்றார். அவர் தலையிலே கங்கை நீர் பெருக்கெடுத்துப் பாய்ந்து கொண்டிருக்கிறது. இயற்கையாக வளர்ந்து

கிடக்கின்ற சடைமுடி இன்னொருபுறம் காணக்கிடக்கிறது. இந்த தோற்றப் பொலிவினையுடைய சிவபெருமான் எழுந்தருளியிருக்கும் மலையானது வளம்மிக்கது. மலையில் இயற்கையாகக் கிடைப்பது விலை உயர்ந்த பொருட்களாகிய முத்து, அகில், சந்தனம் முதலியன. இந்தப் பொருட்கள் மலையிலிருந்து பாய்கின்ற ஆற்றினால் அடித்து வரப்படுகின்றது. உயர்ந்த அடர்ந்த காடுகளில் வளர்ந்திருக்கின்ற உறுதியான மரங்களை அடித்து வரவேண்டுமானால் மலையில் கனமழை பெய்திருக்க வேண்டும். கட்டுக்கடங்காத காட்டாற்று வெள்ளம் பெருக்கெடுத்து ஓடவேண்டும். கடலில் அலைகள் அடிப்பதுபோல ஆற்றிலும் அலையடிக்கின்றது. அந்த அலையானது அகில், சந்தனம், முத்து, மணி போன்ற மணமிக்க பொருட்களைக் கொண்டு வந்து சேர்க்குமிடமாகிய ஐயாறு என்ற திருத்தலத்தில் இறைவன் எழுந்தருளியிருக்கின்றார் என்று பாடுகின்றான்.

ஆறு மலையிலிருந்து பாயும்போது ஒருவிதமான ஓசை கேட்கும். அந்த ஓசை மிக இனிமையானது. இதமானது. அந்த ஓசையின் நடுவில் இறைவன் வீற்றிருப்பதாக அனுபவித்துப் பாடுகின்றார்.

''வரை நின்றிழிவார் தருபொன்னி
அரவங் கொடுசேரு மையாறே''

என்பது பாடல்.

இறைவன் தோற்றப் பொலிவினைப்

**''பணிந்தவர் அருவினை பற்றறுத் தருள் செயத்
துணிந்தவன் தோலொடு நூல்துதை மார்பினில்
பிணிந்தவன் அரவொடு பேரெழி லாமை கொண்
டணிந்தவன் வளநகர் அந்தண் ஐயாறே''**

**''கீர்த்திமிக் கவன்நகர் கிளரொளி யுடனடப்
பார்த்தவன் பனிமதி படர்சடை வைத்து
போர்த்தவன் கரியுரி புலியதளி அரவரை
ஆர்த்தவன் வளநகர் அந்தண் ஐயாறே''**

என்று பாடுகின்றார்.

இறைவன் புலித்தோலை அணிந்தவன். முப்புரி நூலணிந்த மார்புடையவன். அரவினையும், ஆமையினையும் அணியாகக் கொண்டுள்ளான். குளிர்ச்சி பொருந்திய மதியினைச் சடைமுடியில் சூடியவன் புலித்தோல் மட்டுமல்லாமல் யானைத்தோலினையும் அணிந்துள்ளான் என்றெல்லாம் இறைவனின் தோற்றத்தைக் குறிப்பிடுகின்றார்.

இயற்கை அழகாகக் காட்சியளிக்க வேண்டுமானால் வளம் மிக்கதாக இருக்க வேண்டும். வானம் மும்மாரி பொழிந்து செடி கொடிகளெல்லாம்

பச்சைப் பசேலென வளர்ந்து செழுமையுடையதாக இருக்க வேண்டும். அத்தகைய செழுமையான இயற்கை அழகினைத்தான் ஞானசம்பந்தர் விரும்பிப் போற்றுகின்றார். இறையருள் தனக்கு மூன்று வயதிலேயே கிடைக்கப் பெற்றார். உமையம்மையார் அளித்த பாலடிசிலை உண்டு தமிழ் பாடினார். திருக்கோலக்காவில் பொற்றாமை பூ பெற்றார். உமையவளோடு இறைவனே காட்சியளிக்க, காணப்பெற்றார். இவ்வாறெல்லாம் இறையருளை வளமையாகப் பெற்ற திருஞானசம்பந்தர் இயற்கையின் வளமையான இயற்கை அழகினையுடைய ஐயாற்றினைக் குறிப்பிடும்போது 'வளநகர்' என்றே குறிப்பிட்டுச் செல்கின்றார்.

திருஞானசம்பந்தர் தலந்தோறும் சென்று இறைவனை வழிபட்டு அங்கிருந்து பதிகங்களை பாடுகின்றார். இறைவனின் தோற்றப் பொலிவினை நேரடியாகப் பார்த்து, மகிழ்ந்து தன்னை மறந்து பாடி மகிழ்வதைவிட அந்தத் திருத்தலத்தின் இயற்கைப் பொலிவினைக் கண்டு அதில் தன்னை மறந்து ஈடுபடுவது மிகவும் அற்புதமாக உள்ளது என்று கூடச் சொல்லலாம்.

''ஊன்பாயும் முடைதலைகொண் டூரூரின் பலிக்குழல்வார் உமையாள் பங்கர்,
தான்பாயும் விடையேறுஞ் சங்கரனார் தழலுருவர் தங்குங் கோயில்,
மான்பாய வயலருகே மரமேறி மந்திபாய் மடுக்கள் தோறும்,
தேன்பாய மீன்பாயச் செழுங்கமல மொட்டலருந் திருவையாறே''

இறைவனை ஊன்நாற்றமடிக்கும் கபாலத்தினைக் கொண்டு பிச்சையேற்று உண்பவர் என்றும், பாயும் காளையை வாகனமாகக் கொண்டவர் என்றும், தழல் உருவத்தையுடையவர் என்றும் குறிப்பிட்ட ஞானசம்பந்தர், அத்துடன் நிறுத்திவிட்டு இயற்கையில் நடைபெறுகின்ற நிகழ்ச்சிகளை ஒரு நாடகம் போலக் காண்கின்றார். இறைவனைப் பார்க்கின்றார். அவர் எழுந்தருளியிருக்கின்றக் கோயிலைப் பார்க்கின்றார். அந்தக் கோயில் அமைந்திருக்கின்ற இடத்தைப் பார்க்கின்றார். அதைச் சுற்றி அமைந்திருக்கின்ற இயற்கையைப் பார்க்கின்றார். இந்த இயற்கை நிகழ்ச்சிகள் நாடகமாக அவர் மனதில் பதிகின்றது. அந்த நாடகக் காட்சிகள் அவருக்கு இன்பமளிக்கின்றது. அந்த இன்பத்தில் தம்மை மறக்கின்றார்.

காட்டில் மான் துள்ளித் திரிந்து அங்குமிங்கும் ஓடுவது இயற்கை அப்படி மான் பாய்ந்து ஓடுவதைப் பார்த்து அஞ்சிய மந்தியானது தப்பித்துக் கொள்வதற்காக வயலின் அருகில் இருக்கின்ற ஒரு மரத்தில் பாய்ந்து ஏறுகிறது. மந்தி பாய்ந்து மரத்தில் ஏறுவதனால் அந்த மரத்தில் இருக்கின்ற தேன் கூட்டுகளிலிருந்து தேன் கீழே காணுகின்ற மடுக்களில் பாய்கிறது. மடுக்களில் இருக்கின்ற மீன்களின் மீது தேன் பாய்வதனால் மீன்கள் பக்கத்தில் வளர்த்திருக்கின்ற தாமரை மொட்டுக்களின் மீது துள்ளிப்

பாய்கின்றன. அதனால் தாமரை மொட்டுக்கள் மலர்ந்து விடுகின்றன. எவ்வளவு அருமையான அழகான காட்சி திருஞானசம்பந்தரின் கண் களுக்கு இந்தக் காட்சி பெருவிருந்தாக அமைகிறது. அருள் விருந்து தேடி ஆண்டவனிடம் சென்ற ஞானசம்பந்தர் இயற்கை விருந்தினை அனுபவிக்கின்றார். 'யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்ற பாணியில் தாம் அனுபவித்துப் பாடிய பாடல்களைப் படிப்போரும் அதே இன்ப இயற்கையினை அனுபவிக்கச் செய்கின்றார். இறைவனின் அருட்பெருங் கருணையினை இம்மன்பதைக்குக் காட்டி மக்களை உய்விக்க வந்த அடியவர் இயற்கை இன்பத்தையும் கூடவே காட்டி அதனையும் அனுபவித்து மனம் தெளிவடையும்படிச் செய்கின்றார். இயற்கையை அனுபவமிக்க அனுபவிக்க அந்த இயற்கையில் ஊடே காணப்படும் இறையின்பத்தினை அனுபவிக்க முடியும் என்பது அவர்தம் எண்ணம். எனவே இயற்கையை இறை, இறையே இயற்கை என்ற ஞானசம்பந்தரின் தத்துவம் இங்கு வெளிப்படுகின்றது.

41. சம்பந்தர் தேவாரத்தில் இயற்கை

வ. சுமதி, மதுரை.

இயற்கை நலம் மனித உள்ளத்தை ஈர்க்கும் தகையது. இயற்கையில் உள்ளம் தோயாத மனிதர்களே உலகில் இல்லை எனலாம். தெய்வக் கவிஞர்களுக்கோ இயற்கையின் நலமே ஆண்டவனின் நலம். இயற்கையின் அழகு ஆண்டவனின் அழகு. இயற்கையினிடத்து மனதைக் கொடுப்பவன். இறைவனிடத்து இதயத்தைக் கொடுப்பான். குழந்தை களுக்கு இயல்பாகவே இயற்கைக் காட்சிகளைக் காணுவதில் ஆவல் மிகுதி.

திருஞானசம்பந்தர் தம் மூன்றாவது வயதிலேயே பாடத் தொடங்கிய பாலகவி. இயற்கைக் காட்சிகளை வருணிப்பதில் மற்றையாவரினும் மேம்பட்டு நிற்கின்றார். சம்பந்தர் சங்க மரபு சிதையாது சந்தத்தமிழில் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்று ஐந்திணைக் காட்சி களையும் தம் பாடல்களில் படம் பிடித்துக் காட்டுகின்றார். ஓரறிவு உயிர்கள் முதல் ஐந்தறிவு உயிர்கள் வரை அனைத்தையும் பாடுபொருளாக்கி ''இறைவன் + இயற்கை + மனிதன்'' என்று தம் பாடல்களில் இணைத்துக் காட்டுகின்றார். 'இன்புறுத்தலும் அறிவுறுத்தலும் இலக்கியத்தின் பயன்கள்' என்பர் திறனாய்வாளர். அப்பணியைத் தம் திருப்பாடல்களில் சிறப்பாகச் செய்துள்ளார் சம்பந்தர் என்பதைத் தேவாரத் திருப்பதிகங்களைப் பயிலுந்தோறும் புலனாகும்.

பண்பாடும் வண்டு

நாளும் இன்னிசையால் தமிழ்ப் பரப்பிய ஞானசம்பந்தர், தம் பாடல்களுக்குப் பண் அமைத்தார். அது மட்டுமா? தாம் சென்ற திருத்தலங்களில் எல்லாம் வண்டுகள் எழுப்பிய ஒலிகளில் உள்ள பண்ணினை ஆராய்ந்து உள்ளம் மகிழ்ந்தார். திருவதிகை வீரட்டானத்தில் கெடில நதியின் வடப்பக்கத்தில் உள்ள வண்டுகள் 'மருள்' என்னும் பண்ணினை இசைக்கின்றன. அவ்விசை கேட்டுக் கெண்டை விளையாட, பொன் போன்ற கொன்றை விரிகின்றது. இசைக்கு மயங்காத உயிர் களும் உண்டோ! இயற்கையே இசைக்கு வசப்படும்போது, இறைவனையும் இசையால் வசப்படுத்தலாம் என சமபந்தர் வழி காட்டுகிறார்.

''கெண்டைப் பிறழ்தெண்ணீர்க் கெடில வடபக்கம்
வண்டு மருள்பாட வளர்பொன்விரி கொன்றை'' (493)

திருவடுகூரிலோ பல வண்டுகள் ஒரே நேரத்தில் ஒலிக்கின்றன. அவ்வொலியானது 'பறையும் குழலும்' அதிர்வது போல் இருக்கின்றதாம். இக்காட்சி சோலையிலா? கோயிலிலா? என்று எண்ணத் தோன்றுகின்றது அல்லவா!

''பறையும் அதிர்குழலும் போலப்பல வண்டு ஆங்கு
அறையும் வடுகூரில் ஆடும்அடிகளே'' (944)

திருவீழிமிழலை வண்டோ குறும்பான வண்டு. செங்கழுநீர் மலரில் தேன் உண்கின்றது. மகரந்தத்தில் திளைத்து ஆடுகிறது. பின் கோலத்தில் மாற்றம் கொண்டு (கருவண்டு சிவந்த வண்டாகி) 'செவ்வழி'ப் பண் பாடுகிறது. வண்டும் சிவப்பு பண்ணும் செவ்(சிவந்த) வழிப்பண்.

''சேறாடு செங்கழுநீர்த் தாதாடி மதுவுண்டு சிவந்த வண்டு
வேறாய உருவாகிச் செவ்வழிநற் பண்பாடு மிழலையாமே''
(1422)

மணமுள்ள மலரைத் தானே வண்டுகள் நாடிச் செல்லும். சிறைகளையுடைய, வரிகளையுடைய வண்டுகள் செண்பக மலர், செங்கழுநீர்ப்பூ, குரவ மலர்களை நாடிச் சென்று தேன் உண்கின்றன. வயிறு நிறைந்தவுடன் இனிய பாடல் பிறக்கின்றது. சில வண்டுகள் மாலையில் பாடுகின்றன. சில சுரும்போடு சேர்ந்து பாடுகின்றன.

சம்பந்தர் நுணுகி ஆராய்ந்து உரைத்திடும் உண்மைகள் நம் கண்ணுக்கும், கருத்துக்கும் விருந்தாகும் காட்சிகள் அவை.

''சிறைஆர் வரிவண்டு தேனுண்டு இசைபாட''

''மைந்து அணி சோலையின்வாய் மதுப்பாய்வரி
வண்டினங்கள் வந்து
நந்து இசை பாட'' (1127)

''மாலையில் வண்டினங்கள் மதுஉண்டு இசைமுரல''(1172)

''பண்புனை குரல்வழி வண்டுகீண்டிச்
செண்பக மலர்பொழில் சிவபுரமே'' (1210)

''நாறுநன் குரவிரி வண்டுகீண்டித்
தேறல் உண்டு எழுதரு சிவபுரமே'' (1211)

முக்கனியின் சங்கமம்

''முக்கனி'' என்ற சொல்லழகு முதன்முதலில் சம்பந்தர் பாடலில் தான் காணப்படுகின்றது என்று ஆய்ந்து தெளிகின்றார் முனைவர் சோ. ந. கந்தசாமி. திருமுதுகுன்றத்தில் ஒரு சோலைக்காட்சி. வளமையான வருக்கைப்பலா, கதலி வாழை, மா ஆகிய முக்கனிகளின் சாறும்

சேறாகப் பெருகி வயல்கள் உலராதவாறு ஓடுகின்றன. அச்சேற்று வயலில் கமுகும், தென்னையும் காய்த்துக் குலை தள்ளுகின்றன.

''கொக்கினிய கொழும் வருக்கை கதலி கமுகு
உயர் தெங்கின் குலைகொள் சோலை
முக்கனியின் சாறொழுகிச் சேறுலரா
நீள்வயல் சூழ் முதுகுன்றமே'' (1407)

குற்றாலத்திலோ மற்றுமோர் முக்கனிக் காட்சி

வாழைகளின் பக்கங்களில் கனிகள் குலை தள்ளி இருக்கின்றன. பலாமரம், மாமரங்களில் கிளைகள் தோறும் கனிகள் குலுங்குகின்றன. முக்கனியின் சுவைபோல முக்கணான் திருவருளும் சுவை பயப்பது என்ற குறிப்பும் இப்பாடல் மூலம் நமக்குப் புலனாகின்றது. குற்றால நாதரைக் காண மனம் விழைகின்றது.

''பக்கம் வாழை பாய்கனியோடு பலவின்தேன்
கொக்கின் கோட்டுப் பைங்கனி தூங்கும் குற்றாலம்'' (1072)

கதலி வாழையைக் காட்டிய சம்பந்தர் திருவிடைச்சுரத்தில் பலாவோடு செவ்வாழையைக் காட்டுகின்றார்.

''செழும்புனல் அனையன செங்குலை வாழை
ஏர்கொண்ட பலவினொடு எழில் திகழ்சாரல்'' (846)

அன்னத்தின் ஆசனம்

திருவீழிமிழலையில் அன்னம் அரசு வீற்றிருக்கின்றது. மன்னனுக்குச் சிம்மாசனம் இதழ் செறிந்த தாமரை. இலைக்குடை, மருங்கிலே நெற்கதிர்கள் கவரி வீசுகின்றன. இளவன்னம் இளவரசனாக வீறுடன் வீற்றிருக்கின்றது. வீழி சென்றால் இறைவன் அருளால் அன்னம் போன்று அரச வாழ்வு வாழலாம் என்று சொல்லாமல் சொல்லும் அப்பாடல்,

''செறிஇதழ்த் தாமரைத் தவிசில் திகழ்ந்தோங்கும்
இலைக்குடைக் கீழ்ச் செய்யார் செந்நெல்
வெறிகதிர்ச் சாமரையிரட்ட இளஅன்னம்
வீற்றிருக்கும் மிழலையாமே'' (1417)

மிழலையில் மீண்டும் ஓர் அன்னக்காட்சி

வளமிக்க தாமரையில் அன்னம் நடைபயில்கின்றது. வெண்தாமரை அன்னப் பாதம்பட்டுப் பூந்தாது சிந்துகின்றது.

''வண்தாமரை மலர்மேல்மட அன்னம் நடைபயில
வெண்தாமரை செந்தாது உதிர்'' (116)

சித்தீச் + சுர அன்னங்களோ செங்கால்களை உடையவை. பெடைகளுடனும், இனங்களுடனும் கூடி இருப்பவை. தம் இனத்தைத் தவிர

எருமை இனங்கள் வந்தாலோ அஞ்சி ஆரவாரம் செய்யும் தன்மை யுடையவை.

"எருமைகள் படிதர இனஅனம் ஆலும் இடைச்சுரம்" (851)

"கோலம் பொழில் சோலைக் கூடி மடவன்னம்
ஆலும் வடுகூரில் ஆடும் மடிகளே" (938)

"செங்கால் அனமும் பெடையும் சேரும் சிந்திச் சுரத்தாரே" (766)

மயிலின் நடனம்

மிழலையில் மயில்கள் ஆடுகின்றன. வண்டு பாடுகின்றது. முகில் முழவு ஒலி எழுப்புகின்றது. மயிலின் நடம் கண்டு மனம் மகிழ்ந்து கொன்றை, பொன் போன்ற மலர்களைப் பரிசாக வழங்குகின்றது. மென் கரங்கள் வருந்தாதவாறு வழங்கிய பூப்பரிசை, காந்தள் கரங்கள் கைநீட்டி வாங்குகின்றன. இயற்கையின் செயல்கள் தான் எத்துணை அழகானவை. திறமைக்குப் பரிசு கொடு என்று நமக்குப் பாடம் புகட்டும் காட்சி இதோ,

"வரைசேரு முகில் முழவ மயில்கள்பல
நடமாட வண்டுபாட
விரை சேர்பொன் னிதழிதர மென்காந்தள்
கையேற்கு மிழலை யாமே" (1419)

திருவிடைச் சுரத்திலோ ஒரு சுகந்தமானச் சூழல். மலையிலிருந்து பாய்ந்து வரும் அருவி முழவாக ஒலிக்க, மலைச் சாரல்களில் விளைந்திருக்கின்ற ஏலமும், இலவங்கமும் மலை எங்கும் மணம் பரப்ப, மழை மேகம் கண்டு மனமகிழ்ந்த மயில்கள் ஆடுகின்றன.

"மலை இலங்கு அருவிகள் மணமுழவு அதிர
மழை தவழ் இளமஞ்ஞை மல்கிய சாரல்
இலை இலவங்கமும் ஏலமும் கமழும்" (850)

திருகற்குடிப் பொழிலின் நிழல் வெயிலுக்குப் பந்தலாக அமைகிறது. அங்குள்ள வண்டுகள் இசை இசைக்கின்றன. மயில்கள் இசைக்குத் தக்கவாறு தோகை விரித்து ஆடுகின்றன.

"வண்டிசை யாயினபாட நீடிய வார்பொழில் நீழல்
கண்டுஅமர் மாமயில் ஆடும்" (1086)

வண்டும், குயிலும் பாட மயில்கள் மகிழ்ந்து பெடையோடு ஆடும் காட்சிகள் பல. அவை,

"நீல நெய்தல் தண்சுனை சூழ்ந்த நீள்சோலைக்
கோல மஞ்ஞை பேடையொடு ஆடும் குற்றாலம்" (1075)

"மயில் பெடை புல்கி மாநடமாடும் வளர்சோலை
பயில் பெடை வண்டு பாடல் அறாத பரங்குன்றமே" (1086)

"கானமர் மடமயில் பெடை பயிலும்" (1180)

பொய்கையா, மங்கையா?

சம்பந்தர் நீர் நிரம்பிய மலர் பூத்த தடாகங்களைக் காணும்போது, இயற்கை அழகைக் கண்டு வியந்ததோடு மட்டுமல்லாமல், மகளிரின் முக அழகினையும் அவற்றோடு இணைத்துக் காண்கின்றார். பாலகவி, பெருந்துறை செல்கின்றார். அத்திருத்தலம் நீர்வளம் மிக்கது. பொய்கை களில் மலர்ந்திருக்கும் தாமரை மலர்கள் மாதர்களின் முகவழகைக் காட்டுகின்றன. கயல்கள் கருங்கண்ணை ஒத்திருக்கின்றன. நீல மலர்கள் மலர்வது கண்கள் விரிவது போன்றுள்ளன. பொய்கையில் மட்டுமா கண்கள் விரிகின்றன. நம் கண்களும் அல்லவா இச்சொல்லோவியம் கண்டு விரிகின்றன.

''முள்வாய் தாளின் தாமரை மொட்டின் முகமலரக் கயல்பாயக்
கள்வாய் நீலம் கண்மலர் ஏய்க்கும் காமர் பெருந்துறை யாரே''
(456)

கழுமலம் என்ற திருத்தலம் வாவிகள் நிறைந்தது. வாவிகள் தோறும் செழுங்கமலங்களும், குமுதங்களும், கருங்குவளைகளும், நெய்தல் மலர்களும் மலர்ந்து காணப்படுகின்றன. தாமரை முகவடிவையும், பொலிவையும், வண்ணத்தையும், செழுமையையும் காட்டுகிறது. குமுதம் வாய்ச் செம்மையையும், மென்மையையும் காட்டுகிறது. குவளையும் நெய்தலும் கண் கருமையையும், மலர்ச்சியையும் காட்டுகின்றன. சம்பந்தர் கூறும் உவமை நயங்கள் படிக்க படிக்க இன்பம் பயப்பன.

''வாவிதோறும் வண்கமல முகங்காட்டச்
செழுங்குமுதம் வாய்கள் காட்டக்
காவியிருங் கருங்குவளை கருநெய்தல்
கண்காட்டும் கழுமலமே'' (1313)

மிழலையிலும் அதே தாமரை முகம். பவள வாயில் முத்துச் சிரிப்பு. மேலும் கீழும் சென்று வரும் கயல்கண்கள். இங்குத் தாமரைக்குக் கோகநதம் எனப் பெயர் சூட்டுகின்றார். சிவந்த வாய். வெண்பல். முரண்சுவை நம்மை முறுவல் கொள்ளச் செய்கிறது. சம்பந்தர் உவமையைத் தம் பாடலில் படைத்துக் காட்டுவதில் விஞ்சி நிற்கின்றார்.

''கொழுந்தரள நகைகாட்டக் கோகநத
முகம்காட்டக் குதித்து நீர்மேல்
விழுந்த கயல்விழி காட்ட விற்பவளம்
வாய்காட்டு மிழலையாமே'' (1418)

மந்தியின் மடமை

சம்பந்தர் தாம் சென்ற இடங்களில் காணும் இயற்கைக் காட்சி களிலே குரங்குகள் அவர் உள்ளத்தை மிகவும் கவர்கின்றன.

குரங்குகளின் விளையாட்டுகளைப் பார்த்து வியப்படைகிறார். இன்னும் குரங்குகளின் குறும்புத்தனங்கள் குழந்தைகளின் உள்ளங்களைக் கொள்ளை கொள்வதைக் காண்கிறோம். ஆளுடைய பிள்ளையையும் அவை ஆட்கொண்டதில் ஆச்சரியமில்லையே. திருச்சிராப்பள்ளியில் ஒரு மந்திக் காட்சி. மந்தி ஒன்று மலைமேல் பரபரக்க ஏறுகின்றது. அதன் வயிற்றோடு இணைந்து இளங்குட்டி காணப்படுகிறது. மூங்கில் மரம்மேல் பாய்ந்து பாய்ந்து ஏறி மலை உச்சிக்குச் செல்கின்றது. இம்மந்தியானது கடுவனோடு ஊடி, வரை பாய்ந்து உயிர்துறக்க எண்ணுகின்றது. மந்தியின் மடமை கண்டு நம் உள்ளம் பதை பதைக்கின்றது.

''கைம்மகவு ஏந்திக் கடுவனோடு ஊடிக் கழைப்பாய்வான்
செம்முகமந்தி கடுவரையேறும் சிராப்பள்ளி'' (1059)

திருவையாறு கோயிலை வலம் வந்த அழகிய பெண்கள் நடனம் ஆடுகின்றனர். நடனத்திற்கு ஏற்ப மத்தளவோசை முழங்குகின்றது. இதைக்கேட்ட சில பெண் குரங்குகள் பயந்தன. அவ்வோசையை மேக முழக்கமோ என்று நினைத்தன. உடனே மரத்தின்மேல் ஏறிநின்று வானத்திலே நடமாடும் மேகத்தைப் பார்த்தன. மந்தியின் மடமை கண்டு நமக்குச் சிரிப்பு வருகின்றது.

''வலம் வந்த மடவார்கள் நடமாட
முழவதிர மழையென்றஞ்சிச்
சிலமந்தி அலமந்து மரமேறி
முகில் பார்க்கும் திருவையாறே'' (1394)

திருவலிதாயத்திற்குச் சம்பந்தர் வருகின்றார். ஓரிடத்தில் இராது ஓடித் திரிந்து கொண்டிருக்கும் மந்திகள் இறைவன் இருப்பிடம் வந்தவுடன் கடுவனோடு கூடி வணங்குகின்றன. இது மந்தியின் பக்தி மடமையின் உச்சம் அன்றோ! மனமெனும் குரங்கைக் கட்டுப்படுத்தி ஆணும் பெண்ணுமாய்ச் சேர்ந்து இறைவனைத் தொழ வேண்டும் என்று சம்பந்தர் மனித சமுதாயத்திற்கு வழி காட்டுகின்றார்.

''மந்தி வந்து கடுவன்னோடும் கூடி வணங்கும் வலிதாயம்'' (27)

இன்றைய நாளிலும் குற்றாலத்தில் குரங்குகள் மிகுதி. சம்பந்தர் குற்றாலத்தில் கண்ட காட்சிகளில் குரங்குக் காட்சிகளே முன்னிற் கின்றன. மலைச் சாரலிலே தம் குட்டியுடன் வந்த அழகிய பெண் குரங்கு, குலையிலே பழுத்திருக்கும் இனிய வாழைப் பழத்தை உண்ணுகிறது.

''மலைஆர் சாரல் மகவுடன் வந்தமட மந்தி
குலைஆர் வாழைத் தீங்கனி மாந்தும் குற்றாலம்'' (1073)

குரங்குகளுக்குக் கனிகள் என்றால் கொண்டாட்டம். அதிலும்

வாழைக் கனிகள் (கதலி வாழை) என்றால் சொல்லவா வேண்டும்.

''கனியுறு மரமேறிக் கருமுகக் கழையுகளும்'' (1273)

''தேனார்ந்தெழு கதலிக்கனி உண்பான் திகழ் மந்தி'' (91)

''வேயுயர் சாரல் கருவிரல் ஊகம் விளையாடும்'' (1064)

சேற்றில் கயல்களும், வாளைகளும் முட்டிக் கொண்டு போர் செய்வது போன்ற காட்சியை ஆண் குரங்கும், பெண் குரங்கும் கூர்ந்து நோக்குகின்றன.

''சேற்றயன் மிளிர்வன கயல்இன வாளை
செருச்செய ஓர்ப்பன செம்முகமந்தி
ஏற்றையொடு உழி தரும்'' (843)

குரங்கின் செயல்களைக் கூர்மையாக நோக்கியதால் சம்பந்தர் மந்திகளின் கருவிரல்களையும், கருமுகத்தையும், செம்முகத்தையும் விளக்கமாகக் காட்டுகின்றார்.

சூல் கொண்ட சங்கு

தருமபுரத்தில் கடல் இருக்கின்றது. எதிரில் வெண்மையான மணற்குன்றுகள் உள்ளன. கடலில் அலைகள் வீசுகின்றன. அலைகளால் உதைத்துத் தள்ளப்பட்ட சங்கு கரையில் சரிந்து விழுகின்றது. பின் அங்கும் இங்கும் திரிகின்றது. ஒசிந்து அசைந்து செல்கின்றது. பின் மணற்குன்றில் ஏறி இருள் விலகிட ஒளிவீசும் முத்தை ஈனுகின்றது.

''சங்குகடல் திரையால் உதையுண்டு சரிந்து திரிந்து
ஒசிந்து அசைந்து இசைந்து சேரும் வெண்மணற் குவைமேல்
தங்குகதிர் மணிநித்தில மெல்லிருள் ஒல்க நின்று
இலங்கொளிந் நலங்கெழில் தருமபுரம் பதியே'' (1460)

அலைகளால் அடித்து வரப்பட்ட சூல் கொண்ட சங்கு செந்நெல் வயலுக்கு வருகின்றது. வயலில் விதைக்க வந்த உழவர்கள் முத்துக்களை விதை என்று நினைத்துப் பின் முத்துப்பரல் எனத் தெளிகின்றனர்.

''கயமேவிய சங்கம் தரு கழிவிட்டுயர் செந்நெல்
வயன்மேவி வந்து உறங்கும் பொழில்'' (94)

''மாடே ஓதம் ஏறிய வயல் செந்நெல்
காடேறிஇச் சங்கு ஈனும் கழியார்'' (254)

''உலங்கொள் சங்கத்து ஆர்கலி ஓதந்துதையுண்டு
கலங்கள் வந்து கான்வயல் ஏறும்'' (1008)

''நடவந்த உழவர் இது நடவொணா

வகை பரலாய்ந்து என்றுதுன்று
கடல்வந்த சங்கீன்ற முத்து வயல்
கரை குவிக்கும் கழுமலமே'' (1390)

வயலின் வளமை

திருவையாற்றின் வயல் காட்சி நம்மை வியப்பில் ஆழ்த்துகின்றது. சம்பந்தரின் கவித்திறம் கண்டு நாம் பெருமிதம் கொள்கிறோம். நிலத்தில் நின்று கொண்டிருக்கும் மான் துள்ளி, வயலில் பாய்கின்றது. வயல் அருகில் உள்ள மரத்திலேறிய மந்திகள் திடுமென்று மடுக்களில் பாய்கின்றன. மடுக்களிலுள்ள மீன்கள் துள்ளிக் கமலத்தில் பாய்கின்றன. கமலமோ இதழை விரித்துத் தேனைப் பாய்ச்சுகின்றது. அக்காட்சி,

''மான்பாய வயலருகே மரமேறிய மந்திபாய மடுக்கள்தோறும்
தேன்பாய மீன்பாயச் செழுங்கமல மொட்டலரும் திருவையாறே''
(1397)

திருவையாற்றில் மற்றுமொரு வயல்காட்சி

இனிய இளம் தெங்கம்பழம் நிலத்தில் விழுகின்றது. தென்னை மரத்தின் கீழிருந்த எருமையோ அஞ்சி வயலிலுள்ள செந்நெற்கதிரைச் சிதைத்து விட்டு செந்தாமரை மலர் அருகில் சென்று படிகின்றது.

''இளஞ்சாயல் இளந்தெங்கின் பழம்வீழ
இளம்மேதி இரிந்து அங்குஓடிச்
செஞ்சாலிக் கதிர் உழக்கிச் செழுங்கமல
வயல்படியும் திருவையாறே'' (1401)

வயலின் வளமையை இதைவிடச் சிறப்பாக பாட முடியுமா!

1. சிவம் பெருக்கும் பிள்ளையாரின் பாடல்கள் 'திருக்கடைக்காப்பு' என்று வழங்கப்பட்டன.
2. ஆளுடைய பிள்ளையார் ஒவ்வொரு பதிகத்திலும் முதல் ஏழு பாடல்களில் இறைவன் உறையும் தல இயற்கை அழகினையும், அவ்விறைவனது அருட்பண்புகளையும் விளக்கிப் பாடுகின்றார்.
3. சம்பந்தர் பாடாத இயற்கைப் பொருள்களே இல்லையெனும், அளவிற்கு மலர்கள், மரங்கள், பொழில்கள், மலைகள், அருவிகள், விலங்குகள் பற்றிய காட்சிகள் அவரது பாடல்களில் மிகுதியாகவே இடம் பெற்றிருக்கின்றன.
4. சம்பந்தர் தம்மைத் தலைவியாகவும், இறைவனைத் தலைவனாகவும் கொண்டு, தம் காதலை இறைவனிடம் சொல்லுமாறு பறவைகளைத் தூதாக அனுப்பும் பாடல்கள் படிக்கப் படிக்கத் தெவிட்டாதவை. தூது என்ற இலக்கியம் பிற்காலத்தில் எழவும், தூதாக இயற்கையைப் பயன் படுத்தலாம் எனவும் வழிகாட்டியவர் சம்பந்தர் என்று கூறுதற்கு இயலும்.

42. சம்பந்தரும் சைவ சித்தாந்தமும்

ம. செந்தில்குமார், மதுரை.

திருஞானசம்பந்தர் சுவாமிகளது தேவாரம் தொடங்கிச் சேக்கிழார் சுவாமிகள் இயற்றிய பெரியபுராணம் வரையுள்ள பக்தி நூல்கள் எல்லாம் திருமுறைகள் எனப்படும். சிவஞானபோதம் தொடங்கிச் சங்கற்பநிராகரணம் வரையுள்ள நூல்கள் சாத்திரங்கள் எனப்படும். சங்ககாலம், சங்க மருவிய காலங்களிலிருந்தும் சைவக் குறிப்புக்கள் சில காணப்படுகின்றன. அக்காலக் கட்டத்தில் சமய உணர்வு தமிழ் வாழ்வை ஒட்டி நடந்தாலும் அது அவர்களின் உலகியல் வாழ்வை உரசாத காலம் ஆகும். பின்னர் 7-ஆம் நூற்றாண்டில் தோன்றிய தேவார நூல்களில் சைவ சமயக் கருத்துக்கள் பல காணப்படுகின்றன. அவற்றில் ஞானசம்பந்தர் தேவாரப் பாடல்களில் காணப்படும் சைவ சித்தாந்த கருத்துக்களை எடுத்துக் கூறுவதே இக்கட்டுரை நோக்கமாகும்.

சைவ சித்தாந்தம்

சைவ சமயம் மிகவும் தொன்மையானது. சிவபரம்பொருளை முதன்மையாகக் கொண்டு இயங்குவது. சைவத்தின் முடிந்த முடிவு களைக் கூறுவது சைவ சித்தாந்தம். இஃது இறை (பதி), உயிர் (பசு), தளை (பாசம்) எனும் முப்பொருள்களும் உண்மைப் பொருட்கள் ஆகும். இம்மூன்றையும் வகைப்படுத்திப் பேசுவது வேதாகம காலத்திலே உள்ளது.

"பலகலை ஆகம வேதம் யாவையினுங் கருத்துப்
பதி பசுபா சந்தெரித்தல்" (சிவப். 3)

இம்முப்பொருள்களுக்கும் எந்நாளிலும் தோற்றம் இல்லை முடிவு இல்லை. என்றும் அநாதி ஆகும். இதையே திருமூலர்,

"பதி பசு பாசம் எனப் பகர் மூன்றின்
பதியினைப் போற் பசு பாசம் அநாதி" (2)

என்பார்.

"நரசிம்மவர்ம பல்லவன் காலத்துக் கல்வெட்டு ஒன்றில் 'நான் ஒரு சைவ சித்தாந்தி' என்ற வசனம் காணப்படுவதாகத் தெரிகின்றது. காலம் கி.பி. 7-ஆம் நூற்றாண்டாகும். சைவ சித்தாந்தம் என்ற பெயர் முதன் முதல் வழங்கத் தொடங்கிய காலத்தை நிர்ணயிப்பதற்கு இக்கல்வெட்டு

உதவக் கூடும் என்று கூறுகிறது''. இக்கருத்து கி.பி. 7-ஆம் நூற்றாண்டில் காணப்படுவதால் சைவ சித்தாந்தக் கோட்பாடு இக்காலக்கட்டத்தில் தான் உருவாக்கப்பட்டுள்ளது என்பது புலனாகும். (இந்தியத் தத்துவ ஞானம் - 348)

பதி இயல்புகள்

பதி என்பதற்குக் காப்பவன் என்பது பொருள். எல்லாவற்றையும் கடந்து நிற்கும் தலைவன், என்ன தன்மை என்று அறிய முடியாத இறைவன் பதி எனப்படுவான்.

பதி அநாதி

அநாதி என்ற சொல்லுக்குத் தோற்றமில்லாதது எனப் பொருள். அது என்றும் நிலைத்துள்ள நித்திய பொருள் ஆகும். ஞானசம்பந்தர் அநாதி என்று குறிப்பிடாது பிறப்பு, இறப்பு இல்லாத இறைவா என்று குறிப்பிடுகின்றார்.

“இறப்பில்லார் பிணியில்லார் தமக்கென்றும் கேடிலார்
பிறப்பிலாப் பெருமானார் பெருவேளூர் பிரியாரே” (3:322:7)

''திருவருட்பயனில் 'ஏகன்' என்ற சொல் பதியினைக் குறிக்கின்றது''. அதாவது 'ஆதிஇல்' என்றது அநாதி என்ற உண்மையை உணர்த்தும்.

“ஏகன் அநேகன் இருள் இருமம் மாயையிரண்
டாக இவை ஆறாதியில்” (திருவருட். 52)

இறை இயல்புகள்

1. இறைவனின் முதன்மை

இறைவன் பதி எனப்படுவான். அவன் எல்லா உயிர்களுக்கும் முதன்மையானவன். 'அ'கரம் ஆகிய உயிர் எழுத்து எவ்வாறு மற்றைய எல்லா எழுத்துக்களிலும் இயந்து நின்று அவற்றை இயக்குவது போலப் பதிப்பொருள் எல்லாப் பொருளிலும் கலந்து நின்று இயக்குபவன் என்ற கருத்து ஞானசம்பந்தர் தேவாரத்தில்,

“அகர முதலானை யணியாய் னூரானைப்
பகரு மனமுடையார் வினைபற் றறுப்பாரே” (1: 88: 5)

என்று கூறுகின்றார். இக்கருத்து திருவருட்பயனில் ,

“அகர உயிர்போல் அறிவாகி எங்கும்
நிகரில் இறைநிற்கும் நிறைந்து” (திருவருட். 1)

எனக் கூறப்படுகிறது.

இக்கருத்தும் சம்பந்தர் கருத்தும் ஒத்தனவாக காணப்படுகிறது.

2. சிறப்பிலக்கணம்: சொரூப இயல்பு

சிவம் சத்தாய் உள்ளது சித்தாயும் உள்ளது. இவ்வாறு சத்தாயும் சித்தாயும் நிற்றலே பதியின் உண்மை இயல்பாகிய சொரூப இலக்கணம். இதனை மாணிக்கவாசகரும்,

"பொய்யா யினவெல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞ்ஞான மாக மிளிர்கின்ற மெய்சுடரே"

எனக் குறிப்பிடுவார்.

ஞானசம்பந்தர் திருப்பிரம்மபுரம் பதிகம் ஒன்றில்,

"நஞ்சு மிடற்றில் போலும்" (2: 201: 4)

"தோடு செவிக்கிலர் போலும்" (2: 201: 4)

"இவர் தன்மையறி வாரார்" (3: 370: 1)

என்று கூறி இறைவனின் சிறப்பு இயல்புகளை விளக்குகிறார். அதேபோல் உமாபதிசிவம் தமது நூலில்,

"வாக்காலும் மிக்க மனத்தாலும் எக்காலும்
தாக்கா துணர்வரிய தன்மையன்" (கொடிக்கவி-3)

எனக் கூறுகிறார்.

இறைவனின் திருவுருவச் சிறப்பு

இறைவன் உருவம், அருவம், அருவுருவம் எனும் மூவகைத் திருமேனி கொள்வான். ஞானசம்பந்தர் திருமேனி பற்றி கூறுமிடத்தில்,

"நானாவித உருவாய் நமை யாள்வான்" (1: 9: 5)

இறைவன் பல்வேறு உருவங்களை எடுக்கும் ஆற்றல் உடையவன் என்பது விளங்கும். திருவருட்பயனில் உமாபதிசிவம்,

"அருவும் உருவும் அறிஞர்க்கு அறிவாம்
உருவும் உடையான் உள"

இறைவனது உண்மை நிலையை உணர மாட்டாதவரே ஏனையோர் அவர்களும் தன்னை மனம், மொழி, மெய்களால் உணர்ந்து வழிபட்டு உய்தல் வேண்டி அருவம், உருவம், அருவுருவம் என்னும் மூவகைத் திருமேனிகளைக் கொள்வான்.

உருவ வழிபாடு

ஞானசம்பந்தர் சித்தாந்த முன்னோடி என்பது விளங்கும் பாடல் களில் இதுவும் ஒன்றாகும். இவர் வடிவங்களைப் பாகுபாடு செய்யா விட்டாலும் அவர் பாடலில் வடிவங்கள் காணப்படுகின்றன.

"ஆணும் பெண்ணும் என நிற்பர்" (2: 251: 7)

இப்பாடல் அம்மையும் அப்பருமாக காணப்படும் வடிவமாகும். இதே வடிவம் பற்றி,

"அம்மையப்ப ரேஉலகுக் கம்மையப்பர்" (1)

என்று திருக்களிற்றுப்படியார் கூறுகிறது.

தாதான்மிய சம்பந்தம்

ஒரு பொருள் இருதன்மைப் பட்டு நிற்பது தாதான்மிய சம்பந்தம் ஆகும்.

"தோடுடைய செவியன்" (1: 1: 1)

இக்கருத்தை வலியுறுத்தும் சிவஞானசித்தியார்,

"முதலுருப் பாதி மாதர் ஆவது முணரார்" (சிவஞானசித்தி. 69)

இது போக வடிவமாகக் கருதப்படுகிறது.

உலகரூபி

இறைவன் உலகப் பொருட்களில் நிறைந்து நிற்றலால் அவனை உலகரூபி என்பர்.

"வேதியாகிவிண் ணாகிமண்ணோடெரி காற்றுமாய்
ஆதியாகி நின்றான்" (2: 14: 7)

ஐம்பூதம், சூரியன், சந்திரன், உயிர் இம்மூன்றையும் சேர்த்து எட்டுப் பொருட்களில் இறைவன் நிறைந்துள்ளான். அதனை அட்டமூர்த்தம் என்பர். அதைச் சம்பந்தர்,

அட்டமூர்த்தி (2: 253: 8)

எனக் கூறுவார்.

இதனை அருணந்தி சிவாச்சாரியார்,

"உலகுமாய் நின்றது" (சுபக். 68)

எனக் குறிப்பிடுகின்றார்.

அத்துவிதத் தொடர்பு

"பதிக்கும் உலகத்திற்கும் உயிர்களுக்கும் உள்ள தொடர்பு அத்து விதம் என்ற சொல்லால் சைவ சித்தாந்தத்தில் குறிப்பிடப்படும்".

(சிவஞான. உதா. வெண்பா)

இதனை,

"ஒன்றாகாமல் இரண்டாகாமல்
ஒன்றுமிரண்டு மின்றாகாமல் எனவிரித்து கூறுவர்"

(இருபா இருபஃது - 20)

ஞானசம்பந்தர் கூறுமிடத்து,

"ஈறாய்முத லொன்றாயிரு, பெண்ணான் குணமூன்றாய்
மாறாமறை நான்காய் வருபூதம் அவைஐந்தாய்
ஆறார் சுவை ஏழோசையொடு எட்டுத்திசை தானாய்
வேறாயுட னானிடம், வீழியம் மிழலையே" (1: 11: 2)

எனக் கூறுகிறார்.

பிறவிப் பிணி நீக்கும் மருத்துவன்

ஞானசம்பந்தர் தேவாரத்தில் திருப்புள்ளிருக்குவேளூர் எனும் தலத்தில் உறைந்துள்ள ஏகவர்த்தியான சிவனை வணங்கினால் தீராத பிறவி நோயையும் தீர்த்தருள்வான் அவன் அருள் உண்மையை விளக்க இல்லையாம் மறுபிறப்பே என்று கூறுகிறார். மேலும் அவன் தீவினை அறுக்கும் மருத்துவன் என்பது புலப்படும்.

"செடியாய அடறீர்ப்பான் தீவினைக்கோர் மருந்தாவான்
பொடியாடிக் கடிமை செய்த புள்ளிருக்கு வேளூரை"
(2: 179: 11)

"வரும் பிறவி நோய் தீர்பான்காண் வானவர்க்கும் தானவர்க்கும்
மண்ணுளோர்க்கும்" (6: 64: 4)

எனும் பாடலும்,

உள்ளம் உள்கி உகந்து சிவன்என்று
உள்வினைகெடும் மெய்ம்மையே (5: 79: 8-9)

எனும் பாடலிலும் இக்கருத்து காணப்படுகிறது. மேலும் சாத்திர நூலான சிவஞான சித்தியாரில் (ப. 94)

"தரணியோடு தராபதி போலத் தாமே
மருவிடா, வடிவும் கன்ம பயன்களும் மறுமைக்கண்ணே"

முப்பிறவிகளில் உயிர்கள் ஈட்டிய இருவினைக்கு ஈடாக இந்தப் பிறவியில் இன்ப துன்பங்களை நுகரும். அவ்வாறு நுகரும் காலத்து மேலும் வினை களைச் செய்யும். இவ்வாறு மேலும் மேலும் வினையை ஈட்டுகிற உயிர்கள் இவ்வுலகத்தில் பிறந்தும் இறந்தும் துறக்க நிரயங்களில் சென்றும் மீண்டும் வரும் வினையின் பயன்களை உயிர்களுக்கு மருத்துவரைப் போலவும் மன்னனைப் போலவும் சிவபெருமான் தானே தனது ஆணையால் கூட்டுவிப்பான் என்பதாகும்.

பசு அநாதி

உயிர் அநாதி என்பதற்கு உயிர் ஒருவரால் தோற்றுவிக்கப்படாதது என்பது பொருள். இதனை ஞானசம்பந்தர்,

"விளையாத தொர் பரிசில் வரும் பசு" (1: 12: 3)

என்பார்.

"திருவருட்பயன் என்ற சாத்திர நூல் (52) இறைவன், உயிர், இருள் கன்மம் சுத்தமாயை, அசுத்தமாயை. இவை ஆறும் அநாதி எனக் கூறுவதால் உயிர் அநாதி என்பது உணரப்படும்".

பசு அறிவுப் பொருள்

உயிர் அறிவுடைப் பொருள் ஆகும். இவ்வுயிர் பற்றி சம்பந்தர்,

".....அவர்க் கறியு மறிவளி" (1: 17: 6)

"மறவியஞ் சிந்தனை" (2: 203: 8)

கூறுமிடத்து உயிர்களுக்கு அறிவு இறைவனால் வழங்கப்படுகிறது என்பது புலனாகும். உயிர்கள் இறைவன் அறிவித்தாலன்றி ஒன்றையும் அறியாது. இக்கருத்து சிவஞானபோதத்தில்,

"அறிவிக்க அன்றி அறியா உளங்கள்"

"உணர்த்த வுணர்தலின்"

எனக் கூறப்படுகிறது.

ஐம்பொறிகளின் உதவியாலேயே உயிர்கள் அறிவினைப் பெறும் என்ற கருத்தை,

"பொறியின்றி ஒன்றும் புணராத புந்திக்(கு)
அறிவென்ற பேர்றன் றற" (திருவருட். 15)

எனக் கூறுகிறது.

காட்டும் உபகாரம்

அறிவிக்க அறியும் தன்மையுடைய உயிர்களுக்கு இறைவன் அறிவுபெறச் செய்யும் உபகாரம் இருவகைப்படும். உயிர்களின் அறிவை விளக்கி அவைகளை அறியச் செய்வதே காட்டும் உபகாரம். அதை ஞானசம்பந்தர்,

"அவர்க் கறியும் அறிவருளி" (1: 17: 6)

அறிவருளி என்பது காட்டும் உபகாரத்தை குறிக்கும். இக்கருத்து சாத்திர நூலான சிவஞானபோதம் ஐந்தாம் சூத்திரம் உணர்த்துகிறது.

காணும் உபகாரம்

உயிர்கள் அறியும்போது அறியப்படும் பொருள் இறைவன் உடன் நின்று அறிவது காணும் உபகாரம் ஆகும். இக்கருத்து தேவாரத்தில்,

"கண்ணாவா ருலகுக்குக் கருத்தானார்" (3: 322: 1)

"உயிர்க் கெல்லாம் கண்ணானே" (2: 151: 3)

என்ற வரிகள் இறைவன் திருவருளே கண்ணாக நின்று உயிர்களுக்கு காணும் உபகாரத்தைச் செய்வதை கூறுகிறார். இக்கருத்து சிவஞானபோதத்தில்,

"காணுங் கண்ணுக்குக் காட்டும் உளம்போற்
காண உள்ளத்தைக் கண்டு காட்டலின்" (11)

எனக் கூறுகிறது.

பாசம்

''பாசம் என்பது வடமொழிச் சொல்லாகும். இதற்கு காட்டுவது என்பது பொருளாகும்'' என்பார்.

"பாசமான களைவார்" (2: 216: 7)

"சிந்தையான் மகிழ்ந் தேத்த வல்லாரெலாம்
பந்த பாச மறுக்கவல் லார்களே" (3: 307: 11)

என்று கூறுமிடத்து பாசம் என்ற ஒன்று உண்டு என்பது புலனாகும். இக்கருத்து சிவஞானபோதம் இரண்டாம் சூத்திரத்தில் உணர்த்தப்படுகிறது.

''மெய்கண்டதேவர் அதனை நேரே உணர்த்தாமல் உயிர்கள் மீளப் பிறத்தலை உணர்த்துமுகமாகத்தான் உணர்த்துகின்றார் என கூறுவார்''.

பாசம் அநாதி

''பதியும், பசுவும் எவ்வாறு அநாதியோ அதைப்போலப் பாசமும் அநாதி'' என்பது சித்தாந்தக் கோட்பாடு ஆகும். இதனை ஞானசம்பந்தர்,

"விளையாத தொர் பரிசில் வரும் பசு பாச வேதனையொண்
டளையாயின" (1:12:3)

என்ற தொடர் குறிப்பிடுவார். விளையாத தொர் பரிசில் வரு என்ற தொடர் திருஞானசம்பந்தருக்கும் பாசம் அநாதி என்பது உடன்பாடு என்பதை உணர்த்தும். இக்கருத்தைச் சிவஞானபோதம்,

"நெல்லிற் குமியும் நிகழ்செம்பி னிற்களிம்பும்
சொல்லிற் புதிதன்று தொன்மையே வல்லி
மலகண்யம் அன்றுளவாம்" (12)

இக்கருத்து சித்தியாரிலும் காணப்படுகிறது.

"மும்மலம் நெல்லினுக்கு முளையொடு தவிடு
மிப்போல் என்கிறது" (176)

திருஞானசம்பந்தர் தேவாரத்திலுள்ள சொற்றொடர்களுக்கும் சித்தாந்த நூல்களிலுள்ள சொற்றொடர்களுக்கும் ஒற்றுமை காணப் படுகின்றன. சித்தாந்தக் கோட்பாடு உருவாவதற்கு இந்நூலும் ஒரு முக்கிய மூலம் என்பது புலப்படுகிறது. சில கருத்துக்கள் அடிப்படை யாகவும் கூடக் காணப்படுகின்றன. இக்கோட்பாடுகள் 13-ஆம் நூற்றாண்டில் தோன்றிய மெய்கண்ட சாத்திரத்திற்கு முன்பு இருந்தே காணப்படுகின்றது.

திருஞானசம்பந்தரால் விளக்கமாகக் கூறப்படாமல் விடுபட்டுச் சென்றுள்ள புதிய சித்தாந்தங்களை ஒன்றுபடுத்தி அமைக்கப்பட்ட ஒரு கோட்பாடாகச் சைவ சித்தாந்தம் காணப்படுகிறது. இக்கருத்து விடுபாட்டிற்கும் ஒருங்கிணைந்த சித்தாந்தக் கருத்துகளும் ஞானசம்பந்தர் காலம் முதல் மெய்கண்டார் காலம் வரையுள்ள கால மாற்றமே முழுமையான சித்தாந்தம் தோன்றக் காரணமாகும் என்பது புலனாகிறது.

43. சித்தாந்த நெறியில் சம்பந்தர்

த. செல்லம்மாள், தஞ்சாவூர்.

இறையன்பு என்னும் தனி நெறியில் மக்களைச் செலுத்திய காலம் பக்தி இலக்கிய காலமாகும். சமணர், பௌத்தர் போன்ற பிற சமயத்தினர் தங்களது செல்வாக்கினால் மன்னனையே தம் சமயத்திற்கு மாற்றக் கூடிய அளவிற்குத் தமிழும் சைவமும் ஒளி மங்கத் தொடங்கிய போது விடிவெள்ளியாகத் தோன்றியவர் திருஞானசம்பந்தர். தேவார மூவர்களில் (மூவர் முதலிகள்) ஒருவரான சம்பந்தர் பாடிய திருமுறைகள் முதல் மூன்று. (4158) நாலாயிரத்து நூற்று ஐம்பத்து எட்டு பாடல்கள் அவருடையவை. பெரியபுராணத்துள் மூன்றில் ஒரு பங்கை ஞானசம்பந்தருக்கே சேக்கிழார் ஒதுக்குகிறார். தமிழுடன் தம்மை இணைத்துக்கொண்டு பேசியவர் ஞானசம்பந்தர்.

"சொற்கோவும் தோணிபுரத் தோன்றலும் எம்சுந்தரனும்
சிற்கோல வாதவூர்த் தேசிகனும் - முற்கோலி
வந்திலரேல் நீறெங்கே மாமறை நூல் தானெங்கே"

என்று ஒரு தனிப்பாடல் நாவுக்கரசர், ஞானசம்பந்தர், சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகிய நால்வரின் பெருமையைப் பேசுகிறது.

சமயத்தைப் பின்பற்றுபவர்கள் ஆன்மீக நெறியினர். சமய அனுபவத்தைப் பெற்றவர்கள் அடியவர்கள். சமயக்குரவர்கள் நால்வரும் சமய அனுபவத்தைப் பெற்று அந்த அனுபவச் சாற்றினைப் பத்திப் பாடல் களாக மக்களுக்குத் தந்தனர். சைவ சமயத்தின் எழுச்சிக்கும், சைவச் சித்தாந்த நெறியின் சீர்மைக்கும் விளக்கத்திற்கும் தேவார மூவர் செய்திருக்கும் பணி அளவிடற்கரியது. தேவாரம் என்பது தெய்வம் சுட்டி வரும் வாரப்பாடல்கள் எனலாம். பெரும்பான்மையான தேவாரப் பாக்கள் கலியோசை தழுவிய விருத்தப்பாக்களின் வெவ்வேறு வடிவங்கள் ஒன்று கூடியவை. பல்வேறு சந்த அமைப்புக்களுடன் விரவிய பாடல்கள் ஞானசம்பந்தருடையவை. திருமந்திரம் சைவ சித்தாந்தத்தின் ஆணிவேர். தேவாரத் திருமந்திரக் கருத்துக்களையே பிற்காலச் சைவ சித்தாந்த நூல்கள் பதியமிட்டு வளர்த்தன. தமிழ் மக்களின் உயர்ந்த தெளிவான சிந்தனைகள் அடங்கிய சித்தாந்த மரபு போற்றுதற்குரியவை. உலக மக்களும் வியக்கும் வகையில் அமைந்தவை. மூவர் தேவாரத்தில்

வரும் மெய்ப்பொருள் நெறி பழமையும் புதுமையும் வாய்ந்தவை. சங்க காலத்தின் சிவநெறிக் கோட்பாடுகள் பத்தி இலக்கிய காலத்தில் இன்னிசைப் பாடல்களாக வடிவம் எடுத்தன.

இறைவனை உள்ளம் கசிந்து உணர்ந்து வழிபட்டால் கருணையின் வடிவான இறைவன் வந்து ஆட்கொள்வான் = அன்பே அடித்தளம். இறைவனிடம் அன்பு கொண்டு தொண்டு செய்யவே உடலும் உடல் உறுப்புக்களும் என்பது பக்தர்களின் நம்பிக்கை. ஆன்மீக வாழ்வின் வாயிற்படி அன்பு எனலாம். ஞானம் உள்ளிட்ட பக்தியைச் சைவ ஆகமங்கள் வலியுறுத்துகின்றன. 'தாள்' என்றும் அகங்காரத்தை ஞானத் தீயால் எரித்து அதன்பின் எழும் பக்தியே முக்தி தரும். அறிவால் பெற இயலாததை அன்பால் பெறலாம் என்று கூறுகின்றது. சிவனோடு ஒன்றும் ஆன்மாக்கள் நான்கு உபாயங்களைக் கையாள வேண்டும். ஆன்மாவைச் சூழ்ந்துள்ள அறியாமை இருளினை அகற்ற பக்தி உறுதியால்தான் முடியும்.

உயிர்களுக்கு இறைவனிடத்து அன்பும், பக்தியும் நம்பிக்கையும் ஏற்பட ஞானசம்பந்தர் பலவழிகளில் முயல்கின்றார். பதிக அமைப்பில் பத்துப்பாடல்களுடன் பதினோராவது பாடலில் இறைவன் துணையால் உயிர்களுக்கு ஏற்படும் இடர்ப்பாடுகள் நீங்கும் என்று வலியுறுத்திச் செல்கின்றார்.

இறைவனிடம் முழு அன்பு செலுத்துதல், தன்னை முழுவதும் அவனிடம் அர்ப்பணித்தல், இருவினையைப் போக்க முயலுதல், பிறப்பறுக்க முயலுதல், இறைவன் தன் உள்ளத்தில் உறைவதையே உணர முடிதல் ஆகியனவே ஞானம்பந்தரின் பாடல்களில் மக்களுக்கு உணர்த்தும் செய்திகளாகக் காணலாம். 'பதி' இயல்புகளாக ஞானசம்பந்தர் கூறுமிடங்கள் பல. சைவ நெறியில் சிவனை 'பதி' என்ற பெயரால் குறிப்பிடுவதுண்டு. சிவன் என்ற சொல்லுக்கு மங்கலம், நன்மை என்ற பொருள் உள்ளன. நன்மையே தரக்கூடிய நிறைவானது, பூரணமானது என்றும் ஆனந்தத்தைத் தரவல்லது என்றும் சிவனைக் குறிப்பிடலாம்.

''மண்ணில் நல்லவண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணில் நல்லகதிக்கு யாதுமோர்க் குறைவிலை''

என்ற ஞானசம்பந்தரின் வாக்குப்படி உயிர்களை நலமுடன் காப்பது பதிக்குரிய செயலாகும். பதியின் இயல்புகளை எண்வகைக் குணங்களாகக் காட்டுவார்.

1. தன் வயத்தன் ஆதல்
2. இயற்கை உணர்வினன் ஆதல்
3. முற்று உணர்வினன் ஆதல்

4. அளவிலா ஆற்றல் உடையவன் ஆதல்
5. வரம்பிலா இன்பம் உடையவன்
6. தனக்கு உவமை இல்லாதன் ஆதல்
7. பாசங்களின் நீங்கியவன் ஆதல்
8. பேரருள் உடையவன் ஆதல்

இக்குணவினையும் ஞானசம்பந்தர் தம் பாடல்களில் விளக்கிச் செல்கின்றார்.

"எண்ணிடை யொன்றினர் இரண்டினர் உருவம்
எரியிடை மூன்றினர் நான்மறையாளர்
மண்ணிடை ஐந்தினை ஆறினர் அங்கம்
வகுத்தனர் எட்டிசை எட்டிருங்கலை சேர்
பண்ணிடை ஒன்பதும் உணர்ந்தவர்"

என்று இறைவனது வடிவச் சிறப்பினையும் பேசுகின்றார்.

தாயுருவானவன் / பேரருளாளன்

தீயுற வாய ஆக்கையது பற்றிவாடிம்
வினை செற்ற வுற்ற உலகின்
தாயுறு தன்மையாய தலைவன் தன்நாமமே
தேயபிறை வைத்து உகந்த சிவன்மேயச் செல்வத்
திருநாரையூர் கை தொழிலே.

தன் வயத்தன் ஆதல்

"இன்னவுரு இன்ன நிறம் என்று அறிவதேது நீதிபலவும்
தன்ன வுருவாமென இருந்தவன் நீதியொடு தாள் அமர்விடம்"

என்றும்,

"தன்மை யாரும் அறிவாரில்லை தாட்பிறர் எங்கவே
பின்னும் முன்னும் சிலபேய்க்களர் சூழத்திரிவர்
துள்ள ஆடை யுடுப்பர் கடலைப் பொடிப்பூகவர்
அள்ளம் ஆலும் துறையானும் ஐயானுடை ஐயனே"

என்றும் இறைவனின் இயல்புகளை ஞானசம்பந்தர் விளக்கும் இடங்கள் பல.

மனித ஆன்மாக்கள்

உயிர்களை 'அணுக்கள்' என்று சைவ சித்தாந்தம் குறிப்பிடும். ஆணவ மலத்தால் கட்டுண்டு கிடப்பதால் 'பசு' எனவும் சைவ சித்தாந்தம் குறிப்பிடும். ஆன்மாக்கள் தாம் சாரும் வண்ணத்தால் செயல்படும்.

தன்னை அறியும் திறம் இன்றி மும்மலங்களால் கட்டுண்டு கிடக்கும் உயிரை இறைவனிடத்துச் செலுத்த ஞானசம்பந்தர் பல வழிகளில் முயலுகின்றார். உலக மக்களுக்கு நேரிடையாகக் கூறாமல் தன் நெஞ்சிற்கு கூறுவது போல் கூறுகின்றார்.

''நீ நாளும் நன்னெஞ்சே நினை கண்டாய் யாரறிவார்
சாநாளும் வாழ்நாளும் சாய்க்காட்டெம் பெருமாற்கே
பூநாளும் தலைசுமப்ப, புகழ்நாமம் செவிகேட்ப
நாநாளும் நவின்றேத்த பெறலாமே நல்வினைவே''

(2-ஆம் திருமுறை)

நேரடியாக மக்களைப் பார்த்துப் பேசுமிடமும் உண்டு.

''அல்லல் வாழ்க்கை உய்ப்பதற்கு அவத்தமே பிறந்த நீர்
எல்லையில் பிணக்கினிற் கிடந்திடாது எழும்மினோ!
கொல்லை ஏற்று ஏறுவான் கோலக் காழி சேர்மினே''

வழிபடும் மக்களுக்கு இறைவன் நம்மை சேர்ப்பான் வழிபடும் என்று நம்பிக்கையூட்டுகின்றார்.

''தளம் வரும் நன்மையாரும் தகுதிக்குழந்து
வருந்திக் குழன்ற உடலில்
இளம் வளர்ஐவர் செய்யும் விளையங்கள் செற்று
நினைவொன்று சிந்தை பெருகும்
சிவன்மேயச் செயவற்திரு நாரையூர் சேர்மினே!''

பக்திநெறி

எளிமையான பக்திநெறியை ஞானசம்பந்தர் மக்களுக்கு உணர்த்தினார். மலரிட்டு வணங்குதலை,

''நித்தலும் நியமம் செய்து நீர்மலர் தூவிச்
சித்தம் ஒன்ற வல்லார்க்கு அருளும் சிவன் கோயில்''

''சாய்க்காட்டு எம் பெருமானைத்
தெய்வமாய்ப் பேணாதார் தெளிவுடைமை தேறோமே''

என்று எச்சரிக்கையும் விடுக்கின்றார். இருவினைகள் அகல இறைவனிடம் நம்பிக்கை வைத்து வழிபட வேண்டும்.

''ஊனில் உயிர்ப்பை ஒடுக்கி ஒண்சுடர்
ஞான விளக்கினை ஏற்றி நன்புலத்
தேனை வழிதிறந்து ஏற்ற வல்லார்க்கு இடர்
ஆன கெடுப்பன அஞ்செழுத் தும்மே''

"அள்ளர்சேர் பிரமாபுரத்து ஆரமுறை எப்போதும்
பார்கண்ணே பகர்ந்திடவே எங்கேனும் யாதாகிப்
பிறந்திடினும் தன்அடியார்க்கு இங்கேஎன்று அருள்புரியும்
தன் அடைந்தார்க்கு இன்பவார் தருவானைத் தந்துவனை
எந்தமது சிந்தை பிரியாத பெருமாளை"

நினைவார்க்கு வினை அகலும் என்று பேசுகின்றார் ஞானசம்பந்தர்.

ஞானசம்பந்தர் பாடல்கள் பண் சுமந்த பாடல்கள் சித்தாந்த நெறி உணர்த்தும். ஆன்மா இயல்பு, பதி இயல்பு உயிர்களின் இரு வினை ஒப்பு, திருநீற்றின் பெருமை முழுமுதற் பொருளினை அடைய அன்பு வழிபாடு இவற்றை மிகத் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றார். பிறவி நீங்கிட பேரின்பம் பெற வழிகாட்டும் பாடல்கள். அன்புடன் கூடிய தொண்டு நெறியில் உயிர்கள் வாழ்ந்து பிறவித்துன்பம் நீங்க வழிக்காட்டிய ஞானசம்பந்தரை,

"வேத நெறி தழைத்தோங்க மிகுசைவத்துறை விளங்க
பூத பரம்பரை பொலியப் புனித வாய் மலர்ந்தழுத
சீத வளவயற் புகலித் திருஞானசம்பந்தர்
பாத மலர்தலைக் கொண்டு திருத்தொண்டு பரவுவாம்"

என்று சேக்கிழார் பரவுவதும் இப்பெருந்தகையின் சிறப்பிற்கு மேலும் சிறப்புச் செய்கிறது.

44. சம்பந்தர் தேவாரத்தில் பிற உயிரினங்கள்

வே. செல்லாத்தாள், கோவை.

உயிர்கள் எண்ணற்றன என்பது சைவ சித்தாந்தம் கூறும் உண்மை. வள்ளுவரும் ''பல்லுயிர்'' எனக் குறிப்பிட்டுள்ளார். தமிழ் மொழியின் இலக்கண நூலார் உயிர்களை,

''ஒன்றறி வதுவே உற்றறி வதுவே
இரண்டறி வதுவே அதனொடு நாவே
மூன்றறி வதுவே அவற்றொடு மூக்கே
நான்கறி வதுவே அவற்றொடு கண்ணே
ஐந்தறி வதுவே அவற்றொடு செவியே
ஆறறி வதுவே அவற்றொடு மனனே''

என வகைப்படுத்தியுள்ளார் (தொல்காப்பியர்). மேற்குறிப்பிட்டுள்ள ஐந்து வகையான உயிரினங்களையும் பகுத்துப் பிரித்துணரும் பாங்கு பெற்ற உயிரினமே மனித இனம். இவ்வினம் பெற்றுள்ள அறிவு ஆறாகும். இவ்வினம் உய்ந்து பேறுபெறப் பாடிய பாடல்களே தோத்திரங்களாகும். இத்தோத்திரங்களைச் 'சைவ சமயம்' பன்னிரண்டாகப் பகுத்துள்ளது. இப்பன்னிரண்டு பகுதியில் முதல் பகுதியாக அமைந்திருப்பது ஞானசம்பந்தர் அருளிய திருப்பாடல்களாகும். இப்பாடல்கள் வழிப் பிற உயிரினங்களை ஞானசம்பந்தர் எவ்வாறு பாடியுள்ளார் என்பதை விளக்கிக் காட்டுவதாக இவ்வரங்கக் கட்டுரை அமைகிறது.

ஞானசம்பந்தர் குழந்தைப் பருவத்திலிருந்தே பாடல்களை அருளியவர், இவர் 16 ஆண்டுகள் வரை வாழ்ந்ததாக வரலாறு குறிக்கிறது. இளம் வயதுக் குழந்தைகள் குயில், மயில், அன்னம், வாத்து போன்ற மென்மையான பறவைகளையும், மனிதனோடு வேறுபட்ட மனிதனாகிய குரங்குகளையும், நெழிந்து சுழன்று வளைந்து வட்டமிடும் மீன்களையும் அதிகமாக விரும்புவார்கள். அவ்வாறே ஞானக்குழந்தையும் இவற்றை யெல்லாம் அதிகம் விரும்பியுள்ளமையை அவர் பாடல்வழி உணரலாம்.

ஞானசம்பந்தரது பாடல்களில் இயற்கை வளம் செறிந்து நிற்கும். ஆறுகளும் சோலைகளும் ஆடும் பாடும். இவற்றில் வாழ்கின்ற உயிரினங் களையே ஞானசம்பந்தர் அதிகமாகப் பார்த்து மகிழ்ந்து பாடியுள்ளார்.

பறப்பன பொதுவாக எடை குறைந்தவை. என்றும் மகிழ்வோடு கொஞ்சிக் குலாவிக் கொண்டிருக்கும் தன்மையுடையன. சேவல்தன்

பெடையைச் சிறகு விரித்துக் காக்கும் தன்மையினை, அன்புகொள் மடப்பெடை அசைஇய வருத்தத்தை, மென்சிறகால் ஆற்றும் புறவெனவும் உரைத்தனரே'' என்கிறது கலித்தொகை.

கருத்தொருமித்த காதல் வாழ்க்கையில் ஆணும் பெண்ணும் பிரிந்து வாழாத் தன்மையுடையவை என்பதை,

''மனைசேர் பெண்ணை மடிவாய் அன்றில்
துணையொன்று பிரியினுந் துஞ்சா காணென்''

என வரும் அகநானூற்றுப் பாடலால் அறியலாம்.

ஞானசம்பந்தர் மயில், குயில், குருகு, அன்னம், வாரணம், நாரை, கபோதம், அன்றில், பூவை, கிளி, தாரா, கழுகு, கூகை முதலான பறவை களைப் பாடியுள்ளார்.

மயில்

கார்காலத்தில் மகிழ்வாக வாழ்வது. மென்மையினையும் அழகிய வண்ணங்களையுமுடையது. இம்மயிலோடு குயிலினையும் இணைத்தே காட்டியுள்ளார் ஞானசம்பந்தர். காரணம் மயில் ஆடுவது, குயில் பாடுவது. ஆடலும் பாடலும் இணைந்து தானே வரும்.

தென் திருமுல்லைவாயிலின் பெருமையினைக் கூற வந்த சம்பந்தர்,

''மானேறு கொல்லை மயிலேறி வந்து
குயிலேறு சோலை''

என்கிறார். இங்கு ஒரே சோலையில் மான், மயில், குயில் மூன்றும் சேர்ந்து வாழும் தன்மை காட்டப்பட்டுள்ளது. இம்மூன்றுமே மென்மைமிக்கன அல்லவா? எனவே தான் ஒன்றாகக் காட்டியுள்ளார்.

திருவெண்காட்டுச் சோலையில் மயில் நடனமிடுகின்றது. இந்நடனம் கடலின் முழக்கமாகிய தாளத்தால் நிகழ்கிறது. பாடல் வேண்டுமே. இதோ வண்டு பாடுகிறது. இக்கற்பனை அமைந்த பாடல்,

''கண்மொய்த்த கருமஞ்ஞை நடமாடக் கடல்முழங்க
விண்மொய்த்த பொழில்வரிவண் டிசைமுரலும் வெண்காடே''

என வரும் திருவெண்காட்டுப் பதிகப் பாடலாகும்.

பறவைகள் பல இனத்தனவாக இருப்பினும் ஓரிடத்தில் தங்குவது இயல்பு. அவ்விடமும் நீர் நிறைந்த சோலையாக இருப்பின் அவற்றிற்கு உணவும் நீரும் குறைவின்றிக் கிடைக்கும். எனவே, கூத்தும் பாட்டும் நடக்கும். இத்தகைய தன்மை அன்பிலாலந்துறையில் அமைந்துள்ளதாம். அழகு மிளிரும் மயில்களும், குயில்களும், அன்னங்களும் ஒரே இடத்தில் தங்கியுள்ளமையை,

''பிணைமாமயி லுங்குயில் சேர்மட அன்னம்
அணையும் பொழில்அன் பிலாலந் துறையாரே''

என்ற பாடல் காட்டுகின்றது. இதே போன்று குடமூக்கின் பெருமையினை ஒரு அழகான பாடல்களில் பாடியுள்ளார் சம்பந்தர்.

''மயில்பெடை புல்கியால மணல் மேல்மட அன்னமல்கும்
பயில்பெடை வண்டுபண்செய் பழங்காவிரிப்
பைம்பொழில் வாய்க்
குயில்பெடை யோடாட லுடை யான்குட மூக்கிடம்''

இப்பாடலில், காவிரியின் கரையிலுள்ள சோலையில் மயிலும் குயிலும் தம் பெடையோடு விளையாட மடஅன்னம் வீற்றிருக்க வண்டு பண் பாடுகிறது.

குருகு

சங்க இலக்கியங்களில் அதிகம் பேசப்படும் பறவை குருகு. இக்குருகை ஒரு காதல் சாட்சியாகக் காட்டுகிறார் கபிலர்.

''யாருமில்லைத் தானே கள்வன்
தான்அது பொய்ப்பின் யான்எவன் செய்கோ
தினைத்தாள் அன்ன சிறுபசுங் காஅலெ
ஒழுகுநீர் ஆரல் பார்க்கும்
குருகும் உண்டுதான் மணந்த ஞான்றே''

என்பது அப்பாடல். இப்பாடல்வழிக் ''குருகுகள்'' மீனினங்களையே உண்டு வாழும் இனம் என்பது புலனாகிறது.

இக்குருகுகளைக் கண்டு கெண்டைகள் அஞ்சி ஓடியுள்ளன. தன் எதிரியைக் கண்டால் ஓடி ஒளிவது இயல்புதானே. இதனைச் சம்பந்தர் திருவெண்காட்டுப் பதிகத்தில் ஒரு கற்பனையோடு காட்டியுள்ளார்.

திருவெண்காட்டுப் புறவில் தாழை மடல்கள் விரிந்துள்ளன. பூக்கள் நிறைந்து காணப்படுகின்றன. அப்பூக்களின் நிழலைக் 'குருகென' எண்ணிய கெண்டைமீன் நயமாகத் தாமரைப் பூவிடையே மறைகிறது. தாமரை நீர்நிறைந்து இருந்தால் தானே மலரும். இதனை,

''மடல்விண்ட முடத்தாழை மலர்நிழலைக் குருகென்று
தடமண்டு துறைக் கெண்டை தாமரையின் பூமறைய''

என்ற பாடல் வரிகள் காட்டுகின்றன.

இங்குக் கெண்டையின் சூழ்ச்சி, உயிர் வாழ்வில் ஏற்படும் தடைகள் - தடைகளைத் தாண்டும் வழிகள் நயமாகக் காட்டப்பட்டுள்ளன.

திருமறைக்காட்டில் 'குருகு' மயங்கிய தன்மையைக் காட்டியுள்ளார் ஞானசம்பந்தர். தாழை மடல் நன்றாக விரிந்துள்ளது. இதனைத் தன் பெடையெனக் கருதித் தழுவுகிறது குருகு. இக்குருகின் செயலைச் சம்பந்தர் ''ஏழை வெண்குருகு'' என்கிறார். இங்கு இச்சொல் அறிவில்லாமையைக் குறிக்கிறது.

''ஏழை வெண்குரு கயலே யிளம்பெடை தனதெனக் கருதித்
தாழை வெண்மடற் புல்குந் தண்மறைக் காடே''

என்பது சம்பந்தர் வாக்கு.

சம்பந்தர் ''கொக்கினை கொக் கரவம் முற்ற பொழில்'' எனவும் ''செஞ்சூட்டுக் கண்பகத்தின் வாரணம்'' என வாரணத்தினையும் குறிப்பிட்டுள்ளார். மேலும், மேக நீரையே உண்டு வாழும் சாதகப் பறவையினைக் குறிப்பிட்டுள்ளார். இப்பறவை தென்னை, கமுகு- இவற்றிலிருந்து கிடைக்கும் இளநீரையும் குடிப்பதாகப் பாடியுள்ளார்.

அன்னம்

அன்னம் அழகானது. தலைமாணாக்கனுக்கு உவமை கூறப்படுவது. பாலையும் நீரையும் பிரிக்கும் ஆற்றல் கொண்டது. வள்ளுவர் காதலியின் மென்மை கூறுமிடத்து, ''அனிச்சம் பூவும் அன்னத்தின் தூவியும் மாதரடிக்கு நெருஞ்சிப் பழம்'' என்கிறார்.

அன்னத்தின் சிறப்புக்களைத் திருவீழிமிழலை, புகலூர், திருவலஞ்சுழி போன்ற தலங்கள் மீது பாடப்பட்ட பாடல்களில் குறிப்பிட்டுள்ளார் சம்பந்தர்.

திருவலஞ்சுழியில் ''கிண்ணம்'' போல் தாமரை மலர்ந்துள்ளதாம். அதிலிருந்த மகரந்தப் பொடியில் அளாவிய அன்னம் வண்ணமிக்க நுண்மணலில் சென்று அமர்கிறதாம். திருவீழிமிழலையில் ''சேற்றில் மலர்ந்த தாமரை மீது'' அன்னம் வீற்றிருக்கிறது. இக்காட்சி கொலு விருப்பது போல் தோன்றுகிறதாம் சம்பந்தருக்கு.

கிளி

திருவெண்காட்டில் மேகத்தை முட்டும் வரை வளர்ந்த மரங்கள் நிறைந்த காட்டில் பனைகள் மீது கிளிகள் வீற்றிருக்கிறதென்கிறார்.

திருமுதுகுன்றில் எழுந்தருளும் இறைவனைப் புகழ்ந்து குயில்கள் பாடுகின்றன. இப்பாடல்களைக் கேட்டுக் கேட்டுப் பயின்று கொண்டன கிளிகள். இவையும் இறைவனைப் புகழ்ந்து பாடுகின்றனவாம். இக்கூத்து சோலைகளில் நிகழ்கிறதாம். சொன்னதைச் சொல்வது தானே கிள்ளை என்பதைக் காட்டுகிறது இக்காட்சி.

அன்றில்

புலவர்களைக் கவர்ந்தது. காதல் வாழ்வில் ''ஈருடல் ஒருயிராய்'' வாழ்பவை. இவற்றினிடையே நிகழும் சிறு பிரிவும் இவற்றுக்கு நீண்ட துன்பத்தைத் தரும் என்பதை,

> ''பூவிடைப் படினும் யாண்டு கழிந்தன்ன
> நீர்உறை மகன்றிற் புணர்ச்சி போல''

என வரும் குறுந்தொகைப் பாடலால் அறியலாம்.

பன்னிரண்டு திருப்பெயர்களைப் பெற்ற தலம் திருஞானசம்பந்தர் அவதரித்த தலம். இதனை,

> ''பிரமபுரம் வேணுபுரம் புகலிபெரு வெங்குருநீர்ப்
> பொருவில்திருத் தோணிபுரம் பூந்தராய் சிரபுரமுன்
> வருபுறவஞ் சண்பைநகர் வளர்காழி கொச்சைவயம்
> பரவுதிருக் கழுமலமாம் பன்னிரண்டு திருப்பெயர்தால்''

என்கிறார் சேக்கிழார். இதனுடைய பெருமைகளைப் பல பதிகங்களில் புகழ்ந்து பாடியுள்ளார் ஞானசம்பந்தர். இவற்றில் ஒன்று ''வண்டரங்கப் புனற்கமல'' எனத் தொடங்கும் பதிகமாகும். இப்பதிகம் இறைவனிடத்துத் தன் நிலைமையைக் கூறத் தூது விடுவதாக உள்ளது. இதனைக் ''காமம் மிக்க கழிபடர் கிளவி'' என்பார்கள். இந்நிலையில் கேளாதனவற்றைக் கேட்பது போல எண்ணி, காமம் மீதூர்ந்தவர்கள் பேசுவார்கள். இதனை, ''கேட்குந போலவும் கிளக்குந போலவும்'' என்ற நூற்பாவால் உணரலாம்.

இப்பதிகத்தில் ஞானசம்பந்தர் தம் நிலைமையினை இறைவனுக்கு எடுத்துரைக்குமாறு, ''அரசவண்டு, இளங்குருகு, வாரணம், நாரை, கபோதம், அன்னம், அன்றில், குயில், பூவை, கிளி'' இவற்றினிட மெல்லாம் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறார். இங்கு ஒவ்வொரு பறவைக்கும் ஒரு அடைமொழி தந்துள்ளார். ''இசைபாடும் அளியரசே'', ''கழிக்கானல் இளங்குருகே'', செஞ்சூட்டு வாரணமே'', ''செங்காலொண் கழி நாராய்'', ''பவளக்கால் கபோதங்கள்'', ''மடற்பெண்ணைக் குரும்பை வாழ் முயங்குசிறை அன்றில்காள்'' ''எழில் இளங்குயிலே'', ''வாயலகிற் பூவை நல்லாய்'', ''மடக்கிளியே'' இவ்வடைமொழிகளின் மூலம் பறவை களின் சில இயல்புகள் புலப்படுத்தப் பட்டுள்ளன. அவை, வண்டு பாடுவது. குருகு உப்பங்கழியில் வாழ்வது. வாரணம் சிவந்த கொண்டையினை உடையது. நாரை சிவந்த கால்களை உடையது. கபோதம் பவளம் போன்ற கால்களைப் பெற்றவை. அன்றில்கள் பெண்ணையின் குரும்பை களில் வாழ்வன. அழகான வாயினை உடையன பூவை. கொளுத்த கொள்ளும் தன்மையுடையன கிளிகள்.

திருநனிபள்ளித் தலம் வறண்ட பகுதி. இதனைத் தனது திருப்பதிகத்தால் ''நன்செய்யாக'' மாற்றியுள்ளார் ஞானசம்பந்தர்.

அவர் பாடிய பதிகம், ''காரைகள் கூகை முல்லை'' எனத் தொடங்குவது. இதில் தேரை, வாளை, நாரை, ஆரல், அன்னம், வண்டு, குயில், குருங்குரங்கு, மந்தி எனப் பலவற்றினது செயல்களை மிக எழிலோடு குறிப்பிட்டுள்ளார். அவரது பாடல் வரிகள் பின்வருமாறு,

''தேரைக ளாரை சாயமிதி கொள்ள வாளை குதிகொள்ள வள்ளை துவள
நாரைக ளாரல்வாரி வயன்மேதி வைகும் நனிபள்ளி''

''மடையிடை வாளைபாய முகிழ்வாய் நெரிந்து மணநாறு நீலம் மலரும்
நடையுடை யன்னம்வைகு புனலம் படப்பை நனிபள்ளி''

''குளிர்தரு கொம்மலொடு குயில்பாடல் கேட்ட பெடை வண்டு தானும் முரல
நளிர்தரு சோலை மாலை நரைகுருகு வைகு நனிபள்ளி''

''ஊகமொ டாடுமந்தி யுகளுஞ் சிலம்ப''.

வண்டு

தேனினையே உண்டு வாழும் இனம் வண்டு. இவ்வண்டினை, அரி, அளி, அறுபதம், கமுது, சுரும்பு, தும்பி, தேன் எனப் பல பெயர்களால் அழைப்பர்.

சங்கத் தலைவி தனது காதலன் கால் சுவட்டின் மீது தனது கால் வைத்து நடப்பாள். இதனை, ''வில்லோன் காலன கழலே தொடியோள், மெல்லடி மேலவுஞ் சிலம்பே'' என்கிறது. காப்பியம் சற்று உயர்த்தி அவளது பாதத்தை ''என்னோடு போந்த இளங்கொடிதன், வண்ணச்சீரடி மண்மகள் அறியாள்'' என்கிறது.

ஆற்றுநீர் தனது காதலன் வாழும் ஊரதுமலையிலிருந்து வருவதால். அவ்வாற்று நீரையே காதலனாகக் கருதித் தழுவுகிறாள். இக்காட்சி களைச் சம்பந்தர் சற்று மாறுபட்ட கோணத்தில் கண்டுள்ளார்.

''மாதர்வண் டுதன்கா தல்வண்டா டியபுன்னைத்
தாதுகண் டுபொழில் மறைந்தூடு சாய்க்காடே''

என்பது அவரது கற்பனை.

அஃறிணை 'வண்டு'. தனது காதலன் ஆடியமையால் வீழ்ந்த ''தாது''வினைக் காண்கிறது. சோலையெல்லாம் புகுந்து தன் காதலனைத் தேடுகிறது. இங்கு ''தாதுவில்'' காதலனின் அடையாளம் இருந்துள்ளமை புலனாகிறது.

திருப்புகலியில் வயல்களில் நறவுண்ட வண்டினங்கள் இசையாடு கின்றன. இவ்விசைப் பாட்டினையே வாழ்ந்தாகக் கொண்டு அவ்வூர்ப்

பெண்கள் வேணுபுரத்திறைவனை வழிபடுகின்றனராம். இது அருமையான கற்பனை நயம்.

இங்கு வண்டுகள் பாடும் பண் வழிபாட்டுக்குரிய பாடல்களாக உருவகப்படுத்தப் பட்டுள்ளது. இவ்வண்டுகளின் இசைக்கு உகந்து திருப்பைஞ்ஞீலி இறைவனே நடனம் புரிகிறார் என்கிறார் ஞானசம்பந்தர்.

''கோடல்கள் புறவணி கொல்லை முல்லைமேல்
பாடல்வண் டிசைமுரல பயில்பைஞ் ஞீலியார்
பேடலர் ஆணலர் பெண்ணும் அல்லதோர்
ஆடலை யுகந்தஎம் அடிகள் அல்லரே''

என்பது அவரது பாடல். திருச்சிராப்பள்ளியில் உள்ள சுனைகளைத் தங்குமிடமாகக் கொண்ட வண்டுகளும், தும்பிகளும் சிறகுகளை விரித்து மகிழ்ந்து இசை பாடுகின்றனவாம்.

மீன்

நீரில் வாழக்கூடியது. இவை எண்ணற்ற வகையினவாகும். இவற்றுள் ஆரய், இறால், கண்டல், கயல், கெண்டை, கெளிறு, சுறா, சேல், மகரமீன், வரால், வாளை முதலியவற்றினைப் பாடியுள்ளார் ஞானசம்பந்தர்.

திருமுல்லைவாயில் என்ற தலத்தில் வயல்களில் நெற்கதிர்கள் முற்றி நிற்கின்றன. இவற்றினூடே நீலமலர்கள் மலர்ந்து நிறைந்து காணப்படுகின்றன. இக்காட்சியினைக் கண்ட இளம்பிள்ளை ஞானசம்பந்தர்,

''காலாடு நீல மலர்துன்றி நின்ற கதிரேறு செந்நெல் வயலில்
சேலோடு வாளை குதிகொள்ள மல்கு திருமுல்லை வாயில்''

எனப் பாடியுள்ளார்.

திருக்கலிக்காமூரில், ''கடலின் ஓதம் வீசும் காட்டிலுள்ள கழிகளில் உள்ள மரங்களின் நிழலில் கண்டல்கள் வாழும் என்கிறார். இதன்மூலம் மீன்கள் அதிக வெப்பத்தைத் தாங்க மாட்டா என்பது புலனாகிறது.

தென்குடித் திட்டைப் பதிகத்தில் கயல், வரால், சேல் என்ற மூன்று வகையான மீன்களைக் குறிப்பிட்டுள்ளார்.

குரங்கு

குரங்கு மனிதர்களோடு நெருங்கிப் பழகும். செம்முகமந்தி விளையாட்டுத் தன்மை கொண்டது. திருச்சிராப்பள்ளியில் உள்ள குன்றுகள் மீது வாழும் குரங்குகளில் காதல் வாழ்வைக்

''கைம்மக ஏந்திக் கடுவனோடூடிக் கழைபாய்வன்
செம்முகமந்தி கருவரை யேறுஞ் சிராப்பள்ளி'',

எனக் குறிப்பிட்டுள்ளார் ஞானசம்பந்தர்.

''குழந்தையைக் கையில் ஏந்திய பெண்குரங்கு தனது கணவனோடு ஊடிக் கொண்டு மூங்கில் மேல் தாவி மலையின் மீது ஏறுகிறது''. இங்கு காதல் வாழ்வில் ஊடல் காட்டப்பட்டுள்ளது.

குரங்குக் கூட்டங்கள் பொழிலில் கிடைத்த கனிகளை உண்ட பின் நீர் நிறைந்த வயல்களில் விளையாடுகின்றனவாம். இதனை,

''குரக்கினம் விரைப் பொழிலின் மிகு கனியுண்டு
பரக்குறு புனற்செய் விளையாடு பழுவூரே''

எனக் குறிப்பிட்டுள்ளார் சம்பந்தர். மந்திகள் கனியுண்டு மகிழ்ந்ததை நக்கீரர்,

''மந்தி இனங்கள் வன்பலவின் ஒண்சுளைக்கதை
முந்திப் பறித்த முறியதனுள் - சிந்திப்போய்த்
தேனாறு பாயுஞ்சீர் ஈங்கோய் மலை''

எனப் புகன்றுள்ளார். குரங்குகள் நீர்வீழ்ச்சிகள், ஆறுகள் உள்ள பகுதியில் தான் அதிகம் வாழ்கின்றன. திருவையாறு இயற்கை வளம் மிகுந்த தலம். இங்கு பெண்கள் நடனமாடுகிறார்கள். நடனத்திற்கு முழவோசை எழுப்பப்படுகிறது. இதனைக் கேட்டஞ்சிய மந்திகள் 'அலமந்து' மரத்தின் உச்சிக்குச் சென்று மழை வருமா? என மேகத்தைப் பார்க்கின்றன என்கிறார்.

''வலம்வந்த மடவார்கள் நடமாட முழவதிர மழையென்றஞ்சி
சிலமந்தி யலமந்து மரமேறி முகில்பார்க்கும் திருவையாறே''

என்பது அவரது வாக்கு.

இங்கு மந்திகளின் ஏமாந்த தன்மை - அதாவது ஒன்றினை மற்றொன்றாக எண்ணிய நிலை காட்டப்பட்டுள்ளது. இது அருமையான கற்பனையாகும். நக்கீரர் இக்குரங்குகளின் ஏமாறும் தன்மையினை,

''வழகிதழ்க் காந்தள்மேல் வண்டிருப்ப ஒண்தீ
முழுகியதென் றஞ்சிமுது மந்தி - பழகி
எழுந்தெழுந்து கைநெரிக்கும் ஈங்கோய்மலை''

எனக் குறிப்பிட்டுள்ளார்.

எண்ணற்ற உயிரினங்களை ஞானசம்பந்தர் பாடியுள்ளார். எனினும் விரிவு கருதி பறவைகள் - மீன்கள் - குரங்குகள் பற்றிய செய்திகள் மட்டும் எடுத்துக் கூறப்பட்டுள்ளன.

45. "திருவீழிமிழலையில் அற்புதம்"

வெ. செல்வசுப்பிரமணியன், கோவை.

"கரிதா கியநஞ் சணிகண்டன்
வரிதா கியவண் டறைகொன்றை
விரிதா பொழில்வீ ழிம்மிழலை
உரிதா நினைவா ருயர் வாரே"

சோழவள நாட்டில் காவிரித் தென்கரைப் புனிதத் தலங்களுள் திருவீழிமிழலை என்னும் சிவத்தலம் மிகவும் புனிதமானது. திருஞான சம்பந்தரும், திருநாவுக்கரசரும் பல திருத்தலங்களுக்குச் சென்று பின்னர் திருவீழிமிழலையை அடைந்தனர். அங்கு வீற்றிருக்கும் வீழியழகேசரால் பல அற்புதங்களை நிகழ்த்தினர். திருவீழிமிழலையில் திருமால் சிவனுக்குக் கண்ணை இடந்து சாத்தி வழிபட்டமையையும், திருவீழிமிழலை இறைவர் திருஞானசம்பந்தருக்குச் சீர்காழித் தோணியப்பராகக் காட்சியளித்ததையும், திருவீழிமிழலையில் பஞ்சம் ஏற்பட்டபோது அங்குள்ள மக்களுக்கு இறைவன் அருளால் காசினைப் பெற்றுத் துயர் தீர்த்தமையையும் ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

திருவீழிமிழலையின் பெருமைகள்

திருக்காளத்தி என்னும் திருத்தலத்தில் திண்ணனார் என்னும் வேடர், தம் கண்ணை இடந்து இறைவனுக்கு அப்பிக் கண்ணப்பரானதால் அத்தலம் புனிதம் பெற்று விளங்கியது போன்று திருவீழிமிழலைத் தலத்தில் தாமரைக் கண்ணராகிய திருமால் தமது கண்ணைப் பறித்து இறைவனுக்கு மலராக இட்டு அர்ச்சித்துப் பேறு பெற்று விளங்கியதால் இத்தலம் மிகவும் புனிதம் பெற்று விளங்கியது. திருஞானசம்பந்தரும், திருநாவுக்கரசரும் திருவீழிமிழலைக்கு வந்தவுடன் அவ்வூரில் உள்ள மறையவர்கள் எதிர் கொண்டழைத்தனர். திருஞானசம்பந்தர் திருவீழிமிழலையை,

"கருப்பமிகு முடலடர்த்துக் காலூன்றிக்
கைமறித்துக் கயிலையென்னும்
பொருப்பெடுக்க லறுமரக்கன் பொன்முடிதோள்
நெரித்தவிரற் புனிதர் கோயில்
தருப்பமிகு சலந்தரன்ற னுடறடிந்த
சக்கரத்தை வேண்டியீண்டு

விருப்பொடுமால் வழிபாடு செய்யவிழி
விமானஞ்சேர் மிழலையாமே"

எனப் பாடிப் பரவுவார்.

திருமால் வழிபட்ட திருவீழிமிழலை

சலந்தரனைச் சங்கரிப்பதற்காகத் திருமாலுக்குச் சக்கரப்படை தேவையாக இருந்தது. அதனால் திருமால் சக்கரம் பெறவேண்டி இத்தலத்திற்கு வந்து சிவபெருமானை அணுகினார்; ஆயிரம் தாமரை மலர்களைக் கொண்டு சிவபெருமானை அர்ச்சித்தால் எண்ணியது கிட்டும் என்று உணர்ந்து, ஆயிரம் தாமரை மலர்களைக் கொண்டு அர்ச்சிக்கத் தொடங்கினார். தொள்ளாயிரத்து தொண்ணூற்று ஒன்பது மலர்களால் அர்ச்சனை முடிந்தது. அர்ச்சனைக்கு ஒரு மலர் குறைந்தமையால் திருமால் தமது கண்களைத் தாமரை மலர்கள் எனக் கருதி, ஒரு கண்ணை இடந்து இறைவனுக்குச் சாத்தி அர்ச்சித்துச் சக்கரத்தைப் பெற்றார். இதை நாவுக்கரசர்,

"நீற்றினை நிறையப்பூசி நித்தலா யிரம்பூக் கொண்டு
ஏற்றுழி யொருநாளொன்று குறையக் கண்ணிறையவிட்ட
ஆற்றலுக் காழிநல்கி யவன் கொணர்ந் திழிச்சுங்கோயில்
வீற்றிருந் தளிப்பர்வீழி மிழலையுள் விகிர்தனாரே"

என்று போற்றிப் பரவுவார். இதையே மணிவாசகப் பெருமானும் திருவாசகத்தில்,

"சலமுடைய சலந்தரன்தன் உடல்தடிந்த நல்லாழி
நலமுடைய நாரணற்கன் றருளியவா றென்னேடீ
நலமுடைய நாரணன்தன் நயனமிடந் தரனடிக்கீழ்
அலராக இடஆழி அருளினன் காண் சாழலோ"

எனப் பாடி மகிழ்வார். இவ்வாறு புனித நலத்தால் மிகச் சிறந்து விளங்குகின்ற இத்தலத்தை தேவாரம் அருளிய மூவரும் பதிகங்கள் பாடிப் போற்றி மேலும் புனிதப்படுத்தியுள்ளனர். திருநாவுக்கரசரோ, "திருவீழிமிழலை யானைச் சேராதார் தீ நெறிக்கே சேர்கின்றாரே" என்றும், சுந்தரமூர்த்தி சுவாமிகள், 'தெரிந்த நான்மறையோர்க்கு இடம் ஆய திருமிழலை' என்றும், திருஞானசம்பந்தரோ 'ஆழிபாதி வீழிபாதி' எனக் கூறுவதால் இத்தலத்தின் சிறப்பினை அறிய முடிகின்றது. திருஞானசம்பந்தர்,

"விண்ணழி விமானம் உடை
விண்ணவர் பிரான் மருவு வீழி நகரே"

என்று விமானத்தைக் குறிப்பிடுவார். நாவுக்கரசரோ,

"அடியார்க்கு என்றும் வேலையின் அமுதர் வீழிமிழலையுள்
விகிர்தனாரே"

என்று சிவபெருமானையும்,

''வேயத் தொழிலார் மிழலை''

என்று தலத்தைப் பாராட்டுவார். திருஞானசம்பந்தர் மேலும்,

''வென்றிசேர் கொடுமுடி மாமதில்
மிழலை மாநகர் மேவி நாடொறும்
நின்ற ஆதிதன் அடி நினைப்பவர்
துன்ப மொன்றிலரே''

என்றும்

''மிழலை மாநகர்ச் சேருமீசனைச் சிந்தை
செய்பவர் தீவினை கெடுமே''

என்று கூறுவதாலும் அறியலாம்.

திருவிசைப்பா ஆசிரியராகிய சேந்தனார்,

''திருவீழி மிழலை வீற்றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டு கண்டு உள்ளம்
குளிர என் கண் குளிர்ந்தனவே''

எனப் பாடுவதாலும் திருவீழிமிழலையின் மாண்பினை அறிய முடிகின்றது.

திருவீழிமிழலையில் சிவபெருமான் காத்யாயன முனிவரின் அருந்தவப் புதல்வியாக அவதரித்து காத்யாயனி என்னும் பெயருடன் விளங்கிய உமாதேவியாரைத் திருமணம் செய்து கொண்டருளியதால் இத்தலத்தின் புனிதச் சிறப்பினை உணர முடிகின்றது. இத்திருக்கோயிலில் எழுந்தருளியிருக்கின்ற இறைவர் நேத்திர ஈசுவரர், வீழியழகேசர் என்ற பெயர்களால் அழைக்கப் பெறுகின்றார். இறைவியின் பெயர் சுந்தர குசாம்பிகை என்பது. நேத்திரம் என்பது கண்ணைக் குறிக்கும். நேத்திரத்தை அர்ப்பணம் செய்தவர் திருமால். இவ்வாறு செய்த திருமாலுக்கு இங்குச் சிறப்போ, புகழோ இல்லை. நேத்திரத்தை மலராக ஏற்றுக் கொண்ட இறைவனுக்குத் தான் சிறப்பும் பெருமையும். இத்திருக்கோயிலில் உள்ள இராஜகோபுரத்தை விடக் கருவறை மீது உள்ள விமானமே சிறப்புடையது. இந்த விமானம் விண்ணிழி விமானம், திருமாலினால் வைகுந்தத்திலிருந்து கொண்டு வரப்பட்டது. மேலும் இத்தலத்தில் வீழிக் கொடிகள் மிகவும் அதிகம். எனவே கொடியின் பெயரையும் சேர்த்து 'வீழிமிழலை' என்று வழங்கி வருகிறது.

வீழியழகேசர் தோணியப்பராகக் காட்சியருளல்

திருஞானசம்பந்தர் திருவீழிமிழலையில் தங்கியிருக்கும் பொழுது அவரைக் காண விரும்பிய நகர மாந்தர்கள் திருவீழிமிழலைக்கு வந்து தொழுது திருஞானசம்பந்தரைச் சீர்காழிக்கு வருமாறு அழைத்தனர்.

அவர்களது விருப்பத்தினை உணர்ந்த சம்பந்தர் ''இன்று கழிந்து நாளை வீழிமிழலையிறைவர் அருள் பெற்றுப் புறப்படுவோம்'' எனக் கூறி அன்றிரவு துயிலமர்ந்தார். அந்நிலையில் திருவீழிமிழலைப் பெருமான் திருஞானசம்பந்தர் கனவில் தோன்றி, 'யான் தோணியிலமர்ந்த வண்ணத்தை நீ இன்று திருவீழிமிழலையில் காண்பாய்' என அருள் செய்து மறைந்தனர். விழித்த பின்னர் கைகளைத் தலைமேல் குவித்து திருவீழிமிழலைத் திருக்கோயிலுனுட் புகுந்து விண்ணிழி விமானத்தின் கண்ணே தோணிபுரத் திருக்கோலத்தைக் கண்டார். இதைச் சேக்கிழார் பெருமான்,

''மறியுற்ற கையரைத் தோணி மேல்முன்
வணங்கும்படி அங்குக் கண்டு வாழ்ந்து
குறியிற் பெருகுந் திருப்பதிகங் குலவிய
கொள்கையிற் பாடுகின்றார்''

என விளக்குவார்.

திருஞானசம்பந்தர் 'மைம்மரு பூங்குழல்' என்ற திருப்பதிகத்தைப் பாடினார். இத்திருப்பதிகத்தின் பாடல்தோறும் 'புகலி நிலாவிய புண்ணியனே, மிழலை விண்ணழி கோயில் விரும்பியது என்கொல் சொல்லாய்' எனப் பாடிப் போற்றுவதுடன், ஒன்பதாம் திருப்பாடலில் ''எறிமழுவோ டிளமான் கையின்றி யிருந்த பிரான் இதுவென் கொல் சொல்லாய்'' என வரும் தொடரால் மானும் மழுவுங் கைக் கொள்ளாது வீற்றிருந்தருளும் தோணியப்பரது திருவுருவத்தை வெளியிட்டருளிய திறம் உள்ளம் கவரத்தக்கது.

திருவீழிமிழலையில் பஞ்சம்

திருஞானசம்பந்தரும், திருநாவுக்கரசரும் திருவீழிமிழலையில் தங்கியிருந்தபோது அங்கு மழையின்மையால் பஞ்சமுண்டாயிற்று. உயிர்கள் எல்லாம் பசியால் வருத்தமுற்றன. அச்சமயம் திருஞானசம்பந்தரும், திருநாவுக்கரசரும், 'கண்ணுதலோன் திருநீற்றுச் சார்வினோர்க்குங் கவலை வருமோ' எனக் கருத்திற்கொண்டு சிவபெருமானது திருப்பாதங் களைச் சிந்தித்து இரவில் துயில் கொண்டனர். திருவீழிமிழலை இறைவர் இருவரது கனவிலும் தோன்றி உங்களை வழிபடுகின்ற அடியார்களது வருத்தத்தை நீக்கும் பொருட்டு இத்திருக்கோயிலின் கிழக்குப் பீடத்திலும், மேற்குப் பீடத்திலும் ஒவ்வொரு காசு நுமக்குத் தருகின்றோம். பஞ்சம் நீங்கியபின் அக்காசும் தவிர்வதாகும் என்று சொல்லி மறைந்தருளினார்.

''கால நிலைமையால் உங்கள்
கருத்தில் வாட்டமுற்றீர் எனினும்

ஏல உம்மை வழிபடுவார்க்(கு)
அளிக்க அளிக்கின்றோம்''

என்று அருளிச் செய்தார். இறைவன் திருவருட்படி, இத்தலத்தில் உள்ள படிக்காசுப் பிள்ளையார் கிழக்குப் பீடத்தில் ஒரு காசையும், மேற்குப் பீடத்தில் ஒரு காசையும் வைத்து விட்டு, மேற்குப் பீடத்தின் அருகில் அமர்ந்து கொண்டார். மறுநாள் காலை பலி பீடங்களில் படிக்காசுகள் இருப்பதை அறிந்து திருஞானசம்பந்தரும் திருநாவுக்கரசரும் ஆளுக் கொன்றாக எடுத்து வந்தனர். திருநாவுக்கரசர் மேற்குப் பீடத்தில் வைக்கப்பட்டிருந்த காசினையெடுத்துச் சிவனடியார்களுக்கு நாள்தோறும் திருவமுது அளித்து வந்தார். திருநாவுக்கரசரது திருமடத்திலுள்ள அடியார்கள் காலம் பெற அமுது செய்தனர். திருஞானசம்பந்தரது மடத்திலுள்ள அடியார்கள் அமுது செய்வதற்குக் காலம் தாழ்ந்தது.

திருஞானசம்பந்தர் அடியவர்களிடம் இதன் காரணம் என்ன என்று வினாவினார். அடியார்கள் திருஞானசம்பந்தரிடம், தாங்கள் இறைவன் பாற்பெறும் படிக்காசைப் பெற்றுப் பண்டம் வாங்குவதற்குக் கொண்டு சென்றால் அதற்கு வட்டம் கேட்கிறார்கள். திருநாவுக்கரசர் பெற்ற காசை வட்டமின்றி ஏற்றுக் கொள்கிறார்கள். இதுவே காலந் தாழ்த்துவதற்குக் காரணம் எனக் கூறினர். இதையறிந்த திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் உழவாரத் தொண்டு செய்ததால் அவர் பெறுங்காசு வட்டமின்றி ஏற்றுக் கொள்ளப் பெறுகிறது என்று சிந்தித்து, 'இனிவரும் நாட்களிலே தருங்காசு வாசி தீரும்படி இறைவனைப் பாடிப் போற்றுவேன்' என திருவுளங் கொண்டார். திருவீழிமிழலை இறைவனைப் பணிந்து,

''வாசி தீரவே காசு நல்குவீர்
மாசின் மிழலையீர், ஏசலில்லையே
இறைவ ராயினீர் மறைகொண் மிழலையீர்
கறைகொள் காசினை, முறைமை நல்குமே''

என்னும் திருப்பதிகத்தைப் பாடி, வாசியில்லாத நல்ல காசினைப் பெற்றார். அதனைப் பெற்ற அடியார்கள் பண்டம் வாங்குவதற்குச் சென்று கொடுத்தபோது வணிகர்கள் இக்காசு மிக நன்று வேண்டுவன தருவோம்' எனச் சொல்லி உணவுப் பொருளைத் தந்தார்கள். அன்று முதல் திருஞானசம்பந்தர் திருமடத்திலும் அடியார்கள் அமுது செய்தனர். மழை பெய்து நெல் முதலிய தானியங்கள் நிறைய விளைந்தமையால் உயிர்களெல்லாம் துன்பம் நீங்கி இன்புற்றன.

''அறிவினான் ஆகுவது உண்டோ பிறிதின்நோய்
தந்நோய்போல் போற்றாக் கடை''

என்ற குறளிற்கு எடுத்துக் காட்டாய் இருந்தனர் நம் சமயச் சான்றோ ராகிய திருஞானசம்பந்தரும், திருநாவுக்கரசரும்.

திருஞானசம்பந்தர் திருவீழிமிழலை இறைவனை நோக்கி, 'வாசி தீரவே காசு நல்குவீர்' என வெளிப்படையாக வேண்டுதலால், இத்திருப்பதிகம் திருஞானசம்பந்தர் பெற்ற படிக்காசின் வட்டந் தீர்தற் பொருட்டு அருளிச் செய்யப் பெற்றதென்பது நன்கு விளங்கும். திருநாவுக்கரசர் திருஞானசம்பந்தரைக் குறித்துப் பேசும் நிலையில்,

"பாடிப் பெற்ற பரிசில் பழங்காசு
வாடி வாட்டந் தவிர்ப்பார்"

எனப் புகழ்ந்து போற்றுவார்.

நம்பியாரூரர் அருள் வேண்டல்

திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் போன்றோரின் பேரருட் செயலை அறிந்தார் நம்பியாரூரர். திருவீழிமிழலை இறைவனிடம், திருநாவுக்கரசரும், திருஞானசம்பந்தரும் பாடிய இன்னிசைத் தமிழ்ப் பாடல்களை நீவீர் இருந்த இடத்திலேயே அமர்ந்து கேட்க வேண்டும் என்னும் விருப்பத்தால் படிக்காசு நல்கினீர். அவர்கள் பாமாலைளை ஏத்தி வணங்கும் அடியேனுக்கும் அருள் புரிய வேண்டும்.

"பரந்த பாரிட மூரிடைப்பலி பற்றிப் பார்த்துணுஞ் சுற்றமாயினீர்
தெரிந்த நான் மறையோர்க் கிடமாய திருமிழலை
இருந்து நீர் தமிழோடிசை கேட்கும் இச்சையாற் காசுநித்தல் நல்கினீர்
அருந்தண் வீழி கொண்டீர் அடியேற்கும் அருளுதீரே"

என வீழிமிழலைப் பெருமானைப் பாடிப் போற்றியுள்ளார்.

இவ்வாறு திருஞானசம்பந்தரும், திருநாவுக்கரசரும் திருவீழி மிழலையில் இறைவன் அளித்த படிக்காசினைக் கொண்டு பசியால் வருந்திய எல்லோர்க்கும் அமுதளித்துத் துயர்கூர் வறுமை துடைத்தருளிய திருவருட் பண்பினால் தான் இவ்வுலகம் நிலைபெறுவதாயிற்று என்ற உண்மையினை,

"பாடிய செந்தமிழாற் பழங்காசு பரிசில் பெற்ற
நீடிய சீர்த்திரு ஞான சம்பந்தன் நிறை புகழான்
நேடிய பூந்திரு நாவுக்கரசோ டெழின் மிழலைக்
கூடிய கூட்டத்தினா லுளதாய்த்திக் குவலயமே"

என்ற பாடலால் நம்பியாண்டார் நம்பி அறிவுறுத்திய திறம் நினைந்து மகிழத் தக்கதாகும்.

46. திருவெழுகூற்றிருக்கை - பொருள் புலப்பாடு

ஐ. செல்வராஜ், கோவை.

பட்டினத்துப் பிள்ளையார் திருவிடைமருதூர் மும்மணிக் கோவையில் தேவாரம் பாடிய திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் ஆகிய மூவரை ''வித்தகப் பாடல் முத்திறத் தடியார்'' (20 : 30) என விதந்தோது கின்றார். அம்மூவருள் திருஞானசம்பந்தர் பாடிய பல பதிகங்களைச் சேக்கிழார் மூல இலக்கியம் எனப் போற்றுகின்றார்.

செந்தமிழ் மாலை விகற்பச் செய்யுட்க ளான்மொழி மாற்றம்
வந்த சொற்சீர் மாலைமாற்றம் வழிமொழி எல்லா மடக்கும்
சந்த வியமகம் ஏகபாதம் தமிழ்இருக் குறள் சாத்தி
எந்தைக் கெழுகூற் றிருக்கை ஈரடி ஈரடி வைப்பு
நாலடி மேல் வைப்பு மேன்மை நடையின் முடுகுமிராகம்
சால்பினில் சக்கரம் ஆதி விகற்பங்கள் சாற்றும் பதிகம்
மூல இலக்கியமாக எல்லாப் பொருள்களும் முற்ற
ஞாலத் துயர் காழியாரைப் பாடினார் ஞானசம் பந்தர்.

என்னும் பெரியபுராணம் (276, 277), பாடல்களில் கூறப்பெறும் 1. மொழிமாற்று, 2. மாலைமாற்று, 3. வழிமொழி, 4. இயமகம், 5. ஏகபாதம், 6. இருக்குறள், 7. எழுகூற்றிருக்கை, 8. ஈரடி, 9. ஈரடிவைப்பு, 10. நாலடி மேல்வைப்பு, 11. திருவிராகம், 12. திருச்சக்கரமாற்று என்பன மூல இலக்கியங்களாகக் கொள்ளத் தக்கன. ஆதி விகற்பங்கள் என்றமையால் கோமூத்திரி முதலியவற்றையும் சேர்த்துக் கொள்ளலாம். இவற்றுள் சில பிற்காலத்தில் பாடப்பெற்ற பாடல்களுக்கு மூல இலக்கியமாய் விளங்கின என்பது குறிப்பிடத் தக்கதாகும்.

திருவெழுகூற்றிருக்கை

சிவபாதவிருதயர் தமது பூசைக் காலத்துத் தினந்தோறும் புத்தி முத்திகளைத் தரவல்ல திருஞானசம்பந்தரது திருப்பதிகங்களை ஓதும் முறைமை உடையவராய் இருந்தார். திருப்பதிகங்கள் நாளும் பெருகி வளர்ந்த காரணத்தால் சிவபாதவிருதயருக்கு அவற்றை ஓதி முற்றுப் பெறுதல் அரிதாய் அமைந்தது. இதனை அறிந்த திருஞானசம்பந்தர், இணைக்குறள் ஆசிரியப்பா யாப்பில் 47 அடிகளைக் கொண்ட இத்திருவெழுகூற்றிருக்கையைத் திருவாய் மலர்ந்தருளினார். இதனை

ஓதின் எல்லாப் பதிகங்களையும் ஓதிய பலன் கிடைக்கும் என்று தமது தந்தைக்குக் கூறியருளினார்.

எழுகூற்றிருக்கை என்னும் ஓவியப் பாட்டை முதன் முதலில் பாடியவர் திருஞானசம்பந்தரே. பதினோராம் திருமுறையில் இடம்பெறும் நக்கீரர் இயற்றிய திருவெழுகூற்றிருக்கையும் திருமங்கை ஆழ்வாரின் திருவெழுகூற்றிருக்கையும் இவ்விலக்கிய வகையில் அமைந்த பிற நூல்களாகும்.

எழுகூற்றிருக்கை இலக்கணம்

யாப்பருங்கலமும், தண்டியலங்காரமும் மிகைக்கவிப் பாட்டில் ஒன்றாக எழுகூற்றிருக்கையைக் குறிப்பிடுகின்றன. எழுகூற்றிருக்கை என்பது எண்ணமைத்துப் பாடப்படும் முறையால் பெயர் பெற்றதாகும். ஒன்று என்னும் எண்ணை முதலாகக் கொண்டு தொடங்கிப் படிப்படியே ஒவ்வொன்றாகக் கூட்டியும் அவ்வாறே ஒவ்வொன்றாகக் குறைத்து ஒன்றில் முடியுமாறு பாடப்படுவது. இவ்வாறு ஒன்று முதல் ஏழீறாக எண்ணும் நிலையில் அமைந்த செய்யுள் எழுகூற்றிருக்கை எனப்பெறும்.

கோதில் ஏழறை ஆக்கி குறுமக்கள்
முன்னின்றும் புக்கும் பேர்த்தும் விளையாடும்
பெற்றியால் வழுவாமை ஒன்று
ஏழீறாய் முறையானே
இயம்புவது எழுகூற்றிருக்கை ஆகும். (மு.வீ. யா. கு. 162)

என முத்துவீரியம் எழுகூற்றிருக்கையின் இலக்கணத்தைக் குறிப்பிடு கிறது. இந்நூலிற்குப் பின்னர் வந்த பாட்டியல் நூல்கள் இதன் இலக்கணத்தைக் குறிப்பிடவில்லை.

திருவெழுகூற்றிருக்கை - பொருள் அமைவு

தேவாரத்திற்கும் சிவஞானபோதத்திற்கும் உள்ள தொடர்பை,

வேதம் பசுஅதன்பால் மெய்யாக மம்நால்வர்
ஓதும் தமிழ்அதனின் உள்ளுறுநெய் - போதமிகு
நெய்யின் உறுசுவையாம் நீள்வெண்ணெய் மெய்கண்டான்
செய்த தமிழ்நூலின் திறம்.

என ஒரு பழம்பாடல் அழகுறக் கூறுகின்றது. வேத சிவாகமங்களின் உட்கருத்தை வெண்ணெய் போல் கடைந்தெடுத்துத் தருவது தேவாரம். அவ்வெண்ணெயுள் பொருந்திய சிவஞானத்தை நன்கு உணர்த்துவது சிவஞானபோதம் எனக் கூறுவதிலிருந்து தேவாரத்தின் பிழிவாகச் சிவஞானபோதம் அமைவதை அறியலாம்.

முதல் திருமுறையில் இடம்பெற்றுள்ள திருவெழுகூற்றிருக்கை சிவஞானச் செறிவுமிக்கதாகும். இதனைத் திருஞானசம்பந்தர் ஏழு

கூறுகளாக அமைத்துக் கொள்கிறார். ஒவ்வொரு கூறிலும் ஒன்று என்ற எண்ணை முதலாகக் கொண்டு வரிசையாக உச்ச எண்ணிற்குச் சென்று பின் அங்கிருந்து வரிசையாக ஒன்று என்னும் எண்ணிற்கு இறங்கி முடியுமாறு கருத்துக்களைக் கூறுகிறார். ஆறாவது கூறிலும் ஏழாவது கூறிலும் ஏழு என்ற உச்ச எண் வருமாறு பாடியருளியுள்ளார் என்பது இங்குச் சுட்டத்தக்கதாகும்.

கூறு ஒன்று

ஒன்றிலிருந்து இரண்டிற்கு ஏற்றி பின் ஒன்றிற்கு இறக்கி (121),

ஒருரு ஆயினை மான் ஆங்காரத்து
ஈரியல் பாய்ஒரு...... (1-2)

என முடித்துக் காட்டுகிறார்.

இதனுள் சிவபெருமான் உயிர்கள் பொருட்டு இரக்கம் கொண்டு ஐந்து செயல்களையும் செய்யத் தக்க ஒரு திருமேனியைத் தானே விரும்பி எடுத்துக் கொள்கிறான் எனவும் சக்தியை எழுப்பிக் கொண்டு இரண்டு உருவாகியும், சக்தி சிவம் என இரண்டாகப் பிரித்து அறிய முடியா வண்ணம் ஒன்றாக நின்றான் எனவும் திருஞானசம்பந்தர் கூறுகின்றார்.

கூறு இரண்டு

ஒன்றிலிருந்து வரிசையாய் மூன்றிற்கு ஏற்றிப் பின் அங்கிருந்து முறையே ஒன்றிற்கு இறக்கி (12321),

.... விண்முதல் பூதலம்
ஒன்றிய இருசுடர் உம்பர்கள் பிறவும்
படைத்தளித் தழிப்பமும் மூர்த்திகள் ஆயினை
இருவரோடு ஒருவராகி நின்றனை (2-5)

என முடித்துக் காட்டியுள்ளார்.

விண் முதல் மண் ஈறாக ஐந்து பூதங்களையும் ஞாயிறு திங்கள் என்னும் இரண்டு சுடர்களையும் விண்ணுலகத்தில் உள்ள தேவர் களையும் படைத்துக் காத்து அழித்தற் பொருட்டுப் பிரம்மா, விஷ்ணு, உருத்திரன் என்னும் மும்மூர்த்திகளாக நிற்பவன் சிவபெருமான். அப்பெருமான் தமது இடப்பக்கத்தில் பிரம்மாவையும் வலது பக்கத்தில் விஷ்ணுவையும் தோற்றுவித்து ஒடுக்கிக் கொண்டு ஏகமூர்த்தியாய் எழுந்தருளி நிற்கின்றான் எனத் திருஞானசம்பந்தர் கூறுகின்றார்.

ஆதிசங்கரர், சிவ மகிமையை எடுத்துக்காட்டும் சிவானந்த லஹரியில் விஷ்ணு உயர்ந்த பூசைக்கு உரியவராக விளங்குவதற்குக் காரணம் அவர் சிவனோடு நெருங்கியிருப்பதுதான் எனக் கூறுகின்றார்.

அதனுள் விஷ்ணு சிவன் கையில் அம்பாகவும், சரீரத்தின் பாதியாகவும் இருந்ததைக் குறிப்பிடுகிறார். (தருமை, கனகாபிஷேக விழா மலர், 1961, ப. 179). இதனாலும் விஷ்ணுவைத் தம்முள் அடக்கிக் கொண்டுள்ளார் என்பது பெறப்படுகிறது.

கூறு மூன்று

ஒன்றிலிருந்து நான்கு வரை ஏற்றிப் பின் ஒன்றிற்கு இறக்கி (1234321),

ஓரால் நீழல் ஒண்கழல் இரண்டும்
முப்பொழு தேத்திய நால்வர்க் கொளிநெறி
காட்டினை நாட்டமூன் றாகக் கோட்டினை
இருநதி அரவமோ டொருமதி சூடினை (6-9)

என முடித்துக் காட்டுகிறார்.

கயிலாயத்தில் வேத வடிவமாகிய கல்லால மரத்தின் நிழலில் எழுந்தருளியுள்ள சிவபெருமானது பரஞான வடிவமாகிய இரண்டு திருவடிகளையும் மூன்று காலங்களிலும் தொழுது வணங்கிய சனகர், சனற்குமாரர், சனாதனத்தர், சனந்தர் என்னும் நான்கு முனிவர்களுக்கும் சிவஞான நெறியை உணர்த்தி அருளினான். திருக்கண்கள் மூன்றாகக் கொண்டு புற இருளை ஓட்டினான். பெரிய கங்கை, பாம்பு, ஒரு மதி ஆகியவற்றைச் சூடியருளினான் எனத் திருஞானசம்பந்தர் கூறுகின்றார்.

கூறு நான்கு

ஒன்றிலிருந்து ஐந்து வரை உயர்த்திப் பின் ஒன்று வரை இறக்கி (123454321),

ஒருதாள் ஈரயில் மூவிலைச் சூலம்
நாற்கால் மான்மறி ஐந்தலை அரவம்
ஏந்தினை காய்ந்த நால்வாய் மும்மதத்து
இருகோட் டொருகரி யீடழித் துரித்தனை (10-13)

எனத் திருஞானசம்பந்தர் முடித்துக் காட்டுகின்றார்.

ஒரு தாளையும் ஈருகின்ற கூர்மையையும் மூன்று இலைகளையும் உடைய சூலத்தையும் நான்கு கால்களையுடைய மான் கன்றினையும் ஐந்து தலையினையுடைய பெரிய பாம்பினையும் சிவபெருமான் தமது திருக்கைகளில் தரித்துள்ளான். தன்னிழலைக் காயும் தொங்குகின்ற வாயையும் மும்மதங்களையும் இரண்டு கொம்பினையும் உடைய ஒப்பில்லாத யானையினது வலிமையைக் கெடுத்து அதன் தோலை உரித்துப் போர்த்தியருளினான் என இதனுள் பொருள் அமைவு இடம்பெறுகின்றது.

கூறு ஐந்து

ஒன்றிலிருந்து ஆறு வரை உயர்த்தி பின் ஒன்று வரை இறக்கி (12345654321),

ஒருதனு இருகால் வளைய வாங்கி
முப்புரத் தோடு நானிலம் அஞ்சக்
கொண்டு தலத்துற அவுணரை அறுத்தனை
ஐம்புலன் நாலாம் அந்தக் கரணம்
முக்குணம் இருவளி ஒருங்கிய வானோர்
ஏத்த நின்றனை... (14-19)

என முடித்துக் காட்டுகிறார்.

மேரு மலையாகிய வில்லை இருமுனைகளும் (குதைகளும்) வளையுமாறு வளைத்து முப்புரங்களையும் அவற்றில் வாழும் அரக்கர் களையும் பெரிய பூமியில் உள்ள யாவரும் அஞ்சுமாறு கொன்று ஒருங்கே ஒழித்தருளினான். ஐம்பூதங்களையும் அந்தக் கரணம் நான்கினையும் மூன்று குணங்களையும் இரண்டு வாயையும் செயலற ஒடுக்கி ஒருமைப்பட்ட சித்தம் உடையவராகிய தேவர்கள் புகழுமாறு எழுந்தருளியுள்ளான் என்னும் பொருட்கூறுகள் இடம்பெறுகின்றன.

கூறு ஆறு

திருஞானசம்பந்தர் ஆறாவது கூறில் ஒன்றிலிருந்து எழுவரை ஏற்றிப் பின் ஒன்று முடிய இறக்கிக் (1234567654321) காட்டுகிறார். அவற்றுள்,

ஒருங்கிய மனத்தோடு
இருபிறப் போர்ந்து முப்பொழுது குறைமுடித்து
நான்மறை ஓதி ஐவகை வேள்வி
அமைத்து ஆறங்க முதலெழுத் தோதி
வரன்முறை பயின்றெழு வான்தனை வளர்க்கும்
பிரமபுரம் பேணினை... (19-24)

என உயர் வரிசையில் உயர்த்திக் காட்டுகின்றார்.

மனம் பொருள்களில் சென்று சலியாத ஒருமைப்பட்ட உள்ளத்துடன், தாம் பிறக்கும்போது ஏற்பட்டப் பிறவியும் உபநயன சடங்கின்போது ஏற்பட்ட பிறவியும் ஆகிய இருவகைப் பிறவியையும் ஆராய்ந்து அறிந்து, மூன்று காலங்களிலும் செய்யப்படும் செபம், தர்ப்பணம், அனுட்டானம், ஓமம் என்னும் காரியங்களைச் செய்து முடித்து, நான்கு வேதங்களையும் ஓதி, வேத முதல் வித்தெழுத்தாகிய சமட்டி, வியட்டி, பேதமான பிரணவத்தை உச்சரித்து யாகங்களைச் செய்யும் முறைமையானே

செய்து, எழுந்து பெய்யும் மழையினைக் காலந் தவறாது பெய்விக்கும் திருபிரமபுரத்தின்கண்ணே விரும்பி எழுந்தருளியிருக்கின்றான்.

மேல், ஒன்று முதல் ஏழு வரை உயர்த்திக் காட்டிய திருஞானசம்பந்தர் பின்,

அறுபதம் முரலும் வேணுபுரம் விரும்பினை
இகலிய மைந்துணர் புகலி யமர்ந்தனை
பொங்குநாற் கடல்சூழ் வெங்குரு விளங்கினை
பாணிமூ வுலகும் புதையமேல் மிதந்த
தோணிபுரத் துறைந்தனை தொலையா இருநிதி
வாய்ந்த பூந்தரா யேய்ந்தனை
வரபுர மென்றுணர் சிரபுரத் துறைந்தனை (25-31)

என ஆறிலிருந்து வரிசையாக இறக்கிக் காட்டியுள்ளார்.

ஆறு கால்களையுடைய வண்டுகள் பாடுகின்ற சோலைகள் சூழ்ந்த வேணுபுரத்தை விரும்பி எழுந்தருளியிருக்கின்றார். சூரபதுமன் தேவர் களைப் பகைக்க அவனது வலிமையை உணர்ந்த தேவர்கள் சரணடைந்த புகலியை விரும்பி எழுந்தருளியிருக்கின்றான். கோபித்து மிகவும் பெருகி எழுந்த நான்கு கடல்களும் சூழ்ந்த வெங்குருவைத் திருப்பதியாகக் கொண்டு விளங்குகின்றான். ஊழி வெள்ளத்தில் மூன்று உலகங்களும் அமிழவும், தான் அழுந்தாது அவ்வெள்ளத்தின் மேல் தோணி உருவங் கொண்டு விளங்கினான். ஒரு காலத்தும் கெடாத செல்வம் வாய்ந்த பூந்தராயைப் பொருந்தி வசிக்கின்றான். பூசித்தவர்க்கு வரத்தைத் தருவதாகிய ஒரு நகரமென்று அறியப்பெறும் சிரபுரத்து எழுந்தருளி யிருக்கின்றான் என திருஞானசம்பந்தர் கூறுகின்றார்.

திருஞானசம்பந்தர் எல்லா கூறுகளிலும் ஒன்று என்னும் எண்ணைக் குறிக்கும் சொல்லால் முடித்துக் காட்டியுள்ளார். அதனால் இவண், ''வரபுர மென்றுணர் சிரபுரம்'' என்பதற்குப் பதிலாக ''வரபுர மொன்றுணர் சிரபுரம்'' என்றிருந்திருக்குமோ என்னும் ஐயம் எழுகின்றது.

கூறு ஏழு

திருஞானசம்பந்தர் ஏழாவது கூறில் ஒன்றில் தொடங்கி எழுவரை ஏற்றிப் பின் ஒன்று முடிய இறக்கிக் (1234567654321) காட்டுகிறார். அவற்றுள்,

ஒருமலை எடுத்த இருதிறல் அரக்கன்
விறல்கெடுத் தருளினை புறவம் புரிந்தனை
முந்நீர் துயின்றோன் நான்முகன் அறியாப்
பண்பொடு நின்றனை சண்பை அமர்ந்தனை

ஐயுறும் அமணரும் அறுவகைத் தேரரும்
ஊழியும் உணராக் காழி அமர்ந்தனை
எச்சனே ழிசையோன் கொச்சையை மெச்சினை (32-38)

என ஏழு வரை உயர்த்திக் காட்டுகிறார்.

தனக்கு ஒப்பும் உயர்வும் இன்றி விளங்கும் திருக்கயிலாய மலையினைத் பெயர்த்தெடுத்த மிக்க வலிமையினையுடைய இராவணன் வீரத்தைக் கெடுத்தருளினான். புறவம் என்னும் தலத்தினை விரும்பி அமர்ந்துள்ளான்.

பாற்கடலில் யோக நித்திரை புரிகின்ற விஷ்ணு மூர்த்தியும் நான்கு முகத்தினை உடைய பிரமதேவரும் அறியாத பெருமையினை உடையவராய் இருக்கின்றான். சண்பை என்னும் திருப்பதியை விரும்பி இருக்கின்றான்.

ஐய உணர்வுடைய சமணர்களும் சூனியம் கூறுகின்ற புத்தர்களும் தமது மயக்க அறிவால் யாண்டும் அறிய இயலாத சீர்காழியை விரும்பி அமர்ந்துள்ளான். சிவஞானபோதம் முதல் நூற்பா இரண்டாம் அதிகரணத்தில்,

''ஐயத்தின் நீங்கித் தெளிந்தார்க்கு வையத்தின்
வானம் நணிய துடைத்து'' (திருநெறியுரை - ப.71)

என்பதனால் சமணர் கூறும் சமுச்சய (ஐய) ஞானம் வீடு பயவாது என மறுத்துரைக்கப்படுகிறது.

வேள்வி உருவனாயும் ஏழிசை உருவனாயும் கொச்சையத்தைத் திருப்பதியாக உகந்தருளியுள்ளான் எனத் திருஞானசம்பந்தர் ஏழு என்னும் எண் வரை உயர்த்திக் கருத்துக்களை அமைத்துக் கொள்கிறார்.

ஏழு வரை உயர்த்திக் கூறிய திருஞானசம்பந்தர் பின்பு,

ஆறு பதமும் ஐந்தமர் கல்வியும்
மறைமுதல் நான்கும்
மூன்று காலமும் தோன்றி நின்றனை
இருமையின் ஒருமையும் ஒருமையின் பெருமையும்
மறுவிலா மறையோர்
கழுமல முதுபதிக் கவுணியன் அறியும்
அனைய தன்மையை ஆதலின் நின்னை
நினைய வல்லவர் இல்லைநீள் நிலத்தே. (39-47)

என ஒன்று என்னும் எண்ணில் முடியுமாறு முடித்தருளுகின்றார்.

பிரத்தி, பிரத்தியாகாரம், துல்லியம், துல்லியாதீதம், வித்தை, அவித்தை என்னும் ஆறு பதங்களும் ஆசு, மதுரம், சித்திரம், வித்தாரம், விரையம்

என்கின்ற ஐந்து விதமான கல்வியும் முதன்மையாகிய நான்கு வேதங்களும் இறப்பு, நிகழ்வு, எதிர்வு என்னும் மூன்று காலமும் தோன்றுவதற்கு ஏதுவாகி நிற்கின்றான்.

உயிர்களோடு கலந்து அத்துவிதமாயும் எல்லாம் தன்னுள் அடங்கிய எல்லையில்லாத ஒரே சிவமாயும் நிற்கின்றான்.

வேதங்களைக் குற்றமில்லாது அறிந்த அந்தணர் குலத்தில் தோன்றியவரும், அனாதி நித்திய சிவத்தன்மை அடைந்த கவுணிய கோத்திரத்திலே தோன்றியவருமாகிய திருஞானசம்பந்தன் உரைத்த, ஆன்மாக்களுக்கு உறுதி பயக்கும் இத்திருவெழுகூற்றிருக்கைத் திருப்பதிகத்தைக் கழுமலம் என்னும் பழைய திருப்பதியை விரும்பி எழுந்தருளியிருக்கின்ற தலைக்கலத்து உண்ணுகின்ற சிவபெருமானே அறிந்துகொண்டு அருள்வான். அப்படிப்பட்ட பெற்றியை உடையவன் சிவன். ஆகையால் சிவபெருமானை எண்ணியேத்த வல்லவர் பெரிய உலகில் இல்லாதவராவர்.

இரதபந்த முகடு

மேற்காண் ஏழு கூறுகளில் ஆறாவது கூறிலும் ஏழாவது கூறிலும் வரும் எண்ணமைப்புகள் ஒரே வடிவ அமைப்பாக உள்ளதால் அவற்றை ஒரு கூறுபோல் கொண்டு பின்வரும் சித்திரக் கவி வடிவிற்குள் அடக்கிக் கொள்ளப்படுகின்றது.

						7						
					6	6	6					
				5	5	5	5	5				
			4	4	4	4	4	4	4			
		3	3	3	3	3	3	3	3	3		
	2	2	2	2	2	2	2	2	2	2	2	
1	1	1	1	1	1	பரம்1	1	1	1	1	1	1

சொரூப நிலையில் உள்ள பரம்பொருளே தடத்த நிலையினை மேற்கொள்கிறது. அதனால் பரம்பொருளை மையத்திலுள்ள ஒன்று எனக் கொள்ளப்படுகிறது. பரமாகிய ஒன்றுடன் இருமருங்கும் உள்ள ஒன்று என்னும் எண்களைத் தனித்தனியே எண்ணிப் பெருக்கின் பின்வரும் கணித அட்டவணையைப் பெறலாம். அவ்வட்டவணையில்

உள்ள பெருக்குத் தொகை எண்களும் இரத முகட்டு வடிவ அமைப்பு எண்களும் ஒத்துள்ளதை அறியலாம்.

1x1=	1	(பரம்)
11x11=	121	(முதல் கூறு)
111x111=	12321	(இரண்டாம் கூறு)
1111x1111=	1234321	(மூன்றாம் கூறு)
11111x11111=	123454321	(நான்காம் கூறு)
111111x111111=	12345654321	(ஐந்தாம் கூறு)
1111111x1111111=	1234567654321	(ஆறு+ஏழாம் கூறு)

ஒவ்வொரு கூறின் ஏற்ற இறக்கங்களைச் சித்திரக் கவிக்குள் அடக்கிக் காணுகின்றபோது இரதபந்தத்தின் முகட்டு அமைப்பினைப் பெறமுடிகின்றது. எனவே திருவெழுகூற்றிருக்கை என்னும் இவ்விலக்கியம் சித்திரக் கவிவகையில் அமையும் இரதபந்த வகையைச் சார்ந்தது எனலாம்.

பன்னிரு திருநாமங்கள்

திருஞானசம்பந்தர் தாம் பாடிய திருவெழுகூற்றிருக்கையில் சீர்காழியின் பன்னிரு திருநாமங்களையும் அவற்றுடன் சிவபெருமானுக்குரிய தொடர்பினையும் 1. பிரமபுரம் பேணினை, 2. வேணுபுரம் விரும்பினை, 3. புகலியர்ந்தனை, 4. வெங்குரு விளங்கினை, 5. தோணிபுரத் துறைந்தனை, 6. பூந்தரா யேய்ந்தனை, 7. சிரபுரத் துறைந்தனை, 8. புறவம் புரிந்தனை, 9. சண்பை யமர்ந்தனை, 10. காழி யமர்ந்தனை, 11. கொச்சையை மெச்சினை, 12. கழுமல முழுபதிக் கவுணியன் எனக் குறிப்பிடுகின்றார்.

திருஞானசம்பந்தர் தாம் பாடிய சாதாரி வழிமொழித் திருவிகாரப் பதிகம், ஏகபாதம், எமகம், பல்பெயர் பத்து, திருவிருக்குறள், மொழி மாற்று, சக்ரமாற்று, கோமூத்திரி, ஈரடி ஆகிய பதிகங்களுள் மேற்கூறிய முறை வைப்பிலேயே சீர்காழியின் திருப்பெயர்களைத் தொகுத்துத் தருகிறார்.

சீர்காழிக்கு அப்பெயர்கள் ஒவ்வொரு ஊழியிலும் நிலவியதாகப் பட்டித்துப் பிள்ளையார் திருக்கழுமல மும்மணிக்கோவை பத்தாம் அகவல் தொடக்கத்தில்,

வசையில் காட்சி இசைநனி விளங்க
முன்னாள் நிகழ்ந்த பன்னீ ருகத்து
வேறுவேறு பெயரின் ஊறின் றியன்ற
மையறு சிறப்பின் தெய்வத் தன்மைப்
புகலி நாயக இகல் விடைப் பாக

எனக் குறிப்பிடுகிறார். அப்பெயர்கள் புராண இதிகாச பின்னணி களைக் கொண்டுள்ளன. அவை பின்வருமாறு விளக்கம் பெறுகின்றன.

திருஞானசம்பந்தர் திருவெழுகூற்றிருக்கையை ஏழு கூறுகளாகப் பகுத்துக்கொண்டு தமது கருத்துக்களைக் கூற முனைந்துள்ளார். அவ்வாறு கூற தமது திருவெழுகூற்றிருக்கையில் ஏழு கூறும், இரதபந்தக் கவி வகையும் அமையுமாறு பாடியுள்ளார். அவருடைய இவ்விலக்கியத்தின் பொருள் அமைப்பு இரதத்தின் மேல் முகடு போல அமைந்து விளக்கம் பெறுகின்றது. மேலும் சீர்காழியின் பன்னிரு திருநாமங்களைத் தொகுத்துத் தருவது, செய்திக்ளை முறை பிறழாமல் விளக்கும் ஆற்றல் மிக்கவர் என்பதைப் புலனாகின்றன எனலாம்.

47. மதுரையம்பதியில் மாபெரும் புரட்சி

ஞா. ஞானசிங்காரம், கோவை.

"வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத் துறைவிளங்கப்
பூதபரம் பரைபொலியப் புனிதவாய் மலர்ந்தழுத
சீதவள வயற்புகலித் திருஞான சம்பந்தர்
பாதமலர் தலைக் கொண்டு திருத்தொண்டு பரவுவாம்"

(சேக்கிழார்)

சோழவள நாட்டில் பழமைச் சிறப்புடைய சீகாழியில் சைவம் ஏற்றமுற வேண்டுமென வாழ்ந்திருந்த உத்தமராம் சிவபாத இருதயத் தாருக்கும் உற்ற துணை பகவதியாருக்கும் வேதநெறிதனை வளர்க்கும் அன்பு மகவாய் திருஞானசம்பந்தர் திருவாதிரை நாளில் திரு அவதாரம் செய்தார். தெய்வ நெறி, சைவ நெறி உலகம் எங்கும் திகழ்ந்தினிது பரவுதற்கு நாளும் தொண்டு செய்தார் ஞானசம்பந்தர்.

எத்திசைகளினும் தென்திசையே வென்றேறவும், எவ்வுலகினும் இம்மண்ணுலகே சிறப்புறவும், எம்மொழியினும் செம்மொழியாம் தமிழ் மொழியே வென்றோங்கவும், இசைத்தமிழ் நிலைபெறவும், சீகாழித் திருநகர் வாழவும், அசையும் பொருள் அசையாப் பொருள் அனைத்தினும் சிவம் பெருக்கவும், தமிழ்நாட்டின் தெய்வத் தலங்கள் அனைத்தினும் சென்று வழிபட்டார்.

புறச்சமயங்களாகிய சமண பௌத்தங்களின் செல்வாக்கினால் சைவ சமயத் தொன்னெறி விளக்கங் குன்றுவது கண்டு குழுறினார். வரலாற்றுச் சிறப்பும் இலக்கியச் சிறப்பும் மிக்க பாண்டி நாட்டில் அக்காலத்தில் சமணர் பெரும் செல்வாக்குப் பெற்றிருந்தனர். மதுரை மாநகர் கூன்பாண்டியன் காலத்தில் சமண சமயப் பிடிப்பில் சிக்கிக் கிடந்தது. ஆனைமலை, பசுமலை, நாகமலை ஆகிய பகுதிகளைத் தமது இருப்பிடங்களாகக் கொண்டு சமணர் வாழ்ந்து வந்தனர்.

இம்மூன்றும் பலம் பொருந்திய சமணர் கோட்டைகளாக விளங்கின. சமண சமயத் துறவிகள் தம் சமயத்தைப் பரப்புவதுடன் பிற சமயத்தவரை இகழ்ந்தும் வந்தனர். நாடாண்ட மன்னர்களைச் சமண சமயத்திற்கு மாற்றி அவர்களைத் தமது விருப்பம் போல் ஆட்டுவித்தனர். பல்லவ

மன்னனைத் தமது கைக்குள் போட்டுக் கொண்டு நாவுக்கரசருக்கு இழைத்த கொடுமைகள் ஏராளம். கூன்பாண்டியன் சூழ்ச்சியால் சைவ சமயத்தை விட்டுச் சமணனாகி விடுகின்றான். மன்னன் எவ்வழி மக்கள் அவ்வழி ஆதலால் மக்கள் பலரும் சமணம் சார்ந்தனர். சிவனுறையும் கோயில்கள் பள்ளிகளாகவும், பாழிகளாகவும் மாற்றப்பட்டன. ஆனால் பாண்டிமாதேவியராகிய மங்கையர்க்கரசியாரும் அமைச்சர் குலச்சிறையாரும் தமக்குரிய சிவநெறியை நெகிழ விடாது ஒழுகினர். தமது பரிசனத்தார் சிலரைத் திருமறைக்காட்டில் இருந்த திருஞானசம்பந்தரிடம் அனுப்பி, பாண்டி நாட்டிற்கு எழுந்தருளும்படி வேண்டினர்.

மதுரைப் பயணம்

பாண்டி நாட்டுப் பரிசனத்தார் வேண்டுகோளைச் செவிமடுத்த சிவஞானச்செல்வர் தம்முடன் இருந்த அப்பர் பெருமானிடம் தமது மதுரைப் பயணம் குறித்து எடுத்துரைக்க, அப்பரோ "சமணர் செய்யும் வஞ்சனைக்கு அளவேயில்லை, அதை யானே அனுபவித்திருக்கிறேன், அன்றியும் ஞாயிறு முதலிய அனைத்துக் கோள்களும் நன்னிலையில் இல்லை, ஆகவே இந்நிலையில் பாண்டி நாடு செல்வது தகாது" என்று கூறித் தடுத்தருளியபோது, ஞானப்பிள்ளையவர்கள் "நாம் போற்றுவது கயிலை நாதன் திருவடிகளாதலால் நம்பால் எத்தகைய தீங்கும் நேரிடாது" என்று வற்புறுத்துமுகமாக "வேயுறு தோளிபங்கன்" என்ற முதற் குறிப்புடைய திருப்பதிகம் அருளச் செய்து, உடன்வரத் துடித்த அப்பரைத் தடுத்து நிறுத்தி எண்ணற்ற அடியார்களுடன் தென்பாண்டி நாட்டிற்குப் பயணம் மேற்கொண்டார். மதுரை நகர எல்லையில் குலச்சிறையார் வரவேற்க, "யானும் என் நாயகனும் செய்த தவம் என்கொலோ" என்று மனமுருகி மங்கையர்க்கரசியார் பிள்ளையவர்கள் திருவடித் தாமரைகளில் வீழ்ந்து வணங்க, "புறச்சமய இருள்கெடத் தாங்கள் எழுந்தருளியதற்கு அளவற்ற தவமுடையேம் ஆயினேம்" என்று அடியார்கள் போற்றத் திருக்கோயிற் புறத்தணைந்து ஒரு திருமடத்தில் தங்கினார்.

சமணர் மூட்டிய தீயும், திருநீற்றுத் திறனும்

அன்றிரவு ஞானசம்பந்தரது அடியார்கள் பாடும் இன்னிசை முழக்கம் பொறாதவராயினர் சமணர். சீகாழிப் பிள்ளையவர்களின் வருகையை யறிந்து சினமுற்ற மன்னன் அடியவர் வருகையின் நோக்கம் யாது என வினவ, "சோழ நாட்டில் சீகாழிப்பதியில் பிறந்த பார்ப்பனச் சிறுவன் சிவனிடத்தில் ஞானம் பெற்றதாகச் சொல்லிக் கொண்டு முத்துச் சிவிகையில் ஏறியமர்ந்து எங்களை வாதில் வெல்லும் நோக்குடன் அடியார்களோடு இங்கு வந்துள்ளான். அவன் தங்கியிருக்கும் மடத்தில் மந்திர சக்தியால் தீப்பற்றும்படி செய்தால் அவன் நகரை விட்டு ஓடி விடுவான்" என்று சமணர் கூற "ஆவதொன்றிதுவேயாகில் அதனையே

விரைந்து செய்யப் போமின்'' என்று உரைத்தான் மன்னன். சமணரும் தங்கள் மந்திரவன்மையால் திருமடத்திற்குத் தீ மூட்ட முனைந்தனர். ஆதிமந்திரமாகிய ஐந்தெழுத்தினை ஓதும் சிவனடியார்கள் தங்கிய மடத்தில் சமணர் மந்திரம் பயன்படாதொழிந்தது. சமணர் தாமே மறைந்து சென்று மடத்தில் தீ மூட்ட, மடத்தின் ஒரு பகுதி தீப்பற்றியெறிந்தது. ''பொய்யராம் அமணர் கொளுவும் சுடர்'' என்ற தொடர் இதை உறுதிப்படுத்துகிறது. செய்தியறிந்த சிவஞானச் செல்வர்,

''செய்ய னேதிரு ஆலவாய் மேவிய
ஐயனே அஞ்ச லென்றருள் செய்யெனைப்
பொய்ய ராமமணர் கொளு வுஞ்சுடர்
பைய வேசென்று பாண்டியற் காகவே''

என்றெடுத்துப் பாடினார். விரிந்த வெந்தழல் வெம்மை போய்த் தென்னவனை வெப்பு நோயாக மாறிப் பற்றியது. மங்கையர்க்கரசியாரும் குலச்சிறையாரும் சமணர் மூட்டிய தீயை நினைந்து மன நடுக்கமுற்று, திருமடத்தில் தீதின்மையறிந்து மனம் தெளிந்தபோது, பாண்டியன் வெப்பு நோயால் துன்புற்றான். மருத்துவர்களின் முயற்சி பலனளிக்க வில்லை; சமணர்களின் மந்திர சக்தியால் நோய் அதிகரித்ததேயொழிய தணியவில்லை. மன்னன் உணர்விழந்து சோர்ந்தான்.

''ஞானசம்பந்தருக்கு அருகர்கள் செய்த தீங்கே இங்கு வெப்பாய் மூண்டது, ஞானசம்பந்தரை அழைத்தால் நோய்தீரும்'' என்று குலச்சிறையார் கூறக் கேட்ட மன்னன் ஞானசம்பந்தர் என்ற திருநாமம் தன் செவி யகத்துப் புகுந்த அப்பொழுதே அயர்வு நீங்கி உணர்வு பெற்றான். சமணர் இழைத்த தீச்செயல்களே தனது நோய்க்கு ஏதுவாயின என எண்ணி, ''ஞானக்கன்றின் அருளால் இந்நோய் அகலுமேல் மகிழ்வேன்; யானுற்ற பிணியைத் தீர்த்து வென்றவர் பக்கமே சார்வேன்; அவ்வாறாயின் அவரை அழைப்பீராக'' என்று பணித்தான் பாண்டியன். அழைத்துவரப் பெற்ற சம்பந்தரைக் கைகூப்பி வணங்கித் தலைப்பக்கம் ஒரு பீடத்தமர்த் தினான். அரசன் சுவாமிகளைத் தாங்கள் எவ்வூர் என வினவ சுவாமி களும் 'பிரமனூர் வேணுபுரம்' என்ற பதிகம் ஓதிச் சீகாழியின் பன்னிரு பெயர்களையும் தெரிவித்தார். அப்போது சமணர்கள் பதறியரற்றுவதைக் கண்ட மங்கையர்க்கரசியார் சமணர்களால் தமக்கு ஏதேனும் துன்பம் நேர்ந்து விடுமோ என்று அஞ்சியபோது சீகாழிப் பிள்ளையார் ''மானினேர் விழி மாதராய்'' என்ற பதிகம் பாடி அரசியாரின் அச்சம் தவிர்த்தார்.

பாண்டியன் சம்பந்த சுவாமிகளை நோக்கி நீங்கள் என் வெப்பு நோயைத் தீருங்கள்; தீர்த்தவர் எவரோ அவரே வாதில் வென்றவர் என்று விதியமைத்தார். ஆண் மக்களுக்கு இடப்பக்க நோய் தீர்த்தல் எளிதென உணர்ந்த சமணர்கள் 'மன்னனே! நினது இடப்பக்க நோயை

எமது மந்திரத்தால் தீர்ப்போம்' என்று சொல்லி இடப்பாகத்தைப் பீலி கொண்டு நீவ, மன்னனின் வெப்பு நோய் அதிகமானது கண்டு சமணர் அச்சம் கொண்டனர். மன்னனின் குறிப்புணர்ந்த அடிகள் அவனது வலப்பாகத்தை அடைந்து,

> **''மந்திர மாவது நீறு வானவர் மேலது நீறு;**
> **சுந்தர மாவது நீறு துதிக்கப்படுவது நீறு;**
> **தந்திர மாவது நீறு; சமயத்தி லுள்ளது நீறு;**
> **செந்துவர் வாயுமை பங்கன் திருவால வாயான் திருநீறே''**

என்ற திருப்பதிகம் ஓதித் தென்னவன் மேனியில் திருவளர் நீறு கொண்டு பூசினவுடனே வலப்பக்க வெம்மை நீங்கியது. இடப்பாகத்தில் முன்னைக் காட்டிலும் வெம்மை இருமடங்காக அதிகரித்தது. இது கண்டு சமணர்கள் அஞ்சித் தூர அகன்றனர். தென்னவன் அவர்களை நோக்கி 'நீங்கள் தோற்றீர்கள், என்னை விட்டு அகன்று போங்கள்' எனக் கட்டளை யிட்டுச் சுவாமிகளை நோக்கி ''இடப்பாகத்து வெம்மையையும் தாங்களே போக்க வேண்டும்'' என வேண்டினான். இடப்பாகத்தும் நீறு கொண்டு பூசியவுடனே வெம்மை முற்றிலும் நீங்கி மன்னன் உய்தி பெற்றான். வெப்பு நோய் நீங்கப் பெற்ற வேந்தனும் எழுந்து சென்னிமேல் இருகை கூப்பி ஞானக்கன்றின், அற்புதம் நிகழ்த்திய அடிகளின் திருவடிகளில் வீழ்ந்து வணங்கி 'யான் உய்ந்தேன்' என்று கூறி உவந்தான்.

அனல் வாதம், புனல் வாதம்

பாண்டியனின் வெப்பு நோயைத் தீர்க்கும் ஆற்றலற்ற சமணர்கள் ஞானசம்பந்தரைத் தருக்க வாதத்தால் வெல்லுதல் இயலாதெனத் தெளிந்து நெருப்பிலும் நீரிலும் வெல்வதாகக் கருதினர். 'இரு திறத்தாரும் தத்தம் பேருண்மையினை ஏட்டில் எழுதி அதனை நெருப்பிலிட்டால் வேவாததே மெய்ச்சமயம்' என்று கூறினர். காழிப்பிள்ளையார் இந்த ஏற்பாட்டிற்கு ஒப்புக் கொண்டார்.

பாண்டிய மன்னன் தனது பேரவை முன்னர் தீக்குண்டம் அமைக்க ஏற்பாடு செய்தான்; தீ மூட்டப்பட்டது; அடிகளும் தாம் பாடியருளிய திருப்பதிகங்கள் எழுதப் பெற்ற அடங்கன் முறையினைக் கொணரச் செய்து, 'சிவபெருமானே முதற்பொருள்' எனத் தொழுது அத்திருமுறை யினைச் சென்னி மேல் வைத்துப் போற்றித் திருக்காப்பு நாணை அவிழ்த்து, அத்திருமுறை ஏட்டினை விரித்துப் பார்த்த அளவில் 'போகமார்த்த பூண் முலையாள்' என்ற நள்ளாற்றுப் பதிகம் நேர்ப்பட்டது. அத்திருப் பதிகத்தினையே எடுத்து ஏட்டில் எழுதி ''என்னை ஆளுடைய இறைவனது திருநாமமே என்றும் நிலைபெற்ற மெய்ப்பொருளாகும் என உலக மாந்தர்க்கு அறிவுறுத்தும் நிலையில் இத்திருப்பதிக ஏடு தீயில் வெந்தழியாது நிலைபெறுக'' என்று சொல்லித் 'தளரிள வளரொளி'

என்ற மற்றொரு நள்ளாற்றுப் பதிகத்தைப் பாடிக் கையிலிருந்த ஏட்டை யாவரும் காணத் தீயில் இட்டருளினார். அப்பதிகம் எழுதப்பட்ட ஏடு சுடர்விட்டெரிந்து சாம்பலாகாது பச்சையாய் விளங்கிற்று. சமணர் இட்ட ஏடு வெந்து சாம்பலாகியது. பாண்டியன் நகையாடி நின்றான்.

சமணர் மன்னனிடம், 'மன்னவ! ஒரு வாதினை மும்முறை செய்து உண்மை காண்டலே உலகியல்; இருதிறத்தாரும் தத்தம் சமயப் பேருண்மைகள் அடங்கிய ஏட்டினை ஆற்று வெள்ளத்தில் இட்டால், எச்சாராருடைய ஏடு வெள்ளத்தில் எதிரேறிச் செல்கின்றதோ அவரே வென்றவராவர் என்றனர். மேலும் 'யாம் இதில் தோற்றோமேயாயின் கழுவேற்றுங் கடப்பாடுடையன் இவ்வேந்தனே' என்று வெகுண்டுரைத்தனர். அரசன் முன்னிலையில் 'அஸ்தி நாஸ்தி' என்ற தம் வடமொழி மந்திரத்தை ஏட்டில் எழுதி வைகை ஆற்றில் இடுதலும் அது கடலை நோக்கி விரைந்து சென்றது. ஞானக்கன்றும் சைவ சமய உண்மைகளைத் தொகுத்து ''வாழ்க அந்தணர்'' என்ற பொதுப்பதிகமாகப் பாடத் தொடங்கினார். இக்காட்சியைக் காண மதுரை மாநகரமே வைகையாற்றின் இருகரை யிலும் திரண்டெழுந்தது. 'என்றும் சிதைவின்றி நிலைபெற்று நிலவும் சிவநெறியே வீடுபேற்றை நல்க வல்லது. இந்த உண்மையைச் சமணர்கள் அறிய மாட்டார்கள், அறிந்தாலும் அதை உண்மையென ஒப்புக்கொள்ள மாட்டார்கள்' என்பதை அடியார் நன்கறிவார். ஆயினும் திருநீறு பூசப் பெற்றுப் பழவினைப் பாசம் நீங்கி இருவினையொப்புடையவனாய் இறைவனையடைந்து இன்புறும் பக்குவ நிலையைப் பாண்டியன் அறிதல் வேண்டும் என விரும்பினார் சம்பந்தர். ஆகவே அவர்,

''வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயது எல்லாம்அரன் நாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே''

என்ற முதற்பாடலையுடைய திருப்பதிகத்தை ஏட்டில் எழுதித் தமது திருக்கரத்தால் வைகையாற்றில் இட்டனர். பிறவியெனும் பேராற்றை அரிய மாதவர் உள்ளம் எதிர்த்துச் செல்லுவது போன்று அவ்வேடு வையையாற்றினைக் கிழித்து எதிர் ஏகியது. ''வேந்தனும் ஓங்குக'' எனத் திருப்பாசுரத்தின் இரண்டாம் அடியில் அடியார் பாடியதால் முன்பு கூனனாயிருந்த பாண்டியன் கூன் நீங்கி 'நின்றசீர் நெடுமாறன்' ஆயினன்.

வைகையாற்றில் இடப்பெற்ற ஏடு எதிரேறி விரைந்து செல்வதைக் கண்ட சீகாழிப் பிள்ளையார்,

''வன்னியும் மத்தமும் மதிபொதி சடையினன்
பொன்னியல் திருவடி புதுமல ரவைகொடு

மன்னிய மறையவர் வழிபட அடியவர்
இன்னிசை பாடலர் ஏடகத் தொருவனே''

எனத் தொடங்கும் திருப்பதிகத்தைப் பாடிப் போற்றினார். எதிரேறி வந்த ஏடு வைகையின் வடகரையில் அமைந்துள்ள ஏடகத் திருக்கோயிலின் அருகில் தேங்கிய நீர் நடுவே வந்து நின்றது. ஏட்டினைத் தொடர்ந்து சென்ற குலச்சிறையார் குதிரையை விட்டிறங்கி ஏட்டினை எடுத்துத் தலைமேற் கொண்டு ஏடகத்திறைவனை இறைஞ்சி மீண்டார். சம்பந்தர் பொற்பாதங்களை வணங்கி நின்றசீர் நெடுமாறன் முதலியோர்க்குக் கொணர்ந்த ஏட்டினைக் காட்டி மகிழ்ந்தார். அனைவரும் இறைவனது திருவருளை வியந்து போற்றினர்.

சமணர் கழுவேறல்

நின்றசீர் நெடுமாறன் தன் அமைச்சரை நோக்கி ''வாதிற் சூளுரைத்துத் தோல்வியுற்ற சமணர்கள் முன்னமே சீகாழிப் பிள்ளையார் தங்கி யிருந்த திருமடத்தில் தீயிட்டு அவர்க்கும் அடியார்கட்கும் தீங்கு விளைவித்ததால் அவர்கள் செய்து கொண்ட சபதப்படி அவர்களைக் கழுவேறச் செய்தலேயாகும் எனக் கூறினான். சம்பந்தருக்குச் சமணர்கள் பால் சிறிதும் பகைமை இல்லையென்றாலும், சமணர்கள், அவர்களாகவே மேற்கொண்ட தண்டனையை விலக்கவில்லை. எண்ணாயிரம் சமணர் கழுவிலேறினர். பாண்டிய மன்னன் சமணத்தை விடுத்துச் சைவத்தை மேற்கொண்டான். பாண்டிய நாடு திருநீற்றின் விளக்கத்தால் சமண் இருள் நீங்கப் பெற்று மிளிர்ந்தது. திருஞானசம்பந்தர் பாண்டி நாட்டுப்பதிகள் பலவற்றையும் வணங்கிச் சோழ நாடு சென்றார்.

''பரசமயக் கோளரியைப் பாலறா வாயினைப்பூம் பழனம் சூழ்ந்த
சிரபுரத்துத் திருஞான சம்பந்தப் பெருமானைத் தேய மெல்லாம்,
குரவையிடத் தமிழ் வேதம் விரித்தருளும் கவுணியர்தம்
குலதீ பத்தை,
விரவியெமை யாளுடைய வென்றிமிழ விளங்களிற்றை
விரும்பி வாழ்வாம்''

(சிவஞான முனிவர்)

48. திருமருகலில் சம்பந்தர்

ப. ஞானம் கணபதி, அண்ணாமலைநகர்.

சைவசமயக்குரவர் நால்வருள் முதலாக வைத்து எண்ணப்படுபவர் திருஞானசம்பந்தர். பெரியபுராணத்தில் பாதி வரலாறாக விளங்குவது ஆளுடைய பிள்ளையார் வரலாறு. சைவத் திருமுறைகள் பன்னிரண்டனுள் முதல் மூன்று திருமுறைகளாக விளங்குவது ''ஆணை நமதென்ற'' அடிகளின் திருவாக்கு. கி.பி. 7-ஆம் நூற்றாண்டில் அக்காலச் சூழலில் சமணமும், பௌத்தமும் மேலோங்கியிருந்த காலகட்டத்தில் சைவ சமயத்தின் பெருமையையும், இம்மைக்கும் மறுமைக்கும் மனித சமுதாயத்தை வாழ்விக்கும் சிவ வழிபாட்டின் தனித்தன்மையையும் நிலை நிறுத்தியவர்! ''பரசமயக் கோளரி''யான ஞானசம்பந்தர் எனில் மிகையன்று. திருஞான சம்பந்தர் தமது மூன்றாவது வயது முதல் ஐந்தாவது வயது வரை தமது தந்தையார் தோளிலும் பின்னர் இறைவன் அளித்த முத்துச்சிவிகை யிலும் தமிழ்நாடு முழுவதும் தலயாத்திரை மேற்கொண்டார்; மக்கள் உள்ளத்திலே சைவ நெறியை வளர்த்தார். சமுதாயத் தொண்டுகள் பல ஆற்றினார். அருட்செயல்கள் பல புரிந்தார். அவ்வகையில் சோழநாட்டுத் திருத்தலங்களுள் ஒன்றாக விளங்கும் திருமருகல் என்னும் திருத்தலத் திற்கு வந்தபோது அவர் இறைவன் மீது பாடிய பதிக வரலாற்றுச் செய்தி களையும், திருமருகல் தலத்தின் சிறப்புகளையும் பற்றியே இக்கட்டுரை பேசுகிறது.

திருத்தலப் பயண நோக்கம்

கோயில்களில் தொண்டு செய்தல், சிவனுக்குக் கோயில் அமைத்தல், சிவனடியார்களுக்குத் தொண்டு செய்தல், சிவனுறையும் கோவில்களுக்குத் தலயாத்திரைப் புரிந்துப் பரமனைப் பாடுதல் போன்ற நெறிமுறைகளைச் சைவ நாயன்மார்கள் மேற்கொண்டிருந்தனர். சிவனடியார்களின் இடை விடாத இவ்வழக்கத்தைக் காலப்போக்கில் தமிழ் மக்களும் பின்பற்றினர்.

''துறக்குமா சொலப்படாய் துருத்தியாய்த் திருந்தடி
மறக்கு மாறிலாத என்னை மையல்செய்து இம்
மண்ணின்மேல் பிறக்குமாறு காட்டினாய்'' (திருமுறை-2.98, 5)

என்று சம்பந்தர் கூறுவதிலிருந்து தலந்தோறும் சென்று அங்குக் கோயில் கொண்டுள்ள இறைவனை வணங்க மட்டுமன்று. அவ்வூரில்

உள்ள மக்களைக் காணவும், அவர்களுடன் இரண்டறப் பழகவும் துன்பங்களிலிருந்து அவர்களை விடுவிக்கவும் தாம் இவ்வுலகில் பிறந்ததாகக் கூறுவதும் கருதத் தக்கதாகும்.

சம்பந்தர் வரலாற்றில் அருட்செயல்கள் பலவாக இருந்தபோதிலும் காழிவேந்தர் பாண்டிய நாட்டில் சமணர்களோடு வாதுபுரிந்து வெற்றி பெற்ற செயல் தமிழ்நாட்டு மக்களிடையே சைவ சமய உலகில் ஒரு புதிய எழுச்சியை ஏற்படுத்தியது. தமிழ்நாடு முழுவதும் தலப்பயணம் மேற்கொண்டபொழுது மக்கள் அவர் சென்ற இடந்தோறும் கூடிப் பெருமதிப்பு கொண்டு அவரை வழிபட்டனர். சம்பந்தர் வாக்கினை இறைவனின் வாக்காகவே கருதினர்.

திருஞானம் பெற்ற பிள்ளையின் திருப்பதிகங்கள்

முதல் மூன்று திருமுறைகளாக விளங்கும் இவர் அருளிய தேவாரப் பாட்டுக்கள் "தெய்வஞ்சுட்டிய வாரப்பாட்டு" என அழைக்கப்படுகிறது. வடமொழியில் உள்ள நான்கு வேதங்களைப் போன்று இவரது திருப்பதிகங்கள் சைவத் திருக்கோயில்களில் ஓதப்படுகின்றன. பதிகங்களின் இறுதியில் தமது ஊரும் பெயரும் குறிப்பதோடு பதிகத்தை ஓதுவதால் ஏற்படும் பயனையும் மொழிந்துள்ளார். "காழி நாதன் வேதியன் ஞானசம்பந்தன் வாய் நவிற்றிய தமிழ் மாலை ஆதரித்திசை கற்று வல்லார் சொல்லக் கேட்டு உகந்தவர் தம்மை வாதியா வினை மறுமைக்கும் இம்மைக்கும் வருத்தம் வந்து அடையாவே" என்று கூறுகின்றார். (திருவலஞ்சுழி பதிகம்-242-பாடல்-11) உலக உயிர்கள், 'வினைப்பயன்களை நுகர்ந்து கழித்தாலன்றி அவை நீங்காது' என்பது சமண பௌத்த சமயங்களின் முடிவான தீர்ப்பாக இருந்த காலக் கட்டத்தில், 'இறைவன் திருவருள் இருந்தால் போதும்; வினையாகிய இருள் கெட்டொழியும்' என்று உறுதி கூறுகின்றார் ஞானசம்பந்தர்.

திருமருகல்-தலச்சிறப்புகள்

சைவ மணங்கமழும் சோழநாட்டுத் தஞ்சை மாவட்டமும் அதனைச் சூழ்ந்து விளங்கும் ஊர்களும் சிவன் விரும்பி உறையும் திருத்தலங்களாகவே விளங்குகின்றன. அவற்றுள் குறிப்பிடத்தக்க திருத்தலமாக விளங்குவது திருமருகல். அழகிய வளம் பொருந்திய சிறிய ஊராக இருந்த போதிலும் மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய சிறப்புகளையும் ஒருங்கே பெற்றுள்ளது. மயிலாடுதுறை - திருவாரூர் இரயில் பாதையில் இருக்கும் நன்னிலம் புகைவண்டி நிலையத்திலிருந்து கிழக்கே 10 கி.மீ. தூரத்தில் உள்ளது திருமருகல், தெற்கே புத்தாறும், வடக்கே முடிகொண்டான் ஆறும், அமைந்து இவ்வூரை வளப்படுத்துகின்றன. திருப்புகலூர், திருக்கண்ணபுரம் திருச்செங்காட்டங்குடி திருச்சீயாத்தமங்கை போன்ற

திருத்தலங்களும் இவ்வூரைச் சூழ்ந்தேயுள்ளமை சிறப்பிற்குரியது. (ச. தண்டபாணி தேசிகர், திருமருகல் தலவரலாறு, கலைஞன் பதிப்பக வெளியீடு, சென்னை-17, ஆண்டு - 2000.)

திருக்கோயிலின் தோற்றம்

மாணிக்கவண்ணர் என்னும் பெயர் உடைய ஈசனும், வண்டுவார் குழலி அம்மையும் இத்தலத்தில் எழுந்தருளியுள்ளனர். பழமை வாய்ந்த இத்திருக்கோயில் கிழக்குப் பார்த்த சந்நிதியாக விளங்குகிறது. இராசகோபுரம் அறுபத்தெட்டடி உயரம் உடையது. ஐந்து நிலைகளை உடையது. இராசகோபுரம் பண்டைய சோழ மன்னர்களின் திருப்பணியாக விளங்கு கிறது. இராசகோபுரத்தின் வாயிலில் தலவரலாறு எழுதப்பட்டுள்ளது. இறைவன் இருப்பிடம் செயற்கை மலையாக உள்ளது. அம்மன் கோயில் மகாமண்டபச் சுவற்றில் தலபுராண வரலாறு சித்திரங்களாகத் தீட்டப்பட்டுள்ளன. மண்டபத்தின் தென்மேற்குக் கோடியில் திருப்பனந்தாள் மடம் ஸ்ரீகாசிவாசி அருள்நந்தித் தம்பிரான் அவர்களால் சம்பந்தர் இத்தலத்தில் அருளிய விடந்தீர்ந்த பதிகங்கள் சலவைக்கல்லில் பொறிக்கப் பட்டுள்ளன. மேலும் மண்டபத்தின் பல இடங்களிலும், தேவாரம், பெரிய புராணம் போன்ற தெய்வீகப் பாடல்களும் பொறிக்கப்பட்டுள்ளன. இக்கோவிலின் தல விருட்சமாக வாழை விளங்குகிறது. கிழக்கு வெளிப் பிரகாரத்தில் வன்னி மரமும், கிணறு ஒன்றும் காணப்படுகிறது. சம்பந்தர் வணிகனின் விடந்தீர்த்த போது இம்மரமும் கிணறும் சாட்சியாக இருந்ததாகக் கூறுவர்.

மூர்த்திச் சிறப்புகள்

வடமொழியிலே இரத்தினகிரீஸ்வரர் என்று அழைக்கப்படும் இறைவன் தமிழ் மக்களால் மாணிக்கவண்ணராக வழங்கப்படுகிறார். இறைவன் தானே தோன்றிய சுயம்பு மூர்த்தி. சுவாமியின் தோள் பக்கத்தில் பாணத்தின் அடிப்பாகத்தில் ஒரு வெட்டு காணப்படுகிறது. குசகேது மகாராஜா என்பவர் காடு திருத்தி நாடாக்க முற்படும்போது இலிங்கத் திருவுருவில் மண்வெட்டி தாக்கியதால் இரத்தம் பெருகியதாகவும், அங்கு இலிங்கம் இருப்பது கண்டு ஆலயம் எடுப்பித்தான் என்றும் ஒரு வரலாறு உண்டு. இத்தலத்தில் சம்பந்தரின் தெய்வத்தன்மை பொருந்திய பதிகத்தால் உயிர் பெற்றெழுந்த செட்டிப்பிள்ளையின் திருவுருவமும் செட்டிப் பெண்ணின் திருவுருவமும் காணப்படுகிறது. திருஞானசம்பந்தரின் திரு உருவம் ‘கூத்தாடும் பிள்ளையாராக’ விளங்குகிறது. அறுபத்து மூன்று நாயன்மார்களின் திரு உருவங்களும் தெற்குப்புறப் பிரகாரத்தில் அமைந்துள்ளன. மற்றும் முருகன், விநாயகர், ஐயனார், தென்முகக் கடவுள், நவக்கிரகங்கள் சந்நிதிகளும் உள்ளன. அம்மை வண்டுவார்குழலி தென்முகமாக நிற்கின்றாள். சுற்றுக் கோயில் வெளிச் சுற்றாலையில் தெற்குப் பக்கத்தில் சுரந்தீர்த்த விநாயகர் கோயில் உள்ளது.

தீர்த்தச் சிறப்புகள்

திருக்கோயிலின் முன்பாக இலக்குமி தீர்த்தம் சிறந்து விளங்கு கிறது. வரலட்சுமி நோன்பிருந்து இத்தீர்த்தத்தில் நீராடி மாணிக்கவண்ணரைத் தரிசித்தால் கடன் தொல்லை நீங்கும்: செல்வம் பெருகும் என்ற உறுதிப்பாடு மக்களிடையே உள்ளது. சிறுத்தொண்டரின் மகனான சீராளன் கல்வி பயின்ற இடமே தற்போது சீராகுளமாக விளங்குகிறது. இக்குளத்தில் ஐப்பசி மாதத்திலும் சித்திரை மாதத்திலும் அமாவாசை நாட்களில் விதிப்படி நீராடி இறைவனை இறைவியை வணங்கக் குழந்தைப்பேறு சித்திக்கும் என்று கருதப்படுகிறது.

தலச்சிறப்பு பாடிய நூல்கள்

அப்பர், சுந்தரர், சம்பந்தர் ஆகிய மூவர் முதலிகளின் திருவாக்காலும் சிறப்பு பெற்றது இத்தலம். அருணகிரிநாதரும் திருப்புகழில் வைப்புத் தலமாக இத்தலத்தைப் போற்றியுள்ளார். திருமருகலைப் பற்றிய இலக்கியமாக வடமொழியில் எழுதப்பட்ட தலபுராணம் ஒன்று காணப் படுகிறது. பெரியபுராணத்தில் திருஞானசம்பந்தர் புராணத்தில் பதினொரு பாடல்கள் காணப்படுகின்றன.

திருவிழாக்கள்

சித்திரை மாதத்தில் நடைபெறும் பெருவிழா பத்து நாட்கள் வரை கொண்டாடப்படுகிறது. திருவிழாவின் ஏழாம் நாளன்று செட்டிப் பெண்ணுக்கும் செட்டிப் பிள்ளைக்கும் திருமணம் நடைபெறும். ஆவணி மாதத்தில் வரலட்சுமி நோன்பன்று கமல வாகனத்தில் இலக்குமியும், வரதராசப் பெருமாளும் எழுந்தருளி இலக்குமி தீர்த்தத்தில் தீர்த்தம் கொடுத்தருள்வர். இவ்விழாவும் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது.

தல மகிமை

"பெருகெலாம் தவம் பேதமை தீரலாம்
திருகலாகிய சிந்தை திருந்தலாம்
பருகலாம் பரமாயதோர் ஆனந்தம்
மருகலான் அடிவாழ்த்தி வணங்கவே"

என்று அப்பர் சுவாமிகள் பாடுமிடத்து இத்தலத்தின் மகிமை விளங்கு கிறது. திருமணம் ஆகாமல் இருக்கும் கன்னிப் பெண்கள் இத்தலம் வந்து அம்மையும் அப்பனையும் தரிசித்து வணங்கினால் உடனே திருமணம் கைகூடும் என்பது நடைமுறையில் நிகழ்ந்து வருகிறது. திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள் 1990-ஆம் ஆண்டு இத் தலத்திற்கு வந்திருந்து உபந்நியாசம் செய்தபோது இத்தலத்தின் கண்கண்ட மகிமையாக இச்சிறப்பு கூறியதும் நடைமுறை உண்மையாகி வருகிறது.

பெரியபுராணத்தில் திருமருகல் திருத்தலம்

வணிகன் ஒருவன் தன்னுடன் தன் மாமன் மகளை அழைத்துக் கொண்டு உடன் போக்காக வந்தவன் இரவு நேரமாகி விட்டதால் திருமருகல் கோயில் மடத்தின் ஒரு பகுதியில் தங்கி உறங்கி இருந்த போது பாம்பு தீண்டி இறக்க, திருமணம் ஆகாத காரணத்தால் அவ் வணிகனின் மெய் தொட்டுத் தீண்டும் உரிமை பெறாத அப்பெண் அழுது புலம்பும் வேளையில் அங்கு திரண்ட மக்களும் மந்திர தந்திரங்களால் அவனை உயிர்ப்பிக்க முயன்று தோற்றனர்.

அன்னையையும் அத்தனையும் பிரிந்து நின்னை
அடைவாக உடன் போந்தேன் அரவால் வீடி
என்னை உயிர் விட்டகன்றாய் யானென் செய்கேன்
இவ்விடுக்கண் தீர்க்கின்றார் யாருமில்லை

(பெரிய. திருஞான. - 475)

என அப்பெண் எடுத்துரைத்து புலம்பி நிற்கையில் அப்போது இறை வழிபாட்டிற்காகச் சம்பந்தர் எழுந்தருள அவரது சேவடியில் வீழ்ந்து வணங்கி நிற்கையில் 'பயப்படேல் நீ பருவரலும் நும்பரிசும் பகர்வாய்' என்று அபயமளித்த சீர்காழி வேதப்புரவலனாரிடம் தங்கள் வரலாற்றைக் கூற முற்பட்டாள்.

'வைப்பூர் கோன் தாமன் என் தந்தை. மூத்த மகளைத் தன் மருமகனுக்குக் கொடுப்பதாக முதலில் வாக்கு தந்து பின்னர் செல்வம் பெற்று வேறு ஒருவனுக்கு மணம் செய்து கொடுத்து விட்டான். இவ்வாறே ஆறு பெண்களையும் செல்வம் பெற்றுக் கொடுத்து விட்டான். மனம் தளர்ந்து வருந்தும் இவனிடத்தில் நான் அன்பு பூண்டு பெற்றோரை விட்டு விட்டு இவனுடன் வந்து விட்டேன்.

மற்றிவனும் வாளரவு தீண்ட மாண்டான்
மறிகடலிற் கலங்கவிழ்த்தார் போல நின்றேன்
சுற்றத்தார் எனவந்து தோன்றி என்பால் துயராமலாம்
நீங்க அருள் செய்தீர் (2379)

என்று வேண்டினாள். எல்லா உயிர்களுக்கும் தாயானவனான இறைவனே! என்று மாணிக்கவண்ணரை விளித்த சம்பந்தர் 'சடையாயெனு மால்சர ணீயெனுமால்' எனத் தொடங்கும் திருப்பதிகம் பாட வணிகனும் தலைக் கேறிய நஞ்சு நீங்கி எழுந்து நின்றான். பின்னர் இருவரும் ஆளுடைய பிள்ளையாரின் திருவடிகளில் வீழ்ந்து வணங்க அப்பெண்ணுக்கும், பிள்ளைக்கும் மணம் முடித்து வைத்தார்.

திருமருகல் திருப்பதிகம்

திருமருகலில் எழுந்தருளிய மாணிக்கவண்ணர் திருத்தாளினை வணங்கி 'உருகிய அன்புறு காதல் உள்ளலைப்பத் தெள்ளுமிசை

யுடன் பெருகும் தமிழ்த் தொடை சார்த்தி' அங்கிருந்தபோது தன்னை மணக்க இருந்த மாமன் மகனை அரவு தீண்டிவிட மனத்திண்மையும் கட்டுப்பாடும், கற்பு மாண்பும் கொண்ட 'வாளரம் தீண்டவும் தான் தீண்டகில்லாத' அப்பெண் அழுது புலம்ப ஞானசம்பந்தர் அபயம் தந்து 'அவ்வணிக இளைஞனின் விடம் தீர்த்து எழுந்து நிற்கச் செய்தற் பொருட்டு அருளிய திருப்பதிகமே' திருமருகல் தலப்பதிகமாகும்.

சடையாயெனு மால்சர ணீயெனுமால்
விடையாயெனு மால்பெரு வாவிழுமால்
மடையார்குவ ளைமல ரும்மருகல்
உடையாய்தகு மோவிவ ருள்மெலிவே (1)

என்று தொடங்கி பதினொரு பதிகங்கள் பாடியருளினார். ''நீயே அடைக்கலம்'' என்று திருமருகல் ஈசனை வழிபட்ட சம்பந்தர் 'எந்தாய் எம் அப்பனே' என்று அழைக்கின்றார். 'வேதங்களை உணர்ந்தவர் வாழ்கின்ற திருமருகல்' எனத் தலம் போற்றுகின்றார்.

வழுவாள்பெரு மான்கழல் வாழ்கவெனா
எழுவாணினை வாளிர வும்பகலும்
மழுவாளுடை யாய்மரு கற்பெருமான்
தொழுவாளிவ ளைத்துய ராக்கினையே (8)

'இரவு முழுவதும் உறங்காமல் அழுத வண்ணம் உன் அருள வேண்டித் துடிக்கும் இப்பெண்ணின் துயர் தீர்ப்பாயாக' என வேண்டி நின்றார். இறைவன் திருவருளால் அப்பெண்ணின் மாமன் மகனை எழுப்பிக் கொடுத்து அவள் மகிழ்ச்சியைக் கண்ட பின்னரே சம்பந்தர் திருக்கோயிலை அடைகின்றார். தாயுள்ளம் கொண்ட அன்பின் திரு உருவான' ஞானசம்பந்தரின் இச்செயல் அவரது சமூக உணர்வினையே எடுத்துக் காட்டுகின்றது. 'மக்கள் தொண்டே மகேசன் தொண்டு' என்ற கொள்கைக்கு எடுத்துக்காட்டாய் விளங்குவது சம்பந்தர் வரலாறு.

சம்பந்தர் பதிகங்களின் நோக்கம்

சம்பந்தர் திருப்பதிகங்கள் ஒவ்வொன்றும் பதினொரு பாடல்களைப் பெற்றுள்ளன. வழக்கமாக எல்லாத் தலத்துத் திருப்பதிகங்களிலும் எட்டாவது பாடலில் இராவணன் கயிலை மலையைத் தூக்க முயன்று தோற்று இறைவன்தாள் பணிந்த வரலாற்றையும், ஒன்பதாவது பாடலில் திருமாலும், பிரமனும் அடிமுடி தேடிச் செருக்கு ஒழிந்த வரலாற்றையும் கூறுவதோடு பத்தாவது பாட்டில் மெய்ப்பொருள் உணர்வில்லாத சமண பௌத்த நெறிகளைப் புன்னெறிகள் என்று தூற்றிக் கண்டிக்கும் போக்கினையும் காணமுடிகிறது. இம்மூன்று செய்திகளும் மருகல் திருப்பதிகத்திலும் அமைந்துள்ளன. இவ்வமைப்பு சம்பந்தருக்கே உரிய புதிய அமைப்பாகக் காணப்படுகிறது.

தவறு செய்தவன் தன் தவற்றை உணர்ந்து இறைவனிடம் மன்னிப்பு வேண்டி நின்றால் இறைவன் கருணை நிச்சயம் உண்டும் என்றும், ஆண்டவனின் அருளைப்பெற எளிய வழி அன்பு ஒன்றுதான்; ஆணவத்தால் அடைய முடியாது என்றும் சமண பௌத்த மார்க்க நெறி எவ்விதத்திலும் மனித சமுதாயத்தை உய்விக்காது; உய்விக்கும் ஒரே நெறி சைவ நெறியே என்றும் உலகிற்கு உணர்த்தவே இத்தகைய புராண வரலாறுகளைக் குறிப்பிட்டுள்ளார் எனக் கருதலாம்.

இறுதி 11-ஆம் திருக்கடைக்காப்புப் பாடலில் சம்பந்தர் தம் ஊரும் பெயரும் குறிப்பிடுவார். அப்பதிகத்தை ஓதுபவர் எய்தும் பயனையும் அவர் குறிப்பதனால் அதனைப் பயனுதவிய திருப்பதிகம் எனக் குறிப்பிடுவர்.

இம்மைக்கும் மறுமைக்கும் நம்மை ஊழ்வினைத் தாக்காது என அறுதியிட்டுக் கூறுவார். இத்தகைய காப்புப் பாடலை காழிவேந்தர் பாடக் காரணம் அக்காலச் சூழ்நிலைதான். புறச்சமயங்களால் மக்கள் படும் துன்பங்களைப் போக்க அவர்கள் உள்ளத்தில் நம்பிக்கையை துளிர்விடச் செய்கின்றார்.

சமணம், பௌத்தம், வைதிகம், வைணவம் போன்ற சமயங்கள் தத்தம் கொள்கைகளே உண்மையானவை என்று வாதிட்ட காலச்சூழலில் மக்கள் எளிதில் புரிந்து நம்பிக்கையுடன் வாழ ஈசனருளை உணர்த்தி, அவனை உள்ளம் உருகி வழிபட்டால் துன்பம் துயரம் நீங்கப்பெறும் என்று நம்பிக்கையளித்து 'ஆணை நமதே' என்று பாடியருளினார்.

சுயம்பு இலிங்கமாக இறைவன் எழுந்தருளிய இத்தலத்தை வழிபட வினைத்துயர் நீங்கும் என்று கூறுகிறார். நல்லோர், தவத்தோர் வாழும் திருமருகல் தலத்து இறைவனை வழிபட்டால் திருவருள் ஞானம் பெறலாம் என்று திருக்கடைக்காப்பு பாடலாக விளங்கும் 11-ஆம் பாடலில் உறுதி கூறுகின்றார்.

49. சம்பந்தரும் திருமுதுகுன்றரும்

சு. தங்கத்துரை, விருத்தாசலம்.

சமயக் குரவர்களால் பாடல் பெற்ற திருத்தலங்கள் எல்லாம் மூர்த்தி, தலம், தீர்த்தம் மூன்றாலும் சிறப்புற்றவையாகும். நால்வரால் வழிபடப் பெற்றதும் மூவரால் பாடப்பெற்றதும் ஆகிய திருத்தலம் திருமுதுகுன்றமாகும். இத்திருத்தலத்திற்கு வந்த திருஞானசம்பந்தர் பாடிய திருப்பதிகங்கள் ஏழு கிடைத்துள்ளன. அவற்றை முதல் திருமுறையில் நான்கையும், இரண்டாம் திருமுறையில் ஒன்றையும் மூன்றாம் திருமுறையில் இரண்டையும் வைத்துப் போற்றியுள்ளனர். மூர்த்தி, தலம், தீர்த்தம் என்ற அமைப்பை அடிப்படையாகக் கொண்டு திருமுதுகுன்றத்தின் பெருமைகள் திருஞானசம்பந்தர் நோக்கில் வகைதொகை செய்து ஆய்வு நோக்கில் விளக்கப்பட்டுள்ளன.

மூர்த்தி

திருமுதுகுன்றத்தில் எழுந்தருளிக் கொண்டிருக்கும் பெருமானின் திருநாமம் அருள்மிகு பழமலைநாதர் என்னும் விருத்தகிரீஸ்வரர். திருஞானசம்பந்தர், திருமுதுகுன்றத்து இறைவனைத் தம் பாடலில் 'முதுகுன்றத்து இறையை', 'அத்தன்முதுகுன்றை', 'திருமுதுகுன்றரை', 'முதுகுன்றத்தீசனை', 'முதுகுன்ற மேவியவனே' என அழைக்கும் முகமாகக் குறிப்பிட்டுள்ளார். சிவபெருமான் உறையும் இடம் திருமுதுகுன்றமே எனப் பல பாடல்களில் சுட்டிக் காட்டியுள்ளார்.

எ.டு. **'மறிஉலாம் கையினான் மங்கையோடு அமர்விடம்**
செறியுளார் புறவணி திருமுது குன்றமே' (3.34.2.3, 4)

திருஞானசம்பந்தருடைய பாடலில் திருமுதுகுன்றம் என்ற சொல்லைத் தவிரப் பழமலை என்றோ, விருத்தகிரி என்றோ, விருத்தாசலம் என்றோ குறிப்பிடப் படவில்லை. இதனால்தான் இந்தக் கட்டுரைக்கு 'திருஞானசம்பந்தரும் திருமுதுகுன்றரும்' என்ற தலைப்பு கொடுக்கப்பட்டுள்ளது.

சிவபெருமானே மலை வடிவில் இருக்கின்றான் என்று திருஞான சம்பந்தர் கூறுவதுபோல, திருநாவுக்கரசர், சுந்தரர், ஞானக்கூத்தர் போன்றோரும் குறிப்பிட்டுள்ளனர்.

ஞானக்கூத்தர்,

"உருவாய் கிரிவடிவாய் அனந்தகோடி
ஒளியுடைய கொடிமுடிகளாகி நின்ற
பெருவாழ்வைத் திருமுது குன்றடையான் தன்னை"

(விருத்தாசல புராணம்-2.3, 4)

எனப் பாயிரத்தில் குறிப்பிட்டுள்ளார்.

சிறப்பு

மூர்த்தியாகிய திருமுதுகுன்றரின் அற்புதச் செயல்களையும் உடல் அமைப்பு வருணனைகளையும் அவரோடு தொடர்புடைய புராணச் செய்திகளையும் ஒவ்வொரு பாடலிலும் வெளிப்படுத்தியுள்ளதைக் காண முடிகிறது.

காலில் கழல், கையில் சூலம் கொண்டு எதிர்த்த அந்தகாசுரனை நீண்ட வேலால் தண்டித்த பெருமான் (1.12.5); கைலை மலையைத் தூக்கிய இராவணனைத் தண்டித்தவன் (1.12.8); பிரமனும் திருமாலும் காணமுடியாமல் அனல்பிழம்பாய் அண்டம் கடந்து நின்றவன் (1.12.9); முப்புரத்தையும் எரித்தவன் (1.131.4) என்றும் தீக்கனல் போன்ற நிறமுடையவன், பிறை சூடிய திருச்சடையை உடையவன்; இடபத்தில் ஊர்ந்து வருபவன் (1.12.7); கோடாலி ஆயுதம் உடையவன்; பாம்பைக் கச்சையாகக் கட்டியவன் (3.99.2); பிரமனின் மண்டை ஓட்டில் பிச்சை ஏற்பவன்; உமையை ஒரு பங்கில் வைத்தவன் (1.53.3); விடத்தை உண்டவன் (1.53.10); யானையின் உரித்த ஈரத்தோலைப் போர்த்தியவன் (3.34.6) எனவும் திருமேனி வருணனையைத் திருஞானசம்பந்தர் குறிப்பிட்டுள்ளார்.

முதுகுன்றநாதர் திருமுதுகுன்றத்தில் நடனமாடினார் என்பதை,

**'செழுங்கல் வேந்தன் செல்விகாணத் தேவர் திசைவணங்கத்
தழங்குமொந்தை தக்கை மிக்கப் பேய்க்கணம் பூதம்சூழ
முழங்கு செந்நீ ஏந்திஆடி மேயது முதுகுன்றே'** (1.53.5.2-4)

எனச் சுட்டியுள்ளார். மேலும் ஆறு சமயங்களுக்குத் தலைவன் (1.13.1.1); அருமறையின் பொருள் பாடியவர் (3.34.9); அறம் கிளரும் நான்கு வேதங்களையும் ஆலின் கீழ் இருந்து அருளினார் (1.131.7); நான்கு பொருள்பற்றிக் கூறினார் என்றும் சிறப்பித்துள்ளார். இதனை,

**......"சைவவேடம் தாள் இணைந்த ஐம்புலனும்
அழிந்தசிந்தை அந்தணாளர்க்கு அறம்பொருள் இன்பம்வீடு
மொழிந்த வாயான் முக்கண் ஆதி"** (1.53.6.2-4)

எனப் பாடியுள்ளார். ஆன்மாக்களைத் தொடக்கக் காலமுதலே பற்றி நிற்கும் 'பசு, பாச வேதனைகளை நீக்கி வீடுபேறு' அருளும் நோக்கில் திருமுதுகுன்றத்தில் வீற்றிருக்கிறார் (1.12.3) எனச் சிறப்பை உணர்த்துகிறார்.

முதுகுன்றரை வழிபட்டோர் அடையும் பலன்

வாழ்வில் மனிதனுக்கு எது எது தேவையோ அவை எல்லாம் முதுகுன்றரை வழிபட்டால் கிடைக்கும் என்பது ஞானசம்பந்தர் வாக்கு.

எ.டு. **நின்று மலர்தூவி**
இன்று முதுகுன்றை
நன்றும் ஏத்துவீர்க்கு
என்றும் இன்பமே (1.93.1)

ஈசன் முதுகுன்றை
நேசமாகநீர்
வாச மலர் தூவப்
பாச வினைபோமே. (1.93.4)

மேலும் முதுகுன்றம் மேவிய முதுகுன்றரை வழிபடுபவர்கள், நைவிலர் நாள்தோறும் நலமே பெறுவர் (3.99.2), பழியொடு பகை இலம்தாமே (3.99.3), பயன்தலை நிற்பவர் தாமே (3.99.9), பழி இலரே (3.99.11), இல்லையாம் பாவமே (3.34.11), நீடுலகம் ஆள்வர் தாமே (1.131.11) என அவரின் திருவடி உலகத்தை அடைவார்கள் என்று முடிவாகத் திருவாய் மலர்ந்தருளியுள்ளார்.

தலம்

மூர்த்தியின் பெருமையைக் கூறும் இடங்களிலெல்லாம் தலத்தின் சிறப்பையும் வெளிப்படுத்தியுள்ளார். திருஞானசம்பந்தர் தான் திருமுது குன்றத்தில் கண்டவற்றைப் பாடியுள்ளார். தலத்தின் பெருமையை வாய்விட்டுச் சொல்ல முடியாத அளவுக்குச் சிறப்புடையது என்கிறார். அதனால்தான் கூடலையாற்றூரில் இருந்து அடியார்களைப் பார்த்துப் பாடி அப்பதிகத்தின் எல்லாப் பாடல்களிலும் தலத்தின் சிறப்பைக் கூறி 'முதுகுன்றடைவோமே' (1.12) என முடித்துள்ளார்.

முத்திதரும் உயர்முதுகுன்றம் (3.99.8), முயன்றவர் அருள் பெறும் முதுகுன்றம் (3.99.9), முறையால் முனிவர் வணங்கும் கோயில் முதுகுன்றை (2.64.11) என்றும் பல பாடல்களில் முதுகுன்றநாதர் உமையம்மையோடு வீற்றிருக்கும் தலம் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

எ.டு. **அஞ்சொலாள் உமையொடும் அமர்விடம் அணிகலைச்**
செஞ்சொலார் பயில்தரும் திருமுது குன்றமே (3.34.7.3, 4)

இயற்கை வருணனை

தேன்சிந்தும் செங்காந்தள் மலர்கள் நிறைந்த ஓடைகளும் வெட்டு வாரின்றி ஓங்கி வளர்ந்த முதிர்ந்த மூங்கில்கள் முத்துகளைச் சொரியும் சோலைகள் நிறைந்தது (1.12.8); மழைமேகங்கள் உறவாட உயர்ந்த

மரச்சோலைகள், நீர்நிறைந்த குளங்களின் பக்கங்களில் முயல்கள் ஓடவும் கெண்டை மீன்கள் நீரில் துள்ளிப்பாயும் இடம் (1.12.9); மழைமேகம் எப்பொழுதும் தவழ்ந்து கொண்டிருக்கும் தலம் (1.12.11) எப்பொழுதும் அரும்பு மலரும் சோலை, நிழல்பரவக் கூடிய அளவுக்கு மரங்கள் வளர்ந்து வானத்தை மூடிக் கொண்டிருக்கும் தலம் (3.99) எனப் பாடியுள்ளார்.

கிளைகள் நிறைந்த குரா, கொகுடு, முல்லை போன்ற மரங்கள் நிறைந்து வண்டுகள் பாடத் தேன்மணம் மிகுந்துள்ளச் சோலைகள் சூழ்ந்த தலம் (2.64.0) என்கிறார். மேலும்,

கொக்கு இனிய கொழும் வருக்கைகதலி கமுகு
உயர்தெங்கின் குவை கொள்சோலை
முக்கனியின் சாறு ஒழுகிசேறு உலரா
நீள்வயல் சூழ் முதுகுன்றமே (1.131.3.3, 4)

இவ்வாறு திருமுதுகுன்றத்து இயற்கை வளத்தை வருணித்துள்ளார்.

தென்றல்

மேகங்கள் தவழ்ந்த உயர்ந்த சோலைகளில், பழங்களையும் மலர்களையும் உதிரச் செய்து, குளிர்ந்த நீர், குளத்தைத் தழுவிக் குளிர்ச்சியும் மணமும் செறிந்த தென்றல் காற்று எப்பொழுதும் உலாவுகின்ற தலம் திருமுதுகுன்றமாகும் (1.131.2).

மலை வருணனை

வானமழை மேகத்தின் பறைகளின் ஒலிபோல முழக்கமும் வளைவான நகமும் தீப்பந்தக் கண்ணும் உள்ள சிங்கம் குகையுள் இருந்து குமிறும் முழக்கமும் உயர்ந்து ஒலிக்கும் இடம் திருமுதுகுன்றம் (1.12.2). வானோக்கி உயர்ந்த மூங்கிலில் இருக்கும் இளம் பெண்குரங்கு தன் குட்டியோடு வானமழை வரக்கண்டு அஞ்சி மலைக்குகைக்குள் புகவும், பெரிய யானைகள் உணவுதேடி அலையும் சாரல்கள் மிக்கதும் இந்த தலம் (1.131.5).

திருமுதுகுன்றம் மலைதான் என்பதற்குக் குறிஞ்சிநில மக்கள் ஆடிப்பாடி முருகன் பெருமையைக் கூறி குறிஞ்சிப்பண் பாடினார்கள் என்பது தக்கச் சான்றாகும்.

எ.டு. 'கருகுகுழல் மடவார்கூடி குறிஞ்சியதுபாடி
முருகன்னது பெருமைபகர் முதுகுன்ற டைவோமே'
(1.12.10)

கோயில் வருணனை

காணிக்கை செலுத்தப் பொன் ஆபரணங்களை தம் கைகளில் ஏந்தியபடி நல்ல நாட்கள் பலவற்றிலும் முரசுகள் முழங்க அரசர்கள்

கூடுவதால் அரிய திருமண மாளிகைபோல் பெருமங்கலம் பொலியும் கோயில் (1.12.4). மேலும் எப்பொழுதும் இங்கு வேதமந்திரங்கள் ஒலித்துக் கொண்டிருக்கும். மலர்கள், சந்தனம் போன்ற நறுமணப் பொருட்களைக் கொண்டு பலர் முறை தவறாது தொழுது பணிந்து நிற்கும் தலம். உலகில் பிறந்து இறவாதநிலை பெற்றோரும் இனிப் பிறவாத சீவன் முத்தர்களும் தவமே பெரும் தனமாக உடையாரும் முனிவர் களும் தொழும் திருக்கோயில் (1.12.5, 6) திருமுதுகுன்றமாகும்.

இசை

திருஞானசம்பந்தர் இத்தலத்திற்கு வருவதற்கு முன்பே இங்குள்ள கோயிலில் ஆடலும் பாடலும் நடைபெற்றிருந்திருக்கிறது என்பதை அறிய முடிகிறது. இதனைத் திருஞானசம்பந்தர் தெளிவாகப் பல இடங்களில் சுட்டிக் காட்டியுள்ளார்.

எ.டு. **'விழவோடு ஒலி மிகுமங்கையர் தகும் ஆடகசாலை**
முழவோடு இசை நடமுன்செயும் முதுகுன்ற டைவோமே'
(1.12.7.3, 4)

'முரசதிர்ந்தெழுதரு முதுகுன்றம்' (3.99.1.1)

தலத்தின் சிறப்பு

திருமுதுகுன்றம் பிரளய காலத்திலும் அழியாது நிற்கும் சிறப்புடையது எனக் காழிவேந்தர் குறிப்பிட்டுள்ளார். மேலுலகம் இடைப்பட்ட உலகம் போன்றவையும் பிரம்மாவும் அழிந்தாலும் முதுகுன்றம் உயர்ந்து நிற்கும்.

........''மணிமுது கௌவமுந்நீர்
நீடுபாரு முழுதும் ஓடி அண்டர் நிலைகெடலும்
நாடுதானும் ஊடும் ஓடி ஞாலமும் நான்முகனும்
ஊடுகாண மூடும் வெள்ளத்து உயர்ந்தது முதுகுன்றே''
(1.53.4)

மேலும் பிரளய காலக் கடல் நீரால் உலகம் மூடப்படும்போதும் மூழ்கிடாது உயர்ந்து நிற்கும் தலம் (2.64.1,3) என்றும், தெய்வீகத் திருஒளி வடிவாக நிலைத்த திருமுதுகுன்றம், பிரளயக் காலத்துப் பொங்கிப் பெருகும் பெரும் வெள்ளம் பேரொலியோடு இந்த வளமிக்க மண்ணுலகையே மூழ்க அடிக்கும் போதிலும் அந்த வெள்ளம் கீழாகத் தான் மேலாகி உயர்ந்து நின்றருளும் திருமுதுகுன்றமாகும் (1.131.9.3, 4) எனப் பெருமைப் படுத்தியுள்ளார்.

திருமுதுகுன்றம் செல்வம் படைத்த ஊர் என்பதனை ''மணி முத்தாநதி வெள்ளம் கொண்டுவந்து குவிக்கும் நல்ல மணிகளையும்

முத்துகளையும் கரை வாழும் அழகிய குறவர் சிறுபெண்கள், தங்கள் கைச்சிறு முறங்களினால் அவற்றைக் கொழித்து, மணிகளை கற்கள் என ஒதுக்கி, முத்துகளை அரிசி எனத் தங்கள் விளையாட்டு அடுப்பின் உலையில் போடும் வளம்கொண்ட திருமுதுகுன்றம்'' என்கிறார் (1.131.7.3, 4).

திருமுதுகுன்றம் முத்தித் தலமாகையால் தவம் புரிவதற்குச் சிறந்த இடம் என்கிறார். இதனை,

''ஞானிகளாய் உள்ளார்கள் நான்மறையை
முழுது உணர்ந்து ஐம்புலன்கள் செற்று
மோனிகளாய் முனிச்செல்வர் தனித்து இருந்து
தவம் புரியும் முதுகுன்றமே'' (1.131.10.3, 4)

இவ்வாறு நயத்துடன் பாடியுள்ளார்.

தீர்த்தம்

மூர்த்தி, தலம் இரண்டையும் விளக்கமாகக் கூறிய திருஞானசம்பந்தர் அங்குள்ள நித்தியானந்த கூபம், அக்கினி தீர்த்தம், சக்கர தீர்த்தம், குபேர தீர்த்தம், திருமணி முத்தாறு ஆகிய ஐந்து தீர்த்தங்களில் திருமணிமுத்தாற்றை மட்டும் பல இடங்களில் சுட்டிக் காட்டியுள்ளார். இந்த நதியை மட்டுமே ஏன் கூறினார் என்ற எண்ணம் தோன்றலாம். சத்தியின் (உமை) வடிவமே திருமணிமுத்தாறு என ஞானக்கூத்தர் குறிப்பிட்டுள்ளார். (தீர்த்தச் சருக்கம் - 2.2, 3)

திருமுதுகுன்றத்தைச் சூழ்ந்து வளம் கொழிக்கச் செய்த நதி மணிமுத்தாறு என்பதால் முதல் பாடலிலே அதன் சிறப்பைப் பாடியுள்ளார்.

'கொத்தார்மலர் குளிர் சந்தகில் ஒளிர் குங்குமம் கொண்டு
முத்தாறு'..... (1.12.1.3,4)

திருமணிமுத்தாறு திருமுதுகுன்றத்தை வலம் செய்கிறது என்பதனை,

''முழங்கு ஒலிநீர் முத்தாறு வலம்செய்யும்
முதுகுன்றத்து'' (1.131.11.1)

என்றும், அதன் சிறப்புகளைக் கூறும்போது 'பேச்சொலிபோல வெள்ளத்து ஒலி முழங்கிவரும் அலை நிறைந்துவரும் நீர்தெளித்துயரும் முத்தாறு' (3.34.4) என்றும், 'சந்தனம், குராமரங்கள் போன்றவற்றினை வாரிவந்து குவிக்கும் முத்தாறு' (2.64.5) என்றும், 'தெளிந்தநீர் நிறைந்தோடி வரும் மணிமுத்தாறு மூங்கில்களை உதிர்க்கும் முத்துக்களை அள்ளிக் கரை யேற்றும்' (1.131.1) என்றும், 'புண்ணிய நதியானது எண்ணிலா வகையான மலைப்பண்டங்களை அள்ளிவந்து இருகரைகளிலும் வீசும்' (1.131.6,7) என்றும் குறிப்பிட்டிருப்பதைக் காண முடிகிறது.

1. ஏழு திருப்பதிகங்களில் 1.93; 3.99 ஆகிய இரு பதிகங்களிலும் அதிகமாக முதுகுன்றாரின் பெருமையையும் அவரை வழி படுபவர்கள் அடையும் நலன்களையும் கூறியுள்ளார்.
2. தலத்தின் பெருமையை எல்லாப் பாடல்களிலும் சுட்டிக் காட்டி யுள்ளார்.
3. 1.12, 2.64, 3.34, 3.131 ஆகிய பதிகங்களில் திருமணிமுத்தாறு செய்தி உள்ளது.
4. இத்தலம் மலைதான் என்பதற்கு மலை வளம், குரங்கு, குறவர்கள் பற்றிய செய்திகள் காணக் கிடக்கின்றன.
5. காழிவேந்தன் பாடிய பாடல்களில் எந்த இடத்திலும் திருமுதுகுன்றம், குன்றுடையான் போன்ற சொல்லைத் தவிர வேறு எந்தப் பெயரும் இல்லை. எனவே அவருடைய காலத்தில் இந்தப் பெயர்தான் வழக்கிலிருந்தது எனலாம்.

50. சம்பந்தரின் பக்திநெறி

இல. தங்கராஜ், நாமக்கல்.

பக்தியின் பெருமை

சமுதாயத்தில் மக்களுக்குப் பல்வேறு நம்பிக்கைகள் இருப்பது இயற்கையாகும். அவைகளுள் ஒன்றே இறை நம்பிக்கை. கடவுள் பற்று உடைமையே பக்தி எனப்படும். எங்கும் நிறைந்த எல்லாம் வல்ல ஒரு சக்தி இருக்கிறது என்று நம்புவதே இறை நம்பிக்கை எனப்படும்.

நம் சிந்தனைகளுக்கு எல்லாம் அப்பாற்பட்டுச் செயல்படுபவன்தான் கடவுள் என்றும் அவனது செயல்பாடுகள் அனைத்தும் சரியானவையே என்றும் நம்புவது பக்தி.

உலகெ லாமுணர்ந் தோதற் கரியவன்

என்கிறார் சேக்கிழார்.

''அவனன்றி ஓரணுவும் அசையாது''

என்பது பரவலான நம்பிக்கை.

''சாட்டிநிற்கும் அண்டமெலாம் சாட்டையிலாப் பம்பரம்போல்
ஆட்டுவிக்கும் குற்றாலத் தண்ணலார்''

என்று குற்றாலக் குறவஞ்சி கூறுகிறது.

எல்லாச் செயல்களும் கடவுள் விருப்பத்தால் தான் நடைபெறு கின்றன. அவற்றை நாம் ஏற்றுக் கொண்டுதான் ஆகவேண்டும் என்ற மனப்பக்குவத்தைப் பக்தியுணர்வு நல்குகிறது.

''வேண்டி நீயா தருள் செய்தாய்
யானும் அதுவே வேண்டினல்லால்
வேண்டும் பரிசொன்று ண்டென்னில்
அதுவும் உன்றன் விருப்பன்றே.

என்று திருவாசகம் கூறுகிறது.

திருஞானசம்பந்தரின் பக்திநெறி

திருஞானசம்பந்தர் கிரியை மார்க்கத்தில் நின்றவர். சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற நான்கு மார்க்கங்கள் சைவ சமயத்தில் கூறப்படு

கின்றன. அவைகள் தொண்டு நெறி, பக்தி நெறி, யோக நெறி, ஞான நெறி என்று அழைக்கப்படுகின்றன. ஞானசம்பந்தர் வாழ்ந்து காட்டிய நெறி கிரியை மார்க்கம் எனக் கூறப்படும் பக்திநெறியாகும்.

இன்னிசையால் பக்தியை வளர்த்தவர்

''நாளும் இன்னிசையால் தமிழ் வளர்த்த ஞானசம்பந்தன்'' என ஆளுடைய பிள்ளையார் போற்றப்படுகிறார். இன்னிசைப் பாடல்களால் மனதை ஒருமைப்படுத்தி இறைவனிடம் பக்தியைச் செலுத்தலாம் என்பது அவரது கொள்கை. அதனால்தான் அவர் முதல் பாடலிலே இசையை ரசிக்கும் இறைவனுடைய செவியைப் புகழ்ந்து பாடுகிறார்.

''தோடுடைய செவியன்''

என்று சிவபெருமான் புகழப்படுகிறார்.

ஞானசம்பந்தர் இசைத் தமிழை நாடெங்கும் பரப்பியவர். இசைத் தமிழால் இறைவனை அடைய முடியும் என்பது அவர் கொள்கை.

''ஏழிசையாய் இசைப்பயனாய் இருப்பவன் இறைவன்''

என்பது அவரது கொள்கை.

பெரியபுராணம், திருத்தொண்டர் புராணம் என்று அழைக்கப் படுகிறது. சிவபெருமானின் அடியவர்களின் பக்தியின் பெருமையை விளக்கும் இந்த நூலில் ஞானசம்பந்தரின் பக்தியின் பெருமை பரவலாகப் பேசப்பட்டுள்ளது.

''பிள்ளைபாதி புராணம் பாதி''

என்பது ஒரு வழக்கு. அவரது பாடல்களுக்கு திருநீலகண்ட யாழ்ப்பாணர் என்ற அடியவர் உடனுக்குடன் பண் அமைத்து யாழில் வாசித்தவராவார். பண் என்பது பாடலின் ஒலி. ஞானசம்பந்தரின் தேவாரத்தில் மொத்தம் 23 பண்கள் அமைந்துள்ளன. முதல் திருமுறையில் 136 பதிகங்களில் 8 பண்களை அமைத்துப் பாடியுள்ளார். 2-ம் திருமுறையில் 122 பதிகங்களில் 6 பண்களை அமைத்துப் பாடியுள்ளார். 3-ம் திருமுறையில் 125 பதிகங் களில் 9 பண்களை அமைத்துப் பாடியுள்ளார். இவ்வாறாக இசையால் பக்தியை வளர்த்தவர் ஞானசம்பந்தர் ஆவார்.

பக்தர்கள் இறைவனுக்கு நெருக்கமானவர்கள்

பக்தர்கள் இறைவனை முழுக்க முழுக்க சரணடைந்தவர் ஆவார் ஞானசம்பந்தர். இறைவனிடம் முழு நம்பிக்கை கொண்டவர். ஆதலால் அவர் சகுனங்கள் கோள்களின் ஆட்சி, நட்சத்திரங்களின் பலன்கள் போன்றவைகளின் மீது நம்பிக்கை கொள்ளாதவர் ஆவார். சிறந்த

பக்தர்களை நாளும் கோளும் ஒன்றும் செய்யாது என்பதை விளக்கு வதற்காகப் பாடப்பட்டது கோளறு திருப்பதிகம் ஆகும்.

புகலிமன்னர் பாண்டிய நாட்டிற்கு எழுந்தருளத் துணிந்தபோது உடன் இருந்த நாவுக்கரசர் ''பிள்ளாய் அந்த அமணகையர் வஞ்சனைக்கு ஓர் அவதி (எல்லை) இல்லை. உரைசெய்வது உளது, உறுகோள் தாமும் தீய எழுந்தருள உடன்படுவது ஒண்ணாது'' என்றருளினார். அதுகேட்ட புகலிவேந்தர் ''பரசுவது நம் பெருமான் கழல்கள் என்றால் பழுது அணையாது'' எனப் பகர்ந்தார். ஆகவே பரமன் தாளைப் பணிபவர் களுக்குப் பழுது எப்போதும் ஏற்படாது என்ற கொள்கையை உடையவர் நமது பிள்ளையாராவார்.

கோளறுப் பதிகத்தின் முதல் பாடலில் நவக்கிரகங்கள் சிவனடியார் களுக்கு நன்மையைத் தான் செய்யும் என்று பாடியுள்ளார். 2-ம் பாடலில் ஜோதிட நூலால் ஆகாத நட்சத்திரங்கள் என்று ஒதுக்கப்பட்டவைகள் அடியவர்களை ஒன்றும் செய்யாது என்று கூறியுள்ளார். மூன்றாவது பாடலில் திசைத் தெய்வங்களும் அடியவர்களுக்கு நன்மையே செய்யும் என்று கூறியுள்ளார்.

நான்காவது பாடலில் நமன் அவருடைய தூதர்கள், கொடு நோய்கள் ஆகியவை பக்தர்களைத் துன்புறுத்த மாட்டார்கள் என்ற தனது கொள்கையை கூறியுள்ளார்.

ஐந்தாவது பாடலில் இயற்கைச் சக்திகளான இடி மின்னல் போன்றவைகள் கூட, பக்தர்களைக் கண்டு அஞ்சிடும் என்பது அவரது கொள்கையாகும்.

ஆறாவது பாடலில் கொடிய மிருகங்களான,

''கோளரியுழுவை யோடு கொலையானை கேழல்
கொடுநாகமொடு கரடி
ஆளரி''

ஆகியவைகள் பக்தர்களைத் தீண்டாது என்பது அவரது கொள்கை யாகும்.

ஏழாவது பாடலில் வெப்பு, குளிர், பித்தம்

''வெப்பொடு குளிரும் வாதமிகையான பித்தும்''

ஆகியவை தொடர்பான நோய்கள் பக்தர்களை நெருங்காது என்ற தமது நம்பிக்கையை கூறியுள்ளார். இவ்வாறாகப் பக்தர்களுக்கு இறைவன் நன்மையே செய்வார் என்று நம்பி ஆணையிட்டு இந்தப் பதிகத்தில் கூறியுள்ளார்.

''மறை ஞான ஞானமுனிவன்
தானுறு கோளு நாளு மடியாரைவந்து
நலியாத வண்ணம்''

என ஆணையிடுகிறார். இப்பாடல்கள் அடியவரைக் காக்கும் என்பது அவரது கொள்கையாகும்.

நாதன் நாமம் நமச்சிவாயம்

சிவபெருமானது ஐந்தெழுத்தாகிய நமச்சிவாயம்

''காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி
ஓதுவார் தம்மை நன்னெறிக் குய்க்கும்''

என்பது அவரது அசையாத நம்பிக்கையாகும். நமச்சிவாயம் என்று உச்சரித்தவர்களுக்கு எல்லாத் தீங்கும் நீங்கும் அவரது வல்வினை சிந்தும் அவர்களுக்குச் செல்வம் மல்கும் என்பது அவரது மதமாகும்.

உய்வினை நாடுக

நாம் செய்த பாவங்களால் தான் நமக்குத் துன்பங்கள் வந்துள்ளன என்று எண்ணிக் கொண்டு துன்பத்தில் உழல்வது பேதமையாகும். பக்தியினால் துன்பங்களை நீக்கிக் கொள்ளலாம் என்பது ஞான சம்பந்தரின் அசையாத நம்பிக்கையாகும்.

''அவ்வினைக் கிவ்வினை யாமென்று சொல்லு மஃதறிவீர்
உய்வினை நாடா திருப்பது முந்தமக் கூனமன்றே
கைவினை செய்தெம் பிரான்கழல் போற்றுது நாமடியோம்
செய்வினை வந்தெமைத் தீண்டப் பெறா திருநீலகண்டம்''

இறைவனுக்கு பக்தியுடன் தொண்டு செய்தால் நம் வினைகள் எல்லாம் நீங்கும் என்று திருநீலகண்டத்தின் மீது ஆணையிட்டுச் சொல்கிறார்.

இறைவன்மீது முழு நம்பிக்கை கொண்டு பக்தி செய்பவர்கள் எந்தக் குறையும் இல்லாமல் நல்ல வளமான வாழ்க்கை வாழ்வார்கள் என்பது ஞானசம்பந்தரின் பக்தியுள்ளம் கொண்ட முடிவாகும். இந்த (எண்ணத்தை) அசையாத நம்பிக்கையை,

''மண்ணின் நல்லவண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணின் நல்லகதிக்கு யாதுமோர் குறைவிலைக்
கண்ணி னல்லஃதுறுங் கருமல வளநகர்ப்
பெண்ணி னல்லாளொடும் பெருந்தகை யிருந்ததே''.

என்று தெரிவிக்கிறார்.

ஆலவாயான் திருநீறு

ஆலவாயான் திருநீற்றைப் பக்தியுடன் பாடுபவர்களையும், பூசுபவர் களையும் தீப்பிணிகள் நெருங்காது என்று அவரது பக்தியுள்ளம்

நம்புகிறது. பெருமை கொடுப்பது நீறு, அவல மறுப்பது நீறு, வருத்தம் தணிப்பது நீறு, பக்தி தருவது நீறு, முக்தி தருவது நீறு என்றெல்லாம் அவரின் பக்தியுள்ளம் நம்புகிறது.

வினைகள் தீரும்

அண்ணாமலையாரைப் பக்தியுடன் தொழுதால் நம்முடைய பழ வினைகள் எல்லாம் அறும் என்பது அவரது கொள்கை. இக்கொள்கையை,

''உண்ணாமுலை யுமையாளொடு முடனாகிய வொருவன்
பெண்ணாகிய பெருமான் மலை திருமாமணிதிகழ
மண்ணார்ந்தன வருவித்திரண் மழலைம் முழவதிரும்
அண்ணாமலை தொழுவார் வினை வழுவா வண்ணமறுமே''

எனப் பாடுகிறார்.

திருஞானசம்பந்தர் பக்தி மார்க்கத்தை பின்பற்றியவர். பக்திப் பாடல்களால் இறைவனிடம் பொற்றாளம் பெற்றார். மன்னன் மகளின் ''முயலகன்'' என்னும் நோயைப் போக்கினார். ஆண்பனையைப் பெண் பனை ஆக்கினார். அரவந் தீண்டிய பூம்பாவையை உயிர்ப்பித்தார்.

பக்தியால் எதையும் சாதிக்கலாம் என்று நம்பி வாழ்ந்த திருஞானசம்பந்தரின் நெறியைப் பின்பற்றி அவரது இன்னிசைப் பாடல்களை ஓதி உய்வோமாக.

51. சம்பந்தர் வளர்த்த சைவம்

அ. தமிழ்ச்செல்வி, பொன்னமராவதி.

பொன்னார் மதில்சூழ் புகலிக்கு அரசை, அருகர் தங்கள்
தென்னாட்டரன் அட்ட சிங்கத்தினை, எம்சிவன் இவன்என்று,
அந்நாள் இதலைத் திருவாய் மொழிகள் அருளிச் செய்த
என்ஆனையைப் பணிவார்க் கில்லை, காண்க யமாலயமே
(திருமுறை-1)

ஞானசம்பந்தர் பெயர்ச் சிறப்பு

1. கலைஞானம், 2. பவமதனை மாற்றும் ஞானம், 3. மெய்ஞ்ஞானம், 4. சிவஞானம் என ஞானம் நான்கு வகைப்படும்.

கலைஞானம் என்பது மண்ணில் பிறந்தார், பல்வேறு கலைகளை ஆராய்ந்து கற்பதால் வித்தியா குருவால் பெறக்கூடியது.

பவமாற்றும் ஞானம்

மனிதன் மண்ணில் பிறப்பது பிறவி ஒழிப்பதற்கே பிறவியைப் போக்கிக் கொள்ள மனிதன் ஒருவகை ஞானம் பெறவேண்டும். தான் உலகில் வந்த விதம்; வரக் காரணம்; இனிப்போகுமிடம்? தான் யார்; தன் தலைவன் யார், இனி அடையப் போகும் நிலை என்ன? என்பன எல்லாம் பற்றி ஆராய்ந்து செயல்பட வைக்கும் ஞானம்.

மெய்ஞ்ஞானம்

மெய்ஞ்ஞானம் சுத்த அறிவு, உலகம் நிலையற்றது என்பதை உணர்ந்து, பிற எந்தப் பொருளையும் சிந்திக்காமல், தன்னைப் பற்றி மட்டும் சிந்திக்க வைக்கும் ஞானம்.

சிவஞானம்

இது தன்னைப் பற்றி சிந்தித்து மெய்ஞ்ஞானம் பெற்றவர்களுக்கு கிடைக்கப் பெறுவது, சிவத்தை நினைவது, எண்ணுவது என்பது ஒருவனுக்குப் பயிற்சியால் கூட வரலாம். ஆனால் **சிவத்தையே சிந்திக்கும் திரு** அவனருளாலேதான் கைவரப் பெறவல்லதாகும். சேக்கிழார், **சிவஞானத்தை சிவனடியே சிந்திக்கும் திரு** என்றார். மெய்ஞ்ஞானம் பெறவில்லையெனில் சிவஞானமும் பெறமுடியாது.

ஞானசக்தியாகிய அன்னையின் திருமுலைப்பால் உண்டதால் இந்த நான்கு வகை ஞானங்களையும், திருமுலைப் பாலுண்ட அதே நேரத்தில் உணர்ந்தவர் ஞானசம்பந்தர் ஆவார்.

சேக்கிழார் பெருமான்,

''சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானம்
பவமதனை அறமாக்கும் பாங்கினில் ஓங்கிய ஞானம்
உவமையிலாக் கலைஞானம் உணர்வரிய மெய்ஞ்ஞானம்
தவமுதல்வர் சம்பந்தர், தாம்உணர்ந்தார் அந்நிலையில்''

(திருத்தொண்டர் புராணம்-70)

என்று அழகாகப் பேசுவார். 4 வகை ஞானத்தையும் ஒருங்கே பெற்றிருந்த தாலும், ஞானசக்தியையே தன்னுடைய தாயாகப் பெற்று, அவ்வன்னை யிடம் மகன் என்ற பந்தத்தைப் பெற்றதாலும், ''ஞானசம்பந்தர்'' என்னும் பெயர் இவர்க்கு அமைந்தது மிகச் சிறப்பேயாகும். ''தடையிலா ஞானமே சக்தியாகும்'' என்பார் சேக்கிழார். ஞானத்தையே பாலாக உண்டு, ஞானமே வடிவாக வந்தவரும் நம் ஞானசம்பந்தரே''.

மேலும் இவர் **சீவன் முத்தராய்** வாழ்ந்தவர், இறைவனுடைய ஆணையால் மண்ணில் வந்து மறுபடியும் மானுட வடிவில் பிறந்தார் என்பதை,

''துறக்குமா சொலப்படாய் துருத்தியாய் திருந்தடி
மறக்குமாறு இலாதஎனை மண்ணின்மேல்
பிறக்குமாறு காட்டினாய்'' (திருமுறை-2.98.6)

என்ற இவருடைய அடிகளால் அறியலாம்.

ஒரு சீவன் முத்தரை இறைவன் மண்ணில் மறுபடியும் பிறக்கச் செய்கிறான் என்றால், மண்ணில் ஒரு மிகப்பெரிய மாற்றத்தை உண்டு பண்ணவே, உலகம் பயனுறவே என்பது வெள்ளிடை மலையாகும். சம்பந்தர், தோன்றியதால் உலகம் முழுவதும் மெய்யறிவு நிறைந்து பொய்யறிவு அழிந்தது. சைவ நெறியாகிய சிவத்தைப் பெருக்கும் நிலை உண்டானது. இதனைச் சேக்கிழார்,

''இசை முழுவதும் மெய்யறிவும் இடங்கொள்ளும் நிலை பெறுக,
.... தாவில் சராசரமெல்லாம்
சிவம் பெருக்கும் பிள்ளையார் திருஅவதாரம் செய்தார்''

(ஞான.புராணம் - 26 (3, 4)

என்பார். 64 நாயன்மார்கள் வரலாறு எழுதிய சேக்கிழார், மண்ணில் பிறக்கும் போதே **சராசரமெல்லாம் சிவம் பெருக்கப் பிறந்தார்** என்று போற்றுவது **ஞானசம்பந்தர்** ஒருவரையே ஆகும். ஞானசம்பந்தர் தொடுத்த

புரட்சிப் போரால் புத்தம், சமணம், வைணவம் முதலியவற்றால் நெருக்குண்டிருந்த சைவ சமயம் மறுமலர்ச்சி பெற்றது. பிற மதங்களின் ஆதிக்கத்தால் மறைக்கப்பட்டிருந்த தமிழ்மொழி தமிழர் நாகரிகம் பண்பாடு மீண்டும் சிறப்புற்றது என்பதனை இவரது வரலாற்றால் நாம் அறிகிறோம். இதனைச் சற்று விரிவாக ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கம்.

ஞானசம்பந்தர் எப்படியெல்லாம் சைவத்தை வளர்த்தார் என்று தெரிய சைவ சமயம் ஆதியில் இருந்த நிலை, பின்னர் அதன் வளர்ச்சி, தாழ்ச்சி நிலைகள், சம்பந்தர் பிறந்தபோது சைவம் இருந்த நிலை இவற்றை நாம் ஓரளவு ஆராய வேண்டும். சிவம் என்று உண்டோ அன்று தோன்றிய சைவம், உலகம் என்று தோன்றியதோ அன்று தோன்றியது சைவ சமயமாகும்.

தென்னாட்டில் பிறந்தது சைவ சமயம்

உலகு முழுவதுமே சைவ சமயம் மட்டுமே ஒரு காலத்தில் இருந்துள்ளது என்பதனை திருமூலர் வாயிலாகவே நாம் அறிய முடிகிறது. தமிழ்நாடு சேர மண்டலம், சோழ மண்டலம், பாண்டிய மண்டலம், தொண்டை மண்டலம், கொங்கு மண்டலம் என்ற ஐந்து பிரிவாக இருந்துள்ளது. இந்த ஐந்து மண்டலங்களிலும் சிறப்புற்றிருந்த, சைவ சமயம் இங்கிருந்து தாவி உலக முழுதும் சென்றுள்ளது.

தமிழ் மண்டலம் ஐந்தும் தாவிய ஞானம்
உமிழ்வது போல உலகம் திரிவார்,
அவிழு மனமும் எம்ஆதி அறிவும்
தமிழ் மண்டலம் ஐந்தும் தத்துவமாமே! (திருமந்திரம்)

உலகம் என்பது பூமி உருண்டையாகும். பூமியில் உள்ளனவே அமெரிக்கா, ஐரோப்பா, ஆஸ்திரேலியா, ஆசியா முதலிய கண்டங்கள், உலக முழுதும் சென்று தமிழ்நாட்டுச் சித்தர்கள் ஆங்காங்கே உள்ள பக்குவப் பட்ட ஆன்மாக்களுக்கு சைவ சமய நெறிகளை ஆதியில் தோன்றிய தத்துவ அறிவை போதித்துள்ளனர். எனவே ஆங்கெல்லாம் தமிழ் மொழியும் சைவ சமயமும் சிவலிங்க வழிபாடும் பரவியிருந்தது. இஃது அக்கண்டங்களில் இருந்து இப்போது அகப்படும் சிவலிங்கங்களாலும் கல்வெட்டுக்களாலும் உறுதி பெறுகிறது. பழங்காலத்தில் உலகத்திற்கெல்லாம், ஒரே சமயம், அது நம் சைவ சமயமாகவே இருந்தது. அதனால்தான் சேக்கிழார் வாக்கில்,

''சராசரமெல்லாம் சிவம் பெருக்கும் பிள்ளையார்
திருஅவதாரம் செய்தார்''

என்று மலர்ந்தது.

பிற்கால மாறுதல்கள்

திருமூலர், காலத்திற்கு பின்,

பூத மதம் கி.மு. 1500-1200 (இன்றைக்கு 3800 ஆண்டுகட்கு முன்)

வேதங்கள் தோன்றியது கி.மு. 1200-800

உபநிடத காலம் கி.மு. 1200-600

ஷிண்டோ மதம் கி.மு. 660

சமணம் கி.மு. 599

பௌத்தம் கி.மு. 560

பௌத்த சமண ஆதிக்கம் கி.பி. 300 கி.பி. 600 இதுவே இருண்ட காலம்.

பல்லவர் காலம் கி.பி. 600 - கி.பி. 800

சோழர் காலம் கி.பி. 800 - கி.பி. 1200

சைவ மறுமலர்ச்சிக் காலம் கி.பி. 600 - 1200

ஞானசம்பந்தர் தோன்றிய காலம் கி.பி. 638, கி.பி. 641 ஆகும்.

ஞானசம்பந்தர் தோன்றிய பொழுது தென்னாட்டில் வேதங்களாலும் வைதிக நெறிகள் மரபுகளாலும், சைவ சமயத்திற்கும், தமிழ் மரபுக்கும் ஏற்பட்ட இடையூறுகள் பல. மேலும் சமணம் பௌத்தம் போன்ற மதங்கள் சைவத்தையே அமிழ்த்தியிருந்தது.

வடமொழியில் தோன்றிய வேதங்களில் சிவ வழிபாடுகளின்றி ருத்ரன் அக்னி போன்ற கடவுளர்கட்கே வேள்விகள் சொல்லப்பட்டது. வடக்கேயிருந்து ஆரியர்கள் தென்னாட்டில் புகுந்ததையும், வைதிக நெறிகளைப் பரப்பியதையும் தண்டன் தோட்டச் செப்பேடுகள் கூறுகின்றன. பழந்தமிழ் நாட்டு உயர்ந்த சைவ சமய நெறிமுறைகள் மறுக்கப் பட்டது. கொல்லாமை நெறி மறைந்து கொலை புலை வேள்விகள் செய்யப் பட்டன. சிவ வேள்வி மறுத்துப் பிற தெய்வ வேள்விகள் செய்யப்பட்டன.

''பற்றாய நற்குரு பூசைக்கும் பண்மலர்,
மற்றோர், அணுக்களைக் கொல்லாமை, ஒண்மலர்,
நற்றார், நடுக்கற்ற தீபமும் சித்தமும்
உற்றாகும் ஆவி அமர்ந்திடம் உச்சியே'' (திருமந்திரம்)

என்பார் நம் திருமூலர்.

''எட்டு நாண்மலர், கொண்டு அவன் சேவடி,
மட்டலரிடு வார்வினை மாயுமால்''

என்பார் நம் அப்பரடிகள். கொல்லாமை, புலனடக்கம், அன்பு, அறிவு, கருணை, சத்தியம், பொறுமை, உறுதி என்ற எண்குணங்களாய் எட்டு மலர் கொண்டு இறைவனைப் பூசை செய்ய வேண்டும். இதுவே

பழந்தமிழர் பயின்ற உயர்ந்த சைவ சமய நெறியாகும். மற்ற செடி மலர்கள் கொண்டு பூசை செய்வது பாற்கலனையும், எண்குண எட்டு மலர் கொண்டு அர்ச்சிப்பது. பாற்கலனில் நிறைந்துள்ள பாலையும் போன்றதாகும். மேலும் அன்பே சிவம் என்ற தமிழரின் பக்தி உணர்வு வழிபாடுகள் மறைந்து ஆங்கே வெறும் சடங்குகட்கும், உளந்தொடாத வாயால் சொல்லப்படும் மந்திர உச்சரிப்புகளுக்கும் முக்கிய இடமளிக்கப் பட்டது.

புராண காலத்தில் கூடச் சிவனுக்கு வேள்வியா, மற்றைத் தெய்வங்கட்கா? என்ற போராட்டம் இருந்துள்ளதைத் தக்கன் கதை மூலம் நாம் அறிகிறோம்.

ஞானசம்பந்தரின் சிவவேள்விப் புரட்சியும்
சைவ சமய வளர்ச்சியும்

"இருமைக்கும் இன்பம் பயக்கும் யாகமும் நான் செயவேண்டும்"

என்று பொருள் கேட்ட தந்தைக்கு, திருவாவடுதுறையில் மாசிலா மணியீசரிடம் பொன்கிழி பெற்றுத் தந்து ஞானசம்பந்தர், சொல்லும் வாக்கு.

> **ஆதி மாமறை விதியினால், ஆறுசூழ் வேணி**
> **நாதனாரை முன்னாகவே புரிய நல்வேள்வி**
> **தீது நீங்க நீர் செய்யவும், திருக்கழுமலத்து**
> **வேத வேதியர், அனைவரும் செய்யவும் மிகுமால்** ஞான.புரா. 4(9)

என்பதாகும். வேள்விகள் 21 வகையாக வேதங்கள் பேசும், இங்கு ஞானசம்பந்தர் சொல்வது அவற்றுள் அடங்காத ஆறுசூழ் வேணி நாதனாகிய சிவபெருமானை முன்னிறுத்திச் செய்யும் சிவவேள்வி ஆகும் என சொல்கிறார். அதுவும் கொலை இல்லாத நல்வேள்வி, நலம் தரும் வேள்வி செய்யச் சொல்கிறார். இன்னும் 'தீது நீங்க நீர் செய்யவும்' என்று ஆணையிடுகிறார். இதற்கு முன் செய்த பிற தெய்வ, கொலை புலை வேள்வியால் உண்டான தீங்குகள் அனைத்தும் நீங்க சிவவேள்வி நல வேள்வி செய்யும்படி கூறுகிறார். தந்தையார், மட்டுமல்ல சீர்காழியில் உள்ள வேதம் சொல்லும் வேதியர்கள் அனைவரும் செய்ய வேண்டும் என்று கட்டளை இடுகிறார். பின்னரே நாடு முழுதும் சிவ வேள்விகள் செய்யப்பட்டன.

ஞானசம்பந்தரின் அன்புப் புரட்சியும், சைவ சமய வளர்ச்சியும்

சம்பந்தர் அக்காலத்தே வைதிகர்கள் வழிபாட்டில் செய்த வெறும் சடங்குகளைக் கண்டித்து, அன்பே சிவம் என உணர்த்தி, ''காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி ஓதுவார், தமை நன்னெறிக்குய்ப்பது'' (திருமுறை -

3.49.5) என்று பாடினார். தொண்டர்கள் அன்பு அகத்தில்லாது ஆடிப்பாடி, கடித்தொழுதலால் எப்பயனும் இல்லை என்பதை உணர்த்தும் வாயிலாய்,

''தொண்டர் கடித் தொழுது ஆடிப்பாடும்
அன்பலால் பொருளுமில்லை'' (திருமுறை-4.40.4)

என ஆணித்தரமாக இறையன்பின் மாட்சியைச் சமுதாயத்தில் தெளிவு படுத்தினார்.

ஞானசம்பந்தரின் நமசிவாயப் புரட்சியும், சைவ சமய வளர்ச்சியும்

வைதிகம் பரவியிருந்த அக்காலத்தே வைதிக நெறியை முழு மூச்சாக எதிர்த்த ஞானசம்பந்தர் ''பஞ்சாட்சரம்'' என்று ஒருமுறை கூடச் சொல்லாமல் வாய்ப்புக் கிடைத்த போதெல்லாம் தமிழின் பெருமை பேசி, திரு ஐந்தெழுத்தே முடிவான மந்திரம் என்று பாடியது வைதிக நெறியைச் சாடியது ஆகும். மேலும் நாடு முழுதும் வைதிகமும், வடமொழியும் பரவி வேதங்கள் தாமே தோன்றியவை. அவற்றின் மேம்பட்டவை ஏதும் இல்லை என்று மக்களைச் சொல்ல வைத்த நிலையில் ''வேதம் நான்கினும் மெய்ப்பொருள் ஒன்று உண்டு'' என்ற கருத்தை முதன் முதலில் சொன்னவர் நமது புரட்சிப் பிள்ளையாரே ஆவார். ''அந்த மெய்ப்பொருள் சிவபெருமானின் பெயராகிய நமசிவாய மந்திரமே'' என்றும் சொன்னது இதுவரை யாரும் சொல்லாததாகும். யாரும் செய்யாத புரட்சியும் ஆகும்.

ஞானசம்பந்தர், வேதம், அங்கம் முற்றிலும் ஓதாது உணர்ந்தவராதலின் உபநயனம் போதே மறையவர்களின் ஐயங்களையெல்லாம் போக்கினார். அவர்களைவிட அதிக ஆற்றல் பெற்றவர், ஆதலாலும் வேதம் ஓதும் குலத்திலே பிறந்தவர் ஆதலாலும், அவர்கள் மறுக்க முடியாவண்ணம் தம்முடைய கொள்கையை நிலைநாட்டினார்.

ஞானசம்பந்தர் பௌத்த சமணத்தை வேரோடு சாய்த்துச் சைவ சமயத்தை வளர்த்தது

தென்தமிழ் நாட்டின் இருண்ட காலம், சமணர் ஆதிக்கமும், களப்பிரர் ஆட்சியும் நிறைந்த கி.பி. 300 முதல் 600 வரை ஆகும். இக்காலத்தே பாண்டிநாடு, கொங்குநாடு இரண்டும் களப்பிரரின் நேரடித் தாக்குதலுக்கு உட்பட்டது. ஆனைமலை போன்ற இடங்களில் ஆயிரக்கணக்கில் சமணர்கள் வாழ்ந்துள்ளனர். பாண்டியன் அரசன் நெடுமாறனே சமணன் ஆனான் என்றால் அந்நாட்டின் சைவமேது? யாண்டும் சிவன் கோயில்கள் இடிக்கப்பட்டுச் சமணப் பள்ளிகள் ஆக்கப்பட்டது. எனவே பாடல் பெற்ற தலங்கள் சோணாட்டில் 190-ம், தொண்டை நாட்டில் 32-ம், நடுநாட்டில் 22-ம் இருக்கப் பாண்டி நாட்டில் 14 மட்டும், கொங்குநாட்டில் 7 மட்டுமே குறைவாக உள்ள

காரணம் இதுவே ஆகும். இந்நிலையிலேதான் மங்கையர்க்கரசியால் அழைக்கப்பட்டுக் குலச்சிறையாரோடு மதுரைக்கு வருகிறார். நம் பிள்ளையார், நாவுக்கரசர், பிள்ளாய், அந்த அமண்குண்டர் வஞ்சனைக்கு ஓர் அவதியில்லை ''போகவேண்டாம் எனத் தடுத்தும், நம்பிரான் உளத்திருக்க நாளும் கோளும், யமனும், பிற தெய்வங் களும், விலங்கும் இன்னும் வருகாலமான தீங்கும் நல்லதே செய்யும்'' எனச் சொல்லி வருகிறார். பாண்டித் தமிழ்நாட்டில், ''சைவ நெறி தழைத்து ஓங்க உரைசெய் திருப்பேர் பலவும் ஊதும் மணிச் சின்னமெலாம், ''பரசமயக்கோளரி வந்தான்'' என முழங்கிற்று என்பார் சேக்கிழார்.

ஞானசம்பந்தர் சமணர்களை வாதில் வென்று, ஐந்தெழுத்து மந்திரத்தாலும் அணிந்த திருநீற்றாலும், பாண்டியனின் வெப்பு நோயும் நீங்கியவுடன், மன்னன் நீறு அணிந்தார் என்று மதுரையில் மற்றுவாழ்வா ரெல்லாம் நீறு அணிந்தார்கள். அங்கே வெண்ணீற்றின் விரிந்த சோதியால் அமண் இருள் மாய்ந்தது. பாண்டி நாட்டில் வேறு ஒரு தெய்வமே இல்லை என்று சொல்லியவண்ணம் சைவ சமய வெற்றிக்கொடி பறந்தது. அது ஞானசம்பந்தரின் புகழ்க்கொடியாகவும் வெற்றிக் கொடியாகவும் விளங்கிற்று. இதனை, ''வேறு ஒரு தெய்வம் இன்மை விளங்கிய பதாகைத் தம்பம் போற்று சீர்ப்பிள்ளையார் தம் புகழ்ச் சயத்தம்பம் ஆகும்'' என்று பாடிப் பெருமிதம் கொள்வார் நம் சேக்கிழார். (திருத்தொண்டர் புராணம்) மயிலையில் பூம்பாவையின் எலும்பை உயிர்பெற்றெழச் செய்து அற்புதம் நிகழ்த்திய ஞானசம்பந்தர் மதுரையில் பாண்டியனுக்கும் உயிர் கொடுத்து மெய்நெறி காட்டிடவும், சம்பந்தரின் வாய்மையும் சிறப்பும் ஞாலம் முழுதும் பெருகி ஓங்க, தேன் அலர் கொன்றையானாகிய சிவபெருமானின் சைவ நெறி உலக முழுதும் நிறைந்தது. உயிர்கள் பிறவித்துன்பம் நீங்கிடப் பெற்றன.

ஞானசம்பந்தர் தமிழ் வளர்த்து சைவம் வளர்த்தது

பல்லவர்கள் காலத்தில் பல்லவ அரசர்கள் யாண்டும் அவர்கள் தமிழை விடுத்து வடமொழியையே வளர்த்துள்ளனர். காஞ்சியில் கடிகைகள் பல ஏற்படுத்தி வடமொழி பயிற்றுவிக்கப்பட்டது. மகேந்திரவர்மன், நரசிம்மன் மற்ற விலாசப்பிரவசனம் எனும் வடமொழி நூல் எழுதினான். கோயில்களிலும் வடமொழி வழிபாடு இவர்களே தோற்றுவித்தார்கள். தமிழ் மொழிக்கு ஆக்கம் குறையவே பழந்தமிழர் பண்பாடும், நாகரிகமும் குறைய சைவ சமயமும் ஆக்கம் குறைந்தது. இங்ஙனம் தளர்ந்துவிட்ட தமிழ்ச் சமுதாயத்தை தட்டி எழுப்பிய பெருமை சம்பந்தரையே சாரும். வேதம் சொல்லாத கடவுள் படிமத்திற்கு அபிஷேகம், அர்ச்சனை தமிழால் வழிபாடு போன்றவற்றை செய்யவேண்டும் என்று வலியுறுத்தினார்.

''செந்தமிழர், தெய்வமறை நாவர், செழுங்கலை தெரிந்த அவரோடு அந்தமில் குணத்தவர்கள் அர்ச்சனைகள் செய்ய அமர்கின்ற அரனார்''.

''பாலினால், நறுநெய்யால் பழத்தினால் பயின்றாட்டி''

''ஆடினாதேன், நெய் பால் தயிர், தெங்கிளநீர், கரும்பின்தெளி ஆன் அஞ்சாடும் முடியான்''

என்பன அவர் வாக்கு. எனவேதான் தமிழ் ஞானசம்பந்தன் என்றும் தமிழ் விரகன் என்றும் தமிழோடு சேர்த்தே சேக்கிழார் பெருமான் நூற்றுக்கும் மேலான இடங்களில் ஞானசம்பந்தரைப் போற்றினார்.

இவர் காலத்தே சைவ வைணவப் போராட்டமும் இருந்தது. எனவே தனது பதிக முழுதும் 8-ம் பாடலில் இராவணனின் சிவபக்தியை கூறி 9-ம் பாடலில் நான்முகன் நாராயணன் காணாதவன் சிவன் என்றும் கூறி 10-ம் பாடலில் புத்தம், சமணம் இரண்டையும் தாக்குவதையே வழக்கமாகக் கொண்டார். சமணம், புத்தம், வைதிகம், வைணவம் போன்றவை தத்தம் கொள்கைகளே உயர்ந்தது என மக்களை இழுக்கையில் அதனிடை அகப்பட்டு வழி தெரியாமல் தவிக்கும் சமுதாயத்திற்கு, அவர்கள் நம்பும் வகையில் துன்பம் நீங்கும், துயரம் நீங்கும் என்று கூறுவதுடன், ''இது சத்தியம் - ஆணை நமதே'' இதை நம்பலாம் என்னும் வகையில் திருக்கடைக்காப்பும் பதிகம்தோறும் பாடியது அன்றைய சமுதாயத்திற்கு ஓர் ஊன்றுகோல் போல் ஆயிற்று, தமிழராகிய நாமும், தமிழ்நாடும், ஒப்பற்ற நமது சைவ சமயமும், நமது பண்பாடு, குறிக்கோள் முதலிய அனைத்தும் காப்பாற்றப் பட்டது. புரட்சி வீரராம் ஒரே பெருமகனாகிய ஞானசம்பந்தராலே ஆகும்.

''வருவிசைப் புனலைக் கற்சிறைபோல ஒருவன் தாங்கிய பெருமை'' என்று தொல்காப்பியனார் வஞ்சித்திணை வீரரின் செயலை வர்ணித்தது நமது ஞானசம்பந்தருக்கும் பொருந்தும்!

52. சம்பந்தர் பாடிய வீரட்ட தலங்கள்

க. தர்மபுத்திரன், கோவை.

கோவில் என்ற சொல் சைவ சமயத்தாரைச் சிதம்பரத்தையும், வைணவ சமயத்தாரைத் திருவரங்கத்தையும் நினைக்கத் தூண்டும். காஞ்சிபுரம் கோவில்கள் நிறைந்த நகரம் என்ற சிறப்புடையது. சிறிய ஊராயிருந்தாலும் அவ்வூரிலும் கோவில் ஒன்று இருக்கும்.

'கோவில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்' என்பது உலக வழக்கு. வைணவத்தில் 'நாலாயிரத் திவ்வியபிரபந்தமும்' சைவத்தில் 'பன்னிரு திருமுறைகளும்' சிறப்பான இடங்களைப் பெற்றுள்ளன. பன்னிரு திருமுறைகளுள் முதல் ஏழு திருமுறைகள் தேவாரம் என்று அழைக்கப்படும். அவற்றைப் பாடிய சம்பந்தர், அப்பர், சுந்தரர் ஆகிய மூவரும் 'மூவர் முதலிகள்' என்று போற்றப்படுகின்றனர். வயதில் இளையவரான சம்பந்தர் பாடிய பாடல்கள் முதல் மூன்று திருமுறை களாகத் தொகுக்கப்பட்டுள்ளன. அவர் பாடிய தலங்கள் பற்றிய சுருக்கமான ஆய்வே இக்கட்டுரையாகும்.

தேவாரத்தின் மூலம் அறுபத்து நான்கு கலைகளின் குறிப்பு களையும், பல சித்திரக் கவிகளையும், வரலாற்றுக் குறிப்புகளையும், இலக்கிய நயங்களையும், சித்தாந்தக் கருத்துக்களையும் தெரிந்து கொள்ளலாம்.

தேவாரப் பாடல்கள் தலமுறை, வைப்பு முறை என்று இருவேறு முறைகளில் கிடைக்கின்றன. தல முறையில் அமைந்த தேவாரத்தின் அடிப்படையில் ஞானசம்பந்தர் பாடிய தலங்கள் ஒன்பது தலைப்பு களில் தொகுத்துத் தரப்பட்டுள்ளன.

ஞானசம்பந்தர் பாடிய தலங்கள் விபரம்

வரிசை எண்	தலம் அமைந்துள்ள பகுதி	தலங்களின் எண்ணிக்கை
1.	சோழ நாட்டில் காவிரிக்கு வட கரையில் உள்ள தலங்கள்	54
2.	சோழ நாட்டில் காவிரிக்குத் தென்கரையில் உள்ள தலங்கள்	100

3.	ஈழ நாட்டில் உள்ள தலங்கள்	2
4.	பாண்டிய நாட்டில் உள்ள தலங்கள்	13
5.	கொங்கு நாட்டில் உள்ள தலங்கள்	4
6.	நடு நாட்டில் உள்ள தலங்கள்	15
7.	தொண்டை நாட்டில் உள்ள தலங்கள்	25
8.	துளுவ நாட்டில் உள்ள தலம்	1
9.	வட நாட்டில் உள்ள தலங்கள்	5
	மொத்தம்	219

திருப்பதிகங்கள்

தலங்கள் பற்றிய திருப்பதிகங்கள்	376
பொதுப் பதிகங்கள்	7
மொத்தம்	383

383 பதிகங்களில் இடம் பெற்றுள்ள திருப்பாடல்கள் 4147

பிற்சேர்க்கையாகக் கிடைத்துள்ள திருவிடைவாய் என்னும் தலத்தைச் சேர்த்துத் தலங்கள் எண்ணிக்கை 220 ஆகும். பதிகங்கள் எண்ணிக்கை 384 ஆகும். 11 திருப்பாடல்களைச் சேர்த்துத் திருப்பாடல் களின் எண்ணிக்கை 4158 ஆகும்.

ஞானசம்பந்தரை அழைத்துக் கொண்டு அவரது தந்தையார் சிவபாத இருதயர் குளிக்கச் சென்றார். அப்போது சம்பந்தருக்கு வயது மூன்று. சீர்காழிக் கோவில் குளக்கரையில் அவரை அமர வைத்து விட்டுத் தந்தையார் குளத்தில் இறங்கினார். நீரிற்குள் நின்று செய்யும் 'அகமருடனம்' என்ற மந்திர செபம் செய்து கொண்டிருந்தார். தந்தையைக் காணாமல் அழுத குழந்தைக்கு உமாதேவி பொற்கிண்ணத்தில் பாலூட்டினார். குளித்து முடித்துக் கரையேறிய தந்தையார் குழந்தை வாயில் பால் ஒட்டியிருப் பதைக் கண்டு திகைத்தார். குழந்தையிடம் கேட்கக் குழந்தை தோணிபுரத்தைக் காட்டித் தனக்குப் பால் கிடைத்த நிகழ்ச்சியை விவரிக்கத் தொடங்கியது. சம்பந்தரது முதல் பதிகம் பிறந்தது. அதிலுள்ள முதல் பாடல்,

'தோடுடைய செவியன் விடையேறி யோர்தூவெண் மதிசூடிக்
காடுடைய சுடலைப் பொடிபூசியென் உள்ளங்கவர் கள்வன்
ஏடுடைய மலரான் முனைநாட்பணிந் தேத்த அருள்செய்த
பீடுடைய பிரமாபுரம் மேவிய பெம்மா னிவனன்றே'.

என்பதாகும். அம்மையப்பரால் ஆட்கொள்ளப்பட்டமையின் ஆளுடைய பிள்ளையார் எனவும், சிவஞான சம்பந்தம் பெற்றமையின் திருஞான சம்பந்தர் எனவும் அவர் பெயர் பெற்றார்.

மற்றொரு நாள் திருக்கோலக்கா என்னும் திருப்பதியில் பதிகம் பாடி சிவபெருமான் திருவருளால் பஞ்சாட்சரம் வரையப் பெற்ற பொற்றாளம் கிடைக்கப் பெற்றார். அடுத்தடுத்துப் பல தலங்கட்குச் சென்று பாடினார். ஞானசம்பந்தர் பாடிய தலங்கள் முழுவதும் பற்றிக் குறிப்பிட முயல்வது,

'கொள்ளாதவன் வாயில் கொழுக் கட்டையைத் திணிப்பதற்கு'

ஒப்பாகும். எனவே இடச் சுருக்கங் கருதி அட்ட வீரட்டத் தலங்களில் பாடிய பதிகங்கள் பற்றி மட்டும் காண்போம்.

சிவத்தலங்கள் பஞ்ச பூதத் தலங்கள், சப்த விடங்கத் தலங்கள், அட்ட வீரட்டத் தலங்கள் என்று தொகை அடிப்படையில் சிறப்பித்துக் கூறப்படும். அட்ட வீரட்டத் தலங்கள் பற்றி,

'பூமன் றிருக்கண்டி யந்தகன் கோவல் புரமதிகை
மாமன் பறியல் சலந்தரன் விற்குடி மாவழுவூர்
காமன் கொறுக்கை நமன்கட வூரிந்தக் காசினிக்குள்
தேமன்னு கொன்றைச் சடையான் பொருதிட்ட சேவகமே'.

என்னும் பழம் பாடலில் குறிப்பிடப் பட்டுள்ளது. அட்ட வீரட்டத் தலங்களும் அங்கு நிகழ்ந்த வீரச் செயல்களும் பற்றிய விபரம் :

வரிசை எண்	வீரட்டத் தலம்	நிகழ்ந்த வீரச் செயல்
1.	திருக்கண்டியூர்	பிரமன் சிரத்தைச் சிவபெருமான் அவனது அகந்தை தீர வைரவரைக் கொண்டு போக்கியருளிய செயல்.
2.	திருவதிகை	சிவபெருமான் திரிபுர தகனஞ் செய்தருளிய செயல்.
3.	திருக்கோவலூர்	அந்தகாசுரனை வென்ற செயல்.
4.	திருப்பறியல்	வீரபத்திரரை ஏவித் தக்கன் தலையை அறுப்பித்து ஆட்டுத்தலை அருளிய செயல்.
5.	திருவிற்குடி	சலந்தராசுரனை வதைத்த செயல்.
6.	திருவழுவூர்	யானை உரித்த செயல்
7.	திருக்குறுக்கை	மன்மதனை எரித்த செயல்
8.	திருக்கடவூர்	மார்க்கண்டேயருக்காக இறைவன் எமனை உதைத்த செயல்.

1. திருக்கண்டியூர்

இத்தலம் சோழநாட்டுத் தென்கரையில் அமைந்துள்ளது. திருவையாற்றுக்கு அருகில் உள்ளது. அருணகிரிநாதர் பாடல் பெற்றது.

பிரமனது ஐந்து சிரங்களுள் ஒன்றை தம் சூலத்தால் கண்டனம் செய்த (கொய்த) காரணத்தால் கண்டனபுரம் - கண்டியூர் எனப் பெயர் பெற்றது. இத்தலத்துப் பதிகம் திருவருட்டன்மையை வினா உரையாகப் பாடியருளியதாகும்.

'விரவிலா துமைக்கேட் கின்றேனடி
விரும்பியாட் செய்வீர் விளம்புமின்
கரையெலாந் திரைமண்டு காவிரிக்
கண்டி யூருறை வீரட்டன்
முரவமொந் தைமுழ வொலிக்க
முழங்கு பேயொடுங் கூடிப்போய்ப்
பரவு வானவர்க் காக
வார்கடல் நஞ்சமுண்ட பரிசதே. (5)

இப்பாடலில் தேவர்களுக்காகச் சிவபெருமான் நஞ்சினை உண்ட செய்தி குறிப்பிடப் பட்டுள்ளது.

2. திருவதிகை

நடு நாட்டில் அமைந்துள்ள தலம். தென் ஆற்காடு மாவட்டத்திலுள்ள பண்ருட்டிக்கு அருகில் உள்ளது. சைவத்துக்குத் திருத்தொண்டுக்கு உறைப்பான திருநாவுக்கரசரை வழங்கிய பெருமைமிகு தலம். அதிகை வீரட்டானம் அரிய சிற்பங்களைக் கொண்ட கலைப் பெட்டகமாகத் திகழ்கிறது. திரிபுரத்தை எரித்த வீரச்செயல் நிகழ்ந்தது. இத்தலத்துப் பதிகம் இறைவன் காட்டிய திருநடனத்தைச் சம்பந்தர் கண்டு தரிசித்துப் பாடியதாகும்.

எண்ணார் எயிலெய்தான் இறைவன் அனலேந்தி
மண்ணார் முழவதிர முதிரா மதிசூடிப்
பண்ணார் மறைபாடப் பரமன் அதிகையுள்
விண்ணார் பரவநின் றாடும்வீரட் டானத்தே (4)

இப்பாடலில் அனலேந்தியதையும், இளம்பிறையைச் சூடியிருப்பதையும் சுட்டிக் காட்டியுள்ளார். திரிபுரம் எரித்த செய்தி அகச்சான்றாக இடம் பெற்றுள்ளது.

3. திருக்கோவலூர்

இதுவும் நடு நாட்டுத் தலமாகும். திருவண்ணாமலையில் இருந்து 35 கி.மீ. தொலைவில் உள்ளது. தென்பெண்ணை ஆற்றுப் பாலத்தைக் கடந்து செல்ல வேண்டும். அந்தகாசுரனை வென்ற இடம். இத்தலம் வைணவப் பெருமையும் உடையது. 'ஒருவர் படுக்கலாம், இருவர் இருக்கலாம், மூவர் நிற்கலாம்' என்று சொல்லப்படும் முதலாழ்வார் மூவரின் வரலாற்று நிகழ்ச்சி இடம் பெற்ற தலம் இதுவே. இது ஞானமயமான

தலம். இத்தலப் பதிகப் பாடல்களில் இத்தலத்து இறைவன் காலிணையைக் காலந்தாழ்த்தாது சென்றடைவீர் என்று அறிவுறுத்தி உள்ளார்.

உள்ளத்தீரே போதுமின் னுறுதியாவ தறிதிரேல்
அள்ளற்சேற்றிற் காலிட்டிங் கவலத்துள் அழுந்தாதே
கொள்ளப்பாடு கீதத்தான் குழகன்கோவ லூர்தனுள்
வெள்ளந்தாங்கு சடையினான் வீரட்டானஞ் சேர்துமே (3)

வயலில் உள்ள சேற்றில் காலைப் புதைத்து துன்பப்படுவது போல் வாழ்வெனும் மாயையில் சிக்கி உழலாது இறையடிகளைச் சென்றடைவீர் என்ற செய்தி இப்பாடலில் இடம் பெற்றுள்ளது. மேலும், சிவபெருமான் கங்கையைத் தலையில் சூடியிருக்கும் செய்தியும் குறிப்பிடப் பட்டுள்ளது.

4. திருப்பறியல்

இத்தலம் சோழ நாட்டுத் தென்கரைத் தலமாகும். செம்பொன்னார் கோவில் அருகே அமைந்துள்ளது. வீரபத்திரரை ஏவித் தக்கன் தலையை அறுப்பித்து ஆட்டுத் தலை அருளிய தலம். தக்க யாகத்தில் உடனிருந்த தேவர்களது பாவங்களைத் தண்டனையினால் பறித்த (போக்கிய) காரணத்தால் 'பறியலூர்' என்ற பெயர் பெற்றது. மக்கள் வழக்கில் 'கீழப் பரசலூர்' என்று வழங்குகின்றது. இப்பதிகப் பாடல்களில் சிவபெருமானின் திருநாமங்களும், திருச்செயல்களும் இடம் பெற்றுள்ளன.

சடையன் பிறையன் சமணசாக் கியரோ
டடையன் பிலாதான் அடியார் பெருமான்
உடையன் புலியின் உரிதோல் அரைமேல்
விடையன் திருப்பறியல் வீரட்டத் தானே. (10)

இப்பாடலில் சடையன், பிறையன் என்று சிவபெருமானின் திருநாமங்கள் இடம் பெற்றுள்ளன.

5. திருவிற்குடி

இதுவும் சோழ நாட்டுத் தென்கரைத் தலம். மயிலாடுதுறை அருகில் உள்ளது. அட்ட வீரட்டங்களுள் ஒன்றாகிய சலந்தரனை வதைத்த தலம். இத்தலத்துச் சுவாமி கோவில் மாடக்கோவில் போல் கட்டு மலையின் மேல் உள்ளது. இத்தலத்துப் பதிகப் பாடல்களைப் படிப்பவர்க்குத் தீவினை அகலும்; பற்று அறும்; துன்ப நோய் அண்டாது.

இடங்கொள் மாகடல் இலங்கையர்
கோன்றனை யிகலழி தரவூன்று
திடங்கொள் மால்வரை யானுரை
யார்தரு பொருளினன் இருளார்ந்த
விடங்கொள் மாமிட றுடையவ
னுறைபதி விற்குடி வீரட்டம்

தொடங்கு மாறிசை பாடிநின்
றார்தமைத் துன்பநோ யடையாவே. (8)

ஞானசம்பந்தர் பதிகங்களில் எட்டாவது பாடலில் இராவணேஸ்வரன் பற்றிய செய்தி இடம் பெறும் மரபை ஒட்டி இப்பதிகத்தின் எட்டாவது பாடலிலும் இலங்கையர்கோன் பற்றிய செய்தி இடம் பெற்றுள்ளது.

6. திருவழுவூர்

சோழ நாட்டு வடகரையில் அமைந்துள்ள தலம். திருச்சி, அரியலூர் சாலையில் உள்ளது. பழு - ஆல். ஆல் தல மரமாதலின் பழுவூர் என்று பெயர் பெற்றது. மக்கள் கீழப்பழுவூர் என்று வழங்குகின்றனர். அட்ட வீரட்டங்களுள் யானை உரித்த செயல் நிகழ்ந்த தலம்.

முத்தன்மிகு மூவிலைநல் வேலன்விரி நூலன்
அத்தன்எமை யாளுடைய அண்ணலிட மென்பர்
மைத்தன்மை பெரும்பொழிலின் வாசமது வீசப்
பத்தரொடு சித்தர் பயில்கின்ற ஊரே. (1)

இப்பாடலில் ‘பத்தரொடு சித்தர் பயில்கின்ற ஊர்’ என்ற அடி மூலம் சித்தர்கள் உறையும் இடம் என்று சிறப்பிக்கப் பட்டுள்ளது. உமை தவம் செய்த பதி மற்றும் பிரமன், திருமால், இந்திரன், அகத்தியர், சந்திரன், வசிட்டர், காசிபர், வியாசர் முதலியோர் வழிபட்ட பெருமையுடைய தலம்.

7. திருக்குறுக்கை

இதுவும் சோழநாட்டு வடகரைத் தலம். மக்கள் வழக்கில் ‘கொருக்கை’ என்று வழங்குகின்றது. மயிலாடுதுறையில் இருந்து 12 கி.மீ. தொலைவில் உள்ளது. மன்மதனை எரித்த வீரட்டச் செயல் இங்கு நிகழ்ந்தது.

காமனைத் தகனம் செய்த இடம். ‘விபூதிக் குட்டை’ என்ற பெயரில் 1 கி.மீ. தொலைவில் உள்ளது. இக்குட்டையில் எங்கெடுத்தாலும் மண்ணானது விபூதியாகவே உள்ளது.

இத்தலம் பற்றிய அப்பர் பாடல்களே கிடைக்கின்றன. வள்ளலாரின் அருட்பாவும் உள்ளது.

8. திருக்கடவூர்

சோழ நாட்டுத் தென்கரைத் தலம். மயிலாடுதுறை-தரங்கம்பாடி பேருந்துச் சாலையில் இத்தலம் உள்ளது. அட்ட வீரட்டங்களுள் ஒன்றாகிய மார்க்கண்டேயருக்காக இறைவன் எமனை உதைத்தருளிய செயல் இங்கு நிகழ்ந்தது. யம வாதகையைக் கடத்தற்கு உதவும் ஊர்.

எரிதருவார் சடையானும் வெள்ளையெரு தேறியும்
புரிதருமா மலர்க்கொன்றை மாலைபுணர்ந் தேத்தவே
கரிதருகா லனைச்சாடி னானுங்கட வூர்தனுள்
விரிதருதொல் புகழ்வீரட் டானத்தர னல்லனே. (2)

எமனை உதைத்த செயல் அகச்சான்றாக இப்பாடலில் 'கரிதரு காலனைச் சாடினான்' என்ற தொடரில் குறிப்பிடப் பட்டுள்ளது.

ஞானசம்பந்தர் பாடிய தலங்களுள் அட்ட வீரட்ட தலங்கள் பற்றிய சில செய்திகள் இங்கு இடம் பெற்றுள்ளன. சம்பந்தர் தேவாரத்தை விரிவாக ஆராய்ந்தால் திருத்தலங்கள் பற்றிய மேலும் பல விபரங்கள் கிடைக்கக் கூடும்.

53. சம்பந்தர் தேவாரத்தில் இயற்கை

சி. தியாகராஜன், நாமக்கல்.

உலக இலக்கியங்களில் இயற்கையை வியந்து பாடாத கவிஞர்கள் இல்லை. சங்க இலக்கியங்கள் முதல் இக்காலப் புதுக்கவிதைகள் வரை ''இயற்கை'' அனைத்திலும் சிறப்பான இடத்தைப் பிடித்துள்ளது. அவ்வகையில் பக்தி இலக்கியத்திலும் இயற்கையின் வருணனை எண்ணற்றவையாக நிறைந்துள்ளன. நாயன்மார்கள் தலங்கள்தோறும் கால்நடையாகச் சென்று இறைவனை வழிபடும் பொருட்டுத் தலப் பயணங்கள் மேற்கொண்டனர். அவ்வாறு தலப்பயணம் மேற்கொண்டதில் தாங்கள் செல்லும் வழியில் கண்ட தலங்களையும் அதன் அமைவிடங் களையும் இறைவனின் அருள் தன்மைகளோடு சார்த்தி வருணனை செய்துள்ளனர். அவ்வகையில் சம்பந்தர் தமது தேவாரப் பதிகத்தில் இயற்கையை வருணித்த சிறப்பு குறித்து இக்கட்டுரை ஆராய்கிறது.

இயற்கை வருணனை

வருணனையில் முக்கியமாக இடம்பெறுவன ஆறுகள் மலைகள் குளங்கள் தடாகம் போன்றவையாகும். சம்பந்தர் தேவாரத் திருப்பாடல் களில் இயற்கையின் வருணனை ஒரு திட்டமிட்ட முறையில் அமையப் பெற்றாற் போலிருக்கும். ஒன்று முதல் ஏழு வரையுள்ள பாடல்களில் அப்பதிகத்திற்குரிய திருத்தலத்தின் இயற்கை, வனப்பு, அங்குக் கோயில் கொண்டிருக்கும் இறைவனின் பெருமை அவன் அடியார்களுக்கு அருளும் எளிமை, அவனது வரம்பில்லா ஆற்றல் அடியார்களின் திறம் ஆகியவற்றை விரித்துரைக்கின்றன.

இயற்கையே இறையாகவும் எழில் கொஞ்சும் பொழில்கள் இறைவன் எழுந்தருளும் இடங்களாகவும் அருளாளர்கள் கருதுகின்றனர். இயற்கையைப் பாடி அவ்வத்தலத்தில் பேரெழிலை மக்கள் கண்முன் கொண்டு வந்து நிறுத்துவதையும் உத்தியாகக் கொண்டவர் ஞானசம்பந்தர். தலத்தைக் காணாதவரும் தலத்திற்குரிய பதிகங்களைக் கேட்ட மாத்திரத் திலேயே அத்தலத்தினைக் கண்ணுற்று இறைவனை வழிபட்ட உணர்வினைப் பெற வேண்டும் என்ற நோக்கில் தலவருணனைகளுக்கு ஞானசம்பந்தர் இடம் கொடுத்துள்ளார். இயற்கையை வழிபடுதலும் போற்றுதலும் வழிபாட்டு நெறிகளின் ஒன்றாகக் கருதப்படுகின்றது. சம்பந்தர் இயற்கை களைப் பயன் கொண்ட முறையினைச் சில எடுத்துக்காட்டுகளின் வாயிலாகக் காண்போம்.

திருவண்ணாமலைத் தலத்தில் இயற்கை வருணனை

திருவண்ணாமலைத் திருத்தலத்தை வழிபடும் பொருட்டு அங்குச் சென்ற சம்பந்தர் இயற்கையை,

''இழைத்த விடையா ளுமையாள்பங்க ரிமையோர் பெருமானார்
தழைத்த சடையார் விடையொன்றேறித் தரியார் புறமெய்தார்
பிழைத்த பிடியைக் காணாதோடிப் பெருங்கைமத வேழம்
அழைத்துத் திரிந்தங் குறங்குஞ்சார லண்ணா மலையாரே''

(பா.எ.746)

என வியந்துள்ளார். இப்பாடலில் மலைச்சாரலில் இரண்டு யானைகள் இன்பமாக வாழ்ந்து கொண்டிருக்கின்றன. அவற்றில் ஒன்று இளம்பிடி, மற்றொன்று பெரிய களிறு. ஒரு நாள் காட்டு வழியில் தனக்கு விருப்பமான பிடியை காணாததால் களிறு கானகத்தில் எதிரொலிக்கப் பெருங்குரலால் பிளிறி அழைக்கிறது. பிடியின் பதில் குரல் கேட்காததால், ஏமாற்றத்தோடு காட்டு வழிகளில் தேடித் திரிந்த அக்களிறு மலைச் சாரலில் படுத்து உறங்கியதை இவ்வாறு வருணித்துள்ளார்.

இத்தலத்து இறைவனை வழிபடச் சென்றவர்கள் அதன் இயற்கையைக் கண்டு வியக்கத் தவறுவதில்லை. இயற்கையோடு கண்டு இன்ப வெள்ளத்தில் திளைக்கின்றவர்கள் இறையருளிலும் ஆழ்ந்து விடுகின்றனர்.

குற்றாலத்தில் இயற்கை வருணனை

குற்றாலத்தில் குடி கொண்டுள்ள இறைவனை வழிபடச் சென்ற சம்பந்தர்,

''நாட்பலவுஞ் சேர்மதியஞ் சூடிப் பொடியணிந்த நம்பானம்மை
ஆட்பலவுந் தானுடைய வம்மானிடம்போலு மந்தண்சாரல்
கீட்பலவுங் கீண்டு கிளைகிளையன் மந்திபாய்ந் துண்டுவிண்ட
கோட்பலவின் தீங்கனியை மாக்கடுவன் உண்டு களுங்குறும்
பலாவே'' (பா.எ.2235)

இப்பாடலில் குற்றால மலைச்சாரலில் மரக்கிளைகளில் மந்திகள் நெருங்கிப் பாய்கின்றன. பெண் குரங்குகள் பலா மரத்தின் மீது ஏறிப் பழங்களை உண்கின்றன. அவை உண்ணும்போது பழங்களும் சுளைகளும் தவறிக் கீழே விழுகின்றன. ஆண் குரங்குகள் அவற்றை எடுத்து உண்டு இன்புறுகின்றன என்பதை விளக்கியுள்ளார். இப்பாடலானது திரிகூடராசப்ப கவிராயரின் திருக்குற்றாலக் குறவஞ்சியில் வரும்.

''வானரங்கள் கனிகொடுத்து மந்தியொடு கொஞ்சும்
மந்திசிந்து கனிகளுக்கு வான்கவிகள் கெஞ்சும்''

என்ற பாடல் வரிகளோடு ஒப்புநோக்கத்தக்க வகையில் அமைந்துள்ளது.

குற்றால அருவி வருணனை

சம்பந்தர் அருவியின் எழிலை மற்றொரு பாடலில்,

பொன்றொத்த கொன்றையும் பிள்ளை
மதியும் புனலுஞ் சூடிப்
பின்றொத்த வார்சடையெம் பெம்மானிடம்
போலும் பிலயந்தாங்கி
மன்றத்து மண் முழுவமமோங்கி
மணிகொழித்து வயிரமுந்திக்
குன்றத் தருவியயலே புனல்ததும்புங் குறும்பலாவே" (பா.எ.2240)

பிரளய வெள்ளம் போன்ற பெருக்கைத் தாங்கும் அவ்வருவிகள் ஓசை முடிவும் போன்று ஒலிக்கின்றன. அவற்றில் மணியும், வைரமும் கொழிக்கின்றன என்பதை இப்பாடலில் வருணனை செய்துள்ளார்.

குற்றாலம் என்றவுடன் அனைவரின் கண்முன் தோன்றுவது அருவிகள்தான். அவ்வருவிகளில் நீராடினால் நோய்கள் தீரும் என்பதும் அவ்வருவிகளில் மூலிகைத்தன்மை நிறைந்திருப்பதாகவும் அவ்வருவி களில் நீராடினால் பிணி நீங்கும் என்பதும் மக்கள் நம்பிக்கை. அந்நம்பிக்கையை நிலை நிறுத்தும் வகையில் சம்பந்தர் தமது பாடலில் இயற்கையோடு இரண்டறக் கலந்த இறைவனை வழிபட்டால் நோய் நீங்கும் எனக் குறிப்பிடுகிறார்.

திருமுதுகுன்றில் இயற்கை வருணனை

திருமுதுகுன்றில் நிகழும் ஓர் அரிய காட்சியைக் கண்ட சம்பந்தர்,

"இழைமேவு கலையல்கு லேந்திழையா
ளொருபாலா யொருபாலெள்கா
துழைமேவு மரியுடுத்த வொருவனிருப்
பிடமென்ப ரும்பரோங்கு
கழைமேவு மடமந்தி மழைகண்டு
மகவினொடுள் புகவொண்கல்லின்
முழைமேவு மால்யானை யிரைதேரும்
வளர்சாரன் முதுகுன்றமே" (பா.எ.1409)

எனக் கற்பனை வளத்தைத் தெளித்துள்ளார். மலையிலுள்ள மூங்கில் மரங்களில் இம்மந்திகள் தம் மகவினொடு அமர்ந்துள்ளன. அவ்வேளையில் அங்கு மழை பொழிகிறது. அவை அஞ்சி ஓடி மலைக்குகையில் மறை கின்றது. மலைக்குகையிலிருந்த பெரிய யானை அங்கிருந்து புறப்பட்டு மலைச்சாரலில் இரைதேடத் திரிகிறது என்பதை இப்பாடலில் விளக்கியுள்ளார்.

திருமுதுகுன்றில் குடி கொண்டுள்ள இறைவனை வழிபடச் செல்வோர், இவ்வியற்கைக் காட்சியைக் கண்டு வியந்து இத்தலத்து இறைவனை வழிபட்டுத் திரும்புகின்றனர். இறையருளோடு இயற்கை கலந்துள்ளதைக் கண்டு மக்கள் பெருமகிழ்ச்சியடைகின்றனர்.

திருக்காளத்தியில் மலைச்சாரல் வருணனை

சம்பந்தர் திருக்காளத்தியை வழிபட்டு, அங்கு அவர் இயற்கைக் காட்சியைக் கண்டு நெஞ்சுருகிப் பாடிய பாடல்,

வல்லைவரு காயியைவ குத்தவலி யாகிமிகு தாரகனைநீ
கொல்லென விடுத்தருள் புரிந்தசிவன் மேவுமலை கூறிவினவில்
பல்பலவி ருங்கனி பருகிமிக வுண்டவை நெருங்கியினமாய்க்
கல்லதிர நின்றுகரு மந்தியினை யாடுகா ளத்திமலையே (3539)

மலைச்சாரலில் பல கனிகள் கிடைக்கின்றன. அவற்றை உண்ட கருங்குரங்குகள் பெருங்கூட்டமாய் மலை அதிரும்படியாக அங்கு விளையாடுகின்றன என்பதை விளக்கியுள்ளார்.

இம்மலைச்சாரலில் மற்றொரு இடத்தில் பெண் யானைகள் தங்களின் கன்றுகளுடன் மகிழ்ந்து திரிவதை,

''நின்றுகவ ளம்பலகொள் கையரொடு மெய்யலிரு போர்வையரும்
நன்றியறி யாதவகை நின்ற சிவன் மேவுமலை நாடிவினவில்
குன்றின்மலி துன்றுபொழி னின்றகுளிர் சந்தின்முறி
தின்றுகுலவிக்
கன்றினொடு சென்றுபிடி நின்றுவிளை யாடுகாளத்தி மலையே''
(3546)

என எடுத்துரைத்துள்ளார். பெண் யானைகளும் கன்றுகளும் சோலையிலுள்ள சந்தனத் தழைகளைத் தின்று விளையாடி மகிழ்கின்றன என்பதன் மூலம் திருக்காளத்தி மலையின் இயற்கை வருணனை புலப்படுகின்றது.

சிலந்தி, பாம்பு, யானை ஆகிய மூன்றும் வழிபட்ட தலம். தேவார முதலிகள் மூவரும் மலை மீதேறி வழிபட்டதாகப் பெரியபுராணம் கூறுகின்றது. சம்பந்தரின் இம்மலை பற்றிய வருணனையாலும், இவர் மலை மீதேறி வழிபட்டிருக்கலாம் என்பது அறிய முடிகிறது.

திருக்கேதாரத் திருத்தலத்தில் இயற்கை வருணனை

சம்பந்தர் திருக்கேதாரத்தைத் தொழுது வழிபடும் நிலையிலும் அங்குள்ள இயற்கையைத் தக்கமுறையில் வருணனை செய்துள்ளார் என்பதனைத்,

''தொண்டரஞ்சு களிறும் மடக்கிச் சுரும்பார்மலர்
இண்டைகட்டி வழிபாடு செய்யுமிட மென்பரால்

வண்டுபாட மயிலால மான்கன்று துள்ளவரிக்
கெண்டை பாயச் சுனைநீல மொட்டலரும் கேதாரமே'' (2703)

என மொழிந்துள்ளார்.

மலையிலுள்ள சோலைகளில் வண்டுகள் பாடுகின்றன, மயில்களாடுகின்றன, மான் கன்றுகள் துள்ளி விளையாடுகின்றன, அங்குள்ள சுனைகளில் கெண்டைகள் பாய்கின்றன, நீல மொட்டுகள் மலர்கின்றன எனத் திருக்கேதாரத் திருத்தலத்தை வருணனை செய்துள்ளார்.

இலம்பையங்கோட்டுத் திருத்தலத்தில் இயற்கை வழிபாடு

திருஞானசம்பந்தர் இலம்பையங்கோட்டூர் சென்று அங்குள்ள இறைவனைப் பாடி வழிபட்டார். அவ்வூர் சோலையை வருணனை செய்யும் பொருட்டு,

''மலையினார் பருப்பதந் துருத்திமாற்பேறு
மாசிலாச் சீர்மறைக் காடுநெய்த்தானம்
நிலையினா னெனதுரை தனதுரையாக
நீறணித்தேறுகந் தேறிய நிமலன்
கலையினார் மடப்பிணை துணையொடுந் துயிலக்
கானலம் பெடைபுல்கிக் கணமயிலாலும்
இலையினார் பைம்பொழி லிலம்பை யங்கோட்டூ
ரிருங்கையாப் பேணியென் னெழில்கொள் வதியல்பே''
(பா.எ.820)

இலம்பையங்கோட்டில் உள்ள இயற்கை எழில் கொஞ்சும் சோலையில் ஆண் மானும் பெண் மானும் ஒன்று சேர்ந்து உறங்குகின்றன. ஆண் மயிலும் பெண் மயிலும் சேர்ந்து மகிழ்ந்து நடனமாடுகின்றன எனச் சிறப்பாகப் படைக்கிறார் ஞானசம்பந்தர்.

திருவையாற்றில் இயற்கை வருணனை

தலங்கள் தோறும் சென்று பக்தியையும் தமிழையும் வளர்த்த சம்பந்தரின் பாடல்களில் இயற்கை வருணனை தனியிடம் பெற்றுச் சிறப்புடன் விளங்குகிறது.

திருவையாற்றில் எழுந்தருளியுள்ள இறைவனைப் பற்றிப் பாடும் போது அக்காலத்து இயற்கையை மிக அழகாகச் சித்திரிக்கிறார்.

புலனைந்தும் பொறிகலங்கி நெறிமயங்கி
யறிவழிந்திட் டைம்மேலுந்தி
அலமந்த போதாக அஞ்சேலென்
றருள் செய்வான் அமருங்கோயில்

வலம்வந்த மடவார்கள் நடமாட
முழவதிர மழையென்றஞ்சிச்
சிலமந்தி யலமந்து மரமேறி
முகில் பார்க்கும் திருவையாறே.

எனும் பாடலில் இயற்கை அன்னை களிநடம் புரிவதைக் காணலாம். மேலும்,

தலையவிழ் கமலத் தவிசின் மேல்அன்னம்
தன்னிளம் பெடையொடும் புல்கி
விளைகதிர்க் கவரிவீச வீற்றிருக்கும்
மிழலையான் எனவினை கெடுமே.

எனும் பாடலிலும் இயற்கை அழகினைக் கண்டு களிக்கலாம்.

மேற்கண்ட சிறு ஆய்விலிருந்து சம்பந்தர் இயற்கையை அதன் சிறப்பு குறையாமல் மிக அழகாகப் படம் பிடித்துக் காட்டியுள்ளார் என்ற செய்தி தெளிவாகின்றது. மேலும் இறைவன் இயற்கையோடு கலந்திருக்கிறான் என்பதும் அவ்வியற்கைக் காட்சியைக் கண்டு இன்புறுகிற வர்கள் இறைவனைக் கண்டு இன்புற்றதற்குச் சமமானதாகும் என்பதும் சம்பந்தர் பாடல்கள் சிலவற்றின் வாயிலாகத் தெளிவாக அறியப்படு கிறது. மேலும் ''நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பும் ஞானசம்பந்தன்'' என இவரைச் சிறப்பித்துக் கூறுவது பொருத்தமானதாகும் என்ற முடிவும் இதிலிருந்து பெறப்படுகிறது.

54. சம்பந்தர் தேவாரத்தில் இயற்கை

கா. திருநாவுக்கரசு, பேரூர்.

இயற்கை என்பது இயல்பாய் நிற்பது. 'தன்னியல்பு திரியாது நின்ற பொருளே இயற்கைப் பொருள்' என்பதை 'இயல்பாவது பொருட்டுப் பின் தோன்றாது உடனிகழுந் தன்மை' என்பார் சேனாவரையர். இவ்வகை நோக்கும் பொழுது தன்னியல்பு திரியாது நின்ற இயற்கைப் பொருள்கள் உள்ளத்தில் எளிதில் நிலை நிற்கின்றன. ஆக்கமொடு கூட்டிக் கொள்ளப்படுகின்ற செயற்கைப் பொருட்கள் இருமைத் தன்மை யுடையன. ஆதலின் அவை உள்ளத்தில் உண்மையான உணர்வுகளை மிகச் சரியாக எழுப்புவதில்லை. ஆனால் இயற்கை என்ற தன்மை எந்த உணர்வையும் ஒருத்தன்மைத்தாய் எழுப்பவல்லது. ஆதலின் இயற்கையை இறையாகக் கொள்ளும் பாங்கு பழங்காலம் தொட்டே அமைந்தது. இலக்கியங்களின் பாடுபொருள் எத்தன்மைத்தாயினும் அதில் இயற்கைத் தன்மைக்குப் படைப்போர் முக்கியத்துவம் அளித்தனர். இலக்கியங்களில் இயற்கைத் தன்மையை முன்னிலைப் படுத்தியது வளமைபேணும் உணர்வை மக்களிடத்து ஏற்படுத்துதற்குமாம். அவ்வகையில் மிகுசைவத் துறை விளங்க வந்துதித்த வள்ளல் திருஞானசம்பந்தர் தம் திருமுறை அருளிப்பாட்டில் இயற்கைத் தன்மையை இறைத்தன்மையோடு ஒட்டி அருளும் பாங்கு இங்கு அமைக்கப்படுகிறது.

மழை

விசும்பின் துளிவீழின் அல்லால் பசும்புல் தலைக்காட்டல் அரிது என்பார் வள்ளுவர். உலகில் இயற்கைநிலை செழித்து நிற்றலில் முன்னிற்பது மழை. மழையை வழிபடுவதும், மழைக்காக வழிபடுவதும் நம் சமயமரபு. இறைவனின் கருணையை மழையாகக் கொள்வதும் நம் சமய மரபே. ஆதலின் திருஞானசம்பந்தர் 'வீழ்க தண்புனல்' என்றருளினார். அம்மழையை இயற்கை நிலையில் காணும் ஞானசம்பந்தர்,

> **''தேமாங்கனி கடுவன்கொள விடுகொம்பொடு தீண்டித்**
> **தூமழை துறுவன்மிசை சிறுநுண் துளிசிதற''**

என்பதாக அமைக்கின்றார். மழை தூயதன்மை வாய்ந்தது. தூயதாகிய தன்மையைக் கொடுப்பது என்ற நிலையில் குறிப்பிடுகிறார். 'சிறு நுண்துளி' என்ற சொல்லாட்சி திருஞானசம்பந்தரின் இயற்கை நுண்

பார்வையை விளக்குகிறது. இன்றும், அறிவியலார் மேகங்களில் உள்ள ஈரப்பதத்தை தூசிப்படலம் என்ற சிறுசிறு பகுதிகள் உறிஞ்சுகின்றன, பிறகு அவை நுண்மைத் தன்மையைப் பெற்று, மழைத் துளிகளாகச் சிதறுகின்றன என்று விளக்கும் பாங்கு இயற்கை நிலையை இற்றெனத் கிளந்த நிலையை விளக்குகின்றன.

ஆறு

இயற்கையின் இலக்கிய வெளிப்பாட்டில் முதன்மைப் படுத்தப் படுவது ஆறு. சங்க இலக்கிய நெடுநெல்வாடை முதலான நூல்கள் தொட்டுச் சிற்றிலக்கிய முக்கூடற்பள்ளு வரையிலான எல்லா இலக்கிய உள்ளடக்கங் களிலும் ஆற்று வருணனை பெரிதும் புகழப்படுகிறது. ஆற்றையும் தெய்வமாக வழிபடும் ஆடிப்பெருக்கு தமிழர்தம் விழா. ‘எம்பெருமானையும் சடையார் புனலுடையாராக’ ஆற்றுநிலை கொண்டு ஞானசம்பந்தர் முதலானோர் பரவுகின்றனர்.

ஞானசம்பந்தப் பெருமான் ஆற்று வருணனை அருளிப்பாட்டில் ஆற்றின் ஓட்டம், கயல்மீன் துள்ளல், தேன்சொரிதல், பழம் வீழ்தல் ஆகியன அழகியல் உணர்வுடன் பதிவு செய்யப்பட்டவை.

“செய்யருகே புனல் பாயவோங்கிச் செங்கயல்
பாயச் சிலமலர்த்தேன்
கையருகே கனிவாழையீன்று கானலெல்லாங்
கமழ் காட்டுப்பள்ளி
(முதல் திருமுறை - கீழைத் திருக்காட்டுப்பள்ளி - பா.1)

என்றும்,

திருவையாற்றுப் பதிகத்தில்
“மான்பாய வயலருகே மரமேறி
மந்திபாய் மடுக்கள் தோறும்
தேன்பாய மீன்பாயச் செழுங்கமல
மொட்டலருந் திருவையாறே (முதல் திருமுறை, பா.4)

என்று அருளுகின்றார்.

மேலும் முத்துக்கள் கடலில் தோன்றுவன. ஆனால் ஞானசம்பந்தரின் அழகியல் வெளிப்பாட்டில் கடல் முத்து இரவெல்லாம் எதிரோடி காவிரியில் கரை ஒதுங்குகிறது. இதனை,

“கடலேறித் திரைமோதிக் காவிரியின்
உடன்வந்து கங்குல் வைகித்
திடலேறிச் சுரிசங்கஞ் செழுமுத்தம்
ஈன்றலைக்குந் திருவையாறே. (மேலது - பா.2)

என்றருளுகின்றார்.

மலர்

பூவும் நீரும் புண்ணியனை வழிபடும் முதற் சாதனங்கள். ஆதலின் ஞானசம்பந்தப் பெருமான் 'வம்மின் அடியீர் நாண்மலர் இட்டுத் தொழுது உய்ய' என்றழைக்கின்றார். இறை சாதனமான மலரை ஞானசம்பந்தப் பெருமான் அழகியலோடு அமைத்துக் காட்டும் தன்மையும் திருக்கடைக்காப்பில் பல இடங்களில் காணப்படுகிறது.

> ''கடிகொள் கொன்றை கூவிள மாலை''
>
> ''செல்வமல்கு செண்பகம் வேங்கை சென்றேறிக்
> கொல்லை முல்லை மெல்லரும் பீனுங் குற்றாலம்''
>
> ''நீலநெய்தல் தண்சுனை சூழ்ந்த நீள்சோலைக்
> கோலமஞ்ஞை பேடை யொடாடுங் குற்றாலம்''.

(முதல் திருமுறை, குற்றாலம்)

என்பவை சான்றாக அமைகின்றன.

இயற்கை நிலையோடு அணிகளைப் பயன்படுத்தும் முறைமையினைத் திருக்கடைக் காப்பில் காண்கின்றோம். குரவம்பாவை மலர் பாம்பின் பல்லினைப்போல அமைந்ததை,

> ''அரவின் வாயின் முள்ளெயிறு ஏய்ப்ப அரும்பீன்று
> குரவம் பாவை முருகமழ் சோலைக் குற்றாலம்''

என்று அமைக்கின்றார்.

முத்துக்களே பற்களாக நகைக்கின்றன. குதிக்கும் கயல்மீன்கள் கண்களாகத் திரிகின்றன என்பதை ஞானசம்பந்தர்,

> ''கொழுந்தரளம் நகைகாட்டக் கோகநதம்
> முகங்காட்டக் குதித்து நீர்மேல்
> விழுந்தகயல் விழிகாட்ட விற்பவளம்
> வாய்காட்டும் மிழலையாம்.....''

என்று அருளுகின்றார்.

பறவை

'மனிதனின் ஆழ்மன உணர்வில் ஒன்று ஆகாயத்தில் பறத்தல்' என்பர் உளவியலார். பறத்தல் என்பது ஒரு வகையான உயர்வு. தன் இருப்பை விட்டு உந்தி எழுந்து உயர நிற்றல். மனிதன் தனுகரண போகங் களை, புவனமாகிய நிலத்தில் மட்டுமே பெறுகின்றான். ஆதலின் நிலம் தவிர்ந்த நான்கு பூதங்களில் நிலைநிற்றலில் மனிதன் விருப்பப்படுகின்றான். அதாவது நீர்மேல் பயணம், நெருப்பில் நடத்தல், காற்றை இடமாகக் கொண்டு ஆகாயத்தில் பறத்தல். இதில் ஆகாயத்தில் பறக்கும் ஆசையால்,

அங்கு பறக்கும் பறவையினங்களின் மீது மனிதனுக்குப் பற்றுதல் ஏற்படுகிறது. ஆகவே படைப்புகளில் அவ்வுயிரினத் தாக்கம் காணப் பெறுகிறது. ஞானசம்பந்தப் பெருமான் பார்வையில் பறவைகளும் இறை தொழில் செய்கின்றன.

திருவீழிமிழலைத் தலத்தில் உள்ள கிளிகள் தமிழ்க்கிளிகள். அவைகள் பல நாட்கள் வேதம் ஓதும் பண்டிதர்களின் வேத ஒலிகளைக் கேட்கின்றன. சொல்லியதைக் திரும்பச் சொல்லும் குணமே கிளியின் குணம். ஆனால் இந்தத் தமிழ்க்கிளிகள் வேதங்களுக்குப் பொருள் சொல்லும் திறம் பெற்றன என்பதை,

''பாரிசையும் பண்டிதர்கள் பன்னாளும்
பயின்றோதும் ஓசை கேட்டு
வேரிமலி பொழிற்கிள்ளை வேதங்கள்
பொருட் சொல்லும் மிழலையாமே''

(முதல் திருமுறை, திருவீழிமிழலை - பா.1)

என்றருளினார்.

மற்றொரு இடத்தில் அன்னத்தை வருணிக்கின்றார். அன்னத்தை 'மடவன்னம்' என்பர். ஆனால் இவ்வன்னம் மடம் நீங்கிய அன்னமாக வீற்றிருக்கின்றது. தாமரை இருக்கையில், இலைக் குடையில், செந்நெல் சாமரம் வீச அன்னம் அமர்ந்திருக்கும் அழகை,

''செறியிதழ்த் தாமரைத் தவிசில் திகழ்ந்தோங்கும்
இலைக் குடைக்கீழ்ச் செய்யார் செந்நெல்
வெறிகதிர்ச் சாமரை யிரட்ட இளவன்னம்
வீற்றிருக்கும் மிழலையாமே'' (மேலது பா.2)

என்று அருளுகின்றார். இவ்வியற்கை வெளிப்பாடு திருஞானசம்பந்தரை மிகவும் கவர்ந்தது போலும், ஆதலின் மூன்றாம் திருமுறை திருவீழிமிழலைத் திருப்பதிகத்தில்,

''தளையவிழ் கமலத் தவிசின் மேலன்னந்
தன்னிளம் பெடையொடும் புல்கி
விளைகதிர்க் கவரிவீச வீற்றிருக்கு
மிழலையான் என வினை கெடுமே''

(மூன்றாம் திருமுறை, திருவீழிமிழலை - பா.9)

என்று அமைக்கின்றார்.

கடல்

உலகம் கடலால் சூழப்பெற்றது. ஆதலின் இலக்கியங்கள் 'ஆழிசூழ் உலகு' என்று போற்றுகின்றன. கடல் நீர்த்தத்துவம். சலனத்தின் வெளிப்பாடு.

சலனத்திலிருந்து சலனமற்ற தன்மைக்குச் செல்ல வேண்டுமானால் சலனத்தை உற்றுநோக்க வேண்டும். வெகு சலனமுள்ள ஒரு தன்மையைக் கண்டு தெளிய சலனமில்லாத் தன்மை வந்து எய்தும். அவ்வகைப்பட்ட ஒரு தன்மையாக அமைவது கடல். அக்கடல் என்ற செயற்கை அற்ற இயற்கையை உற்று நோக்கப் பற்றழியும் என்ற காரணத்தாலும் இலக்கியங் களில் கடல் வருணனை கொள்ளப்படுகிறது. ஞானசம்பந்தப் பெருமானும் கடல் என்ற இயல்புத் தன்மை தம் அருட்ப் பாட்டுகளில் அமைக்கின்றார்.

இடையறாத நாதத்தை ஒலிப்பது கடல். அவ்வொலி ஞான சம்பந்தப் பெருமானுக்கு இப்பிறவி கொடிது. கருவைக் கழித்திடுங்கள் என்பதைப் போலக் கேட்கிறது. அப்படிச் செய்வதோடு நின்று விடாமல் அவ்வாறு நீங்குவதற்குண்டான ஒளியாக முத்துக்களைப் பரிசளிக்கின்றது என்பதை,

‘கொடிதெனக் கதறும் குரைகடல் சூழ்ந்து
கொள்ளமு னித்திலஞ் சுமந்த
குடிதனை நெருங்கிப் நெருக்கமாய்த் தோன்றும்
கோணமா மலையமர்ந்தாரே’

(மூன்றாம் திருமுறை, திருக்கோணமலை - பா.2)

என்றருளுகின்றார். மேலும், செம்பொன்னும், முத்தும், சிப்பியும் சுமந்து வந்து கரை ஒதுக்கும் கடல் என்பதை,

‘‘தெழித்து முன்னரற்றுஞ் செழுங்கடற் தரளஞ்
செம்பொனும் இப்பியுஞ் சுமந்து
கொழித்து வன்திரைகள் கரையிடைச் சேர்க்குங்
கோணமாமலை யமர்ந்தாரே’’. (மேலது - பா.4)

என்றருளினார்.

விலங்கு

விலங்குகள் அறிவால் குறையுடையவை. குறையுடைய அவற்றாலேயே மனிதன் தன்னை நிறையுடையவனாக அடையாளங் காணுகின்றான். ஆதலால் தன்னுடைய நிறையாகிய அறிவின் துணை கொண்டு விலங்குகளை அடக்கவும் ஆளவும் சக்தி பெற்றுள்ளான். அத்தகைய விலங்குகளுக்கு இலக்கியங்களிலும் இடம் கொடுக்கப் பட்டது. பக்தி இலக்கியங்களில் விலங்குகளின் தன்மை மனிதனுடைய ஐம்புலக் குறும்புகளோடு ஒட்டி விளக்கப் பெற்றன. அவ்வகையில் ஞானசம்பந்தப் பெருமான் குரங்கு, யானை, வேங்கை, புலி, மான் ஆகிய விலங்குகளை அமைத்துக் காட்டுகின்றார்.

இவைகளில் ‘குரங்கு’ என்ற விலங்கு ஞானசம்பந்தப் பெருமானால் அதிகம் ஆளப்பெற்றுள்ளது. உய்த்துணருகின்றபோது சில செய்திகளைக்

கொள்ளலாம். குரங்கு என்ற இனமே மனித இயல்போடு அணித்த குணமுடையது. இன்றும் அறிவியலார் குரங்கின் அறிவுநிலை பயிற்சி அறிவு, என்றும் மனிதன் அறிவு நிலையை பகுத்தறிவு என்றும் பிரிப்பர். ஒரு குரங்கு தான் பெற்ற பயிற்சி அறிவால் பகுத்தறிவு மிக்க முசுகுந்த சக்ரவர்த்தியாக மாறியது என்று நம் புராணங்கள் சான்றளிக்கின்றன. அத்தகைய குரங்கினைத் தத்துவவியலார் மனதிற்கும் ஐம்புலச் செயல் பாட்டிற்கும் ஒப்புமை கூறுகின்றனர். இத்தகைய குரங்கின் இயற்கை ஞானசம்பந்தர் பாடலில் விரவிக் கிடக்கின்றது.

''வலம் வந்த மடவார்கள் நடமாட
முழவதிர மழையென்றஞ்சிச்
சிலமந்தி யலமந்து மரமேறி
முகில்பார்க்குந் திருவையாறே''

(முதல் திருமுறை, திருவையாறு - பா.1)

என்ற திருப்பாட்டில் மடவார்கள் எழுப்பும் முழவொலியை இடியென்று குரங்கு எண்ணுகிறது. அதனால் மரத்தினுடைய உச்சிக்குச் சென்று மழைக்குண்டான மேகங்கள் இருக்கின்றனவா என்று பார்க்கின்றன. இதில் முன்பு சொன்ன பயிற்சி அறிவு மிக்கிருப்பதைக் காண்கின்றோம். முன்பு இடியோசை கேட்டுப் பயிற்சியுள்ள குரங்கு, ஒத்த ஓசையான முழவொலியை இடியென்று மயங்குகின்றது. அதைப்போலக் கருமுகில் இருந்தால் மழை வரும் என்ற தன்மைக்கும் அது பழக்கப்பட்டுள்ளது என்ற விளக்கங்கள் இயற்கையின் தன்மைகளை நுணுக்கமான அமைப்பில் ஞானசம்பந்தர் அறிந்துள்ளது விளங்கும். மேலும்,

''மந்திவந்து கடுவன் னோடுங்கூடி வணங்கும் வலிதாயம்''

(முதல் திருமுறை, திருவலிதாயம் - பா.5)

''மந்தியேறி இனமா மலர்கள் பலகொண்டு
முந்தித் தொழுது வணங்குங் கோயில் முதுகுன்றே''

(இரண்டாம் திருமுறை, திருமுதுகுன்றம் - பா.1)

பூந்தண் நறுவேங்கைக் கொத்திறுத்து
மத்தகத்திற் பொலிய ஏந்திக்
கூத்தற் பிடியுங் களிறும் உடன்
வணங்குங் குறும்பலாவே

(இரண்டாம் திருமுறை, திருக்குறும்பலா - பா.3)

''.. புலியு மானும்
அல்லாத சாதிகளும் அங்கழல் மேற்கைகூப்ப''

(இரண்டாம் திருமுறை, திருநணா - பா.6)

என்ற சான்றுகள் இயற்கை தன்மையில் விலங்குகளிடம் ஞானசம்பந்தர் இணைத்துக் கொண்டதை விளக்குகின்றது.

இயற்கை என்பது இயல்பாய் நிற்றல். அவ்வகையில் திருஞான சம்பந்தர் தம் இறையியல் அருளிப்பாட்டில் இயற்கையை இணைத்துச் சொல்லும் பாங்கு விளக்கப்பெற்றது. இலக்கியங்கள் வாழ்வியலுக்கு வழிகாட்டுவன. ''மண்ணில் நல்லவண்ணம் வாழலாம், வைகலும் எண்ணில் நல்கதிக்கு யாமோர் குறைவிலை'' என்றார் ஞானசம்பந்தப் பெருமான். அவ்வாறு மண்ணில் நல்லவண்ணம் வாழ இயற்கையோடு இயைந்து வாழ்தலும் இணைந்து வாழ்தலும் அவசியம் என்ற முடிவு திருஞான சம்பந்தப் பெருமானின் இயற்கை குறித்த அருளிப்பாடுகளிலிருந்து பெறப்படுகிறது.

55. புண்ணிய முதலும் பொங்கொளி மணியும்

திலகவதி சண்முகசுந்தரம், கோவை.

உலகறியத் திருத்தொண்டர் மாக்கதையை விரித்துரைத்தவர் செல்வமலி குன்றத்தூர் சேக்கிழார் சுவாமிகள். மற்ற அடியார்களின் வரலாற்றைவிட திருஞானசம்பந்தர் வரலாறு 'பிள்ளை பாதி புராணம் பாதி' என்னும் அளவுக்கு 1256 பாடல்களில் விரித்துரைத்துள்ளார்.

'ஆறது ஏறும் சடையான் அருள்மேவ அவனியர்க்கு
வீறது ஏறும் தமிழால் வழிஅமைத்துக் காட்டியருளிய'

திருஞானசம்பந்தரின் வரலாற்றைத் தொடங்கும்போதே, அவரது பாதமலர் தலைக்கொண்டு பணிந்து வணங்கி அவரது வரலாறு எம்மால் எல்லை கண்டு சொல்லும் தரமுடையதன்று. எனவே, துதித்த மட்டில் இப்புராணம் அமையும் என்று தொடங்கி, முடிக்கும்போதும் அவர்தம் பாதம் தரும் பரிசால் அறிந்தபடி துதிசெய்தேன்' என்று முடிக்கின்றார்.

திருஞானசம்பந்தரது ஞானத் தமிழ்மாலை பிறவி என்னும் பொல்லாப் பெருங்கடலை நீந்தத் துணைசெய்யும் தோணி என்பார் நம்பியாண்டார் நம்பிகள் - அத்தகைய நற்றமிழ்வல்ல ஞானசம்பந்தருடைய திருவடிகளைத் தொழுது, அவர் புனிதவாய் மலர்ந்தழுத நிலையை முதல் பாடாலாகக் கூறி, அதிலேயே புராணத்தை முழுமையாகக் கூறி முடித்துக் காட்டிப் பின்னரே புராணத்தை வழக்கம்போலச் சொல்லத் தொடங்குகிறார் சேக்கிழார்.

''வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத் துறைவிளங்க
பூத பரம்பரை பொலிய புனிதவாய் மலர்ந்தழுத
சீதவள வயற்புகலி திருஞான சம்பந்தர்
பாதமலர் தலைக்கொண்டு திருத்தொண்டு பரவுவாம்''

என்பதே அந்த முதல் பாடல்.

வேதத்தின் நெறிகள் தழைத்தோங்கவும், அவற்றுள்ளே மிக்க சைவத் துறைகள் விளங்கவும், உயிர்கள் வழிவழியாக மேம்படவும் தம் தூய திருவாய் மலர்ந்து அழுதார் திருஞானசம்பந்தர். ஒரு ஞானக் குழந்தையின் அழுகை சமுதாயத்தை இம்மூவகையிலும் மேம்படச் செய்தது என்று சேக்கிழார் பாடுகின்றார் என்றால் அதன் தன்மையை நாம் அறிந்து

கொள்ளத் தானே வேண்டும். வேதத்தை நெறியாகவும், சைவத்தைத் துறையாகவும் கூறியுள்ளார் சேக்கிழார். ஒருவர் தான் மேற்கொள்ளும் செயலில் வழியும் துறையும் நன்கு அறிந்த பின்பே அதில் ஈடுபட வேண்டும். துறையில் இறங்கி நீராட வேண்டுமென்றால் முதலை வாழும் துறையா? வழுக்கல் துறையா? மனிதர்கள் நீராடுதற்கு ஏற்ற துறையா என்பதை முழுக்க அறிந்த பின்பே இறங்க வேண்டும். அந்தத் துறைக்குச் செல்லும் வழியோ, முள்ளும், கல்லும், குழியும், பிறவும் இல்லாமல் வழிப்போவோருக்கு உதவும் வகையில் நீரும் நிழலும் முதலியன இருப்பனவாக அமையவேண்டும். வேதமாகிய நெறியில் சென்று, சைவத் துறையில் இறங்கிச் சிவானந்தக் கடலில் மூழ்கித் திளைக்க வேண்டும். மூழ்கித் திளைக்க வேண்டுவன உயிர்கள். இதுவே பூதபரம்பரைக்குப் பொலிவு.

சிவானந்தக் கடலில் மூழ்கித் திளைக்க வேண்டுமென்றால் உயிர்கள், வேதநெறியையும், சைவத்துறையையும் நன்கு உணர்ந்திருக்க வேண்டும். அப்படியானால் சமுதாயத்தில் வேதநெறி தழைத்தோங்கவும், சைவத்துறை மிகுந்து விளங்கவும் வேண்டும். இதுவே திருஞானசம்பந்தரின் வாழ்வும் வாக்கும் ஆகும். சேக்கிழார் சுவாமிகள் திருஞானசம்பந்தரை அடியொற்றியே தம் கருத்தை அநபாயனுக்கும், நந்தமிழ் மக்களுக்கும் கூறுகின்றார். வேதநெறி என்பது வேத விதிப்படி நிகழும் வைதிக ஒழுக்கம். சைவத் துறை என்பது சிவாகம விதிப்படி நிகழும் சரியை முதலிய சிவதருமங்கள். வேதம், சிவாகமம் இரண்டும் இறைவன் சிவபெருமானின் திருவாக்குகள். வேதம் உலகத்தவர்க்கும், சிவாகமங்கள், சத்திநிபாதர்க்கும் அருளப்பட்டன. வேதம் - பொது; ஆகமம் - சிறப்பு. வேதம் பசு என்றால், ஆகமம் அதன் பால். வேதங்கள் உயிரினும் சிறந்த ஒழுக்க நெறியினை மக்கள் மேற்கொண்டு வாழ்வதற்கு உரிய ஒழுக்கமுறைகளைக் கூறுவன. ஆகமங்கள், இறைவனை அடைந்து இன்புறுவதற்கு உரிய சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற நால்வகை நன்னெறிகளையும் சிறப்பாக எடுத்துக் கூறுவன. இவை இறைவன் நூல் எனப்படும்.

''வேதமொடு ஆகமம் மெய்யாம் இறைவனூல்
ஓதும் பொதுவும் சிறப்பும் என்றுள்ளன''

என்பார் திருமூலர்.

வேத மார்க்கத்தில் பல சமயங்கள் உள்ளன. அவற்றையே பொருள் எனக்கொண்டு, ஏதேனும் ஒன்றைச் சார்ந்து, அவ்வளவில் நின்று விடுபவர்கள் சைவத்துறையை அடைவது இல்லை. பல பல சமயங்கள் தாமே, பரிபக்குவக் குறைவுடையவர்களுக்கு சித்தாந்தமாகத் தோன்றி, தம்மிடமே நிறுத்திக் கொண்டால் அவர்களுக்குச் சைவத்துறை எவ்வாறு விளக்கம் பெறும்? ''வேதம் முடிந்த இடத்தில் சிவாகமம் தொடங்கு

கிறது. இன்னதென்று காணமுடியாதது என்று சாந்தமொழியுடன் வேதம் இளைத்து நிற்கின்ற இடத்தில், அந்தப் பதிப்பொருள் இன்ன தன்மை உடையது என்று சுட்டிக்காட்டித் தொடங்குகிறது சிவாகமம் - இக் குறிப்புகளைக் கொண்டே வேத நெறி தழைத்தோங்க என்றும், மிகு சைவத்துறை விளங்க என்றும் கூறினார்'' என்று சி.கே. சுப்பிரமணிய முதலியார் உரை கூறுகிறார். ஆக, வேதநெறியும், சைவத்துறையும் தழைத்தோங்கி மிக்கு விளங்கியிருக்க வேண்டும்.

அடுத்து, பூத பரம்பரை பொலிய வேண்டும். பூதம் - உயிர்கள். தாங்கள் செய்த கன்மத்துக்கு ஈடாகப் பற்பல பிறவிகளிலும் வரும் உயிர்கள், தங்கள் பக்குவத்திற்கேற்ப இறைவன் திருவருளைப் பெறுவதற்கு உரிய தகுதியைப் பெற மேலோங்குதல். இந்த மேன்மை வேதம் நெறி யாகச் சைவத்துறையிலிருந்து பெறப்படும். ''புறச்சமய நெறி நின்றும், அகச்சமயம் புக்கும், புகன்மிருதிவழி உழன்றும், புகலும் ஆச்சிரம அறத்துறைகள் அவை அடைந்தும், அருந்தவங்கள் புரிந்தும், அருங் கலைகள் பல தெரிந்தும், ஆரணங்கள் படித்தும், சிறப்புடைய புராணங்கள் உணர்ந்தும், வேதச் சிரப்பொருளை மிகத் தெளிந்தும் சென்றால், சைவத் திறத்தினை அடைவர். இதில் சரியை கிரியா யோகம் செலுத்தியபின் ஞானத்தால் சிவனடியைச் சேர்வர்'' என்று உயிர்கள் சிவனடியைச் சேர்ந்து பொலிவு பெற உண்டான வழிமுறைகளைச் சிவஞான சித்தியார் படம்பிடித்துக் காட்டுகிறது. காரிட்ட ஆணவக் கருவறையில் கட்டுண்டு பொலிவற்றுக் கிடந்த உயிர் மேற்சொன்ன முறையில் சைவ விளக்கத்தால் பொலிவுற்று சிவநெறி விளக்கம் பெற வேண்டும்.

இயல்பாகவே, வேத வேள்வியினையும், சிவநெறியினையும் போற்றி வளர்ப்பதில் சிறந்து விளங்கிய வேதியர் குடும்பமாகிய கவுணியர் கோத்திரத்தில் தோன்றியவர் திருஞானசம்பந்தர். ஞானபோனகம் உண்டபின் திருவாய் மலர்ந்ததால் மேற்கூறப்பட்ட மூன்றும் மேம்பட தேவாரம் தந்தார்.

சிவன்பாதத்தைத் தவிர மற்றொன்றைத் தம் இருதயத்திலே வைத்துக் கொள்ளாதவராகிய சிவபாத இருதயருக்கு, இடையூறு ஒன்று வந்து இருதயத்தில் புகுந்து கொண்டது. மேதினியில் சமண்கையர் சாக்கியர் தம் பொய் மிகுந்தது. ஆதி அருமறை வழக்கம் அருகியது. அரன் அடியவர்பால் பூதிசாதன விளக்கம் போற்றப் பெறவில்லை. இதனால் மனத்துயரடைந்த சிவபாத இருதயர் 'பரசமயம் நிராகரித்து நீறாக்கும்' புதல்வனைப் பெறத் தவம் புரிந்தார். நீறாக்குதல் - பரசமயங்களை இல்லாமல் செய்தல் அதாவது சாம்பலாக்குதல்; அத்தோடு மக்கள் அனைவரையும் நீறுபுனைந்த நெற்றியராக்குதல் என்றும் கொள்ளலா மன்றோ?

சேக்கிழார் முதல் பாட்டில் சொன்ன தமது மூன்று கருத்துக்களையே இங்குச் சிவபாத இருதயர் கருத்தாகவும் கூறியிருப்பது நோக்கத்தக்கது. அரன் அடியவர்கள்பால் பூதிசாதன விளக்கம் போற்றப் பெறாமையால் பூதபரம்பரை பொலிவற்றிருந்தது. சமண்கையர் சாக்கியர் தம் பொய் மிகுத்ததால் சைவத்துறை விளக்கம் பெறவில்லை. ஆதி அருமறை வழக்கம் அருகியதால் வேதநெறி தழைத்து ஓங்கவில்லை.

சிவம்பெருக்க அவதாரம் செய்த குழந்தை திருஞானசம்பந்தர் அல்லவா! அதனால் அவர் தந்தையோடு நீராடச் செல்லவேண்டு மென்று அழுகிறார். வேண்டாமென்று தந்தை தடுத்ததால் மீண்டும் கிண்கிணிக்கால் கொட்டி அழுகிறது. தந்தை நீருக்குள் மூழ்கியதால் அவரைக் காணாமல் திருத்தோணிபுரச் சிகரம் பார்த்து அம்மே! அப்பா! என்று அழுதது. முதலில் அழுததைக் குறிக்கும்போது பண்டு திருவடி மறவாப் பான்மையால் அழுதது என்றும் இரண்டாம் முறை முறைபுரிந்த முன்உணர்வு மூள அழுதது என்றும், மூன்றாம் முறை தம்மேலைச் சார்புணர்ந்து அழுதது என்றும் சேக்கிழார் சுவாமிகள் கூறுகிறார்கள். இப்பான்மையைத் திருஞானசம்பந்தரும் தமது தேவாரத்தில்,

"திருந்தடி மறக்குமாறு இலாதஎன்னை மையல்செய்து இம்மண்மேல்
பிறக்குமாறு காட்டினாய்"

என்று கூறுகிறார்.

இவற்றைக் கொண்டு கூட்டிப் பார்க்கும்போது ஒவ்வொரு நிலை யிலும் பொருத்தமாக வைத்துப் பாடியுள்ளமை புலனாகும். சிவம் பெருக்க வந்த திருஞானசம்பந்தக் குழந்தை பூதபரம்பரை பூதிசாதன விளக்கம் போற்றிப் பொலிவடைய, திருத்தோணிபுரச் சிகரம் பார்த்து 'அம்மே! அப்பா!' என்றழுதது; சமண்கையர் சாக்கியர் தம் பொய்யழிந்து, மிகுசைவத்துறை விளங்கிப் பொலியக் கிண்கிணிக்கால் கொட்டிப் பொருமி அழுதது; ஆதி அருமறை வழக்கம் பெருகி வேதநெறி தழைத்து ஓங்க வேண்டித் தொடர்ந்தழுது பின்சென்றது; மூன்றழுகைக்கும் முறையே பண்டு திருவடி மறவாப் பான்மை என்றும், முறைபுரிந்த முன் உணர்வு மூண்டது என்றும், தம் மேலைச் சார்பு உணர்ந்தது என்றும் சேக்கிழார் கூறுகிறார்.

சிவஞான போனகம் உண்டபின் பாடிய தமது ஞானத் தமிழ்ப் பதிகங்களில் இந்த முறையைக் கையாண்டுள்ள திருஞானசம்பந்தர், முதல் ஏழு பாடல்களில் இறைவன் பெருமை, கருணை, கோயில், தலம், இயற்கை என்று பாடி, 8-ஆம் பாடலில் இராவணனுக்கு அருளியதையும், 9-ஆம் பாடலில் அயன் மாலுக்கு அருளியதையும், 10-ஆம் பாடலில்

புறச்சமய நீக்கத்தையும், 11-ஆம் பாடலில் பதிகத்தை ஓதுவதால் உயிர்கள் அடையும் பேற்றையும் வைத்துப் பாடியுள்ளார். (8 - பூதபரம்பரைப் பொலிவு; 9 - மிகுசைவத்துறை விளக்கம்; 10 - வேதநெறி தழைத்தோங்கல்.)

சேக்கிழார் தம் பெரியபுராணத்தில் திருஞானசம்பந்தர் கருத்தை அவ்வண்ணமே தம் முதல் பாடலில் வைத்துக் கூறியுள்ளதோடு, 8, 9, 10-ஆம் பாடல்களை அவர் பாடியுள்ளதற்கு விளக்கத்தையும் கூறுகிறார். இராவணன் தவறு செய்த போதிலும் அதை உணர்ந்து, இறைவனைப் பணிந்தான். அதனால் அருள் பெற்றான். அதுபோல் மண்ணுலகில் வாழ்பவர்கள் (பூதபரம்பரை) அறியாமையால் தவறு செய்தபோதிலும், அதை உணர்ந்து இறைவன் திருவடியை நினைந்து வழிபட்டால் நம்மையும் ஆள்வன்.

"மண்ணுலகில் வாழ்வார்கள் பிழைத்தாலும் வந்தடையில்
கண்ணுதலான் பெருங்கருணை கைக்கொள்ளும் எனக்காட்ட
எண்ணமிலா வல்லரக்கன் எடுத்துமுறிந்து இசைபாட
அண்ணல் அவற்கு அருள்புரிந்த ஆக்கப்பாடு அருள்செய்தார்"

(பூதபரம்பரை பொலிய,)

என்றும், அயனும் மாலும் தம்முள் தருக்கித் தாமே பெரியவரென்று, அன்னமும், ஏனமும் ஆகி இறைவனின் அடிமுடி தேடச் சென்று காணாது வருந்தினர். இறைவன் திருவருளால் ஆணவம் குன்றித் திருவைந்தெழுத்தோதி வழிபட்டு அருள் பெற்றனர்.

"தொழுவார்க்கே அருளுவது சிவபெருமான் எனத்தொழார்
வழுவான மனத்தாலே மாலாய மாலயனும்
இழிவாகும் கருவிலங்கும் பறவையுமாய் எய்தாமை
விழுவார்கள் அஞ்செழுத்துந் துதித்து உய்ந்தபடி விரித்தார்"

(மிகுசைவத்துறை விளங்க.)

என்றும், புறச்சமயம் மேற்கொள்ளின் இம்மை மறுமையிலும் துயர் விளைக்கும் பழிச் செயல்களே மிகும். இறைவன் அருளிய ஒழுக்க நெறியைப் பற்றி ஒழுகுவதே அறிவுடையோர் மேற்கொள்ளும் நல்லொழுக்க நெறியாகும்.

"வேத காரணராய வெண்பிறைசேர் செய்யசடை
நாதன் நெறியறிந்துய்யார் தம்மிலே நலங்கொள்ளும்
போதமிலாச் சமண்கையர் புத்தர்வழி பழியாக்கும்
ஏதமே எனமொழிந்தார் எங்கள்பிரான் சம்பந்தர்"

(வேதநெறி தழைத்தோங்க.)

என்றும் சம்பந்தரின் பதிக அமைப்புக்கு விளக்கம் கூறுகிறார் சேக்கிழார்.

இன்றைய உலகில் மக்கள் அறியாமையால் இறைவன் ஒருவன் உளன் என்று உணராது, வழிபடுவதற்குரிய சாதனங்களையும் மேற் கொள்ளாது, நவகோள்களை நாடித் தேடி அலைந்து பொருள் விரயமும், கால விரயமும் செய்து பரிகாரமும் செய்து அல்லலுறுகின்றனர். அவர் களுக்கு எப்பொருளும் ஆக்குவான் ஈசன் என்றுணர்த்தி, அவனை வழிபடும் அடியவர்களுக்கு ஞாயிறு, திங்கள், செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி, பாம்பிரண்டும் (ராகு, கேது) உடனே ஆசறு நல்ல நல்ல அவை நல்ல நல்ல என்று நமக்குக் கோளறு பதிகம் பாடித் தந்துள்ளார். கைவினைசெய்து பிரான் கழல் போற்றினால் செய்வினை வந்து நம்மைத் தீண்டப் பெறா. இது திருநீலகண்டத்தின் மேல் ஆணை. எனவே, துஞ்சலும் துஞ்சல் இல்லாதபோதிலும், தும்மல், இருமல் தொடர்ந்த போதிலும், இம்மை வினை அடர்ந்து எய்தும் போதிலும் என எல்லாப் போதிலும், காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி இடைவிடாது திருவைந் தெழுத்தை ஓதி வழிபட்டால் பூதிசாதனம் பெற்று பூதபரம்பரை பொலியலாம். இது சத்தியமான வாக்கு.

அதனால்தான் சேக்கிழார் திருஞானசம்பந்தரின் அவதாரத்தைக் கூறும்போது 'பரசமயத்தருக்கு ஒழிய, சைவம் முதல் வைதிகமும் தழைத் தோங்க, தொண்டர் மனம் களிசிறப்பத், தூய திருநீற்று நெறி எண்டிசையும் தனிநடப்ப, திசை அனைத்தின் பெருமையெல்லாம் தென்திசையே வென்றேற, செழுந்தமிழ் வழக்கே துறை வெல்ல, நிகழ்காலம், எதிர்காலம் நவைநீங்க, வளர்காழிப்பதி வாழ, தோணிபுரத்தமர்ந்த பிரான் அருள்பெருக தவம் பெருக்கும் சண்பையிலே சிவம் பெருக்கும் பிள்ளையார் திரு அவதாரம் செய்தார்' என்று கூறுகிறார்.

அழுத குழந்தைக்கு ஒரு நெறியில் வருஞானம் கொடுப்பதற்கு அப்பன் அம்மையைப் பார்த்தருள, அம்மை திருமுலைப்பாலை வள்ளத்தில் கறந்தருளி, அதில் எண்ணரிய சிவஞானத்து இன்னமுதம் குழைத்தருளி, 'உண்' அடிசில் என ஊட்டிக் கண்மலர் துடைத்து அருள சிவஞானசம்பந்தர் ஆயினார் திருஞானசம்பந்தர்.

பாலுண்ட அந்நிலையில் தவமுதல்வராகிய திருஞானசம்பந்தர், சிவனடியையே சிந்திக்கும் செம்மை பெருகச் செய்யும் சிவஞானமாகிய உவமையிலாக் கலைஞானத்தையும், பிறவிக்கு ஏதுவாகிய மலவாதனையை வேரற மாற்றும் ஞானமாகிய உணர்வரிய மெய்ஞ்ஞானத்தையும் உணர்ந்தார். சிவஞானம் என்பது இறைவன் தன் திருவருளின் வழியே கொடுக்கப் பெறுவது. சிந்தித்தலாகிய திரு; திரு - சிவத்தன்மை பயக்கும் முக்தி.

"சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானம்
பவமதனை அறமாற்றும் பாங்கினில் ஓங்கிய ஞானம்

உவமையிலாக் கலைஞானம் உணர்வரிய மெய்ஞ்ஞானம்
தவமுதல்வர் சம்பந்தர் தாமுணர்ந்தார் அந்நிலையில்"

என்பார் சேக்கிழார்.

சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானமாகிய உவமையிலாக் கலைஞானம் என்பது அபரஞானத்தையும், பவமதனை அறமாற்றும் பாங்கினில் ஓங்கிய ஞானமாகிய உணர்வரிய மெய்ஞ்ஞானம் என்பது பரஞானத்தையும் குறிக்கும். பாலுண்ட அப்போதே ஓதாமலே உணர்ந்தவர் ஆனார். இருவகை ஞானமும் அவருக்கு இயல்பாயின. ஞானபோனகம் ஞாலம் உய்வதற்காக உண்ட அப்போதே சிவானந்தானுபவம் பெற்ற நின்மல துரியாதீத நிலைபெற்றுச் சிவஞான சம்பந்தர் ஆயினார். மற்றவர்களைப் போலச் சாதக நிலையில் இருந்து பெறவேண்டிய அவசியம் இவருக்கு இல்லை.

"போதையார் பொற்கிண்ணத் தடிசில் பொல்லாதெனத்
தாதையார் முனிவுறத் தான்எனை ஆண்டவன்"

என்று திருஞானசம்பந்தர், தாம் இறைவன் திருவருளால் ஆட்கொள்ளப் பட்டு ஞானபோனகம் உண்டதைக் கூறுகிறார். அபரஞானம், பரஞானம் என்று ஞானம் இருவகை. அபரஞானம் என்பது நூல்களாலும், இறைவன் திருவருளாலும் பெறக்கூடியது. பரஞானம் என்பது இறைவன் திருவருளால் மட்டுமே பெறக்கூடியது.

"மேவரு ஞானம் இரண்டு அவற்றுள் ஒன்று
விமலனார் பாத தாமரையே
ஓவறும் அன்பின் உணர்திரு வளிக்கும்
ஒப்பிலா உயர்கலை ஞானம்
தாவரும் பவத்தை வேரொடும் களையும்
தக்க மெய்ஞ்ஞானம் ஒன்று இவற்றால்
சாவதும் பிறப்பும்தணப்புறச் சிவத்தைச்
சார்ந்து அதுவாய் நிற்றல் யோகம்"

என்பார் கச்சியப்ப சுவாமிகள்.

'உயர் ஞானம் இரண்டாம். மாறாமலம் அகல அகலாத மன்னுபோதத் திருவருள் ஒன்று. ஒன்று அதனைத் தெளிய ஓதும் சிவாகமம்' என்று உமாபதி சிவனார் கூறுகிறார்.

இப்படியன் இந்நிறத்தன், இவ்வுருவன், இவ்வண்ணத்தன் என்று எழுதிக்காட்ட முடியாத இறைவனைச் சுட்டிக் காட்டி, இதோ தோடுடைய செவியன், விடையேறியவன், தூவெண்மதி சூடியவன், காடுடைய சுடலைப் பொடியைப் பூசியவன், என் உள்ளம் கவர் கள்வன்

என்றெல்லாம் அந்த மூன்று வயதில் பாடினார் என்றால் உவமையிலாக் கலைஞானத்தையும் உணர்வரிய மெய்ஞ்ஞானத்தையும் பாலுண்ட போதே பெற்றதால்தான். எண்ணரிய சிவஞான இன்னமுதம் குழைத்தல்லவா அன்னை ஊட்டினாள்.

கேட்டல், சிந்தித்தல், தெளிதல், நிட்டை கூடல் என்ற ஞான சாதனங்கள் நான்கில் முன்னிரண்டும் அபரஞானம்; பின்னிரண்டும் பரஞானம். கேட்டல் முதலிய மூன்றும் முக்தி சாதனமாகிய ஞானத்தைப் பெற வழிகள். ''உபதேசத்தால் கேட்டு அறியலாம்; சிந்தித்ததனைத் தன் அறிவின் கண்ணே சிவஞானத்தால் மாசறத் தெளிந்தும் அறியலாம். அதனால் பாச க்ஷயம் பண்ணி நிட்டை கூடிச் சிவானந்தானுபூதியும் பெறலாம்'' என்கிறார் சிவஞான முனிவர். அதனால் கேட்டல், சிந்தித்தல், தெளிதல் மூன்றும் முற்றிய ஞானம் பெறவும், அதனால் வீடு பெறவும் வாயில்கள் ஆகும்.

ஞானம் என்பது தொகையில் ஒன்று; வகையால் அபரம், பரம் என்று இரண்டு; கேட்டல், சிந்தித்தல், தெளிதல், நிட்டை கூடல் என்று பெறுகின்ற வழிகளில் விரியால் நான்கு; ஞானவேள்வி என ஐந்து; சரியை, கிரியை பற்றி எட்டு; தசகாரியம் பற்றி பத்து; முன்கூறிய எட்டு நிலைகளும் ஒவ்வொன்றும் நான்காகும் முறையில் முப்பத்திரண்டு. இன்னும் பலவாறாய் விரிந்து நிற்பது ஞானம். என்றாலும் இவை யெல்லாம் அபரம், பரம் என்ற இரண்டனுள் அடங்கும் என்பார் சி.கே. சுப்பிரமணிய முதலியார்.

'பதி, பசு, பாசங்களை உள்ளவாறு உணரும் உண்மை உணர்ச்சியே ஞானம். அது அபரம், பரம் என்றிரண்டு. வேதாகமங்களின் ஆராய்ச்சி உணர்வு அபரம்; அதனால் பெறப்படும் அனுபவ உணர்வு பரம்' என்பார் சிதம்பரம் ஈசானியமடத்து இராமலிங்க சுவாமிகள்.

திருவள்ளுவரும் மெய்யுணர்தல், அறிவுடைமை என்று இரண்டு அதிகாரங்களைச் சொல்லி, மெய்யுணர்தலை அறத்துப்பாலிலும், அறிவுடைமையை பொருட்பாலிலும் வைத்துள்ளமையை உணர்தல் வேண்டும். பரிமேல் அழகர் - ஞானம் என்பது வீடுபயக்கும் உணர்வு என்கிறார். எல்லாவற்றையும் ஒரே வார்த்தையில் அடக்கி ஔவையார் ஞானம் என்பது ஈசன்பால் அன்பு என்கிறார். இந்த அன்புதான் சிவம். சிவம்தான் அன்பு. எனவே இறைவனே ஞானமாக திருஞானசம்பந்தருள் இருந்து பொலிந்ததால் இறைவன் வேறு, சம்பந்தர் வேறல்ல என்றுணர்ந்த சேக்கிழார் திருஞானசம்பந்தர் பாதமலர் தலைக்கொண்டு பரவித் தொடங்கி முடிக்கிறார்.

''சூரனுக்கு அஞ்சி இந்திரன் புகலடைந்ததால் சீர்காழிக்குப் புகலி'' என்ற பெயருண்டு. பிறவி வெப்பம் தணிக்கும் குளிர்ச்சி உடையது

புகலி. இத்திருத்தலத்தைப் போலவே திருஞானசம்பந்தரது பாதமலர் களும் புகலடைந்தவர்களுக்குப் பிறவி வெப்பத்தைத் தீர்க்க வல்லன என்பது குறிப்பு'' என்று சி.கே. சுப்பிரமணிய முதலியார் கூறுவது நினைக்கத்தக்கது.

சிவஞானம் என்பது சிவசக்தி. இச்சிவசக்தி சிவபரம்பொருளோடு கூடிப் பிரிவின்றி, தாதான்மியமாகி நிற்பது. இங்குத் திருஞானசம்பந்தரும் அச்சக்தி போல அதனுள் அடங்கிச் சிவதாதான்மியமாகிய அத்துவித சம்பந்த விளக்கம் பெற்று இறைவனோடு பிரிப்பின்றி நிற்கிறார் என்பார் சி.கே. சுப்பிரமணிய முதலியார். யான் எனது அற்ற இடம் தானே திருவடி. எனவே, இவரது திருவடியே இறைவன் திருவடி.

பொருளும் அதனால் எய்தும் புண்ணியமும், அப்புண்ணியத்தின் பயனாகிய இம்மை, மறுமை இன்பங்களும் கல்வியும், அதனால் எய்தும் அன்பும் அவ்வன்பின் பயனாகிய ஞானமும் ஆகிய யாவும் திருஞானசம்பந்தப் பெருமானின் திருவடிகளே.

''வல்லார் பிறப்பறுப்பார் வண்மை நலம்கல்வி
நல்லாதரவு இன்பம் ஞானங்கள் - எல்லாம்
திருஞான சம்பந்தன் சேவடியே என்றும்
ஒருஞான சம்பந்தம் உற்று''

என்ற வாக்கிற்கு இணங்கவே சேக்கிழார் பாதமலர் தலைக்கொண்டு பணிந்தார் எனலாம்.

56. சம்பந்தரும், திருக்கோயில் வழிபாடும்

பு.இரா. திலகவதி, கடலூர்.

சைவ சமய வாழ்வு வழிபாட்டினை மையமாகக் கொண்டதாகும். வழிபாட்டு நெறியே அனைத்து அறத்துக்கும், ஒழுக்கத்துக்கும் ஊற்றாய்க் கருதப்படுகிறது. வழிபாட்டு நெறியின் மூலமே இறையனுபவம் வாய்க்கப் பெறும் என்பது சைவத் தெளிவாகும். அத்தகைய வழிபாடு,

1. அகமுகமாய் உணர்வு ஒன்றுபடும் ஞானநிலை
2. புற நிலையில் உருவ வழிபாட்டு நிலை

என இரு நிலைகளில் அமையும்.

திருஞானசம்பந்தர் மக்கள் எளிதில் உணரும் இறைநெறியாக உருவ வழிபாட்டை வலியுறுத்தியுள்ளார். இறைநெறி என்பது வெறும் மனவுணர்வன்று. அது நடைமுறைச் செய்கைகளுடன் கலந்த உணர்வு என்பதைத் தெளிவுபடுத்த திருக்கோயில் வழிபாட்டை உரைத்துள்ளார்.

திருக்கோயில் வழிபாடு

கருணைக் கடலான இறைவன் மனிதனுக்கு மன ஒருமைப் பாட்டையும், ஒன்றிய உணர்வுப் பயிற்சியினையும், மனத்தூய்மையையும், அமைதியையும் உண்டாக்க ஆங்காங்கே கோயில் கொண்டு திருமேனி உருவில் காட்சி தந்து அருள்புரிவான்.

உலக வாழ்வில் உழன்று திரியும் மக்களுக்குத் திருக்கோயில் வழி பாட்டினைத் தவிர இறைவனை நினைந்து உருகுவதற்கு வேறு வழியில்லை.

இறைவனைப் பிற இடங்களில் வழிபடுவதைக் காட்டிலும் திருக்கோயில் களில் சென்று வழிபடுவதே சிறந்தது. பிற இடங்களில் வழிபடுவதற்கு உலகச்சூழல் நினைவுகள் தடங்கலாக அமையும். கோயில்களில் சென்று வழிபடுங்கால் உலகச் சூழல் நினைவுகள் தாமாகவே மறைந்து விடும்.

திருஞானசம்பந்தர் திருக்கோயில்களின் சிறப்பு, திருக்கோயில் வகைகள் திருக்கோயில் வழிபாட்டு முறைகள் ஆகியனவற்றைத் தமது பாடல்களில் குறித்துள்ளார்.

திருக்கோயில்களின் சிறப்பு

தமிழ் மக்களின் சமயத்துறையில் பழமையும் பெருமையும் மிக்க திருத்தலங்கள் சிறப்பிடம் பெற்றவை. நாளும் இன்னிசையால் சைவம்

பரப்பிய திருஞானசம்பந்தர் தமது தலப்பயணத்தில் தலங்களின் சிறப்புக் களைக் கூறுவதோடு திருக்கோயில்களின் சிறப்புக்களையும் இணைத்தே கூறியுள்ளார்.

மக்கள் இறைநெறியில் செல்ல வேண்டும் என்பதற்காக அவர்கள் கண்டு மகிழும்படியான இறைத்தோற்றங்களைப் புகழ்தல், இறைவனின் வீரச்செயல்கள், இறைவன் அடியவர்களுக்கு அருள்புரியும் தன்மைகள் ஆகியனவற்றைக் கோயில்களைக் குறிக்குமிடங்களில் அடைமொழியாக அமைத்துள்ளார்.

திருவார்ந்த கோயில், சீரார்ந்த கோயில், எழில்மிகு கோயில், பேரொளியான் அமர்கோயில், விண்ணிழி கோயில், ஓங்கு கோயில், பூங்கோயில், கண்ணார்ந்த கோயில், வரத்தோன்று கோயில் என்ற சம்பந்தர் வாக்கால் திருக்கோயில்களின் சிறப்பு புலப்படுகிறது.

திருக்கோயில் வகைகள்

திருஞானசம்பந்தர் திருக்கோயில்களின் அமைப்பு முறைகளைப் பெருங்கோயில், மலைக்கோயில், தூங்காணை மாடக்கோயில், மணிக் கோயில் என வகைப்படுத்தியுள்ளார்.

யானைகள் ஏறாவண்ணம் உயரமாகக் கட்டப்பட்டதும், யானை படுத்திருப்பது போன்று காட்சியளிப்பதுமாகிய கோயில்கள் தூங்காணை மாடக்கோயில்கள் என வழங்கப்படும். நன்னிலம், குடவாயில், வைகல், பெண்ணாகடம் ஆகிய ஊர்களில் இத்தகு கோயில்கள் உள்ளன. இக்கோயில் வகையினைச் சம்பந்தரும்,

'பெண்ணாகடத்துப் பெருங்கோயில்'

(தி.ஞா.தே.நடுநாடு - 2-1-11)

எனக் குறித்துள்ளார்.

எட்டு அல்லது ஆறு பட்டையையுடைய விமான அமைப்புடைய மணிக்கோயிலை,

'மாமருவும் மணிக்கோயில்' (தி.ஞா.தே.சோ.தெ - 63-1-4)

என்றும் சுட்டியுள்ளார்.

திருக்கோயில் வழிபாட்டு முறைகள்

திருக்கோயில் வழிபாட்டினை முறைப்படுத்தி மக்கள் பின்பற்ற வேண்டுமெனத் திருஞானசம்பந்தர் சில நெறிமுறைகளைக் கூறிச் சென்றுள்ளார். அவர் தம் தேவாரத்தில் திருக்கோயிலில் இறைவனை வழிபடுவதற்கான நெறிகளை,

செயல்நிலை

கலைநிலை

என்ற இரு வகைகளில் விளக்கிக் காட்டலாம்.

செயல்நிலை வழிபாட்டு நெறிகள்

அபிடேகம் செய்தல், சாந்து கொண்டு பூசித்தல், புனல் மலரிட்டு வணங்கல், தூபதீபங்களால் வழிபடல், அர்ச்சனை செய்தல், கைகூப்பி வணங்கல், தலைதாழ்த்தி வணங்கல், கழல் பணிதல், வாழ்த்தி வணங்கல், வேதவேள்விகளால் வழிபடுதல், தீர்த்தமாடல், தலத்தை வழிபடல் என்பனவற்றைச் செயல்நிலை வழிபாட்டு முறைகளாகக் கூறலாம். வழிபாட்டிற்குரிய அபிடேகப் பொருட்களாகப் பால், தயிர், நெய், தேன், இளநீர், கரும்பின் சாறு, பழங்கள் ஆகியவை சிறப்பாகப் பேசப் பெறும். இதனை,

'தேன் நெய் பால் தயிர் தெங்கிள நீர்கரும் பின்தெளி
ஆனஞ்சாடும் முடியான்' (தி.ஞா.தே.சோ.வ.42-4-5)

என்பார் சம்பந்தர்.

தூப தீபங்களால் வழிபடுவதை,

'தீபமாலை தூபமுஞ் செறிந்தகைய
ராகி நம் தேவதேவன் மன்னுமூர் திருந்துகாழி சேர்மினே'
(மேற்படி - 14-44-2)

என்றுரைப்பார்.

'தண்முகத் தரும்பத்தட மூன்றுடையான் றனையுன்னிக்
கண்முகத் தரும்பக் கழற்சே வடிகை தொழுவார்கள்'
(மேற்படி - 11-2-3)

என வரும் அடிகள் திருவடி போற்றுதலைச் சிறப்புற எடுத்துரைக்கக் காணலாம்.

'வேதமும் வேள்வியும் ஓவா வேட்கள நன்னகராரே'
(மேற்படி - 2-1-3)

என ஆகம வழிபாடும் கூறப்படுகிறது.

திருவெண்காட்டுப் பதிகத்தில்,

'வேயனதோ ளுமைபங்கன் வெண்காட்டு முக்குளநீர்
தோய் வினையா ரவர்தம்மைத் தோயாவாந் தீவினையே'
(மேற்படி - 11-1-2)

என்று தீர்த்தமாடலின் பயனை உறுதிப்படுத்தி மொழிந்துள்ளார்.

கலைநிலை வழிபாட்டு நெறிகள்

கலைநிலை வழிபாட்டு நெறிகளாக ஆடல் பாடல் நெறிகளால் வழிபடல், பாமாலை பாடி வணங்கல் ஆகியனவற்றைக் கூறலாம்.

இறைவன் இசைக்கு இரங்குபவன், அருள்புரியும் திறத்தவன், ஏழிசையாய் இசைப்பயனாய் விளங்குபவன் என்றெல்லாம் எடுத்துரைக்கும் சம்பந்தரும், அப்பரும் ஆடல் பாடல் நெறியைப் பெரிதும் பேசுகின்றனர்.

இறைவன் தமிழ்ப்பாட்டிற்கு உருகிக் குழைந்து, பண்ணார் தமிழால் தம்மைப் பரவ வேண்டுமென அடியாரிடத்து விரும்பி உரைப்பதாகச் சேக்கிழார் எடுத்துரைப்பதும் இங்குக் கருதத்தக்கது.

'அர்ச்சனை பாட்டே யாகும்
ஆதலால் மண்மே னம்மைச் சொற்றமிழ் பாடுக'
(பெ.பு.த.கொ.பு.பா.70)

இறைவனின் திருப்புகழைப் பாடியும், அதற்கேற்ப ஆடியும் தொழும் நெறியைத் திருஞானசம்பந்தர் தேவாரம் பெரிதும் போற்றுகிறது.

'அடியார்கள் படியார இசைபாடிச் செல்வமறை
யோருமுறை திருப்புகலி'. (தி.ஞா.தே.சோ.வ.14-127)

'சொல்வளரி சைக்கிளவி பாடிமட வார்நட மதாட'
(தி.ஞா.தே.சோ.தெ - 14-3-2)

என ஆடல் பாடல் நெறியைச் சம்பந்தர் சுட்டுவார்.

திருவிழாக்கள்

திருவிழாக்கள் சமயத்தில் புத்துணர்ச்சியையும், எழுச்சியையும் உண்டாக்குவனவாகும். சமயப் பரப்பலுக்கு உறுதுணையாகவும் இப்பெருநெறி விளங்கக் காணலாம்.

தனி மனித ஆன்ம ஈடேற்றத்திற்கு நாளும் திருக்கோயிலுக்குச் சென்று இறைவனை வழிபட வேண்டும் என்று வலியுறுத்திய சம்பந்தர் சமுதாயப் பொது நிலையில் ஒருங்கிணைந்த செயற்பாட்டு நெறியாக, கோயில்களில் நடைபெறும் திருவிழாக்களைக் கருதினார்.

திருஞானசம்பந்தர் தேவாரத்தில் திருவிழாக்கள் நடைபெறும் தலங்களும், திருவிழாக்களின் சிறப்புகளும், பங்குபெறும் அடியார் தம் செயற்பாடுகளும் எடுத்துரைக்கப் பட்டுள்ளன.

திரு இடைமருதூர், திருக்கடவூர், திருவாலவாய், திருவானைக்கா, திருநள்ளாறு, திருநல்லூரர், திருமறைக்காடு, திருவாரூர், திருக்கச்சி, திருக்கோளிலி ஆகிய தலங்களில் திருவிழாக்கள் சிறப்பாக நடைபெற்றன வாகக் கூறியுள்ளார் சம்பந்தர்.

திருஞானசம்பந்தர் தேவாரத்தில் ஏழ்விழா, தேர் விழா, தைப்பூச விழா, பங்குனி உத்திர விழா ஆகிய சிறப்புறப் பேசப்பட்டுள்ளன.

'அருக்கன் முதலான இமையோர் குழுமியேழ் விழவினில்
தருக்குல நெருக்குமலி தண்பொழில்கள் கொண்டல்அன
சண்பைநகரே' (தி.ஞா.தே.சோ.வ. 14-34-8)

'வருந்திய மாதவத்தோர் வானோ ரேனோர் வந்தீண்டிப்
பொருந்திய தைப்பூச மாடியுலகம் பொலிவெய்த'
(தி.ஞா.தே. சோ.தெ.21-6-5)

என வரும் பகுதிகள் ஏழ்விழா, தைப்பூச விழா ஆகியனவற்றை விளக்கி நிற்கும்.

திருமயிலாப்பூர் பதிகத்தில் ஐப்பசி ஓணவிழா, தையலார் கொண்டாடும் விளக்கீடு விழா, ஆதிரை நாள் விழா, தைப்பூச விழா, பங்குனியுத்திர விழா முதலான பல்வேறு விழாக்களைக் குறித்துச் சென்றுள்ளார்.

இத்திருவிழாக்களெல்லாம் வாழ்க்கை இன்பங்கள் சமயச்சார்புடன் கூடி மக்களை மகிழ்வித்தலால், சமய ஒழுகலாறுகளைக் கடைப்பிடித்தல் என்பது கட்டுத்திட்டத்திற்குள் அடங்கிய கட்டாயங்களாகக் கொள்ளப்படாது வாழ்வுடன் இணைந்து வருவது என்ற உண்மையை வலியுறுத்துகின்றன.

சங்ககாலத்தில் வாழ்வின் ஒரு கூறாக விளங்கிய சமயம் இடைக் காலத்தில் நிறுவன நிலையை அடைதற்குரிய வகையில் கோயில் வழிபாடு என்ற நெறிமுறை பெரிதும் தேவார ஆசிரியர்களால் போற்றப்பட்டது. தமிழ்ச் சமுதாயத்தில் மேலாண்மை செலுத்தி வந்த புறச்சமயங்களை ஒடுக்கி சைவத்தை நிலைநாட்டவும், அதனை மக்கட் சமயமாக நடைமுறைக்குக் கொண்டு வரவும், கோயில் வழிபாட்டு நெறிகளைத் திருஞானசம்பந்தர் தமது தேவாரத்தில் வற்புறுத்தியுள்ளார்.

திருஞானசம்பந்தர் தேவாரப் பதிகங்களில் காணலாகும் திருக்கோயில் வழிபாடு பற்றிய குறிப்புகளால் பின்வரும் முடிவுகள் பெறப்படுகின்றன.

1. திருக்கோயில் வழிபாட்டு நெறிகள் செயல்நிலை, கலைநிலை என இரு வகைகளாகவும் கூறப்பட்டுள்ளன.

2. செயல்வழிப்பட்ட வழிபாட்டு நெறியில் திருக்கோயில் சிறப்புகள் கோயில் வகைகள், வழிபாட்டு நெறிமுறைகள் ஆகியன விரித்துரைக்கப் பட்டுள்ளன.

3. ஏழிசையாய் இசைப்பயனாய் விளங்கும் இறைவனை வழிபடும் நெறியில் ஆடல், பாடல் நெறி தேவாரத்தில் சிறப்பிடம் வகிக்கின்றது.

4. திருக்கோயில் வழிப்பாட்டின் ஒரு கூறாகத் திருவிழாக்களின் சிறப்புகளை எடுத்துரைத்து மக்களை இறைநெறியின்கண் ஈடுபடச் செய்தமை தெளிவுபடுத்தப் பட்டுள்ளது.

57. சம்பந்தரின் கடவுட் கோட்பாடு

பொன். திலகவதி, புதுவை.

தளிரிலேயே ஞானப்பால் பெற்று வளர்ந்த விழுது என்று சம்பந்தரைக் கூறலாம். 'என்னை உடையான் உமையோடு இருந்தான்'. 'தோற்றங்காட்டி ஆட்கொண்டவன்' என்று நன்மகன்மை நெறியில் வளர்ந்த சம்பந்தரின் கடவுட் கோட்பாடு பற்றித் திருஞானசம்பந்தரின் தேவாரப் பதிகங்களின்வழி இக்கட்டுரை ஆராய்கின்றது.

சிவனுக்காகவே - ஐம்புலன்களும்

சம்பந்தரின் ஐம்புலன்களும் சிவனுக்காகவே படைக்கப்பட்டன என்கின்றார். அவரின் நெஞ்சம் - மனம் - சித்தம் - உள்ளம் எல்லாம் இறைவனுக்காக அர்ப்பணிக்கப்பட்டன. நெஞ்சம் இறைவனது நாமத்தை மறத்தல் ஆகாது. சித்தம்-சிந்தனை-புந்தி சிவன் சேவடிக்கே செல்லும்.

''ஆமாத்தூர் அம்மானைக் காணாத கண்ணெல்லாம் காணாத கண்களே'' (180-4)

''வாயினு மனத்து மருவிநின் றகலா'' (381-5)

''ஆர்க்கும் அறிவரியான் சிந்தனையுள்ளும் நாவின்மேலு
சென்னியு மன்னினான் வந்தென்னுள்ளம்
புகுந்து மாலை காலை யாடுவான்'' (73-9)

அன்பினால் கடவுளைப் பார்க்கக் கண்களும், மலர் தூவித் தொழுவதற்குக் கண்களும், இறைவன் புகழைக் கேட்கச் செவியும், அவரைப் பாடவும், அவர் நாமத்தை ஓதவும் நாவிருக்கிறது. நெஞ்சம் எப்போதும் அவரைந் நினைத்துருக.

''நன்னெஞ்சே உனையிரந்தேன் நம்பெருமான் திருவடியே
உன்னஞ்செய் திருகண்டாய் உய்வதனை வேண்டுதியேல்''
(276-3)

என்று தன்னுடைய ஐம்புலன்களாலும் சிவனைப் பற்றிக் கொள்கின்றார் சம்பந்தர்.

சிவநெறி-ஒருநெறி-முழுமுதற் கடவுள் நெறி

திருஞானசம்பந்தர் சிவனை மட்டுமே சிந்தை செய்ய வல்லவர். என் உள்ளம் ஏகம்பம் உடையானையே உள்கும். காழிப்பிரான்

திருவடியையே நான் பரவுவேன் என்ன இடர்நேரினும் ஈசர் கழலையே தொழுவேன் என்பதை

"இடரினும் தளரினும் எனதுறுநோய்
தொடரினு முனகழ றொழுதெழுவேன்" (262-1)

என்பதாலும்

"தும்மலோ டருந்துயர் தோன்றிடினும்
அம்மலரடி யலால் அரற்றாது என்நா" (262-4)

என்பதாலும் உணரலாம். என்னை ஆண்டருளிய விரிசடை பெருமானே! என விளித்து, உண்ணினும், பசிப்பினும், உறங்கினும், உன் திருவடிகளையே என் நா உரைக்கும்.

"நின்ஒண் மலரடி யலால் உரையாதென்நா" (262-9)

உன் வழியடியேனாகிய நான் உன்னைப் பரவுதல் ஒழியேன், உன்னை யன்றி எனக்கு ஆதரவு இல்லை, உன் திருவடியல்லாது

"என்சிந்தை வேறுஉணராது என்சிந்தை ஒருவரே" (56-4)

"ஏகம்பம் உடையானை யல்லாது துள்கா தெனதுள்ளமே"
(148-5)

என்றெல்லாம் சிவனை மட்டுமே என் நெஞ்சு உள்கும் என பாடிப் பரவுகின்றார். அவரின் ஒரு நெறி - சிவநெறிக் கோட்பாடு.

"பெருநெறியபிர மாபுரமேவிய பெம்மானிவன் றன்னை
ஒருநெறிய மனம் வைத்துணர் ஞானசம்பந்தன்" (1-11)

என்பதாலும்

"பெற்றமரும் பெருமானை யல்லால் பேசுவது மற்றொர்
பேச்சிலோமே" (5-9)

என்பதாலும் தெளிவு படுகின்றது. மேலும் அவர் உன் திருவடியல்லாது என் சிந்தை வேறு உணராது, நனவு, கனவு எப்போதும் ஈசா உன்னை வழிபடுதலை மறவேன், உன்றன் திருநாமத்தையே நவிற்றுவேன். நான் வாழினும், சாவினும், வருந்தினும், வீழினும் ஈசா உன் கழலை நான் விடுவேனல்லேன் என்றும் தம்முடைய தீவிரமான சிவநெறிக் கோட்பாட்டை நிலைநாட்டுகின்றார்.

சிவனை எங்கடவுள், எங்கண்ணுதல், எங்கள் இறை, எங்கள் ஐயன், எங்கோன், எம்முத்தன், எமதாதியான் என்று பலபடச் சொந்தம் பாராட்டுகின்றார் சம்பந்தர். இவர் தம் முழுமுதற் கடவுட் கோட்பாடு உமாபதி சிவாச்சாரியார் கூறிய,

"ஞானசம்பந்தர் திருநாவரையர் வன்றொண்டர்
பானிகருந் தேவாரப் பாமாலை" (288-ஆம் கண்ணி)

எனும் பாவாலும் புலனாகும்.

தேவர் - அமரர் - தெய்வம் முதலியன முழுமுதற் கடவுளிலிருந்து வேறுபடல்

1. தேவர்-அமரர்-இமையோர்-விண்ணவர், இந்திரன், கின்னரர் முதலிய இமையோர் கணங்கள் இறைவனை வழிபடுவர். அவர்கள் திருக்கேதாரம் என்னும் தலத்தில் இருந்து இறைவனை வணங்கினர். தேவர்களுக்குத் துன்பம் வரும்போதெல்லாம் கயிலைக்கு ஓடி முழுமுதற் கடவுளைப் பணிந்து முறையிட்டுத் தொழுவார்கள் வேத இசைபாடி, மலர் தூவி, நல்லன கொண்டு பயம் நீங்க வேண்டிய காரணம் பற்றி-பதவி பற்றி-முழுமுதற் கடவுளான இறைவனை-சிவனை வணங்கினர்.

2. தேவர்கள், அமரர்கள், தெய்வங்கள் எல்லாம் மனிதரால் வணங்கு தற்குரியன என்றாலும், கடவுளை நோக்கி வேண்டுதற் பொருட்டுப் போகக்கூடியன.

3. சம்பந்தர் பெண்ணோடு பாகங்கொண்ட பிரானையன்றி வேறு அறியேன் என்று உமையோடு கூடிய - சக்தியும் சிவனும் - சேர்ந்த முழுமுதற் கடவுளையே வணங்கியுள்ளார் என்பது.

"மெய்வரை யான்மகள் பாகன்றன்னை விரும்ப வுடல்வாழும்
ஐவரை யாசறுத் தாளுமென்ப ரதுவுஞ்சரதமே" (363-2)

எனும் பாக்களால் உணரலாம். இதன்மூலம் மனிதர்கள் சிவபிரானைச் சிந்தை செய்ய வல்லவர் தெய்வ நிலைக்கு உயர்வர் - அதாவது இமையோருலகு எய்தி அரசாளுவர். இது சரதம் என ஆணை யிட்டு உரைக்கின்றார். இதிலிருந்து தேவர்-அமரர்-தெய்வம் முதலியன முழுமுதற் - கடவுளிலிருந்து வேறுபட்டவர் என்பது புலனாகும். சம்பந்தர் முழுமுதற்கடவுளை வணங்கக் காரணம் தெய்வத்தை வணங்குதல் தமிழ்மரபில் கட்டாயமில்லை என்பது தெய்வம் தொழாஅள் என்பதன் மூலம் உணரலாம். இவை எல்லாவற்றிற்கும் அப்பாற்பட்டவர் மேலானவர் - முழுமுதற் கடவுள் என்பது தெளிவாகும்.

4. சம்பந்தர் சிவனை,

"அத்தேவர் தலைவணங்குந் தேவர்க்குந் தேவனே
விண்ணோர் கட்குத் தேவர்" (267-7)

என்று குறிப்பிடுவதால் அவர் தேவர்களுக்கெல்லாம் தலைவனாகிய சிவனை முழுமுதற் கடவுளை - வணங்கியுள்ளார் என்பது புலனாகும்.

5. சம்பந்தர் அயன் மால் சேர்ந்த சிவனையே வணங்கினார். சிவன் தாமரை மலரில் வீற்றிருக்கும் அயனே, ஊழியந்தத்தில் மால், அயன் இருவரோடும் கூடி விளங்குவார் என்பதை அவர்

''தாங்கருங் காலந் தவிரவந் திருவர் தம்மொடுங் கூடினார்'' (377-4)

கூறுவதால் அறியலாம்.

உலகிலே பல ஊழிகள் தோன்றும். ஊழி முடிவில் ஓருயிரும் வாழமுடியாத வண்ணம் கடல்நீர் பொங்கிப் பாய்ந்து உலகை அழித்து மூடும். அப்போது அமரர்கள் எந்தாய் என இறைவனைச் சரண் புகுவர். பிறப்பு, இறப்பு இல்லாத முழுமுதற் கடவுள் சிவன் என்பதை சம்பந்தர்,

''ஊழியானவை பலவு மொழித்திடுங் காலத்திலோங்கு'' (232-11)

என்று கூறியுள்ளார். இதிலிருந்து தேவர், அமரர், தெய்வம் முதலியன வற்றிற்கு இல்லாத சிறப்பு - முழுமுதற் கடவுளுக்கான சிறப்பு - பிறப்பு, இறப்பு இல்லாமை என்பதுணரலாம்.

6. நாள்களும், கோள்களும், சிறு தெய்வங்களும், மால், பிரமன், மறை, தேவர்கள், காலம், மாலை, வெப்பு, குளிர், வாதம், பித்தம் இவை யெல்லாம் சிவனடியார்களுக்கு நல்லனவே செய்யும். இவையெல்லா வற்றையும் தன்னுள் கொண்டவராகிய சிவனையே சம்பந்தர் வணங்குகின்றார். அவர் அடியவர் ஆகப் பணிக்கின்றார்.

''தானுறு கோளு நாளு மடியாரை வந்து
நலியாத வண்ண முரைசெய்
ஆனசொன் மாலையோது மடியார்கள் வானி
லரசாள்வா ராணை நமதே'' (369-11)

என்று ஞாயிறு, திங்கள் அடியவர்க்கு நல்ல நல்ல என்கின்றார் சம்பந்தர்.

தாயுமானவன் - தந்தையுமானவன் - சிவன்

சிவபெருமானைத் தாயாகவும், தந்தையாகவும் நினைத்துயிர்க் கின்றார் சம்பந்தர்.

''வெந்துயர் தோன்றியோர் வெருவுறினும் எந்தாயுன்
அடியலால் ஏத்தாது என்நா'' (262-6)

என்று அவர் இறைவனைத் தாயாகவும்,

''வெப்பொடு விரவியோர் வினைவரினும் அப்பா
உன் அடியலால் அரற்றா தென்நா'' (262-7)

என்று அவர் சிவனைத் தந்தையாகவும் காண்கின்றார்.

"தாயுநீயே தந்தை நீயே சங்கரனே யடியேன்
ஆயு நின்பா லன்புசெய்வா னாதரிக்கின்ற துள்ளம்" (50-7)

என உருகுகின்றார் சம்பந்தர்.

ஐந்தெழுத்து

அம்மையினும் இம்மையில் வினையடர்த்தும் பொழுதும் வெய்ய நரகம் விளைத்த பொழுதும், துணையாயிருப்பது அஞ்செழுத்து. அது வேதியர்க்கு அந்தியுள் மந்திரம். பக்தர்க்கு நிறை பொருள். தன்னை விரும்பி ஓதினவர்க்கு இன்பம். பிறப்பை அறுக்கும். அண்டம் அளிக்கும். சிவமுக்தி காட்டும். செல்வம் தரும். பீடை கெடுக்கும் அஞ்செழுத்து இறைவனுக்கு உகந்தது. நமசிவாய என்னுந் திருநாமம் (280-6) செம்பொற்றிலகம் போன்றது. எப்பொழுதும் ஐந்தெழுத்தே துணை என்னும் கோட்பாட்டில் சிவனைப் பரவுகின்றார்.

உயிராலும், உடலாலும், உள்ளத்தாலும், உணர்வாலும், மனம், சித்தம் எனும் ஐம்புலன்களாலும் சிவன் ஒருவரையே சிந்தித்த ஞானசம்பந்தர் முழுமுதற் கடவுள் கோட்பாட்டை - சிவநெறிக் கோட்பாட்டை - தீவிரமாய்ப் பின்பற்றி இறைவனை வணங்கியுள்ளார் என்பது இக்கட்டுரையில் தெளிவுபடுத்தப் பட்டுள்ளது.

58. சம்பந்தர் தேவாரத்தில் இயற்கை

த. தெய்வீகன், தஞ்சாவூர்.

உலகம் முழுவதும் இன்று இயற்கை குறித்தான விழிப்புணர்வு ஏற்பட்டுள்ளது. சிக்கிமுக்கிக் கல்லைத் தேய்த்து நெருப்பை உண்டாக்கிய மனிதன் காலத்திய இயற்கைக்கும் இன்று நாம் வாழும் சூழலுக்கும் ஏட்டில் குறிப்பிட்டுக் கூற இயலாத அளவுக்கு வேறுபாடு உள்ளது. இருப்பதைவிட்டுப் பறப்பதைப் பிடிப்பதற்கு நினைப்பதுபோல் மனிதனின் வாழ்வும் பொருளாதாரமும் வளர வளர அவன் தன்னைச் சுற்றியுள்ள இயற்கையைத் தொலைத்துவிட்டு நிற்கிறான். இவ்வியற்கை அழிந்ததால் மனித குலத்திற்கு ஏற்படும் தீங்குகளைத் தற்போது அவன் மெல்ல உணரத் தொடங்கியதன் விளைவே மரம் நடுவிழா, பிளாஸ்டிக் பொருள் களைப் பயன்படுத்தத் தடை போன்ற விழிப்புணர்வுச் செயல்கள் ஏற்படக் காரணமாகும். எந்திரமயமாக்கப்பட்ட இக்காலத்தில் சுற்றுப்புறத்தை மாசுபடுத்த எத்தனையோ கருவிகள் உள்ளன. நாம் குடிக்கும் குடிநீரி லிருந்து குழந்தை குடிக்கும் தாய்ப்பால் வரை அவ்வளவும் கேடுற்று இருக்கின்றன. எதைத் தொட்டாலும் மாசாகவே உள்ளது. ஏன் இந்த அவல நிலை? மனிதன் தான் சுகமாக வாழக் கொடுத்த விலை இயற்கை யழிவு. தூக்கத்தை விற்று மெத்தை வாங்கினவனைப் போல் இருக்கிறான் மனிதன். எங்குப் பார்த்தாலும் நீரின்மை, மாசுற்ற காற்று, மழையின்மை, பேர் தெரியாத நோய்கள் என இத்தனைக்கும் ஒரே காரணம் இயற்கை யோடு இணைந்த வாழ்க்கையின்மையே. ஆனால் திருஞானசம்பந்தர் காட்டும் இயற்கையோ இதற்கு முற்றிலும் மாறுபட்டுள்ளது. குறிஞ்சி, முல்லை, மருதம், பாலை, நெய்தல் என ஐவகை நிலங்களும் மாசுறாமல் எப்படியிருக்க வேண்டுமோ அப்படியிருந்ததை அவர்தம் வாய்மொழி வழியாக அறிய முடிகிறது.

பரந்து விரிந்து ஆர்ப்பரித்து அலைகளோடு வரும் பொங்குமாக் கடலையும் பச்சை உடை உடுத்திக் கொண்டு தென்றலில் மெல்ல அலைஅலையென அசைந்தாடும் வயற்வெளிகளையும், வானத்தை ஒட்டடை அடிக்கும் அளவிற்கு ஓங்கி உயர்ந்து வளர்ந்து நிற்கும் மரங் களையும் அவை அமைந்திருக்கும் அடர்த்தியான காடுகளையும் வெள்ளி நெற்றிச் சூடிபோல் உச்சியிலிருந்து பெரும் முழக்கத்துடன் கொட்டும் அருவியையும், நீலக் கம்பளியில் உதிர்த்துவிட்ட பொன்மணிபோல்

நீலவானத்தையும் நட்சத்திரத்தையும், அயராமல் ஓய்வின்றி ஒவ்வொரு பூவாக ஓடியாடித் தேனை எடுத்துவரும் தேனீயையும் காணுங்கால் நெஞ்சு அமைதி அடைவதென்பது உண்மை.

சாதாரண மனிதர்களால் மட்டுமே இயற்கையை ரசிக்க முடியுமா? முற்றும் துறந்த முனிவர்களும் இயற்கையின் இனிமையில் லயித்துத் தம்மை மறந்து பாடியதில் வியப்பேதுமில்லை. இயற்கையின் செழிப்பே இறைவனின் தழைப்பு. இயற்கையைப் பாடுவது இறைவனைத் தொழு வதற்குச் சமம் என அவர்கள் எண்ணினர். காற்றிலும் அவன் இருக்கிறான்; கடலிலும் அவன் இருக்கிறான் என அஞ்ஞானிகள் முழுமையாக உணர்ந்திருந்தமையை அவர்தம் பாடல்கள் வழி அறியமுடிகிறது. சங்க காலத்தில் வாழ்ந்த மெய்ப்பொருள் ஞானிகளானத் திருவள்ளுவர், நக்கீரர், அப்பர், சுந்தரர், திருஞானசம்பந்தர் முதலானோர் இவ்வுண்மையை நாளும் உணர்ந்திருந்தனர். இதுவே மேலைநாட்டு இயற்கை இறை நெறிக்கும், கீழைநாட்டு இயற்கை இறை நெறிக்கும் உள்ள வேறுபாடாகும். மேலை நாட்டினர் இயற்கையை இயற்கையாகப் பார்த்தனர்; ஆனால் நம்மவர் இறைவனே இயற்கை உட்பட அனைத்தையும் ஆட்டுவிக்கும் பரம்பொருள் என்பதில் அசையாத நம்பிக்கை கொண்டிருந்தனர்.

இயற்கை வளமும் சம்பந்தரும்

ஞானசம்பந்தர் அறப்பொருளைச் சுட்ட வந்த பெருமானெனினும் இயற்கை அழகில் தம்மை ஆட்படுத்தி அக்காட்சிகளை வர்ணிப்பதில் பெருந்தகையாளராய் உள்ளார்.

பழந்தமிழ் இலக்கியத்தில் இயற்கை எனும் கோட்பாட்டை விளக்கமாக ஆராய்ந்த பேராசிரியர் டாக்டர் மு. வரதராசன் அவர்கள் பின்வருமாறு குறிப்பிடுகிறார்; சங்க காலப் புலவர்கள் இயற்கையைப் பாடும்போது தனித்துப் பாடாமல் அதனை அவர்தம் வாழ்வோடு இணைந்து நின்ற காதலையும், வீரத்தையும் சேர்த்தே பாடியுள்ளனர். சுருக்கமாகக் குறிப்பிடுவதென்றால் அப்புலவர்கள் மனித உணர்வுகளையும் இயற்கை எழிலையும் மிக நெருக்கமாக இணைத்தே பார்த்து வந்துள்ளனர். அவ்விணைப்பை அவர்கள் இனிமையுடையதாகச் செய்தனர்.

இதேபோல் ஞானசம்பந்தர் பெருமான் ஐந்திணைக்குரிய ஒழுக்க லாற்றையும் திணைச் சிறப்பையும் (இயற்கை) இணைத்தே பாடல்களைப் புனைந்துள்ளார். ஒவ்வொரு திணைக்குரிய திருத்தலங்களுக்கும் சென்று பாடுங்கால் அவ்வத்திணைக்குரிய இயற்கை நலன்களை இணைத்தே பாடியுள்ளமை உணரத்தக்கது. இவர்தம் பாடல்வழி எப்பகுதி நிலத்தில் அத்திருத்தலம் அமைந்துள்ளது என்பதை எளிதில் உணரலாம். குறிஞ்சி நில இறைவனைப் பாடுங்கால் நம் கண்முன்னே குறிஞ்சி நிலவளம்

வந்து நிற்கும். அவ்வாறே பிற திணைகளுக்குரிய இயற்கை வளமும் அறியத்தக்க வகையில் அமைந்துள்ளது சிறப்பானதாகும். எனவே இயற்கையினிடத்தில் அவர் கொண்டிருந்த தன் ஈர்ப்பை அறிய அவ்வத்திணை நிலப்பாடல் வகையால் தெளியலாம்.

குறிஞ்சி

மலையும் மலைசார்ந்த பகுதியும் குறிஞ்சித் திணையுள் அடங்கும். பச்சைப்பசேல் என்று அடர்ந்து நிற்கும் மரங்களும் அங்குத் திரியும் விலங்குகளும் இதில் அடக்கம். யாருக்கும் கட்டுப்படாமல் மரக்கிளை களின் உச்சியிலிருந்து ஒவ்வொரு மரமாகத் தாவி ஓடும் குரங்கைத் தம் திருவண்ணாமலைத் திருத்தலப் பாடலில் பின்வருமாறு பதிவு செய்கிறார் ஞானசம்பந்தர்.

'தேமாங்கனி கடுவன்கொள் வீடுகொம்பொடு தீண்டித்
தூமாமழை துறுகல்மிசை சிறுநுண்துளி சிதற
ஆமாம்பிணை அணையும் பொழில் அண்ணாமலை அண்ணல்'

(திருஞானசம்பந்தர் தேவாரம்-10-2)

இதே திருவண்ணாமலைப் பதிகத்தில் இன்னொரு காட்சியையும் அவர் காட்டுகிறார். அங்கே இரண்டு யானைகள் இன்பமுற வாழ்ந்து வருகின்றன. இதில் ஒரு யானை வரும் வழியில் காணாமல் போய் விடுகிறது. காடெங்கும் எதிரொலிக்க மற்றொரு யானை பிளிறுகிறது. திரிந்து திரிந்து திகைப்போடு செல்லுங்கால் அங்கே மலைச்சாரல் ஒன்றில் காணாமல் போன யானை நிற்பதைப் பார்த்து, வேர்த்து அலைச்சல் வழிவந்த அயர்வால் அங்கேயே உறங்கி விடுகிறதாம்.

''பிழைத்த பிடியைக் காணாதோடி
பெருங்கைமத வேழம்
அழைத்துத் திரிந்தங் குறங்கும் சாரல்
அண்ணாமலையாரே'' (தி.ச.தேவாரம்-69-4)

இதேபோல் இன்னொரு காட்சி. ஓர் இடையன் தனது எருமை களை ஓட்டி வந்து திருவண்ணாமலைச் சாரலில் மேய்க்கிறான். மாலையில் வீடு திரும்புங்கால் தான் வைத்திருந்த புல்லாங்குழல் எடுத்துப் பண்ணொலிக்கிறான். குழலோசை கேட்ட அவ்வெருமைகள் அனைத்தும் ஓடிவருகின்றன. இதனை,

''கணைத்தமேதி காணாதாயன் கைம்மேற் குழல்ஊத
அனைத்தும் சென்று திரளும் சாரல்'' (தி.ச.தேவாரம்-69-6)

எனக் காட்டுகிறார்.

''ஓடக்காண்பது பூம்புனல் வெள்ளம்,
ஒடுங்கக் காண்பது யோகியர் உள்ளம்''

என குற்றாலக் குறவஞ்சியில் சுட்டப்பெறுகிறது. பெரும்முழக்கத்தோடு சடசடவென அருவியைக் குற்றாலத்தில் காணலாம். இதனை "கூதல்மாரி நுண்துளி தூங்கும் குற்றாலம்" என ஞானசம்பந்தர் குறிக்கிறார். இத்தகைய இயற்கை வளம் நிறைந்த குற்றாலத்தைப் பாடும்போது அங்கு உலவும் மந்திகளைப் பற்றி அவர் பாடத் தவறவில்லை.

"கீட்பலவும் கீண்டு கிளைகிளையின்
மந்திபாய்ந்து உண்டு விண்ட
கோட்பலவின் தீங்கனியை மாக்கடுவன்
உண்டுகளும் குறும்ப லாவே" (தி.ச.தே. 207-7)

பொங்கி விழும் அருவி மணியும் வைரமும் கொழித்துக் கொட்டுவதாக அவர் கற்பனை செய்கிறார்.

"மணி கொழித்து வயிரம் உந்திக்
குன்றத் தருவி அயலே புனல் ததும்பும்" (தி.ச.தே. 207-7)

மருதம்

வயலும் வயல் சார்ந்த இடமும் மருதமாகும். மருத நிலத்தைச் சார்ந்த நிலப்பகுதிகளில் வண்டுகள் பண்ணிசைக்கும். இதைப் பற்றித் திருஞானசம்பந்தர் பெருமான் பல இடங்களில் குறிப்பிடுகிறார். அவற்றுள் சில வருமாறு:

"குழலின்னிசை வண்டின்னிசை கண்டு குயில்கூவும்
நிழலின் எழில்தாழ்ந்த பொழில்சூழ்ந்த நின்றியூரே"
(தி.ச.தே. 18-5)

"நிழலார் சோலை நீலவண்டினம்
குழலார் பண்செய் கோலக்கா ஊன்" (தி.ச.தே. 23-7)

"வண்டரங்கப் புனற்கமல மதுமாந்திப் பெடையினொடும்
ஒண்டரங்க இசைபாடும் அனி அரசு" (தி.ச.தே. 60-1)

"மண்ணார் சோலைக் கோல வண்டு வைகலும் தேனருந்திப்
பண்ணார் செய்யும் பட்டினத்துப் பல்லவனீச்சரமே"
(தி.ச.தே. 65-2)

"வண்டு பண்முரலும் சோலைத் திக்கெல்லாம்
புகழுறும் திருநெல்வேலி" (தி.ச.தே. 360-7)

மற்றொரு காட்சியில் செங்கழுநீர்ப் பூக்கள் சிவந்து மலர்ந்துள்ளன. எங்கிருந்தோ பறந்து வந்த வண்டு மதுவை நுகர்ந்ததாம். சிவந்த மகரந்தத்தில் படிந்த வண்டு தன் கருநிறம் நீங்கிச் செந்நிறமாகியது. அங்கிருந்து செவ்வழிப் பண்ணை இசைக்கிறது. பாடுவது செந்நிற வண்டு; பண்ணும் செவ்விய பண்ணாம்.

சேறோடு செங்கழுநீர்த் தாதாடி
மதுவுண்டு சிவந்த வண்டு
வேறாய உருவாகிச் செவ்வழிநற்
பண்பாடும் மிழலை யாமே (தி.ச.தே. 132-7)

திருவீழிமிழலை எனும் ஊர் நீர்வளம், நிலவளமிக்கது. அங்கு வயல்களுக்கு அருகில் தாமரைகள் பூத்துள்ளன. அதனருகில் புங்கமரம் பூத்துள்ளது. அதன் மலர்களோ பொரிபோல் காட்சி அளிக்கின்றன. பூத்திருக்கும் தாமரையோ தீப்பிழம்பைப் போல விளங்குகிறது. காற்று அசைகிறது. புங்கமரம் வளைந்து ஆடுகிறது. அதன் பொரி போன்ற பூக்கள் தீயைப்போல் மலர்ந்திருக்கும் தாமரைமேல் உதிர்கின்றன. பக்கத்திலேயே சங்கு கூட்டங்கள். இது ஒரு திருமணக் காட்சிபோல் இருப்பதாக ஞானசம்பந்தர் குறிக்கின்றார்.

''தகவுடைநீர் மணிதலத்துச் சங்குள
வர்க்கம் திகழச் சலசத்தீயில்
மிகவுடைய புங்குமலர்ப் பொரியிட்ட
மணம் செய்யும் மிழலை யாமே'' (தி.ச.தே. 132-6)

முல்லை

காடும் காடு சார்ந்த நிலமும் முல்லை. இலம்பையங் கோட்டூரில் சில காட்சிகளைப் பெருமானார் விவரிக்கிறார். இங்கு ஆண் மான்களோடு பெண் மான்களும், பெட்டையோடு மயில்கள் ஒன்றாக வாழ்தலைப் பின்வருமாறு குறிக்கிறார்.

''கலையினார் மடப்பிணை துணையொடும் துயிலக்
கானலம் பெடைபுல்கிக் கணமயிலாலும்
இலையினார் பைம்பொழில் இலம்பையங் கோட்டூர்'
(தி.ச.தே. 76-1)

காளையார்கோவில் என்ற இடத்தில் ஆண் யானைகளும், பெண் யானைகளும் விடியற்காலமே எழுந்து பொய்கையில் மூழ்கி இறைவனை வழிபாடு செய்வதைப்

''பிடியெல்லாம் பின்செலப் பெருங்கை மாமலர் தழீஇ
விடியலே தடமூழ்கி விதியினால் வழிபடும்
கடியுலாம் பைம்பொழிற் கானப்பே ரண்ணலை'' (தி.ச.தே. 284)

எனச் சுட்டுகிறார்.

நெய்தல்

இது கடலும் கடல் சார்ந்த நிலப்பகுதியும் ஆகும். திருமறைக்காடு, திருவெண்காடு, திருமுல்லைவாயில் போன்ற பல திருத்தலங்கள்

இவ்வகையில் சில சிறப்புற்ற கோயில்களாகும். சீர்காழியின் அழகை உரைக்க வந்த பெருமானார் அங்குக் கடலையொட்டிக் கண்ணுக்கெட்டிய தொலைவு வரை கருமணல் பரவியிருப்பதையும், அங்கே மீனவர்களின் வீடுகள் வரிசையாக இருப்பதையும், அவ்வீட்டின் முன் வெள்ளத் திலிருந்து அடித்து வரப்பட்ட சங்குகள் கிடப்பதையும் சுட்டுகிறார்.

"வங்கமேவு கடல்வாழ் பரதர் மனைக்கே நுளைமூக்கின்
சங்கம் ஏறிமுத்தம் ஈனும் சண்பை நகராரே" (தி.ச.தே. 66-1)

இதேபோல் தற்காலத்தில் வேதாரண்யம் என்று குறிப்பிடப்பெறும் திருமறைக்காட்டுப் பகுதியில் குரா, குருக்கத்தி, புன்னை, ஞாழல் மரங்கள் வளர்ந்திருந்தமையைக் காட்டுகிறார்.

"குரவம் குருக்கத்திகள் புன்னைகள் ஞாழல்
மருவும் பொழில்சூழ் மறைக்காட்டுறை மைந்தா"
(தி.ச.தே. 173-3)

கடற்கரையில் தாழைகள் தழைத்து வளர்ந்துள்ளன. தாழை வெண்ணிறம் கொண்டது. தாழையின் அருகில் நாரைகள் மீனுக்காக ஒற்றைக்காலில் தவமிருக்கின்றன. தன் பெண் இணையை காணாது அலையும் ஆண் நாரைகள் தாழையின் வெள்ளி நிற மடல்களைக் கண்டு அவையே தன் பெண் இணை எனக் கருதி அணைக்கின்றன. இவ்வோவியத்தைச் சம்பந்தர் பெருமான் அழகுற பின்வருமாறு காட்சிப்படுத்துகிறார்.

'ஏழைவெண் குருகயலே இனம்
பேடை தனதெனக் கருதித்
தாழை வெண்மடற் புல்கும்
தன்மறைக் காடமர்ந் தார்தாம் (தி.ச.தே. 227)

இவ்வாறு காணும் காட்சியெல்லாம் நம் கண்முன்னே கொண்டு வந்து நிறுத்தும் வண்ணம் பாக்களை அழகுற அமைத்துத் தருகிறார், ஞானசம்பந்தர் பெருமான். ஒவ்வொரு திருத்தலத்திற்குச் செல்லும்போதும் அவ்விடத்தில் உறையும் பெருமானை மட்டும் பாடாமல் அதன் சுற்றுப் புறச் சூழலையும் இயற்கை எழிலையும் இணைத்தே பாடியுள்ளமை இங்குக் கருதத்தக்கது. ஏனெனில் இயற்கையும் இல்வாழ்வும் வேறுவேறானவை அல்ல; ஒன்றோடொன்று தொடர்புடையன. இயற்கை நலம் கெட்டால் மனித நலனும் கேடுறும் எனும் உண்மை இதில் மறைந்த பொருளாய் அமைந்துள்ளதாகக் கருத இடமுண்டு. எனவே இயற்கையைப் பேணிக் காப்பது இறைவனுக்குச் செய்யும் தொண்டாகும்.

59. "சம்பந்தரும் சாத்திரங்களும்"

எம். தேவகி, மதுரை.

புறச்சமயங்கள் செல்வாக்குப் பெற்றிருந்த கி.பி. 7-ஆம் நூற்றாண்டில், புறச் சமயங்களை நீறாக்கிச், சிவம் பெருக்கும் விடிவெள்ளியாகத் திருஞானசம்பந்தர் தோன்றினார். இவர்தம் அவதாரச் சிறப்பை விளக்கும்போது சேக்கிழார்,

"வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத்துறை விளங்க"

பிள்ளையார் தோன்றியதாகப் பெருமையுடன் பேசுவார். நம்பியாண்டார் நம்பியும் "வையம் வாழ யாம் வாழ" ஞானசம்பந்தர் தோன்றியதாக அருளிச் செய்கின்றார். சுந்தரர், "கொன்றையான் அடியலாற்பேணா எம்பிரான் சம்பந்தன்" என்று போற்றுகின்றார்.

சம்பந்தர் பதிகங்களில் 'சைவ சித்தாந்தம்'

பரசமயக் கோளரியான திருஞானசம்பந்தர், சைவசித்தாந்தக் கருத்துக் களைத் தம் பாடல்களில் அமைத்துப் பாடுகின்றார். 'இறை, உயிர், தளை' ஆகிய முப்பொருள்களும் தோற்றமும் முடிவுமில்லாத-என்றும் உள்ள நித்தியப் பொருள்கள் என்பது சைவசித்தாந்தம். இக்கருத்தை அமைத்து, முப்பொருள்களின் இயல்புகளையும், தம்முடைய பதிகங்களில் பரவலாக அமைத்துப் பாடியுள்ளார் பிள்ளையார்.

'அத்துவிதத்' தொடர்பு

சைவ சித்தாந்தக் கருத்துக்களில் தலையாயது எனச் சிறப்பிக்கப் படுவது, இறைவனுக்கும் உயிர்களுக்கும் உள்ள தொடர்பே. இத்தொடர்பு, இறைத்திருவருளின் கருணையை எடுத்துக் காட்டுகின்றது.

'அத்துவிதம்' என்ற சொல், 'வேற்றுடையின்மை' அதாவது "இரு பொருள்கள் இரண்டு எனப்படாது ஒரே தன்மையாய் இயைந்து நிற்கும் தன்மை"யைக் குறிக்கும்.

இறைவனும் உயிர்களும் இருபொருள்கள் என அறிய வாராது ஒரே தன்மையாய் இயைந்து நிற்கும் தன்மையைக் குறிப்பதே 'அத்துவிதம்' என்ற சொல். இந்த அத்துவிதக் கலப்பை 'ஒன்றாதல், வேறாதல், உடனாதல்' என மூன்றுவிதமாகச் சாத்திரங்கள் கூறும். அருள்நந்தி சிவம், தமது 'சிவஞான சித்தியார் சுபக்கத்'தில் கூறுவது வருமாறு:

''உலகுஎலாம் ஆகி, வேறுஆய், உடனுமாய் ஒளியாய் ஓங்கி
அலகிலா உயிர்கள் கன்மத்து ஆணையின் அமர்ந்து செல்லத்
தலைவனாய் இவற்றின் தன்மை தனக்கு எய்தலின்றித் தானே
நிலவுசீர் அமலனாகி நின்றனன் நீங்காது எங்கும்''

'இருபா இருபஃது' என்ற நூலிலும்,

''ஒன்றாகாமல் இரண்டாகாமல் ஒன்றும் இரண்டும் இன்றாகாமல்''

என்று இயம்பப்பட்டுள்ளது.

சைவ சித்தாந்தச் சாத்திர நூல்களுள் ஒன்றாகிய 'சிவப்பிரகாசமு'ம்,

''புறச்சமயத் தவர்க்கு இருளாய் அகச்சமயத்து ஒளியாய்ப்
புகல் அளவைக்கு அளவாகிப் பொற்பணிபோல் அபேதப்
பிறப்பு இலதாய் இருள்வெளிபோல் பேதமும் சொற்பொருள்போல்
பேதாபேதமும் இன்றிப் பெருநூல் சொன்ன
அறத்திறனால் விளைவதாய் உடல்உயிர் கண்அருக்கன்
அறிவுஒளிபோல் பிறிவரும் அத்துவிதமாகும்
சிறப்பினதாய் வேதாந்தத் தெளிவாம் சைவ
சித்தாந்தத் திறன்...''

என்று பகரும்.

இறைவன், உயிர்களிடத்தில், உடலில் உயிர் கலந்து, தான் வேறாகத் தெரியாது, ஒன்றாக நிற்றல் போலும் ஒன்றாகவும்; சூரியன் கண்ணுக்கு உலகப் பொருள்களை விளக்கித் தான் வேறாக நிற்றல்போல, இறைவன், உயிர்களுக்கு உலகப் பொருள்களை விளக்கித் தான் தன்மையில் வேறாய் நின்றும்; உயிரின் அறிவு, கண்ணொளியோடு இணைந்து உடனாய் நின்று உலகப் பொருள்களைக் காண வைப்பதுபோல, இறைவனும் உயிரறிவுக்கு உடனாய் நின்று, உலகப் பொருள்களை அறியச் செய்தும்; உயிர்களுக்கு அருந்துணையாய் விளங்குகின்றான். இம்மூவகைத் தொடர்புகளும், உயிர்கள் நிலைபேறு அடையவும், அறிவைப் பெறவும், இயங்கவும் உதவுகின்றன.

திருஞானசம்பந்தர், இவ் அத்துவிதத் தொடர்பை,

''பூவினில் வாசம் புனலிற் பொற்புப்
புதுவிரைச் சாந்தினில் நாற்றத்தோடு
நாவினிற் பாட நள்ளாறுடைய
நம்பெருமானே''

எனப் போற்றுவர்.

''இறைவன், பூவினில் நறுமணமும், நீரின் பொலிவும், சந்தனத்தின் மணமும், நாவினால் பாடுதலும் ஆகிய ஐம்பொறிகளுக்கும் சார்வாய்,

நள்ளாற்றில் வீற்றிருப்பவன்'' என்பது பொருள். மெய்கண்டாரும், இத்தன்மையைப் பின்வருமாறு கூறுவர்.

''பண்ணையும் ஓசையும் போலப் பழமதுவும்
எண்ணும் சுவையும்போல் எங்குமாம் - அண்ணல்தாள்
அத்துவித மாதல்...''

மேலும், இருபொருள்கள்; வேற்றுமையின்றி ஒன்றாய் இயைந்திருக்கும் தன்மைக்கு, உப்பும் நீரும் ஆகிய இரு பொருள்கள் ஒரே பொருளாய்க் காட்சிப்படும் தன்மையை உவமிக்கின்றார் மெய்கண்டார்.

''அப்புஅணைந்த உப்பின் உளம்அணைந்து சேடமாம்
கப்புஇன்றாம் ஈசன் கழல்''

உயிர், உடலோடு கலந்து, தன் இருப்பைக் காட்டிக் கொள்ளாதபடி, உடலோடு ஒன்றி, ஒன்றாக உள்ளது. திருஞானசம்பந்தர் இத்தன்மையை,

''பண்ணும் பதம்ஏழும் பலஓசைத் தமிழ்அவையும்
உள்நின்றதொர் சுவையும் உறுதாளத்து ஒலிபலவும்
மண்ணும்புனல் உயிரும்வரு காற்றும் சுடர்மூன்றும்
விண்ணும் முழுதுஆனான் இடம்வீழிம் மிழலையே''

என்று கூறி விளக்குகின்றார்.

நாவரசரும், இறைவன், உயிரிற்கலந்து ஒன்றாய் இருக்கும் இத்தன்மையை,

''இருநிலனாய்த் தீயாகி நீருமாகி
இயமானனாய் எறியும் காற்றுமாகி
அருநிலையத் திங்களாய் ஞாயிறாகி
ஆகாசமாய் அட்ட மூர்த்தியாகி''

என்பார் சுந்தரர்.

''ஊனாய் உயிரானாய் உடலானாய் உலகானாய்
வானாய் நிலனானாய், கடலானாய் மலையானாய்''

என்று போற்றுகின்றார்.

சாத்திர ஆசிரியர்களுள் ஒருவரான மனவாசகங் கடந்தார், இந்நிலையை,

''...ஆன்மாவால் ஆய்ந்தறியும் ஐம்பொறிகள்
இன்றி அறியா இவைஎன்ன - நின்றதுபோல்
ஓவாமல் உன்னை உணர்த்துவோம் உன்அறிவில்
மேவாமல் மேவி நாமே''

என்கின்றார்.

'சத்து சித்து ஆனந்தமாய்' இருக்கும் முதல்வன், எண்ணற்ற உயிர்களுக்கு உயிராகி நிற்கும் தன்மையைச் சிவப்பிரகாசமும்,

"நின்மலமாய் ஏகமாய் நித்தமாகி
அலகில் உயிர்க்கு உணர்வாகி அசலமாகி
அகண்டிதமாய் ஆநந்த உருவாய்"

என்று போற்றும்.

காய்ச்சிய நீரில், வெப்பம் நீரில் பொருந்தி, அதனோடு ஒன்றாய்க் கலந்து நிற்கிறது. பார்ப்பதற்கு நீர் ஒன்றே உள்ளது எனும்படியான நிலையே அங்கு உள்ளது. ஆனாலும், நீரத் தொட்டால் நீருக்கு வேறாக வெப்பம் நம்மால் அறியப்படுகிறது. வெப்பம், நீரோடு ஒன்றாய் நின்றாலும், அதன் வெப்பம், நீருக்கு வேறாகி நிற்பது நமக்குப் புலப் படுகிறது. அதுபோல், இறைவனும், உயிர்க்கு உயிராக நின்று இயக்கினாலும் தன் தன்மையால் உயிருக்கு வேறாகி நிற்கின்றான்.

கண்ணுக்கு வேறாகி நின்று காட்டும் சூரிய ஒளிபோல இறைவன், உயிருக்கு வேறாகி நின்று அறிவிக்கின்றான். இந்நிலையைத் திருவருட்பயன்,

"எங்கும் எவையும் எரியுறு நீர்போல்ஏகம்
தங்கும் அவன்தானே தனி"

என்று உரைக்கும்.

திருஞானசம்பந்தர், இறைவன் தன் தன்மையால் வேறாகி நிற்றலை,

"........................பல்கதிரோன் மதிபார்
எற்றுநீர் தீக்காலு மேலை விண் இயமானனோடு
மற்றுமாதோர் பல்லுயிராய் மாலயனும் மறைகள்
முற்றுமாகி வேறும் ஆனான்.........."

என்று போற்றுவர்.

திருவதிகை மனவாசகங் கடந்தார். இந்நிலையை,

"............................நின்று அருக்கன்
கண்ணுக்குக் காட்டுமாப் போலே உனதுஅறிவில்
நண்ணி அறிவித்திடுவோம் நாம்"

என்று கூறுவர்.

இறைவன், தன் தன்மையில் தானேயாய் நிற்றல் என்பது; வெந்நீரில் உள்ள அழுக்கானது நீரையே பற்றுகிறது; நீரில் உள்ள வெப்பத்தைப் பற்றுவதில்லை. வெப்பம் தன் தன்மையில் மாறாதிருக்கிறது. அதுபோல,

இறைவனும் உலகோடு உயிர்களோடு பொருந்தி நின்றாலும், உலகக் குற்றங்கள் பற்றப்படாது, தன் இயல்பில் திரியாது, மாற்றம் அடையாது, என்றும் ஒரு தன்மையனாய் நிற்கின்றான் என்பதையே குறிக்கும். இந்நிலையில், அவன் 'செம்பொருள்' எனப்படுகின்றான்; 'சிவசத்து' என்பதும் அத்தன்மையதே ஆகும்.

இந்நிலை, இறைவன் இயல்பாகவே பாசத்திற்படாத தூயதன்மையன் என்பதையும், உலகப் பொருள்களில் தோய்வின்றி நிற்பவன் என்பதையும் காட்டும்.

இறைவன், எல்லாப் பொருள்களிலும் கலந்து, எங்கும் செறிந் திருப்பினும், அப்பொருள்களின் தன்மையை அவன் சாரமாட்டான்; அவற்றில் தோயமாட்டான் என்ற கருத்தை மணிவாசகரும்,

''சேர்ந்தறியாக் கையானை''

என்று குறிப்பர். இறைவன் உயிரறிவுக்கு உடனாய் நிற்கும் தன்மையைத் திருஞானசம்பந்தர்,

''உயிருக்கு உயிராய் அங்கங்கே நின்றான்''

என்பதால் சுட்டுவர்.

இறைவன், அறிவுப் பொருள்களாகிய உயிர்களோடு உடனாய் நின்று அவற்றின் அறிவை விளங்கச் செய்கின்றான். எழுத்துக்களின் இயக்கத்திற்கு 'அகரம்' எவ்வாறு இன்றியமையாததாக உள்ளதோ அது போலச் சித்தும் சடமுமாகிய உலகத்தின் இயக்கத்திற்கு இறைவன், இன்றியமையாதவன் ஆகின்றான். மனவாசகங் கடந்தாரும் இக்கருணையை,

''அக்கரங்கட்கு எல்லாம் அகரவுயிர் நின்றாற்போல்
மிக்க உயிர்க்குஉயிராய் மேவினோம் - எக்கண்ணும்
நில்லா இடத்து உயிர்க்குநில்லாது அறிவு என்று
நல்ஆகமம் ஓதும்...''

என்று கூறுவர்.

எனவே, இறைவன் எப்பொருளின் இயக்கத்திற்கும் முதலாய் நிற்கின்றான் என்னும் திருஞானசம்பந்தரின் கருத்தைச் சாத்திர நூல் களும் வழிமொழிகின்றன எனும் உண்மை போதரும். உயிர்களின் அறிவிற்கு எட்டா இறைவன், எல்லாப் பொருள்களையும் தன்னுள் அடக்கி நிற்கின்ற பெரிய பொருளாகவும், எல்லாப் பொருள்களிலும் ஊடுருவிக் கலந்து நிற்கின்ற நுண்ணிய பொருளாகவும் இருந்து, உயிர்களிடத்துக் கொண்ட பெருங்கருணையினால், ஐந்தொழில்களைச் செய்து அவற்றை ஆட்கொள்கின்றான். இதனைத் திருஞானசம்பந்தர்,

"காணுமாறு அரிய பெருமா னாகிக்
காலமாய்க் குணங்கள் மூன்றாய்ப்
பேணுமூன்று உருவாகிப் பேருலகம்
படைத்தளிக்கும் பெருமான்............."

என்று கூறுவது கொண்டு அறியலாம்.

இவ்வகையில் ஆராய்ந்தால், திருஞானசம்பந்தர் அருளிய தேவாரப் பதிகங்களை ஆழ்ந்து நோக்கினால் அவற்றின்கண் சைவ சித்தாந்தக் கருத்துக்கள் பல மிளிர்வன காணலாம். இக்கருத்துக்களைப் பின்னர்த் தோன்றிய மெய்கண்டார் முதலான சாத்திர ஆசிரியர்கள் வடித்துத் தந்துள்ளனர் எனலாம்.

60. சம்பந்தரின் தமிழ் - தமிழர் இன உணர்வு

செ. தேவராஜு, கோபி.

உலகில் சிறப்போடு வழங்கிய உயர்தனிச் செம்மொழிகளில் (Classical Language) ஒன்றாகத் தமிழ் மொழியும் போற்றப்படுகிறது. தமிழகத்திற்கு அயலவரான களப்பிரர் ஆட்சிக் காலத்தில் இத்தமிழ் மொழியின் செல்வாக்குக் குறைந்து அயல் மொழியாக்கம் பெற்றது. கி.பி. 250 முதல் 600 வரை, தமிழ் மொழியில் தோன்றிய அற இலக்கியங்களில் பெரும்பான்மையாகச் சமண சமயத் தாக்கம் இருந்தன. களப்பிரர் வீழ்வுக்குப் பின் தமிழுக்குப் பக்தி இயக்கக் காலம் மறுமலர்ச்சிக் காலமாக அமைந்தது. இக்காலக்கட்டத்தில் ஞானசம்பந்தர் போன்றோர் ஒவ்வொரு கோயிலுக்கும் சென்று தமிழிசையால் இறைவனைப் பாடி மகிழ்ந்தனர். வடமொழிச் செல்வாக்கால் ஏற்பட்ட தமிழ் மொழியின் இறுக்கம் நெகிழ்வுற்றது. நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பிய ஞானசம்பந்தர் படைப்பினை ஆராயும்போது அவருக்குத் தமிழ்மொழி மீதுள்ள பற்றும் தமிழர் மீதுள்ள இன உணர்வும் புலப்படும்.

சம்பந்தர் காலமும் தமிழும்

இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன் தமிழகத்தில் தமிழ்மொழி தன் முழு உரிமையோடு - சிறப்போடு - பெருமிதத்தோடு விளங்கியது. இதற்குப் பிறகு வடநாட்டில் இருந்து வருகை தந்த ஆரிய மொழியாக்கம் தமிழகத்தில் தலையெடுத்தது. வடமொழியிலுள்ள பாரத, இராமாயணக் கதைகள் எங்கும் பரவின. மேலும் சமண - பௌத்த சமயங்களும் வருகை தந்தன. இவ்வாறு வேற்று மொழியாளர்களின் வருகையால் தமிழகத்தில் வடமொழியாக்கம் வலுப்பெற்றது. தமிழரின் பழஞ்சமயமான சிவநெறியும் திருமால் நெறியும் வரலாற்றுக் காலத்திற்கு முன்னரே தமிழகமெங்கும் பரவியிருந்தன. வடநாட்டில் இருந்து வந்த வடமொழி வேதங்கள் - ஆகமங்கள், காப்பியங்கள், புராணங்கள் யாவும் உருமாறி வந்த சிவன், திருமால் நெறிகளைப் பற்றிய செய்திகளைக் கொண்டிருந்தன. அத்துடன் ஆரியர்களின் கொலை, புலைகளும் ஊன், வேள்விகளும், குடிவெறிக் கூத்தும், பாடல்களும், பழக்க வழக்கங்களும் அவற்றில் இடம் பெற்றன. இவற்றில் அறம், பொருள், இன்பம், வீடுபேறெனும் மெய்யுணர்வுக் கருத்துக்களும் இருந்தன.

இன்றைய தமிழ் மக்கள் ஆங்கில மொழி மீது மோகம் கொண்டிருப்பதைப் போல, சம்பந்தர் வாழ்ந்த காலத்தில் இருந்த தமிழ் மக்கள் வடமொழி மீது மோகம் கொண்டு அம்மொழியைப் போற்றிப் பெரிதும் மதித்தனர். இவ்வடமொழியின் ஆக்கம் திருக்கோயில்களிலும் நிறைந்திருந்தது. அத்துடன் நூற்றுக்கணக்கான வடமொழிச் சொற்கள் தமிழ்மொழியில் புகுத்தப்பட்டு, அவற்றிற்குச் சமமான நூற்றுக்கணக்கான தமிழ்ச் சொற்கள் அழிக்கப்பட்டன. இவ்வாறு தமிழ்மொழி தாழ்ந்து - தளர்ந்து - செல்வாக்கு இன்றி இருந்தது. இப்படிப்பட்ட சூழ்நிலையில் தமிழ்மொழி வாழ - உரிமை பெற ஞானசம்பந்தர் தோன்றினார். 'தமிழ்' என்று சொல்லவும் கூசிய அன்றைய வடமொழிப் பித்தர்கட்கு எதிராகத் தம் பதிகங்களைப் பாடினார் சம்பந்தர். இவர் தம் பதிகங்களைப் பெரும்பாலும் பாடல், செய்யுள், கவி என்று மொழியாமல் உரிமையோடு - பற்றோடு - பெருமித உணர்வோடு 'தமிழ்' என்றே மொழிந்தார்.

ஞானசம்பந்தரும் திருநெறிய தமிழும்

ஞானசம்பந்தர் காலத்திற்கு முன் வடமொழி வேதங்கள் இறைவனைப் போற்றிப் பாடும் பாடல்களாகத் திகழ்ந்தன. வடமொழி வேதத்தை இறைவனே அருளிச் செய்தார் என்ற கருத்து எங்கும் பரவி நிலை பெற்றிருந்தது. இவைகள் எங்கும் பெருவழக்காய்ப் போற்றப்பட்டன. வடமொழி வேதங்களை ஓதுவார்க்கு இம்மை, மறுமைப் பயன்கள் கிட்டும் என்ற எண்ணமும் நிலை கொண்டிருந்தது. அதனால் வேதங்கள் வடமொழியில் அன்றித் தமிழ் மொழியில் தோன்றாது என்ற எண்ணமும், தமிழ் மொழிக்கு இச்சிறப்புக்கள் இல்லை என்ற எண்ணமும் வலுப்பெற்றிருந்தது. இந்நெறியற்ற - நிலையற்ற கருத்துக்களை எல்லாம் தகர்த்து வடமொழி வேதங்கட்குக் கூறப்படும் சிறப்புக்கள் அனைத்தும் தமிழ் மொழிக்கும் உண்டென்பதை நிலைநாட்டவே, ஞானசம்பந்தர் தமிழைத் 'திருநெறிய தமிழ்' என்றார். இதை,

> **"அருநெறிய மறைவல்ல முனியகன் பொய்கை அலர்மேய**
> **பெருநெறிய பிரமாபுரம் மேவிய பெம்மான் இவன்தன்னை**
> **ஒருநெறிய மனம்வைத்துணர் ஞானசம்பந்தன் உரைசெய்த**
> **திருநெறிய தமிழ்வல்லவர் தொல்வினை தீர்தல் எளிதாமே"**

எனும் பாடலால் அறியலாம். ஞானசம்பந்தர் தாம் அருளிய 'தோடுடைய செவியன்' எனும் பதிகத்தைத் 'திருநெறிய தமிழ்' என்கிறார். இவர் தம் பதிகத்தைத் தமிழ் மொழியில் அருளியதால் அதைப் பாடல்கள் என்று உரைக்காமல், 'தமிழ்' என்றே உரைக்கிறார்.

தமிழோடு பிணைத்துக் கூறல்

ஞானசம்பந்தர் தமிழ் மொழியின் மீது கொண்டுள்ள பற்றினாலும், ஈடுபாட்டினாலும் தம் பாடல்களைத் 'தமிழ்' என்றும் 'தமிழ் மாலை'

என்றும் கூறித் தமிழ் மொழியின் பழமை, தெய்வத்தன்மை, ஒப்பிலா உயர்வு, நிலைத்தன்மை போன்றவற்றைக் கூறுகிறார். தமிழ் மொழியைப் பற்றிச் சொல்லும் ஞானசம்பந்தர், தம்மை அம்மொழியோடு பிணைத்தே பல இடங்களில் கூறுகிறார்.

தமிழ்ஞான சம்பந்தன்	-	24
திருஞானசம்பந்தன் செந்தமிழ்	-	5
சம்பந்தன் ஒண்தமிழ்	-	5
ஞானசம்பந்தன் செந்தமிழ்	-	4
ஒலிகொள் சம்பந்தன் ஒண்தமிழ்	-	3
மறைஞான சம்பந்தன் செந்தமிழ்	-	4
செந்தமிழ் ஞானசம்பந்தன்	-	3
சம்பந்தன் தமிழ்	-	2
சம்பந்தன் நலங்கொள் தமிழ்	-	1
தமிழ் விரகன் (திறமையாளன்)	-	1
நற்றமிழ் ஞானசம்பந்தன்	-	3
தலைமகனாகி நிறைதமிழ் ஞானசம்பந்தன்	-	1
நற்றமிழுக்கு இன்துணைவன் ஞானசம்பந்தன்	-	1
தன்னொளி மிக்குயர்ந்த தமிழ்ஞான சம்பந்தன்	-	1
ஞானசம்பந்தன் ஞானத்தமிழ்	-	1
ஞானசம்பந்தன் நற்றமிழ்	-	1
தமிழ்க்கிழமை ஞானன்	-	1
மறைஞான சம்பந்தன் தமிழ்	-	1
ஞாலம் மல்கு (உலகம் நிறைந்த) தமிழ்ஞான சம்பந்தன்	-	1
ஞானசம்பந்தன் சீர் இன்புறுந்தமிழ்	-	1
தமிழ்கெழு விரகினன்	-	1
நல்லவாய இன்தமிழ் நவிலும் ஞானசம்பந்தன்	-	1
சந்தமார் தமிழ்கேட்ட ஞானசம்பந்தன்	-	1
செந்தமிழால் மிகு ஞானசம்பந்தன்	-	1
முத்தமிழ் விரகன்	-	1

என இவ்வாறு தமிழ்ஞான சம்பந்தர் தம்மைத் தமிழோடு 70 இடங்களில் (மறை திருநாவுக்கரசு, பெரியபுராண ஆய்வுரை, 42) பிணைத்துக் காட்டுகின்றார்.

தமிழை, சம்பந்தர் பாராட்டல்

தமிழ்மொழியின் பழம் பெருமைகளைப் பற்றிப் பல அறிஞர்கள் பாராட்டிக் கூறியுள்ளனர். தமிழ் மொழியில் உள்ள நூல்களைப் பிற

மொழிகளில் மொழிபெயர்ப்பும் செய்துள்ளனர். சம்பந்தர் தமிழின் பெருமையைத் தாம் உணர்ந்ததால் உலகிற்கும் உணர்த்தினார். தமிழ் மொழியோடு தம்மைப் பிணைத்துக் கூறிய தமிழ்ஞான சம்பந்தர் தமிழ் மொழியைப் பலவாறு பாராட்டுகின்றார். களப்பிரரும், பல்லவரும் தமிழைப் புறக்கணித்த காலம். அதனால் சம்பந்தர் பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

ஊறும் இன்தமிழால் உயர்ந்தோர் உறைதில்லை	-	1
மாகறல் உடையான் (சிவன்) அடிமையே உடைய தமிழ்	-	1
சங்கமலி செந்தமிழ்	-	1
பாரின் மலிகின்ற புகழ்நின்ற தமிழ்	-	1
பண்ணுலாம் அருந்தமிழ்	-	1
நிலையுடைய அருந்தமிழ்	-	1
ஒண்தமிழ்	-	2
சொற்றமிழ்	-	1
நல்ல தமிழ்	-	1
உற்ற தமிழ்	-	1
தண் தமிழ்	-	11
செந்தமிழ்	-	12
நற்றமிழ்	-	5
பாவார் தமிழ்	-	4
அருந்தமிழ்	-	6
வண்தமிழ்	-	2
சந்துலாம் (சந்தன மணமுள்ள) தமிழ்	-	1

என 52 இடங்களில் சம்பந்தர் தமிழைப் பாராட்டுகிறார்.

ஞானசம்பந்தரின் தமிழ் - தமிழர் இன உணர்வு

'கல்தோன்றி மண் தோன்றாக் காலத்தே வாளோடு முன்தோன்றி மூத்தகுடி' என்று தமிழினத்தின் பழமையினைப் பாராட்டிப் பேசுகிறார் பைந்தமிழ்ப் புலவர் ஒருவர். ஞானசம்பந்தர் தமிழ்மொழி மீதும் தமிழர் இனத்தின் மீதும் கொண்டிருந்த உணர்வை அவரது படைப்பை நோக்குங்கால் அறியலாம். சம்பந்தர் தம்மைத் தமிழ்ஞான சம்பந்தன் என்றே பல இடங்களில் பிணைத்துக் கூறுகிறார். எவ்விடத்திலும் தம்மை ஆரிய ஞானசம்பந்தன் என்றோ, திராவிட ஞானசம்பந்தன் என்றோ சொல்லுவதில்லை. தம் பதிகங்களை, ''ஞானசம்பந்தன் ஞானத்தமிழ்'', ''ஞானசம்பந்தன் தமிழ்'', ''சம்பந்தன் தமிழ்'' என்றே பாடுகின்றார். தம் பாடல்களை ஒண்தமிழ், இன்தமிழ், வண்டமிழ், தண்டமிழ், நற்றமிழ் என்றே மொழிகிறார். இத்தொடர்கள் யாவும் திருஞானசம்பந்தருக்குத் தமிழ்

மீதுள்ள பேரன்பை - பெருமதிப்பை - உணர்வை - ஆழ்பற்றைக் காட்டுகின்றன.

செந்தமிழ்த் திறம் இகழ்ந்த ஆரியரை வென்று அடக்கிய சிலப்பதிகார காலத் தமிழ் உணர்வும், தமிழர் இன உணர்வும் மடிந்தமையால் தான் கி.பி. 3-ம் நூற்றாண்டு முதல் 6-ம் நூற்றாண்டு வரைத் தமிழகத்தைப் பிற இனத்தவரான கருநாடர், பல்லவர், சாளுக்கியர் போன்றோர் அடிமைப்படுத்தி ஆண்டனர். மொழி என்பது மக்களின் மனத்தைப் பிரதிபலிக்கும் கண்ணாடி. ஒரு நாட்டில் வழங்கும் மொழி வளம் பெறுவதும், வறுமையுறுவதும் அம்மொழி பேசும் மக்களின் மனவளத்தை ஒட்டியதாகும். மொழி உணர்வும் இன உணர்வும் நீங்கினால் அந்நாட்டின் பொருள்வளம், மொழி, கலை, நாகரிகம், பண்பாடு, கலை வளர்ச்சி போன்றவைகள் குறைந்து தன்னிலை கெடும். இவற்றை எல்லாம் உணர்ந்த சம்பந்தர் தமிழ் மொழி - தமிழர் இன உணர்வுகளைப் பரப்பித் தமிழகத்தை உய்விக்கும் பொருட்டுத் தம்மைத் ''தமிழ்ஞான சம்பந்தன்'' என்றே பல இடங்களில் குறிப்பிட்டுள்ளார். அத்துடன் தமிழோடு தம்மைப் பிணைத்துச் ''செந்தமிழ் ஞானசம்பந்தன்'', ''செந்தமிழான் ஞானசம்பந்தன்'', ''நற்றமிழ் ஞானசம்பந்தன்'' எனப் பல இடங்களில் கூறியுள்ளார். இவை யாவும் ஞானசம்பந்தரின் தமிழ் - தமிழர் இன உணர்வைக் காட்டுகின்றன.

சம்பந்தரைச் சுந்தரர் புகழல்

''தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று'' (236)

எனத் தெய்வப்புலவர் கூறியதற்கேற்ப, சிவபாத இருதயருக்கும் அவர்தம் மனைவியாருக்கும் தோன்றியவர் சம்பந்தர். உமையம்மை நல்கிய சிவஞானமெனும் அமுதத்தையுண்ட ஞானக்கன்றின் வாய்மலரில் பிறந்தவை தெய்வத் தீஞ்சுவைத் தமிழ்ப் பாடல்கள். அதனால்தான்,

''அப்பாலின் மதுரம் தமிழாய் வந்து துவங்கிற்று''

என்று நயம்படக் கூறினார் தண்டபாணி சுவாமிகள். சிவப்பிரகாச சுவாமிகளும் தம் நூலான நால்வர் நான்மணிமாலையில் ஞானசம்பந்தரைப் புகழ்கின்றார்.

தமிழ்ப் பாடல்களைப் பாடித் தமிழைச் சிறப்பித்த சம்பந்தரை, சுந்தரர் தாம் குறிப்பிடும் இடங்களில், அவர் வடமொழி வல்லவர் என்றோ - அதற்கு ஆக்கம் தேடியவர் என்றோ குறிப்பிடுவதில்லை. அவரைத் தமிழ்மொழியோடு சேர்த்துக் குறிப்பிட்டே புகழ்கின்றார். அதை

''நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பும் ஞானசம்பந்தனுக்கு''

''நற்றமிழ் வல்ல ஞானசம்பந்தன்''

''நாவின்மிசை அரையன்தனொடு தமிழ்ஞான சம்பந்தன்''

என்பவைகளால் அறியலாம்.

இவ்வாறு தன்னொளி மிக்குயர்ந்த தமிழ்ஞான சம்பந்தன் என்ற ஞானப்பிள்ளையாரின் அருள் வாக்கினால், ''பழமையாலும் அருங்கலைகளாலும், இன்னொலியாலும் தமிழின் புகழ் மிகவும் உயர்ந்தது'' என்ற அவர்தம் தமிழ்மொழி பற்றிய உயர்ந்த மதிப்பை நன்கு உணரலாம். மொழி உணர்வு உள்ள இடத்தில் இன உணர்வும், இன உணர்வு உள்ள இடத்தில் மொழி உணர்வும், இவ்விரண்டும் உள்ள இடத்தில் நாட்டுப்பற்றும் இருக்கும். அவ்வாறு தமிழகத்தில் தமிழ் மொழி செல்வாக்கு இழந்த நிலையில், தமிழ் மொழியுணர்வு - இன உணர்வு - தமிழர் உரிமை உணர்வு போன்றவைகளை நிலைநிறுத்தித் தமிழை உய்விக்கவே தம்மை ஞானசம்பந்தர் அர்ப்பணித்துக் கொண்டார். இதன் மூலம் ஞானசம்பந்தரின் தமிழ்ப் பற்றையும், தமிழ் இன உணர்வையும் அறியலாம்.

61. சம்பந்தரும் புராணச் செய்திகளும்

ரெ. தேவி, தஞ்சாவூர்.

திருஞானசம்பந்தரின் திருப்பதிகங்கள் ஒவ்வொன்றும் 11 பாடல்களைக் கொண்டுள்ளமையை அனைவரும் அறிவர். அவர்தம் பதிக அமைப்பு ஒரு நெறிமுறையில் இயங்குவதை நாம் காணலாம். அதாவது ஒவ்வொரு பதிகத்திலும் 8-வது பாடல் இராவணன் கயிலை மலையைப் பெயர்க்கும் செய்தியும், அதனால் பெற்ற துன்பமும் பின்னர் பெற்ற மகிழ்வையும் காட்டுகிறது. 9-ம் பாடல் சிவபெருமான் திருமாலும், பிரமனும் தன் அடியையும், முடியையும் முறையே காணா வகையில், தீப்பிழம்பாய் நின்ற செய்தியையும், 10-ஆம் பாடலில் சமணர், சாக்கியர் ஆகிய புறச்சமயத்தவர் கொள்கைகள் தக்கன அல்ல என்ற செய்தியையும், 11-வது பாடல் அப்பதிகத்தின் பயனைப் பற்றியும் கூறுகின்றன.

சம்பந்தர் தம் பாடல்களில் சிவபெருமானைப் பற்றிய புராணங்களை அதிகமாகப் பாடியுள்ளார். இவர் பிற சமய கொள்கைகளை எதிர்த்தவர் என்பதும், சைவ சமயத்தைப் பரப்பப் பல தலங்கள் தோறும் சென்று அத்தலத்தைப் பற்றிய புராணச் செய்திகளைப் பாடியவர் என்பதும் அவர்தம் பாடல்கள்வழி நாம் காணலாம். தாம் இருக்கும் தலத்திலிருந்தே மற்றொரு தலத்தைப் பற்றியும், அங்குள்ள இறைவனின் புராணச் சிறப்பையும் புகழ்ந்துள்ளார் என்பதை வடநாட்டுப் பதிகங்களிலிருந்தும் நாம் அறியலாம்.

சம்பந்தர் பாடல்களில் இறைவனின் அருட்செயலை விளக்கும் புராண வரலாறுகளைக் காண்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

சிவபெருமானைப் பற்றிய புராணச் செய்திகள்

சிவபெருமான் பாற்கடலில் தோன்றிய விடத்தை உண்டு கண்டங் கருத்து தேவர்களைக் காத்ததால் நீலகண்டர் எனப் பெயர் வந்தது.

"சிலைதனை நடுஇடை நிறுவி, ஓர்சினம் மலிஅரவு
அதுகொடு, திவி
தலம் மலிசுரர் அசுரர்கள், ஒலி சலசல கடல் கடைவுழி மிகு
கொலை மலிவிடம் எழ, அவர் உடல்குலைதர, அது
நுகர்பவன் - எழில்
மலைமலி மதில்புடை தழுவிய மறைவனம் அமர்தரு பரமனே"

(பதிகம்-22, பா.1)

இப்பாடல் மந்தர மலையை மத்தாகவும், வாசுகி என்னும் பாம்பினைக் கயிறாகவும் கொண்டு விண்ணுலகத்தின் தேவர்கள் ஒரு புறமும், அசுரர்கள் மற்றொரு புறமும் இருந்து சலசல என்னும் ஒலி எழுமாறு பாற்கடலைக் கடையும்போது கொடிய விடமானது எழுந்தது. அது தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் அச்சமும் நடுக்கமும் கொடுத்தது. அக்கொடிய விசத்தை விழுங்கியவர் இறைவன் என்று விளக்குகிறது.

தக்கனது சாபத்தால் சந்திரன் கலைகள் குறைய அவன் சிவபிரானை அடைந்தான். அவர் சந்திரனைத் தம் சடையில் சூடி மீண்டும் வளரச் செய்தார்.

"தக்கனது பெருவேள்வி, சந்திரன், இந்திரன்
எச்சன், அருக்கன், அங்கி
மிக்க விதா தாவினொடும், விதிவழியே
தண்டித்த விமலர் கோயில்" (பதி. 131, பா. 3)

என்ற பாடல் மூலம் சிவத்துரோகியான தக்கன் யாகத்திற்குச் சென்ற குற்றத்திற்காகச் சந்திரன், இந்திரன், எச்சன், அருக்கன், அக்கினி ஆகியோரை முறைப்படி தண்டித்தவர் இறைவன் என்று கூறுகிறது.

சிவபெருமான் உமையொரு பாகனாக விளங்குதல் பற்றிப் பல பாடல்களில் காணமுடிகிறது. ஆண்பாதி, பெண்பாதி கொண்டு அமைந்த உருவமே உமையொரு பாகன் ஆகும்.

"ஒருமை பெண்மை உடையன் சடையன்விடை
ஊரும் இவன் என்ன" (பதி. 1, பா. 5)

இப்பாடல் ஒரே வடிவத்தில் பெண்ணுருவும் ஆணுருவும் கொண்டு இரு உருவங்களைக் காட்டுபவனாகி, சடை முடியுடன் இடபத்தில் அமரும் பெருமான் என்று காட்டுகிறது.

தாருகாவனத்து முனிவர்கள் வேள்வியில் ஏவிய யானையை உரித்து அதன் தோலைப் போர்த்திக் கொண்டவர் சிவபெருமான்.

"வல்லிநுண் இடையாள் உமையவள் தன்னை
மறுகிடவரு மதகளிற்றினை மயங்க
ஒல்லியில் பிடித்து, அங்கு உரித்து, அவள் வெருவல்
கெடுத்தவர்; விரிபொழில் மிகுதிரு ஆலில்" (பதி. 75, பா. 7)

இப்பாடல் உமையவள் அஞ்ச, யானையை உரித்து அவள் அச்சத்தைப் போக்கியவரும், ஆலின்கீழ் நால்வருக்கு அறம் உரைத்திருந்தபோது வருத்தவந்த மன்மதனை எரித்தவரும் சிவபெருமான் ஆவார் என்று கூறுகிறது.

திருமால் சக்கரப்படை வேண்டி ஈசனைப் பூசித்த தலச்சிறப்பினையும், தேவலோகத்திலிருந்து மண்ணுலகுக்குக் கொண்டு வரப்பட்ட விண்ணிழி விமானத்தின் பெருமையையும் கீழ்வரும் பாடல் காட்டுகிறது.

"தன் தவம் பெரிய சலந்தரன் உடலம்
    தடிந்த சக்கரம் எனக்குஅருள்! என்று
அன்று அரிவழிபட்டு இழிச்சிய விமானத்து
    இறையவன் பிறைஅணி சடையன்
நின்ற நாள்காலை, இருந்த நாள்மாலை,
    கிடந்த மண்மேல் வருகலியை
வென்ற வேதியர்கள் விழாஅறா
    வீழிமிழலையான் என, வினை கெடுமே" (பதி. 377, பா. 7)

சம்பந்தர் பாடல்களில் திரிபுரம் எரித்த நிகழ்ச்சி பற்றியும் பல செய்திகள் காணப்படுகின்றன. மூன்று அசுரர்களை அழிக்கச் சிவபிரான் நான்மறைகளும் சக்கரமாக உடைய தேரில் நான்முகன் தேரைச் செலுத்த ஏறிச் சென்றார். மேருமலை வில்லானது, வாசுகி என்னும் பாம்பு நாணாக வில்லில் இருந்தது. திருமால் எய்யும் அம்பாகக் கையில் இருந்தார். இக்கோலத்தில் சென்ற சிவபிரான் அம்மூவர் வாழ்ந்த திரிபுரம் என்னும் கோட்டையைத் தம் சிரிப்பால் எரித்தார்.

"கல்லானிழற் கீழாயிடர் கரவாய்!" எனவானோர்
எல்லாம் ஒருதேர்ஆய், அயன் மறைபூட்டி நின்றுஉய்ப்ப
வல்லாய் எரிகாற்று ஈர்க்கு, அரிகோல், வாசுகி நாண்கல்
வில்லால், எயில் எய்தான் இடம்-விழி(ம்) மிழலையே
(பதி.11, பா. 6)

இப்பாடலில் இறைவன் யோகியாய்க் கல்லால நிழலின்கீழ் அற நால்வர்க்கு உரைத்திருந்த காலத்து அசுரர்களால் வருந்திய தேவர்கள் காவாய், காவாய் என்று வேண்டிக்கொள்ள இறைவன் அவர்கள் வேண்டுகோளின்படி அசுரர்களை அழித்தார் என்று கூறப்படுகிறது.

திருமாலுக்கும் நான்முகனுக்கும் அகந்தையை அடக்கி நல்லறிவு தோற்றுவிக்க சிவபிரான் மண் முதல் விண் அளவும் அழற்பிழம்பாய் நின்ற வடிவம் லிங்கோத்பவர் வடிவம் ஆகும்.

"கார் அடைந்த வண்ணனோடு கனகம் அனையானும்
பார் இடந்தும் விண் பறந்தும் பாதம் முடிகாணார்
சீர் அடைந்து வந்து போற்ற, சென்று அருள் செய்தது என்னே
தேர் அடைந்த மாமறுகின் சேய்ஞலூர் மேயவனே?"
(பதி. 48, பா. 9)

இப்பாடலில் அயனும், மாலும் பறந்தும் தோண்டியும் காணக் கிடையாத தேவரீர் அவர்கள் திருந்தி வந்த காலத்து அருள் வழங்கிய செய்தியைக் காண முடிகிறது.

அயன் தலைகள் ஐந்தில் ஒன்றை அறுத்தமூர்த்தி இவ்வடிவம் பிரம்மசிரச்சேத மூர்த்தி என்று அழைக்கப்படும்.

''அறம் கிளரும் நால்வேதம் ஆலின்கீழ்
இருந்து அருளி, அமரர் வேண்ட
நிறம் கிளர் செந்தாமரையோன் சிரம் ஐந்தின்
ஒன்று அறுத்த நிமலர் கோயில்'' (பதி. 131, பா. 7)

என்ற பாடல் மூலம் ஆலின் கீழிருந்து சனகாதியர்க்கு வேதப்பொருளை அருளிச் செய்து, தேவர் வேண்டுகோட்கிரங்கில் பிரமன் சிரங்கொய்த நிமலர் கோயில் என்று அறிய முடிகிறது.

மார்க்கண்டேயரின் உயிரைக் கவர வந்த காலனைக் காலால் தடித்தமூர்த்தி காலசம்காரமூர்த்தி என்பதாகும்.

''நலம் மலிதரு மறைமொழியொடு, நதிஉறுபுனல் புகை, ஒளிமுதல்
மலர் அவைகொடு, வழிபடு திறல் மறையவன் உயிர்அது
கொளவரு
சலம் மலிதரு மறலிதன் உயிர்கெட, உதைசெய்த அரன் உறைபதி
''திலகம் இது''!என உலகுகள் புகழ்தரு பொழில்அணி திரு
மிழலையே'' (பதி. 20, பா. 7)

இப்பாடலில் நலந்தரும் வேத மந்திரங்களை ஓதியும் புனிதமான தீர்த்தம் மற்றும் தூபதீபம், மலர் இவற்றால் பூசித்து ஆராதனைச் செய்து வழிபடும் மார்க்கண்டேயரின் உயிரைக் கொண்டு செல்வதற்காக வந்த வஞ்சனை யுடைய எமனின் உயிர் கெடுமாறு திருப்பாதத்தால் உதைத்தவர் சிவபெருமான் ஆவார் என்று அறிய முடிகிறது.

சனகாதி நால்வருக்கு நிஷ்டையில் இருந்து உபதேசித்த பெருமான்மீது காமன் மலர் அம்புகளைப் பொழிய அவனை நெற்றிக் கண்ணால் எரித்த மூர்த்தி.

''கோத்த கல்லாடையும், கோவணமும் கொடி கொட்டி
கொண்டு ஒருகை
தேய்த்து அன்று அநங்கனைத் தேசுஅழித்து, திசையார்
தொழுதுஏத்த,
காய்த்த கல்லால் அதன்கீழ் இருந்த கடவுள் இடம்போலும்
வாய்த்த முத்தீத்தொழில் நால்மறையோர் வலம்புர நன்நகரே''
(பதி. 361, பா. 2)

மேற்கண்ட பாடல் சிவபெருமான் காவி ஆடையுடையவர், கோவணமும் கொண்டு மேவுபவர் ஒரு கரத்தில் கொடிகொட்டி என்னும் வாத்தியத்தைக் கொண்டு வாசிப்பவர், மன்மதனுடைய உடலை அழித்தவர், சனகாதி முனிவர்கள் தொழுது ஏத்தக் கல்லால மரத்தின்கீழ் தட்சிணாமூர்த்தி திருக்கோலத்தில் அமர்ந்திருந்து அறப்பொருளை உரைத்தருளியவர் என்று கூறுகிறது.

விநாயகர் பற்றிய புராணச் செய்திகள்

சிவனும், பார்வதியும் ஒரு மாலைப் பொழுதில் மகிழ்ந்து இருக்கும் வேளையில் அங்கு ஒரு ஆண், பெண் யானை இரண்டும் கூடி மகிழ்ந் திருப்பதைக் கண்ட சிவனும் தேவியும் அதுபோல் மகிழ விரும்பி இருவரும் யானை வடிவம் பெற்று கூடி மகிழ்ந்ததால் அதன் விளைவாகக் கணபதி யானை முகத்துடன் தோன்றினார் என்பர். இச்செய்தியைக் கீழ்வரும் பாடல் சுட்டுகிறது.

''பிடிஅதன் உருஉமை கொளமிகு கரிஅது
வடிகொடு, தனதுஅடி வழிபடுமவர் இடர்
கடி, கணபதி வரஅருளினன் - மிகுகொடை
வடிவினர் பயில் வலிவலம் உறை இறையே'' (பதி. 123, பா. 5)

என்ற பாடல் உமாதேவி பெண் யானை வடிவம் கொண்டு மேவ ஆண் யானை வடிவம் தாங்கி அடியவர் தம் இடர் போக்கும் கணபதிநாதன் தோன்றுமாறு அருள் புரிந்தார் ஈசன் என்று கூறுகிறது.

சம்பந்தர் தேவாரத்தில் முருகனைப் பற்றிய செய்திகளும் காணப் படுகின்றன.

''வள்ளிமுலை தோய் குமரன் தாதை, வான்தோயும்
(பதி. 199, பா. 6)

மாயச்சூர் அன்று அறுத்த மைந்தன் தாதைதன்
மீயச்சுரைத் தொழுது வினையை விட்டுமே'' (பதி. 198, பா. 1)

என்ற இரு பாடல்களிலும் முருகன் வரலாற்றுச் செய்தி காணப்படுகிறது.

சிவபிரானின் வியர்வையில் தோன்றி அரசனால் வளர்க்கப் பெற்று நான்முகனது அருள் பெற்றுச் சலந்தரன் என அழைக்கப் பெற்ற இவன் விண்ணவர்கட்குப் பெரும் ஊறு செய்து வந்தான். சிவபிரான் தரையில் காலால் கீறிய சக்கரமொன்று இவன் தலையை அரிந்தது. இச்செய்திப் பற்றிக் கீழ்வரும் பாடலில் காணலாம்.

''சம்பரற்கு அருளி, சலந்தரன் வீயத்தழல் உமிழ் சக்கரம் படைத்த
எம்பெருமானார், இமையவர் ஏத்த, இனிதின் அங்குஉறைவு
இடம் வினவில்'' (பதி. 380, பா. 2)

சம்பந்தர் பாடல்களில் இராமாயணச் செய்திகள்

இராவணனைக் கொன்ற பழியைத் தீர்க்க இராமபிரான் பூசிக்கச் சிவலிங்கம் கொண்டு வரும் பொருட்டு அனுமான் காசிக்குச் சென்று வரத் தாமதம் ஆகிய நிலையில் சீதாப்பிராட்டியார் மணலால் குவித்துப் பிடித்து வைத்த இலிங்கத்தை இராமபிரான் வழிபட்டார். இச்செய்தியைக் கீழ்வரும் பாடல் உணர்த்துகிறது.

"தேவியை வவ்விய தென்இலங்கைத் தசமாமுகன்
பூஇயலும் முடிபொன்றுவித்த பழிபோய்அற,
ஏஇயலும் சிலை அண்ணல் செய்த இராமேச்சுரம்
மேவிய சிந்தை யினார்கள் தம்மேல் வினை வீடுமே"
(பதி. 268, பா. 2)

இராமர் இலக்குவன் சாம்பவான், சுக்ரீவன், அநுமன், இந்திரன், விசுவாமித்திரர் ஆகியோர் தொழுது வணங்கக் கரிய நஞ்சினை அருந்திக் காத்தருள் செய்தவன் சிவபெருமான் என்று கீழ்வரும் பாடல் உணர்த்துகிறது.

"நீர் இடைத் துயின்றவின், தம்பி,நீள் சாம்புவான்
போர் உடைச் சுக்கிரீவன், அனுமான், தொழ்
கார் உடைநஞ்சு உண்டு, காத்த, அருள்செய்தாம்
சீர் உடைச்சேடர் வாழ் - திரு உசாத்தானமே" (பதி. 291, பா. 1)

சம்பாதி, சடாயு என்னும் இரு பறவைப் பிறப்புடைய இருவரும் வழிபட்ட செய்தியும், சம்பந்தர் பாடல்களில் காண முடிகிறது.

"தள்ளாய சம்பாதி, சடாயு என்பார் தாம்இருவர்
புள்ஆனார்க்கு அரையன் இடம் - புள்ளிருக்கு வேளூரே"
(பதி. 179, பா. 1)

இராவணனுடன் சடாயுவும், சம்பாதியும் போர் செய்த காட்சியைக் கீழ்கண்ட பாடல் கூறுகிறது.

"ஆகாயம் தேர்ஓடும் இராவணனை அமரின்கண்
போகாமே பொருது அழித்தான் புள்ளிருக்கு வேளூரே"
(பதி. 179, பா. 4)

நீலமா மணிநிறத் தரக்கனை
இருபது கரத்தொடு ஒல்க
வாலினாற் கட்டிய வாலியார்
வழிபட மன்னு கோயில் (பதி. 349, பா. 7)

இப்பாடல் மூலம் கரிய நிறமுடைய இராவணனைத் தனது வாலால் கட்டி வீரம் விளைவித்த வாலியார் வழிபடப் பெருமை பெற்றத் தலம் என்று கூறப்படுகிறது.

சம்பந்தர் பாடல்களில் தலவரலாற்றுச் செய்திகள்

திருவானைக்காவில் யானை வழிபட்டதும்

"விறல்மிக்க கரிக்கு அருள்செய்தவனே
அறல்மிக்கது எனும் - ஆயிழையே" (பதி. 159, பா. 7)

திருவெண்காட்டில் வெள்ளையானை வழிபட்டதும் (பதி. 284, பா. 7) மயேந்திரப் பள்ளியில் ஞாயிறும், திங்களும் வழிபட்டதும் அறிய முடிகிறது.

''சந்திரன், கதிரவன், தகுபுகழ் அயனொடும்
இந்திரன் வழிபட இருந்தஎம் இறையவன்'' (பதி. 289, பா. 6)

சம்பந்தர் பாடல்களில் வேந்தர்கள் பற்றிய செய்திகள்

சீகாழியில் பிரமன் வழிபட்ட செய்தியும்,

''அருநெறிய மறைவல்ல முனிஅகன் பொய்கை அலர்மேய
பெருநெறிய; பிரமாபுரம் மேவிய பெம்மான் இவன்தன்னை''
(பதி. 1, பா. 11)

இதுபோன்று திருக்கண்ணார் கோயிலில் இந்திரன் வழிபட்ட செய்தியும்,

''முன்னொரு காலத் திந்திரனுற்ற முனிசாபம்
பின்னொரு நாள் அவ்விண்ணவர் ஏத்த பெயர்வு எய்தி
தன்அருளால் கண்ஆயிரம் ஈந்தோள் சார்பு என்பர்
கன்னியர் நாளும் துன்அமர் கண்ணார் கோயிலே''
(பதி. 101, பா. 7)

இப்பாடல் வழியாகக் கௌதம முனிவரால் இந்திரன் அடைந்த சாபத்தைத் தேவர்கள் வேண்டிக் கொள்ளப் போக்கி ஆயிரங்கண் அளித்த கடவுள் என்று தெரிகிறது.

கண்ணன் மலையைக் குடையாகத் தாங்கிய செய்தியும் சம்பந்தர் பாடல்களில் காணப்படுகிறது.

''விலங்கலொன் றேந்திவன் மழை தடுத்தோனும்
வெறிகமழ் தாமரையோனும் என்றுஇவர்தம்''
(பதி. 79, பா. 9)

இப்பாடலில் கோவர்த்தன கிரி தமது உடற்பலத்தால் மலையைத் தூக்கினார் என்ற கருத்து இடம் பெறுகிறது.

பாரத பூமியில் சிறந்து விளங்கிய பகீரதன் அருந்தவன்
முயன்ற பணிகண்டு
ஆர்அருள் புரிந்து, அலைகொள் கங்கைசடை ஏற்றஅரன்
மலையை வினவில்'' (பதி. 327, பா. 6)

திருநள்ளாற்றில் நளன் வழிபட்ட செய்தியை,

''வளம்கெழுவு தீபமொடு, தூபம் மலர்தூவி
நளன்கெழுவி நாளும் வழிபாடு செய்நள்ளாறே''
(பதி. 169, பா. 3)

இப்பாடல் தூப தீபங்களுடன் மலர் தூவிப் போற்றி நளன் வழிபட்ட செய்தியைக் கூறுகிறது.

சம்பந்தர் பாடல்களில் மன்னர் பற்றிய செய்திகள்

கோச்செங்கட் சோழனின் முன்னைப் பிறப்பு வரலாறு பற்றியும், அவர் இறைவனுக்குப் பல இடங்களில் திருப்பணி செய்ததும் சம்பந்தர் பாடல்களில் காணப்படுகிறது.

**"நிலம் தண்ணீரோடு அனல்கால் விசும்பின் நீர்மையான்
சிலந்தி செங்கன் சோழன் ஆகச் செய்தான்ஊர்"** (பதி. 199, பா. 7)

திருவானைக்காவில்,

**"செங்கண் பெயர் கொண்டவர் - செம்பியர்கோன்
அம்கண் கருணை பெரிது ஆயவனே!"** (பதி. 159, பா. 5)

திருவைகல் மாடக் கோயிலில்,

**"வம்புஇயல் சோலை சூழ்வைகல்மேல் - திசை
செம்பியன் கோச்செங்கணான் செய்கோயிலே"**
(பதி. 276, பா. 4)

திருஅம்பர் பெருந்திருக்கோயிலில்,

**"அங்குஅணி விழவு அமர்அம்பர் மாநகர்
செங்கண் நல்இறை செய்த கோயில் சேர்வரே"**
(பதி. 277, பா. 5)

திருத்தண்டலை நீனெறியில்,

"நீற்றல் தண்டலை நினெறி நாதனை" (பதி. 308, பா. 8)

போன்ற தலங்களில் இம்மன்னன் திருப்பணி செய்தது பற்றிய செய்தியும் காணப்படுகிறது. இதுபோன்று தமிழ் வேந்தர் மூவர் பற்றியும் காணப் படுகிறது. திருப்பூவணத்தில்,

**"முறையார் முடிசேர் தென்னர்சேரர், சோழர்கள் தாம்வணங்கும்
திறையா ரொளிசேர் செம்மையோங்கும் தென்றிருப் பூவணமே"**
(பதி. 64, பா. 1)

திருமுக்கீச்சுரத்தில்,

**"சீரினால் அங்குஒளிர் தென்னவன் செம்பியன் வில்லவன்
சேரும், முக்கீச்சுரத்து அடிகள் செய்கின்றது ஓர் செம்மையே"**
(பதி. 256, பா. 9)

இவைபோன்று பல இடங்களில் பணிசெய்து, வழிபட்ட செய்தியும், திருவாலங்காட்டுப் பழையனூர் நீலிகதையும் இறைவன் ஆலின் கீழிருந்து அறமுரைத்த வரலாறும்,

"முறைத்திறம் உறப்பொருள் தெரிந்து முனிவர்க்கு
அருளிஆல நீழல்வாய்" (பதி. 337, பா. 3)

இறைவன் கூடலில் தமிழ் ஆய்ந்ததும் விருத்தகுமார பாலன் திருவிளையாடல் புரிந்ததும்,

"விருத்தனாகிப் பாலனாகி வேதமோர் நான்குணர்ந்து"
(பதி. 52, பா. 6)

இவைபோன்ற பல பாடல்களில் இறைவன் செய்த திருவிளையாடல் களும் அதன்வழி உருவான புராணக் கதைகள் பற்றிய செய்திகளும் காணப்படுகின்றன. சம்பந்தர் இறைவனின் அருளைப் பெற்று, இறைவனுக்காக பாடல்களைப், பல தலங்களுக்குச் சென்று நல்ல கருத்து களைப் புராணங்கள் வழியாகவும் எடுத்துக் கூறியுள்ளார் எனத் தெரிகிறது.

62. "அற்புதத் திருப்பதிகங்கள்"

பே. நடராசன், திருநெல்வேலி.

திருஞானசம்பந்தர் சோழ நாட்டிலுள்ள தஞ்சை மாவட்டத்தில் சீர்காழியில் பிறந்தார். சீர்காழிக்குப் பன்னிரு பெயர்கள் உண்டு. பிரமபுரம், வேணுபுரம், புகலி, வெங்குரு, தோணிபுரம், பூந்தராய், புறவம், சண்பை, கொச்சைவயம், கழுமலம், சிவபுரம் ஆகும். இவர் அந்தணர் குலத்தில் கௌணிய கோத்திரத்தைச் சேர்ந்தவர் ஆவர். தந்தையார் பெயர் சிவபாத இருதயர், தாயார் பெயர் பகவதியார். சிவபெருமானுக்கு உரிய நாளான திருவாதிரை நாளில் பிறந்தார். முருகப் பெருமானே திருஞானசம்பந்தராகப் பிறந்தார் எனக் கூறுவர். இறைவனால் ஆட்கொள்ளப் பட்டதால் 'ஆளுடையப் பிள்ளையார்' எனவும், சிவஞானத் தொடர்பு பெற்றமையால் திருஞானசம்பந்தர் எனவும் அழைக்கப்பட்டார். மூன்று வயதிலேயே பிரம்மபுரம் தீர்த்தக்கரையில் அம்மையப்பரின் அருளால் தாய்ப்பாலாகிய ஞானப்பாலை அருந்தினார். திருஞானசம்பந்தரது பக்தி நெறி நன்மகன்மை நெறியாகும். (சற்புத்திர மார்க்கம்) அதாவது இறைவனைத் தந்தையாகவும், தன்னை மகனாகவும் பாவித்துப் பாடியவை இவரது பதிகங்கள். திருஞானசம்பந்தர் சிறுவயதிலேயே பல்வேறு தலங்களுக்குச் சென்று வழிபட்டதோடு மட்டுமல்லாது பல்வேறு அற்புதங்களையும் நிகழ்த்தினார். 'என் கடன் பணி செய்து கிடப்பதே' என்ற கொள்கையைக் கடைப் பிடித்து, நாளும் இன்னிசையால் தமிழ்ப் பாடிச் சைவத்தை வளர்த்தார்.

"புற்றில் வாழுமர வம்மரை யார்ந்தவன் மேவும் புகலுரைக்
கற்று நல்லவர் காழியின் ஞான சம்பந்தன் றமிழ்மாலை
பற்றி யென்றுமிசை பாடிய மாந்தர் பரமன்னடி சேர்ந்து
குற்றமின்றிக் குறை பாடொழியப் புகழோங்கிப் பொலிவாரே"

என்ற பாடல் திருஞானசம்பந்தரது தமிழ்ப்பற்றையும், இசைப்பற்றையும் எடுத்துக் காட்டுகிறது. மேலும் திருஞானசம்பந்தர் ஆற்றிய அற்புதச் செயல்கள் சிலவற்றை விளக்குகின்ற "அற்புதத் திருப்பதிகங்கள்" பற்றி ஆராய்வது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

காலநிலை

வடநாட்டில் சமண, பௌத்த மதங்கள் செழித்து வளர்ந்த நிலையில், இவ்விரு மதங்களும் தமிழ்நாட்டிலும் செல்வாக்கும் பெற்று வளரலாயின.

கல்வி, மருத்துவம், உணவு வழங்கல் மூலம் சமண, பௌத்த மதங்கள் மக்கள் ஆதரவைப் பெற்றன. குறிப்பாகச் சமணம் வாணிபத்தைக் கையில் எடுத்துக் கொண்டு, வணிகர்களை ஊக்குவித்தது. அன்றைய ஆட்சியாளர்களும் இவ்விருமத வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்தனர். சமண, பௌத்த மதங்களை எதிர்த்து சைவ, வைணவ இயக்கங்கள் கி.பி.7-ஆம் நூற்றாண்டில் மக்களிடையே செல்வாக்குப் பெறலாயின. படிப்படியாக சமண பௌத்த மதங்கள் வீழ்ச்சியடைந்தன. சைவ, வைணவ அடியார்கள் தலங்கள்தோறும் சென்று இன்னிசையால் தமிழ்ப்பாடி இறைவனை வணங்கினர். ஆயிரக்கணக்கான தமிழ்ப் பாடல்கள் சைவம் வளர்த்த அந்தப் பெருமக்களால் தமிழ் உலகுக்கு கிடைத்தன.

வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, பரிபாடல் என இருந்த பாவகைகள் பல்வேறு புதிய இனங்களும் வடிவுகளும் பெற்றுப் புதிய கோலம் கொண்டன. நாட்டுப்புறப் பாடல் வடிவங்களைப் பின்பற்றிப் பக்திபாடல்களைப் பாடினார்கள் இவர்கள். அத்தகு பெருமை உடைய பக்திப் பனுவல்களைத் தந்த அடியார்களில் ஒருவர் திருஞானசம்பந்தர்.

திருஞானசம்பந்தர் பொற்றாளம் பெற்றது

திருக்கோலக்கா எனும் திருத்தலமானது சீர்காழிக்குத் தென் மேற்கில் முக்கால் மைல் தொலைவில் அமைந்துள்ளது. திருஞானசம்பந்தருக்கு இறைவன் பொற்றாளம் அளித்ததால் அந்தக் கோயில் இன்றும் திருத்தாள முடையார் கோயில் என்று அழைக்கப்படுகிறது. அங்குக் குடிகொண்டிருக்கும் இறைவன் சத்தபுரிநாதர், இறைவி ஓசைகொடுத்த நாயகி ஆவர். இயற்கை வளம் நிறைந்த ஊரான 'திருக்கோலக்கா' எனும் அத்தலத்தைத் தமது தந்தையாரோடும், சிவன் அடியார்களோடும் சென்றடைந்து, திருக்கோயிலினை வலம் வந்தார். பின்னர் ஆளுடையப் பிள்ளையார் இறைவனைத் தொழுதார்.

"மடையில் வாளை பாயு மாதரார்
குடையும் பொய்கைக் கோலக்கா உளான்
சடையும் பிறையும் சாம்பல் பூச்சும்கீள்
உடையும் கொண்ட உருவம் என்கொலோ"

என்ற இசை பொருந்திய திருப்பதிகத்தைப் பண்ணிற்கேற்றவாறு ஓசையோடு பாடினார். இறைவன் திருவருளால் ஐந்தெழுத்துப் பொறிக்கப் பெற்றுச் செம்பொன்னால் செய்யப்பட்ட தாளங்கள் திருஞானசம்பந்தரின் கரங்களில் வந்து சேர்ந்தன. அத்தாளத்தைப் பெற்றவுடன் மகிழ்வோடு இறைவனைத் தொழுது பதிகத்தைப் பாடி மகிழ்ந்தார். அவர் பாடிய இசைத்தமிழைக் கேட்டு விண்ணுலகத்தில் வீற்றிருந்த இசை வல்லுநர் களான கிம்புரு, நாரதர் போன்றவர்கள் மலர்மாரி பொழிந்தனர். திருத்தாளத்துடன் பின்னர் சீர்காழி வந்தடைந்தார்.

முயலகன் நோய் தீர்த்தல்

திருப்பாச்சிலாச்சிராமம் என்னும் புண்ணியத்தலம் காவிரியின் வடகரையில் அமைந்துள்ளது.அத்தலத்தில் வீற்றிருக்கும் இறைவன் பெயர் மாற்றறிவரதர், இறைவி பெயர் பாலசுந்தரி. அந்நகரை கொல்லிமழவன் என்ற சிற்றரசன் ஆண்டு வந்தான். சிறந்த சிவபக்தன். அவனுக்கு ஒரு மகள் இருந்தாள். திருமணம் ஆகாத கன்னிப்பெண். அவளுக்கு முயலகன் என்ற நோய் பற்றி இருந்தது. முயலகன் என்பது கொடிய நோய்களில் ஒன்றாகும். இந்த நோய் உணர்வற்றுக் கிடக்கவும், வலிம்புடன் கிடக்கவும் பிறவாறு நலிவுற்றுக் கிடக்கவும் செய்யும் நோயாகும். மகளின் நோயைக் கண்டு அரசனும், குடும்பத்தாரும் துன்பம் அடைந்தார்கள். நாட்டு வைத்தியங்கள் பார்த்தும் பலன் அளிக்கவில்லை. இறுதியாக இளம் கன்னியை அந்த ஊரில் இருந்த சிவன் கோயிலில் கொண்டு போய் இறைவன் சந்நிதியில் கிடத்தி வைத்தான் அரசன். அந்நகர்க்குத் திருஞானசம்பந்தர் வருவதை அறிந்து, மன்னன் திருஞானசம்பந்தரை வரவேற்க ஏற்பாடுகள் செய்தான். நகரங்கள் முழுவதும் அலங்காரத் தோரணங்கள் மூலம் அழகு செய்யப்பட்டிருந்தன. சம்பந்தர் நகரைச் சுற்றிப் பார்த்துவிட்டு இறைவனை வழிபட ஆலயம் சென்றார். அங்கு அந்த இளம்கன்னியைப் பார்த்தவுடன் வருந்தினார். இது என்ன நோய் எனக் கேட்டார். உடனே கொல்லிமழவன் திருஞான வள்ளலாரை வணங்கி ''இவள் அடியேன் பெற்ற பெண் இவளை முயலகன் என்னும் கொடிய நோய் பிடித்திருக்கிறது. இந்த நோயைக் குணப்படுத்த முடியவில்லை என்றார். திருஞானசம்பந்தர் மன்னன் மீது பரிவுகொண்டு இளம் கன்னிப்பெண்ணின் நோயைத் தீர்க்க அங்குள்ள சிவபெருமானை நோக்கி,

''துணிவளர் திங்கள் துளங்கி விளங்கச் சுடர்ச்சடை
சுற்றிமுடித்துப்
பணிவளர் கொள்கையர் பாரிடம் சூழஆர் இடமும் பலிதேர்வர்
அணிவளர் கோலம் எலாம்செய்து பாச்சிலாச்சிராமத்து உறைகின்ற
மணிவளர் கண்டரோ மங்கையை வாடமயல் செய்வதோ
இவர்மாண்பே?''

பாச்சிலாச்சிராமத்தின் கோயில் கொண்ட நீலமணிமிடற்றினை
உடைய இவர் மங்கையை வாடுமாறு மயக்கம் செய்வது
மாண்பு ஆகுமா

என்று பிணிதீர்க்கும் திருப்பதிகத்தைப் பாடினார். உடனே இளம் கன்னிப் பெண்ணின் நோய் நீங்கியது. உடனே மன்னனும், மகளும் திருஞானசம்பந்தர் காலில் விழுந்து வணங்கினர்.

குளிர்காய்ச்சல் நீங்கியது

காவிரியின் தென்கரையோரம் அமைந்துள்ள திருத்தலம் திருச்செங்கோடு ஆகும். இத்தலத்திற்கு மற்றொரு பெயர் கொடிமாடச்

செங்குன்றூர். திருஞானசம்பந்தர் அடியார்களுடன் அத்தலத்தில் தங்கி இருந்த காலம் முனிபனிப் பருவகாலமாகும். பனி மிகுந்த காற்று வீசியது. பனியின் கொடுமையினால் பலர் காய்ச்சலால் துன்பம் அடைந்தனர். ஆளுடையப் பிள்ளையாரிடம் இச்சுரநோய் குறித்து முறையிட்டனர். ''இந்தச் சுரநோய் இந்த நிலத்திற்கு இயல்பானது, ஆயினும் அது நம்மை ஒன்றும் செய்யாது'' என்று கூறி

"அவ்வினைக்கு இவ்வினை ஆம்என்று சொல்லும் அஃதுஅறிவீர்
உய்வினை நாடாது இருப்பதும் உம்தமக்கு ஊனம்அன்றே
கைவினை செய்து எம்பிரான் கழல்போற்றதும் நாம் அடியோம்
செய்வினை வந்துஎமைத் தீண்டப்பெரு திருநீலக்கண்டம்!"

''வினை தீண்டப்பெரு திருநீலகண்டம்''

என்று அமைந்தது இத்திருப்பதிகம். சிவனது அருளினால் அடியாரின் கடும்பனிச்சுரம் நீங்கியது. அப்பகுதியிலேயே இந்நோய் இல்லாமல் போயின.

விடம் தீர்த்தது

திருமருகல் என்னும் திருத்தலம் நன்னிலத்திற்குக் கிழக்கே சுமார் ஐந்து மைல் தொலைவில் அமைந்துள்ளது. இங்கு வீற்றிருக்கும் இறைவன் பெயர் மாணிக்கவண்ணார், இறைவி வண்டுவார்குழலி. திருமருகல் என்பது வாழைமரத்தைக் குறிக்க வந்த பெயர் எனக் கூறுவர். இத்தலத்தின் தலவிருட்சம் வாழைமரமாகும். திருமருகல் கோயில் அருகே ஒரு மடம் இருந்தது. வழிப்போக்கன் ஒருவன் ஒரு கன்னிப்பெண்ணை அழைத்துக் கொண்டு வந்து தங்கி இருந்தான். அன்றிரவு தங்கி இருக்கையில் கொடிய விடம் உடைய பாம்பு தீண்டி அந்த வழிப் போக்கன் இறந்தான். அந்தப் பெண் குய்யோ முறையோ என்று அழுது புரண்டாள். அக்கம்பக்கத்தில் இருப்பவர்கள் ஓடிவந்து பார்த்தார்கள். மாந்திரிகள் எவ்வளவோ முயற்சி செய்தும் பிழைக்க வைக்க முடிய வில்லை. நான் எப்படி வாழ்வேன். அதற்கு மேல் திக்கற்றவர்களுக்குத் தெய்வமே துணை என்று அவள் எண்ணம் கொண்டாள். திருக்கோயிலின் வாசல் இருக்கும் திசையை நோக்கி ஆண்டவனைத் தொழுதாள். ''பாற்கடலில் எழுந்த விடத்தை அருந்தி தேவர்களையும், மக்களையும் காப்பாற்றினாய், திருமாலும், பிரமனும் அடிமுடியைக் காண முடியாதவர்களாய் ஆயினர். தலையில் கங்கையையும், பிறையையும் சூடியுள்ளாய், அவரைக் காப்பாற்றுவாயாக'' என வேண்டினாள். இவளது புலம்பல் அவ்வூர்க்கு வருகை தந்த திருஞானசம்பந்தர் காதில் விழுந்தது. அவர் அப்பெண் தங்கி இருந்த இடத்திற்குச் சென்றார். ''நீ சிறிதும் பயப்படாதே! இங்கு அவள் தனது வரலாற்றை எடுத்துரைத்தாள். எனது பிறந்த ஊர் வைப்பூர் ஆகும் (இவ்வூர் திருமருகலுக்குத் தென்மேற்கில்

சுமார் 20 மைல் தொலைவில் அமைந்துள்ளது). தந்தையார் பெயர் தாமன், என்னோடு சேர்த்து ஏழு பெண்கள் ஆவர். இறந்து கிடக்கும் ஆடவர் எனது தந்தைக்கு மருமகன் ஆவர். என்கூடப் பிறந்த சகோதரி களில் மூத்தபெண்ணே இவருக்கு தருவதாக உறுதிமொழி கொடுத்து பின்னர் பணம் பெற்றுக் கொண்டு மற்றொருவர்க்குத் திருமணம் செய்து கொடுத்தார்.

இவ்வாறே மற்ற பெண்களையும் பணம் பெற்றுக் கொண்டு திருமணம் செய்து கொடுத்தார். ஆனால் நான் மனம் விரும்பி இறந்து கிடக்கும் இவரை அழைத்துக் கொண்டு உடன் போக்காக வந்து சேர்ந்தேன் எனக் கூறினாள். திருஞானசம்பந்தர் அக்காரிகைக்கு இரங்கிச் சிவபெருமானை நோக்கி வணிகனாகிய வழிப்போக்கனைத் தீண்டிய பாம்பின் விடம் நீங்கும்படிப் பாடினார்.

''சடையாய் எனுமால் சரண் நீ எனுமால்
விடையாய் எனுமால் வெருவா விழுமால்
மடைஆர் குவளை மலரும் மருகல்
உடையோய் தகுமோ இவள் உள்மெலிவே''
பெருமானே, இந்த ஒள்ளிழையாள் உளம்
மெலிந்து வருந்துதல் அருட்கடலாகிய நினது
திருவுள்ளத்திற்குக் தகுவதாமோ? என்று முறையிட்டார்.

''வழுவாள் பெருமான் கழல் வாழ்கஎன
எழுவாள் நினைவாள் இரவும் பகலும்
மழுவாள் உடையாய் மருகல் பெருமான்
தொழுவாள் இவளைத் துயர் ஆக்கினையே''

இதில் இக்கன்னிப் பெண்ணின் நிலையை எடுத்துக் காட்டுகிறார். இறந்து கிடந்த ஆடவரின் விடம் இறங்கியது, அந்த வழிப்போக்கன் உயிர் பிழைத்தார். திருஞானசம்பந்தர் இருவருக்கும் திருமணம் செய்து வைத்தார். இத்திருப்பதிகம் அகத்துறை அமைப்பில் அமைந்துள்ளது.

திருஞானசம்பந்தரின் திருப்பதிகங்கள் அனைத்தும் தனிச்சிறப்பு வாய்ந்தவையாம். இவருடைய பதிகங்கள் நிகழ்த்திய அற்புதங்கள் பல. அவற்றுள் ஒரு சில அற்புதங்களை இக்கட்டுரையின்வழி நாம் நன்கு அறியமுடிகிறது. திருஞானசம்பந்தரின் அற்புதத் திருப்பதிகங்கள் மக்களைப் பக்தி நெறிக்கு இட்டுச் சென்றதோடு, சைவத்தின் மேன்மையையும் உலகறியச் செய்தன எனக் கூறின் மிகையாகாது.

63. தலயாத்திரையில் திருச்செங்கோடு

வெ.அ. நாகரத்தினம், காங்கேயம்.

சைவ சமயம் புத்தொளியும் புதுமலர்ச்சியும் பெற்றது என்றால் அதற்குத் திருஞானசம்பந்தரின் வருகை என்பது யாவரும் அறிந்த ஒன்று. சமணமும் பௌத்தமும் செல்வாக்குப் பெற்றிருந்தபோது, சைவம் எங்கே மறைந்து போய்விடுமோ என்று சிவனடியார்களும் பக்தர்களும் கவலை கொண்ட நேரத்தில் திருஞானசம்பந்தர் திருவவதாரம் செய்தார். இவருடைய திருவவதார நோக்கமே சமயப் பணிக்காக இருந்தமை அறியலாம். இதனை,

> **"ஞானசம்பந்தப் பெருமான் இவ்வுலகிற்கு வருகின்றமைக்கு உரிய காரணத்தைக் கூறுகின்ற சேக்கிழார் அவர் தம் தாய் தந்தையரையும் அவர் தம் பணிகளையும் எடுத்து விளக்கிய நிலையில், "தொண்டின் நிலைதர வருவார்"**

என்று குறிப்பிடுகிறார். தொண்டு என்பது வழிபாடு. அது இருமை கலந்த ஒருமை நெறி. திருவடியை மறவாது நினைத்தல் முதல் நிலை, புகழை வாயால் ஏத்துதல் இரண்டாம் நிலை அவை இரண்டையும் இணைத்த நிலையில் அமைவதே வழிபாட்டு நிலை. இவ்வழிபாட்டு நிலையே தொண்டு நிலை" (திருஞானசம்பந்தர், இரத்தினசபாபதி : ப. 23, 24) என்று கூறுவதன் மூலம் தொடக்கத்திலேயே அவருடைய அவதாரத்தைச் சொல்லி அது ஒன்றின் மூலம் சைவ சமய வளர்ச்சியில், திருஞானசம்பந்தரின் முதன்மையை இவ்வுலகிற்கு உணர்த்துகிறார்.

> **"அவம்பெருக்கும் புல்லறிவன் அமண்முதலாம் பரசமயப்**
> **பவம்பெருக்கும் புரைநெறிகள் பாழ்படநல்லூ ழிதொறும்**
> **தவம்பெருக்குஞ் சண்பையிலே தாவில்சரா சரங்களெலாம்**
> **சிவம்பெருக்கும் பிள்ளையார் திருஅவதாரஞ் செய்தார்".**
>
> (பெ.பு.பா. 25)

அவர் பிறந்து வளர வளர சைவ சமயம் தலைதூக்கத் தொடங்கியது. அவருடைய தளர் நடையால் பிற சமயங்களும் தளரத் தொடங்கின என்பதைச் சேக்கிழார்,

> **.................. கீழ்மை நெறிச் சமயங்கள்**
> **தளர்நடை யிட்டறத்தாமுந் தளர்நடை யிட்டருளினார்** (பா. 50)

என்று சுட்டுகிறார். திருஞானசம்பந்தரின் வளர்ச்சிப் படிநிலைகள், சைவ சமயத்தின் வளர்ச்சிப் படிகளாக இருப்பதுடன் அவருடைய சிவ அனுபவத்தின் படிநிலைகளாக அமைகின்றன. ஏனெனில், சம்பந்தரின் திருஞான அனுபவம் மூன்று வயதில் தொடங்குகிறது. இவ்வனுபவம் சீகாழியில், ஞானப்பால் உண்ட அளவில் அவருக்குக் கிடைக்கிறது. அது சைவ சமயப் பணிக்கு வேராகத் திகழ்கிறது. இவ்வாறு சிவானுபவம் வாய்க்கப் பெற்றவராய், அம்மை அப்பனாய் காட்சி தந்த பரம்பொருளைத் தான் கண்டதுடன் மற்றவர்க்கும் காட்டி எல்லோர்க்கும் சிவஞான சம்பந்தரானார். சேக்கிழார் இக்கருத்துக்களை,

யாவருக்குந் தந்தை தாய்எனும் இவர்இப்படி அளித்தார்
ஆவதனால் ஆளுடைய பிள்ளையா ராய்அகில
தேவருக்கும் முனிவருக்குந் தெரிவரிய பொருளாகும்
தாவில் தனிச்சிவஞான சம்பந்த ராயினார். (பா. 69)

சிவனடியே சிந்திக்குந் திருப்பெருகு சிவஞானம்
பவமதனை அறமாற்றும் பாங்கினில் ஓங்கிய ஞானம்
உவமையிலாக் கலைஞானம் உணர்வரிய மெய்ஞ்ஞானம்
தவமுதல்வர் சம்பந்தர் தாம்உணர்ந்தார் அந்நிலையில்.

விண்ணிறைந்த பெருகொளியால் விளங்குமழ விடைமேலே
பண்ணிறைந்த அருமறைகள் பணிந்தேத்தப் பாவையுடன்
எண்ணிறைந்த கருணையினால் நின்றாரை எதிர்காட்டி
உண்ணிறைந்து பொழிந்தெழுந்த உயர்ஞானத் திருமொழி
(பா. 74)

போன்ற பாடல்களால் குறிப்பிடுகிறார்.

பதிகம் பாடுதல்

திருவமுது உண்ட அளவில் பாட ஆரம்பித்து விடுகிறார் திருஞான சம்பந்தர். அவர் பாடிய பாடல்கள் பதிகங்களாக விளங்குகின்றன. பதிகங்கள் பாடியே தொண்டு நெறியும், சீர்திருத்தங்களும் ஞானசம்பந்தர் ஒருவராலே செய்யப்பெற்றன என்பது உண்மை. இவற்றினை நாடெங்கும் அறிய வேண்டுமென்றால், சிவத்தினைப் பரப்பவேண்டும். அதற்கு தலயாத்திரை தேவையாக அமைந்தது. சிவனைப் பாடுவதிலும் சிவன் உறைந்துள்ள திருத்தலங்களைப் பாடுவதில் வல்லவராய் விளங்கினார் என்பது திருத்தலங்களுக்கு அவர் கொடுத்த முதன்மைச் சிறப்பாகும். அவருடைய வாழ்வில், திருத்தல யாத்திரை நான்கு சுற்றுக்களாக விளங்குகின்றன.

''திருஞானசம்பந்தப் பெருமான் தொடங்கிய இரண்டாம் திருத்தல வழிபாட்டுச் செலவில் தில்லையம் பதியானது வரலாற்றுச் சிறப்புடையது.

அதன் விளைவாக அறமும் அருளும் இணைந்தன. திருநெல்வாயில் அரத்துறை அடிகள் முத்துப் பல்லக்கு, சின்னம், முத்துக்குடை முதலியவை களை அருளித் திருஞான சம்பந்தரைக் குருவாக அமைத்துக் கொடுத்தருளவே, அறத்தின் வழியில் அருள் செயற்படும் என்ற கருத்தும் அங்கே விளக்கம் பெற்றது''.

தந்தையின் தோளிலிருந்து முதல் சுற்றுப் பாடிய அவரின் தொண்டு, அவருடைய ஊரைச் சுற்றிப் பாடுவதாகவே அமைந்தது. அந்நிலை மாறி, அவருடைய பயணம் நெடும் பயணமாக இருப்பதற்கும், திருநீலகண்ட யாழ்ப்பாணர், மதங்க சூளாமணியார், திருநாவுக்கரசர் போன்றோரைச் சந்தித்தல், தில்லையில் அந்தணர்கள் சிவகணங்களாகக் காட்சி தருதல், முத்துச் சிவிகை, குடை போன்றன பெறுதல், உபநயனச் சடங்கு நிகழுதல் போன்ற யாவுமே அவருடைய அருள் அனுபவங்களாக, சமய சீர்திருத்தங்கள் செய்வதற்கு அடிகோலின. எனவே இரண்டாவது திருத்தலச்சுற்றில் அவருடைய தொண்டு நெறி தொடங்குகிறது. அது கொல்லிமலை மழவனின் மகளுக்கு முயலகன் என்னும் நோய் தீர்ப்பதில் செயல்படுகிறது. அடுத்து கொங்கு நாட்டிற்கு அவருடைய திருத்தலத் தொண்டு சமூகத் தொண்டாக மலர்ந்தது. அது திருச்செங்கோட்டுத் தலமாக, திருநீலகண்டப் பதிகமாக அமைந்தது.

திருச்செங்கோடு

கொங்கு நாட்டுப் பாடல் பெற்ற தலங்கள் ஏழில் திருச்செங்கோடும் ஒன்று. இது காவிரியின் கீழ்க்கரைப் பூந்துறை நாட்டின் நடுநாயகமாகத் திகழ்கிறது. இதனைச் சேக்கிழார்,

"...... கொண்டல் நெடும் புரிசைக் கொடிமாடச் செங்குன்றூர்"
(பா. 324)

என்று குறிப்பிடுகிறார். இதற்கு நாகாசலம், பனிமலை, கோதை மலை, அரவகிரி, வாயுமலை, கொங்குமலை, நாககிரி, வந்திமலை, சித்தர்மலை, சோணகிரி, பிரம்மகிரி, தந்தகிரி போன்ற பல பெயர்கள் உண்டு. இத்தலத்தின் சிறப்பினை தேவாரம், திருவாசகம், பெரியபுராணம், திருப்புகழ், கந்தர் அனுபூதி கந்தர் அலங்காரம் போன்ற நூல்கள் பாடுகின்றன.

ஒரு தலத்தைப் பற்றிய புராணக் குறிப்புகளும் விளக்கங்களும் ஏராளமாக இருப்பது அந்தத் தலத்தின் பெருமைக்கும் அது பல்லோராலும் பல்லாற்றாலும் போற்றப்பட்டு வந்துள்ளது என்பதற்கும் சான்றாக அமைகின்றது என்று கொள்வது மிகையாகாது என்பதற்கேற்ப இம்மலை பல்வேறு சிறப்புக்களைக் கொண்டுள்ளது. இம்மலையின்மீது பல்வேறு தெய்வங்கள் இருப்பினும் முக்கியமாக அர்த்த நாரீசுவரர்,

செங்கோட்டு வேலவன், ஆதிகேசவப் பெருமாள் ஆகிய தெய்வங்கள் முதன்மைத் தெய்வங்களாக விளங்குகின்றன. இத்தகைய சிறப்புப் பெற்ற இம்மலையை நாகமலை என்றும் கூறுவர். இதற்கான புராண வரலாறும் உண்டு. முன்னொரு காலத்தில் ஆதிசேடனுக்கும், வாயுவிற்கும் அகந்தையின் காரணமாகப் போர் மூண்டது. அப்போது மேருமலையின் சிகரம் ஒன்றும் ஆதிசேடனின் சிகரங்களில் ஒன்றும் உராய்ந்து மூன்று பாகங்களாகச் சிதறி வீழ்ந்தன. அதில் ஒன்று இலங்கையாகவும் இன்னொன்று திருவண்ணாமலையாகவும் உருவெடுத்தது. மற்றொரு பாகம் ஆதிசேடனின் சிரத்துடன் வீழ்ந்து திருச்செங்கோடு நாகமலையாக உருவெடுத்து விளங்குகின்றது (அர்த்தநாரீசுவரர் திருத்தல வரலாறு).

மேருமலையின் கொடுமுடியுடன் பொருந்திய சிவலிங்கத்துடனே நாகதேவனின் அங்கமும் சேர்ந்து வந்து விழுந்தமைந்த காலத்திலே இருநாகங்கள் வழியிடையில் கூடிப் புணர்வதைப் போன்றிருந்தது. சிவபெருமானின் சொல்லினைக் கருத்திற்கொண்டு தென்புலமும் வடபுலமும் சமநிலை பெற்றிருக்க வேண்டுமென்ற ஏற்பாட்டில் அகத்திய முனிவர் தென்னாடு நோக்கி வருவதை அறிந்த கோதை முனிவர், இருநாகங்களும் பிணைந்து நிற்பது தீதிற்கு அறிகுறியாகுமெனக் கருதி அவைகளைக் கல்லாகும்படி சாபமிட்டார் என்பது புராண வரலாறு. இதனைக் கருத்தில் கொண்டு பார்க்கும்போது, திருச்செங்கோட்டு மலையில், வளைந்து நெளிந்து ஐந்து தலைகளையும் விரித்துப் படமெடுத்த நிலையில் இலிங்க உருவினைச் சுமந்து கொண்டிருக்கும் ஆதிசேடனின் வியத்தகு உருவம் மேற்சொன்ன கருத்திற்கு விளக்கம் அளிக்கும். இத்திருவுருவம் 60 அடி நீளம் கொண்டதாக உள்ளது. நாகருக்குக் குங்குமம் தூவிப் பொங்கலிட்டு மக்கள் வழிபடுவர். நாகதோசம் முதலானப் பல்வகைத் தோசங்களும் நாகர் வழிபாட்டினால் நீங்குகின்றன என்பது நம்பிக்கை யாகும் (அர்த்தநாரீசுவரர் திருத்தல வரலாறு).

இத்துடன் வேறொரு புராணக் கதையும் உண்டு. ஒரு காலத்தில் காமதேனு கைலாசநாதனை வணங்கி, உன்னை வணங்குமாறு ஒரு தெய்வத்தலம் திருவுளம் பற்றியருளல் வேண்டுமென வேண்ட, மேருவிற்கு ஒப்பான சிகரங்கள், ஐந்து நாடிகளால் மாமேருவில் உள்ளன. அவற்றை நீ எடுத்துச்சென்று வழிபடுவாயாக என்றதும், காமதேனுவும் ஒவ்வொரு சிகரத்தையும் ஒவ்வொரு மலையில் வைத்தது. அதில் நாகமலையும் ஒன்று. வாயுதேவனால் கொண்டுவந்து வீழ்ந்தது ஆண்நாகச் சிகரமாகும். காமதேவனால் நாட்டப்பட்டது. பெண் நாகச் சிகரமாகும். இவ்விரண்டும் சிவனும் உமையும் போல இணைந்து நாக மலையாய் திருச்செங்கோடு ஆகிய இத்தலத்தில் விளங்கி வருகின்றது. கோதை முனிவர் மேருமலையில் தவப்பள்ளி அமைத்துச் சிவலிங்கம் திருநாட்டுச்செய்து தவமியற்றிய

காரணத்தால், ஆண்நாகக் கொடுமுடி என்றும் கோதை மலை என்றும் அழைக்கப்படுகிறது. இன்றும் இவ்விடத்தில் காணக் கிடக்கும் இருமலைகள், ஆண்மலையாகவும் பெண்மலையாகவும் காட்சி தருகின்றன (அர்த்தநாரீசுவரர் திருத்தல வரலாறு, ப. 18,19).

பார்வதி தேவி இடப்பாகம் பெற்ற வரலாறு

சிவனும் சக்தியுமாக இணைந்து காட்சி தரும் வடிவம், இத்தலத்தைத் தவிர வேறு எங்கும் இல்லை என்பது வரலாறு. சத்தியும் சிவமும் ஒன்று என்று அறியும்பொருட்டுப் பார்வதி தேவி விரதமிருந்து தவமியற்றி, இடப்பாகத்தைச் சிவனிடம் பெற்ற சிறப்பினை உடையது இத்தலம்.

இதுபோன்ற எத்தனையோ பெருமைகளையுடையது இத்தலம். இவ்வாறு திருச்செங்கோடு பல்வேறு சிறப்புக்களைக் கொண்டதால், தலபுராணத்தில் இடம் வகிக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது. இத்தகைய திருத்தலத்திற்குத் திருஞானசம்பந்தர் வந்தார் என்பதால் அங்கு அவருடைய திருத்தொண்டு எத்தகையது என்பது பற்றி எழுந்ததே இக்கட்டுரை. எனவே திருத்தலத்தையும் திருஞானசம்பந்தரையும் தொடர்பு படுத்துவது அவசியமாகிறது. திருஞானசம்பந்தர் தனது 2-வது திருத்தலச் சுற்றில் திருப்பாச்சிலாச்சிராமம் வழிபாடு முடிந்தபின் பல தலங்களை வணங்கிக் கொண்டு கொங்கு நாட்டிலுள்ள திருக்கொடிமாடச் செங்குன்றூரை அடைந்தார். அங்குள்ள இறைவனைப் பணிந்து பதிகம் பாடித் தங்கி யிருந்தார். அங்கு அவர் வந்ததன் காரணமே சைவநெறியைப் பரப்புவது என்பதால் திருத்தொண்டிற்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது. கொங்கு நாட்டில் வந்து தங்கிப் பாடிய பாடல்கள் பதினெட்டு. அதில் பதிகம் பாடிய திருத்தலத்தின் வர்ணனைகள் அதிகம் இடம் பெறாமல், அவ்விடத்தைத் தாக்கிய நளிர்சுரத்தினை அதிகம் வர்ணிக்கிறார் சேக்கிழார். ஏனெனில் மக்களைப் பாதித்த அவ்வெப்புநோயை நீக்குவதே திருஞானசம்பந்தரின் கடமையாகத் திருத்தொண்டாக இருந்ததால்தான். எனவே திருச்செங்கோட்டுத் திருப்பதிகமானது திருஞானசம்பந்தரின் சீர்திருத்தப் பணியாக இடம் பெற்றுள்ளது.

சம்பந்தரும் வெப்புநோயும்

திருஞானசம்பந்தர் திருச்செங்கோட்டில் வந்து இறைவனைப் பாடிக்கொண்டும் வழிபாடு செய்துகொண்டும் இருந்தார். அப்போது பனிக்காலமாக இருந்தது. அது நிலத்தின் இயல்பாகத் தோன்றுவது. இயற்கையின் பாதிப்பினை ஏற்றுக்கொள்ளத்தானே வேண்டும். அதனை அப்படியே விட்டுவிடலாமே என்னும் எண்ணம் எல்லோர்க்கும் ஏற்படுவதுதான். இங்குதான் திருஞானசம்பந்தரின் அருள் அனுபவம் விளக்கம் பெறுகிறது. அதாவது குளிர்காலத்தில் எப்பொழுதுமே வருத்தும்

நோயாக 'வெப்புநோய்' இருந்தாலும் இதுவரையில் அதனைப் போக்கு பவரும் இல்லை, போக்க நினைப்பவரும் இல்லை என்பது தெளிவாகிறது. திருத்தொண்டு நெறியில் வாழும் திருஞானசம்பந்தர் அந்நோய் வருவதை விரும்புவாரா?

எனவே நிலத்தில் ஏற்படும் இயல்பினையும்கூட மாற்றியமைக்கின்ற அருள் அனுபவம் சம்பந்தர்க்கு உண்டு என்பது உணரப்படுகிறது. அத்துடன் சம்பந்தர் இவ்வுலகிற்கு வந்ததன் அவதாரம் விளக்கப்படுகிறது. அதாவது சைவ சமயம் வினைக்கொள்கையால் மற்ற சமயங்களிலிருந்து மாறுபட்டது என்பதை உணர்த்தவே ஆகும். பிற சமயங்களில் இல்லாத செய்வினை, செய்பவன், சேர்பயன், சேர்ப்பவன் என்ற நான்கினையும் கொண்டது சைவம். மற்ற சமயங்களில் 'சேர்பவன்' இல்லை என்பது உணரத்தக்கது. எனவே வினையானது சங்கிலித் தொடர்பு போல பிறவிகளாகத் தொடரும் என்பது பிற சமயங்களிலும் சொல்லியுள்ளதுதான். ஆனால் சைவ சமயமோ தொடர்ந்து செல்லும் வினையை மனிதனால் நீக்கமுடியும். அது திருத்தொண்டினால் என்பதை உணரவேண்டும். எனவே தொண்டு செய்வதன் மூலம் பிறவியிலிருந்து விடுபடலாம் என்பது சைவ சித்தாந்தம். இதனை உணர்த்தவே திருஞானசம்பந்தர் இவ்வுலகிற்கு வந்தார். இக்கொள்கையை விளக்கும் வகையில் அமைவது திருஞானசம்பந்தரின் திருநீலகண்டப் பதிகம்.

அவ்வினைக்கு இவ்வினைஆம் என்றுசொல்லும் அஃதறிவீர்
உய்வினை நாடாது இருப்பதும் உந்தமக்கு ஊனமன்றே
கைவினை செய்து எம்பிரான் கழல் போற்றுதும் நாமடியோம்
செய்வினை வந்துஎமைத் தீண்டப்பெறா திருநீலகண்டம்.

(பா. 43)

என்று சொல்வதன் வாயிலாக, தீவினை எமைத் தீண்டவில்லை. நீங்களும் தொண்டு நெறியைப் பேணுங்கள். அதுவே உய்வினை இதுவே திருநீலகண்டத்தின் ஆணை என்று அமைத்துக் காட்டியுள்ளார்.

வெப்புநோய் வருவதன் காரணத்தைச் சைவ சமயத்தில் தத்துவ நோக்கில் விளக்கப்படுவதைக் காணலாம். அதாவது நோயானது ஆணவத்தினால் வருவது. அவ்வாணவம் இரண்டு நிலையில் இடம்பெறும்.

1. தலைவன் தொழிலைத் தன் தொழிலாக மாற்றி அமைத்தல்.
2. தனக்குள்ளே சிவன் இருக்கிறான் என்று நினைப்பது.

இவற்றில் முதலில் உள்ள எல்லாம் இறைவன் செயல் நான் அடிமை என்று இருத்தல் மட்டுமே திருநீலகண்டப் பதிகத்தில் இடம் பெற்றுள்ளது. இப்பதிகத்தில் யாருக்கு ஆணவம் என்பது சுட்டவில்லை. அதனை நிலத்திற்கே சொந்தமாக்கி விடுகிறார். அப்படியென்றால் மக்கள் சிவத்தை

உணரப்பெறவில்லை. பரசமயக் கொள்கைகளைப் பற்றியிருந்தனர் என்பதே கருத்தாகக் கொள்ளலாம். எனவே சிவனுக்கு நான் அடிமை என்று எண்ணாத நிலையில் அவர்களுடைய ஆணவம் நளிர்ச்சுரமாக உருவாயிற்று. ஆணவத்தின் அழுக்கை நீக்க அருளால்தான் முடியும் என்பது தெளிவு. எனவே சைவ சமயத்தின் உண்மையை மறந்த நிலை ஆணவமாக வெப்புநோயாக இருந்து அது சம்பந்தரின் திருத்தொண்டினால் நீங்கிற்று என்பதால் மக்கள் சைவ சமயத்தை உணர்ந்திருந்தனர். கொங்கு நாடு முழுவதும் சைவத்தின் சிறப்பை உணராதிருந்த நிலையில் சம்பந்தர் வந்து உணர்த்தினார். எனவே, சம்பந்தர் காலத்திலேயே, மக்கள் அவருடைய அருள்தொண்டினை உணர்ந்து போற்றியிருக்க வேண்டும் என்பதை உணரலாம். இக்கருத்தினை திருநாரையூர் நம்பியாண்டார் நம்பிகள்,

மின்னார் குடுமி நெடுவெற் பகங் கொங்கில்
வீழ்பனி நோய்
தன்னார் வழி கெட்டிழிந்தமை சொல்லுவர்
காண் இறையே
மின்னார் பரிசனத்தோர் மேற்புகதும் எவர்க்கு மிக்க
நன்னலர் பெருமான் அருகாசனி
நல்கிடவே

என்றும், 'கொங்கிற் பனிநோய் பரிசனத்தைத் தீர்ப்பித்தும் என்றும் குறிப்பிட்டுள்ளார். திருச்செங்கோட்டுப் பதிகம், ஆணவத்தை நீக்கிய நிலையில் திருத்தொண்டு செய்து உய்யலாம் என்பதே. எனவே ஞானசம்பந்தரின் அருள் அனுபவம் தளர்ந்திருந்த சைவ சமயத்தை நிலை நிறுத்துவதற்காகும். அதற்கு இப்பதிகம் ஒரு சிறந்த சான்றாக அமைகிறது என்பது தெற்றென விளங்கும்.

64. சம்பந்தர் தேவாரத்தில் மூர்த்தி தலம் தீர்த்தம்

கா. நாகராசு, கோவை.

தமிழ்நாட்டில் காலந்தோறும் பக்திப் பயிர் வளர்த்துச் சமய தொண்டாற்றிய பெரியோர்கள் பலர் உள்ளனர். அவர்களுள் தமிழ் மொழி, பக்தி நெறி ஆகிய இரண்டையும் வளர்த்தவர்கள் சிலர். அச்சிலருள் முதன்மையாகக் குறிப்பிடத்தக்கவர் திருஞானசம்பந்தர். அவர் அயலாரால் ஒடுக்கப்பட்டிருந்த தமிழ்ச் சமயம், தமிழ்மொழி ஆகிய இரண்டையும் மீட்டெடுத்தும் அயற்தாக்கங்களிலிருந்து அவற்றைப் பாதுகாத்தும் செயற்கரிய பணிகள் பல புரிந்தவர். சிவத்தையும் செந்தமிழையும் தம் இருகண்களாகப் போற்றியவர். தமிழ் வளர்ச்சிக்கும் சமய வளர்ச்சிக்கும் அவர் ஆற்றிய பணிகள் காலந்தோறும் நினைவு கூரத்தக்கன. சமய நெறியில் பல புதிய மாற்றங்களை ஏற்படுத்திய ஞானசம்பந்தர் இலக்கிய வுலகிலும் பல புதுமைகளுக்கு வித்திட்டவர். அவர் புதிய புதிய யாப்பு வகைகளையும் இலக்கிய வகைகளையும் தமிழுக்கு அறிமுகப்படுத்தி யவர்.அம்முறையில் தமிழில் அவர் காலத்துக்குப் பின்னர் செழித்த தலபுராண இலக்கியங்களுக்கான வித்தையும் அவரே தம் பாடல்களில் ஊன்றியுள்ளார். அது குறித்து ஆராயும் நோக்கில் இக்கட்டுரை அமைகின்றது.

தலபுராண அடிப்படைகள்

தலபுராண இலக்கியங்களுக்கு மூலக் கருப்பொருட்களாக விளங்கு பவை மூர்த்தி, தலம், தீர்த்தம் என்ற மூன்றும் ஆகும். இம்மூன்றின் பெருமைகளையும் விரித்துரைப்பதே தலபுராண இலக்கியங்களின் நோக்கமாகும். இத்தகைய தலபுராணங்களின் தோற்றத்திற்குத் திருமுறைகள் குறிப்பாக முதல் எட்டுத் திருமுறைகள் ஒரு முக்கியக் காரணமாக இருந்துள்ளன. திருஞானசம்பந்தர் தம் முதல் மூன்று திருமுறைகளிலும் பல பதிகங்களில் மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகியவற்றின் மேன்மை களை எடுத்துரைக்கின்றார். இது மக்களுக்கு சமய நெறியில் ஆழ்ந்த பிடிப்பையும் நம்பிக்கையையும் ஏற்படுத்தும் நோக்கில் பாடப்பட்டதாகும். அந்நோக்கத்தை நிறைவேற்றியதோடு தலபுராணங்களுக்கும் இது கால்கோள் அமைத்துள்ளது குறிப்பிடத்தக்கது.

மூர்த்தியின் சிறப்புக்கள்

மூர்த்தி என்பது திருக்கோயில்களில் எழுந்தருளியிருக்கும் மூலவரைக் குறிக்கும் சொல்லாகும். அம்முறையில் சைவத் திருக்கோயில்களில்

பரவப்படும் மூர்த்தி சிவபெருமான் ஆவார். சிவத்தலங்களுள் சிறந்தது தில்லை. இதைச் சைவ உலகு 'கோயில்' என்றே போற்றும் இத்தலத்தில் சிவபிரான் ஆடல் வல்லானாக அருளாட்சி புரிகின்றார். இப்பெருமான் வழிபடுவோர்க்கு வேண்டியவற்றையெல்லாம் அருள்பவன் என்று கோயில் புராணம் முதலிய தில்லைக்குரிய தலபுராணங்கள் எடுத்துரைக்கும். இத்தகைய மூர்த்தியின் சிறப்புக்கள் தலபுராணங்களுக்கு முன்னோடியான திருஞானசம்பந்தர் பாடல்களிலேயே விரிவாக எடுத்துரைக்கப்படு கின்றன. அவை வருமாறு :

"...... ...... சிற்றம் பலமேய
முற்றா வெண்திங்கள் முதல்வன் பாதமே
பற்றா நின்றாரைப் பற்றா பாவமே" (கோயில் -1-1)

"சிலையால் எயிலெய்தான் சிற்றம் பலந்தன்னை
தலையால் வணங்குவார் தலையா னார்களே" (கோயில் - 1-7)

"நீரார் சடையானை நித்த லேத்துவார்
தீரா நோயெல்லாந் தீர்தல் திண்ணமே" (கோயில் - 1-8)

திருவெண்காடு என்னும் தலத்தில் எழுந்தருளியுள்ள சிவபெருமானைச் சுவேதகேது, இந்திரன் அவனது ஊர்தியாகிய ஐராவதம் ஆகியோர் வழிபட்டுப் பேறு பெற்றனர் என்பதை ஞானசம்பந்தர்,

"வேலைமலி தண்கானல் வெண்காட்டான் திருவடிக்கீழ்
மாலைமலி வண்சாந்தால் வழிபடுநன் மறையவன்றன்
மேலடர்வெங் காலனுயிர் விண்டபினை நமன்தூதர்
ஆலமிடற் றான்அடியார் என்றடர அஞ்சுவரே"

(திருவெண்காடு-1-5)

"மந்திர மறையவர் வான வரொடும்
இந்திரன் வழிபட நின்ற எம்மிறை" (திருவெண்காடு -3-1)

"நயந்தவர்க் கருள்பல நல்கி இந்திரன்
கயந்திரம் வழிபட நின்ற கண்ணுதல்" (திருவெண்காடு -3-7)

என்றெல்லாம் போற்றிச் சிறப்பிக்கின்றார். இவை திருவெண்காட்டுத் தலவரலாற்றில் விரிவாகக் கூறப்படுகின்றன.

பன்னிரு திருப்பெயர்களை உடைய பதி திருப்பிரமபுரம் (சீர்காழி). இங்கு எழுந்தருளியுள்ள சிவபரம்பொருளை நான்முகன் முதலிய பலரும் வழிபட்டுப் பேறு பெற்றுள்ளனர். இதைச் சீர்காழித் தலபுராணத்தில் விரிவாகக் காணலாம். இத்தலபுராண மூலங்கள் ஞானசம்பந்தர் பதிகங் களில் விரவிக் கிடப்பதைக் காணலாம். பிரமபுரத்துப் பெருமான் நான்முகன் வழிபட்ட மூர்த்தி என்பதை,

''ஏடுடைய மலரான்முனை நாட்பணித் தேத்த அருள்செய்த
பீடுடைய பிரமாபுரம் மேவிய பெம்மானி வனன்றே''

(திருப்பிரமபுரம்-1-1)

''பூமகன் அலரொடு புனல்கொடு வழிபடு புறவமே''

(திருப்பிரமபுரம்-32-5)

போன்ற அடிகளில் சம்பந்தர் தேவாரம் எடுத்துரைக்கின்றது.

பிரமபுரத்துப் பெம்மானும் வழிபடுவோர்க்கு எல்லா நலங்களையும் வழங்குபவன். இச்செய்தியைத் திருஞானசம்பந்தர்,

''அலங்கல் சூட்டவல்லார்க் கடையா அருநோயே''

(திருப்பிரமபுரம் - 41-1)

''பேராயிரமும் பிதற்றத் தீரும் பிணிதானே''

(திருப்பிரமபுரம்-41-2)

''அடிகை தொழுவார்க் கில்லை அல்லல் அவலமே''

(திருப்பிரமபுரம்-41-3)

''..... .... தொழுதேத்த
முயல்வார் தம்மேல் வெம்மைக் கூற்ற முடுகாதே''

(திருப்பிரமபுரம்-41-7)

என்றெல்லாம் எடுத்துரைத்துப் போற்றுகின்றார். இது அத்தலபுராணத்திலும் விளக்கமாக வலியுறுத்தப் பெறுகின்றது.

திருவானைக்கா பஞ்சபூதத் தலங்களுள் ஒன்று. அங்குள்ள இறைவனை யானை, சிலந்தி போன்ற அஃறிணை உயிர்களும் வழி பட்டுப் பேறு பெற்றுள்ளன. திருவானைக்காத் தலபுராணம், தந்திவன புராணம் முதலிய நூல்களில் இத்தலத்தின் இச்சிறப்பைப் பரக்கக் காணலாம். ஞானசம்பந்தப் பெருமானும்,

''விறல்மிக் ககரிக் கருள்செய் தவனே''

(திருவானைக்கா - 1-4)

என்று யானை வழிபட்டதை எடுத்துரைக்கிறார். மேலும் ஆனைக்கா அண்ணலின் பெருமைகளையும் சம்பந்தப் பெருமான்,

''ஆனைக்காவில் அண்ணலை அபயமாக வாழ்பவர்
ஏனைக்காவல் வேண்டுவார்க் கேதும் ஏதம் இல்லையே''

(திருவானைக்கா - 2-1)

''ஆரமாய மார்புடை யானைக்காவில் அண்ணலை
வாரமாய் வணங்குவார் வல்வினைகள் மாயுமே''

(திருவானைக்கா -2-3)

போன்ற அடிகளில் எடுத்துரைக்கின்றார். அத்தலத்தின் மூர்த்தி குறித்து அத்தலபுராணங்கள் பேசும் செய்திகளுக்கெல்லாம் இவை போன்ற அடிகளே மூலக்கருக்களாக விளங்குகின்றன.

திருவுசாத்தானம் என்னும் தலத்து இறைவனை இராமன், இலக்குவன், சாம்புவான், சுக்ரீவன், அனுமன் ஆகியோர் வழிபட்டுப் பேறு பெற்றனர் என்று அத்தலப்புராணத்தில் எடுத்துரைக்கப் படுகின்றது. இதற்கான அடிப்படைச் செய்தி,

''நீரிடைத் துயின்றவன் தம்பிநீள் சாம்புவான்
போருடைச் சுக்கிரீ வன்னநு மான்தொழக்
காருடை நஞ்சுண்டு காத்தருள் செய்தஎம்
சீருடைச் சேடர்வாழ் திருவுசாத் தானமே'' (திருவுசாத்தானம்-1)

என்ற சம்பந்தர் பாடலில் இடம் பெற்றுள்ளமை இங்குக் குறிப்பிடத் தக்கது.

திருமறைக்காட்டு இறைவன் நான்கு வேதங்களாலும் போற்றி வழிபடப் பெற்ற சிறப்புக்குரியவன். வேதாரணியத் தலபுராணம் இதை விளக்கியுரைக்கின்றது. வேதங்கள் அப்பெருமானைப் போற்றி வழிபட்டதை ஞானசம்பந்தரே முதன் முதலில்,

''பலகா லங்கள்வே தங்கள்பா தங்கள் போற்றி
மலரால் வழிபா டுசெய்மா மறைக்காடர்'' (திருமறைக்காடு-2-6)

என்று குறிப்பிட்டுப் போற்றுகிறார்.

பாண்டி நாட்டுத் தலங்களில் முதன்மையானது மதுரை. இங்கு வீற்றிருக்கும் பெருமான் எல்லா மூர்த்திகளுக்கும் முன்னே தோன்றி முளைத்தவர் என்பது ஆன்றோர் கொள்கை. இப்பெருமானின் சிறப்புக்களைச் சம்பந்தப் பெருமான் விரிவாக எடுத்துரைக்கின்றார். இப்பெருமானை வணங்குவோர் உலகத்தை ஆளும் பேறு பெறுவர்; காலனை வெல்வர்; எல்லா இன்பங்களையும் அடைவர்; துன்பங்களை எல்லாம் துரத்துவர்; என்றெல்லாம் அவர் உறுதி கூறுகின்றார் (திருஆலவாய் -1-1,2,6,7) மேலும்,

''குற்றம்நீ குணங்கள்நீ கூடல்ஆல வாயிலாய்
சுற்றம்நீ பிரானும்நீ தொடர்ந்திலங்கு சோதிநீ
கற்றநூல் கருத்தும்நீ அருத் தமின்பம் என்றிவை
முற்றும்நீ புகழ்ந்துமுன் னுரைப்பதென் முகம்மனே''
(திருஆலவாய் - 6-3)

என்று எல்லாமே ஆலவாய் அண்ணல்தான் என்றும் போற்றுகின்றார். அத்துடன்,

''ஞாலம் நின்புகழே மிக வேண்டும்தென்
ஆலவாயில் உறையும் எம்ஆதியே'' (திருஆலவாய் -7-1)

என்றும் தன் ஆசையை வெளியிடுகின்றார். இக்கருத்துக்களே நம்பி திருவிளையாடற் புராணம், பரஞ்சோதி முனிவர் திருவிளையாடற் புராணம், கடம்பவன புராணம் முதலிய மதுரைத் தலபுராணங்களின் அடித்தளமாக அமைந்திருப்பதைக் காண முடிகின்றது.

பாண்டிநாட்டுத் தலமான திருஇராமேச்சுரம் இராமனால் உருவாக்கப்பட்ட சிறப்புக்குரியது. இங்கு எழுந்தருளியுள்ள இறைவன் இராமனது பிரம்மகத்தி தோடத்தைப் போக்கியவர். இதை,

''அணையலை சூழ்கடல் அன்றடைத்து வழிசெய்தவன்
பணையிலங்கும் முடி பத்திறுத்த பழிபோக்கிய
இணையிலி....'' (திருஇராமேச்சுரம் - 1-6)

என்ற அடிகளில் சம்பந்தர் குறிப்பிடுகின்றார். சேதுபுராணம் முதலிய நூல்களில் இச்செய்தி விளக்கம் பெறுகின்றது.

கொங்குநாட்டுத் தலமான திருக்கொடிமாடச் செங்குன்றூர் மாதிருக்கும் பாதியனுக்கு உரிய பழம்பதி. இப்பெருமானை வழி படுவதால் கிட்டும் பேறுகளை இத்தலப் பதிகம் கீழ்வருமாறு பட்டிய லிட்டுக் காட்டுகின்றது.

''அந்தணனைத் தொழுவார் அவலம் அறுப்பாரே'' (பா.எ.1)

''தலைமகனைத் தொழுவார் தடுமாற் றறுப்பாரே'' (பா.எ.2)

''பாங்கனதாள் தொழுவார் வினையாய பற்றறுமே''(பா.எ.6)

''வேதியனைத் தொழநும் வினையான வீடுமே'' (பா.எ.10)

இச்செய்திகளைத் திருச்செங்கோட்டுப் புராணம் விரித்தெடுத்துக் கூறுவது இங்கு சுட்டத்தக்கது.

இவை போன்று பல தலங்களில் சிவபிரான் ஞானசம்பந்தரால் பல்வேறு முறைகளில் சிறப்பிக்கப் பெற்றிருப்பதைப் பார்க்கலாம். இவை அவ்வத் தலபுராணங்களில் எடுத்துரைக்கப்பெறும் மூர்த்தியின் கீர்த்திகளுக்கு அடிப்படைகளாக விளங்குகின்றன.

தலம்

மூர்த்தி எழுந்தருளியிருப்பதால் தலம் (ஊர்) பெருமை பெறுகின்றது. எனவேதான் மூர்த்திக்கு அடுத்த நிலையில் தலம் சிறப்பிடம் வகிக்கின்றது. ஞானசம்பந்தர் சிவத்தலங்களைத் தமக்கேயுரிய முறையில் போற்றிப் பாடுவதை அவர்தம் பதிகங்களில் காணலாம். தலத்தை மூர்த்தியாகவே கருதிப் போற்றும் பாங்கும் அவர் பதிகங்களில் மலிந்துள்ளது. பாடல் பெற்ற தலங்களுக்குரிய தலபுராணங்கள் விரித்துக் கூறும் தலப் பெருமைகளுக்கான மூலங்களை அவை ஞானசம்பந்தர் பாடல் களிலிருந்தே அதிகமாகப் பெற்றுள்ளன எனலாம்.

திருத்தோணிபுரம் (சீர்காழி) ஊழிக் காலத்திலும் அழியாது ஊழி வெள்ளத்தின் மீது மிதக்கும் தன்மை உடைய தலம் என்று கூறுவர். அப்படித் தோணிபோல மிதக்கும்போது இருபது பறவைகள் அதைத் தாங்கி நிற்கும் என்றும் சொல்வர். புராணம் சார்ந்த இந்நம்பிக்கைக்கு ஆதாரம் கீழ்வரும் சம்பந்தர் தேவார அடிகளே ஆகும்.

''தொல்பறவை சுமந்தோங்கு செம்மைத் தோணி புரத்தானே''

(திருப்பிரமபுரம் - 22-9)

''துள்ளொலி வெள்ளத்தின் மேல்மிதந்த தோணி புரத்தானே''

(திருப்பிரமபுரம் - 22-8)

இத்தலம் வழிபடுவோர் தம் வினைகளை ஒட்டி வரம் பல நல்கவல்லது என்றும் சம்பந்தர் பலவிடங்களில் சுட்டுகின்றார்.

''சிரபுரந் தொழ வினை நில்லாவே'' (திருப்பிரமபுரம் - 29-2)

'' சிரபுரந் தொழும் அடியவர் வருந்தாரே''

(திருப்பிரமபுரம் - 29-5)

''சிரபுரந் தொழு தெழ வல்வினை அடையாவே''

(திருப்பிரமபுரம் - 29-6)

''சிரபுரந் தொழ தெழ வினை குறுகாவே''

(திருப்பிரமபுரம் - 29-8)

''சிரபுரந் தொழ வினை விட்டிடும் மிகத்தானே''

(திருப்பிரமபுரம் - 29-10)

''கழுமலம் நினையநம் வினை கரிசறுமே''

(திருப்பிரமபுரம் - 52-1-10)

என்பன அவர் நம்பிக்கை மொழிகள். திருத்தோணிபுரம் பன்னிரு திருப்பெயர்களைப் பெற்ற புண்ணிய நகர் ஆகும் இத்திருப்பெயர் களைச் சம்பந்தர் தேவாரம்தான் முதன் முதலில் எடுத்துரைக்கின்றது. இப்பெயர்களைப் போற்றும் முறையில் அமைந்தவை 'பல்பெயர்ப் பத்து', 'திருவிருக்குக்குறள்', 'மொழிமாற்று', 'ஏகபாதம்', 'திருவெழுகூற்றிருக்கை', 'திருச்சக்கரமாற்று', 'திருக்கோமூத்திரி', 'வழிமொழித் திருவிராகம்', 'ஈரடி', 'திருவியமகம்' முதலிய பதிகங்கள். இத்தகைய பெருமைகள் எல்லாம் சீர்காழித் தலபுராணத்துள் விரிவாக இடம்பெறுவது இங்கு குறிப்பிடத்தக்கது. சுருக்கமாகச் சொன்னால் 'வழிமொழித் திருவிராகம்' என்ற சம்பந்தர் பதிகத்தின் வழிநூலே 'சீர்காழித் தலபுராணம்' எனலாம்.

திருமழபாடி என்னும் தலம் சோழநாட்டில் காவிரிக் கரையில் விளங்குவது. இத்தலம் வழிபடுவோர்க்கு வரங்களை வழங்குவதில் வள்ளல் தன்மையுடையது. இதை,

".... .... மழபாடியைத்
தொழுமின் நுந்துயரானவை தீரவே" (திருமழபாடி - 3-3)
".... .... திருமழபாடியைத்
தலையினால் வணங்கத் தவமாகுமே" (திருமழபாடி - 3-4)
"..... .... மாமழபாடியை
நாடினார்க்கு இல்லை நல்குரவானவே" (திருமழபாடி - 3-6)
".... .... மாமழபாடியை
உன்னிலங்க உறுபிணி இல்லையே" (திருமழபாடி - 3-8)

போன்ற சம்பந்தர் பாடலடிகள் எடுத்துக் கூறுகின்றன. இதன் அடித் தளத்தில் நின்றே திருமழபாடிப் புராணம் இத்தலத்தின் சிறப்புக்களைப் பேசுவது இங்கு சுட்டத்தக்கது.

திருநாகேச்சுரம் என்னும் தலம் இக்காலத்தில் இராகு தோடம் நீங்கும் தலமாகப் போற்றப் பெறுகிறது. ஞானசம்பந்தரோ,

"நாளுநாதன் அமர்கின்ற நாகேச்சரம் நண்ணுவார்
கோளுநாளுந் தீயவேனும் நன்காங் குறிக் கொண்மினே"
(திருநாகேச்சரம் - 2-6)

என்று எல்லாக் கோள்களாலும், நாள்களாலும் வரும் தீங்குகளெல்லாம் இத்தலத்தைப் போற்றினால் மாறும் என்று எடுத்துரைக்கிறார்.

இதேபோல், திருநள்ளாறு சனிதோடத்தை நீக்கும் தலம் என்று மக்களால் போற்றப்படுகிறது. திருநள்ளாற்றுத் தலபுராணத்தில் நளச் சக்கரவர்த்தி அங்கு வழிபட்டுத் துன்பம் நீங்கிய செய்தி விளக்கமாகப் பேசப்படுகிறது. இவற்றுக்கெல்லாம் மூலமாக இருப்பது,

"வளங்கெழுவு தீபமொடு தூபமலர் தூவி
நளன்கெழுமி நாளும்வழி பாடுசெய் நள்ளாறே"
(திருநள்ளாறு - 3-3)

என்னும் சம்பந்தர் தேவாரமே ஆகும்.

திருவாரூர் சைவர்களுக்கு முக்கியமான தலமாகும். இத்தலம் வழிபடுவோர்க்கு அளிக்கும் பேறுகளைச் சம்பந்தரது திருவாரூர் பதிகம் ஒன்றில் விளக்கமாகக் காணலாம். (பதிக எண். 1). இவற்றைத் திருவாரூரின் பெருமை பேசும் தலபுராணங்கள் தமக்கேயுரிய முறையில் விளக்கி யுரைப்பது இங்குக் குறிப்பிடத்தக்கது.

இராமேச்சுரம் இராமன் உருவாக்கிய தலம் என்பதைச் சம்பந்தரே முதன் முதலில்,

"ஏவியலும் சிலை யண்ணல் செய்த இராமேச்சுரம்"
(திருஇராமேச்சுரம் - 1-2)

"ஈனமிலாப் புகழண்ணல் செய்த இராமேச்சுரம்"

(திருஇராமேச்சரம் - 1-3)

என்றெல்லாம் தம் பாடல்களில் எடுத்துக் காட்டுகின்றார்.

கொங்குநாட்டுத் திருத்தலமான திருநணாவின் பெருமைகளைச் சம்பந்தர்,

"கேட்டார் வினை கெடுக்கும் திருநணா" (திருநணா - 5)

"செல்லா வருநெறிக்கே செல்ல அருள்புரியுந் திருநணா"

(திருநணா-6)

என்னும் அடிகளில் சுட்டுகின்றார். பவானிப் புராணம் இச்சிறப்புக் களை விரிவாக எடுத்துரைத்துப் போற்றுவதைப் பார்க்கலாம். இதேபோலத் திருவண்ணாமலையின் சிறப்புக்களையும் சம்பந்தர்,

"அண்ணாமலை தொழுவார் வினை வழுவா வண்ணம் அறுமே"

(திருவண்ணாமலை - 1-1)

".... அடிகட்கு இடம் அண்ணாமலை அதுவே"

(திருவண்ணாமலை - 1-4)

முதலிய அடிகளில் சுட்டுகிறார். இச்சிறப்புக்களின் விரிவை அருணாசல புராணத்தில் காணலாம்.

தொண்டை நாட்டுத் தலமான காஞ்சி முத்தித் தலங்கள் ஏழினுள் ஒன்று. இதைக் கண்டு தொழுதால் எல்லா இடர்களும் நீங்கும் என்று சம்பந்தர் ஒரு பதிகத்தில் விளக்குகின்றார். (திருக்கச்சியேகம்பம் -1). மேலும், திருவிருக்குக்குறளில் அமைந்த ஒரு பதிகத்திலும் இத்தலத்தைச் சிறப்பிக்கின்றார். சம்பந்தர் குறிப்பிடும் தலப்பெருமைகள் காஞ்சிப் புராணம், கம்பர் புராணம் முதலியவற்றுக்குப் பெருந்துணை புரிந்துள்ளமை இங்கு சுட்டத்தக்கது.

தீர்த்தம்

ஒவ்வொரு தலத்திலும் உள்ள புனிதமான நீர்நிலைகளே தீர்த்தங்கள் எனப் போற்றப்பெறுகின்றன. "சென்றாடு தீர்த்தங்கள் ஆனார் தாமே" என்று சிவபெருமான் தீர்த்த வடிவில் விளங்குவதை அப்பர் பெருமான் குறிப்பிடுகின்றார். தலபுராணங்கள் அவ்வத்தலத்தின்கண் விளங்கும் தீர்த்தங்களின் சிறப்பை மிக விளக்கமாகக் கூறுவதை ஒரு மரபாகக் கொண்டுள்ளன. ஞானசம்பந்தர் பதிகங்களிலும் தீர்த்தச் சிறப்பு ஆங்காங்கே சொல்லப்பட்டுள்ளன.

".... .... வெண்காட்டு முக்குளநீர்
தோய்வினையார் அவர்தம்மைத் தோயாவாந் தீவினையே"

(திருவெண்காடு - 1-2)

"…. ……………………. வினை துரக்கும்
முக்குளம் நன்குடையானும் முக்கணுடை இறையவனே"
(திருவெண்காடு - 1-7)

என்று திருவெண்காட்டுச் சூரிய, சந்திர, அக்கினி தீர்த்தங்களும்,

"அருநெறிய மறைவல்ல முனியகன் பொய்கை…."
(திருப்பிரமபுரம் - 1-11)

என்று சீர்காழிப் பிரம தீர்த்தமும்,

"நன்றுடையானைத் தீயதிலானை …." (திருச்சிராப்பள்ளி -1)

என்று திருச்சி நன்றுடையான், தீயதிலான் தீர்த்தங்களும்,

"பூசநீர் பொழியும் புனற்பொன்னி …." (திருவலஞ்சுழி)

என்று திருவலஞ்சுழித் தீர்த்தமான காவிரியும் அதன் தீர்த்த நாளான பூசமும்,

"பூசம் புகுந்து ஆடிப் பொலிந்து அழகாய
ஈசன் உறைகின்ற இடைமருது ஈதோ" (திருவிடைமருதூர் - 1-5)

என்று திருவிடை மருதூர்த் தீர்த்த நாளான பூசமும்,

"கடல் நாகைக் காரோணமே"
(திருநாகைக் காரோணம் - 2-1-10)

என்று நாகப்பட்டினத்தின் தீர்த்தங்களுள் ஒன்றான கடலும்,

"மடலார்ந்த தெங்கின் மயிலையார் மாசிக்
கடலாட்டுக் கண்டான் கபாலீச்சரம் அமர்ந்தான்"
(திருமயிலாப்பூர்-6)

என்று திருமயிலையின் மாசிமகக் கடலாட்டுச் சிறப்பும் சம்பந்தர் பாடல்களில் எடுத்துரைக்கப் பெறுகின்றன. இவை அவ்வத் தலபுராணங்களில் விளக்கமாகச் சிறப்பிக்கப் படுவதையும் காணலாம்.

இதுவரை கண்டவற்றால், மூர்த்தி, தலம், தீர்த்தம் என்னும் மூன்றின் சிறப்புக்களும் சம்பந்தர் பாடல்களில் பலவிடங்களில் கூறப்பெறுகின்றன என்பதும் அவை தலபுராண இலக்கிய வளர்ச்சிக்குப் பெருந்துணை புரிந்துள்ளன என்பதும் பெறப்படுகின்றன. மக்களுக்கு சமய எழுச்சியையும் நம்பிக்கையையும் ஊட்டும் நோக்கிலேயே சம்பந்தர் தேவாரம் மூர்த்தி, தல, தீர்த்தப் பெருமைகளை எடுத்துரைக்கின்றது என்பதும் மேற்கண்ட செய்திகளால் புலப்படுகின்றது.

65. ஞானசம்பந்த வள்ளலார்

சு. பழநிச்சாமி, புதுவை.

உலகம் போற்றும் தமிழக ஞானியர் பலர். அவர்களுள் திருஞான சம்பந்தரும், வடலூர் வள்ளலாரும் ஒத்த தன்மையுடைய பல சிறப்புக் களைக் கொண்டவர்களாக விளங்குகின்றனர்.

இளமையில் அருள்பெறல்

ஞானசம்பந்தருக்கு அப்போது வயது மூன்று. ஒருநாள், அவரது தந்தையார் திருக்குளத்தில் நீராடச் சென்றபோது உடன் சென்றார்.

கரையில் ஞானசம்பந்தரை விட்டுவிட்டு அவரது தந்தையார் குளத்தில் நீராடச் சென்று விட்டார்.

தந்தை அருகில் இல்லாததால், அழுது தவித்தார் ஞானசம்பந்தர்.

இறைவன் கருணை செய்தான்; இறைவியின் ஞானப்பால் கிடைத்தது.

"எண்அரிய சிவஞானத்து இன்அமுதம் குழைத்தருளி
உண்அடிசில் எனஊட்ட உமைஅம்மை எதிர்நோக்கும்
கண்மலர்நீர் துடைத்தருளிக் கையில்பொன் கிண்ணம் அளித்து
அண்ணலை அங்கு அழுகை தீர்த்து அங்கணனார் அருள்புரிந்தார்"

(பெரியபுராணம், பா.எண். 1971)

என சேக்கிழார் ஞானசம்பந்தர் அருள்பெற்ற சிறப்பைப் பாடுகின்றார்.

வள்ளலார் ஐந்து மாதக் குழந்தையாக இருந்தபோது, அவரது பெற்றோர் சிதம்பர வழிபாட்டிற்குச் சென்றனர்.

அனைவரும் சிதம்பர ரகசியம் தரிசித்தனர். கைக்குழந்தையாகிய வள்ளலாரும் தரிசித்தார். அனைவர்க்கும் ரகசியமாயிருந்த சிதம்பர ரகசியம் ஐந்து மாதக் குழந்தையாகிய வள்ளலாருக்கு வெட்ட வெளியாகப் புலப்பட்டது. இறைவன் ரகசியத்தை வெளிப்படையாகக் காட்டியருளினான்.

"தாய்முதலோ ரோடுசிறு பருவத்திற் றில்லைத்
தலத்திடையே திரைதூக்கத் தரிசித்தபோது
வேய்வகைமேற் காட்டாதே யென்றனக்கே யெல்லாம்
வெளியாகக் காட்டியவென் மெய்யு ருவாம் பொருளே"

வள்ளலாருக்கு அப்போது வயது ஒன்பது. வீட்டில், அறையில் நிலைக்கண்ணாடியின் எதிரில் அமர்ந்து, கண்ணாடியில் தோன்றிச் காட்சி தந்தருள் என்று முருகப் பெருமானை உளமுருக வேண்டினார். ஒருநாள் கண்ணாடியில் முருகன் தோன்றிக் காட்சியளித்தான்.

''என்னை ஆண்டாறு மூன்றாண்டில் ஆண்டு கொண்ட அருட்கடலே'' (திருஅருட்பா - 2697)

''ஆறொடு மூன்றாண்டாவதிலே முன்னென்னை ஆண்டாய்'' (திருஅருட்பா - 3597)

ஒன்பதாம் ஆண்டில், இறைவனால் ஆட்கொள்ளப்பெற்ற வள்ளலார், பன்னிரெண்டாம் ஆண்டு முதல் முறையான ஞான வாழ்க்கையைத் தொடங்கினார்.

''பன்னிரண்டாண்டு தொடங்கி நான்இற்றைப்
பகல்வரை அடைந்தவை எல்லாம்'' (திருஅருட்பா - 3535)

''பன்னிரண்டாண்டு தொடங்கி இற்றைப்
பகலின் வரையுமே'' (திருஅருட்பா - 5041)

''ஈராறாண்டு தொடங்கி இற்றைப்
பகலின் வரையுமே (திருஅருட்பா - 5042)

ஓதாதுணர்தல்

மூன்றாம் வயதில், இறைவன் அருள்பெற்ற அளவிலேயே, பாடத் தொடங்கி விடுகிறார் ஞானசம்பந்தர்.

''தோடுஉடைய செவியன் விடைஏறிஓர் தூவெண் மதிசூடி
காடுஉடைய சுடலைப் பொடிபூசி என்உள்ளம்கவர் கள்வன்
ஏடுஉடைய மலரான் முனைநாள் பணிந்துஏத்த அருள்செய்த
பீடுஉடைய பிரமாபுரம் மேவிய பெம்மான் இவன்அன்றே''

எனத் தந்தையாருக்கு விளக்கம் தரத் தொடங்கி ஓதாது உணர்ந்தவர் என்ற சிறப்புக்கும் ஆளாகிறார்.

வள்ளலாரும் எப்பள்ளியிலும் பயின்றதில்லை. அவரது அண்ணன் வள்ளலாருக்கு ஆசானாகக் காஞ்சிபுரம் மகாவித்வான் சபாபதி முதலியாரை ஏற்பாடு செய்தார். வித்வானோ வள்ளலாரின் திறம் கண்டு அவருக்குக் கற்பிப்பதைக் கைவிட்டார்.

இறைவனிடம்

''கல்லாத பாவி என்று கைவிட்டாயோ'' (திருஅருட்பா - 320) எனக் கலங்கும் வள்ளலார், பின்னர்

''கல்விஎலாம் கற்பித்தாய்; நின்பால் நேயம் காணவைத்தாய்;
இவ்வுலகம் கானல் என்றே ஒல்லும்வகை அறிவித்தாய்''
(திருஅருட்பா - 453)

என்று இறையருளால் ஓதாதுணர்ந்ததைத் தெளிவுபடுத்துகிறார்.

தமிழ் மறுமலர்ச்சி

ஞானசம்பந்தர் தமிழ்ஞான சம்பந்தர்,

''தெருவெல்லாம் தமிழ் முழக்கம் செழிக்கச் செய்வீர்''

என்று இருபதாம் நூற்றாண்டில் பாடினார் பாரதியார்.

திருஞானசம்பந்தர், தாம் வாழ்ந்த காலத்தில் அதைத்தான் செய்தவர்;

''நாளும் இன்னிசையால் தமிழ்பரப்பும் ஞானசம்பந்தர்''

எனப் போற்றிப் புகழப்பட்டவர்.

''செந்தமிழ் ஞானசம்பந்தன்''
''முத்தமிழ் ஞானசம்பந்தன்''

என்றெல்லாம் ஏறத்தாழ எழுபது இடங்களில் தன்னோடு தமிழையும் சேர்த்துப் பாடும் தமிழ் உணர்வாளர் ஞானசம்பந்தர்;

தமிழ் மொழியை ஐம்பதுக்கும் மேற்பட்ட இடங்களில் பாராட்டவும் செய்பவர்;

தம் பாடல்களைத் தமிழ்மாலை, தமிழ் என்றே பேசி மகிழும் ஞானசம்பந்தர்,

''நற்றமிழ்க்கு இன்துணைவன் ஞானசம்பந்தன்''

என்றும் தெரிவிக்கிறார்.

சைவ மறுமலர்ச்சி மட்டுமல்ல, தமிழ் மறுமலர்ச்சியும் அவரால் நிகழ்ந்தது.

வள்ளலார் தமிழுக்குக் கொடுத்த வரமும், வாழ்வும் பெரிது.

காட்சிக்கு எளியவராய், அருள்நிறைந்தவராய் வள்ளலார் இருந்தது போலவே, அவரது பாடல்களும் மிகவும் எளியனவாய், அருள் தருவனவாய் அமைந்தன.

வள்ளலார் தமிழ் மறுமலர்ச்சியின் அடையாளம், தொடக்கம் எனலாம். பாரதியார் தோன்ற வள்ளலாரின் அருள் வழிகாட்டியது.

பேராசிரியர் மா.பா. குருசாமி அவர்கள், தன்னுடைய வள்ளலார்-ஓர் அறிமுகம் என்ற நூலில் பின்வருமாறு குறிப்பிடுகிறார். (ப. 11,12)

''வள்ளலார் ஒழிவிலொடுக்கம் (1851) தொண்டை மண்டல சதகம் (1855) சின்மய தீவிகை (1857) ஆகிய நூல்களைப் பதிப்பித்தார். அவர் படைத்த உரைநடை நூல்களான, மனுமுறை கண்ட வாசகம், ஜீவகாருண்ய ஒழுக்கம் ஆகிய இரண்டும் உரைநடை எழுதுவாருக்கும், தமிழ் மாணவர்களுக்கும் உற்ற துணையாக இருந்தன. அவர் கண்ட உரைகள் அடிகளாரின் ஆழ்ந்த தமிழ்ப் புலமைக்குச் சான்று பகர்கின்றன. அவரது ஒப்பற்ற திருஅருட்பா பத்தொன்பதாம் நூற்றாண்டின் ஈடுஇணை யற்ற படைப்பாகத் திகழ்கின்றது.

அக்காலத்தில் தமிழ்ப்பற்றையும், தமிழ் இலக்கிய ஈடுபாட்டையும் வளர்க்க வேண்டிய நிலையில் தமிழகம் இருந்தது. வள்ளலார் காலத் தேவையை நிறைவு செய்பவராக மட்டும் இல்லாமல், தமிழ் இலக்கியத்தில் புதிய யுகத்தைத் தோற்றிவிப்பவராகவும் இருந்தார்.

வள்ளலாரின் வாழ்க்கை வரலாறு சென்ற நூற்றாண்டின் தமிழ் இலக்கிய வரலாறாகவே அமைந்திருக்கின்றது.

வழக்குகள், வாதுகள்

ஞானசம்பந்தருக்குச் சமணர்களோடும், பௌத்தர்களோடும் வழக்கு, வாது எனப் போராடும் நிலை ஏற்பட்டது. அனல்வாதம், புனல்வாதம் எல்லாம் நடந்தன.

வடலூர் வள்ளலாரும் ''அருட்பாவா? மருட்பாவா?'' என வழக்குக்கு ஆளானார்.

ஆறுமுக நாவலர் கொண்டு வந்த வழக்கு தொடர்பாக வள்ளலார் நீதிமன்றம் வரை செல்ல நேர்ந்தது.

அருட்பாவின் சிறப்பை உலகம் மேலும் அறிய வழக்கு வழி செய்து கொடுத்தது என்றே கொள்ளலாம்.

திருமண உறவுகள்

ஞானசம்பந்தர் திருமணம் புரிந்து கொள்கிறார்; ஆனால் இல்லற வாழ்வில் ஈடுபடவில்லை.

வள்ளலாரும் திருமணம் கொண்டார். அவரும் இல்லற வாழ்வில் ஈடுபடவில்லை.

''ஒருத்தியைக் கைதொடச் சார்ந்தேன்
தொட்டனன் அன்றிக் கலப்பிலேன்'' (திருஅருட்பா - 3452)

பசிப்பிணி மருத்துவர்கள்

பசித்துன்பம் கொடியது. அதுவும் பஞ்சம் ஏற்படுகிற காலத்தில் மக்கள் படும் வேதனை நரக வேதனை.

ஞானசம்பந்தர், பஞ்சம் ஏற்பட்ட காலத்து, திருவீழிமிழலையில் இறைவன் அருளோடும், நாவுக்கரசர் துணையோடும் பசிப்பிணி மருத்துவராகிப் புகழ் பெற்றார்.

வள்ளலார், ஏழைகளின் பசி தீர்த்தலே தலையாய அறம் என்று கருதியவர்; அதற்காகவே சத்திய தருமச்சாலை தொடங்கியவர்; அணையா அடுப்பு வைத்து, மக்களின் வயிற்றுப் பசியை அணைக்க வழி கண்டவர்.

''பசி என்கிற நெருப்பானது ஏழைகள் தேகத்தினுள் பற்றி எரிகின்றபோது, ஆகாரத்தால் அவிக்கின்றதுதான் ஜீவகாருண்யம்'' என்று பேசியவர் வள்ளலார்.

''உலகில் பசிஎனில் எந்தாய் என்னுளம் நடுங்குவ தியல்பே''
(திருஅருட்பா - 3431)

''பசியினால் இளைத்தே
வீடு தோறிரந்தும் பசியறா தயர்ந்த
வெற்றரைக் கண்டுளம் பதைத்தேன்'' (திருஅருட்பா - 3471)

அருளாளர்கள்

ஞானசம்பந்தர் புரிந்த அருட்செயல்கள் பல.

அவர், கொல்லி மழவன் மகள் கொண்ட நோய் தீர்த்து அற்புதம் செய்தார்; ஒருமுறை, பனிக்காலத்தில், குளிர்ச்சுரம், தம் அடியார்களைத் தாக்காது காவல் செய்தார்;

நாகம் தீண்டி, மாண்ட இளைஞனை உயிர்பெறச் செய்து, இளம்பெண்ணுக்கு வாழ்வளித்த வள்ளல் ஞானசம்பந்தர்.

பாண்டிய மன்னனின் வெப்புநோய் நீக்கி வெற்றி கண்டவர் அவர். மயிலை. சிவநேசச் செல்வரின் மகள், பூம்பாவை இறந்தாள். அவளுடைய எலும்பையும், சாம்பலையும் குடத்தில் இட்டு வைத்துக் காத்து, ஞானசம்பந்தரின் முன் கொண்டு வைத்தனர். எலும்பும், சாம்பலுமாய் இருந்த பூம்பாவையை உயிர்பெற்று எழச் செய்த அருளாளர் ஞானசம்பந்தர் ஆவார்.

வள்ளலார் புரிந்த அருட்செயல்களும் பல.

மழை பொழிவித்தது, தீ அணையச் செய்தது, புன்செய் நன்செய் ஆக்கியது, நீரால் விளக்கெரித்தது, காலைச் சுற்றிய பாம்பு தீண்டாது அகன்றது, தீண்டிய பாம்பு மாண்டது, பல இடங்களில், பல சமயங்களில் அன்பர்களுக்குத் தோன்றி அருள் செய்தது எனப் பல அற்புதங்களை வள்ளலார் புரிந்தார்.

ஜோதியில் கலந்தது

ஞானசம்பந்தரின் திருமணம் இனிதே நடந்து முடிகிறது. உடனே அவர் ''சிவனடி சேர்வேன்'' என்று உறுதி கொண்டு, இறைவனை வேண்டுகிறார். இறைவன் அருளால் ஜோதி தோன்றுகிறது. ஞானசம்பந்தரும், அவரது மனைவியும், பிறரும் ஜோதியில் கலக்கின்றனர்.

வள்ளலார், ஒரு தைப்பூச நாளில், சித்தி வளாகத் திருமாளிகையில், தமது திருவறைக்குள் கதவைத் திருக்காப்பிட்டுக் கொண்டு அருட்பெருஞ் ஜோதிமயமாய், அருட்பெருஞ்ஜோதியோடு இரண்டறக் கலந்தார்.

இளமையில் திருஞானசம்பந்தரைத் தம் குருவாகக் கொண்டவர் வள்ளலார். உலகுக்கு வழிகாட்டி, ஒளிகாட்டி உயர்ந்த பெருமக்களாகிய இருவர் வாழ்விலும், நிகழ்ந்த ஒத்த தன்மையுடைய நிகழ்ச்சிகள் நாம் வியந்து போற்றுவனவாக உள்ளன.

66. சம்பந்தரும் திருக்கோவில் வழிபாடும்

பி. பார்வதி, குற்றாலம்.

புத்திரப்பேறு இல்லாத சிவபாத இருதயரும் அவரது மனைவி பகவதியும், ''தமிழ் நாட்டில் வேரூன்றி இருக்கும் பௌத்தம் சமணம் என்ற புறச்சமயங்களை ஒழித்துச் சைவத்தை நிலைநாட்டவல்ல சமயாச்சாரியார்கள் தோன்ற வேண்டும்'' என்ற கருத்தோடு சிவபெருமானை வழிபட்டுத் தவம் மேற்கொண்டனர். அத்தவத்தின் பலனாய், ஞானசம்பந்தரை மகனாகப் பெற்றனர். நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பும் ஞானசம்பந்தரும் சிவனின் பெருமையை உலகறியச் செய்ததோடு திருநீற்றின் சிறப்பால் கூன்பாண்டியனைச் சுந்தரபாண்டியனாக மாற்றினார். ஞானப்பாலுண்டு இறையருள் பெற்ற ஞானசம்பந்தர் தலம் தலமாகச் சென்று இறைவனை வணங்கிப் பாடிய பாடல்களின் தொகுப்பே முதல் மூன்று திருமுறைகளாகும். இத்திருமுறைகளில் திருக்கோவில் வழிபாடு குறித்த கருத்துக்களை ஆங்காங்கே கூறிச் சென்றுள்ளார். அக்கருத்துக்களை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

நெக்கு நெக்கு நினைப்பவர் நெஞ்சுளே புகும் தன்மையுடையவன் சிவன் என்பதைப் பூசலார் நாயனார் வழி அறியமுடிகிறது. அவ்வாறன்றித் திருக்கோவிலுக்குச் சென்று மனம் ஒன்றியும் இறைவனை வழி படலாம். ஞானசம்பந்தர் தந்தையின் தோள்மீது அமர்ந்து பல கோவில் களுக்குச் சென்று வழிபாடு செய்தபொழுது ஆங்காங்கு வாழும் மக்களும் திருக்கோவிலில் வழிபாடு செய்வதைக் கண்டார். அக்கால மக்கள் எவ்வாறெல்லாம் திருக்கோயில் வழிபாடு செய்தனர் என்பதைத் தம் பாடல்களில் கூறியுள்ளார். அவற்றுள் (1) அபிசேகம் செய்து இறைவனை வழிபடல் (2) அர்ச்சனை செய்தல் (3) வேள்விகள் நடத்துதல் என்று மூன்று முறைகளைப் பற்றிய ஞானசம்பந்தரின் கருத்துக்கள் இவண் ஆராயப்படுகின்றன.

அபிசேகம் செய்தல்

ஒவ்வொரு நாளும் இறைவழிபாடு செய்யும் பொழுது குளிர்ந்த நீரால் இறைவனை நீராட்டி வழிபாடு செய்வர். அதோடு பால், நெய், தயிர், மஞ்சள், இளநீர், மணப்பொடிகள், திருநீறு, பஞ்சாமிர்தம் போன்ற

வற்றாலும் அபிசேகம் செய்வதுண்டு. ஞானசம்பந்தர் காலத்திலும் சிவனுக்குப் பல்வேறு அபிசேகங்கள் செய்யப்பட்டன. இதனை முதல் மூன்று திருமுறைகள்வழி அறிய முடிகிறது.

இன்றைய காலகட்டத்தில் சிவன் கோவில்களின் கருவறைக்குள் அந்தணர்கள் மட்டுமே செல்ல முடியும். இறைவனைக் கருவறைக்குள் சென்று நீராட்டி அபிசேகம் செய்வதும் அந்தணர்களே. ஞானசம்பந்தர் காலத்தில் அந்தணர்கள் மட்டுமின்றி இறையடியார்களும், கன்னிப் பெண்களும் இறைவனுக்கு திருமுழுக்காடு செய்துள்ளனர்.

''தடங்கொண்டதோர் தாமரைப் பொன்முடி தன்மேல்
குடங்கொண்டு அடியார்குளிர் நீர்சுமந்தாட்ட'' (1.32.2)

என்ற வரிகள்வழி அன்றைய காலங்களில் இறையடியவர்கள் இறைவனை நீராட்டினர் என்ற செய்தியை அறியமுடிகிறது.

குளிர்ந்த நீரால் நீராட்டிய பின் சிவனுக்குப் பால், நெய், தயிர், தேன், இளநீர், கரும்பின் தெளி பழம், மலர் ஆகியவற்றால் அபிசேகம் செய்தனர். இதனை,

''தேன் நெய் தயிர் தெங்கிளநீர் கரும்பின் தெளி
ஆனஞ்சோடு முடியான்'' (2.6.5)

'பாலினால் நறுநெய்யால் பழத்தினால் பயின்நாட்டி'
'ஆடினாய் நறுநெய்யொரு பால் தயிர்' (3.1.1)

என்ற வரிகள்வழி அறிய முடிகிறது.

நீராட்டி, அபிசேகம் செய்ததோடு மலர்களை மாலையாகத் தொடுத்துச் சாற்றியும், மலர்களைத் தூவியும், நறுமணப் பொடிகளை இறைவனுக்குச் சாற்றியும் அடியவர்கள் சிவனை வழிபட்டுள்ளனர். இதனை,

''நறைகொண்ட மலர்தூவி விரையளிப்ப நாள்தோறும்
முறைகொண்டு நின்றடியார் முட்டாமே பணிசெய்ய'' (1.61.1)
''நூலினால் மணமாலை கொணர்ந்தடியார் புரிந்தேத்த'' (1.61.5)

என்ற வரிகள்வழி சம்பந்தர் எடுத்துரைக்கிறார்.

இன்று மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி கோவில்களில் பெண்கள் இறைவழிபாடு நடத்துவதைப் போன்று ஞானசம்பந்தர் காலத்திலும் பெண்கள் சிவனுக்கு மலர் தூவி தீப ஆராதனை காட்டியுள்ளனர். மேலும் இறைவனை நீராட்டுவதற்குரிய தண்ணீரைக் கன்னிப் பெண்கள்

குடத்தில் கொண்டு வந்துள்ளனர். இறைவனுக்கு அபிசேகமும் செய்துள்ளனர். இதனை,

'......... பேரருளாளனார் பேணிய கோயில்
பொன்னியில் நறுமலர் புனலொடு தூபம் சாந்தமும்
ஏந்திய கையினராகிக்
கன்னியர் நாள்தோறும் வேடமே பரவும் கழுமலம்'' (1.79.6)

என்ற வரிகள் விளக்குகின்றன.

இறையடியார்கள், தொண்டர்கள், கன்னிப்பெண்கள் மட்டுமல்லாது குடும்பத்தோடு வீட்டில் உள்ள அனைவருமே திருக்கோவிலுக்குச் சென்று வழிபட்ட முறையை,

''மாதரொடு மாடவர்கள் வந்தடியிறைஞ்சி நிறை
மாமலர்கள் தூய்க்
கோதைவரி வண்டிசைசொள் கீதமுரல்கின்ற
வளர் கோகர்ணம்'' (3.79.2)

என்ற வரிகள்வழி ஞானசம்பந்தர் உணர்த்துகிறார். மேற்கூறிய செய்திகள் வழி திருக்கோவிலில் எழுந்தருளியுள்ள சிவனை குளிர்ந்த நீரினால் நீராட்டி, பல்வேறு பொருள்களைக் கொண்டு அபிசேகங்கள் செய்து, மாலை சூட்டி, மணப்பொருள்களைத் தூவி, தூப தீபம் காட்டி மக்கள் இறைவழிபாடு செய்த முறையை அறிந்து கொள்ள முடிகிறது. அடியவர்கள் மட்டுமல்லாது கன்னிப்பெண்களும் இறைவனுக்குத் திருமுழுக்காடு செய்தனர் என்ற செய்தியையும் ஞானசம்பந்தர் பாடல்கள் வழி அறிய முடிகிறது.

ஞானசம்பந்தர் காலத்தில் மன்னர்களும் திருக்கோவிலுக்குச் சென்று வழிபாடு செய்துள்ளனர். இறைவன் மீது கொண்ட பக்தியின் காரணமாகச் சேர, சோழ, பாண்டிய வேந்தர்கள் திருக்கோயிலுக்குச் சென்று வழிபட்ட செய்தியை,

''முடிசேர் தென்னர் சேரர் சோழர்கள்
தாம் வணங்கும் .... பூவணம்'' (1.64.1)

''ஆரா அன்பில் தென்னர் சேரர் சோழர் போற்றிசைப்ப'' (1.64.5)

என்ற வரிகள்வழி எடுத்துரைக்கிறார். மன்னர்கள் இறைவனை வழிபடக் கோவிலுக்கு வரும்பொழுது கோவிலில் பல்வேறு இன்னிசைக் கருவிகள் இசைக்கப்பட்டன என்பதை,

''மணியொலி சங்கொலியோடு மற்றை மாமுரசின் ஒலி
யென்றுமோவா
தணிகிளர் வேந்தன் புகுதுங் கூடல் ஆலவாய்'' (3.75.1)

என்ற வரிகள் எடுத்துரைக்கின்றன. மன்னனோடு திருக்கோயிலுக்குரிய அணிகலன்கள் கொண்டு வரப்பட்ட செய்தியை,

''நலமார் அரசா்வர அணிபொற் கலனவை கொண்டு பன்னாளும்
முரசார் வருமண மொய்ம்புடை முதுகுன்று'' (1.7.9)

என்ற வரிகள்வழி அறிய முடிகிறது. கோவில்களில் மன்னவர்கள் வணங்கும்போது இறையடியவர்களும் சிவனை வழிபட்டனர் (1.37.4) எனக் கூறுவதன்வழி இறைவன் முன் மன்னரும் மக்களும் ஒன்று என்ற கருத்து அக்காலத்தில் நிலவியதை தெரிந்து கொள்ள முடிகிறது.

அர்ச்சனை செய்தல்

திருக்கோவில் வழிபாட்டின் ஒரு கூறாக அர்ச்சனை கருதப் படுகிறது. இறைவனின் நாமத்தை மனது ஒன்றிக் கூறுதலே அர்ச்சனை யாகும். ஞானசம்பந்தர் காலத்தில் இறைவழிபாட்டில் தமிழ்மொழியே முக்கிய இடம் பெற்றிருந்தது. வடமொழியும் இறை வழிபாட்டில் பயன் படுத்தப்பட்டதை சம்பந்தர் தமது பாடல்கள்வழி எடுத்துரைக்கிறார்.

''என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே''

என முழங்கும் ஞானசம்பந்தர் நிறை தமிழில் சிவனுக்குச் சொல்மாலை புனைந்தார். சம்பந்தர் மட்டுமல்லாது அன்றைய கால அடியவர்களும் தொண்டர்களும் திருக்கோவிலுக்குச் சென்று பாடல் பாடி வழிபட்ட செய்தியை 'நூலினால் மணமாலை கொணர்ந்தடியார் புரிந்தேத்த'' (1.61.1), ''நாள்தோறும் வேடமே பரவும் கழுமலம்'' என்ற வரிகள்வழி அறிய முடிகிறது.

செங்காட்டங்குடியில் உள்ள இறைவனைச் செந்தமிழோர் பரவி ஏத்தியதாகக் கூறிய ஞானசம்பந்தர்,

'மன்னு காவிரிசூழ் திருவலஞ்சுழி வாணனை வாயாரப்
பன்னி யாதரித்து ஏத்தியும் பாடியும் வழிபட' (2.106.1)

தனது நெஞ்சம் புண்ணியம் செய்ததாகப் பாடுகின்றார். முருக நாயனார் கோவிலுக்குச் சென்று மலரிட்டு, இறைவனது புகழைப் பாடி வழிபட்ட செய்தியையும் ஞானசம்பந்தர் கூறுகிறார். இதன்வழி அன்றைய காலத்தில் இறையடியவர்கள் கோவிலுக்குச் சென்று சொல்மாலை புனைந்து இறைவனைப் போற்றிப் பாடிய செய்தியை அறிந்து கொள்ள முடிகிறது.

திருக்கோவில்களில் காலை, நண்பகல், மாலை, இரவு ஆகிய பொழுதுகளில் இன்றும் சிவன், திருமால், முருகன் போன்ற பெருந் தெய்வ கோவில்களில் வழிபாடுகள் நடத்தப்படுகின்றன. அப்பொழுது

இறைவனுக்கு அர்ச்சனைகள் செய்யப்படுகின்றன. இப்பழக்கம் ஞானசம்பந்தர் காலத்திலும் வழக்கத்தில் இருந்தது என்பதனை,

"வளர் தூபமொடு தீபமள வாய்மையதனால் அந்தியும்
சந்திபல அர்ச்சனைகள் செய்ய அமர்கின்ற அழகன்" (3.75.1)

என்ற வரிகள்வழி அறிந்து கொள்ள முடிகிறது. தமிழில் மட்டுமல்லாமல் வடமொழியிலும் சிவனுக்கு அக்காலத்தில் அர்ச்சனை செய்யப்பட்டதை,

"செந்தமிழர் தெய்வமறை நாவர் செழுநற்கலை
தெரிந்தவவரோடு
அந்தமில் குணத்தவர்கள் அர்ச்சனைகள் செய்ய"

அரனூர் இறைவன் அமர்ந்திருந்ததாகக் கூறுவதன்வழி அறிய முடிகிறது. இதன்வழி அக்காலத்தில் அந்தணர்கள் வடமொழியிலும் தமிழர்கள் தமிழ் மொழியிலும் இறைவனுக்கு அர்ச்சனை செய்தனர் என்பதையும், வடமொழியில் அர்ச்சனை செய்யும் முறை வழக்கத்தில் இருந்ததையும் அறிய முடிகிறது.

வேள்வி நடத்துதல்

ஆரியர்களின் வருகைக்குப் பின்னரே தமிழகத்தில் வேள்விகள் செய்யப்பட்டன. முதுகுடுமி என்ற பாண்டிய மன்னன் பல யாகங்களைச் செய்ததால் 'பல்யாக சாலை முதுகுடுமி பெருவழுதி' என அழைக்கப்படுகிறான். சம்பந்தர் காலத்தில் திருவீழிமழலையில் வேள்விகள் பல செய்யப்பட்டதைக் கூறும் ஞானசம்பந்தர் அவ்வேள்வி எவ்வாறு செய்யப்பட்டது என்பதையும் விளக்குகிறார்.

"புந்தியினால் மறைவழியே புற்பரப்பி
நெய்சமிதை கையிற் கொண்டு
வெந்தழலின் வேட்டுலகின் மிக அளிப்போர்
சேரூமூர் மிழலை யாமே"

என்ற வரிகள்வழி வேள்வி செய்ய அதற்குரிய தர்ப்பைப் புல்லைப் பரப்பி, நெய் வார்த்து மாங்குச்சிகளை இட்டுத் தீ வளர்த்து வேள்வி செய்த முறை விளக்கப்படுகிறது. மறையவர்கள் செய்த வேள்வியினால் திருவெண்காட்டின் வானமே இருண்டு காணப்பட்டதாகவும் (2.61.7) கொச்சைவயம் என்னும் திருத்தலத்தில் அப்புகை வானை மறைத்து நிறைத்து நின்றதாகவும் (2.83.5) பாடுகிறார். அந்தணர்கள் வேள்விகளைச் செய்தபோது பசுக்களைத் தானமாகப் பெற்ற செய்தியைப்,

'பசுவேட்டு எரியோம்பும் சிறப்பார் தில்லை' (1.80.2)

என்ற வரியின்வழி எடுத்துரைக்கிறார் சம்பந்தர். மாதவர்களன்ன மறையாளர்கள் வளர்த்த வேள்வியின்போது நான்கு வேதங்களையும்

கூறியதை' மந்திர நான் மாமறையினோடு வளர் வேள்வி' (3.86.6) என்ற வரி உணர்த்துகிறது. இவ்வேள்விகள் கோவில்களில் செய்யப்பட்டது என்பதனை,

> **''மிக்க நல்வேத வேள்வியுன் எங்கும்**
> **விண்ணவர் விரைமலர் தூவப்**
> **பக்கம் பல்பூதம் பாடிட வருவார் பாம்புர''** (1.41.2)

இறைவன் எனப் பாடுவதன்வழி அறிய முடிகிறது. இறைவனுக்குச் செய்யப்பட்ட வேள்வியைக் கண்டு விண்ணவர்கள் மலர் தூவ, பூதங்கள் பாட அடியவர்களும், மக்களும் சிவனுக்குத் திருத்தொண்டு செய்தனர். இவ்வேள்வியில் திருமழபாடி சிவன் மீது செந்தமிழ்க் கீதம் பாடபப்பட்ட செய்தியை,

> **''அந்தணர் வேள்வியும் அருமறைத்**
> **துழனியும் செந்தமிழ் கீதமும்**
> **கீரினால் வளர் மழபாடி''**

என்ற வரிகள் விளக்குகின்றன. அந்தணர்கள் மட்டுமே வேள்விகளைச் செய்தனர் என்பதையும் அவ்வேள்வியில் வடமொழி வேதங்கள் மட்டு மல்லாது, செந்தமிழ்க் கீதங்கள் இசைக்கப்பட்ட செய்தியையும் அறிய முடிகிறது.

1. அடியவர்கள், தொண்டர்கள், மக்கள், அரசர் என அனைவரும் திருக்கோவிலுக்குச் சென்று வழிபாடு செய்துள்ளனர்.
2. இறையடியவர்களும் இறைவனுக்கு திருமுழுக்காடு செய்துள்ளனர்.
3. தெய்வச் சன்னிதியில் தமிழ்ப் பாடல்கள் பாடப்பட்டுள்ளன.
4. மன்னவன் கோவிலுக்குச் செல்லும் பொழுதும், கோவிலில் வழிபடும் பொழுதும் முரசு முதலிய இசைக்கருவிகள் இசைக்கப் பட்டு உள்ளன.
5. இறைவனுக்குப் பால், பழம், நெய், இளநீர், கரும்பின்சாறு, தயிர், தேன், மலர் போன்ற பொருள்களால் அபிசேகம் செய்யப்பட்டுள்ளது.
6. இறைவனுக்குத் தமிழிலும், வடமொழியிலும் அர்ச்சனைகள் செய்யப்பட்டன.
7. வேள்விகளை அந்தணர்களே செய்துள்ளனர்.
8. வேள்வி நடத்தும் பொழுது பசு தானம் வழங்கப்பட்டுள்ளது.
9. சேர, சோழ, பாண்டிய மன்னர்கள் திருக்கோவில் வழிபாடு செய்துள்ளனர்.
10. வேள்வி நடத்தும் பொழுது தமிழ்ப் பாடல்களும் பாடப்பட்டுள்ளன.

67. பாண்டி நாட்டில் சம்பந்தர் புரட்சி

சு. பாலுசாமி, நாமக்கல்.

கல்தோன்றி மண்தோன்றாக் காலத்து முன்தோன்றியது தமிழ்மொழி. இத்தகைய சிறப்புமிக்கத் தமிழ்மொழி சங்க காலத்திற்குப்பின் பல சோதனைகளுக்கு உள்ளானது. வேற்று நாட்டவர் படையெடுப்பாலும் வேற்றுமொழி ஆதிக்கத்தாலும் தமிழ்மொழியின் வளம் குன்றியது. சமணமும் பௌத்தமும் போட்டி போட்டுக் கொண்டு தமிழ்நாட்டில் காலூன்றத் தொடங்கின. அதிலும் சமண சமயத்திற்குப் பெரும்பாலான மன்னர்கள் ஆதரவு அளித்து வந்தனர்.

இந்நிலையில்தான் தமிழும், தமிழகமும், சைவ சமயமும் உய்விக்கத் திருஞானசம்பந்தர் தோன்றினார். நாளும் இன்னிசையால் தமிழ்பரப்பி இப்பூவுலகில் 16 ஆண்டுகளே வாழ்ந்த ஞானசம்பந்தர் பரம்பொருளாகிய சிவபெருமானை மனத்தில் கொண்டு நிகழ்த்திய அற்புதங்கள் எண்ணற்றவை. இருட்கடலில் மூழ்கிக்கிடந்த தமிழகத்தை வெளிச்சத்திற்குக் கொண்டுவரப் பல்வேறு புரட்சிகளையும் அவர் செய்தார். அதில் முக்கியமானது பாண்டி நாட்டில் செய்த புரட்சியாகும். பாண்டி நாட்டில் சமணத்தை வேரறுத்துச் சைவத்தைத் தழைக்கச்செய்ய ஞானசம்பந்தர் செய்த புரட்சிகளைப் பற்றி இக்கட்டுரை ஆராய்கின்றது.

1. சிவநெறியிலே புரட்சி

சம்பந்தர் அப்பரோடு திருமறைக்காட்டில் தங்கியிருந்தார். அப்பொழுது பாண்டி நாட்டில் சமண சமயம் கோலோச்சியிருந்தது. அச்சமணத்தை விரட்டிச் சைவத்தைத் தழைக்கச்செய்ய வருமாறு அரசி மங்கையர்க்கரசியாரும், அமைச்சர் குலச்சிறையாரும் சம்பந்தருக்குத் தூது அனுப்பினர். செய்தி சம்பந்தருக்கு வந்து சேர்ந்தது. பாண்டி நாட்டின் நிலையைத் தூதுவர்கள் சொல்லக் கேட்டறிகின்றார் சம்பந்தர். உடனே அப்பர் இருக்குமிடம் சென்று பாண்டி நாட்டின் நிலையைக் கூறித் தான் அங்குச் செல்ல இருப்பதாகக் கூறினார்.

சம்பந்தர் மொழிவதைக் கேட்ட அப்பர் மிகப் பதற்றமடைந்து, பாண்டி நாட்டிலிருக்கின்ற சமணர்கள் மிகவும் கொடியவர்கள். சமணரல்லாத பிறருக்கு அவர்கள் செய்யும் தீமைகளுக்கு அளவேயில்லை. மேலும், தற்பொழுது நாளும் கோளும் சரியில்லை. ஆகையால், தாங்கள் அங்குச்

செல்லவேண்டாம் என்று கூறினார். அதற்குச் சம்பந்தர், சிவனை மனத்திலே நிறுத்தி வழிபடுகின்ற அடியார்களுக்கு நாளும் கோளும் தீமை செய்யாது என்றும், நல்லதையே செய்யும் என்றும் கூறி,

''வேயுறு தோளிபங்கன் விடமுண்ட கண்டன்
மிகநல்ல வீணைதடவி''

என்று தொடங்கும் சிறப்பு வாய்ந்த கோளறு பதிகத்தைப் பாடி, தாம் பாண்டி நாடு செல்வதில் உறுதியாக இருப்பதைக் கூறினார். சம்பந்தர் நிலையறிந்த அப்பர் நான் துணையாக வருகிறேன் என்றார். ஆனால் சம்பந்தர் அப்பரை அங்கேயே இருக்கச்செய்து தாம் மட்டும் துணிச்சலோடு பாண்டி நாடு புறப்படுகிறார். இவ்விடத்தில் நெஞ்சிலே சிவநெறி தாங்கிச் செல்பவர்கள் எக்காலத்தும் எவ்விடத்தும் துன்பமடைய மாட்டார்கள் என்பதைக் ''கோளறு பதிகம்'' பாடிப் பாண்டிநாடு செல்ல முற்படும் போதே புரட்சி செய்கின்றார் சம்பந்தர்.

2. தீயிலே புரட்சி

திருமறைக்காட்டிலிருந்து தொண்டர்கள் புடைசூழ மதுரை மாநகரின் புறத்தே சென்றடைகின்றார் சம்பந்தர். சமணம் புரையோடி யிருக்கும் மதுரைக்கு வெளியே சைவ வல்லவராகிய சம்பந்தர் வந்து தங்கியதும், மதுரையில் உள்ள சமணர்களுக்குப் பல்வேறு தீய நிமித்தங்கள் தோன்றின. மேலும், அவர்கள் சம்பந்தர் வந்திருப்பதையும் அறிந்து கலக்க முற்றனர். உடனே, சமணர்கள் அனைவரும் மன்னனிடம் சென்று இச்செய்தியைத் தெரிவித்தனர். சம்பந்தர் வரவைக் கேட்ட மன்னனும் கோபமும் வெறுப்பும் அடைந்தான். அப்பொழுது சமணர்கள், தங்களது மந்திரசக்தியால் சம்பந்தரை விரட்டுவதாக, மன்னனிடம் தெரிவித்தனர். அதற்கு மன்னனும் இசைய, நள்ளிரவு வந்ததும் தீயதொழிலில் சிறந்த சில சமணர்கள் சம்பந்தர் தங்கியிருக்கும் மடத்தை அடைந்தனர். தங்களுக்குத் தெரிந்த மந்திரங்களைக் கூறி மடத்திற்குத் தீயிட முயன்றனர். மந்திரத்தால் தீப்பற்றவில்லை. உடனே அவர்கள் செயற்கையாக மடத்திற்குத் தீயிட்டனர்.

ஆனால், அத்தீயானது பெருந்தீங்கு விளைவிக்கும் முன் தொண்டர் களால் அணைக்கப்பட்டது. இதையறிந்த சம்பந்தர், தம் மேல் உள்ள வெறுப்பிற்காகத் தொண்டர்கள் துயிலுமிடத்தில் தீயிட்டதை நினைத்து வருந்தினார். செங்கோல் வழுவாத அரசன் நாட்டில் இதுபோன்று நடக்காது என்றும், இத்தீப் பரவியதற்கு அரசனே பொறுப்பு என்றும் நினைத்தார். உடனே ஆலவாய் அப்பரை வணங்கி,

''செய்ய னேதிரு ஆலவாய் மேவிய
ஐயனே அஞ்சல் என்றருள் செய்எனைப்

பொய்யராம் அமணர் கொளுவுஞ் சுடர்
பையவே சென்று பாண்டியற் காகவே''

என்று தொடங்கும் பதிகத்தைப் பாடி, மடத்திலிட்டத் தீ மன்னனைச் சென்று சேரவேண்டும் என்றார். சம்பந்தர் ஆணைப்படித் தீயானது பாண்டிய மன்னனது உடலில் வெப்பு நோயாகப் பரவியது. இவ்விடத்தில் சமணர்கள் தன்னைச் சிறுபிள்ளை என்று நினைத்துத் தீயிட்டு விரட்ட நினைத்தபோது, மடத்திலிட்ட தீயைச் சமணர்கள்மேல் திருப்பாமல் அவர்களை ஆதரிக்கும் மன்னன் மீது திருப்பித் தீயிலே புரட்சி செய்கின்றார் சம்பந்தர்.

3. நோயிலே புரட்சி

பாண்டிய மன்னன் தனக்கு ஏற்பட்ட வெப்பு நோயைத் தாங்க முடியாமல் துடிதுடித்தான். மன்னனைப் பார்த்து மங்கையர்க்கரசியாரும் குலச்சிறையாரும் மிகுந்த வருத்தமடைந்தனர். மன்னனின் நிலையறிந்து சமணர்கள் அனைவரும் ஓடிவந்தனர். அரசாங்க மருத்துவர்களால் அனைத்து மருத்துவமும் செய்யப்பட்டும் நோய் தணியவில்லை. சமணர்கள் மந்திரங்களை ஓதி அரசனின் நோய் தீர்க்க முற்பட்டனர். ஆனால் நோய் மிகுதியடைந்து கொண்டேயிருந்தது.

இதைக் கண்ட அரசியாரும் அமைச்சரும் முந்தின நாள் இரவில் சம்பந்தர் மடத்திற்குச் சமணர் இட்ட தீதான் தற்பொழுது நோயாகப் பரவியிருப்பதாக அரசனிடம் கூறினர். அதனால், சம்பந்தரால் மட்டுமே இந்நோயினைத் தீர்க்க முடியும் என்றும் தெரிவித்தனர். மன்னன் அதற்கு இசைவு தெரிவிக்க, உடனே சம்பந்தரை அரண்மனைக்கு அழைத்து வந்தனர். அப்பொழுது சமணருக்கும் சம்பந்தருக்கும் வாக்கு வாதம் ஏற்பட மன்னன் கோபமடைந்து எவர் என் நோயினைத் தீர்க்கின்றார்களோ அவர்கள் பக்கம் நான் சேருவேன் என்று கூறினான்.

சமணர்கள் மன்னனுடைய ஆணைப்படி அவனது இடப்பாகத்து நோயைத் தீர்க்க முற்பட்டுத் தோல்வி கண்டனர். அடுத்துச், சம்பந்தர் வலப்பாகத்து நோயைத் தீர்க்கத் திருநீற்றைப் பூச முனைந்தார். சமணர்கள் அனைவரும் திருநீற்றிலே சூழ்ச்சியிருப்பதாகக் கூறித் திருநீறு பூசுவதைத் தடுத்துச் சிவனைப் பற்றியும் திருநீறுப் பற்றியும் அவதூறாகப் பேசினர். உடனே சம்பந்தர் ஆலவாய் அப்பரின் ஆலயத்து மடைப்பள்ளிச் சாம்பலைக் கொண்டுவரச் செய்து,

''மந்திரம் ஆவதுநீறு வானவர் மேலது நீறு
சுந்தரம் ஆவதுநீறு துதிக்கப் படுவது நீறு''

என்று தொடங்கும் பதிகத்தைப் பாடி, பாண்டிய மன்னனது உடலில் அந்நீற்றினைப் பூசினார். வலப்பாகத்தில் நோய் தீர்ந்தது. மன்னன் வேண்ட இடப்பாகத்து நோயையும் சம்பந்தர் போக்கினார். மன்னனும்

அவனைச் சுற்றியிருந்த சமணரல்லாத பிறரும் ஆச்சரியமும், அதிசயமும் அடைந்தனர். மன்னன் மனம் மகிழ்ந்து சம்பந்தரின் தாள்பணிந்து வணங்கி, அரசியாரையும், அமைச்சரையும் வணங்கச் செய்தான். இவ்விடத்தில், திருநீற்றுப் பதிகம் பாடிச் சாம்பலையும் திருநீறாக்கிப் பாண்டிய மன்னனின் நோயினைத் தீர்த்து, அவனைச் சைவத்தின்பால் திருப்பிப் புரட்சி செய்கின்றார் சம்பந்தர்.

4. நெருப்பிலே புரட்சி

மன்னன் நோய் தீர்ப்பதிலே தோல்வி கண்ட சமணர்கள் சம்பந்தரைச் சொல் வாதிலே வெல்லமுடியாது என்று அனல் வாதத்திற்கு அழைத்தனர். சம்பந்தரும் சிறிதும் தளராமல் அதற்குச் சம்மதித்தார். இரு சமயத்தாரும் தங்கள் சமய உண்மைகளைக் கூறும் ஏடுகளை எரிகின்ற தீயிலே இடவேண்டும். அவ்வாறு இடும்பொழுது எவருடைய ஏடு எரியாமல் இருக்கின்றதோ அவரே வாதில் வென்றவர் என்று முடிவு செய்யப்பட்டது.

மன்னனுடைய அவைக்களத்தில் நெருப்பு மூட்டப்பட்டது. வாதினைக் காண அனைத்துத் தரப்பினரும் கூடினர். முதலாவதாகச் சம்பந்தர் தாம் கோர்த்து வைத்திருந்த ஏடுகளில் ஒன்றை எடுத்தார். அது திருநள்ளாற்றில் பாடிய ஏடாக இருந்தது.

"போகம் ஆர்த்த பூண்முலையாள் தன்னொடும் பொன்னகலம்"

என்று தொடங்கும் பதிகம் அடங்கிய அவ்வேட்டினை ஈசன் நாமமே மெய்ப்பொருள் என்றால் இவ்வேடு வேகாது என்று கூறி நெருப்பி லிட்டார். இட்ட பின்பு,

''தளிர்இன வளர்ஒளி தனதெழில் தருதிகழ் மலைமகள்''

என்று தொடங்கும் பதிகத்தைப் பாடினார்.

சம்பந்தருக்குப் பின்னால் சமணர் எண்ணாயிரம் பேரும் தங்களது ஏடுகளை நெருப்பிலிட்டனர். சம்பந்தர் இட்ட ஏடு முன்னிலும் பசுமையும், புதுமையும் கொண்டு காட்சியளித்தது. அதை யாவரும் காணுமாறு சம்பந்தர் எடுத்து அனைவரிடமும் காட்டி முன்னிருந்தது போலவே கோர்த்து வைத்தார். ஆனால், சமணர் இட்ட ஏடுகளைக் காணவில்லை. தண்ணீர் ஊற்றி நெருப்பை அணைத்த பிறகு தேடியும் வெறும் சாம்பலே மிஞ்சியது. சமணர் ஏடுகள் சாம்பலாகி விட்டன. அவர்கள் அனல் வாதத்தில் தோல்வியடைந்தனர். இவ்விடத்தில் அனல் வாதம் செய்து அதிலும் சைவத்தை நிலைநாட்டி வெற்றி கண்டு புரட்சி செய்கின்றார் சம்பந்தர்.

5. நீரிலே புரட்சி

இறுதியாகச் சமணர்கள் சம்பந்தரைப் புனல் வாதத்திற்கு அழைத்தனர். அதற்குக் குலச்சிறையார் ''வாது தொடர்ந்து கொண்டேயிருந்தால்

முடிவு எப்போது?'' என்று கேட்டார். சமணர்கள் மிகக் கோபமடைந்து இவ்வாதிலே தோற்றால் நாங்கள் அனைவரும் கழுவேறுகின்றோம் என்று சூளுரைத்தனர். வாதிற்கு உரிய இடமாக வைகை ஆறு தேர்வு செய்யப்பட்டது.

அனைவரும் வைகைக் கரையை அடைந்தனர். வைகையில் வெள்ளம் கரை புரண்டோடியது. இரு சமயத்தவரும் அவரவர் சமய உண்மைகளைக் கூறும் ஏடுகளை ஆற்றிலே இடவேண்டும். அப்பொழுது எந்த ஏடு எதிர் நீந்திக் கரையேறுகிறதோ அவரே வாதில் வென்றவர் என்று முடிவு செய்யப்பட்டது. முதலில் சமணர்கள் தங்கள் ஏடுகளை வைகையிலே இட்டனர். அனைத்து ஏடுகளும் ஆற்றுவெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டுக் கடலிலே கலந்து விட்டன.

அடுத்ததாகச் சம்பந்தர்,

''வாழ்க அந்தணர் வானவர் ஆன்இனம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக''

என்று தொடங்கும் பதிகம் அடங்கிய ஏட்டினை வைகையிலே இட்டார். இட்ட ஏடு இயற்கையை வென்று ஆற்றிலே எதிர் நீந்திச் சென்றது. கூடியிருந்தவர்கள் அதைக் கண்டு வியப்படைந்தனர். அவ்வேட்டினைக் குலச்சிறையார் சென்று எடுத்து வந்தார். ''வேந்தனும் ஓங்குக'' என்று பாடியதால் பாண்டியனது கூன்தன்மையும் நீங்கி நின்றசீர் நெடுமாறனாகினான். சமணர்கள் அனைவரும் கழுவேறினர். இவ்விடத்தில் புனல் வாதத்தில் வென்று பாண்டிய நாட்டில் சமணத்தை வேறறுத்துப் புரட்சி செய்கின்றார்.

தமிழகத்தின் தென்பகுதியான பாண்டி நாட்டில் மக்கள் முதல் மன்னன் வரை அனைவரும் சமண மதத்தைப் போற்றி வருகின்றனர். அந்நாட்டு அரசியாரும் அமைச்சரும் மட்டுமே சைவத்தை ஆதரிக்கின்றனர். இதனை அறிகின்ற சம்பந்தர், பாண்டி நாட்டிற்குப் புறப்படும்பொழுது சிவநெறியிலே புரட்சி, மதுரையில் தம் மடத்திலிட்ட தீயை மன்னன் மேல் திருப்பிப் புரட்சி, மன்னன் நோய் தீர்ப்பதிலே புரட்சி, நெருப்பிலே புரட்சி, நீரிலே புரட்சி எனப் பல்வேறு புரட்சிகளையும் செய்து பாண்டி நாட்டில் சமணத்தை அழித்துச் சைவத்திற்கு உயிர் கொடுக்கின்றார். இதன் மூலம் சிறுபிள்ளையான சம்பந்தர் சமணர்கள் எண்ணாயிரம் பேரையும் வென்று சைவத்திற்கும் தமிழ்மொழிக்கும் மறுவாழ்வு கொடுத்துப் பாண்டி நாட்டிலும், தமிழக வரலாற்றிலும் ஒரு மாபெரும் புரட்சியைச் செய்துள்ளார் என்பது அறியப்படுகின்றது.

68. சம்பந்தரின் செழுந்தமிழ்ப் பாடற் பயன்

பிரபாகரன், மீஞ்சூர்.

திருஞானசம்பந்தரின் செந்தமிழ்ப் பாடல்களின் ஆற்றலை விதந்தோதும் பழம் பாடல் :

"புனலில் ஏடுஎதிர் செல்லெனச் செல்லுமே!
புத்தனார் தலை தத்தெனத் தத்துமே!
கனலில் ஏடிடப் பச்சென்(று) இருக்குமே!
கதவு மாமறைக் காட்டில் அடைக்குமே!
பனையில் ஆண்பனை பெண்பனை ஆக்குமே!
பழைய என்பு பொற் பாவைய தாக்குமே!
சினவரா விடம் தீரெனத் தீருமே!
செய்ய சம்பந்தர் செந்தமிழ்ப் பாடலே".

அருட்பாடலின் ஆற்றலுக்கு எல்லையில்லை. அது அனைத்தாற்றல், அனைத்தறிவு படைத்த பரம்பொருளின் மகிமையை விளக்கச் செயல் படுவதைக் காலம் காலமாக மனித சமுதாயம் கண்டு வருகிறது. தூய இருப்பாற்றலின் ஈடிணையற்ற பேரன்பின் பிரவாகத்தால் நிகழ்வனவற்றை அற்புதங்களாக, அடையாளங்களாகப் போற்றி வருகிறோம். இயற்கை மீறிய, தெய்வ சக்தியின் வெளிப்பாட்டை உணர்வோர், தாமும் நன்னெறியில் நிலைத்து, மனித சமுதாயத்தையும் நன்னெறியில் செலுத்தி வருவர். பஞ்ச பூதங்களும் தெய்வ ஆணையைச் சிரமேற்கொண்டு பணிவது உலக வாழ்வாகிற கனவு மயக்கத்திலிருந்து உயிர்களை விழிப்படைய வைக்கத் திருவருள் செய்யும் உபாயமாகிறது. வரையறுக்கப்பட்ட இயற்கை விதிகளை மீறியும் ஆடல் புரிந்து தெய்வம் விளையாடும் போது, பசுக்களின் பாசம் நீங்கி அவற்றின் கவனம் பதியின்பால் திரும்புவதை உணர்கிறோம். இவ்வகையில் ஞானப்பால் உண்டு, தெய்வத் தமிழிசைத் தேன் அருவி வழங்கியவரே ஆணையிட்டு ஆற்றுப்படுத்தும் தூய நெறி பற்றியும், அவர்தம் பாடற் பயன் பற்றியும் சிறிது காண்போம்.

கணம்தோறும் மாறி வரும் இவ்வுலகிற்கும், பேரண்டத்திற்கும் அடிப்படையாகத் திகழ்வது என்றும் மாறா இறைமை ஆகும். எங்கும் நிறைந்து, எதிலும் கலந்து, நிறைந்துள்ள பரிபூரணப் பரம்பொருளைச் சிவமாகக் கண்டு சிந்தை உருகி வழிபடுவது சைவ சமயமாகும்.

'கருவினால் அன்றியே கருவெலாம் ஆயவன்
உருவினால் அன்றியே உருவு செய்தான்'.

பெருமைகளை எவரும் அளவிட்டு வரையறுக்க இயலாது. தீவினை, நல்வினையாகிய சங்கிலிகளின் பிணைப்பு நீங்கி, சத்துவ குண சம்பன்னராகிய ஞானிகளின் உணர்வாலும், உரைகளாலும் ஓரளவு இறைமை பற்றிய உண்மைக் கருத்துரைகளை அறிய இயலும். திருஞான சம்பந்தர் சைவ சமயத்தின் தலைசிறந்த ஞானாசிரியராக விளங்குகிறார். அவர்தம் மூன்றாம் அகவை தொடங்கி, பதினாறாம் அகவை முடியத் தமிழ் மணமும், சிவ மணமும் வரையாது வழங்கிக் கலங்கரை விளக்கமாக வழிகாட்டியுள்ளார். வாழ்வின் உண்மைகளைத் தெளிவுபடுத்தியும், ஞானத்தில் சரியை நிலையை வாழ்வாங்கு வாழ்ந்து வழிகாட்டியும், ஊரூர் சென்று பரமனைப் பாடியும், ஒளிநெறி காட்டியும் ஆற்றிய திருத்தொண்டுகள் அளவற்றன.

சிந்தை, சொல், செயலால் வரையறுக்க இயலாத செம்பொருள் துணிவை, பேருணர்வின் திருவடிவாய் விளங்கிய ஞான தேசிகர் தமிழிசையால் ஆராதித்து, அன்பே சிவமாய் உலவி, ஒளிநெறி காட்டி யுள்ளார். 'தன்னார்வம் செய்தமிழின் விரகன், மாமறை நான்கினொடு அங்கமாறும் வல்லவன், வாய்மையில் நாமரு கேள்வி நலந்திகழும் ஞானசம்பந்தன், ஒரு நெறிய மனம் வைத்துணர் ஞானசம்பந்தன், வலிகெழ மனம்மிக வைத்தவன் மறைசேர் வரும் கலை ஞானசம்பந்தன்' என்று பலவாறு தம்மை புலப்படுத்திக் காட்டும் ஞானச்செல்வர் **எழுதும் தமிழ் மறையாக,** தேனினும் இனிய செவியமுதாகச் சிவஞானத் திரட்டுக் களை வாரி வழங்கி, இலக்கிய இன்ப விருந்து படைத்துள்ளார்.

'இடுபறை ஒன்ற அத்தர் பியன்மே லிருந்து இசையால் உரைத்த பனுவல்' புகழாளி ஆகும் ஆளுடைய பிள்ளையார் தாம் அடைந்த அருள் அனுபவங்களை 'நனவிலும், கனவிலும் நாளும் தண்ணொளி நினைவிலும் எனக்கு வந்தெய்தும் நின்மலன்' - 'ஊனிடங்கொண்டு என் உச்சியில் நிற்பரே' என்பன போன்று கோடி காட்டியுள்ளார்.

சிவம் தோன்ற, மனம் தெளிய வேண்டும். மனம் தெளிய, மாசு நீங்கிய மன அடக்கம் தேவை. மனம் அடங்க, ஐம்புலன் அடக்கம் முதலில் தேவைப்படுகிறது. அதற்கு உருவமற்ற பரம்பொருளை ஒரு திருவுருவிலே வழிபட்டு, வாழ்த்தி, ஆராதனை செய்ய வேண்டியுள்ளது. நாவால் ஆண்டவன் புகழ்பாடி, அவன் திருவிளையாடல்களைச் சுவைத்து, அடியார் பெருமை பேசி வாய்மை, இன்சொல், பணிவு முதலிய நல்லொழுக்க நெறி நிற்க வேண்டும். கண்களால் இறை வடிவத்தை உளமகிழ்வோடும், நிறைவோடும் பருகி, நன்னெறி பயின்று, மூர்த்தி,

தலம், தீர்த்தம் முறையாய்த் தொழுது, அடியார்க்குதவிச் சேவைச் செந்நெறியில் முன்நின்று சிறக்க வேண்டும். காதார அவன் புகழைக் கேட்டு, அடியார்கள் அவனுக்கு ஆட்பட்ட விதம் கேட்டு, எல்லா நலமும் சேர்க்கும் அவன் திருநாமம் கேட்டு, அவனிருக்கும் வண்ணம் கேட்டு, அவனில் ஆழ்ந்து, அவனுள் கலந்து பேரானந்தம் பெற முயல வேண்டும். இங்ஙனம் அனைத்துப் புலன்களாலும், பொறிகளாலும் இறைவனை வாழ்த்தி வணங்க வேண்டும்.

செய்யும் தொழில் அனைத்தும் தெய்வப் பணிகளாக மலரும் வண்ணம், அன்பில் தலை நின்று அகில காரணர்க்கு ஆட்பட வேண்டும். இதற்காகவே சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நான்கு நெறிகளைச் சைவ சமயம் வகுத்துள்ளது. 'தொண்டர்தம் பெருமை சொல்லவும் பெரிதே' என்பது தமிழ் மூதாட்டி ஔவை திருவாக்கு - தெய்வத்தை வசப்படுத்தி இட்ட ஏவல் செய்யவும் வைக்கும் இந்த மெய்அன்புத் தொடர்பை எவரால் அளவிட இயலும்? இந்த ஆழ்ந்த பரமபக்தியே உடல் கூட்டிலிருந்து ஜீவனுக்கு விடுதலை கொடுத்து, சிவத்துடன் ஒன்றுவித்து, இணையற்ற அற்புதம் நிகழ்த்துகிறது. ஆடலின் முடிவில், சிற்றுயிர் தன் சிறுமை நீங்கி, முழுமையின் மகத்துவத்துடன் இணைந்து, பேரானந்தப் பெருநிலை எய்துகிறது. விழிப்புற்ற ஜீவன் தெளிவடைந்து, தன்னை அகண்டமாய் உணர்ந்து, அதுநாள் வரை பிணைத்த உடல், மனம், காலம், காரிய காரணச் சிக்கல்களிலிருந்து விடுபட்டு, அமைதியும், ஆனந்தமும் நிரம்பி, சமநிலை கண்டு, வாழ்க்கையின் உட்பொருளை உள்ளங்கை நெல்லிக்கனியாய்க் கண்டு நிறைவெய்துகிறது.

உள்ளது ஒன்றே, அது சிவமே. அது தன் எல்லையற்ற படைப் பாற்றல் காரணமாகப் பலவற்றைப் படைத்து, அளவற்ற திருவிளையாடல்கள் புரிகிறது. இவ்வுண்மை சமாதி நலம் துய்த்த, நிறைஞானியர்க்கே விளங்கும். முழுமையினின்றும் பிரிந்த பகுதியாகத் தன்னைக் கருதிக் கொள்ளும் உயிர், அதனால் மயக்கம் எய்தி, பிறப்பு, வளர்ச்சி, நோய், தேய்வு, இறப்பு முதலியவற்றை உணர்ந்து தளர்தல் இயல்பே. தமது இதயத்தில் இறைமையின் அருட்பேரொளியை உணர்ந்து, சிவமாகவே முழுமையுற்றுத் தெளிவுற்றோர் வாழ்வின் பொருளையும், பயனையும் எய்தியவராகின்றார். அவர்களுக்கே அனைத்தும் சிவமய மாகவும், திருவருட் செயலாகவும் விளங்கும் உண்மை புரிகிறது. அவர்கள் தாம் பெற்ற இன்பத்தை, ஆராவமுதை அனைவரும் பெற்றுப் பெருக வாழ வழிகாட்டிப் பெருமிதம் கொள்கின்றனர்.

ஒளியே உண்மை இருப்பு என்பதையும் அதுவே மெய்ஞ்ஞான மாகவும், பேரின்பமாகவும் விளங்குகிறது என்பதையும் உணர்ந்தோரே தாமும் நெறிநின்று மற்றையோர்க்கும் வழிகாட்ட இயலும். அவர்களே

ஆணையிட்டு உரைக்க இயலும். இவ்வகையில் ஞானசம்பந்தர் சிவஞானமும் அதனின்று விளைந்த கலைஞானமும், இசை ஞானமும் மேலோங்க குரு, லிங்க, சங்கம வழிபாட்டில் இணையற்று ஈடுபட்டு அனைவரையும் ஈர்த்து, சிவநெறியாம் தவ நெறியில் ஈடுபடுத்தி யுள்ளார். 'செய்வினையும், செய்வானும், அதன் பயனும், கொடுப்பானும் என்னும் நான்கின் உண்மை நிலைகளையும் தெளிவுபடுத்தியுள்ளார்.

முதல் மூன்று திருமுறைகளாகத் தொகுக்கப் பெற்றுள்ள திருஞான சம்பந்தர் தேவாரப் பதிகங்கள் இம்மைக்கும் மறுமைக்கும் நலம் தருவன வாகும். ''மண்ணில் நல்லவண்ணம் வாழலாம். வைகலும்..... பெண்ணின் நல்லாளொடும் பெருந்தகை இருந்ததே'' என்பது அவர்தம் திருவாக்கு. அறிய இயலா மறுமைக்காக மட்டுமன்றி கண்ணெதிரே காணக் கூடிய, இம்மை நலன்களையும் இறைவனை வேண்டிப் பெற இயலும் என்பதே சமய குரவரின் உறுதி. சம்பந்தர் தம் தந்தை வேள்வியைக் குறைவற முடிக்கத் திருவாவடுதுறையில் ஆண்டவனை வேண்டி, ஆயிரம் பொன் பெற்றார். பசியும், பஞ்சமும் வந்தபோது அடியார்க்கு அமுதளிக்க திருவீழிமிழலையிலே படிக்காசை வேண்டிப் பெற்றார். ஏதும் செய்ய வல்ல சிவனருளை அடையாளம் காட்டத் திருமயிலையிலே எலும்புச் சாம்பலிலிருந்து பூம்பாவையை உயிர்ப்பித்தார். சிவலோகத்திற்கு அழைத்துச் செல்லும் பரம குருவாகி தமது மணநாள் பந்தலிலேயே அடியார்குழாத்துடன், அருள் கூட்டுவித்தார் பலருடன் சிவலோகம் சார்ந்தார்.

அடியார் அடையும் நன்மைகள்

திருஞானசம்பந்தர் வரையறுத்த விதத்தில் சீரடியார்க்கு எய்தும் நன்மைகளைக் காண்போம்.

1. முதல்வன் பாதம் பற்றி நின்றாரை பாவம் பற்றாது.
2. அவனை மறப்பிலார் மையல் தீர்வார்.
3. நித்தல் ஏத்த தீரா நோய் தீரும்.
4. சேவடி கை தொழ இல்லை வினை.
5. அடியார்க்கு அடையா வினை.
6. கழல் தொழ எய்தும் மேலுலகு.
7. பண்ணியல் பாடல் வல்லார்கள் பழியொடு பாவம் இலர்.
8. உள்ளுவார் வினையாயின ஓயுமே.
9. இணையடி ஏத்துவார் தொண்டு செய்வாரே.
10. தாள் தொழ வீடு எளிதாமே.
11. அறும் பழி; பாவம், அவலம் இலரே.

12. நிலையுடைய பெருஞ்செல்வம் நீடுலகிற் பெறலாமே.
13. பொன்னடைந்தார்; போகங்கள் பல அடைந்தார்; புண்ணியரே.
14. அல்லலோடு அருவினை அறுதல் ஆணையே.
15. நினைந்திருந்து இசை பாடுவார் வினை செற்ற மாந்தர் எனத் தெளிமின்கள் சிந்தையுளே.
16. பேராயிரமும் பிதற்றத் தீரும் பிணிதானே.
17. மருவிய மனமுடையவர் மதியுடையவர், விதியுடையவர்களே.
18. செஞ்சொல் பாடலுடையாரை அடையா பழிகள், நோயே.
19. மனமகிழ்வொடு பயில்பவர் எழில் மலர்மகள், கலைமகள், சயமகள், இனமலி புகழ்மகள் இசை தர இருநிலனிடை இனிதமர்வரே.
20. இன்னிசையால் பாடவல்லார் இருநிலத்தில் ஈசனெனும் இயல்பினோரே.
21. குற்றம் முற்றும் (தீரும்) இனிமையில் குணங்கள் வந்து கூடும்.
22. நனிபள்ளி உள்க வினைகெடுதல் ஆணை நமதே.
23. அறவன் கழல் சேர்ந்து அன்போ டின்பம் அடைவாரே.
24. நிகழ்குல நிலநிறை திருவுரு நிகரில கொடைமிகு சயமகள் புகழ்புவி வளர்வழி யடிமையின் மிகைபுணர் தரநலம் மிகுவரே.
25. ஆதிகழலே சிந்தை செய வல்லவர்கள் நல்லவர்கள் என்ன நிகழ் வெய்தி, இமையோர் அந்தவுல கெய்தி, அரசாளும், அதுவே சரதம்; ஆணை நமதே!
26. சொல் மாலைகள், சொல்ல நிலா வினையே.
27. உலகுறு புகழுனோடு ஓங்குவரே.
28. வினைகட, மதி புகழொடு கிளரொளியினரே
29. சொல்லுவார்க்கும், கேட்பார்க்கும் துயரமில்லையே.
30. பண்கொளப் பாட வல்லார்க்கு இல்லை பாவமே
31. ஒண்பொருள் உணர்வதும் உணர்வே; நற்பதம் அறிவதும் நயம் புலன்களை முனிவது பொருள்; உமை அறிபவர் நசையுறு நாவின் தரமே; உமை உணர்பவர்கள் மதி மிகுவது கடனே; உமை அதிகுணர் புகழ்வதும் அழகே.
32. சொல்மாலை ஓதும் அடியார்கள் வானில் அரசாள்வர் ஆணை நமதே.
33. இரு நிலத்தில் இரவும் பகலும் நினைந்தேத்தி நின்று விம்மா, வெருவா விரும்பும் அடியார் விதியார் பிரியார் சிவன் சேவடிக்கே.

34. பந்த பாசம் அறுக்க வல்லார்களே; சேர்ந்த இடமல்லாம் தீர்த்தமாக
சேர்வாரே நிறைந்த உலகினில் வானவர் கோனொடும் கூடுவரே;
வானோர் உலகாளவும் வல்லரே.

35. பாடல் கொண்டோதி வாழ்மினே; மாலை உருவெனத் தவமாமே;
சம்பந்தன தமிழ் வல்லவர் அடி பேணுதல் தவமே;
செய்யுள் பாட வல்லார் சிவ லோகம் செல்வாரே.

36. கற்று வல்லாரேல்லாம் வானோர் வணங்க மன்னி வாழ்வாரே;

37. மண்புகார்; வான்புகுவர்; மனமிளையார்; பசியாலும்
கண்புகார்; பிணியறியார்; கற்றாரும் கேட்டாரும்.

தெய்வீக அருளாற்றல் அருளாளர்தம் திருப்பாடல்களில் நிறைந்து விளங்குகின்றது. தமக்கென முயலாது மனித குலத்திற்கு உய்யும் வழிகாட்ட வந்த அருளாளர் பாடல்களைச் சிரத்தை, பய பக்தியுடன் முறைப்படி ஓதி வர, உள்ளத்தில் ஒளி தோன்றும்; இடர் இருள் அழியும் காலையில் கண் விழிக்கும் போதும், இரவில் துயிலும் முன்னும், அந்தி சந்தியிலும் தும்மும் போதும் இறைவன் திருநாமங்களை எப்போதும் தப்பாமல் உச்சரித்து வருவது நம் முன்னோர் மரபு காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி, இறையருட் பாடல்களைக் குளிக்கும் பொழுதும், குளித்த பின்பும், பூஜையிலும், மாலை நேரத்திலும், இரவு படுக்கைக்குச் செல்லும் முன்பும் பலர் ஓதி நலம் அடைந்துள்ளனர். அருளாளர்தம் திருப்பாடல் அமுதத்தை நோய்ப்படுக்கையிலும், மரணத் தருவாயிலும், வறுமை தளர்ச்சி ஆகிய துயரச் சூழ்நிலைகளிலும் மாந்தி நலம் கொண்டோர் வரலாறுகள் பல உள இதயத்தில் இறைமையை எழுந்தருள வைக்கவும், உரிய உறவு கொண்டாடவும், மயக்கம், கலக்கம் முதலியவற்றிலிருந்து விடுதலை பெறவும் அருட் பாடல்கள் தெய்வத்தின் கோயில் கதவுகளைத் திறக்கின்றன. உளமாற அவற்றை ஓதிக் கிட்டும் அனுபவம் வாழ்க்கையின் அக, புறச்சிக்கலுக்கு தீர்வு தெரிவிப்பது கண் கூடு, இன்றைய தலைமுறையினரும் அருட் பாடல்களைக் கற்று ஓதி நலமுற வேண்டுமென்பதே சான்றோர்களின் வேணவா.

திருஞானசம்பந்தர் தமது முதற்பதிகம் தொடங்கி தாம் பாடிய அனைத்துப் பதிகங்களிலும் ஒரு குறிப்பிடத்தக்க பாடற்கொள்கை நெறியைக் கடைப்பிடித்ததை அறிகிறோம். பதிகம் தோறும் எட்டாவது பாடலிலே கைலையைத் தூக்கிப் பிழை செய்த இராவணன் உருகி வழிபட்டபோது, அவனுக்கு இறைவன் அருள் செய்த திறத்தைக் குறிப்பிடுகிறார். ஒன்பதாவது பாடலிலே நான்முகனும், திருமாலும் அடிமுடி தேடிய வரலாற்றை விளக்கியுள்ளார் பத்தாவது பாடலிலே செந்நெறி தவறிய சமண (பௌத்த) மூடர்களைச் சாடியுள்ளார்.

திருக்கடைக்காப்பில் மெய்த்தொண்டர்க்குக் கிட்டும் பயன்களை வகுத்துரைத்துள்ளார்.

'பிழைத்தோரும் உய்வு பெறலாம்: செல்வமும், அறிவும் இறைவனை அளக்க இயலாதவை; நன்னெறி நீங்கியோர்க்கு போலி மத வாதங்கள் நன்மை விளைக்கா' ஆகியவற்றை ஒவ்வொரு பதிகத்திலும் பசுமரத்தாணி போல் நெஞ்சிற் பதிக்க அவர் மேற்கொண்ட முயற்சி எண்ணி நெகிழத்தக்கது.

நான்மறை நாவன், நற்றமிழ்க்கு இன்துணை ஞானசம்பந்தப் பெருமான் **'எனதுரை தனதுரை**யாக நீறணிந்து ஏறுகந்து ஏறிய நிமலன்' திருவருளால் உலக குருவாகி சிவநெறியாகிய அன்பு நெறியை, ஒளி நெறியைப் பரப்பினார். அருட்பாடலிசைத்து உளமுருகி இறைவனைப் பணிய வழிகாட்டினார். பாடற்பயன்களாக அவர் கூறியவற்றுள் ஒரு சிலவே கண்டோம். பொதுவாக ஆண்டவனை நாடும் அடியார்களை நான்கும் பிரிவிற்குள் அடக்கி பகவத்கீதை காட்டும் 1) துன்பமுற்றோர் 2) இன்பம் விழைவோர் 3) விடுதலைக்கு முயல்வோர் 4) ஞானிகள் மேற்கூறிய அனைத்துப் பிரிவினருக்கும் பெருநலம் கூட்டும் வகையில் ஞானசம்பந்தரின் பாடற்பயன்களைக் கண்டோம். உடல், உயிர், ஆன்மப் பிணிகள் அகலவும் புண்ணியம், புகழ், போகம், இன்பம் முதலியன ஓங்கவும், யோகமும், தெளிவும், ஞானமும் சித்திக்கவும் பிள்ளையாரின் தெய்வ அருட்பாடல்கள் அன்றும் இன்றும் என்றும் மனித சமுதாயத்திற்குக் கிடைத்த வைப்பு நிதியாக விளங்குகின்றன. அவரது கோளறு பதிகத்தையும், திருநீற்றுப் பதிகத்தையும், பஞ்சாக்கரப் பதிகத்தையும் நமச்சிவாயப் பதிகத்தையும் ஓதி உணராத சைவர் இலர். பரம்பொருளின் திருவருளையே எப்பொழுதும் சிந்தித்து, அவ்வருளுக்கு ஏற்பச் செயல்பட்டு, அவ்வருளையே மனம், மொழி, மெய்களால் வாழ்த்தி வணங்க இம்மையும், மறுமையும் ஆனந்த மா முக்தியும் யாவருக்கும் சித்திப்பது உறுதி.

69. திருக்கோயில் வழிபாடும் சம்பந்தரும்

இரா.பிரேமா, சென்னை.

முதல் மூன்று தேவாரத் திருப்பதிகங்களை இசைத்த ஞானசம்பந்தர், அவற்றின் வழி எளிமையான வழிபாட்டு நெறியை மக்களுக்கு எடுத்துரைத்துள்ளார். அவர் எடுத்துரைத்த நெறிகளுள்,

நாம வழிபாடும்
திருக்கோயில் வழிபாடும்

மிக முக்கியமான வழிபாட்டு நெறிமுறைகளாகும். இவ்விரு வழிபாட்டு நெறிகளையும் தம் வாழ்வியல் நெறிகளாகக் கொண்ட சம்பந்தர், அவற்றையே மக்களுக்கு உகந்த பொது வழிபாட்டு நெறிகளாகத் தம் பாடல்களின் மூலம் தந்துள்ளார்.

தேவாரம் பாடிய மூவரும், மாணிக்கவாசகரும் திருக்கோயில் வழிபாட்டையே உத்தம வழிபாட்டு நெறியாக எடுத்துரைத்துள்ளனர். அவர்களுடைய பக்திநெறி வெவ்வேறாக இருந்தாலும், கோயில்தோறும் சென்று, அங்கு எழுந்தருளியிருக்கும் இறைவனைக் கண்ணால் கண்டு வழிபடுதல் என்பது நால்வரின் வழிபாட்டு முறையாகும்.

ஞானசம்பந்தர் **சத்புத்ர மார்க்கத்தையும்,** அப்பர் **தாச மார்க்கத்தையும்**, சுந்தரர் **சக மார்க்கத்தையும்**, மாணிக்கவாசகர் **ஞான மார்க்கத்தையும்** தங்கள் பக்தி நெறியாகக் கொண்டிருந்தாலும், திருக்கோயில் வழிபாட்டு நெறியைத் தங்கள் பொது நெறியாகக் கொண்டுள்ளதை அவர்கள் பாடல்களின் வழி அறிந்து கொள்ள இயலுகிறது.

ஞானசம்பந்தர் தம் வாழ்நாட்களில், பெரும் நாட்கள் வழிநடைப் பயணம் செய்து பல கோயில்களுக்குச் சென்று, அங்கு எழுந்தருளி யிருக்கும் ஈசனைக் கண்ணாரக் கண்டு, நெஞ்சார வழிபட்டு, வாயார வாழ்த்தி வழிபட்டுள்ளார்.

ஞானசம்பந்தர், **ஈசனின் திருவுருவத்தின் மீது ஏக பக்தி கொண்டவர்.** எந்த திருத்தலம் சென்ற பொழுதும் அங்கு குடிகொண்டிருக்கும் ஈசனை, இறைவி சகிதமாகக் கண்டு, அவ்வுருவத்தின் திருப்பெருமைகளைச் சாற்றி வழிபடுவார். எனவே, சம்பந்தருக்கு **உருவ வழிபாடு என்பது**

உகந்த ஒன்றாக அறியப்படுகிறது. கோயில்களில் கருவறையில் எழுந்தருளி யிருக்கும் இறைவனைக் கண்ணாரக் கண்டு வழிபடுதல் என்பது இவரது கோயில் வழிபாட்டு முறையில் முதன்மையானதாகும்.

''பந்தார் விரல்மடவாள் பாகமா நாகம்பூண்டு ஏறதுஏறி
அந்தார் அரவணிந்த அம்மான்'' (2-ஆம் திருமுறை- பா. 776)

'நாட்டம் பொலிந்திலங்கு நெற்றியினான்
மற்றொருகை வீணை யேந்தி
ஈட்டும் துயர்அறுக்கும் எம்மான்' (மேலது -பா. 777)

துன்னங் கொண்ட உடையான் துதைத்த வெண்ணீற்றான்
மன்னும் கொன்றைமத மத்தம் சூடினான் (மேலது - பா. 823)

'போர்த்ததுவும் கரியின்றுரி புலித்தோலுடை
கூர்ந்த தோர்வெண் மழுவேற்றி கோளரவம் அரைக
கார்த்ததுவும்' (மேலது - பா. 826)

என்று இறைவன் தோற்றப் பொலிவினைப் பாடியுள்ளார் சம்பந்தர். எங்கும் இறைவன் நீக்கமற நிறைந்து இருந்தாலும் திருவுருவக் கோலத்தோடு காட்சியளிக்கும் இறைவனைத் திருக்கோயிலில் கண்டு தொழுதல் என்பது எளிமையான வழிபாட்டு முறையாகச் சம்பந்தர் எடுத்துக் காட்டியுள்ளார்.

கோயிலை வலம் வந்து வணங்குதல் என்பது மற்றொரு வழிபாட்டு முறையாகும். கர்ப்பக் கிரகத்தைச் சுற்றியுள்ள கோயில் திருச்சுற்றுக்களை வலம் வருதல் பற்றி

'...... எம்மான் அமர்ந்து இனிதுறை விற்குடி விரட்டம்
வளங்கொள் மாமலரால் நினைத்து ஏத்துவார்.
(மேலது - பா.1170)

என்றும்,

'..........................நாள்தோறும்
வலங்கொள்வார் வினைமாயுமே' (மேலது - பா. 1218)

'வட்டம் சூழ்ந்து பணிவார்' (மேலது; பா. 1274)

என்றும் எடுத்துரைத்துள்ளார்.

திருக்கோயில் வழிபடு மரபில், இறைவனிடத்து, 'முடிகள் சாய்த்து அடிபணிதல்' (மேலது - பா. 1161) என்பது ஒரு முறையாகும். இதனை **'அட்டாங்க நமஸ்காரம்'** என்றுரைக்கின்றனர் சைவப் பெரியார்கள். இஃது, உடம்பின் எட்டு உறுப்புகளும் தரையில் பதிய வணங்குதலாகும்; ஐந்து உறுப்புக்கள் தரையில் பதிய வணங்குதல் என்பது **பஞ்சங்க நமஸ்காரம்**

என்றும், மூன்று அங்கங்கள் கொண்டு வணங்குதல் **திரையாங்க நமஸ்காரம்** என்றும் சொல்லப்படுகிறது. பக்தர்கள் தம் உடலை முழுவதுமாக இறைவனிடத்து அர்ப்பணித்தலே இந்த அட்டாங்க நமஸ்காரத்தின் பொருளாகும்.

இறைவனைக் **கைகூப்பித் தொழுதல்** என்பது கோயில் வழிபாட்டில் மற்றொரு முறையாகும்.

'தம் கையால் தொழுது ஏந்தவல்லார் அவர்
தவமல்கு குணத்தாரே' (மேலது - 1176)

இப்பாடல் வரிகள், இறைவனைத் தம் கையால் வணங்கி, போற்று பவர்கள், தவம் செய்வதினால் கிடைக்கும் பயனைப் பெறுவார்கள் என்றுரைக்கின்றது. இதையே நாவுக்கரசரும்,

'கைகாள் கூப்பித் தொழீர்'

என்றுரைத்துள்ளார்.

திருக்கோயில்களில் சிவநாமத்தை ஏத்தி, வழிபடுதல் நலம் பயக்கும்.

'காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி
ஓதுவார் தமைநன் னெறிக் குய்ப்பது
வேதநான் கிறு மெய்ப் பொருளாவது
நாதன் நாமம் நமச்சி வாயவே' (நம. பதி. பா. 1)

'நமச்சிவாய' என்ற திருமந்திரத்தை ஓதுதலும், நல்லவர், தீயவர் எனாது நச்சினார்க்கெல்லாம் சிவமுக்தி தரும் ஐந்தெழுத்து மந்திரத்தை ஓதுதலும் கோயில் வழிபாட்டினதே. சிவநாமத்தை இல்லத்தில் ஓதினால் ஓர் உரு ஒன்றே ஆகும்; பசுக் கூட்டத்திலிருந்து ஓதினால் ஒன்று நூறாகும்; நந்தவனத்தில் ஓதினால் ஒன்று ஆயிரம் ஆகும். மலையில் இருந்து ஓதினால் ஒன்று பதினாயிரம் ஆகும்; நதிக்கரையில் இருந்து ஓதினால் ஒன்று ஓர் இலட்சம் ஆகும்; சிவாலயத்தில் இருந்து ஓதினால் ஒன்று ஒரு கோடி ஆகும் - என்று சைவ சமய நெறி விளக்கம் (நூற்பா - 158) எடுத்துரைக்கின்றது. இதையே கருத்தில் கொண்டு, திருக்கோயில்களில் சிவநாமத்தை ஏத்துபவர்கள்.

'எந்தை ஈசன் இருக்கும் உலகெய்த வல்லார்களே'
(2-ம் திருமுறை- பா. 1299)

என்று எடுத்துரைத்துள்ளார் சம்பந்தர். இப்பாடல் கருத்தை உரை வல்லாளர்கள், 'சாலோகம்', சாமீபம், சாரூபம், சாயுக்கியம் என வழங்கப் பெறும் நான்கு நிலைகளில், ஈசனின் இனிய உலகமாகிய சாலோகத்தில் நண்ணி, ஏனைய சிவனடியார்களுடன் விளங்கப் பெறும் பெற்றியினை அடைவர்' என்று உணர்த்துகின்றனர்.

திருவெண் நீற்றினை மேனியெங்கும் குழையப் பூசுதல் - வழி பாட்டு மரபில் ஒன்றாகும். திருவெண்ணீறு பூசுதல் புறத்தில் மட்டுமல்ல அகத்திலும் மாசினை நீக்கும். ஈசனை வழிபடும்போது, திருநீறு அணிந் திருத்தல் வேண்டும் என்பது சைவ சமய நியதியாகும். திருநீற்றின் பெருமையை, 'கருத இனிய நீறு' என்றும் 'சாந்தம் வெண்ணீறு' என ஞானசம்பந்தர் ஆங்காங்கே சொல்லிச் சென்றாலும், திருநீற்றுப் பதிகத்துள் சிறப்பாக அதன் பெருமையினை எடுத்துரைத்துள்ளார்.

'பூச இனியது நீறு புண்ணிய மாவது நீறு
பேசு இனியது நீறு பெருந்தவத் தோர்க்களுக்
ஆசை கெடுப்பது நீறு அந்தம மாவது நீறு
தேசம் புகழ்வது நீறு திருஆலவாயன் திருநீறே'

(மேலது - பா. 713)

என்று சம்பந்தர் கூறுவது போல், திருமூலரும்

'கங்காளன் பூசும் கவசத் திருநீற்றை
மங்காமல் பூசி மகிழ்வாரே யாமாஇில்
தங்கா வினைகளும் சாரும் சிவகதி
சிங்காரமான திருவடி சேர்வாரே' (திருமந்திரம் - பா. 1666)

என்று திருநீற்றின் பெருமையைக் கூறியுள்ளார். 'ஈசனும் திருநீறும் வேறல்ல' என்று கூறும் சம்பந்தர் மொழிபடி, நீறு அணிவதால் முக்தி, பக்தி, சித்தி, கை கூடுதல் உண்மையாகும்.

வழிபாட்டு நெறியில் குருவழிபாடு, இலிங்க வழிபாடு, சங்கம வழிபாடு என்று முந்நெறி உண்டு. சங்கம என்பது அடியவர் கூட்டமாக இணைந்து இறைவனை வழிபடும் முறையாகும். இம்முறையைச் சம்பந்தர் சிறந்த வழிபாட்டு முறையாக எடுத்துரைத்துள்ளார். தாமும், திருக்கோயிலுக்கு அடியவர் கூட்டத்துடன் சென்று வழிபடுதலை வழக்கமாகக் கொண்டி ருந்தார். திருப்புகலூர் என்ற திருத்தலத்தில் ஞானசம்பந்தர், நாவுக்கரசர், முருக நாயனார், திருநீலநக்கர், சிறுத்தொண்டர் இவர்கள் எல்லாம் ஒருங்கு கூடி இறைவனை வழிபட்டனர். அடியவர்கள் ஒருவர் மீது ஒருவர் அன்பு பாராட்டுதல் இறைவனிடத்துப் பாராட்டும் அன்புக்குச் சமமானது ஆகும். 'தொண்டர் ஈண்ட' (பா. 1279), 'பல தொண்டர் கூடி' (பா. 1278) என்று கூறுவதுடன்,

'எம்மீசர்
தொண்டர் தொண்டரைத் தொழுதடி பணிமின்கள்
தூநெறி எளிதாகும்' (மேலது - பா. 1134)

என்று சம்பந்தர் கூறுவது, அடியவர் வழிபாட்டின் சிறப்பினைக் குறிக்கின்றது. இதைச் சுந்தரரும்,

'எம்பிரான் சம்பந்தன் அடியார்க்கும் அடியேன்'

என்றும்,

'தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்'

என்றும்,

'ஐயடிகள் காடவர்கோன் அடியார்க்கும் அடியேன்'

என்றும்,

'அப்பாலும் அடிசார்ந்த அடியார்க்கும் அடியேன்'

என்றும் பல பல பாடுவதன் மூலமும் அறிந்து கொள்ள இயலும்.

திருக்கோயிலில் பத்தர்கள் பாடி ஆடி வழிபாடு நிகழ்த்துதலும் உண்டு.

'பாடி யாடு மெய்ப் பத்தர்கட்கு அருள் செய்யும்'

(மேலது - பா. 1187)

என்றும்,

'இசைப்பாடிட நின்றார் தமைத்
துன்பநோய் அடையாவே' (மேலது - பா. 1175)

என்றும்,

பாவிரி பாடல் பயில்வார்
பழியோடு பாவம் இலாரே' (மேலது - பா. 735)

என்றும்,

'மருவிய பாடல் பயில்வார்
வானுலகம் பெறுவாரே' (மேலது - பா. 740)

என்றும் எடுத்துரைக்கின்றார். மன்றில் நடனமாடும் ஈசனை, **மனமுருகப் பாடி ஆடி துதித்தல்** என்பது அவனுக்கு உகந்த வழிபாட்டு முறையாகும்.

கோயில்வுறை இறைவனை மாமலர் கொண்டு ஏத்துதலும், மாலை கட்டி வழிபடுதலும் சிறந்ததாகும். 'போதினால் புனைந்து ஏத்துவர்', 'மலர்தூவி வழிபட', 'வண்ண மாமலர் தூவிக் கைதொழ', தேன்அணி மலர் சேர்த்தல்', 'கந்த மலர் தூவுதல்', 'தூயமலர் தூவுதல்', 'மலர் சிண்டை கட்டி வழிபடுதல்' என்று இறைவனை மலரால் வழிபடும் முறையைப் பல இடங்களில் சம்பந்தர் வலியுறுத்தியுள்ளார். இறைவனுக்கு உகந்தது பூவும், நீறும், பலியும் ஆகும். இதைப் பக்தர்கள் சுமந்து சென்று வழிபடுதல் வேண்டும் என்பது சிவஆகம விதியாகும்.

ஈசனுக்கு உகந்த மலர்களாக, அட்ட புஷ்பங்களாக விளங்குவன வெள்ளெருக்கு, சண்பகம், நந்தியாவர்த்தம், நீலோற்பலம், பாதிரி, அலரி,

செந்தாமரை என்பனவாகும். மலர் வழிபாட்டைத் தத்துவ நிலையிலும் சிவ ஆகமங்கள் விளக்குகின்றன. எட்டு இதழ் கொண்ட இதய தாமரை பொருந்த வழிபடல் என்பதும், கொல்லாமை, ஐம்பொறியடக்கம், பொறை, அருள், அறிவு, வாய்மை, தவம், அன்பு என்ற அட்ட மலர் கொண்டு வழிபடுதல் என்பதும் மலர் தத்துவங்களாகக் கூறப்படுகின்றன.

திருக்கோயில் வழிபாடு புறவழிபாடாக அமைந்தாலும் அவ்வழிபாடு நிகழ்த்தும் போதே, அகவழிபாடும் நிகழ்த்த வேண்டும் என்கிறார் சம்பந்தர். ஐம்புலன்களை அடக்கி, சிந்தனையை ஒருமுகப்படுத்தினால் அகவழிபாடு சாத்தியமாகும்.

'அஞ்சும் ஒன்றி ஆறுவீசி நீறுபூசி மேனியில்
குஞ்சியார வந்தி செய்ய' (மேலது - பா. 1095)

என்ற பாடலில், ஐம்புலன்களையும் ஒன்றி நிற்கச் செய்து, காமம், குரோதம், உலோபம், மோகம், மதம், மாச்சரியம் என்றும் ஆறு குற்றங்களையும் களைந்து, திருநீறு உடலில் பூசி, தலை பணிய கும்பிடுதலும் வாயார இறைவனை வாழ்த்துதலும் இறைவழிபாட்டு முறையாகும் என்கிறார் சம்பந்தர்.

திருக்கோயில் வழிபாட்டில், இறைவனைக் கண்ணார காணுதல், திருச்சுற்று வலம் வருதல், மனத்தால் இறைவனை நினைத்து கையால் தொழுதல், அடியிட்டு வணங்குதல், ஆடிப்பாடி மகிழ்தல், தூபம், தீபம், மலரிட்டு அர்ச்சித்தல், நாம வழிபாடு நிகழ்த்துதல், திருநீறு அணிந்து வழிபடல், அடியவர் கூட்டமோடு கோயில்தோறும் சென்று வழிபடல் என்று எளிய, அனைவரும் கைகொள்ளக் கூடிய இனிய வழிபாட்டு நெறியையை மக்களுக்குத் தம் பாடல்கள் மூலம் மட்டுமன்றி, தம் வாழ்வியல் மூலமும் உணர்த்தியுள்ளார் சம்பந்தர். எனவே, சம்பந்தர் வழிபாட்டு நெறி, எளிய, இனிய கூட்டு வழிபாட்டு நெறியாகும். கோயில் வழிபாடு புற வழிபாடு என்றாலும், புறவழிபாடு சிறந்தால் அகவழிபாடு தானே சித்திக்கும் என்பது சம்பந்தர் வழிபாட்டு நெறியாகும்.

70. சம்பந்தரும் இயற்கையும்

சு. புவனேசுவரி, சென்னை.

இயற்கையின் இயற்கை

இயற்கை எல்லையற்று விரிந்து பரந்தது. இயற்கை வரம்பிற்குட் படாத பெரிய பல்கலைக்கழகம். அதனிடம் இருந்து நாம் கற்றுக்கொள்ள வேண்டிய பாடங்கள் பல. அதற்கு எல்லையில்லை; அளவில்லை; படிக்கப் படிக்கப் பல புதிய சுவைகளையும் செய்திகளையும் அது வாரி வாரி வழங்குகிறது.

உலகம் இயற்கை மயமானது. இயற்கையின் ஒரு சின்னஞ்சிறு கூறுதான் மக்கட் சமுதாயம். இயற்கையின் எழில் தோற்றங்கள் மக்களது ஐம்புலன்களுக்கும் பெரும் விருந்தளிப்பவை. இயற்கை மனிதனுக்குப் புதிராக, இறையாக, தோழனாக, தாயாகத் தோற்றம் காட்டி வருகிறது.

இயற்கையும் கவிதையும்

'இயற்கையை அறிந்து சொன்னவன் அறிஞன்; உணர்ந்து சொன்னவன் கவிஞன்' என்பார்கள். இயற்கையில் இரண்டறக் கலக்காத கவிஞர் இலர். வேதங்கள் முதல் இலக்கண இலக்கியங்கள் வரை இயற்கை இடம் பெற்றிருக்கிறது. கால ஓட்டத்தில் இயற்கையைப் பற்றிக் கவிஞர்கள் கொண்டிருக்கிற கண்ணோட்டங்களும் மாறுபடுகின்றன.

சங்க இலக்கியம் இயற்கையை உணர்ச்சியின் பின்புலமாக ஆக்கிக் கொண்டது. பக்தி இலக்கியம் இறை வடிவமாகக் கண்டது; காப்பிய இலக்கியம் வருணனைப் பொருளாகக் கொண்டது; தற்காலத்து இலக்கியம் கவிதைப்பொருளாகவே ஆக்கிக் கொண்டது. மேலைநாட்டுக் கவிஞர் களான பிளேக், வோர்ட்ஸ்வொர்த், ஷெல்லி, கீட்ஸ், பைரன் போன்றவர்கள் இயற்கையை இறைவனாக, தோழியாக, காதலியாக கண்டனர். கீழை நாட்டுக் கவிஞர்களான ஹைகூ கவிஞர்கள் இயற்கையை உணர்ச்சியின் சாதனமாகக் கருதினார்கள். எனினும் தமிழ்க்கவிதை இயற்கையோடு கொண்ட ஒப்பற்ற தொடர்பை வேறு எந்தமொழிக் கவிதையும் கொள்ள வில்லை என்றே கூறவேண்டும்.

தமிழ்க்கவிதையில் இயற்கையைப் பின்னணியாகப் பயன்படுத்துதல், அழகுப்பொருளாகப் பயன்படுத்துதல், ஆழ்பொருளில் பயன்படுத்துதல்,

உட்பொருளாகப் பயன்படுத்துதல், இயற்கையை இயற்கையாகவே பயன்படுத்துதல் என்ற நிலைகளில் கையாளப்பட்டது எனலாம்.

சமயக் குரவர்களின் பாடல்களில் தமிழ்நாட்டின் இயற்கை வளம் அழகுறச் சித்திரிக்கப்பட்டுள்ளது. இவர்கள் இயற்கையில் இறைவனைக் கண்டனர். இயற்கையின் சிறப்பை உணர்த்துதல், இயற்கைவழி இறைவனை உணர்த்துதல் என்ற நெறிகளில் பக்தி இலக்கியம் இயற்கையைப் பயன்படுத்தியது.

திருஞானசம்பந்தர்

மூவர் தேவாரம் அருளிலக்கியம்; தமிழகத்தில் இடைக்காலத்தில் உருவான அருள்வீழ்ச்சி பொங்கிப்பெருகி, வடிவெடுத்த பக்திப்பனுவல் தேக்கம். இறையருளைப் பெற்றுத் திளைத்த பேரருளாளர் மூவர் உலகிற் கென்றே வழங்கிய பாட்டிலக்கியம். இயற்கையின் இயக்கமே, இறையொளி இயக்கம். தேவார மூவரில் திருஞானசம்பந்தர் இயற்கைக் காட்சிகளைப் பெரிதும் புனைந்தவர்.

இயற்கைப் புனைவு திருஞானசம்பந்தரின் திருப்பாட்டுள் பெரு மழையாக, சுந்தரர் திருவாக்குள் மழையாக, அப்பரின் கவிதையுள் தூறலும் தூவாணமுமாக உள்ளது எனக் கூறல் தகும். திருஞான சம்பந்தர் பாடிய இறைவனைப் பற்றிய திருப்பாட்டில் முக்கால் பகுதியை இயற்கையோடு கற்பனை கலந்த காட்சி இடம்பிடித்துக் கொள்ளக் காற்பகுதிதான் கடவுளுக்குப் போய்ச் சேருகிறது எனலாம்.

நாடும் மொழியும் நன்னெறியும் முறையே உடலும் உளமும் உயிரும் போன்றவை. ஆள்வோர் முதல் ஆளப்படுவோர் ஈறாக உள்ள எல்லா மாந்தர்கட்கும் ஏனைச் சிற்றுயிர்கட்கும் உறுதிகாட்டி உய்விக்கும் அருளாளர்கள் மெய்யடியார்கள் ஆவர்.

இவ்வுலகம் இனிது வாழ்வதற்குப் இன்புற்று விளங்குதற்கும் அடிப்படைக் காரணம் இறைவனும் அவனது அருளால் படைக்கப் பட்ட இயற்கையும் ஆகும். தமிழ்நாட்டின் நானிலப்பாகுபாட்டில் அமைந்த சிவத்தலங்களைக் கால்நடையாகச் சென்று கண்ணாரக் கண்டுகளித்து வாயாரப் பாடியவர் திருஞானசம்பந்தர்.

திருஞானசம்பந்தர் இயற்கையை (1) காட்சி அழகைக் காட்டல் (2) உவமையாக்குதல் (3) இறையாகக் காணுதல் என்னும் மூன்று நெறிகளில் தம் பாடல்களில் எடுத்தாள்கிறார்.

காட்சி அழகைக் காட்டுதல்

இவ்வாறு இயற்கையின் வாயிலாக இறையின் பெருமையைத் திருஞானசம்பந்தர் கூறுகின்ற பொழுது தலத்தோடு இயைந்த இயற்கைக்

காட்சியைப் புலப்படுத்துகிறார். தல வருணனையும் தலச்சிறப்புக்களும் வருகின்ற இடங்களில் இயற்கையை எழிலோவியமாக நமக்குத் தருகின்றார். தாம் கண்ட பயிரினங்கள், உயிரினங்கள் பற்றிய புனைவுகளைத் தருகிறார். காட்டாக, முதுகுன்றம், காளத்தி, சிராப்பள்ளி போன்ற தலங்கள் பற்றியும் அவர் கண்ட மலர்க்காட்சி, பறவைக்காட்சி ஆகியன பற்றியும் அவரது பாடல்களில் காணும் இயற்கைப் புனைவுகளைக் காணலாம்.

முதுகுன்றம்

நடுநாட்டுத் தலங்களில் நாயகமாகத் திகழ்வது முதுகுன்றம். சம்பந்தர் காலத்தில் இத்தலம் குறிஞ்சி வளமும் மருத வளமும் படைத்திருந்தது. இத்தலத்தில் வயல்களில் இனிய மாமரங்கள் ஒரு புறமும் செழுமைமிக்க பலா மரங்கள் இன்னொரு புறமும் இருந்தன. கதலி, கமுகு, தென்னை மரங்கள் என எண்ணில் அடங்கா மரங்கள் வளர்ந்திருந்தன. மா, பலா, வாழை என்ற பயன்தரு மரங்களின் சுவைதரு கனிகளின் சாறு ஆறு போல் ஓடியதால் வயல்கள் சேறாகி விட்டன என்று சம்பந்தர் குறிப்பிடுகிறார். முக்கனி என்ற சொல்வழக்கு முதன் முதல் சம்பந்தர் பாடலில்தான் காணப்படுகிறது.

கொக்கினிய கொழும் வருக்கை கதலிகமுகு
உயர்தெங்கின் குலைகொள் சோலை
முக்கனியின் சாறொழுகிச் சேறுலரா
நீள்வயல்சூழ் முதுகுன்றமே.

என்று இயற்கைக் காட்சியைக் கற்பனைக் கவின் பொருந்தப் பாடுகிறார் திருஞானசம்பந்தர்.

காளத்தி

கல்லதிர நின்று கடுமந்தி விளையாடு காளத்தி மலையே
கன்றினொடு சென்றுபிடிநின்று விளையாடு

என்று திருக்காளத்தி மலையில், கடுமந்தியின் ஆட்டத்தினையும் கன்றினொடு விளையாடும் பெண் யானையின் விளையாடலையும் கண்டு இன்புற்ற சம்பந்தர் அவற்றையும் தம் திருப்பாட்டுக்களில் இணைக்கின்ற அழகு தனிச்சிறப்புடையது.

சிராப்பள்ளி

கடுவனோடு ஊடல் கொண்ட செம்முக மந்தி தன்னுடைய கைக்சிறு மகவினோடு மலை மீது ஏறி உயிர் நீக்கக் கருதுகிறதாம். இது சிராப்பள்ளி பற்றிய கற்பனை.

கைம்மகவேந்திக் கடுவனொடு ஊடிக் கழை பாய்வான்
செம்முக மந்தி கருவரையேறும் சிராப்பள்ளி.

இதில் மலை மீது ஏறுகின்ற மந்திகள், ஊடல் கொண்டவை என்றும், ஊடலை உணர்த்த இயலா மந்திகள் உயிர் துறக்க முடிவு செய்தவை என்றும் இணைக்கின்ற திறத்தை இப்பாடலில் காணலாம்.

மலர்

சைவ சமயம் தாமரையைப் புனிதப் பூவாகப் புகழ்கின்றது. தாமரை நம் உள்ளத்தில் பக்தி உணர்ச்சியைத் தூண்டி நம்மைக் கவர்ந்திழுக்கும் தன்மையது. எனவே, புனித மலராம் தாமரை, தெய்வ மணம் கமழும் தாமரை எனச் சிறப்பிக்கப்படுகிறது. அத்தாமரை, ஞானசம்பந்தரின் பாடலில் எவ்வகையில் சிறப்பிக்கப்படுகிறது என்பதை நோக்குவோம்.

சம்பந்தரடியைப் பொன்னடிக் கமலம் எனப் போற்றுவர். அக்காலத்தில் ஒவ்வொரு குலத்தாருக்கும் ஒவ்வொரு மாலையுண்டு. சம்பந்தர் அந்தண குலத்தவர். ஆகையால் சேக்கிழார்,

செங்கமலத் தாரணிந்த தமிழ் விரகர் என்று சம்பந்தரணிந்த தாமரை மாலையைப் பற்றிக் கூறுவர். ஞானசம்பந்தர் அத்தகைய தாமரையைத் தவிசு என்கிறார்.

அள்ளல் விளைகழனி அழகார் விரைத்தாமரை மேல் அன்னப்
புள்ளினம் வைகிஎழும் புகலிப் பதியாமே.

என்று அவர் பாடலில் தாமரைத் தவிசில் வைகி எழும் அன்னப் பறவைகள் காட்சி தருகின்றன. வண்ணம், வடிவம், மணம், கவர்ச்சி முதலிய தன்மையினால் சிறந்து விளங்கும் தாமரை மலர் அன்னப் பறவைக்கு ஆசனமாகும் சிறப்புப் பெறுகிறது. சேற்றிலிருந்து சிறப்புடைய தாமரை தோன்றுதல் போல் எளிய மாந்தரிடமிருந்துதான் உயர்ந்த தலைமைப் பீடம் உருவாதல் வேண்டும் என்ற குறிப்பும் இதில் காட்டப்படுகிறது.

பறவைகள்

மூன்றாம் திருமுறையில் அமைந்துள்ள திருப்பதிகமாகிய திருச்செங்காட்டங்குடித் திருப்பதிகம் தூது இலக்கியப் பாங்கினைப் பெற்றதாகும். புன்னை மரப் பறவைகள், அன்னம், அன்றில், நாரை, குருகு, தாரா போன்ற பறவைகளைத் தூது விடுத்ததாக அப்பகுதியில் பாடப்பட்டுள்ளது.

பொன்னம்பூங் கழிக்கானற் புணர்துணையோடு உடன்வாழும்
அன்னங்காள் அன்றில்காள்.

அகன் கழனிச் சிறகு உலர்த்தும் ஆரல்வாய்ச் சிறுகுருகே
கருவடிய பசுங்கால் வெண்குருகே.

என்பன போன்ற தொடர்கள் தூதுப்பொருள்களைப் பாராட்டிய தொடர்களாகும். இவ்வாறு தாம் கண்ட பறவையினங்களின் காட்சியைச் சம்பந்தர் நாம் காணச் செய்கிறார்.

உவமையாக்குதல்

இரண்டு பொருள்களுக்கிடையே நிலவும் ஒப்புமையை எடுத்துக் காட்ட உவமை உதவுகிறது. சிறந்த உவமைகள் பொருளின் தன்மையை விளக்குவதோடு சிறப்பிக்கவும் செய்கின்றன. உவமை வாயிலாக உவமேயம் உவமானம் ஆகிய இரண்டின் மீதும் கவிஞன் கொள்கிற அன்பும் அபேத உணர்வும் புலப்படுகின்றன. சம்பந்தரது உவமைகளில் இந்த அன்பையும் அபேத உணர்வையும் காண முடிகிறது.

கமுகு

சீர்காழியில் தழைத்தோங்கி நிற்கும் கமுக மரங்கள் சம்பந்தர் கண்களிற் படுகின்றன. அவற்றின் சிறிய பிஞ்சுகள் முத்துக்களாகவும் காய்கள் மரகதமாகவும் பழங்கள் பவளமாகவும் அவருக்குக் காட்சி யளிக்கின்றன.

எண்ணார் முத்தம் ஈன்று மரகதம் போற் காய்த்துக்
கண்ணாற் கமுகு பவளம் பழுக்கும் கடற்காழி

என்று இயற்கைப் பொலிவில் கலையழகையும் எண்ணி மகிழ்ந்து பாடுகிறார்.

எல்லாத் தலங்களிலும் ஈடுபாடு கொண்டிருப்பினும் சீர்காழி, திருவீழிமிழலை ஆகிய இரு பதிகளின் மீது எல்லையற்ற அன்பு கொண்டவர் சம்பந்தர். இவ்விரு தலங்களைப் பற்றி இவர் பாடிய பாடல்கள் மிகப்பல. எனவே தான் 'காழி பாதி வீழி பாதி' என்று கூறும் பழமொழி கூட உண்டு. திருமிழலையின் இயற்கைப் பொலிவில் நெஞ்சம் பறிகொடுத்த சம்பந்தரின் ஒரு பாடலைக் காண்போம்.

தாமரைத் தவிசு

செறியிதழ்த் தாமரைத் தவிசில்
திகழ்ந்தோங்கும் இலைக்குடைக் கீழ்ச் செய்யார் செந்நெல்
வெறி கதிர்ச் சாமரை யிரட்ட
இள அன்னம் வீற்றிருக்கும் மிழலை.

என்று திருவீழிமிழலைப் பொய்கையை அடுத்த வயல்கள், மலர்ந்த தாமரைப்பீடங்கள், இலைக்குடைகள் செந்நெற்கதிர் வெண் சாமரங்கள் இள அன்ன அரசாட்சி இப்படி நடக்கிறதாக அரிய காட்சியைச் சொற்சித்திர மாகப் புனைத்துள்ளார். இவ்வாறு இயற்கை அன்னை கொலுவீற்றிருக்கும் திருநகராக இப்பதி விளங்குகிறது.

தாமரை முகம்

புலவர்கள், தாம் நேரில் கண்டு கவியுணர்வில் திளைத்தெழுந்த பாங்கிலே புத்தம் புதிய கிளர்ச்சியுடன் எழிலுடன் உவமைகள் அமைப்பது நம் இலக்கிய மரபு. அவர்தம் உவமைக்கு மெருகூட்டுவது மலர்களே.

தாமரை தமிழகத்து நிறைந்திருக்கும் வண்ணமலர். நம் இலக்கியங் களில் மிகுதியும் போற்றப்படுவது தாமரையே; முதலிடம் பெறுவதும் தாமரையே. பூமிக்கே பெருமை தருவதும் தாமரைதான். அந்தத் தாமரையை ஞானசம்பந்தர் உவமையில் பெருமைப்படுத்துகிறார்.

தாம் பாண்டிய நாட்டிற்கு வருவதைக் கேள்விப்பட்ட பாண்டியன் மனைவி மங்கையர்க்கரசியாரும் அமைச்சர் குலச்சிறை நாயனாரும் மகிழ்வெய்தியபோது அவர்கள் முகங்கள் அன்றலர்ந்த செந்தாமரை மலர்களை ஒத்திருந்தன என்பதை,

கேட்ட பொழுதே சிந்தை கிளர்ந்தெழு மகிழ்ச்சி பொங்க
நாட் பொழுதலர்ந்த செந்தாமரை நகை முகத்தராகி

என்று திருஞானசம்பந்தர் உவமையாக்குகிறார்.

மலர் முகம்

சம்பந்தர் காலத்தில் காழி, கடற்கரைப் பட்டினமாக விளங்கியது. காழிப்பதியில் நீர்நிலைகளான பல பொய்கைகள் இருந்தன. அவற்றில் வண்ணவண்ண மலர்கள் பூத்திருந்தன.

வாவிதொறும் வண்கமலம் முகம்காட்டச் செங்குமுதம் வாய்கள் காட்டக்
காவியருங் கருங்குவளை கருநெய்தல் கண்காட்டும் கழுமலமே.

எனப் பெண்களின் ஒவ்வோர் உறுப்பின் மென்மைத் தன்மையினை நோக்கித் தாமரை மலர்கள் மங்கையரின் முகத்தைக் காட்டுகின்றன என்கிறார். செங்குமுத மலர்கள் அவர்தம் செவ்வாயினை நினைவூட்டுவன. நீலம், குவளை, நெய்தல் முதலிய பூக்கள் அவர்களின் விழியினைக் காண்பிப்பன என்று கற்பனை செய்து உரிய மலர்களை உவமை கூறும் இலக்கிய மரபினை இப்பாடலில் காண்கிறோம்.

இதே போல இன்னுமோர் இடத்தில் சம்பந்தர் வேறுவேறு இயற்கைப் பொருள்கள் முக உறுப்புக்களுடன் ஒத்து முகத்தைக் காட்டுவதை உணர்த்துகிறார்.

கொழுந்தரளம் நகைகாட்டக் கோகநதம் முகம் காட்டக் குதித்து நீர்மேல்
விழுந்தகயல் விழிகாட்ட விற்பவளம் வாய்காட்டும் மிழிலையாமே.

என முகம், பற்கள், விழிகள், வாய் என ஒப்பீடு காட்டுகிறார்.

இறையாகக் காணுதல்

உலகில் தோன்றி இன்பந்தருகின்ற இயற்கையைப் படைத்தவன் இறைவனே. எனவேதான், இயற்கையை இறைவீற்றியிருக்கும் கோயிலாகக் காணவேண்டும் என்பர் வில்லியம் வேர்ட்சுவொர்த். தமிழ்த்தென்றல் திரு.வி.க.அவர்கள்,

காடும் மலையும் ஓடும் யாறும்
பாடும் காற்றும் ஆடும் முகிலும்
சூழ்ந்த இயற்கை ஆழ்ந்த இடத்தில்
ஒரு மரம் அடைந்து திருவடி நிழலில்
அமர்ந்து பார்க்க அமைதி கூடும்
இயற்கையை உள்ளுக இயற்கையில் படிக
இயற்கையை மூழ்க இயற்கையில் ஆழ்க
இயற்கையே ஆக இயங்கும் பரமே.

எனவே, இயற்கை நிலையே மனிதனால் உணர்ந்து இன்புறக் கூடிய நிலையாகும். அதுவே, இறையின் இருப்பைக் காட்டவல்லது. உடலின்றி உயிரின் இயக்கத்தை உணர இயலாது. அதுபோல இயற்கையின்றி இறையை உணர இயலாது.

திருஞானசம்பந்தரின் இறையுணர்வு

"உள்ளம் குளிர்ந்த போதெல்லாம் உவந்து உவந்து உரைப்பனே"

என்கிறார் ஞானசம்பந்தர். எங்கும் எதிலும் யாவுமாய் விளங்கும் இறைவனைப் பாடிப் பரவுவதிலும் உண்மை உணர்வுடன் உருகி இறைவனை வழிபடுவதிலும் சிறந்து விளங்கியவர்கள் நால்வரில் (சைவ குரவர்கள்) குறிப்பிடத்தக்கவர் ஞானசம்பந்தர். திருமுறை என்ற சொல்லிற்கே தெய்வத்தன்மையும் அழகும் அருட்செல்வமும் பொருந்திய நூல் என்பது பொருளாகும். இறைவனின் திருவடிப்பேற்றினை மூவருள்ளும் முதலில் பெற்றவர் திருஞானசம்பந்தரே ஆவார். ஞானப்பால் பருகிய ஈரம் புலராமுன்னர்ப் பாடிய சிறப்புடையவை திருஞானசம்பந்தரின் அருட் பாடல்கள். இவர் தலந்தோறும் சென்று மக்களுக்குச் சைவ சமய உணர்ச்சியையும் எழுச்சியையும் மிகுதியாக உண்டாக்கியவர் என்ற சிறப்புக்குரியவர்.

ஞானசம்பந்தர் இயற்கையையும் இறையையும் இணைத்தல்

மலையின் மாட்சி, அருவியின் வீழ்ச்சி, வண்டுகளின் இன்னிசைப் பண்கள், குரங்கின் ஆட்டம், குயிலின் பாட்டு, ஆற்றுநீர் ஓட்டம், முகிலின் முழவு, மின்னலின் வீச்சு, மலரின் பெருமை, மரஞ்செடி கொடிகளின் அழகுக் கோலங்கள், அலைகடல் ஓசை, கழியின் பரப்பு, காலையின் தோற்றம் முதலியவற்றை இயற்கை அழகு நாட்டமுடன் நோக்கி இன்புற்று,

இறைமையுணர்வுடன் இணைத்துப் பாடிய பெருமை தேவார ஆசிரியருக்கு உண்டு என்று சு. பாலச்சந்திரன் குறிப்பிட்டுள்ளார்.

மந்தி வணங்கும் முறை

ஒரு பாடலில் அலையும் மனத்தை ஒன்றில் நிறுத்தி ஓர் உணர்வில் அழுந்தி நிற்றலே வழிபாட்டின் உண்மை வடிவம் என்பதை,

மந்தி கடுவனுக்கு உண்பழம் நாடி மலைப்புறம்
சந்திகள் தோறும் சலம்புட்பம் இட்டு வழிபட.

என்று பாடுதல் மேற்கூறிய கருத்தைச் சுட்டுதல் போல் மந்தியும் கடுவனும் சேர்ந்து வழிபடும் தலம் வலிதாயம் என்ற குறிப்பு அமைந் துள்ளது. இப்பாடலில் அலைபாயும் மனத்தையுடைய குரங்குகள் கூட அலைதல், திரிதலின்றி ஒருமுகப்பட்டு ஒன்றையே நோக்கியுள்ளன. அவற்றைப் பார்த்தாவது ஆறறிவு படைத்த மாந்தர்கள் இறைவழிபாட்டில் ஈடுபடவேண்டும் என்று மேற்சுட்டிய இயற்கைக் காட்சி விளக்குகின்றது.

யானையின் இறை வணக்கம்

யானை இறைவனை வழிபடும் பேறு பெற்றுள்ளது. அதனால் திருவானைக்கா என்றே தலமும் பெயர் பெற்றமை சுட்டத்தக்கது.

பிடியெலாம் பின்செலப் பெருங்கைமா மலர்தழீஇ
விடியலே தடம் மூழ்கி விதியினால் வழிபடும்.

என வரும் பாடற்பகுதி அதிகாலையில் அவை பொய்கையில் நீராடி மலர்கொண்டு வணங்கிய செயலைச் சுட்டுகிறது. மனிதனைப் போலவே விலங்குகளும் இறையுணர்வு பெற்று வழிபாடு புரிந்தன என்பது கற்பனை என்று கருதாமல், சம்பந்தர் காலத்து நிலை என்று எண்ணுதல் சிறந்தது.

கிளி, மறை கற்றல்

வேதங்களை, வல்லவர்கள் நாள்தோறும் பயின்று ஓதுகின்ற ஓசையைக் கேட்டுக்கேட்டுச் சோலைகளில் உள்ள கிளிகள் தாமும் பழகி வேதங்களுக்குப் பொருள் கூறும் ஆற்றலைப் பயிற்சியின் பயனாய்ப் பெற்றிருந்தன என்னும் செய்தியை,

பாரிசையும் பண்டிதர்கள் பன்னாளும் பயின்றோதும் ஓசைகேட்டு
வேரிமலி பொழிற்கிள்ளை வேதங்கள் பொருட் சொல்லும்
மிழலை யாமே.

என வரும் பாடலில் சம்பந்தர் குறித்துள்ளார்.

மற்றொரு பகுதியில் பிழையாக யாரேனும் வேதங்களை ஓதினால் அப்பிழையைத் திருத்தியும் சொற்பணி செய்கின்றதாம் பசுங்கிள்ளை என்பதை,

மறை கிளைஞரோதப் பிழை கேட்டலாற் கருது
கிள்ளைக் குலம் தெரிந்து தீர்க்கும்

எனக் காட்டுகிறார்.

இவ்வாறு ஞானசம்பந்தர் பிழையோடு உயர்ந்த நூல்களை ஓதலாகாது என்பதையும் அப்பிழையைத் திருத்தாமல் இருப்பது குற்றம் என்பதையும் வலியுறுத்துவதைப் போல் பாடியுள்ளார். மற்றோரிடத்தில் பயிற்சியாலே இவ்வாறு கேட்டுத் தெரிந்த கிளிகள், அம்மறை மொழி களைப் பக்கத்தில் உலவும் காளை, எருதுகளுக்குக் கற்பிக்கின்றதாகக் குறிப்பிடுகிறார்.

படித்த நான்மறை கேட்டிருந்த பைங்கிளிகள்
பதங்களை ஓதப் பாடியிருந்த விடைக்குலம் பயிற்றும்

இப்பாட்டில் கற்றுத் தெரிந்தவர்கள் தாம் கற்ற கல்வியினைக் கல்லாத வரும் நுகருமாறு செய்ய வேண்டும் என்பதனை உணர்த்துகிறார்.

இவ்வஃறிணை உயிர்களைக் கருவியாக வைத்துத் திருஞானசம்பந்தரது கற்பனை மேலும் விரிந்து பேருண்மையை விளக்குகிறது.

இயற்கையே இறைவன்

மேற்கூறிய பற்பல தலைப்புகளில், திருஞானசம்பந்தர் தேவாரத்தில் காணப்படும் இயற்கை வருணனைச் சித்திரங்கள் சிலவற்றைக் கண்டோம். இவ்வியற்கைகளையெல்லாம் படைத்தளித்த பெருமானாகிய இறைவன் இயற்கை மயமாகவே எல்லாப் பொருள்களிலும் நீக்கமற நிறைந்துள்ளான் என்று ஞானசம்பந்தர் பலவிடங்களிலும் புலப்படுத்தியுள்ளார்.

மன்னானவன் உலகிற்கொரு மழையானவன் பிழையில்
பொன்னானவன் முதலானவன் பொழில்சூழ்புள மங்கை
என்னானவன் இசையானவன் இளஞாயிறின் சோதி
அன்னானவன் உறையும் இடம் ஆலந்துறை யதுவே.

கழி, கடல், காடு, நாடு, வழி, மலை, மண், நீர்ச்சுழி முதலியவற்றி லெல்லாம் இறைவன் உள்ளான் எனும் கருத்தைக்,

கழியுளா ரெனவும் கடலுளா ரெனவும்
காட்டுளார் நாட்டுளா ரெனவும்
வழியுளா ரெனவும் மலையுளா ரெனவும்
மண்ணுளார் விண்ணுளா ரெனவும்
சுழியுளா ரெனவுஞ் சுவடுதா மறியார்
தொண்டர்வாய் வந்தன சொல்லும்

என்ற அடிகள் குறிக்கும். இவ்வாறு அஃறிணைப் பொருள்களிலெல்லாம் உறையும் இறைவன் உயிரினங்கள் அனைத்திலும் உறைகிறான் என்று அவர் கூறுகிறார்.

ஆகையால் இயற்கைக் காட்சிகளைக் கவிதை நலம் சிறக்கவும் கற்பனை வளம் கொழிக்கவும் பாடிய சம்பந்தர் விலங்குகள், பறவைகள் கூட மக்களைப் போல ஈசனைப் போற்றிப் பூசனை புரிந்தன என்று பக்தி தோன்றப் பாடியுள்ளார்.

இவ்வாறு இயற்கையிலே இறைவனைக் கண்டு, துய்க்கும் தெய்வமாகக் காணும் நம் தீந்தமிழ் நாட்டுப் பாவலர்களின் இயற்கைப் புனைவு, தனித்திறம் வாய்ந்தது. இடைக்காலத்தே இயற்கையின் நடுவே இறையொளி காணும் அருட்பண்பு நிறைந்தவர் நம் திருஞானசம்பந்தர் ஆவார்.

71. திருவெண்ணீற்றின் பெருமைகள்

இரா. பூங்கோதை, தஞ்சாவூர்.

"உலகம் யாவையும் தாமுள வாக்கலும்
நிலை பெறுத்தலும் நீக்கலும் நீங்கலா
அலகிலா விளையாட் டுடையார் அவர்
தலைவர் அன்னவர்க்கே சரண் நாங்களே" (கம்பர்)

நோக்கரிய நோக்காய், நுண்ணறிவாய் இலங்குவது இறைமை. மாசற்ற மனமே இறைவன் விழைவது என்பதை, "உள்ளக்கமலமடி உத்தமனார் வேண்டுவது" என்று சித்தர் ஒருவர் விளம்பிப் போந்தார். மாய மனதை ஒருமுகப்படுத்த இறை வழிபாடு இன்றியமையாதது. ஆலய வழிபாடு அதற்கு உரம் ஊட்டுகிறது.

எப்பணியும் செம்மையுடன் நிறைவுற ஆண்டவன் அருள் அவசியமாவதை அனைத்துச் சமயமும் ஒருமித்த நோக்கமுடன் ஏற்கின்றன. சைவ சமயத்தின் தலைநாயகனாய்

"தோடுடைய செவியன் விடையேறியோர் தூவெண் மதிசூடிக்
காடுடைய சுடலைப்பொடி பூசிஎன் உள்ளங்கவர் கள்வன்"

என்று காழிவள்ளலால் பரவப்பட்டவன் சிவபெருமான். நுதல் விழிக் குரியானின் அணிகலன்களில் வெண்ணீறும் உருத்திராக்கமும் முதன்மை இடத்தைப் பெறுகின்றன. திருவெண்ணீற்றின் மாண்புகளைப் பற்றி சிவனடியார் பலவாறு புகழ்ந்து பரவியுள்ளமையைப் பக்திப் பாக்கள் பறைச்சாற்றுகின்றன.

"சைவ ஆபரணம் - நீறு"

சைவம்

சிவசம்பந்தமுள்ளது பூஷணம். ஆபரணம் சிவசம்பந்தமுள்ள ஆபரணம் சைவபூஷணமாடு அவை: விபூதி, உருத்திராக்கம் இறைவனிடம் தோன்றியமையாலும், அருட்சக்தி பதிதலாகும் சைவ அணிகலன் என்று அழைக்கப்பட்டது.

"செம்மலர் நோன்றாள் சேர லொட்டா
அம்மலங் கழீஇ யன்பரொடு மரீஇ
மாலற நேய மலிந்தவர் வேடமும்
ஆலயத் தானு மரனெனத் தொழுமே"

என்னும் சிவஞானபோத வரிகள் இரண்டும் சிவபெருமான் என்றே கோட்டற்குரியன என்பதை தெளிவுறுத்துகின்றன.

திருநீற்றிற்குரிய வேறு பெயர்கள்

நீறு, பஸ்மம், பூதி சிரோவிரதம், அத்தியாசிரமம் என்ற பெயர் களைக் கொண்டது. பிரகாசம் செய்வதால் பசிதம் எனவும் பாவத்தை அழிப்பதால் பஸ்மம் எனவும், சுத்தி செய்வதால் விபூதி எனவும், பூதப் பசாசாதிக்களினின்று காத்தலால் ரட்சை எனும் பெயர் பெறும் என்று ஸ்மிருதி கூறுகின்றது.

'குற்ற பித்தாந்த மதப்பிணியைத் தபு மருந்தாந்
திருநீற்றைப் பேணியுய்வாம்'

என்ற செய்தி நாதையர் கூற்று நீற்றின் மகிமையை உணர்த்துகிறது.

நீற்றின் இன்றியமையாமை

"விபூதியில்லாத நெற்றி பாழ்
சிவாலயமில்லாத கிராமம் பாழ்
சிவபெருமானைப் பூசியாத பிறவி பாழ்
சிவத்தையுற்றுக் கூறாத சாஸ்திரம் பாழ்"

என்று விளக்கிய வேதத்தின் கருத்தை உற்றுநோக்கினால் அணுப் பொருள் முதல் பருப்பொருள் முடிய சிவனும் சிவச் சின்னங்களும் இழையோடுவதை உணர முடிகின்றது.

சம்பந்த பெருமானும் விபூதியை வியந்து கூறுமிடத்து இது வேதசிரசுகளிலுள்ளதென்றும் ஞானத்தைக் கொடுப்பது என்றும் இருஷிகள் அணிவதென்றும் அன்னைக் கொடுப்பதென்றும் சித்திகளை ஈவதென்றும், மகத்துவத்தையும் மதியையும் கொடுப்பது என்றும் அழகினாற் பொலிந்ததென்றும் காணுந்தொறும் இன்பம் அளிப்பது வருத்தம் ஒழிப்பது சிவலோகத்தில் வாழ்விப்பது என்று நுதித்திருப்பதிலிருந்து சிவனாக, நீற்றைக் கண்டு மகிழ்வதை உணர முடிகிறது.

நாவுக்கரசரும்,

"திருக்கோயிலிலாத திருவிலூருந்
திருவெண்ணிறணியாத திருவிலூரும்

என்ற வரிகளில் அவை ஊரல்ல அடவி காடே என்று மொழிவதிலிருந்து திருநீற்றின் மாண்பு உணர்த்தப் படுகின்றது.

"பிறவி நோய் தீர்ப்பதற்குள்ள மணி மந்திர ஔஷதங்களுள்ளே விபூதியவாது ஔஷதம் என சங்கரசங்கிதை கூறுகின்றது.

திருவேடமாவது - திருநீறு

காமக்கிழத்தியரது வடிவிலே காணப்படும் ஆடை சாந்து, அணிகலன் முதலாயின காமுகரை வசீகரித்து இன்பஞ் செய்யுமாறு போல மெய்யுணர் வாரைக் காட்சி மாத்திரையானே வசீகரித்து இன்பஞ்செய்தல் பற்றிச் சிவபக்தியுடையார்க்கு நீறு திருவேடமாகக் கொள்ளப்பட்டது.

"சேலுங் கயலுந் திளைக்குங் கண்ணாரிளங் கொங்கையிற் செங்குங்குமம்
கோலும் பொடியணி மார்பிலங்குமென்று புண்ணியர் போற்றிசைப்பர்

என்னும் திருப்பல்லாண்டினாலும் உணர்ந்துக் கொள்ளப்படுகிறது.

புத்தி - முத்திகளை - நல்குவது

அக்னி சிவபெருமானது வடிவமாகும். இவ்வுலகங்கள் யாவும் அக்கினியாற் சுடப்பட்டு வெந்து சாம்பல் ஆனமையாற் பரிசுத்த மடைந்தது உலகம் அக்னி சொரூபமே, அவ்வக்கினி சிவரூபமான திவ்விய வடிவமேயாக, சந்திரன் சிவசக்தி வடிவாகும் பரிசுத்தம் வாய்ந்த சிவாக்கினியிடத்தினின்றுந் தோன்றிய விபூதியைச் சிவபெருமான தமது திருமேனியின் கண்ணே தரித்தமையால் பரிசுத்தமுள்ளதாய், அமிர்தம் போல எவராலும் கைக்கொள்ளப் படுவதாய் புத்தி முத்திகளைக் கொடுப்பதாயுள்ளது.

"தீதிலா புலக நீற்றினையாரிந்தே தீர்த்திடுந்
தீவினைச் சிமிழ்ப்பே"

என்ற இலிங்க புராண வரியால் உண்மை புலப்படுகிறது.

சிவரூபமே - விபூதி

விபூதி - என்னும் பதத்தில் வி - மேலான, பூதி - ஐசுவரியம் என்று பொருள்படுவதோடு வி: சிவன், பூ - பாவனை தி: அடைதல் சிவத்துவ பாவனையை விளக்கும் இயல்புடையது என்று ஆகமங்கள் விசேடப் பொருள் கூறுகின்றன.

விபூதி : சிவரூபமாகத் திகழ்வதை உணர முடிகின்றது.

"திருநீறே பற்பம், பொடியொடு விபூதி காப்பாம்
புண்ணிய சாந்தம் சாணி"

என்று சூடாமணி நிகண்டு நீற்றின் மாண்புகளை உரைக்கின்றது.

வெந்தாரென்புஞ் சுடுநீறு மெய்யிற் பூசிக்
கூத்தன் பொடியாடி நீற்றாணிழன் மணிவண்ணத்தான்

என்ற ஆழ்வார்கள், பிரபந்தத்தால் நீற்றின் மகிமை அளவிறந்தது என்பது பெறப்படுகிறது.

திருநீற்றின் பயன்கள்

பாவஞ்செய்வர்களாயினும் இகழத்தக்க இழிகுணமுடையவர் களாயினும் திருவெண்ணீற்றைத் துதிப்பார்கள் ஆயினும் செல்வமுடையவர் களாயும் உலகமே துதிக்கத் தக்க தூயவர்களாய் விளங்குவர் என்பதை,

''யாது பாதகம் புரிந்தனராயினு மிகழும்
பாதகங்களிற் பஞ்சமா பாதக ரெனினும்
பூதி போற்றிடிற் செல்வரா யுலகெலாம் போற்ற
தீது தீர்ந்தனர் பவித்திர ராகியே திகழ்வார்''

என்ற உபதேசக் காண்டச் செய்யுள் அரண் செய்கிறது.

திருநீற்றின் அற்புத செய்கை

திருநீற்றை இகழ்ந்த வங்க நாட்டு அரசன் புயபலன் அரசினையும் சுற்றத்தையும் இழந்து துன்புற்றான். பின்பு பிராமனோத்தமரால் திருநீறிடப் பெற்றுப் பகைவரை வென்று அரசைப் பெற்றான். திரிபுரமழிக்கும் நிமித்தம் பிரம்மாவிற்கு ஏற்பட்ட மயக்கத்தைப் போக்க பரமன் பாரதி வடிவாய் விபூதியை நெற்றியில் இட்டு மயக்கத்தைப் போக்கினான் என்று புராணச் செய்திகள் கூறுகின்றன. சம்பந்தர் கூன் பாண்டியனது வெப்பு நோயைத் திருநீற்றினாற் தீர்த்தருளினார். முழுநீறு பூசிய முனிவர் எண்ணிறந்தோர்.

சிவசாயுச்சியை முக்தியை அடைந்தனர் என்று பெரியபுராணம் இயம்புகின்றது.

திருநீற்றின் மாண்புகளை தேவார, திருவாசக பனுவல்களும் பலவாறு போற்றுகின்றன.

''மந்திரமாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தரமாவது நீறு துதிக்கப்படுவது நீறு''

என்ற ஆளுடை பிள்ளையவர்களின் கூற்று நீற்றின் மகிமையை உணர்த்துகின்றது. பிணிக்கும், கூற்றும் அஞ்சாத மணிவாசகரும்,

''வெண்ணீறணி கிலாதவரை கண்டாலம்ம நாமஞ்சும்மறே''

என்று வெண்ணீறு பூசாதவர் எவராயினும் அஞ்சுவேன் என்று கூறுவதால் வெண்ணீற்றின் மாண்புகள் எண்ணில் அடங்கா என்பது உறுதி.

சைவ சமயத்தின் 'குறியீடு' என்று மேலோட்டமாக திருநீற்றைப் பற்றி உணர்ந்தவர்களுக்கு வாழ்விற்கு நலம் சேர்ப்பது, அகப்புறப் பற்றுக்களை நீக்குவது உடற்பிணி, மனப்பிணி அகற்றுவது, பரமனின் பாதத்திடை சேர்க்க வல்லது என்பதைத் தெள்ளத் தெளிவாக உணர்த்துகின்றது. வெண்ணீற்றின் மாண்புகளை உணர்ந்தால், அணிந்தால் 'மகேசன்' அருளை பெற்று உய்தி பெறுவது உறுதி.

72. ஆடல் மகளிரும், ஆடற்கலைக் குறிப்புக்களும்

சே. போஸ், ஸ்ரீவைகுண்டம்.

ஆடல் மகளிர் என்னும் தேவரடியார்கள் முறை நீண்ட நெடுங்காலமாகத் தென்னாட்டுத் திருத்தலங்களில் வழக்கமாக இருந்து வந்திருக்கிறது. தேவரடியார் என்றால் தேவனுக்கு அல்லது இறைவனுக்குத் தொண்டு செய்யும் மகளிர் என்பது பொருளாகக் கொள்ளப்படும். ஆடலும், பாடலும் இறைவன் திருவடி நிழலை அடைவதற்குரிய திருவருட் சாதனங்களாக நமது முன்னோர்களால் கருதப்பட்டது.

'பண்ணினேர் மொழி மங்கைமார்பலர் பாடியாடிய வோசை'
(2.185.1)

என்ற சம்பந்தரின் பாட்டுவரி நமக்குச் சான்று பகர்கின்றது.

ஆடல் மகளிர், கோயில்பெண்டுகள் எனவும், தளிச்சேரிப் பெண்டுகள் எனவும், நாடக மகளிர் எனவும், கடவுள் கணிகை அல்லது தெய்வ மகளிர் எனவும், பல்வேறு பெயர்களால் அழைக்கப்படும் இவர்கள் நிருத்தம் செய்தும், பண்ணிசையால் பாடிப் பரவி இறைத்தொண்டாற்றியும் சமய வளர்ச்சிக்குத் துணையாக இருந்துள்ளார்கள்.

இறைத்தொண்டு புரிவதற்குக் கோயில்களில் ஆடல் மகளிர் நியமிக்கப்பட்ட செய்திகளை தென்னிந்திய கல்வெட்டுக் குறிப்புக்களால் நாம் அறிய முடிகிறது. தஞ்சைப் பெரிய கோயில் இராஜராஜ சோழனால் நியமிக்கப்பட்ட (400) நானூறு தளிச்சேரிப் பெண்டுகள் பற்றிய குறிப்புக்களைப் பெருவுடையார் கோயில் கல்வெட்டுக்களால் நாம் அறிய இயலுகிறது. கோயிற் பணி மேற்கொள்ளும் இடம் தளிச்சேரி எனவும், பணியாற்றிய பெண்கள் தளிச்சேரிப் பெண்டுகள் எனவும் போற்றப்பட்டனர்.

சோழ மண்டலத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் கொண்டு வரப் பட்ட தளிச்சேரிப் பெண்டுகளுக்கு, இராசராச சோழன், தனித்தனி வீடுகளையும், வருவாய் தரும் நிலங்களையும் ஒதுக்கியுள்ளான். முதன்முதலாக இங்குக் குடியேற்றப்பட்ட ஆடல் மகளிர் திருவையாறு ஓலோகமாதேவீச்சரத்தில் பணிகள் ஆற்றிவந்த நக்கன் சேரமங்கை, நக்கன் இரணமுகராமி, நக்கன் உதாரம், நக்கன் எடுத்த பாதம், நக்கன்

சோழகுல சுந்தரி, நக்கன் ஏகவீரி என்னும் எழுவர் ஆவார்கள். முதலாம் இராசராசன் திருவையாற்றிலிருந்து முதலில் குடியேற்றியமைக்குக் காரணம் ஓலோகமாதேவீச்சரம் அவனது பெருந்தேவி ஓலோகமாதேவியால் கட்டப்பட்டது. அங்கிருந்து தளிச்சேரிப் பெண்களைப் பெறுவது, அத்தேவியார்க்கு உவப்பை உண்டாக்கும் எனும் எண்ணம் பற்றிய தாகலாம். திருஞானசம்பந்தர் தமது திருவையாற்றுத் திருப்பதிகத்தில்,

"காந்தார மிசையமைத்துக் காரிகையார்
பண்பாடக் கவினார் வீதி" (1.51.6)

"தேரோடு மரங்கேறிச் சேயிழையார்
நடம் பயிலுந் திருவையாறு" (1.51.5)

கோலோடக் கோல் வளையார் கூத்தாடக்
குவிமுலையார் முகத்தினின்று
சேலோடச் சிலையாடச் சேயிழையார்
நடமாடுந் திருவையாறே (1.51.9)

வலம் வந்த மடவார்கள் நடமாட
முழவதிர மழையென்றஞ்சிச்
சிலமந்தி யலமந்து மரமேறி
முகில்பார்க்குந் திருவையாறே (1.51.1)

எனப் பலவாறு பாடியருளியதன் மூலம் திருவையாற்றின் தலப் பெருமையையும், அங்குத் தேவரடியார்கள் திறம்பட நிருத்தப் பணியாற்றி வந்ததையும், அடியார் கூட்டங்களிலேயே அதிகமான சமூக அந்தஸ்தும், பெருமையும் கொண்டவர்கள் வாழ்ந்து வந்ததையும் ஞானசம்பந்தர் நமக்குத் தெரியப்படுத்துகிறார். ஆரம்பத்தில் தெய்வப் பணியே தங்களின் முழுமுதற் பணியாக மேற்கொண்ட காலத்தில் உயரிய சிறப்பும், மிகுந்த மரியாதையும் பெற்று விளங்கியுள்ளார்கள் என்பதை நமது இலக்கியங்களும், வரலாற்றுச் சான்றுகளும், கல்வெட்டுக் குறிப்புக்களும் குறிப்பிடுகின்றன.

அக்காலத்தில் தேரோட்டம் போன்ற கோயில் திருவிழாக் காலங் களிலும், சில கோயில் சடங்குகள் மற்றும் பூஜைகளின் போதும் இறைவன் திருஉலா சென்று வருகையில், உருத்திர கணிகையர் எனும் தேவரடியார்கள் வலம் வந்து, நாற்சந்திகளிலும், இறைவன் புறப்பாடு போன்ற சமயங் களிலும் கும்மி, கோலாட்டம் மற்றும் அபிநயித்தல் போன்ற நிருத்தப் பணிகள் மேற்கொள்வது இறைவழிபாட்டின் அம்சமாகக் கருதப்பட்டது. எனவே சம்பந்தர் 'வலம் வந்த மடவார்கள்' என்பதாகத் தெரியப்படுத்துகிறார்.

சைவ சமயத்தின் ஆகமங்கள் உருத்திர கணிகையரின் கோயில் பணிகள் என்னவென்பதைப் பற்றி விரிவாக எடுத்துரைக்கின்றன.

இப்பெண்கள் திருக்கோயில் இறைவன் எழுந்தருளும் காலத்தில் அபிநயித்துத் திருநடனம் செய்தல், விளக்கு எரித்தல், மாலை தொடுத்தல், மெழுகிடல் முதலான திருத்தொண்டுகள் செய்தனர். ஆகமங்களில் விதித்தவாறு திருக்கோயில் அமைந்துள்ள இறைவனது உருவத் திருமேனியைப் பொருள் என்று உணர்ந்து திருக்கோயிலில் அலகிடல், மெழுகிடல், புகழ்ந்து பாடுதல் முதலிய உடம்பின் தொழில் களாக நிகழ்வது சரியை என்ற நன்னெறியின் அடிப்படையில் ஒழுகக் கூடியதாகும் என்பதைச் சம்பந்தர்,

"துண்ணென விரும்பு சரியைத் தொழிலர்
தோணிபுரமாமே" (3.81.7)

கீதத்தை மிகப்பாடும் அடியார்கள் குடியாகப்
பாதத்தைத் தொழநின்ற பரஞ்சோதி (2.43.5)

"நாடகமாக வாடி மடவார்கள் பாடு" (2.223.3)

"பண்ண வண்ணத்தாராகிப் பாடலொ டாடலறாத" (2.228.4)

"பண்ணியாழ் பயில்கின்ற மங்கையர்
பாட லாடலொடார வாழ்பதி (2.187.9)

"கருந்தடங் கண்ணின் மாதராரிசை செய்யக்
காரதிர்கின்ற பூம்பொழிற்" (2.188.1)

எனுந் திருப்பதிகங்களால் தெளிவுபடுத்துகிறார்.

"புலர்வதன்முன் அலகிட்டு மெழுக்குமிட்டுப்
பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்துபாடித்
தலையாரக் கும்பிட்டுக் கூத்துமாடிச்
சங்கரா சயபோற்றி போற்றியென்றும்" (6.31.3)

இவ்வாறு திருநாவுக்கரசரும் தமது திருமுறையில் விளக்குகிறார்.

திருக்கோயில்களில் திருத்தொண்டு புரியும் பெண்களுக்கு ஏனைய பணிகளால் கிடைக்கும் நற்பயன்களைக் காட்டிலும் கீதம் மிகப் பாடும்போது (அடியார்களுக்கு) அளவற்ற பயன்கள் கிடைக்கும் என்பதைக் கீழ்வரும் பாடல் புலப்படுத்துகிறது.

"விளக்கினால் பெற்ற இன்பம் மெழுக்கினாற் பதிற்றியாகும்
துளக்கில் நன்மலர் தொடுத்தல் தூயவிண்ணேற் றலாகும்
விளக்கிட்டார் பேறுசொல்லின் மெய்நெறி ஞானமாகும்
அளப்பில கீதஞ் சொன்னார்க்கு அடிகள்தாம் அருளுமாறே".

தேவார ஆசிரியர்கள் காலத்தில் தென்னகத் திருக்கோயில்களில் இறைவனைச் சேவித்துத் தெய்வப் பாடல் பாடும் மகளிர் இனிய

இசைமொழியும், உடல் வனப்பும், தூய்மையும், நற்குணங்கள் எல்லா வற்றுக்கும் இடனாகிய உள்ளத் தூய்மையும் ஒருங்குடையராய், இன்னிசைச் செழும் பாடல்களை இறைவன் திருமுன்னர் பாடிப் போற்றினார்கள். இச்செய்தியானது,

"பண்ணினல்ல மொழியார் பவளத்துவர் வாயினார்
எண்ணினல்ல குணத்தார் இணைவேல் வென்ற கண்ணினார்
வண்ணம்பாடி வலிபாடித்தம் வாய்மொழி பாடவே
அண்ணல் கேட்டுந்தானும் ஐயாறுடை ஐயனே" (2.6.4)

என வரும் திருப்பதிகத்தில் பதிவாகியுள்ளது.

நக்கீரர் கூட திருமுருகாற்றுப்படையில் தூய உடை உடுத்திய மகளிர் பாடுவதை

"மாசில் மகளிரோடு மறுவின்றி விளங்க"
(திருமுருகு. 138-147)

எனக் குறிப்பிடுகிறார்.

திருக்கோயில்களில் நாள் வழிபாட்டில் இறைவனுக்குத் திருமஞ்சனமும், நறுமலரும், திருவமுதும், தீபதூபமும், நான்மறை முழக்கமும், அந்தணர் வேள்வியும் இன்றியமையாதது போலவே இறைவனது மெய்ம்மையான புகழ்த்திறங்களைப் பாடல்களால் பாடிப் போற்றும்போது பக்தி விளை கிறது. இனிய பாடல்களை யாழ், வீணை, முழவு, மொந்தை போன்ற இசைக்கருவிகளின் துணையோடு பாடும் அடியார் கூட்டத்தை விட்டு இறைவன் கணப்பொழுதும் பிரியாது அருள்புரிவான் எனப்படுகிறது.

பாடல் வீணை முழவங்குழன் மொந்தை பண்ணாகவே
ஆடுமாறு வல்லானுமை யாறுடை யையனே! (1.51.1)

திருப்பிரமபுரம் திருப்பதிகத்தில் சம்பந்தர்,

"பண்ணி னேர்மொழி மங்கை மார்பிலர்
பாடியாடிய வோசை நாடொறுங்"

எனக் குறிப்பிடுகிறார்.

"ஆடற்கலைக்கு தலைமைக் கருவியாகத் திகழ்வது முழவமே". முன்பு ஆடலுக்குக் குடமுழவம் போன்ற கருவிகள் இசைக்க ஆடல் மகளிர் ஆடினார்கள். தமிழகத்தின் மிகப்பெரிய கோயில்களின் சிற்பங்கள் முழவு இசைப்பதையும், இசைக்கு ஏற்ப ஆடும் அணங்குகளையும் கொண்டிருப்பது நமது இலக்கிய செய்திகளுக்குக் கண்வழிக் காணும் நேரடிச் சான்றுகளாகும்.

"கொட்ட முழவு விட்டவடி வட்டணைகள்
கட்ட நடமாடி" (3.333.4)

வட்டணை எனும் நாட்டிய மரபு முழவம் கொட்ட ஆடப் பெறும் என்பது தெளிவாகிறது. **'காலுயர் வட்டணை இட்டு நட்டம்'** எனக் காரைக்காலம்மையும் தமது திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகத்தில் பாடுகிறார். ஈசனின் திருத்தாண்டவத்துக்கும், அவன் திருமுன் கணிகையர் ஆடும் ஆடலுக்காகவுமே குடமுழவம் தோற்றுவிக்கப்பட்டதாகத் தொன்னூல்கள் குறிக்கின்றன.

**"நாட்டிய காலத்தில் குடமுழவம் பாரசைவனால்
ஒலிக்கப்படுவது உத்தமம்"**

என பஞ்சமுக வாத்ய லக்ஷணம் என்ற பழைய ஓலைச்சுவடி குறிப்பிடு கிறது. ஆடல் முழவம் அதிரக் கண்டேன் என்பது நாவுக்கரசரின் வாக்கு.

ஆடற்கலைக்குச் சதி (ஜதி) என்பது உயிர்நாடியாகும். நாட்டியத்துக்கு இசையுடன் இயைந்து பயன்படுத்தப்படும் சொற்களைச் சொற்கட்டு என்பர். நட்டுவனார் சதி சொற்களைப் பேசி ஆடற்கலைக்கு உயிரூட்டுவார். இச்சொற்கட்டுகட்கு இயைய, வாத்தியக் கலைஞர்கள் வாத்தியத்தில் பேச வேண்டும் 'கை', 'தை', 'தைய்ய' போன்ற சொற்கள் பயன்படுத்தப்படும்.

சதிபாட மா நடமாடி எனவும்,

**விதிவழி மறையவர் மிழலை யுளீர்நடம்
சதிவழி வருவதொர் சதிரே
சதிவழி வருவதொர் சதிருடை யீருமை
அதிகுணர் புகழ்வது மழக.** (3.356.2)

எனவும் ஞானசம்பந்தர் பாடுவதிலிருந்து முந்தைய **சதிர் நாட்டியம்** என்பதன் வரையறைக்கு நல்லதொரு விளக்கமாக அமையப் பெற்றுள்ளது. சதிர் என்பதற்கு அழகு என்றும் பொருள் கொள்ளப்படும். ஆதலின், ஆடற்கலை போன்ற நிகழ்வுக் கலைகள் அழகுணர்ச்சியால், அனை வரையும் மகிழத்தக்க வகையில் போற்றப்படத் தக்கவை என்பது புலனாகிறது.

திருஞானசம்பந்தர் தமது திருவையாறு பதிகத்தில்,

**"தேந்தா மென்றரங்கேறிச் சேயிழையார்
நடமாடுந் திருவையாறே"** (1.51.6)

தேம், தாம் என்ற ஜதிச் சொற்களைப் பயன்படுத்துகிறார். இசை பற்றிய தொன்மையான கல்வெட்டுக்கள் ஈரோடு மாவட்டம் அறச்சலூர் மலையில் உள்ள சமணர் குகையில் கிடைத்துள்ளன. அவை கி.பி. இரண்டாம்

நூற்றாண்டில் எழுதப்பட்ட சொற்கட்டுக்கள் ஆகும். இசைக்கும், நடனத்துக்கும் பொதுவான குறியீட்டுச் சொற்களைக் கொண்டுள்ளன.

தா	தி	தா	தி	தா
தி	தா	தெ	தா	தி
தா	தெ	தி	தெ	தா
தி	தா	தெ	தா	தி
தா	தி	தா	தி	தா

மேற்கண்ட கல்வெட்டு 1960-ல் கண்டுபிடிக்கப்பட்டது. தாளத்திற்கும், இசைக்கும் ஏற்ப எழுத்துக்களைப் புணர்ப்பது சிலப்பதிகார காலத்தி லிருந்தே தமிழ்நாட்டில் வழங்கிய பண்பு என்பது தெளிவாகும். அந்த வகையில் தேவார மூவரும் தமது திருப்பதிகங்களில் ஜதிச் சொற்களைச் சேர்த்திருப்பதில் வியப்பொன்றுமில்லை. இந்நிலையானது அருணகிரிநாதர் காலத்தில், அவரது பெரும்பாலான பாடல்கள் சதிச் சொற்கட்டுக்களாக நிறைந்து விளங்குவதை, நம்மால் கால ஓட்டத்தில் கலைகளின் வளர்ச்சி யாகக் காண இயலுகிறது.

இக்கட்டுரை தேவாரக் காலத்தில் கோயில் பெண்கள் எனப்படும் தேவரடியார்கள் பெற்றிருந்த சமூக ஏற்றத்தையும், புகழையும், அவர்தம் திருத்தொண்டு இறைவழிபாட்டில் எத்தகைய மகிமை பெற்றிருந்தது என்பதையும், அக்காலத்தில் சதிர் நாட்டியத்துக்கான ஜதிச் சொற் கட்டுக்கள் இலக்கியங்களிலும், கல்வெட்டுக்களிலும் இடம்பெற்றிருப்பதைப் பற்றியும் எடுத்துரைக்கின்றது. மேலும் ஆடலும் பாடலும் ஆண்டவனை அடைவதற்குரிய கருவிகளாக திகழ்ந்தன என்பதையும் இக்கட்டுரை தெளிவுபடுத்துகிறது. சம்பந்தர் காலத்தில் சைவ சமய வளர்ச்சிக்கு மகளிர் பெரும்பங்கு ஆற்றியுள்ளனர் என்பதை மீளாய்வு செய்கின்ற போதும், மேலாய்வு செய்கின்ற போதும் அரிய உண்மைகள் வெளிப் படும் என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை. கத்தோலிக்கக் கிறித்தவ சமயத்தின் கன்னியர் சபைப் பெண்களைப் போல, நமது திருக்கோயில் களில் சமயம் தழைக்க, கோயில்கள் பொலிவுடன் விளங்க, தளிச்சேரிப் பெண்டுகள் தொண்டு செய்து மகிழ்ந்திருக்கின்றனர். கிறித்தவ சமயத்தில் உள்ளது போல நிறுவன அமைப்பு இந்து சமயத்தில் இல்லாமற் போனதால், பிற்காலத்தில் தேவரடியார் முறை மாசுபடக் காரணமாயிற்று.

73. பாண்டி நாட்டில் சம்பந்தர் புரட்சி

கு. மங்கையர்க்கரசி, சென்னை.

மூவர் முதலிகளுள் வயதால் இளையவர்; ஆனால் புரட்சி மிகுந்த கருத்துகளால் மேம்பட்டவர் திருஞானசம்பந்தர். சமய காலத்தில் ஆன்மிகப் புரட்சி விளைவித்தவர் ஆளுடைய பிள்ளை என்று கூறின் மிகையாகாது. பரசமயத்தின் கோளரி; அதே வேளையில் அகச்சமயமாம் வைணவம், வைதிகம் ஆகியவற்றின் முனைப்புடைய விமர்சகர். சுருங்கக் கூறின் தமிழ்க்கலை, நாகரிகம், பண்பாடு, தமிழ் ஆன்மிக மரபு ஆகிய வற்றின் மிகச் சிறந்த பாதுகாவலர். இவற்றை எவரெல்லாம் உராய்ந்து பார்க்கிறார்களோ, இவை எங்கெல்லாம் அழுந்தப்படுகிறதோ அங்கெல்லாம் சிறு புயலாய்ச் சீறி, பெரும் அரணாய் நின்று காத்தவர். 'வருபுனல் தாங்கும் ஒரு சிறை போல' என்று தொல்காப்பியம் பொருளதிகாரத்தில் கூறுவதுபோல் தனிமனித இராணுவமாய் நின்று தமிழ்க்கலை காத்த வள்ளல் காழிவேந்தர்.

சித்தர்கள், தீர்க்கதரிசிகள் போன்றோர், அருஞ்செயல் (அற்புதம்) வெளிப்பாட்டினைக் காட்டுகின்றவர்களே. இயேசு பெருமானின் முதல் அற்புதம்கூட கிறித்தவ மறையில் வியந்து பாராட்டப் பெறுகிறது. அந்த வகையில் ஞானசம்பந்தர் தம் குறுகியகால உலக வாழ்வில் நிரம்பிய அற்புதங்களைப் புரிந்தவர்; அம்மையின் ஞானப் பாலுண்டு பொற்றாளம் பெற்றது முதல் சோதியில் கலத்தல் ஈறாக ஏறக்குறைய இருபது அற்புதங் களைக் காட்டியவர். இவற்றுள் மூன்று அற்புதங்களைப் பாண்டி நாட்டில் வெளிக்காட்டினார்.

பாலறாவாயரின் பாண்டி நாட்டு வருகை பரசமயத்தார்க்கு இடியென ஆயிற்று. இருளின் அடர்த்தி பின்னலில் தெரிவதைப்போல் பரசமய இருள் ஞான வள்ளலில் சைவ ஒளியால் பட்டுப்போனது. அகச் சமயத்தாரையும், புறச் சமயத்தாரையும் ஒருங்கே வெற்றிகண்ட இளைய முதலிக்குக் கைகொடுத்த ஆயுதம் தமிழ் ஒன்றே; ஆம்; தமிழும், தமிழக ஆன்மிக மரபும்தான், சம்பந்தப் பெருமானைத் தனிப்பெரும் வீரராக்கியது. விவேகம் இல்லாத வீரம், வீரம் இல்லாத விவேகம் இரண்டுமே வீண். ஆன்மிக வீரத்தின் கூர்மை ஆயுதக் கூர்மையைவிட அழுத்தமாகச் சம்பந்தர் மனத்தில் இருந்தது. அதை அவர் சொற்றமிழில் பாய்ச்சினார். தமிழும் தமிழ் மரபும் தந்த வீரத்தை மீண்டும் தமிழ்ப்

பாட்டாலேயே-தமிழ்ப் பாட்டாகவே வெளிப்படுத்தித் தமிழுக்கு நன்றி காட்டியவர் சம்பந்தர். இந்த அடித்தளங்களுடன்தான் ஞானப் பெருமகனின் பாண்டி நாட்டு வருகையை அறிய வேண்டும்; அவர் நிகழ்த்திய புரட்சியைப் புரிந்து கொள்தல் வேண்டும்.

திருஞானசம்பந்தர் வாழ்ந்த காலகட்டத்தில் தமிழகத்தில் குறிப்பாகப் பாண்டிய நாட்டில் சமணம் செழித்தோங்கிய நிலையில் இருந்தது. அக்காலத்தில் பாண்டிய நாட்டை ஆட்சிபுரிந்த மன்னன் நெடுமாறன் ஆவான்; அவன் மனைவி சோணாட்டு மன்னன் மகள் மங்கையர்க்கரசியார்; மன்னனின் அமைச்சராகக் குலச்சிறையார் இருந்தார். இவர்களுள் பாண்டிய மன்னன் மட்டும் சமணத்தைத் தழுவி இருந்தான். மக்களின் சமயநிலை எதுவெனத் தெரியவில்லை. 'மன்னன் எவ்வழி; மக்கள் அவ்வழி', என்னும் கருத்து, பாண்டிய நாட்டைப் பொறுத்தவரையில், சமயத்தைத் தழுவும் நிலையில் பொய்யாகி இருக்கலாம். ஏனெனில் சமணத் துறவிகளின் வாழிடங்கள் ஆங்காங்கே இருந்தனவே தவிரப் பாண்டி நாட்டு மக்களிடம் சமண சமய எழுச்சி பரபரப்பாகத் தெரியவில்லை. எனினும் அக்கால கட்டத்தில் சைவக் கோயில்களும் பாண்டிய நாட்டில் மிகுதியாக இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. சம்பந்தர் வாழ்ந்த காலத்தில் சோணாட்டில் 190 கோயில்களும், தொண்டைநாட்டில் 32 கோயில்களும் நடுநாட்டில் 22 கோயில்களும் இருக்க, பாண்டிய நாட்டில் 14 கோயில்கள் மட்டுமே இருந்தன. இப்புள்ளி விவரம் எதைக் காட்டுகிறது? பாண்டிய நாட்டில் மக்களிடையே சமணம் செல்வாக்குப் பெற்றதோ இல்லையோ, சைவம் கவர்ச்சிகரமாக வளரவில்லை என்பதையே காட்டுகிறது. கோயில் கட்டுவதும் குளங்கள் வெட்டுவதும் அக்கால கட்டத்தில் மன்னனின் செயலாகவே இருந்ததாலும், மன்னன் சமண சமயத்தைத் தழுவி இருந்ததாலும் சைவக் கோயில் வளர்ச்சிக்கு வழி இல்லாமல் போய் விட்டது என்றே கொள்ளல் வேண்டும். அதே வேளையில் சமணமும் மக்களிடையே தீவிரமாக வளர்ந்து மக்கள் சமயமாக மாறாமல் இருந்ததற்குக் காரணம் பாண்டிமா தேவியும், அமைச்சர் குலச்சிறையாரும் தீவிர சைவப் பற்றுடையவர்களாக இருந்தமை ஆகலாம். பாண்டிய அரசனின் புறச்சமய தாகமும் அரசியின் அகச் சமய வேகமும் மக்களிடையே சமய மயக்கத்தை ஏற்படுத்தியது என்றே கொள்ளல் வேண்டும். இந்தக் சூழலில்தான் காழிப் பிள்ளையார் பாண்டிய நாடு செல்கின்றார்.

சோணாடு, தொண்டைநாடு, நடுநாடு ஆகிய நாடுகளில் உள்ள திருத்தலங்கள் சம்பந்தரால் பாடப்படுவதை அறிந்தும், அருஞ்செயல்கள் பல அவரால் நிகழ்த்தப் பெறுகின்றன என்பதை உணர்ந்தும் மதுரையம்பதிக்கு அவரை அழைத்துவர உறுதிபூணுகிறார் பாண்டிமாதேவி. அந்த வகையில் அவர் ஓர் அரசிக்குள்ள உரிமையைத் தக்க வைத்துக் கொண்டார் என்றே

கூறவேண்டும். தாம் மனப்பூர்வமாக ஏற்றுக் கொண்ட கொள்கையில் எவர் உடன்படுகின்றார்களோ அவர்களுக்கே முதல் மரியாதை என்பதையும் பாண்டிய நாடு சென்றதும் சம்பந்தர் உறுதிப்படுத்தினார். எப்படி? திருவாலவாய் எது என்பதைக் குலச்சிறையார் மூலம் தெரிந்து கொண்டவுடன் காழிவேந்தர் மங்கையர்க்கரசியார் திருப்பதிகம் தான் பாடினாரேயன்றிப் பாண்டிய மன்னன்மேல் பதிகம் பாடவில்லை; நிற்க.

புகலிவேந்தரின் பாண்டி நாட்டு வருகை ஒருசேர இரு பயன் விளைவித்தது. சமணர்க்குத் தீ நிமித்தமாகவும், பாண்டிமாதேவிக்கு நன்னிமித்தமாகவும் அமைந்தது. மதுரையம்பதியில் உள்ள ஆனைமாமலை முதலிய இடங்களில் வசிக்கும் அமணர்கள் சம்பந்தரின் வருகையைத் தங்கட்கு வரப்போகும் அழிவின் அறிகுறியாகக் கருதினர். தீக்கனவும், துன்னிமித்தங்களும் அவர்களை நிலை குலையச் செய்தன. ஆந்தையும் கூகையும் அலறி அவர்களின் அழிவைச் சுட்டின. இருட்கூட்டம் ஒருங்கு கூடுவதைப்போல் சமணர்கள் அனைவரும் ஒருங்கு கூடி மன்னனைக் காணவேண்டும் என்று திட்டமிட்டனர்; அவ்வாறே கண்டனர். மந்திர உச்சாடனங்களைக் கூறிக் காழிவேந்தர் தங்கியிருந்த மடத்தைத் தீப்பற்றச் செய்வதற்கு ஒப்புதலும் பெற்றுவிட்டனர்.

சமணர்களையோ, பாண்டிய மன்னரையோ நேரில் காணாமல் புகலியர்கோன் பாண்டிய மண்ணில் கால் வைத்த தருணத்திலேயே சமணர்களின் உள்ளம் நெருப்பாகப் பற்றிக் கொண்டது; அமைதி பறி போயிற்று; ஆயிரம் காக்கைக்கு ஒரு கல் என்பதுபோல ஒரு ஞானத் தமிழன் பரசமயத்துக்குப் பரம வைரியாகி விட்டான். பின்னால் நிகழ விருக்கும் அனல் வாதமோ புனல் வாதமோ எதுவும் நடக்காத நிலை யிலேயே சமணர்கள் நிலை குலைந்து விட்டனர். பொலிவிழந்து விட்டனர். ஞாலமளந்த தமிழின் தொட்டிலாய் நான்மாடக் கூடலில் ஞானப்பெரு வள்ளல் நிகழ்த்திய முதல் புரட்சி இது, சென்றேன்; கண்டேன்; வென்றேன் என்பது இவருக்கல்லவோ பொருந்தும்!

முதல் தோல்வி முற்றிலும் தோல்வி என்பதற்கிணங்க, சமணர்கள் மனத்தளவில் வலுவிழந்து விட்டதால் அடுத்தடுத்து அவர்கள் அறிவு பூர்வமாகச் செயற்படவே முடியவில்லை. புடைசூழப் புகலியர்கோன் தங்கியிருந்த திருமடத்தை எரித்துச் சாம்பலாக்கும் பொருட்டுச் சமணர்கள் மந்திர உச்சாடனம் செய்தும் ஒன்றும் நிகழாதது கண்டு திருமடத்துக்குத் தீயிட்டனர். இதனைக் கண்டு சிந்தை தடுமாறிய சிவனடியார்கள் சீகாழி வேந்தரிடம் முறையிட்டனர். பஞ்சாட்சர மந்திரத்தைப் பற்றுக் கோடெனக் கொண்டிருந்த காழியார் நடந்தது கேட்டு வெகுளவில்லை. ஆடியவர்கள் இவர்களென்றால் ஆட்டுவித்தவர் எவராக இருக்கக் கூடும் என்று கருதினர். கருத்தா இருக்கக் கருவியை நோவானேன்? ஆட்டுவித்தவனை

நோக்கி அம்பைத் திருப்பி விட்டார். அது பாண்டிய மன்னனைப் பற்றிக் கொண்டது. எரிதழலின் வெம்மை பாண்டியனுக்கு வெப்பு நோயாக மாறியது. இது ஞான விரகர் விளைவித்த இரண்டாவது புரட்சி - சோதனை. ஆம்; இதைச் சோதனை என்றுதான் சொல்ல வேண்டும். ஏனெனில் பாண்டியனைப் பற்றியிருந்த சமணமெனும் மனக் கூனைச் சைவமெனும் நெம்புகோல் வெகு விரைவில் நிமிர்த்திவிடும் என்பதை உணர்ந்தவரல்லவா ஞான வள்ளல்.

மன்னவனின் வெப்பு நோய் நீக்கச் சமணர்கள் மேற்கொண்ட முயற்சி வீணாயிற்று. மன்னன் மீது நீவிய மயிற்பீலி எரிதழலாயிற்று; உச்சரித்த மந்திரங்கள் உதவாதவை ஆயின; 'அருகனே காப்பாற்று' என்று கூறி அள்ளித் தெளித்த குண்டிகை நீர் குண்டத்தில் சொரிந்த நெய் ஆயிற்று. மன்னனின் துன்பம் பன்மடங்கு பெருகியது. அரசியும், அமைச்சரும், பதறியடித்துக் கொண்டு காழியர் கோனை அழைத்து வரப் பணித்தனர். புவி மன்னர் இருக்குமிடத்தை நோக்கிக் கவி மன்னர் வந்தார். பாண்டிமாதேவியும், அமைச்சரும் அவரை ஞானத்தின் திருவுருவாய், நான்மறையின் தனித்துணையாய், மண்ணில்வளர் மதிக் கொழுந்தாய், செஞ்சடையார் சீர்தொடுக்கும் சிவப்பழமாய்க் கண்டனர். கவுணியக் கொழுந்தின் விழி நோக்கமே வேந்தனின் வெப்பு நோய்க்கு முதல் மருந்தாயிற்று, அவர் அரசன் முடியருகே தமனியப் பீடத்தில் அமர்த்தப் பெற்றார். அவரவர் தெய்வத் தன்மையால் தன் நோயை நீக்கச் சமணர்களிடமும், சம்பந்தரிடமும் வேண்டினார். சமணர்கள் வாம பாகத்தில் மந்திரம் செய்து மயிற்பீலியால் தடவினர்; மன்னன் வெப்பு நோய் மடியவில்லை. சம்பந்தர் பெருமான் 'மந்திரமாவது நீறு' என்னும் பதிகம் பாடித் தன் திருக்கரத்தினால் மன்னனின் வலப்புறத் தோளைத் தடவினார்; மன்னனின் வெப்பம் தணிந்து குளிர் பொய்கை போல் ஆயிற்று. ஆனால் வலப்புறத்தே இருந்த வெப்பு நோய் இடப்புறம் தாவி இருமடங்காயிற்று; சமணர்களை நோக்கியும் வெப்பம் பாய்ந்தது. உழிந்ததை எடுத்து உண்ண வேண்டிய நிலை சமணர்க்கு ஏற்பட்டது, இப்போது சம்பந்தர் மன்னனின் இடப்புறத் தோளிலும் நீறுதடவ, வெப்புநோய் இருந்த இடம் தெரியாமல் விலகிற்று.

சம்பந்தரைப் பொறுத்தமட்டில் பாண்டிய நாடு வந்ததன் திருநோக்கம் இந்த ஒரு நிகழ்வாலேயே நிறைவெய்திற்று. மன்னனே சைவத்தைத் தழுவத் தலைப்பட்ட பின்னர் சமணர்களுக்கு அங்கென்ன வேலை? இருப்பினும் வேறுசில அருஞ்செயல்களையும் செய்து காட்ட வேண்டிய தேவை சம்பந்தருக்கு ஏற்பட்டது. சமணர்களின் ஆணவத்தைக் கருவறுப்பது தான் இறைவனின் திருவுளமோ? அதைச் சம்பந்தரைக் கொண்டு செய்யத் துணிந்தாரோ? அதற்குரிய வாய்ப்பைச் சமணர்களின் ஆணவ வாய்மொழிகளாலேயே வெளிப்படுத்தினாரோ?

சமணரும், சம்பந்தரும் அவரவர் சமயக் கருத்தை ஏட்டிலே தீட்டி எரிதழலில் இடவேண்டும்; எவர் ஏடு எரியாமல் இருக்கிறதோ அவரே வென்றார் என்னும் உடன்படிக்கை இருவரிடையே ஏற்பட்டது. இதிலும் சம்பந்தரே வென்றார் இவ்வாறே, வைகை ஆற்றில் சமயக் கருத்துகளடங்கிய ஏட்டினை விட்டு எது எதிர் நீச்சலடித்து முன்னேறி வருகிறதோ அவ்வேட்டுக்குரியரே வெற்றியர் என்னும் உடன்படிக்கை யிலும் பாலறாவாயாரே வென்றார். இவையெல்லாம் மதுரையம்பதியில் நிகழ்ந்த அற்புதங்கள்.

அனல் வாதம் புனல் வாதத்தில் தோற்ற பின்னர் சமணர் கூட்டாக எண்ணாயிரவர் தாமே உடன்பட்டுக் கழுவேறினர் என்ற குறிப்பை அறிகிறோம். பாண்டிய மன்னனைச் சைவனாக்கியதைப் போலவே சமணர் களையும் சைவம் தழுவச் செய்திருக்கலாம்; அல்லது மன்னித்து விட்டிருக் கலாம். ஆனால் அவர்கள் கழுவேறுதற்கோ கழுவேற்றுதற்கோ ஞானப் பெருமகன் எப்படி உடன்பட்டார் என்பது இன்னும் விளங்கவில்லை. மேலும் தமிழக வரலாற்றில் கழுவேற்றிக் கொல்லும் தண்டனை முறையை இந்நிகழ்ச்சிக்கு முன்னும் பின்னும் கண்டதில்லை. எனவே இதன் வரலாற்றுண்மையை ஆய்வாளர்களே உறுதிப்படுத்த வேண்டும்.

காழி வள்ளலாரின் பாண்டிய நாட்டு வருகை சமணர்களை அடக்குதற்கு மட்டுமன்று . பாண்டியனை அமண்வழி நீக்கிச் சிவ வழி நடத்துதற்கு மட்டுமன்று; முடிந்த அளவு பாண்டி நாட்டுத் திருத்தலங் களைப் பாடுதற்கும் ஆம். பாட்டுடை வேந்தர் பாண்டிய வேந்தரையும், பாண்டிமாதேவியையும் குலச்சிறையாரையும் உடனழைத்துக் கொண்டு திருப்பரங்குன்றம், திருவாப்பனூர், திருப்புத்தூர், திருப்பூவணம், திருக்கானப்பேர், திருச்சுழியல், திருக்குற்றாலம், திருக்குறும்பலா, திருநெல்வேலி முதலிய திருத்தலங்கள் சென்று பதிகம் பாடினார்; இறுதியில் இராமேசுவரம் சென்று அங்கிருந்து கொண்டே ஈழ நாட்டுத் திருத்தலங்களை நினைந்து திருப்பதிகம் பாடினார். பின்னர் அங்கிருந்து திரும்பிய காலை, குலச்சிறையாரின் பிறந்த ஊராகிய மணமேற்குடியில் தங்கிவிட்டுச் சோணாடு திரும்பினார்.

சைவம் தழைத்தோங்குவதும், சிவப்பெயர் நிலைப்பதுவும், அதைத் தம் தமிழ்ப் பாட்டால் நிலை நிறுத்துவதுமே ஆளுடைய பிள்ளையின் வாழ்நாள் குறிக்கோள். இக்குறிக்கோளுக்குக் குறுக்கீட்டாக வருவோர் சமண, பௌத்தர், வைணவர், வைதிகர் எவராயினும் அவர்களைத் தம் தமிழ்ப் பாட்டால் வீழ்த்தினார். பழஞ் சைவத்தை நிலை நிறுத்தினார். பாண்டிய நாட்டில் மட்டுமன்றிச் சென்றவிடமெல்லாம் ஞானசம்பந்தர் புரட்சியின் வடிவமாகவே விளங்கினார். ஆம்; ஏழாம் நூற்றாண்டுச் சமய வரலாற்றில் இவர் ஒருவர் மட்டுமே பூத்த புரட்சி வடிவம்.

74. நமசிவாய மந்திரத்தின் சிறப்பு

ஆ. மரகதம், கோவை.

உலகெலாம் உணர்ந்து ஓதற்கரிய செம்பொருளை அடைதற்கு நமச்சிவாய மந்திரமும் திருநெறிய தமிழும் உதவுகின்றன. மந்திரம் என்பது யாதெனில் நினைப்பவரைக் காப்பது. அதனை ''நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளர்ந்த மறைமொழி தானே மந்திரம் என்ப'' என்கிறது தொல்காப்பியம். அது சிவமந்திரம் ஆகும். உலகத் தோற்றத்தை நோக்கும் பொழுது ''புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகி பல்விருகமாய் பறவையாய்ப் பாம்பாகிக் கல்லாய் மனிதராய் பேயாய் கணங்களாய் வல்லசுரராய் முனிவராய்'' பரிணமித்துள்ளது தெரிய வருகிறது. உலகம் தோன்றி அன்று முதல் இன்று வரை உயிர்கள் தம்மில் மேம்பட்டு வளர்ந்து வந்துள்ளதை மேற்கண்ட திருவாசக வரிகள் உணர்த்துகின்றது. இன்றைய விஞ்ஞான உலகம் மிகப்பெரும் வளர்ச்சி பெற்றுள்ளது. இருந்தாலும் மெய்ஞ்ஞானமே உயர்வுடையது என்பது வெள்ளிடை மலை. அந்த மெய்ஞ்ஞானத்தில் சிறந்தோங்கி நிற்பது உயிர்க்குறுதி பயப்பது, மேன்மை அருளுவது, துன்ப நீக்க இன்ப ஆக்கத்திற்குரியது. இவ்வுலகியல் வாழ்விலும் ஆன்ம நிலையிலும் ஏற்றம் தரவல்லது ஒன்று உண்டெனில் அது நமச்சிவாய என்னும் சிவமந்திரம் ஆகும். அதனை ஞானவாணர் மணிவார்த்தை என்றும் பஞ்சாக்கரம் என்றும் ஐந்தெழுத்து என்றும் கூறுகின்றார். அது திருவைந்தெழுத்து என்று போற்றப்படுவது. அந்த நாதம் எவ்வாறு உயிர்க்குறுதி பயக்கிறது என்பதை திருஞானசம்பந்தப் பெருமான், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்தி சுவாமிகள், ஆதிய அருளாளர்கள் பலர் எடுத்துரைக்கக் காண்கிறோம்.

நமச்சிவாய மந்திரத்தின் உண்மைப் பொருள் யாதெனில் சிவம் எனும் செம்பொருள். குறைவிலா நிறைவாய்க் கோதிலா அமுதாய் எண் பெருங்குணமுடைக் குணக்குன்றாய் உலகப் பெருந் தோற்றத்திற்கு முன்னும் பேரொடுக்கத்திற்குப் பின்னும் நிலைத்திருக்கும் அழிவிலா ஒருவனைச் சுட்டுவதாகும். மரணமிலாப் பெருவாழ்வும் சிவமாந்தன்மையும் அளிக்கும் மந்திரம் இம்மந்திரமாகும். இது அழிவில்லா சொல். சொல்லும் பொருளும் அழிவற்றது. முத்திநெறி அறிவித்து, பத்துநெறி அறிவித்து, சித்தமலம் அறிவித்து சிவமாக்கும் மந்திரம். இம்மந்திரம் அனைத்துக்கும் முந்தியதாய் சிறந்ததாய் உண்மைப் பொருளை விளக்குவதாய் உள்ளதும்

உயிர் சிவமாந் தன்மை எய்துவதற்கு அந்தச் சிவமெனும் செம்பொருளால் வழங்கப்பட்ட மந்திரச் சொல்லே ‘சிவாயநம’ ஆகும். சிவசிவ என்னும் மாமந்திரம் செந்தமிழ்த் திருமாமறையாய் எப்பொருளும் தெளிவிக்கும் செல்லரிய ஒப்பறு மந்திரம். எனவே சிவாய என வழங்கும் மந்திர மாவது, மாமருந்தாவதும், தந்திரமாவதும், தானங்களாவதும், சுந்தரமாவதும் தூய நெறியாவதும் இறைவன் திருவடி சேர்ப்பதும் சிவயநம வென்னும் ஐந்தெழுத்தேயாகும். இதை தூல பஞ்சாக்கரம், சூக்கும பஞ்சாக்கரம், அதிசூக்கும பஞ்சாக்கரம், காரண பஞ்சாக்கரம், காரிய பஞ்சாக்கரம் எனப் பகுத்துள்ளனர். இனி நமச்சிவாயத்தின் பொருள் யாதென உணர்வோம்.

நமச்சிவாய என்பது தூல பஞ்சாக்கரம்
சிவாயநம என்பது சூக்கும பஞ்சாக்கரம்
சிவயசிவ என்பது அதிசூக்கும பஞ்சாக்கரம்

சி-சிவம்; வ-சக்தி; ய-உயிர்; ந-மாயாமலம்; ம-மலம் ஆணவம்.
ந-மாயை; ம-ஆணவம்; சி-சிவம்; வ-சக்தி; ய-உயிர்.

தூல பஞ்சாக்கரத்தின் தன்மை. ந-மறைப்பு சக்தியாகிய மாய மலம். ம-ஆணவமலம். ய-உயிர். சி-சிவம். வ-சக்தி. இதில் மறைப்பு சக்தியையும் ஆணவ மலத்தையும் குறிக்கும் நம முன் வைத்து ஓதும் பொழுது உயிர் இவையினின்று நீக்கம்பெற்று சிவசக்தியை எளிதில் அடைய ஏதுவாக இல்லை. இவ்வுலக நலன்களை எய்த ஏதுவாகும். அது இம்மைப் பயன் தரவல்லது. உயிர் மறுமையில் இறையோடு கூடி சிவமாம் தன்மையடைய சிவமாகிய சிகரத்தையும் சக்தியாகிய வகரத்தையும் முன்வைக்கும் பொழுது உயிர் எளிமையாக இறையில் கூடும். ஏனென்றால் உயிர் சார்ந்ததன் வண்ணமாகக் கூடியது. சிவசக்தியை எளிமையாய் தன்னுணர்வால் அறிந்து பேரின்பத்தில் திளைக்க ஏதுவாகும். ஆனால் நம் குரவர்கள் நவசிவாய எனும் தூலபஞ்சாக்கரத்தையே அதிக இடங்களில் சுட்டுகின்றனர். சிவசிவ மேலாம் நுண்மை தரவல்லது.

நம்முடைய சமயக்குரவர்கள் நால்வரும் அவர்தம் பாடல்களில் நமச்சிவாயத்தின் சிறப்பை நவில்கின்றனர். அதிலும் சம்பந்தப் பெருமான் இரண்டு பதிகம் ஒன்று நமச்சிவாயப் பதிகம் மற்றொன்று பஞ்சாக்கரப் பதிகம் ஆகும். மற்றை இருவரும் நமச்சிவாயப் பதிகம் பாடியுள்ளனர். அதன் பெருமை அளவிட்டுக் கூறுதல் இயலுமோ.

மணிவாசகர் திருவாசகத்தைத் தொடங்கியதே - ‘‘நமச்சிவாய வாழ்க’’ என்கிறார்- மணிவார்த்தையாரும் உய்யும் நெறிகாட்டும் ஓங்காரத்துட் பொருள் - அறிய நாம் முயலவேண்டிய தவம் எப்படி இருக்க வேண்டும் என்று ஞானசம்பந்தப் பெருமான் கூறுகிறாரென்றால்

நமச்சிவாயப் பதிகம் முதல்பாட்டில் 1. காதலாகிக் கசிந்து கண்ணீர்மல்கி ஓதுவார் தமை நன்னெறிக்கு உய்ப்பது. வேதம் நான்கினினும் மெய்ப் பொருளாவது நாதன் நாமம் நமச்சிவாயவே'' என்கிறார். இதையே மணிவாசகர் சுட்டறுத்தல் பகுதியில் 31-ம் பதிகத்தால் ''தனியனேன் பெரும்பிறவிப்பௌவா காமவான் சுறவின் வாய்ப்பட்டு இனியென்னே உய்யுமாறென்றெண்ணி. அஞ்செழுத்தின் புணைபிடித்துக் கிடக்கின்றேனை'' என்றும், ஆனந்தப்பரவசம் பதிகத்தில் 94-ம் பாடலில் ''யானேபொய் என் நெஞ்சம் பொய் என் அன்பும் பொய் ஆனால் வினையேன் அழுதால் உன்னைப் பெறலாமே'' என்கின்றார்.

சம்பந்தப் பெருமான் ஐந்தெழுத்துப் பதிகத்தின் முதல்பாட்டில் ''துஞ்சலுந் துஞ்சலிலாத போழ்தினும், நெஞ்சகநைந்து நினைமி னாடொறும் வஞ்சக மற்றபடி வாழ்த்த வந்த கூற்றஞ்சவுதைத்தன வஞ்செழுத்துமே'' என்கிறார். ''சொற்றுணை வேதியன் சோதிவானவன் பொற்றுணைத் திருந்தடி பொருந்தக் கைதொழக் கற்றுணைப் பூட்டியோர் கடலிற்பாய்ச்சினும் நற்றுணையாவது நமச்சிவாயவே'' என்று வினைப்பவத்தின்று நம்மை எடுத்துக் காத்து உய்யவைப்பது நமச்சிவாய மந்திரம் என்கின்றார்.

சுந்தரர் பெருமான் - திருபாண்டிக் கொடுமுடியைப் பாடும்பொழுது ''மற்றுப்பற்றெனக் கின்றி நின்றிருப்பாதமே மனம் பாவித்தேன் பெற்றலும் பிறந்தேன் இனிப்பிறவாத தன்மை வந்தெய்தினேன். கற்றவர் தொழுதேத்தும் சீர்க்கறையூரிற் பாண்டிக் கொடுமுடி நற்றவா உனைநான் மறக்கினும் சொல்லும்நா நமச்சிவாயவே'' என்று கூறுகிறார்.

பாடல் - நமச்சிவாயப் பதிகத்தில்

''நம்புவாரவர் நாவினவிற்றினால், வம்புநாண் மலர்வார் மதுவொப்பது - செம்பொனார் திலகம் முலகுக் கெலாம் நம்பனாம் நமச்சிவாயவே'' - நமச்சிவாயத்தை உருபொருளென நம்பி இறை யுணர்வுடன் எண்ணும்பொழுது இறை அற்புததாரை தொடும் அமுததாரை களை ஏற்றுவான். பஞ்சாக்கரம் பதிகம் 2-ல் ''மந்திர நான்மறையாகி வானவர் சிதையுணின்றவர் தம்மையாள்வன் செந்தழலோம்பிய செம்மை வேதியர்க் கந்தியுண் மந்திரம் அஞ்செழுத்துமே'' சிந்தையைச் செம்மை யாக்கிச் செந்நெறிப்படுத்துவது என்று கூறுகிறார்.

சுந்தரமூர்த்திகள்,

''இட்டனும் மடியேத்து வாரிகழிந்திட்ட நாள் மறந்திட்ட நாள்,
கெட்ட நாளிவையென்றலாற் கருதேன் கிளர்புனற்காவிரி,
வட்டவாசிகை கொண்டடி தொழுதேத்து பாண்டிக் கொடுமுடி,
நட்டவாவுனை நான்மறக்கினும் சொல்லுநா நமச்சிவாயவே''

என்றும், நாவரையர் தன் நமச்சிவாயப் பதிகம் பாடலில்,

"பூவினுக் கருங்குலம் பொங்கு தாமரை,
ஆவினுக் கருங்கலம் அரனஞ் சாடுதல்
கோவினுக் கருங்கலம் கோட்ட மில்லது
நாவினுக் கருங்குலம் நமச்சி வாயவே"

என்றும்,

"திருவே என் செல்வமே தேனே வானோர் செழுஞ்சுடரே"

என்ற பதிகத்தில்,

"மாற்றேன் எழுத்தஞ்சும் என்று அனாவின் மறவேன்"

என்று திருவாவடுதுறை தாண்டகத்தில் கூறுகிறார். மணிவாசகர் அற்புதப் பத்தில் இப்பிறப்பினில் இணைமலர் மலர்கொய்து நான் இயல் போடஞ்செழுத்தோதி - என்கிறார்.

ஞானசம்பந்தர் தம் நமச்சிவாயப் பதிக 3-ஆம் பாடலில்,

"நெக்குளார்வ மிகப் பெருகிந் நினைந்து
அக்குமாலை கொடு அங்கையில் எண்ணுவார்
தக்கவான வராத் தகுவிப்பது
நக்கன் நாமம் நமச்சி வாயவே"

என்றும், பஞ்சாக்கரப் பதிகத்தின் 3-ல்,

"ஊனில் உயிர்ப்பை யொடுக்கி யொண்சுடர்
ஞான விளக்கினை யேற்றி நன்புலத்
தேனை வழிதிறந் தேத்துவார்க்கிடர்
ஆன கெடுப்பன அஞ்செழுத்துமே"

என்றும், சுந்தரர் தம் பாடலில்,

"ஓவு நாளுணர்வழியு நாளுயிர் போகுநாளுயர் பாடைமேல்
காவு நாளிவை யென்றலாற் கருதேன்கிளர் புனற்காவிரிப்
பாவு தண்புனல் வந்திழிபரஞ் சோதி பாண்டிக் கொடுமுடி
நாவ லாவுனை நான்மறக்கினுஞ் சொல்லுநா நமச்சி வாயவே"

என்றும், அப்பரடிகள்

"விண்ணுற வடுக்கிய விறகின் வெவ்வழல்
உண்ணிய புகிலவை யொன்றுமில்லையாம்
பண்ணிய வுலகினிற் பயின்ற பாவத்தை
நண்ணி நின்ற றுப்பது நமச்சி வாயவே"

என்றும், என்றென்றும் காலபேதமில்லாது நமச்சிவாயத்தை ஓத வேண்டிய அவசியத்தையும் அதன் பயனையும் கூறுகின்றார். நம்முடைய புலன் களை ஒடுக்கி - ஞானவொளி ஏற்றும் திருவைந்தெழுத்து, இப்பாடல்களில்

நம் வாழ்நாளில் இம்மியளவுங் கூட ஓயாமல் நல்லநாள் கெட்டநாள் என்றுமில்லாமல் திருவைந்தெழுத்தை நினைந்தால் நம் வினையறும் என்கிறார்.

இயமன் றூதரு மஞ்சுவரின் சொலால்
நயம் வந்தோத வல்லார் தமைந ண்ணினால்
நியமந் தானினைவார்க் கினியா னெற்றி
நயனனாம நமச்சி வாயவே"

என்றும்,

"எமன் தூதுவரும் அஞ்சுவர் நெற்றிக் கண்ணுடை கோவை நியத்தே
நயத்தோடு ஓதவல்லாரை நண்ணினாலே போதும்"

என்றும், ஐந்தெழுத்துப் பதிகத்தில்,

"நல்லவர் தீயரெனாது நச்சினர்
செல்லல் கெடச் சிவமுத்தி காட்டுவ
கொல்ல நமன்தமர் கொண்டு போமிடத்
தல்லல் கெடுப்பனவஞ் செழுத்துமே"

என - யாராகிலும் நல்லார் தீயோர் என்று பாராமல் ஐந்தெழுத்தை ஓதுபவரை நமன் தமர் கொண்டு போகும்பொழுது செல்லல் கெடச் சிவமுத்தி காட்டும் என்றும், நாவரையர்,

"இடுக்கண் பட்டிருக்கினுமி ரந்தி யாரையும்
விடுக்கிற் பிரானென்று வினவு வோமல்லோம்
அடுக்கிற் கீழ்க் கிடக்கினும் அருளினாமுற்ற
நடுக்கத்தைக் கெடுப்பதும் நமச்சி வாயவே"

அதே கருத்துப்பட எக்காலத்தும் யாரையும் அஞ்சாமல் எந்தத் தீங்கும் அடையாமல் காப்பது ஐந்தெழுத்து என்கிறார்.

நாவலூரார் தம் பதிகத்தில்,

"எல்லையில்புகழ் எம்பிரானெந்தை தம்பிரானென் பொன்மாமணி
கல்லையுந்தி வளம்பொழிந்தழி காவிரியதன் வாய்க்கரை
நல்லவர் தொழு தேத்துஞ் சீர்க்கறை யூரிற்பாண்டிக் கொடுமுடி
வல்லவாவுனை நான்மறக்கினும் சொல்லும்நா நமச்சிவாயவே"

என்கிறார்.

திருஞானப் பிள்ளையார்,

"கொல்வா ரேனுங் குணம் பலநன்மைகள்
இல்லாரேனும் மியம் புவாராயிடின்
எல்லாத் தீங்கையும் நீங்குவ ரென்பரால்
நல்லா நாமம் நமச்சி வாயவே"

கொலையாளியானாலும் துர்குணமுடையவராயினும் நெக்குருகி ஐந்தெழுத்தை ஓதவல்லான் எத்தீங்கும் நீங்குவர் என்றும், 'பஞ்சாக்கரப் பதிகத்தில்,

''கொங்கலர் வன்மதன் வாளி யைந்தகத்
தங்குள பூதமு மஞ்ச வைம்பொழில்
தங்கரவின் படமஞ்சும் தம்முடை
அங்கையில் ஐவிரலஞ் செழுத்துமே''

என்றும், நாவரசர்,

''சலமிலன் சங்கரன் சார்ந்தவர்க் கலால்
நலமிலன் நாடொறு நல்குவா னலன்
குலமில ராகிலுங் குலத்துக் கேற்பதோர்
நலமிகக் கொடுப்பது நமச்சி வாயவே''

சங்கரனைத் தொழுவர்கள் யாராகிலும் குலம் கோத்திரம் பாராமல் நலமிகக் கொடுப்பது சொல்லும் இயம நியம பக்தியின் ஆழத்திற் கேற்ப நலம் பயப்பது ஐந்தெழுத்து மந்திரமாகும் என்றும், திருநாவலூரார்,

''அஞ்சினார்க் கரணாதி யென்றடியேனு நான்மிக வஞ்சினேன்
அஞ்சலென்றடித் தொண்டனேற் கருள்கினாய்க் கழிகின்றதென்
பஞ்சின்மெல்லடிப் பாவைமார் குடைந்தாடு பாண்டிக் கொடுமுடி
நஞ்சணிகண்ட நான்மறக்கினும் சொல்லுநா நமச்சிவாயவே''

சரணாகதி யடைந்தார்களுக்கு நல்ல புகழிடம் தரும் நம்பனை நமச்சிவாயனை மறக்கவியலுமோ என்கிறார்.

மந்திரம் மன பாவங்கண்மேவிய பந்தனையவர் தாமும் பகர்வரேல் சிந்தும் வல்வினை செல்வமும் மல்குமால் நந்திநாம நமச்சிவாயவே என்று நமச்சிவாயப் பதிகத்திலும்,

''தும்மலிரும தொடர்ந்த போழ்தினும்
வெம்மை நரகம் விளைந்த போழ்தினும்
இம்மை வினையடர்த் தெய்தும் போழ்தினும்
அம்மை யினுந்துணை யஞ்செழுத்துமே''

என்று ஐந்தெழுத்துப் பதிகத்திலும் கூறும்பொழுது மந்திரத்தானும், பாவங்களானும் வல்வினைத் தொடரால் வெம்மை நரகம் இம்மையில் தொடர்ந்தாலும் துணை நிற்பதோடல்லாமல் செல்வப் பெருக்கும் தரும் என்கிறார் சீர்காழிப் பெருமான்.

''வீடினாருலகினில் விழுமிய தொண்டர்கள்
கூடினாரந் நெறிகூடிச் சென்றலும்
ஓடினேனோடிச் சென்றுருவங் காண்டலும்
நாடினே னாடிற்று நமச்சி வாயவே''

என்று நமச்சிவாயம் விழுமியோர்களால் போற்றப்படுவதால் ''நாடினேன் ஓடிச் சென்று'' என்கிறார் வன்தொண்டர்.

''ஏடுவா னிளந்திங்கள் சூடினையென்பின் கொல்
புலித்தோலின்மேல்
ஆடுபாம்ப தரைக்கசைத்த வழகனே யந்தண் காவிரிப்
பாடுதண் புனல் வந்திழி பரஞ்சோதி பாண்டிக் கொடுமுடிச்
சேடனே யுனை நான்மறக்கினும் சொல்லு நா மச்சிவாயவே''

என்றும்,

நரகமேழ் புகநாடினராயினும் உரை செய்வாயினராயினுருந்திரர் விரவியே புகுவித்திடு மென்பரால் வரதனாம நமச்சிவாயவே ஏழ்நரகக் குழியில் அழுந்துவராயினும் செம்பொருள் துணிவோடு ஓதினாராயின் உருத்திரர்வாழ் உலகு புகுவிக்கும் என்றும் ''வீடுபிறப்பை யறுத்து மெச்சினர் பீடை கெடுப்பனபின்னை நாடொறும் மாடு கொடுப்பனமன்னுமா நடம் ஆடியுகப்பன வஞ்செழுத்துமே'' என்ற பாடலில் பிறப்புநீக்கி வீடுபேற்றை அளிக்கவல்லது நாள்தோறும் சிறப்பைக் கொடுப்பது என்றும் நிலைபெற்று திருநட்டம் ஆடும் என்பெருமான் திருநாமம் ஐந்தெழுத்தாகும் என்று ஞானப்பிள்ளையார் பகர்கிறார்.

நாவுக்கரசரது,

''இல்லக விளக்கது இருள் கெடுப்பது
சொல்லக விளக்கது சோதி யுள்ளது
பல்லக விளக்கது பலரும் காண்பது
நல்லக விளக்கது நமச்சி வாயவே''

என்று நமச்சிவாயம் எங்கெல்லாம் இருள் கெடுத்து ஒளியேற்றுகிறது என்றும் அக விளக்க தரவல்லது என்றும் பல்லோராலும் காணப் படுவது என்றும் சிறப்பிக்கிறார்.

திருவாருரெம் பெருமானரோ விரும்பி நின்மலர்ப் பாதமே நினைந்தேன் வினைகளும் விண்டனன் விரும்பனேழனை நான்மறக்கினும் சொல்லுநா நமச்சிவாயவே என்றபொழுது ஆர்வத்தோடும் நெஞ்சார நினைதலால் வினைவிண்டு வீடுபேறு அளிக்கும் ஐந்தெழுத்து என்று உறுதியளித் துள்ளார். நமச்சிவாயப் பதிகம் எட்டாம் பாடலில்,

''இலங்கை மன்ன னெடுத்த வடுக்கன்மேல்
தலங்கொள்கால் விரல் சங்கரனூ ன்தலும்
மலங்கிவாய் மொழிசெய்த வனுய்வகை
நலங்கொணாம நமச்சி வாயவே''

என்பதில் குற்றமே செய்யினும் ஐந்தெழுத்தின் பிணைபிடித்துக் கிடக்கும் வரை உய்விக்கும் வள்ளல் செம்பொருள் ஈதுனார் என்கின்றார்.

நாவுக்கரசர் திருநிலக்குடி பதிகத்தில் 7-ம் பாடலில்,

"கல்லினோ டெனைப் பூட்டிய மண்கையர்
ஒல்லைநீர் புகநூக்கவென் வாக்கினால்
நெல்லுநீள் வயனீலக்கு டியரன்
நல்லநாம நவிற்றி யுய்ந்தே னன்றே"

என்ற பாடலில் தன்னை வந்தடைந்த வல்வினையை எதன் மூலம் வென்றனர் என்பதைத் திண்ணமாகக் கூறுகிறார். தில்லைப் பதிகத்தில் படைக்கலமாக உன் நாமத் தெழுத்தைஞ்சும் என் நாவில் கொண்டேன் என்பதிலிருந்து எதிரியை வெல்லும் படைக்கலம், பிறப்பை வெல்லும், வினைப்பாவத்தை வெல்லும், நம்மை இருவினை மும்மலங்களில் இருந்து விடுவிக்கும் படைக்கலம் திருவைந்தெழுத்தாகிய நமச்சிவாய மந்திரம் என்கிறார். திருவீழிமிழலைத் திருத்தாண்டகத்தில்,

"வாயானை மந்திரிப் பார் மனத்துளானை,
வஞ்சனை யாலஞ் செழுத்தும் ஓதுவார்க்கு சேயன் என்றும்
நாமவெழுத் தஞ்சாய நம்பர் போலும் திருவே என்செல்வமே
தேனே வானோர் செழுஞ்சுடரே மாற்றேன் எழுத்தஞ்சுமென்
நாவின் மறவேன்"

என்றும் திருமாற்பேறு திருப்பதிகத்தில்,

"ஏதுமொன்று மறிவிலாராயினும் ஓதியஞ்செழுத்து
உணர்வார்கட்குப்
பேதமின்றிய வரவருள்ளத்தே மாறும் தாழும் மகிழ்வார்
மாற்பேற்றை"

என்றும்,

"இருந்து சொல்வன் கேண்மின்களே ழைகாள்
அருந்த வந்தரும் அஞ்செழுத் தோதினால்
பொருந்து நோய்பிணி போகந் துரப்பதோர்
மருந்த மாகுவர் மன்னு மாற்பேற்றே"

என்று பிறவி நோய்க்கு மருந்து கூறுகிறார்.

இவ்வாறு திருவைந்தெழுத்து மூவராலும் போற்றியுரைக்கப்பட்ட பான்மையும், அதில் திருஞானசம்பந்தப் பெருமான் அருளிய திருவைந்தெழுத்தின் சிறப்பும் இங்கு விளக்கப்பெற்றன.

75. திருநீற்றின் சிறப்பு

வீ. மலர்விழி, தஞ்சாவூர்.

திருஞானசம்பந்தர் திருநீற்றைப் பற்றித் தம் தேவாரத்தின் பல பதிகங்களில் பாடியுள்ளார். திருநீற்றை மட்டுமே தனிப்பதிகமாகச் சிறப்பு நிலையில் 'திருநீற்றுப் பதிகம்' எனத் தனிப்பதிகமாகப் பாடியுள்ளார். ஞானசம்பந்தர் திருநீற்றின் மூலமாகவும இறைவனோடு மானிட உயிரை இணைக்க முடியும் என்று கூறுகிறார். சிவச்சின்னங்களில் திருநீறு முதன்மையானதாகக் கருதப்படும் நிலையில் அவர்தம் கூற்று காணப்படுகிறது. சேக்கிழாரும் திருநீற்றின் இவ்இன்றியமையாத் தன்மையைக் குலச்சிறையார் வரலாற்றில் காட்டுகிறார். இக்கட்டுரை ஞானசம்பந்தர் தரும் திருநீற்றுச் சிறப்புகளைக் காணமுயல்கிறது.

"நாவணங்கு இயல்பாம் அஞ்செழுத்தோதி
நல்லவராய் நல்லியம் பாகும்
கோவணம்பூதி சாதனம் கண்டால்
தொழுதெழு குலச்சிறை போற்ற
ஏவணங்கு இயல்பாம் இராவணன் திண்தோள்" (3:120:8)

நாவில் பொருந்தச் சேரும் இயல்பினை உடைய, திருவைந்தெழுத்தை, முறைப்படி ஓதிச் சிவஞானம் கைவரப் பெற்றவராகி, ஈசன் திருவடிவ மாகிய கோவண ஆடை, திருநீறு, உருத்திராக்கம், சடைமுடி முதலிய சாதனங்கள் கொண்டு மேவும் அடியவர்களைக் கண்டால் தொழுது போற்றுபவராய் விளங்குபவர் குலச்சிறையார். இப்பாடல் குலச்சிறையார் அடியவர்களின்பால் கொண்ட மதிப்பினைச் சுட்டுதல் காணலாம்.

தொண்டர்கள் மனம் சிறந்து விளங்க எட்டுத்திசையும் திருநீற்றின் பெருமை பரவ ஞானசம்பந்தர் பாடலைப் பாடியுள்ளார் எனச் சேக்கிழார் பெரியபுராணத்தில் கூறியுள்ளார்.

"தொண்டர்மனம் களிசிறப்பத் தூயதிரு நீற்றுநெறி
எண்டிசையும் தனிநடப்ப ஏழுலகும் குளிர்தூங்க
அண்டர்குலம் அதிசயிப்ப அந்தணர் ஆகுதிபெருக
வண்டமிழ்செய் தவம்நிரம்ப மாதவர்தோர் செயல்வாய்ப்ப
(பெரிய. திருஞான. புராணம் - 23)

ஞானசம்பந்தரின் அவதாரம் சைவத்தை வளப்படுத்துவதற்காக என்று சேக்கிழார் கூறுகின்றார். அத்துடன் சைவத்தின் நிலைக்களனான திருநீற்றைப் பரப்புவதற்காகவே அவர் அவதாரம் கொண்டதாகவும் கூறுகிறார்.

திருநீற்றின் இயல்பும், வகையும்

திருநீறு சாந்தம், அழகு, அமைதி, பக்தி, முக்தியைத் தருவது, நல்லறிவு தருவது, அறியாமை, அச்சத்தையும் நீக்குவது. இன்பத்தைத் தருவது, துன்பத்தை நீக்குவது. சத்தியப்பொருளாக இருப்பது, பெருமை தருவது, இறப்பினைத் தடுப்பது, உலக பந்தத்தால் உண்டாகும் ஆசைகளை நீக்கி, உயர்ந்த நிலைக்குச் செல்ல வழிவகுப்பது. இம்மை, மறுமை ஆகிய இரண்டு நிலைகளிலும் உயிர்களுக்குத் துணையாக இருப்பது. புறத்தே நோய் நீக்குவதோடு அமையாது அகத்தே இறையுணர்வை ஏற்படுத்துகிறது. செருக்கை அழிக்கும் ஆற்றல் கொண்டது. இறைவனை நினைவுபடுத்தும் தன்மை பெற்றது. உறக்கத்தைத் தடுத்துப் புத்துணர்ச்சி தந்து தூய்மைப் படுத்தும் இயல்புடையது திருநீறு என்று ஞானசம்பந்தர் தமது பாடல் களில் கூறியுள்ளதை நோக்க மேற்கூறிய உண்மை புலனாகும்.

விபூதியானது, கற்பம், அநுகற்பம், உபகற்பம் என்று மூன்று வகையானது.

''சால நல்லபொடிப் பூசுவர் பேசுவர் மாமறை'' (2:7:4)

திருவெண்ணீறு சகல செல்வங்களையும் பெறுமாறு செய்வதாலும், ஆன்மாக்களுக்குக் கவசம் போன்று உறுதுணையாக விளங்குவதாலும், சிவதத்துவத்தைப் பெருக்கியும், பாவங்களை எரித்து நீக்கியும், உயிர் களின் மலத்தை வெளியேற்றித் தூய்மை செய்தலாலும் (சைவ சமயநெறி குறட்பாக்கள் - 203, 204), ''நல்லபொடி'' என்று உணர்த்தப் பெற்றது.

விபூதியாகிய திருநீறும், உருத்திராக்கமும், மந்திரமாகிய ஐந்தெழுத்தும் சைவத்தின் முக்கிய அம்சங்கள். அறியாமையும், பிறவியும் ஆகிய தீராத நோய்களை விபூதி உருத்திராக்கம், ஐந்தெழுத்து மந்திரத்தால் தீர்த்துவிடலாம். திருநீறு பல பெயர்களில் உபநிடதங்களில் குறிக்கப்படு கிறது. அவை விபூதி, பசிதம், பஸ்மம், க்ஷாரம், ரட்சை எனப் பல பெயர்கள். தமிழில் திருநீறு; காப்பு, மருந்து எனப்படுகிறது. (திருநீறு, திருவாவடுதுறை ஆதீனம் வெளியீடு). திருநீற்றின் சிறப்பு இவ்வாறாக விதந்து ஓதப்பெறுகிறது.

தூய திருநீற்றை எப்படி பெறுவது?

தூய திருநீற்றை எப்படிப் பெறுவது இதற்கு ஏதேனும் இலக்கியம் இருக்கிறதா என்று எண்ணும்போது கிடைத்ததுதான் பெரியபுராணச்

சான்று. பெரியபுராணம் திருநீற்றின் இலக்கணம், வகைகளை அழகாகக் காட்டியிருக்கிறது.

''அம்பலத்தே உலகுய்ய ஆடும் அண்ணல்
உவந்தாடும் அஞ்சினையும் அளித்தஆக்கள்
இம்பர்மிசை அநாமயமாய் இருந்த போதில்
ஈன்றணிய கோமயம் மந்திரத்தினால் ஏற்று
உம்பர்தொழ எழும்சிவ மந்திர ஓமத்தால்
உற்பவித்த சிவாங்கிதனில் உணர்வுக் கெட்டா
எம்பெருமான் கழல்நினைந் தங்கிட்ட தூநீறு
இது கற்பம் என்றெடுத்து இங்கேத்தலாகும்.
(பெரிய. முழுநீறு பூசிய. 2)

கன்றை ஈன்ற ஆவின் சாணத்தை நெருப்பினுள் இட்டுப்பெறும் திருநீறு கற்பம் எனப்படும். இதனையே பெரியபுராணம் விளக்குகிறது. ஆவின் சாணத்தைக் கோமய நீரால் பிசைந்து திரட்சியாக்கி ஓம நெருப்பி லிட்டுப் பெறுவது அநுகற்பம் எனப்படும். காடு பற்றி எரிதலானும், செங்கற்கள் வெந்தநீறும், பசுவின் சாணத்தைக் கோஜலம் விட்டுப் பிசைந்து, உருண்டை செய்து, உலர்த்தித் திருமடங்களில் விளங்கும் சிவாக்னியில் விதிப்படி எரித்தெடுத்த திருநீறு உபகற்பம் எனப்படும்.

மரங்களை எரித்துப் பெறப்படும் திருநீற்றைத் திருமந்திரம் கூறுகிறது.

''அரசுடன் ஆல்அத்தி ஆகும்அக் காரம்
விரவு கனலில் வியனுரு மாறி
நிரவயன் நின்மலன் தான்பெற்ற நீதர்
உருவம் பிரமன் உயர்குலமே. (திருமந்திரம் - 6:10:1639)

''ஆன்முறையால் ஆற்ற வெண்ணீறு
ஆடிஅணி இழையோர்'' (1:49:3)

இப்பாடலில் பசுவிலிருந்து முறையாக விதிப்படித் தயாரிக்கப்பெற்றதே திருவெண்ணீறு என்கிறார் ஞானசம்பந்தர். சிவாகமங்களும், உபநிஷதங் களும், உபதேச காண்டம் முதலியன பல புராணங்களும் திருநீற்றைத் தயாரிக்கும் முறைகளைக் கூறுகின்றன.

புறங்காட்டுச் சுடலைப் பொடியைத் திருநீறென அணியும் முறையைச் சேக்கிழார்,

''இந்த வகையால் அமைத்தநீறு கொண்டே
இருதிறமும் சுத்திவரத் தெளித்த பின்னர்
அந்தமிலா அரன் அங்கிஆறு மெய்ம்மை
அறிவித்த குரு நன்மையல்லாப் பூசி

முந்த எதிர் அணியாதே அணியும்போது
முழுவதும் மெய்ப்புண்டரம் சந்திரனில் பாதி
நந்திளரி தீபம் நிகழ்வட்டம் ஆக
நாதரடியார் அணிவர் நன்மையாலே (பெரிய. முழுநீறு. 5)

என்று கூறுகிறார்.

பூசுவதற்கு ஆகாத திருநீறு

விதிப்படி ஆக்கப்படாத திருநீறும், புகைநிறம், கருமை, செம்மை, சாணியோடு கல் மண் கலந்து இருக்கும் இவற்றைப் பூசுதல் ஆகாது. புகைநிறமும், கருமைநிறமும் உடையவற்றை அணிந்தால் வறுமைமிகும். செம்மைநிறமான விபூதியை அணிந்தால் கோபதாபங்கள் ஏற்படும். மண்கலந்து இருப்பின் வலிமை குன்றும். ஆதலால் விதிப்படி தயாரித்த திருநீறே பூசுவதற்கு ஏற்றதாகும். (திருநீறு, திருவாவடுதுறை ஆதீனம் வெளியீடு)

திருநீற்றால் பேறு பெற்றவர்கள்

திருஞானசம்பந்தர் அளித்த திருநீறு கூன்பாண்டியனின் வெப்பு நோயை நீக்கியது. பூழியர்கோன் வெப்பு நோயால் சிக்கி உழன்றபோது புகலியர்கோன் நீறளித்து அந்நோய் மாறுமாறருளினார். மருணீக்கியாரைச் சூலைநோய் வாட்டியபோது திலகவதியார் அளித்த திருநீறே தீர்த்து வைத்தது. அடியவர்களின் நோய்தீர்த்த இச்சான்றுகளால் திருநீறு நோய் தீர்க்கும் வல்லமையுள்ளது என்பதை அறியலாம். சேரமான் பெருமாள் நாயனார் திருநீற்றுக்கு அளித்த மதிப்பினை அவருடைய வரலாற்றின் வாயிலாக அறியலாம். ஏனாதிநாத நாயனார் திருநீற்றின் மீது எல்லையில்லாப் பற்று கொண்டவர். மெய்ப்பொருள் நாயனார் உயிர் நீங்குந்தருவாயில் பரவிய திருநீற்றன்பு பாதுகாத்துய்ப்பீர் என்று ஆணையிட்டு இறைவனடி சேர்ந்தார். இதன் வாயிலாக அடியார்கள் திருநீற்றின் மீது கொண்டிருந்த பற்று தெரிகின்றது.

திருநீற்றின் பெருமையைப் பற்றி நீதி வெண்பா,

"சீர்ஆம் வெணீற்றுத் திரிபுண்டரம் விடுத்தே
பேர்ஆன முக்திபெற விரும்பல் ஆர்அமிர்த
சஞ்சீவியை விடுத்தே சாகாது இருப்பதற்கு
நஞ்சே புசித்தது போல் நாடு" (நீதிநூல்; நீதிவெண்பா - 96)

சிறப்புமிக்க வெண்மைநிறத் திருநீற்றினால் நெற்றிக்கு மூன்று கோடாக திருக்குறி இடுதலைத் துறந்து மேன்மைமிக்க வீடுபேற்றை அடைய விரும்புதல், அருமைமிக்க அமுதமாகிய சஞ்சீவி மருந்தை ஒதுக்கி, இறந்துபோகாமல் இருப்பதற்கு நஞ்சையே உட்கொண்டது

போலாகும். மரணம் அடையாமல் இருப்பதற்கு விரும்புபவன், அருமையான அமுதமாகிய சஞ்சீவி மருந்தை விட்டுவிட்டு நஞ்சை உண்டது போன்றதே, நெற்றிக்குத் திருநீறு இட்டுக் கொள்ளாமல் மேன்மையைத் தரும் வீடுபேற்றை அடைய விரும்புவதும் என்பதாம்.

திருஞானசம்பந்தர் காட்டும் விபூதி

திருஞானசம்பந்தர் தம் தேவாரப் பதிகங்கள் பலவற்றுள்ளும் விபூதியைப் பயன்படுத்தும் தன்மைகளைப் படம்பிடித்துக் காட்டுகிறார். இறைவன் தன் உடல் முழுவதும் காடுடைய சுடலைப்பொடியைப் பூசி மகிழ்கின்றான். அடியார்களும் அவன் அமிசமாகவே திகழ்தலின் அவர்களும் விபூதியை அங்கமெங்கும் பூசி மகிழ்கின்றனர் என்கிறார்.

ஞானசம்பந்தர் தம்முடைய முதல் பாடலிலே திருநீற்றின் பெருமையைக் கூறியுள்ளார்.

''காடுடைய சுடலைப்பொடி பூசியென்
உள்ளங்கவர் கள்வன்'' (1:1:1)

''பொடிகன்பூசிப் பலதொண்டர் கூடிப்புலர் காலையே'' (2:118:1)

எனும் வரியில்,

தொண்டர்கள் திருநீற்றை விரவப் பூசி விடியற்காலையில் ஈசனை வணங்குவார்கள் எனக் காட்டுகிறார்.

''சிந்தைசெய்து பாடும்அடி யார்பொடிமெய்
பூசியெழு தொண்டர் அவர்கள்'' (3:71:9)

அடியவர்கள், தியானமும், பக்தியும் பெருகத் திருநீறு அணிந்து வணங்குவார்கள் ஈசனை.

''வேதவித்தாய் வெள்ளைநீறுபூசி வினையாயின
கோதுவித்தா நீறெழக் கொடிமா மதிலாயின
ஏதவித்தா யினதீர்க்கும் இடம் இரும்பைதனுள்'' (2:117:2)

வேதத்தின் வித்தாகி, திருவெண்ணீற்றைத் திருமேனியில் குழையப் பூசி, வணங்கிப் போற்றும் அடியவர்களின் வினை யாவையும் நீங்குமாறு விளங்குபவர் ஈசன்.

''நீறு கொண்டார் இடர்களையாய் நெடுங்கள மேயவனே'' (1:52:7)

திருவெண்ணீற்றைச் செல்வமாகக் கொண்டுதரிக்கும் அடியவர்களின் இடரைக் களைவீராக என ஈசனிடம் ஞானசம்பந்தர் வேண்டி அருளினார்.

''தோளின் மேலொளி நீறுதாங்கிய
தொண்டர் வந்தடி போற்ற மிண்டிய'' (2:51:2)

திருத்தொண்டர்கள், தோளின்மீது நீறு அணிந்து ஈசனை வணங்கு வார்கள். நெற்றியில் விளங்கும் திருநீறுபோலத் தோளில் திருநீறு அணிதலும் சைவ விதியாகும். இத்திருப்பாட்டு அடியவர்களின் தோற்றப் பொலிவைக் காட்டுகிறது என்றெல்லாம் பல சூழல்களில் அடியார்கள் திருநீற்றைப் பரவசமாக அணிந்து மகிழும் காட்சிகளைக் காட்டுகிறார்.

திருநீற்றின் பயன்

திருநீற்றை அணிவதால் என்ன பயன்? இம்மையில் உடல் நலமா? மன நலமா? மறுமையில் மகிழ்வா? இதற்கெல்லாம் பல பாசுரங்களில் ஞானசம்பந்தர் விடை தருகின்றார்.

''புத்தர் சமணகழுக் கையர் பொய்கொளாச்
சித்தத் தவர்கள் தெளிந்து தேறின
வித்தக நீறணி வார்வினைப் பகைக்கு
அத்திரம் ஆவன அஞ்செ முத்துமே'' (3:22:10)

புத்தர்களும், சமணர்களும், கூறும் பொய்யுரைகளை ஏற்காத உறுதியான சித்தம் உடையவர்கள் திருவெண்ணீறு அணிந்து விளங்கும் அன்பர்கள். இவர்கள் ''வித்தக நீறணிவார்'' என உணர்த்தப் பெற்றனர். ஆக இப்பாட்டு வினையை ஒழித்துக்கட்டத் திருநீறு பயன் தரும் என்கிறது.

''முக்தி தருவது நீறு முனிவர் அணிவது நீறு
சத்திய மாவது நீறு தக்கோர் புகழ்வது நீறு''. (2:66:3)

திருநீறு முற்றும் துறந்த முனிவர்கள் அணியும் பெருமையுடையது. திருநீற்றின் மகிமையறிந்த சிவனடியார்கள் போற்றுகின்றனர். அது முக்தியைத் தரும் வண்ணம் வாய்ந்தது.

''மந்திர மாவது நீறு வானவர்மேலது நீறு
சுந்தர மாவது நீறு துதிக்கப்படுவது நீறு''. (2:66:1)

திருநீறானது, மந்திரச்சொல் போன்று அச்சம் நீக்கி வேண்டிய நற்பயனைத் தருவது வானவர்கள் திருநீற்றை அணிகின்றனர். மனிதர்களுக்கு இது வானவர்களைவிட மேலானதாகி விளங்குவது என்று ஞானசம்பந்தர் பாடுகிறார். ஆம் அது அழகைக் கொடுக்கும் ஆற்றல் உள்ளது. பலராலும் துதித்துப் போற்றப்படும் தகுதியைத் தரும் சிறப்பினைக் கொண்டது.

தூசுகளால் அழுக்குமேறிக் கிடக்கும் வீட்டினைத் தூயதாக்கித் திருநீறிட்டு பொலிவு செய்ய வீடு சுத்தமாகும். நச்சுயிர்கள் அண்டாது ஒழியும். செடி, கொடி, பயிர்கள் பூச்சிகளால் அழியுங்கால் சாம்பல் தூவி அவ்வுயிரிகளைச் செயலொடுக்குவர்.

"ஆற்றல் அடல் விடையேறும் ஆலவாயான் திருநீற்றைப்
போற்றிப் புகலிநி லாவும் பூசுரன் ஞானசம்பந்தன்
தேற்றித் தென்னன் உடல்உற்ற தீப்பிணி யாயினதீரச்
சாற்றிய பாடல்கள் பத்தும் வல்லவர் நல்லவர் தாமே".

(2:66:11)

எனத் திருஞானசம்பந்தர் பாடியுள்ளார்.

துறவியர், ஞானியர், சமயச் சான்றோர் என்றில்லாமல் மகளிரும் திருநீற்றைச் சிறப்பாக அணிந்து போற்றும் சிறப்பை மங்கையர்க்கரசியார் வரலாற்றில் சேக்கிழார் அழகாகக் காட்டுதல் காணலாம்.

"செந்துவர் வாயாள் சேலன கண்ணாள்
சிவன்திரு நீற்றினை வளர்க்கும்
பந்தணை விரலாள் பாண்டி மாதேவி
பணிசெயப் பாரிட நிலவும்
சந்தமர் தரளம் பாம்புநீர் மத்தம்
தண்ணெருக் கம்மலர் வன்னி". (3:120:3)

திருநீற்றுச் செந்நெறியை வளர்க்கும் பாண்டி மாதேவி, நாள்தோறும் ஈசனுக்கு இனிய பணிசெய்து போற்றி வந்தவர் என்பதை இப்பாடல் இயம்புகின்றது. அத்துடன் அவர் அங்கமெல்லாம் திருநீறு நிறைந்திருந்த தன்மையைக் குறிப்பாகச் சந்தனமும் முத்தும் திகழ்கின்ற மார்பில் திருநீறு திகழ்ந்த தன்மையை ஓவியமாகக் காட்டுதல் காணலாம்.

"முத்தின்தாழ் வடமும் சந்தனக் குழம்பும்
நீறும் தன்மார்பினில் முயங்கப்
பத்தியார் கின்ற பாண்டியமா தேவி
பாங்கொடு பணிசெய நின்ற
சுத்தமார் பளிங்கின் பெருமலையுடனே". (3:120:7)

முத்துமாலையும், சந்தனப்பூச்சும், திருநீற்றின் வண்ணமும் விளங்கப் பக்தியுடன் திகழும் பாண்டி மாதேவி, பாங்கோடு பணிசெய்கின்றவர் என்று ஞானசம்பந்தர் பாண்டி மாதேவியின் தோற்றப் பொலிவைச் சுட்டிக் காட்டியுள்ளார்.

இவ்வாறு திருஞானசம்பந்தர் தம் தேவாரப் பதிகங்களின் பாடல் களில் தொட்ட தொட்ட இடமெல்லாம் திருநீறு மணங்கமழுமாறு திருநீற்றின் சிறப்பைப் பாராட்டியுள்ளார். வாழ்க திருநீற்றின் ஒளிவெள்ளம்.

76. சம்பந்தரின் சைவ சமயப் புரட்சி

த. மலைமதி, விழுப்புரம்.

சங்க காலத்தில் காதலையும், வீரத்தையும் போற்றிய மக்கள், சங்க மருவிய காலத்தில் அறக்கருத்துக்களையும், நீதிக்கருத்துகளையும் போற்றி வந்தனர். போரும், பூசலும் நிறைந்த காலச்சூழலில் அமைதியை விரும்பிய மக்கள் பக்தியில் ஈடுபட்டனர். அவரவர்கள் தத்தம் சமய வளர்ச்சி வேண்டி இலக்கியங்களை அளித்தனர். இதனால் தமிழ்மொழி யினைப் 'பக்தியின் மொழி' என போற்றும் அளவிற்குத் தமிழ்மொழியில் பக்தி இலக்கியம் சிறப்புற்று விளங்குகிறது. அதிலும் பக்தி இலக்கியம் இசையோடு பின்னிப் பிணைந்துள்ளது.

சமணமும், பௌத்தமும் தமிழகத்தை ஆட்சி செய்தபோது தமிழ் மொழியை வளர்ப்பதற்காகச் சைவமும், வைணவமும் தோற்றம் பெற்றது. வைணவ சமயத்தைப் போற்றிய ஆழ்வார்கள் பாடிய பக்திப் பனுவல் களுக்கு 'நாலாயிர திவ்வியப்பிரபந்தம்' என்றும், சைவத்தைப் போற்றிய நாயன்மார்கள் பாடிய பாடல்களின் தொகுப்பிற்குப் 'பன்னிரு திருமுறைகள்' என்றும் பெயர் சூட்டப்பட்டுள்ளது. பன்னிரு திருமுறையில் முதல் மூன்று திருமுறைகளைப் பாடிய பெருமை ஞானசம்பந்தரையே சாரும். பல்வேறு பதிகளுக்குச் சென்று சைவ சமயத்தை பரப்ப எண்ணிய சம்பந்தர் மதுரை நகரில் தம் சமய செழுமைக்காகச் செய்த புரட்சி யினைப் பற்றி இக்கட்டுரை கூற முற்படுகிறது.

திருமுறைகளில் தேவாரம்

'திரு' என்பது அருளோடு கூடிய சிவபரம்பொருளை எளிதில் பெறக் கூடிய செல்வம். அதை நாடிபெற்றவரின் பயன் என்பது அடியவர்கள் பெற்ற இன்பத்தின் பயனாய் அவர்களின் உள்ளத்தினின்றும் தோத்திரப் பாடல்களாகப் பாடப்பட்டன. இப்பாடல்களைத் திருஞானசம்பந்தர் முதல் சேக்கிழார் பெருமான் வரை இருபத்தேழுபேர் பாடியுள்ளனர். அப்பாடல்கள் பன்னிரண்டு பிரிவுகளாக பகுக்கப்பட்டுள்ளது. 'முறை' என்பதற்கு நூல் என்று பொருள். எனவே, 'திருமுறை' எனும் சொல் நிலையான செல்வத்தை மக்கள் எளிதில் அடைவதற்கு வழிகாட்டும் நூல் எனப் பொருள்படும்.

தேவாரம் எனும் சொல்லை, தே+வாரம் எனப் பிரித்தால், தே - என்பதற்குத் தெய்வம் என்று பொருள். வாரம் - என்பது இசையின்

கூறுபாட்டினைக் குறித்து வழங்கும் தமிழ்ச்சொல் எனப் பொருள் கொள்ளலாம். ஆக தேவாரம் எனும் சொல்லுக்குத் தெய்வத்தைப் போற்றி பாடும் இசைப்பாடல் என்று பொருள். இறையைப் போற்றிய ஞானசம்பந்தரின் இசைப்பாடல்களும் தேவாரம் எனப் பெயர் பெற்றன. இவரின் தேவாரப் பாடல்கள் பன்னிருத் திருமுறைகளில் முதல் மூன்று இடத்தைப் பெற்றுள்ளன.

சம்பந்தரின் வாழ்க்கை வரலாறு

தம் மூன்றாம் வயதில் உமையம்மையால் ஞானப் பாலூட்டப் பெற்றதால், இறையருள் கைவரப்பெற்ற சீகாழி வள்ளல், 'தோடுடைய செவியன்' என்ற முதல் பதிகத்தைப் பாடினார்.

"எவ்வுயிர் நீங்கா துறையும் இறை சிவனென்று
எவ்வுயிருக்கும் அன்பா யிரு"

எனும் சைவ சமயக் கோட்பாட்டினை உணர்த்துவதற்காக ஊர் ஊராகச் சென்று இசையோடு பாடல் பாடினார். "உடலுக்கு உணவு இன்றியமை யாதது போல் பண்பாட்டு வாழ்க்கைக்குப் பாட்டு. வயிற்றுப்பசியைத் தீர்ப்பது சோறு, உள்ளப்பசியைத் தீர்ப்பது பாட்டு. குறைமனம், நிறைமன மாகிறது. இந்த நிறைநிலையே பாட்டின் நற்செய்தி, துண்டு துணுக்காய் இருக்கும் உலகம் கலங்கிக் குழம்பிக் கிடக்கின்ற உலகம் நிறைநிலை யாய்த் தெளிந்து உயிர்பெற்று ஒளிர்வது பாட்டில்" என்று தெ.பொ. மீனாட்சி சுந்தரனார் இசையின் இன்றியமையாமையை எடுத்துரைக்கின்றார்.

இருபத்தியிரண்டு திருத்தலங்களுக்குச் சென்று 23 வகையான புதிய பண்வகைகளைப் பயன்படுத்திப் பாடல் பாடியவர். இவர் பாடிய பதிகங்களாகத் தற்போது கிடைப்பவை 384 பதிகங்களே ஆகும். மூவேந்தர்களான சேர, சோழ, பாண்டிய மன்னர்கள் ஆண்ட பகுதி களுக்கும் சென்று சிவபெருமானைப் போற்றிப் பாடியுள்ளார்.

'யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' - என்பதற்கேற்பத் தாம் அனுபவித்த மகிழ்ச்சியை மற்றவர்களும் பெறவேண்டும் என்னும் நோக்கத்திலேயே பாடல் பாடியுள்ளார். இதனால் 'நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பும் ஞானசம்பந்தன்' என்று சுந்தரரும், 'திராவிட சிசு' என்று ஆதிசங்கரரும் பாராட்டியுள்ளனர். பெரியபுராணம் 'பிள்ளைபாதி புராணம் பாதி' எனப் போற்றப்படுவதும். சம்பந்தரின் சிறப்புக் கருதியே எனில் அது மிகையாகாது.

சைவ புரட்சி

மதுரை நகரில் பாண்டிய மன்னன், சமண சமயம் சார்ந்தவனாக ஆட்சி செய்தான். சமண சமய துறவியர் தம் சமயத்தைப் பரப்புவதே

நோக்கமாகக் கொண்டு பிற சமயத்தாரை இகழ்ந்து பேசினர். 'அரசன் எவ்வழியோ குடிமக்களும் அவ்வழி' எனும் போக்கு மதுரையிலும் நிகழ்கின்றது.

மன்னனின் மதமாற்றத்தை விரும்பிய மங்கையர்க்கரசியரும். அமைச்சரான குலச்சிறையாரும் திருமறைக்காட்டில் ஞானசம்பந்தர் எழுந்தருளியதை அறிந்து அவரை மதுரைக்கு அழைத்து வருமாறு கூறினார்.

''அங்கம் எட்டினும் ஐந்தினும் அளவின்றி வணங்கிப்
.... இறைவர்''.

ஆலவாய் இறைவனை வணங்கிய மங்கையர்க்கரசியார் ஞானசம்பந்தரைக் கண்டு பணிந்துநின்று 'யானும் என் பதியும் செய்த தவம் என் கொல்' என வினவுகின்றார். அதற்கு அம்மையீர் புறச்சமயச் சூழ்நிலையில் இருந்தபோதிலும் அரனடி மறவாது சிவத்தொண்டு புரியும் உம்மைக் காணும் பொருட்டே யாம் இங்கு வந்தோம் என்று கூறினார்.

ஞானசம்பந்தர் மதுரையை அடைந்தபோது, சம்பந்தரின் அடியார்கள் பாடும் திருப்பதிகங்களின் இன்னிசை ஒலியானது நகர் முழுவதும் பரவுகின்றது. இதனைக் கண்ட சமணர்கள் கோபம்கொண்டு, உண்ணாமல் இருந்து மன்னனிடம் முறையிடுகின்றனர். மன்னனும் தான் அறிந்ததைக் கூறி இதற்கு என்ன செய்வது என்று யோசனைக் கேட்டபோது, ஞானசம்பந்தர் தங்கி இருக்கும் திருமடத்திற்குத் தீ வைக்க வேண்டும் என்று சமணர்கள் கூறுகின்றனர்.

திருமடத்தில் தீ

மன்னன் ஆதரவுபெற்ற சமணர்கள் தங்கள் மந்திர வலிமையால் திருமடத்தில் தீ மூட்ட எண்ணுகின்றனர். ஆனால் சிவ நாமத்தின் முன் சமணர்களின் செயல் ஒன்றுமில்லாமல் போகின்றது. இதனை அறிந்து, சமணர்களே திருமடத்திற்குத் தீ வைக்கின்றனர். தீயினை அணைத்த சிவனடியார்கள் ஞானசம்பந்தரிடம் இதுபற்றி முறையிடுகின்றனர். இச்செயல் அரசர் முறைசெய்து காப்பாற்றாததால் நேர்ந்தது என்று எண்ணி மன்னனுக்கு அதனை உணர்த்த முயல்கின்றார். இதனை,

''முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
இறையன்று வைக்கப் படும்''.

எனும் குறளடிகளில் வள்ளுவர் கூறுகின்றார்.

மன்னன் ஆராயாமல் செய்யும் செயலால் துன்பம் ஏற்படும் என்பதனை, பொற்கொல்லன் சொன்னதை கேட்டு ஆராயாமல் தீர்ப்புக் கூறிய பாண்டிய மன்னனின் செயல்பேசும் சிலம்பு நமக்கு உணர்த்துகிறது.

வெப்பு நோய் உண்டாக்கல்

சமணர்கள் செய்த செயல் பாண்டிய மன்னனுக்கே வெப்பு நோயாக மாறியதை.

''ஐயனே அஞ்ச லென்றருள் செய்யெனைப்
பொய்ய ராமம ணர்கொளு வுஞ்சுடர்
பையவே சென்று பாண்டியர் காகவே''.

என்ற பாடலின் மூலம் அறியமுடிகின்றது. திருமடத்தில் வைத்தத் தீயானது எவ்வாறு எரிந்ததோ, அதுபோல் உடல் முழுவதும் எரியும் வெப்பு நோயால் பாண்டிய மன்னன் அவதியுற்றான். சமணர்கள் நோயைத் தீர்க்கப் பல நிலைகளில் முயன்றனர். நோய் அதிகமாகியதே ஒழிய குறையவில்லை. இந்நோய் உண்டாவதற்குக் காரணம் சமணர்கள் செய்த தீவினையே என்றும், ஞானசம்பந்தரை அழைத்தாலே நோய் தீர்ந்துவிடும் என்றும் எண்ணி அவரை அழைத்தனர்.

''ஞானத்தின் திருவுருவை
நான்மறையின் தனித்துணையை
.... கண்டார்கள்''.

என்ற பெரியபுராணப் பாடலின் மூலம் ஞானசம்பந்தர் மதுரைக்கு வந்ததை அறியமுடிகிறது.

தென்னவர் கோமானுக்குத் திருநீறு அளித்தல்

'ஆவதும், அழிவதும் அவன் செயல்' - என்ற உறுதியுடன் ஞானசம்பந்தர் செல்கின்றார். மன்னனும், ஞானசம்பந்தருக்கு மரியாதை செய்கின்றார். இதனைக் கண்ட சமணர்கள் பொறாமை கொண்டனர். ஞானசம்பந்தரே நோயைத் தீர்த்தாலும் எங்களாலும்தான் நோய் தீர்ந்தது என்று சொல்லவேண்டும் என்று மன்னனுக்குக் கட்டளையிட்டனர். சமணர்களின் சூழ்ச்சியை உணர்ந்த அரசன் நீங்கள் இருவருமே உங்கள் தெய்வச் சார்பினால் என் நோயைத் தீருங்கள் என்று கூறினான்.

பாண்டியன் ஞானசம்பந்தரைப் பார்த்து நுமது ஊர் யாது என்று வினவ

''பிரமனார் வேணுபுரம் புகலிவெங்குப்
பெருநீர்த் தோணி................
................கழுமலம் நாம் பரவுமுரே''

என்று பதிலுரைக்கின்றார்.

மன்னனின் இடப்பாகம் சமணர்களாலும் வலப்பக்கம் ஞானசம்பந்தராலும் வெப்பு நோய் தீர்க்கப்பட வேண்டும் என்றனர். ஆனால் சமணர்களால் மன்னனின் இடப்பாகத்தில் உள்ள வெம்மையைப் போக்கமுடிய

வில்லை. ஞானசம்பந்தர் பாண்டிய மன்னனின் வலது பக்கத்திலுள்ள வெம்மையை போக்குவதற்கு,

''மந்திர மாவது நீறு, வானவர் மேலது நீறு
....
செந்துவர் வாயுமை பங்கன் திருவால வாயான் திருநீறே''.

என்ற பாடலைப் பாடினார். வலப்பக்கம் வெம்மை தீர்ந்தது. இடப் பக்கம் நோய் தீராததால் வெம்மை இன்னும் அதிகரித்தது. இதுகண்ட ஞானசம்பந்தர் இடப்பாகத்திலும் திருநீறு பூசி மன்னனின் நோயைக் குணப்படுத்தினார். இதனால் சமணர்கள் தோல்வி அடைந்தனர்.

மேலும், சமணர்கள் தங்களின் தோல்வியால், ஞானசம்பந்தரை வெல்லவேண்டும் என்று எண்ணி 'அனல் வாதம், புனல் வாதம்', செய்தனர். இதிலும் ஞானசம்பந்தரே வென்றார். இதன்மூலம் சமணம் என்ற சமயத்தைப் புரட்சி செய்து அழித்து சைவ சமயம் தழைக்கத் தொண்டாற்றினார். இன்றைய நிலையில் திறனாய்வாளர்களாலும், விமர்சகர்களாலும் கூறப்படும் விமர்சனங்களைப் போன்று பழங் காலத்தில் நூல் மதிப்புரை செய்ய யாருமே முன்வராத நிலையில் சிறந்த படைப்புகளை அறிய அனல் வாதம் புனல் வாதம் போன்ற நிகழ்வுகளை கையாண்டனர்.

அனல் வாதம்

எரிகின்ற தீயில் நூலைப்போடும்பொழுது அது எரியாமல் இருந்தால் அதுவே சிறந்த நூல் என்பர். இதனையே 'அனல் வாதம்' என்று கூறுவர். இம்முறை சங்க காலத்திலிருந்து பின்பற்றபட்டுள்ளது. சிறந்த படைப்புகள் எது என்று தெரிந்துகொள்வதற்கு இம்முறையினை நம்முன்னோர்கள் பயன்படுத்தினர். இவ்வகையில்தான் ஞானசம்பந்தர் 'போகமார்த்த பூண்முலையாள்' என்ற பதிகத்தைப் போற்றி 'என்னை ஆளுகின்ற இறைவனின் திருநாமமே என்றும் நிலையற்ற மெய்ப்பொருளாகும் என உலகமாந்தருக்கு அறிவுறுத்தும் நிலையில் இத்திருப்பதிக ஏடு தீயில் வெந்தழியாது நிலை பெறுக' என்று சொல்லி 'தளரிள வளரொலி' - என்ற இன்னொரு நள்ளாற்றுத் திருப்பதிகத்தையும் தீயில் இடுகின்றார்.

தீயில் இடப்பட்ட ஏடு எரிந்து அழிந்து போகாமல் போட்டநிலை யிலேயே பச்சையாய் காட்சியளித்தது. ஆகவே இது 'பச்சைப்பதிகம்' என்று போற்றப்படுகின்றது. சமணர்களால் எழுதி தீயிலிடப்பட்ட ஏடானது எரிந்து சாம்பலானது. இங்கும் சமணர்கள் தோற்றனர்.

புனல் வாதம்

தம் சமயம் தொடர்பான பதிகச்சொற்களை ஏட்டில் எழுதித் தண்ணீரில் போட்டால் அந்த ஏடானது தண்ணீரை எதிர்த்து வரவேண்டும். இதுவே

புனல் வாதம். 'அஸ்தி, நாஸ்தி' என்ற வடமொழிச் சொல்லை சமணர்கள் ஏட்டில் எழுதி பாண்டிய மன்னர் முன்னிலையில் வகையாற்றின் தண்ணீரில் போட்டனர். தண்ணீரோடு ஏடும் அடித்துச் சென்றது. ஞானசம்பந்தர்,

> ''வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
> வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக''

என்ற பதிகத்தை எழுதித் தண்ணீரில் போடுகின்றார். அவர் இட்ட ஏடானது வைகை வெள்ளத்தை கிழித்து எதிர் செல்கின்றது. இதன் இரண்டாம் வரியில் வேந்தனும் ஓங்குக என்று பாடியதால் முன்பு கூனனாக இருந்த பாண்டியன் கூன் நீங்கினான். இதனால் 'நின்றசீர் நெடுமாறன்' எனும் பெயர் பெற்றான் பாண்டிய மன்னன்.

வாதில் தோற்றவர்கள் கழுவில் ஏற்றப்படுவர் என்பது தண்டனை. எனவே, பாண்டிய மன்னன் முன்னிலையில் வாதில் தோற்ற சமணர்கள் அனைவரையும் கழுவில் ஏற்றிக் கொன்றனர். இவ்வாறு தம்முடைய சமயம் பரப்பும் முயற்சியில் பல்வேறு புரட்சிகளை செய்த ஞானசம்பந்தரைப் 'பக்தி இயக்க காலச் சமயப் புரட்சியாளர்' எனப் போற்றலாம்.

மேற்கண்டவற்றிலிருந்து பின்வரும் முடிவுகளை பெற முடிகின்றது.

1. சைவ சமயம் பரப்பப் பல்வேறு பதிகளுக்குச் சென்றது போலவே ஞானசம்பந்தர் மதுரை நகருக்கும் சென்றார்.
2. ஞானசம்பந்தர் சமண சமயச் செல்வாக்கு மிக்க மதுரையில் சமணர்களால் பல்வேறு கொடுமைகளுக்கு ஆட்பட்டார்.
3. சமணர்களால் குணப்படுத்த முடியாத வெப்பு நோயைக் குணப் படுத்திக் கூன்பாண்டியனை நின்றசீர் நெடுமாறனாக்கினார்.
4. அனல் வாதத்திலும், புனல் வாதத்திலும் சமணர்களை எதிர்த்து வெற்றி கொண்ட ஞானசம்பந்தர் சமயப் புரட்சிக்கு வித்திட்டார்.

77. சம்பந்தரின் வீரட்டத்தலப் பதிகங்கள்

சிவ. மாதவன், புதுவை.

சிவபெருமான் புரிந்த திருவருள் விளையாட்டுகள் பல. அவற்றுள் சைவ சமயத்தினராலும், சைவ இலக்கியவாணர்களாலும் பலபடப் பாராட்டிப் பேசப்பெறுவது சிவனின் எண்வகை வீரச் செயல்களாகும். இந்த எட்டு வீரச்செயல்கள் எட்டு இடங்களில் நிகழ்த்தப்பட்டன என்று கூறப்படுகிறது. இந்தச் செயல்களை அட்டவீரட்டச் செயல்கள் என்றும், இவை நிகழ்ந்த ஊர்களை அட்ட வீரட்டத் தலங்கள் என்றும் வழங்கி வருகின்றனர். இச்செயல்களையும் இவ்வூர்களையும் ஒரு பழம்பாடல் தொகுத்தளிக்கின்றது.

"பூமன் சிரங்கண்டி அந்தகன் கோவல் புரம் அதிகை
மாமன் பறியல் சலந்தரன் விற்குடி மாவழுவூர்
காமன் குறுக்கை யமன் கடவூர் இந்தக் காசினியில்
தேமன்று கொன்றையும் திங்களும் சூடிதன் சேவகமே".

என்பது அப்பழம்பாடல். இதன் ஆசிரியர் யாரென அறிய இயல வில்லை, எனினும் சமய நூல்கள், சமய வழிகாட்டி நூல்கள், சிவனது பெருமையை விரித்துரைக்கும் நூல்கள் போன்றவற்றில் இப்பாடல் காணப்படுகின்றது.

சங்க நூல்களில் வீரட்டச் செயல்கள்

சிவனின் வீரச் செயல்களுள் ஒன்றாகிய திரிபுரம் எரித்தமை புறநானூறு, பரிபாடல், கலித்தொகை ஆகிய தொகை நூல்களில் சுட்டப் பட்டுள்ளது.

"ஓங்குமலைப் பெருவில் பாம்பு ஞாண்கொளீஇ
ஒருகணை கொண்டு மூஎயில் உடற்றி
பெருவிறல் அமரர்க்கு வென்றி தந்த
கறைமிடற்று அண்ணல்........" (புறநானூறு - 55)

என்றும்,

'மூவகை ஆரெயில் ஓரழல் அம்பின் முனிய' (பரிபாடல் - 5:25)

என்றும், இவையன்றிக் கலித்தொகையின் முதல் இருபாடல்களிலும் திரிபுரம் எரித்த செயல் குறிப்பிடப் பட்டுள்ளது.

மார்க்கண்டேயனுக்காக, சிவபெருமான் காலனைக் காலால் உதைத்து அழித்தார் என்பது சைவ சமய நூல்கள் கூறும் செய்தி. ஆனால்

கலித்தொகை, சிவபெருமான் இயமனை அழித்து அவன் குடலைக் காளிக்கு அளிப்பான் என்று குறிப்பிடுகின்றது.

''சுடர் விரிந்தன்ன சுரிநெற்றிக் காரி
விடரி அம்கண்ணிப் பொதுவனைச் சாடி
குடர் சொரியக் குத்தி, குலைப்பதன் தோற்றம் காண்
படர் அணி ஏந்தி பசுங்கட் கடவுள்
இடரிய ஏற்று எருமை நெஞ்சு இடந்து இட்டு
குடர் காளிக்கு ஆர்த்துவான் போன்ம்''

(கலித்தொகை-101:21 - 26)

இப்பாடலடிகளின் வழி எருமை வாகனத்தையுடைய இயமனது நெஞ்சைப் பிளத்தல் என்னும் சிவனின் வீரச் செயல் நிகழ்ந்தமை அறிய முடிகிறது. இதுவே காலப்போக்கில் மார்க்கண்டேயனுக்காக நிகழ்ந்ததென்று வேறு வடிவம் பெற்றிருக்க வேண்டும்.

காரைக்காலம்மையார் திரிபுரம் எரித்த செயலுடன், யானையின் தோலை உரித்த வீரச்செயலையும் சேர்த்துத் தமது பாடல்களில் குறிப்பிட்டுள்ளார். ''கைம்மா உரிபோர்த்த கண்ணுதலான்'' என வரும் அம்மையின் அற்புதத் திருவந்தாதி பாடலடி இதற்குச் சான்றாகும். மேலும் காலனை அழித்தமை, காமனை எரித்தமை ஆகியனவும் அம்மையாரால் சுட்டப்பட்டுள்ளன. ஆயின் சிவபெருமானின் அட்ட வீரச்செயல்கள் தேவார நூல்களுக்கு முற்பட்ட நூல்களில் முழுவதுமாக - எட்டுச் செயல்களும் - இடம்பெறவில்லை என்பது குறிப்பிடத் தக்க ஒன்றாகும்.

அட்டவீரட்டத் தலங்களைக் குறிப்பிடும் முதல்வர் : அப்பர்

தேவாரப் பதிகங்களில்தான் சிவபெருமானின் எட்டு வீரச்செயல்களும் சுட்டப்பட்டுள்ளன. அதிலும் குறிப்பாக, எட்டு வீரச்செயல்கள் நிகழ்ந்த தலங்களைத் தொகுத்துக் கூறுகிறார் அப்பர் பெருமான். அவரது அடைவுத் திருத்தாண்டகம் என்னும் பதிகத்தில் இடம்பெற்றுள்ள பின்வரும் பாடலில் எட்டுத் தலங்களும் 'வீரட்டம்' எனக் குறிக்கப்பெறுதல் காணலாம்.

''காவிரியின் கரைக் கண்டி வீரட்டானம்
கடவூர் வீரட்டானம் காமருசீர் அதிகை
மேவிய வீரட்டானம் வழுவை வீரட்டம்
வியன்பறியல் வீரட்டம் விடையூர்திக்கி டமாம்
கோவல் நகர் வீரட்டம் குறுக்கை வீரட்டம்
கோத்திட்டைக்குடி வீரட்டானம் இவை கூறி
நாவில் நவின்று உரைப்பார்க்கு நணுகச்சென்றால்
நமன்தமரும் சிவன் தமரென்று அகல்வர் நன்கே''.

(அப்பர் - 6 : -71-2)

இதன்கண் 'கோத்திட்டைக்குடி' என்னும் பதி, சலந்தரனை அழித்த பதியாகிய திருவிற்குடியையே குறிக்கிறது என்பர் மகாவித்துவான் சி. அருணைவடிவேல் முதலியார். சிவபெருமானின் வீரச்செயல்களைத் தம் பாடல்களில் மிகவும் விதந்தோதி உருகும் அப்பரடிகள் அவ்வீரச் செயல்கள் நிகழ்ந்த இடங்களைத் தமிழுலகிற்கு அடையாளம் காட்டியதன் மூலம் முன்னவராக, முதன்மையானவராகத் திகழ்கின்றார்.

அட்டவீரட்டத்துள் தேவாரப் பாடல் பெற்றவை

பிரமன் சிரம் கொய்யப்பட்ட கண்டியூர், அந்தகன் வதம் நிகழ்ந்த திருக்கோவலூர், திரிபுரம் எரியுண்ணச்செய்த திருவதிகை, இயமனை வதம் செய்த திருக்கடவூர், தக்கன் தலை சாய்க்கப்பட்ட திருப்பறியலூர், யானையின் தோல் உரிக்கப்பட்ட வழுவூர், சலந்தரனை அழித்த பதியாகிய திருவிற்குடி, காமனைக் காய்ந்த பதியாகிய திருக்குறுக்கை ஆகிய எட்டுத்தலங்களுள் வழுவூர் தவிர்த்த பிற தலங்கள் தேவாரப் பாடல் பெற்றவையாகும். எனினும் அப்பர் பெருமான் தேவாரத்தில் வழுவூர் வைப்புத் தலமாக இடம்பெற்றுள்ளது.

சம்பந்தரும் அட்டவீரட்டத் தலங்களும்

சம்பந்தரின் முதல் மூன்று திருமுறைகளில், திருக்கண்டியூர், திருக்கோவலூர், திருவதிகை, திருக்கடவூர், திருப்பறியலூர், திருவிற்குடி ஆகிய ஆறு வீரத்தலங்கள் பாடல் பெற்றுள்ளன. வழுவூர், திருக்குறுக்கை என்னும் இரு தலங்கள் பாடல் பெற்றமைக்கான சான்றில்லை. முற்கூறிய ஆறு தலங்களுக்கும் தலா ஒரு பதிகம் வீதம் ஆறு பதிகங்கள் சம்பந்தரால் பாடப்பெற்றுள்ளன. ஒவ்வொரு திருமுறையிலும் இரண்டு பதிகங்கள் என்னும் கணக்கின்படி மூன்று திருமுறையில் ஆறு பதிகங்கள் அமைந்துள்ளன. சமபந்தர் வழுவூர், குறுக்கை ஆகிய தலங்களைப் பாடவில்லையெனினும், அப்பதிகளில் நிகழ்ந்த வீரச்செயல்களான யானையின் தோலை உரித்தமை, காமனைக் காய்ந்தமை ஆகியவற்றைத் தமது பிற தேவாரப் பாடல்களில் விரிவாகச் சுட்டியுள்ளார் என்பதும் கவனத்திற் கொள்ள வேண்டியதாகும்.

சம்பந்தரின் பதிகத்துள் வீரச்செயல் பற்றிய குறிப்பு

ஆறு வீரச்செயல்கள் நிகழ்ந்த ஆறு தலங்களைப் பற்றிச் சம்பந்தர் பாடியுள்ளார். ஆனால் அவ்வீரச்செயல் நிகழ்ந்தமையைச் சுட்டும் அகச்சான்று சில தலப் பதிகங்களில் மட்டுமே காணப்படுகின்றது. அதாவது வீரட்டானத்தைப் பாடினாலும், வீரச்செயல் குறித்த செய்தி சில பதிகங்களில் மட்டுமே காணப்படுகிறது.

சான்றாக, பிரமன் சிரம் கொய்த வீரச்செயல் திருக்கண்டியூரில் நிகழ்ந்தது; அச்செயலை இத்தலப் பதிகத்தில் சம்பந்தர் குறிப்பிட்டுப் பாடியுள்ளாரா என நோக்கினால், பாடியுள்ளமை தெரிய வருகிறது.

''இயலுமாறு எனக்கு இயம்புமின் இறை
வன்னுமாய் நிறை செய்கையைக்
கயல்நெடுங் கண்ணினார்கள்தம் பொலி
கண்டியூர் உறை வீரட்டன்
புயல்பொழிந்து இழி வானுளோர்க்
காகஅன்று அயன் பொய்ச்சிரம்
அயல்நக அதுவரிந்து மற்றதில்
ஊண் உகந்த அருந்தியே'' (சம்பந்தர் - 3- 38 - 6)

பிரமனின் சிரம் கொய்த செய்தியைச் சம்பந்தர் வாக்கினாலேயே அத்தலப் பதிகத்திலேயே இடம் பெற்றிருக்கக் காணலாம். அவ்வாறே,

''கரிதரு காலனைச் சாடினானும் - கடவூர்தனுள்
விரிதரு தொல்புகழ் வீரட்டானத்து அரன் அல்லனே?''
(சம்பந்தர் - 3-8-2)

என வரும் பாடலடிகளில் காலனை உதைத்த செய்தியும்,

'எண்ணார் எயில் எய்தான் இறைவன்'
'வில்லால் எயில் எய்தான் ஆடும்' (சம்பந்தர் - 1-46-4,8)

என வரும் அடிகளில் திரிபுரம் எரித்த செய்தியும் முறையே திருக்கடவூர், திருவதிகைத் தலப் பதிகங்களில் அகச்சான்றாக அமைகின்றன.

இனி, திருக்கோவலூர், திருப்பறியலூர், திருவிற்குடி ஆகிய வீரட்டத் தலங்களைச் சம்பந்தர் பாடியிருந்தாலும் அத்தலங்களில் நிகழ்ந்த வீரச்செயல்கள் பற்றிய குறிப்பு ஏதும் அத்தலப் பதிகங்களில் காணப் பெறவில்லை. எனினும் சம்பந்தரின் பிற பதிகங்களில் இவ்வீரச் செயல்கள் குறிப்பிடப் பட்டுள்ளன. ஒரு தலத்தில் நிகழ்ந்த வீரச்செயலை, அத்தலத்தைப் பாடும்போது குறிப்பிடாது விட்டது ஏன்? என்னும் வினாவிற்கு விடை காண்பது அரிதாக உள்ளது. இறைவனின் தோற்றப் பொலிவை வருணிப்பதற்கும், அவ்விறைவன் எழுந்தருள் புரியும் தலத்தின் இயற்கை வளத்தை வருணிப்பதற்கும் சம்பந்தர் முதன்மை கொடுப்பவர் என்பதால் அவர் வீரச்செயல் குறித்து விளம்பாது விட்டிருக்கலாம்.

சம்பந்தரின் வீரட்டத்தலப் பதிகங்களின் அமைப்பும் சிறப்பும்

இறைவனின் வீரச்செயல்களுள் திரிபுரம் எரித்தமை பல நூல்களில் குறிப்பிடப்படுகிறது. திரிபுரம் எரித்தபின் அந்தச் சாம்பலைப் பூசிக் கொண்டான் சிவன் என்று கலித்தொகை சுட்டுகிறது. சம்பந்தர் தமது திருவதிகை வீரட்டானப் பதிகத்தில் சிவன் நடனமாடும் முறையைக் காட்சிப்படுத்தும் வகையில் பாடியுள்ளார். பூத கணங்கள் சூழ, அனலைக் கையில் ஏந்தி, பொன்னிற சடை தாழுமாறு, முழவு அதிர, மறைபாட,

உமையோடு இசைபாடி, சிவபெருமான் நடனமாடுவதாகப் பாடியுள்ளார். அவ்வாறு ஆடும் இறைவனின் முடியில் கங்கையும், பிறையும், கையில் படுவெண்டலையும் பாங்குடன் இடம்பெற்றிருப்பதைச் சுட்டியுள்ளார். திரிபுரம் எரித்த மகிழ்ச்சியை நடனத்தின் மூலம் சிவபெருமான் வெளிப்படுத்தியுள்ளமை சம்பந்தர் வாக்கினால் அறிய முடிகின்றது.

அடுத்து, இறைவனின் தோற்ற வருணனையாக அமைகின்ற தொடர்கள் இந்த ஆறு பதிகங்களிலும் மிகுதியாக இடம் பெற்றுள்ளன. இறைவனை, கருத்தன், கடவுள், நிருத்தன், மருந்தன், அமுதன், மயானத்துள் மைந்தன், கபாலி, சடையன், பிறையன், நரையார் விடையான் என்று அவனது இயல்புகளினடியாகப் போற்றும் தன்மையைத் திருப்பறியலூர் வீரட்டப் பதிகத்தில் காணமுடிகின்றது. இவ்வாறே பிற பதிகங்களிலும் இறைவனது இதே மாதிரியான தோற்றம் வேறுவேறு தொடர்களால் சுட்டப்படுகின்றது.

இனி, நெஞ்சுக்குரைப்பது போலவும், ஊராரை/அடியாரை அழைத்துக் கூறுவது போலவும் அமைகின்ற பதிகமாக திருக்கோவலூர் வீரட்டப் பதிகம் விளங்குகின்றது. இளமை கழிந்து முதுமை வந்து எய்தியபோது அதனுடன் கூடவே வரும் இருமல், சூலை, குன்மம், நரைதிரை ஆகியன வந்து துன்புறுத்தாமுன், படைகொள் கூற்றம் வந்து அச்சுறுத்துவதற்கு முன் நெஞ்சமே! கோவலூர் வீரட்டானம் சேர்வோம் என்று இப்பதிகம் விளித்துரைக்கின்றது.

உளம்கொள் போகம் உய்த்திடார் உடம்பு இழந்த போதின்கண்
துளங்கி நின்று நாள்தொறும் துயரல் ஆழி நெஞ்சமே!

(சம்பந்தர் -2-100-5)

என நெஞ்சிடமும்,

ஏதம் மிக்க மூப்பினோடு இருமல் ஈளை என்றிவை
ஊதல் ஆக்கை ஓம்புவீர் (2-100-8)

உரையும் பாட்டும் தளர்வு எய்தி உடம்பு மூத்த போதின்கண்,
நரையும் திரையும் கண்டு எள்கி நகுவர் நமர்கள் ஆதலால்

(2-100-7)

என அடியாரிடம் கூறுவது போன்று அமைந்துள்ள இப்பதிகப் பாடல்கள் ஒவ்வொன்றிலும் ‘வீரட்டானம் சேர்துமே’ என்று உயிர்கள் உய்தி யடையும் வழியும் கூறப்பெற்றுள்ளது.

சலந்தரனைத் தடிந்த பதியாகிய திருவிற்குடி வீரட்டப் பதிகத்தில், அவ்வீரட்டானத்திறைவனை வணங்குவார்க்கு வினை நோய் தீரும் என்னும் கருத்து வலியுறுத்தப் பட்டுள்ளது.

வடிகொள்மேனியர் வானமாமதியினர் நதியினர்
இனிதுஉறை விற்குடி வீரட்டம்
அடியர் ஆகி நின்று ஏத்தவல்லார்
தமை அருவினை அடையாவே (2-108-1)

விற்குடி வீரட்டப் பெருமானை நினைந்து ஏத்துவார் வருத்தம் அடையார்; அவரை இடர்கள் வந்தடையா; அவ்விறைவனைப் பரவினால் பற்று அறும்; பாடுவோர்க்குத் தவ வலிமை மிகும்; பெருந்தவத்தோர் என்னும் பெயர் வந்து சேரும் என்று உடன்பாட்டாலும் எதிர்மறையாலும் திருக்கோவலூர் வீரட்டத்திறைவன் பெருமை இப்பதிகத்தில் போற்றி யுரைக்கப்படுகின்றது.

பிரமன் சிரம் கொய்யப்பட்ட பதியாகிய திருக்கண்டியூர் வீரட்டப் பதிகத்தில் சம்பந்தர் ஒவ்வொரு பாடலிலும் ஒரு வினாவைக் கேட்கிறார். எனவே இப்பதிகம் 'வினாவுரை' பதிகம் என்று பெயர் பெறுகின்றது. இதுபோன்று பல பதிகங்களைச் சம்பந்தர் பாடியுள்ளார் என்பதும் ஈண்டு எண்ணத்தக்கது.

திருக்கண்டியூர் பதிகத்தின் முதற்பாடல் வருமாறு:

வினவினேன் அறியாமையில் உரை
செய்ம்மின் நீர்! அருள் வேண்டுவீர்!
கனைவிலார் புனல் காவிரிக்கரை
மேய கண்டியூர் வீரட்டன்
தனம்முனே தனக்கு இன்மையோ? தமர்
ஆயினார் அண்டம் ஆளத் தான்
வனனில் வாழ்க்கை கொண்டு ஆடிப்பாடி
இவ்வையம் மாப்பலி நேர்ந்ததே? (சம்பந்தர் - 3-38-1)

சிவபெருமானின் உறவினர்களாகிய பிரமன், திருமால் முதலானோர் உலகைப் படைத்தும், காத்தும் ஆட்சி செய்கின்றபோது சிவன் ஏன் பிச்சை எடுத்து, காட்டில் ஆடிப்பாடி வாழவேண்டும்? ஒருவேளை முன்னோர் தேடிவைத்த செல்வம் தமக்கு இல்லாததால் சிவபெருமான் பிச்சை எடுக்க வேண்டிற்றோ? என வினவுவதாக இப்பாடல் உள்ளது. உலகை ஆளும் தமது உறவினர்கள் (பிரமன், திருமால்) இருக்கும் போது சிவன் பிச்சை எடுப்பது.சரியாகுமா? என்னும் வினா அனைவர் மனதிலும் எழலாம். ஆயின் சம்பந்தர் குறிப்பாக ஒரு விடையை இப்பாடலில் வைத்துள்ளார். இவ்விடை அமைந்துள்ள தொடர் 'தனம் முனே தனக்கு இன்மையோ?' என்பதாகும். இத்தொடரில் உள்ள 'தனம்' என்னும் சொல்லுக்கு பிறப்பு, இறப்பு, ஆதி, அந்தம், முதல், ஈறு என்று பொருள் கொண்டால், இவை எதுவும் இல்லாதவன் சிவபெருமான்;

எனவே அவன் பிச்சை எடுப்பது சரியே என்னும் பொருள் குறிப்பாக சுட்டப்படுதலை உணர்ந்து மகிழலாம்.

மேலும் இப்பதிகத்தில், சிவபெருமான் வெள்ளம் தாங்கியது ஏன்? யானையின் தோலை உரித்துப் போர்த்தது ஏன்? அந்தகனைச் சூலத்தில் ஆய்ந்தது ஏன்? முப்புரம் எரித்தது ஏன்? கடல் நஞ்சம் உண்டது ஏன்? என்று இப்பதிகம் முழுவதும் வினாவாக அமைகின்றது. அடியவரின் சிந்தனைக்கு விருந்தளிப்பதாக இப்பதிகம் அமைந்துள்ளது என உரைக்கலாம்.

அடுத்து, சம்பந்தரின் இப்பதிகங்களுள் காணப்பெறும் மற்றொரு செய்தி, ஒரு தலப்பதிகத்தில் வேறொரு தலத்தில் நிகழ்ந்த வீரச்செயல் களைக் குறிப்பிடுதல் ஆகும். சான்றாக, திருப்பறியலூர் தக்கன் தலையைச் சிதைத்த பதியாகும். இத்தலப் பதிகத்துள் சம்பந்தர் தக்கன் குறித்து எதுவும் குறிப்பிடவில்லை. மாறாக, சிவபெருமானின் பிற வீரச்செயல்களான காமனைக் காய்ந்தமை, திரிபுரம் எரித்தமை ஆகியவற்றைப் பாடியுள்ளார்.

.... கொடுஞ்சிலை வில் காமன்
விளிந்தான் அடங்க வீந்து எய்தச் செற்றான் (1-134-3)

என்றும்,

அரவு உற்ற நாணா அனல் அம்பு அதுவாக
செருஉற்றவர் புரம் தீஎழச் செற்றான் (1-134-6)

என்றும் வருகின்ற தொடர்களின் வழி இவற்றை அறியலாம்.

திருக்கண்டியூர்ப் பதிகத்தில் யானையை வதைத்தது, திரிபுரம் எரித்தது, அந்தகனை அழித்தது போன்ற பிற தலங்களில் நிகழ்ந்த வீரச் செயல்களை எடுத்து மொழியும் பாங்கு உணரத்தக்கது.

இதுகாறும் கூறப்பெற்ற செய்திகளின் வழி, சிவபெருமானின் வீரச்செயல்கள் சங்க இலக்கியங்களிலும், காப்பியங்களிலும், காரைக்காலம்மையார் பாடல்களிலும், இடம்பெற்றிருந்த போதிலும், இவை முழுவதுமாக தேவாரப் பாடல்களில்தான் சுட்டப்பெறுகின்றன; அப்பர் பெருமான்தான் அட்டவீரட்ட தலங்களைச் சுட்டிய முதல்வர்; சம்பந்தர் ஆறு தலங்களைப் பாடியுள்ளார்; அவற்றுள் பிரமன் சிரம் கொய்தமை, திரிபுரம் எரித்தமை, காலனைக் கடிந்தமை ஆகிய மூன்றும் அவ்வத்தலப் பதிகங்களில் அவர் கூற்றாக மொழியப்பட்டுள்ளன; பிற மூன்று வீரச்செயல்கள் அப்பதிகங்களில் குறிப்பிடப் பெறவில்லை; ஒட்டு மொத்தமாக இப்பதிகங்களை நோக்கும்போது அவற்றில் சிவபெருமானின் இயல்பு, தோற்றச்சிறப்பு, அவரை வணங்குவதால் கிடைக்கும் பயன் முதலானவை வலியுறுத்தப்பட்டுள்ளன என்பன போன்ற பயனுள்ள கருத்துக்களை அறிய முடிகிறது.

78. தில்லையும் சம்பந்தரும்

பா. மாலினி, அண்ணாமலைநகர்.

அண்டவெளியிலே, அனைத்து அண்டங்களையும் ஆட்டுவிக்கும் பேராற்றல் ஒன்று உள்ளது. அந்த ஆற்றல், எந்த அளவைகளாலும் அளந்து அறுதியிட்டு கூற முடியாத தன்மை உடையது; அது கற்பனை கலந்த சோதி; அந்தச் சோதியை கருணைப் பிழம்பாக்கி, மக்களுக்குப் புலப்படுத்தியவர்கள் அருளாளர்கள் அத்தகைய அருளாளர்களில் ஒருவராகிய திருஞானசம்பந்தர், தாம் கண்ட - உணர்ந்தனுபவித்த - அருளனுபவத்தை உலக மக்கள் உணர பதிகம் மூலம் புலப்படுத்துகிறார்.

ஏழு திருமுறைகளில், திருஞானசம்பந்தர் அருளிய தேவாரப் பதிகங்கள் முதன் மூன்று திருமுறைகளாக வைக்கப் பெற்றுள்ளன. திருநாவுக்கரசர், திருஞானசம்பந்தர் என்னும் இருவருள் உலக முதல்வனாகிய சிவபரம் பொருளை இன்னிசைத் தமிழ்ப் பாடலால் முதன்முதல் பாடியவர் திருஞானசம்பந்தர். சிவபெருமானை இன்றமிழால் முதலில் பாடியமையானும், அப்பெருமானது திருவடிகளில் முதலிற் கலந்தமையானும், அவரது பாடல்கள் முதல் மூன்று திருமுறைகளாகப் வைக்கப் பெற்றன என்பர்.

எங்கும் நிறைந்த பரம்பொருள் - உயிர்கள் உய்யும் வண்ணம் அப்பரம்பொருள், ஐந்தொழில் நிகழ்த்தியவாறு திருச்சிற்றம்பலத்தே சத்தியுடன் கூடி அம்பலவாணனாக, அற்புதத் தனிக்கூத்தினை இயற்றி அருளுகிறது. உலகத்தின் உயிர்த்துடிப்பை இயக்குகின்ற இருதயத் தானமாக விளங்கும் தில்லையம்பலம், பரமசிவத்தின் ஆடற்களமாகும்; இதுவே ''கோயில்'' எனப்படும். உலகத்தில் இறைவன் எழுந்தருளியிருக்கும் சிவன் கோயில்கள் பலவற்றுள்ளும் ''கோயில்'' என்றாலே தில்லையே சிறப்பாகக் குறித்திடும் மரபு உண்டாயிற்று.

'கோயில்' எனத் தனித்தன்மையுடன் சிறப்பாகக் கூறப்பெறும் தில்லைச் சிற்றம்பலத்தில் - விண்தலத்தில் - ஞானப் பெருவெளியே சிற்பரவியோக மாகக் கொண்டு, அம்பலவாணன் அற்புதத் தனிக்கூத்து இயற்றுகிறான்.

அத்தகைய சிறப்புப் பெற்ற திருத்தில்லைக்குச் சென்று கூத்தப் பெருமானை வணங்க வேண்டும் என்ற எண்ணம் எழ, அந்நிலையில், தந்தையார் சிவபாத இருதயருடன் பெரும்பாணர்த் தம்பதிகள் புடைசூழ,

தில்லைத் தலயாத்திரை அமைகிறது. கொள்ளிட நதியைக் கடந்து, தில்லையை நோக்கிச் செல்லும் பிள்ளையார், தென்திசைத் திருவாயிலின் வழியே திருக்கோயிலின் உள்புக்கு, திருவணுக்கன் திருவாயிலை அணுகி இறை வழிபாடு செய்யும் கடமையில் நின்றார்.

அண்ணலார் தமக்கு அளித்த மெய்ஞ்ஞானம் என்பதன் புறவடிவ மாகவே, சிற்றம்பலம் தோற்றம் பெறுகிறது. பின்னர் அந்த ஞானத்தின் உள்ளூறும் அமுதமானது பெருகிப் பெருகி விளைவிக்கும் சிவானந்த மாகவே கூத்தப்பெருமானின் தனிக்கூத்து அவருக்குத் தோன்றுகிறது. இந்நிலையில் உணர்வின் நேர்பெறவரும் சிவபோகத்தை உருவின்கண் அனையும் ஐம்பொறி அளவினும் வந்து நின்று இன்புறுத்துமாறு செய்து நிற்கும் சிவபரம்பொருளின் திருவருளை வியந்து வணங்கி நிற்கின்றார். கூத்தப்பெருமானையன்றி வேறு எதையும் பாராத தெய்வீகக் கற்புக்கடம் பூண்ட அந்தணர்கள் கூத்தப்பெருமானுடன் மிக அணுக்கமாக ஒருநெறிப்பட்டு நிற்கும் காட்சியைக் காண்கிறார். இத்தலம் திருவருள் முழுமையைத் தன்னகத்தே கொண்டு, உலக முழுமைக்கும் அதனை ஈடுபடுத்தும் பணியில் நிற்கிறது எனக் கண்டவகையில், தில்லைத் திருத்தலம் பொதுமையும் ஒருவகையில் சிறப்புத் தன்மையும் கொண்டு விளங்குவதை உணருகிறார்.

திருத்தில்லையை அடைந்து நின்ற அவ்வளவிலேயே அவருடைய அனுபவ நிறைவாம் காட்சியில் ஒரு புதுமை அமைகிறது. எந்த ஒரு பொருளும், சிவத்தொண்டின் அணுக்கமாம் நிலையில் நின்று திருத்தொண்டின் நெறியை ''இது இப்படி'' என்று விளக்குகின்ற போக்கிலேயே அமைவதைப் பார்க்கிறார். திருவீதியைப் பார்த்தபோது, அது ஒரு வீதி என்ற காட்சியே புலப்படவில்லை. திருத்தொண்டு நிலையில் ஊறி நிற்கும் அன்பர் தம் நெஞ்சு என்பதாகக் காட்சிப்பட்டதேயன்றி, திருவீதிக் காட்சியே அமையவில்லை. இவ்வாறே, தில்லையில் உள்ள எல்லாப் பொருள்களுமே, திருத்தொண்டினுடன் இணைந்து நின்ற அணுக்கமாகத் தன்மையை வெளிப்படுத்தும் காட்சிகளாக அவருக்குப் புலப்பட்டனவேயன்றி, தனிப்பொருள் வடிவமே தோன்றவில்லை.

இந்நிலையில்,

**''கற்றாங் கெரியோம்பிக் கலியை வாராமே
செற்றார் வாழ்தில்லைச் சிற்றம் பலமேய
முற்றா வெண்திங்கள் முதல்வன் பாதமே
பற்றா நின்றாரைப் பற்றா பாவமே''.**

கற்க வேண்டிய வேதங்கள், வேதாமகங்கள், சாத்திரங்கள் முதலிய வற்றைக் கற்று, உலகில் பாவங்களால் நிகழும் துன்பங்கள் வராமல் காத்து, ஐம்புல ஆசையும் அற்றவர்களான தில்லை வாழந்தணர் வாழ்கின்ற தில்லைச் சிற்றம்பலத்தில் எழுந்தருளியிருப்பவனும், முற்றாத் வெள்ளிய இளம்

பிறையை முடியில் அணிந்தவனுமாகிய உலக முதல்வனான சிவபெருமானது திருவடிகளைப் பற்றுக் கோடாகக் கொண்டு வணங்கி நிற்கும் அடியவரைப் பாவங்கள் தீண்டாது என்பதை வலியுறுத்திக் கூறுகின்றது. 'கலி' என்று பொதுப்படக் கூறியதால், இம்மையில் வரும் வறுமைத் துன்பங்களும் அடங்கும். வறுமை நீங்கி, நாடு செழிக்க வேண்டுமாயின் பருவமழை தவறாது பெய்ய வேண்டும். அம்மழை பெய்வதற்குக் காரணமானவர்கள் எரியோம்பும் அந்தணர் என்பது வழக்கு.

''எரியோம்பிக் கலியை வாராமே செற்றார்''

என்றதனால், கலியை வராமல் செறுப்பதற்கு எரியோம்பல் காரண மாயிற்று என்பது பெறப்படும்.

திருத்தில்லையில் அமுதுண்டார்

காழிப்பிள்ளையார், உமையளித்த ஞானத் திருமுலைப் பாலை, அம்மையளித்த பொற்கிண்ணம் மூலமாகத் தன் வாயை இடமாகக் கொண்டு ஏற்றபோது பிள்ளையார், அதனை உண்ணாமல், மறித்து உலகத்துயிர்களின் செவியமுதமாக-திருமுறைகளாக வார்த்துக் கொண்டிருக்கிறார். ஆனமையால், அன்று அமுத நிலையில் அவர் அமுதத்தை உண்ணாதவரானார். ஆனால் தில்லையில், திருப்பதிகம் பாடி முடித்தபின் ஒருவகையான புதிய அருளனுபவம் உண்டாகிறது.

அண்ணலார் அளித்த மெய்ஞ்ஞானமே, எதிரில் தோற்றும் சிற்றம்பலமாக இருந்தது. மெய்ஞ்ஞானத்தே எழும் ஆனந்தமே, சிற்றம்பலத்தின்கண் பெருமான் ஆடும் இன்பத் திருப்பெருங்கூத்தாக இருந்தது. பதிகம் பாடி முடிந்தபோது அம்பலமும் இல்லை; ஆனந்த கூத்தும் இல்லை; ஒரே வெட்டவெளிதான் தெரிகிறது. தன்னுள்ளே யிருந்து முன்பெல்லாம் இன்பவூற்றினை வெளிப்படுத்தும் ஞானம் இப்போது இல்லை; உடலும் கரைந்தது; என் உயிரும் கரைந்தது. உள்ளே தோன்றுவது வெட்டவெளியே; ஆகையால் வெளியேயும் வெட்டவெளியே தோன்றுகிறது; புறவுடலுக்கு அப்பால், உள்ளே ஒரு உறுப்பும் இருப்பதாகத் தோன்றவில்லை. ஒரே வெட்டவெளி, அவ்வாறே எதிரிலும் ஏதும் தெரியவில்லை. வெட்டவெளி, ஆனால் புறக்கண்ணின் மூலம் பேரானந்தம் அனுபவப் பொருளாவதை உணர்ந்தார். அந்த இன்பத்தைத் தானாகத் தடுக்கவோ, நிறுத்தவோ, இயலாமையால், அவ்வமுதத்தை உண்ணும் பேறு பெற்றார்.

ஞானசம்பந்தரின் சிந்தையில் தில்லைப் பெருமானது திருவுருவப் பொலிவும், தில்லையந்தணர் மூவாயிரவர் அணுக்கத் தொண்டராயிருந்து, அப்பெருமானை வழிபட்டு வரும் சிறப்பும் நீங்காது நிறைபெற்று நின்றன. ஆனந்தக்கூத்தனின் அருள்நடம் கண்டு வணங்குவதற்காக மீண்டும் தில்லையை நோக்கிப் புறப்பட்டார். திருநீலகண்ட யாழ்ப்பாணரும் அவருடன் சென்றார்.

இவர்கள் வருகையை அறிந்து தில்லைவாழ் அந்தணர் எதிர்கொண்டு வந்து வணங்கி வரவேற்றனர். அவர்கள் வணங்குமுன் ஆளுடைய பிள்ளையாரும், அவர்களை வணங்கினார். தில்லை வாழந்தணர்கள் அனைவரும் அவர் கண்களுக்குச் சிவ கணங்களாய்த் தோற்றமளித்தனர். பிள்ளையார் அக்காட்சியை உடனிருந்த திருப்பெரும்பாணருக்கு காட்டியவாறு திருக்கோயினுள் புகுந்தார். அங்கு, இறைவனது திருப்பெரும் கோலத்தை, ஆனந்த தாண்டவ நிரையைக் கண்டு கண்களித்துப் பாடினார். இத்திருப்பதிகம்,

''ஆடினாய் நறுநெய்யொடு பால்தயிர்
அந்தணர் பிரியாத சிற்றம்பலம்
நாடினாயிடமா நாறுகொன்றை நயந்தவனே
பாடினாய் மறை யோடுபல் கீதமும்
பல்சடைப் பனிகால் கதிர்வெண் திங்கள்
சூடினாயருளாய் சுருங்க எம தொல்வினையே''

தில்லைவாழந்தணர், சிற்றம்பலத்தைப் பிரியாது தங்கி வழிபடும் சிறப்பைக் கூறுவது இப்பதிகம். இறைவன் திருநடனம் செய்யும் தலங்களுள் சிறந்தது தில்லையம்பலம். திருத்தலங்கள் பலவற்றிலும் தில்லை ஒன்றில்தான் ஓர் ஆண்டிற்குள் ஆறுநாள் திரு அபிடேகம் சிறப்புடன் நடந்து வருவதாதலின் ''ஆடினாய்'' என்று முதற்கண் தொடங்கினார். சிவவழிபாட்டிற்கு வாசத் திருமஞ்சனம் கூறப்படும் உபசாரங்கள் பலவற்றுள்ளும் அபிடேகமே சிறந்ததாதலின் அதனைப் பாடலின் முதன்கண் வைத்தார்.

''சிவதருமம் பல. அவற்றுள் சிறந்தது பூசனை. அதனுள் அவமில் பல உபசாரத்தைந்து சிறந்தன. ''ஆங்கவைதாம் அபிடேகம், அரியவிரை, விளக்கு, மனுத்தாங்கும் அருச்சனை, நிவேதனம் ஆகும்'' என்னும் கச்சியப்ப முனிவர் வாக்கு இதனைத் தெளிவிக்கவல்லது. (பேரூர்ப் புராணம் - மருத வரைப் படலம் - 29).

தில்லைவாழ் அந்தணர்கள் எல்லா உயிர்களிடத்தும் கருணையோடு செந்தண்மை பூண்டொழுகும் அறவோர் ஆதலின் மறையோர், வேதியர் என்றெல்லாம் கூறாது ''அந்தணர்'' என்றார்.

தில்லை மூவாயிரவருள் சிற்றம்பல நாதனும் பலநாதனும் ஒருவனாதலின் ''பிரியாத'' என்ற சொல்லால் அதைக் குறிப்பிட்டார். பூதாகாசத்தைப் பிரித்தல் இயலும்; ஞானாகாசத்தைப் பிரித்தல் எவ்வுயிர்க்கும் இயலாதது. தில்லை வாழந்தணர் இறைவனை அல்லும் பகலும் பிரியாமல் தம் சிந்தையுள் வைத்து வழிபடும் தன்மையராதலின்

''அந்தணர் பிரியாத சிற்றம்பலம்''

என்றார். அகத்தே நினைவிலும், புறத்தே பூசையிலும் அவர்கள் பிரியா தொழுகுவது இன்றும் நடைபெற்று வருதல் போற்றத்தக்கது.

இறைவன் அணியும் எண்வகை மலர்களுள் சிறந்தது, கொன்றை மலர். அது உருவத்தில் பிரணவ வடிவாயிருத்தலில் ''பிரணவபுட்பம்'' என்று போற்றப்படும். மந்திரங்களில் சிறந்த பிரணவ மந்திரத்திற்குரிய கடவுள் தாமே என்பதைக் குறிப்பதற்காக இறைவன் கொன்றை மாலையை அணிந்தான். இதனைத்

''துன்றுவார் பொழில் தோணி புரவர்தம்
கொன்றை சூடும் குறிப்பது வாகுமே'' (5-45-7)

என்னும் நாவரசர் திருக்குறுந்தொகைப் பாடலால் அறியலாம்.

சம்பந்தர் பதிகம் பாடத் தொடங்கியபோது ஒரு மாற்றம் அமைகிறது. பின்னர் பதிக முடிவில் தன் அகத்தேயும், சிற்றம்பலமாக அமைந்த புறத்தேயும் ஒரு வகை அனுபவமாற்றம் அமைந்து விடுகிறது. பதிகம் தொடங்கும்போது ஒரு வகை மாற்றம் இருந்தது. பதிகத்தை முடித்துத் திருக்கடைக்காப்புப் பாடி முடித்த நிலையில், முதல் அனுபவம் நிகழும் காலத்தே இருந்த அகநாட்டம், எலும்பு, உயிர் அகிய அனைத்தும் உருகிவிட்டன. அப்படியே வெளியில் அமைந்த கூத்தும் வெட்ட வெளிக் கூத்தாக அமைந்துவிட்டது. இத்தகைய மாற்றத்தை அளித்தது திருக்கூத்தே. அகத்தும், புறத்தும் வெட்டவெளியாகவே ஆக்கி அவரது எலும்பும், உயிரும், ஞானநாட்டம் நல்கும் மைப்பும் கரைந்து விட்டன. கரைய வைத்தது விண்ணாயகன் திருக்கூத்துதான்.

தில்லையில், காழிப்பிள்ளையார் அருளிய பதிகங்கள் இரண்டு, சிவகணநாதர்களாகத் தில்லைவாழ் அந்தணர்களைக் கண்ட காட்சிக்கு முன்னர் பாடிய பதிகம் ''கற்றங் கெரியோம்பி'' என்ற பதிகம், சிவகணத்தவர் காட்சிக்குப் பின் மலர்ந்தது ''ஆடினாய் நறுநெய்யோடு பால் தயிர்'' என்ற பதிகம்.

முதற் பதிகத்தினுள் தில்லைவாழ் அந்தணர்களைச் ''சீலத்தார்'' என்று குறிப்பிடும் திருஞானசம்பந்தர்,

''ஊறும் இன்தமிழால் உயர்ந்தார் உறைதில்லை தன்னுள்
ஏறு தொல்புகழ் ஏந்து சிற்றம்பலம்''

என்று இரண்டாம் பதிகத்துத் திருக்கடைக்காப்பினுள் அமைத்துக் காட்டுகிறார். இரண்டாம் பதிகத் திருக்கடைக் காப்பினுள் தம்மை,

''நான்மறை வல்ல ஞானசம்பந்தன்''

என்று கூறிக்கொண்ட சம்பந்தர் தில்லைவாழ் அந்தணர்களை உயர்ந்தார் என்றும், அவர்தம் உயர்வுக்குக் காரணம் ''ஊறும் இன் தமிழ்'' என்று கூறினார்.

தில்லைத் தலத்தின் இரண்டாவது திருப்பதிகத்தின் திருகடைக் காப்பினுள் ''ஊறும் இன்தமிழால் உயர்ந்தார்'' என்று கூறியதன் நுட்பம் திருவருளுணர்வு கொண்டு திருவருட்கண் விழிப்பித்து, நந்திநெறி என்று கண்டு, பின் அப்பரம்பொருளைத் தமிழாக்குதல் வேண்டும். இன்பமாக்குதல் வேண்டும்.

திருஞானசம்பந்தப் பெருந்தகை, தாம் கண்ட சிவகணக் காட்சியை, தில்லைத் திருத்தலத்து இரண்டாம் பதிகத்து மூன்றாம் பாட்டில் அமைத்தருளுகின்றார்.

''நீலத்தார் கரியமிடற்றார் நல்ல
நெற்றிமேலுற்ற கண்ணினார் பற்று
சூலத்தார் சுடலைப் பொடி நீறணிவார் சடையார்
சீலத்தார் தொழுதேத்து சிற்றம்பலஞ்
சேர்தலாற் கழற்சேவடி கைதொழக்
கோலத் தாயருளா யுனகாரணங் கூறுதுமே''

ஆளுடைய பிள்ளையார், தில்லைக்குச் செல்லுங்கால் அவரை எதிர்கொண்டழைக்க வந்த தில்லை வாழந்தணர்கள், சிவகணங்களாக அவருக்குத் தோற்றம் அளித்ததை இப்பாடல் கூறுகிறது. திருநீலகண்டத்தார், நல்ல நெற்றிமேல் உள்ள கண்ணினார், சூலத்தார், கடையார் அருள் வெள்ளத்தின் அமைந்த ஒழுக்கமுடையார், சீலத்தார் மேலே அமைந்த அத்துணை நிலைகளையும் உள்ளடக்கிய ஒழுக்கமுடையவர்.

சடையார், சீலத்தார் எனக்கொண்டு, இறைவனின் சடையானது, பன்முகப்படுதலின் பல்சடை; நெடுமையுடையதாலின் நீள்சடை; பொன் நிறத்ததாலின் பொன்சடை; பரப்பு எல்லையெல்லாம் கடந்து சென்றது ஆதலின் விரிசடை; நிமிர்ந்து உயர்ந்தது ஆதலின் நிமிர்சடை என ஐந்தாக்கி, சடையினுள் அமைந்த ஐவகை ஒழுக்கத்தினர் எனவும் கொள்ளலாம். அவை முறையே நஞ்சையும் அமுதாக்கி, அம்மையின் திருக்கைகள் எனப் பெறும் அறத்தையும் வலிமையாக்கி நின்ற பன்முகத்தொழிலும் பாங்குறப் பிணைந்த பன்சடையாம் தன்மை அடுத்தது அருட்கண் விழித்து நின்று அனைவருக்கும் அருளைச் சென்று பொழியும் மூன்றாவது கண்ணின் நிலை. இதுவே, ஐந்தெழுத்தாய் நின்று இசை யெனப் பரந்து உயிர்களின் ஐம்புலக் காமத்தை அழித்து நின்ற நிலை. முப்புரம் அழிந்த நிலையே நீள்சடை எனப் பெற்றது. பின்னர், உயிரானது ஞானமாய் நிலையே சூலத்தாரம் நிலை. அதுவே பொன்சடையாயிற்று. பரந்து சென்று சராசரங்களிலெல்லாம் சிவம் பெருக்குந் தன்மையே விரிசடைப் பண்பு. இதனையே ''சுடலைப் பொடி நீறணிவார்'' என்று கூறினார். உயர்ந்தார் நிலை இதுவே. நீத்தார், பெரியார் என்பவர்களின்

நிலையும், அந்தணர் என்பாரின் நிலையும் இதுவே. உயர்ந்த நிலை எனப்படுவதும் இதுவே. தான் மட்டும் அருளாளராக இருப்பது ஒருவகை. தானும் அருளாளராக நின்று, பிற உயிர்களையும் அருளாளராக ஆக்கும் நிலையும் இவர்களுக்கு உண்டு. ஆதலின் ''உயர்ந்தார்'' எனப் பெற்றார். அவர்களையே சிவகணத்தார் எனக் கண்டு, அவர்களின் அழகால் சிற்றம்பலம் அழகு பெறுகிறது என்று குறிப்பிட்டார். திருஞானசம்பந்தர். இதனைத்

''தேரினார் மறுகில் திருவாரணி தில்லை தன்னுள்
சீரினால் வழிபாடு ஒழியாததோர்
செம்மை யாலழகாய சிற்றம்பலம்
ஏரினால் அமர்ந்தாய் உன்சீரடி ஏத்துமே''

என்ற தில்லைப் பதிகத்து இரண்டாவதன், ஒன்பதாம் பாட்டினால் அறியமுடிகிறது. எனவே அருட்கண்ணால் நோக்கும் நிலை பெற்றவரே அந்தணர் ஆரூரில் தொடங்கிய தொண்டு, தில்லையில் திருத்தொண்டாக முடியும் தமிழ்நெறி இதுவே.

அந்தணர் நெறியையே, திருக்கடைக்காப்பினுள் ''ஊறும் இன் தமிழால் உயர்ந்தார் நெறி'' என்று ஞானசம்பந்தர் பெருமான் அருளினார் என்று கொண்டு, அதுவே நந்தி நெறியாம் குருநெறி என்றும், ஞான இன்பத்துய்ப்பு நெறியாதலின் ''தமிழ்'' என நின்றது என்றும், அதுவே உயிரின் உள்ளே, தானே வந்து தன்னைப் பதிய வைத்துக்கொண்ட, சிவபரம்பொருளின் விரிவாய் அமைந்த நெறியாதலின், வெளியிடத்திலிருந்து வந்து பொருந்தும் இன்பம் என்று கொள்ளாமல் ''ஊறும் இன்தமிழ்'' என்றும் குறிப்பிட்டு அருளுவராயினர்.

பாணரை வரவேற்கும் நிலையில் குருவாக நின்ற ஞானசம்பந்தர், தில்லையில் சிவகணத்தக் காட்சியைக் காட்டிய நிலையிலும் குருவானார். சிவஞானசம்பந்தர், திருஞானசம்பந்தராக ஆதல், தில்லையில் அமைந்தது. அது ஒரு வகையில் குருவருள் நிலை உணர்ந்தற்கு ஏதுவாக நின்றது. அந்தணராம் பேற்றுக்குரிய அகத்தீ நெறியை எளிமையாக்கிக் கூடற்சதுக்கப் பதிகம் அருளிய நிலையில் உலகத்துயிர்களுக்கு குருவென நின்றார். அந்தணர் மேற்கொண்ட நெறியானது அகத்தீய நெறி. அதுவே, ஆரூர், ஆனைக்கா, மயேந்திரம், தில்லை என்ற நான்காக அமைந்து ஒரு தன்மை நெறியாக மலர்ந்தது. இந்நெறியை விளக்க எழுந்த பதிகமே கூடற் சதுக்கப் பதிகம். கூடற் சதுக்கப் பதிகம் அருளிய வகையில், உலகத்துயிர்களுக்குக் குருவாம் நிலைபெற்று நின்ற பெருந்தகையானார் திருஞானசம்பந்தர்.

79. நமச்சிவாய மந்திரச் சிறப்பு

இரா. முத்துக்குமரன், சென்னை.

நன்னெறிக்குள் உய்ப்பது **நமச்சிவாயவே**. வேதம் நான்கினும் மெய்ப்பொருளாவது அதுவே. ஓங்கார நாதம் நாமம் உடையதும் அதுவேயாகும் என்பன முதல் மூன்று திருமுறைகளின் ஆசிரியராம் திருஞானசம்பந்தரின் உயரிய கருத்துமணிகளாகும். ''கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும் நற்றுணையாவது **நமச்சிவாயவே**'' என்பது 4, 5 திருமுறைகளின் ஆசிரியர் திருநாவுக்கரசரின் பட்டறிவுக் கனிமொழிகளாகும். எட்டாம் திருமுறையின் ஆசிரியர் மாணிக்கவாசகப் பெருமகனார் தம் திருவாசக நூலின் தொடக்கத்தை 'நமச்சிவாய வாழ்க நாதன் தாள் வாழ்க'' என்று அம்மந்திரத்திற்கு முதலிடம் அளித்துச் சிறப்பித்தார். பத்தாம் திருமுறை ஆசிரியர் திருமூலரோ, ''இருக்கின்ற மந்திரம் ஏழாயிரம்; எழுகோடியில் பொன்னான மந்திரம் சிவன் வடிவம் பெற்றது, **நமசிவாய** என்னும் பஞ்சாக்கரம் என்று அதன் சிறப்பைக் கூறுகிறார். பன்னிரண்டாம் திருமுறை பெரியபுராணத்தில் ஆசிரியர் சேக்கிழார் 63 நாயன்மார்களும் நமச்சிவாய மந்திரத்தை ஓதியே அற்புதச் செயல்களைச் செய்தார்கள் என்று தம் நூலில் குறிப்பிடுகிறார். பன்னிரு திருமுறைகளாலும் பாராட்டப் பெற்ற ஒரு ஒப்பற்ற மந்திரம் **நமசிவாயமாகும்**. அம்மந்திரத்தின் மூலம் யாது? அதனை அருளியவர் யார்? அதன் மறைபொருள் யாது? அதன் சிறப்புகள் யாவை? என்பதற்கான விடைகளை அவன் தாள் வணங்கி அவனருளாலே ஆராய்ந்து அம்மந்திரச் சிறப்பை எடுத்துக் கூற முற்படுகிறேன்.

மந்திரங்களின் மூலம் ஓம். அது ஐந்து ஓம்களாக வானத்தில் விண்மீன் குழுக்களாகக் காணப்படுகின்றன. ஓம் அகத்திலே அகர முதல எழுத்தெல்லாம், உயிரும் உடம்புமாம் முப்பது முதல் எழுத்துக்களும் **நமசிவாயவும்** அடங்கியுள்ளன என்பன உயிர். உயிர் ஆய்வுத் தலைவரான வான் அரசி அகத்தியனாரின் புத்தாயிரத்தாண்டுப் புதுமைக் கண்டுபிடிப்பாகும். ந-மிதுனம், ம-மகரம், சி-கன்னி, வ-துலாம், ய-விருச்சிகம், மேடத்திலும் இடபத்திலும் அவ்வாறே அமைந்துள்ளது என்பர் (படம் - 1)

சிவவேதம் தந்தருளிய சிவமாகிய நந்திமகன் நாமம் வயமாகிச் சிந்தையைத் தூய்மை செய்து அல்லவை தேய்த்து அறம் பெருகச்

செய்யும் அம்மந்திரத்தை மகேந்திர மலையென்னும் குமரிக் கோட்டுச்சியில் சிமயம் சிகரமயமான குமரி ஊரில் முதன் முதலில் அருளியவர் மூலச் சிவன் கல்லால் நிழற்கீழ், தட்சிணாமூர்த்தியாகத் தென்சிலுவையை அகத்திய மீனை வணங்கி அமர்ந்து அருளினார். அகர முதல்வனான அவ்வாதி பகவன், ஆதிலட்சுமியான உமைக்கும் ஓம் என்பதன் பொருளை அருளினார். அச்சிவனுக்கு ஓம் என்பதன் பொருளை விளக்கியவன் குமரப் பெருமகனான முருகன் ஆவன். அவன் மகவு+ஈசன், மகேசன் எனப்படுவான். நந்தியெம்பிரான் மந்திரத்தை முதலில் திருமூலர்க்கு உணர்த்த, திருமூலர் தம் வழியினரான மாலங்கன், இந்திரன், சோமன், பிரமன், உருத்திரன், கந்துரு வான காலாங்கி, கஞ்சமலையன் என்ற ஏழு முனிவர் (திருமந். 138) களுக்கு உணர்த்தினார். அவர் வழியில் நாம் உணர்கிறோம்.

வளியிலும், தளியிலும், துளியிலும், அளியிலும் வளம்பெற உதவும் அவ்வய, வலிய மந்திரம் ஒரு மூல மந்திரமாகும். மூலவர் அருளிய மந்திரமாகும். அம்மந்திரத்தினுள் மறைந்துள்ள மறைபொருள்கள் 108-க்கு மேல் உள்ளன. அகப்புலவர் காட்டும் அகத்திய மொழி பகுப்பாய்வு பிணைப்பாக்க முறையின்படி அதனுள் அவை அமைந்துள்ளன. அவற்றுள் பன்னிரண்டை சிறப்புகள் என்ற தலைப்பில் விளக்குதும். அண்டம் முழுதும் பரவியுள்ள 27 விண்மீன்கள் 108 பாதங்களாக உள்ளன. நமது உடம்பும் 108 விரல் கிடைகளையுடையது. இவற்றிற்கு ஏற்பவே 108 பொருள்களும் அமைந்துள்ளன என்பது இக்கட்டுரை ஆய்வாளரின் புதிய கண்டுபிடிப்பாகும்.

ய எட்டும் இரண்டும் அ, உ, சேர்ந்த மந்திர எழுத்தாகும். யம பயம் நீக்குவதும் சூலத்தினின்று தோன்றியதுமான அம்மந்திர எழுத்துப் பொருள், வய வலியாகும் என்ற தொல்காப்பியர் கருத்துக்கு ஏற்ப நமக்கு வலிமை தரும். அதுவே நமசிவயவுக்குப் பத்துக்கு மேற்பட்ட சிறப்புகளைக் கொடுப்பது, யாப்பது, (ய) ஆகும். தலையின் உச்சியாகும். ஒடுக்கப் பிரணவ எழுத்தான (அ) கரத்தை இறுதியில் உடையது இம்மந்திரம் உடலின் இருதோள் போன்றது ஆகும்.

ஓம் என்ற ஓர் எழுத்து மந்திரத்தினுள் ஐந்து எழுத்துப் பஞ்சாக்கரங்கள் அடங்கியுள்ளன. ஓம் ஒடுங்கி (அ) என்னும் ஒடுக்கப் பிரணவமும் ஓம் அகத்தினுள் அமைந்துள்ளன. இதனைத் தமிழ் ஓம் வடிவ விண்மீன் குழுவில் வானில் இன்றும் என்றும் காணலாம். காசி முதல் கன்னியாகுமரி வரை, சிம்லா முதல் செந்தில் வரை இக்கட்டுரை எழுதியவன் ஐம்பதாண்டுகளாகச் செய்யப்பெற்ற ஆய்வின் முடிவு புதுமைக் கண்டுபிடிப்பாகும். அவற்றை விரிப்பின் அது ஒரு பெரு நூலாகும். விரிவஞ்சி விடுத்தனம் (படம் - 1, 2) ஓம் என்பதிலிருந்து

பிரிந்த நமசிவயவில் ஈரெழுத்து மூவெழுத்து நால் எழுத்து மந்திரங்களும் உள்ளன. அவை நம, சிவ;சிமய, வயவ; என்பனவாகும். நவசிவ, நமசிவ.

ஓம் நம சிவாய மந்திரச் சிறப்புகள் நூற்றெட்டு இருப்பினும் காலம், இடம் கருதி அவற்றுள் பன்னிரண்டைச் சுட்டிக் காட்டுகிறேன்.

சிறப்புக்கள்

♈ (அ) எழுத்துச் சிறப்பு

பஞ்சாட்சரம், பஞ்சாக்கரம் எனப்படும் ந,ம,சி,வ,ய ஐந்து எழுத்துக்கள் ஐங்கரனின் ஐந்து கைகளைப் போன்று அமைந்துள்ள ஓர் மந்திரம். மெய்யெழுத்துக்கள் ந்,ம்,ச்,வ்,ய், முறையே 8, 10, 3, 14, 11-ம் தமிழ் மெய்யெழுத்துக்களையுடைய அது 3 மும்மூர்த்திகளையும், 10+8=18 கணங்களையும், 3+14+11=28 ஆகமங்களையும் 8 அட்டாங் கத்தையும், 10-அ+2=10 திசைகளையும் குறிக்கும் வண்ணம் 14+18=32 அறங்களையும் குறிக்கும் வண்ணம் அமைந்துள்ளது. அ-4, இ-1 என்ற இரண்டு உயிர் எழுத்துகளையும் அ+இ=ஐ எழுத்தையும் பெற்றுள்ள இம்மந்திரம் - அண்ட முதலோன் அயன், அரி, அரன் ஆகியோரையும் அ-அல்லாவையும், இ-இயேசுவையும், இறைவன் இறைவியையும் குறிப்பதாக அமைந்துள்ளது. இவ்வாறு அமைந் துள்ளமை நமச்சிவாயத்தின் எழுத்துச் சிறப்பாகும். அச்சு ஆணி போன்று அமைந்துள்ள அகரச் சிறப்பு-முதல் சிறப்பு ஒன்றாம் சிறப்பு - மேடச் சிறப்பு. அ - ஒடுக்கப் பிரணவச் சிறப்பு.

♉ (ஆ) சொற் சிறப்பு

நமசிவய என்ற சொல் வயவ, சிவ, சிமய, நச்சி, நசிக்க, நம், மந(ன)ம் வசிக்க வளியின் கடுகி வருவாய் என்ற பொருள் தரும் வண்ணம் இமயம், சிமயம், சிவம், வசி, நசி, வசியம், யவநம, நவம், அவயம், நம இந(ன)ம், மநம், சிநம், அயநம், நயம், ஆசி, நாசி, வாசி, சிவா, இயமம், நியமம், வாய், வயவ, வியவ, நயநம், அவசியம், சிவம், நிசி, நாமம், நியாயம் போன்ற முப்பது சொற்களைத் தன்னகத்து அடக்கியுள்ளமை இம்மந்திரச் சொற்சிறப்பாகும். வியக்க வைக்கும் சிறப்பு. இரண்டாம் சிறப்பு. இடபச்சிறப்பு. ஆ-வியப்பு ஆவுடையான் சிறப்பு.

♊ (இ) பொருள் சிறப்பு

இறைவன், இறைவியை குறிக்கும் மீனாட்சி, கற்பரசி, அகவரசி என்ற சொற்களிலுள்ள (சி) என்பதை நடுவெழுத்தாக உச்சி எழுத்தாகக் கொண்டு ஒரு பக்கம் நந்திமகனையும், மறுபுறம் வய - வலிமை வாய்ந்த முருகனையும் சிவனும் பார்வதியும் தம் மடியில் வைத்திருப்

பதைப் போன்று இரட்டைக் குழந்தைகளையுடைய சிவை, சிவனைக் குறிக்கும் வண்ணம் அமைந்துள்ள இம்மந்திரம் சிகர உச்சியிலுள்ள நம் மனதில் சிவன் சிவையே வணங்க வசிக்க வயவ வருவாய் என்ற பொருளுடையதாக அமைந்துள்ளமை மந்திரப் பொருள் சிறப்பாகும். இம்மூன்றும் மொழியியல் சிறப்பாகும். மூன்றாம் சிறப்பு. மும்முகச் சிறப்பு.

ந-நடப்பு, நசிப்பு, ம-மறைப்பு, சி-சிறப்பு, வ-வனப்பு, ய-யாப்பு என்ற ஐம்பொருளைத் தருவது பொருள் சிறப்பு. **நமசிவய** என்பது **சிவய நம, சிவய சிவ, சிவசிவ, சிவ, சிவமய** என்ற பல பொருள்களைத் தருவதால் சிவயநம இறைவன் உறை ஒரு திருக்கோயில் ஆகும். இத் திருக்கோயில் என்ற சொல்லினுள் 3000 சொற்கள் மறைந்து மூவாயிரம் பொருள்களைத் தந்து கொண்டிருக்கிற பொருள் சிறப்பு இம் மந்திரத்திற்கே உண்டு. இது இரட்டையர் நம்பிநங்கைச் சிறப்பு. இணையில்லாச் சிறப்பு. மூவாத மூன்றாம் சிறப்பு, மிதுனச் சிறப்பு.

௪ (ஈ) சமய தத்துவச் சிறப்பு

ஓம் நமசிவய என்பதில் ஓம் காணபத்தியம் - கணபதிச் சைவம் ந-நம் அகம்பிரமவாதம், ம-மாயா வாதம், சி-சிவன், சைவம், வ-சாக்தேயம் -சிவசக்தி சைவம் ய-வைணவம் ஆறு சமயங்களை இம்மந்திரம் குறிக்கிறது. இதனை ஆறெழுத்து மந்திரம் என்பர். சி என்பதனுள் சிலுவைக்குறி-கிறித்தவம் உள்ளது. ந என்பதில் ந்+அ-அல்லா-முகமதியம் உள்ளது. ஓம் என்பதனுள் உலகத்து அனைத்துச் சமயங்களின் குறியீடுகளும் உள்ளன. (படம்-2) வ - என்பதனுள் பிள்ளையார் சுழி உள்ளது. யாகோவாவில் ஓ,வ,ய மூன்று எழுத்து களும் உள்ளன. நாராயணா என்பதில் ந,ய உள்ளன. சரவணபவ என்பதிலுள்ள ச,வ உள்ளன. எனவே அனைத்து உலகச் சமயங்களின் மந்திர எழுத்துக்களைத் தன்னகத்தே கொண்டுள்ளமை நமசிவய என்ற மந்திரத்தின் சமய தத்துவச் சிறப்பாகும். ஈசன் சிறப்பாகும். ஒருவனே தேவன் என்பதை உணர்த்தும் சிறப்பாகும். நான்முகச் சிறப்பாகும்.

ரு (உ) வானறிவியல் சிறப்பு

உடு அரி சீயம் சிம்மம் எனப்படும். சியம் சிய என்ற எழுத்துகள் இம்மந்திரத்தில் அமைந்துள்ளன. ஏனைய எழுத்துகளும் வானில் விண்மீன் குழுக்களாகவும், அமைந்துள்ளன. இது இம்மந்திரத்தின் ஒரு வானியல் அறிவியல் சிறப்பாகும். அகர விண்மீன் குழுவிலும் இம்மந்திர எழுத்துகளை உலகம் தோன்றிய அன்று முதல் இன்று வரை என்றும் வானில் புத்தேளிர் உலகமான விருச்சிகத்தில் காண இயல்வது ஒரு மாபெரும் வான அறிவியல் உச்சி வான் சிறப்பு. ஐந்தாம் ஐ வியப்பு சிறப்பு சிம்மச் சிறப்பு. ஐஞ்சுடர்ச் சிறப்பு. (படம்-2)

♍ (ஊ) அறவியல் சிறப்பு

நமச்சிவய மந்திர மொழியில் அமைந்துள்ள 4 அகரங்கள் அ=8×4=32 அறங்களைச் சுட்டிக்காட்டும் அவ்வறவங்களைச் செய்து கொண்டே இம்மந்திர மொழியைக் கூறினால் எட்டாம் வான்மெய்யான விருச்சிகத்தில் எட்டாம் இடத்தில் உறைகின்ற புத்தேளிர் அனைவரின் இனிய நல்லருளையும் ய-அ+உ=ய பத்தாம் மெய்யில் உறை மகரயாழ் வீணை உறை அரசியின் கலைமகளின் அருளையும் பெற்று அறத்தால் அறம், அறத்தால் பொருள், அறத்தால் இன்பம், அறத்தால் வீடு என்ற நாற்பொருளையும் பெறலாம் என்று கூறுவது இம்மந்திரத்தின் அறவியல் சிறப்பாகும். அற ஊக்கம் அளிக்கும் சிறப்பு. ஆறுதல் அளிக்கும் ஆறு முகச்சிறப்பு. ஆறாம் சிறப்பு. கன்னியின் சிறப்பு. அறு மீன் சிறப்பு.

♎ (எ) உடல் அமைப்பியல் சிறப்பு

ந-நடனம் செய்யும் பொழுது கால்களில் தோன்றுவது (ந) எழுத்து. ம-கால்களை அல்லது கைகளை மடித்து வைக்கும் பொழுது தோன்றுவது-ம எழுத்து; இரு கைகளை உச்சியில் வைக்கும் பொழுது தோன்றும் சி எழுத்து, வணங்க ஒரு கையை மார்பிலும் மற்றொரு கையை மேலே உயர்த்தும் பொழுதும் தோன்றுவது (வ) எழுத்து. இரு கைகளை தலையின் இரு பக்கங்களிலும் உச்சி வரை உயர்த்தும் பொழுது தோன்றுவது (ய) எழுத்து. இறைவன் உடலே நமசிவய என்று அமைந்துள்ளது. இவ்வாறு நமசிவய எழுத்து உருவாகி உடலில் அமைந்துள்ளது. இம்மந்திரத்தின் உடல் அமைப்பியல் சிறப்பாகும். இம்மந்திரத்தை நம் கையின் ஐந்து விரல்களுக்குள் வைத்துச் சொல்வதற்கு ஏற்ப அமைந்துள்ளது. சமூக அறிவியல் கல்விச் சிறப்பு எழுமைக்கும் உதவும் சிறப்பு. ஏழாம் சிறப்பு. துலாச் சிறப்பு - நிறைகோல் சிறப்பு.

♏ (ஏ) அட்டமா கல்விச் சிறப்பு

நமச்சிவாயவே ஞானமும் கல்வியும் காட்டும் என்ற அப்பர் திருவாக்கை மெய்ப்பிக்கும் வகையில் இம்மந்திரம் அமைந்துள்ளது. 2 1/2 - 6 வயது குழந்தைகளுக்கு இம்மந்திர ஐந்து எழுத்துகள் அடிப்படையில் ஐந்து விரல்கள் மூலம் அனைத்து தமிழ் எழுத்துக் களையும் ஒரு முகூர்த்த நேரத்தில் கற்பித்து அனைவரையும் எழுதப் படிக்கச் செய்ய இயல்வது இம்மந்திரம். இது இம்மந்திரத்தின் சமூக அறிவியல் - கல்விச் சிறப்பாகும். ஏற்றமிகு எட்டாம் சிறப்பாகும். அட்டமா சிறப்பு. விருச்சிகச் சிறப்பு. எட்டு வகைப் பாடங்களையும் அட்டாங்க யோகம் மூலம் கற்பிக்கும் எம்மந்திரத்திற்கும் இல்லாத எட்டாச் சிறப்பு.

♐ (ஐ) அற்புதச் செயல் வெப்பு நோய் நீக்கல் சிறப்பு

திருஞானசம்பந்தர் அனல் வாதம், புனல் வாதம் போன்ற ஒன்பது அற்புதச் செயல்களைச் செய்ய உதவியது இம்மந்திரம். இது இம்மந்திரத்தின் ஒன்பதாம் அற்புதச் செயல் சிறப்பாகும். ஐ = அ+இ இம்மந்திரத்தில் உள்ளன. இது ஒன்பதாம் சிறப்பு. ஐயன் அம்புச் சிறப்பு. நவ ஒளிச் சிறப்பு.

♑ (ஒ) கலை இலக்கியச் சிறப்பு

திருஞானசம்பந்தர் நமசிவய மந்திரம் பொறித்த பொற்றாளத்தைப் பெற்றுத் தமிழகம் எங்கும் 23 பண்களில் 27 பேர் ஊர்களில் 4158 பாடல்களை நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பி, இசைத் தமிழ் பக்தி இலக்கியமான முதல் மூன்று திருமுறைத் தேவாரத்தைப் பாடிப் பெரும் புகழ் பெற்றார். 4286 விருத்தங்களுடைய பெரியபுராணத்தில் பாதி திருஞானசம்பந்தர் புராணம் 1256. பிள்ளை பாதி பெரியார் பாதி என்று கூறும் அளவிற்கு திருஞானசம்பந்தர்க்கு மிகுந்த இடம். இம்மந்திரம் வாங்கித் தந்தது, இம்மந்திரத்தின் கலை இலக்கியச் சிறப்பு ஆகும். சம்பந்தர் பாடல்கள் 4158 பெரியபுராணம், 4286 செய்யுட்கள், திருமூலர் 3000. எனவே, ஏனைய திருமுறைகளை விட இவர்தம் மூன்று திருமுறைகளும் சேர்ந்து தேவாரம் மிகப் பெரியது என்ற பெருமையைத் தமிழ்ஞான சம்பந்தனுக்குச் சேர்த்தது இம்மந்திரம். இது இம்மந்திரத்தின் கலை இலக்கியச் சிறப்பாகும்.

ஐந்து சுரங்கள் சரிகபத கொண்ட ராகம் திறப்பண்ணில் நமசிவாய என்ற மந்திரம் அமைந்துள்ளமை இசைக்கலைச் சிறப்பாகும். துலாம் (ச) மேற்கு தொடங்கி தென்மேற்கு தனுசில் ரி, தென்கிழக்கு கும்பம் - க, இடபம் - ப, வடகிழக்கு, கடகம், வடக்கு த என்று அமைந் துள்ளதாக இசையாராய்ச்சியாளர் கூறுவதும் இம்மந்திரத்தின் இசைக்கலை இலக்கியச் சிறப்பாகும். பதுமச் சிறப்பு. எட்டும், இரண்டும் சேர்ந்த பத்தாம் சிறப்பு. மகரச் சிறப்பு. இது யாழ், இசைச் சிறப்பு. நடனம் ஆடும் பொழுது நமசிவய தோன்றுவது இம்மந்திர நடனச் சிறப்பாகும்.

♒ (ஓ) புவியியல் சிறப்பு

ந-நன்னீர், ம - மண், நிலம், சி - சிறு சுடர் தீ, வ - வளி, ய - ஆகாயம் என ஐம்பூதங்களையும் உணர்த்தும் இம்மந்திரம் புவியியல் சிறப்புடையது. நீர்ச்சுழற்சியிலும், தீச்சுழற்சியிலும், வளிச் சுழற்சியிலும், நிலச் சுழற்சியிலும் இம்மந்திர எழுத்துக்களைக் காணலாம். இது பதினொன்றாம் சிறப்பு. கும்பச் சிறப்பு. நீர்ச் சிறப்பு.


♓ (ஔ) அகரம் உகரம் சிறப்பு அவ்வுலகச் சிறப்பு

அகரம் உகரம் சேர்ந்த இம்மந்திரம் அவ்வுலகத்திலும் அரன் உலகத்திலும் மிகுந்த சிறப்புடையது. ஔவைக்குரியது. அந்தி சந்திப் பொழுதில் நாம் இறைவனை வணங்கும் பொழுது இம்மந்திர எழுத்துக்கள் நம்முடலில் உருவாவது ஒரு வழிபாட்டு ஔடதச் சிறப்பாகும். அறுவகைச் சமயத்தார்க்கும் ஆலயமாகக் கோபுரமாக இம்மந்திரம் அமைந்துள்ளது. ஔவைப் பிராட்டியை அவ்வுலகத்திற்கு அனைவருக்கும் முன்னே அழைத்துச் சென்றது, நமச்சிவாய என்னும் மந்திரம் ஆகும். இது பன்னிரண்டாம் விண்மீன் குழு அமைய மீனச் சிறப்பு மறுமை சுவர்க்கச் சிறப்பு. பன்னிரு கையனின் சிறப்பு.


வானிலும் கானிலும், வளியிலும் தளியிலும் விண்ணிலும் மண்ணிலும், நீரிலும், நிலத்திலும், மலையிலும், கடலிலும், நிலவிலும், கோள்களிலும், அண்டத்திலும், விண்மீன்களிலும் எங்கும் எதிலும் எத்திக்கிலும் நிறைந்திருக்கும். இம்மந்திரச் சிறப்பை என் வழியே உங்களுக்கு உணர்த்தியருளிய எம்பிரானுக்கும், எம்பிராட்டிக்கும் நம்பிரானுக்கும், நம் பிராட்டிக்கும். எழுமையும், தம்பிரானுக்கும் தம்பிராட்டிக்கும் நன்றியுடையேன். தமிழ் பரப்பி சிவம் பெருக்கும் காசித் திருமடம் தருமபுரம் மடம் திருவாவடுதுறை மடம் முப்பெரும் திருமடங்களின் அதிபர்களுக்கும் நன்றியுடையேன். அம்முப்பெரும் மடங்களும் என் ஆய்வுக்குப் பெரிதும் உதவின. இம்மாநாட்டை நடத்த ஏற்பாடு செய்த அறக்கட்டளையாளர்களுக்கும் காசி மடத்திற்கும் நன்றி வணக்கம். நல்லக விளக்கது நமசிவாயவே 'அப்பர்' சொற்றுணை வேதியன் சோதி வானவன் என்றும் தூய்மொழி நற்றமிழ் மாலையாம் **நமச்சிவாய** என்று சேக்கிழாரால் பாராட்டப் பெறும் இவ் ஆதி மந்திரம் வழி ஆதிபகவனை, ஆதியும் அந்தமும் இல்லா அரும் பெருஞ் சோதியை வணங்கி அவன் அருள் பெற்று நம் அகப்புற வாழ்வில் உயர்வடைவோமாக.

பாரதச் சமயப் பொதுமைப் பண்பாட்டையும், தமிழ் மொழியின் தெய்வீகச் சிறப்பையும், திருஞானசம்பந்தரின் சமயத் தமிழ், தேவாரத் தமிழ், நமச்சிவாய மந்திரத் தமிழ் வளப்படுத்தியதை இவ்வாய்வுக் கட்டுரை அறிவியல் சான்றுகளுடன் வெளிப்படுத்தியுள்ளது.

படம் 1



படம் 2



80. சம்பந்தர் அவதாரமா?

பெ. முத்துராஜ், மதுரை.

திருஞானசம்பந்தர் மூன்று வயதிலேயே இறைவனுடைய அருளைப் பெற்றவர். உமாதேவியிடம் ஞானப்பாலுண்டவர். அதனால் திருஞான சம்பந்தர் முருகன் அவதாரம் என்ற கூற்று நிகழ்கின்றது. சேக்கிழார் பெரியபுராணத்தில் ஞானசம்பந்தர் புராணம் 1256 பாடல்கள் அடங்கியது. இதனை நினைந்து ''பிள்ளை பாதி புராணம் பாதி'' என்ற பழமொழி ஒன்று தமிழில் வழங்குகிறது. சேக்கிழார் திருஞானசம்பந்தரை முருகன் அவதாரம் என்று குறிப்பிடவில்லை. ஆனால் ஒட்டக்கூத்தர், ஆராய்ச்சியாளர்கள் திருஞானசம்பந்தரை முருகன் அவதாரம் என்று குறிப்பிடுகின்றனர். எனவே திருஞானசம்பந்தர் முருகன் அவதாரமா? அவ்வாறு கூறுவதற்குக் காரணம் என்ன என்று ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாக அமைகின்றது.

இறையருள் பெறல்

சிவபாத இருதயர் நீராடுவதற்காகச் சென்ற பொழுது தன்குழந்தை அழுதது. அதனால் தன்னுடன் கூட்டிச்சென்றார். நீராடும் பொழுது கூறவேண்டிய 'அகமர்ஷம்' என்ற மந்திரத்தைக் கூறிக்கொண்டே நீரினுள் மூழ்கிச் சிறிது நேரம் இருந்தார். கரையில் இருந்த குழந்தை தந்தையைக் காணாததால் தூரத்தே தெரிந்த தோணியப்பர் கோயிற் கோபுரத்தை நோக்கிக் கண்ணீர் மல்க ''அம்மே! அப்பா!'' என அழத் தொடங்கியது. தோணிப் பெருமான் குழந்தையின் அழுகையைப் பொறுக்காமல் உமையம்மையாருடன் அங்கே தோன்றி உமாதேவியாரைக் குழந்தைக்குப் பாலூட்டச் சொன்னார். அம்மையாரும் ஒரு பொற் கிண்ணத்தில் சிவஞானம் குழைத்த பாலை குழந்தைக்குக் கொடுத்து அழுகையை நிறுத்தியருளினார். நீராடி வந்த சிவபாத இருதயர் பிள்ளையாரின் கையில் பொற்கிண்ணத்தையும் வாயிலிருந்து ஒழுகும் பாலையும் கண்டு கோபம் கொண்டார். உனக்குப் பாலூட்டியது யார்? என்று பிரம்பை எடுத்துக்கொண்டு மிரட்டினார். உடனே திருஞானசம்பந்தர் தலைமீது கைகுவித்துத் தோணியப்பர் கோயிற் கோபுரத்தைச் சுட்டிக் காட்டித்

''தோடுடைய செவியன் விடையேறி''

என்று தொடங்கி பதினொரு திருப்பாடல்கள் பாடியருளினார்.

அவதாரமா?

'அழுத பிள்ளை பால் குடிக்கும்' என்பார்கள். இரு பிள்ளைகள் அழுது பால் குடித்தனர். 1. முருகன் 2. திருஞானசம்பந்தர். இரண்டு குழந்தைகளும் பொய்கை சூழ்நிலையில் அழுது பால் குடித்தனர்.

முருகன் மூன்று கெடும்படியாக அழுது பால் குடித்தார்.

அருணகிரிநாதர்

''திருந்தப் புவனங்க ளீன்ற பொற்பாவை திருமுலைப்பால்
அருந்திச் சரவணப் பூந்தொட்டிலேறி யறுவர் கொங்கை
விரும்பிக் கடலழக் குன்றழச் சூரழ விம்மியழும்
குருந்தைக் குறிஞ்சிக் கிழவனென் றோது குவலயமே''

1. 'கடலழ' என்றால் கன்ம மலம் கெட என்பது கருத்து
2. 'குன்றழ' என்றால் மாயை மலம் தொலைய என்று பொருள்
3. 'சூரழ' என்பதற்கு ஆணவம் அழிய என்பது மறை உரை

திருஞானசம்பந்தர் மூன்று வளரும்படியாக அழுது பால் குடித்தார்.

சேக்கிழார்,

''வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத் துறைவிளங்கப்
பூதபரம் பரைபொலியப் புனிதவாய் மலர்ந்தழுத
சீதவள வயற்புகலித் திருஞானசம்பந்தர்
பாதமலர் தலைக் கொண்டு திருத்தொண்டு பரவுவாம்''

1. வேதநெறி தழைத்து ஓங்கி வளர அழுதார்.
2. மிகுசைவத் துறைவிளங்கி வளர அழுதார்.
3. பூதபரம்பரை பொலிவுடன் வளர அழுதார்.
(பூதம் என்பதற்கு உயிர் என்பது பொருள்)

''மூன்று கெடும்படியாக அழுத குழந்தையும் மூன்று வளரும் படியாக அழுத குழந்தையும் ஒரே குழந்தை என்றே ஞானியர் கூறுகின்றனர். முருகனின் அம்சமே சம்பந்தர் என்பது அவர்தம் கருத்து''. (சிவசக்தி - அமுத பிள்ளைகள்)

திருஞானசம்பந்தர் 'இந்த மாநிலத்தின் இருள் நீங்கிட வந்த வைதீக மாமணி' என்றும், 'கவுணியர் குலத்தில் ஒரு காதலன் உதித்தான்' என்றும் கூறுகின்றனர். 'உதித்தான்' என்ற சொல் அவதாரத்தைக் குறிப்பதாகும். 'அவதாரம்' என்றால் மேல்நிலையில் இருந்து இறங்கி வருதல் ஆகும். திருஞானசம்பந்தரின் பிறப்பின் நோக்கமே ''வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத் துறை விளங்க'' ''பரசமயத் தருக்கம் ஒழியச் சைவம் முதல் வைதீகமும் தழைத்து ஓங்க'' என்று குறிப்பிடுகின்றனர்.

''தவம் பெருக்கும் சண்பையிலே தாவில்சரா சரங்களெலாம்
சிவம் பெருக்கும் பிள்ளையார் திருவவதாரஞ் செய்தார்''

இந்தக் கூற்றுக்களெல்லாம் திருஞானசம்பந்தரை முருகன் அவதாரம் என்று கூறுவதற்குக் காரணமாக அமைகின்றன.

திருச்செந்தூர் பிள்ளைத்தமிழில்,

''கலைதெரி புகலி வளமுற மருவு
கவுணிய வருக வருகவே''
''மலைமகள் கவுரி திருமுலை பருக
மழவிடை வருக வருகவே''

சீர்காழிப் புராணத்துள் முருகனையே தமக்குக் குழந்தையாக வரவேண்டு மென்று சிவபாதவிருதயர் தவங்கிடந்தாரெனவும், அவ்வாறு கந்தக்கடவுள் கமலத்தடாகத்தின் பாங்கர் ஒரு மைந்தனாய் வந்துதித்தான் எனவும் கூறப்படுகின்றது. ஆனால் சேக்கிழார் கூறும் திருஞானசம்பந்தர் புராணத்தில் இப்படிக் குறிப்பு ஒன்றும் இல்லை.

ஞானசம்பந்தர் முற்பிறவியில் சிவத்தொண்டனாக இருந்திருக்கிறார். அதன் பயனாக குழந்தைப் பருவத்திலேயே இறைவன் அருள் கிடைத்து விட்டது.

''ஒருமைக் கட்டான் கற்ற கல்வியொருவற்
கெழுமையும் ஏமாப் புடைத்து'' (குறள் - 398)

''முன்னை நற்கல்வியின் பயனாக ஆகம ஞானமாகிய அபர ஞானத்தையும், முன்னைப் பெருந்தவத்தின் பயனாக அனுபவ ஞான மாகிய பரஞானத்தையும் திருஞானசம்பந்தர் குழந்தைப் பருவத்தே பெற்றுத் திகழ்ந்தார்''

சேக்கிழார் 'பண்டு திருவடி மறவாப் பான்மையோர் தமை' என்று கூறியுள்ளமையால் சிவனுடைய திருவடி மறவாத அடியவர் என்பது விளங்கும். சம்பந்தர் தமது தேவாரத்துள் 'நன்னெஞ்சே' 'என்ன புண்ணியஞ் செய்தனை நெஞ்சமே' தானெனை யாண்டவன் என அருளிச் செய்தமையால் திருஞானசம்பந்தர் அடியவர் என்பது தெளிவாக விளங்குகிறது.

இவர் முருகன் அவதாரமாக இருந்து தொண்டராய் நடித்தார் என்பதற்கு அகச்சான்றுகள் எதுவும் இல்லை.

சேக்கிழார், சம்பந்தர் புராணத்துள் 'வானவர் நாயகர் மகனார்' (சம்பந்தர் புராணம் - 314) 'சிவம் பெருக்கும் பிள்ளையார்', 'இறைவர் திருமைந்தர்' (சம்பந்தர் புராணம் - 540) 'புரமெரித்தார் திருமகனார்' (சம்பந்தர்

புராணம் - 617) 'சூடினார் திருமகனார்' (சம்பந்தர் புராணம் - 1074) என்ற குறிப்புக்களுண்டு. இது என்னவெனில் உமாதேவியிடம் ஞானப் பால் குடித்ததால் 'மகனார்', 'பிள்ளையார்' என்ற கூற்றுக்கள் உண்டு. எனவே திருஞானசம்பந்தர் முருகன் அவதாரத்தைக் குறிக்கவில்லை.

ஒட்டக்கூத்தர் தக்கயாகப் பரணியில்,

"வருகதை தெய்வமகள் என்மருமகள் வள்ளிவதுவை
மனமகிழ் பிள்ளை முருகன் மதுரையில் வெல்லும் இனிய
தொருகதை சொல்லு, தவள ஒளிவரி செவ்விமுளரி
ஒளிதிகழ் அல்லிகமழும் ஒருமனை வல்லி எனவே"

என திருஞானசம்பந்தரை முருகனுடைய திருவவதாரமென்றே குறிப்பிடுகிறார்.

"இறைவி திருஞானசம்பந்தருக்கு மகன் என்ற முறையில் ஞானப் பால் கொடுத்து ஆட்கொண்டதாகக் கூறப்படுவதே அவர் மகன் வழியே சத் புத்திர மார்க்கம் வளர்க்க வந்தவர் என பிற்காலத்தில் கூறக் காரணமாய் அமைகிறது எனலாம்". (திருஞானசம்பந்தர் தேவாரமும் சைவ சித்தாந்தமும், கோமதி சூரியமூர்த்தி).

அற்புதங்கள்

இறைவன் திருஞானசம்பந்தருக்குச் செய்த அற்புதங்கள். 1. ஞானப் பால் கொடுக்கச் செய்தது. 2. பொற்றாளம் கொடுத்தது. 3. முத்துச் சிவிகை, குடை, சின்னம் கொடுத்தது. 4. பொற்கிழி தந்தது. 5. சோதியில் கலக்கச் செய்தது.

திருஞானசம்பந்தர் இறையருளுடன் மற்றவர்களுக்குச் செய்த அற்புதங்கள் 1. முயலகன் நோய் தீர்த்தது. 2. குளிர்ச்சுரம் நீக்கியது. 3. பாம்பு கடித்து இறந்த வணிகனைக் காப்பாற்றியது. 4. படிக்காசு பெற்றது. 5. திருமறைக்காட்டில் கதவம் அடைக்கப் பாடியது. 6. பாண்டியனின் வெப்பு நோயைத் தீர்த்தது. 7. புனல் வாதத்தில் வென்றது. 8. அனல் வாதத்தில் வென்றது. 9. ஆளில்லாமல் ஓடம் செலுத்தியது. 10. பழித்துப் பேசிய புத்த நந்திமேல் இடி விழச்செய்தது. 11. அடியவர்களின் வேண்டு கோளுக்கிணங்கி ஆண்பனைகளைப் பெண்பனைகளாக மாற்றியது. 12. இறந்த பெண்ணின் எலும்பையும் சாம்பலையும் கொண்டு பெண்ணாக மாற்றியது.

திருஞானசம்பந்தர் நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பிச் சைவ சமயத்தை வளர்த்தார். சமண சமயத்தாரை வாதம் செய்து வென்று சைவ சமயத்தை நிறுவினார். இவர் தம் நெஞ்சியிடம் நீ நல்ல நெஞ்சம் அல்லவா உன்னாலே தானே எனக்கு இன்பம் உண்டாக வேண்டும்?

எங்கும் பரந்து அளவு கடந்து நிற்கும் பரம்பொருளை உனக்குள்ளே அடக்கிக் கொள்ளும் ஆற்றல் உனக்கு இருக்கிறதே! என்று கூறினார்.

இவர் இறைவனுடைய அருளை முழுமையாகப் பெற்றவர். இவர் தம்மைச் சார்ந்தவர்கள் எவரும் துன்பம் படுதல் கூடாது என்ற குறிக்கோளைக் கொண்டவர்.

திருஞானசம்பந்தர் திருநல்லூர்ப் பெருமணம் என்ற ஊரிலுள்ள நம்பாண்டார் நம்பிகளின் திருமகளை மணம் செய்தார். இல்வாழ்க்கையில் புகுந்த அவர் சிவனது திருவடிக்கே செல்வோம் என நினைந்து 'நல்லூர்ப் பெருமணம்' என்ற திருப்பதிகத்தினைப் பாடினார். சிவபெருமான் திருவருளினால், அங்கு ஒரு பெரிய ஒளிப்பிழம்பு தோன்றியது. ''நீவிரும் உமது மனையாலும் மற்றும் இத்திருமணங் காணவந்த அனைவரும் நம் சோதியிற் கலந்து நன்மையடையுங்கள்'' என்னும் ஒலியும் தோன்றியது.

''காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி
ஓதுவார் தமை நன்னெறிக் குய்ப்பது
வேதம் நான்கினும் மெய்ப் பொருளாவது
நாதன் நாமம் நமச்சி வாயவே'' (நமச்சிவாயத் திருப்பதிகம் - 3:1:1)

என்ற நமச்சிவாயத் திருப்பதிகம் அருளிச் செய்து எல்லோரையும் சோதியிற் புகவிட்டுத் தாமும் தம் மனைவியருடன் சோதியிற் புகுந்து, சிவபெருமானுடன் இரண்டறக் கலந்தார்.

திருஞானசம்பந்தருக்குத் திருமணம் நடக்கும்போது அவருடைய வயது 16. அவர் அந்த வயதிலேயே பிறவிப் பெரும்பயனை அடைந்தார். சிறுவயதிலேயே இறையருள் பெற்றுச் சிறுவயதிலேயே இறைவனுடன் கலந்தவரும் இவரே. வேறு எவரும் அவர் பெற்ற பேறு பெறவில்லை என்பது திண்ணம்.

இந்த அற்புதங்களைக் கண்ட சேக்கிழார், ஒட்டக்கூத்தர், அருணகிரிநாதர் பின்வந்த ஆய்வறிஞர்கள் திருஞானசம்பந்தரே அவதாரமாகவே நினைத்தனர்.

திருஞானசம்பந்தர் முழுசைவத் தொண்டர். இவர் சிறுவயதிலேயே இறையருள் பெற்றதாலும் அதனால் சிவனுடைய 'மகனார்', 'பிள்ளையார்' என்ற பேறு பெற்றதாலும் இறையருளுடன் பல தலங்களுக்குச் சென்று அற்புதங்கள் நிகழ்த்தியதாலும் திருஞானசம்பந்தரை அவதாரம் என்று கூறுகின்றனர். சமயத்தை வளர்த்த பெரியோர்களைத் திருவவதாரமாக கூறும் வழக்காறு காலந்தொட்டே காணப்படுகிறது. சேக்கிழாரும் அவர் காலக்கட்டத்தில் வாழ்ந்த ஒட்டக்கூத்தரும் பின்வந்த அருணகிரிநாதர் மற்றும் சைவ அறிஞர்கள் திருஞானசம்பந்தரை முருகன் அவதாரமென்றே கருதினார்கள். இவர் சைவ சமயத்தை வளர்த்த அடியவர் என்பது தெள்ளிதின் விளங்கும்.

81. பாண்டிய நாட்டில் சம்பந்தர் புரட்சி

தெ. மேகநாதன், அண்ணாமலைநகர்.

'மூவர்' என்ற சொல்லுக்குத் தமிழகத்தில் என்றும் ஓர் தனி மதிப்பு உண்டு. ஏனென்றால் தமிழகமே முப்பாற்பட்டு நின்ற தொன்மைச் சிறப்புடையது.

''வான் புகழ் மூவர் தன் பொழில் வரைப்பு'' என இதனைப் புலவர் பாடுவர். முடியுடைமூவர் தமிழ்நாட்டு வேந்தரானமை போன்று படியுடைப் பாக்களான தேவாரங்களைப் பாடியவர்களும் மூவரே என்பது கருதத்தக்கது.

தேவாரத் திருப்பாடல்களைப் பாடிய மூவரில் திருஞானசம்பந்தரின் பாடல்கள் சைவத்திருமுறைகள் பன்னிரண்டனுள் முதல் மூன்று திருமுறைகளாக அமைக்கப் பெற்றுள்ளன.

ஆளுடைய பிள்ளையார் என்ற சிறப்புப் பெயரால் போற்றப் படும் திருஞானசம்பந்தர் கொன்றை மலர் மாலையை அணிந்த சிவபெருமானது திருவடிகளையன்றிப் பிறிதொன்றையும் கருதாத ஒரு நெறிய மனமுடையவர். இதனை,

''வம்பறா வரிவண்டு மணம்நாற மலரும்
மதுமலர் நற்கொன்றையான் அடியலாற் பேணா
எம்பிரான் சம்பந்தன் அடியார்க்கும் அடியேன்''

என வரும் திருத்தொண்டத் தொகையால் அறியலாம்.

சைவ இலக்கிய உலகில் திருஞானசம்பந்தர் பெற்றுள்ள இடம் மிக மகத்தானது. அப்பர், சுந்தரர், சம்பந்தர், மாணிக்கவாசகர் என்றும் சைவ சமய குரவர் நால்வரில் இறைவனை மகன்மை முறையால் (சற்புத்திர மார்க்கம்) வழிபட்டுப் பேறு பெற்றவர் திருஞானசம்பந்தர். இறைவனுக்குப் பிள்ளை என்ற தொடர்பு காரணமாக மற்றத் தொண்டர்கள் எவருக்கும் கிடைக்காத முத்துச்சிவிகை, பொற்றாளம், உலவாக்கிழி போன்ற சலுகைகள் இவருக்குக் கிடைத்தன.

மூன்று வயதிலேயே அம்மையால் ஞானப்பால் ஊட்டப்பெற்ற தனிச்சிறப்பு இவர் ஒருவருக்கு மட்டுமே உண்டு.

தமிழ்ப்பணி

நாளும் இன்னிசை பாடித் தமிழ் வளர்த்தவர் என இவர் போற்றப் படுகின்றார். இனிய இசைமிக்க பண்கள் அமைந்த தேவாரப் பாடல் களைப் பாடித் தமிழ்த் தொண்டாற்றியவர் இப்பெருமகனார்.

''நாளும் இன்னிசையால் தமிழ்பரப்பும் ஞானசம்பந்தன்''

என இவரைப் போற்றுவர் நம்பியாரூரர் மற்றும்,

''ஞானத்தின் திருஉருவை
நான்மறையின் தனித் துணையை
வானத்தின் மனசியன்றி
மண்ணில் வளர்மதிக் கொழுந்தை
தேனக்க மலர்க் கொன்றைச்
செஞ்சடையார் சீர் தொடுக்கும்
கானத்தின் எழுபிறப்பைக்
கண்களிப்பக் கண்டார்கள்''

எனச் சேக்கிழார் பாடுவது இதனைப் புலப்படுத்தும்.

தமிழுக்கு இன்னிசை பாடித் தொண்டாற்றியதைவிடச் சைவ உலகம் சமணக் காரிருளால் சூழப்பட்டு வைதிக நெறிகள் மாறி வேத வேள்விகள் புறக்கணிக்கப்பட்டு ஆகம நெறிகள் பாழ்பட்டு நின்ற நிலையை மாற்றிச் சமணர்களை வென்று புறங்கண்ட நிலவிய ஓர் புரட்சி என்றே கூறலாம்.

புரட்சி என்பது யாது?

புரட்சி என்பதற்கு 'அடிப்படை மாறுதல்' என்று கலைக்களஞ்சியம் பொருள் கூறுகிறது. அதாவது ஒன்று வேறு வகையாக மாறுவது.

பொருளியல் அடிப்படையில் ஒரு வகுப்பினர் மற்றொரு வகுப்பினரை வென்று வீழ்த்தும் புதுமுறை வன்செயலே. ''எழுச்சியை புரட்சி'' என்பர் ஸ்டான்லி கார்னோ என்ற மேனாட்டறிஞர்.

முன்பு இருந்த பழைமை நிலைமாறிப் புதுமை நிலை ஏற்படுவதே புரட்சிதான். சமுதாயத்தில் ஏற்படும் இந்நிலையைச் சமுதாய புரட்சி என்பர். இப்புரட்சியை உண்டாக்கியவர் திருஞானசம்பந்தர்.

கி.பி.7-ஆம் நூற்றாண்டில் பாண்டிய நாடு சைவநெறி தடம்புரண்டு சமண நெறி மீக்கூர்ந்து மக்கள் புறச்சமயக் காரிருளால் மூடப்பெற்று அல்லலில் உழந்து வந்தனர்.

பாண்டிய நாட்டில் உள்ள ஆனைமலை முதலிய மலைகளைத் தமக்கிடமாகப் பற்றிக் கொண்டு மன்னனைத் தம்வயப்படுத்திச் சமணனாக்கி

அவன் மூலம் செல்வாக்கும் பெற்று மக்களிடையே தமது சமயத்தைப் பரப்பி வந்தனர்.

'யதாராஜா; ததாபிரஜா' என்பது வடமொழித் தொடர். மன்னன் எவ்வழி; மக்கள் அவ்வழி என்பது தமிழ்ப் பழமொழி. மன்னன் சமணனாக மாறியதால் மக்களில் பலரும் சமணனாக மாறியதில் வியப்பொன்றுமில்லை.

அந்நாளில் பாண்டிய நாட்டை ஆண்டவர் கூன்பாண்டியன். அவன் சமணர்களின் சூழ்ச்சியில் பட்டுச் சைவ நெறிபுரண்டு சமணம் சார்ந்தான். மன்னன் மாறவே, பாண்டிய நாட்டுக் குடிமக்களில் பலரும் சமணராயினர். பாண்டிய நாட்டுத் திருக்கோயில்கள் பல பாழிகளாகவும், பள்ளிகளாகவும் மாற்றப்பட்டன. சைவ சமயம் செல்வாக்கிழந்து சைவர்கள் செயல்திறம் குன்றி வருந்தினர்.

பாண்டிமாதேவியான மங்கையர்க்கரசியும், அமைச்சர் குலச்சிறையும் சைவ சமயத்தில் உள்ளம் உடையவர்கள். மன்னனது நிலை பற்றி அவர்கள் பெரிதும் வருந்தினர். அவ்விருவரும் திருஞானசம்பந்தர் திருமறைக்காட்டிற்கு எழுந்தருளியுள்ளதைக் கேள்வியுற்று அவரை வணங்கி அழைத்து வரும்படி தம்பரிசனத்தார் சிலரைத் திருமறைக்காட்டிற்கு அனுப்பினர். அவர் வந்தார். சமணர்களை வென்று சைவ சமயத்தை நிலைநாட்டுவார். அதனால் சமணக் காரிருள் நீங்கும் என அவர்கள் நம்பினர்.

பாண்டி நாட்டுப் பரிசனங்கள் அமைச்சர் ஆணைப்படி திருமறைக்காடு வந்து சம்பந்தரைப் பாண்டிநாடு வரும்படி வேண்டி நின்றனர். உடனிருந்த அடியார் சிலரும் சைவம் தழைப்பதற்காகப் பிள்ளையார் பாண்டியநாடு செல்ல வேண்டியது அவசியம் என்பதை வலியுறுத்தினர். சம்பந்தர் அவர்கள் விருப்பத்தை ஏற்றுக்கொண்டு பாண்டிநாடு செல்ல இசைந்தார். அவ்விருப்பத்தை உடனிருந்த திருநாவுக்கரசரிடம் கூறவே அவர் மறுத்தார்.

''பிள்ளாய்! அந்த சமணர்கள் கொடியவர்கள், வஞ்சை மிக்கவர்கள் அதை நானே அனுபவித்திருக்கிறேன். வேண்டுமானால் உம்முடன் துணையாக யானும் வருகிறேன்'' என்றார்.

சம்பந்தர் அதை மறுத்து, 'ஆலவாய் அரண் அருளாய் அவ்வமணர் களை வெல்வேன், அஞ்சாதீர்' என்று உறுதி கூறினார்.

''நாள்களும் கோள்களும் நல்லனவாக இல்லை. நீர் செல்ல வேண்டா'' என்றார் நாவரசர். அது கேட்ட பிள்ளையார், ''நாம் போற்றுவது நம்பெருமாள் திருவடிகளாதலாய் நமக்கு எத்தகைய தீங்கும் வராது. ஞாயிறு, திங்கள் முதலிய நாள்களும், கோள்களும் இறையடியாரை எதுவும் செய்யா, நல்லனவே விளையும் நீர் கவலற்க'' என்று கூறிப் புறப்பட்டார்.

இங்கு ஒன்று கருதப்படவேண்டும். நாள்களின் நிலையும், கோள்களின் இயக்கமுமே சோதிட நூலின் அடிப்படை. அவை நன்மை தீமைகளை விளைவிக்கும் என்பது சோதிட நூலில் திடமான நம்பிக்கை.

ஆனால் சம்பந்தர் அந்நாள்கள் எல்லாமே நல்ல நாட்கள், அவை தீமை செய்வதில்லை இறைவன் அடியவர்க்கு எல்லாம் நல்லனவே என்று தெளிவாகக் கூறுகிறார்.

''வேயுறு தோளிபங்கன் விடமுண்ட கண்டன்
மிகநல்ல வீணை தடவி
மாசறு திங்கள் கங்கை முடிமேல் அணிந்தென்
உளமே புகுந்த வதனால்
ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன் வெள்ளி
சனிபாம்பிரண்டு முடனே
ஆசறு நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியாரவர்க்கு மிகவே.

என்ற பாடலில் இதைக் காணலாம்.

'நாளிலும் கோளிலும் எதுவும் இல்லை; எல்லாம் நல்லனவே' என்ற கூற்று சோதிடத்துறையில் ஏற்பட்ட ஒரு மாற்றம் என்றே கருதலாம். இப்புரட்சிகரமான கருத்தை முதன் முதலில் கூறியவர் திருஞானசம்பந்தரே என்பது கருதத்தக்கது.

மதுரை சென்றடைந்த திருஞானசம்பந்தரைக் கண்ட மங்கையர்க்கரசியார், இவர் இவ்வளவு சிறுபாலகனாக இருக்கிறாரே! கொடியவர்களான சமணர்களால் இவருக்கு என்ன நேருமோ? என்று அஞ்சினார். அதனை உணர்ந்த சம்பந்தர், ''பாண்டிமாதேவி' என்னைப் பற்றிக் கவலற்க! ஆலவாய் அண்ணல் அருளால், பாதகராம் சமணரை வென்று சமணத்தை அகற்றி சைவத்தை நிலைநாட்டுவேன்'' என்று ஆறுதல் கூறினார். இதனை,

''மானின் நேர்விழிமாத ராய்வழு
திக்கு மாபெரும் தேவி கேள்?
பானல் வாயொருபால னீங்கிவன்
என்று நீ பரிவு எய்திடேல்
ஆனை மாலை யாதியாய
இடங்களில் பல அல்லல் சேர்
ஈனர்கட் கெளி யேனலேன் திரு
ஆலவாய் அரன் நிற்கவே''

என்ற பாடல் புலப்படுத்தும்.

சமணரை வாதில் வெல்லுதல்

பகற்பொழுது சென்று இராப்பொழுது தொடங்கியது. சம்பந்தருடன் வந்த சிவனடியார்கள் பாடும் இன்னிசை முழக்கம் மதுரை மாநகரெங்கும் நிறைந்தது. அதுகண்டு பொறாத சமணர்கள் கூட்டமாகப் பாண்டியனை அடைந்து மதுரையில் சைவ வேதியர்களைக் கண்டதால் யாம் உண்மை நிலையினர் ஆயினோம் என்பதை உணர்த்த யாங்கள் 'கண்டுமுட்டு' என்றனர்.

இத்துன்பச் செய்தியை கேட்டமையால் யானும் உண்ணா நிலையினேன் ஆனேன் என்பதை உணர்த்த மன்னனும் யானும் 'கேட்டு முட்டு' என்றான். இதனால் மனவலிமை பெற்ற சமணர்கள் சம்பந்தர் தங்கியிருந்த திருமடத்தைத் தீமூட்டினர். அதுகண்டு வருந்திய சம்பந்தர் இத்தீங்கு அரசன் முறை செய்யாமையால் நேர்ந்ததாகும் எனச் சிறந்தது, சைவர் தங்கிய மடத்தில் சமணர் இட்ட தீயையயே சென்று பாண்டியனைச் சார்வதாகுக என்ற கருத்துடன்,

"செய்ய னேதிரு ஆலவாய் மேவிய
ஐயனே அஞ்சல் என்றருள் செய்எனைப்
பொய்ய ராம்அம ணர்கொளு வும்சுடர்
பைய வேசென்று பாண்டியற் காகவே"

என்ற பாடலைப் பாடினார். அத்தீ மெல்லச் சென்று பாண்டியனை அடைந்து வெப்பு நோயாக மாறி வருத்தியது. நோய் தாங்கலாற்றாமல் பாண்டியன் கதறினான். துடிதுடித்து வருந்தினான்.

சமணர்கள் மயிற்பீலிகொண்டு தடவியும் மணிமந்திர ஔடதங் களைப் பிரயோகித்தும் நோய் தணியவில்லை. பாண்டியன் தேவிமுகம் நோக்கினான். ''சம்பந்தர் இங்கு எழுந்தருளியுள்ளார், அவரை வரவழைத்தால் இந்நோய் நீங்கும் என்றாள் அரசி. சம்பந்தர் அரசன் விருப்பத்தாய் அழைக்கப்பட்டார்.

எனது நோயைத் தீர்ப்பவர் எவரோ அவர் சமயமே உயர்ந்தது. அவரே வென்றவராவர் என்றான் பாண்டியன். வலப்பாகத்து வெம்மையை இவர் தீர்க்கட்டும், இடப்பாகத்து வெம்மையை நாங்கள் தீர்க்கிறோம் என்றனர் சமணர். அதற்கிசைந்த சம்பந்தர் இறைவனை வேண்டி, ''மந்திர மாவது நீறு'' என்ற பதிகத்தைப் பாடி மன்னனது வலப்புறத்தில் தடவினார். வெம்மை நீங்கியது. இடப்புறத்தில் வெம்மை கருமையாக வாட்டியது. சமணர்கள் தமது மந்திரங்களால் அதைத் தீர்க்க முயன்றும் இயலவில்லை.

அரசன் அவர்களை நோக்கி: ''என் முன் நில்லாதீர்கள்! அகன்று செல்லுங்கள்!'' என வெறுப்புடன் கூறினான். பின்னர் அதனையும் நீக்குமாறு சம்பந்தரை வேண்ட அவர் இடப்பக்கத்து வெப்பு நோயையும் மாற்றியருளினார். மன்னன் மனம் குளிர்ந்து சம்பந்தரது திருவடிகளில் வீழ்ந்து வணங்கினான்.

சமணர்கள் அச்சமுற்று ஒதுங்கி நின்றனர். ஆயினும் ஆளுடைய பிள்ளையாரை அனல் வாதத்திற்கும் புனல் வாதத்திற்கும் அழைத்தனர். அனலை மூட்டி சமணர்களின் மந்திரங்கள் எழுதிய ஏடுகள் அதில் இடப்பட்டன. அவை எரிந்து சாம்பலாயின.

சம்பந்தர் தமது பாடலான ''போகமார்த்த பூண்முலையாள்'' என்ற ஏட்டினைத் தீயில் இட்டார். அது நெருப்பில் வேகாமல் நிலைத்து நின்றது. சமணர்கள் அனல் வாதத்தில் தோற்றனர்.

புனல்வாதம் தொடர்ந்தது. சமணர்கள் தமது மந்திரங்கள் எழுதிய ஏட்டை வைகையில் இட்டனர். அது, வைகை நீரால் அடித்துச் செல்லப் பட்டது.

சம்பந்தர் தமது பாடலான ''வாழ் அந்தணர்'' வானவர் ஆவினம்'' எனத் தொடங்கும் ஏட்டினை எடுத்து நீரில் இட்டார். அவ்வேடு நீரை எதிர்த்து நீந்திச் சென்றது. சமணர்கள் இருவகை வாதத்திலும் தோற்றமையால் மன்னனது கடுஞ்சினத்திற்காளாகிக் கழுவேற்றப்பட்டனர்.

பாண்டிய நாட்டைப் பற்றியிருந்த சமணக் காரிருள் மறைந்து சைவத்தின் பேரொளி நாடெங்கும் பரவியது. சம்பந்தர் செய்த பெரும் சமயப் புரட்சி- சமுதாயப் புரட்சி என இதனைக் கூறலாம்.

82. சம்பந்தரும் திருநாவுக்கரசரும்

கு. மோகனசுந்தர், சின்னசேலம்.

சான்றோர் சான்றோர் பாலராப

பொன்னுந் துகிருந் முத்து மன்னிய
மாமலை பயந்த காமரு மணியும்
இடைபடச் சேய வாயினும் தொடைபுணர்ந்து
அருவிலை நன்கலம் அமைக்குங் காலை
ஒருவழித் தோன்றியாங் கென்றுஞ் சான்றோர்
சான்றோர் பால ராப. (புறம். 218)

என்னும் மேற்கூறிய கண்ணகனார் பாடலில் சான்றோர்கள் இணைவதால் ஏற்படும் நன்மைகள் குறித்து விளக்கம் தரப்பட்டுள்ளது.

இங்குக் கலன் என்பது அணிகலன். அருங்கலம் என்றால் அரிய அணிகலன் ஆகும். ''அரசர்க்கு உரித்து அருங்கலம்'' என்று நன்னூல் கூறும். அரசர்கள் தன் தலையில் அணியும் முடியும், மார்பில் அணியும் மதானி முதலான பல அணிகளும் அருங்கலன்கள் எனப்பெறும். அந்த அருங்கலன் களை செய்வதாயின், சேய்மையில் உள்ள பொன்னும், பவளமும், முத்தும், நிலைபெற்ற பெரிய மலையில் உள்ள மாணிக்கமும் ஒருங்கு வந்து சேர்ந்து அந்த அருங்கலனை உருவாக்கும். அதைப் போல நாட்டில் நல்ல செயல்கள் நடைபெறும்போது வெகுதூரத்தில் உள்ள நல்லோர் ஒன்று இணைந்ததன் பயனாகத் தங்களால் இயன்ற நல்ல பணியைச் செய்து முடிப்பார்கள்.

இங்கு இருபெரும் சான்றோர்களாகிய திருஞானசம்பந்தரும், திருநாவுக்கரசரும் இணைந்து தங்களோடு பல அடியார்களையும் சேர்த்துக் கொண்டு சைவ சமயத்தை வளர்த்த நிலையைப் பெரியபுராணத்தைக் கொண்டு தெரிவிப்பது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

திருஞானசம்பந்தரும், திருநாவுக்கரசரும்
இணைவதற்கான காரணம் காணல்

திருஞானசம்பந்தர் சோழநாட்டினர். திருநாவுக்கரசர் நடுநாட்டில் திருமுனைப்பாடி நாட்டினைச் சார்ந்தவர். திருஞானசம்பந்தர் அந்தணர் குலத்தினரும், வயதில் இளையவரும் ஆவார். திருநாவுக்கரசர் வேளாளர் குலத்தினரும், வயதில் முதிர்ந்தவரும் ஆவர்.

இவ்வாறு நாட்டாலும், குலத்தாலும், வயதாலும் வேறுபட்ட இவ்விருவரும் சைவ சமயம் என்கிற ஒரு பெரிய நீரோட்டத்தில் ஒன்றுபடுகிறார்கள். அவர்கள் ஒன்றுபடுவதற்குக் காரணம் சைவ சமய உணர்ச்சியே ஆகும் எனலாம். இவர்களின் நட்பானது,

"புணர்ச்சி பழகுதல் வேண்டா உணர்ச்சிதான்
நட்பாம் கிழமை தரும்".

என்ற குறளுக்கு எடுத்துக்காட்டாக அமைகிறது எனலாம்.

இனி திருஞானசம்பந்தரும், திருநாவுக்கரசரும் எவ்வாறு தங்களை ஒன்றுபடுத்திக் கொண்டார்கள் என்பதைப் பெரியபுராணத்தின் வாயிலாகக் காணலாம்.

திருஞானசம்பந்தரும், திருநாவுக்கரசரும் மூன்றுமுறை சந்தித்துள்ள தாகப் பெரியபுராணத்தில் தெரிகிறது.

திருநாவுக்கரசர் திருஞானசம்பந்தரைக் காணச் செல்லுதல்

"பந்தனை மெல்விர லாளும் பரமரும் பாய்விடைமீது
வந்துபொன் வள்ளத் தளித்த வரம்பில்ஞா னத்து அமுதுண்ட
செந்தமிழ் ஞானசம்பந்தர் திறங்கேட்டு இறைஞ்சுதற்காக
அந்தணர் பூந்தராய் தன்னில் அணைந்தனர் நாவுக் கரையர்"

உமாதேவியும் இறைவனும் எருது(விடை) மீது வந்து பொற் கிண்ணத்தில் அளித்த எல்லை இல்லா ஞானம் நிரம்பிய பாலை உண்டு அதனால் செந்தமிழில் பாடல்களைத் தொடுக்கும் திறம் படைத்த திருஞானசம்பந்தரின் பெருமையைக் கேள்வியுற்று, அவரை வணங்கு வதற்காகத் திருநாவுக்கரசர் சீர்காழிக்குச் செல்லத் தொடங்கினார்.

திருஞானசம்பந்தர் திருநாவுக்கரசரை எதிர்கொள்ளல்

திருநாவுக்கரசர் வருவதைக் கேள்வியுற்ற திருஞானசம்பந்தர் அவரை எதிர்கொண்டு அழைக்கத் திருக்கூட்டத்துடன் சென்றார். அங்கு வரும் திருநாவுக்கரசரின் தோற்றத்தைக் கீழ்வரும் சேக்கிழார் பெருமானின் பாடல் மூலம் அறியமுடிகிறது.

"சிந்தை இடையறா அன்பும் திருமேனி தன்னில் அசைவும்,
கந்தை மிகையாம் கருத்தும் கைஉழ வாரப் படையும்
வந்திழி கண்ணீர் மழையும் வடிவில் பொலிதிரு நீறும்
அந்தமி லாத்திரு வேடத்தரசும் எதிர்வந் தனைய"

மனதில் இடைவிடாது பெருகும் அன்பும், வயது முதிர்ச்சியின் காரணமாக அசையும் திருமேனியும், உடம்புக்கு இன்றியமையாததாகிய ஆடையையும் மிகை எனக் கருதும் பற்றற்ற நிலையும், கையில் உழவாரப்

படையும், கண்களில் பெருகும் ஆனந்தக் கண்ணீரும் திருமேனியில் திருநீற்று விளக்கமும், உடைய அழிவில்லாத திருவேடத்தை உடைய திருநாவுக்கரசர் எதிர் வந்தார்.

இத்தகைய தோற்றத்தைக் கண்ட திருஞானசம்பந்தர் திருநாவுக்கரசரை வணங்கினார் என்பதும், திருநாவுக்கரசரும் எதிர் வந்து வணங்கினார் என்பதும் திருஞானசம்பந்தர் புராணத்தில் சொல்லப்பட்ட செய்தியாகும்.

ஆனால் திருநாவுக்கரசு சுவாமிகள் புராணத்தில் இச்செய்தி சிறிது வேறுபாடாக இருக்கிறது. அச்செய்தியாவது,

''தொழுதணைவுற் றஆண்டஅரசு அன்புருகத்
தொண்டர் குழாத்திடையே சென்று
பழுதில்பெருங் காதலுடன் அடிபணியப்
பணிந்தவர்கள் கரங்கள் பற்றி
எழுதரிய மலர்க்கையால் எடுத்திறைஞ்சி
விடையின்மேல் வருவார் தம்மை
அழுதழைத்துக் கொண்டவர்தாம் ''அப்பரே''
எனஅவரும் ''அடியேன்''

என்றார். என்னும் இப்பாடலில் திருநாவுக்கரசர் அன்பு பெருகத் திருக்கூட்டத்தின் நடுவே சென்று திருஞானசம்பந்தரை வணங்கினார். திருஞானசம்பந்தர் தம்மை வணங்கிய திருநாவுக்கரசரின் கைகளைப் பிடித்துக்கொண்டு தாமும் வணங்கி 'அப்பரே' என்று அழைத்தார். திருநாவுக்கரசரும் 'அடியேன்' என்றார் என்பதன் மூலம் அடியார்கள் ஒருவருக்கொருவர் மரியாதைக் கொடுக்கும் பண்பினை இங்கே காண முடிகிறது. மேலும் இருவரும் சந்தித்த சந்திப்பினைத் திருநாவுக்கரசு சுவாமிகள் புராணம், ''அருட்கடலும், அன்புக்கடலும் கூடியது போன்றது எனவும், சைவநெறி பெற்ற இரண்டு புண்ணியக் கண்களைப் போன்றது எனவும், சிவபெருமானுடைய அருளும், உமாதேவியாருடைய அருளும் சேர்ந்தது போன்றது எனவும்'' கண்டோர் கூற்றாக அமைத்துக் கூறியுள்ளார்.

மேற்கண்ட இச்செய்தியில் உள்ள வேறுபாடாவது

திருஞானசம்பந்தர் புராணத்தில்

திருஞானசம்பந்தர் சென்று திருநாவுக்கரசரை வணங்கினார் என்பதாகப் பாடல் வந்துள்ளது.

திருநாவுக்கரசர் புராணத்தில்

திருநாவுக்கரசர் சென்று திருஞானசம்பந்தரை முதலில் வணங்கியதாக உள்ளது. திருஞானசம்பந்தர் தம்மை வணங்கிய திருநாவுக்கரசரின் கைகளைப் பிடித்து 'அப்பரே' என்று கூறி வணங்கியதாக வந்துள்ளது.

அடுத்து இருவரும் திருக்கூட்டத்துடன் திருக்கோயிலுக்குள்ளே சென்று தோணியப்பரை வணங்கினர். திருநாவுக்கரசர் ''பார்கொண்டுமூடி'' என்று தொடங்கும் திருப்பதிகம் பாடினார். பின்னர் திருஞானசம்பந்தர் தம் மடத்தில் திருநாவுக்கரசருக்கும் அடியார்களுக்கும் திருவமுது அளித்தார். இருவரும் ஒருவரை ஒருவர் நட்புக்கொண்ட நிலையில் சிலநாள் அளவளாவி இருந்தபின்னர் சிவபெருமான் எழுந்தருளியிருக்கும் பிற தலங்களை வணங்கும்பொருட்டுத் திருஞானசம்பந்தரின் இசைவு பெற்று, என்றும் பிரியாத நட்போடு திருநாவுக்கரசர் பிரிந்து சென்றார்.

எனவே மேற்சொன்ன கருத்துக்களின் அடிப்படையில் **திருஞான சம்பந்தருக்கும், திருநாவுக்கரசருக்கும் ஏற்பட்ட இந்த முதலாவது சந்திப்பு உணர்வு பூர்வமான சந்திப்பாக அமைந்துள்ளதாகத் தெளியலாம்.**

இரண்டாவது சந்திப்பு -2

திருஞானசம்பந்தர் திருப்புகலூரில் இருக்கும்போது திருநாவுக்கரசரைக் கண்டு அழைத்து வருதல்

திருப்புகலூர் வந்தணைந்த திருஞானசம்பந்தர் முருக நாயனாரின் திருமடத்தில் பலநாட்கள் இருந்தார்கள். இவரோடு தங்கியிருந்த காலத்தில் இவர் செய்த தொண்டின் காரணமாக (முருக நாயனாரின் தொண்டின்) இவரது சிறப்பினை, வர்த்தமானீச்சரரை வணங்கிப் பாடிய திருப்பதிகத்தில் கூறியிருப்பதன் மூலம் அறியலாம்.

திருஞானசம்பந்தர் திருப்புகலூரில் இருக்கிறார். அப்போது திருநாவுக்கரசர் திருவாரூரை வணங்கிக் கொண்டு திருப்புகலூர் வருகிறார். இந்த செய்தியை அறிந்த திருஞானசம்பந்தர் மெய்யன்பர்களோடு வந்து திருநாவுக்கரசரை எதிர்கொண்டு அழைக்க, இருவரும் அன்பால் வணங்கி மகிழ்ந்தனர்.

திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசரிடம் திருவாரூர் பெருமானை வணங்கிய நிகழ்ச்சியைக் கேட்டார். திருநாவுக்கரசர் திருவாரூரில் நடைபெறும் திருவிழா நிகழ்ச்சி முதலானவற்றை எல்லாம் சொல்லி யருளினார். அதனைக் கேட்ட திருஞானசம்பந்தர் ''திருவாரூர் பெருமானை வணங்கி மீண்டும் வந்து உங்களுடன் சேருவேன்'' என்று கூறி, திருவாரூருக்கு விரைந்து சென்று, இறைவனைத் தரிசித்து, மீண்டும் (இடையில் பல தலங்களை வணங்கி) திருப்புகலூரை அடைந்தார்.

தொண்டர்களின் கூட்டுறவு

திருப்புகலூரில் முருகநாயனாரின் திருமடத்தில் திருஞானசம்பந்தரும், திருநாவுக்கரசரும் தங்கி இருந்தனர். இதனை அறிந்த திருநீலநக்க நாயனாரும், சிறுத்தொண்ட நாயனாரும் வந்து மெய்யடியார்கள்

இருவரையும் வணங்கி அருள் பெற்றனர். அடியார்களுடன் சில நாட்கள் தங்கியிருந்தபின், திருநாவுக்கரசரும், திருஞானசம்பந்தரும் பிற தலங்களை வணங்கும் பொருட்டுத் திருப்புகலூரிலிருந்து புறப்பட்டு ஒன்றாகச் சென்றனர்.

அவ்வாறு செல்லும்போது நடந்த நிகழ்ச்சி ''அடியவர் அடியவர் மேல் கொண்ட அன்பின் மேலிட்ட பக்திமையை நன்கு வெளிப்படுத்துவதாய் உள்ளது''

திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசருடன் தன்னுடைய முத்துச் சிவிகையில் ஏறாமல் முத்துச்சிவிகை பின்வர நடந்து சென்றார். திருநாவுக்கரசர் திருஞானசம்பந்தரைப் பார்த்து, ''சிவபெருமான் அளித்த முத்துச் சிவிகையின் மீது வருக'' என்று கூறினார். திருஞானசம்பந்தர், ''அவ்வாறாயின் தேவரீர் தொண்டர்களுடனே முன்னே சென்றால், தான் பின்னே தொடர்ந்து வருகிறேன்'' என்றார். அவ்வாறே திருநாவுக்கரசர் முன்னே செல்லத் திருஞானசம்பந்தர் பின்னே செல்கிறார்.

இருவரும் திருஅம்பர் மாகாளம் சென்று இறைவனை வணங்கி, பின் திருக்கடவூர் சென்றனர். குங்குலியக் கலயநாயனார் அவர்களை வணங்கி வரவேற்றார். பின் திருக்கடவூர் கோயிலை வணங்கி, குங்குலியக் கலய நாயனாருடன் தான்தோன்றிமாடம், திருமீயச்சூர் திருப்பாம்புரம் முதலான தலங்களை வணங்கி, திருவீழிமிழலையை அடைந்து இறைவனை வணங்கினர்.

பஞ்சம் தீர்த்தல்

திருவீழிமிழலையில் திருநாவுக்கரசர் மதிற்புறத்தின் மேற்குதிசையில் உள்ள ஒரு பெரிய மடத்திலும், திருஞானசம்பந்தர் கிழக்குதிசையில் உள்ள ஒரு பெரிய மடத்திலும் தங்கியிருந்தனர். இருவரும் காலந்தோரும் இறைவனை வழிபட்டு வந்தனர். அந்தச் சமயத்தில் உலகத்தில் மழை தவறியதால் பஞ்சம் ஏற்பட்டது. திருநாவுக்கரசரும், திருஞானசம்பந்தரும் இந்நிலையினைக் கண்டு வருந்தி, இறைவனின் திருவடிகளை எண்ணியவாறு உறங்கினர். இவ்வடியார்களின் மூலம் பசிக்கொடுமை யினை நீக்க எண்ணிய இறைவன் அவர்களது கனவில் தோன்றி ''இப்பசி கொடுமை உலக இயல்பால் நிகழ்ந்தது. அது உங்களை வந்தடையாது. ஆனால் அடியார்களின் வாட்டத்தைப் போக்கும் பொருட்டு, தினம் ஒவ்வொரு பொற்காசு கோயிலின் கிழக்கிலும், மேற்கிலும் உள்ள பீடத்தில் இப்பஞ்சகாலம் இருக்கும்வரை உங்களுக்கு வைக்கப்படும்'' என்று கூறி மறைந்தார்.

திருஞானசம்பந்தரும், திருநாவுக்கரசரும் திருக்கோயிலை அடைந்தனர். கிழக்கு பலிபீடத்தின் மேலே பொற்காசு இருக்கக் கண்டு, தொழுது அக்காசினைத் திருஞானசம்பந்தர் எடுத்துக் கொண்டார். ''சிவனடியார்கள் ஒவ்வொரு நாளும் நல்ல அமுதுண்ண வருக'' என பறைசாற்றி அக்காசைச் செலவிட்டு இனிது உண்ணும்படி உணவு படைத்து உபசரித்து அருளினார்.

திருநாவுக்கரசர் மேற்குப் பீடத்தில் வைக்கப்பட்ட காசை கொண்டு போய் அக்காசை செலவிட்டு அடியவர்களுக்கு திருவமுது படைத்து உபசரித்து அருளினார்.

திருநாவுக்கரசர் திருமடத்தில் அடியார்கள் உச்சிப்பொழுதிற்குமுன் திருவமுது செய்தனர். திருஞானசம்பந்தர் திருமடத்தில் உச்சிப்பொழுதிற்கு பின்னரே திருவமுது செய்யப்பட்டது. இங்கு அமுது செய்வதில் ஒரு சிக்கல் நிகழ்கிறது. இங்குத் திருவமுது செய்யக் காலதாமதமா வதற்கான காரணம் என்ன என்று திருஞானசம்பந்தர் திருவமுது ஆக்கு வோரிடம் கேட்டார். அதற்கு அவர்கள், பொருள்களைப் பெறவேண்டிக் கடைக்குச் சென்றால் வணிகர் அப்பொற்காசில் மாற்றுக்குறை இருப்பதாகக் கூறி வட்டம் கேட்கின்றனர். எனவே வட்டத்தைக் கொடுத்துப் பொருள் வாங்குவதால் திருவமுது செய்யக் காலதாமதமாகிறது என்றும், ஆனால் திருநாவுக்கரசர் காசிற்கு மாற்றுக்குறை இல்லாததால் விரைவில் செலவாகிறது. எனவே விரைவில் திருவமுது ஆகிறது என்றும் கூறினர்.

திருஞானசம்பந்தர், இச்செயலுக்குக் காரணம் திருநாவுக்கரசரின் கைத்தொண்டே ஆகும் என்று உணர்ந்தார். இனி காசு வாசிதீரும் (மாற்றுக் குறைவு) பொருட்டு, இறைவனைப் பாடுவேன் என்று எண்ணி, மறுநாள் திருக்கோயிலில் திருப்பதிகம் பாடி மாற்றுக்குறைவில்லாத காசு பெற்றார். அதன்பின் இருவரும் அடியார்களுக்கு முற்பகலிலேயே திருவமுது அளித்தனர். இறைவன் அருளால் மழைப் பொழிந்தது. பஞ்சம் நீங்கியது. அங்குச் சிலநாள் தங்கியிருந்த திருஞானசம்பந்தரும், திருநாவுக்கரசரும் பல தலங்களை வணங்க விரும்பி, அங்கிருந்து புறப்பட்டு, ''திருவாஞ்சியம் முதலாக திருக்களர் ஈறாக'' 17 தலங்களை வணங்கி பின் திருமறைக் காட்டிற்குச் சென்றனர்.

திருமறைக்காட்டில் திருக்கதவம் திறத்தல்

திருமறைக்காட்டில் திருக்கோயிலின் திருவாயிலின் அருகே சென்ற அவர்கள், வேதங்கள் திருக்காப்பு செய்யப்பட்டது முதல் இதுநாள்வரை கதவு (திருவாயில்) திறந்திடப் பெறாதிருந்தமையால் வேறு ஒரு வழியே சென்று இறைவனை யாவரும் வழிபட்டு வருவதைக் கேட்டு வியப்புற்றனர்.

திருஞானசம்பந்தர் திருநாவுக்கரசரிடம் அப்பரே! இத்திருவாயில் திருக்காப்பு நீங்குமாறு ஒரு தமிழ்ப்பதிகம் பாடி அருளும் என்று கூற, திருநாவுக்கரசர் ''பன்னினேர் மொழி'' என்ற பதிகம் தொடங்கி 10 பாடல்கள் பாடியும் திருக்கதவம் திறவாமல் இருந்ததைக் கண்டு சிந்தை நொந்து, திருக்கடைக்காப்பில் (கடைசி பாடலில்) அறிதின் வேண்டிப் (மனமுருகி) பாடத் திருக்கதவம் திறந்தது.

அனைவரும் இறைவனை வணங்கி, அங்கிருந்து புறப்பட்டு வெளியே வந்தனர். திருநாவுக்கரசர் திருஞானசம்பந்தரை ''திருக்கதவம் அடைக்க பாடியருளும்'' என்றார். திருஞானசம்பந்தர் ''சதுரம் மறைதான்'' என்று தொடங்கும் பதிகத்தை அருளிச் செய்தார். முதற்பாடலிலேயே திருக்கதவும் மூடிக்கொண்டது.

இறையருள் மேன்மையினை மக்கள் அறியச் செய்த இவ்வடியார் களை உலகம் கைகுவித்து வணங்கியது. வேதங்கள் முழங்கின. இருவரும் ஒருவரை ஒருவர் வணங்கி தங்கள் தங்கள் திருமடத்திற்குச் சென்றார்கள். திருநாவுக்கரசர் திருமறைக்காட்டின் நிகழ்வை எண்ணி சிவபெருமானின் உள்ளக்கருத்தை அறியாது அயர்ந்தேன் என்று கவலையடைந்து பெரிதும் அஞ்சி துயின்றார். அப்போது இறைவன் அடியவர் வேடத்தில் தோன்றி, அவருக்குக் காட்சி அளித்து ''திருவாய்மூரில் நாம் இருப்போம் தொடர்ந்து வா'' என்று அருளி முன்னே சென்றார். அவரைப் பின்தொடர்ந்து திருநாவுக்கரசர் உடனெழுந்து சென்றார்.

திருஞானசம்பந்தர் ''அப்பர் எங்குற்றார்'' என்று அடியார்களைக் கேட்க, அவர்களுள் தெரிந்தவர் ''திருவாய்மூருக்கு சென்றார்'' என்று சொன்னார். இதனைக் கேட்ட திருஞானசம்பந்தர் யாது காரணம்? என்று கருதி தானும் திருவாய்மூருக்குச் சென்றார்.

திருநாவுக்கரசர் திருவாய்மூரில் இறைவனைக் காணாது இறைவனை மனதில் நினைத்து, ''எனது பிழை பொறுக்காமல் நீ ஒளிந்திருக் கின்றாய் ஆனால் ஒரே பாடலில் திருக்கதவம் மூடப்பாடிய திருஞான சம்பந்தர் இங்கு வந்துள்ளார். அவருக்கு எப்படி நீ காட்சி கொடுக்காமல் ஒளிந்திருப்பாய்? என்றார்'' அதன்பின்னர் அங்கு இறைவன் காட்சிதர இருவரும் வணங்கித் திருவாய்மூரில் சிலகாலம் தங்கிப் பின் மீண்டும் திருமறைக்காட்டில் எழுந்தருளினர்.

இந்நிலையில் மதுரை பாண்டிமாதேவி அனுப்பிய பணியாளர்கள் திருஞானசம்பந்தரைத் திருமடத்தில் கண்டு வணங்கி, மதுரையில் சைவ வளம் பெருக தேவரீர் திருவுள்ளம் கொண்டருள வேண்டும் என்றும் வேண்டி நின்றனர். இதனைத் திருஞானசம்பந்தரும் ஏற்றுக்கொள்கிறார்.

திருஞானசம்பந்தர் திருநாவுக்கரசரிடம் தாம் பாண்டி நாட்டிற்குச் செல்லயிருப்பதைத் தெரிவித்தார். ஆனால் திருநாவுக்கரசரோ சமணர்களின் வஞ்சனையை எடுத்துக்கூறி, தற்போது உங்களுக்குக் கோள்களும் நல்ல நிலையில் இல்லை. இப்போது போகவேண்டாம் என்று தடுத்துக் கூறினார். திருஞானசம்பந்தர் ''நாம் துதிப்பது எல்லாம்வல்ல சிவபெருமானை, எனவே நாளும், கோளும் நமக்கு தீமை செய்யாது என்று கூறி, ''வேயுறு தோளி பங்கன்'' என்று தொடங்கும் திருப்பதிகத்தைப் பாடினார். பின்னர் நாவுக்கரசரும் உடன்பட்டு, தானும் வருவதாகக் கூறினார். திருஞான சம்பந்தரோ தாங்கள் சோழநாட்டில் இருப்பீராக என்று கூறி வணங்க, திருநாவுக்கரசரும் வணங்கித் திருஞானசம்பந்த பெருமானின் விருப்பத்திற்கு இசைந்தார். திருஞானசம்பந்தர் பாண்டிய நாட்டிற்குப் புறப்பட்டார்.

மேலே சுட்டப்பெற்ற சந்திப்பு (இரண்டாவது சந்திப்பு) பல நாட்கள் இருவரும் கூடியிருந்து ''உள்ளப்பூர்வமாக பல சிறந்த பணிகளைச் செய்ய காரணமாக அமைந்ததெனக் கொள்ளலாம்''.

மூன்றாவது சந்திப்பு

திருப்பூந்துருத்தியில் திருநாவுக்கரசர், திருஞானசம்பந்தரின் முத்துச் சிவிகையை அவர் அறியாது தாங்கிக் கொண்டு அழைத்து வருதல்

திருநாவுக்கரசர் சோழநாட்டில் திருப்பூந்துருத்தியில் திருமடம் அமைத்து அங்கே வாழ்ந்து கொண்டிருந்தார். இந்நிலையில் திருஞான சம்பந்தர் திருப்பூந்திருத்திக்கு வருகிறார். திருநாவுக்கரசர், திருஞானசம்பந்தர் திருப்பூந்துருத்திக்கு வருவது அறிந்து திருஞானசம்பந்தரைத் தாம் சென்று இறைஞ்சுவது தமது நல்வினைப் பயனே ஆகும் என்று மனம் மகிழ்ந்தார். திருப்பூந்துருத்தி எல்லையை அடைந்து திருநாவுக்கரசர் திருத்தொண்டர் கூட்டத்தினுள்ளே திருஞானசம்பந்தர் தம்மைக் காணாதவாறு உள்புகுந்த முத்துச்சிவிகையைத் தாங்குகின்றவர்களோடு தாமும் ஒருவராய் சுமந்துகொண்டு வந்தார்.

திருப்பூந்துருத்தி எல்லையை அடைந்த திருஞானசம்பந்தர் அப்பரைக் காணாமையால் ''அப்பர் எங்குற்றார்?'' என்றார். அதைக் கேட்ட திருநாவுக்கரசரோ ''அடியேன் ஒப்பற்ற தவம் செய்ததால் இப்பொழுது தேவரீருடைய திருவடிகளைத் தாங்கிவரும் பெரும்பேறு கைவரப்பெற்று உய்ந்தேன்யான்'' என்று பதில் அளிக்கிறார்.

இதனைத் திருஞானசம்பந்த சுவாமிகள் புராணத்தில்,

''அப்பர்தான் எங்குற்றார் இப்பொழுது என்றருள்செய்யச்
செப்பரிய புகழ்த்திருநா வுக்கரசர் செப்புவார்
ஒப்பரிய தவம்செய்தேன் ஆதலினால் உம்மடிகள்
இப்பொழுது தாங்கிவரப்[1]பெற்றுய்ந்து இங்குற்றேன்யான் என்றார்''

பாடபேதம்

[1]பெற்றுய்ந்தேன்

என்ற பாடல் மூலம் உணரலாம்.

திருநாவுக்கரசு சுவாமிகள் புராணத்தில்,

''திருஞான மாமுனிவர் அரசிருந்த பூந்துருத்திக்கு
அருகாக எழுந்தருளி எங்குற்றார் அப்பர்என
உருகாநின்று உம்மடியேன் உம்மடிகள் தாங்கிவரும்
பெருவாழ்வு இங்கெய்தப் [1]பெற்றிங்குற்றேன் என்றார்''.

பாடபேதம்

[1]பெற்றேன்

என்று வருவதையும் ஒப்புநோக்கலாம்.

இவ்வாறு திருநாவுக்கரசர் கூறக் கேட்டவுடன் திருஞானசம்பந்தர் கீழ் இறங்கி, ''இவ்வாறு தேவரீர் செய்தருளினால் என்னாவது?'' என்று மனம் பதைத்து வணங்கினார். ''பின்னர் திருஞானசம்பந்தராகிய தங்களுக்கு வேறு எவ்வாறு செய்தால் தகும்?'' என்று திருநாவுக்கரசர் மறுமொழி கூறி வணங்கினார்.

இந்நிகழ்வுகளைக் கண்ட அடியார்கள் எல்லோரும் இவ்விரு பெருமக்களையும் வணங்கும் பேறு பெற்றோம்; அதனால் பிறவிக்கடலில் இருந்து உய்யப்பெற்றோம் என்று திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசரின் திருவடிகளை வணங்கினர். இதன்பின்னர் திருநாவுக்கரசரும், திருஞான சம்பந்தரும் அடியார்களை உடனழைத்துக் கொண்டு, திருப்பூந்துருத்தி இறைவனை வணங்கி, திருக்கோயிலின் வாயிலில் வந்து அமர்ந்தனர். அச்சமயம் திருநாவுக்கரசர், திருஞானசம்பந்தர் மதுரைக்குச் சென்றுவந்த வரலாற்றினைக் கேட்டார். மனம் உருகி வணங்கினார். தாம் தொண்டை நாட்டில் காஞ்சிபுரத்தில் எழுந்தருளிய திருஏகம்பரத்து இறைவனை வணங்கி வந்த வரலாற்றினைக் கூறினார்.

திருஞானசம்பந்தர் தொண்டைநாடு சென்று வணங்கவேண்டும் என்று விரும்பினார். திருநாவுக்கரசரின் மடத்தில் சிலநாட்கள் தங்கி யிருந்த திருஞானசம்பந்தர் சீர்காழி செல்லவும், திருநாவுக்கரசர் பாண்டிய நாடு செல்லவும் விரும்பியிருக்க, திருஞானசம்பந்தர் திருநாவுக்கரசரிடமிருந்து விடைபெற்றுத் திருப்பூந்துருத்தி இறைவனை வணங்கிப் புறப்பட்டார்.

இங்கே நிகழ்வுற்ற இந்த மூன்றாவது சந்திப்பு அடியார்கள் ஒருவருக்கொருவர் பணிவுகாட்டி வாழ்ந்திருக்கிறார்கள் என்ற உயரியப் பண்புநெறியை வெளிக்காட்டுவதாக இருந்தது.

இந்தச் சந்திப்புக்குப்பின் இருவரும் சந்தித்ததாகவோ (அ) ஒருவரைப் பற்றி ஒருவர் அறிந்ததாகவோ பெரியபுராணத்தில் செய்திகள் இல்லை.

வசவ புராணத்தில் கூறப்பட்டுள்ள செய்தி

திருஞானசம்பந்தரும், திருநாவுக்கரசரும், திருமறைக்காட்டில் நிகழ்த்திய அற்புதச் செய்திகளை வசவ புராணம் திருக்கூட்டச் சருக்கத்தில் கூறுகின்றது என்ற கூடுதல் செய்தியையும் இங்கு ஒப்பு நோக்கிப் பார்க்கலாம்.

மேற்கூறிய இரண்டு நாயன்மார்களின் சந்திப்புகளின் மூலம் நல்ல நட்பிற்கு இலக்கணம் என்னவென்பதும், அவ்வாறு கொண்ட நட்பால் விளைந்த நன்மைகள் என்னவென்பதும் இன்றைய மக்கள் புரிந்துகொள்ளல் மிகவும் தேவையானது.

''நல்லோரைக் காண்பதுவும் நன்றே நலம்மிக்க
நல்லார் சொல் கேட்பதுவும் நன்றே - நல்லார்
குணங்கள் உரைப்பதுவும் நன்றே அவரோடு
இணங்கி இருப்பதுவும் நன்று.''

83. ''எப்பொருளும் ஆக்குவான் ஈசனே''

கே.ஏ. ராஜீ, சென்னை.

'உலகெலாம்' எனக் கூத்தப் பெருமான் அடியெடுத்துக் கொடுக்கத் தில்லையம்பதியாயிரங்கால் மண்டபத்தே வீற்றிருந்து திருத்தொண்டர் புராணம் என்னும் பெரியபுராணத்தைச் சைவ உலகிற்கு வழங்கியவர் தெய்வச் சேக்கிழார்.

'செயற்கரிய செயலைச் செய்வர் பெரியர்' என்பதற்கேற்பப் பெரியபுராணப் பெரியோர்கள், தங்கள் கொள்கையில் உயர்ந்த பிடிப்போடு விளங்கிச் சைவம் வளரவும், சிவபெருமானின் பெருமையை உணர்த்தவும், ஆன்மாக்கள் இறைநிலை எய்தவும் வழிகாட்டியுள்ளனர்.

இறைவனை வணங்குதற்குரிய நெறிகள் நான்கினை (சரியை, கிரியை, யோகம், ஞானம்) எடுத்தியம்பும் வழிபாட்டு நூலாகப் பெரிய புராணத்தைக் கொள்ளலாம்; திருஞானசம்பந்தப் பெருமானை ஞானத்தில் கிரியை வழியில் நின்றவராகச் சேக்கிழார் பெருமான் காட்டிச் செல்வார்.

''எப்பொருளும் ஆக்குவான் ஈசனே'' என்பது போன்ற தத்துவக் கருத்துகள் நிறைந்த பெருமையை உடையது சம்பந்தர் புராணம்.

> ''தேமாவின் கனிகிழிந்த மதுநறு நெய்
> நிரந்தரம் நீள் இலைக்கடையால் ஒழுகுதலால் நெடிதவ்வூர்
> மரங்களும் ஆகுதி வேட்குந் தகையை''
>
> ''மனைவியார் வயிறெனுங் கமலத்
> துரிய பூமகள்ளன ஒருபெண் கொடி உதித்தாள்''.
>
> ''தாமரை மிசைத் தனி முதற்குழவி என்னத்
> தூமணி நிரைத் தணிசெய் தொட்டில்''

என்பன போன்ற இலக்கியச் சுவைகள் மிகுதியாக உடைய சம்பந்தர் புராணத்தில் சேக்கிழார் பெருமான் திருஞானசம்பந்தரைக் குறிப்பிடுகையில்

> ''வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத் துறைவிளங்கப்
> பூதபரம் பரைபொலியப் புனிதவாய் மலர்ந்தழுத
> சீதவள வயற்புகலித் திருஞான சம்பந்தர்''

எனச் சிறப்பித்துப் பேசுகிறார்.

சிவம் பெருக்கும் பிள்ளையார்

பிரமபுரம் வேணுபுரம் புகலிபெரு வெங்குருநீர்ப்
பொருளில் திருத்தோணிபுரம் பூந்தராய் சிரபுரமுன்
வருபுறவஞ் சண்பை நகர் வளர்காழி கொச்சை வயம்
பரவுதிருக் கழுமலமாம் பன்னிரண்டு திருப் பெயர்த்தால்.

திருஞானசம்பந்தப் பெருமானின் அவதாரத் தலமாகிய சீர்காழி எனப்பெறும் பிரம்மபுரத்தைக் குறிப்பிடும் சேக்கிழார் பெருமான், மேற்குறிப்பிடப் பெற்றுள்ள பாடல் மூலமாக அதற்குரிய வேறுபெயர் களையும் குறிப்பிட்டு,

'அப்பதியின் அந்தணர்தங் குடி முதல்வர்''

எனச் சிவபாத இருதயரை அறிமுகப்படுத்துகிறார்; இவரே பரசமயம் நிராகரித்து நீறாக்கும் புனை மணிப்பூண் காதலனைப் பெறப் போற்றும் தவம் புரிந்தார் ஆவர். (காதலன் - ஞானசம்பந்தர்)

''கற்புமேம் படுசிறப்பால் கணவனார் கருத்தமைந்தார்'' எனச் சேக்கிழார் திருஞானசம்பந்தரைத் தம் மணி வயிற்றில் தாங்கிய பகவதியாரைக் குறிப்பிட்டுச் செல்வதையும் நாம் உணர்கிறோம்.

மேதினியில் சமண்கையர் சாக்கியர்தம் பொய்ம்மிகுந்தே ஆதி அருமறை வழக்கம் அருகி அரண் அடியார்பால், விபூதி சாதன விளக்கம் போற்றல் பெறாது ஒழியக் கண்டு, இடருழந்த சிவபாத இருதயர் மகிழ்ச்சி யடையும் வகையில்;

பரச்சமயப் பவம்பெருக்கும் புரைநெறிகள் பாழ்பட
நல்லூழி தோறும் தவம்பெருக்கும் சண்பையிலே தாவில்
சரா சரங்களெலாம்
''சிவம் பெருக்கும் பிள்ளையார் திருஅவதாரம் செய்தார்''

இவ்வாறு குறிப்பிடுவது மூலமாகச் சேக்கிழார் திருஞானசம்பந்தரின் தோற்றத்திற்கான காரணத்தைச் சுட்டுவது நம்மால் உணரப் பெறலாகிறது.

இறைவியாராம் பகவதியாரும்,

பரமர்தாள் பரவும் அன்பினையே
திருமுலை சுரந்து அமுதுசெய் தருளுவித்தார்;
ஆறுலவு செய்ய சடைஐயர் (சிவபெருமான்) அருளாலே
பேறுலகினுக்கென வரும் பெரியவர்க்கு (சம்பந்தப் பெருமானுக்கு)
வேறுபல காப்பு மிகைஎன்று அவற்றை விரும்பாமல்
திருநீற்றையே காப்பாகக் கருதி நெற்றியில் நிறைவித்தார்;
பகவதியார்.
(பிள்ளைப் பருவங்களில் ஒன்று காப்புப் பருவம்)

திருநீற்றுப் பெருமையை இவ்வாறு உணர்த்திய சேக்கிழார் பெருமான்,

"தென்னவன் நோயை நீக்க, ஆலவாய் அண்ணல் நீறே
மன்னு மந்திரமுமாகி மருந்துமாய்த் தீர்ப்பதென்று"

தம் பாடலில் விளக்குகிறார்.

பருவ நலம் பாராட்டல்

தெய்வச் சேக்கிழார் திருஞானசம்பந்தருடைய வளர்ச்சிப் பருவங்களை, எதிர்காலத்தில் நிகழ்வுறவுள்ள நிகழ்ச்சிகளைச் சுட்டிச் செல்லும் வகையில் அமைத்துள்ள உத்தியானது நமக்குப் பேரின்பமளிப்பதாக உள்ளது.

குழந்தைகளின் பல்வேறு பருவங்களாகக் காப்புப் பருவம், தாலப் பருவம், செங்கீரைப் பருவம், சப்பாணிப் பருவம், வருகைப் பருவம், முத்தப் பருவம், அம்புலிப் பருவம், சிற்றில், சிறுதேர், சிறுபறை என்பன தமிழ் இலக்கியங்களால் கூறப்பெறுகின்றன.

அவ்வகையில் சேக்கிழாரும்,

பகவதியார் தம் மடியினையும், தொட்டிலையும், மலர்ப் படுக்கையினையும் சம்பந்தப் பெருமான் துயிலும் இடமாக்கிச் "சேய பொருள் திருமறையும் தீந்தமிழும் சிறக்க வரும் நாயகன்"

எனத் தாலாட்டி நலம் பல பாராட்டினார் எனவும், நமது புகலிப் பிள்ளையார்,

"அருமறைகள் தலை எடுப்ப ஆண்ட திருமுடி எடுத்துப்
பெரு மழுவர் தொண்டல்லால் பிறிதிசையோம் என்பார்போல்
திருமுக மண்டலமசையச் செங்கீரை ஆடினார்".

(மழுவர் - சிவபெருமான்)

(குழந்தையானது தனது தலையை அசைத்து இன்பம் காண்பது செங்கீரை)

என்றும்,

"நாமறியோம் பரசமயம் உலகீர்! எதிர் நாடாது
போமகல" என்று அங்கை தட்டுவது;"

புனிதன் சிவபெருமான்பால்,

"காமரு தாளம் பெறுதற் கொத்துவதுங் காட்டுவதுபோல்"

தாமரைச் செங்கைகளினாற் சப்பாணி கொட்டினார் என்றும், (பொற்தாளம் பெற்ற சிறப்பு நினைவு கொள்ளத்தக்கது)

''ஏழிசையும் பலகலையும் எவ்வுலகும் தனித்தனியே
வாழ வரும் அவர் தம்மை! வருக! வருக! என அழைப்ப;''

''விதிதவறு படும்வேற்றுச் சமயங்களிடை விழுந்து
கதிதவழ இருவிசும்புதை நிறைந்தகடி வார் கங்கை
நதிதவழும் சடைமுடியார் ஞானம்அளித் திடவுரியார்
மதிதவழமா ளிகை முன்றில் மருங்குதவழ்ந் தருளினார்''

என வருகைப் பருவம் காட்டியும்;

தளர் நடையிட்டு விளையாடத் தொடங்கியதை,

''கீழ்மை நெறிச் சமயங்கள் தளர் நடையிட் டறத்தாமும்
தளர் நடையிட் டருளினார்;''

என்றும் குறிப்பிட்டுள்ள பாங்கு ஆய்வுக்குரியதாகும்.

மூவாண்டில் உலகுய்ய நிகழ்ந்தவை மொழிதல்

திருஞானசம்பந்தப் பிள்ளையாரின் மூன்றாம் அகவையில், பரமனைப் பிரிந்த உணர்வு ஒரு சமயம் எழவும் வெருக்கொண்டாற் போல் அழுவதைச் சேக்கிழார் பெருமான்,

''பண்டுதிரு வடிமறவாப் பான்மையோர் தமைப்பரமர்
மண்டுதவ மறைக் குலத்தோர் வழிபாட்டின் அளித்தருள''

என்று சம்பந்தர் தந்தையாகிய சிவபெருமானைப் பிரிந்த உணர்வைச் சுட்டுகிறார். அவ்வாறே, நிறைபுனல் வாலிக்கரையில் நின்றருளும் பிள்ளையார் முன்னுணர்வு மூள அழத் தொடங்கினார் என்று கூறும் சேக்கிழார், குழந்தையின் அழுகையானது,

''எண்ணில்மறை ஒலிபெருக எவ்வுயிரும் குதூகலிப்ப
புண்ணியக்கன் றனையவர்தாம் பொருமி அழுதருளினார்''

எனக் கூறும்படி அமைந்ததாகக் காட்டுகிறார்.

அழுகின்ற பிள்ளையார் தமை நோக்கிய அருட்கருணை எழுகின்ற திருவுள்ளத்திறைவர் தாமும்; **''எண்ணரிய சிவஞானத் தின்னமுதங் குழைத்தருவி'' 'உண்ணடிசில்'** என உமையம்மை திருமுலைப்பாலை வள்ளத்துக் கறந்தருளி ஊட்டச் செய்தார்'' என்பதும் சேக்கிழார் மொழியாகும்.

அந்நிலையில்,

''சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானம்
பவமதனை அறமாற்றும் பாங்கினில் ஓங்கியஞானம்
உவமையிலாக் கலைஞானம் உணர்வரிய மெய்ஞ்ஞானம்
தவமுதல்வர் சம்பந்தர் தாம் உணர்ந்தார்''

தம் மண்ணுலகத் தாதையார்க்கு,

''எம்மையிது செய்த பிரான் இவனன்றே''

என விடையூர்திமேல் பாவையுடன் எண்ணிறந்த கருணையினால் நின்றாரை எதிர்காட்டி,

உண்ணிறைந்து பொழிந்தெழுந்த உயர்ஞானத் திருமொழியால்
பல்லுயிர்களும் மகிழும் படியாகத் தம்பாடல் பரமனிடம்
செல்லுமுறை பெறுவதற்குத் திருச்செவியைச் சிறப்பித்துத்
''தோடுடைய செவியன்''

என்னும் திருப்பதிகத்தைப் பாடினார்.

சேக்கிழார் காட்டும் சம்பந்தரின் பதிக அமைப்புகள்

மண்ணுலகில் வாழ்பவர்கள் பிழை செய்தாலும் தம்மை வந்தடையின் நெற்றிக்கண்ணை உடைய சிவபெருமான் பிழைபொறுத்துப் பெருங் கருணை காட்டுவான் என்பதை விளக்கும் வகையில் தன்னைப் போற்று கின்ற இராவணனுக்கு அருள்புரிந்த சிறப்பைப் பதிகங்களில் எட்டாம் பாடல் மூலம் அறியலாகிறது.

தம்மைத் தொழுபவர்க்கு அருள் செய்பவர் சிவபெருமான். ஆனால் குற்றமனத்துடன் திருமாலும், பிரம்மாவும் அடிமுடி தேடியும் அடைய முடியாதவராகிப் பின்னர் அஞ்செழுத்தினைத் துதித்து உய்ந்தனர் என்னும் வகையில் சம்பந்தர் பதிகங்களில் ஒன்பதாம் பாடல் அமையப் பெற்றுள்ளது.

சிவபெருமானை அடையும் வழியை அறிந்து உய்யமாட்டாத அறிவிலாச் சமணர்களையும் பௌத்தர்களையும் பரசமயத்தவர் என்றும் தீய மார்க்கத்தினர் என்றும் விளக்கும் வகையில் பத்தாம் பாடல் அமையப் பெற்றுள்ளது.

திருக்கடைக்காப்பாகச் சம்பந்தப் பெருமான் பதினோராம் பாடலை அமைத்துப் பதிகத்தை நிறைவு செய்வார். இப்பாடல் மூலமாகச் சம்பந்தப் பெருமானின் பக்தி நெறி, தமிழ்ப்பற்று, சைவத்தை வளர்த்த பாங்கு போன்ற பல்வேறு திறப்பாடுகள் அறியக் கிடைக்கின்றன. பதிகப் பயனும் இப்பாடல் மூலம் உணரலாம். பிரம்மபுரம் எனப்பெறும் சீகாழித் தலத்துடன் பிற தலங்கள் தொடர்புடையவைகளாக விளங்குவதையும் உணரலாம்.

சேக்கிழார் உணர்த்தும் செய்திகள்

திருஞானசம்பந்தர் தம் சமயத் தொண்டில் இணைந்து அவரது சமூகத்தொண்டு, பக்தி, இசை, நம்பிக்கை, புரட்சி ஆகியவைகள் விளக்க முறுவதைச் சேக்கிழார் சுவாமிகள் தம் பாடல்கள் மூலம் விளக்கிச் செல்கிறார்.

கவுணியர்கோன், வேதத்தின் விழுப்பொருளாம் சிவபெருமானை ''மடையில் வாளைபாய'' என்னும் வாக்கால் ஒத்தறுத்துப் பாடும்போது கையதனால் ஒத்தறுத்துப் பாடுதலுங் கண்டருளிச் செய்ய சடைவானவர் சிவபெருமான் 'அஞ்செழுத்தும் எழுதிய நற்செம்பொற்றாளம்'' சம்பந்தர் கைத்தலத்தில் வந்து நிற்க அருள் செய்தார்:

அதேபோன்று முத்துச் சிவிகை, குடை, சின்னம் போன்றவை களை ஞானசம்பந்தர் கைத்தலத்தில் வந்து நிற்க அருள் செய்தார்;

அதேபோன்று முத்துச் சிவிகை, குடை, சின்னம் போன்றவை களை ஞானசம்பந்தர் பெற்றதை விளக்க வந்த சேக்கிழார்,

''போத ஞானப் புகலிப் புனிதரைச்
சீத முத்தின் சிவிகைமேல் ஏற்றிடக்
காதல் செய்பவன் போல் கருங்கடல்
மீது தேரின்வந் தெய்தினன் வெய்யவன்''

என உவமை நயம் கூறி,

இறைவன் ஆணைப்படி அந்தணர்கள், சம்பந்தர் முன்பாகத் தோன்றியதை,

''ஆய போழ்தின் அரவெனும் ஆர்ப்புடன்
தூய முத்தின் சிவிகை சுடர்க்குடை
மேய சின்னங்கள் கொண்டுமெய் யன்பரோடு தோன்றினார்''

எனக் கூறுகிறார்.

''எந்தை ஈசன்'' என எடுத்துச் சிந்தை செய்யும் திருப்பதிகத்தினைப் புந்தியாரப் புகன்று சம்பந்தர் எதிர் போற்றுவார்.

''துணிவளர் திங்கள்'' என்னும் பதிகம் பாடி கொல்லி மழவன் என்னும் அரசனின் மகளுக்கு இருந்த முயலகன் என்னும் நோயைப் போக்கியதை; ''அவ்வினைக்கு இவ்வினை'' என்னும் திருநீலகண்டப் பதிகத்தை அருளித் தம்முடன் வந்த அடியவர்களுக்கு ஏற்பட்ட சுரத்தை அகற்றியதை முறையே,

''மணிவளர் கண்டரோ மங்கைவாட
மயல் செய்வதோ இவர் மாண்பு''

என்று பிணி தவிர்க்கும் பதிகத்தையும்,

''எவ்விடத்தும் அடியார் இடர்காப்பது கண்டம்''

என்றே

''செய்வினை தீண்டா திருநீல கண்டம்''

என்னும் பதிகத்தினையும், எடுத்துக்காட்டி,

தீய பனிப்பிணி அந்நாட்டடங்கவுந் தீர்ந்த தன்றே,

எனச் சேக்கிழார் தெளிவுறுத்துகிறார். மேலும் பாலை நிலத்தை நெய்தல் நிலமாக்கியதையும், ஆண்பனை மரத்தைப் பெண்பனை மரமாக்கியதையும் திருஞானசம்பந்தரின் புரட்சி செயலாகக் கொண்டு சிந்திக்கும்போது,

''நாரியோர் பாகர் வைகும் நனிபள்ளி உள்கு வார்தம்
பேரிடர் கெடுதற் காளை நமது''

விமலர் அருளாலே.

"குரும்பை ஆண்பனை ஈனும்" என்னும் வாய்மை குலவுதலால்
பனையெல்லாம் நிறைந்த குலைகளாய்க் குரும்பை அரும்பு
பெண்ணையாகிடக் கண்டோர் அதிசயித்தார்''.

என்பன போன்ற ஞானசம்பந்தர் செய்திகள்;

''காரைகள் கூகை முல்லை''

என்னும் திருநனிப்பள்ளிப் பதிகத்தையும்,

''பூத்தேர்ந் தாயன கொண்டு''

என்னும் திருவோத்தூர் பதிகத்தையும், நினைவுகொள்ள உதவுகின்றன.

அடியார்களுக்குக் கோள்கள் தீவினை செய்யாது என்னும் அசைக்க முடியாத நம்பிக்கையை,

''பரவுவது நம் பெருமான் கழல்கள் என்றால் பழுதணையாது''

எனப் பகர்ந்து பரமர் செய்யப்,

புகலி வேந்தர்
''வேயுறு தோளி'' யை எடுத்து விளம்பினாரே!

என்னும் சேக்கிழார் கூற்று ஏற்படுத்துகிறது.

சைவத்தின் வளர்ச்சியில் திருஞானசம்பந்தரின் பங்கினைச் சிந்திக்கும் போது, பாண்டிய மன்னனுக்கு வெப்பு நோயை உண்டாக்கிப் போக்கியது; சமணர்களை அனல் வாதம், புனல் வாதம் செய்து வெற்றி கொண்டது;

அதன் காரணமாகச் சமண மதத்தைச் சார்ந்திருந்த பாண்டியனைச் சைவ சமயத்தைச் சார்ந்தவனாக்கியது; போன்றவைகள் சேக்கிழாரால் குறிப்பிட்டுக் காட்டப் பெறுகின்றன.

''சைவர் வாழ்மடத் தமணர்கள் இட்ட தீத்தழல்போய்ப்
பையவே சென்று பாண்டியற்காக''.
(வெப்பு நோய் உண்டாக்கல்)

''அண்ணவன் வலப்பால் வெப்பை ஆலவாய் அண்ணல் நீறே
மன்னுமந் திரமுமாகி மருந்துமாய்த் தீர்ப்ப'' தென்று
திருப்பதிகம் பாடித் (''மந்திரமாவது நீறு'')
தென்னவன் வெப்பு நீங்கிக் குளிர்ந்தான் (வெப்பு நோய் நீங்கல்)

என்பன சான்றாகும்.

இவ்வாறாகச் சம்பந்தரின் பெருமையை விளக்கி வந்த தெய்வச் சேக்கிழார்,

''காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி''

என்னும் நமச்சிவாயப் பதிகம் ஓதித் தம்முடன் வந்தோரையெல்லாம் சோதியில் புகுமாறு அருளிப் பின்பு தாமும் தம் மனைவியுடன் சோதியில் புகுந்து இறைவன் திருவடியுள் ஒருமை பெற்றதை,

திருநல்லூர்ப் பெருமணம், (ஆச்சாள்புரம்)

''கோயிலும் படமேல் ஓங்குங் கொள்கையாற் பெருகுஞ்சோதி
வாயிலை வகுத்துக் காட்டப் புகலி மன்னர்,

''ஞானமெய்ந் நெறிதான் யார்க்கு நமச்சிவாயச் சொலாம்''
என்றான சீர் நமச்சிவாயப் பதிகத்தை,
வானமும் நிலனும் கேட்க அருள் செய்து''

''இம்மணத்தில் வந்தோர் ஈனமானம் பிறவிதீர
யாவரும் புகுக'' என்றார்.

''ஈறில் பெருஞ் சோதியினுள் எல்லாரும் புக்கதற்பின்''
''காதலியைக் கைப்பற்றித்,
தீதகற்ற வந்தருளுந் திருஞான சம்பந்தர்
நாத னெழில் வளர்சோதி நண்ணியதன் உட்புகுவார்
போதி நிலை முடிந்தவழிப் புக்கொன்றி உடனானார்.

எனச் சிறப்பிக்கின்றார்.

ஆளுடைப் பிள்ளையார், காழிவேந்தர், கவுணியர்கோன், பாலறாவாயர் எனப் பல திருப்பெயர்கள் கொண்ட திருஞானசம்பந்தப் பெருமான் இறையருளால் பதிகங்கள் பல வழங்கி 'படிக்காசு பெற்றுப் பஞ்சம் போக்கியும், திருமயிலையில் எலும்பாகச் சேமிக்கப்பட்டிருந்த பூம்பாவையைப் பெண்ணாக எழுப்பியும்' அற்புதங்கள் நிகழ்த்தியுள்ளார்.

திருஞானசம்பந்தர் புராணம்,

"கண்ணுதலான் திருநீற்றுச் சார்வினோர்க்குங் கவலை வருமோ?"

என்றெல்லாம் விளக்கி நிற்பது இம்மாநிலம் பயனுற அன்றே!

84. சம்பந்தர் தேவாரத்தில் இயற்கை

ந. லட்சுமி, புதுவை.

இயற்கையைக் கண்டு மனம் மகிழாதார் யாரும் இல்லை. கவிஞன் நெஞ்சம் அழகை ரசிக்காமல் இருக்குமா. இயற்கையின் அழகைப் படைத்தவன் இறைவன். சங்ககால மக்கள் இயற்கையைத் தெய்வமாக வணங்கினர் என்பது உண்மை. பிற்காலத்தில் உருவ வழிபாட்டை மேற்கொண்டனர். இருப்பினும் இயற்கையைவிடுத்து இறைவனை வழிபட வில்லை. இயற்கைக் காட்சிகளை உவமைகளாகக் காட்டியபின், இறைவனின் அருள், அன்பு, செயல் போன்றவைகளை விளக்குகின்றனர். கவிஞர்கள் இயற்கை அழகு, இறைவனின் அழகு, இயற்கையிடத்து இதயத்தைச் செலுத்துவோன், இறைவனிடத்து நெஞ்சத்தைக் கொடுப்பவனாவான். இதற்கு ஞானசம்பந்தர் விதிவிலக்கல்லர். திருமுறை ஆசிரியர்களுள் முதல்வராகத் திகழ்பவர் திருஞானசம்பந்தர். இவருடைய மூன்று திருமுறைகளில் காணப் படும் இயற்கைக் காட்சிகளை எடுத்துக்காட்ட முயல்கின்றது இக்கட்டுரை.

சங்க காலம் காட்டும் இயற்கை

சங்ககாலத்தை இயற்கையின் சூழலைக் கொண்டு நானிலமாகப் பிரித்துள்ளனர். இயற்கையின் சீற்றத்தை எண்ணி எதிர்க்க, முடியா நிலையில் பயந்தும், இயற்கையால் நன்மைகள் பல பெறுவதால் நன்றி சொல்லும் முகமாகவும் இயற்கையை வணங்கினார்.

இயற்கையையே இறைவனாக எண்ணினர் என்பதற்குப் பல சான்றுகள் உள்ளன. உதாரணமாக நெய்தல் நில மக்கள், தங்களை வாழவைக்கும் கடல் அன்னையை வணங்காமல் தொழிலுக்குப் போக மாட்டார்கள். இதை இன்றும் நம் நடைமுறை வாழ்க்கையில் காணலாம். இயற்கையான நிலத்தை முன்னொட்டாகக் கொண்டு சிலர் சிறப்பு பெயர் பெற்று விளங்குகின்றனர். உதாரணமாக, குறிஞ்சிக்குக் கபிலர், பாலை பாடிய பெருங்கடுங்கோ, மருத நில நாகனார் போன்றோரைக் குறிப்பிடலாம். சங்கப் புலவர்களைத் தொடர்ந்து திருமுறை பாடியவர் களும் இயற்கையின் நிகழ்ச்சிகளை இறைவனின் செயல், அன்பு, அருள், அழகு போன்றவற்றுடன் தொடர்புப்படுத்திப் பாடியுள்ளார். திருமுறைகளில் முதலாவதான திருஞானசம்பந்தரின் திருமுறையில் இயற்கையின் சூழலை, இறைவனுக்கு ஏற்ப அவர் எவ்வாறு பாடியுள்ளார் என்பதைக் காண்போம்.

தேவாரத்தில் இயற்கை

நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பும் ஞானசம்பந்தர் என்பர் இன்னிசையோடு இயற்கையுடன் தமிழ் பரப்புபவர் அவர் எனலாம். திருநெறிய தமிழைப் போற்றவந்த இளந்தென்றல் ஞானசம்பந்தர் இவர் இயற்கைக் காட்சிகளை வருணிப்பதில் சிறப்பிடம் பெறுகின்றார். தேவாரத்தில் குறிஞ்சி, மருதம், முல்லை, நெய்தல் என்ற திணை வரிசையில் இயற்கையுடன் அமைந்தப் பாடல்களைக் காணலாம்.

குறிஞ்சி

கருணை

குறிஞ்சி நிலத்தமைந்த தலங்களைச் சம்பந்தர் வருணிக்கும்போது குறிஞ்சி நிலத்தையே நாம் கண்முன் காண்பது போல் இருக்கின்றது. திருமுதுகுன்றத்துறை பெருமானின் கருணையை இவ்வாறு கூறுகின்றார்.

''காரினா ரமர்தருங் கயிலைநன் மலையினை
ஏரினார் முடியிரா வணனெடுத் தானிற
வாரினார் முலையொடும் மன்னினார் மருவிடம்
சீரினார் திகழ்தருந் திருமுது குன்றமே'' (3:34:8)

கார்மேகமானது பருவம் கண்டு மழை தந்து பயனளிப்பது போல, பக்குவம் நோக்கி ஆன்மாக்களுக்கு அருள் செய்யும் கருணையுள்ளம் கொண்டவர் திருமுதுகுன்றக் கடவுள் என்பது இவ்வரிகளில் புலப்படுகிறது.

ஆயர்களின் நம்பிக்கை

திருவண்ணாமலையில் ஆயன் ஒருவன் எருமைகளை மேய்க் கின்றான். மாலை வந்ததும் எருமைகள் திசைக்கு ஒன்றாய்ச் சென்று விட்டன. ஆயன் தான் வைத்திருந்த வேய்குழலை எடுத்து ஊதுகிறான். குழலோசை கேட்டு எருமைகள் வந்து சேர்கின்றன. ஆயன் மகிழ்ச்சி யுடன் வீடு திரும்புகின்றான். இதனை,

''கனைத்தமேதி காணாதாயன் கைம்மேற் குழல்ஊத
அனைத்தும் சென்று திரளும் சாரல்'' (1:69:6)

எனும் அடிகள் உணர்த்துகின்றன.

களிற்றின் காதல்

எல்லா உயிரினங்களிலும் அன்பு உண்டு என்பதை ஞானசம்பந்தர், பெண்யானையின் பசியை அறிந்து அதனுடைய களிறு தன் துதிக்கையால் மூங்கில் முளைகளை வாரிப் பெண் யானைக்கு ஊட்டுவதை,

''மருங்களியார் பிடிவாயில் வாழ்வெதிர் இன்முளைவாரிக்
கருங்களி யானை கொடுக்கும் கற்குடி மாமலையாரே''
(1:43:4)

என்ற பாடலின் மூலம் கூறுகின்றார்.

மருதம்

சிவந்த வண்டு

வயலும் வயல் சார்ந்த இடமும் மருதம் எனப்படும். அங்கே செம்மையான நீர்ப்பூக்கள் மலர்ந்திருக்கும். அதனில் கருவண்டுகள் தேனை உண்ணும்போது சிவந்த நிறமாக மாறுகின்றன. அவை செவ்வழிப் பண்ணைச் சிறந்த முறையில் பாடுவதை,

"சேறோடு செங்கழுநீர்த்
தாதாடி மதுவுண்டு சிவந்த வண்டு
வேறாய உருவாகிர்
செவ்வழிகள் பண்பாடும் மிழலை யாமே" (1,132)

என்று எடுத்துரைக்கக் காணலாம்.

கையேந்தும் காந்தள்

திருவீழிமிழலையில் நடந்த நிகழ்ச்சியில் முகில்களின் இடி முழக்கமே முழவு. இதனால் மயில்கள் ஆடுகின்றன. வண்டுகள் பாடு கின்றன. பொன்னிறமாகப் பூக்கும் கொன்றை மலர்கள் உதிர, காந்தள் மலர் கையேந்தி வாங்குவதாகச் சொல்லியிருக்கும் இயற்கைக் காட்சியைக் கீழ்வரும் பாடலடிகள் படம்பிடித்துக் காட்டும்.

"வரைசேரும் முகில் முழவம்
மயில்கள் பல நடமாட வண்டுபாட
விரைசேர் பொன்னிதழிதர
மென்காந்தள் கையேற்கும் மிழலை யாமே"

திருநெல்வேலி வளம் திகழ்ந்து விளங்கும் தளம். திருநெல்வேலியின் வளத்தினை ஞானசம்பந்தர்,

"புக்கதோர் புரிவினர் வரிதரு
வண்டுபன் முரலுஞ் சோலைத்
திக்கெலாம் புகழுறுந் திருநெல்வேலி
யுறை செல்வர் தாமே" (3:350:1)

என்கிறார். இத்தகைய சிறப்புடைய எழிலைப் பல பாடல்கள் சுட்டும். இங்கே வண்டுகள் எல்லாத் திசைகளிலும், நெல்லையின் சிறப்பை எடுத்து ஓதுகின்றதாம்.

நாற்றுகள் பொருந்திய வயல்களில் கமழும் வாசனை குறிக்கத் தக்கது. சோலைகளில் பெருக்கெடுக்கும் தேன் நிறைந்த வயல்கள் பல, கரையோரம் உள்ள தாமரை முதலிய மலர்களாலும் தேன் பெருக்கெடுக் கின்றது. ஊரின் பெருமையை அறியாத கொலைத்தொ[illegible]லில் அனுபவ முடைய வேடர்களால் அழகு அழிவுறுகின்றது. அவர்[illegible]ளைத் திருத்தும் உள்ளம் கொண்டவனே என்று இறையை வேண்டி அ[illegible]த வேடர்களைத் திருத்தச் சொல்கிறார்.

"நாறு சேர்வாயன் நண்டலை மிண்டிய
தேற லார்திரு வாலவா யாய் செப்பாய்
வீறி வாத்தவ மோட்டமண் வேடரைச்
சீறி பொது செய்த்திரு உள்ளமே" (3:47:6)

முல்லை

பக்தி

காடும் காடு சார்ந்த இடமும் முல்லை. திருக்காணப்பேர்க் காடுகளில் ஆண் யானைகளும் பெண் யானைகளும் விடியற்காலமே எழுந்து விடுகின்றன பொய்கையில் மூழ்கி வழிபாடு செய்ய முந்துகின்றன. இவையாவுமே விதியால் நடப்பன.

"பிடியெலாம் பின்செலப் பெருங்கை மாமலர் தழீஇ
விடியலே தடமூழ்கி விதியினால் வழிபடும்"

என்று விலங்குகளிடமும் பக்தியை ஞானசம்பந்தர் காட்டியிருப்பது சிறப்புக்குரியது.

ஆண், பெண் இறைநிலை

இலம்பையங்கோட்டூர் இயற்கை மிகுந்து காணப்படும் இடமாகும். அங்கு அனைத்துயிர்களும் அன்புகொண்டு வாழும் வாழ்க்கையை மேற்கொண்டுள்ளன. ஆண் மான், பெண் மானுடன் பிணைந்து இன்பம் துய்ப்பதையும், ஆண் மயில், பெடையுடன் மாண்புறுவதையும் அவர் அழகாகக் காட்டுகின்றார்.

"கலையினார் மடப்பிணை துணையோடு துயிலக்
காணலாம் பெடைபுல்கிக் கணமயிலாலும்
இலையினார் மைப்பொழில் இலம்பையார் கோட்டூர்" (1:76:1)

இங்கு ஆண், பெண் இருபாலரும் இன்புற்றிருந்தாலும் எப்பொழுதும் இறைவனைத் துதித்திருப்பர் என்பது பொருள்.

நெய்தல்

கடலின் சிறப்புகள்

கருங்கடலில் நீர் வெள்ளம்போல் பெருக்கெடுத்துள்ளது. அந்தக் கடற்கரையில் பரதவர்களின் இல்லங்கள் வரிசையாக இருக்கின்றன. கடல்நீர் வெள்ளத்தில் மிதக்கும் சங்குகள் பரதவர் வீட்டு வாசலில் முத்துக்களை ஈனுகின்றன என்ற இயற்கைக் காட்சியைக் கருப்பொருளைக் கொண்டு விளக்கியிருப்பது சிறப்புக்குரியதாகும்.

"வங்கமேவு கடல்வாழ் பரதர் மனைக்கே துனை மூக்கின்
சங்கம் ஏறி முத்தம் ஈனும் சண்பை நகராரே" (1:66:1)

என்ற பாடலடிகளில் மேற்செய்தியை உணரவியலும்.

காதல் மயக்கம்

"ஏழை வெண்குருகயலே இளம்பெடை தனதெனக் கருதித்
தாழை வெண்மடற் புல்கும் தண்மறைக் காட பார்தார்தாம்"
(2:227)

என்ற வரிகளில் இயற்கை புனையப்பட்டிருக்கக் காணலாம்.

கடற்கரையில் தாழைகள் நிறைந்திருக்கும் அங்கு நாரைகள் மீனுக்காகக் காத்திருக்கும், பெடை நாரையைக் காணாத ஆண் நாரை, காதல் மயக்கத்தில் தாழை மடல்களை அணைக்கின்றன. கற்பனை கலந்த இயற்கை எழில் இப்பாடலில் இடம் பெறுகின்றது.

இராமேச்சுரத்தில் தாழைகள்

தென்தமிழ்நாட்டின் சிறப்புமிக்க தலமாகக் கருதப்படுவது இராமேச்சுரமாகும். இங்கு எங்கே பார்த்தாலும் தாழைகளாகக் காணப் படுகின்றன. இதனை,

"இலைவளர் தாழைகள் விம்முகானல் இராமேச்சுரம்
தலைவளர் கோலநன் மாலையன் தாளிருள் தாட்சியே" (3:10:1)

திருமுல்லைவாயில்

"மானேறு கொல்லை மயிலேறி வந்து
குயிலேறு சோலை மருவித்
தேனேறு மாவின் வளமேறியாடு
திருமுல்லை வாயில் இதுவே" (2:24:6)

என்ற பாடலில், மான்கள் பாய்கின்ற சோலை சுட்டப்படுகிறது. அங்கே மயில்கள் ஆடுகின்றன. குயில்கள் கூவுகின்றன. தேன் பொங்கி வழியும். மாமரத்தின் மீதேறி அம்மயில்கள் ஆடுகின்றன என்பதை அழகுற விளக்குகின்றார்.

சங்ககாலம் தொட்டு இக்காலம் வரையில் இயற்கையை இரசிக்காத வர்கள் யாரும் இல்லை எனலாம். இயற்கையை இரசிப்பது மட்டு மில்லாமல், பாடியும் சென்றவர்கள் கவிஞர்கள். அந்த வழியில் திருமுறையில் முதல்வராகத் திகழும் ஞானசம்பந்தர் இயற்கையை அழகுறச் சொல்லி யிருப்பது படித்து மகிழத்தக்கதாக அமைந்துள்ளது. மலை, கடல், வயல், காடு போன்றவற்றின் இயற்கையை இவர் பல பாடல்களில் குறிக்கின்றார். குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் எனத் திணை வரிசை முறையில் செய்திகளை அடுக்கிப் பார்க்க வாய்ப்பாக ஞானசம்பந்தரின் இயற்கைப் புனைவு காரணமாக அமைந்துள்ளது. இயற்கையுடன் ஒன்றி இறைவனுடன் ஒன்றி நிற்க வேண்டும் எனும் கருத்தமைந்த ஞானசம்பந்தரின் பாடல்கள் படித்து உவகைகொள்ளத் தக்கன.

85. சம்பந்தர் தேவாரத்தில் - யாப்பியல்

நா. லோகநாதன், புதுவை.

திருஞானசம்பந்தர் அருளிய பாடல்களைத் தேவாரப் பாடல்களென்றும் திருப்பாடல்களென்றும் ஆன்றோர் இயம்புவர். அவர் பாடல்கள் முதல், இரண்டு, மூன்று திருமுறைகளாகத் திகழ்கின்றன. அத்திருமுறைகளின் யாப்பியல் நிலையை ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

சங்க காலத்தில் வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா, பரிபாடல், மருட்பா ஆகிய பாக்கள் வழக்கத்திலிருந்தன. இப்பாக்கள் மூலம், அறம், பொருள், இன்பம் ஆகியவற்றைப் பாடினர். வீடு பேற்றினைத் தனித்த நிலையில் பாடவில்லை.

தமிழர்களின் ஆட்சி வீழ்ச்சியுற்றபோது களப்பிரர்கள், பல்லவர்கள், தமிழகத்தை ஆண்டனர். சைவமும் வைணவமும் வீழ்ச்சியுற்றுப் புத்த மதமும் சமண மதமும் தமிழகத்தே வளரலாயின. அச்சூழலில் திருஞான சம்பந்தர் தோன்றினார். இவர் தமிழகத்தில் பிற மதங்கள் வளர்ந்த நிலையையும் சைவ வைணவ மதங்கள் வீழ்ந்த நிலையையும் உணர்ந்து மீண்டும் அவற்றைப் பண்டை நிலைக்குக் கொணர இறையாண்மையையும் வீடுபேற்றினையும் பாடுபொருளாகக் கொண்டு இயலிசைப் பாடல்களைப் பாடினார்.

தொல்காப்பியம் வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா, பரிபாடல், மருட்பா ஆகிய பாக்களுக்கு இலக்கணம் இயம்புகின்றதே தவிரத் தாழிசை, துறை, விருத்தம் என்னும் பாவினங்களுக்கு யாண்டும் இலக்கணம் இயம்பவில்லை. இப்பாவினங்களின் இலக்கணத்தைப் பற்றி இயம்பியவர்கள் காக்கைப் பாடினியார், சிறுகாக்கைப் பாடினியார், அவிநயனார், மயேச்சுரர், புத்தமித்திரர் ஆகியோராவர்.

சிலப்பதிகாரத்தில் அமைந்த கானல்வரி, வேட்டுவவரி, குன்றக்குரவை, ஆய்ச்சியர் குரவை முதலியவற்றில் காணப்படும் இசைப்பாடல்களே பாவினங்களுக்கு வித்தாக அமைவன. இப்பாடல்களையெல்லாம் கொச்சக ஒருபோகு என்ற நிலையில் பேராசிரியரும் நச்சினார்க்கினியரும் அமைத்துக் கொண்டனர்.

தரவு இன்றாகித் தாழிசை பெற்றும்
தாழிசை இன்றித் தரவுடைத் தாகிலும்
எண்ணிடை இட்டுச் சின்னங் குன்றியும்
அடக்கியல் இன்றி அடிநிமிர்ந்து ஒழுகியும்
யாப்பினும் பொருளினும் வேற்றுமை யுடையது
கொச்சக ஒருபோகு ஆகும் என்ப. (தொ.செ.149)

நச்சினார்க்கினியர், இப்பா இனங்களைக் கொச்சக ஒருபோகு என்ற பிரிவில் அடக்குகின்றார்.

அந்தண் பூங்கச்சி ஏகம்பனை அம்மானை
கந்தண் பூங்காழி யூரன் கலிக்கோவையால்
சந்தமே பாடவல்ல தமிழ் ஞானசம்
பந்தன் சொல்பாடி ஆடக்கெடும் பாவமே. (149.11)

என்ற பாடல் மூலம் திருஞானசம்பந்தர், தாம் பாடிய பாடல்களைக் கலிக்கோவை என்ற அமைப்பில் உள்ளதாக இயம்புகிறார்.

இக்கால யாப்பறிஞர் யாப்பருங்கலம் யாப்பருங்கலக்காரிகை ஆகிய நூல்களையே மிகுந்த அளவில் பயன்படுத்துகின்றனர்.

திருஞானசம்பந்தர் பதிகங்கள்

திருஞானசம்பந்தரின் இயலிசைப் பாடல்களை இக்கால யாப்பறி புலவர்கள் பல பாவியல் பதிகங்களாக வகுத்தமைத்துள்ளனர். அந்நிலையில் கலிவிருத்தம் 106 பதிகங்கள், ஆசிரிய விருத்தம் 88 பதிகங்கள், கலித்துறை 79 பதிகங்கள், கொச்சகங்கள் 54 பதிகங்கள், ஆசிரியத்துறை 27 பதிகங்கள், வஞ்சி விருத்தம் 13 பதிகங்கள், வஞ்சித்துறை 9 பதிகங்கள், குறட்டாழிசை 3 பதிகங்கள், நாலடிமேல் வைப்பு 3 பதிகங்கள், ஈரடிமேல் வைப்பு 2 பதிகங்கள், இணைக்குறள் ஆசிரியம் ஒரு பதிகம் ஆக 385 பதிகங்களாகப் பகுத்துள்ளனர். மேலும் சொல்லணி அமைப்பில் திருவியமகம் 4 பதிகங்கள், திருச்சக்கரமாற்று 2 பதிகங்கள், ஏகபாதம் ஒரு பதிகம், கோமுத்திரை ஒரு பதிகம், மாலைமாற்று ஒரு பதிகம், எழுகூற்றிருக்கை ஒரு பதிகம். ஆகப் பத்தும் பதிகங்களாக வகுத்தமைத்துள்ளனர்.

புதுமை யாப்பியல்

சேக்கிழார் பெருமான், திருஞானசம்பந்தரின் பாடல்களை நன்கு கற்றுணர்ந்தவர். அவர், தமிழ்மொழிக்குத் திருஞானசம்பந்தர் யாப்பியல் வரவுகளைப் பற்றித் தம் நூலில் செம்மையோடு செப்புகின்றார்.

செந்தமிழ்மா லைவிகற்பச் செய்யுட்களான் மொழிமாற்று
வந்தசொற்சீர் மாலைமாற்று வழிமொழியெல் லாமடக்குச்
சந்தவியமக மேகபாதந் தமிழருக்குக் குறள்சாத்தி
யெந்தைக்கெழு கூற்றிருக்கை யீரடியீ ரடிவைப்பு. (தி.ஞா.பு.276)

நாலடிமேல் வைப்புமேன்மை நடையின்முடு குமிராகஞ்
சால்பினிற்சக் கரமாதி விகற்பங்கள்சாற் றும்பதிக
மூலவிலக் கியமாக வெல்லாப்பொருள் களுமுற்ற
ஞாலத்துயர் காழியாரைப் பாடினார்ஞான சம்பந்தர் (தி.ஞா.பு. 277)

என்ற இரண்டு திருப்பாடல்களைக் கூர்ந்து நோக்கினால் திருஞானசம்பந்தர் புதிய நோக்கில் பல பாடல்களைத் தோற்றுவித்தார் என்பதை நன்குணரலாம். பிற்காலத்தே இவர் தம் யாப்பினைப் புலவர்கள் பின்பற்றிப் பாட முற்பட்டனர்.

பாக்களின் அமைப்பு

இவர் தம் இயலிசைப் பாக்கள் இனிய ஓசையைக் கொண்டு இலங்கு கின்றன. இவர் பாடல்களை நான்கு வகையாக வகுக்கலாம். அவை ஈரடிப் பாடல்கள், நான்கடிப் பாடல்கள், ஆறடிப் பாடல்கள், இணைக்குறளாசிரியப்பா என்ற நிலையில் அமைகின்றன.

விருத்தம்

திருஞானசம்பந்தர் ஆசிரியர் விருத்தம், கலிவிருத்தம் ஆகிய இவ்விரு விருத்தங்களில் 194 (106 88) விருத்தங்கள் பாடியுள்ளார். இவர் பாடல்கள் 50.30% விழுக்காட்டிற்குட்பட்டதாகும். இதற்குரிய காரணம் யாதெனின் விருத்தத்தின் நெகிழ்வும் ஒலிநயமும் பல்வகை மாற்றங்களை உருவாக்குவதோடு பாடுவோர் தம் எண்ணத்திற்கேற்ப நெகிழ்ந்து கொடுக்கும் இயல்பினை விருத்தம் பெற்று இலங்குகிறது. யாப்பு வகைகளிலே எண்மையாயும் எண்ணிய வண்ணம் இயங்கும் வண்ணமுடையதாயும் கற்போருக்கு நனிமிகு இன்பத்தை நல்குவதாயும் அமைந்துள்ளன. பாடுவோரின் உள்ளங்களில் புத்தம் புதிய விருத்த வடிவத்தை உருவாக்கும் தன்மையுடையன விருத்தப் பாக்கள்.

விருத்தத்தில் தளை தட்டுப்பாடில்லை. நான்கடிகளில் முதலடியில் பெற்ற ஓசையமைப்பிற்கேற்ப மற்ற அடிகளில் அவற்றின் ஓசை நயமும் ஒரே அளவினதாயிருத்தல் வேண்டும். முதலடியில் எந்தச்சீர் எந்த இடத்தில் எந்த வாய்பாட்டுச் சீராக அமைகின்றதோ அதையொட்டியே மற்றைய அடிகளிலும் அச்சீர்கள் அமைதலே விருத்தத்தின் சிறப்பாகும்.

திருஞானசம்பந்தர் தம் எண்ணத்திற்கேற்ற நிலையில் வடிவு கொடுப்பது விருத்தமே என்றுணர்ந்து அவ்வமைப்பில் 2134 பாடல்களைப் பாடி மகிழ்ந்துள்ளார்.

பதிக அமைப்பு

முதல் ஏழு பாடல்கள் பொது நிலையிலும் எட்டாம் பாடல் இலங்கையர் கோனைப் பற்றியும் ஒன்பதாவது பாடல் அரிஅயன் அடி முடி தேடிய வரலாற்றையும் பத்தாவது பாடல் பிற சமயங்களைப்

பற்றியும் பதினோராவது பாடல் படிப்போர் பயன் பெறுதலைப் பற்றியும் பாடியுள்ளார். எல்லாப் பதிகங்களும் இந்நிலையையே ஒத்துள்ளன. இஃது இவர் நடையியலாகும். இந்நிலை அவரிடம் கொள்கையாகவே தோன்றியது போலும். புறவடிவை மட்டுமன்றி அகநிலை யாப்பையும் கருதுகையில் இஃதோர் புதுமை.

ஆசிரிய விருத்தம்

அடிதோறும் அறுசீர், எழுசீர், எண்சீர், பதின்சீர், பன்னிரண்டு சீர்களைப் பெற்று நான்கடிகளைப் கொண்டமைவது ஆசிரிய விருத்தமாகும். ஆசிரிய விருத்தங்களுள் அறுசீர் விருத்தமே மிக்க அளவிலுள்ளன.

அறுசீர் முதலா நெடியவை எல்லாம்
நெறிவயின் திரியா நிலைத்தது அவைநான்காய்
விளைகுவ தப்பா இனத்துள் விருத்தம் (கா.பா.64)

கழிநெடில் அடிநான் கொத்திறின் விருத்தமஃது
அழியா மரபின தகவல் ஆகும் (யா.க.77)

சான்று

"பங்கமேறு மதிசேர் சடையார் விசையார் பலவேதம்" (66.1.1)

என்ற பாடலில் முதல் ஐஞ்சீரும் மாச்சீர்பெற்று ஆறாம்சீர், காய்ச்சீர் பெற்று வருகிறது. அருகிய நிலையில் தண்பூச்சீர் பெறுகிறது. இதுபோன்றே பல்வகை நிலையில் அறுசீர் விருத்தம் அமைந்துள்ளது.

எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

சான்று

"மின்னிய வரவும் வெறிமலர் பலவும் விரும்பிய திங்களுந் தங்கு"
(376.2.)

இதன்கண் விளச்சீர், மாச்சீர் விளச்சீர் மாச்சீர், விளச்சீர் விளச்சீர் மாச்சீர் என்ற அமைப்பில் இப்பாடலமைந்துள்ளது. பல்வகை சீர்மாறுபாடு களொடு பல பாடல்கள் திகழ்கின்றன.

எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்

சான்று

"மாதர் மடப்பிடியும் மடஅன்னமும் அன்னதோர்
நடையுடை மலைமகள் துணையென மகிழ்வர்" (136.1)

மாச்சீர் காய்ச்சீர், கனிச்சீர், விளச்சீர், விளச்சீர் விளச்சீர், விளச்சீர், மாச்சீர் என்ற நிலையில் இப்பா அமைகிறது.

கலிவிருத்தம்

நாற்சீர் நாலடி வருவது ஆயின்
ஒலியின் இயைந்த கலிவிருத் தம்மே. (அ.வி.99)

சான்று

"தேமாங்கனி கடுவன்கொள விடுகொம்பொடு தீண்டித்" (10.2)

இதில் மூன்று மாங்கனிச் சீரும் ஒரு மாச்சீரும் பெற்றிலங்கிய பாடல் இஃது பதிகம் முழுவதும் இவ்வாறே அமைந்து இனிய ஓசையை நல்குகிறது. இக்கலிவிருத்தத்தைப் பல நிலையில் பாடியுள்ளார். இவர் இயற்றிய பாடல்கள் 1166 ஆகும்.

கலித்துறை

ஐஞ்சீர் அடியின் அடித்தொகை நான்மையோடு
எஞ்சாது இயன்றன எல்லாம் கலித்துறை (கா.பா.80)

சான்று

"தோடுடைய செவியன் விடையேறியோர் தூவெண் மதிசூடி"
(1.1.1)

திருஞானசம்பந்தர் முதன்முதலாகப் பாடிய பாடல் கலித்துறைப்பாவில் முதலில் பாடிப் பின்னர் பல்வகை யாப்பில் இறைவனைப் பாடி மகிழ்ந் துள்ளார். இப்பாடலமைப்பு இரண்டாம் சீரும் நான்காம் சீரும் ஈரசைச் சீர்கள் மற்றைய மூன்றும் காய்ச்சீர்களாகும். நேரசையில் தொடங்கிப் பத்தொன்பதெழுத்தும் பெற்றிலங்கும் இக்கலித்துறைப்பாவைப் பல்நோக்கில் பாடியுள்ளார். இஃதோர் கட்டளை யாப்பு.

கொச்சகங்கள்

தரவு இன்றாகித் தாழிசை பெற்றும்
. . . .
கொச்சக ஒருபோகு ஆகும் என்ப (தொ.செ.149)

தரவு கொச்சகம் திருமுறைகளிலும் திவ்விய பிரபந்தத்திலும் மிகுதியாக உள. சில நிலைகளில் இவற்றை ஒரு பொருள் மேல் பத்தடுக்கி வந்த தாழிசைக் கொச்சகம் என்று கூறினும் பொருந்தும் என்பார் (சோ.ந.க.)

சான்று

நாளாய போகாமே நஞ்சணியும் கண்டனுக்கே
ஆளாய அன்பு செய்வோம் மடன்நெஞ்சே அரன்நாமம்
கேளாய்நம் கிளைகிளைக்கும் கேடுபடாத் திறமருளிக்
கேளாய் நீக்குமவன் கோளிலிஎம் பெருமானே. (1.62.1)

இப்பாடலில் வெண்டளையும் கலித்தளையும் கலந்துறவாடுகின்றன. இத்தரவுக் கொச்சகங்கள் பல உள்ளன. இயற்சீர் வெண்டளையும் வெண்சீர் வெண்டளையும் கலந்த பாடல்கள் பல உள.

ஆசிரியத் துறை

கடையதன் அயலடி கடைதபு நடையவும்
நடுவடி மடக்காய் நான்கடி யாகி
இடையிடை குறைநவும் அகவற் றுறையே (யா.க.76)

ஈரடி குறைந்து வருவன ஆசிரிய இணைக்குறட்டுறையாகும்.

சான்று

நாடெ லாமொளி யெய்த நல்லவர் நன்று மேத்தி
வணங்குவார்பொழிற்
காடெ லாமலர் தேன்று ளிக்கும் கடற்காழித்
தோடு லாவிய காது ளார்சுரி சங்க வெண்குழை
யானென்றென்றுண்ணும்
வேடங் கொண்ட வர்கள் வினைநீங்க அற்றாரே (185 - 3)

இச்செய்யுளின்கண் முதலடியும் மூன்றாமடியும் எண்சீர்கள் இரண்டாமடியும் நான்காமடியும் ஐஞ்சீர்கள் உள்ளன. இவ்வமைப்பில் வருவன ஆசிரியத் துறையாகும்.

வஞ்சி விருத்தம்

சிந்தடி நான்காய் வருவது வஞ்சிய
தெஞ்சா விருத்தம் என்மனார் புலவர் (யா.க.92)

மூன்றடிகள் நான்காய் வருவன வஞ்சி விருத்தம்.

சான்று

திருவார் சிலையால் எயிலெய்து
உருவார் உமையோடு உடனானாள்
கருவார் பொழில்சூழ் தருகாழி
மருவா தவர்வான் மருவாரே (34.7)

இப்பாடல் புளிமா புளிமா புளிமாங்காய் என வந்த கட்டளை யாப்பு ஆகும்.

வஞ்சித் தாழிசை

குறளடி நான்மையிற் கோவை மூன்றாய்
வருவன வஞ்சித் தாழிசை (யா.க.91)

இங்கு 90-ஆவது பதிகப் பாடல்கள் ஒருபொருள்மேல் பதினொன்றடுக்கி வந்த நிலையில் அப்பாடலிலுள்ள குறளடிகள் முதற்சீர் மாச்சீர் மற்றவை பெரும்பான்மையும் விளச்சீர்கள், காய்ச்சீர்களாகும்.

குறட்டாழிசை

அந்தடி குறைநவும் செந்துறைச் சிதைவும்
சந்தழி குறளும் தாழிசைக் குறளே (யா.க.94)

சான்று

"சேணு லாமதில் வேறு மண்ணுளோர் காண மன்றலர் வேறு நற்புரத்
தாணு வின்கழல் பேணுகின்றவ ராணியொத் தவரே'' (367.2)

முதலடி எண்சீர் மற்றையடி அறுசீர் ஆக இலங்குகிறது.

நாலடிமேல் வைப்பு

கலிவிருத்தம் போன்று ஆனால் ஈற்றடி ஒருசீர் குன்றிவரும் நான்கு அடிகளைத் தொடர்ந்து சிறிது ஓசை வேறுபட்டுக் கொச்சகம் போல வரும் இரண்டடிகள் பாடல்தோறும் பதிகம் முழுதும் வரப் பாடப்பட்ட பாடல்கள் 'நாலடிமேல் வைப்பு' எனப்பட்டன. இப்பதிகமும் நாலடிமேல் வைப்புப் பதிகம் எனப்பட்டது.

நிலையுறும் இடர்நிலை யாத வண்ணம்
இலையுறு மலர்கள் கொண் டேத்தும் யாம்
மலையினில் அரிவையை வெருவ வன்தோல்
அலைவரு மதகரி உரித்தவனே.
இமையோர்கள் நின்தாள்தொழ எழில்திகழ், பொழில்புகலி
உமையாளொடு மன்னினை உயர்திரு வடிஇணையே (261.2)

ஈரடிமேல் வைப்பு

கலிவிருத்தம் போன்று நாற்சீருடையவாய் முதலிலமைந்த ஈரடிகளைத் தொடர்ந்து கொச்சகம் போன்று சிறிது ஓசை வேறுபட்டு வரும் இரண்டடிகள் பாடல்தோறும் பதிகம் முழுவதும் வரப் பாடும் பாடல்கள் ஈரடிமேல் வைப்பாம். அக்கொச்சகம் போன்ற பகுதி பாடல்தோறும் வேறுபடுதலும் பதிகம் முழுவதும் ஒன்றாகவே இருத்தலும் என்ற இருவகையில் காணப்படுகின்றன. (தி.வே.கோ)

கீர்த்தனையில் மீண்டும் பாடப்படும் பல்லவி இங்குதான் கால் கொண்டதோ என எண்ண வேண்டியுள்ளது.

தக்கன் வேள்வி தகர்த்தான் பூந்தராய்
மிக்க செம்மை விமலன் வியன்கழல்
சென்று சிந்தையில் வைக்க மெய்க்கதி
நன்ற தாகிய நம்பன் தானே (263.1)

இணைக்குறளாசிரியம்

அளவடி அந்தமும் ஆதிலும் ஆகிக்
குறளடி சிந்தடி என்றல யிரண்டும்
இடைவர் நிற்ப திணைக்குறள் ஆகும். (கா.பா.63)

என்ற இலக்கணத்திற்கேற்ப முதலடியும் ஈற்றடியும் அளவடியாய் ஒத்து இடையடிகள் குறளடி சிந்தடியாய் அமையும் அஃதே இணைக் குறளாசிரியமாகும்.

ஒரூரு வாயினை மானாங் காரத்து

. . . .

நினைய வல்லவர் இல்லைநீள் நிலத்தே (128.1)

இப்பாடலில் முதலடி ஈற்றடி அளவடியாய் மற்றைய அடிகள் இடை இடையே குறளடி சிந்தடியாய் வந்தமைந்துள்ளன.

மேற்குறித்த பாவகைகளில் 385(383+2) பதிகங்கள் 4162 (4140+22) பாடல்களும் 16679 (16591+88) வரிகளும் பாடியுள்ளார். இஃதல்லாமல் சொல்லணி வகையாக இயமகம் திருச்சக்கரமாற்று, ஏகபாதம், கோமூத்திரிகை, மாலைமாற்று, எழுகூற்றிருக்கை ஆகிய பாவகைகளைப் பாடிச் சென்றுள்ளார்.

திருஞானசம்பந்தர் பழைய மரபில் கொச்சகப் பாடலோடு இணைக்குறள் ஆசிரியப்பாவையும் இயற்றியுள்ளார். பாவினங்களைப் பல்வித நிலையில் வாய்பாடுகளை மாற்றி மாற்றிப் புத்தம் புதிய இயல் இசை பாவகைகளை உருவாக்கி உள்ளார். சொல்லணியமைப்பில் கூட புதிய யாப்பியலை விருந்தாகப் படைத்துள்ளார். இவர் காலம், யாப்பியல் உலகில் புதிய பரிணாம வளர்ச்சியைப் பெற்றுள்ளது. யாப்பியலமைப்பில் புதியதோர் திருப்புமுனையாகும். பின்னர் வந்த புலவர்களுக்கு இவர் தம் பாடல் வழிகாட்டியாகத் திகழா நிற்கும்.

86. ஞானசம்பந்தர் பார்வையில் மகளிர்

எம். லோகநாயகி, சென்னை.

அம்மே அப்பா என்றழைத்து அழுத சீர்காழி குழந்தை முன்பு இறைவன் ஆணைப்படி உமாதேவி திருமுலைப்பாலைப் பொற்கிண்ணத்தில் கறந்தருள ஞானம் கைவரப்பெற்றது. ஆளுடையப் பிள்ளையார் ஞானசம்பந்தரனார்.

பல்லவராட்சியில் சிவ வழிபாடும் பக்திநெறியும் தமிழும் எங்கோ மறைந்த நிலையில் இவற்றை மீண்டும் அவற்றிற்குரிய இடத்தில் நிலைபெறச் செய்தவர்களுள் முக்கியமானவர் திருஞானசம்பந்தர் எனிலது மிகையாகாது.

சிவபாத இருதயர் - பகவதி அம்மையின் அன்பு மகனாக உதித்த பிள்ளை ''உண்ணும் சோறு, தின்னும் வெற்றிலை - பருகும் நீர், பார்க்கும் காட்சி'' யாவும் சிவமாய் கண்டது. பகவதி அம்மையின் மணிவயிற்று நல்முத்து சைவத்தின் ஈடில்லா சொத்தாய் திகழ்ந்ததை வரலாறு கூறும்.

சம்பந்தர் தாயின் கருவிலேயே திருகொண்டவர். அழுதால் அவனைப் பெறலாம், என்பதற்கேற்பப் பாலகனாய் அழுது பார்வதியின் தாய்முலைப் பாலால் ஞானம் கைவரப் பெற்றவர். வாடிய உயிர்களைக் கண்ட போதெல்லாம் வாடியவர்; அவற்றின் துன்பம் போக்கியவர் மங்கையரைத் தாய் சிவசக்தியாய் கண்டவர்; பெண்மையின் தெய்வீகம் உணர்ந்தவர்; போற்றியவர்; மங்கையரய்ப் பிறந்தவர்கள் மாதவம் செய்தவர்கள் என்பதனைத் தெரிந்தவர்; பேரின்பப் பெண்மையின் துயர்தனைத் துடைத்தவர்; விருப்பத்தை நிறைவேற்றியவர். சம்பந்தர் பார்வையில் பெண்மை சக்தி வடிவாய், அன்பு வடிவாய், சைவம் தழைக்க அருள் வடிவாய், இன்ப வடிவாய்த் திகழ்ந்தது எனிலது மிகையாகாது.

திருப்பாச்சிலாச்சிராமத்தின் சிற்றரசனின் மகள் 'முயலகன்' என்ற நோயினால் வருந்த மன்னனது வேண்டுதலின்படி திருப்பாச்சிராமத்து இறைவனைப் பாடி அப்பெண்ணின் பிணியை நீக்கினார் ஞானசம்பந்தர்; நோயிலிருந்து விடுதலை ஆக்கினார்; பெண்மை உற்றநோயை விட்டோடச் செய்தார்.

வணிகன் ஒருவன் கன்னி ஒருத்தியைத் திருமணம் செய்து கொள்ளுதற் பொருட்டுத் தன்னூருக்கு அழைத்து செல்கையில், திருமருகல்

திருக்கோயிலுக்குப் புறத்தில் ஒரு மடத்தில் வந்து தங்க, அரவமொன்று தீண்டியதால் மாண்டான். உடன் வந்த பெண்ணினது அழுகுரல் கேட்ட ஞானசம்பந்தர், அங்கு வர, அப்பெண் தான் 'தாமன்' என்பவரின் மகள் என்றும், தம் உடன் பிறந்தவர் அறுவருள் மூத்தவனை அவனுக்கு மணம் செய்விப்பதாய் கூறிப் பின் பொருளாசையில் வேறு ஒருவனுக்குத் தம் தந்தை மணம் செய்வித்ததாகவும், பிற சகோதரிகளுக்கும் அவ்வாறே மணம் முடித்ததாகவும், தான் அவன்மீது பரிவுற்று அவனுடன் வந்ததாகவும், மடத்தில் தங்கியதாகவும், தங்கியபோது அரவத்தால் அவன் மரண முற்றதாகவும் கூறிக் கதறினாள். அவளது துயர் நீக்க மனதால் நினைந் தருளி ஆளுடையப்பிள்ளை 'சடையாய்' எனத் தொடங்கும் திருப்பதிகத்தைப் பாடியருள நஞ்சு நீங்கி மாண்டவன் மீண்டான். காதலொருவனைக் கைபிடித்து வாழ்க்கையில் வசந்தம் தேட வந்தபோது புயல்வீசி சின்னாபின்னமாக இருந்தவளது காதலுக்கு மரியாதை தந்து நங்கையைக் காத்தார் சம்பந்தர்; காதலை வாழ்வித்தார்.

பாண்டி நாட்டு மன்னன் கூன்பாண்டியன் சமணர் வசப்பட்டிருந்த நேரம்; சிவனுறையும் கோயில்கள் பள்ளிகளாய், பாழிகளாயிருந்த நிலை. பாண்டிமாதேவி மங்கையர்க்கரசியும், அமைச்சர் குலச்சிறையாரும் சிவநெறியை விடாது ஒழுகியதோடு பாண்டி நாட்டு சூழலை மாற்றி, சைவத்தைத் தழைக்கச் செய்யப் பாண்டி நாட்டிற்கு எழுந்தருள ஞானசம்பந்தருக்கு வேண்டுகோள் அனுப்பினர்.

நாவுக்கரசர் தாம் சமணர்களால் பட்ட துன்பங்களைச் சொல்லி தடுத்தும் பிள்ளை 'கோளறு பதிகம்' பாடி, கொள்கையில் உறுதியராய், தனியராய் பாண்டி நாடு சென்றார். மதுரை எல்லையில் குலச்சிறையாரும், மங்கையர்க்கரசியாரும் வரவேற்க, மடத்தில் தங்கினர்.

சமணர்களால் மடத்திற்குத் தீமூட்டப் பெற "சைவர்வாழ் மடத்து சமணர் இட்ட தீத்தழல் போய்ப் பையவே சென்று பாண்டியனைப் பற்றுக" என ஏவும் கருத்துடன் "செய்யனே" என்று தொடங்கும் பதிகம் பாடினார்; பாண்டியனை வெப்பு நோய் பற்றியது. தம் நோய் தீர்ப்பின் தீர்த்தவர் பக்கம் சார்வதாய்ச் சொன்ன பாண்டியனின் வெப்பு நோயை சம்பந்தர், "மந்திரமாவது நீறு" என்ற திருநீற்றுப்பதிகத்தைப் பாடி, திருநீற்றைத்தம் திருக்கரத்தால் அரசனுக்குப் பூசி, நோயைத் தீர்த்தார். மாதர்குல விளக்காம்-மங்கையர்க்கரசியின் வேண்டுகோளுக்கு இணங்கி, பெண்மையை மதித்துப் பாண்டிநாடு வந்து அரசியல் மற்றும் சமயச் சூழலையே மாற்றிச் சைவத்தை தழைக்கச் செய்தவர் ஞானசம்பந்தர் எனில் அது மிகையாகாது.

இரத்தத்தைப் பாலாக்கி
தன்பிள்ளைக்குத் தந்து
பெற்றோரென்றும் கணவனென்றும்

பிறருக்காய் வாழும் பெண்மை தம் சமயத்திற்காய் - சைவம் தழைப்பதற்காய் - தூண்டுகோலாய் - ஊன்றுகோலாய் - சைவ அடியவராய் பெரியபுராணத்தில் பேசுவது வியக்கத்தக்கது.

திருமயிலை வணிகக் குடியினர் சிவநேசர்; ஆளுடையப் பிள்ளையின் அன்பர். தம் மகள் பூம்பாவையை சம்பந்தருக்கு மணமுடிக்க உறுதி யுடனிருந்தார். ஆனால் மலர்கொய்ய சென்றவிடத்தில் அரவம் தீண்ட அவள் உயிர் துறந்தாள். அவளின் சாம்பலையும் எலும்பையும் குடத்தி லிட்டுப் பூசித்து வந்த சிவநேசர் ஞானசம்பந்தர் திருவொற்றியூர் 'புக்கு உளார்' என்று கேள்விபட்டதும் அவரை எதிர்கொண்டழைக்கச் சென்றார். திருமயிலை கபாலீசுவரர் திருமுன் ''பூம்பாவாய்'' உயிர்பெறுக என்னும் குறிப்புடைய பதிகத்தை சம்பந்தர் பாட செந்தாமரையினின்று திருமகளாய், பூம்பாவை குடத்தினின்று வெளிப்பட்டாள். அவளை உயிர்ப்பித்து அவளுக்குத் தந்தையானார் சம்பந்தர். மரணமுற்ற மங்கையை மண்குடத்திலிருந்து எழுப்பி அம்மங்கையின் துன்பத்தைக் கிள்ளி எறிந்தவர் சம்பந்தர். விவிலியத்தில் இயேசுபிரான் இறந்தவனை எழுப்பி அற்புதம் செய்த செயல் ஈண்டு நினைவுகூரத்தக்கது.

எருக்கத்தம்புலியூரில் பிறந்து தமது குலத்தொழிலுக்குரிய யாழ் வாசித்து வந்த திருநீலகண்ட பாணர், தம் யாழுக்குப் பொருந்தப்பாடும் மனைவி மதங்க சூளாமணியோடு சென்று ஞானசம்பந்தர் திருப்பாதம் வீழ, மதங்க சூளாமணி பாட, பாணர் வாசிக்கக் கேட்ட சம்பந்தர், அவர்களை மெச்சித் தம் பாடல்களுக்கு ''நீலகண்டர்'' யாழ் வாசிக்கப் பணித்தார். மதங்க சூளாமணியின் குரலும் பாடும் நயமும் இணைந்தே பாணருக்கு இவ்வுயர்வை-ஏற்றத்தைத் தந்தது எனில், அப்பெண்ணின் திறமையை மதித்து மெச்சி ஏற்றத்திற்கு வழிசெய்தது - சம்பந்தனாரின் பெண்மையைப் போற்றும் பாங்கே எனலாம்.

ஆளுடையாருக்குத் திருமணம்

பெற்றோர்களின் வற்புறுத்தலின் பேரில் உடன்பட்ட சம்பந்தருக்குத் திருநல்லூர்ப் பெருமண நம்பாண்டார் திருமகளுடன் மணம் நிகழ ''இந்த இல்வாழ்க்கை இருவினைக்கு வித்தாகி எனைச் சூழ்ந்ததே'' இனி இவளோடும் சிவன்தாள் சேர்வேன் என்று திருப்பெருமணக் கோயில் சென்றார் சம்பந்தர். சம்பந்தருடன் அவரது இல்லாளும் சுற்றமும் செல்லச் சம்பந்தர் ''கல்லூர்ப் பெருமணம்'' எனத் தொடங்கும் 'திருப்பதிகம்' பாடினர். இறைசோதி வடிவில் எழுந்தருளச் சம்பந்தர் பெருமான் 'நமச்சிவாய திருப்பதிகம்' பாடித் தம் இல்லாளோடு அச்சோதியில் கலந்தார்.

தாம் மட்டுமன்றி தம் இல்லாளையும் இறைச்சோதியில் இணைத்துக் கொண்ட ஆளுடையரின் மேன்மையைத் தமிழில் சொல்ல வார்த்தை யில்லை. தம் மனைவிக்குச் சிவபேறு கிடைக்கச் செய்து பெண்மையும் சிவானந்தத்தில் மூழ்கலாம் என்பதனை நிகழ்த்திக் காட்டியவர் சம்பந்தர் எனிலது மிகையாகாது.

87. சம்பந்தரும் திருக்கோலக்காவும்

வி. வசுமதி, உடுமலை.

ஆதியும் அந்தமும் இல்லாத சோதியான சிவபெருமான் ஆதியாய் வழங்கிய அதிசயங்கள் பலப்பல. தம்முடைய பக்தி அடியவர்களுக்கு அருளிய பாங்கினும் இச்சமயக் குரவர்களுக்கு வழங்கிய நிலை மிகப்பல. அவ்வகையில் ஞானசம்பந்தப் பெருமானுக்கு அருள்பாலித்த முறை யினுள் ''முதல் அதிசயம்'' பற்றி இக்கட்டுரை ஆய்கின்றது.

முதல் யாத்திரை

செந்தமிழ் நாட்டின் சோழவள நாட்டில், சீர்காழியம் பதியில் சிவபாத இருதயருக்கும் பகவதியாருக்கும் அரும்பெரும் மகவாக அவதரித்த நம் சம்பந்தப் பெருமான், சிவபெருமானின் ஏவுதலாலும் தந்தையைக் காணாது கரைந்த துன்பத்தை நீக்கவும் உமாதேவியின் பாலை உண்டார். என்னே! அதிசயம்!! பதிகம் பிறந்தது. அடுத்து இவரின் தல யாத்திரைகள் தொடங்கின. அப்பெருமைமிகு தலத்துள் முதல் யாத்திரையாய் அமைந்தது ''திருக்கோலக்கா'' எனும் தலமாகும்.

''முதல்'' - சிறப்பு

ஒரு தனிமனித வாழ்வில் முதல் நிகழ்வு, முதற்கனவு, முதல் வாழ்வு போன்ற செய்திகள் தலையாயதாய் இடம் பெறுகின்றன. திருமணப் பந்தங்களில், ''முதல் ஜாதகம் மூத்த ஜாதகம்'' என்ற வாக்கினைக் காணலாம். முதல் மதிப்பெண் பெற்றவருக்கே வகுப்பறைகளில் மதிப்பு. மாநில மற்றும் மாவட்டங்கள் வாரியாக முதற் மதிப்பெண் பெற்ற நபரைப் பற்றிய பாராட்டுக்கள் நாம் அறிந்ததே. அதுமட்டுமின்றிச் சிறு குழந்தைகளின் முதல் மொழி, முதல் சொல் இவற்றால் இன்பம் செவிக்கு அல்லவா!

எனவே, ஆளுடைய பிள்ளையாராகிய திருஞானசம்பந்தர் தம் வாழ்வில் 'முதல்' என்பது அவரின் தல யாத்திரைகளுள் முதலிடம் வகிப்பது 'திருக்கோலக்கா' எனும் பதியாகும்.

திருக்கோலக்கா

''பெருக்கோலிட்டு அலைபிறங்கும் காவிரிநீர் பிரசமலர்
தரளஞ் சிவந்த
வரிக்கோல வண்டாட மாதரார் குடைந்தாடு மணிநீர் வாவித்
திருக்கோலக்கா'' (திருத்தொண்டர் புராணம் - பா.எ.1999)

எனும் சிறப்புகளுடைய இப்பதியின்கண் அருள்பாலிக்கும் ஈசனும் அம்மையும் முறையே, சத்தபுரீசர், ஓசை கொடுத்த நாயகி எனும் திருநாமங்களைக் கொண்டு விளங்குகிறார்கள். இயற்கை அன்னை தன் கரங்களை விரித்துப் பரப்பிக் கிடக்கும் இத்தலத்தில் சம்பந்தர் தமது முதற் பணியைத் தொடங்கினார்.

"தோடுடைய செவியன்..." எனத் தொடங்கும் பதிகத்தைப் பாடிய இவர் மறுநாள் தமது திருப்பணியைத் தொடங்க ஞாயிறு உதிக்கும் பொழுதில் திருத்தோணி நம்பரது திருக்கோயிலை அடைகிறார். திருக்கழுமலம் என்று அழைக்கப்படும் இத்தலத்தில் தமது தாய் தந்தையரையும் ஈசனையும் அன்னையையும் வணங்கித் தமது முதல் யாத்திரைக்கு ஆயத்தமாகிறார். இவர் திருக்கோலக்காவிற்கு விரும்பிச் செல்லும் சூழலை,

"மேதகைய அருள்பெற்றுத் திருக்கோலக்கா இறைஞ்ச
விருப்பிற் சென்றார்" (பா.எ.1998)

என்று திருத்தொண்டர் புராணம் கூறுகின்றது.

பதிகச் செய்திகளும் இறைவனின் அதிசயமும்

"மடையில் வாளை..."

எனத் தொடங்கும் பதிகமே இத்திருத்தலத்தில் பாடப்பட்ட பதிகமாகும். தக்கராகப் பண்ணில் பாடிய இப்பதிகத்தில் தனிச்சிறப்பாகச் சம்பந்தர் பாடும் தன்மையே காணப்படுகிறது.

"சடையும் பிறையும் சாம்பற் பூச்சுங்கீழ்
உடையும் கொண்ட உருவம்"

என்று நிற்கும் இறைவன் சம்பந்தப் பெருமான் தம் பிஞ்சுக் கரங்களால் இறைவனை,

"பெண்டான் பாகன் பிறைச் சென்னி கொண்டான்"

"கொன்றை சென்னியன்"

"மழுக் கொள் செல்வன்", "பூதப்படையன்"

"எயிலார் சாய எரித்தவன்"

"கூற்ற முதைத்தக் குழகன்"

என்றெல்லாம் வர்ணித்துப் பாட, இறைவன் மனம் நெகிழ்ந்து "பொற்றாளங்களை" அளிக்கிறார். திருவைந்தெழுத்து பொறிக்கப்பட்ட அப்பொற்றாளத்தில் பண்ணுடன் சுரமும், இராகமும், தாளமும் பாட்டின் பொருளோடு அமைந்த கமகத்துடன் சம்பந்தர் பாட நாயகியான தேவி அதற்கு ஓசை வடிவம் கொடுத்து அருளினாள். எனவே அவள் "ஓசை கொடுத்த நாயகி" எனும் பெயரினை அடைகிறாள்.

இப்பொற்றாளத்துடன் கூடிய ஓசையில் இசையும் சேர்த்து இத்தலத்தின் இயற்கை வருணனையைப் பாடும்போது சோழவள நாட்டுப் பொன்னி நதியாகிய காவிரியைப் பெருமைப்படுத்தும் முகமாக,

"மடையில் வாளை பாய..."

எனவும்,

"சோலைக் கோலக்கா... "

எனவும்,

"நிழலார் சோலை நீலவண்டினங்
குழலார் பண்செய் கோலக்கா"

எனவும் பாடிச் சிறப்பு சேர்க்கிறார் சம்பந்தர்.

பொதுச் செய்திகள்

திருக்கோலக்கா எனும் சிறப்பினைத் தேவாரத்தில் பெற்றுள்ள இத்தலம் இன்று 'திருத்தாளமுடையார் கோயில்' என்று சிறப்புடன் மிளிர்கின்றது. இசையோடு இத்தலத்தில் சம்பந்தர் பாடும்போது தம் பதிக அமைப்பில் உள்ள பொதுவான செய்திகளான இராவணன் பற்றிய குறிப்பினை,

"எறியார் கடல் சூழ் இலங்கைக் கோன்"

என்று 8-ம் பாடலிலும், அடிமுடி தேடிய செய்தியினை,

"நாற்றமலர் மேலயனு நாகத்தில்
ஆற்றலணை மேலவனுங் காணகிலா"

என்று 9-ம் பாடலிலும், புறச் சமயத் தாக்கத்தினை,

"பெற்ற மாசு பிறக்குஞ் சமணரும்
உற்றதுவர் தோயுரு விலாளருங்
குற்றநெறியார் கொள்ளார்"

என்று 10-ம் பாடலிலும், திருக்கடைக்காப்பினை,

"நலங்கொள் காழி ஞான சம்பந்தன்
குலங்கொள் கோலக்காவு ளானையே
வலங்கொள் பாடல் வல்லவாய்மையார்
உலங்கொள் வினைபோயோங்கி வாழ்வரே"

என்று 11-ம் பாடலிலும் குறிப்பிடுவதை உணரலாம்.

மேலும் இத்திருக்கோலக்காவில் சுந்தரர் பாடும்போது,

"நாளுமின் னிசையால் தமிழ்பரப்பு
ஞான சம்பந்தனுக்கு உலகவர்முன்

தாளம் ஈந்தான் பாடலுக்கு இரங்கும்
தன்மையாளன்''

என்று இறைவனையும் உடன் சம்பந்தப் பெருமானையும் சிறப்பிக்கின்றார்.

இதுகாறும் கூறிய செய்திகளின் வழி, சம்பந்தப் பெருமானுக்கும் திருக்கோலக்காவுக்கும் உள்ள முதல் தலப் பயணத் தொடர்பினை அறிய முடிந்தது. இதன் வாயிலாக ''முதல்'' என்ற சிறப்பு இவர்தம் வாழ்க்கையில் சிறப்பாக அமைந்து (பொற்றாளம் பெற்றதும் ஓசையை உடன் கொடுத்ததும்) நின்ற தன் வழி அவர்தம் அடுத்த பயணங் களிலும் யாதொரு தடையும் இல்லாத நிலையினை அவரின் வாழ்க்கை வரலாற்றில் காணலாம். எனவே திருக்கோலக்கா எனும் பதி திருஞானசம்பந்தரின் வாழ்வில் 'முதல்' எனும் சிறப்பைப் பெற்று தொடரும் அவரின் பணிகளுக்கு நல்ல தொடக்கமாய் அமைந்ததை உணர முடிகிறது.

88. சம்பந்தரின் தெரிவிப்பியல் கொள்கைகள்

மு. வள்ளியம்மை, அண்ணாமலைநகர்.

ஒருவர் தமது உள்ளக் கருத்துக்களைத் தெள்ளத் தெளிவாகப் பிறருக்கு உணர்த்துவதே தெரிவித்தல் ஆகும். அதனை முழுமையாகவும், முறையாகவும், பொருட்சிதைவு ஏற்படா வண்ணமும் தெரிவிக்கும் உத்தி, அதற்குப் பயன்படும் கருவிகள், அவற்றைத் தகுந்த முறையில் பயன்படுத்தும் திறன் முதலானவற்றைச் செயலாக்கும் வகையையும், திட்ப நுட்பம் செறிய விளக்கியுரைப்பதே தெரிவிப்பியல் ஆகும். இது கருத்தைப் புலப்படுத்துபவனுக்கும், கேட்பவனுக்கும் இடையே தோன்றுவது. இதற்கு மொழி பேச்சாகவும் எழுத்தாகவும் அமைகிறது. இக்கருத்துப் பரிமாற்றம் நிகழ்வதற்குப் பின்னணியும் காரணங்களும் உண்டு. கருத்துத் தெரிவிக்கப்படுவதில் இருந்து அது எதிர்பார்க்கும் இடத்தை அல்லது நபரைச் சென்று சேர்வதுவரை அதிலிடம் பெறும் அமைப்பு, கருத்து, செயல், உத்திகள் போன்றவை ஒன்றுக்கொன்று தொடர்புபடுத்தப்படும். அவை கருத்துப் புலப்பாட்டிற்குரிய வகையில் வழிவகுத்துக் கொடுப்பதை விளக்கும் அமைப்பியல் நெறிமுறைகளின் ஒருங்கிணைப்பையே தெரிவிப்பியல் கோட்பாடு எனலாம். கருத்தை வெளிப்படுத்தும் மொழித்திறன் என்றும் இதைக் கூறுவர்.

தான் கற்ற கல்வியையும், பட்ட அனுபவங்களையும், பெற்ற சிந்தனைகளையும் பிறருக்குத் தெற்ற உரைப்பதற்கு உற்ற கருவியாக விளங்குவது சொல்லாற்றல் கலை. இந்தச் சொல்லாற்றல் கலையைப் பயன்படுத்தித் திருஞானசம்பந்தர், கருத்துக்களைத் தெரிவிக்கும் வகையைக் கொள்கைகளாய்க் காண்பதே இக்கட்டுரையின் நோக்கம்.

சொல்வன்மை (Effective Communication)

தெரிவிப்பியல் உத்திகளைக் கையாண்டு கேட்போரின், படிப்போரின் கவனத்தைத் தன்பால் ஈர்ப்பதோடன்றி, அவர்தம் சிந்தனையைத் தொடும் வகையில் சிறப்பாக எடுத்துரைக்கும் கலைக்குத் தான் சொல்வன்மை (Effective Communication) என்று பெயர். ஞானசம்பந்தர்,

''அரனையுள்குவீர், பிரமனூருளெம்
பரனையேமனம், பரவியுய்ம்மினே''

''காணவுள்குவீர் வேணுநற்புரத்
தாணுவின் கழல், பேணியும்மினே'' (1:90:1-2)

''சித்தந்தெளிவீர்காள், அத்தன் ஆரூரைப்
பத்திமலர் தூவ, முத்தியாகுமே''

''பிறவியறுப்பீர்காள், அறவனாரூரை
மறவாதேத்துமின், துறவியாகுமே''

''துன்பந் துடைப்பீர்காள், அன்பனணியாரூர்
நன்பொன் மலர்தூவ, இன்பமாகுமே'' (1:91:1-3)

என்று திருப்பிரமபுர இறைவனை நினைக்கவும், காணவும் விரும்புங்கள். நீங்கள் உய்திபெற அதுவே வழி என்றும், சித்தம் தெளிவடையவும், பிறவி அறுக்கவும், துன்பம் துடைக்கவும், பாசம் அறுக்கவும் விரும்பினால் திருவாரூர் இறைவனை மறவாது ஏத்துமின் என்று மலமுறு ஆன்மாக் களுக்குக் கட்டளை இடுகிறார்.

**''வாசிதீரவே, காசு நல்குவீர்
மாசின் மிழலையீர், ஏசலில்லையே''**

**''இறைவராயினீர், மறைகொண் மிழலையீர்
கறைகொள் காசினை, முறைமை நல்குமே''** (1:92:1)

என்று திருவீழிமிழலையில் படிக்காசு பெற்ற ஞானசம்பந்தர், வாசி நீங்கப் பாடும் இந்தப் பாடல் அடிகள் இறைவனுக்கு இடும் கட்டளையாக அமைந்து சிறக்கிறது. நல்குவீரா? என்று கேட்டால் இயலாது என்று மறுக்க இடமுண்டு. ஆதலின் காசு நல்குவீர் என இறைவன் மறுக்க முடியா நிலையில் கட்டளையாக்குகிறார். இப்பதிகத்தின் பதினொரு கண்ணிகளும் இந்த அமைப்பிலேயே அமைந்துள்ளன. ஷ அவரின் சொல் வன்மையைக் காட்டுகிறது. இன்னும் திருமுதுகுன்றம், திருவாலவாய், திருவிடை மருதூர், திரு அன்னியூர் போன்ற பல தலங்கள் சிறப்பாகப் பாடப்பெற்றுள்ளன.

சொலல் வல்லார் (Effective Communicator)

ஒரு கருத்தை முறையோடு, முழுமையாக, பொருட்சிதைவு இன்றி, பல்வேறு தரத்தினரும் விரும்பிக் கேட்கும் வகையில், எளிய இனிய நடையில் எடுத்துரைக்க வல்லவனே சொலல்வல்லன் ஆவான். இத்தகைய திறமுடையவன் சோம்பலற்றவனாகவும், அஞ்சா நெஞ்சின னாகவும், மொழி வல்லுநனாகவும், மக்கள் நலம் உணர்ந்தவனாகவும் இருக்க வேண்டும். அத்தகைய திறம் படைத்தவனே சொலல்வல்லன். அவன் கருத்துக்களையே அனைவரும் விரும்பிக் கேட்பர்.

**''நன்றுடையானைத் தீயதிலானை நரைவெள்ளே
றொன்றுடையானை யுமையொருபாக முடையானைச்**

சென்றடையாத திருவுடையானைச் சிராப்பள்ளிக்
குன்றுடையானைக் கூறவென்னுள்ளங் குளிரும்மே" (1:98:1)

சிராப்பள்ளி மேவிய இறைவனின் திருநாமத்தைக் கூற உள்ளம் குளிரும் என்பதை எளிமையாக இனிமையாகப் புலப்படுத்துகின்றார். ஏன் உள்ளம் குளிரும் என்பதற்கும், இறைவன் எப்படிப்பட்டவன் என்பதற்கும் விடையாக முதல் மூன்று வரிகளை அமைத்து இன்னதன்மையால் உள்ளம் குளிரும் என்று விளக்குகிறார்.

திருஞானசம்பந்தர் திருவாலவாயில் திருக்கூட்டத்தோடும் திருமடத்தில் எழுந்தருளி இருக்கும்போது சமணர் அரசனது சம்மதம் பெற்று, அவரிருந்த மடத்தின் மேல் மந்திரவலியால் தீயினைச் செல்லப் பணித்தார்கள். ஞானப்பிள்ளையோடு எண்ணில்லாத சிவனடியார்கள் திருவைந்தெழுத்து ஓதும் அம்மடத்தின் மீது அம்மந்திரவலி வலு விழந்தது. எனவே மடத்தின் புறத்தில் தீ வைத்தனர். கலங்காது, அஞ்சாது ஞானசம்பந்தப் பெருமான், அரசரது குற்றத்தை உணர்ந்து ஒவ்வொரு பாட்டிலும் 'அமணர் கொளுவுஞ் சுடர் பாண்டியற்காகவே' என்று திருப்பி அனுப்பினார். சொலல்வல்லான் தன் அஞ்சா நெஞ்சால் செயல் வல்லவனாயும் இருப்பான் என்பதற்கு இந்நிகழ்ச்சி சான்றாகும். நாம்யார்க்கும் குடியல்லோம் எனச் சொன்ன நாவுக்கரசரும், மங்கையர்க்கரசியாரின் வேண்டுகோளுக்காக மதுரை செல்லப் புறப்பட்ட ஆளுடை பிள்ளையிடம், நாளும் கோளும் நன்றில, செல்ல வேண்டாம் எனத் தடுத்தபோதும் கோளறு பதிகம் பாடி அஞ்சா நெஞ்சினராய்ச் சென்றார். நாளுக்கும் கோளுக்கும் கூட அஞ்சாத நெஞ்சத்திற்கு, சிவனடியே சிந்திக்கும் திறமும், ஐந்தெழுத்து ஓதும் தன்மையுமே காரணம்.

நற்றமிழ் வல்ல ஞானசம்பந்தன் என்று மற்றோரால் புகழப்பட்ட ஞானசம்பந்தரின் மொழிநடைக்கும், நலத்திற்கும் பதிகங்கள் அனைத்தையுமே சான்றாகக் காட்டலாம். இசைநலமோ பண் அமைப்பில் தெற்றெனப் புலப்படுகிறது. மக்கள் நலம் உணர்ந்தவோர் சமுதாயத் தொண்டராக அவர் செயற்பட்டமையை அவர்தம் வாழ்வியல் வெளிப்படுத்தும்.

ஒவ்வோர் உயிரினும் பொருளினும் ஈசனைக் கண்டவர்; மன்னுயிர்க்குத் தொண்டு புரிதலே மகேசனுக்குத் தொண்டு புரிதலாகும் எனத் தெளிந்தவர். சமயத்தின் அருள் அனுபவ நலங்களைத் தம் தனிமை நிலையில் துய்த்துச் சமாதி நிலையில் ஒன்றிவிடாமல், அதனைச் சமுதாய இயக்கமாக மாற்றி, அனைத்து உயிர்களும் இறையருள் நலனை அறிந்து, அதில் ஈடுபட்டுத் திளைக்குமாறு செய்து அருளியவர். சமயத்தினைத் தனிநிலை இயல்பினின்று சமுதாயநிலை இயல்பிற்குரிய ஒரு பேராற்றல் என்னும்படி உருவாக்கி வளர்த்தவர்.

''மூலையிருந்தாரை முற்றத்தே விட்டவர்
சாலப் பெரியவர் என்று உந்தீபற
தவத்தில் தலைவர் என்று உந்தீபற''

என்ற திருவுந்தியார் வாக்கின்படி சிலரின் வாழ்வில் மட்டுமே முடங்கிக் கிடந்த சமயச் செந்நெறியினை, பொதுமக்களின் வாழ்வுத்துறை ஆகிய சமுதாயச் சூழல் என்னும் முற்றத்தே கொணர்ந்துவிட்டவர்.

திருவீழிமிழலையில் பெரியதோர் பஞ்சம் நேர்ந்தபோது இறைவன் பால் படிக்காசு பெற்று, அனைவரின் பசிப்பிணியையும் போக்கி, அப்பரும் சம்பந்தரும் நலம் புரிந்து அருளினர். எனவே மக்கள் நலம் உணர்ந்தவர் என்பதற்கு இதனினும் சான்றுகள் வேண்டுவதில்,

''ஒழுகலரி தழிகலியி லுழியுலகு
பழிபெருகு வழியை நினையா
முழுதுடலி லெழுமயிர்க டழுவுமுனி
குழுவினொடு கெழுவு சிவனைத்
தொழுதுலகி லிழுகுமல மழியும் வகை
கழுவு முரை கழுமலநகர்ப்
பழுதிலிறை யெழுதுமொழி தமிழ்விரகன்
வழிமொழிகண் மொழி தகையவே'' (3:325:10)

என்ற பாடலில் ழகரத்தை 22 இடங்களில் இடம் பெற வைத்துள்ளது குறிப்பிடத்தக்கது.

''நிராமய பராபர புராதன
பராவுசிவ ராகவருளென்
றிராவுமெ திராயது பராநினை
புராணமை ராதிபதியாம்
அராமிசை யிராதெழி றராயர
பராயண லராக வுரலா
தராயனை விராயெரி பராய்மிகு
தராய்மொழி விராய் பதியே'' (3:325:6)

என்ற பாடலில் 24 இடங்களில் ரகரம் இடம்பெறுமாறு பாடித் தம் மொழி நலத்தை வெளிப்படுத்துகிறார். மன்னனாயினும் மக்களாயினும் இவருக்கு ஒன்றே. எல்லாப் பதிகங்களிலும், எல்லாச் சூழலிலும், எல்லார் முன்னிலையிலும் இச்சொல்வன்மையைத் தொடர்ந்து காத்துச் சொல் வல்லவராய் விளங்குகிறார்.

மாற்றாரும் மனம் கொள்ளும் வகையிற் பேசுதல்

பொதுவாக ஒரு கருத்தைத் தெரிவிப்பவனின் சொல்வன்மை அவனுடன் இருப்பவர்களுக்குத் தெரிந்திருக்கும். அவர்களின் அன்பு

கெடாதவகையில் சொலல்வல்லான் சொல்வன்மையைப் பேணவேண்டும். அதோடு அவன் பகைவர்கள் மனம் மாறுபட்டு, அவன் சொல்பவை அனைத்தும் சரியே என்று ஏற்கும் மனப்பக்குவத்தைப் பெறும் வகையில் கருத்துக்களைத் தக்க சான்றுகளுடன் நிறுவவேண்டும். அதனால் அவன் பகைவர்களும் பகைமை உணர்வைத் தவிர்த்து நட்புக் கொண்டாடும் நிலையை உருவாக்குதல் வேண்டும். கேட்போர் அனைவரையும் ஈர்த்து இசைவிக்கும் ஆற்றலைப் பெறவேண்டும்.

திருவாலவாயிலே பாண்டியரது அவைக்களத்தே சமணரோடு வாதம் செய்யத் தொடங்கித் திருமுறையிற் கயிறு சாத்தியபோது, போகமார்ந்த பூண்முலையாள் என்னும் திருப்பதிகம் வர அதனைக் கையிலே வைத்துக் கொண்டு இப்பதிகம் பரமசிவனைப் பரம்பொருள் எனவும், பெண்ணொருபாகன் எனவும் கூறுதலின் நெருப்பில் இடப்படின் பழுதிலை; இது மெய்ம்மை என்னும் கருத்துடைய திருப்பதிகம் பாடி அவ்வேட்டினை நெருப்பிலேயிட்டு வேகாமல் பச்சையாய் எடுத்தருளினார்.

"இட்டு மணியணி யிணர்புணர் வளரொளி யெழில்வடம்
கட்டுறு கதிரிள வனமுலை யிணையொடு கலவலின்
நட்டு செறிவயன் மருவுநள் ளாறர்தந் நாமமே
இட்டுறு மெரியினி லிடிலிவை பழுதிலை மெய்ம்மையே
(3:345:3)

எனப் பகைவராகிய சமணரும் கேட்டுக் கொள்ளும் வகையில், சொல்பவை அனைத்தும் சரியே என அவர்கள் ஏற்றுக் கொள்ளும் வகையில் தக்க சான்றுடன் மெய்ப்பிக்கின்றார்.

திறமறிந்து சொல்லல்

பேசுவதற்கு முன் தன்னைத் தயார்ப்படுத்திக் கொள்ளும் சொலல் வல்லான் தான் யாரிடத்தில், எந்தச் சூழ்நிலையில், எதற்காக அதனைச் சொல்லப் போகிறோம் என்பதை நன்கு அறிதல் வேண்டும். தன் திறனும், கேட்போர் திறனும் அறிந்து அதற்கேற்ற வகையில் கருத்துக்களைத் தயாரித்துச் சொல்ல வேண்டும்.

வெப்பு நோய் பெற்றுத் துடித்த பாண்டியன் திருமாளிகைக்கு எழுந்தருளிய ஆளுடைய பிள்ளையாரது திருநோக்கத்தால் அரசன் சிறிது வெப்பு நீங்கிப் பேசும் ஆற்றல் உடையவனாய், பிள்ளையாரைப் பார்த்துத் தேவரீரது கெழுவுறுபதியாது என விருப்புடன் கேட்டபோது அவர், 'கழுமல நாங்கருதுமூர்' என்று வைத்துப் பதிகம் பாடியருளினார். அதில் சீர்காழிக்குரிய பன்னிரண்டு பெயர்களையும் அமைத்துப் பாடியுள்ள திறம் வியப்பிற்குரியது.

"பிரமனூர் வேணுபுரம் புகலிவெங்குருப் பெருநீர்த் தோணி
புரமன்னு பூந்தராய் பொன்னஞ்சிரபுரம் புறவஞ் சண்பை
அரன்மன்னு தண்காழி கொச்சைவய மள்ளிட்டங் காதியாய
பரமனூர் பன்னிரண்டாய் நின்றதிருக் கழுமலநாம் பரவுமூரே"

"வேணுபுரம் பிரமனூர் புகலிபெரு வெங்குரு வெள்ளத் தோங்குந்
தோணிபுரம் பூந்தராய் தூநீர்ச் சிரபுரம் புறவங் காழி
கோணிய கோட்டாற்றுக் கொச்சை வயஞ்சண்பை கூருஞ்செல்வங்
கானிய வையகத்தா ரேத்துங் கழுமலநாங் கருதுமூரே"
(2:206:1-2)

என்று பதினொரு பாடல்களிலும் அந்த ஊரின் பன்னிரண்டு பெயர் களையும் மாற்றி மாற்றிச் சொல்லிப் பாடியுள்ளார். பன்னிரண்டு பெயர்களைக் கொண்ட தோணிபுரத்தைப் பாடுவதால் இப்பதிகம் பன்னிரண்டு பாடல்களைக் கொண்டிலங்குகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

நோய்வாய்ப்பட்ட நிலையில் இருந்த மன்னனுக்குச் சொல்வதால், அக்கருத்து மனதில் பதியும்படியாக மறுபடி மறுபடி சொல்லப்படுகிறது. கேட்பவரின் மனதில் பதிவதற்காக ஒரு கருத்தையோ, சொல்லையோ மறுபடி மறுபடி கூறுவது குற்றமாகாது. பகைச் சமயமான அமண சமயத்தில் இருந்தவனைச் சைவனாக மாற்ற வேண்டிய சூழ்நிலை வேறு. இந்நிலையில், கூறியதை மனதில் பதியுமாறு கூறல் இன்றி யமையாதது. எனவே தான் கேட்ட கேள்விக்கு விடையாக ஊருக்கு உரிய பன்னிரண்டு பெயர்களையும் பதினொரு பாடல்களில் சொல்லிச் செல்கிறார். பயன்பெறு பதிகமாகிய இறுதிப் பாடலில்,

"காவிமலர் புரையுங் கண்ணார் கழுமலத்தின் பெயரை நாளும்
பாவியசீர்ப் பன்னிரண்டு நன்னூலாப் பத்திமையாற்
பனுவன்மாலை
நாவி னலம்புகழ்சீர் நான்மறையான் ஞானசம் பந்தன் சொன்ன
மேவியிசை மொழிவார் விண்ணவரி லெண்ணுதலை
விருப்பு ளாரே" (2:206:12)

தலத்தின் பெயரைச் சொன்னாலே அத்தலத்தில் வீற்றிருக்கும் இறைவன் திருவருள் கிட்டும் என்பதே இப்பதிகத்தின் நோக்கம்.

நற்றமிழ் வல்ல ஞானசம்பந்தன் தன் சொற்றிறம் காணுங்கால், சில கொள்கைகளை அடிப்படையாகக் காணமுடிகின்றது. அந்நோக்கில் ஞானசம்பந்தரின் தெரிவிப்பியல் கொள்கைகளாக,

1. கேட்போரின் சிந்தனையைத் தூண்டும் வகையில் தெரிவிக்கும் சொல்வன்மை.

2. மொழிவல்லுநராய், மக்கள் நலம் உணர்ந்து சுருக்கமாகவும், தெளிவாகவும் கூறல்.
3. சொல்வன்மையைக் காத்துத் தொடர்ந்து போற்றும் திறம்.
4. மாற்றாரும் மனம் கொள்ளும் வகையிற் பேசும் பண்பு.
5. கேட்போர் திறமறிந்து வேட்ப மொழியும் திறம்.
6. தேர்ந்த சொற்களைப் பொருத்தமாகப் பயன்படுத்தல்.
7. சோர்வும் பயமும் இல்லாதவராய் இருத்தல்.
8. பிறரால் வெல்லமுடியாத் திண்மையும் திறமும் உடைமை.
9. வரன் முறையாகக் கூறும் பாங்கு.
10. எதையும் உணர்ந்து நன்கு தேர்ச்சி பெற்றுத் தெரிவித்தல் .

என்பன போன்ற கொள்கைகளைக் கூற இடனுண்டு. இன்னும் விரிப்பிற் பெருகத் தேவாரத்தில் இடமுண்டு.

89. சம்பந்தர் காட்டும் பக்திநெறி

சு. வஜ்ரவேலு, சென்னை.

''காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி
ஓதுவார் தமைநன் னெறிக்(கு) உய்ப்பது
வேதம் நான்கினும் மெய்ப்பொருளாவது
நாதன் நாமம் நமச்சி வாயவே''. – திருஞான சம்பந்தர்

மெய்யுணர்வு பெற்று உண்மைப் பொருளாம் பரம்பொருளுடன் இரண்டறக் கலத்தலே ஒவ்வொரு உயிரின் உண்மைக் குறிக்கோள். மெய்யுணர்வு பெற பக்திநெறி, கருமநெறி, யோகநெறி, ஞானநெறி என நால்வகைப் பாதைகள் உள்ளன. யோகமும், ஞானமும் செல்வதற்குக் கடின வழிகள்; கருமம், பக்தி எனும் இருவழித் தடங்கலும் யாவரும் எளிதில் செல்லத்தக்க இராஜ பாட்டைகளாம்.

கருமத்தைக் கரும யோகமாக மாற்றிக் கொள்ள வேண்டும். பக்தி பராபக்தியாய் ஒளிர வேண்டும். அத்தகு நிலையில் மெய்ப்பொருள் உணர்வு கிட்டும். அதாவது பயன் கருதாப் பணி, பலன் எதிர் நோக்கா பக்தி வேண்டும். ''நன்றே வரினும் தீதே விளையினும் நானறிவது ஒன்றேயு மில்லை'' என்ற திட உறுதி பெற்றால், நம் வாழ்வினைத் தொடர்ந்து நிலை பிறழாது இந்நிலையில் பழக்கினால், வெகு விரைவில் பிறவிப் பயன் பெறலாம்.

கீதையில் கண்ணன்

''பக்தியோகம் வித்தைகளுக்கு அரசு; மறைகளுள் சிறந்தது; உத்தமமானது; தூய்மை தருவது; நேரில் அனுபவிக்கக் கூடியது; அறத்தினின்றும் வழுவாதது; பழகுவதற்கு எளியது; என்றும் அழியாதது''. என்று கண்ணன் கீதையில் பகர்கிறான். கருமம், ஞானம், யோகம் போல்வன அரும்பு, மலர், காய் போன்றவை. பக்தி பழம் போன்றது. பக்திக்குப் பயன் பக்தியே. ஞானத்தால் பக்தி வளரும்; பக்தியால் ஞானம் பரிணமிக்கும்.

திருஞானசம்பந்தர் போன்ற அவதார புருஷர்கள் உலகை உய்விக்க அவதரித்தவர்கள். ஒருவருக்கு சத்சங்கமும், சத்குருவும் கிடைப்பது இறைவன் திருவருள் இருந்தால் தான் கிட்டும். பிற்காலத்தில் திருவருட்

பிரகாச வள்ளலார் திருஞானசம்பந்தரையே ஞானகுருவாக ஏற்றுப் பக்தியும், ஞானமும் புத்துயிர் பெறச் செய்துள்ளார்கள்.

தொடர்பு

இறைவனுக்கும் நமக்கும் ஓர் இணைப்புத் தேவை. திருஞான சம்பந்தர் தந்தை, மகன் உறவு கொண்டார். (சற்புத்திர மார்க்கம்) திருநாவுக்கரசரும் ஆண்டான், அடிமை உறவு கொண்டார். (தாஸ மார்க்கம்) ஆரூரர் நட்புறவு கொண்டார். (சக மார்க்கம்) மாணிக்கவாசகர் ஆசான், மாணாக்கர் உறவு கொண்டார். (சன் மார்க்கம்) இவை மட்டு மன்று காதலனாக, காதலியாக, அன்னையாக, குழந்தையாக, வழி காட்டியாக நம் உள்ளம் விரும்பிய வழியில் இறைவனோடு உறவு கொள்ளப் பழகிவிட்டால், அத்தகு உறவை அவனும் ஏற்று நம்மை வழிநடத்திச் செல்வான் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

பேதமில் வாழ்வு

பக்தர்களிடையே ஜாதியால், கல்வியால், குலத்தால், வடிவால், செல்வத்தால், செயலால் வேற்றுமை சிறிதும் இல்லை என்பார் பக்தி சூத்திரம் வகுத்த நாரதர். திருஞானசம்பந்தர் காலத்து அவருடன் சேர்ந்து பன்னிருவர் சிவபக்தியில் திளைத்து அறுபத்து மூவருள் இடம் பெற்றுள்ளனர். அப்பூதி அடிகளார் ஆளுடைய அரசின்பால் தீராத பக்தி கொண்டவர்; ஆளுடைய அரசும், திருஞானசம்பந்தரும் சேர்ந்தும், பிரிந்தும் பல தலங்களை நாடிச் சென்று, பக்தி மணம் பரப்பிப் பதிகம் பாடி புனிதம் பெறச் செய்துள்ளனர்; கணநாதர் சம்பந்தரை வழிபட்டு மற்றவர்க்கு வழிபாட்டு முறைகளைக் கற்பித்து வழிகாட்டியவர்; மங்கையர்க்கரசியும், குலச்சிறையாரும் ஆளுடைய பிள்ளையை ஆலவாய்க்கு அழைத்து, மன்னனைத் திருத்தி, சைவநெறி தழைக்கச் செய்தவர்கள்; குங்கிலியக்கலய நாயனார் பிள்ளையாரை அன்புடன் அழைத்து, உபசரித்து, தாம் பிறந்த ஊர் மணக்கச் செய்தவர்; சிறுத் தொண்டர் அன்பிற்கு இசைந்து திருஞானசம்பந்தர் திருச்செங்காட்டங் குடி சென்றார்; சிறுத்தொண்டர் எடுப்பித்த கணபதி ஈச்சரத்தை பாடிப் பரவினார்; 'பைங் கோட்டு மலர்ப் புன்னை' எனத் தொடங்கும் பதிகத்தில் சிறுத்தொண்டர் பெருவாழ்வை பார் மணக்கச் செய்துள்ளார்; திருநீலகண்ட யாழ்ப்பாணர் ஆளுடைய பிள்ளையாருடன் திருத்தல யாத்திரை மேற்கொண்டு யாழிசைத்தவர்; திருநீலநக்கரின் வேள்விச் சாலையிலே அவர் தங்க இடம் பெற்றார் எனின் பக்தர்களிடையே எந்தவித வேற்றுமை உணர்வும் இல்லை என்பதை அறியலாம். முருகநாயனார், திருநீலநக்கர், திருநீலகண்ட யாழ்ப்பாணர் இவர்கள் தத்தம் துணைவியாருடன் ஆளுடைய பிள்ளையின் தெய்வத் திருமணத்தில் கலந்து கொண்டு, பிள்ளையாருடன் சிவ சாயுச்சியம் பெற்றவர்கள்.

சம்பந்தர் போற்றிய பக்திச் செல்வங்கள்

வாலி

**''கோல மாமலரொடு தூபமும் சாந்தமும் கொண்டு போற்றி
வாலியார் வழிபடப் பொருந்தினார்''** (வடகுரங்காடு துறை)

நளன்

**''வளங்கெழுவு தீபமொடு தூபம் மலர் தூவி
நளன் கெழுவி நாளும் வழிபாடு செய் நள்ளாறே''.**

(திருநள்ளாறு)

மார்க்கண்டேயன்

**''நலமலி தருமறை மொழியொடு நதியுறு புனல் புகையொளி முதல்
மலநவை கொடுவழி படுதிறன் மறையவன்''** (திருவீழிமிழலை)

திருமால்

**''மால் ஆயிரங்கொண்டு மலர்கண் இடஆழி
ஏலா வலயத்தொடு ஈந்தான்''** (திருவீழிமிழலை)

திருமால் ஆயிரம் தாமரை மலர்களால் அர்ச்சிக்க முற்பட்டு, ஒரு மலர் குறைய, தம் கண்ணையே மலராக அர்ச்சித்து திருச்சக்கரம் பெற்ற வரலாறு இது.

சம்பாதி

**''யோசனைபோய் பூக்கொணர்ந்து அங்குஒருநாளும் ஒழியாமே
பூசனை செய்து இனிதிருந்தான்''.** (புள்ளிருக்கு வேளூர்)

சடாயு, சம்பாதி இருவரும் வழிபட்ட திருத்தலம் புள்ளிருக்கு வேளூர்.

இராமன் முதலானோர்

இராமன் இராவணனைக் கொல்லக் கருதி, இராமேஸ்வரத்தில் வழிபட்ட வரலாற்றை ஒரு பதிகம் முழுவதும் பாடுகிறார் சம்பந்தர்.

இலக்குவன், ஜாம்பவான், சுக்ரீவன், அனுமன் முதலானோர் வழிபட்ட திருத்தலம் திருவுசாத்தானம் என்கிறார்.

**''நீரிடைத் துயின்றவன் தம்பி நிள் சாம்புவான்
போருடைச் சுக்ரிவன் அனுமான் தொழ''.**

வேதங்கள்

வேதங்கள் வழிபட்ட திருத்தலம் திருமறைக்காடு அங்கே பாடுகிறார்:

**''பல காலங்கள் வேதங்கள் பாதங்கள் போற்றி
மலரால் வழிபாடு செய்மா மறைக்காடா!''**

மங்கையர்க்கரசி, குலச்சிறையார்

மங்கையர்க்கரசியார், குலச்சிறை நாயனார் பக்திச் சிறப்பைப் பாருக்குப் பறைசாற்றுகிறார் சம்பந்தர்.

''மங்கையர்க்கரசி வளவர் கோன்பாவை
வரிவளைக்கை மடமானி
பங்கயச் செல்வி பாண்டிமாதேவி
பணி செய்து நாடொறும் பரவ''

''கணங்களாய் வரினும் தமியராய் வரினும்
அடியவர் தங்களைக் கண்டால்
குணங்கொடு பணியும் குலச்சிறை''.

ஒரு பதிகம் முழுவதும் இந்த இருவரது அருஞ்செயலை மாற்றி மாற்றிப் போற்றுகிறார் திருஞானசம்பந்தர்.

வேள்வி வழிபாடு

அந்தணர்கள் செய்யும் வேள்வி வழிபாட்டை திருவீழிமிழலைப் பதிகத்தில் காட்டுகிறார்.

''புந்தியின் நான்மறை வழியே புற்பரப்பி
நெய் சமிதை கையிற்கொண்டு
வைந்தழலின் வேட்(டு) உலகின் மிக அளிப்போர்
சேரும் ஊர்மிழலை யாமே''.

மந்திகள்

மந்திகளும் மாதேவனைப் பணிகின்றதாம் பக்தி பெருக்கோடு திருமுதுகுன்றத்தில்,

''மந்தி யேறிஇன மாமலர்கள் பலகொண்டு
முந்தித் தொழுது வணங்குங் கோயில் முதுகுன்றே''.

இது என்ன வியப்பு? திருஞானசம்பந்தர் வரலாற்றில் சேக்கிழார் பெருமான் அவர் அவதரித்த சீகாழிப் பதியில் 'மரங்களும் ஆகுதி வேட்கும்'; 'தாமரையும் சாம வேதம் இசைக்கும்' என்கிறார். இவையாவும் ஒரு பானை சோற்றுக்கு ஒரு பதம்.

மற்ற மார்க்கங்களைக் காட்டிலும் பக்தி மார்க்கத்தால் இறைவனை அடைதல் எளிது என்கிறார் நாரதர். பக்தியால் செய்யும் பணிவிடை பயனைக் கருதியதன்று. அது பிரேமையால் முழுமனதுடன் செய்வது. திருஞானசம்பந்தர் போன்ற திருவருட்செல்வர்கள் சொல்லால் மட்டுமின்றி செயலால், உள்ளன்பால் பக்திப் பயிர்க்கு வித்திட்டு அறுவடையும் செய்தவர்கள்.

மகான்கள் உறவு

'ஜல மயமானவை மட்டும் தீர்த்தங்கள் அல்ல; மண்ணாலும், கல்லாலும் செய்த விக்கிரங்கள் மட்டும் தெய்வமல்ல. அவை நாளடைவில் புனிதத்தை அளிக்கின்றன. மகான்களோ தரிசித்த மாத்திரத்திலேயே பயனளிக்கிறார்கள்' என்கிறது பாகவதம். நாரதர் நவில்கிறார்: 'பக்தி சாஸ்திரங்கள் மனனம் செய்யத்தக்கவை. பக்தியை உண்டாக்கும் கருமங்களும் கூட செய்யத் தகுந்தவையாம்'. அதனால்தான் தேவார திருமுறைகள், திருவருட்பா மற்றும் ஞானியர் பாடிப் பரவிய பனுவல்கள் அனைத்தையும் பாராயணம் செய்கிறோம். ஆலயத் திருப்பணியில் ஆர்வமுடன் ஈடுபடுகிறோம்.

திருஞானசம்பந்தர் எலும்பைப் பெண்ணுருவாக்கினார். ஒரு வணிகப் பெண்ணின் துன்பங்கேட்டு, மனம் உருகி, விடத்தால் உயிர் நீத்த அவளது காதலனை உயிர்ப்பித்தார். அனல் வாதம், புனல் வாதங் களில் வெற்றி கொண்டார். அற்புதச் செயல்கள் பல புரிய அவரது ஆழ்ந்த தெய்வீக பக்தியே அவருக்கு உறுதுணையாயிற்று.

திருஞானசம்பந்தர் தவத்தையும், ஞானத்தையும் போற்றத் தவறவில்லை. அர்ச்சுனன் தவமும், பகீரதன் தவமும் அவர் உள்ளத்தைப் பெரிதும் ஈர்த்துள்ளன.

''ஒன்றிய தவத்து மன்னி உடையனாய் உலப்பில் காலம்
நின்று தன் கழல் ஏத்தும் நீள் சிலை விசயனுக்கு''

''அஞ்சையும் அடக்கி ஆற்றல் உடையனாய் அநேக காலம்
..........மன்னிய பகீரதற்கு''.

பகீரதன் தவம் அர்ச்சுனன் தவத்திலும் ஆற்றல் மிக்கது. திருமுதுகுன்றத்தில் ஞான, மோனச் செல்வரை நம் ஊனக் கண்களுக்குக் காட்டுகிறார் ஞானசம்பந்தர்.

''ஞானிகளாய் உள்ளார்கள் நான்மறையை
முழு துணர்ந்து ஐம்புலன்கள் செற்று
மோனிகளாய் முனிச் செல்வர் தனித்திருந்து
தவம்புரியும் முதுகுன்றமே''.

'தனித்திரு - பசித்திரு - விழித்திரு' என்ற அருட்பிரகாச வள்ளலாரின் தாரக மந்திரம் ஈங்கு நினைவிற்கு வருகிறது. 'ஒருநெறிய மனம் வைத்து உணர் ஞானசம்பந்தனல்லவா?' சீகாழிப்பதியிலே பேசுகிறார்.

''பத்திப் பேர் வித்திட்டே...........
.... நால் அந்தக் கரணமும் ஒரு நெறியாய்

சித்திக்கே உய்த்திட்டுந் திகழ்ந்த மெய்ப் பரம் பொருள்
சேர்வார் தாமே தானாகச் செயும் அவன் உறையுமிடம்''

மனம், புத்தி, சித்தம், அகங்காரம் எனும் அந்தக் கரணங்கள் நான்கும் ஒரு நெறியாய் இறைவன் பால் செலுத்துவார்க்கு அவன் தன்னையே தருவான் என்பதை எவ்வளவு அழகாக விளக்குகிறார்.

அவரது பக்திநெறி பராபக்தியின் பாற்பட்டது என்பதைத் திருவாவடுதுறைத் திருப்பதிகத்தால் யாரும் எளிதில் உணரக்கூடும்.

''இடரினும் தளரினும் என துறுநோய்
தொடரினும் உனகழல் தொழுதெழுவேன்''

''வாழினும் சாவினும் வருந்தினும்போய்
வீழினும் உனகழல் விடுவேனல்லேன்''

''நனவினும் கனவினும் நம்பா! உன்னை
மனவினும் வழிபடல் மறவேன்''.

ஆத்ம சமர்ப்பணம்

'ஆத்ம சமர்ப்பண பாவனையால் பேச்சு ஜபமாகிறது; கைத்தொழில் முத்திரையாகிறது; நடை வலம்வருதல் ஆகிறது; உண்ணும் உணவே வேள்வியாகிறது; தரையிற்கிடப்பதே வணக்கமாய் மாறுகிறது' என்கிறார் ஆதிசங்கரர் (சௌந்தர்ய லஹரி) இத்தகு ஆத்ம சமர்ப்பண பாவனையில் தம்மை முழுதும் பரமனுக்கே அர்ப்பணித்தவர் திருஞானசம்பந்தர், மாயையைக் கடக்க இதுவொன்றே வழி.

'மாயை முக்குண வடிவானது; தெய்வசக்தி நிறைந்தது; தாண்டுதற்கு அரியது; எவர்கள் என்னைச் சரணடைகிறார்களோ அவர்கள் இந்த மாயையைத் தாண்டுகிறார்கள்'' என்கிறான் கீதையிலே கண்ணன். மாயையைக் கடக்க மனோபலம் வேண்டும்; மகான்கள் கூட்டுறவு வெகு எளிதில் இச்செயலைச் செய்து முடிக்கிறது. திருஞானசம்பந்தர் போன்றோரை வழிகாட்டிகளாய்க் கொண்ட, அன்றும், இன்றும் எத்தனையோ பேர் மாயையைக் கடந்து முக்திக்கரையேறியுள்ளனர்; ஏறுகின்றனர்.

மாணிக்கவாசகர் வேண்டுகிறார்:

''அடியேன் உன் அடியார் நடுவுள் இருக்கும்
அருளைப் புரிவாய்''.

அடியார் திருக்கூட்டம் அது சத்சங்கம், நல்லோர் கூட்டுறவு. அன்று திருஞானசம்பந்தர் திருத்தல யாத்திரைச் செல்லுங்கால் உடன் பக்திப் பரவசத்தில் மூழ்கிய ஆன்மீகச் செல்வர்கள் உடன் சென்றனர் என்று வரலாறு பேசுகிறது.

மனிதர்கள் மட்டும் திருவீழிமிழலைத் திருப்பதியில் வேதம், கீதம் இசைக்கவில்லை; பறவைகளும், விலங்குகளும் கூட வேதம் இசைக்கிறதாம்; கற்கிறதாம்.

''படித்த நான்மறை கேட்டிருந்த **பைங்கிளிகள்**
பதங்களை ஓதப் பாடிருந்த
விடைக்குலம் பயிற்றும் விரிபொழில் வீழி''.

சொன்னதைச் சொல்லும் கிளிப்பிள்ளை. வேதத்தைச் செவிமடுத்த பைங்கிளிகள் வேதம் இசைக்கிறதாம். அருகிருந்த ஆனினங்கள் அவற்றைக் கற்கின்றதாம்! எத்தகு கற்பனை? எத்தகு சிந்தனை!

பக்தி என்பது தான் வணங்கும் தெய்வத்திடம் மட்டும் கொள்வதன்று. எல்லா உயிர்களிலும் இறைவனைக் காண்பதே பராபக்தி! அதிலும் அவனடியார்களிடம் கொள்ளும் அன்பிற்கு இணையேது? 'இறைவன் தொண்டர்தம் உள்ளத்து அடக்கம்' அதனால் தான் திருஞானசம்பந்தர் போன்ற அவதார புருஷர்கள் கூட, சிவனையும், சிவ வேடத்தையும், சிவன் சின்னங்களையும் ஒன்றாகவே கருதுகிறார்கள். பக்தி எவ்வாறு செய்ய வேண்டும் என்பதை அவர்கள் செயலால் காட்டிச் செல்கிறார்கள்.

திருஞானசம்பந்தர் காரைக்கால் அம்மையார் இறைவனின் களிநடம் கண்டுகளித்த திருவாலங்காட்டை மிதிக்க அஞ்சினர்; சண்டீச நாயனார் திரு அவதாரம் செய்த திருச்சேய்ஞலூர் செல்லுங்கால் சிவிகையினின்று இறங்கி நடந்து சென்று வழிபட்டுள்ளார். 'அங்கம் எட்டினும் ஐந்தினும் அளவின்றி வணங்கி' என்று குன்றத்தூர்ச் செல்வர் கூறுமாறு அஷ்டாங்க, பஞ்சாங்க நமஸ்காரம் செய்து பிறவிப் பயன்பெற வழிகாட்டியுள்ளார்கள். தலங்கள் தோறும். 'கோபுர தரிசனம் கோடி புண்ணியம்' என்பர். கோயில் வலம் வருதல் இறைவனின் திருவருளை விரைந்து கூட்டும். ஞானசம்பந்தர் இத்தகு நிலையில் ஆலய வழிபாட்டைச் செய்திட வழிகாட்டிய தன்மையைச் சேக்கிழார் பெருமான் திருவாக்கால் அறிந்து இன்புறுவோமாக.

''நீடு கோபுரம் இறைஞ்சிஉள் புகுந்து நீள் நிலையால்
மாடுசூழ்திரு மாளிகை வலங்கொண்டு வணங்கி
.......அருந்தமிழ் நவின்றார்''.

கோபுர தரிசனம், கோயில் வலம் வருதல், திருப்பதிகம் இசைத்தல் எனும் அவரது செயல்களை இத்தொடரால் அறிய முடிகிறது.

பக்தியின் பயன்

''போதொடு நீர்சுமந்து ஏந்தி முன்னின்று
அடி கையினால் தொழவல்ல தொண்டர்
அருவினையைத் துரந்து ஆட்செய்வாரே''.

பரவ வேண்டிய முறையும், அதன் பயனும் குறித்துக் கீழைத் திருக்காட்டுப்பள்ளித் திருத்தலத்தில் இவ்வாறு பாடுகிறார்.

''நெஞ்சார நீடு நினைவாரை
மூடுவினை தேய நின்ற விமலன்''

என்ற தொடரால் நெஞ்சார இறைவனை நினைப்பதால் பற்றிய வினை அகலும் என்கிறார்.

''நித்தலும் நியமம் செய்து நீள்மலர் தூவிச்
சித்தம் ஒன்ற வல்லார்க்கு அருளும் சிவன் கோயில்''.

என்ற சாய்க்காட்டுப் பதிகத்தால் நீரும் மலரும் கொண்டு வழிபடுவதோடு, நாளும் நியமம் தவறாமையும், சித்தம் ஒன்றனும் பக்தி செய்வார்க்குத் தேவை என்பதைக் குறிப்பிடுகிறார்.

''நாளுமிகு பாடலொடு ஞானமிகு நல்லமலர் வல்லவகையால்
தோளினொடு கைகுளிரவே தொழுமவர்க்கு அருள்செய்
சோதிஇடமாம்''.

இவ்வாறு திருவைகலூர் திருத்தலத்தில் இறைவனைப் பாடுகிறார். ஆடலும், பாடலும் உகப்பவன் அல்லவா இறைவன். 'ஞானமிகு நல்லமலர் வல்லவகை' என்ற தொடர் பொருள் பொதிந்தது.

திருமழபாடி என்னும் திருத்தலத்தில் தேவர்களும், சித்தர்களும் வழிபட்ட முறையையும் விளம்புகிறார்.

''தேவனுலா மலர் கொண்டு மெய்த்தேவர்கள் சித்தர்கள்
வால்நெய் அஞ்சுடன் ஆட்டமுன்ஆடிய பால்வணன்''.

'வீடுபேற்றிற்குக் காரணமாகும் சாதனங்களுள் பக்தியே சிறந்தது. தன்னுடைய உண்மை வடிவைத் தொடர்ந்து சிந்தித்தலே பக்தி' என்று விவேக சிந்தாமணி என்னும் ஞானநூலில் ஆதிசங்கரர் குறிப்பிடுகிறார்.

'ஸ்ரவணம் (கேட்டல்), கீர்த்தனம் (இசைத்தல்), ஸ்மரணம் (நினைத்தல்), பாதசேவை, அர்ச்சனம், வந்தனம், பணிவிடை, நட்பு, ஆத்ம நிவேதனம் என எண்பது வகையாக பக்தியைப் பகுக்கிறான் பிரகலாதன். (பாகவதம்). ஆத்ம நிவேதனம் என்னும் இறுதிப்படிக்கு பிற வழிகாட்டுவன.

இறைவனுடைய திருநாமமே ஒருவனைத் தூய்மை செய்யும். பக்தர்கள் நால்வகைப்படுவர்.

1. துன்பம் வருங்கால் தெய்வத்தை நாடுவோர்: (குந்திதேவி, த்ரௌபதி, பரிஷித்து).
2. பொருள் கருதி, பதவி வேண்டி தெய்வத்தை நாடுவோர்: (சுக்ரீவன், துருவன்).
3. அறிவு வேட்கையால் ஆண்டவனை நாடுவோர்: (வாசிஷ்டர், வியாசர்).
4. பலன் எதிர்நோக்கா பராபக்தி உடையவர்.

அனைவருமே நல்லோர்கள் தான். என்றாலும் பராபக்தியுடைய ஞானி எல்லோரிலும் உயர்ந்தவன்.

சேக்கிழார் வாக்கில் சம்பந்தர்

''சராசரங்கள் எல்லாம் சிவம் பெருக்கும் பிள்ளையார்; ஏகமாம் சிவமெய்ஞ்ஞானம் இசைத்தவர்; ஒரு பிறப்பும் எய்தாமை உடையார்; அஞ்செழுத்தின் மெய்யுணர்ந்தவர்; பேருணர்விற் பொலிகின்ற பிள்ளையார்'' என்று சேக்கிழார் பெருமான் ஞானசம்பந்தரைப் பல கோணங்களில் அறிமுகம் செய்கின்றார். பனை மரங்களுக்கும் சிவப்பேறு அளித்தவர் பிள்ளையார் என்றால் ஆறறிவுடைய மக்கள்பால் அவர் கொண்ட அன்பிற்கு எல்லையேது? உலகை உய்விக்கவந்த உத்தமர் வாழ்வில் காணும் பக்திச் சிறப்பை உணர்ந்து பக்திக்காகவே பக்தி செய்வோம்.

'பூழியர்கோன் வெப்பொழித்த புகலியர் கோன் கழல் போற்றி'

90. சம்பந்தரின் அற்புதத் திருப்பதிகங்கள்

சி. வாசுகி, பழனி.

'ஓடும் செம்பொனும் ஒக்கவே நோக்கி வீடும் வேண்டா விறலினராகிய' தேவார மூவர்களில் நற்றமிழ் வல்ல ஞானசம்பந்தர் சைவ சமய உலகத்திற்கு ஆற்றியுள்ள பணி அளவிடற்கரியதாகும். தமிழ் மக்கள் புறச் சமயங்களில் ஈடுபட்டு அச்சமயப் பொய்யுரைகளில் மதி மயங்கியிருந்த வேளையில் சிவநெறியை மக்கள் மனதில் விதைப் பதற்குத் தோன்றிய ஓர் அறிவுச் சுடராகத் தமிழ்நாட்டில் உருவெடுத்தார். புறச் சமயங்களுள் செல்வாக்கு பெற்றிருந்த சமண, பௌத்த நெறிகளைப் புறந்தள்ளிச் சிவநெறி சேர்தலின் அவசியத்தை வலியுறுத்துவதற்காகத் திருஞானசம்பந்தர் திருவாய் மலர்ந்தருளியுள்ள திருப்பதிகங்களுள் அற்புதத் திருப்பதிகங்களை மட்டும் தனித்துச் சிந்தித்தல் இக்கட்டுரையின் நோக்கமாகும்.

திருமுறைகள் பறைசாற்றும் அற்புதங்கள்

சைவ சமயக் குரவர்களில் முதன்மையானவராகிய ஞானசம்பந்தரின் தேவாரப் பாடல்கள் முதல் மூன்று திருமுறைகளாகப் பகுக்கப்பட்டுள்ளன. இம்மூன்று திருமுறைகளிலும் சம்பந்தர் நிகழ்த்தியுள்ள இருபத்தி இரண்டு விதமான அற்புதங்களை முறைப்படக் காண்கின்றோம். ஞானப் பாலுண்டது, பொற்றாளம் பெற்றது, முயலகன் நோய் தீர்த்தது, நளிர்சுரம் போக்கியது, படிக்காசு பெற்றது, ஆண்பனை பெண்பனையாக்கியது, யாழிசை அமைதிக்கு அடங்காமல் பாடியது ஆகிய ஏழு அற்புதங்கள் முதல் திருமுறையில் சொல்லப்பட்டுள்ளன. முத்துச் சிவிகை, முத்துக் குடை, முத்துச் சின்னம் ஆகியன பெற்றது, விடம் தீர்த்தது, மறைக்கதவு அடைத்தது, கோள் நிலை பற்றிப் பாடியது, வெப்பு நோய் தீர்த்தது, எலும்பைப் பெண்ணாக்கியது ஆகிய ஆறு அற்புதங்கள் இரண்டாம் திருமுறையில் காணப்படுகின்றன. முத்துப்பந்தல் பெற்றது, பொற்கிழி பெற்றது, வெப்பு நோய் அளித்தது, தேவார ஏட்டினைத் தீயில் இட்டு எடுத்தது, வையை ஆற்றில் தேவார ஏடு எதிர்த்தோடச் செய்தது, பாண்டியன் கூன் நிமிர்த்தது, ஏடெதிர் நிற்கச் செய்தது, ஓடம் செலுத்தியது, சோதியில் கலந்து முக்தி பெற்றது ஆகிய ஒன்பது அற்புதங்கள் மூன்றாம் திருமுறையிலும் காணப்படுகின்றன. ஞானசம்பந்தர் பாடியுள்ள பண்களின் அடிப்படையாகப் பதிப்பிக்கப்பட்டுள்ள தேவார நூல் வழி இப்பகுப்பு முறை கணக்கிடப்பட்டுள்ளது.

அற்புதங்கள் விளைந்த அருள் வரலாறு

ஞானப்பாலுண்ட நற்றமிழ் பிள்ளை பாடியுள்ள தேவாரப் பாடல்கள் அனைத்தும் நேர்த்தி, இலக்கியத் தரம், செறிவு, இயற்கைப் புனைவு ஆகியனவற்றில் அற்புதங்களாகவே மிளிர்கின்றன. இவற்றுள் சமண பௌத்த சமயக் கருத்துக்களில் ஒன்றியுள்ள தமிழ் மக்களை சைவ சமயப் பற்றுடையவர்களாக மாற்றுவதற்காகப் பல்வேறு நிலைகளில் அற்புதங்களை நிகழ்த்திக் காட்டப் பயன்பட்டுள்ள பதிகச் செய்திகளை மட்டும் இக்கட்டுரையில் திருமுறை வரிசையாகக் காண்போம். அற்புதங்கள் நிகழ்த்துவதற்கு; நிகழ்வதற்கு ஏதுவாக இப்பதிகங்கள் அமைந்ததால் இவற்றை அற்புதத் திருப்பதிகங்கள் என்கிறோம்.

முதல் திருமுறை வெளிப்படுத்தும் அற்புதத் திருப்பதிகங்கள்

1. ஞானப்பாலுண்டது (திருப்பிரமபுரப் பதிகம்)

குளத்தில் இறங்கி நீராடிய தன் தந்தையைக் காணாது மூன்று வயதுச் சிறு குழந்தை அம்மே! அப்பா! என்று அழைத்து அழத் தொடங்கியது. குழந்தையின் அழுகுரல் கேட்டு இறைவனும் இறைவியும் அம்மையப்பராகக் குழந்தையின் முன் தோன்றினர். இறைவனின் கருணையினால் இறைவியின் திருமுலைப்பாலுடன் சேர்த்துச் சிவஞான இன்னமுதினையும் பெற்ற அக்குழந்தை அன்று முதல் ''திருஞானசம்பந்தன்'' என்று அழைக்கும் பேறு பெற்றது. நீராடி முடித்துத் திரும்பிய தந்தையார் பாலறாவாயனாய் நின்ற பாலகனைக் கண்டு, உனக்குப் பாலூட்டியவர் யார்? என்று சினந்து கேட்டபொழுது, பராசக்தியோடு காட்சியளித்த பரமசிவனின் உருவப் பொலிவை உலகோர் உய்யும் வண்ணம்,

> **''தோடுடைய செவியன் விடையேறியோர் தூவெண் மதிசூடி**
> **காடுடையசுட லைப்பொடி பூசியென் னுள்ளங்கவர் கள்வன்**
> **ஏடுடைய மல ரான்முனை நாட்பணிந் தேத்தவருள் செய்த**
> **பீடுடைய பிர மாபுரமேவிய பெம்மானி வன்றே''** (1:1:1)

என்று பாடிக் காண்பித்தது. அதுகேட்ட யாவரும் 'அற்புதம் அற்புதம்' என்று வியந்து இறைவனின் மகிமையைப் புகழ்ந்து குழந்தையைச் சூழ்ந்து வணங்கினர்.

2. பொற்றாளம் பெற்றது (திருக்கோலக்கா பதிகம்)

சம்பந்தர் திருக்கோலக்கா பதியை அடைந்து வலம் வந்து, கையினால் தாளமிட்டு, ''மடையில் வாளை பாய மாதரார்'' (1:23:1) என்கின்ற பதிகம் பாடினார். உடனே சிவபெருமான் திருவருளால் 'பஞ்சாட்சரம்' வரையப்பெற்ற பொற்றாளம் சம்பந்தரின் திருக்கரத்தே வந்து சேர்ந்தது. பிஞ்சுக்கரம் அடிக்கடிக் கைத்தாளமிட்டுச் சிவந்து காணப் பட்டதைப் பொறுக்கமாட்டாத இறைவன் பொற்றாளம் அளித்த நிகழ்வும்,

ஓசையெழும்பாத பொற்றாளத்திற்கு ஓசை கொடுத்ததையும் இங்கு மாபெரும் அற்புதமாகக் கொள்ளலாம்.

3. முயலகன் நோய் தீர்த்தது (திருப்பாச்சிலாச்சிராமப் பதிகம்)

கொல்லிமழவன் என்னும் அரசனின் மகளுக்கு 'முயலகன்' என்னும் தீராத நோய் ஒன்று ஏற்பட்டது. அந்நோயைத் தீர்க்க இயலாத மன்னன் ஞானசம்பந்தரைக் கண்டு வணங்கித் தம் மகளின் நோய் தீர்க்குமாறு வேண்டினான். சம்பந்தர் மனமிரங்கிச் சிவபெருமானைச் சிந்தித்து,

> **"துணிவளர்த்திங்கள் துளங்கிவிளங்கச் சுடர்ச்சடை சுற்றிமுடித்துப்**
> **பணிவளர்கொள்கை யர்பாரிடஞ்சூழ வாரிடமும் பலிதேர்வர்**
> **அணிவளர்கோல மெலாஞ்செய்து பாச்சி லாச்சிரா மத்துறைகின்ற**
> **மணிவளர்கண்டரோ மங்கையைவாட மயல்செய்வதோ**
> **இவர் மாண்பே"** (1:44:1)

என்னும் பதிகத்தினை அருளிச் செய்தார். மழவன் மகள் பிணிநீங்கி எழுந்து தந்தையின் பக்கம் சார்ந்த அற்புதத்தைக் கண்ட மக்கள் ஆனந்தக் கூத்தாடினர். 'பிணிதவிர்க்கும் பெரும் பதிகம்' என்ற அற்புதப் பெயர் பெற்றது இப்பதிகம்.

4. நளிர்சுரம் போக்கியது (பொதுப் பதிகம்)

கொடிமாடச் செங்குன்றூரில் சம்பந்தர் தங்கியிருந்த காலம் பனிக் காலமாக அமைந்ததால் அடியார்கள் அனைவரும் நளிர்சுரத்தினால் வருந்தினார்கள். அவர்களின் வாட்டத்தைப் போக்கும் பொருட்டு, 'நீலகண்டமே எந்நாளும் அடியார் இடர்தீர்க்கும் அருந்துணை' என்று எண்ணி, "அவ்வினைக் கிவ்வினை யாமென்று சொல்லு மஃதறிவீர்" (1:116:1) என்னும் திருப்பதிகத்தினை அருளிச் செய்தார். இப்பதிகப் பாடல் ஒவ்வொன்றின் இறுதியடியிலும் 'செய்வினைத் தீண்டா திருநீலகண்டம்' என்று ஆணை வைத்து அருளிச் செய்ததின் காரணமாக அடியார்களுக்கு மட்டுமன்றி அந்நாட்டினர் அனைவருக்கும் நளிர்சுரம் தீர்ந்தது என்பது பெரும் அற்புதமாகக் கருதப்படுகிறது.

5. படிக்காசு பெற்றது (திருவீழிமிழலை பதிகம்)

திருவீழிமிழலையில் மாரி வளங்குன்றி பஞ்சமேற்பட அடியார்கள் யாவரும் பசிப்பிணியில் வருந்தினர். அதுகண்ட சம்பந்தரும் நாவுக்கரசரும் சிவபெருமானைத் தொழுது, 'படிக்காசு' பெற்று அடியார்களுக்கு அமுதளித்தனர். நாவுக்கரசர் திருமடத்தில் காலந்தாழ்த்தாது அமுதூட்டப் பெறுதலையும் தமது காசு வட்டம் கொடுத்து மாற்றப் பெறுதலையும் அறிந்த சம்பந்தர் திருக்கோயிலுக்குச் சென்று, "வாசி தீரவே காசு

நல்குவீர், மாசின் மிழலையீர் ஏசல் இல்லையே'' (1:92:1) என்று பதிகம் பாடி வாசியில்லாக் காசு வேண்டிப் பெற்றார். அதன் பின்பு உரிய நேரத்தில் அமுதளிக்கப்பட்ட அற்புதம் தொடர்ந்து நடந்தது.

6. ஆண்பனை பெண்பனையாக்கியது (திருவோத்தூர்ப் பதிகம்)

திருவோத்தூரில் தங்கியிருந்த சம்பந்தரை அடியவர் ஒருவர் அழுதுகொண்டே வந்து வணங்கினார். சம்பந்தர் காரணம் என்ன? என்று வினவ, அவர் ''அடியேன் இறைவனுக்காக வைத்த பனைகள் எல்லாம் ஆண்பனைகளாக அமைந்து காய்க்காமல் போய்விட்டன. அதனைக் கண்ட சமணர்கள் ஏளனம் செய்கின்றனர்'' எனக் கூறினார். உடனே சம்பந்தர் சிவனடியாரின் அடிமைத்திறத்தை நோக்கிக் கோயிலை யடைந்து, ''பூத்தேர்ந்தாயன கொண்டு நின் பொன்னடி, ஏத்தா தாரில்லை'' (1:54:1) என்னும் திருப்பதிகத்தைத் தொடங்கிப் பாடி முடித்தார். இப்பதிகப் பதினோராம் திருப்பாட்டில், ''குரும்பை யாண்பனை யீன்குலை ஓத்தூர்'' என்று குறிப்பிட்டுத் திருக்கடைக்காப்பு இட்டபொழுது அப்பனைகள் எல்லாம் குலை தள்ளின என்னும் செய்தி கேள்விப்பட்ட மக்கள் அனைவரும் சம்பந்தரின் அற்புதத்தை எண்ணி வியந்தனர்.

7. யாழிசை அமைதிக்கு அடங்காமற் பாடியது (யாழ்மூரிப் பதிகம்)

சம்பந்தர் திருத்தருமபுரம் வந்து தங்கியிருந்தார். திருநீலகண்ட யாழ்ப்பாணரின் இசை காரணமாகத்தான் சம்பந்தரின் பதிகங்கள் சிறப்புப் பெறுகின்றன என்று உறவினர்கள் புறம்பேசக் கண்டு மனம் வருந்திய பாணர் ஞானசம்பந்தரைச் சென்று சந்தித்து 'திருப்பதிக இசை, யாழ் கருவியின் இசைக்கு அடங்காத பெருமையுடையது என்பதை எமது உறவினருக்கு உணர்த்தும் வண்ணம் ஒரு திருப்பதிகம் பாடியருளுமாறு வேண்டினார். சம்பந்தர் அதற்கு உடன்பட்டு, ''மாதர்ம டப்பிடியும் மட வன்னமு மன்னதோர், நடையுடைம் மலைமக டுணையென மகிழ்வர்'' (1:136:1) என்ற அடியெடுத்துப் பதிகம் பாடிக் காட்டினார். இப்பதிக இசை யாழிசைக்கு அடங்காது போயிற்று. 'இறைவனது புகழ் இவ் இசைக்கருவியில் அடங்குதல் முடியாது' என்ற அற்புதத்தை அனைவரும் உணரும் வண்ணம் நிகழ்த்திக் காட்டியுள்ளார்.

இரண்டாம் திருமுறை வெளிப்படுத்தும் அற்புதத் திருப்பதிகங்கள்

1. முத்துச்சிவிகை, முத்துக்குடை, முத்துச்சின்னம் பெற்றது

(திருநெல்வாயில்அரத்துறை பதிகம்)

திருநெல்வாயில் அரத்துறை இறைவனை வணங்க விரும்பிய சம்பந்தர் தன் தந்தையாரின் தோளினின்றும் இறங்கித் திருவடி நோவ நடந்து வந்து தங்கினார். சம்பந்தரின் பாதங்கள் புண்ணாவதைப்

பொறுக்க இயலாத இறைவன் அரத்துறை அந்தணர்களின் வாயிலாக முத்துச்சிவிகை, முத்துக்குடை, முத்துச்சின்னம் ஆகியனவற்றைச் சம்பந்தருக்கு கிடைக்கும்படிச் செய்தார். அந்தணர்கள் அளித்த அவற்றை ஏற்று வணங்கி, ''எந்தை யீசன் எம் பெருமான் ஏறமர் கடவுளென்று ஏத்திச் சிந்தை செய்பவர்க்கல்லால் சென்று கை கூடுவது அன்றால்'' (2:226:1) என்ற பதிகம் பாடி ஐந்தெழுத்து ஓதிச் சிவிகையில் ஏறினார். அடியார்கள் தாங்கிநின்ற முத்துச்சிவிகை, குடை, சின்னங்களை மக்கள் பார்த்து அதிசயித்து அடியொற்றினர்.

2. விடந்தீர்த்தது (திருமருகல் திருப்பதிகம்)

சம்பந்தர் திருமருகலில் எழுந்தருளிய காலத்தில் வணிகன் மகளொருத்தி, தன்னை மணக்க இருந்தவன், மடத்தில் இரவில் தூங்கும் பொழுது பாம்பு தீண்டி இறக்க, அழுது புலம்பும் ஒலி கேட்டது. அதனைக்கேட்ட சம்பந்தர் அவன் விடம் தீர்ந்து எழுந்து நிற்கச் செய்தற் பொருட்டு,

"சடையா யெனுமால் சரண்நீ யெனுமால்
விடையா யெனுமால் வெருவா விழுமால்
மடையார் குவளை மலரும் மருகல்
உடையாய் தகுமோ இவள் உண் மெலிவே" (2: 154:1)

என்னும் பதிகம் பாடி, அவ்வணிகனை உயிர்பெற்றெழச் செய்து, இவ்விரு வருக்கும் திருமணம் நிகழ்த்தி வைத்து அற்புதத்தை விளைவித்தார்.

3. மறைக்கதவு அடைத்தது : (திருமறைக்காட்டுப் பதிகம்)

திருமறைக்காட்டில் வேதங்களால் அடைக்கப்பட்டிருந்த திருக்கோயில் கதவங்களை திருநாவுக்கரசரைப் பாடச் சொல்லித் திறப்பித்து,

"சதுரம்மறை தான்துதி செய்து வணங்கும்
மதுரம் பொழில் சூழ் மறைக்காட் டுறைமைந்தா
இதுநன் கிறைவைத் தருள்செய்க எனக்குன்
கதவந் திருக்காப் புக்கொள்ளுங் கருத்தாலே" (2:173:1)

என்ற பதிகம் பாடிச் சம்பந்தர் கதவு மூடச் செய்தார். அன்று முதல் அக்கதவு வழக்கம் போல் திறக்கவும் மூடவும் முடிந்த அற்புதத்தை உலகம் உய்ய இருவரும் நிகழ்த்திக் காட்டினர்.

4. கோள்நிலை பற்றிப் பாடியது: (கோளறு பதிகம்)

நாளும் கோளும் நலிந்தோர்க்கில்லை. சிவனருளால் கோள்நிலைகள் எல்லாம் நல்லவனாகவே அமையும் என்று திருநாவுக்கரசருக்கு ஆறுதல் கூறி, ''வேயுறு தோளிபங்கன் விடமுண்ட கண்டன்'' (2:221:1) என்று பதிகம் பாடினார். இப்பாடலில் கோள்நிலை அடியவர்களுக்கு நல்லனவே

செய்யும் என்று கூறப்பட்டுள்ளதால் சைவ சமயத்தினர் இன்றும் இதனை ஓதி தீய நாட்களை விலக்கி உய்தி பெறுகின்றனர். இறையருளால் அன்று ஞானசம்பந்தருக்குக் கோள்நிலையை மாற்றக்கூடிய அற்புதச் சக்தி வாய்த்தது.

5. வெப்பு நோய் தீர்த்தது : (திருஆலவாய்ப் பதிகம்)

சம்பந்தர் மடத்திற்குச் சமணர்கள் இட்ட தீ பையவே சென்று பாண்டியனைத் தாக்கியது. நோய் பொறுக்கமாட்டாத மன்னவன் குலச்சிறையாரின் வேண்டுகோளின்படி சம்பந்தரை அழைத்துவர வேண்டினான். சமணர்களின் மருத்துவத்தால் பொறுக்க இயலாமல் வருந்திய பாண்டியனின் வெப்பு நோயை விலக்குவதற்காக ஆலவாய் அண்ணலை நினைத்து, ''மந்திரமாவது நீறு'' (2:202:1) என்ற பதிகம் பாடித் திருநீறு சாத்தினார். திருநீறு உடலில் பட்ட மாத்திரத்தில் அவனது வெப்பு நோய் அகன்ற அற்புதம் அனைவரும் காணும்படி நிகழ்ந்தது.

6. எலும்பைப் பெண்ணாக்கியது (திருமயிலாப்பூர் பதிகம்)

சிவநேசர் என்னும் அடியவர் ஞானசம்பந்தரைத் தரிசித்து, அரவு கடித்து இறந்த தம் மகள் பூம்பாவையின் வாழ்வினைக்கூறி வணங்கி நின்றார். சம்பந்தர் அவர்பால் திருவருள் செலுத்தி அவர் சேமித்து வைத்திருந்த எலும்புக் குடத்தைக் கொண்டுவரச் சொன்னார். அதனைச் சுவாமியின் முன் வைத்து,

''மட்டிட்ட புன்னை யங்காணல் மடமயிலைக்
கட்டிட்டங் கொண்டான் கபாலீச்சரம் அமர்ந்தான்
ஒட்டிட்ட பண்பின் உருத்திர பல்கணத்தார்க்
கட்டிட்டங் காணாதே போதியோ பூம்பாவாய்'' (2:183:1)

என்ற பதிகம் பாடவும் குடமுடைந்து உருப்பெற்றுப் பூம்பாவை வெளித்தோன்றிய அற்புதம் நிகழ்ந்தது.

மூன்றாம் திருமுறை வெளிப்படுத்தும் 1. முத்துப்பந்தல் பெற்றது, 2. பொற்கிழி பெற்றது, 3. பாண்டியன் வெப்பு நோய் பெற்றது, 4. தேவார ஏட்டினைத் தீயிலிட்டு எடுத்தது, 5. வையையாற்றில் தேவார ஏடு எதிர்த்துச் செலுத்தியது, 6. பாண்டியன் கூன் நிமிர்த்தது, 7. ஏடெதிர் நிற்கச் செய்தது, 8. ஓடம் செலுத்தியது, 9.சோதியில் கலந்து முக்தி பெற்றது ஆகிய ஒன்பது அற்புதத் திருப்பதிகங்களின் மகிமைகள் சிந்தித்து மகிழ்வதற்கு உரியனவாய் என்றென்றும் உள்ளன.

1. ஞானசம்பந்தர் நிகழ்த்தியுள்ள இவ் அற்புதப் பதிகங்களை அவர் சென்ற தலயாத்திரையோடு தொடர்புபடுத்தித் 'தலமுறை' வரிசைப்

படியே சொல்லப்பட்டிருக்க வேண்டும். ஆனால் திருமுறை வரிசைப் படிச் சொல்ல நேர்ந்ததால், பண் அடிப்படையில் பதிக்கப்பட்டுள்ள திருமுறை ஒழுங்கில் (பண்முறைப் பதிப்பு) ஒன்றன்பின் ஒன்றாகச் சொல்லப்பட்டுள்ளன.

2. அற்புதங்கள் நிகழ்த்த வேண்டிய சூழ்நிலை, அதற்கென அமைந்த பதிக முதற்பாடல், அற்புதம் கண்டு மகிழ்ந்த உலகோர் நிலை, அற்புதங்களால் விளைந்த சைவ சமய மறுமலர்ச்சி ஆகியன வற்றை மையமாகக் கொண்டு இக்கட்டுரை அமைந்துள்ளது.

3. அற்புதப் பதிகங்களைச் சொல்வதில் முன் ஆய்வாளர்களின் நூல் களில் விளக்கமாகவும், சுருக்கமாகவும்: விடுபட்டும்போன செய்திகள் அனைத்தும் இக்கட்டுரையில் ஒரு தொகுப்பு முயற்சியாக ஒருங்கு திரட்டப்பட்டுள்ளன.

4. திருஞானசம்பந்தரின் தேவாரக் குறிப்புக்களை மட்டுமே அடிப்படை யாகக் கொண்டு, அற்புதப் பதிகங்கள் மேற்கோள்களாகக் காட்டப் பட்டுள்ளன.

91. தமிழ் எனும் சொல்லின் ஆட்சி

ச. விசயலட்சுமி, தஞ்சாவூர்.

மொழியும், சமுதாயமும் இரண்டறக் கலந்தது. ஒரு சமுதாயம் வளர வளரச் சமுதாயத்துடன் தொடர்புபெற்று மொழியும் வளர்கின்றது. நன்கு வளர்ச்சியடைந்த மொழியினையும் முழு நிலையில் வளர்ச்சி யடைந்த மொழியைப் பேசும் சமுதாயம் முழுச்சமுதாயமாகவும் விளங்கிடக் காணலாம். சமுதாயத்தின் அமைப்பிற்கும், வளர்ச்சிக்கும் ஏற்ப மொழிகளில் தோன்றும் இலக்கியங்களும் பல்வேறு நிலைகளில் வளர்ச்சியடைந்திருக்கின்றன. சங்க இலக்கியச் சமுதாயவாழ் நெறிகளை வெளிக்காட்டும் சங்க இலக்கியங்களும், சங்க மருவிய காலத்து இலக்கியங்களும் அதனை அடுத்து இடைக்காலத்தில் வெளிவந்த காப்பியங்களும், பக்தி இலக்கியங்களும் இதற்குச் சான்றாக விளங்கு கின்றன. அக-புறச் சமுதாய வாழ்க்கைச் சூழ்நிலைகளைச் சித்திரிக்கும் இலக்கியங்களை அடுத்து வெளிவந்த இடைக்கால இலக்கியங்கள் சமுதாயம் மற்றும் குடும்ப அமைப்பைக் கட்டுப்படுத்தும் வகையில் திகழும் ஆன்மீகச் செயல்பாடுகளையும், வழிமுறைகளையும் உள்ளடக்கியனவாக அமைந்துள்ளன. இடைக்காலத்து எழுந்த இலக்கியங்களின் கடவுளர்கள் கதாநாயகர்களாக ஆக்கப்பட்டனர். இக்காலத்திலேயே ஆன்மீக நெறியில் வாழ்வோடு வாழ்வாக ஒன்றித் திளைத்த கடவுள் அடியார்கள் கதாநாயகர் களாகச் சித்திரிக்கப்பட்டனர். பக்தி இலக்கியக் காலத்தில் பாடற் பொருளிலும் மொழி நடையிலும் கருத்தோட்டத்திலும் பொருள் வெளிப் பாட்டிலும் சமுதாயத்தினைக் கவர்ந்து விளங்கியவை திருமுறைகள் ஆகும். சைவ சமயத்திற்கு அருளுடைய சைவக்குரவர் மூவரும் செய்த பேருதவி அளவிடற்கரியது. இவர்கள் மூவரையும் சைவசமயாசாரியார் என்று ஆன்றோர் கூறுவர். திருமுறைகளுள் தலையானவை மூவர் திருமுறைகளாகும். மூவரில் பல்லாற்றானும் சிறப்பிற்குரியவர் திருஞான சம்பந்தர் ஆவார். குழந்தைப் பருவத்திலேயே ஞானப்பால் உண்டு பாவளம் செழிக்க வாழ்ந்தவர் ஞானசம்பந்தர் ஆவார். தள்ளாத வயதில் இறைக்காட்சியைக் கண்ட அப்பருடனும் திருமணக் கோலத்தில் தடுத்தாளப்பட்ட சுந்தரருடனும் ஒப்பிடுகையில் இளம் வயதிலே சொல்வன்மை பெற்று இறைவனைத் தன்பால் ஈர்த்தவர் ''ஞானசம்பந்தர்'' என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

முடியுடை மூவேந்தர்களாகிய சேர, சோழ, பாண்டியர்கள் ஆட்சி யானது திறம் குன்றித் தமிழ்ச்சங்கம் முதலியன மறைந்து களப்பிரர், பல்லவர் ஆகிய வேற்றுப் பண்பாளர்களின் ஆட்சியும் ஆதிக்கமும் மேலோங்கி நம் தமிழ் மக்கள் பல்லாற்றானும் நலிந்து, சிதைந்து கிடக்க நேர்ந்த பொழுது தமிழ் உணர்வையும், பற்றையும், ஆர்வத்தையும் மக்களிடையே தோற்றுவித்து சமுதாயத்தில் ஒரு பெரும் எழுச்சியையும், மறுமலர்ச்சியையும் தந்து பெருந்தொண்டாற்றியவர் 'தமிழ் ஞானசம்பந்தன்' பெருந்தகையாரேயாவர். (ந.ரா. முருகவேள், சைவசித்தாந்தம், ப.154)

சைவ சமயத்திற்கு அழியாத நிலைக்களம் திருக்கோயில்கள் ஆகும் என்பதை நன்குணர்ந்து பல திருத்தலங்களுக்கும் சென்று ஆங்காங்கமைந்த சிவாலயங்களில் இன்னிசையால் பாடல்கள் பாடித் தமிழுக்குத் தொண்டாற்றிச் சைவ சமயத்தை நாடறியச் செய்தவர் ஞானசம்பந்தர் ஆவார். சம்பந்தர் சுவாமிகளின் அருள் சமயப் பணியை ''ஆதிசங்கராச்சாரிய சுவாமிகள்'' தமது செளந்தர்யலஹரி என்ற ஸ்தோத்ர நூலில் ஒரு சுலோகத்தில் வாயாரப் புகழ்ந்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ம.பாலசுப்பிரமணிய முதலியார், தேவாரம் அடங்கன் முறை, ப.7)

திருஞானசம்பந்தர் சிவன் உறையும் பல திருத்தலங்களுக்கும் சென்று பல்லாற்றானும் இறைவனைப் புகழ்ந்து பாடிப் பரப்பிய பாடல்கள் 4158 ஆகும். இப்பாடல்கள் 386 பதிகங்களைக் கொண்டவை. முதற் பதிகத்தில் ''மேவிய பெம்மானிவனன்றே'' என்ற அடியைக் கொண்டு முதல் பத்துப் பாடல்களிலும், ''புகலூரே'' என்ற வாக்கியம் இரண்டாவது பத்துப் பாடல்களிலும், ''விண்ணிழி கோயில் விரும்பியதே'' என பத்துப் பாடல்களிலும் பாடியுள்ளார். இதுபோன்று பெரும்பாலான பதிகங்களில் ஒரு குறிப்பிட்ட தொடரைப் பயன்படுத்தும் தன்மை காணப்படுகிறது. சம்பந்தரின் பாடல் இனிமையைச் சுந்தரர் ''தமிழ் பரப்பும் ஞானசம்பந்தன்'' எனப் போற்றுகின்றார்.

திருஞானசம்பந்தர் திருக்கோலக்கா, திருநனிப்பள்ளி திரு எருக்கத்தம் புலியூர், திருநெல்வாயில் அரத்துறை, திருப்பாச்சில் ஆச்சிரமம், திருக்கொடிமாடச்செங்குன்றூர், பட்டிச்சரம், திருவாவடுதுறை, திருத்தருமபுரம், திருச்செங்காட்டங்குடி, திருச்சாத்தமங்கை, திருமருகல், திருக்கடவூர், திருவீழிமிழலை, திருமறைக்காடு, திருநள்ளாறு, திருக்கொள்ளம் பூதூர், போதிமங்கை, திருப்பூந்துருத்தி, திருஒத்தூர், திருவெற்றியூர், திருநல்லூர்ப் பெருமணம் இதுபோன்ற பல தலங்களுக்குச் சென்று பல பதிகங்களைப் பாடியுள்ளார். தமிழ் மொழியை வாழ்விக்கத் தோன்றியவர் களுள் ஒருவர் ஞானசம்பந்தர் என்றும் நாளும் இன்னிசையால் தமிழ்

பரப்பிய ஞானசம்பந்தர், நல்ல தமிழ் வல்லவன் என குறிப்பிட்டுப் போற்றப்பட்டுள்ளார். (எம்.ஆர். அடைக்கலசாமி தமிழ் இலக்கிய வரலாறு, ப.145)

திருஞானசம்பந்தர் சிறுவயதிலே இறைஞானம் எய்தி இறைவன் அழகை எழில் மணம் பொங்கும் செய்யுள் வடிவில் பாடியுள்ளார். சம்பந்தர் பாடல்களில் ''இறைவனின்'' குணநலன்கள் வெகுவாகப் போற்றப்படுகின்றன. இதற்குப் பின்வரும் பாடலைச் சான்றாகக் காட்டலாம்.

''தோடுடைய செவியன் விடையேறிஓர் தூவெண் மதிசூடிக்
காடுடைய சுடலைப் பொடி பூசி என்உள்ளம் கவர்கள்வன்
ஏடுடைய மலரான் முனைநாள் பணிந்து ஏத்த அருள் செய்த
பீடுடைய பிரமாபுரம் மேவிய பெம்மான் இவன் அன்றே''

(1)

சைவர்களுக்குத் திரு அணியாய் போற்றப்படும் திருநீற்றை நோய் தீர்க்கும் மந்திரமாக மாற்றியவர் ''சம்பந்தர் சுவாமிகள்'' எனக் கூறின் அது மிகை ஆகாது. சம்பந்தர் கூறும் திருநீறு மந்திரம்:

''மந்திரம் ஆவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தரம் ஆவது நீறு துதிக்கப் படுவது நீறு
தந்திரம் ஆவது நீறு சமயத்தில் உள்ளது நீறு
செந்துவர் வாய் உமை பங்கன் திரு ஆலவாயான் திருநீறே''

(2178)

இப்பாடலில் திருநீற்றின் பெருமை பலவாறு போற்றப்படுகின்றது.

திருஞானசம்பந்தர் பாடல்களில் பக்தியும் வழிபாடும் பல்வேறு நிலைகளில் மேலோங்கி நிற்கின்றன. சம்பந்தர் பாடல்கள் ஆன்மீகத்தையும் சமுதாய ஒருங்கிணைப்பையும் கொண்டனவாய் விளங்குகின்றன. கடவுளோடு ஒன்றிணைந்து பாடும் வகையில் பல பாடல்கள் சம்பந்தர் தேவாரத்தில் அமைந்துள்ளன. இப்பாடல்கள் தெய்வத்தை வேண்டி விரும்பி வரம் கேட்பது போன்றும் அன்புடன் அழைத்து வேண்டுவது போன்றும் இறங்கி தாழ்ந்து வேண்டுவது போன்றும் அமைந்துள்ளன. ஈசன் கவனத்தை தன்பால் ஈர்த்து முக்தி பெற்றிட மொழியை ஒரு கருவியாகக் கையாண்டுள்ளவர்களில் சம்பந்தரும் ஒருவர் ஆவர். சம்பந்தர் பாடல்களில் சிறப்பை, சொல்லாட்சியையும், மொழிநடையையும் கொண்டு எளிதில் தெரிந்து கொள்ளலாம். இக்கட்டுரையில் சம்பந்தர் பாடல்களில் இடம்பெறும் ''தமிழ் எனும் சொல்லின் ஆட்சி'' சொற்பொருண்மை செய்திகளுடன் சுருக்கமாக விளக்கம் பெறுகின்றது.

தமிழ் எனும் சொல் திருஞானசம்பந்தர் பாடல்களில் 191 இடங்களில் பயின்று வந்துள்ளது. இச்சொல் தனியாகவும் அடைச்சொற்களுடனும்

வழங்கப் பெற்றுள்ளது. இச்சொல் கூட்டுச் சொல்லாகவும், திரிபுகளாகவும் வழங்கப் பெற்றுள்ளது. சம்பந்தர் தமிழின் இனிமையையும், சிறப்பினையும் தொண்டினையும் விளக்கப் பல்வேறு பெயரடைகளைக் கையாண்டுள்ளார்.

பெயரடைகளின் பயன்பாடு

சொல்ல வரும் கருத்தைச் சிறப்புறச் சொல்வதில் அடைகளின் பயன்பாடு மிகுதி ஆகும். பெயரடைகளைப் பல்வேறு பெயர்ச்சொற் களின் முன்னால் கையாண்டு கருத்தை வளம்பெறச் செய்வதில் புலவர்கள் திறமை மிக்கவர்களாகத் திகழ்ந்துள்ளார்கள். ஓரடை முதல் ஐந்து அடைகள் வரையிலும் அடுக்கிச் சொல்லும் பாங்கை தேவாரப் பாடல்களில் பரவலாகக்காண முடிகின்றது. சம்பந்தர் தேவாரத்தில் இடம்பெற்றுள்ள அடைகள் சொல் வளமும், பொருள் வளமும் கொண்டதாய்த் திகழ்கின்றன. எனவே அவை சம்பந்தர் பாடல்களில் தனக்கென ஓர் தனியிடத்தைப் பெற்று விளங்குகின்றன. சம்பந்தர் பாடல்களில் இவை தனிப்பெயரடைகளாகவும், கூட்டுப் பெயரடைகளாகவும் கையாளப் பெற்றுள்ளன.

''தமிழ்'' எனும் சொல் சம்பந்தர் பாடல்களில் பெயரடையாகவும், பல்வேறு பெயர்களுடனும் கையாளப்பட்டுள்ளது என்பது இவண் குறிப்பிடத்தக்கது. சம்பந்தர் தமிழ் எனும் சொல்லைத் தமது பெயருக்கு அடையாகப் பல பாடல்களில் கையாண்டுள்ளார். ''தமிழ் ஞானசம்பந்தன்'' எனும் தொடரைச் சம்பந்தர் பாடல்களில் ஏறத்தாழ நாற்பத்தைந்து இடங்களில் காண முடிகின்றது. தமிழ்மேல் உள்ள பற்றினாலும் தமிழ் உணர்வு மேலெழுந்து நிற்பதினாலும்தான் தமிழ்ஞானசம்பந்தன் எனும் தொடரைச் சம்பந்தர் பல பாடல்களில் பயன்படுத்தி யுள்ளதாகக் கருதலாம். எடுத்துக்காட்டாகப் பின்வரும் தேவாரப் பாடல் அடிகளைச் சான்றுகளாய் கூறலாம்.

“சீரார் தமிழ்ஞானசம்பந்தன்” (403-2)

“தலமார் தமிழ்ஞானசம்பந்தன் சொன்ன கலைகளிவை வல்லார்” (925-3)

“தலைமகனாகி நின்ற தமிழ்ஞானசம்பந்தன்” (1162-2)

“தன்னொளி மிக்குயர்ந்த தமிழ்ஞானசம்பந்தன்” (1173-3)

“தமிழ்ஞானசம்பந்தன் சமைத்தபாடல், வழங்குமிசை” (1415-4)

(மொத்த இடங்கள்: 45)

சம்பந்தர் பாடல்களில் 1. செம், 2. நல், (நற்), 3. தண், 4. வண், 5. ஒண், 6. இன், 7. அரும், 8. பூம் எனும் எட்டு பெயரடைகள் பரவலாகப்

பயன்படுத்தப் பெற்றுள்ளன. இவற்றுள் ''செம்'' எனும் பெயரடை 27 இடங்களிலும் ''நல்'' எனும் பெயரடை 15 இடங்களிலும், தண் 8 இடங்களிலும் பயன்படுத்தப் பெற்றுள்ளன. பிற பெயரடைகளுள் ''அரும்'' 5 இடங்களிலும், வண் 3 இடங்களிலும், இன் 2 இடங் களிலும் பிற பெயரடைகள் தலா ஓர் இடத்திலும் பயன்படுத்தப் பெற்றுள்ளன. மேற்காணும் பெயரடைகளின் பயன்பாட்டைத் தனித்தனியாக இவண் காண்போம்.

செம் எனும் பெயரடை தமிழ் எனும் சொல்லின் முன்னால் பயன்படுத்தப்படும் பொழுது செந்தமிழ் எனும் சொல் தோற்றம் பெற்றுள்ளது. இச்சொல்லின் பரந்துபட்ட பயன்பாட்டினால் தற்பொழுது இச்சொல் தனிச்சொல்லாகவே கருதப்படுகின்றது என்பது குறிப்பிடத் தக்கது. ''செம்'' எனும் அடையின் பயன்பாட்டைப் பின்வரும் பாடல்களில் காணலாம்.

(எ.கா)

''நார்மலிந்தோங்குநான் மறைஞான சம்பந்தன் செந்தமிழ் வல்லார்'' (447-3)

''குற்றமில் செந்தமிழ் கூறவல்லார்'' (1227-3)

''திரும்பயில் ஞானசம்பந்தன செந்தமிழ் பத்தும் வல்லார்'' (1258-3)

''நல்ல செந்தமிழ் வல்லவன் ஞானசம்பந்தன்'' (2361-4)

''நண்ணிய செந்தமிழ் ஞான சம்பந்தன் சொல்'' (3095-3)

(மொத்த இடங்கள்:27)

நல்

நல் (நல்ல) எனும் பெயரடை இலக்கியங்களில் அடுத்து வரும் பெயருக்கு ஏற்பப் பல்வேறு பொருள்களைப் பெறுகின்றது. சம்பந்தர் பாடல்களில் தமிழ் எனும் சொல்லின் முன்னால் இச்சொல் கையாளப் படும்பொழுது நற்றமிழ் எனும் பெயரடை தொடர் தோற்றம் பெற்றுள்ளது. நல் எனும் சொல் தமிழின் பல்வேறு பண்புகளையும், தன்மைகளையும் குறிப்பிடும் வகையில் சம்பந்தரால் கையாளப் பெற்றுள்ளது. மேலும் நற்றமிழ் எனும் சொல் தமிழ் ஞானசம்பந்தன் எனக் காணப்படுவது சம்பந்தர் பாடல்களில் இவண் குறிப்பிடத்தக்கது.

(எ.கா)

''நண்ணியசீர் வளர்காழி நற்றமிழ் ஞானசம்பந்தன்'' (425-2)

''நல்லுயர் நான் மறைநாவின் நற்றமிழ் ஞானசம்பந்தன்'' (436-2)

''நாடவல்ல நற்றமிழ் ஞானசம்பந்தன்'' (1079-3)

''நல்ல அருமறையான் நற்றமிழ் ஞானசம்பந்தன்'' (2080-2)

''நல்லஞான சம்பந்தன் நற்றமிழ் பத்திவை நாளும்'' (2505-3)

''நற்றமிழ் ஞானசம்பந்தன் சொன்ன தமிழ் நன்மையால்'' (2920-3)

(மொத்த இடங்கள்:15)

தண்

தண் எனும் பெயரடை தமிழ் எனும் சொல்லுடன் இணைந்து தண் தமிழ் எனும் சொல் தோற்றம் பெற்றுள்ளது. குளிர்ச்சி எனும் பொருளுடைய இப்பெயரடைய தமிழுடன் இணையும் பொழுது குளிர்ச்சி பொருந்திய தமிழ் எனும் பொருள்பட்டு நிற்கின்றது எனலாம். குளிர்ச்சி என்பது இவண் வானிலையைக் குறிக்காது மன உணர்வினைக் குறிக்கும் வகையில் பொருள் விரிவு பெற்றுள்ளது. பின்வரும் தேவாரப் பாடல் அடிகளை இச்சொல்லின் பயன்பாட்டிற்குச் சான்றாய் கூறலாம்.

(எ.கா)

''செறி வண்டமிழ் செய்மாலை செப்பவல்லார்கள்'' (2156-3)

''சந்தமார்ந்தழகாய தண்டமிழ் மாலை வல்லோர்போய்'' (2441-4)

''தங்குசீர் திகழ்ஞான சம்பந்தன் தண்டமிழ் பத்தும்'' (2473-4)

''சாந்தமாயின பாடல் தண்டமிழ்பத்தும் வல்லார்மேல்'' (2484-4)

''பாடிய தண்தமிழ் மாலை பத்தும் பரவித்திரிந்தாக'' (3955-3)

(மொத்த இடங்கள்:8)

செந்தமிழ், நற்றமிழ் எனும் சொற்களைப் போன்று தண்தமிழ் தனிச்சொல்லாக நிலைபெறவில்லை என்பது இவண் கருதத்தக்கது.

அரும் (அருந்)

'அரும்' எனும் பெயரடை அரிய எனும் பொருளுடன் சம்பந்தர் தேவாரத்தில் சில இடங்களில் பயன்படுத்தப் பெற்றுள்ளது.

''பண்ணிய அருந் தமிழ்ப் பத்தும் வல்லார்'' (2833-4)

''விலையுடையருந் தமிழ்மாலை வல்லார்'' (2844-4)

''அருந்தமிழ் மாலைகள் பாடியாடக் கெடுமருவினையே''

(3798-4)

வண்

வண் எனும் பெயரடை ''வன்'' எனும் பெயரடையின் மாற்று வடிவமாகும். இச்சொல் வலிமைமிக்க எனும் பொருளைப் பெற்றிருப்ப

தாகக் கொள்ளின் வண் தமிழ் என்பது கருத்து. 'வலிமை மிக்க' எனும் பொருள் தருவதைக் காண இயலும். பின்வரும் தேவாரப் பாடல் அடிகள் வண்டமிழ் எனும் சொல்லிற்கு எடுத்துக்காட்டுகளாய் அமைகின்றன.

(எ.கா)

"மனமலி புகழ் வண்டமிழ் மாலைகள் மால தாய்மகிழ்வோடும்" (2603-3)

"வல்லவாறே புனைந்தேத்துங்காரோணத்து வண்டமிழ்" (2735-3)

"மன்னிய புகலியுள் ஞானசம்பந்தன வண்தமிழ்" (3722-3)

(மொத்த இடங்கள்:3)

இன்

இன் எனும் பெயரடை ஐம்புலன்களுக்கும் உரிய சுவையினைக் குறிப்பதாய்த் தற்காலத்தில் (இனிய) தனித்தனியாகப் பயன்படுத்தப் படுகின்றது. சம்பந்தர் பாடல்களில் இச்சொல் பின்வரும் பாடல் அடிகளில் இனிய எனும் பொதுப் பொருள்களில் மட்டும் பயன்படுத்தப்பட்டுள்ளது என்பது இவண் நோக்கத் தக்கது.

(எ.கா)

"நலமலிஞான சம்பந்தன தின்றமிழ்" (1303-1)

"பத்தன்ஞான சம்பந்தனதின் தமிழ்" (611-3)

(மொத்த இடங்கள்:2)

பூம்

பூம் எனும் பெயரடை ஓர் இடத்தில் மட்டும் பயன்படுத்தப் பட்டுள்ளது. இவற்றின் பயன்பாட்டைப் பின்வரும் பாடல் அடிகளின் மூலம் காணலாம்.

(எ.கா)

"ஒளிர் பூந் தமிழ்மாலையுரைத்த பாடலிவை வல்லார்" (2101-3)

செய்யா எனும் வடிவப் பெயரடைகள்

சம்பந்தர் பாடல்களில் செய்யா எனும் வாய்ப்பாட்டு எதிர்மறை பெயரெச்சங்களும் சில சூழல்களில் அடைகள் போன்று பயன்படுத்தப் பட்டுள்ளன. இதற்குப் பின்வரும் பாடல் அடிகள் சான்றாகின்றன.

(எ.கா)

"குன்றாத் தமிழ் சொல்லக் குறைவின்றி நிறைபுகழே" (194-4) (குன்றா)

"குற்றமில் செந்தமிழ் கூறவல்லார்" (1227-3) (குற்றமிலா)

கூட்டுப் பெயரடைகள்

சம்பந்தர் பாடல்களில் ஒன்றிற்கும் மேற்பட்ட பெயரடைகள் அடுக்கி வரும் சூழல்கள் இடம்பெற்றுள்ளன. முன்னர்க் குறிப்பிட்டது போல், சொல் வளத்திற்கும், திறன் மிக்க பொருள் வெளிப்பாட்டிற்கும் மொழிநடைக்கும் இத்தகைய பெயரடைகள் சான்றாய் அமைகின்றன.

திருநெறியதமிழ் (11-1), இசைமலிதமிழ் (238-3), சீரார் தமிழ் (403-2), தகைமலிதண்தமிழ் (480-4), சீர்மிகு தமிழ் (655-4), தலமார் தமிழ் (925-3), நாடவல்ல நற்றமிழ் (1079-3), தன்னொளிமிக்குயர்ந் தமிழ் (1173-3), குலமார் தமிழ் (1654-4), செந்தண்தமிழ் (1861-3), செப்பரிய தண்தமிழ் (2058-4), ஒளிர் பூந்தமிழ் (2101-3), செறிவண் தமிழ் (2156-3), நல்ல செந்தமிழ் (2361-4), மனமலிபுகழ் வண்தமிழ் (2603-3), விலையுடை அருந்தமிழ் (2844-4), சந்தம் ஆர்தமிழ் (3308-3), சந்தநிரைதண் தமிழ் (3634-3) என்பன கூட்டுப் பெயரடைக்குச் சில எடுத்துக்காட்டுகளாகும்.

கூட்டுச்சொற்களின் பயன்பாடு

தமிழ் எனும் சொல் அடைகளுடன் மட்டுமின்றிப் பல இடங்களில் பிற பெயர்ச் சொற்களுடன் இணைந்து கூட்டுச்சொற்களாகவும் வழங்கப் பெற்றுள்ளது. இக்கூட்டுச்சொற்களில் தமிழ் எனும் சொல் முன்சொல்லாகவும், பின்சொல்லாகவும் கையாளப்பட்டுள்ளது. தமிழை முன்சொல்லாகக் கொண்டு ஆக்கப்பெற்ற கூட்டுச்சொற்களே அதிகமாக வழக்கில் உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. பின்வருவன கூட்டுச் சொல்லிற்குச் சில எடுத்துக்காட்டுகளாகும்.

தமிழ் +
- சொல்
- மாலை
- வல்லவர் / வல்லார் / வல்லோர்
- அவை
- ஞானம்
- பத்தி (பக்தி)
- சொல்
- கலை
- புந்தி (புத்தி)
- நன்மை
- நாதன்
- கீதம்

"கற்று நல்லவர் காழியுள் ஞானசம்பந்தன் தமிழ் மாலை" (22-3)

"சொல்லார் தமிழ்மாலை செவிக்கினிதாக" (337-3)

"நாதன் ஞானமிகு சம்பந்தன் தமிழ்மாலை நாவில்" (1132-3)

"வைத்த தமிழ்மாலை பாடுவோர் போய், அறைகழலை சணாளும்" (2376-4)

"ஞான சம்பந்தன் ஒண் தமிழ்மாலை கொண்டாம்" (2822-5)

"சம்பந்தன தமிழ்வல்ல வரடி பேணுதல் தவமே" (107-4)

"பண்ணருந் தமிழ் வல்லார் பரலோகத் திருப்பாரே" (3502-4)

"சீர் மிகுந்த தமிழ்வல்லார் சிவலோகந் சேர்வாரே (655-4)

"பந்தன தமிழ்வல்லார் பாவமான பாறுமே" (2548-4)

"உரைதெரிந்துணருஞ் சம்பந்தனொண் தமிழ் வல்லார்" (3158-3)

"பண்ணும் பதமேழும் பலவோசைத் தமிழவையும்" (110-1) (தமிழ் + அவை)

"நன்றார் தருபுகலித் தமிழ்ஞானம் மிகுபந்தன்" (194-3) (தமிழ் + ஞானம்)

"பரவார் தமிழ்பத்திசை பாடவல்லார் போய்" (359-3) (தமிழ் + பத்தி)

"யொன்றடியவர் பரவத் தமிழ் சொலும் வடசொலுந்தான் நிழற்" (834-4) (தமிழ்+சொல்)

"தென் தமிழ்க் கலை தெரிந்தவர் பொருந்திய தேவூர்" (2366-2) (தமிழ்+புத்தி)

"புகலியுள் ஞானசம்பந்தன் சொன்னதமிழ் புந்தியால்" (புத்தி) (2909-3) (தமிழ்+புத்தி)

"நற்றமிழ் ஞான சம்பந்தன் சொன்ன தமிழ் நன்மையால்" (2920-3) (தமிழ்+நன்மை)

ஞானத்தமிழ், கேள்வித்தமிழ், சொற்றமிழ் எனும் கூட்டுச்சொற்களில் தமிழ் எனும் சொல் பின்சொல்லாக அமைந்துள்ளது.

(எ.கா)

"நல்லுரை ஞானசம்பந்தன் ஞானத்தமிழ் நன்குணரச்" (1270-3) (ஞானம்+தமிழ்)

"நல்ல கேள்வித் தமிழ் ஞானசம்பந்தன் நல்லார்கள் முன்" (1523-2) (கேள்வி+தமிழ்)

''சொற்றமிழின்னிசை மாலை சோர்வின்றிக்'' (2975-3)
(சொல்+தமிழ்)

தமிழ் எனும் சொல்லின் திரிபுகள்

சம்பந்தர் பாடல்களில் தமிழ் எனும் பெயர்ச்சொல் பல்வேறு வேற்றுமை உருபுகளையும், மிகுதிகளையும் பெற்றுத் திரிபுச் சொற்களாக வழங்கப் பெற்றுள்ளது.

(எ.கா)

''செந்தமிழோர்கள் பரவி ஏத்துஞ்சீர் கொள் செங்காட்டங்குடி'' (61-4)

''திருஞான சம்பந்தன செந்தமிழ்கள்'' (1687-3) (1785-3)
''தலமார் தரு செந்தமிழின் விரகன்'' (1730-2)
''வண்ண மூன்றுள் தமிழில் சதரிந்திசை பாடுவார்'' (2290-3)
''தேனமர் பூம்பாவைப் பாட்டாகச் செந்தமிழால்'' (1981-2)
''நாடுபல நீடு புகழ் ஞான சம்பந்தனுரை நல்ல தமிழின்'' (3547-4)

சம்பந்தர் 'தமிழ்கள்' எனும் பன்மை வடிவத்தினைப் பயன்படுத்தி யிருப்பது ஆழ்ந்து நோக்கத்தக்கது.

சம்பந்தர் பாடல்களில் பயன்படுத்தப் பெற்றுள்ள 'தமிழ்' எனும் சொல்லின் மூலம் ஞானசம்பந்தருக்கும் தமிழுக்கும் உள்ள நெருங்கிய தொடர்பினை அறிய முடிகின்றது. ''நற்றமிழ் வல்லவன் ஞானசம்பந்தன்'' என்று அவரே தம்மைப் பல பாடல்களில் சிறப்புறக் கூறுவதால் அவர் தமிழ்மீது வைத்திருந்த ஆழ்ந்த பற்று தெளிவாக வெளிப்படுகின்றது. பக்தி பாடல்களின் வழி தமிழை வளர்த்தவர்களில் சம்பந்தருக்குச் சிறந்ததோர் இடம் உண்டு என்பதைத் தமிழ் எனும் சொல்லின் பயன்பாடு ஐயமின்றிச் சுட்டுகின்றது. தமிழ்ப்பற்று மனத்தினுள்ளிருந்தாலும் மட்டும் போதாது அது நமது உணர்வு மற்றும் செய்கையினாலும் வெளிப்பட வேண்டும் என்பதையே சம்பந்தர் பாடல்கள் நமக்கு உணர்த்தி நிற்கின்றன.

92. சம்பந்தரும் அரசியலும்

ஹரி. விஜயலட்சுமி, உடுமலை.

மதமும் மொழியும் மனிதனைத் தனித்து இனங்காட்ட வல்லன. இரண்டும் மனித வாழ்வோடு உணர்வு பூர்வமாகக் கலந்து நிற்பவை. மதம் அகச்செம்மைக்கு வழிகாட்டி மனித இனத்தை ஒழுங்குபடுத்து கின்றது. மொழி மனித உணர்வின் வெளிப்பாட்டிற்குரிய இன்றியமையாத கருவியாகும். மதமும் மொழியும் சமூக அடையாளங்களாக மாறும்போது ஒரு குழுநிலை உருவாகிறது. குழுவை நெறிப்படுத்த ஒரு தலைமையும் சட்ட திட்டங்களும் உருவாகின்றன. ஓர் அரசும் ஒட்டுமொத்த சமூகத்தின் நெறிப்பட்ட வாழ்க்கைக்குப் பொறுப்பேற்கின்றது. இந்த அடிப்படையில், 'அரசியலை ஒரு சமூகத்தின் நடத்தையைச் செம்மைப் படுத்துகின்ற சமூக அறிவியல்' என்று வரையறுக்கின்றார் சுவாமி ரங்கநாதனந்தர்.

ஒரு அதிகார மையத்திற்கு உட்பட்டது என்ற அடிப்படையில் மதத்திற்கும் அரசியலுக்குமிடையே ஒரு பொதுத்தன்மை நிலவுகின்றது. அரசுகளின் நோக்கம் சமூகப் பாதுகாப்பு. இரண்டு அரசுகள் என்ற இருநிலை தோன்றுகையில் அவற்றிற்கிடையே முரண்பாடு தோன்றுவதும் தவிர்க்க முடியாததாகின்றது. அதுபோன்ற மதங்களின் நோக்கம் ஆன்மீக மேம்பாடும், மனிதனுடைய ஆன்மாவைச் செம்மைப்படுத்துவதுமாகும். ஒரே நோக்கமுடையன எனினும் இரண்டு என்ற இருமை நிலையில் இரு மதங்களுக்கிடையே முரண்பாடுகள் நிலவுகின்றன. குழு மனப்பான்மை, அதிகார மையம் என்ற அடிப்படைகளில் மதமும் அரசியலும் ஒன்றோ டொன்று இணைந்தும் முரண்பட்டும் செயல்பட்டு வந்திருக்கின்றன என்பது உலக வரலாறு. மதம், அரசியல் இரண்டையுமே உளவியல், சமூகவியல், வரலாற்றுப் பின்புலம் என்ற பின்னணிகளில் அணுகுவது தெளிவு தரும். உலகின் வெவ்வேறுபட்ட மதங்கள் வெவ்வேறு மொழி களோடும் தொடர்புடையன என்ற அடிப்படையில் மொழிகளும் அரசியலோடு தொடர்புடையனவாகின்றன. யூதர்களுக்கும் கிறித்துவர் களுக்குமிடையேயுள்ள மத ரீதியான முரண்பாடு அரசியலில் ஏற்படுத்திய தாக்கம் வலுவானது. மனிதனை ஆக்கப்பாதையில் இட்டுச் செல்ல வேண்டிய மதங்கள் போர்க்களத்திற்கு இட்டுச் செல்லுகின்ற முரணையும் இன்று வரை உலக வரலாற்றில் காணமுடிகின்றது.

மதமும் அரசியலும் என்ற உலக வரலாற்றுப் பின்னணியில் ஞானசம்பந்தர் தம் காலத்தில் செய்த சமயப்புரட்சி முக்கியத்துவம் பெறுகிறது. கி.பி. மூன்றாம் நூற்றாண்டில் தமிழகத்தில் காலூன்ற முயன்ற சமணர்களும் பௌத்தர்களும் தமிழரல்லாதவர்கள், தமிழர் பண்பாடு, சமயம், நாகரிகம், மொழி இவற்றைப் போற்றாத இனத்தார். சங்க காலத்திலேயே பௌத்தர்களும் சமணர்களும் தமிழகத்தில் வாழ்ந்து வந்த போதும் அவர்கள் அரசியல் செல்வாக்குப் பெறவோ, மதமாற்றம் செய்யவோ முயற்சிகள் செய்யவில்லை. எருமை நாடு என்று குறிப்பிடப் பட்ட மைசூர்ப் பகுதியிலிருந்து வந்த களப்பிரர்கள் பாண்டியர்களை வென்றடிமைப் படுத்தினர். சோழநாட்டில் ஒரு சாராரும், தொண்டை நாட்டில் மற்றொரு சாராரும் தங்கினர். இவர்களுடைய மொழி வடமொழியின் ஒரு பிரிவான பிராகிருத மொழி. சமணர்களின் அரசியல் ஆதிக்கம் குறித்த செய்திகளை நெடுஞ்சடையன் பராந்தகன் (கி.பி.765-760) வழங்கிய வேள்விக்குடி செப்பேடுகளாலும், முதலாம் வரகுணன் ஆட்சியில் கி.பி.908-இல் வழங்கப்பட்ட தளவாய்ப்புரம் செப்பேடுகளாலும் அறியமுடிகின்றது. வேள்விக்குடி செப்பேடுகளின் மூலம் கடுங்கோன் என்ற பாண்டியனால் சமணர்கள் வெல்லப்பட்ட விவரமும் அறியப் படுகின்றது.

களப்பிரர் ஆட்சிக்காலத்தில் பௌத்த மதத்திற்குள் தோன்றிய ஈனயானம், மகாயானம் என்ற இருபெரும் பிரிவுகளும், அவற்றின் உட்பிரிவுகளுமாக 'அறுவகைத்தேரர்' இருந்தனரென்று சம்பந்தர் குறிப்பிடுகிறார். இந்த உட்பிரிவுகளும் தொடர்பான பூசல்களும் பௌத்தத்தின் வீழ்ச்சிக்கும் சமணத்தின் செல்வாக்குப் பெருகவும் காரண மாயின. தத்தம் மதக் கோட்பாடுகளைக் கடைப்பிடித்து இயல்பான வாழ்க்கை வாழ்கின்ற சராசரி மனிதர்கள் எல்லாக் காலத்திலும் உண்டு. சமணர் களிலும் தம் மதம் பற்றிய தீவிரப்பற்றுடன் விளங்கியவர்கள். தமது அரசியல் செல்வாக்கால் தமது கொள்கைகளை ஏற்காதவர்களைத் துன்புறுத்திக் கொடுமைகள் செய்தனர். மூர்த்தி நாயனார் புராணத்தில் களப்பிர மன்னன் சைவர்களைக் கொடுமைகள் செய்ததாகச் சேக்கிழார் குறிப்பிடுகின்றார். அப்பர் சைவத்திலிருந்து சமணம் சார்ந்தமை இத்தகைய தொரு சமூகச் சூழலில்தான் என்பதும் கவனிக்கத்தக்கது. அப்பர் மீண்டும் சைவம் சார்ந்தபோது பல்லவ அரசனின் அரசியல் ஆதரவுடன் அப்பருக்கு இழைக்கப்பட்ட இன்னல்களும் இதற்குச் சான்று பகரும். பாண்டிய நாட்டில் கூன்பாண்டியனும், தொண்டை நாட்டில் மகேந்திர பல்லவனும் சமணத்திற்கு அளித்த ஆதரவு சமணர்களின் செல்வாக்கை மேலும் பெருக்கியது.

இக்கால கட்டத்தில் வடமொழியும் அரசியல் செல்வாக்குடன் திகழ்ந்தது. தமிழகத்தில் இருந்த சமணப் பள்ளிகளில் வடமொழியில்

பாடங்கள் கற்பிக்கப்பட்டன. தமிழகத்தில் இக்காலகட்டத்தில் காலூன்றிய வைதிகர்களின் மொழியும் வடமொழியாகும். தமிழகத்தில் சைவமும் தமிழும் செல்வாக்குக் குன்றியிருந்த காலத்தில் மதமும் மொழியும் தழைக்க ஞானசம்பந்தர் தோன்றினார். இளமை வேகத்தோடும் மிடுக்கோடும் சம்பந்தர் புறச்சமயங்களைத் தாக்கிப் பாடுகின்றார். இப்போது கிடைத்துள்ள 4286 பாடல்களிலும் 10-ஆவது பாடலில் ஒரு வரன்முறையைப் பின்பற்றிச் சமணர்களையும் பௌத்தர்களையும் கடுமையாகச் சாடுகின்றார். 9-ஆவது பாடலில் அடியும் முடியும் தேடி மாலயன் காண இயலாத சிவனின் மேன்மையைச் சிறப்பித்து வைணவத்திற்கும் மேலாகச் சைவத்தை உயர்த்துகிறார்.

தமிழின் பெருமையையும் ஐந்தெழுத்தின் சிறப்பையும் இயன்ற இடங்களில் எல்லாம் பாடியுள்ளார். தமிழின் பெருமையை மட்டும் 140-க்கும் மேற்பட்ட இடங்களில் சிறப்பித்துப் பாடியுள்ளார். இவை அன்றைய அரசியல் சூழலுக்குப் பொது நிலையில் சம்பந்தர் தெரிவித்த எதிர்ப்பாகும். சிறப்பு நிலையில் அரசியல் செல்வாக்கால் புறச்சமயம் தழைப்பதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் சூழல் ஞானசம்பந்தரது மதுரைப் பயணத்தால் உருவாகியது. மதுரை மன்னன் கூன்பாண்டியன் சமண மதத்தைக் கைக்கொண்டிருந்தமையால் மக்களும் சமணம் சாரும் சூழல் உருவாயிற்று. சம்பந்தர் வருகையறிந்து சமணர்கள் அரசனோடு கலந்து பேசி சம்பந்தர் தங்கியிருந்த மடத்திற்குத் தீ வைத்தனர். ஞானசம்பந்தர் ‘செய்யனே திரு ஆலவாய்...’ என்று தொடங்கும் பதிகம் பாடி இத்தீ வெப்பு நோயாகப் பாண்டியனை பையவே பற்றுமாறு பணித்தார். தாளவொண்ணா வெப்புநோயைத் தீர்ப்பவர் சமயம் சார்வதாகப் பாண்டியன் பகன்றதும் ஞானசம்பந்தர் திருநீற்றுப் பதிகம் பாடினார். சமணர்களால் தீர்க்க இயலாத வெப்பு நோய் திருநீற்றுப் பதிகம் பாடித் திருநீறு பூசியதும் தணிந்தது. சமணர்கள் சம்பந்தரை அனல் வாதம், புனல் வாதத்திற்கழைத்ததும் வாதில் சம்பந்தர் வென்றதும் சமணத்தின் அரசியல் செல்வாக்கு குறைய வழி வகுத்தது. பிற சமய இடையூறுகளுக்கு நடுவே இன்னலுற்ற சைவநெறியை நிலைநிறுத்திப் ‘பரசமய கோளரி’ என்ற பாராட்டிற்குரியவரானார்.

பண்முறை, தலமுறை என்ற இரண்டு வகைகளில் தொகுக்கப் பட்டுள்ள சம்பந்தர் தேவாரப் பாடல்களுள் திருஆலவாய்ப் பதிகங்கள் ஒன்பதும், திருவேடகப் பதிகம் ஒன்றும், திருநள்ளாற்றுப் பதிகங்கள் நான்கும் மேற்குறிப்பட்ட நிகழ்ச்சிகள் தொடர்பாகச் சம்பந்தர் பாடியருளிய பதிகங்களாம். கூன்பாண்டியனுடைய வெப்பு நோய் தீர்த்தருளிய சூழலில் சமணர்களால் சம்பந்தருக்கு ஏதேனும் துன்பம் நேரிடுமோ என்றஞ்சிய மங்கையர்க்கரசியாரைத் (கூன்பாண்டியனின் மனைவியார்)

தேற்றிப் பாடிய பதிகத்தில் திருஆலவாயான் இருக்கையில் சமணர்கள் தம்மை எதுவும் செய்ய முடியாதென்று பாடுகிறார்.

''ஆனை மாமலை ஆதியாய இடங்களிற் பல அலலல்சேர்
ஈனர்கட்கெளி யேனலேன் திருஆலவாயரன் நிற்கவே''

என்றும் 'ஆகதர்க்கு', 'அந்தகர்க்கு', 'கசிவொன்றிலாச் சேட்டைகட்கு', 'புலவோர்களைப் பழிக்கும் பொலா அங்கதர்களுக்கு' என்றும் சமணர் களுக்குப் பற்பல அடைமொழிகளிட்டு 'எளியோமலோம்' என்று பாடுகிறார்.

சமணரை வாதில் வெல்ல முடிவெடுத்து இறைவனின் திருவுள்ளக் குறிப்பை அறியப் பாடியது, 'காட்டுமா அது உரித்து...' என்று தொடங்கும் பதிகம். இப்பதிகத்தில் 'அமண் கையரை ஒட்டி வாது செய்யத் திருவுள்ளமே' என்றும் 'அமண் அழிப்பரை அழிக்கத் திருவுள்ளமே' என்றும் ஆலவாய் இறைவனின் அருள் வேண்டுகின்றார். 'அவனருளாலே அவன்தாள் வணங்குதல்' என்ற சைவ சாத்திரக் கருத்தையொட்டி சமணரை வெல்லவும் இறைவன் புகழ் சிறக்கவும் பாடிய மற்றொரு பதிகம் 'வேத வேள்வியை நிந்தனை செய்துழல்...' எனத் தொடங்கும் பதிகமாகும். இங்கும் சமணரை 'வாதில் வென்றழிக்கத் திருவுள்ளமே' என்று வேண்டுகின்றார். 'வீடலால வாயிலாய்...' என்ற பதிகம் சமணரை வென்ற பின் ஆலவாய் இறைவனின் அருட்திறத்தை வியந்து பாடியது. திரு ஏடகப்பதிகம், 'வைகைநீர் ஏடுசென்றணைதரும் ஏடகத்தொருவனை' சிறப்பித்துப் பாடியது.

திருநள்ளாற்றுப் பதிகம் திருநள்ளாறும்-திருஆலவாயும் என்றும் குறிக்கப்பட்டுள்ளது. ஆலவாயில் அமர்ந்து அருள் செய்த இறைவனைத் திருநள்ளாற்றுப் பதிகம் போற்றுகிறது. அனல் வாதத்தில் ஏடு பச்சையாய் விளங்கிய அதிசயத்தை ஞானசம்பந்தர் போற்றுகிறார். 'நாடகம் ஆடு நள்ளாறுடைய நம்பெருமானிது என்கொல் சொல்லாய்' என்று வியந்து நிற்கிறார். 'போகமார்த்த பூண்முலையாள்...' எனத் தொடங்கும் பதிகம் அனல் வாதத்தில் ஏடு வேகாமல் நின்ற பெருமைக்குரிய தென்பதால் 'பச்சைப் பதிகம்' என்ற சிறப்பிற்குரியது. 'நள்ளாறர்தம் நாமமே மிளிர் இளவளர் எரி இடில் இவை பழுதிலை மெய்ம்மையே' என்று சிவனுடைய திருநாமத்தைத் தாங்கியிருந்ததால் ஏடுகள் எரியாது நின்றன என்று காரண காரிய விளக்கமாகப் பாடிய பதிகம் 'தளிரிள வளரொளி...' என்ற திருநள்ளாற்றுப் பதிகம்.

ஆலவாய்ப் பதிகங்களும், திருநள்ளாற்றுப் பதிகங்களுள் கூன்பாண்டியன் முன்னிலையில் சமணர்களுக்கும் ஞானசம்பந்தருக்கும் நடந்த போராட்டத்தின் பதிவுகளாய்த் திகழ்கின்றன. சமணர்களை வென்றழிப்பதென்பது சைவத்தையும் தமிழையும் ஒருங்கே காக்க

அவர் மேற்கொண்ட முயற்சிகளாகும். பாண்டியன் சைவ சமயம் சார்ந்ததால் சமணர்கள் 8000 பேரும் தாமே கழுவிலேறினர் என்பர். கூன்பாண்டியனாக இருந்து நின்றசீர் நெடுமாறனாக நிமிர்ந்து சமணம் துறந்த பின்னர் சமணர்களைக் கழுவேற்றினான் என்றும் ஒரு மாற்றுக் கருத்து உண்டு. உணர்ச்சி வயப்பட்ட, தீவிர மதப் பற்றாளர்களாகத் திகழ்ந்த சமணர்கள் ஞானசம்பந்தரால் தொடர்ந்து ஏற்பட்ட தோல்விகளைத் தாங்காமல் கழுவேறினர் என்பது பொருத்தமாகவே உள்ளது. உடலை வருத்துதல் என்ற சமண நெறியும் இதனோடு ஒத்து வருகிறது. இந்தப் போராட்டத்தில் ஞானசம்பந்தர் அரசியலோடு பிணைந்து கிடந்த மதம், மொழி இரண்டின் மேம்பாட்டிற்காகப் பாடினார்; தம் பாடல்களை இசையோடு பாடி எங்கும் பரவச் செய்து மக்களிடையே ஒரு எழுச்சியையும் மூட்டினார். அற்புதங்கள் செய்யவல்ல சிறுவன்' என்ற வியப்பும் ஞானசம்பந்தரைக் கூர்ந்து கவனிக்க வைத்திருக்கும் என்பது வெளிப்படை.

சமண, பௌத்த சமயங்களை வெளிப்படையாக எதிர்த்துப் பாடிய ஞானசம்பந்தர் தமிழின் பெருமையையும், 'நமசிவாய' நாமத்தின் சிறப்பையும் பாடி வைதிகர்களையும் மறைமுகமாக எதிர்த்தார். வேதம் ஓதும் அந்தணராக அவர் இருந்தமையால், 'வேதமும் வேள்விகளும் வடமொழியும் உணர்ந்த ஒருவராக வேதத்தினும் உயர்ந்து நிற்பது ஐந்தெழுத்து மந்திரம்' என்று ஆணித்தரமாகக் கூறித் தம் கருத்தை நிலைநாட்ட முடிந்தது. பதிகந்தோறும் புறச்சமயத்தாரைத் தாக்கிப் பாடியதோடு நில்லாமல் பதினோராவதாக ஒரு பாடல் பாடி பதிகங் களின் பயனையும் கூறி மக்கள் மனத்தில் நம்பிக்கையை வளர்த்தார். சமணம், பௌத்தம், வைதிகம், வைணவம் என்று பல சமயங்களும் தத்தம் வலிமையை நிலைநாட்ட முற்பட்டதொரு சமயப் போராட்ட காலத்தில் சைவத்தின் பெருமையைப் பாடிச் சிவனை நம்பினால் துன்பம் நீங்கும், 'விண்ணும் மண்ணும் விளங்கும் விரிகின்ற தொல் புகழாளராக' விளங்குவர் என்றெல்லாம் திருக்கடைக்காப்பில் பாடி மக்கள் மனத்தில் நம்பிக்கையூட்டி அவர்களை ஒருங்கிணைத்தார். இவை இசைப்பாடல்களாக அமைந்தமையால் மக்களை ஒருங்கே ஈர்ப்பதிலும் வெற்றி காணமுடிந்தது.

''தமிழ் இனம் முழுவதும் யாராவது ஒருவருக்குக் கடமைப் பட்டிருந்தது என்றால் அந்த ஒருவர் ஞானசம்பந்தப் பிள்ளையாரே என்பதை உணர்ந்த சேக்கிழார் 63+9 பேரைப் பாட வேண்டிய கடப்பாடுடைய தம் நூலில் ஒருவருக்கு மட்டும் மூன்றில் ஒரு பங்கு வழங்கித் தம் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறார்' என்கிறார் அ.ச. ஞானசம்பந்தன் (பெரியபுராணம் ஓர் ஆய்வு-ப.137) 4286 பாடல்களில்

சேக்கிழார் 1256 பாடல்களை ஞானசம்பந்தரைப் பாடவே ஒதுக்கிப் 'பிள்ளை பாதி புராணம் பாதி' என்ற வழக்கிற்கு வழி வகுத்தார்.

தமிழின் பெருமையை 'வையை நீரும், நெருப்பும் அறியச்' செய்தவர் ஞானசம்பந்தர். களப்பிரர் காலத்திலும் அதற்குப் பின்னும் வீழ்ச்சியடைந்த தமிழ் மொழியையும், தமிழர் நாகரிகத்தையும் தட்டியெழுப்பிய புரட்சி வீரராக ஞானசம்பந்தர் திகழ்கிறார். மதத்தை அரசியலாக்குதல் என்ற நோக்கமின்றித் தமிழகத்து அரசியல் செல்வாக்கோடு தமிழ் மொழிக்கும், அகச்சமயத்திற்கும் ஏற்பட்ட வீழ்ச்சியிலிருந்து மீட்பதற்கென ஞானசம்பந்தர் மேற்கொண்ட அறப்போராட்டமாக அவருடைய பணிகளைக் கொள்ள வேண்டியுள்ளது. இது ஒருவகையில் 'தற்காத்தல்' முயற்சியாகும்.

93. சம்பந்தரின் சீர்திருத்தங்கள்

ச. வீரபாண்டியன், அண்ணாமலைநகர்.

பன்னிரு திருமுறைகள், பதிநான்கு சாத்திரங்கள் இவை இரண்டும் சைவ சமயத்திற்கு இரண்டு கண்களைப் போல் விளங்குவன. இதனை அருளிச் செய்தவர்கள் பலர். குறிப்பாக காரைக்கால் அம்மையார், திருமூலர், மாணிக்கவாசக சுவாமிகள், திருநாவுக்கரசர், திருஞானசம்பந்தர், சுந்தரமூர்த்தி சுவாமிகள், திருவாலவாயுடையார், சேரமான் பெருமாள், நக்கீரர், கபிலர், பரணர், பட்டினத்துப் பிள்ளையார், நம்பியாண்டார் நம்பிகள், சேக்கிழார் சுவாமிகள், மெய்கண்டார், அருள்நந்தி சிவாச்சாரியார், மறைஞானசம்பந்தர், உமாபதி சிவம் மற்றும் பலர். இவர்கள் தோத்திர மாகிய பன்னிரு திருமுறையும், சாத்திரமாகிய மெய்கண்ட சாத்திரங்கள் பதிநான்கையும் அருளிச் செய்திருக்கிறார்கள். இவர்களில் தோத்திரம் என்று போற்றப்படும் திருமுறைகளை அருளியவர்களில் முதல்நிலையில் வைத்துப் பேசப்படுகின்றவர் திருஞானசம்பந்தர்.

ஞானத்தின் திருவுரு, நான்மறையின் தனித்துணை, வானத்தின் மிசையன்றி மண்ணில் வளர்மதிக் கொழுந்து, உவமையில்லா கலைஞானம், உணர்வறிய மெய்ஞ்ஞானம், தவமுதல்வர் என்று போற்றப்படுகின்ற திருஞானசம்பந்த சுவாமிகள் செய்தருளிய சீர்திருத்தங்களை விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கம் ஆகும்.

ஞானசம்பந்தர் முயலகன் நோய் போக்கியது

தமிழகத்தில் எழுந்தருளியுள்ள அனைத்துச் சிவதலங்களுக்கும் சென்று சிவனை வழிபட விரும்பினார் சம்பந்தர். இதனைத் தம் தந்தையாரிடம், ''இச் செந்தமிழ் நாட்டின் கண் உள்ள அனைத்துச் சிவாலயங்கட்டும் சென்று ஈசுவர தரிசனம் செய்து திருப்பதிகம் பாடிக்கொண்டு மீண்டும் இங்கே வருவேன்'' என்று கூறி விடை பகன்றார். இதைக் கேட்ட தந்தை தவ அருமையால் யாம் உம்மைப் பெற்றோம், எங்களால் பிரிந்து வாழ இயலாது என்று கூறி யானும் உம்முடன் வருவேன் என்றார். சம்பந்தரும் உடன்பட அடியவர்கள் புடைசூழ யாத்திரைப் பயணம் துவங்கியது.

காவிரியின் வடபாலிலே மேற்குத்திசை நோக்கிப் பயணம் செய்து அங்குள்ள சிவதலங்களுக்குச் சென்று சிவனை வணங்கித் தேவாரப்

பதிகங்களைப் பாடியருளினார். அதன்பின் காவிரியின் வடகரை சென்று திருப்பாச்சிலாச் சிராமத்திற்கு வந்தடைந்தார். அங்குக் கொல்லிமழவன் என்ற ஒரு மன்னன் இருந்தான். அவனுக்கோர் அழகிய மகள் இருந்தாள். அப்பெண் 'முயலகன்' என்றதொரு நோயால் பீடிக்கப்பெற்று மிகவும் அவதிப்பட்டாள். தந்தையான கொல்லிமழவனும் மிகவும் மனமுடைந்து வருந்தலுற்றான்.

மன்னன், மகளின் நோய் தீர்ப்பதற்கு அரண்மனையில் பல்வகை முயற்சி செய்தும் பலன் அளிக்கவில்லை. சைவத்தைப் பின்பற்றி வந்தவன் கொல்லிமழவன். அதனால், தன் மகளைத் திருக்கோயிலின் உள்ளே சிவன் முன் கிடத்தி நோய் தீர்க்க இறைவனை வேண்டினான். அப்போது ஞானசம்பந்தர் அவ்வூருக்கு வருகின்ற செய்தி காட்டுத்தீப் போலப் பரவியது. இதனைக் கேள்வியுற்ற மன்னன் சம்பந்தரை நேர்கொண்டு அன்புடன் வரவேற்றான். பின் திருக்கோயிலின் உள்ளே சென்ற சம்பந்தர், அங்கே சிவனார் முன் ஒரு பெண் உணர்வற்ற நிலையில் கிடப்பதைப் பார்த்து இஃதென்ன? என வினவினார். அதற்கு மன்னன் அடிகளாரை வணங்கி ''இவள் என் மகள், இவளை 'முயலகன்' என்னும் வெளிநோய் பீடித்துள்ளது. தீர்க்க வழியின்றி இச்சந்தியில் கிடத்தியுள்ளேன்'' என்றான். சம்பந்தர் மன்னனின் முகத்தையும் அவன் மகளையும் கண்டார். மன்னனின் முகமோ வாடிக்கிடந்தது. பின் அப்பெண்ணின் நோய் தீர்க்கத் திருவுள்ளம் கொண்டு,

''துணிவளர் திங்கள் துளங்கி விளங்கச்
சுடர்ச்சடை சுற்றி முடித்துப்
பணிவளர் கொள்கையர் பாரிடஞ் சூழ
வாரிடமும் பலிதேர்வர்
அணிவளர்கோல மெலாஞ் செய்து பாச்சி
லாச்சிரா மத்துறைகின்ற
மணிவளர் கண்டரோ மங்கையை வாட
மயல் செய்வதோ விவர்மாண்பே''

என்று பிணி தீரும் பதிகம் பாடியருளினார். உடன் பிணி நீங்கி அக்கன்னி எழுந்து தன் தந்தையின் பக்கத்தில் வந்தாள். மன்னன் மனமகிழ்ந்து, இருவரும் சம்பந்தரின் காலில் விழுந்து வணங்கி ஆசிபெற்றனர். இந்நோய் நீக்கிய செய்தி எங்கும் பரவியது. சம்பந்தர் சில நாட்கள் அங்குத் தங்கியிருந்தார். இதன்மூலம் சம்பந்தர் முயலகன் நோய் நீக்கி சமுதாயச் சீர்திருத்தம் செய்தார் என்பது புலனாகிறது.

குளிர் சுரம் போக்குதல்

அதன் பின் சம்பந்தர் அங்கிருந்து புறப்பட்டு மற்றும் பல பல தலங்களை வழிபட்டுக் கொண்டு கொங்கு தேசத்தை அடைந்தார். மேற்கு

திசையில் உள்ள திருத்தலங்களை வணங்கிக் கொண்டு திருநணா சென்றார். அங்கு எழுந்தருளியுள்ள நீலகண்ட பெருமானை வணங்கி, மீண்டும் திருக்கொடிமாடச் செங்குன்றூர் அடைந்து இறைவனை வழிபட்டு அங்கு அடியவர்களுடன் தங்கியிருந்தார். அப்பொழுது மழை நீங்கிப் பனி பொழிந்தது. குன்றுகள் வெள்ளைப் போர்வை போர்த்தது போலவும், முத்துக்களைப் பச்சைக் கொடியில் கோர்த்தது போல அருகம்புற்களில் பனித்துளி காட்சியளித்தன. இரும்புச் சட்டியில் நெருப்பிட்டு மக்கள் குளிர்காய்ந்த வண்ணமிருந்தனர்.

குளிர்காலம் என்பதால் எங்கும் குளிர் சுரம் பரவி இருந்தது. சம்பந்தரின் அடியவர்களையும் மற்றும் மக்களையும் துன்புறுத்தியது. இதனை அடியவர்களும் அவ்வூர் மக்களும் சம்பந்தரிடம் முறையிட்டனர். இதைக் கேட்ட அவர், இஃது இந்நிலத்தின் இயல்பு என்று சொல்லி, அந்நோய் தீர்க்கத் திருநீலகண்டத் திருப்பதிகத்தைப் பாடியருளினார்.

"அவ்வினைக் கிவ்வினை யாமென்று சொல்லும் அஃதறிவீர்
உய்வினை நாடா திருப்பதும் உந்தமக் கூனமன்றே
கைவினை செய்தெம் பிரான்கழல் போற்றுதும் நாமடியோம்
செய்வினை வந்தெமைத் தீண்டப் பெறாத்திரு நீலகண்டம்"

என்று பாடினார். இப்பதிகத்தைப் பாடியவுடனேயே அடியவர்களுக்கும், மக்களுக்குமின்றி, அந்நாட்டு மக்கள் அனைவரும் தீய குளிர் சுரம் நீங்கிச் சுகம் பெற்றனர். இதன்மூலம் மக்கள் நோயின்றி நலமுடன் வாழ வழி செய்தார் என்பதை அறியலாம்.

பசிப்பிணி போக்கிய சம்பந்தர்

சம்பந்தரும், அப்பரும் திருவீழிமிழலையில் தங்கியிருந்தபோது பயங்கரமான பஞ்சம் தோன்றியது. இருவரும் மக்களின் துயர்தீர இறைவனைத் துதித்துவிட்டுக் கண்ணயர்ந்தனர். விண்ணவர்க்கும் எட்டாத கண்ணுதற் கடவுள் அவர்களுடைய கனவில் தோன்றி "உலகியல்பினால் எய்திய கொடிய பசித்துன்பம் உங்களை அடையாது, என்றாலும் உங்களின்பால் சார்ந்துள்ள சிவநெறித் தொண்டர்களது துன்பத்தை போக்கும் பொருட்டு, நமது திருத்தலத்தில் கிழக்கும் மேற்கும் உள்ள அழகிய பலிபீடத்தில் நாள்தோறும் ஒவ்வொரு காசு தருவோம், பஞ்சம் தீரும் வரை இவ்வாறு அருள்புரிவோம்" என்று திருவருள் புரிந்தார் ஈசன் இருவருக்கும்.

கனவு தெளிந்து எழுந்த இருவரும் திருத்தலம் சென்று வலம் வந்தனர். இறைவனுக்கு நேரே கீழ்திசைப் பலிபீடத்தின் மீது விளங்கும் பொற்காசைத் திருஞானசம்பந்தரும் மேற்திசைப் பலிபீடத்தின் மீதுள்ள பொன்நாணயத்தை (படிக்காசை) அப்பரும் எடுத்துக் கொண்டு இறைவனின்

திருவருளை வியந்து எண்ணித் தொழுதனர். அப்பொற்காசுகளைக் கொண்டு பறையறைவித்துச் சிவனடியார்களுக்குத் திருவமுது அளித்துப் பசிப்பிணியைப் போக்கினர்.

இவ்வாறு இருக்கையில் நல்ல மழை பொழிந்து நாடு செழித்தது. எல்லா உயிர்களும் இடர் நீங்கி இன்புற்றன. பஞ்சம் மாறியது. பலநாள் தங்கி இறைவனை இறைஞ்சிய பெருமக்கள் இருவரும் அடியவர் களிடம் விடைபெற்றுக் கொண்டு புறப்பட்டனர்.

திருக்கதவு திறந்தது

பின்னர் சம்பந்தரும், அப்பரும் திருவீழிமிழலையில் புறப்பட்டுப் பல திருத்தலங்களுக்குச் சென்று ஈசனை வழிபட்டுத் திருமறைக்காடு என்கின்ற வேதாரண்யத்தினை அடைந்தனர். அவ்வூர் ஆலயத்தினை வலம் வந்த இருவரும் எம்பிரான் திருமுன் சென்றார்கள். முன்பு மணிகண்டரை மறைகள் அர்சித்துத் திருகாப்பிட்ட கதவு அந்நாள் முதல் இந்நாள் வரை வேதாச்சார்யார்கள் யாரும் அத்திருக்காப்பினை நீக்கவே இல்லை. எனவே அடியவர்கள் வேறொரு பக்கத்தில் ஒரு வாயில் அமைத்து அவ்வழியே சென்று வழிபட்டு வந்தனர். இதைக் கண்ணுற்ற சம்பந்தர் அப்பர் பெருமானிடம் ''அப்பரே! நாம் எவ்வாறாகிலும் சுவாமியை நேர் வாயிலில் சென்று வணங்கவேண்டும்'' என்று தமது திருஉள்ளக்கிடக்கையை வெளிப்படுத்தினார். உடனே அப்பர்,

''பண்ணின் நேர்மொழி யாளுமை பங்கரோ
மண்ணி னார்வலஞ் செய்ம்மறைக் காடரோ
கண்ணி னாலுமைக் காணக் கதவினைத்
திண்ண மாகத் திறந்தருள் செய்ம்மினே!''.

என்று பாடினார். இவ்வாறாகப் பத்துப் பாடல்கள் பாடியும் கதவு திறக்கப்படவில்லை. இறுதியில் அப்பர் கீழ்கண்ட பதிகத்தைப் பாட,

''அரக்கனை விரலால் அடர்த்திட்ட நீர்
இரக்க மொன்றிலீர் எம்பெரு மானீரே
சுரக்கும் புன்னைகள் சூழ்மறைக் காடரே
சுரக்க இக்கதவம் திறப் பிம்மினே''

மணிக்கதவின் தாள் நீங்கித் திறந்தது. அப்பரும் சம்பந்தரும் அது கண்டு மகிழ்ந்து ஈசுவரனை எண்ணி இன்புற்று விழுந்து வணங்கினர். அங்குக் குழுமியிருந்த அடியவர்கள் அனைவரும் ஆனந்தக் கூத்தாடினர். பின் அவ்வழியே உள் நுழைந்து சுவாமியை தரிசித்துப் பாமாலைகள் பாடி வெளிவந்தனர். அப்பர் ஞானசம்பந்தரிடம் இக்கதவு என்றும் திறந்திருக்கயியலாது, ஆதலால் இக்கதவு திறக்கவும் மூடவும் பயன்படும் வகையில் திருப்பதிகம் பாடியருள வேண்டும் என ஞானசம்பந்தரிடம்

வேண்ட ஞானசம்பந்தர் திருவுள்ளம் கொண்டு ''சதுரம் மறைதான்'' எனும் பதிகத்தை அருளிச் செய்தார். பிறகு கதவு மீண்டும் மூடிக் கொண்டது. கதவு திறக்கவும், மூடவும் பதிகங்களை அருளிச்செய்து மக்கள் இறைவனை நேரடியாகத் தொழுவதற்குப் பணிபுரிந்தார்.

திருமணம் செய்வித்தது

திருமருகல் என்னும் தலத்தில் தாமன் என்னும் வணிகனை அரவு தீண்டியது. அதனால் அவன் இறந்துவிட்டான். அவனைத் திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்று எண்ணிய பெண் புலம்பி அழுது கொண்டிருந்தாள். தாலி கட்டாத காரணத்தால் அவனைத் தொட்டு அழமுடியவில்லை என்று எண்ணி அழுதாள். திருமருகல் தலத்தைத் தரிசனம் செய்ய வந்த ஞானசம்பந்தர் இதனைக் கண்டு அவளின் துயர் தீர்ப்பதற்காக ''சடையாஎனுமால்'' என்னும் பதிகத்தை அருளி வணிகனை உயிர் பெறச் செய்தார். பிறகு இருவருக்கும் திருமணம் செய்து வைத்தார். ஏழாம் நூற்றாண்டிலே தமிழரின் உடன்போக்கு நெறியை ஆதரித்துச் சமுதாய சீர்திருத்தைச் சம்பந்தர் செய்து அருளினார்.

ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்த திருஞானசம்பந்தர் தமிழ் இலக்கியத் திற்கும் தமிழ் இசைக்கும், தமிழ் மொழிக்கும், தமிழ்ப் பண்பாட்டிற்கும் அற்புதங்களை நிகழ்த்தியும், சீர்திருத்தங்களைச் செய்தும், மனித சமுதாயம் மேம்பட்டு வாழ வழிகாட்டியிருக்கிறார். திருப்பாச்சிலாச் சிராமத்தில் 'கொல்லி மழவன்' மகளுக்கு ஏற்பட்ட 'முயலகன்' நோய் போக்கியும், திருக்கொடிமாடச் செங்குன்றூர் மக்களுக்கு ஏற்பட்ட 'குளிர் சுரம்' போக்கித் தமது அருள்தன்மையால் எந்தவித மருந்தும் இன்றிப் பதிகங்களை அருளிச் சிறந்த மருத்துவராக விளங்கி நன்மை செய்திருக்கின்றார். திருமருகலில் களவு மணத்திற்கும் மதிப்புக் கொடுத்துத் தாமன் என்பவருக்குத் திருமணம் செய்து வைத்து சீர்திருத்தவாதியாக விளங்கி யிருக்கின்றார். இன்றைக்குச் சத்துணவுத் திட்டம் போட்டுக் குழந்தை களுக்கு மட்டும் பள்ளியில் ஒரு வேளை உணவு போட்டு அரசு பசிப்பிணி போக்குவதற்கு முன்னோடியாக கி.பி. ஏழாம் நூற்றாண்டிலேயே திருவீழிமிழலை என்னும் தலத்திலே ''வாசிதீரவே காசு நல்குவீர்'' என்று பதிகம்பாடி இறைவனிடம் படிகாசு பெற்று அடியவர்களிடம் பசிப்பிணி போக்கிச் சமூக சேவை செய்திருக்கிறார். திருமறைக்காட்டில் மூடிக்கிடந்த மறைக்கதவுகளை மக்கள் நேரடியாகச் சென்று வழிபட வேண்டும் என்று கருதி, பதிகம் பாடியருளினார். இப்படிப் பல சமூக நன்மைகளையும் சீர்திருத்தங்களையும் செய்தருளிய திருஞானசம்பந்தரின் பதிகங்களை ஓதி உய்வுறுவோமாக.

94. சம்பந்தர் தேவாரத்தில் இயற்கை

அ. ஜம்புலிங்கம், அண்ணாமலைநகர்.

சைவ சமய குரவர் நால்வர் உள்ளிட்ட அருளாளர்கள் பலரும் இயற்கையினூடே இறைவனைக் கண்டு போற்றி நின்றவர்களே; எனினும், குழந்தைப் பருவத்திலேயே திருவருளால் ஞானப்பாலுண்டு ஆளுடைய பிள்ளையாராகிய சம்பந்தர் இயற்கையழகினூடே சிவபிரானைக் கண்டு, பிறரையும் காணுமாறு காட்டியவர். சிவஞான வித்தகராகிய அவர், புறவழிபாட்டை அகவழிபாட்டுடன் இயைத்துக் கொண்டு, அருளனுபவங்களைத் திருப்பதிகங்களாகச் சமுதாய நலத்துக்கு வழங்கியுள்ளார். அவர் அருளிய தேவாரப் பதிகங்களில் எவ்வா றெல்லாம் தெய்வ நல இயற்கைக் கூறுகள் முத்திரையிட்டுச் செல்கின்றன என ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

இறைவனுக்கும் இயற்கைக்குமுள்ள தொடர்பு

இறைவன் காலம் இடம் எண்ணம் மொழி செயல் முதலிய அனைத்தையும் கடந்தவன்; மண்ணுயிர்கள் உய்தி பெறும் பொருட்டு, ஒன்றாய் உடனாய் வேறாய்த் தன்னை ஆக்கிக் கொண்டு, அவற்றின் பக்குவத்திற்கேற்ப அளவிலா விளையாட்டினை நிகழ்த்திக் கொண்டி ருக்கிறான். இத்தகைய விளையாட்டினை முறைப்படி நிகழ்த்துவதற்கும், அதனை உயிர்கள் எளிதில் உணர்ந்து உய்வதற்கும் இயற்கை துணை நிற்கிறது.

இயற்கையை இனங்கண்டு கொள்வது எப்படி? வான், காற்று, தீ, நீர், நிலம் ஆகிய ஐம்பூதங்களும், அவற்றின் கலப்புமாகத் தம்மியல் பாகத் தோன்றிய பொருள்களெல்லாம் இயற்கை; சீரிய சிந்தனையால் பொருள்களினூடே பொலிவுற்றுத் திகழும் அழகே கைபுனைந்தியற்றாக் கவின்பேறு வனப்பே - இயற்கையின் சிறப்புக் கூறு. இத்தகைய வனப்பை நக்கீரர் தாம் இயற்றிய திருமுருகாற்றுப் படையில் (17) சுட்டியுணர்த்துவதை நினைவிற் கொண்டு சிந்திக்கலாம்.

சங்க காலத்தில் இயற்கையெழிலின் சீர்மையைப் போற்றும் வண்ணம், மக்களின் வாழ்வியலாம் அகம், புறம் ஆகியவற்றைப் புலவர்கள் இலக்கியங் களாக மலர்த்தியுள்ளனர். பக்தி இயக்கக் காலத்தில் அருளாளர்கள் தம் அருட்பாடல்களில் இயற்கையை இறைமையையுணர்த்தும் துணைக்

கருவியாக மேம்படுத்தியுள்ளனர். இவ்வாற்றான் இறைவனுக்கும் இயற்கைக்குமுள்ள தொடர்பு, சமய நெறியினர்க்கு நன்கு புரிந்து கொள்ளக்கூடியதாயிற்று. இந்த நோக்கத்தில் ஆராயுங்கால், சம்பந்தர் தேவாரத்தில் காணலாகும் இயற்கை, தனித்தன்மை கொண்டது என்பது தெரிய வரும். மேலும், இறைவனைப் பொறுத்தவரையில் அவனது கை வண்ணத்துடன் கூடிய கலைப்படைப்பு அஃது என்பதும் தேவாரத்தால் குறிப்பாகக் காட்டப்பெறும்.

ஊழிப் பெரு வெள்ளத்தில் மிதந்த சிறப்பிற்குரிய சீகாழியில் பிரமபுரீசுவரராகவும், திருத் தோணியப்பராகவும், சடையப்பராகவும் சிவபெருமான் எழுந்தருளியுள்ளான். அத்தகைய பெருமைக்குரிய இறைவனது திருவருள் வளாகத்தில் இயற்கையமைப்பும் சமய மேம்பாட்டுக்காகத் துணை நிற்கின்றது. இதனை அருளாளர்கள் - சிறப்பாகச் சம்பந்தப் பெருமான் - பல கோணங்களில் நன்கு புலப்படுத்தியிருப்பது சிந்தித்தற்குரியது.

சம்பந்தர் அவதரித்தமையால் பெருமை கொண்ட திருத்தலம் திருப்பிரமபுரம் எனும் சீகாழியாகும். புராணச் சிறப்புடன் சீகாழியைப் பிரமபுரம், வேணுபுரம், புகலி, பெருவெங்குரு, திருத்தோணிபுரம், பூந்தராய், சிரபுரம், புறவம், சண்பை, கொச்சைவயம், கழுமலம் என்ற வேறு பெயர்களாலும் அழைப்பர். இத்தலத்துப் பன்னிரு பெயர்களையும் ஆராயப்புகின், சிவபரம்பொருளின் இயற்கையிகந்த திருவருட் பேராற்றலை உணர்ந்து கொள்ள வாய்ப்பேற்படும். இத்தலத்தில் எழுந்தருளியுள்ள இறைவன் இயற்கையிடத்தும் அதன் பயன்பாட்டிலும் செறிந்துள்ளான் என்பதைச் சம்பந்தர், திருப்பிரமபுரப் பதிகத்தில் புலப்படுத்தியுள்ளார். எவ்வாறெனின், குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்தல் ஆகிய நிலம் ஐந்தாகவும், சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் ஆகிய ஐம்புலனாகவும், மனம் புத்தி சித்தம் அகங்காரம் ஆகிய கரணம் நான்காகவும், பூதம் முதலியவற்றைச் சேர்ந்த பயனே வடிவாகவும், அவையில்லாத அருவாகிய ஞானமாகவும் விளங்குகிறான் இறைவன்; அவன் எழுந்தருளும் ஆலயத்திற்காகத் தவத்தினர் மலர் பறிக்கின்றனர்; அவ்வாறு பறிக்கையில் விட்ட மலர்க்கொம்புகள் சென்று தாக்குவதால் மாங்காய்கள் (கவண்கல்லால் தாக்குண்டதே போல) சுனைக்கரையில் விழுகின்றன. இதனைக் கண்ட பறவைகள் அஞ்சியகலுகின்றன. இத்தகைய வளம் நிறைந்தது திருக்கழுமலம்' என வருணிக்கிறார் சம்பந்தர். இதனைப்,

"புவிமுதல் ஐம் பூதமாய்ப் புலன்ஐந்தாய் நிலன்ஐந்தாய்க்
கரணம் நான்காய்
சுவையயை சேர் பயனுருவாய் அல்லவுருவாய் நின்றான்
அமருங் கோயில்

தவமுயல்வோர் மலர்பறிப்பத் தாழவிடு கொம்புதைப்பக்
கொக்கின் காய்கள்
கவணெறிகற் போற் சுனையிற் கரைசேரப் புள்ளியுங்
கழுமலமே'' (திருமுறை 1: மேகராகக் குறிஞ்சி, 7)

என வரும் பாடலால் தெரிந்தின்புறலாம், (கவண் கல்லெனமாங்காய் விழுவதால் பறவைகள் அஞ்சியகல்கின்றன என்றும் பொருள் கொள்வர்)

இவ்வாறே இயற்கையின் எழிற்கூறுகளாகவுள்ள நீர்நிலைகள், வண்ணப்பறவைகள், விலங்குகள் முதலிய பலவற்றையும் தம் தேவாரத்தில் பல கோணங்களில் சொல்லோவியங்களாகப் புலப்படுத்திக் காட்டியுள்ளார்.

இயற்கையெழிலும் சம்பந்தரது கற்பனை வளமும்

மருதவளங் கொழிக்கும் சோழ நாட்டில் நிலவள இயற்கையினைப் பலபடியாகப் போற்றிப் பாடியுள்ளார் சம்பந்தர்; திருக்கோலக்காவிற்குச் சென்று பதிகம் பாடுகையில்,

''மடையில் வாளை பாய மாதரார்
குடையும் பொய்கைக் கோலக் காவுளான்
சடையும் பிறையுஞ் சாம்பற் பூச்சுங் கீழ்
உடையும் கொண்ட வுருவ மென்கோலோ'' (1:23:1)

எனப் பாடிக் காட்டுகிறார். இதனுள், நீர்வளத்தைப் போற்றுகையில் மங்கையர் மடை நீரில் குடைந்து குடைந்து நீராடுவதால் வாளை மீன்கள் மடையில் துள்ளிப் பாய்ந்து விளையாடுகின்றனவாம்! இத்தகைய வளத்திற்கேற்ப இறைவனும் அணிகளணிந்தும் சந்தனம் பூசிக்கொண்டும் பட்டாடை உடுத்திக்கொண்டும் வாழாமல், கோவண ஆடை தரித்துக் கொண்டு காட்சியளிப்பது ஏனோ என வினவுகிறார் சம்பந்தர். ஈண்டு இயற்கை வளத்தைக் கருவியாகக் கொண்டு, தம் பாடலில் அவர் இறைமைக் கோலத்தைச் சுட்டிக்காட்டுவது சிந்திக்கத்தக்க குறிப்பாகும்.

சம்பந்தர் தம் தந்தையார் தோளில் அமர்ந்துகொண்டு தலப் பயணம் புரிகையில், திருநனி பள்ளியருகே வருகின்றார். அந்நிலப் பகுதியைச் சுட்டிக்காட்டி, ''அப்பதி யாது?'' என்று வினவியதும், தந்தையார், ''அது திருநனிபள்ளி'' என்று பதிலுரைக்கிறார். வளமாக அமைய வேண்டிய நிலப்பகுதி பாலையாக இருத்தலைக் கருத்திற் கொண்டு, அதனை நெய்தலும் முல்லையும் மருதமுமாகும் வண்ணம் திருப்பதிகம் இசைக்கின்றார்; இதனைக்,

''காரைகள் கூகை முல்லை களவாகை யீகை
படர் தொடரி கள்ளி கவினிச்
சூரைகள் பம்மி விம்மி சுடுகாட மர்ந்த
சிவன் மேய சோலை நகர்தான

தேரைகள் ஆரை சாய மிதிகொள்ள வாளை
குதிகொள்ள வள்ளை துவள
நாரைகள் ஆரல் வாரி வயன் மேதி வைகும்
நனி பள்ளி போலும் நமர்காள்'' (2:33:1)

எனவரும் பாடலில் காணலாம். இப்பாடலில், காரைச் செடிகள் ஆந்தை முதலிய பாலை நிலக் கருப் பொருள்கள், சம்பந்தரின் பதிகத்திறத்தால் மாற்றம் பெற்று அழகிய வளமார் சோலையும் வயலுமாகக் காட்சி தரும் திருவருள்திறம் புலப்படுத்தப்பட்டுள்ளது. மேலும், இயற்கையின் இயல்பையே சமுதாய நலத்துக்காக மாற்றியமைத்திடும் வித்தகமும் அருளாளர்களால் நிகழ்த்தப்பட்டுள்ளது என்பது மனங்கொள்ளத்தக்கது.

அருளாளர்கள் பொதுவாகவே மூர்த்தி தலம் தீர்த்தம் ஆகிய வற்றின் பெருமைகளைத் தக்காங்குத் தம் திருப்பதிகங்களில் பதியச் செய்து பாடுவர்; எனினும், சம்பந்தர் இக்கோட்பாட்டில் தனி நாட்டஞ் செலுத்தி வருதல் கண்கூடு, இயற்கையெழிற் கூறுகளைச் சித்திரித்துக் காட்டும் அவரது புலமைத் திறத்தால் அவர் மிகச் சிறந்த தெய்வநல மாண் கவிஞர் - இளம்பூரணர் - என்பது தெள்ளிது.

மூர்த்தியின் பெருமையே நேரடியாகப் புலப்படுத்துவது ஒரு புறமிருப்பினும், திருத்தலப் பெருமை தீர்த்தப் பெருமை ஆகியவற்றால் மூர்த்தியின் அளப்பரும் பெருமையையுணர்த்துவதும் ஒரு வகை உத்தியாகவே சம்பந்தரிடம் உள்ளது.

வளமார்ந்த திருத்தலம் என அடியவர்கள் உணரும் வகையில் ஒவ்வொரு திருத்தலத்தையும் பாடிச் செல்கையில் இயற்கையின் எழிற் கூறுகள் இழையோடி இன்பந்தருகின்றன. சில எடுத்துக்காட்டுகள் இயைபுடன் கூறப்படும்.

ஐம்பூதத் தலங்களில் பிருதுவி (மண்) தலமாக விளங்கும் திருவாரூரின் நீர் வளத்தையும் வயல் வளத்தையும் சோலை வளத்தையும் சம்பந்தர் போற்றிப் பாடுகையில்,

''திளைக்கும் தண்புனல் சூழ்திரு வாரூர்'' (3:303:7)

''அள்ளல் அகன் கழனி ஆரூர்'' (1:105:3)

''அல்லி மலர்க் கழனி ஆரூர்'' (1:105:11)

''செருந்தி ஞாழல் புன்னைவள்ளி செண்பகஞ் செழுங்குரா
அரும்பு சோலை வாசநாறும் அந்தணாரூ ரென்பதே''
(2: திருவிராகம்,9)

எனவரும் பாடற்பகுதிகள் மிகவும் சிந்திக்கத்தக்கவை.

தாம் கற்பனையில் கண்ட காட்சிகளைப் பல கோணங்களில் வருணித்தாலும், தாய்த் தன்மை நிலைபேறு கொண்டிருக்கும் இயற்கை யெழிலைத் தலம் வாயிலாக வருணிப்பது சுவை மிகப் பயப்பதாகும்; அதனில் அணி நலமும் உண்டு.

இயற்கைக் காட்சியில் உயிர்களிடையே எங்கும் தாய்மைப் பொலிவு உண்டு; இதனை ஆளுடைய பிள்ளையார் திருக்கேதாரப் பதிகம் வாயிலாக வருணித்துச் செல்வது சிந்தனைக்கு விருந்தாகும். கிளிகள் தாய்ப் பாசத்துடன் தினைப் புனத்திற்குச் சென்று கதிர்களாகிய இரையைக் கொணர்ந்து, தம் குஞ்சுகளுக்கு வாயில் வைத்து ஊட்டுகின்றனவாம்; திருக்கேதாரத்தில் காணலாகும் இயற்கைக் காட்சியைப்,

''பிள்ளை துள்ளிக் கிளைபயில்வ
கேட்டுப் பிரியாது போய்க்
கிள்ளை ஏனற் கதிர் கொணர்ந்து
வாய்ப் பெய்யும் கேதாரமே'' (2: திருக்கேதாரம்:4)

எனவரும் சம்பந்தர் திருவாக்கால் உணர்ந்தின்புறலாம்.

சமயநெறி தழைத்தோங்கப் பதிக நெறியைப் போற்றும் சம்பந்தர் தம் பதிகங்களின் வாயிலாகக் கற்பனையை உலவ விட்டுச் சமயக் கடமையும் உய்த்துணரச் செய்துள்ளார்.

மலையும் மலைச் சார்ந்த பகுதியுமாகிய குறிஞ்சி நிலத்தைச் சிறப்பாக வருணித்துச் செல்கையில், வானோர் வாயிலாகச் சமயக் கடமையும் மக்கள் நினைவிற் கொள்ளுமாறு சொற்சித்திரம் தீட்டுகின்றார்.

எடுத்துக்காட்டாகத் திருக்கேதாரப் பதிகத்தில்,

''மடந்தைபாகத் தடக்கி மறையோதி வானோர் தொழத்
தொடர்ந்த நம்மேல் வினை தீர்க்க நின்றார்க் கிடமென்பரால்
உடைந்த காற்றுக் குயர் வேங்கை பூத்துதிரச் கல்லறைகள் மேல்
கிடந்த வேங்கை சினமாமுகம் செய்யும் கேதாரமே''
(2: திருக்கேதாரம் : 7)

எனப் பாடிச் செல்வதை மனத்துட் கொள்ளலாம். இதனால், வேதமோதிய வண்ணம் வானோர்கள் நிற்க, வினை தீர்க்கும் கருணையால் சிவன் உமையம்மையுடன் எழுந்தருளிய இடம் திருக்கேதாரம் என்பதும், அத்தலத்தில் வீசுங்காற்றால் வேங்கை மரத்திலிருந்து பூக்கள் உதிரக் கூடிய சூழலில் வேங்கைப் புலி சினங்கொண்ட முகத்துடன் இருப்பதே போன்று காட்சியளிக்கிறது என்பதும் கற்பனைச் சித்திரங்கள்; எனினும், அவை சமய வழிச் சிந்தனையுடன் கூடியவை என்பது உளங் கொள்ளத்தக்கது.

பாறைமேல் வேங்கை மலர்கள் உதிர்ந்து கிடப்பது வேங்கைப் புலியின் தோற்றத்தைப் போலுள்ளது என்பது சங்க இலக்கியங்களிலும் காணக்கூடிய கற்பனையே; ஒப்பியல் நோக்கில் அமைந்துள்ள இக்கற்பனையை,

"ஓங்கல் மிசைய வேங்கை ஒள்வீ
புலிப் பொறி கடுப்பத் தோன்றின்" (அகநானூறு - 228)

"அரும்பற மலர்ந்த கருங்கால் வேங்கை
மாத்தகட் டொள்வீ தாய துறுகல்
இரும்புலி வரிப் புறங் கடுக்கும்" (புறநானூறு - 203)

எனவரும் செய்யுட் பகுதிகளிலும் கண்டு போற்றலாம்.

வேதநெறி தழைத்தோங்கவும் மிகு சைவத்துறை விளங்கவும் அவதரித்த சம்பந்தர்; "திருவீழிமிழலையில் பண்டிதர்கள் வேத கீதங்களைப் பண்ணோடு பரவிப் பயில்கின்றனர். அதனைக் கேட்டுத் தேன் துளிக்கும் மலர்ப் பொழிலில் கிளிகள் வேதப் பொருள்களை நவின்று நிற்கின்றன," என்றும் பொருள்படப் பாடிக் காட்டுகிறார்;

இதனைப்,

"பாரிசையும் பண்டிதர்கள் பன்னாளும்
பயின்றோதும் ஓசை கேட்டு
வேரிமலி பொழிற்கிள்ளை வேதங்கள்
பொருட் சொல்லு மிழலையாமே" (1:132:1)

எனவரும் பாடற்பகுதியால் அறிந்து மகிழலாம்.

திருவீழிமிழலையில் சம்பந்தர், இறைவனிடம் படிக்காசு பெற்று, வற்கடக்காலத்தில் திருமடம் அமைத்து, உணவு சமைத்து மக்களுக்கு வழங்கியுள்ளார்; எனவே, சமயத்தொண்டும் சமுதாயத்தொண்டும் புரிந்து, சம்பந்தர் இறைவன் திருவருளால் பெருஞ்சிறப்பினை எய்தினார் என்பது வரலாறு. அத்தகு திருவீழிமிழலையே மீண்டும் இயற்கை வளம் பெற்ற காலத்தில், தாம் கண்டனுபவித்த இயற்கையழகினைப் பதிகமாக்கி மகிழ்கின்றார் சம்பந்தர்.

முதல் திருமுறை - திருவீழிமிழலைப் பதிகத்தின் இரண்டாம் பாடலில், 'வாசுகி என்னும் பாம்பைக் கடைகயிறாகச்சுற்றி, மந்தர மலையை மத்தாகக்கொண்டு, தேவர்கள் பாற்கடலினைக் கடைந்த காலத்தில் ஆலகாலமாகிய நஞ்சு எழுந்தது; அந்த நஞ்சினையுண்ட நீலகண்டன் வீற்றிருக்கும் கோயில் திருவீழிமிழலையாகும்; அதன் வளாகத்தில் தாமரையாசனத்திலே தாமரையிலையையே குடையாகக் கொண்டு இள அன்னம் இளவரசுப் போல வீற்றிருக்கிறதாம்; அந்தச் சூழலில்,

நெற்கதிர்கள் சாமரை இரட்டும் இயற்கையெழிற் காட்சி' அமைந்துள்ளதாம்; இதனைச் சம்பந்தர்,

''பொறியரவ மதுசுற்றிப் பொருப்பேமத்
தாகப்புத் தேளிர்கூடி
மறிகடலைக் கடைந்திட்ட விடமுண்ட
கண்டத்தோன் மன்னுங்கோயில்
செறியிதழ்த்தா மரைத் தவிசில் திகழ்ந்தோங்கு
மிலைக்குடைக் கீழ்ச் செய்யார் செந்நெல்
வெறி கதிர்ச்சா மரையிரட்ட இள அன்னம்
வீற்றிருக்கும் மிழலையாமே''

எனவரும் பாடலால் உணர்த்திக் காட்டுகிறார்.

நீர்வளத்தின் அடையாளமாக முத்துக்கள் புன்னகை புரிந்திடவும், தாமரை மலர்கள் தம் முகங்களைக் காட்டவும், நீர்ப்பரப்பில் குதித்து விளையாடும் கயல் மீன்கள் மாதரார் விழிகளை நினைப்பூட்டவும், செம்பவளங்கள் அவர்களின் சிவந்த வாயை முன்னிறுத்திக் காட்டவுமான இயற்கைச் சூழலுடையது முப்புரமெரித்த சிவனது திருவீழிமிழலை; இதனை,

''எழுந்துலகை நலிந்துழலும் அவுணர்கள்தம் புரமூன்றும்
எழிற்கண் நாடி
உழுந்தருளும் அளவையினொள் ளெரிகொளவெஞ்
சிலைவளைத்தோன்
உறையுங் கோயில்
கொழுந்தாளாம் நகைகாட்டக் கோகனதம் முகங்காட்டக்
குறித்து நீர் மேல்
விழுந்த கயல் விழிகாட்ட விற்பவளம் வாய்காட்டும்
மிழலை யாமே'' (1: மேகராகக்குறிஞ்சி:3)

எனவரும் பாடலில் தெரிந்து கொள்ளலாம்.

திருவீழிமிழலையில் குழந்தைகளைப் பெற்றெடுத்த நங்கையர் பலர், அழகொழுகுந் தீந்தமிழால் தாலாட்டுப்பாடி மகிழ்கின்றனர். தாலாட்டின் இனிய ஓசை விண்ணவர்களின் நாட்டத்தைக் கவர்கின்றதாம்! அவர்கள் தேவருலகத்திலும் கேட்டற்கரிய அவ்வின்னிசையை வியந்து, உள்ளங்குழைந்து, விமானமேறி வீழிமிழலைக்கே விரைந்து வருகின்றனராம்! இவ்வாறு இயற்கையிகந்த கற்பனை வளத்துடன் தேவாரம் பாடுகிறார் சம்பந்தர்; இதனைப்

''பண்ணமரும் மென்மொழியார் பாலகரைப்
பாராட்டும் ஓசைகேட்டு

விண்ணவர்கள் வியப்பெய்தி விமானத்தோடு
இழியும் மிழலையாமே'' (1:மேகராகக் குறிஞ்சி:10)

எனவரும் பாடலடிகளால் அறிந்து கொள்ளலாம்.

ஞானவானில் சிறகடித்துப் பறந்துலவும் சம்பந்தர்; திருவீழிமிழலையில் பொய்கைக் கரையில் இயற்கை நிகழ்த்திடும் ஒரு திருமணக் காட்சியைப் பாடலாகப் பாடிக் காட்டுகிறார். நெஞ்சையள்ளும் வகையில், பொய்கையில் தாமரை மலர்கள் அழகுடன் பூத்து நிற்கின்றன. பக்கங்களில் சங்குகள் வளைய வருகின்றன. கரைக்கண் வளர்ந்துள்ள புன்க மரங்கள் காற்று வீசுவதால் பொரி போன்ற தம் மலர்களைத் தாமரை மலர்களில் சொரிகின்றன. இக்காட்சி, தீப்போன்ற தாமரை மலர்களே ஓம குண்ட மாகவும், அவற்றிலே சொரியும் புன்க மலர்களே பொரிகளாகவும், பக்கங்களில் உலவும் சங்குகளே திருமண மக்களாகவும் பாவிக்கச் செய்து, இயற்கையன்னை திருமணம் நடத்துவதைக் கற்பனையால் காணச் செய்யும்; இதனைத் தேவாரத்தில்,

''தகவுடைநீர் மணித்தலத்துச் சங்குள வர்க்கம்
திகழ்சல சத்தீயுள்
மிகவுடைய புன்கு மலர் பொரியட்ட மணஞ் செய்யும்
மிழலை யாமே'' (1 : மேகராகக் குறிஞ்சி : 6)

எனவரும் பாடற் பகுதியில் தெரிந்து கொள்ளலாம்.

ஈண்டு 'அட்ட மணம்' என்பது, 'மறையோ தே எத்து மன்றல் எட்டு' (தொல்காப்பியம், களவியல் - 1) எனப் பொருள்படும் எனக் கொண்டு, அதன் விளக்கமாகப் பிரமம், பிரசாபத்தியம், ஆரிடம், தெய்வம், காந்தருவம், அசுரம், இராக்கதம், பைசாசம் ஆகியவற்றைக் குறிப்பர். ஆனால், பொரிதூவுதலும் ஓமம் வளர்த்தலுமாகிய கிரியைகள் எல்லா மணங் களுக்கும் பொருந்தி வரும் மரபு இல்லை; ஆதலின், அவர் தம் கருத்து ஆராய்வதற்குரியது.

உலகன்னையிடம் ஞானப்பால் உண்ட காரணத்தால் ஆளுடைய பிள்ளையார் திருப்பெருகு சிவஞானம், பிறப்பறுக்கும் ஞானம், கலைஞானம், மெய்ஞ்ஞானம் ஆகியவற்றைப் பெற்றுள்ளார்; அவற்றின் உயரிய செயற்பாடு அவருடைய தேவாரப் பதிகங்களில் பொருந்தி யிருக்கக் காணலாம். அபரஞானமாகிய கலை ஞானம் புலப்படும் வகையில், பாடல் நெறியையும் ஆடல் நெறியையும் அழகுற வருணிக் கிறார் அவர்; அஃதாவது, இயற்கையின் உயிர்த் தொகைக் கணக்கிலே எண்பத்து நான்கு நூறாயிரம் யோனி வேற்றுமைகளைப் படைத்து இறைவன் அவற்றின் உயிர்க்குயிராய் விளங்குகிறான் என்பதும், அவ்விறைவன் கோயிலில் மேகமாகிய முழவம் ஒலிக்கவும் தோகை

மயில் நடமாடவும் வண்டு இனிது பாடவுமான ஆடலரங்கச் சூழல் அமைந்துள்ளது; அடுத்து, இயற்கையழகனுபவத்தைப் போற்றும் வகையில் இயற்கையின் ஒரு கூறாகவுள்ள கொன்றை மரம் தன் பரிசிலாகிய மஞ்சள் வண்ண நறுமலர்களை வழங்கவும், காந்தள் மலர்கள் கைகளாக அமைந்து அப்பரிசிலை வாங்கிக் கொள்வதாகவும் காட்சியமைத்துக் காட்டுகிறார் சம்பந்தர் இந்த வியத்தகு கற்பனைச் சித்திரத்தை,

''உரைசேரு மெண்பத்து நான்குநூ
றாயிர மாம் யோனி பேதம்
நிரைசேரப் படைத்தவற்றி னுயிர்க்குயிரா
யங்கங்கே நின்றான் கோயில்
வரைசேரு முகில் முழவ மயில்கள் பல
நடமாட வண்டுபாட
விரை சேர் பொன் னிதழிதர மென் காந்தள்
கையேற்கு மிழலையாமே'' (1: மேகராகக்குறிஞ்சி : 4)

என்ற பாடலில் கண்டு போற்றலாம்.

கவின் கலைகள் சிறந்தோங்க வேண்டுமெனின், இடமும் காலமும் சூழலும் இனிது அமையவேண்டும்; அத்தகைய சூழ்நிலையில்தான் கலைஞர்கள் தம் கலைத்திறனை நன்கு வெளிக்காட்ட இயலும். இயற்கையாகவே காதலுணர்வு எவ்வுயிர்க்கும் இன்பவுந்து சக்தியாக அமையுமென்பது இயற்கையன்னை வகுத்த விதி. சமணர்களும் பௌத்தர்களும் துறவின் அழுத்தத்தால் மகளிரை - அவர்தம் காதலுணர்வை - வளரவிடாமலும் நெருங்கவிடாமலும் தடுத்தனர். அந்நிலையில் சம்பந்தர், இறைவனே இறைவியுடன் இனிதமர்ந்து காட்சி நல்குவதால் மண்ணில் மக்கள் நல்லவண்ணம் வாழுமாறு வழிகாட்டினார். மேலும்' கவின்கலைகளுள் நுட்பமான இசைக்கலையை இசைபாடும் வண்டினங்களோடு தொடர்புபடுத்தி, இயற்கையெழிலை மேம்படுத்திக் காட்டுகிறார்.

இயற்கை வழங்கும் இன்னிசை வண்டுகள், குற்றாலமலைச் சாரலில் தம் பெட்டை வண்டுகளை அணைத்த வண்ணம் குருந்த மரத்திலேறி யாழ் போன்ற செவ்வழிப்பண் பாடுகின்றனவாம்! இந்தக்கலை வண்ணக் காட்சியைச் சம்பந்தர்,

''பெருந்தண் சாரல் வாழ்சிறை வண்டு பெடைபுல்கிக்
குருந்தம் மேறிச் செவ்வழி பாடும் குற்றாலம்'' (1 : குறிஞ்சி : 10)

எனும் பாடற் பகுதியால் புலப்படுத்திக் காட்டுகிறார்.

இயற்கையின் வாயிலாகக் காதல் பக்தியுணர்வுகளைப் புலப்படுத்துதல்

ஆளுடைய பிள்ளையார் தம் பக்தியார்வத்தாலும் சைவ சமய நெறிபரப்பும் ஆர்வத்தாலும் திருத்தலப் பயணம் மேற்கொள்கிறார். சிறுத்தொண்டர் வாழும் திருச்செங்காட்டங்குடிக்கு எழுந்தருள்கிறார். சிறுத்தொண்டர் அவரை வரவேற்ற நிலையில், தொண்டரின் செயற்கரிய தொண்டினைச் சிறப்பித்துப் பாடுகையில் பிள்ளையார்,

''பைங்கோட்டு மலர்ப்புன்னைப் பறவைகாள் பயப்பூரச்
சங்காட்டம் தவிர்த்தென்னைத் தவிராநோய் தந்தானே
செங்காட்டங் குடிமேய சிறுத்தொண்டன் பணிசெய்ய
வெங்காட்டுள் அனலேந்தி விளையாடும் பெருமானே''

(31 : பஞ்சமம் : 1)

எனப் பாடிப் போற்றுகிறார். நெய்தல் நிலத்துப் புன்னை மரக்கிளையில் மலர்களிடையே காணலாகும் பறவைகளை விளித்து அவர், நாயக நாயகி பாவத்தில் (Bridal mysticism) இறைவனுடன் கொண்டுள்ள கடவுட்காதலை விண்டுரைக்கிறார்; தமக்கு இறைவன் காதல் நோய் தந்துவிட்டானே எனப் புலம்புகிறார். இவ்வாறு காதலால் அலமந்து அஃறிணைப் பொருள்களிடத்தும் கூறுந்துறையைக் 'காமமிக்க கழிபடர் கிளவி' (Pathetic fallacy) என இலக்கண நூலார் கூறுவர். இவ்வாறு இயற்கையினை வருணிக்கும்போதும், சிறுத் தொண்டர்க்குப் பணிசெய்யத் தமக்கு இறைவன் அருள் புரிய வேண்டுமென்று குறிப்பிடுகிறார். இதனால், அடியார்க்குப் பணிசெய்தல் சமயநெறி மேம்பாட்டுக்கு மிக உகந்தது என்ற கருத்தும் புலப்படுத்தப்படுகின்றது.

காரைக்காலுக்கு அருகேயுள்ள திருத்தலம் திருத்தருமபுரம். ''சம்பந்தரின் பதிகச்சிறப்பு, திருநீலகண்ட யாழ்ப்பாணர் பண்ணமைத்து வாசிக்கும் யாழினால்'' என்ற கருத்தினைப் பாணரின் சுற்றத்தினர் கூறுகின்றனர். அவர்களின் தவறான கருத்தினை மாற்றும்படி, சம்பந்தரிடம் பாணர் வேண்டிக் கொள்கிறார். பாணரின் வேண்டுகோளுக்கிணங்க 'யாழ்முரிப்பதிகம்' சம்பந்தரால் பாடப்படுகின்றது.

உமையம்மையையும் படர்சடை முடியையுடைய கங்காதர மூர்த்தியைச் சம்பந்தர் புகழ்ந்து பாடுகையில, ''வேதத்துடன் ஏழிசை பாடுவோரையும், கடலலைகள் பரவிடும் ஓசையையும், முத்துக்களைப் போல மலரும் புன்னைமலர்களை மொய்க்கும் வண்டுகளின் ஓசையையும், அழகிய பூஞ்சோலையில் குயிலினங்களையும்,'' வருணித்து நெய்தல் நிலச்சிறப்பைப் புலப்படுத்துகிறார்; இதனை,

''மாதர்ம டப்பிடியு மடவன்னமு மன்னதோர்
நடையுடைம் மலைமக டுணையென மகிழ்வர்

பூதவி னப்படைநின் றிசை பாடவு மாடுவ
ரவர்படர் சடைந் நெடு முடியதோர் புனலர்
வேதமொ டேழிசைபா டுவராழ்கடல் வெண்டிரை
யிரைந் துரைகரை பொருது விம்மிநின் றயலே
தாதவிழ் புன்னை தயங்கும் மலர்ச்சிறை வண்டறை
யெழில்பொழில் குயில்பயில் தருமபு ரம்பதியே''
(1 : யாழ்முரிப்பதிகம் : 1)

எனவரும் பாடலால் தெரிந்து கொள்ளலாம்.

இலக்கியச் சுவை விஞ்சும்வண்ணம் இயற்கையழகுக் கூறுகளைத் தேர்ந்து காட்டும் சம்பந்தர், கற்பனையையும் அணி நலனையும் பக்திக்குப் பணிவிடை செய்யுமாறு உத்தி வகுத்துக் கொள்கிறார்.

சீகாழியில் தழைத்தோங்கி நிற்கும் கமுகமரங்கள் சம்பந்தப் பெருமானின் பார்வையில் படுகின்றன. அவற்றிலுள்ள சிறிய பாக்குப் பிஞ்சுகள் முத்துக்களாகவும், காய்கள் மரகதமாகவும், பழங்கள் பவள மாகவும் அவரது அழகனுபவக் காட்சிக்குத் தோற்றமளிக்கின்றன. உருவக நலத்துடன் பாடும் போதும், மக்கள் இறைவனைப் பலபடியாகப் போற்றிப் புகழ்ந்து, வினைகள் சேராதிருக்கவும் இன்பத்தில் திளைக்கவும் வழிதேடிக் கொள்ளுமாறு குறிப்பிடுகிறார். அவ்வருளாளர்; இதனை,

''எண்ணார் முத்தம் ஈண்டு மரகதம்போற் காய்த்துக்
கண்ணார் கமுகு பவளம் பழுக்கும் கடற்காழிப்
பெண்ணோர் பாகா பித்தா பிரானே யென்பார்க்கு
நண்ணா வினைகள் நாள்தோறும் இன்பம் நணுகுமே''
(1: 102 குறிஞ்சி, 4)

என வரும் பாடலால் அறிந்து இன்புறலாம்.

சம்பந்தர் அருளிய முதல் மூன்று திருமுறைகளிலும் காணலாகும் திருப்பாடல்களெல்லாம் திருவருட்பயனாக உள்ளொளி உந்துதலால் பாடப்பெற்றவை. எனவே, அவற்றில் இயற்கையன்னை எழில் குலுங்க நடமிடுவதில் வியப்பில்லை; எங்கும் திருவருள் வளாகமே.

95. சம்பந்தரும் பௌத்தமும்

பா. ஜம்புலிங்கம், தஞ்சாவூர்.

இந்தியாவில் தோன்றிய சமயங்களுள் மிகப் பழமையானதும் சிறப்பானதும் சைவ சமயமாகும். ஆண்டாண்டு காலமாக இந்தச் சைவ சமயத்தின் வளர்ச்சியானது பல்வேறு நிலைகளில் இருந்து வந்துள்ளது. தமிழ் மக்களைப் பொறுத்தவரை வரலாற்றுக் காலத்து முன்பிருந்தே வழிவழியாக வழங்கி வருவது சிவநெறி என்கின்ற இந்தச் சைவ சமயமாகும். வட வேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ் கூறு நல்லுலகம் என்று சிறப்பித்துக் கூறப்படுவது நமது தமிழகம் ஆகும்.

இவ்வுலகின் பழமையான பகுதியாகக் கடல் கொண்ட குமரிக் கண்டம் என்பது தொல்லியல் ஆய்வாளர்கள் கருத்து. இன்றைய குமரியின் தெற்கே நீண்டு பரந்து கிடந்த நிலப்பரப்பைக் குமரி நாடு என்று பண்டைய தமிழ் இலக்கியங்கள் கூறும். இதனை இலெமூரியா என்று மேல் நாட்டு அறிஞர்கள் கூறுவர். தொன்மையான இப்பகுதியில்தான் மனித இனம் முதலில் தோன்றியது என்பர். அதுவே தென்னாடு என்று அழைக்கப்பட்டது. அந்தத் தென்னாட்டிலேதான் தமிழர்கள் சங்கம் வைத்து மொழி வளர்த்தனர். அங்குதான் சிவவழிபாடும் தோன்றியது. அதனால்தான் சிவன் தட்சிணாமூர்த்தி என்றும், தட்சிணாபதி என்றும் அழைக்கப்படுகின்றார். மேலும் நடராஜர் திருவுருவம் உருவானதும், பஞ்சபூதத் தத்துவம் தோன்றியதும் கடல் கொண்ட தென்னகத்திலேதான் என்று அறிய முடிகின்றது. இந்த அடிப்படையிலேதான் தட்சிணாமூர்த்தியை நடராஜப் பெருமானும் கடல்கொண்ட தென்னாட்டை நினைவூட்டும் வண்ணம் தெற்கு நோக்கிக் காட்சி தருகிறார்.

சிவமென்னும் செம்பொருளை உணர்ந்தொழுகும் நெறி சைவ நெறி எனப்பெறும். என் செயலாவதொன்றில்லை எனவும் ஆட்டுவித்தால் யாராருவர் ஆடாதாரே எனவும் இயல்பு மலம் ஒடுங்கிய நிலையில் ஆன்றோர் அந்நெறிக்கண் கலாது நின்று சிவநெறியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானம் பெறுவர். இத்தகைய உயிர்களைச் சிவபெருமான் சிவமாக்கித் தம்மில் வேறின்றி ஆண்டுகொள்வன். அந்நெறிப்படுமுன் உயிர்கள் வினையிலே கிடந்துழன்று, வினைக் கணக்குக்கேற்பப் பிறவிப் பெருங்கடற்கண் அழுந்தித் துயருற்று, அவனருளாளே அவன்தாள் வணங்கப்பெற்று உயர்வர். சிவநெறியொன்றே உயிர்கள் மலங்களைந்து

பக்குவம் பெறுதலையும், செய்வினை நீங்கிப் பிறப்பற்ற பெருநிலை எய்துதலையும் உரைக்கும்.

மூவர் தேவாரம்

திருஞானசம்பந்தருக்கு இறைவன் பாலைக்கொடுத்து ஆட்கொண்டார். திருநாவுக்கரசருக்குச் சூலை கொடுத்து நம்பன் ஆட்கொண்டார். திருநாவலூராராம் சுந்தரரை திருவெண்ணெய் நல்லூரான் ஓலை காட்டி ஆட்கொண்டார். அது முதலாக ஞானசம்பந்தர் பாடியவை முதல் மூன்று திருமுறைகள். திருக்கடைக்காப்பு எனும் பெயர் பெற்றது. திருநாவுக்கரசராம் அப்பர் பாடியவை 4,5,6 ஆகிய மூன்று திருமுறைகள். இதுவே தேவாரம் எனப் பெயர் பெற்றது. சுந்தரர் பாடியது 7-ஆம் திருமுறை திருப்பாட்டு என்னும் பெயருடையது. இவ்வாறு தனித்தனிப் பெயர்கள் இருப்பினும் மூவர் பாடியதையும் தேவாரம் என்றே கூறும் மரபு உளது.

ஞானசம்பந்தரின் தோற்றம்

சிவபாத இருதயரும் பகவதியம்மையாரும் தத்தம் தனி நிலையில் சைவ நெறியில் வந்தவர்கள். சிவனைத் தவிர வேறு எவரையும் வணங்காத கொள்கையும் திருநீறு பூசுவதில் பற்றும் உடையவர்கள். இவர்கள் ஒப்பற்ற மகன் ஒருவன் வேண்டும் என்ற குறிக்கோளை உள்நிறுத்தி, வழிபாட்டினை மேற்கொண்டார்கள். எப்படிப்பட்ட மகன் வேண்டும்? அவர்கள் இதற்காக இருவகைத் தவம் மேற்கொள்கின்றார்கள்.

1. இல்லறம் என்பது இன்பம் நிறைந்த இல்லறமாக அமையவேண்டும் என்றால் இன்பநல் இல்லறத்தின் அடிப்படை மகப்பேறு. அவ்வகையில், இல்லறத்தின் இன்ப நிறைவு என்ற நிலையை விளக்கும் வகையில் மகப்பேறு தேவை. மகப்பேற்றை முன்வைத்த வழிபாடு பொது வகைத்தவம்.
2. உலகின் சமணர், சாக்கியர் ஆகியவர்களால் பொய் மிகுந்து பழைமையாகிய வேத வழக்கம் குறைந்து வருகிறது. சிவனடியார் களுக்கு அன்பு காட்டித் தொண்டு செய்பவர்கள் இல்லை. திருநீறு பூசுதல் முதலிய சாதனங்கள் சிறந்தவைகளாக மதிக்கப்பெறவில்லை. இம்மூன்று அடிப்படைகளில், பிற சமயங்களில் மறுத்து அழிக்கும் தொண்டுக்குரிய பிள்ளை தேவை, அதற்கான சிறப்புத்தவம். இறைவன் இவர்கள் கருத்தை ஏற்றுக்கொண்டான். வழிபாட்டை ஏற்றுக்கொண்டான்.

மூன்று வயதுக் குழந்தையாயிருந்து திருப்பதிகம் அமைத்தருளும் காலத்திலேயே, புத்தரும் சமணரும் புறங்கூறியும், நன்னெறியொடு படாதவைகளை அமைத்து இழிவாகப் பேசியும் வருகிறார்கள்

என்பதை எடுத்துக்காட்டி, அவர்கள் சமய உண்மைகளைப் பேசும்போது, பொதுவாக மக்கள் கடைப்பிடிக்க வேண்டிய அறநெறிகளைக்கூடக் கடைப்பிடிப்பதில்லை என்று கூறும் நிலையைத் திருவருளாற்றலால் பெற்று, அதனை எடுத்து விளக்குவாராயினர்.

திருஞானசம்பந்தப் பெருந்தகை இந்நிலவுலகில் பதினாறாண்டுகள் வாழ்ந்தார் என்றும் பதினாறாயிரம் பதிகங்கள் அருளினார் என்று வரலாறு அமையும். இதனைப்

'புண்ணிய பதினாறாண்டு பேர் பெறும் புகலிவேந்தர்'

என்று சேக்கிழார் பெருமானும் அமைந்தருளுகின்றார்.

அன்றைய தமிழகச் சூழல்

இத்தகு பெருமை வாய்ந்த ஞானசம்பந்தர் காலத்திற்குச் சற்று முன்பாக தமிழகத்தைக் களப்பிரர்கள் ஆண்டு வந்தனர். அவர்கள் காலத்தில் சமணமும், பௌத்தமும் நல்ல நிலையில் பரவி அதிக செல்வாக்கோடு இருந்தது. இந்த சமயங்கள் பெரும்பான்மையோர் சமயங்களாக இருந்தபடியாலும், களப்பிரரும் சைவ சமயத்தவரான படியாலும் அவர்களுக்கு நாட்டில் ஆதரவு இருந்தது. களப்பிரர் முக்கியமாகச் சமண சமயத்தை ஆதரித்தனர். அதற்கு அடுத்தப்படியாக பௌத்த சமயத்திற்குச் செல்வாக்கு இருந்தது.

பௌத்த சமயமானது கி.மு. மூன்றாம் நூற்றாண்டில் அசோகர் காலத்தில் தமிழகம் வந்தது. பௌத்த பிக்குகள் நாடெங்கும் பிரசாரம் செய்து பௌத்த சமயத்தை வளர்த்தார்கள். ஆகவே பௌத்த சமயம் பையப் பைய வளர்ந்து தமிழ்நாட்டில் சிறப்படைந்தது. களப்பிரர் ஆட்சிக் காலத்தில் (கி.பி. 250-575) பௌத்தம் தமிழ்நாட்டில் மேலும் பரவி வளர்ந்தது. தமிழகத்துக்குப் பக்கத்தில் உள்ள இலங்கையிலும் பௌத்தம் பரவியிருந்தபடியால் அதன் காரணமாகவும் பௌத்தம் வலிவு பெற்றிருந்தது.

சமணமும் பௌத்தமும் அக்காலகட்டத்தில் நல்ல நிலையில் இருந்தாலும் சமணம் இந்நாட்டில் கால்கொள்ளவும், பௌத்தமும் நிலைக்காமல் போனதற்கும் பல காரணங்கள் உள்ளன.

சமணர் தமிழரின் தெய்வங்களை ஏற்றுக்கொள்ள முடியாத சமயக் கோட்பாடு உடையவர்கள் என்றாலும் தமிழகத்தில் புகுந்த அவர்கள் தமிழைக் கற்றுக் கொண்டு தமிழ்ப்பற்றை வெளியிடு முறையில் தமிழர் களமாகவே ஆயினர். சமணர் காட்டிய தமிழ்ப்பற்றும், சங்க காலத்தை அடுத்து வந்த காப்பிய காலத்தில் இளங்கோ போன்றவர்கள் காட்டிய சமயப்பொறையும் தமிழர்களைக் கவர்ந்தன. எனவே சமணம் இங்கு

நிலைத்துவிட்டது. சமணமும் பௌத்தமும் ஏறத்தாழ ஒரே காலகட்டத்தில் வட நாட்டில் தோன்றி வளர்ந்து தமிழகத்துள் நுழைந்தவைதாம். இருப்பினும் சமணம் நிலைத்ததுபோலப் பௌத்தம் இங்கு நிலைக்க வில்லை. பௌத்த சமயத்திற்குரிய தர்க்க நூல்களை எழுதிக் குவித்தவர்கள் இத்தமிழகத்தில் தோன்றி அதுவும் சிறப்பாகக் கல்வியில் கரையிலாத காஞ்சி மாநகர்த் தோன்றிய தமிழர்களேயாவர். தியான பௌத்தமதக் கொள்கையைத் தோற்றுவித்த திக்நாகர் காஞ்சி மண்ணில் தோன்றியவரே ஆவார். வைதிகர்களைப் போல இத்தமிழர் கடவுட்கொள்கையைப் பௌத்தர் ஏற்கவில்லை. சமணரைப் போன்று இவர்கள் தமிழ் மொழியையாவது கற்றுக்கொண்டு தமிழில் பௌத்தம் பற்றிய நூல்கள் எதுவும் எழுத வில்லை. தமிழில் பௌத்தம் பற்றிப் பேச எழுந்த முதல் காப்பியம் மணிமேகலை ஆகும். மணிமேகலை, தொல் சமயங்களாகிய வேதம், நிகண்டவாதம், சைவம் முதலிய சமயங்களை ஒரு வரி அல்லது இரண்டு வரிகளில் தூக்கி எறிந்து எள்ளி நகையாடியது. எனவே தான் அச்சமயத்தையும் தமிழர் தூக்கி எறிந்துவிட்டனர். பௌத்தர்களை வெருட்டிய பெருமை வைதிக சமயத்திற்கு இல்லை. அப்பெருமை சைவ சமயத்தையே சாரும் என தாண்டேகர் போன்ற அறிஞர்கள் கூறுகின்றனர்.

பக்தி இயக்க காலத்தில் ஒரு புறம் சைவத்தை நாயன்மார்களும், வைணவத்தை ஆழ்வார்களும் வளர்க்கும் பணியில் ஈடுபட்டனர். இருப்பினும் பௌத்த சமண சமயங்களைச் சாடி அவற்றின் வளர்ச்சியை வேரறுத்த பெருமை ஞானசம்பந்தரையே சாரும். அதே காலகட்டத்தில் அதற்கு முன்பாக நன்கு பரவியிருந்த பௌத்த சமண சமயங்களைச் செயலிழக்க அவர் செய்தார். பௌத்தர் மற்றும் சமணர்களுடைய தோற்றம், உடை, பாவனை, செயல், குணம் போன்றவை பலவாறான நிலைகளில் கூறப்பட்டுள்ளன. அவருடைய பாடல்களில் சமணருக்கு நிகராகப் பௌத்தர்களும் விமர்ச்சிக்கப்பட்டுள்ளனர். இந்த அளவுக்கு அந்த இரு சமயத்தினருக்கும் அவரால் ஒரு எதிர் தாக்குதல் தராத நிலை இருந்திருந்தால் சைவ சமயத்தின் வளர்ச்சி நிலையில் சுணக்கமே ஏற்பட்டிருக்க வாய்ப்புண்டு.

பௌத்தர்களும் சமணர்களும் ஏறத்தாழ ஒரே காலத்தில்தான் தமிழ்நாடு புகுந்துள்ளனர் எனினும் சமணம் பெற்ற செல்வாக்கைப் பௌத்தம் பெறாமல் போனது வியப்பேயாகும். இதில் ஒரு வேடிக்கையும் இருக்கிறது. எல்லையில்லாமல் அறிவின் அடிப்படையில் வாதம் செய்வதையே தொழிலாகக் கொண்டவர்கள் பௌத்தர்கள். அவர்களுடைய தருக்கமும், அறிவு வாதமும் மிக நுண்மையானவை. அறிவுடைய பெருமக்களை அது கவர்ந்து இழுத்ததில் வியப்பில்லை. மகாயான

பௌத்தத்தைத் தமிழகத்திற்குக் கொணர்ந்த நாகார்ச்சுனர் தமிழ் வேந்தன் ஒருவனையும் பிராமணர் பத்தாயிரவரையும் தம் சமயத்துக்கு ஈர்த்துக் கொண்டார் என்று நாகார்ச்சுனர் வரலாறு கூறுகிறது. பத்தாயிரம் வேதியர் ஒரே இடத்தில் பௌத்த சமயத்தால் ஈர்க்கப்பட்டனர் எனில் அது அச்சமய அறிவு வாதத்திற்குத் தக்க சான்றாகும். இதனாலேயே ஆதிசங்கர பகவத் பாதர் மிக நுணுக்கமான அறிவுவாத முறைகளைக் கையாண்டு பௌத்தர்களை எதிர்க்க வேண்டிய நிலை ஏற்பட்டது என நினைப்பதில் தவறில்லை.

பௌத்தரைச் சாடல்

சைவ சமயத்தை எங்கும் பரப்ப முனைந்த ஞானசம்பந்தப் பெருமான் தம் பாடல்களில் பௌத்தர்களையும் அவர்களுடைய கொள்கைகளையும் அதிகமாகச் சாடியுள்ளார். அவர் சாடியுள்ள அளவிற்கு பிற நாயன்மார்கள் சாடவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும். ஞானசம்பந்தரின் அருஞ் செயல்களில் அனல் புனல் வாதில் வென்ற அற்புதம், புத்தநந்தயின் அழிவு, சாரிபுத்தனின் தோல்வி போன்றவையும் அடங்கும். மெய்யுணர்வு இல்லாத சமணர்களை வாதிலே வெல்வோம், பாண்டியனுக்குத் திருநீறு அணிவிப்போம் என்று சூளுரைத்து அதைச் சாதித்தும் காட்டினார் அவர். சைவ சமயத்தையும், முழுமுதற் கடவுளான சிவபெருமானையும் போற்றும் அவர், அந்த காலகட்டத்தில் செழிப்பான நிலையில் இருந்த பௌத்த மற்றும் சமண சமயத்தைத் தமது பாடல்களில் பல இடங்களில் சுட்டுகின்றார். அவர்களுடைய பழக்க வழக்கங்களைக் கூறும் அவர் அவர்களுடைய சொற்களை யாரும் கேட்க வேண்டாம் என்று கூறுகின்றார். அவர்களை விட்டு ஒதுங்கக் கூறுகின்றார். முதல் மூன்று திருமுறைகளில் முதல் திருமுறையில் மட்டும் அவ்வாறு அவர் சுட்டும் இடங்கள் கீழ்க்கண்டவாறு அமையும். இவ்வாறே மற்றவற்றிலும் அவர் கூறுகின்றார்.

புத்தரொடு பொறி இல சமணும் புறம்கூற (1.1.10.1)

செய்தவத்தர் மிகு தேரர்கள், சாக்கியர், செப்பில் பொருள் அல்லாக் கைதவத்தவர் (1.2.10.1-2)

ஆசி ஆர மொழியார் அமண்சாக்கியர் (1.3.10.1)

பல்சமணும் புத்தரும் நின்று அலர் தூற்ற (1.4.10.2)

ஒண் துவர் ஆர் துகில்ஆடை மெய் போர்த்து, உச்சிகொளாமை உண்டே உரைக்கும் குண்டர்களோடு அரைக் கூறை இல்லார் கூறுவது ஆம்குணம் அல்ல கண்டீர் (1.5.9.1-2)

அமண்தேரரை நீங்கி நின்று (1.6.9.2)

தடுக்கு உடைக் கையரும் சாக்கியரும் (1.7.10.1)

பின்னிய தாழ்சடையார், பிதற்றும் பேதையர் ஆம் சமண் சாக்கியர்கள் (1.8.10.1)

மாசு ஏறிய உடலார் அமண்குழுக்க(ள்) ளொடு தேரர் (1.9.91)

அருகரோடு புத்தர் அவர் அறியா அரன் (1.12.10.1)

தடுக்கால் உடல் மறைப்பார் அவர், தவர் சீவரம் மூடிப்
பிடக்கே உரைசெய்வாரோடு.. (1.13.10.1)

புத்தரொடு பொல்லா மனச் சமணர் புறம்கூற (1.14.10.3)

மத்தம் மலி சித்தத்து இறை மதி இல்லவர் சமணர்,
புத்தர் அவர், சொன்ன (ம்) மொழி பொருளா.. (1.15.10.1-2)

நீதி அறியாத அமண்கையரொடு மண்டைப்
போதியவர் ஓது(ம்) உரை கொள்ளார்.. (1.16.10.1-2)

பெருக்கப் பிதற்றும் சமணர் சாக்கியர் (1.24.10.1)

மாசுஆர் உடம்பர் மண்டைத் தேரரும் (1.25.10.1)

கூறை போர்க்கும் தொழிலார், அமண், கூறல்,
தேறல் வேண்டா (1.26.10.1-2)

கழுவார், துவர்ஆடை கலந்து மெய் போர்க்கும்
வழுவாச் சமண் சாக்கியர் வாக்குஅவை கொள்ளேல் (1.31.10.1)

சிறுதேரரும் சில்சமணும் புறம்கூற (1.32.10.1)

தறியார், துகில் போர்த்து உழல்வார், சமண்கையர்
நெறியா உணரா நிலை கேடினர் (1.33.10.1-2)

சமண்சாக்கியர்தாம் அலர் தூற்ற (1.34.10.1)

துளங்கும் நெறியார்..புல் வண் தேரை (1.35.10.1)

அழி வல் அமணரொடு தேரர்
மொழிவல்லன சொல்லியதுபோதும் (1.37.10.1-2)

நின்று உண் சமணும், நெடுந்தேரார் (1.38.10.1)

மாசு அடைந்த மேனியாரும், மனம் திரியாத கஞ்சி
நேசு அடைந்த ஊணினாரும் (1.48.10.1-2)

மாசு மெய்யர், மண்டைத் தேரர் (1.49.10.1)

புத்தரோடு புன்சமணர் பொய்உரையே உரைத்து.. (1.51.10.1)

..வேடம் இல்லாச் சமணும்

தஞ்சம் இல்லா சாக்கியரும் (1.52.10.1-2)

கார்அமண், கலிங்கத் துவர் ஆடையர்
தேரர், சொல்அவை தேறன்மின் (1.54.10.1-2)

தூசு போர்த்து உழல்வார், கையில்-துற்று உணும்
நீசர்தம் உரை கொள்ளேலும் (1.55.9.1-2)

செடி அம(ண்)ணொடு சீவரத்தார் அவர் (1.58.10)

செடி நுகரும் சமணர்களும், சீவரத்த சாக்கியரும் (1.62.10.1)

தடுக்கு அமரும் சமணரொடு தர்க்கசாத்திரத்தவர் சொல் (1.63.10.1)

உண்டு உடுக்கை இன்றியே நின்ற ஊர் நகவே திரிவார் (1.65.10.1)

போதியாரும் பிண்டியாரும் புகழ் அல சொன்னாலும் (1.66.10.1)

விருது பகரும் வெஞ்சொல் சமணர், வஞ்சச் சாக்கியர் (1.67.10.1)

தட்டை இடுக்கித் தலையைப் பறித்துச் சமணே நின்று உண்ணும் (1.69.10.1)

பிண்டி என்று பெயராநிற்கும் பிணங்கு சமணரும்
மண்டைக் கலனாக் கொண்டு திரியும் மதி இல் தேரரும் (1.70.10.1-2)

நின்று உண் சமணர், இருந்து உண் தேரர் நீண்ட போர்வையார் (1.71.10.1)

ஆலும் மயிலின் பீலி அமணர், அறிவு இல் சிறுதேரர் (1.74.10.1)

பாடு உடைக் குண்டர், சாக்கியர், சமணர் (1.75.10.1)

உரிஞ்சன கூறைகள் உடம்பினர் ஆகி
உழிதரு சமணரும் சாக்கியப் பேய்கள் (1.76.10.1)

வாதுசெய் சமணும் சாக்கியப் பேய்கள் (1.77.10.1)

அறிவு இலாச் சமணரும், தேரரும், (1.78.10.2)

குறிஇல் சமணோடு, குண்டர் வண்தேரர் (1.85.10.1)

பிச்சக்குடை நீழல் சமணர், சாக்கியர் (1.86.10.1)

புத்தர் அருகர்தம் பொய்கள் புறம்போக்கி (1.88.9.1)

தேரர் அமணரும் சேரும் வகை இல்லான் (1.93.10.1)

நின்று உண் சமண், தேரர் (1.95.10.1)

போதியர் பிண்டியர்.. (1.107.10.1)

காலையில் உண்பவரும் சமண்கையரும்.. (1.108.10.1)

சிந்தை இல் சமணொரு தேரர் சொன்ன... (1.110.10.1)

அன்றிய அமணர்கள், சாக்கியர்கள் (1.113.10.1)

குளித்துஉணா அமணர்... (1.114.10.1)

தறிபோல் ஆம் சமணர்சாக்கியர் சொல் கொளேல் (1.115.10.1)

சடம்கொண்ட சாத்திரத்தார்-சாக்கியர், சமண்குண்டர் (1.118.10.1)

ஆச்சியப்பேய்களோடு அமணர்குண்டர் (1.119.10.1)

புத்தரொடு அமணர்கள் அறஉரை புறஉரை (1.125.10.1)

புட்டத்தே அட்டிட்டுப் புதைக்கும் மெய்க் கொள் புத்தரும் (1.126.10.7)

ஐயுறும் அமணரும் அறுவகைத்தேரரும் (1.128.0.35)

குண்டாடு குற்றுஉடுக்கைச் சமணரொடு
சாக்கியரும் குணம் ஒன்றும் இல்லா.. (1.130.10.1-2)

எண்இறந்த அமணர்களும், இழி தொழில் சேர் சாக்கியரும்.. (1.132.10.1-2)

ஒவ்வொரு பதிகத்திலும் எட்டாவது பாடலில் இராவணன் சிவபக்தன் என்பதையும், ஒன்பதாம் பாடலில் நாராணன், நான்முகன் காணாதவன் சிவபெருமான் என்பதையும், பத்தாம் பாடலில், புத்தர் சமணர் என்ற சமயவாதிகளைத் தாக்குவது என்பதையும், கொள்கையாகக் கொண்டு பதினொன்றாம் பாடலில் முற்சொன்ன பத்துப் பாடல்களையும் அன்புடன் பாடுபவர் பெறும் பயனைக் கூறுவதையும் வரன்முறையாகக் கொண்டார் பிள்ளையார்.

சமணர் புத்தர் இவர் தம் வகைகளுள் இவரிவர் வேறு எனக் காட்டல், சமணர் புத்தர் முதலியோரது குற்றங்குறைகள், சமணர் புத்தர் முதலியோரது சொல்லைக்கேளல் அவர் சொல் பயனில்லை, அவர் திறம் விட்டகலுமின் சிவனடியார் அவர் சொல்லைக் கேளார் என்னும் உபதேசங்கள், சமணர் புத்தர் முதலியோரது நெறி, வித்தை, சரித்திரம், வேதம் அங்கம் வேள்வி இவைகளை நிந்தனை செய்தல் மறுத்தல், சமணர் புத்தரின் வழக்க ஒழுக்கங்கள் போன்றவை ஞானசம்பந்தரின் பாடல்களில் காணப்படுகின்றன.

சமண் சாக்கியர் போன்ற புறச் சமயங்களை விலக்கின அடியார், அவர்மாட்டுச் சிவபிரான் அருளல்; சமண் சாக்கியர்களைச் சிவபிரான் சேரார், அவர்களிடம் அன்புகொள்ளார், அவர்களுக்கு அருளார்; சமண் சாக்கியம் கெடவும், சமணர் சாக்கியர் மயங்கவும், விலகவும், அடங்கவும் செய்து அவர் தம் உரைகளை அடக்கியும், சாய்ந்தும் பொய்யாக்கியும்

அடியார்க்கு இறைவன் அருளுவது; சமண் சாக்கியர் யாது பேசினும் சிவபிரான் இழிவிலார், வெறுப்பிலார் என்பதும், சமண் சாக்கியர் தம் சொற்களைச் சிவபிரான் கொள்ளார், பொருட்படுத்தார்; சமணர் சாக்கியர் சிவபிரான் மாட்டு எப்படியிருந்தார்; சமண் சாக்கியர் அறியா நெறியான், சிவபிரான் அவர்களால் அறியப்படாதவன்; சமணர் சாக்கியர் முதலாயினோரை ஈசன் ஆக்கியது, ஏன் அவரை ஆக்கினார், ஏன் அவர்கள் அலர் தூற்றுகின்றார்கள்; சமணர் புத்தர் தேடிய தேவர்களெல்லாம் தேடி வணங்கும் சிவபிரான் என்பது அவர்கள் வாழும் குன்றங்கள் எல்லாம் உடையான் சிவபிரான் என்பதும் ஆகிய பலவற்றைப் பற்றி ஞானசம்பந்தர் தம் பாடல்களில் கூறுகின்றார்.

இவ்வாறாக ஞானசம்பந்தப் பெருமானின் பாடல் வீச்சானது பௌத்தர்களையும் சமணர்களையும் விரட்டியடித்தது. களப்பிரர் காலத்தில் செழிப்பான நிலையில் இருந்த அந்த சமயங்கள் பக்தி காலத்தில் தன் செல்வாக்கினை இழக்க ஆரம்பித்தது. பொதுவாக பௌத்த சமயத்தின் எழுச்சியை அதன் ஆரம்ப காலமான களப்பிரர் காலத்தில் காணலாம். இவ்வாறு நோக்கும்போது பௌத்த சமயத்தின் வளர்ச்சியை பக்தி இயக்கக் காலத்திற்கு முன் மற்றும் பக்தி இயக்கத்திற்குப் பின் என்று வரையறுக்கலாம். பக்தி இயக்கத்திற்கு முன் என்ற நிலையில் களப்பிரர் காலத்தில் அது பெற்றிருந்த மகோன்னத ஆதரவினைக் கூறலாம். பக்தி இயக்கக் காலத்திற்குப் பின் என்ற நிலையில் சோழர் ஆட்சியில் அதாவது கி.பி. 9-ஆம் நூற்றாண்டின் இறுதி தொடங்கிச் சற்றுத் தலைதூக்க ஆரம்பித்தன. தற்போது சோழ நாட்டில் காணப் படுகின்ற 40-க்கும் மேற்பட்ட புத்தரது கற்சிலைகளில் பெரும்பாலானவை அனைத்தும் கி.பி.10-ஆம் நூற்றாண்டிற்குப் பின்னர் உள்ள காலத்தைச் சார்ந்தவையாகவே உள்ளன. இவ்வாறு காணப்படும் சிலைகள் இங்குப் புத்தக் கோயில்களோ விகாரங்களோ அந்த அளவிற்கு இருந்தன என்பதை எடுத்துரைக்கும் சான்றாக இன்று உள்ளன. இவ்வாறாகக் காணப்படுகின்ற புத்தரது சிலைகள் பௌத்த சமயத்திற்கு மன்னர்கள் தந்த ஆதரவினை உறுதிப்படுத்துகின்றன. இதன் அடிப்படையில் உற்று நோக்கும்போது பௌத்த சமயம் தன் பதிவினைப் பதிக்க முயன்ற காலகட்டத்தில் அது இங்கு நிலைபெறா வகையில் ஆக்கிய பெருமை ஆளுடையப் பிள்ளையான ஞானசம்பந்தரையே சாரும் என்றால் அது மிகையல்ல.

96. சம்பந்தர் பார்வையில் சாதியும், வழக்கங்களும்

லூ. ஜார்ஜ் திமாஷ், புதுவை.

கூட்டு வாழ்க்கை நடத்திய இனக்குழு சமூகத்தில் அவரவர்கள் செய்த தொழிலின் அடிப்படையிலும் பழக்க வழக்கங்களையும் கொண்டு சாதிகள் பிரிக்கப்பட்டன. சாதிகளைப் பற்றி ஆய்வு செய்துள்ள அறிஞர் களின் கருத்துக்கள் இதற்குச் சான்றுகளாகின்றன. இதனால் சாதியானது ஆதிகால மனிதர்க்கிடையே தோன்றிவிட்டதை அறிய முடிகின்றது. இந்தச் சாதியப் பாகுபாடு பக்தி இலக்கியக் காலத்தில் சமயத்தை அடியொற்றிதாக இருந்தது. திருஞானசம்பந்தர் இயற்றிய தேவாரத்தில் இத்தகைய சாதியக் கூறுகள் இருக்கின்றனவா என்பதை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கம்.

சாதி – வரையறை

மக்கள் ஒன்றுகூடி வாழ்கின்ற நிலையே சமுதாயம். குழுவாகக் கூடிவாழ்கின்ற மக்கள் ஒரேமாதிரியான தொழிலையும் நடவடிக்கை களையும் மேற்கொள்கின்றபோது அவர்கள் ஒரு பிரிவிற்குள் உட்படுத்தப் படுகின்றனர். இந்நிலையில் சாதிகள் தோற்றம் பெறுகின்றன. சாதி என்பதற்குத் தமிழ்ச் சொல்லகராதி ''குலம், மரபு, இனம்'' என்று பொருள் தருவதோடு குலம் என்ற சொல்லுக்குச் ''சாதி, கூட்டம், இனம், குடி'' எனும் பல்வேறு பொருள்களைத் தருகின்றது.

மேலும் சாதி என்பது மக்கள் தொகையைக் குறிக்கும் சொல்லாகவே பயன்பட்டது. பின்னர் அவை, ''இனம், குலம், குடி, பரம்பரை, வம்சம் எனும் பல சொற்களாலும் குறிக்கப்பெற்றமை அறிய முடிகிறது'' என்று முருகையன் குறிப்பிடுகின்றார்.

சம்பந்தர் காட்டும் சாதி வகைகள்

சமயத் தலைவர்களுள் தலைவனாக விளங்கும், 'சீதவள வயற்புகலித் திருஞானசம்பந்தர்' என்று சேக்கிழாரால் போற்றப்பெற்ற சம்பந்தரின் தேவாரம் கண்ட சுந்தரரும் அவரை 'நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பும் ஞானசம்பந்தன்' என்று புகழக் காரணம், பக்தி நிலைகளையும் வரலாற்றுக் குறிப்புகளையும், சம்பந்தர் தேவாரம் தன்னுள்ளே கொண்டுள்ளதாலேயே. இக்குறிப்புகளுள் ஒன்று சாதியக் குறிப்பு. ஞானசம்பந்தர் சாதிகளின் வகைகளை, ஆயர்கள், கடைசியர், குறவர், பரதர், வேடர் என்று பல நிலைகளில் வகைப்படுத்தியுள்ளார். மேலும்,

வேடர் என்னும் இனத்தவர்களுள் எயினர், கானவர், குறவர், புனவர், மறவர், மறவாளர், வேடர் எனும் பல பிரிவினர் இருப்பதைத் தன்னுடைய தேவாரத் திருப்பதிகத்தில் குறித்துள்ளார். குறவர் இனத்தை எழிற் குறவர் (131-7), குறவர் மடவார் (69-4), குறமாதர் (43-2), பருவிற் குறவர் (69-5), இருங்குறவர் (327-6) என்றெல்லாம் குறிப்பிட்டுள்ளார்.

1. ஆயர்

ஆயர் சாதியைச் சேர்ந்தவர்கள் ஆடு, மாடுகளை மேய்க்கும் தொழிலைச் செய்பவர்கள். இவர்கள் மேற்சாதியினரின் வீடுகளில் வளர்க்கப்படும் ஆடு மாடுகளை மேய்ச்சலுக்கு இட்டு, அவற்றை வளர்ப்பதையே தொழிலாகக் கொண்டவர்கள். இந்த ஆயர்கள் தங்களின் கையில் உள்ள குழலை ஊதிக் காணாதுபோன எருமையை ஏனைய எருமைக் கூட்டத்துடன் கூடும்படி வரவழைப்பவர் என்கின்றார். இதனை,

''கனைத்தமேதி காணா தாயன் கைம்மேற் குழல்ஊத
அனைத்தும் சென்றுதிரளும் சாரல் அண்ணாமலை''

(சம்.தேவா.69-6)

எனும் அடிகளில் குறிக்கின்றார். ஆயர்கள், 'இடையர்கள்' என்றும் அழைக்கப்படுகின்றனர். இதனை,

''கிளிகள் பதங்களை யோதப் பாடியிருந்த இடைகுலம்
பயிற்றும்'' (377-8)

எனும் அடிகளால் அறிய முடிகிறது. மேலும் சாதியைக் குலம் என்று கூறும் வழக்கம் இருந்ததனை இடைக்குலம் என்னும் சொல்லாட்சியின் மூலம் அறியலாம்.

2. கடைசியர்

கொல்லன் வேல் வடித்துக் கொடுப்பது அரசர்கள் போர் புரிய வேண்டியே. ஒருபுறம் போர், படை என்றும் மறுபுறம் அதே கொல்லன் வடித்துக் கொடுத்த கலப்பையைக் கொண்டு உழுது பயிர் செய்வதும் ஆகிய இருவேறு வாழ்க்கை நிலைகள் தமிழர்களிடையே காணப்பட்டன. இதில் உழுது பயிர் செய்யும் வேளாண்மைத் தொழில் செய்வோரை 'கடைசியர்' என்று கூறுகிறார் சம்பந்தர். இவர்கள் வயலில் வேலைசெய்து, ஆடிப்பாடி மகிழ்வர் என்பதனை,

''வீங்குவிளை கழனிமிகு கடைசியர்கள் பாடல்விளையாடல்''

(330-1)

என்ற பதிக வரிகளில் பதிவு செய்துள்ளார்.

3. பரதவர்

பரதவர்களின் கடற்கரையை ஒட்டிய பகுதிகளில் வாழ்பவர்கள். கடலைச் சார்ந்து வாழ்க்கை நடத்தும் இவர்கள். கடலில் கிடைக்கின்ற

சங்கு, முத்துக்கள் போன்ற பொருட்களை எடுத்துப் பொருளாதாரத் தேவையைப் பூர்த்தி செய்து கொள்கின்றனர். முத்து மற்றும் சிப்பி போன்ற கடல்படுபொருட்களையும் வலைவீசிப் பிடிக்கின்ற பொருட்களையும் விலைக்கு விற்று வாழ்கின்றனர். இப்பரதவர்களின் வாழிடங்கள் பற்றி,

''கடல்வாழ் பரதர் மனைக்கேதுனை மூக்கின் சங்கமேறி
முத்தம் ஈனும் சண்பை'' (66-1)

என்னும் வரிகளில் விளக்குகின்றார். பரதவர்களின் வலைவீசும் தொழிலினை,

''காசுமணி வார்கனகம் நீடுகடலோடுதிரை வார்துவலைமேல்
வீசுவரை வாணர் அவை வாரிவிலைபேசும் எழில் வேதவனம்''
(334-9)

எனும் வரிகளில் குறிக்கின்றார். மேலும் பரதர்கள் வலைவீசுவதால் கிடைக்கின்ற பொருள்களைப் பிற பகுதிகளுக்குக் கொண்டுசென்று விலைபேசி விற்றனர் என்பதையும் உணர்த்துகின்றார்.

4. வேடர் (குறவர்)

வேடர் சாதியைச் சார்ந்தவர்கள், எயினர், கானவர், குறவர்கள், புனவர், மறவர், மறவாளர், வேடுவர் என்று பலவாறு குறிப்பிடப் பட்டுள்ளனர். வேடர்கள் மலையிலும் காட்டிலும் வசிப்பவர்கள். இவர் களின் மேனி கரியநிறமுடையது. இவர்கள் பெரிய வில்லையும், அம்பையும் ஆயுதங்களாகக் கொண்டிருப்பர். வெஞ்சொல்லையே எப்போதும் பேசும் வேடர்கள், எந்நேரத்திலும் போரிடத் தயாராக இருப்பார்கள். இவர்களைக் கண்டு யானையும், புலியும், சிங்கமும் கூட பயந்து ஓடும்.

வேடர், குறவர் இரண்டுமே குறவர் இனத்தைச் சேர்ந்தவர்களைக் குறிக்கும் சொற்கள். சம்பந்தரும் இவர்களைப் பற்றிக் குறிப்பிடுகிறார். குறச்சிறுமியர் அழகாக இருப்பதனை,

''திறங்கொள் மணித் தரளங்கள் வரத்
திரண்டங்கெழிற் குறவார் சிறுமிமார்கள்'' (131-7)

என்ற அடிகளில் சுட்டுகிறார் சம்பந்தர்.

இக்குறமகளிர் சங்குவளைத் தரித்திருப்பர். குறமகளிர் மலைச்சாரலில் கூடித் தாங்கள் கடலிலிருந்து பெற்ற முத்துக்களைக் குவித்து, 'முத்து வாங்குங்கள்' 'முத்து வாங்குங்கள்' என்று ஆடியும், பாடியும் விற்பார்கள். மேலும் மணிகளையும் முத்துக்களையும் சேர்த்து முறத்திலிட்டுக் கொழித்ததனைக் சம்பந்தர்,

''முறங்களினால் கொழித்து மணிசெலவிலக்கி
முத்துலைப் பெய்முதுகுன்றம்'' (131-7)

என்று குறிப்பிடுகின்றார்.

(அ) எயினர்

வேடர் குலத்தின் ஒரு பிரிவினரான எயினர் எனும் சாதியினரைப் பற்றித் திருஞானசம்பந்தர்,

''ஏவார் சிலை எயினன்'' (12-6)

எனும் அடியில் தெரிவிக்கின்றார்.

(ஆ) கானவர்

சம்பந்தர் குறிப்பிடும் கானவர்கள் மலைவாழ் மக்கள். இவர்கள் வசிக்கும் காளத்தி மலையில், திரு அவதாரஞ்செய்த கண்ணப்ப நாயனாரின் திருப்பாதச் செருப்பு தோய்ந்த காட்டுப்பகுதி உள்ளது என்னும் வரலாற்றுச் செய்தியைக் குறிப்பிட்டுள்ளார் சம்பந்தர். இதனை,

''கானவர்தம் மாமகளிர் கனகமணி விலகுகா ளத்தி மலையே''
(327-1)

என்ற அடியால் அறியலாம்.

(இ) குறவர்

குறவர் இனத்தவரைப் பற்றியும் சம்பந்தர் தம் தேவாரத்தில் குறிப்பிடுகின்றார்.

''முதுவேய வகுத்த முத்தும் பலகொண்டு கூடிக்குறவர்''
என்றும்,

''சங்கமதார் குறமாதர் தங்கையில் மைந்தர்கள்''
என்றும்,

''நிறைவாச முருவக்கொல்லையில் இளங்குறவர் தம்மயிர் புலர்த்திவளர்''
என்றும் குறவர் இனத்தைப் பற்றிப் பல்வேறு நிலைகளில் குறிப்பிடுகிறார்.

(ஈ) புனவர்

வேடர் இனத்தைச் சார்ந்தவர்களே புனவர்கள். இவர்கள் வேங்கை மலர் மலரும் காலத்தில் திருமணம் செய்து கொள்ளுகின்ற தன்மையினை,

''புனவர் புனமயிலனைய மாதரொடு மைந்தரும் மணம்
புணருநாள் கனகமென மலர்களனி வேங்கைகள் நிலாவு
காளத்திமலை'' (327-9)

என்ற அடிகளில் அறியலாம்.

(உ) மறவர்

வீரர்கள் என்ற வகையில் பகுக்கப்பட்டவர்கள். மற்ற இனத்தவரினும் வீரத்தில் சிறந்து விளங்கினர். இம்மறவர்களை,

"மத்தர முறுதிறன் மறவர்" (344-6)

என்று திருஞானசம்பந்தர் குறிப்பிடுகின்றார்.

5. வேளாளர்

திருஞானசம்பந்தர் குறிப்பிடும் வேளாளர்கள் 'வள்ளல் தன்மை மிக்கவர்' என்னும் பொருளில் பெயர் பெற்றவர்கள். இவர்கள் சீர்காழிக்கு (புகலி) அருகேயுள்ள ஆக்கூர் என்னும் ஊரைச் சேர்ந்தவர்கள். ஈதலிற் சிறந்தவராய் விளங்கும் இவர்களைப் பற்றிச் சம்பந்தரின் தேவாரத் திருப்பதிகம்.

"வேளாள ரென்றவர்கள் வள்ளன்மையான்
மிக்கிருக்கும் தாளாளர்" (178-3)

என்று குறிப்பிடுகின்றது.

சம்பந்தர் சுட்டும் சாதி வழக்கங்கள்

தேவாரம் சுட்டிய சாதிகள் தங்களின் இனக்குழு வாழ்க்கை முறையில் சில வழக்கங்களைக் கடைபிடித்து வந்தன. பன்றிகள் பூமியை உழுது கிளைத்த இடங்களில் கிடைக்கும் மணிகளை வேடர்கள் சேர்த்துக் குவித்து வைப்பார்கள். இது இவ்வின மக்களின் வழக்கங்களில் ஒன்று. இதனை,

"ஏர்மலி கேழல் கிளைத்த இன்னொளி மாமணியெங்கும்,
கார்மலி வேடர் குவிக்கும் குற்குடி மாமலை" (43-5)

என்னும் வரிகள் உணர்த்துகின்றன.

வேடர்கள், அனைவரும் ஒன்றுகூடி கடவுளைத் தொழுவது இவர்களின் வழக்கம்.

இதனை,

"கொல்லை வேடர் கூடிநின்று கும்பிட" (200-4)

எனும் வரி தெரிவிக்கின்றது.

ஞானசம்பந்தர் சிவத்தொண்டையே செந்தொண்டாகக் கருதினார். எனவே 'எங்கும் சிவமயம்' எனும் தமது நோக்கத்தை நிறைவேற்றப் பல்வேறு திருத்தலங்களுக்குச் சென்றார். இதனால் பதிகங்களில் தாம் கண்ட சமூகத்தையும், அச்சமூகத்தில் காணப்பட்ட சாதிய வகைகளைப் பற்றியும் குறிப்பிடுகின்றார்.

மக்கள் தாம்வாழும் நில அமைப்புகளுக்கு ஏற்ப சாதியப் பெயர் களைப் பெற்றதையும், அந்தந்த சாதி மக்களிடையே காணப்படும் சாதிய வழக்கங்களையும் ஞானசம்பந்தர் தம் தேவாரத்தில் பதிவு செய்துள்ளதனை அறிய முடிகின்றது.

97. சம்பந்தரின் தமிழ்ப்பற்று

அர. ஜோதிமணி, திருப்பூர்.

கடமையுணர்வும் தன்னடக்கமும் தான் மனிதனை மதிப்புடையவனாகச் செய்கின்றன. இன்று தகவல் தொடர்புச் சாதனங்களின் வளர்ச்சியால் உலக மக்களிடையே உள்ள இடைவெளி குறைந்துவிட்டாலும், மத, இன, மொழி, நாடு அடிப்படையில் வேறுபாடுகள் இருக்கத்தான் செய்கின்றன. ஒவ்வொருவரும் தம் கடமையை உணர்ந்து செய்வதற்கு நெறிப்படுத்தும் நோக்கில்தான் சமயங்கள் தோன்றின. இச்சமயக் கொள்கைகளை மக்களுக்குப் பரப்ப வாயிலாகப் பயன்பட்டவை இலக்கியங்கள். இவை எந்த மொழியில் தோன்றுகின்றனவோ அம்மொழிக்கு வளத்தைச் சேர்க்கின்றன. தமிழ்மொழியில் தோன்றிய பக்தி இலக்கியங்களில் ஞானசம்பந்தர் தேவாரம் சைவத்தையும் தமிழையும் ஒருங்கே வளப்படுத்தும் பெருமையை அடைகிறது.

ஞானசம்பந்தர் பதிக அமைப்பு

சைவத் திருமுறைகளுள் முதல் மூன்று திருமுறைகளாக அமைந்திருப்பவை ஆளுடைய பிள்ளை அருளிய தேவாரத் திருப்பதிகங்களாகும். இவற்றின் வைப்பு முறையில் சில ஒழுங்குமுறைகளைக் கையாண்டுள்ளார். இறைவனின் தோற்றப் பொலிவு, பண்புநலன், வீர தீர அருட்செயல்கள் முதலியவற்றைக் கூறிச்செல்லும் சம்பந்தர் ஒவ்வொரு பதிகத்தின் எட்டாம் பாடலில் இராவணன் கயிலையைப் பெயர்த்தலையும், ஒன்பதாம் பாடலில் திருமாலும் நான்முகனும் சிவனின் அடிமுடி தேடியதையும், பத்தாம் பாடலில் சமண பௌத்தர்களைச் சாடியும் பதினொன்றாம் பாடலில் அப்பதிகத்தைப் படிப்பதால், கேட்பதால் ஏற்படும் பயன்களையும் விளக்கிக் கூறுகிறார்.

சைவமும், தமிழும்

இலக்கிய வளமையும், இலக்கணச் செழுமையும் உடைய பழமையான மொழி தமிழ். 'இனிமையும் நீர்மையும் தமிழ் எனலாகும்' என்று பிங்கல நிகண்டு தமிழ் என்ற சொல்லுக்குப் பொருள் உணர்த்துகிறது. பாரதியும் 'யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல், இனிதாவது எங்கும் காணோம்' என்று கூறுகிறார். 'விண்ணோடும் மண்ணோடும் மங்குல் கடல் இவற்றோடும் பிறந்த தமிழ்' என்று பெருமிதம் கொள்கிறார்

பாரதிதாசன். இப்படிப்பட்ட இனிய மொழியைச் சைவ சமயப் பெரியோர்கள் 'திருநெறிய தமிழ்' என்று ஏற்றுப் போற்றினார்கள்.

மக்கள் தங்களுக்குத் தெரிந்த மொழியில் இறைவனை வழிபட வேண்டும். அறியாத மொழியில் புரியாத கருத்துக்களைச் சொல்வதில் பயனில்லை. அந்த வகையில் வடமொழியே இறைவனுக்கு உகந்தமொழி என்ற நிலையை மாற்றி, தமிழ் வழிபாட்டைப் புகுத்திய புரட்சியாளர்கள் சைவர்கள். அதனால்தான் தேவாரம் தமிழ்மறை என்று அழைக்கப்படுகிறது. அஞ்சாது இப்புரட்சியை மேற்கொண்டதால், முத்தமிழைப் போற்றியதால் 'நாளும் இன்னிசையால் தமிழ்பரப்பும் ஞானசம்பந்தன்' என்று சம்பந்தர் போற்றப்படுகிறார்.

தமிழ் மாலை

சைவ சித்தாந்தத்தில் இறைவனை வணங்குதற்குரிய நெறிகளாக சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற நான்கினைக் குறிப்பர். அவற்றுள் கிரியை என்பது அகமும், புறமும் ஒத்துச் செய்யும் வழிபாடாகும். இவ்வழி நின்றவர் ஞானசம்பந்தர். நீரும் மலரும் கொண்டு இறைவனை வழிபாடு செய்வதுபோல் இவர் பாவும் இசையும் கொண்டு வழிபட்டார். இவ்வாறு தாம் பெற்ற இன்பத்தை இவ்வையகமே பெறவேண்டும் என்னும் நோக்கோடு தேவாரம் என்னும் பாமாலையை நமக்கு வழங்கியுள்ளார். தாம் படைத்த ஒவ்வொரு பாடலையும் ஒவ்வொரு மலராக்கி ஒவ்வொரு பதிகத்தையும் ஒவ்வொரு மாலையாக்கி மகிழ்ந்தார் என்பதை, பதிகத்தின் இறுதியிலுள்ள பதினோராம் பாடலின் வழி அறிய முடிகிறது.

''சந்த மார்ந்தழ காய தண்டமிழ் மாலை'' (பா. 2441)

''சொல்லார்தமிழ் மாலைசெ விக்கினிதாக'' (பா. 337)

சம்பந்தரின் தமிழுணர்வு

மூன்று வயதிலே ஞானப்பாலுண்டு முக்கண்ணனின் அருள்பெற்ற ஆளுடைய பிள்ளையாகிய சம்பந்தர். தம் தாய்மொழியாகிய தமிழின்மீது அளவற்ற பற்றுக் கொண்டிருந்தார். இறைவனின் பெருமைகளை நினைக்குந் தோறும், பேசுந்தோறும் அவருடைய தமிழுணர்வே மேலோங்கியிருக்கிறது'' தமிழ் வேறு தான் வேறு என்று பிரித்தறிய விரும்பாமல் தானே தமிழ்; தமிழே தான் என்ற உணர்வு மேலீட்டால் உருவாக்கப்பட்டவையாக அவரது பாடல்கள் அமைந்துள்ளன. இதனை,

''நற்றமிழ் ஞானசம்பந்தன்'' (பா. 480)

''தன்னார்வஞ்செய் தமிழின் விரகன்'' (பா. 808)

என்பதனால் அறிய முடிகிறது.

''செந்தமிழ் பரப்புறு திருப்புகலி'' (பா. 1785)

என்றுரைப்பதால் தமிழ் வளர்ச்சியில் தணியா ஆர்வம் கொண்ட சம்பந்தரால் அவரைப்பெற்ற திருப்புகலியும் பெருமையடைகிறது. தன்னைத் தமிழோடு இணைத்துக் கொண்டு திருத்தொண்டு புரிந்ததோடு தமிழின் சிறப்பை, அருமையை, செழுமையை, இனிமையை, வலிமையைச் சொல்லிச் சொல்லி இன்புறுகிறார்.

''ஆரா அருந்தமிழ் மாலை'' (பா. 968)

''சிந்தையால் சொன்ன செந்தமிழ்'' (பா. 3297)

''முடிவி லின்தமிழ்'' (பா. 1024)

''பத்தன் ஞானசம் பந்தன தின்தமிழ்'' (பா. 611)

மேலும், தமிழின் குளிர்ச்சியும், ஒளியும், இயல், இசை, நாடகம் என்ற முத்திறமும் இணைந்திருக்கும் தன்மையும், சிந்தையில் நினைத்த மாத்திரத்திலேயே கருத்துச்சுரக்கும் வண்மையும், குன்றாப் பெருஞ்சிறப்பும் அவரை வியக்க வைக்கின்றன.

''சந்தநிலை தண்தமிழ்'' (பா. 3634)

''ஞானசம்பந்தன் ஒண்தமிழ் மாலை'' (பா. 2822)

''ஒப்புந் தன்மையன் முத்தமிழ் நான்மறை'' (பா. 2822)

''குன்றாத் தமிழ் சொல்ல'' (பா. 194)

என்று அவர் மொழிவதனால் சைவமும், தமிழும் ஒன்றையொன்று பின்னிப் பிணைவதற்கு ஞானசம்பந்தர் இணைப்புப் பாலமாக அமைவதை உணரமுடிகிறது. மேலும், மக்களை நன்னெறிப்படுத்த உயர்ந்த ஒரு மொழியை உறுதியாகத் தேர்வுசெய்த சிறப்பும் வெளிப்படுகிறது.

பிறப்பறுக்கும் மருந்து தமிழே

சைவ சித்தாந்தம் கூறும் மெய்ப்பொருட்கள் மூன்று, அவை பதி, பசு, பாசம் என்பன. பாசம் என்பதற்குக் கட்டுவது எனப்பொருள். உயிர்கள் இறைவனை உணராவண்ணம் அவற்றைக் கட்டியுள்ள பொருட்கள் ஆணவம், கன்மம், மாயை என்பதாம். உயிரின் அறிவை மிகச் சுருங்கியதாகச் செய்வது ஆணவம். இது அநாதியே உயிரைப் பற்றி யிருக்கிறது. உயிர்கள் தான் என்ற தன்முனைப்போடு மனம், மொழி, மெய்களால் செய்யும் நல்லனவும் தீயனவும் ஆகிய செயல்களே கன்மம் எனப்படும். ஞானசம்பந்தர்,

''நலமார் திருநா கேச்சுரத் தரனைச்
சொலமா லைகள்சொல் லநில்லா வினையே'' (பா. 1785)

என்று வினையைப் பற்றிக் கூறிச் செல்வார். ஆணவம் தனி நிலையிலும் மாயையோடு கூடிய பொது நிலையிலும் ஆன்மாவுக்கு அறியாமையைத் தரக்கூடியதாகும்.

இன்ப துன்பங்களுக்குக் காரணம் வினையே. ஒருவன் நல்வினை செய்தால் அது புலப்படாத நிலையில் புண்ணியமாய் நிலைத்து நின்று உரிய காலம் வந்தபோது இன்பமாகிய பயனைக் கொடுக்கும். தீவினை செய்தால் அது பாவமாய் நிலைத்து நின்று உரிய காலம் வந்தபோது துன்பமாகிய பயனைக் கொடுக்கும் என்பதை,

''நண்ணிய அருமறை ஞான சம்பந்தன்
புண்ணிய தமிழ்சொலப் பறையும் பாவமே'' (பா. 3019)

''இன்புறுந்தமி ழாற்சொன்ன ஏத்துவார்வினை நீங்கிப்போய்த்
துன்புறுந்துய ரம்மிலாத் தூநெறி பெறுவார்களே'' (பா. 2323)

போன்ற ஞானசம்பந்தரின் பதிகப் பயனுரைக்கும் வரிகள் விளக்கு கின்றன.

மனித உயிர்களின் குறிக்கோள் பாசத்திலிருந்து விடுபட்டுப் பதியை உணர்ந்து இன்புறுதலாகும். பாசத்திலிருந்து விடுபடுதல் பாசநீக்கம் என்ற சொல்லாலும், பதியை உணர்ந்து இன்புறுதல் சிவப்பேறு என்ற சொல்லாலும் குறிப்பிடப்படும்.

''வாதியா வினை மறுமைக்கும் இம்மைக்கும் வருத்தம்
வந்தடையாவே'' (பா. 2626)

''சொல்லார்தமிழ் மாலைசெ விக்கினிதாக
வல்லார்க்கெளி தாம்பிற வாவகை வீடே'' (பா. 337)

''தவமல்கு தமிழிவை சொல்ல வல்லார்
நவமொரு சிவகதி நண்ணுவரே'' (பா. 1217)

என்றுரைப்பதன் வழி ஞானசம்பந்தர் பக்திப் பெருக்கால் தாம் பாடிய திருமுறைகளை ஓதினாலே வீடுபேறு கிடைக்கும் என்று உறுதி யளிக்கிறார். மேலும் தமிழுக்கு அவ்வாற்றல் உண்டு என்பதையும் அறிய முடிகிறது.

ஞானசம்பந்தர் தேவாரம் தமிழ் மறையென்று உணரப்படுகிறது. சைவத்தோடு தமிழையும் போற்றும் சிறப்பும், வீடுபேறு அளிக்கும் சிறப்பும் தமிழ் மறைக்கு உண்டு என்பதும் உணரலாகிறது. தமிழ் மீது கொண்ட அளப்பருங் காதலே சம்பந்தரைப் பல வகைகளிலும் பாடிப் பரவ உந்துசக்தியாக இருந்ததைப் பதிகப் பயன் கூறும் பாடல் வழி அறிந்துகொள்ள முடிகிறது.

98. தமிழின அடையாளங்கள் - சைவமதக் குறியீடுகள்

கே.ஏ. ஜோதிராணி, சென்னை.

தமிழகத்தில் பல்வேறு சமயங்கள் இருந்துவரும் இன்றைய சூழலில் தமிழ் மரபுக்கூறுகளைக் குறியீடாகக் கொண்டியங்கும் சமயமாகச் சைவ சமயம் விளங்குகின்றது. 'தமிழர் மதம்' என்றும் அழைக்கப்பட்டு வருகிறது. பழந்தமிழரின் வழிபாடுகளை உள்வாங்கிக் கொண்டிருக்கும் பெருஞ் சமயங்களுள் இதுவும் ஒன்று. பொதுவாகப் பெருஞ்சமயமான பிறகு பழந்தமிழரின் பண்பாட்டு உரிமையினைத் தவிர்த்திடும் போக்கு நிலவுகிறது. காரணம் உற்பத்திக் கருவிகளின் வளர்ச்சியில் வர்க்கப் பாகுபாடு ஏற்பட்டபோது குலதெய்வ வழிபாட்டு முறைகளுள் பாகுபாடு ஏற்பட்டது. மேல்தட்டு வகுப்பு, மேல்சாதிய பிரிவுகள் பெருந்தெய்வ வழிபாட்டு முறையைக் கொண்டியங்க ஆரம்பித்தன.

வரலாறு என்பது நடைமுறைப் பதிவு. அந்த வகையில் மனிதகுல வரலாறுகள் அந்தந்தக் காலச்சூழலைப் பதிவு செய்துள்ளன. பதிவு செய்கின்றன. சில விட்டுப்போயின. சில மறைக்கப்பட்டன. சில மறுக்கப் பட்டன. சில மாற்று வடிவம் பெற்றன. அந்த வகையில் பழந்தமிழரின் வழிபாட்டு அடையாளங்களைக் குறியீடாகக் கொண்டு பெருந்தெய்வங் காக்கினர். பின்னாளில் மதமானது. அந்த மதமே சைவம். சைவத்தின் முதற்கடவுள் சிவன். அவன் 'தமிழரின்' மரபுக் குறியீட்டு வடிவமாகக் காட்சிப் படுத்தப்பட்டுள்ளான்.

பல்வேறு தேசிய இனங்கள்/மொழிகள்/மதங்கள் இயங்கிவரும் இன்றையச் சூழலில் 'தமிழ்மதத்தின்' அடையாளங்களைப் பற்றிய ஆய்வினை சைவ சமயக் குரவர்களில் முதலாமவரான ஞானசம்பந்தர் பாடல்வழி காண்பதே கட்டுரையின் நோக்கம்.

சமயங்கள் மக்களைத் தம்மீதான அடிமைத்தனத்தை மறக்கச் செய்து ஒன்றிணைய வைப்பவை. ஆனால் ஒருபோதும் வெல்வதில்லை. தமிழகப் பண்பாட்டு வரலாற்றில் தமிழர்களை ஏற்றத் தாழ்வுடனும் சாதியப் பாகுபாட்டுடனும் வகைசெய்து வைத்துள்ளன. இயற்கையோடு வாழ்ந்தவர்கள், பரிணாம வளர்ச்சி போல வாழ்தலிலும் சில மாற்றங்களைச் செய்து வாழத் தலைப்பட்டனர். அப்போது நம்பிக்கை எனும் பிடியில் தங்களின் வாழ்க்கையை எண்ணிப் பார்த்த வேளையில்

அறிவுக்குப் புலப்படாத சில விளக்கங்களைத் தாங்களாகவே உருவாக்கிக் கொண்டனர். அந்த நம்பிக்கையின் தொடர்ச்சியில் வழிபாட்டை மேற் கொண்டனர். அடர்ந்த காடு, மலை, குகை, இருள் இவை அவர்களின் அச்சத்தை மிகுவித்ததும் அச்சம் விலக்கும் விளக்காக நிலவும், சூரியனும் வந்து செல்ல, அச்சம் நீங்கியதும், வாழ்தலில் நம்பிக்கை ஏற்பட்டதும்; அவர்களின் 'நம்பிக்கையின்' தொடக்கமானது. இவ்வாறுதான் அமைந் திருந்தது. காலப்போக்கில் நம்பிக்கைக்கு அடிப்படையான இயற்கைக் கூறுகள் வணங்கும் பொருளானது. எளிய கருவிகள் - கண்டுபிடிப்புகள் வணங்கும் பொருளாயின. இறந்தோர் வணங்கப்பட்டனர். மனிதக் குழுக்களின் தலைமை உணவுத் தேவையை அளித்து உதவியதும் அவர்களது வாழ்தலின் நம்பிக்கைக் கூறானது. தலைவனின் இறப்பினை ஏற்றுக் கொள்ளாத மனம்-கனவு அவனது உருவத்தை வணங்க நினைத்தது. வணங்கியது.

உற்பத்தி நடவடிக்கைக்கான கல், உலோகக் கருவிகள், படையல் பொருளாக வைத்து வணங்கப்பட்டன இவையே பழந்தமிழர் வழிபாட்டு முறையாக இருந்தது. இந்நிலையில் முன்னோரை வழிபடுவது பின்பற்றப் பட்டதும், பொருள் உற்பத்தி நடவடிக்கைக்கும் மறு உற்பத்திக்கும் பெரும்பங்கு வகிக்கும் பெண்ணைப் போற்றும் வகையில் தாய்த் தெய்வ வழிபாடு குலதெய்வ வழிபாடாகத் தோன்றியது. சமயங்களின் வருகையில் குலதெய்வங்கள் பெருந்தெய்வங்களாயின. அதனைச் செய்தவர்கள் ஆரியர்கள். குலதெய்வங்களை அழிப்பதில் பெருஞ்சமயங்கள் கருத்துச் செலுத்தின என்பதும் மக்களின் இன அடையாளங்களை அழிக்க நினைத்தன என்பதும் பக்தி இலக்கியங்களின்வழி நாம் அறிந்தவை.

தமிழகத்துத் தெய்வமாக முருகன் விளங்கினான். அவனே பின்னாளில் சைவ மதத்தின் முதல் தெய்வமான சிவனின் மகனாக உருவகப் படுத்தப்பட்டான். குலதெய்வ நெறியில் வந்த முருகன் பழந் தமிழரான மலைக்கடவுள். குறிஞ்சி நிலத்தன். அவனது குறியீடு வேல். போர்க் கருவியான வேல் முதன்மையாகக் கருதப்பட்டபோது வேல் வணங்கப்பட்டது. அந்தக் குலதெய்வ வழிவந்த பழந்தமிழரின் வழிபாட்டு முறையை விடுப்பதும் அழிப்பதுமே ஆரியரின் நோக்கமாக அமைந்ததால் அதற்கெதிரான சாதிப் பிரிவினர் கால வளர்ச்சியின் மூலம் விளைந்த பொருட்கள், பயன்பாட்டிற்கென உற்பத்தி செய்யப்பட்ட கருவிகள் இசைக்கருவிகள் மற்றும் கிளை அம்சங்கள் (நடனம்) என அனைத்தையும் உள்ளடக்கிய வடிவத்தை உருவாக்கினர். அதுவே சிவன் எனும் வடிவம் என்று ஞானசம்பந்தரின் திருமந்திரம் நமக்கு உரைக்கின்றது.

மக்களின் கருத்துக்களையும், தத்துவங்களையும் புரிந்து கொண்டு அமைந்த சிவன் 'அழித்தல்' தொழில் அடிப்படையில் உயர்ந்தவனாக்கப்

பட்டான். 'ஆக்கல் அழித்தல் அளித்தல்' ஆகிய மூன்றின் மொத்த உருவான சிவன் என சைவ மதத் தத்துவம் புனையப்பட்டது. அவனது வலிமையை அடையாளப்படுத்தும் வகையில்,

''சூல வெஞ்சிலையான் மதில் மூன்றெரித்த
கொல் ஏறுடை அண்ணல்.........'' (பாடல் எ. 726)

''கொல் நவிலும் சூலத்தான்.........'' (பாடல் எ. 673)

என அழித்தல் தொழிலின் அடையாளமாகச் சூலம் விளக்கம் பெறுகிறது. சைவநெறியை வலியுறுத்தவே இலக்கியங்கள் இதிகாசங்கள், புராணங்கள் உருவாக்கப்பட்டன. சைவமத வழிபாடு பெருந்தெய்வ வழிபாடாக மாற்றப்படும் வகையில் பக்தி இலக்கியத்துள் குலதெய்வ நெறியில் வழிபட்ட தமிழ்க் கடவுள் முருகன் சிவனுக்கு மகன் என இலக்கிய மாற்றம் செய்தனர். மக்களைப் பற்றுக் கொள்ளச் செய்வதற்காகவே முருகனின் ஆயுதம் எனும் வேல், சிவனிடம் தரப்படும்போது சூலாயுதமாக மாற்றப்பட்டுச் சக்தியின் வலிமையைக் கூட்டிக் காண்பிக்கவே ஏற்படுத்தப்பட்டது.

சமண சமயத்தை வீழ்த்தச் சைவ சமயம் கொண்ட தத்துவ நெறிக் கோட்பாடாக இது ஏற்றுக் கொள்ளப்பட்டது என்பதை ஞானசம்பந்தர் ஒலிக்கிறார்;

''பிரமன் தலையில் நறவம் ஏற்ற
பெம்மான் எமையாளும்'' (பா.எ.725)

''பிரமனும் திருமாலும் நண்ண முடியாத ஈசன்''

''நாணமுடை வேதியனு நாரணனு நண்ண வொணாத்
தானு எனை ஆளுடையான...........'' (பா.எ.678)

என வைணவ எதிர்ப்பினைப் பல பாடல்களில் ஒலிக்கக் காணலாம்.

தமிழரின் பண்பாட்டு அடையாளங்கனைத்தும் மதக் குறியீடுகளாகக் கொண்டு வளர்ந்ததால் குறிப்பாக உலகத்தில் முதன்மையாகத் தோன்றிய மொழி எனும் அடையாளத்துடன் இணைந்து கொண்டதால் சைவம் முதன்மையானது என பக்தி வரலாற்று இலக்கியத்துள்ளும் பேசப் படுகிறது. தமிழரின் குலதெய்வம் பின்னாளில் மதம் எனும் வருகையில், பெருந்தெய்வமாகவும் குலதெய்வ வழிபாடு பெருந்தெய்வ வழிபாடாகவும் மாறியது. குலதெய்வங்கள் நகரங்களை நோக்கி நகர்த்தப்பட்டபோது 'கருவறைக்குள்' ஒளிந்து கொண்டன.

'முருகு' எனும் உழவர்களின் ஆடையை அடையாளமாகக் கொண்டு தமிழ் மக்களுடன் இணைந்த முருகன் பின்னாளில் பெருந் தெய்வமானான். 'கந்து-கந்தன்' என மொழிப் புனைவு பெற்றான். 'நீரின்றி

அமையாது உலகு' என்பதன் பொருள் முதல்வாதக் கருத்தென்பது சிவனின் தலையில் குறியீடாக வைக்கப்பட்டிருக்கின்றது. ஆனால் பெருந்தெய்வமான சிவன் தமிழகத்து மக்களிடமிருந்து ஆரியர் பரம்பரையான பார்ப்பனரிடம் கையகப்பட்டபோது தமிழகத்தில் மூலமாக, உற்பத்திப் பொருளாக இருந்த குறியீடு வடபுலத்திற்கு மாற்றம் செய்யப் பட்டபோது,

''கங்கை தலையிற் கொண்டான்''

என பதிவானது:

தொல்குடியின் ஆடையாக புலித்தோலும், கழுத்தில் அணியாக குலச்சின்னமான நாகமும், இசைக்கருவியான உடுக்கையும், போர்க் கருவியாக சூலமும் உழவாரப்படையாக மழுவும் தரப்பட்டுள்ளன. உற்பத்தியின் பயன்பாடு அடிப்படையில் அடையாளங்களாக வைக்கப் பட்டன. பின்னர் அதற்கான காரணங்கள் புனைவுத் தத்துவங்களாகக் கருத்துருமாற்றப் பெற்றன. குறிப்பாக, பயன்படு பொருளான அடிப்படைத் தேவை எனும் 'நீர்' என்பது வடபுலத்தாரின் கங்கையாகப் பெயர் மாற்றம் பெற்றது. அதைப் போலவே; வேட்டைத் தொழிலுக்கான ஆயுதமானது மனிதனைக் கொல்லுவதற்கானதாக (சூலம்) என்று புனைவு செய்யப்பட்டு இலக்கியமாகியுள்ளது. இவ்வாறு தமிழ் மரபுகளை பெயர் மாற்றம் செய்வதும் கருத்துருமாற்றம் செய்வதும் தத்துவ மாற்றம் செய்வதும் என மேனிலையாக்க முயற்சிகளும் செய்யப்பட்டன. அதன் விளைவு வர்க்க பேதம் வந்தது. சாதியம் தழைக்கவும் வழிகோலியது. மனிதரைப் பிளவுபடுத்திடவே உறுதியாகியுள்ளன.

வைணவத்திற்கு எதிரான போராட்டத்தில் 'சைவ மதம் தமிழரின் மதம்' என தன்னை ஆக்கிக் கொண்டது. எல்லா மக்கட்பிரிவினரையும் தம்முடன் இணைத்துக்கொள்ள வேண்டுமென்பதால் குலதெய்வ வழிபாட்டு முறைகளையும்; குலதெய்வ நம்பிக்கைக் கூறுகளையும், குலதெய்வ மரபுக் குறியீடுகளையும் தனதாக ஆக்கிக் கொண்டு ஆளுமை செய்ய நினைத்தது. அவ்வாறே தமிழ்நாட்டில் தமிழர்களை இணைத்துக் கொள்ளு வதாகச் சொல்லி அவர்களின் குலதெய்வ மரபுகளை உள்ளிழுத்துக் கொண்டு வளர்ந்துள்ளது சைவம். இதனைத் திருஞானசம்பந்தர் பல நூறு பாடல்களிலும் பாடியுள்ளார். பழந்தமிழர்களைத் தம் பெருஞ்சமயத்துள் இணைக்க வேண்டும் என்ற கொள்கைப் பரப்பலில் புத்த, சைன, கொள்கைகளை மீற நினைத்தது. அதனால் உருவ வழிபாட்டை ஏற்படுத்திக் கொண்டது. அதில் தமிழின மக்களை இணைத்துக் கொண்டதன் அடையாளமாக அவர்களின் பண்பாட்டுக் குறியீட்டுப் பொருள்களையும், வழிபாட்டு முறைகளையும் ஏற்றுக் கொண்டதாகப் பறைசாற்றியது. அவற்றைப் பக்தி இலக்கியங்கள் பலவும் நமக்கு விளக்கும்.

"சூலப்படையொன்று ஏந்தி..........." (755)

"குலவெஞ்சிலையான் மதில் மூன்றெரித்த கொல்ஏறுடை அண்ணல்" (726)

"கொல் நவிலும் சூலத்தான்................" (பா. 756)

என்று பாடியுள்ளார். மேலும், முந்நீர்க்கடல் சூழ்ந்த காலத்தின் தலைவன் சிவன் என்பதை; "முந்நீர் சூழ்ந்த நஞ்சம் உண்ட முதல்வர்" (736) என்றும் ஆடல் அரசன் நடராசன் சிவன் எனப் பெயர் கொண்ட சிவனை,

"மயானத்தில் இரவில் பூதகணங்கள் பாட ஆடிக் களித்தவன்" (725)

என்றும் பாடல் விளக்கம் தருகிறது.

தமிழர் மதம் எனும் பெயர் பெற்ற சைவ மதத்திற்குச் தமிழ் உதவியதும், தமிழால் அவரது மதம் வளர்ந்ததும் திருஞானசம்பந்தரின் வரிகளில் விளக்கம் பெற்றமையைக் காணமுடிகிறது.

"திருநெறிய தமிழ் வல்லார் தொல்வினை தீர்தல் எளிதாமே"

என தீவினை செய்தவர் உய்வுபெற நற்றமிழ் பயில்தல் தகும் என்று கூறுவதோடு நற்றமிழ் வல்லவர்பால் நயந்து பாடியவன் தமிழுக்கு அடிமையாய், தமிழின் உயர்வாய் விளங்கியவன் 'சிவன்' என தமிழரின் மதத்தை போற்றிப் பாடுகிறார். தமிழால் சைவம் தழைத்தும் தமிழால் 'தமிழ்ஞான சம்பந்தன்' ஆனதும் எனத் தமிழை வியந்து போற்றும் தன்மையைப் பக்தி இலக்கியம் காட்டுகிறது.

"சம்பந்தன் வண்தமிழ் தொண்டு............." (677)

"தமிழுக்குத் தொண்டு செய்தோன் சாவதில்லை"

என்ற கூற்றைச் சைவத் தமிழ் இலக்கியங்கள் நமக்கு உணர்த்தி நிற்கின்றன. இந்த வகையில் வடமொழியை விலக்கித் தமிழை நேசித்தது சைவம் எனில் மிகையன்று.

தமிழையும் தமிழரையும் ஒருசேர வாழ்த்த விரும்பி,

"மறைஇலங்கு தமிழ் வல்லார் வானுலகத்து இருப்பாரே" (66)

**"பெண்ணார் மேனி எம்மிறையைப் பேரியலின் தமிழால்
நண்ணார் உட்கன் காழிமல்கு ஞானசம்பந்தன் சொன்ன
பண்ணார் பாடல் பத்தும் வல்லார் பயில்வது வானிடையே"** (700)

என்று கூறியவர்,

"தென்னார் சேரர் சோழர்கள் தாம் வணங்கும்" (690)

என குறுநில மன்னர்கள், சேர சோழ பாண்டியப் பேரரசர்கள், அனைவரின் வாழ்தலுக்கும் வளர்ச்சிக்கும் வளம் சேர்ந்தது தமிழ்; அதனால் அவர்கள் தமிழ் வளர்த்துத் தமிழை வணங்கினர் என்று கூறுகிறார் சம்பந்தர். மேலும், முதல் மூன்று திருமுறை பாடிய இவர் திருச்செங்காட்டங்குடி, திருக்கோளிலி, திருப்பிரமபுரம், திருப்பூவணம், திருச்சண்பைநகர், திருப்பழவும் எனப் பெரும்பான்மையான திருப்பதிகங்களைப் படைத்து மருதநிலமே பக்தி இலக்கியத்தை வளர்த்த பகுதி என்பதைச் சுட்டுகிறார்.

தொல்குடியினரின் இருண்மைக் காலங்களில் அவர்களின் அச்சம் போக்கும் தோல் கருவியாக உடுக்கை பயன்படுத்தப்பட்டது. பின்பு இசைக்கருவி எனும் சிறப்புப் பெற்றது. அதனைப் பழமையான சமயம் என்று கூறிக் கொள்ளும் சைவம் தமது முக்கிய அடையாளமாகக் கொண்டிருக்கிறது. பழந்தமிழனின் இசை வரலாற்றுப் பதிவின் முன்னோடியாக விளங்கியிருக்கிறது.

பழந்தமிழரின் பறை கொட்டு, முழவு, யாழ் (வீணை), குழல் என இசைக் கருவிகளை தம் இலக்கியத்துள் மதச் சின்னங்களாக ஆக்கிக் கொண்டது சைவம். இதனை

"வாரேற்ற பறையொலியும் சங்கொலியும் வந்தியம்ப" (657)
"குழலினோசை வீணை மொந்தை கொட்ட முழவதிர" (706)
"கழலினோசை ஆர்க்க ஆடும் கடவுள் இருந்த இடம்" (706)
"பாணன் இசை பற்றிமையால் பாடுதலும் பரிஅளித்தான்" (675)
"முந்தி எழுந்த முழவின் ஓசையே" (749, 547)

என்ற வரிகள் விளக்குகின்றன.

தமிழ்ப் பண்பாட்டு வரலாற்றின் அடையாளங்களை சைவ சமயக் குறியீட்டுச் சின்னங்களாகக் கொண்டு பக்தி இலக்கியங்கள் பாடலாக்கி இலக்கியம் எனும் உயர்ந்த மலைக்குக் கொண்டுயர்த்தின. எனினும் தமிழரின் பக்தி இலக்கியங்களுக்குள் தமிழர்கள் வர்க்க முரணுக்குரியவராகியுள்ளனர். தத்துவங்களுக்குள் வர்க்கப் பார்வை இருப்பதோடு, அவை வழிபாட்டு முறைகளை ஆகம விதிகளை நெறியாக்கியுள்ளதால் சாதியத் தீண்டாமைக்கும் விளைநிலமாக்கிவிட்டது.

99. சம்பந்தர் பாடல்களில் பதிகப் பயன்பாடு

ம. ஷீலா ஸ்ரீநிவாசன், வில்லுக்குறி.

பாலறா வாயறாய் ஞானப் பாலுண்டவர் திருஞானசம்பந்தர். செந்தமிழோடு சிவஞானமும் மொழிந்தவர்; தமிழைப் பக்தியாய், உணர்வாய் வெளிப்படுத்தியவர். சைவத்தின் தமிழுலகின் தூண்டுகோலாய், திருப்புமுனையாய் திகழ்ந்தவை சம்பந்தரின் அரும்பணிகளாம். இவரின் பக்திமையுணர்வும் செந்தமிழ்ப் பாங்கும் தமிழுலகிற்கு விடிவெள்ளியாய் வழிகாட்டிற்று எனலாம். இவரின் பாக்களில் பாண்டிமா தலங்களின் பதிகப் பலன்கள் பெறுமிடத்தை இக்கட்டுரை வழி ஆராயலாம்.

1. சம்பந்தர் தேவாரம்

பன்னிரு திருமுறைகளில் முதலிரு திருமுறைகளாகத் திகழ்வன சம்பந்தர் தேவாரமாகும். இயற்கைப் புனைவுகள், இறைவன் உருவப் பொலிவுகள், அருளிச் செயல்கள், சம்பந்தர் வாழ்வியல் நிகழ்வுகள், வெளிப்பாடுகள் எனப் பரவலான பாடுபொருளில் இவை அமைகின்றன.

2. பதிகம்

பத்துப்பாடல்களால் இயலும் தொகுப்பு பதிகம் எனப்படும். இவை ஒருபொருள் பற்றியனவாயும், பல பொருள்கள் பற்றியன வாயும் அமையலாம். சங்க இலக்கியங்களிலேயே இப்பதிக அமைப்பு இருப்பினும், பக்தி இலக்கிய காலத்திலேயே இவ்வகைமை சிறப்புற்றது; மெருகேறியது.

3. சம்பந்தர் பதிகங்கள்

சம்பந்தர் பதிகத் தேவாரத்தில் 383 பதிகங்கள் உள்ளன. இவற்றுள் பாண்டி நாட்டை மையமிட்டு 13 தலங்களை உள்ளடக்கிய 24 பதிகங்கள் வருகின்றன. திருஆலவாய் (9); இராமேச்சுரம் திருப்பூவணம், திருக்குற்றாலம் போன்றன முறையே இரண்டும்; திரு ஆப்பனூர், திருப்பரங்குன்றம், திரு ஏடகம், திருக்கொடுங்குன்றம், திருப்பத்தூர், திருப்புனவாயில், திருஆடானை, திருக்கானப்பேர், திருநெல்வேலி என்பன முறையே ஒரோ பதிகங்களையும் கொண்டுள்ளன.

சம்பந்தர் பதிகங்களின் நிலை

இப்பதிகங்களில் இறை, இயற்கை நிலை, அழகுகள், செயல்கள் பரவலாக மொழியப்படுகின்றன. இறைவனைத் தொழுவதால், நினைப்பதால்

உண்டாகும். பலன்களும் பரக்கப் பேசப்படுகின்றன. பாண்டித் தலப் பாக்களை வாழ்வின் அனுபவப் பிழிவு, இறைபுகழ், கோலம் கண்ட உள்ள நெகிழ்வு எனும் இருநிலைகளில் நோக்கலாம். (காண்க: அட்டவணை)

வாழ்வின் அனுபவப் பொழிவு

சம்பந்தர் பாண்டிய நாட்டில் அமண் சமயத்தைப் போக்கி, சைவத்தைத் தழைக்கச் செய்த முயல்வுகளாய் ஏழு பதிகங்கள் வருகின்றன.

'மந்திரமாவது நீறு' எனும் பதிகம் முழுமையும் திருநீற்றின் பெருமை பேசுவதுடன், அதன் சிறப்புக்களை, நீக்கும் திண்மைகளை, உண்டாக்கும் பலன்களைப் பேசுவதாவே அமைகின்றது.

'வருத்தம் தணிப்பதுநீறு வானம் அளிப்பதுநீறு' (6:1-2) என்றவர், பதிகப் பலனாய் இப்பாடல்கள் கேட்பவர் நல்லவராவர் என்கிறார். இப்பதிகம் பாண்டியன் உடலைப் பிணித்த வெப்பு நோயினைத் தீர்க்கும் பொருட்டுப் பாடியதாதலின் நீற்றின் பெருமை பரக்கப் பேசப்படுகின்றதாம்.

'மானி னேர்விழி மாதராய்.......' பதிகத்தில் அறம் அறியா சமணர் களை எதிர்க்கும் பாலன் என என்னை எண்ணி மயங்க வேண்டாம். அரனருளால் முன்பும் வென்றேன். இப்போதும் வெல்வேன் என்கிறார் சம்பந்தர். பதிகப் பலனாய் இதைப் பாடுபவர்க்கு இடர் என்றும் இல்லையாம் என்றும் மொழிகின்றார்.

'காட்டு மாவ துரித்துரி போர்த்துடல்...பதிகம் இறைவனிடம் அமணரை வெல்ல அருள்பலம் வேண்டல் நிலையில் அமைந்ததாம். அரன் உருவம், செயல் பொலிவுகள் பேசப்படுகின்றன. பதிகப் பலனாய், 'இப்பதிக சொல் கேட்பின் பழி நீங்கும்' என்கிறார்.

'செய்ய னேதிரு ஆலவாய்.........' பதிகம், சமணர்கள் சம்பந்தர் மடத்தில் இட்ட தீ தம்மைச் சார்ந்தாரை எரிக்காமல், அறமல்லாத வழியில் செல்லுகின்ற மன்னனைப் பையவே சென்று தாக்கச் சொல்லுகின்ற நிலையாம். 'அஞ்சல் என்றருள் செய்' எனும் வரி பதிகம் முழுமையும் வரும் அடியாகும். அரனின் தீரங்கள், சமணர் இழி செயல்கள் பரக்கப் பேசப்படுகின்றன. இப்பாக்களைக் கூறவல்லவர் தீமையற்ற செல்வ முடையவராம் என இம்மை மறுமைப் பயன்களை மொழிகின்றார்.

'வேத வேள்வியை நிந்தனை செய்துழல்........' பதிகத்தில் அமணரை வாதில் வெல்ல இறைவன்பும், கேட்கும் பாங்கினை உணரலாம். சமணர் இழிநிலை, இறைபுகழ் பரக்க மொழியப்படுகின்றன. 'இப்பாக்களை அறிவார் பாக்கியம் செய்தவராம்' என்பது பதிகப் பலனாகும்.

'மங்கையர்க்கரசி வளவர்கோன் பாவை' பதிகத்தில் மங்கையர்க்கரசி குலச்சிறை இருவரின் பக்தி மொழியப்படுகின்றது. இறை புகழும்

வருகின்றது. பதிகப்பலனாய் இமையோர் தொழும் நிலை கிடைக்கும் என்கின்றார்.

'வன்னியும் மத்தமும்.......' பதிகத்தில், வினை கெடும் (2) கவலை நீங்கும், என்றவர் பதிகப் பலனாய் பிறவி கெடும் என்கின்றார்.

இறைவன் கோலம், செயல் உணர்ந்த உள்ள நெகிழ்வு

இதில் தலமகிழ்வு, இறையனுபவ நெகிழ்வுகள் எனப் பரவலாக வருகின்றன. இதில் 17 பதிகங்கள் உள.

'நீலமாமிடற் றாலவாயிலான்.......' பதிகத்தில் இறை சிறப்பும் நினைவார் பலன்களும் பரக்க மொழியப்படுகின்றது. ஞாலம் ஆள்வர் (1) காலனும் அஞ்சுவான் (2) என்றவர் இப்பாக்களைப் பாடுவார் பெறும் பலன்களாய் வினைகள் நீங்கும் என்கிறார் (11).

'வீடலால வாயிலாய் விழுமியார்கள்......' பதிகத்தில் ஆலவாயன் வாழிடம், சிறப்பு, உருவம், பெருமை, தொழில் பரக்க மொழியப்படுகின்றன. ஆலவாயனைப் புகழும் இப்பதிகம் வல்லவர் தேவராகும் இயல்பினராம் என்றும் மொழிவார்.

'ஆலநீழ லுகந்த திருக்கையே........' பதிகத்தில் இறையுரு, புகழ் போல்வ பேசப்படுகின்றன. பதிகப்பலனாய், 'தமிழ் வல்லவராவர்' என்கிறார்.

'முற்றுஞ் சடைமுடிமேன் முதிரா இளம்பிறையன்.....' பதிகத்தில் இறையுரு, அழகு, செயல் போல்வன மொழியப்பட்டுள்ளன. பொதுப் பலன் வினைப்பற்றறுத்தலாம். பதிகப் பாடல்களின் இறுதியடியும் இதுவேயாம்.

'நீடலர் சோதி வெண் பிறையோடு நிரை கொன்றை....' பதிகத்தில் இறை, உருவ செயல்கள் போல்வ பேசப்படுகின்றன. நோய் இல்லை (5) பழவினையும் கெடும்(18) என்றவர், பதிகப் பயனாய் 'துயரின்றி இறையருள் பெறுவர்' என்றார்.

'வானிற் பொலிவெய்து மழை.........' பதிகத்தில் உருவ, இயற்கைப் பொலிவுகள் பேசப்படுகின்றன. பதிகப்பயனாய்,

'ஊனத்தோடு துயர்தீர்ந்துல கேத்தும் எழிலாரே' (11.4)

என்கிறார்.

'வெங்கள் விம்முவெறியார் பொழிற்.....' பதிகத்தில் இயற்கை சிறப்பு பேசப்படுகின்றது. பதிகப் பலனாய், அல்லல்கள் தீரும் என்கிறார்.

'மின்னியல் செஞ்சடை வெணிபிறையன்.......' பதிகத்தில் இறைவன் இயற்கைப் பொலிவுகள் பேசப்படுகின்றன. இடரில்லை(7) வினை கெடும் (10) என்றவர், பதிகப் பயனாய் அருள் பெறுவர் என்கிறார்.

'அலைவளர் தண்மதி யோடயலே........' பதிகத்தில், வீடுபேறு (21), பிணி தீரும் (5), துயர் நீங்கும் (6) என்றவர் பதிகப் பயனாய், என்றும் அல்லல் இல்லை என்கிறார்.

'திரிதரு மாமணி நாகமாட......' பதிகத்தில் இறையுரு, அருளிச் செயல்கள் பேசப்படுகின்றன. பதிகப்பயனாய், வினைகள் விட்டு விலகும் என்கிறார்.

'மாதோர் கூறுவகந் தேறிய......' பதிகத்தில், தொல்வினைமாயும் (2) ஒவ்வோரடிகளிலும் பலன் கூறப்படுகின்றது. பதிகப் பயனாய், நோய் கெடும் என்கிறார்.

'பிடியெலாம் பின் செல்ப பெருங்கைமா.....' பதிகத்தில் உருவப் பொலிவு இயற்கைநிலை பக்தர் வழிபாட்டு கூறுகள் (3) போல்வ பேசப்படுகின்றன. வெளிதவ வேடம் பயனின்று, கானப்பேர் சென்று தொழலே சிறப்பு என்றவர் பதிகப்பயனாய், பாவம் அழியும் என்கிறார்.

'அறையார் புனலும் மாமலரும்......' பதிகத்தில் இறை உருவப் பொலிவு, செயல்கள் போல்வ பேசப்படுவதுடன் மூவேந்தரும் வணங்கும் நகரென அதன் சிறப்பும் மொழியப்படுகின்றது. பதிகப்பயனாய் வானுலகம் செல்வர் என்கிறார்.

'மாதமர் மேனியனாகி வண்டொடு......' பதிகத்தில் உருவ, இயற்கைப் பொலிவுகள் பேசப்படுகின்றன. பாவம் கெடும் (8), இன்பமே (10) என்றவர், பதிகப்பயனாய் பாவம் தொலையும் என்கிறார்.

'வம்பாற் குன்றம் நீடுயர் சாரல்........' பதிகத்தில் இயற்கைப் பொலிவு பேசப்படுகின்றது. அருஞ்செயல்கள் பல செய்த அரன் தங்கும் நன்னகரன்றோ என்பதே பதிகப்பாக்கள் ஒவ்வொன்றிலும் வரும் கூறாம். பதிகப்பயனாய் பாவம் தொலையும் என்கிறார்.

'திருந்த மதிசூடித் தெண்ணீர் சடை கரந்து......' பதிகத்தில் இறை இயற்கை பொலிவு பேசல். பதிகப் பயனாய், 'தீவினைகள் போயகலும் நல்வினைகள் தளராவன்றே' (11:4) என்கிறார்.

'மருந்தவை மந்திரம் மறுமை......' பதிகத்தில் இறை, உருவ சிறப்பு, புகழ், இயற்கை பொலிவு பேசப்படுகின்றது.

'அருந்துயர் கெடுமவர் நாமமே சிந்தைசெய் நன்னெஞ்சமே' (1:2) என்றவர் பதிக்ப்பயனாய் 'அருவினைகள் கெடும்' என்கிறார்.

4. மதிப்பீடு

அன்பின் தூண்டுகோலாய் அமைவது இப்பதிகங்களின் பொதுவான பயன். பொதுமக்களைக் கவரும் சிறப்புப் பயன்களை உள்ளடக்கியனவாய்,

அவர்களை ஈர்த்து அப்பாக்களின் (உண்மையான) பொதுப்பயனை அவர்கள் அடையச் செய்வதே இப்பாக்களின் நோக்கமாம்.

'யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்றாற்போல், தாம் பெற்ற அனுபவப் பாங்கினை, இறையுணர்வினை, அண்மை யினை, அனுபவிப்பினை, இறையிருப்பினை உணர்ந்து திளைக்கச் செய்து, மனிதம், மானுடமாய் தெய்வீகமாய் மாறும் நிலைக்குச் செலுத்துவதே இவற்றின் முடிவான மற்றும் சிறப்பான பலனாகும்.

பக்திமையை உணர்வதும் வெளிப்படுத்துவதும் ஊட்டுவதுமே இப்பாக்களின் பொதுவான நிலையாம்.

தலம் தோறும் சென்று வழிபடும் போக்கினால், பல்வகையான இயற்கை கூறுகள், இறைவன் உருவ பொலிவுகள், அருளிச் செயல்களின் போக்குகள் போல்வனவற்றை இப்பதிகங்களால் உணரலாம்.

சம்பந்தர் காலச் சமணநிலை - சைவப்போக்கும் மன்னன் ஆதரவின் சமண அநீதி போக்கும் உணர முடிகின்றது.

வீடுபேறு முதலாய மறுமைப் பலன்களை மட்டுமின்றி உலகியல் தேவைகள், பிணி நீக்கம், ஆசை நிறைவேற்றம் போல்வனவும் சைவத்தால் இயலும் என்பதையும் இப்பாக்கள் உணர்த்தும்.

இறைவன் அருளிச் செயல்கள் பதிகப்பயன் கூறல் நிலையில் வருகின்றன. இவை வாழ்வில் துயர் வரும் நிலையிலும் நம்பிக்கை யூட்டுவனவாய், செயல்பாட்டுக்குத் துணை செய்கின்றன.

இறைவன் அரு, உருவ குண இயல்புகளைக் காட்டும் நிலை அதன் விளைவான பயன்களை அடுக்கியுரைக்கும் நிலையில் வெளிப்படுத்தப் படுகின்றன.

சம்பந்தர் பாக்களின் பதிகப்பலன்கள் எளிய மக்களையும் இறையனுபவ நிலைக்கு செலுத்தும் தூண்டுகோலாய் அமைகின்றன.

சம்பந்தர் வாழ்வின் சோதனை நிலைகள் (சமணர் எதிர்ப்பு) பக்திமையால் அற்புத செயல்களை உருவாக்கி (மடத்தீ மன்னனையடைதல்; நீற்றான் நீக்கல்) மன்னனை, மக்களை சைவத்தின்பால் சேர்க்க துணை செய்தது. சைவ மறுமலர்ச்சிக்கும் துணை நின்றது எனலாம்.

இலக்கியங்கள் காலத்தைக் காட்டும் சித்திரங்களாய் உள்ளன. சம்பந்தர் பாக்களின் - பதிகங்களின் வழி 'மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம்' எனுமுணர்வினைப் பயில்வார்க்கு ஊட்டும் நிலையினை உணரலாம். இப்பதிகங்கள் சம்பந்தர் வாழ்காலம்; சமுகம், சமயச் சூழலை வெளிக்காட்டும் நிலையில் அமைந்துள்ளன. இப்பதிகங்கள் உலகியல்,

மறுமையியல் சிந்தனைகளை ஊட்டுவனவாய், சிக்கல்களின் தீர்வாய் அமைவதுடன் பொது (இறையனுபவம்), சிறப்பு (உலகியல் தீர்வுகள்) பலன்களை உள்ளடக்கியனவாய் அமைந்து சிறப்புறுகின்றன. சுருங்கச் சொல்லின் சம்பந்தர் பதிகங்களின் பயன்பாடு என்பது 'பக்திமை வாழ்வின் மைல்கல்' எனலாம்.

அட்டவணை

சம்பந்தர் பதிகங்களின் பயன்பாடு (பாண்டிநாடு: 24)

	வாழ்வின் அனுபவப் பொழிவு (7)	இறைவன், கோலம், செயல்உணர்ந்த உள்ள நெகிழ்வு(17)
பரவலாய் மொழிதல்	1. மந்திரமாவது நீறு.. 2. மானேர் விழி மாதராய்.. 3. காட்டுமாவது ரித்துரி... 4. வேதவேள்வியை நிந்தனை.. 5. செய்யனே திருஆலவாய்... 6. வன்னியும் மத்தமும்..	1. நீலமாமிடற் ஆலவாயில்.. 2. ஆலநீழ லுகந்த.. 3. முற்றுஞ் சடைமுடிமேன்.. 4. நீடலர் சோதி வெண்பிறை 5. வானிற் பொலிவெய்தும்.. 6. மின்னியல் செஞ்சடை... 7. அலைவளர் தண்மதியோட.. 8. மாதொரு கூறு.. 9. பிடியெலாம் பின்செல்.. 10. மாதமர் மேனியனாகி.. 11. மருந்தவை மந்திரம்..
பதிக இறுதியில் மொழிதல்	1. மங்கையர்க்கரசி வளவர்கோன்.......	1. வீடலால வாயிலாய்.. 2. வெங்கள் விம்மு வெறியார்.. 3. திரிதரு மாமணி.. 4. அறையார் புனலும்.. 5. வம்பார் குன்றம்.. 6. திருந்தமதி சூடி...

100. சம்பந்தர் காட்டும் சித்தாந்த நெறிகள்

மா. ஸ்ரீநிவாசராவ், மதுரை.

உலகில் உயிர்கள் இன்புற்றிருக்க வேண்டும் என்றே நினைக்கும். இதற்காகத் தங்களின் செயல்பாடுகளைச் சூழலுக்குத் தக்கவாறு அமைக்க முயலும். இஃது உலகியல் இயல்பு. மனிதர்களைச் சமயங்களும் அதனுடைய கோட்பாடுகளும் செம்மைப்படுத்தும். உயிர்கள் உலகியலை விட்டு வீடுபேறாகிய இறைவனைச் சென்றடைந்து இன்புறும் என்ற கருத்தை சைவ சித்தாந்தம் வெளிப்படுத்தும். சித்தாந்தத்தில் நால்வகை நெறிகள் சுட்டப்படும். திருஞானசம்பந்தர் கிரியை நெறியிலிருப்பினும், நால்வகை நெறியை வலியுறுத்தினும் சரியை நெறியினையே பெரும்பாலான தம் பாடல்களில் வலியுறுத்தியுள்ளார்.

நால்வகை நெறிகள்

இறை, உயிர், தளை என்பன முப்பொருள் உண்மையாகச் சித்தாந்தம் கூறும். இம்மூன்றும் என்றும் உள்ளவை என்பதை,

"பதி பசு பாசம் எனப்பகர் மூன்றில்
பதியினைப் போல் பசு பாசம் அநாதி"

என்ற திருமூலர் வாக்கால் அறியலாம்.

ஆணவம் உயிரோடு பிணைப்புண்டு கிடக்கும். உலகியல் துயரால் உயிர்களிடத்து மலபரிபாகம் நிகழும். அப்போது, அதுவரை உயிரில் மறைந்திருந்து பக்குவப்படுத்தி வந்த இறைவனது திரோதான மறைப்பு சத்தியானது அருள்புரியும் சத்தியாக மாறும். அந்த அருட்சத்தியில் சத்திநிபாதம் நிகழும் தன்மைக்கேற்ப உயிர்களுக்கு சிவ வழிபாட்டில் விருப்பம் உண்டாகும். அதற்கேற்பச் சரியை, கிரியை, யோக வழிபாடு நிகழ்ந்து ஞானத்தில் இறைவனின் பேரின்பத்தை நுகரும்.

திருஞானசம்பந்தரைக் கிரியை நெறிக்கு உரியவராகச் சித்தாந்திகள் குறிப்பிடுவர். அவர் நால்வகை நெறிகளையும் தமது பாடல்களில் குறிப்பிட்டுள்ளார். சரியை நெறியைத் தமது பெரும்பான்மையான பாடல்களில் வலியுறுத்தியுள்ளார். ஏனைய நெறிகள் மிக அருகிச் சுட்டப்படுகின்றன. அவர் வாழ்ந்த சூழலும் இதற்குக் காரணமாக அமைகிறது.

சரியை நெறி

சரியை நெறிக்குச் சிறப்பாகத் திருநாவுக்கரசரைக் குறிப்பிடுவர். ''சரியை'' என்பது உருவத் திருமேனியை உணர்ந்து புறத்தொழிலால் மட்டும் அதனை வழிபடுதலாகும். புலர்வதன் முன் கோவிலுக்குச் சென்று அலகிடுதல், மெழுக்கிடுதல், விளக்கேற்றுதல், மாலை கட்டிக் கொடுத்தல், தலையாரக் கும்பிட்டுக் கூத்தாடுதல், பாடுதல் முதலியன சரியையாகும். உள்ளத்தில் விருப்ப மிகுதியால் மகிழ்ந்து தொண்டரோடு தொழவேண்டும்.

இதனை,

''உள்ளம் ஓர்இச்சையினால் உகந்து ஏத்தித்தொழுமின்
தொண்டீர் மெய்யே
கள்ளம் ஒழிந்திடுமின் கரவாது இருபொழுதும்''

என்ற பாடலடிகளால் அறியலாம்.

சரியை நிலையை,

''கோலமலர் நீர்க்குடம் எடுத்துமறையாளர்
நாவின் வழிநின்று தொழில் பேணியே நள்ளாறே''

என்ற பாடலாலும், கண்ணப்ப நாயனார் சரியை வழிபாடு செய்ததை,

''வாய்கலசம் ஆகவழிபாடு செயும்
வேடன் மலர்ஆகும் நயனம்''

என்ற பாடலடியாலும் வெளிப்படுத்துகிறார்.

உலகில் வாழும் நாட்கள் சில. உயிரை எடுக்கக் காலன் வருவான். அதனைக் கண்டு அச்சம் நேர்தல் இயல்பு. ஆதலால் இறைவனை நோக்கி வழிபாட்டினை மேற்கொள்ள வேண்டும். இதனை,

''உருவரைகின்ற நாளில் உயிர்கொள்ளும் கூற்றம்
றனியஞ்சும் ஆதல் உறநீர்
மருமலர்தூவி என்றும் வழிபாடு செய்மின்''

என்ற பாடல் வழி காட்டுகின்றார்.

''வளம் கெழுவு தீபமொடு தூபம் மலர்தூவி
நளன் கெழுவி நாளும் வழிபாடுசெய்''

என்ற அடிகளில் நளன் வழிபட்ட செய்தியின் மூலம் பூசிக்கும் முறையை வெளிப்படுத்தியுள்ளார்.

''கண்மேல் கண்ணும் சடைமேல் பிறையும் உடையார்''

என்றும்,

''அரைகெழு கோவண ஆடையின் மேல்ஓர்
ஆடுஅரவம் அசைத்து ஐயம்
புரைகெழு வெண்தலை ஏந்திப்
போர்விடை ஏறிப்புகழ
வரைகெழு மங்கையது ஆகம் ஓர்பாகம் ஆயவன்''

என்றும்,

''தார்இடு கொன்றை ஓர் வெண்மதி கங்கை
தாழ்சடை மேல் இவை சூடி''

என்றும், பல பாடல்கள் மூலம் இறைவனது உருவத்தை வெளிப்படுத்து வதோடு, தொழவும் வேண்டும் என்பதை,

''வேதம் ஓதி வெண்நூல் பூண்டு வெள்ளைஎருது ஏறிப்
பூதம் சூழப் பொலிய வருவார் புலியின் உரிதோலார்
நாதாஎனவும் நக்காஎனவும் நம்பாஎன நின்று
பாதம் தொழுவார் பாவம் தீர்ப்பார்''

என்ற பாடலின் வாயிலாக வெளிப்படுத்துவதை அறியலாம்.

சரியை நெறியில் செல்லுகின்ற உயிர்கள் விரைவில் சிவகதியை உறுதியாகப் பெறுவர் என்பதை,

''மந்தமா மலரோடு மதிபொதி சடைமுடி அடிகள் தம்மேல்
சித்தமாம் அடியவர் சிவகதி பெறுவது திண்ணம் அன்றே''

என்ற பாடல் மூலம் வெளிப்படுத்தியுள்ளதை அறியலாம்.

கிரியை நெறி

சரியை நெறியிலிருந்து பக்குவமடைந்த உயிர்கள், கிரியை நெறி வழிபாட்டில் விருப்பம் கொள்ளும். இந்நெறியில் இறைவனின் திருமேனி அருவுருவத் திருமேனியாகும். அருவுருவத் திருமேனியான இலிங்கத்தை எழுந்தருள்வித்து ஆகம விதிப்படி மனம், மொழி, மெய் என்னும் மூன்றினாலும் அகத்திலும் புறத்திலும் வழிபடுவது கிரியையாகும்.

''நித்தம் நியமத் தொழிலன் ஆகிநெடு
மால் குறளன் ஆகிமிகவும்
சித்தமது ஒருக்கி வழிபாடுசெய
நின்ற சிவலோகன் இடமாம்''

என்ற பாடல் மூலம் கிரியை வழிபாட்டினை அறியலாம்.

கிரியை வழிபாட்டில் இறைவனை ஏத்துதலும் உண்டு என்பதனை,

''எந்தை ஈசனெம் பெருமான் ஏறமர்க் கடவுளென் றேத்திச்
சிந்தை செய்பவர்க் கல்லாற் சென்றுகை கூடுவது''

என்பதனால் வெளிப்படுத்தியுள்ளதை அறியலாம்.

இலிங்கமூர்த்தியை எழுந்தருளுவித்தல் கிரியை வழிபாட்டில் உண்டு. இவ்வழிபாட்டினை மேற்கொண்டவர் சண்டீஸ்வர நாயனார். இதனை,

''வந்த மணலால் இலிங்கம் மண்ணியின்கண் பால்ஆட்டும்
சிந்தை செய்வோன்தன் கருமம்தேர்ந்து சிதைப்பான் வரும்அத்
தந்தை தனைச் சாடுதலும் சண்டீசன் என்றுஅருளிக்
கொந்து அணவும் மலர்கொடுத்தான் கோளிலி எம்பெருமானே''

என்ற பாடல் வழிப் புலப்படுத்துகின்றார்.

யோக நெறி

கிரியை நெறியில் பக்குவமுற்ற உயிர்கள் யோக நெறியின்பாற் செல்ல முயலும். இறைவனது அருவத் திருமேனியை உணரும். அகத்தின்வழி தொழுதல் இந்நெறியில் அமையும். புறத்தே செல்லும் மனத்தை அவ்வாறு செல்லாதவாறு அடக்கி உள்ளத்தே இறைவனை உணருதல் யோகமாகும். யோக நெறியிலிருப்போரை,

''பத்திப்பேர் வித்திட்டே பரந்த ஐம்புலன்கள் வாய்ப்
பாலே போகாமே காவாப்பகை அறும் வகை நினையா
முத்திக்கு ஒலிகத்தே முடிக்கும் முக்குணங்கள் வாய்
மூடாஊடாநால் அந்தக்கரணமும் ஒருநெறிஆய்ச்
சித்திக்கே உய்த்திட்டு திகழ்ந்த மெய்ப் பரம்பொருள்
சேர்வார் தாமே''

என்ற பாடல் மூலம் காட்டுகின்றார் ஞானசம்பந்தர்.

யோக நெறியிலிருப்போர் உள்ளத்தால் ஒன்றி இறைவனை வழிபடுவர். இதனை,

''கள்ள நெஞ்சம் வஞ்சகக் கருத்தை விட்டு அருத்தியோடு
உள்ளம் ஒன்றி உள்குவார்''

என ஞானசம்பந்தர் வெளிப்படுத்துவார்.

இயமம், நியமம் முதலானவற்றை உயிர்கள் கடைபிடிக்கும்,

''சினம் மலிஆறுபகை மிகு பொறிசிகைதரு
வகைவளி நிறுவிய
மனன் உணர்வோடு மலர்மிசை எழுதருபொருள்
நியதமும் உணர்பவர்''

என யோக நெறியினைப் பற்றி ஞானசம்பந்தர் புலப்படுத்துகிறார்.

ஞானநெறி

சரியை, கிரியை, யோகம் முதலிய தவத்தினை உலகப் பயன் கருதாது செய்து வரும் உயிர்களுக்கு இருவினையொப்பு ஏற்படும்.

இதனால் உயிர் அறிவினைப் பெறும். ஞானத்திற்குச் சரியை முதலான நெறிகள் சாதனமாக அமையும். ஞானத்தில், வழிபாடு அறிவு நிலையில் அமையும். இதனை,

''நுண்ணறிவால் வழிபாடு செய்யும்''

எனும் பாடல் வழி அறியலாம்.

உணவின்றி விரதங்கள் மட்டும் மேற்கொண்டால் வீடும், ஞானமும் தோன்றாது. இதனை,

''வீடும் ஞானமும் வேண்டுதிரேல் விரதங்களால்
வாடின் ஞானம் என்ஆவதும்''

என்ற பாடலடிகளால் புலப்படுத்தியுள்ளமையை அறியலாம்.

ஞானமாகிய நிலைக்கு உயிர்கள் செல்லும்போது வினையின் தன்மை செயல்படாது. இதனை,

''ஞானம் ஆகநின்று ஏத்தவல்லார் வினைநாசமே''

என்பதால் அறியலாம்.

ஞானநிலையில் நின்ற சனத்குமாரர் நால்வர்க்கு இறைவன் மெய்ப்பொருளினை உணர்த்தினான். அதுபோல் ஞானநிலையை அடைந்த உயிர்கள் இன்பத்தைப் பெறும் என்ற கருத்து,

''ஓர் ஆல்நிழல் ஒண்கழல் இரண்டும்
முப்பொழுது ஏத்திய நால்வர்க்கு ஒளிநெறி
காட்டினை''

என்ற பாடலடிகளின் வழிப் பெறலாம்.

வினை நீக்கம் என்பது ஞானத்தில்தான் முழுமையடையும். இதனை,

''ஊனத்து இருள் நீங்கிட வேண்டில்
ஞானப் பொருள் கொண்டு அடிபேணும்''

என்ற அடிகளால் வெளிப்படுத்தியுள்ளார் எனலாம்.

உயிர்கள் இறைவனின் பேரின்பத்தில் திளைத்திருக்க வேண்டும் என்பது சைவ சித்தாந்தத்தின் குறிக்கோள் எனலாம். பேரின்பமாகிய வீடுபேற்றினை அடைய நால்வகை நெறி சாதனமாக அமையும். சரியையின் வழி கிரியையும், கிரியையின் வழி யோகமும், யோகத்தின் வழி ஞானமும், ஞானத்தின் வழி பேரின்பமாகிய வீடுபேறும் கிட்டும். சத்புத்திர மார்க்கமாக விளங்குவதால் கிரியை நெறிக்குரியவராக ஞானசம்பந்தர் திகழ்கிறார்.

ஞானசம்பந்தர் கிரியை நெறிக்குரியவராகத் திகழினும் சரியை நெறிக்கு மிக அதிகமாக, தம் பாடல்களில் முக்கியத்துவம் கொடுத்துள்ளார். நால்வகை நெறிகளைச் சுட்டியிருப்பினும் சரியை தவிர ஏனைய நெறிகள் மிக அருகியே அவர்தம் பாடல்கள் வெளிப்படுத்துகின்றன. இதற்கு இரு காரணங்களைக் கூறலாம்.

வீடுபேறாகிய பேரின்பத்தைப் பெற வேண்டுமாயின சரியை நெறியினை முதலில் உயிர்கள் கடைப்பிடிக்க வேண்டும் இஃது ஒன்று. மற்றொன்று ஞானசம்பந்தர் காலத்தை ஒட்டிய முன்பகுதியை இலக்கிய வரலாற்றில் களப்பிரர் காலம் எனக் கூறுவர். அக்காலத்தில் சமய மற்றும் பிற இலக்கிய வளர்ச்சிகள் பற்றிய குறிப்புகள் இல்லை. சமணர்களின் தாக்கம் சம்பந்தர் காலத்தில் அதிகமிருந்தது. அதனால், கோயில் வழிபாட்டின் மூலம் மனம்பக்குவமடையும் நிலை மனிதர்களிடத்து அருகி இருக்கலாம். அதன் காரணமாகத் தம் பாடலுள் சரியை நெறியினைப் பற்றி மிகுதியாக வெளிப்படுத்தியுள்ளார் எனலாம்.



தமிழ்ஞானசம்பந்தர்